JL
Rb5m211, NbUD
N17
227844

JC
RLSM24, N10VD
N17

227844

வேதாந்த தீபிகை

ஸம்புடம் - 7.

1917.

(நள - பிங்கள௵)

பத்ராதிபர்:-திவான்பகதூர் தி-த. ரங்காசார்யர் பீ.ஏ.பீ.எல்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்
கார்யதர்சியால் ப்ரதிமாஸம்
ப்ரசுரம் செய்யப்பட்டது.

165

சென்னை:
கலாரத்நாகரம் அச்சாபீஸ்

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

அட்டவணை.

(அகராதி.)

* * *

பக்கங்கள்.

- அங்காத்யய நிர்ணயம் 382
- ஆசார்யருடைய சில அநுபவங்கள் 482
- ஆர்யாப்யுதயம் 282, 331
- ஆறுவது வர்ஷத்திய ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸங்கம் ... 85, 135, 147, 157, 239
- ஷை ஸங்கத்தில் ஸ்வாகதம் ... 153
- உபய வேதாந்தமும் மணிப்ரவாளமும் 225
- உபோத்காதாதிகார சிந்தனை 69, 495, 543
- கடிதங்கள் :— 42, 86, 192, 304, 345, 393, 434, 473, 571
- ப்ராநுஸந்தாந க்ரமம் 388
- ரியனும் அவன் ... 233
- 11, 57
- 37
- 82

பக்கங்கள்.

- பத்ராதிபரின் குறிப்புகள் :—
  - ஆத்மஸ்வரூபமும் லோகாசாரமும் 314
  - ஆர்யதேசத்துக்கு உற்றதோர் ஏற்றம் 311
  - உயர் வாழ்வு 94
  - ஒரு ஸார்த்த விசேஷம் ... 313
  - ஒரு வைஷ்ணவ ஸஹக்த விஷயமாக 'ஆர்யா' பத்ராதிபர் யோஜனை 1
  - கார்யாதிகரணம் 437
  - கீதை உண்டான கால நிர்ணயம் 45
  - நாம் மோக்ஷ விரோதியா ? ... 89
  - தேசிக த்வேஷம் ... ...
  - பஞ்சாங்க வித்யையின்படி ஸ்ரீ டைய ஸம்ஸார நிரூபணம் ... ...
  - புத்தியின் ப்ரவ்ருத்தி ரங்கள்
  - தமாஷை ய்யா

பக்கங்கள்.
லோகாந்தரம் ... 137, 195, 251
வர்ணாஸ்ரம தர்மம் 540
வேதாந்த ஸம்ப்ரதாயம் ... 195
வேளிர் வரலாறு 533
ஸ்வதர்ம ரக்ஷணம் 536
ஸந்த்யாவந்தந ஸம்பந்தமான ஒரு விசாரம் 485
ஜீவாத்ம பரமாத்ம ஸ்வரூப சிந்தனை 358
புஸ்தக விமர்சம் :—
அஷ்டப்ரபந்தம் 129
நாலடியார் 132
ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயம் 484
ஜநகநந்திநீ 523
பூகோள ஸ்வரூபம் ... 519, 574
மஹாமஹோபாத்யாய பெருக வாழ்ந்தான் ரங்காசார்யர் 567
தத்வஜ்ஞானம் 507, 550
வதூவித்யாவிசாரம் ... 296
வர்ணாஸ்ரம தர்மாபிவ்ருத்தி ... 273
ஜநகநந்திநீ ... 19, 120, 204, 262, 321, 369, 405, 453
பக்கங்கள்.
ஸ்மார்த்த ஸம்ஸ்காரங்கள் ... 215
ஸாத்விக ராஜஸ அஹங்காரங்கள் 340
ஸ்ரீ அஹோபிலமும் இரண்டு கந்தர்வர்களும் ... 113, 170
ஸ்ரீ அஹோபில மடம் 352
ஸ்ரீ தேசிகப்ரபந்தம் - பதவுரை (அம்ருதரஞ்ஜநீ) ... 464, 502
ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் சரித்ர ஸங்க்ரஹம் 419
ஸ்ரீ பாஞ்சராத்ரம் ... 77, 101
ஸ்ரீ பாஞ்சராத்ரமும் ஸ்ரீவைஷ்ணவாசாரமும் 162
ஸ்ரீ மூல மந்த்ரார்த்தம் ... 529
ஸ்ரீ விஷ்ணுபக்தியின் ஆவஸ்யகத்வம் 177
ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை (ஸ்ரீரங்கம்) 133
ஸ்ரீ ஸ்தோத்ரரத்நம் ... 428, 561
ஸ்ரீ ஹம்ஸஸந்தேசம் - ஸஞ்சிகைகள் : ... 5, 7, 8.
ஸ்ரீ ஹயக்ரீவாஷ்டகம் ... 424
ஹரிப்ரியாவிலாபம் ... 526

OFFICE OF THE REGISTRAR OF
9 - NOV 1916
MADRAS.

ஸ்ரீ:

ஸ்ரீ𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 7.] நள௵ ஐப்பசி௴ [ஸஞ்சிகை 1.

𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌕𑌮𑌨𑌂 𑌤𑌮𑌾𑌲𑌵𑌰𑍍𑌣𑌂 𑌰𑌵𑌿𑌕𑌰𑌗𑍌𑌰𑌵𑌰𑌾𑌮𑍍𑌬𑌰𑌂
𑌦𑌧𑌾𑌨𑍇 - 𑌵𑌪𑍁𑌰𑌲𑌕𑌕𑍁𑌲𑌾𑌵𑍃𑌤𑌾𑌨𑌨𑌾𑌬𑍍𑌜𑌂 𑌵𑌿𑌜𑌯𑌸𑌖𑍇
𑌰𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇𑌽𑌨𑌵𑌦𑍍𑌯𑌾 ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

பத்ராதிபரின் குறிப்புகள்.

ஒரு விஷ்ணு ஸூக்தவிஷயமாக ஆர்யா பத்ராதிபர் யோசனை.

1915-ம் வர்ஷம் ஜூன் மாஸம் ஆர்யா பத்ரிகையில் ருக் வேதம் முதல் மண்டலம் 154-வது ஸூக்தம் இங்கிலீஷ் படுத்தப்பட்டிருக்கின்றது. அது விஷ்ணு ஸூக்தம். அதனுடைய த்ரிமதஸ்தர்க்கும் பொதுவான ஸம்ப்ரதாயார்த்தத்தை நாம் ஆநந்த௵ மார்கழி மாத ஸஞ்சிகையில் வெளியிட்டிருக்கின்றோம்.

மேலெழுந்தவாறாகப் புலப்படும் ஸூக்தார்த்தம் ஆர்யா பத்ரிகையில் வெளிப்படுத்தப்பட்டது. ஸூக்தத்தின் முதல் வாக்யம்:—“பூமி ஸம்பந்தமான லோகங்களை அளந்த விஷ்ணுவினுடை வீரகர்மங்களை நான் இப்போது வெளியிடுகின்றேன். மூ ளால் எங்கும் வ்யாபித்ததனால் விசேஷமாக ஸ்துதிக்க

விஷ்ணு, நாம் அடையவேண்டுகின்றதோர் உயர்ந்த ஸ்தானத்தை நிலைநிறுத்துகின்றார்" என்றிப்படி மொழிபெயர்க்கப்பட்டது. மற்ற வாக்யங்களும் இவ்வண்ணமே ஆர்யாபத்ரிகையில் இங்கிலீஷ் படுத்தப்பட்டன.

இந்த ஸூக்தம் வேதத்தில் மந்த்ரபாகத்தைச் சேர்ந்தது. மந்த்ரம் கூடமான அதாவது மறைந்த அர்த்தங்களை உட்கொண்டது. ஸம்ப்ரதாயார்த்தம் அக்கருத்தை ப்ரகாசிப்பிக்கும்.

பதங்கள்மேல் ஏற்படும் அர்த்தமும் ஆஸ்திகரால் சிந்திக்கத் தக்கது. அதை எழுதிவிட்டு ஆர்யா பத்ராதிபர் சில யோசனைகள் செய்கின்றார். அவற்றை இங்கே ஸங்க்ரஹிக்கின்றோம்.

* * * * * *

ஸூக்ததேவதை ஸர்வவ்யாபியான விஷ்ணு. புராணகாலத்தில் உயர்த்தப்பட்ட ருத்ரனுக்கும் விஷ்ணுவுக்கும் நெருங்கிய ஸம்பந்தத்தையோ ஐக்யத்தையோ வேதம் ப்ரதிபாதிக்கின்றது. ருத்ரன் தாமஸ தேவதையானாலும் லோகஹிதம் செய்பவர். விஷ்ணுவினுடைய பரமானந்த ஸ்வரூபத்தை அவர் நெருங்குகின்றார். விஷ்ணுவானவர் லோகத்துக்கும் தேவர்க்கும் அநுகூலத்தில் ஸதா ப்ரவ்ருத்திக்கின்றார். ஆதலால் அவர் துர்க்கஸ்தலங்களில் ஸஞ்சரிக்கும் ஸிம்ஹத்துக்கு ஒப்பிடப்படுகின்றார். அப்போது அவர் ருத்ரனைப்போலவும் ஆகின்றார். ருத்ரன் மருத்துக்களுக்குப் பிதா. 5-வது மண்டலம் முடிவான ஸூக்தத்தில் மருத்துக்களுக்கு விஷ்ணுவையும் மூலமாகச் சொல்லப்படுகின்றது. ருத்ரன் ப்ரபஞ்சத்தில் படிப்படியாய் உயர்கின்ற தேவன். உயர்கின்ற தேவர்களுக்கு உபகரித்து, அவர்களுக்கு உயரச் சக்தியைத் தரும் தேவன் விஷ்ணு.

ஐரோப்யர்கள், விஷ்ணுவுக்கும் சிவனுக்கும் அதிக ஸூக்தங்கள் ஏற்படாமையால், அவர்கள், வேதங்களில் மிகுதியாகக் கொண்டாடப்படாதவர்களென்று பகுகாலமாய்ப் ப்ரமிக்கின்றார்கள். சிலர், சிவன் த்ராவிடர் தேவனென்றும், ஆர்யர் அத்தேவனைத் தம் [illegible]ல் சேர்த்துக்கொண்டாரென்றும் சொல்வர்.

த தேவதைகட்குள் உத்கர்ஷம், அவர்க்கு ஏற்பட்ட ஸூக் ஸங்க்யையால் ஏற்படாது. அது அவர்களுக்குப் பெ

ருந்திய வ்யாபாரங்களால் நிச்சயிக்கப்படவேண்டும். வைதிக தர்மங்களில் அக்நி இந்த்ரன் முதலான தேவதைகட்கு ஸாக்ஷாத் ஸம்பந்தம் அதிகம். மருத்துக்களுக்கு ஸூக்தங்கள் அதிகமென்று அவர்களுடைய பிதாவான ருத்ரனைக் காட்டிலும் அவர்களுக்கு ஏற்றம் கூற அமையமாட்டாது. த்ரிமூர்த்திகளாய் வேதத்தி விளங்கும் விஷ்ணு ருத்ரன் ப்ரஹ்மணஸ்பதி இவர் மூவரும் வேதக்ரியைகட்கு ஆதாரபூதர்களாய் இருந்து, பரோக்ஷத்தில் அவற்றிற்கு ஸஹாயம் செய்கின்றார்கள்.

ப்ரஹ்மணஸ்பதி ஶப்தத்தை அதாவது வாக்கை ஸ்ருஷ்டிக்கிறார்; தமஸ்ஸிலிருந்து ப்ரகாஶத்தையும் ப்ரபஞ்சத்தையும் வெளிப்படுத்துகின்றார். சேதநனுடைய ஆவிர்பாவ க்ரமத்துக்கு அவர் காரணமாகின்றார். இவரைப் புராணங்களில் ப்ரஹ்மா என்று சொல்கின்றனர். ப்ரஹ்மாவால் ஸ்ருஷ்டிக்கப்பட்டு உயர்கின்ற சேதநர்க்குத் தக்கபடி ருத்ரன் பலம் அளிக்கின்றார். சேதநனுடைய சைதந்ய ப்ரகாஶத்தின்பொருட்டு அவர் உபகரிக்கின்றார். அவர் கோபமுள்ளவர். எல்லாக் கேடுகளையும் நாசம் செய்பவர். பாபிகளையும் எதிரிகளையும் அழிப்பவர். வேதருஷிகள் அவரிடம் பயம்கொண்டார்கள். இந்த ருத்ரபலத்தின் சிசுவாக அக்நி லோகத்தில் உதித்தார். புராணத்தில் ஸ்கந்தர் எனப்பட்டவர் அக்நியின் அவதாரமே. இந்த ருத்ரனுக்கு ஒரு ஶாந்தமான ஆகாரமுமுண்டு; அவர் வ்யாதிகளைப் போக்குபவர்; துன்பம் களைபவர்; யுத்தங்கட்கு உதவுவது அவர் பலம்; முடிவில் ஸமாதானத்தையும் ஸந்தோஷத்தையும் தருவதும் அவர் பலம்; அவர் பரமயோகி; புராணங்களில் இவரைத்தான் ஶிவன் என்பார்கள்.

ப்ரஹ்மணஸ்பதியினுடைய ஶப்தங்கள் ரூபமெடுக்கவும், ருத்ரனுடைய பலம் வ்யாபாரவத் ஆகவும், நிலைத்த ஆதாரமாக விஷ்ணு இருக்கின்றார்; அதாவது தேசமும் (Spaco,) லோகங்களினுடைய ஸஞ்சார நியமங்களும், ஸ்தானங்கட்குப் படிப்படியாக ஏற்பட்ட ஏற்றங்களும், பரமபதமும் அவருடையன. அவர் மூன்று அடிகளை வைத்தார்; அவ்வடிகளின் வைப்பால் ஏற்பட்ட தேச விசேஷத்திற்குள் ஸர்வலோகங்களையும் நிலைநிறுத்தினார். வ்யாபியான அவர் அந்த எல்லா லோகங்களிலும் இரு எல்லாத் தேவர்களும் தம்தம் வ்யாபாரங்களைச் செய்வதற்

ஸஹகரிக்கின்றார். ஆநந்தம், ஜ்யோதிஸ், ப்ரியம்பதம் இவற்றால் அமைந்த அவருடைய பரமபதமானது ப்ரகாசிக்கின்றதோர் நேத்ரத்தைப்போல ஆகாசத்தில் பரவியிருக்கின்றது. 'அதை ஸூரிகள் தர்சிக்கின்றார்கள். வேதநிர்திஷ்டமானதும் ஸர்வசேதநர்களுடைய ப்ரயாணத்தின் பாரமாகவும் விஷ்ணுவின் பரமபதம் இருக்கின்றது. அந்த விஷ்ணு தான் புராணத்தில் நாராயணனெனப்படுகின்றார்.

வேதருஷிகள் ஒரு தேவனைத்தான் உபாஸித்தார்கள், மற்றைத் தேவர்கள் அவ்வவர்க்கு நியதமாக ஏற்பட்ட ப்ரபஞ்ச வ்யாபார பேதங்களால், ஒரு தேவனுடைய பல மூர்த்திகளாய்ப் பாவிக்கப்பட்டனர். ஒவ்வொரு தேவனும் மற்றெல்லாத் தேவாம்சங்களையும் தனக்குள் அடக்கினவர். வைதிக க்ரியைகளில் ஒவ்வொரு தேவனுடைய வ்யாபாரமும் பேதித்தது. அதனால் அவர்க்குப் பல ரூபங்கள் அமைந்தன. உபநிஷத்துக்களில் ஒரே ஈஶ்வரன் ப்ரதிபாதிக்கப்பட்டான். மற்றைத் தேவர்கள் தாழ்த்தப்பட்டனர்.

* * * * * *

மேலெடுத்த ஸூக்ததேவதை விஷ்ணு. அவர்க்கே உரிய மூன்றடி வைப்பின் மஹிமையானது அதில் ஸ்துதிக்கப்பட்டது. இங்கே விஷ்ணுவின் 'வாமநாவதாரமும், த்ரிவிக்ரமத்வமும் பூமி தேவலோகம் பாதாளம் இவற்றை அவருடைய அடிவைப்பால் மூடப்பட்ட கதையும், மஹாபலி கதையும் யோசிக்கப்படவேண்டியதில்லை. ஸூக்தத்தில் 'பூமி', ஆகாசம், த்ரிதாது, இவற்றைத்தான் விஷ்ணு ஆக்ரமித்ததாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. இவற்றின்மேல் 'நாகஸ்ய ப்ருஷ்டே' அதாவது, தேவலோகத்திற்கும் மேலே இருப்பதுதான் விஷ்ணுவினுடைய பரமபதம் என்று ஏற்படுகின்றது.

ஈஶோபநிஷத்தில், 'ஸ பர்யகாத்' [அதாவது, அவர் எங்கும் பரவினார்] என்று சொன்னது விஷ்ணுவைப்பற்றினது. ஈக்ஷணம் செய்தும், யோசித்தும், (வ்யக்த, அவ்யக்த) ரூபங்களை உண் ம், ஜ்ஞாநாநந்த ஸ்வரூபியான அவரே ஹ்ருதயரூபமான லும், அஹங்காரரூபமான பூமியிலும் விஸ்தரித்தார்.

இதைத்தான் 'த்ரேதா வ்யசக்ரமே' [அதாவது, மூன்று விதமாக விக்ரமணம் செய்தார்] என்று சொல்லப்பட்டது. இப்படி அவர் விக்ரமணம் செய்து, அதனால் விஸ்தரித்த ஸர்வலோகங்களையும் அவரே உண்டாக்கினவர். நாம் வஸிக்கின்ற பூமியானது ப்ராண ம்நோமயங்கள ா விசேஷ லோகங்களுக்குப் போக முதற் படிக்கட்டென்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆதலால் ஒவ்வொரு சேதநனும் பூமியை அடைந்து, பின்னால் அந்தரிக்ஷத்தையும் தேவலோகத்தையும் க்ரமமாக அடைகின்றான். விஷ்ணு தமது மூன்று விக்ரமணங்களால் இம்மூன்று லோகங்களையும் வ்யாபிக்கின்றார்.

அவற்றின்மேல் இருப்பது விஷ்ணுவினுடைய பரமபதம். அதைச் சேதநன் முடிவில் அடைகின்றான். ஆதலால் விஷ்ணுவினுடைய விக்ரமணங்களுக்குள் பூமி, அந்தரிக்ஷம், தேவலோகம், மஹர்லோகம், பரமபதம், இவற்றில் உள்ள சேதநா சேதநரூப ஸர்வ பதார்த்தங்கள் இவை யாவும் அடங்குகின்றன.

மநுஷ்யனுடைய ப்ராணன் மஹாசக்தி பொருந்திய ருத்ரனிடமும், அவனுடைய மநஸ் ப்ரஹ்மணஸ்பதியாகிய ஸ்ருஷ்டிகர்த்தாவின் வாக்கினின்றும் உண்டாகி, அவனுடைய மஹாப்ரயாணத்தில் அந்வயித்து, மேன்மேல்சென்று, பரமபதத்திலிருக்கும் விஷ்ணுவினிடம்போய் நிலைக்கத்தக்கன. விஷ்ணுதான் ஸர்வ வ்யாபி; லோகத்தில் ஸர்வ ஶக்திகளின் ப்ரவ்ருத்திகளையும் ஸர்வ ப்ரத்யயங்களையும் தழைக்கச்செய்பவர் விஷ்ணுவே; அவற்றின் போக்தாவும் அவரே. அந்த ஸர்வ ஶக்தனான அநந்தனுடைய மூன்று அடிவைப்பால், நமது உண்மையான நிலையை நாம் அடைவதற்கென விஸ்தரித்த இந்த ஸர்வ ப்ரபஞ்சமும் அளக்கப்பட்டன.

மூன்றடிவைப்பால் அளக்கப்பட்ட த்ரிலோகமும், ஆநந்தமெனும் மதுவால் பூர்ணமாயிருக்கின்றன. விஷ்ணுவானவர் அவற்றுளெல்லாம் தம்முடைய ஆநந்தத்தைப் பெருகச்செய்கின்றார். அதனால் அவை ஶாஶ்வதமாய் தரிக்கப்படுகின்றன; யாவும் துத் தம்தம் ஸ்வபாவங்கட்குத் தக்கபடி ப்ரவ்ருத்திக்கி எங்கும் பரவி எல்லையற்ற தமது ஸத்தையால் களிக்கின்றன

ற்றை விஷ்ணு என்றென்றும் தரிக்கின்றார்; அவற்றிற்குக் கேடின்றிக் காக்கின்றார். பரமார்த்ததத்வம் அவர் ஒருவரே. என்றும் நிலைத்த தேவன் அவரே. மூன்று விதமான தெய்வத்தன்மைகளை, நாம் ஊன்றி நிற்கும் பூமியிலும், நாம் மநஸ்ஸால் ஸாக்ஷாத்கரிக்கும் திவத்திலும், ஆநந்தமய்மான பரமபதத்திலும், நாம் க்ரமமாக அடைகின்றோம். இவை யாவையும் விஷ்ணு தமக்குள் தரிக்கின்றார். இத்தன்மைகளைத் தான் வேதாந்தத்தில் ‘ஸச்சிதாநந்தம்’ என்பார்கள். ஜீவிக்கும் வஸ்துக்கள் யாவும் இவை மூன்றையும் தரதம பாவத்தால் உடைத்தாயிருக்கின்றன. நம்முடைய ப்ரயாணத்தின் முடிவில் அவற்றை நாம் பூர்ணமாய்ப் பொருந்துகின்றோம்.

விஷ்ணுவின் முடிவான பதமானது ஆநந்தமே. அவ்வாநந்தமயமான லோகத்தில் முக்தனான ஜீவன் ப்ரஹ்மாநந்தத்தை அநுபவிக்கிறான்; எல்லையற்ற ஜ்ஞாநத்தின் விகாஸத்தைப் பொருந்துகின்றான்; தனது ஶாஶ்வதமான ஸத்தையையும் அறிந்துகொள்கின்றான். ஸத்தாரூபமான மதுவுக்கு அது உத்பத்தி ஸ்தாநம். அம்மதுவால் விஷ்ணுவின் மூன்றுபதங்களும் நிறைந்திருக்கின்றன. அந்தப் பரமபதத்தில் ஸர்வேஶ்வரன் இருக்கின்றான்; அவன் அவனைப் பஜிக்கும் சேதநர்க்கு மித்ரனும் ஹிதனுமாவன். ப்ரபஞ்சத்தை வ்யாபிக்கும் விஷ்ணுவானவர் பரமபதத்தில் நிஶ்சலனாய் ஸ்வஸ்வரூபத்தில் நிலைக்கின்றார்.

இங்கே, ப்ரபஞ்சமெங்கும் உள்ளும் புறமும் வ்யாபித்து நிற்கும் விஷ்ணுவே, அங்கே பரமபதத்தில் என்றும் நிஶ்சலமாய் நிர்விகாரமாய் ஆநந்தாநுபவம் செய்யும் தேவனாயிருக்கின்றார். இப்படி இரண்டு ரூபமாய் அவர் வஸிக்கும் நித்யவிபூதி லீலாவிபூதியென்னும் ப்ரதேசங்களே, அந்த ஸச்சிதாநந்தமயனுடைய மூன்றடிவைப்பால் கொள்ளப்பட்ட மூன்று லோகங்கள். நாம் படிப்படியாய் ஸர்வவித ப்ரயத்நத்தாலும், ஜ்ஞாநாநந்தாநுபவத்தில் உயர்ந்துகொண்டே ப்ரயாணிக்கும் நீண்ட மார்க்கத்தின் முடிவில் நமக்குப் பரமப்ராப்யமாகவும் ஆஶ்ரயமாகவும் நாம் விரும்புகின்ற பகவான் விஷ்ணு.

அந்தப் பரலோகங்களில் விபுவாய், பூர்ணமாய், அநந்தமாய், திர்மயமாய், பகவானுடைய பரம்பதமாய், ஸர்வ வ்யாபியாய ஸர்வோத்க்ருஷ்டஸ்தாநம் இருக்கின்றது. ஸர்வ சேதநர்க்கும் ஸ்வாமியாய், ப்ராபகனாய், ஸர்வவ்யாபியாய், ஸர்வ ஜகத்பதியாய், நம்முடைய ஆத்மாக்களுக்கு ப்ரியனாய், ஹிதனாய், உயர்வற உயர்நிலைக்கீசனாய், பரிபூர்ணாநந்தஸ்வரூபியாய் இருக்கும் விஷ்ணுவினுடைய பரமஸ்தாநம் அது.

* * * * * *

ஸூக்தார்த்த விவரணம் இவ்வண்ணம் ஆர்யா பத்ராதிபரால் செய்யப்பட்டது. அதைப்பற்றி நாம் குற்றம் சொல்வோமில்லை. ‘𑌪𑌾𑌦𑍋𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 - 𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑌸𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌂 𑌦𑌿𑌵𑌿’ எனும் வண்ணம் நித்ய நிர்விகாரமான பரமபதமும், ஸதாவிகாரியான ப்ராக்ருத லோகங்களும் பகவானுக்குள் அடங்கியவை; பகவானை ஆதாரமாயுடையனவே; பகவானுடைய சரீரங்களே. ‘[illegible]’ எனும் ப்ரகாரம் மோக்ஷப்ரதனாகிய அச்யுதனே இந்த லோகங்கள் ரூபமாய் எங்கும் பரவியிருக்கின்றான் என்பொருந்தும்.

அவனுடைய த்ரிவிக்ரமத்வம் இவ்வளவு அர்த்தத்துக்குத் தான் இடம் தருமென்று வைத்துக்கொள்வதில் தோஷமில்லை. ஆகிலும், ‘𑌪𑌰𑍋 𑌮𑌾𑌤𑍍𑌰𑌯𑌾 𑌤𑌨𑍍𑌵𑌾 𑌵𑍃𑌧𑌾𑌨’ எனும் சப்தங்கட்கு அபரிமிதமான சரீரத்துடன்கூடிப் பகவான் விஸ்தரித்தார் எனப் பொருள் ஸித்திப்பதால், பூர்வம் வாமநனாய் இருந்து பின்பு த்ரிவிக்ரம ரூபத்திற்கேற்றதும் விஶ்வத்தை உள்ளடக்கத்தக்கதுமான திவ்யரூபத்தைப் பகவான் தரித்தார் எனும் கதையை அத்யந்தம் நிராகரிப்பதேனோ? பகவானுடைய மேற்சொன்ன கதைக்கு வ்யாஜமாக மஹாபலியும் வேண்டியிருக்கின்றதே.

இக்கதை ஸம்பாவிதமன்று எனக்கூடும். கதையின் உண்மை எப்படியிருந்தபோதிலும், ஸூக்தங்களுடைய த்ரஷ்டாக்களான ருஷிகள் அக்கதையை நம்பினவர்கள் என்பதை ஏன் ஒப்புக்கொள்ளக்கூடாது? வேதங்களின் மந்த்ரபாகங்கள் பூர்வம் நடந்ததாக நம்பப்பட்ட சரித்ரங்களைக் குறிக்கின்றனவே.

* * * * * *

இதிஹாஸமும், புராணமும் வேதங்களுடன்கூடி வளர்ந்தனவென்பதற்கு ஶ்ருதியே ப்ரமாணமென்று பலதரம் சொன்னோம்.

நமக்கு இப்போது கிட்டியிருக்கின்ற வேதபாகங்களைக் காட்டிலும், இப்போது இல்லாத வேதபாகங்களும் முன் இருந்தன. காடகத்தில் பரத்வாஜ வ்ருத்தாந்தத்தால் வேதங்கள் அநந்தங்கள் என்று தெரிகின்றது.

வேதங்களை வ்யாஸம்செய்த க்ருஷ்ணத்வைபாயநர், மஹாபாரதத்துக்கும் புராணங்கட்கும் கர்த்தாவெனும் ப்ரஸித்தி யாவரும் அறிந்ததே. வேத பாகங்களில் பூர்வகாலத்தில் அந்தர்கதங்களாயிருந்த இதிஹாஸ புராணங்களையே அவர் தனியாக மஹாபாரதரூபமாயும், பல புராணங்கள் ரூபமாயும் செய்திருக்கவேண்டும்; செய்வித்தாவ திருக்கவேண்டும்.

அவர் காலத்தில் இருந்தவண்ணம் அவை இப்போதில்லையென்பதை நாம் ஒப்புக்கொள்வோம். அதிக பாகங்கள் பின்காலங்களில் அவற்றுள் சேர்க்கப்பட்டிருக்கலாம். சில விடங்களில் மாறுதலும் உண்டாயிருக்கலாம். தத்காலம் இதிஹாஸ புராணங்களில் காணும் கதைகள் யாவும் வேதாவிர்பாவ காலங்களில் இல்லையென்பது ஸயுக்திகமாய்த் தோன்றவில்லை.

ஆதலால் த்ரிவிக்ரமாவதார வ்ருத்தாந்தத்தை முற்றிலும் த்யாகம் செய்வது ந்யாய்யமன்று.

* * * * * *

அரவிந்தகோஸ்செய்த யோசனைகளால் ஜகத்காரணனும்; நித்யவிபூதிநாதனும், முக்திப்ரதனும், ஸர்வாந்தர்யாமியும், ஸர்வவ்யாபியும், ஸர்வ பூதஹிதனும், ஸூரிகளால் த்யாநிக்கப்பட்டவனும் நாராயணனென்று நிச்சயிக்கப்படுகின்றது. ப்ரஹ்மாவும் சிவனும் அவனுடைய விபூதிகளே. அவர்களுடைய ப்ரபஞ்ச ஸம்பந்தமான வ்யாபாரங்களும் நாராயணனுடைய ஸஹாயத்தால் நடப்பவையென்று ஆர்யா பத்ராதிபருடைய அபிப்ராயம்.

* * * * * *

நம்முடைய வைதிகமதமானது Cosmic events எனப்பட்ட ப்ரபஞ்ச சரித்ரஸம்பந்தமாக வளர்ந்தது. பூமியில் இப்போது இருப்பவரை இருப்பவராக வைத்துக்கொண்டு, செத்தவரையெல்லாம் செத்தவராகவே வைத்துக்கொண்டு, ஈஶ்வரனையும் அவன் தூதர்களையும் அவர்க்கு விரோதம் செய்யும் பிசாசுகளையும் மாத்ரம் ஒப்புக்கொண்டு, இந்த யாவத் ப்ரபஞ்சமும் சூந்யத்தினின்று ஆறாயிரம் வருஷங்கட்குமுன் உண்டானதாகச் சொல்லுகின்றவர்க்கு ப்ரபஞ்ச தத்வம் விளங்காது. ப்ராக்ருத சரீரங்களுடன்கூடிய சேதநர்கள், பூமியில் உள்ளவரோடு முடிவதில்லை. செத்தவர்களும் ஸூக்ஷ்ம சரீரங்களுடன் இருப்பவரே. ஆதலால் புண்ய விசேஷங்களால் ப்ரபஞ்சாதிகாரத்தில் நியோகிக்கப்பட்ட சேதநர்கள் தேவர்கள். தேவர்களுடைய லோகத்தில் புண்யம் செய்தவர்கள் நீண்டகாலம் ஸுகாநுபவம் செய்கின்றார்கள். அந்தரிக்ஷவாஸம் செய்பவரும் உளர். அந்த லோகங்களும் அவற்றில் உள்ளவர்களும் நம்முடைய கண்கட்குப் புலப்படார்கள். இவர்களுடைய அஸ்தித்வம் ஶாஸ்த்ரங்களால் அறியத்தக்கது; யோகிகளால் ஸாக்ஷாத்கரிக்கப்பட்டது.

ஈஶ்வரன் ஒருவன்; அவன் நித்யன். அவனுக்கு ப்ரக்ருதியென்றும், ப்ரகாரமென்றும், ஶக்தியென்றும், சரீரமென்றும் சொல்லப்பட்ட அநந்த சேதநர்களுடன்கூடிய எல்லையற்ற ப்ரக்ருதி மண்டலமும் என்றும் உள்ளதே. ப்ரபஞ்சம் முழுவதுமோ, அதன் ப்ரதேசங்களிலோ, ஆவிர்பாவ திரோபாவமெனப்பட்ட ப்ரபஞ்ச ஸங்கோச விகாஸாவஸ்தைகளை ஸ்ருஷ்டி ப்ரளயமெனச் சொல்வார்கள். இவை அவ்யுச்சிந்நமாய் ப்ரவ்ருத்திக்கின்றன. சேதநர்களுடைய கர்மம் காரணமாக ஈஶ்வரன் அத்யக்ஷனாக இவை நடக்கின்றன. இவற்றிற்கு ஆதியுமில்லை அந்தமு மில்லை.

ஶாஸ்த்ரங்களில் ஸ்ருஷ்டியென்றும் ப்ரளயமென்றும் சொல்வதெல்லாம், மேற்சொன்னபடி இடைவிடாமல் தொடர்கின்ற ஸ்ருஷ்டிகளில், நமது பூமிக்கோ ஸூர்யமண்டலத்துக்கோ காரணமான ஸ்ருஷ்டியையும், அதற்கு முன்னிருந்த ப்ரளயதசையையும், பின்னால் உண்டாகப்போகின்றவையும் குறிக்கின்றன. அஸத்தினின்று ஸத் உண்டாகமாட்டாது. ஸத் அஸத்தாக என்றும் மாறமாட்டாது.

இப்படிப்பட்ட ப்ரபஞ்ச வ்யாபாரங்களையும், அவற்றை ரக்ஷணம் செய்கின்ற ஸர்வேஶ்வரனையும், அவனுடைய நியமநத்தால் அவற்றுள் அந்வயிக்கின்ற அதிகாரி தேவதைகளையும் குறித்து ஸ்தோத்ரரூபமாக வேதமந்த்ரபாகங்கள் ஸாக்ஷாத்கரிக்கப் பட்

டன. ப்ரபஞ்ச வ்ருத்தாந்தங்கள் ஶாஸ்த்ரங்கள்விநா நம்முடைய புத்திகோசரங்க ளன்று. ஆதலால் அவற்றையும், அவற்றை விவரிக்கின்ற இதிஹாஸ புராணங்களையும் அநாதரிக்கக்கூடாது. இதிஹாஸ புராணங்கள் இப்போதிருக்கும் நிலைமையில் சுத்தமாகவில்லையென்று யோசிக்கக்கூடுமானாலும், ப்ரபஞ்ச வ்யாபாரங்களைப்பற்றிச் சிந்திக்க நமக்கு அவையன்றி வழியில்லையாகையால், ஸத் யுக்திகளால் அவற்றை விவேசநம்செய்து ஸமுதாயமாக அவற்றை ஆதரிக்கப்பொருந்தும்.

* * * * * *

ப்ரபஞ்ச வ்ருத்தாந்தங்கள், ஆதுநிக பதார்த்த ஶாஸ்த்ரங்களால் செம்மையாக அறியக்கூடுமென்றும், அந்த ஶாஸ்த்ரங்கள் புராணகதைகளை மித்யையாகக் காட்டுகின்றனவென்றும் சொல்வார்கள். பதார்த்த ஶாஸ்த்ரங்களுக்கு ஸஞ்சாரம் மிதமே. அவற்றால் நிஸ்ஸம்ஶயமாக ஏற்பட்ட உண்மைகளைத் திரஸ்கரிக்கப் பொருந்தாது. அவ்வுண்மைகள் விரோதிக்கும்வரையில் இதிஹாஸ புராண கதைகள் தத்வமாகமாட்டா. பதார்த்த ஶாஸ்த்ரங்கள் ப்ராக்ருத விஷய பரிசோதனை செய்வதில், ஜீவன் நீங்கின சரீரசோதனையை அநுஸரிக்கின்றன. ப்ரக்ருதிமண்டலத்தில் ஸர்வத்ர வ்யாபித்து பற்பல சரீரங்களுடன் கூடிப் பற்பல ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளில் அந்வயித்த சேதநர் தசைகளைப்பற்றின வரையில் பதார்த்த ஶாஸ்த்ரங்கள் அபதார்த்த துல்யங்களே.

ஆதலால் ப்ரபஞ்ச ஸ்வரூபத்தைப்பற்றியும், அதில் கட்டுப்பட்டுநின்ற சேதநர்களுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளைப் பற்றியும், இவற்றிற்கு ஆதாரமாயும் நியந்தாவாயும் ஸ்வாமியாயும் இருக்கின்ற ஸர்வேஶ்வரனைப்பற்றிய ஜ்ஞாநத்தைப்பற்றியும் ஶாஸ்த்ரமே ப்ரமாணமாய் நிற்கின்றது.

மேலே யோசிக்கப்பட்ட ஸூக்தம், உபய விபூதிகளுடையவும் அவற்றின் ஸ்வாமியான நாராயணனுடையவும் உண்மைகளை ப்ரகாசிப்பிக்கின்றது. இது, ஸூக்தத்தின் ஶப்த யோசனையால் ஸித்திப்பதென்பதை அரவிந்த கோஸ் காட்டினார். இதிஹாஸ புராண கதைகளை ஆதரித்த ஸம்ப்ரதாய யோசனைகளை நாம் முன் விவரித்தோம்.

த்ரிதசாலயம்.

இப்படி இவர்கள் ஆறு தினம் வஸித்தபிறகு ஈஶாந்ய ப்ரதேசத்தினின்று வேகத்துடன் அடித்த காற்றானது ஆயிரம் தளத்துடன் கூடினதும் திவ்யகந்தமுள்ளதுமான ஸௌகந்திகமெனும் புஷ்பவிசேஷத்தைக்கொண்டு பாஞ்சாலி நின்றவிடத்தில் எறிந்தது. அதை க்ருஷ்ணை எடுத்துப் பார்த்தாள். ஸந்தோஷித்தாள். பக்கத்தில் நின்ற பீமஸேநனைப் பார்த்து, “ஓ சத்ருக்களைத் தபிக்கச் செய்கின்றவரே! இந்தப் புஷ்பத்தை யுதிஷ்டிரரிடம் கொடுக்கப்போகின்றேன். இம்மாதிரியாகப் பல புஷ்பங்கள் எனக்கு வேண்டும். அவற்றைக் காம்யக வநத்தில் நம்முடைய ஆஶ்ரமத்துக்குக் கொண்டுபோவேன். என் ப்ரீதிக்காக வேறு புஷ்பங்களை ஸம்பாதித்துக்கொண்டு நீர் வரவேண்டும்” என்றனள். உடனே பீமஸேநன் புஷ்பம் வந்த திக்கை நோக்கிச் சென்றனன். செல்லும்போது கந்தமாதந பர்வதத்தின் ரமணீயங்களான தாழ்வரைகளில் ஸஞ்சரித்தான். பகு வநம்ருகங்களைக் கண்டு விரட்டினான். பக்ஷிகளுடைய மநோஜ்ஞமான சப்தங்களைக் கேட்டு ஆநந்தித்தான். அநேக வ்ருக்ஷங்களையும் லதைகளையும் பிடுங்கி எறிந்துகொண்டு சென்றான். அப்படிச் செல்லுகையில் ஒரு ரம்யமான தடாகத்தையும், பொன்மயமான வாழைக் காட்டையும் கண்டான். அந்த ஸரஸ்ஸில் இறங்கி விளையாடினான். அதன் பரிசுத்தமான தீர்த்தத்தைப் பாநம்செய்தான். தோள்களைத் தட்டினான். ஸிம்ஹநாதம் செய்தான். கிரிகுஹைகள் அதன் ப்ரதித்வநியை உண்டாக்கின. அதைக் கேட்டுக் குஹைகளில் வஸித்த ஸிம்ஹம் முதலான காட்டு ம்ருகங்கள் மிகவும் கூவ ஆரம்பித்தன.

அவ்விடத்தில் நித்ரை செய்துகொண்டிருந்தார் ஹநுமான். அவர் நித்ரை பங்கமாயிற்று. விழித்தார். தம்முடைய வாலால் பூமியை அடித்தார். அந்த த்வநியும் அதனுடைய ப்ரதித்வநியும் எங்கும் பரவின. அதைக் கேட்டான் வ்ருகோதரன். சப்தம் உண்

டான இடத்தைத் தேடிக் கதளீவநத்தில் ஸஞ்சரித்தான். அங்கே ஒரு பாறையின்மீது உட்கார்ந்திருந்த பெரிய சரீரத்துடன் கூடிய வாநரஶ்ரேஷ்டனைத் தர்ஶித்தான். அவர் மின்னல்கூட்டம் போல் ப்ரகாசித்தார். செந்தாமரைக் கண்களால் பீமஸேநனைப் பார்த்தார். பீமஸேநன் அவ்வரை நெருங்கி ஸிம்ஹநாதம் செய்தான். அதைக் கேட்டு ஹநுமானும் கொஞ்சம் விழிகளைத் திறந்து பார்த்தார்; சிரித்தார்.

“ஸுகமாய்த் தூங்கின என்னை ஏன் எழுப்பினாய்? நீ தெரிந்தவனாச்சுதே! பூதங்களிடம் நீ தயையைக் காட்டவேண்டுமன்றோ? மநுஷ்யர் புத்தியுள்ளவர்கள்; ஜந்துக்களிடம் தயை செய்கின்றனர். உன்போன்ற புத்திமான்கள் மநோவாக்காயங்களைத் தூஷித்துத் தர்மநாசம் செய்கின்ற க்ரூரகர்மங்களை அநுஷ்டிப்பார்களோ? உனக்குத் தர்மம் தெரியாது. நீ வ்ருத்தர்களை ஸேவித்தாயில்லை. அல்பபுத்தியால் வநம்ருகங்களை விரட்டுகின்றாய். நீ யார்? ஏன் இந்த வநத்துக்கு வந்தாய்? இது மநுஷ்யர் ஸஞ்சரிப்பதன்று. நீ எவ்விடம் போகின்றாய்? இப்பர்வதம் இதன்மேல் ஏறத்தக்கதன்று. ஸித்தருடைய மார்க்கம் தவிர வேறு மார்க்கம் இதன்மேல் கிடையாது. கருணையாலும் ஸ்நேஹத்தாலும் உன்னைத் தடுக்கின்றேன். இவ்விடம் வர உனக்கு நான் நல்வரவு அளிக்கின்றேன். இந்த அம்ருததுல்யமான மூலபலங்களை அருந்து. என் வார்த்தையைக் கேட்டுத் திரும்பிப்போகக்கடவாய்” என்று பீமஸேநனைப் பார்த்து ஹநுமான் சொன்னார்.

பீமஸேநன், “நீர் யாவர்? ஏன் வாநரரூபம் கொண்டீர்? நான் க்ஷத்ரியன்; ஸோமவம்சத்தில் குருகுலத்தில் வந்தவன். என் மாதா குந்தீ. நான் வாயு தநயன். பீமஸேநனெனப்பட்ட பாண்டவன்” என்று சொன்னான்.

அச்சொற்களை ஹநுமான் சிரிப்புடன் கேட்டார். “நான் வாநரன். நீ இச்சித்த மார்க்கத்தைத் தருகின்றேனில்லை. புறப்பட்டுப் போ. துக்கத்தை அடையவேண்டாம்” என்று மொழிந்தார்.

அதைக் கேட்ட பீமன் “துக்கமானாலும் வரட்டும், மற்றதாகிலும் உண்டாகட்டும். அதைப்பற்றி உன்னைக் கேட்கின்றேனில்லை. எழுந்திரு. எனக்கு வழியை விடு. நீ துக்கத்தில் விழாதே” என்றனன்.

ஹநுமான், “நான் வ்யாதியால் க்லேசப்பட்டவன். எனக்கு எழுந்திருக்கச் சக்தியில்லை. அவஶ்யம் போகவேண்டுமானால், என்னைத் தாண்டிப்போ” என்று சொன்னார்.

பீமன் “ஸகல ஹேயகுண ரஹிதனான பகவான், மஹாவிபூதியுடன் கூடிய உனது சரீரத்தை வ்யாபித்து நிற்கின்றான். ஜ்ஞாநத்தால் ஸாக்ஷாத்கரிக்கத்தக்க அந்த ஸர்வேஶ்வரனை உன்னைத் தாண்டி நான் அவமதிக்கத் துணியேன். ஸர்வ பூதங்களையும் அந்தராத்மாவாயிருந்து ப்ரேரணம் செய்யும் புருஷோத்தமனை ஆகமங்களால் நான் அறியாமல் இருந்தால், ஹநுமான் ஸாகரத்தைத் தாண்டிச் சென்றதுபோல், நானும் உன்னைத் தாண்டிச் செல்வேன்” என்று சொன்னான். ஹநுமான், ஓ நரஶ்ரேஷ்ட! ஸாகரம் தாண்டின ஹநுமான் யார்?” என்றார். பீமன், “அவர் என் தமையன். ஶ்லாக்ய குணங்கள் பொருந்தினவர். மஹாபுத்திமான். பலவான். அந்த வாநரஶ்ரேஷ்டர் ராமாயணத்தில் இவ்வண்ணம் க்யாதியாகச் சொல்லப்பட்டவர். ராமபத்நீ நிமித்தம் நூறு யோசனை விஸ்தாரமுள்ள ஸாகரம் அவரால் ஒரே தாண்டால் தாண்டப்பட்டது. அந்த மஹாவீரன் என்னுடைய ப்ராதா. தேஜஸ்ஸிலும், பலத்திலும், பராக்ரமத்திலும் நான் அவர்க்கு ஸமமானவன். உன்னை நிக்ரஹிக்க நான் ஶக்தன். எழுந்திரு. வழி விடு. இல்லாவிட்டால் உனை எமலோகம் அனுப்புவேன்” என்று சொன்னான்.

பிறகு ஹநுமான், பீமன் பலத்தால் கர்வம் கொண்டவனென்று அறிந்து, “தயவுசெய். எனக்கு எழுந்திருக்கச் சக்தியில்லை. என் வாலையாவது தூக்கி எறிந்துவிட்டுப் போ” என்று சொன்னார்.

பீமஸேநன் ஒரு கையால் அவர் வாலைத் தூக்கப் போனான். அது எழவில்லை. இரண்டு கைகளாலும் வாலை அசக்கினான். அது அசையவில்லை. நெறித்த புருவங்களுடனும், சுழல்கின்ற கண்களுடனும், வியர்க்கும் தேஹத்துடனும் பீமன் செய்த ப்ரயத்நங்கள் வீணாயின. வெட்கத்துடன் ஹநுமான் பக்கத்தில் வந்து நின்றான். அவரை ப்ரணிபதநம் செய்தான். கைகளைக் கூப்பிக்கொண்டு சொல்ல ஆரம்பித்தனன்.

"வாநரஶ்ரேஷ்ட! தயவு செய்யும். நான் சொன்ன துருக்திகளை க்ஷமியும். நீர் ஸித்தனோ? தேவனோ? கந்தர்வனோ? குஹ்யகனோ? யாரோ சொல்லும். ஶிஷ்யனைப்போல் வினவுகின்றேன். மறைக்கக் காரணமில்லாவிட்டால், வாநரரூபதாரியான நீர் யார் என்று எனக்குச் சொல்லும்" என்றனன்.

பிறகு ஹநுமான் தான் இன்னாரென்றும், ராமாயண வ்ருத்தாந்தங்களை ராமாயணத்தில் சொல்லியிருக்கிறபடி ஸங்க்ரஹமாய் பீமஸேநனுக்கு அறிவித்தார். ராமகதை லோகத்தில் வழங்கும் காலபர்யந்தம் தான் லோகத்தில் ஜீவித்திருக்க ஸ்ரீராமனிடம் வரம்பெற்றதாயும், ஸீதையின் ப்ரஸாதத்தால் தனக்கு யாவத்போகங்களும் அம்மலையில் அமைந்திருப்பதாயும், அவ்விடத்தில் அப்ஸரஸ்ஸுகளும் கந்தர்வர்களும் ஸ்ரீராமசரித விஷயமான காநங்களை ஸதா செய்து தனக்கு ஸந்தோஷம் செய்வதாயும், மநுஷ்யர் அம்மார்க்கம் செல்வதில்லை யென்றும், அங்கே தேவர்கள் ஸஞ்சரிக்கின்றார் என்றும், அதன்மேல் சென்றால் பீமஸேநனை யக்ஷனோ ராக்ஷஸனோ வருத்துவாரென்றும், இன்னும் யாராவது ஶபிப்பா ரென்றும் சொல்லிமுடித்தார்.

பிறகு பீமஸேநன், "உம்மைத் தர்சித்தேன். எனைக் காட்டிலும் தந்யன் யார்! உமது தர்சநம் தந்தீர். என்னை அநுக்ரஹித்தீர். நான் மிகவும் த்ருப்தனானேன். நீர் ஸாகர லங்கந காலத்தில் எடுத்த ரூபத்தைத் தர்சிக்க ப்ரியப்படுகின்றேன்" என்று சொன்னான்.

ஹநுமான் "அந்த ரூபம் உன்னாலாவது, மற்ற யாராலாவது இப்போது பார்க்க முடியாது. அக்காலத்தின் நிலை வேறு. இப்போதியது வேறு. க்ருதயுக காலம் வேறு. த்ரேதாயுக காலம் வேறு. த்வாபரயுகம் இது. நாஶகாலம். அந்த ரூபம் இப்போது எனக்கு இல்லை" என்றனர்.

அதன் மேல் பீமஸேநன் யுகங்களைப்பற்றியும், யுகங்கள்தோறும் தர்மார்த்த காமங்களின் ஸ்வரூபத்தைப்பற்றியும், கர்மங்களைப் பற்றியும், ஆசாரங்களைப்பற்றியும் ஹநுமானைக் கேட்டான். ஹநுமான் விஸ்தாரமாக விடையளித்தார். அதில் சிலவற்றை விவரிப்போம். "க்ருதயுகத்தில் தர்மம் குறைவதில்லை. மநுஷ்யர்க்கு க்ஷயமில்லை. தேவ தாநவ கந்தர்வ யக்ஷ ராக்ஷஸாதிகள் பரஸ்பர

விரோதிகளாய் அப்போதில்லை. அப்போது மநுஷ்யர் க்ரயவிக்ரயம் செய்வதில்லை. ஸாம ருக் யஜுர்வேத விபாகமில்லை. காம்ய கர்மமில்லை. யாவரும் த்யாநபரர்கள். வ்யாதிகள் அப்போதில்லை. அஸூயை, துக்கம், கர்வம், யுத்தம், சோம்பல், த்வேஷம், கோள்சொல், பயம், தாபம், பொறாமை இவைகள் இல்லை. அப்போது யோகிகளுக்குப் பரம்ப்ரஹ்மமே பரமமான கதி. அந்த ஸர்வபூதாந்தராத்மாவான நாராயணன் அப்போது ஶுக்லவர்ணனாய் இருந்தான். அவ்வவர் கர்மங்களில் நிலைகொண்டு ப்ராஹ்மணாதி வர்ணஸ்தர்கள் க்ருதயுகத்தில் உண்டானார்கள். யாவர்க்கும் ஆஶ்ரயம், ஆசாரம், ஜ்ஞாநம், கர்மம் முதலானவை ஸமமாயிருந்தன. யாவரும் எப்போதும் ஸ்ரீமந் நாராயணனையே உபாஸித்தனர். உபாஸந மந்த்ரம் ப்ரணவம் ஒன்றே. விதி அதன் அர்த்த விசாரம் மாத்ரமே. க்ரியை பகவத் த்யாநமாத்ரமே. காலம் தவறாமல், நாலு ஆஶ்ரமத்துக்கும் பொருந்திய கர்மங்களைப் பலாபிஸந்தியில்லாமல் ஜநங்கள் செய்து மோக்ஷத்தை அடைந்தார்கள். ஶாஶ்வதமான வர்ணாஶ்ரம தர்மம் க்ருதயுகத்தில் நான்கு கால்களுடன் கூடியிருந்தது. த்ரேதாயுகத்தில் ஜநங்கள் ஸத்யப்ரதாநர். தர்மத்துக்கு மூன்று கால். ஸ்ரீமந்நாராயணன் ரக்தவர்ணன். மநுஷ்யர் க்ரியாவந்தராய்த் தர்மத்தை ரக்ஷித்தார்கள். அப்போது யஜ்ஞங்கள் ப்ரவர்த்தித்தன. பல க்ரியாகலாபங்களுடன் தர்மம் வளர்ந்தது. பலாபிஸந்தியுடன் க்ரியைகளும் தாநங்களும் பெருகின. ஜநங்கள் ஸ்வதர்மங்களில் நிலைகொண்டனர். த்வாபர யுகத்தில் தர்மத்துக்குக் கால்கள் இரண்டே. பகவான் மஞ்சள் நிறத்தையடைவர். வேதமும் நான்கு விபாகத்தை யடையும். மூன்று வேதமென்றும் நான்கு வேதமென்றும் ஏற்படும். ஶாஸ்த்ரங்கள் பேதிக்கும். க்ரியைகளும் பேதிக்கும். ஜநங்கள் தபஸ்ஸிலும் தாநத்திலும் ப்ரவ்ருத்திப்பார்கள். ஆகிலும் ராஜஸகுணம் அவர்க்குள் மேலிடும். ஸத்வகுணம் குறைபடும். ஒவ்வொருத்தர் தான் ஸத்யத்தில் நிலைகொள்வர். ஸத்யம் துறந்தவர்க்குள் வ்யாதிகள் பெருகும். காமப்ரேரிதராகவும் ஸ்வர்க்காகாங்க்ஷையாலும் ஜநங்கள் யாகம் செய்வார்கள். அதர்மத்தால் ப்ரஜைகள் க்ஷயத்தை யடைவர். கலியுகத்தில் தர்மத்துக்குப் பாதம் ஒன்றே. அது தாமஸயுகம். கேஶவனும் க்ருஷ்ணவர்ணத்தை யடைவன். வேதாசாரங்கள், வர்ணாஶ்ரம தர்மங்கள், யாகக்ரியைகள் இவைகள் இன்மை

யை யடையும். வ்யாதி, அதிவ்ருஷ்டி, அநாவ்ருஷ்டி, சோம்பல், க்ரோதம் முதலான துர்க்குணங்கள், உபத்ரவங்கள், பசி, பயம் இவை பெருகும். இப்படி யுகதர்மங்கள் மாறுதல்களை அடைகின்றன. இந்தக் கலியுகம் இதோ ஸமீபித்துவிட்டது, என்றிவ் வண்ணம் ஹநுமான் பீமஸேநனுக்கு உரைத்தார்.

பிறகு பீமஸேநன் மறுபடி ப்ரார்த்திக்கவே, ஹநுமான் தான் ஸமுத்ர லங்கநம் செய்வதற்காக எடுத்த ரூபத்தைப் பீமனுக்குக் காட்டினார். அப்புறம் ஸௌகந்திக வநத்தின்பொருட்டு மார்க்கத்தை அர்ஜுநனுக்குக் காட்டிப் பீமனைப் போகச் சொன்னார். அந்த வநமானது யக்ஷராக்ஷஸரால் ரக்ஷிதமென்றும், அவ்விடம் பீமஸேநன் ஸாஹஸம் செய்யக்கூடாதென்றும், பலிஹோம நமஸ்கார மந்த்ரங்களால் தேவர்கள் பூஜிக்கப்பட்டால் அவர்கள் ப்ரஸாதம் செய்வாரென்றும், பீமன் ஸ்வதர்மத்தைப் பரிபாலநம் செய்யவேண்டு மென்றும் சொல்லி அநுஜ்ஞை பண்ணினார். அந்த ப்ரகரணத்தில்,

“𑌆𑌚𑌾𑌰 𑌸𑌂𑌭𑌵𑍋 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑍇𑌦𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾𑌃 ।
𑌵𑍇𑌦𑍈𑌰𑍍𑌯𑌜𑍍𑌞𑌾 𑌸𑌮𑍁𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌾𑌃 𑌯𑌜𑍍𑌞𑍈𑌰𑍍𑌦𑍇𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾𑌃 ॥
𑌵𑍇𑌦𑌵𑌾𑌦 𑌵𑌿𑌧𑌾𑌨𑍋𑌕𑍍𑌤𑍈𑌃 𑌯𑌜𑍍𑌞𑍈𑌰𑌾𑌪𑍍𑌯𑌾𑌯𑌨𑍍𑌤𑌿 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ।
𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑍍𑌯𑍁𑌶𑌨𑌃𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑍈𑌃 𑌨𑌯𑍈𑌰𑍍𑌧𑌾𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌾𑌃 ॥
𑌪𑌣𑍍𑌯𑌾𑌕𑌰 𑌵𑌣𑌿𑌜𑍍𑌯𑌾𑌭𑌿𑌃 𑌕𑍃𑌷𑍍𑌯𑌾𑌗𑍋𑌜𑌾 𑌵𑌿𑌪𑍋𑌷𑌣𑍈𑌃 ।
𑌵𑌾𑌰𑍍𑌤𑌯𑌾 𑌧𑌾𑌰𑍍𑌯𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌧𑌰𑍍𑌮𑍈𑌰𑍇𑌤𑍈𑌰𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑌿𑌭𑌿𑌃 ॥
𑌤𑍍𑌰𑌯𑍀𑌵𑌾𑌰𑍍𑌤𑌾 𑌦𑌣𑍍𑌡𑌨𑍀𑌤𑌿 𑌸𑍍𑌤𑌿𑌸𑍍𑌰𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌾𑌂 ।
𑌤𑌾𑌭𑌿𑌸𑍍𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌭𑌿𑌃 𑌲𑍋𑌕𑌯𑌾𑌤𑍍𑌰𑌾 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥
𑌸𑌾 𑌚𑍇𑌦𑍍𑌧𑌰𑍍𑌮 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 𑌨𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑍍𑌰𑌯𑍀𑌧𑌰𑍍𑌮 𑌮𑍃𑌤𑍇 𑌭𑍁𑌵𑌿 ।
𑌦𑌣𑍍𑌡𑌨𑍀𑌤𑌿 𑌮𑍃𑌤𑍇 𑌚𑌾𑌪𑌿 𑌨𑌿𑌰𑍍𑌮𑌰𑍍𑌯𑌾𑌦 𑌮𑌿𑌦𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥
𑌵𑌾𑌰𑍍𑌤𑌾𑌧𑌰𑍍𑌮𑍇 𑌹𑍍𑌯𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍋 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑍇𑌯𑍁𑌰𑌿𑌮𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 ।
𑌸𑍁𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍈𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑍍𑌹𑍍𑌯𑍇𑌤𑍈𑌰𑍍𑌧𑌰𑍍𑌮𑍈𑌃 𑌸𑌂𑌪𑍍𑌰𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌵𑍈 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 ॥

* * * * * * *

𑌯𑌜𑍍𑌞𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑌦𑌾𑌨𑌾𑌨𑌿 𑌤𑍍𑌰𑌯𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌾𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃 ।
𑌯𑌾𑌜𑌨𑌾𑌧𑍍𑌯𑌾𑌪𑌨𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑍇 𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌚𑍍𑌚𑍈𑌵 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 ॥

𑌪𑌾𑌲𑌨𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌵𑍈 𑌵𑍈𑌶𑍍𑌯𑌧𑌰𑍍𑌮𑌶𑍍𑌚 𑌪𑍋𑌷𑌣𑌂 ।
𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾 𑌚 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑍀𑌨𑌾𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌧𑌰𑍍𑌮 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

* * * * * * *

𑌤𑌪𑍋𑌯𑌜𑍍𑌞𑌦𑌮𑍇𑌜𑍍𑌯𑌾𑌭𑌿 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌯𑌥𑌾𑌦𑌿𑌵𑌂 ।
𑌦𑌾𑌨𑌾𑌤𑌿𑌥𑍍𑌯 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌧𑌰𑍍𑌮𑍈𑌃 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌸𑌦𑍍𑌗𑌤𑌿𑌂 ।
𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌤𑌥𑌾 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌭𑍁𑌵𑌿 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌪𑌾𑌲𑌨𑍈𑌃 ।”

இந்த ஶ்லோகங்கள் காணப்படுகின்றன. இவற்றின் ஸமுதாயார்த்தம்:— ஆசாரத்தால் தர்மம் உண்டாகின்றது. தர்மத்தில் வேதங்கள் நிலைத்துள். வேதங்களால் யஜ்ஞங்கள் உண்டாயின. யஜ்ஞங்களால் தேவர்கள் நிலைத்துளர். வேதங்களில் கண்ட ஆசாரங்கள் விதிகள் இவற்றின்படி பண்ணப்பட்ட யஜ்ஞங்களால் தேவர்கள் தரிக்கப்படுகின்றனர். ப்ருஹஸ்பதி, ஶுக்ரன் இவர்கள் செய்த நீதிகளால் மநுஷ்யர் தரிக்கப்படுகின்றனர். வர்த்தகம், க்ருஷி, பசு போஷணம் இவை முதலான ஜீவநோபாயங்களால் ஸர்வமும் தரிக்கப்படுகின்றது. மூன்று வேதம், தண்டநீதி யெனும் ராஜதந்த்ர ஶாஸ்த்ரம், ஜீவநோபாய ஶாஸ்த்ரம் இம்மூன்று வித்யைகளை அறிந்த த்விஜாதிகளால், அவ்வித்யைகள் நன்கு அநுஷ்டிக்கப்பட்டு லோகயாத்ரை நடக்கவேண்டும். இம்மூன்று வித்யைகளும் தர்மத்தைத் தொடாமல் லோகத்தில் ப்ரயோகிக்கப்பட்டால் லோகம் மர்யாதை யற்றுப்போம். ஜநங்கள் நாசமடைவார்கள். இவை நன்றாக அநுஷ்டிக்கப்பட்டால் ஜநங்கள் தர்மத்தை ஸம்பாதித்துக்கொள்வார்கள். * * யஜ்ஞம், அத்யயநம், தாநம் இவை மூன்று வர்ணஸ்தர்க்கும் ஸமாநம். யாஜநம், அத்யாபநம், ப்ரதிக்ரஹம் இவை விப்ரர்க்கு அஸாதாரண தர்மம். லோகபாலநம் க்ஷத்ரியர்க்கும், யாவருடைய போஷணமும் வைஶ்யர்க்கும் அஸாதாரண தர்மங்கள். த்விஜாதிகளின் ஶுஶ்ரூஷை, சூத்ரர்க்குத் தர்மம் என்று சொல்லப்பட்டது. * * * தபஸ், தர்மம், இந்த்ரிய நிக்ரஹம், இஜ்யை இவற்றை யநுஷ்டித்து விப்ரர் எவ்வண்ணம் பரலோக மடைகின்றனரோ, அவ்வண்ணமே, தாநம் அதிதிபூஜை முதலானவற்றால் வைஶ்யரும், துஷ்டநிக்ரஹ ஶிஷ்டபரிபாலநத்தால் க்ஷத்ரியரும் பரலோகமடைகின்றனர்.

இவ்விதமாகப் பல தர்மங்களைப் பீமஸேநனுக்கு ஹநுமான் உபதேசித்தார். பிறகு அவனை ஆலிங்கநம் செய்தார். அப்போது பீமஸேநனுக்கு ஸர்வஶ்ரமமும் நீங்கி மஹாபலம் உண்டாயது. ஹநுமான் கண்களில் ஆநந்தபாஷ்பம் பெருக, “வீர! புறப்பட்டுப் போ. பின் காலத்தில் என்னை ஸ்மரி. நான் இங்கிருப்பதை யாருடனும் சொல்லாதே. இப்போது குபேரன் க்ரஹத்தினின்று தேவகந்தர்வ கந்நிகைகள் இப்புறம் ஸஞ்சரிக்க வருவார்கள். உன்னைப் பார்த்து என் கண்கள் களித்தன. உன்னால் ராகவனை ஸ்மரித்தேன். என்னுடைய தர்சநம் உனக்கு மங்களம் உண்டாக்கும். நீ என் ப்ராதாவானதால் வரம்கேள். ஹஸ்திநாபுரம் சென்று த்ருதராஷ்ட்ர புத்ரர்களை நாசம் செய்யவேண்டுமானால் இதோ செய்துவிடுகின்றேன். அந்நகரத்தை த்வம்ஸம் செய்யச்சொன்னால் செய்கின்றேன். துர்யோதநனைக் கட்டி உன்னிடம் கொண்டுவிட வேண்டுமானால் கொண்டுவருகின்றேன்” என்று சொன்னார்.

அதைப் பீமஸேநன் கேட்டு ஸந்தோஷித்து, “வாநரஶ்ரேஷ்ட! எனக்கு ஸர்வோபகாரமும் செய்தீர். என்னை க்ஷமிப்பீர். என்மீது க்ருபை செய்வீர். உம்மைநாதனாயுடைய பாண்டவர்கள் ஸநாதர்களே! உமது தேஜஸ்ஸால் ஸர்வ ஶத்ருக்களையும் நாங்கள் ஜயிப்போம்” என்று சொன்னான்.

பிறகு ஹநுமான், “நீ என் ப்ராதா. உன்னிடம் எனக்கு ப்ரியம். ஆதலால் நீங்கள் யுத்தோந்முகர்களாய் ஸிம்ஹநாதம் செய்யும்போது அந்த த்வநியை எனது ஸ்வரத்தினால் வ்ருத்தி செய்கின்றேன். விஜயன் த்வஜத்தில் நின்று தாருண சப்தங்களைச் செய்து உன்னுடைய சத்ருக்களைப் பயமுறுத்துகின்றேன்” என்று சொல்லிவிட்டு மறைந்துபோனார்.

பத்ராதிபர்.

ஸ்ரீ:

ஜநகநந்தினீ.

வைஶாக உத்ஸவம் ஸமீபித்துவிட்டது. அதைக் காட்டும் பலவித ப்ரயத்நங்களை ஊர் ஜநங்கள் மேற்கொண்டனர். பரீக்ஷை கொடுத்துவிட்டு ஸ்ரீநிவாஸன் மாதா பிதாக்களுடன் வந்து வஸித்தான். அம்மான் இல்லத்துக்குப் போனானில்லை. ஆகிலும் ஸந்நிஹித பந்துக்களை முற்றிலும் காணாமல் விடத் துணிந்தானில்லை. அவ்விடம் செல்ல ஜநகநந்தினியும் அவனுக்கு ஓர் ஆகர்ஷகமாயிருந்தாள். ஆழ்வார் திருநாள் வரவும், ஸந்நிதி வீதியில் வாஸம் செய்பவர், விஷ்வக்ஸேநரை அநுயாத்ரையாகப் பின்தொடர்ந்தார்கள். ஸ்ரீநிவாஸனும் கூட நடந்தான். கேசவாசார்யர் வீதியிலிறங்கி ஸேனாநாதனை வந்தநம் செய்துவிட்டு, வேதகோஷ்டியைச் சேர்வதற்குச் சென்றார். வழியில் ஸ்ரீநிவாஸனைப் பார்த்தார். “ஸ்ரீநிவாஸா! நீ வந்திருப்பதாய்ச் சொன்னார்கள். ஏன் எங்கள் க்ரஹத்துக்கு வாராமலிருந்தாய்? உன் யோக க்ஷேமத்தைப்பற்றி ஸாவகாசமாய் விசாரிக்கின்றேன்” என்று சொல்லிவிட்டு நடந்தார்.

திருவடி ஸந்நிதியண்டையில் ஸ்ரீநிவாஸன் நின்றுவிட்டான். திரும்புங்கால் அம்மான் இல்லத்துக்குள் சென்றான். ஹரிப்ரியையும் ஜநகநந்தினியும் உட்கார்ந்திருக்கக் கண்டான்.

“ஸ்ரீநிவாஸா! நீ பெருமாள் கோவிலுக்கு வந்து, ஏன் எங்கள் அகத்துக்கு வரவில்லை? உன் வாசிப்பெல்லாம் முடிந்ததா?” என்று ஹரிப்ரியை சொன்னாள்.

“வாசிப்புக்கு முடிவு முண்டோ? உத்தேசித்தமட்டில் வாசித்தேன்; பரீக்ஷை கொடுத்தேன்; அதில் தேறின விஷயம் இன்னும் தெரியவில்லை. திருக்குடந்தை வாஸம் செய்தேனென்பது

உங்களுக்குத் தெரிந்திருக்குமே. அங்கே ஜநகத்தின் பர்த்தாவைப் பார்த்தேன்" என்று ஸ்ரீநிவாஸன் சொன்னான்.

ஸ்ரீநிவாஸா! மாப்பிள்ளையைப் பார்த்தையோ? அவர் ஸுகமாயிருக்கிறாரா?" என்று கேட்டாள் ஹரிப்ரியை.

"ஸுகமாய் இருக்கின்றார். மஹா ப்ரஹ்மவித்தாய் இருக்கின்றார். அவர் முகத்தில் ப்ரஹ்ம தேஜஸ் ஜ்வலிக்கின்றது" என்றான் ஸ்ரீநிவாஸன்.

"ஸ்ரீநிவாஸா! அவரோடு வார்த்தை சொன்னையோ?" என்றாள் ஹரிப்ரியை.

"அவருடன் வார்த்தை சொல்லுகிறதா? அவர் ஸ்வர்நச்சாயையுடன் அக்நிதேவன் மூர்த்தீகரித்து வந்ததுபோல் ப்ரகாஶிக்கின்றார். அவரை நான், என்வேஷத்தோடு எவ்வண்ணம் நெருங்கக்கூடும்? எனக்கு அவருடைய தர்சநமாத்ரம் ப்ராப்தமாயிற்று" என்று சொன்னான் ஸ்ரீநிவாஸன்.

ஹரிப்ரியை அந்தச் சொற்களைக் கேட்டாள். ஸந்தோஷத்துடன் துக்கமும் கொண்டாள். வைஶ்வாநரஸமனாய் மாப்பிள்ளை இருக்கின்றாரென்று ஸந்தோஷம்; ஜநகத்தை அழைக்காமலிருக்கின்றாரென்று துக்கம். இவ்வண்ணம் அவள் நிற்கையில், "ஜநகத்துக்கு வயஸாச்சுதே! ஏன் அவளை அவள் பர்த்தா அழைத்துக் கொள்ளவில்லை?" என்று கேட்டான் ஸ்ரீநிவாஸன்.

"அதுதான் எங்கள் கஷ்டம். எத்தனைதரம் எழுதினாலும் ப்ரத்யுத்தரம் தருகின்றதில்லை. பத்மநாபாசார்யரும் உப்பிலியப்பன் கோவிலுக்குப் போய் வந்தார். பெண்ணை அழைத்துக்கொள்வதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையாம். எங்களுக்குப் பகவான் கொடுத்தது ஒரு குழந்தை. அவள் பெண்ணாய்ப் பிறந்தாள். அவளுடைய ஸுகம் அந்யர்களுடைய ஆதீநமாயிருக்கின்றது. அவ்வளவு வாசித்தவராயும் விவேகியாயும் இருப்பவர், எங்களை ஏன் இப்படி துன்பப்படுத்துகின்றாரோ தெரியவில்லை! எங்களுக்கு நல்லகாலம் எப்போது உண்டாமோ?" என்று சொன்னாள் ஹரிப்ரியை.

அதைக் கேட்டு ஸ்ரீநிவாஸன் ஸந்தோஷித்தானில்லை. 'ஜநகநந்தினியைப் பத்நியாகப் பெற்று விஶ்வஸிக்காமலும் ஒரு புருஷன்

இருப்பனோ' வென்று யோசித்தனன். இதற்குள் ஹரிப்ரியை "ஸ்ரீநிவாஸா! உனக்கு விவாஹத்தில் விருப்பமில்லையா? வயதாயும் ஏன் இப்படி இருக்கின்றாய்?" என்று கேட்டாள்.

"இப்போது கல்யாணயோசனை இல்லை. பின்னால் யோசிக்கலாம்" என்று சொல்லிவிட்டு ஸ்ரீநிவாஸன் புறப்பட்டுப்போனான். போகுங்கால் ஜநகத்தைப் பார்த்தான். அவள் முகத்தில் நூதநமாக ஒரு வாட்டத்தைக் கண்டான். சித்தத்தில் வருத்தம் கொண்டான். ஜநகத்துக்கும் தனக்கும் ப்ரஹ்மசர்யந்தான் ஈஶ்வரன் விதித்திருக்கின்றதுபோல் அவனுக்குத் தோன்றிற்று.

மறுநாள் காலை ஸ்ரீநிவாஸன் வீட்டின் குறட்டின்மேல் நின்றிருக்கையில் தபால்காரன் வருவதைக் கண்டான். தபால்காரன் ஸ்ரீநிவாஸனிடம் ஒரு கடிதம் கொடுத்தான். ஸ்ரீநிவாஸன் அதைப் பிரித்துப் பார்த்தான்.

"உன்னுடைய மாமா கேசவாசார்யர் மாப்பிள்ளை இன்று துர்யாஶ்ரம ப்ரவேச நிமித்தம் ஸங்கல்பித்துக்கொண்டு ஜீவஶ்ராத்தம் செய்வித்துக்கொள்கின்றார். நாளை உதயம் ப்ரேஷ மந்த்ரோச்சாரணம் செய்வார். இந்தத் துக்க ஸமாசாரத்தை அந்த ஸ்வாமிக்குத் தெரிவித்துவிடு" என்று ஆதிவராஹாசார்யர் எழுதியிருந்தார்.

ஸ்ரீநிவாஸன் ப்ரமைகொண்டான். திண்ணைமீது உட்கார்ந்தான். அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. பெருமாள் மண்டபத்திற்கு எழுந்தருளியிருந்தார். வீதியில் ஜநங்கள் குறைந்து ஸஞ்சரித்தார்கள். அவர்களையும் பார்க்க ஸ்ரீநிவாஸன் ஸஹிக்கவில்லை. எழுந்து வேகவதியாற்றை நோக்கிச் சென்றான். ஒரு விவிக்த ப்ரதேசத்தில் மரத்தின் நிழலின் கீழ் அமர்ந்தான். எண்ணமிடத் தொடங்கினான் :—

"வரதா! நீ வரதர்ஷபனா? இப்படியா ஜநகநந்தினிக்கு வரம் தந்தாய்? "[illegible]" என்று உன்னை வர்ணித்தாரன்றோ? பூர்ண கர்ப்பிணியும் பதிவ்ரதையுமான ஸீதையைக் காட்டுக்கு அனுப்பத் துணிந்த உனக்கும் தயையுண்டோ? உனக்குப் பேரருளாளன் என்று

பெயர் வைத்தார்களே! இது மாத்ரமா? பத்து மாஸம் உடுத்த வஸ்த்ரம் களையாமல் சிறையிருந்த தபஸ்விநியான தேவி, நீ அவ்வண்ணமே தன்னைக் காணவேண்டுமென்று கேட்டுக்கொண்டும், அவளை ஸ்நாநம் பண்ணுவித்து ஸர்வாலங்கார பூஷிதையாய் உன் பக்கல் வரவழைத்து, ஜநக்கூட்டத்தின் முன்பாகப் பருஷோக்திகள் சொல்லித் தீப்பாயச் செய்தனையன்றோ? தேவர்களும் திடுக்கிட்டுப்போய், "உபெக்ஷஸே கதம் ஸீதாம் பதந்தீம் ஹவ்யவாஹநே" என்று உன்னை வினவவில்லையா? இவ்வண்ணம் நிர்க்ருணனான நீ ஜநகநந்தினியின் துயரத்தைக் கண்டும் ஸஹிக்கமாட்டாயோ? ஸீதையின் பெயரை அவள் கொண்டாளென்று தான் நீ அவட்கு இக்கொடுமை புரிந்தனையோ?"

* * * * * *

"கண்டிலரிக் காசினியில் கொடியாயுன்தன்
கல்நெஞ்சம் பலகால்நீ காட்டிநின்றும்
பண்டரக்கன் புலிநுகரும் பசுவென்னத்தான்
பாவைதனைக் கொண்டுசெலப் பார்த்துநின்றாய்
கொண்டமனைக் கிதுசெயுநின் கொடுமைமற்றோர்
கூரழலில் விழவுமிரங் காதேகூறில்
மண்டையுடைத் துயிருணுமக் கள்வர்தாமும்
மாதவநின் கடுமையிலர் மறைமுன்நின்றாய்."

இவ்வண்ணம் உன்னைப் பாடினது உண்மையன்றோ?

"ப்ரணதார்த்திஹர! அது உன் பிருதன்றோ? ஜநகநந்தினி உன்னைப் பக்தியுடன் வணங்கவில்லையா? அவள் துக்கத்தை நீ இனி எவ்வண்ணம் போக்கப்போகின்றாய்? அவள் புருஷன் இனி க்ரஹஸ்தராகமாட்டாரே! நீ உத்ஸாஹம் பூண்டு உத்ஸவம் கண்டருளுகின்றாய். அவளோ துடிக்கப்போகின்றாள். பரம பாகவதரான என் அம்மானை நீ எப்படிப் பரீக்ஷிப்பையோ? நிர்தோஷையான அவர் பத்நிக்கு இ[illegible] என்ன கதி?

"இதோ இந்த வேகவதியைப் பார்! ப்ராணனற்றும் செயலற்றும் கிடக்கின்றதே! ஜநகநந்தினி துயர்க்கடலில் ஆழவே அருக்கனும் கோபங்கொண்டு பூவுலகைக் கொளுத்துகின்றானே! அவள் துன்பப்படவே ஒரு பக்ஷியாவது கூவுகின்றதா பார்! மரங்களில் ஓரிலையாவது அசைகின்றதா பார்! அதோ கால்நடைகள் புல்லைத் தொடாமல் வ்யஸநத்துடன் நிற்கின்றனவே! உலகமெல்லாம் துயர்கொள்ள நீ உத்ஸவம் கொள்கின்றையே?

"ஐயோ! நான் என்செய்வேன்! துக்கம் வந்துவிட்டது. இங்கு நான் எண்ணமிட்டுக்கொண்டிருந்தால், அவர்களுக்கு இதை யார் சொல்வார்கள்? எனக்கு இனி என்ன பிழைப்பு! அவள் ஸௌக்யப்படக் கண்டு யான் ஸுகங்கொள்ள எண்ணினேன். அவளைத் தர்சித்துக் களிக்க எண்ணினேன். என்றாகிலும் அவளுடன் ஒரு வார்த்தை சொல்லி அதை நினைந்து நினைந்து ஜீவிக்க எண்ணினேன். ஆஹா! என்ன காலம் வந்துவிட்டது! ஜநகம்! இதற்காகவா நீ பிறந்தாய்? இதற்கா உன்னை ஈச்வரன் அவ்வளவு அழகுடன் அமைத்தான்? இதற்கா உன் பிதா உனக்கு அத்தகைய ஜ்ஞாநமளித்தார்? இதற்குத் தானா உத்தம குணங்கள் யாவும் உன்னிடம் குடிகொண்டன?"

இவ்வண்ணம் சிந்தித்துச் சிந்தித்துப் பொழுதுபோக்கினான். நாழிகை இருபது ஆயிற்று. மீண்டும் வீட்டுக்குப் புறப்பட்டு வந்தான். வீதித் திண்ணையில், பெருமாளுடன் திரும்பிவந்த பிதா வரதாசார்யர் உட்கார்ந்திருந்தார். ஸ்ரீநிவாஸனைப் பார்த்தவுடன், "எங்கே போய்விட்டாய்? இதுவரையில் உனக்கு ஆஹாரத்திலும் இச்சையற்றதா?" என்றனர்.

ப்ரத்யுத்தரம் தராமல் ஸ்ரீநிவாஸன் வீட்டிற்குள் நுழையப் போனான். அவன் முகத்தை ஸமீபத்தில் நோக்கி, "என்ன ஸ்ரீநிவாஸா! உன் முகம் கலங்கி இருக்கின்றதே! கண்கள் செவந்திருக்கின்றனவே! ஓஹோ! நீ மிகவும் கண்ணீர் விட்டிருக்க வேணும். என்ன ஆபத்து வந்துவிட்டது?" என்று அவன் பிதா மொழிந்தார். ஸ்ரீநிவாஸன் தனது கையில் விடாது பற்றியிருந்த கடுதாசியை நீட்டினான். வரதாசார்யர் அதை வாங்கி வாசித்தார். முகம் குன்றி உட்கார்ந்தவண்ணம் இருந்து விட்டார்.

ஸ்ரீநிவாஸன் வீட்டினுள் புகுங்கால், அவன் மாதா கநகவல்லி அவனை ப்ரதீக்ஷித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவன் சாப்பிடாதபடியால் அவளும் சாப்பிட்டாளில்லை. ஸ்ரீநிவாஸனைக் கண்டவுடன், "குழந்தாய்! உண்டியை மறந்து எங்கே திரியப்

போனாய்?" என்றனள். உடனே அவன் முகத்தைப் பார்த்து, "என் அழுகின்றாய் ஸ்ரீநிவாஸா!" என்று கேட்டாள்.

"ஜநகத்தின் அகமுடையான் ஸந்யாஸம் செய்துகொள்ளுகின்றாரென்று கடுதாசி வந்தது" என்றனன் ஸ்ரீநிவாஸன்.

"அடி என் கண்ணே! உனக்கிது தலைவிதியா?" என்று கூவிப் புலம்ப ஆரம்பித்தாள். ஸ்ரீநிவாஸனும் கண்ணீர் சொரிந்தான். வாசலில் வரதாசார்யர் உட்கார்ந்துகொண்டே இருந்தார். ஸ்ரீநிவாஸனும் அவன் மாதாவும் தம் பசியை மறந்தார்கள். இவ்வண்ணம் சிலகாலம் கழிந்தது. கநகவல்லி தன் தமையன் இல்லத்துக்குப் போகப் புறப்பட்டாள். வீதித் திண்ணையில் இருந்த வரதாசார்யர் அவளைப் பார்த்தார். "கண்ணைத் துடைத்துக்கொள். வீதியில் உன்னைப் பார்ப்பவர்கள் என்ன வென்று கேட்கும்படிச் செல்லாதே. ஊரில் கலக்கத்தை உடனே உண்டாக்கி விடாதே. வந்தது வந்துவிட்டது. இனி அதை மாற்ற எவர்க்குப் பொருந்தும்? புத்திமான்கள் தம் உள்ளம் அறிந்த துக்கத்தை வெளிக் காட்டமாட்டார்கள்" என்று பத்நிக்கு வரதாசார்யர் உபதேசித்தார்.

கநகவல்லி கேசவாசார்யர் க்ரஹத்துக்குள் சென்றாள். ரேழியில் உட்கார்ந்திருந்த தமையனைப் பார்த்தாள். கண்ணீர் விட்டாள். "ஏன் அழுகின்றாய்?" என்று கேட்டார் கேசவாசார்யர். "ஜநகத்தின் அகமுடையான் ஸந்யாஸியாய்ப்போனாராம்" என்று சொன்னாள் கநகவல்லி. "ஆர் அப்படிச் சொன்னது?" என்றார் கேசவாசார்யர். "ஸ்ரீநிவாஸனுக்குத் திருக்குடந்தையிலிருந்து கடுதாசி வந்தது" என்றனள் கநகவல்லி. கேசவாசார்யர் தலைகுனிந்தார். மற்றொன்றும் பேசினாரில்லை. இவ்வார்த்தைகளை உள்ளே இருந்த ஹரிப்ரியையும் ஜநகநந்தினியும் கேட்டார்கள். ரேழியை அடுத்த தாழ்வாரத்தில் வந்து நின்றார்கள். கநகவல்லி உள்ளே சென்றாள். அவளும் ஹரிப்ரியையும் உட்கார்ந்து புலம்பினார்கள். கண்களில் அவர்க்கு நீர் ஆறாகப் பெருகியது. துக்கமிஶ்ரமான வார்த்தைகள் அவர்க்குள் வளர்ந்தன. ஜநகநந்தினியோ கநகவல்லி உள்ளே நுழையவும் அறைக்குள் சென்றாள். நடந்தவற்றை நன்கு அறிந்தாள். தனக்குப் பதிஸம்யோகம் இல்லையென்று அறிந்தாள். பதியினுடைய தர்சநமும் தனக்கு இனி நேர்படாதென்று தெரிந்துகொண்டாள். பதிஶுஶ்ரூஷணம் என்று லோகத்தார் சொல்வதும், ப்ராப்தமாகப் போவதாய்த்தான் நீண்டகாலமாக எண்ணியிருந்ததும், இனி எண்ணத்தகாததென்றும் எண்ணினாள். ஆனால் விஷயஸுகமென்பது அவள் சிந்தைக்கெட்டியதன்று. அவள் பெற்ற ஜ்ஞாநத்தாலும் அவளுக்கு நேர்ந்த ஸம்ஸர்க்கத்தாலும், அதைப்பற்றிச் சிந்திக்க அவளுக்கு அவகாஶம் உண்டானதில்லை. ஆதலால் இழந்துபோனதை அவள் தெளிவாய் க்ரஹித்திலள். லோக வழக்கத்தில், பதிவியோகத்தைக் காட்டிலும் ஸ்த்ரீகளுக்குப் பெரிதான துக்கமில்லையென்று சொல்வது அவளுக்குத் தெரியும். அது, அவர் உயிர்த்திருக்கையிலேயே அவளுக்கு ஸம்பவித்து விட்டது. இது இவ்வகைப்பட்டது என்று பூர்ணமாக அறிவதற்கு இடமின்றியே, ஒரு பெரிதான விபத்து வந்துவிட்டது என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள்.

அவ்வண்ணமே ஸ்ரீநிவாஸனும் அவன் வீட்டில் துக்கித்துக்கொண்டிருந்தான். உலகவழக்கில் அவனுக்கு அத்தகைய துக்கம் உண்டாகக் காரணமில்லை. ஆனால் ஜநகநந்தினி அவனுடைய ஹ்ருதயத்தில் நிலைத்துவிட்டாளே. அவளுடைய துக்கமெல்லாம் அவனுடைய துக்கமாய்ப் பரிணமித்தது. இருவர்க்கும் அதற்குப் பரிஹாரமாக ஒரு உபாயமும் யோசிக்கவும் இடமில்லை.

"ஜநகநந்தினியின் அழகும் கல்வியும் மஹாஸுக்ருத பலம். அவள் ஸகல நற்குணமும் பொருந்தியவள். குற்றமற்றவள். மஹாஸுக்ருதம் செய்த புருஷனன்றோ அவளை யடைய வேண்டும். அடைந்தும் விட்டவன் ஜந்மாந்தர துஷ்க்ருத பலத்தை அடைந்தவனே. தானும் கெட்டு அவளையும் கெடுத்தானே! இவ்வளவு நன்றாக அவளை அமைத்த ஈஶ்வரனும் கெடுத்தானன்றோ? அவள் துக்கத்தில் மூழ்க, யானும் அதில் மூழ்கினவனே!" என்றிப்படி ஸ்ரீநிவாஸன் தன் இல்லத்தில் உட்கார்ந்து யோசித்தனன்.

ஹரிப்ரியையும் கநகவல்லியும் குரல்விட்டு அழுதாரில்லை. ஆகிலும் துக்கத்தால் எழுந்த அவர்களுடைய வார்த்தைகள் அண்டை அசல் வீட்டார்க்குத் தெரிந்தன. கேசவாசார்யருக்கு உண்டான ஶோகம் பல விப்ரர்களை வருத்தியது. ஸ்த்ரீகள் ஸ்த்ரீகளுக்கு உபசார வார்த்தைகள் சொல்வதற்காக அவர் க்ரஹத்தில் வந்து கூடினார்கள். பண்டிதர்கள் கேசவாசார்யரை வந்து பார்த்

தார்கள். உபசாரோக்திகள் மொழிந்தார்கள். ஒருவர்க்கும் ஒரு வார்த்தைகூட அவர் சொல்லவில்லை; அவர் கண்ணீர் விட்டாரில்லை. வந்தவர்க்குள் பத்மநாபாசார்யர், “தேவரீர்க்கு இந்தக் கஷ்டம் நேரிட அடியேன் வ்யாஜமானேன். அன்று அவர் நடந்த வகையிலும் வார்த்தை சொன்ன ப்ரகாரத்திலும் நல்ல காலம் வர மாட்டாதென்று அறிந்துகொண்டேன். இந்தப் பெண்ணை இவ்வண்ணம் கெடுத்துவிட அவர்க்கு எப்படி மநஸ் துணிந்ததோ? இதற்குப் பரிஹாரம் சொல்ல யார்க்கு முடியும்? தேவரீர்க்கு ஸர்வார்த்தங்களும் ஸுநிஶ்சிதங்கள். ஜநகத்துக்கு அத்யாத்ம வித்யாப்ரதாநம் செய்திருக்கின்றது. நீங்கள் இருவரும் தத்வஜ்ஞாந வ்யபாஶ்ரயர்களாய் நின்று இந்த துக்கத்தை த்பஜிக்கவேண்டும். அதற்கு வரதன் ஸஹாய பூதராய் நிற்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கின்றேன்” என்று சொன்னார்.

இவ்வண்ணம் ஸாயங்காலம் வரையில் காலம் கழிந்தது. கேசவாசார்யர் எழுந்தார். அநந்த ஸரஸ்ஸுக்குச் சென்று ஸந்த்யாவந்தநம் முதலான கைங்கர்யங்களைச் செய்து முடித்தார். பகவான் ஸிம்ஹவாஹந மீதேறித் திருவீதி யலங்கரித்தான், கேசவாசார்யர் வேதபாராயண கைங்கர்யத்தில் வழக்கப்படி அந்வயித்தார். வரதாசார்யர் பார்யை, பெருமாள் எழுந்தருளு மட்டும் வீடுவந்து சேர்ந்தாளில்லை. குமாரனைத் தனியே விட்டுவிட்டுப் பெருமாளுடன் செல்ல வரதாசார்யர் இஷ்டப்படவில்லை. பெருமாள் திருவடி கோவில் ஸமீபத்தில் எழுந்தருளினார். சிறிது காலம் அவ்விடம் நிறுத்தப்பட்டார். ஆனால் கேசவாசார்யர் பார்யையும், கநகவல்லியும், ஜநகநந்தினியும் பகவத் ஸேவார்த்தம் வெளியில் வந்தாரில்லை. அவர்களுடைய துக்கம் அதற்கோர் காரணம். மநம் கலங்கியவர்க்கு முகமும் கலங்கியது. அப்படிப்பட்ட முகங்களுடன் வீதிப்புறம் வர அவர்கள் இஷ்டப்பட வில்லை. அவ்வண்ணம் யாவவராலும் பார்க்கப்படும்படியாக வெளிவர ப்ரியப்பட்டாரில்லை. பெருமாளும் மண்டபமேற எழுந்தருளிவிட்டார்.

அன்றிராத்திரி கேசவாசார்யர் திரும்பிவந்தவுடன் ரேழியில் படுத்துக்கொண்டார். ஜநகம் அப்போது அவர் ஸமீபத்தில் வந்து நின்றாள். “குழந்தாய்! உன் விஷயமாக நான் எண்ணியிருந்தவற்றை ஶரண்யன் திருவுள்ளம் பற்றவில்லை. “[illegible]

[illegible]” என்று அவன் மொழிந்ததாகப் பெரியவர்கள் சொல்வார்கள். ஸ்வாதந்த்ரியத்தால் அதை செய்தானென்றால் நைர்க்ருண்யம் அவனைத் தொடரும். அவன்பேரில் சுமற்ற வொண்ணாது. கர்மாத்யக்ஷன் கர்மாநுரூப பலங்களைத்தான் தருவன். இப்படி நமது கர்மம் சிகையறுக்கின்றதென நாம் ஸந்தோஷிக்க வேண்டுமென்று நீ கேட்டிருக்கின்றாய். பகவான் என்றும் நமக்கு ஹிதத்தையே செய்கின்றான் என்று உனக்குத் தெரியும். உனது புத்தியால் உன் மநஸ்ஸை த்ருடப் படுத்திக்கொள். இப்படி உனக்கு ஸமாதாநம் ப்ரயத்நத்தால் உண்டாக வேண்டும். வரதன் உன்னை ரக்ஷிக்கட்டும்” என்று கேசவாசார்யர் சொன்னார். அன்றிராத்ரி அந்த க்ருஹத்தில் நெருப்பு மூட்டப்படவில்லை.

பத்ராதிபர்.

ஸ்ரீ:

வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

	ரூ.	அ.	பை.
1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்)	0	2	0
2. ஸ்ரீ த்ராவிடவேத தாத்பர்யம்—(ஸ்ரீ. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது)	0	2	0
3. ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்)	0	2	0
4. ஸ்ரீ பாகவத தனிஶ்லோகீ - (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹமாசார்யர்)	0	4	0
5. ஸ்ரீ சதுஶ்லோகீ விவரணம்	0	4	0

இவை வேண்டுமேவர்கள் சென்னை, மயிலாப்பூர், கேசவப்பெருமாள் ஸந்நிதிவீதியில் இருக்கும் ஸ்ரீ வேதாந்த தீபிகை மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

𑌶𑍍𑌰𑍀𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

𑌅𑌵𑌿𑌵𑍇𑌕𑌘𑌨𑌾𑌨𑍍𑌧𑌦𑌿𑌙𑍍𑌮𑍁𑌖𑍇
𑌬𑌹𑍁𑌧𑌾𑌸𑌨𑍍𑌤𑌤𑌦𑍁𑌃𑌖𑌵𑌰𑍍𑌷𑌿𑌣𑌿 ।
𑌭𑌗𑌵𑌨𑍍! 𑌭𑌵𑌦𑍁𑌰𑍍𑌦𑌿𑌨𑍇 𑌪𑌥𑌃
𑌸𑍍𑌖𑌲𑌿𑌤𑌂 𑌮𑌾𑌮𑌵𑌲𑍋𑌕𑌯𑌾𑌚𑍍𑌯𑍁𑌤! ॥ 49.

---

49. கீழ் ஶ்லோகத்தால், ‘நான் ஶரணாகதன்; ப்ரதிபந்தகங்களை நிவ்ருத்தித்துக்கொள்ளவல்ல ஸாதநாந்தரங்களைச் செய்யவும் அத்யந்தம் அஶக்தன்! ஆகையால், தேவரீர் கேவலக்ருபையாலே என்னை விஷயீகரித்தருளவேணும்’ என்று ஸ்ரீ ஆளவந்தார் ப்ரார்த்தித்தார். இந்த ஶ்லோகத்தால், ஶாஸ்த்ரீயங்களான உபாயாந்தரங்களை அநுஷ்டிப்பதில் தமக்குள்ள அஶக்தியையும் க்ருபா கார்யமான விஶேஷ கடாக்ஷத்தைப் பகவான் அநுக்ரஹிக்கா விட்டால் தமக்கு வேறு உஜ்ஜீவந ஸாதநம் இல்லை யென்பதையும் விஜ்ஞாபநம் செய்துகொள்ளுகிறார். ஸம்ஸாரத்தை மழைக்காலத்து இருள் நிறைந்த மேகாவ்ருதமான ஒரு துர்திநத்திற்கு ஒப்பிட்டு, தமது அவிவேகத்தை நீருண்ட இருண்ட மேகபடலம் போலவும் தாம் அநுபவிக்கும் பலவித துக்கங்களை அந்த மேகபடலத்திலிருந்து பொழியும் வர்ஷம் போலவும் வர்ணித்துப்பேசி, ‘கொடுவினைத் தூற்றுள் நின்று வழி திகைத்து அலமருகின்ற என்னை ஸகல க்லேஶமும் போம்படி நீயே கடாக்ஷித்தருள வேணும்’ என்று ப்ரார்த்திக்கிறார்.

“𑌅𑌵𑌿𑌵𑍇𑌕𑌘𑌨𑌾𑌨𑍍𑌧 𑌦𑌿𑌙𑍍𑌮𑍁𑌖𑍇 𑌬𑌹𑍁𑌧𑌾𑌸𑌨𑍍𑌤𑌤𑌦𑍁𑌃𑌖𑌵𑌰𑍍𑌷𑌿𑌣𑌿 𑌭𑌵𑌦𑍁𑌰𑍍𑌦𑌿𑌨𑍇 𑌪𑌥𑌃 𑌸𑍍𑌖𑌲𑌿𑌤𑌂 𑌮𑌾𑌂, 𑌹𑍇 𑌭𑌗𑌵𑌨𑍍 𑌅𑌚𑍍𑌯𑍁𑌤! 𑌅𑌵𑌲𑍋𑌕𑌯” என்று அந்வயம்.

𑌅𑌵𑌿𑌵𑍇𑌕𑌘𑌨𑌾𑌨𑍍𑌧𑌦𑌿𑌙𑍍𑌮𑍁𑌖𑍇 - அவிவேகமாகிற மேக படலங்களால் மறைக்கப்பட்டிருக்கிற திஶைகளை யுடைத்தாயிருக்கும். ‘மழைக்காலத்து இருளில் அகப்பட்டுத் திசை தெரியாமல் தடுமாறும் பாந்தன் போல, ஸம்ஸாரிகள், ப்ரக்ருதி ஸம்பந்த மடியாக ஏற்பட்டுள்ள அவிவேகத்தில் அகப்பட்டு, தேஹம் ஆத்மா, ஜீவாத்மா பரமாத்மா இவைகளின் ஸ்வரூப ஜ்ஞாந மில்லாமலும் ஹிதாஹித ஜ்ஞாந மில்லாமலும் தட்டித் தடுமாறுகிறார்கள்’ என்பது குறிப்பு.

𑌬𑌹𑍁𑌧𑌾𑌸𑌨𑍍𑌤𑌤𑌦𑍁𑌃𑌖𑌵𑌰𑍍𑌷𑌿𑌣𑌿 - பஹுப்ரகாரமாயும் இடை விடாமலும் பலவித துக்கங்களை வர்ஷித்துக்கொண்டிருக்கும். ஸம்ஸாரிகளுக்கு ஏற்படும் துக்கம் பலவகைப்பட்டன. ஆத்யாத்மிகம் ஆதிபௌதிகம் ஆதிதைவிகம் என்று அவைகளுக்கு ஒரு விபாக முண்டு; ஶரீர ஸம்பந்தம் பெற்றது, மநஸ்ஸின் ஸம்பந்தம் பெற்றது என்றும் ஒரு விபாகமுண்டு. இவைகளெல்லாம் இங்கு விவக்ஷிதம். அவிவேகத்தை மேகம்போலவும் துக்கங்களை வர்ஷம் போலவும் வர்ணித்ததன் தாத்பர்யமாவது - மேகத்திலிருந்து வர்ஷம் ஜநிக்கிறது போல, அவிவேகத்திலிருந்து துக்கங்கள் ஜநிக்கின்றன என்பதுதான். இதை ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை பின்வருமாறு விவரித்திருக்கிறார் :— “அவிவேகம் துக்கத்தை விளைக்கையாவது — அஜ்ஞாநத்தாலே கர்மமாய், அத்தாலே தேவாதி ஶரீர ப்ரவேஶமாய், அத்தாலே தாபத்ரய ரூபமான துக்கமாயிருக்கும்; ‘பொய்ந் நின்ற ஞாநமும் பொல்லா வொழுக்கு மழுக்கு டம்பும்’ என்கிறபடியே.”

𑌭𑌵𑌦𑍁𑌰𑍍𑌦𑌿𑌨𑍇 - ஸம்ஸாரமாகிற மழைக்காலத்து இருள் நிறைந்த துர்திநத்தில். மேகாவ்ருதமான பகலுக்கு ‘துர்திநம்’ என்று பெயர்.

𑌪𑌥𑌃 𑌸𑍍𑌖𑌲𑌿𑌤𑌂 - வழிதப்பி நிற்கும். வழியாவது - கர்ம யோகம் முதலிய உபாயங்கள். அவைகளைச் சரிவர அநுஷ்டிப்பதற்கு ஸம்ஸாரியானவன் அஶக்தனா யிருக்கிறபடியால் அவன் அந்த வழியிலிருந்து ப்ரஷ்டன் என்று வ்யவஹரிக்கப்படுகிறான்.

𑌮𑌾𑌂 - என்னை. "𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌮𑍂𑌲𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇" என்று ப்ரார்த்தித்துக்கொண்டு நிற்கும் என்னை - என்பது குறிப்பு. "நான் படுகிற பாடு இதுவானால், ஶாஸ்த்ரீய அநுஷ்டாநத்திற்கு நான் யார்?" என்பது கருத்து என்றும் சொல்லலாம்.

𑌭𑌗𑌵𑌨𑍍! 𑌅𑌚𑍍𑌯𑍁𑌤! - ஹே பகவந்! ஹே அச்யுத! 'என்னுடைய தாபங்களை நிவ்ருத்திப்பதற்கு அபேக்ஷிதங்களான ஜ்ஞாநம் ஶக்தி முதலிய குணங்களை உடையவனே!' என்பது பகவத் ஶப்தத்தால் ஏற்படுகின்றது. 'ஆஶ்ரிதர்களை ஒருகாலும் நழுவவிடுகிறதில்லை என்னும் பெரிய வ்ரதங் கொண்டவனே!' என்பது அச்யுத ஶப்தத்தின் தாத்பர்யம்.

"𑌏𑌤𑌦𑍍𑌵𑍍𑌰𑌤𑌂 𑌮𑌮"
"𑌨 𑌤𑍍𑌯𑌜𑍇𑌯𑌂 𑌕𑌥𑌂𑌚𑌨"
"அடியரை வல்வினைத்துப் பாம்புலனைந்தும்
துஞ்சக் கொடான்"

என்கிறபடியே இவன் 'அச்யுதன்' அன்றோ?

𑌅𑌵𑌲𑍋𑌕𑌯 - கடாக்ஷித்தருளவேணும். 'அந்தக் கடாக்ஷம் ஜநித்தால் ஸகல க்லேஶங்களும் பறந்தோடிப் போய்விடும்' என்பது தாத்பர்யம். பகவானுடைய கடாக்ஷ விஶேஷமின்றிக்கே எவ்வித உபாயமும் உத்தாரகமாகாது என்பதும் இதனால் த்யோதிப்பிக்கப்படுகின்றது.

"[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥"

என்று க்ஷத்ரபந்து கதறினான்றோ?

𑌨 𑌮𑍃𑌷𑌾 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌮𑍇𑌵 𑌮𑍇
𑌶𑍃𑌣𑍁 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌪𑌨𑌮𑍇𑌕𑌮𑌗𑍍𑌰𑌤𑌃 ।
𑌯𑌦𑌿 𑌮𑍇 𑌨 𑌦𑌯𑌿𑌷𑍍𑌯𑌸𑍇 𑌤𑌤𑍋
𑌦𑌯𑌨𑍀𑌯𑌸𑍍𑌤𑌵 𑌨𑌾𑌥! 𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌃 ॥ 50

---

50. 'நான் வேறு புகலற்று நிற்கின்றேனே! முன்னிருக்கும் பாழ்ங்கிணறு தெரியாமல் வழிதப்பிப் போகும் குருடன்போல விவேகமின்றிக்கே தாபத்ரயங்களில் போய் விழுகிறேனே! என்னை அநாதரிப்பது உசிதமாகுமோ?' என்று தாம் படுகிற பாட்டைப் பற்றிப் பலவாறாகப் புலம்பிவிட்டு, இப்பொழுது, 'ஒருகால் தம்மை ரக்ஷியாமல் பகவான் அநாதரித்து விட்டால், அவருக்கு அநிஷ்டம் ஏதாவது ப்ரஸங்கித்து விடுமோ?' என்று பயப்படுவது போல 'உன் க்ருபைக்கு நானல்லது வேறு விஷயமில்லை. இதை இழந்துவிடாமல் கைக்கொள்ள வேணும்' என்று தமது வேண்டுகோளை விண்ணப்பம் செய்து கொள்ளுகிறார் கீழ் 25-வது ஶ்லோகத்தில், "𑌤𑍍𑌵𑌦𑌗𑍍𑌰𑍇 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑌰𑌾𑌭𑌵𑍋 𑌨𑌾𑌥 𑌨 𑌤𑍇𑌽𑌨𑍁𑌰𑍂𑌪𑌃" [என்னுடைய அநர்த்தத்தைப் பரிஹரிக்கச் சொல்லுகிறேனல்லேன்; ஆஶ்ரிதர்க்கு விஷயங்களால் வரும் பரிபவம் ரக்ஷகனான உனக்குத் தேஜோஹாநி யன்றோ? அதைப் பரிஹரிக்கச் சொல்லுகிறேன்] என்று ப்ரார்த்தித்தது போல, இவ்விடத்திலும் ஶரண்யனுக்கு நேரக்கூடிய அநிஷ்ட ப்ரஸங்கத்தை ஸூசிப்பித்துக் கொண்டு ப்ரார்த்திக்கிறபடி.

𑌨 𑌮𑍃𑌷𑌾 (𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌂) 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌮𑍇𑌵 𑌮𑍇 𑌏𑌕𑌂 𑌮𑍇 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌪𑌨𑌂 𑌅𑌗𑍍𑌰𑌤𑌃 𑌶𑍃𑌣𑍁 - '𑌮𑍇 𑌨 𑌦𑌯𑌿𑌷𑍍𑌯𑌸𑍇 𑌯𑌦𑌿, 𑌤𑌤𑍋, 𑌹𑍇 𑌨𑌾𑌥! 𑌦𑌯𑌨𑍀𑌯𑌸𑍍𑌤𑌵 𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌃!' ॥ [பொய்யன்றிக்கே ஸத்யமாகவும், நிஷ்கர்ஷித்து உறுதியுடனே செய்யப்படுமதாகவுமிருக்கும் என்னுடைய விண்ணப்பத்தை முற்படக் கேட்டருளாய்; அதாவது - என்மீது தயையைச் செய்யாவிட்டால், பின்பு உனது தயைக்குத் தகுந்த பாத்ரமே துர்லபமாகிவிடும்.] "𑌤𑍍𑌵𑌯𑌾𑌽𑌪𑌿

ஸ்ருஷ்டம் ஸமவஸ்திதாநீ ஸந்நத்தம் வாத்ருஶிகம் உபாயா:" என்று ஏற்கெனவே சொல்லப்பட்டதானது இவ்விடத்தில் த்ருடீகரிக்கப்படுகின்றது.

ந ம்ருஷா பரமார்த்தமேவ மே - பொய்யன்று, மெய்யே. 'பொய்யன்று' என்று சொன்னால் போதாதோ? 'மெய்யே' என்றும் சொல்லவேண்டுமோ? என்று ஶங்கிக்கக்கூடும். 'ஒருகால் இரக்கம் பிறக்கைக்காகத் தவறுதலாகச் சொல்லப்படும் வார்த்தையோ இது? என்று பகவான் ஶங்கித்து விடுவனோ?' என்னும் பீதியின் பேரில், தாம் சொல்வது உண்மையே என்று வற்புறுத்தும் பொருட்டு இந்த மாதிரி இரண்டு விதமாகச் சொன்னபடி.

ஏகம் மே விஜ்ஞாபநம் - என்றால் நிஷ்கர்ஷித்துச் செய்யப்படும் இந்த விண்ணப்பத்தை. 'ஏகம்' என்பதற்கு 'ஒன்று, மற்றொன்று இல்லை' என்பது அர்த்தம். 'இதுவே எல்லையான நிஷ்கர்ஷம்; இதைத் தவிர்த்து வேறு ஒரு விண்ணப்பமும் நான் செய்துகொள்ளப் போகிறதில்லை!' என்பது தாத்பர்யம். 'ரக்ஷ்யனாகிற எனக்கும் ரக்ஷகனாகிற உனக்கும், இருவர்க்கும் இது லாபகரமாக இருக்கிறபடியால், இதுவே முக்கியமான விண்ணப்பம்' என்பது 'ஏகம்' என்பதன் தாத்பர்யம் என்று ஸ்ரீ நிகமாந்த மஹா தேஶிகனுடைய திருவுள்ளம்.

அக்ரத: ஶ்ருணு - முற்படக் கேட்டருள வேணும். தமது த்வரையை ஆவிஷ்கரித்துக்கொண்டு 'முற்பட' என்று ப்ரார்த்திக்கிறபடி. "மேல் கார்யம் செய்யிலும் செய்யா தொழியிலும் அவதாநம் பண்ணிக் கேட்டருள வேணும்" என்பது ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளையின் திவ்ய ஸூக்தி. ஸ்ரீ நிகமாந்த மஹா தேஶிகனோ 'அதி தூரத்தில் நின்று கொண்டு மற்றொரு வ்யக்தியின் மூகமாக நான் இந்த விண்ணப்பத்தைச் செய்து கொள்ளவில்லை; நேரிலேயே விஜ்ஞாபநம் செய்து கொள்ளுகிறேன்' என்பது தான் 'அக்ரத:' என்னும் பதத்தின் தாத்பர்யமென்று திருவுள்ளம் பற்றுகிறார்.

மே ந தயிஷ்யஸே யதி - என்மீது க்ருபை செய்யா விட்டால். 'நான் உபாயாந்தர லேஶத்தையும் அறியேன்; அபராத ஸஹஸ்ரத்திற்குப் பாத்ரமாகவும் இருக்கிறேன்; எனக்குக் கிடைத்திருக்கும் துக்க பாகமோ அளவற்றது. ஆகையினால், உனது தயையினாலேயட்டில் ரக்ஷிக்கத் தகுந்த என்னை உபேக்ஷிப்பது ந்யாய்யமன்று' என்பது இவ்விடத்தில் ஸூசிப்பிக்கப்படுகின்றது.

ததோ ஹே நாத! தயநீயஸ் தவ துர்லப: - பின்பு ஹே நாத! தயைக்குத் தகுந்த பாத்ரமே உனக்கு அரிதாகிவிடும். 'உனது தயையோ லௌகிகர் தயை போல்வதன்று; கணக்கற்ற அபராதமிருந்தாலும், அவை யெல்லாவற்றையும் பொறுத்துப்போகு மளவு அது எல்லையில்லாத ப்ரசார முள்ளதாயிற்றே! அந்தத் தயைக்குப் பூர்ண ப்ரசாரம் வேண்டுமானால், என்னைப் போன்ற ஸாபராதனன்றோ அபேக்ஷிதமாகும்? அப்படிப்பட்ட ஸாபராதன் என்னைத் தவிர்த்து மற்று மொருவன் உள்ளனோ?' என்று இந்த வாக்யத்தினால் தமது மஹாபராத ஸ்வபாவத்தை வெளியிடுகிறார். 'தவ தயநீய:' என்று 'தவ' என்னும் பதத்தை 'தயநீய:' என்னும் பதத்துடனும் அந்வயிக்கலாம். 'நாத' என்னும் ஸம்புத்தியினால், 'உனக்கு வேறு தயநீயன் துர்லபன்போல எனக்கும் வேறு ஶரண்யன் துர்லபன்' என்பது வெளியாகின்றது. கீழ் விவரிக்கப்பட்டிருப்பது போல இப்படிச் சொல்வதன் தாத்பர்யம் தமது மஹாபராத ஸ்வபாவத்தை வெளியிட்டு அதனால் ஒருவித நைச்யாநுஸந்தாநம் செய்வதே தவிர, உண்மையாகவே பகவானுக்கு ஒரு அநிஷ்ட ப்ரஸங்கத்தை ஸூசிப்பிக்கவாவது, தமக்கு ஒரு ஏற்றத்தைக் காண்பிக்கவாவது சொன்னது அன்று. "ஸ மஹாத்மா ஸுதுர்லப:" என்னும் வாக்யத்தை ஸ்ரீ பெரிய வாச்சான்பிள்ளை இவ்விடத்தில் அநுஸந்தாநம் செய்தால், அது ஸ்ரீ ஆளவந்தாரைக் குறித்து பகவானுக்கு உதிக்கும் புத்தியைக் குறித்தபடி. 'இவர் மஹத்தான அநுதாபத்தைக் கொண்டிருக்கிறபடியால், இவர் நமது தயைக்கு உத்தமமும் அரி

𑌤𑌦𑌹𑌂 𑌤𑍍𑌵𑌦𑍃𑌤𑍇 𑌨 𑌨𑌾𑌥𑌵𑌾𑌨𑍍.
𑌮𑌦𑍃𑌤𑍇 𑌤𑍍𑌵𑌂 𑌦𑌯𑌨𑍀𑌯𑌵𑌾𑌨𑍍 𑌨 𑌚 ।
𑌵𑌿𑌧𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤 𑌮𑍇𑌤𑌦𑌨𑍍𑌵𑌯𑌂
𑌭𑌗𑌵𑌨𑍍! 𑌪𑌾𑌲𑌯 𑌮𑌾 𑌸𑍍𑌮 𑌜𑍀𑌹𑌪𑌃 ॥ 51.

னமான ஒரு பாத்ரம்' என்று பகவான் திருவுள்ளம் பற்றுகிறது போலும்.

51. சலிகையுள்ள ஒரு ஸ்த்ரீ தனது பர்த்தாவை நோக்கி, எவ்வித பாத்யமும் இல்லாத ஒரு விஷயத்தில் ஒரு வித பாத்யத்தைப் பாராட்டிக்கொண்டு தனது மநோரத பூர்த்தியைக் கேட்பது போல, ஸ்ரீ ஆளவந்தார், 'ஹே பகவந்! நீயே தயாவான், நானே தயநீயன்; நம்மிருவர்க்கும் இந்த ஸம்பந்தம் விதியால் வாய்த்திருக்கிற படியால், அதைக் கைவிடாதே ரக்ஷித்தருள வேணும்' என்று தமது மநோரத பூர்த்தியைப் பெரியதொரு பாத்யத்துடன் போலக் கேட்டருளுகிறார்.

'பகவான் நிரங்குஶமான ஸ்வாதந்த்ர்யத்தைக் கொண்டவனாயிற்றே! கேட்பார் ஒருவருமில்லாததால், அந்த ஸ்வாதந்த்ர்யத்தைக் கைப்பற்றி விதியால் வாய்த்திருக்கும் இந்த ஸம்பந்தத்தையும் ஒரு கால் உதறிவிடுவனோ?' என்னும் பயமும் ஸ்ரீ ஆளவந்தார் திருவுள்ளத்தில் இச்சமயத்தில் உதித்தது போலத் தோன்றுகின்றது. 'விதியால் வாய்த்திருக்கும் இந்தஸம்பந்தத்தை நீ ஒன்றும் பண்ண வொண்ணாது' என்று ஒரு பாத்யத்துடன் சொல்ல ப்ரவ்ருத்தித்தவர், '𑌪𑌾𑌲𑌯' என்றும் '𑌮𑌾 𑌸𑍍𑌮 𑌜𑍀𑌹𑌪𑌃' என்றும் ப்ரார்த்திக்கிறாரன்றோ?

'𑌤𑌤𑍍 𑌤𑍍𑌵𑌦𑍃𑌤𑍇𑌽𑌹𑌂 𑌨𑌾𑌥𑌵𑌾𑌨𑍍 𑌨; 𑌮𑌦𑍃𑌤𑍇 𑌚 𑌤𑍍𑌵𑌂 𑌦𑌯𑌨𑍀𑌯𑌵𑌾𑌨𑍍 𑌨; 𑌹𑍇 𑌭𑌗𑌵𑌨𑍍! 𑌵𑌿𑌧𑌿 𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌮𑍇𑌤 𑌦𑌨𑍍𑌵𑌯𑌂 𑌪𑌾𑌲𑌯, 𑌮𑌾 𑌸𑍍𑌮 𑌜𑍀𑌹𑌪𑌃' என்று அந்வயம்.

𑌤𑌤𑍍 - ஆகையினால், 'நான் செய்துகொண்ட விஜ்ஞாபநம் மெய்யாயிருக்கிறபடியால்' என்பது தாத்பர்யம்.

𑌤𑍍𑌵𑌦𑍃𑌤𑍇𑌽𑌹𑌂 𑌨𑌾𑌥𑌵𑌾𑌨𑍍 𑌨 - உன்னைத் தவிர்த்து எனக்கு வேறு நாதனில்லை. 'நீ ஸர்வ ஶக்தன், பரம காருணிகன்; ஆகையால், நீயே ஶரண்யன்' என்கிறபடி. 'கீழே விழுந்தவுடன் அழும் குழந்தைக்கு அதன் துக்கத்தைப் பொறுக்கமாட்டாதே எடுக்க ஓடிவரும் மாதா முதலியவரே ஶரண்யராவதுபோல, ஸம்ஸாரத்தில் உழன்று கொண்டு அதனால். மஹத்தான துக்கங்களை அநுபவிக்கும் எனக்கு '𑌭𑍃𑌶𑌂 𑌭𑌵𑌤𑌿 𑌦𑍁𑌃𑌖𑌿𑌤𑌃' என்கிறபடி என் துக்கத்தைப் பொறுக்க மாட்டாமல் என்னிலும் அதி துக்கிதனாக இருக்கும் நீயே ஶரண்யனாகிறாய்' என்பது தாத்பர்யம். பிறருடைய துக்கத்தைப் பொறுக்க மாட்டாமையே தயையாகிறபடியால், அப்படி அதைப் பொறுக்காமல் இருப்பவனே தயாவானாகிறான்.

𑌤𑍍𑌵𑌂 𑌚 𑌮𑌦𑍃𑌤𑍇 𑌦𑌯𑌨𑍀𑌯𑌵𑌾𑌨𑍍 𑌨 - என்னை விட்டால் உனக்கு தயநீயன் என்பவனே அரிதாகி விடும். 'அளவற்ற அபராதங்களைச் செய்தவனாகவும், அது காரணமாக அநந்தங்களான துக்கங்களை அநுபவிக்கிறவனாகவும் இருக்கும் நானே உனது தயைக்கு விஷயமாகக் கடவேன். என்னைக் கை விட்டால் 'உனது தயையென்னும் குணமே வ்யர்த்தமாகிவிடுமன்றோ?' என்பது தாத்பர்யம்.

𑌹𑍇 𑌭𑌗𑌵𑌨𑍍 - ஸகலமும் தெரிந்த பகவானே! 'நமக்குட் பரஸ்பரம் இம்மாதிரியான ஸம்பந்தம் ஒன்று இருக்கின்றது என்பதை உனக்கு நான் அறிவிக்கவும் வேண்டுமோ?' என்பது குறிப்பு.

𑌵𑌿𑌧𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌮𑍇𑌤𑌦𑌨𑍍𑌵𑌯𑌂 𑌪𑌾𑌲𑌯 - விதியால் வாய்த்திருக்கும் இந்த ரக்ஷ்ய ரக்ஷக ஸம்பந்தத்தை ரக்ஷித்தருள வேண்டும். 'விதி' என்று பகவானைப்பார்க்கிலும உயர்ந்த வஸ்து வொன்று உண்டோ? என்று ஒரு ஶங்கை ஜநிக்கக்கூடும். ஏதோ ஒரு ஸுக்ருதவிஶேஷமடியாக ஒருகால் ஸம்பவிக்கும் பகவத் க்ருபையே,

இவ்விடத்தில் 'விதி' என்னும் பதத்தால் குறிக்கப்படுகின்றது. நம்மால் பரிஹரிக்க வொண்ணாததை நாம் 'விதி' என்று சொல்லுகிறோம். இந்த ஸம்பந்தமும் பகவானாலேகூடப் பரிஹரிக்கக் கூடாதது என்பதை த்யோதிப்பிக்க 'விதி' என்னும் பதத்தை இவ்விடத்தில் ப்ரயோகித்திருக்கிறார். 'தாயதநம்போலத் தானாகவே இந்த ரக்ஷணம் எனக்கு ப்ராப்தம்' என்பதைச் சொல்லவன்றோ ஸ்ரீ ஆளவந்தார் இவ்விடத்தில் உபக்ரமித்தது ?

'𑌪𑌾𑌲𑌯' என்பதற்கு-'ரக்ஷிக்கவேண்டும்' என்பது அர்த்தம். '𑌭𑍁𑌜𑍍' என்னும் தாதுவுக்கு 'பாலநம்' 'புஜிப்பது' என்று இரண்டு அர்த்தங்கள் இருப்பதை ஆதாரமாகக் கொண்டு, ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை, இவ்விடத்தில் '𑌪𑌾𑌲𑌯' என்னும் பதத்திற்கு 'புஜித்தருள வேணும்' என்னும் ஒரு அர்த்தாந்தரத்தைக் கல்பித்திருக்கிறார். இந்த அர்த்தாந்தரம் கடிக்குமானால், அந்த அர்த்தாந்தரத்தினால் ஏற்படும் ஸ்வாரஸ்யம் மிகச்சிறந்ததே! 'ஹே பகவன் ! இந்த ரக்ஷணம் கேவலம் எனக்கு மட்டில் லாபகரமென்றிருக்க வேண்டாம்; உனக்கும் லாபகரமே' என்பதை, '𑌪𑌾𑌲𑌯' என்னும் பதத்திற்கு ஏற்படும் 'புஜித்தருள வேணும்' என்னும் அர்த்தாந்தரம் த்யோதிப்பிக்கின்றதாம்.

𑌮𑌾 𑌸𑍍𑌮 𑌜𑍀𑌹𑌪𑌃 - இந்த ஸம்பந்தத்தைக் கை விடக்கூடாது. 'நீ நிரங்குஶ ஸ்வதந்த்ரனாகிறபடியால் எதையும் அதிக்ரமித்து நடக்கக்கூடியவனாச்சுதே! விதி நிர்மிதமாயிருக்கும் இந்த ஸம்பந்தத்தையும் ஒருகால் நீ அதிக்ரமித்து விடுவாயோ?' என்று பயந்து 'இதைக் கை விடக்கூடாது' என்று ப்ரார்த்திக்கிறார். தவிரவும், 'ஹே பகவன் ! நான் அளவற்ற துஷ்கர்மங்களைச் செய்திருக்கிறபடியால், அந்தத் துஷ்கர்மங்களின் பலமாக ஒருகால் நான் இந்த ஸம்பந்தத்தைக் கை தவிர்த்து ஓட விரும்பினாலும், நீ என்னை அப்படி ப்ரவ்ருத்திக்காமல் தடுக்க வேண்டும்' என்றும் தாத்பர்யம்.

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:

ஸ்ரீ𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

தென்கலை வடகலை த்வேஷம். 3.

> "I shall only take notice, with a real grief of heart, that the minds of many good men among us appear soured with party-principles, and alienated from one another in such a manner as seems to me altogether inconsistent with the dictates either of reason or religion."
>
> [Addison.

ஒரு தேஶத்திற்கு க்ஷோபத்தை விளைவிக்கும் ஹேதுக்களுள், ஜநங்கள் ஒருவருக்கொருவர் கக்ஷி ப்ரதிகக்ஷிகளைச் செய்துகொண்டு த்வேஷத்தைக் கொண்டாடுவதைவிட மிகவும் உக்ரமான ஹேது வேறொன்றுமில்லையென்றே சொல்லலாம். இந்தக் கக்ஷி ப்ரதிகக்ஷி ஸ்திதியின் பரிணாமங்கள் பல வகைப்பட்டன. கீழ்ச். சொல்லியிருக்கிறபடி இது அந்தஶ்சித்ரத்திற்குக் காரணமாகி ஶ்ரேயஸ்ஸுக்கு ஹேதுவாயுள்ள ஐகமத்யத்தை அழிப்பதுடன், நமக்கு அவஶ்யம் வேண்டுவனவான வேறு நன்மைகளை ஸாதித்துக்கொள்வதற்கும் பெருத்த இடையூறாக நிற்கின்றது. தவிரவும், கக்ஷி ப்ரதிகக்ஷிகளால் ஸம்பவிக்கும் உத்வேகம், ஒவ்வொருவருடைய ஹ்ருதயத்திலுமுள்ள காமம் க்ரோதம் முதலிய ஶத்ருவர்க்கங்களைப் போஷித்து, அதுவழியாக ஜநங்களுடைய ஸ்வபாவத்தையும் புத்தி ஶக்திகளையும் நீசங்களாக மாற்றுவதற்கு முக்கிய காரணமாகின்றது. அந்த உத்வேகம் ஹ்ருதயத்தில் நிற்கும் வரையில், நாம் வேறு பலவித் பரித்ராணம் செய்துகொண்டபோதிலும், நமது ஸத் ஸ்வபாவத்தை அழியவிடாமல் காப்பாற்றுவது அஸாத்யமே. இதை அறிந்த பெரியோர்கள், ஒருபொழுதும் இந்த உத்வேகத்திற்கு இடங்கொடுக்கக் கூடாதென்றும், கால விஶேஷங்களில் ஶத்ரு விஷயத்தில் அதை நாம் செலுத்தினாலும், அதனால் அது ஒருவிதப் போக்கைப் பெற்றுப் பிறகு காலாந்தரங்களில் நம்மை மீறி நமது ஸுஹ்ருத்துக்களிடத்திலும் உதாஸீநர்களிடத்திலும் ப்ரவஹித்து அளவற்ற தீமைகளை விளைவிக்குமென்றும், ஆகையால், இந்தத் துஷ்ட பரிசயத்திற்குப் பாத்ரமாகாமலே நமது மநஸ்ஸை நாம் காப்

பாற்றிவர வேண்டுமென்றும் போதிப்பித்திருக்கிறார்கள். ராகத்வேஷாதிகளின் ப்ராபல்யம் கேவலம் விஷயத்தைமாத்திரம் சார்ந்தது அன்று; அவைகள் பெற்றிருக்கும் போஷணத்தையும் பொறுத்தது.

"𑌇𑌂𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌪𑍍𑌰𑌮𑌾𑌥𑍀𑌨𑌿 𑌹𑌰𑌨𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌸𑌭𑌂 𑌮𑌨𑌃"

என்பதுபோல, இவைகளும், ப்ரஸரமகப்படுமிடத்தில் நம்மை மீறி நடக்கும் ஸ்வபாவமுள்ளவைகளே. இவை நிரர்க்களமாக ப்ரவஹிக்கும் காலங்களில் நமது ஆத்யந்திக நாஶத்தையும், துர்பலமான அணைகளால் தேங்கப்பெறுங் காலங்களில், அஸத்ய வசநம், பரதூஷணம், அபூத அபவாதங்கள், தர்ம க்லாநி இவை முதலிய முழைகளின் வழியாகப் பிச்சுண்டு வெளிக்கிளம்புவதையும் நாம் பார்க்கலாம். சில ராக்ஷஸப் பூண்டுகள் வளருமிடத்தில் பயிர்கள் க்ஷயத்தை அடைவதுபோல, இவை காடு பெறும் தேஶத்தில், தயை க்ஷாந்தி ஸௌஹார்த்தம் முதலிய ஸாத்விக குணங்களின் பீஜம்கூட நஶித்துவிடும்.

இது மாத்திரமன்று. இந்த உத்வேகமடியாக மநஸ்ஸில் ஒரு பக்ஷபாதம் ஜநிக்கவே, விவேசந ஶக்தியும் குறைவடைந்து, அஶிக்ஷித மதிகளான பாமர ஜநங்கள்போல வித்வஜ்ஜநங்களும் குணதோஷ விசாரங்களில் தடுமாறுவதும் உண்டு. அத்யந்தம் மிதஜ்ஞர்களான சிலர் பக்ஷபாதிகளால், பெரிய வித்வான்கள்போலப் பஹுமதிக்கப்படுவதும், பெரிய வித்வான்களில் அநேகர், கக்ஷிவிரோதத்தினால், ஒன்றும் அறியாதவர்கள்போல அவமதிக்கப்படுவதும் ஸஹஜமாகும். முற்காலத்தில், ஜ்ஞாந விஶேஷத்தினாலும் ஶக்தி விஶேஷத்தினாலும் பெரியோர்கள் க்யாதி பெற்றதுபோல, இந்த உத்வேககாலங்களில் பெரியோர்களெல்லாரும் தமது கக்ஷியிலுள்ள ஆக்ரஹ விசேஷத்தினாலேயே க்யாதியை அடைகிறார்கள். அபஶத தமங்களான பத்ரங்கள் குணங்களால் நிறைந்தவைபோல ஆதரிக்கப்படுவதையும் ஶ்லாக்யங்களான க்ரந்தங்கள் உபயோகமற்றவைபோல அநாதரிக்கப்படுவதையும் யார் அறியார்? இம்மாதிரியான விருத்த பாவனைகள், ஆதியில் பக்ஷபாதமடியாக ஏற்பட்டபோதிலும் காலக்ரமேண ஸ்வாபாவிகங்களாகவே ஆகிவிடுகின்றன. கெட்டதை நல்லதென்றும், நல்லதைக் கெட்டதென்றும், ஒருவன் முதலில் புத்தி பூர்வமாகப் பாவித்து வந்தாலும், ஸ்வல்ப காலத்தில் இயற்கையாகவே குணதோஷங்களைச் சரிவரப் பராமர்ஶிப்பதிலுள்ள ஶக்தி விஶேஷத்தை அவன் இழந்துவிடுகிறான். இம்மாதிரியான ஶக்திக்குறைவு பஹுஜநங்களுக்கு ஸம்பவித்தால் அது தேஶத்திற்கு க்ஷோபகரமன்றோ?

தவிரவும், இந்த உத்வேகத்தின் பரிணாமம் மற்றொரு விதமாகவும் காணப்படுகின்றது. அஸத்துக்களால் நிறைந்துள்ள ப்ரதேஶத்தில் அபூதங்களான பல ஜநஶ்ருதிகள் ஏற்படுவது உண்டு. இந்த ஜநஶ்ருதிகளில் எவை ஶ்ரத்தேயங்கள்? எவை கேவலம் மித்யை? என்பதைப் பராமர்ஶித்து அவைகளை யதோசிதம் ஸம்பாவிப்பது பெரியோர்களுக்கு லக்ஷணமாகும். கக்ஷி ப்ரதிகக்ஷிகளின் கொண்டாட்டம் இருக்குமிடத்தில், இம்மாதிரியான ப்ரயாலோசனையே காணப்படுகிறதில்லை. விருத்த கக்ஷியைச் சேர்ந்தவனைப் பற்றிச் சொல்லப்படும் எவ்வித அபவாதமும் தத்யமாகவே க்ரஹிக்கப்படுகின்றது. இந்த அபவாதங்களை ஸர்வ ஸம்ப்ரதிபந்நங்களான ஆதாரங்கள் போலப் பாவித்து, தமது மநஸ்ஸாக்ஷயத்திற்கு விருத்தமாகவே மேன்மேல் அநுமாந ஸஹஸ்ரங்களைச் செய்வதும் அவைகளைப் பரவவிடுவதும் அவைகளைப் பற்றிப் பேசும்பொழுதெல்லாம் ஆநந்தாநுபவம் செய்வதும் இவர்களின் கார்யமாகின்றது. நிந்தைக்கு அநர்ஹர்களாக இருக்கிறவர்களில் அநேகர் நிந்திக்கப்படுகிறார்கள்; ஸ்தோத்ரத்திற்கு அநர்ஹர்கள் ஸ்துதிக்கப் படுகிறார்கள். ஸ்துதியும் நிந்தையும் இவ்விதமாக அநர்ஹர்களிடத்தில் ப்ரயோகிக்கப்பட்டால், லோகத்தில் 'ஸ்துதி நிந்தைகள் ஸதஸத் ப்ரவ்ருத்திகளுக்கு ஹேதுக்கள்' என்பதே இல்லாமற் போய்விடாதோ? இது ஜகத்திற்கு க்ஷேமத்தின் பொருட்டு ஆகுமோ?

இப்பொழுது நமது தென்கலை வடகலைகக்ஷி ஸம்பந்தமான உத்வேகம் இருக்குமிடத்தில், இந்த மூன்றுவித பரிணாமங்களும் பூர்ணமாகத் தென்படுகின்றன. ஆக்ரஹத்தின் ஸதத பரிசய பலமாக ஒருவரை ஒருவர் திட்டிக்கொண்டும் தூஷித்துக்கொண்டும், ஸர்வகாலத்திலும் அந்த த்வேஷத்தின் அநுத்யாநத்தினால் தமது அந்தஃகரணத்திற்கே ஒருவித காலுஷ்யத்தை ஸம்பாதித்துக் கொள்வதும், ஸ்வ பக்ஷத்திலுள்ள குருட்டுத்தனமான அபிநிவேஶத்தினாலும் பரபக்ஷத்திலுள்ள நிஷ்காரணமான அப்ரீதியினாலும் குணதோஷ பராமர்ஶத்தைப் புத்திபூர்வகமாகவே பிசகாகச் சிரகாலம் செய்து, அது காரணமாக, தமக்கு இயற்கையாலாவது ஸம்ஸ்காரத்தினாலாவது கிடைத்திருக்கும் ஸதஸத் விவேசந ஶக்தியைக் குறைத்துக் கொள்வதும், தமது கக்ஷியிலுள்ள ஆவேசாதிஶயத்தினால் அபூதங்களான அபவாதங்களை ஸாத்விகர்களின் ஹ்ருதயம் புண்படும்படிக்கும் பகவானுக்கு அப்ரீதி ஜநிக்கும் படிக்கும் பரவச்செய்து கொண்டு அதனால் லோகத்திற்குப் பெருந்தீங்கை விளைவித்துக் கொள்வதும் இந்த ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் ஸாமாந்ய க்ருத்யங்களாகவே இருக்கின்றன. அத்யந்தம் அநிஷ்டமான இந்த ஸ்திதி ஸ்ரீ வைஷ்ணவ ஜாதிக்கே க்ஷோபத்தை ஜநிப்பித்துவிடாதோ?

இந்த ஸ்திதியின் அநிஷ்ட ஸ்வபாவத்தை நன்றாக உணர்ந்திருக்கும் பரிகணிதர்களான பெரியோர்கள்தாம் நம்மை இந்தத் துர்தஶையிலிருந்து ஸம்ரக்ஷிக்க வேண்டும். இரண்டு கலைகளிலும் அப்படிப்பட்ட நிஷ்பக்ஷபாதிகளான ஸாதுக்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால், கேவலம் ஸாதுத்வத்தையே அவர்கள் முன்னிட்டுக்கொண்டு லௌகிக வ்யாபாரங்களிலிருந்து உபரதர்களாய்க் கொஞ்சம் விலகிநிற்கவே, ஸ்வார்த்தபரர்களாயும் விஷமத்தில் ஆசையுள்ளவர்களாயும் ஆஸ்திக்ய கந்தமுமின்றிக்கே வர்த்தித்து வரும் ஆஸுர ப்ரக்ருதிகளான துர்ஜநர்களுக்கும், ஜந்மாந்தர துர்வாஸனையினால் ஆக்ரஹத்திலேயே அபிநிவிஷ்டர்களாய் ஸ்வ ப்ரயோஜநத்தையும் இழந்து கேவலம் க்ரோதமாகிற பிஶாசத்தின் த்ருப்தியைப் பரம ப்ரயோஜநமாகத் தேடும் ஸ்வபாவமுள்ள துராக்ரஹிகளுக்கும் விஶ்ருங்கலமான ப்ரசாரம் ஸம்பவித்துவிட்டது. ஒவ்வொரு திவ்யதேஶத்திலும் இம்மாதிரியான மஹான்கள் சிலர் ஸேவை ஸாதித்து வருகிறார்கள். த்ருஷ்டர்களான பெரியோர்களைக் கண்டால் அவர்களை அநுஸரித்து நடப்பது போல நடிப்பதும், ஸாதுக்களைக் கண்டால் அவர்களை மருட்டுவதும், காலாநுகுணமாகப் பொய் பேசுவதும் கோள் சொல்வதும், இதரர்களுக்குள் பேதோபாயத்தை ப்ரயோகித்து அதனால் அவர்களுக்குள் பரஸ்பரம் த்வேஷத்தையும் கலஹத்தையும் வ்ருத்திசெய்வதுமே இவர்களுடைய ஸார்வகாலிக வ்யாபாரமாக இருக்கின்றது. மஹாஸதஸ்ஸுகளில் இந்தத் துஷ்டர்களுக்குப் பெருத்த புரஸ்காரம் நடப்பதையும் அக்ர ஸம்பாவனைகள் செய்யப்படுவதையும் பார்க்கும் நமக்கு அநேக ஸமயங்களில் அளவற்ற ஶோகம் ஜநித்திருக்கின்றது. காலமும் இந்தத் துர்ஜநர்களுக்கு அநுகூலமாகவே இருக்கிறபடியால், அவர்களுக்கு அதிமாத்ரம் அநநுகுணமான உயர்ந்த பதவி ஏற்படுவதுடன், மஹாஜநங்களுக்கு ‘இதைச் செய்; இதைச் செய்யாதே’ என்று விதாநம் செய்யும் ஒரு வித அதிகாரமும் ஸம்பவிக்கின்றது. இவர்களுடைய ப்ரசாரம் பங்கமானால், இப்பொழுது தென்படும் கலஹம் ப்ராயேண ஶாந்தமாகிவிடுமென்றே நாம் நினைக்கிறோம். ஒருவருக்கும் எவ்வித தீங்கையும் செய்யாமலே இந்தப் பங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்பது நம்முடைய அபிஸந்தியானதால், அதற்கு அதிகாரிகளான ஸம லோஷ்டாஶ்மகாஞ்சநர்களாயும் பகவந்முகோல்லாஸம் தவிர்த்து மற்றை எதையும் பெரிதாக நினைக்காதவர்களாயும் பக்ஷபாத கந்தமுமின்றிக்கே ஜகதுஜ்ஜீவநத்தில் ப்ரவ்ருத்தர்களாயுமுள்ள மஹான்களே, பகவத் கைங்கர்யத்தில் இந்த க்ருத்யமும் அந்தர்பூதமென்பதை உணர்ந்து, இது விஷயத்தில் ஔதாஸீந்யத்தை வஹிக்காமல், பத்தகங்கணர்களாய்ப் ப்ரவ்ருத்திக்க வேண்டுமென்பது தான் நமது ப்ரார்த்தனை.

அந்த அந்த இடங்களில் தநிகர்களாக இருக்கும் ப்ரபுக்களும் இந்த ப்ரவ்ருத்தியில் யதோசிதம் ஸஹாயம் செய்ய வேண்டும்.

“𑌯𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌯𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌬𑌾𑌂𑌧𑌵𑌾𑌃।
𑌯𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌾𑌸𑍍𑌸 𑌪𑍁𑌮𑌾𑌁𑌲𑍍𑌲𑍋𑌕𑍇 𑌯𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌾𑌸𑍍𑌸 𑌚 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌃॥”

என்கிறபடி அர்த்தத்தைக் கொண்டு மற்றையெல்லாவற்றையும் ஸாதித்துக்கொள்வது இக்காலத்தில் ஸாத்யமானதால், ப்ரக்ருத துர்ஜநர்களின் விஷயத்தில் அந்த அர்த்த பலத்தைக் குறைப்பதற்காகவே நமது ப்ரவ்ருத்தியில் தநிகர்களுடைய உதவியை நாம் அபேக்ஷிக்கிறோம். இப்படி ஆஸ்திகர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து யத்நம் செய்தால், அதைத் தடுத்து நிலைபெற்று நிற்கும் க்ஷோப ஹேதுவுமுண்டோ? ஜகத்தின் ஶாஶ்வதமான ஶ்ரேயஸ்ஸை உத்தேஶித்து ஆதியில் பகவானால் ப்ரவர்த்திதமாயும், பிறகு ஜகத்திற்குப் பரமோபகாரர்களான நாத யாமுந ராமாநுஜ முனி ப்ரப்ருதிகளால் ஸம்வர்த்திதமாயுமுள்ள இந்த ஶ்ரீ வைஷ்ணவமதம், வீணில் க்ஷோபத்தை அடைந்துவிடும் போல இருக்கின்றதே!’ என்பதை ஆலோசித்து, ‘ஜகத்தின் க்ஷேமத்தைத் தேடும் எல்லாரும் ஒரே மதியுடன் இந்த ப்ரவ்ருத்தியில் இறங்க க்ருபை செய்தருள வேணும்.

𑌦𑍇𑌵 𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌚𑌰𑌣𑌪𑍍𑌰𑌣𑌯𑌪𑍍𑌰𑌵𑍀𑌣-
𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌰𑍍𑌯 𑌵𑌿𑌷𑌯𑍀𑌕𑍃𑌤 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌃।
[illegible]
[illegible]॥

[𑌕𑍂𑌰𑍇𑌶𑌃 [illegible].

“ 'This thirst of kindred blood, my sons, detest ;
Nor turn your force against your country's breast.” [Dryden.

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:

கடிதங்கள்.

(1)

வ்யாகரண ஸூத்ரத்தில் ஒரு ஸம்ஶயம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு :—

“ 𑌉𑌦𑌃 𑌸𑍍𑌥𑌾𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑍋𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 ” என்னும் ஸூத்ரத்திற்கு, ‘𑌉𑌦𑍍’ என்பதைக் காட்டிலும் பரமாயிருக்கிற ‘𑌸𑍍𑌥𑌾’ ‘𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑍁’ என்னும் தாதுக்களுக்குப் பூர்வ ஸவர்ணம் வருகிறதென்று எல்லாரும் வ்யாக்யாநம் செய்திருக்கிறார்கள். பூர்வம் ‘𑌉𑌦𑍍’ இருக்கிறபடியால் அதன் ஸவர்ணம், ‘𑌆𑌦𑍇𑌃 𑌪𑌰𑌸𑍍𑌯’ என்னும் ஸூத்ரப்படிக்கு ‘𑌸𑍍𑌥𑌾’ ‘𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑍁’ தாதுக்களின் ஆதியான ஸகாரத்திற்கு வரவேண்டும். இவ்விடத்தில், ‘𑌉𑌦𑍍’ என்னும் ஸமுதாயத்திற்கு ஸவர்ணமான வர்ணம் அப்ரஸித்தமாக இருக்கிறபடியால், ஸகாரத்திற்குப் பூர்வ ஸவர்ணாதேஶம் எப்படி ஸம்பவிக்கும் என்று ஒரு ஶங்கை ஜநிக்கின்றது.

‘𑌉𑌦𑍍 ஸம்பந்தியான தகாரத்திற்கு எது ஸவர்ணமோ, அதுதான் ஆதேஶமாக வருகின்றது’ என்னும் ப்ரத்யுத்தரம் சொல்வது ஸரியன்று. ஸூத்ரத்தில் ‘𑌉𑌦𑌃’ என்று ‘𑌉𑌦𑍍’ என்னும் ஸமுதாயமே பூர்வத்வேந நிர்தேஶிக்கப்பட்டிருக்கின்றதன்றோ? ஸூத்ரங்களில் எல்லாவிடத்திலும், பூர்வத்திலும் பரத்திலும் எது எது நிர்திஷ்டமாக இருக்கின்றதோ அது அதுவே பூர்வம் பரம் என்று வ்யவஹரிக்கப்படுகின்றது. அந்தக் காரணத்தினாலேயே, ‘[illegible]’ என்னும் ஸூத்ரத்தில் [illegible]த்தைக் காட்டிலும் ‘𑌉𑌦𑍍’ ஶப்தம் பரமாக இருக்கையில் [illegible]மான பரரூபம் பூர்வத்வேந நிர்திஷ்டமாயிருக்கும் [illegible] ஸமுதாயத்திற்கு வருகிறதே தவிர, [illegible]த்தின் தகாரத்திற்கு வரவில்லை. அதுபோல இவ்விடத்திலும் ‘𑌉𑌦𑍍’ என்பதே பூர்வமாக இருக்கிறபடியால், அந்த ஸமுதாயத்தின் ஸவர்ண வர்ணாதேஶமே ப்ராப்தமாக வேண்டும். அப்படிப்பட்ட ஸவர்ண வர்ணம் அப்ரஸித்தமானதனால், கீழ்க் குறிக்கப்பட்டுள்ள தாதுக்களுடைய ஸகாரத்திற்கு எப்படி ஸவர்ண வர்ணாதேஶம் வரும் என்னும் ஶங்கையை அபிஜ்ஞர்கள் பரிஹரிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

சென்னை, }
20-10-16. }

தி. கிருஷ்ணமாசார்யர்.

[இந்த ப்ரஶ்நத்திற்கு ஶாஸ்த்ராபிஜ்ஞர்கள் யதோசிதம் ஸமாதாநம் செய்வார்கள் என்பதில் ஸந்தேஹமில்லை. ஆனாலும், அடியேனுக்கு ஒருவிதமான ஸமாதாநம் ஸ்புரிக்கின்றது; அதை இப்பொழுது விஜ்ஞாபநம் செய்துகொள்ள அடியேன் துணிவதை அபிஜ்ஞர்கள் க்ஷமித்தருளவேணும்.

‘ஸூத்ரங்களில் பூர்வத்திலும் பரத்திலும் நிர்திஷ்டமாக இருக்குமவையே ‘பூர்வம்’ ‘பரம்’ என்று வ்யவஹரிக்கப்படுகின்றன’ என்று ஸ்ரீ க்ருஷ்ணமாசார்யரால் உதாஹரிக்கப்பட்டிருக்கும் ந்யாயம் ஸரியான ந்யாயமே. ஆனால், அதன் ப்ரவ்ருத்தி அஸங்குசிதமென்று அடியேனுக்குத் தோன்றவில்லை. “ [illegible] ” என்னும் ஸூத்ரத்திலேயே இந்த ந்யாயத்தின் ஸங்கோசத்தைக் காணலாம். ‘[illegible]’ என்று சொல்லியிருக்கிறபடியால், ஸ்ரீ க்ருஷ்ணமாசார்யருடைய ந்யாயப்படிக்கு ‘[illegible]’ ஶப்தத்தின் ஸ்தாநத்தில் க்ருத்ஸ்நாதேஶம் ப்ரஸங்கிக்க, அது ஸரியன்று என்றும், ‘[illegible] ஶப்தம் பரமாக இருக்கையில்’ என்று சொன்ன போதிலும் ‘[illegible]’ ஶப்தத்தின் ப்ரதமமான [illegible]காரத்தின் ஸ்தாநத்திலேயே பரரூபம் வருகின்றதென்றும் பெரியோர்கள் வ்யாக்யாநம் செய்திருக்கிறார்களன்றோ? அதுபோலவே, ப்ரக்ருத ஸூத்ரத்திலும், “𑌉𑌦𑌃 𑌪𑌰𑌯𑍋𑌃” என்று சொல்லியிருந்த போதிலும், பூர்வமான ‘𑌉𑌦𑍍’ ஶப்தத்தின் ஸவர்ணம் அப்ரஸித்தமானபடியால், பூர்வநிமித்தமான ‘𑌉𑌦𑍍’ ஶப்தத்தின் ஊகாரத்தினுடைய ஸவர்ணமே ஆதேஶமாக வருகின்றது என்று வ்யாக்யாநம் செய்யவேண்டும்.

எஸ். வாஸுதேவன்.]

(2)

ஸ்ரீ. வே. தீ. பத்ராதிபருக்கு :—

நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயம் ஏற்பட்டு பஹு காலமாகின்றது. அப்படி இருக்க ஸ்வல்ப திநங்களுக்குமுன் சென்னையில் ஶைவ ஸித்தாந்த ஸங்கமொன்று சேர்ந்ததாகவும், அதில் ஊர்த்வ புண்ட்ரம் அஶாஸ்த்ரீயமென்றும், நவீநமென்றும் சில நிர்ணயங்கள் செய்யப்பட்டவையாகவும் பத்ரிகைகளில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றது.

“ [illegible]
𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 [illegible] ”

என்று மஹோபநிஷத்தில் சொல்லியிருக்கின்றதன்றோ? ஊர்த்வ புண்ட்ரத்திற்கு இதைத் தவிர்த்து மற்றை என்ன ப்ரமாணங்கள் இருக்கின்றன

வென்றும், எந்தக் காலத்தில் இந்தப் புண்ட்ரம் ஏற்பட்டதென்றும் ஶ்வேதம்ருத்தை உபயோகிக்க ப்ரமாணம் எது வென்றும், ஸ்ரீ சூர்ணம் மத்தியில் இருக்க வேண்டியதற்கு ப்ரமாணம் எது வென்றும், ஸ்ரீ வேதாந்த தீபிகையை ஆதரித்து வரும் பெரியோர்களில் யாராவது அடியேன் பேரில் க்ருபை செய்து விஶதமாக நியமிக்க வேணுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

நள௵
ஆவணி௴ 16௳. } **கண்டனூர் - மா. வெங்கடாசார்யன்.**

விளம்பரங்கள்.

(1)

ஆர்ய தர்மம்.

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ ஶங்கராசார்ய ஸ்வாமிகளின் ஆஜ்ஞையின் பேரில், நம்முடைய ஆர்ய ஸநாதந தர்மத்தை நிலைநிறுத்தி வ்ருத்தி செய்வதற்காக "ஆர்ய தர்மம்" என்னும் பெயருடன் தமிழ் **பா**ஷையில் ஒரு மாஸாந்தரப் பத்ரிகை சென்ற ராக்ஷஸ௵ வைஶாக ஶுத்த பஞ்சமீ முதல் ஸ்ரீ மடத்திலிருந்து வெளியாகி வருகின்றது. இதன் சந்தா வருஷம் ஒன்றுக்கு போஸ்டேஜ் உள்பட ரூ. 3.

ப. பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரீ,
ஸ்ரீ மடம் ஆஸ்தாந பண்டிதர்
கும்பகோணம்.

---

(2)

விஷ்ணுஸ்தல மஞ்ஜரீ.

ஸ்ரீ ஆழ்வார்களால் மங்களாஶாஸநம் பெற்றுள்ள நூற்றெட்டுத் திருப்பதிகளுடன், புராண ப்ரஸித்தங்களான ஐம்பது புண்ய க்ஷேத்ரங்களும், புராண ஐதிஹ்யங்களும், அவற்றிற்குச் செல்லும் வழிவகைகளும், அவ்வழியிலுள்ள சத்திரம் சாவடிகளும், அவற்றிற் கருகிலுள்ள விநோத காட்சிகளும், சுருக்கமாயும் விளக்கமாயும் இப்புத்தகத்தின்கண் எழுதப்பட்டிருக்கின்றன. ஸ்தல யாத்ரை செய்வோர்க்கு, இது, இன்றி யமையாத வழித்துணைவன் போன்றதோர் நூல். இதன் விலை அணா 8.

எம். ஸி. பட்டாபிராம முதலியார்,
பிரம்பூர், சென்னை.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 7.] நள௵ கார்த்திகை௴ [ஸஞ்சிகை 2.

𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌕𑌮𑌨𑌂 𑌤𑌮𑌾𑌲𑌵𑌰𑍍𑌣𑌂 𑌰𑌵𑌿𑌕𑌰𑌗𑍌𑌰𑌵𑌰𑌾𑌮𑍍𑌬𑌰𑌂
𑌦𑌧𑌾𑌨𑍇 - 𑌵𑌪𑍁𑌰𑌲𑌕𑌕𑍁𑌲𑌾𑌵𑍃𑌤𑌾𑌨𑌨𑌾𑌬𑍍𑌜𑌂 . 𑌵𑌿𑌜𑌯𑌸𑌖𑍇
𑌰𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇𑌽𑌨𑌵𑌦𑍍𑌯𑌾 ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

பத்ராதிபரின் குறிப்புகள்.

கீதை உண்டான கால நிர்ணயம்.

ராவ்பஹதூர் C. V., வைத்யா, M. A., LL. B., என்பவர் பகவத்கீதையின் காலநிர்ணயத்தைப்பற்றி 'இந்தியன் ரிவ்யூ' எனும் மாஸாந்தர பத்ரிகையில் எழுதுகின்றார். அந்த க்ரந்தம் ஒரே க்ரந்தகர்த்தாவினால் ஒரே காலத்தில் எழுதப்பட்டதாம். அது மஹாபாரதம் முதலில் உண்டானபோதே அதில் சேர்ந்திருந்ததாம். பாரதத்தில் அது ஸ்வரஸமாய் அந்தர்க்கதமானதாம். ஜ்ஞாநத்தையும் பக்தியையும் அபேக்ஷித்தவர்கள் பகவத் ப்ரீத்யர்த்தமாகவும், தத்வ ஜ்ஞாநத்தால் பிறந்த த்யாநநிஷ்பத்தியின் பொருட்டும் பாராயணம் செய்வதற்கென்றே அது பிறந்ததாம். ஸ்ரீ க்ருஷ்ணன் அர்ஜுநனுக்குச் செய்த உபதேசத்தை, உபதேச காலத்தின் பிறகு நூறு அல்லது இருநூறு வருஷங்களுக்குள், வ்யாஸரோ, வைஶம்பாயநரோ, வேறொரு

ஸ்ரீக்ருஷ்ண பக்தனே பகவத் கீதாரூபமாகச் செய்தனராம். ஸ்ரீக்ருஷ்ணன் ஈஶ்வராவதார மென்பது ஸ்ரீ க்ருஷ்ணன் காலத்திலேயே ஏற்பட்ட விஶ்வாஸமாம். பகவத்கீதை பிறந்த காலத்தில் அந்த விஶ்வாஸம் நிஸ்ஸம்ஶயமாக ஸ்திரப்பட்டு நின்றதாம்.

நர நாராயணவதாரர்களான ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுநர்களுடைய சரித்ரமாக ஏற்பட்ட மஹாபாரதத்தினுடைய ஸம்பந்தமற்றுப் பகவத்கீதை முதலில் உண்டான தென்று ஸம்ஶயிப்பது ந்யாய விரோதமாம். ஸ்ரீ க்ருஷ்ணன் அர்ஜுநனுக்குச் செய்த ஜ்ஞாநோபதேசமானது நன்றாகத் தர்க்கிக்கப்பட்டால் மஹாபாரதத்தை விட்டு விலகிப் பிறக்க மாட்டாதாம்.

'[illegible] ।
[illegible]' ॥

என்கிற ஶ்லோகத்தை ஆதாரமாயுடைய ஜ்ஞாநோபதேஶம் மஹாபாரதத்தைத் தவிர மற்றெங்கேயும் ப்ரஸங்கிக்கமாட்டாதாம். விஶ்வரூபாத்யாயமும், '[illegible]' எனும் ஹிதவசநங்களும், மற்றோரிடத்தில் ஸந்தர்ப்பப்பட மாட்டாவாம். ஆதலால் தத்வதர்சியான வ்யாஸரோ, அவருடைய ஶிஷ்யரான வைஶம்பாயநரோ, ப்ரதமத்தில் எழுதிய பாரதஸம்ஹிதையிலேயே கீதையையும் சேர்த்திருக்கவேண்டுமாம்.

* * * * * * *

இரண்டு ஸேனைகள் யுத்தோந்முகர்களாய் நின்ற அவஸரத்தில் கீதோபதேசம் நடந்திருக்குமா எனும் ஆக்ஷேபணைக்கு, இந்தியாவில் அக்காலம் க்ஷத்ரியர்கள் தர்ம யுத்தத்தை அவலம்பித்து நின்றார்களென்று ஸமாதானமாம்.

வைத்யா என்பவர், பாரத ராமாயண சரித்ரங்களைப்பற்றியும், அவற்றைக்குறித்து உண்டாயிருக்கும் இதிஹாஸங்களைப்பற்றியும், பாஶ்சாத்ய வித்யா பரிசயமுள்ளவர் செய்கின்ற யோசனைகளை ஒத்துச் சில க்ரந்தங்கள் இங்கிலீஷில் எழுதினவர். பாரத யுத்தத்தின் ஸந்நிஹித காலத்தில் உண்டான பாரத ஸம்ஹிதையில் இருபத்தி நாலாயிரம் ஶ்லோகங்கள் அடங்கியுள்ளனவென்பதும் அந்த ஸம்ஹிதை தத்காலம் தென்படும் விஸ்தாரத்தை இப்போதைக்கு இரண்டாயிரத்து மூந்நூற்று அறுபத்தாறு வருஷங்கட்குள்ளும், கிறிஸ்துவின் காலத்து முன்பாகவும் தான் அடைந்த தென்பதும் அவர் கொள்கை.

'டயான் க்ரிஸாஸ்தம்' எனப்பெயர் கொண்ட க்ரீக் தேசத்தான் உபந்யாஸ ஸாமர்த்யத்தில் பெயர்பெற்று, கிறிஸ்து பிறந்த ஐம்பது வர்ஷத்துக்குள்ளாக இருந்தவனும். அவன் தென்னிந்தியாவிலோ, க்ரீக்தேசம் சென்ற இந்தியரிடமோ, லக்ஷ க்ரந்த விஸ்தாரத்தை யடைந்த மஹாபாரதத்தைப்பற்றிக் கேள்வியுற்று, அதைத் தான் எழுதின புஸ்தகத்தில் கண்டிருக்கின்றபடியால், தத்கால மஹாபாரதம் கிறிஸ்து பிறந்ததன் முன்னே யுள்ளதென்றும், இந்திய ககோள சாஸ்த்ர விஷயமாக ஶங்கர தீக்ஷிதரென்பவர் மஹாராஷ்ட்ர பாஷையில் எழுதிய சரித்ரத்தில், ஶ்ரவண நக்ஷத்ரம் முதலாக ஏற்பட்ட நக்ஷத்ர காலக்ரமம் தத்கால மஹாபாரதத்தில் கண்டிருக்கின்றதாயும், அந்தக் காலவிஸ்தாரம் கிறிஸ்து பிறக்கு முன் 450 - வர்ஷங்கட்கு முன்பாக ஒரு விஶ்வாமித்ரரால் ஏற்படுத்தப்பட்டதாயும் நிர்ணயிக்கப்பட்டதால், லக்ஷக்ரந்த விஸ்தாரமுள்ள மஹாபாரதம் அந்த 450 - வது வர்ஷங்கட்குள்ளாக உண்டாயிருக்க வேண்டு மென்றும் வைத்யா சொல்கின்றார். இக்காரணங்களைக் கொண்டு கிறிஸ்து காலத்தின் முன்னும், அவர் பிறப்பிற்கு 450 - வர்ஷங்கட்குள்ளும் தத்காலம் காணப்பட்ட விஸ்தரித்த மஹாபாரதம் உண்டான தென்று அவர் நிர்ணயிக்கின்றார். அந்த நிர்ணயத்துக்கு அநுகூலமான காரணாந்தரங்களும் உண்டென அவர் சொல்கின்றார். அவற்றைக் காட்டினரில்லை. குறித்த காரணங்களை மட்டும் யோசித்தால் லக்ஷக்ரந்த விஸ்தாரமுள்ள மஹாபாரதம் 2350 வர்ஷங்கட்கு முற்பட்டு உள்ளது என்பது தான் ஏற்படும்.

பாரத யுத்தகாலமும் ஸ்ரீக்ருஷ்ணன் இருந்த காலமும் ஒன்றே. இதைப்பற்றிச் சில ஐரோப்யர் ஊஹத்தை வைத்யா அங்கீகரிக்கின்றார். அதாவது, ருக்வேதம் முடிவுபெற்ற காலத்திற்குப் பிறகும், ஶதபத ப்ராஹ்மணம் உண்டான காலத்திற்கு முன்பும் பாரத யுத்தம் நடந்த தென்பதே. நாம் விமர்ஶித்த வரையில் ஶதபத ப்ராஹ்மணம் பாரத யுத்தத்திற்குப் பூர்வ விஷயங்களையும் குறிக்கின்றது. அது எப்படி யிருந்தபோதிலும், வைத்யாவினுடைய நிர்

ணயப்படிப் பகவத்கீதையானது, உபநிஷத்துக ளடங்கிய ப்ராஹ்மண காலத்துக்கும், வேதாங்கங்களுடைய காலங்கட்கும் மத்ய காலத்தில் எழுதப்பட்டிருக்கவேண்டும். ஆதலால், யாஸ்கர், பாணினி, கல்பஸூத்ரகாரர் முதலானவர்கள் பகவத் கீதைக்குப் பின்பட்டவர்கள்.

* * * * * *

'𑌸𑌹𑌸𑍍𑌰 𑌯𑍁𑌗𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤 𑌮𑌹𑌰𑍍𑌯𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃 ।
𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌂 𑌯𑍁𑌗𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌂 𑌤𑍇𑌽𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰 𑌵𑌿𑌦𑍋𑌜𑌨𑌾𑌃'

இந்தக் கீதா ஶ்லோகத்தின்படிக் கால ப்ரமாணத்தை மஹாபாரதம், யாஸ்க நிருக்தம், மநுஸ்ம்ருதி முதலான க்ரந்தங்கள் ஆதரிக்கின்றனவாம். நிருக்த பரிஶிஷ்டத்தில் அந்த ஶ்லோகத்தையே ஒரு ப்ரமாணம்போல எடுத்திருக்கின்றதாம். கீதையைத் தவிர்த்து வேறெங்கும் அந்த ஶ்லோகம் காணப்படவில்லையாம். நிருக்தமும் பரிஶிஷ்டமும் அதி பூர்வகால க்ரந்தங்களாம். ஆதலால் கீதை நிருக்த காலத்துக்கு முன்பட்டதாக ஏற்படுகின்றது.

* * * * * * *

'𑌮𑌹𑌰𑍍𑌷𑌯𑌃 𑌸𑌪𑍍𑌤 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇 𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑍋 𑌮𑌨𑌵𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌮𑌦𑍍𑌭𑌾𑌵𑌾 𑌮𑌾𑌨𑌸𑌾 𑌜𑌾𑌤𑌾 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌲𑍋𑌕 𑌇𑌮𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃'

எனும் ஶ்லோகத்தைப்பற்றி வைத்யா பின்னர் விமர்ஶிக்கின்றார்.

மநுஸ்ம்ருதியும் புராணங்களும், ஒவ்வொரு கல்பத்துக்கும் பதினாலு மங்வந்தரங்கள் உண்டென்றும், ஒவ்வொரு மங்வந்தரத்துக்கும் தனித்தனியாக ஏழு ருஷிகள் உளரென்றும் சொல்கின்றனவாம். மஹாபாரதம் இவ்வண்ணம் சொல்லவில்லையாம். ஆனாலும் ஹரிவம்ஶத்தில் 14 - மநுக்களும், ஒவ்வொரு மங்வந்தரத்துக்கும் தனித்தனியே ஸப்தருஷிகளும் கூறப்பட்டிருக்கின்றனராம். வைத்யா, தத்கால மஹாபாரதத்துக்கும் மநு ஸ்ம்ருதிக்கும் ஆவிர்பாவ காலத்தை 2166 - வர்ஷங்கட்கு முன்னென்று நிர்ணயிக்கின்றார். புராணங்கள் அவற்றின் ப்ரக்ருத ரூபத்தை யடைந்த காலம் 1616 வர்ஷங்களுக்கு முன்னென்றும் யோசிக்கின்றார்.

ருக்வேதம் மூன்றே மநுக்களைச் சொல்லுகின்றதாம். அதைக் காட்ட வைத்யா சில வாலகில்ய ஸூக்தங்களை எடுக்கின்றார். இப்

பெயர் கொண்ட பதினொரு ஸூக்தங்களுக்கு ஸாயனாசார்யர் பாஷ்யம் எழுதவில்லை. அவருடைய பாஷ்ய ஸஹிதமாக நம்மிடமிருக்கும் ருக் ஸம்ஹிதா க்ரந்தத்தில் வாலகில்ய ஸூக்தங்களைக் காணோம். ருக்வேதத்தை இங்கிலீஷ் படுத்திய க்ரிப்த் துரையவர்கள் மேற்படி ஸூக்தங்களை மாக்ஸ்முல்லர் துரை தாம் ப்ரசுரப்படுத்திய ருக்வேதத்தில் சேர்த்திருக்கின்றதாயும், அவற்றிற்கு எட்டாவது மண்டலத்தில் 49 - முதல் 59 - வரையில் ஸூக்த ஸங்க்யை ஏற்படுத்தி யிருப்பதாயும் சொல்லுகின்றார். இவ்வண்ணம் ஏற்பட்ட ஸங்க்யைப்படி 51 - வது ஸூக்தம் ஆரம்பத்தில், '𑌯𑌥𑌾 𑌮𑌨𑍌 𑌸𑌾𑌂𑌵𑌰𑌣𑍌 𑌸𑍋𑌮𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌪𑌿𑌬𑌃 𑌸𑍁𑌤𑌂' என்றும், 52 - வது ஸூக்தம் ஆரம்பத்தில், '𑌯𑌥𑌾 𑌮𑌨𑍌 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑌿 𑌸𑍋𑌮𑌂 𑌶𑌕𑍍𑌰𑌾𑌪𑌿𑌬𑌃 𑌸𑍁𑌤𑌂' என்றும் வாக்யங்கள் இருக்கின்றன. 10-வது மண்டலம் 62-வது ஸூக்தத்தில் '𑌸𑌾𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌸𑍍𑌯 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾 𑌵𑌿 𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌰𑌿𑌵 𑌪𑌪𑍍𑌰𑌥𑍇' என்றும், '𑌸𑌹𑌸𑍍𑌰𑌦𑌾 𑌗𑍍𑌰𑌾𑌮𑌣𑍀𑌰𑍍𑌮𑌾 𑌰𑌿𑌷𑌨𑍍𑌮𑌨𑍁𑌃 𑌸𑍂𑌰𑍍𑌯𑍇𑌣𑌾𑌸𑍍𑌯 𑌯𑌤𑌮𑌾𑌨𑍈𑌤𑍁 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾।𑌸𑌾𑌵𑌰𑍍𑌣𑍇𑌰𑍍𑌦𑍇𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌰𑌨𑍍𑌤𑍍𑌵𑌾𑌯𑍁𑌃." என்றும் வாக்யங்கள் இருக்கின்றன. வைத்யா என்பவர் இவ்வாக்யங்களைக் காட்டி, ருக்வேதத்தில் மூன்றே மநுக்கள் சொல்லப்படுகின்றார்க ளென்றும், யாஸ்கர் நிருக்தத்தில் '𑌮𑌨𑍁𑌃 𑌸𑍍𑌵𑌾𑌯𑌮𑍍𑌭𑍁𑌵𑍋𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍' எனும் வாக்யம் காணப்படுகின்ற தென்றும், ப்ரதம மநுவான ஸ்வாயம்புவ மநுவும் தத்கால மநுவான வைவஸ்வத மநுவும், மத்யகால மநுக்களான ஸம்வர்ண ஸாவர்ணிகளும் தான் கீதாகாலத்தில் ஸ்மரிக்கப்பட்டார்க ளென்றும், பிற்கால விஶ்வாஸத்திற் கொத்தபடி 14 - மநுக்களுடைய ஸங்க்யையை கீதை ஆதரிக்கவில்லை யென்றும் தீர்மானிக்கின்றார்.

பிற்கால விஶ்வாஸப்படி ஒவ்வொரு மங்வந்தரத்துக்கும் தனித்தனியே ஸப்தருஷிகள் ஏற்பட்டால் மொத்தமாக 108 - ருஷிகள் எண்ணப்பட வேண்டுமாம். கீதையோ என்றைக்கும் உள்ளவர்களாக பூர்வீகர்களான ஒரு ஸப்தருஷிகளைச் சொல்கின்றதாம். '𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑌤 𑌋𑌷𑌯𑌃 𑌸𑌪𑍍𑌤𑌤𑍀𑌰𑍇' எனும் வேத வாக்யத்தைச் சொல்லி அதை அநுஸரித்து, ப்ருஹதாரண்யகோபநிஷத்,

'𑌪𑍍𑌰𑌾𑌣𑌾 𑌵𑌾 𑌋𑌷𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍇𑌵 𑌤𑌦𑌾𑌹 । * * * 𑌅𑌯𑌮𑍇𑌵 𑌗𑍋𑌤𑌮𑍋𑌽𑌯𑌂 𑌭𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑌃 * * * 𑌅𑌯𑌮𑍇𑌵 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌃 𑌜𑌮𑌦𑌗𑍍𑌨𑌿𑌃 । * * * 𑌅𑌯𑌮𑍇𑌵 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌃 𑌕𑌶𑍍𑌯𑌪𑌃 । * * 𑌵𑌾𑌗𑍇𑌵𑌾𑌤𑍍𑌰𑌿𑌃' என்று சொல்லுகின்றது. இவ்வாக்யங்களை அவ்வுபநிஷத் நாலாவது அத்யாயம் இரண்டாவது ப்ராஹ்மணத்தில் கண்டுகொள்ளலாம்.

மேல்சொன்ன மந்த்ர த்ரஷ்டாக்களைக்குறித்துத் தான் '𑌮𑌹𑌰𑍍𑌷𑌯𑌃 𑌸𑌪𑍍𑌤 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇' என்று கீதையில் சொல்லப்பட்டதாம். இப்போது பாரதத்தைக் கண்டால் மந்வந்தரங்கள் தோறும் தனித்தனியே ஸப்தர்ஷிகள் இருந்ததாக ஏற்படுகின்றதாம். கீதையில் குறித்த ஸப்தர்ஷிகளும் மநுக்களும் பகவானுடைய மாநஸீக புத்ரர்களென்றும், ஸர்வ ப்ரஜைகளும் அவரிடமிருந்து உண்டானார்களென்றும் கீதை விவரிக்கின்றது. இந்த ப்ரக்ரியைகள், கிறிஸ்து பிறப்பதன் முன் 250 - வருஷங்கட்குப் பகுகாலம் முன்பட்டுக் கீதை உண்டாயிருக்க வேண்டும் என்பதைக் காட்டுகின்றனவாம்; அதாவது வேதாங்க காலங்களிலேயே அது இருந்திருக்க வேண்டுமாம்.

* * * * * *

இப்படி யோசித்த பிறகு வைத்யா மற்றொரு கீதா ஶ்லோகார்த்தத்தை யோசிக்கின்றார். அதாவது :—'𑌮𑌾𑌸𑌾𑌨𑌾𑌂 𑌮𑌾𑌰𑍍𑌗𑌶𑍀𑌰𑍍𑌷𑍋𑌽𑌹𑌮𑍍 𑌋𑌤𑍂𑌨𑌾𑌂 𑌕𑍁𑌸𑍁𑌮𑌾𑌕𑌰𑌃' என்பதே. இதனால் கீதை உண்டான காலத்தில் ஒவ்வொரு வர்ஷமும் மார்கழி மாஸத்தில் பிறந்ததென்றும், அப்போது தான் வஸந்த ருதுவும் ஆரம்பித்ததென்றும், வர்ஷாரம்ப ருதுவையும் மாஸத்தையும் தமது விபூதியாகப் பகவான் வெளியிட்டார் என்றும் அவருடைய அபிப்ராயம்.

வேதத்தில் மாஸங்கட்குச், சைத்ரம் வைஶாகம் என்று பெயர் இல்லையாம்; அவை மது மாதவ என்று சொல்லப்பட்டனவாம். ஶதபத ப்ராஹ்மணம் முதல் பத்து அத்யாயங்களில் மாஸங்கட்கு அப்பெயர்கள் தான் காணப்படுகின்றனவாம். ஶங்கர

தீக்ஷிதர், அவ்வத்யாயங்கள் 5000 - வர்ஷங்கட்கு முற்பட்டனவென்று நினைக்கின்றனராம். பதினோராவது அத்யாயத்தில் மாதவ மாஸம் வைஶாக மாஸமென்று சொல்லப்பட்டதாம். இவ்வத்யாயம் 4000 - வர்ஷங்கட்கு முன் உண்டானதாம். 3500 - வர்ஷங்கட்கு முன் உண்டான வேதாங்க ஜ்யோதிஷத்திலும், சைத்ர வைஶாகாதி மாஸ நாமங்கள் வழங்கப்பட்டனவாம். மஹா பாரத அநுஶாஸந பர்வத்திலும் மாஸங்கள் மார்கழி மாஸம் முதலாக எண்ணப்பட்டனவாம். அதனுடைய 106,109 - வது அத்யாயங்களால் பாகவத ஸம்ப்ரதாயஸ்தர்கள் அந்த க்ரமத்தை அநுஸரித்தார்களென்று ஊஹிக்கப் பொருந்துமாம். க்ருஹ்ய ஸூத்ரங்களிலும் மார்க்கஶீர்ஷாதியாக மாஸங்கள் எண்ணப்பட்டனவாம். நக்ஷத்ரங்கள் க்ருத்திகைபாதியாக - 2000 வர்ஷங்களுக்கு முன் எண்ணப்பட்டனவாம். அதற்குப் பிறகு தான் ஸித்தாந்திகள் அவற்றை அஶ்விநியாதியாக எண்ணினார்களாம். வேதகாலங்களிலும் க்ருத்திகையே முதல் நக்ஷத்ரமாம்; மார்கஶீர்ஷம் முதல் மாஸமாம். வேதாங்க ஜ்யோதிஷ ப்ரகாரம் வர்ஷம் மாக மாஸத்தில் பிறந்ததாம். இவ்வித யோசனைகளால், கீதா காலத்தில் வர்ஷம் மார்கஶீர்ஷத்தில் பிறந்ததாக ஜநங்களுக்குள் ஆசாரமிருந்ததென்றும், ஆதலால் கீதை வேதாங்க ஜ்யோதிஷம் முதலான க்ரந்த காலங்களுக்கு முன்பட்டதென்றும் வைத்யா நிர்ணயிக்கின்றார்.

* * * * * *

இந்த யோசனைகளின் பலம் என்னெனில் : 'ஸ்ரீ க்ருஷ்ணன் அவதார புருஷன் எனும் விஶ்வாஸம் அவனுடைய காலத்திலேயே ஜநங்களுக்குள் பரவினது; அவனது உபதேசத்தால் பிறந்த பாகவத ஸம்ப்ரதாயத்துக்கு அவனே குரு; அவனே தைவம்; அவனே கீதாரஹஸ்யத்தை அர்ஜுநனுக்கு உபதேசித்தான்; அவ்வுபதேசத்தை அவனுடைய பக்தரான வ்யாஸரோ வைஶம்பாயநரோ ஶ்லோகரூபமாக இயற்றிப் பாரதம் முதல் முதல் எழுதினபோது அதனுள் சேர்த்தார்கள்; மோக்ஷ ப்ரயோஜநமான ஜ்ஞாநபக்திகளை அபேக்ஷித்தவர் நித்யம் பாராயணம் பண்ணவேண்டுமென்று கீதை உண்டானது; என்று இவ்விதமான முடிவுகள்தான்.

கீதையைப்பற்றிய சில விஷயங்கள் ‘ஆர்யா’ பத்ரிகையில் அரவிந்தகோஸ் எழுதியிருக்கின்றார். லோகோபகாரமாக அவை ‘ஹிந்து’ பத்ரிகையிலும் அச்சிடப்பட்டிருக்கின்றன. கீதையை யாரோ ஒருவன் புதிதாய் எழுதி மஹாபாரதத்தில் கோத்துவிட்டானெனும் ப்ரமையைக் கோஸ் அநாதரிக்கின்றார். இப்படி எண்ணப் போதுமான ஸாக்ஷ்யம் இல்லையென்றும், இன்னும் முதலே ஸாக்ஷ்யம் கிடைக்காதென்றும், க்ருஷ்ணார்ஜுந ஸம்வாதம் உண்மையென்றும், ‘𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌯𑌦𑍇𑌵𑌕𑍀𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌯𑍋𑌵𑌾𑌚’ எனும் சாந்தோக்ய உபநிஷத்வாக்யம் ஸ்ரீ க்ருஷ்ணன் உண்மையாகப் பாரத காலத்தில் இருந்தாரெனக் காட்டுகின்றதென்றும், ஸர்வேஶ்வரனே ஸ்ரீ க்ருஷ்ணனாய் அவதரித்தானென்றும், அக்காலத்தில் மநுஷ்யர்க்குள் ஶ்ரேஷ்டனாயும் அவர்க்கெல்லாம் ப்ரதிநிதியாயும் நின்ற அர்ஜுநனே ஸ்ரீ க்ருஷ்ணனுடைய ஶிஷ்யனென்றும், பாரத யுத்தத்தில் அவன் பகவானுடைய ஓர் கருவியாக விருந்தானென்றும், ஸர்வஜ்ஞனான பகவான் யாவர்க்கும் மறைவில்நின்று யாவர்க்கும் தெரியாமலே தனது ஸங்கல்பத்தாலேயே அந்த யுத்தத்தை நடத்திவைத்து, அந்த அவஸரத்தில் அர்ஜுநன் தர்மஸூக்ஷ்மத்தைக் காணாது திகைக்கவே, பகவான் லோகத்தில் மநுஷ்யன் இருப்புக்கும் செயலுக்கும் கதியையும் உத்தேஶ்யதையையும் ப்ரயோஜநத்தையும் வெளியிட்டானென்றும் கோஸ் விவரிக்கின்றார். கீதா மாஹாத்ம்யத்தையும் பரக்கச் சொல்கின்றார்.

* * * * * *

ஸ்ரீ க்ருஷ்ணன் ப்ராப்யனும் பரமாசார்யனும் ஏற்பட்ட பாகவத ஸம்ப்ரதாயம் 2500 வர்ஷங்கட்கு முன்பட்டே இருந்ததாயும் சொல்கின்றார். அது தான் அநாதி ஸம்ப்ரதாயம். ‘𑌇𑌮𑌂 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑍇 𑌯𑍋𑌗𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑌹𑌮𑌵𑍍𑌯𑌯𑌂 । 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌮𑌨𑌵𑍇 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌮𑌨𑍁𑌰𑌿𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑌵𑍇𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ॥ 𑌏𑌵𑌂 𑌪𑌰𑌂𑌪𑌰𑌾𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌮𑌿𑌮𑌂 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌯𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃 । 𑌸 𑌕𑌾𑌲𑍇𑌨𑍇𑌹 𑌮𑌹𑌤𑌾 𑌯𑍋𑌗𑍋 𑌨𑌷𑍍𑌟𑌃 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ॥ 𑌸 𑌏𑌵𑌾𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌤𑍇𑌽𑌦𑍍𑌯 𑌯𑍋𑌗𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌪𑍁𑌰𑌾𑌤𑌨𑌃 । 𑌭𑌕𑍍𑌤𑍋𑌽𑌸𑌿 𑌮𑍇 𑌸𑌖𑌾 𑌚𑍇𑌤𑌿 𑌰𑌹𑌸𑍍𑌯𑌂 𑌹𑍍𑌯𑍇𑌤𑌦𑍁𑌤𑍍𑌤𑌮𑌂 ॥’ எனும் கீதா ஶ்லோகங்களின் அர்த்தத்தை அரவிந்தகோஸ் நன்றாக ஸ்மரித்தெழுதினார்.

பகவான் இக்ஷ்வாகு வம்ஶஸ்தர்களால் உபாஸிக்கப்பட்டவர் என்பது, விபீஷணனைக்குறித்து ஸ்ரீராமனால் சொல்லப்பட்ட ‘𑌆𑌰𑌾𑌧𑌯 𑌜𑌗𑌨𑍍𑌨𑌾𑌥𑌂 𑌇𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑍁𑌕𑍁𑌲𑌦𑍈𑌵𑌤𑌂’ எனும் வசநத்தாலும், அயோத்தியில் நாராயணனுக்கு ஆலயம் உண்டென்பதாலும், அங்கே ஸ்ரீராமனே ‘𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌮𑍁𑌪𑌾𑌗𑌮𑌤𑍍’ என்கிறபடியே பகவானை உபாஸித்தாரென்றும் ஏற்படுகின்றபடியாலும் ஸுப்ரஸித்தம்.

* * * * * *

தேசாந்தரஸ்தரும் மதாந்தரஸ்தரும் மதவிஷயத்தில் நமக்கு ஆப்தரல்லர். மதாந்தர தூஷிதமான புத்தி, அதனாலுண்டான பக்ஷபாதத்தை முற்றிலும் அதிக்ரமிக்கமாட்டாது. ஸ்வமத துர்பலங்களையும் அது கணிசிக்கமாட்டாது. அவர்களுடைய ஸஹவாஸமே நமக்குள் நம்முடைய ஸம்ப்ரதாய விஶ்வாஸத்தைக் கெடுக்கும். இப்படியுண்டான கேடோ பலவாறாக ப்ரகாசிக்கின்றது. பாஶ்சாத்யவித்யையின் பாரத்தைக் கண்டவர்களெனக் கொள்ளக்கூடிய வைத்யா அரவிந்தகோஸ் முதலானோர் வைதிக ஸம்ப்ரதாயஸ்தர் என எண்ணக்கூடாதவர். பாஶ்சாத்ய வித்யை ஒன்றிலேயே ஊன்றி நிற்கும் நம் சிறுவர்கள், அவர்கள் வசநங்களையாவது ஆதரிப்பாரென்று யோசித்து இவ்வண்ணம் எழுதலானோம்.

நம் சிறுவர்களின் தத்காலநிலை ஸந்தோஷிக்கத்தக்கதன்று. காலதேச வைகுண்யம் அவர்களை ஸஹவாஸ தோஷத்தில் விட்டது. ஸஹவாஸ தோஷத்தால் துர்வாஸனைகள் தலையெடுத்து விபரீதேச்சைகள் ஜநிக்கின்றன. ஆதலால் அவர்கள் துராசாரப் படுகுழிகளில் போய் விழுகின்றனர். பரர் சொற்களை ஹிதமென்று ப்ரமித்துத் தம் முன்னோர் ஏற்படுத்திய மர்யாதைகளை அவமதிக்கின்றனர்; ஸந்மார்க்கங்களைக் கடக்கின்றனர். தாம் கெடுவதை அறியாமலே, ‘[illegible]’ என்கிறபடியே, லோகாந்தரத்தை நிராகரித்து ஸ்வாத்மத்ரோஹம் புரிகின்றனர். ‘𑌨 𑌮𑌾𑌂 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌿𑌨𑍋 𑌮𑍂𑌢𑌾𑌃 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌨𑌰𑌾𑌧𑌮𑌾𑌃 । 𑌮𑌾𑌯𑌯𑌾𑌪𑌹𑍃𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌃 𑌆𑌸𑍁𑌰𑌂 𑌭𑌾𑌵𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ॥’ எனும் பகவத்வாக்யத்துக்கு விஷயமாகின்றனர்.

இது நமக்கு சோகஸ்தாநம். எவ்விதமாக யோசித்தாலும் நம் போலியர் மோக்ஷார்ஹரல்லர். ஆகிலும் நாம் மோக்ஷார்த்திகளே. ஆதலால், '𑌨𑍈𑌤𑌾𑌨𑍍𑌵𑌿𑌹𑌾𑌯 𑌕𑍃𑌪𑌣𑌾𑌨𑍍 𑌵𑌿𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷 𑌏𑌕𑌃' என்கிற ப்ரஹ்லாத வசநம் நம்மைப் பாதிக்கின்றது.

பகவத் ஸங்கல்பம் எப்படியோ? அவன் முதல் உபதேசித்த ஜ்ஞாநம் '𑌕𑌾𑌲𑍇𑌨𑍇𑌹 𑌮𑌹𑌤𑌾 𑌨𑌷𑍍𑌟𑌃' என்று அவன் சொன்னபடியே நஷ்டமாயிற்றன்றோ? அதற்கும் காரணம் லோகத்தாருடைய பாப ஸமுதாயமன்றோ? அவ்வண்ணமே அது இப்போதும் நஷ்டமடைந்து போமோ? அதை அவன்தான் அறிவன்.

* * * * * *

முகுந்த மாலா வ்யாக்யாநம்.

திருக்குடந்தை உ. வே. சி. ர. ஸ்ரீநிவாஸபட்ராசார்யர் ஸ்வாமி, தமது பித்ருக்ருதமான மணிப்ரவாள வ்யாக்யாநத்துடன் அச்சிடப்பட்ட 'முகுந்த மாலா' புஸ்தகமொன்றை நமது பார்வைக்கு அனுப்பியிருக்கின்றார். ஆழ்வார் திருவாய்மலர்ந்தருளிய ச்லோகங்களின் புஷ்கலமான அர்த்தங்களை ஜ்ஞாதாக்கள் ஸ்வயம் அநுபவித்துப் பிறரும் அநுபவிக்கவேண்டி வெளிப்படுத்திய விஷயத்தில் குணதோஷ சிந்தனைசெய்ய யாம் சக்தரல்லோம். ஆகிலும் க்ரந்தத்தைச் சிறிது வாசித்தோம். ஒவ்வொரு ச்லோகத்துக்கும் அவதாரிகை முற்படவும், அந்வயப்ரகாரம் பதங்களின்பேரில் உரை சொல்லிப் பின்னர் விசேஷார்த்த ப்ரதிபாதகமான வ்யாக்யாநம் விஸ்தாரமாகவும் செய்யப்பட்டுளது. முடிவில் ச்லோகங்களின் ஸமுதாயார்த்தம் எளிய தமிழில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆழ்வார்களும் ஆசார்யர்களும் பகவத்குணாநுபவம் செய்தது, அவர்கள் பாசுரங்களால் ப்ரகாசிக்கின்றது. அப்பாசுரங்களின் வசநங்களை விசேஷார்த்தங்கள் அநுஸரித்துப் பெருகுகின்றன. அவை ஜ்ஞாந பக்திகளால் ஆசார்யர்களுடைய ஸாத்ருச்யத்தை வஹித்த வித்வான்களுக்குத் தான் புலப்படும். முகுந்தமாலா வ்யாக்யாநம் பகவத்குணாநுபவம் செய்பவர்களுக்குப் பேருதவி செய்யும். பகவத் விஷயப்படியை ஒட்டி இவ்யாக்யாநம் செய்யப்பட்டது. இவ்யாக்யாநமின்றிக் குலசேகரனுடைய ச்லோக தாத்பர்யம் ஸாமாந்ய பக்த ஜநங்கட்குப் புலப்படமாட்டாது. ஆதலால் அவர்கள் இந்நூலை உகந்து கொள்வார் என்பதில் ஸந்தேஹமில்லை.

இக்ரந்தகர்த்தா இன்னும் பல ஸ்தோத்ரங்களுக்கு மணிப்ரவாள வ்யாக்யாநம் செய்தருளி இவ்விதமான மஹோபகாரத்தை வ்ருத்தி பண்ணியிருக்கின்றார். திருக்குடந்தையில் ஏற்பட்டிருக்கும் தேசிக ஸம்ப்ரதாய விவர்த்திநீ ஸபையார் தேசிகனுடைய பஹு ஸ்தோத்ரங்களை மணிப்ரவாள வ்யாக்யாநத்துடன் அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். தேசிக பக்தர்கள் அந்தப் புஸ்தகங்களை வாங்கி வாசிக்கவேண்டியது அவச்யம் தான்.

* * * * * *

பாச்சாத்ய வித்யாநிஷ்டர்கள் பகவத் ஸ்தோத்ரங்கட்கு விஸ்தரித வ்யாக்யாநங்களை அபேக்ஷிப்பது துர்லபம். ப்ரதமத்தில் ஸ்தோத்ரங்களே அவர்கள் ச்ருதிபதத்தை அடையமாட்டா. கைமுதிக ந்யாயத்தால் வ்யாக்யாநங்கள் அவர்கள் தர்சநபதத்தை எவ்வாறு அடையும்? பகவதுபாஸ்திக்கு வாரத்தில் ஒருநாள் ஒரு மணி ஸாவகாசம் போதுமானதென்று என்பவரை அவர் சேர்ந்தவர். பகவதுபாஸநையால் அந்தப் பொழுதும் வீண்படுமென்று நினைப்பாருமுளர். பாகவதனுக்குப் பகவத்ஸ்மரணமின்றிக் கழியும் ஒவ்வொரு முஹூர்த்தமும் க்ஷணமும் வீணே கழிந்ததாகத் தோற்றும். க்ருஷ்ணன்தன்னிலே உயிர்தரிப்பார் மற்றொன்றை நினைப்பதரிது. அவனைக் காணாத விநாடி அவர்க்கு யுகமாய் வளரும். அவர்களுடைய நேத்ரங்கள் பகவந் மூர்த்தி தர்சநத்தில் களிக்கும்; காதுகளோ அவன் கதாச்ரவணத்தில் த்வரிக்கும்; வாய் அவன் நாமஸங்கீர்த்தநத்தில் ரஸிக்கும்; கைகளோ அவன் குற்றேவல் புரியும். பகவான் அவர் சித்தங்களை விட்டகலான். ஒவ்வொரு வேளையில் அவர்கள் பகவானுடைய த்யாந ப்ரகர்ஷத்தால் அவனுடன் அபேதத்தை அடைவார்கள்.

இவ்வித பக்தி வாரத்தில் ஒரு மணி பகவானை நினைத்துக் கைகூடாது. "[illegible] । 𑌶𑍍𑌰𑍇𑌯𑍋𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑍈𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑍈𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑍇 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌹𑌿 𑌸𑌾𑌧𑍍𑌯𑌤𑍇 ।" எனும் உத்தவ வாக்யப்படியே புருஷனுடைய ஸர்வ ப்ரவ்ருத்திகளும் பகவத்பக்திக்கு ஸாதநங்களாய் முடியவேண்டும்.

இப்படிப்பட்ட பரபக்தியையே தநமாகப் பெற்ற மாலுகந்த வாசிரியர் வார்த்தைகளின் மஹிமையை முகுந்தமாலா வ்யாக்யாநம் போன்ற நூல்கள் பரக்கக் காட்டுகின்றன. பகவானுடைய கதாம்ருதத்தை லோகத்தார் பருகும்படி, ‘ஜ்ஞாதம் ஸம்விம்ருணந்தி யே ஸம்ஸிதாஜநா:’ என்கிறபடியே, விஸ்தாரமாக நிரூபணம் செய்பவர்தான் பஹுஜ்ஞாதாக்களெனப்படுவார்கள்.

* * * * * * *

தேசிக த்வேஷம்.

நமது மித்ரர் ஹைகோர்ட்டு வக்கீல் நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், ஆடி ஆவணி மாஸ ஸஞ்சிகைகளில் ‘துராக்ரஹ நிராக்ருதி’ யெனும் புஸ்தகத்தை, தேசிக த்வேஷம் ப்ரகாசிக்க வெழுதின விஷயமாக நாம் எழுத நேர்ந்த அம்ஸத்தைக் கண்ணுற்று, “ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் விஜயத்வஜம் போன்ற இத்தீபிகையில், ‘க்ருதாந்த்ரௌ ஜநநீ விஜஹாஸவஸ்யா’ என்று நம் ஆசிரியர் அருளிச்செய்ததையே ப்ரஸாவஹித்து, அதற்கு விரோதிகளான விஷயங்கட்கு ஸர்வ ப்ரகாரத்தாலும் இடங்கொடுக்கக்கூடாதென்று அடியோங்களுடைய விண்ணப்பம். * * *. பகவதாராதந ரூபமான வைஷ்ணவ ஐக்யாபிவ்ருத்தியை ப்ரதாநமாக இத்தீபிகை நடக்கடவது. * * * இனியாவது அந்யோந்ய ப்ரஸாதந ப்ரகாரங்களைத் தெளிந்து, த்வேஷாபிஸந்தியை மறந்து, ஒருவர்க்கொருவர் ‘ஈர்த்தவாய் தெரியாமல் வஜ்ரலேபகடித மானாற்போலே பொருந்திப் போரும்’ வண்ணம் தத்கால ஸ்திதியையும் நன்று பராமர்சித்து வர்த்திக்க நமக்கு நந்தீபிகை பரமோபகாரமாக வேண்டும்.” என்றிவ்விதமாக எழுதியிருக்கின்றார். இது ஆப்தவசநமே. நாம் எழுதிய குறிப்புகளில் பரநிந்தை செய்தோமில்லை. அவற்றை நாம் எழுத நேர்ந்த காரணங்களையும் வெளியிட்டோம். துராக்ரஹ நிராகரண மெனப்பெயர்கொண்ட தேசிக நிந்தாக்ரந்தம் நம்மை உத்தேசித்துப் பிறந்தமையால், அதைப் பார்ப்போர்க்குக் கிஞ்சித் ஸமாதாநமாக நாம் எழுதவேண்டியதாயிற்று.

த்ரிதசாலயம்.

பிறகு பீமன் பருவதங்களைத் தாண்டி ஹேமபத்மங்கள் ப்ரகாசிப்பதோர் பெரிய நதியையும் அதன்கரையில் ஸௌகந்திக வநத்தையும் தர்சித்தான். வநவாஸத்தால் மிகவும் கஷ்டமடைந்த தன்னுடைய ப்ரியையையும் ஸ்மரித்தான்.

ரம்யமான கைலாஸ சிகரத்தில், குபேரன் மாளிகையின் ஸமீபத்தில், மலையருவியின் அருகே ஒரு சுபமான வநத்தின்கண், விசாலமாக நிழல் விரிக்கும் பல வ்ருக்ஷங்களால் சூழப்பட்டுப் பொற்றாமரைகளால் மூடப்பட்ட திவ்ய புஷ்கரிணியைப் பீமஸேநன் கண்டான். அதில் அம்ருதரஸம் போன்று குளிர்ந்த தெண்ணீரைச் சாப்பிட்டான்; மிகவும் களித்தான். அது யக்ஷராஜனுக்கு க்ரீடாஸ்தாநம்; தேவர், ருஷிகள், யக்ஷர், கந்தர்வர்கள் இவர்கள் ஸஞ்சரிக்குமிடம்; யக்ஷ ராக்ஷஸர்களால் ரக்ஷிக்கப்பட்டது. அவர்கள் முநிவேஷத்துடன் ஸர்வாயுதங்களையும் தரித்துக்கொண்டு பீமஸேநன் அவ்விடம் வந்ததைக் கண்டார்கள். “நீ யார்? ஏன் இவ்விடம் வந்தனை?” என்று அவனைக் கேட்டார்கள்.

“நான் பாண்டவன். தர்மராஜன் ஸஹோதரன். நாங்கள் பதர்யாச்ரமத்தில் வஸிக்கின்றோம். அங்கே ஸௌகந்திக புஷ்பமொன்றைப் பாஞ்சாலீ பார்த்தனள். இவ்விடமிருந்து காற்றடித்து அது அங்கே விழுந்திருக்கவேண்டும். அப்புஷ்பத்தை மிகுதியாக அவள் வேண்டினள். அவள் ப்ரியத்தைச் செய்ய நான் இங்கே வந்தேன்” என்றான் பீமஸேநன்.

“இது குபேரன் க்ரீடாஸ்தாநம். தேவர், ருஷிகள், யக்ஷர்கள், கந்தர்வர்கள், அப்ஸரஸ்ஸுகள் இவர்களும் யக்ஷராஜன் அநுமதி பெற்று இங்கு ஸஞ்சரிப்பார்கள்; மலர்களையும் கொய்வார்கள். மநுஷ்யர் இங்கே வரக்கூடாது. வேண்டுமானால் குபேரன் அநுமதி பெற்று மலர்கள் கொள்வாய்” என்று சொன்னார் ராக்ஷஸர்கள்.

"நான் க்ஷத்ரியன். ஒருவரையும் யாசிக்கமாட்டேன். இந்தப் புஷ்கரிணீ மலையருவியில் உண்டாயது. இங்கே யாவர்க்கும் பாத்யம் ஸமானம்" என்றான் பீமஸேனன். உடனே குளத்தில் அவன் இறங்கவும் ராக்ஷஸர்கள் அவனைத் தடுத்தனர். பிறகு பீமஸேனனுடைய ப்ரஹாரங்களை ஸஹிக்க முடியாமல் அவர்கள் ஓடிப்போனார்கள். யக்ஷராஜனிடம் போய் முறையிட்டார்கள். யக்ஷராஜனும், "க்ருஷ்ணா நிமித்தம் பீமஸேனன் வேண்டிய புஷ்பங்களைப் பறித்துக்கொள்ளட்டும். இது எனக்கு முன்னமே தெரிந்தது தான்" என்று சொன்னார். ராக்ஷஸர்களும் குளத்தினிடம் திரும்பி வந்து அதில் விளையாடிக்கொண்டிருந்த பீமனைக் கண்டனர்.

பீமஸேனன் இவ்வண்ணம் நிற்க, தர்மராஜன் பதர்யாஶ்ரமத்தில் யுத்தத்தை அநுமிக்கத்தக்கப் பல அடையாளங்களைக் கண்டார். பீமஸேனன் அவ்விடம் இல்லையென்று தெரிந்துகொண்டார். பாஞ்சாலியையும், நகுல ஸஹதேவர்களையும் பீமனைப் பற்றி வினவினார். பாஞ்சாலியும் ஸௌகந்திக புஷ்பங்களின் பொருட்டுத் தன் சொற்படிப் பீமஸேனன் ஈஶாந்ய திசையாக ப்ராயணப்பட்டுச் சென்றதைச் சொன்னாள். உடனே யுதிஷ்டிரரும், கடோத்கசனையும் அவனுடன் வந்த ராக்ஷஸர்களையும் ஆஜ்ஞாபிக்கவே, அவர்கள் பாண்டவர்களையும் பாஞ்சாலியையும் ப்ராஹ்மணர்களையும் எடுத்துக்கொண்டு ஸௌகந்திக புஷ்கரிணியை உத்தேசித்துச் சென்றார்கள்.

அவ்விடம் அவர் வந்து சேரவும், அடிபட்ட ராக்ஷஸர்களையும், குளக்கரையில் கோபத்துடன் வீற்றிருந்த பீமஸேனனையும் யுதிஷ்டிரர் முதலானவர்கள் கண்டார்கள். தர்மபுத்ரர் பீமஸேனனை ஆலிங்கநம் செய்துகொண்டு, "என்ன இப்படி ஸாஹஸம் செய்தாயே! தேவர்க்கு அப்ரியம் செய்தாயே! என்பொருட்டு இனி இவ்வண்ணம் செய்யாதே" என்று சொன்னார். பிறகு ராக்ஷஸர் அவ்விடம் பாண்டவர்களையும் ப்ராஹ்மணர்களையும் பார்த்தார்கள். அவர்களை வணங்கினார்கள். தர்மராஜனும் அவர்களுக்கு ஸமாதாநம் சொன்னார். பிறகு குபேரன் அறிந்தே, அவர்கள் கந்தமாதந பர்வதத்தில் அர்ஜுனன் வரவை எதிர்பார்த்துக்கொண்டு தங்கியிருந்தார்கள். வைஶ்ரவணன் ஸ்தாநத்தை எவ்வண்ணம் பார்க்கப் பொருந்துமென்று தர்மபுத்ரர் ப்ராதாக்களுடன் ஸம்பாஷித்துக்கொண்டிருக்கையில் அசரீரிவாக் உண்டாகி, "இந்தக் கந்தமாதந பர்வதம் தாண்டி அப்புறம் செல்ல உனக்கு ஸாத்யப்படாது. வந்த வழியே பதர்யாஶ்ரமத்துக்குச் செல். அங்கிருந்து ஸித்தசாரண ஸேவிதமான வ்ருஷபர்வாவின் ஆஶ்ரமத்துக்குப் போ. அங்கிருந்து புறப்பட்டு ஆர்ஷ்டிஷேணருடைய ஆஶ்ரமத்துக்குப் போய், அங்கே வஸித்துக்கொண்டிரு. அதன் பிறகு குபேரன் நிவேஶநத்தைக் காண்பாய்" என்று பிறந்தது. இந்த வார்த்தைகளை விஸ்மயத்துடன் கேட்டார்கள். தௌம்யரும் தர்மராஜனுடன், "வடக்கே போக நம்மால் முடியாது; திரும்புவோம்." என்று சொன்னார். அதன்மேல் யாவரும் நரநாராயணாஶ்ரமத்துக்குத் திரும்பிப்போனார்கள்.

அவ்விடம் அவர் வாஸம்செய்துகொண்டிருக்கையில், ஜடாஸுரனெனும் ராக்ஷஸன் ப்ராஹ்மண வேஷம் பூண்டு பாண்டவருடன் சில காலமிருந்தான். கடோத்கசன் முதலான ராக்ஷஸர்கள் அவ்விடம் விட்டுப் போன பிறகு அவன் வந்து சேர்ந்தான். பீமஸேனன் வெளியில் போயிருந்த ஸமயம் பார்த்துப் பாண்டவர்களுடைய ஆயுதங்களை யெல்லாம் தன் வசப்படுத்திக்கொண்டான். தனது கோரரூபத்தைக் காட்டிக்கொண்டு, பாண்டவர்களையும் பாஞ்சாலியையும் தூக்கிக்கொண்டான். அவன் ஓட ஆரம்பிக்கவும், ஸஹதேவன் திமிறிக்கொண்டு, கத்தியைப் பிடுங்கிக்கொண்டு கீழே குதித்தான். பீமஸேனன் சென்ற திசையை நோக்கிக் கூவினான். தர்மபுத்ரரும் தமது யோக மஹிமையால் குருத்வத்தை அடையவும் ராக்ஷஸன் ஓட்டம் நின்றது. பீமஸேனன் இதற்குள் வந்து ராக்ஷஸனுடன் சண்டையிட்டான். அவர்கள் யுத்தம் வாலி ஸுக்ரீவர்கள் யுத்தம் போன்றிருந்தது. முடிவில் ராக்ஷஸன் கொல்லப்பட்டான்.

ஒரு நாள் யுதிஷ்டிரர் ப்ராதாக்களைப் பார்த்து "அர்ஜுனன் அஸ்த்ர ஸம்பாதந நிமித்தம் ஐந்து வர்ஷம் நம்மைப் பிரிந்து வஸிப்பதாய்ச் சொன்னானே. நாலு வர்ஷம் கழிந்து, ஐந்தாவதும் நடக்கின்றதே. தேவலோகத்தினின்று அவன் இன்னும் திரும்பவில்லையே!" என்று சொன்னார்.

பிறகு கடோத்கசனை ஸ்மரித்து, அவன் ராக்ஷஸர்களோடு வந்தவுடன் யாவரும் உத்தர திசையை நோக்கி ப்ரயாணப்பட்

டார்கள். வழியில் கைலாஸத்தையும் மைநாக பர்வதத்தையும். ஶ்வேத பர்வதத்தையும் நோக்கிக்கொண்டு; கந்தமாதந பர்வதத்தின் தாழ்வரைகளில் ஸஞ்சரித்தார்கள். இப்படி ஏழு நாள் நடந்த பிறகு வ்ருஷபர்வாவினுடைய ஆஶ்ரமத்தை அடைந்தார்கள். அங்கே தர்மாத்மாவான அந்த ராஜர்ஷியைக் கண்டு வணங்கினார்கள். அந்த ருஷியும் ஸந்தோஷத்துடன் ஏழுநாள் அவர்களைப் பூஜித்தார். எட்டாவது நாள் மறுபடி அங்குநின்று ப்ரயாணப்பட்டார்கள். தங்கள் ஆபரணங்களையும் ஶ்ரேஷ்டமான வஸ்த்ரங்களையும் பாண்டவர்கள் வ்ருஷபர்வாவினிடம் கொடுத்து, தம்முடன் வந்த சில ப்ராஹ்மணர்களையும் அவ்விடம் நிறுத்திவிட்டார்கள். மற்ற ப்ராஹ்மணருடன் உத்தரதிக்கை நோக்கிச் சென்றார்கள். வ்ருஷபர்வாவும் கொஞ்சம் தூரம் அவர்களுடன் சென்று வழிவிட்டார். அதன்மேல் மார்க்கத்தையும் விவரித்தார். பாண்டவர்களை ஆசீர்வதித்துத் திரும்பினார். அவர்கள் நாலாவது தினம் ஶ்வேதபர்வதத்தை அடைந்தார்கள் அதன்மேல் பல நதிகளைக்கடந்துகொண்டு மேன்மே லேறினார்கள். க்ரமேண மால்யவானெனும் கிரியை அடைந்தார்கள். அதன்பிறகு கந்தமாதந பர்வதத்தை யடைந்தார்கள். அது வித்யாதரர், கிந்நரர், கிம்புருஷர், ஸித்தர், சாரணர் இவர்கட்கு இருப்பிடம். நந்தநவநம் போன்ற வநங்களுடன் கூடினது. பல வ்ருக்ஷங்கள், மற்ற மஹாதருக்கள் அங்கே நிறைந்துள. பக்ஷிகளுடைய மநோஜ்ஞமான ஶப்தம் மிகுதியாய் அங்கே கேட்கப்பட்டது. பல திவ்ய தடாகங்கள் அங்கே காணப்பட்டன. இவற்றை யெல்லாம் கண்டு களித்துக்கொண்டு முடிவில் ஆர்ஷ்டிஷேணருடைய ஆஶ்ரமத்தை அடைந்தனர். அங்கே அந்த ருஷியையும் கண்டார்கள்.

கண்டவுடன் பாண்டவர்களும் த்ரௌபதியும் ஸாஷ்டாங்கமாக அந்த ருஷியை நமஸ்கரித்து அபிவாதநம் செய்தார்கள். ருஷியும் அவர்களை குஶலப்ரஶ்நங்கள் கேட்டார். அப்படிச் செய்வதில், ‘𑌸𑌤𑍍𑌯𑌂𑌵𑌦 𑌧𑌰𑍍𑌮𑌂𑌚𑌰’ என்றாரம்பிக்கின்ற ஶ்ருதி வசநங்களை யொட்டி, “𑌨𑌾𑌨𑍃𑌤𑍇 𑌕𑍁𑌰𑍁𑌷𑍇𑌭𑌾𑌵𑌂 𑌕𑌚𑍍𑌚𑌿𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑍇𑌚 𑌵𑌰𑍍𑌤𑌸𑍇 । 𑌮𑌾𑌤𑌾𑌪𑌿𑌤𑍍𑌰𑍋𑌶𑍍𑌚𑌤𑍇𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌪𑌾𑌰𑍍𑌥 𑌨𑌸𑍀𑌦𑌤𑌿 । 𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍇𑌗𑍁𑌰𑌵𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌵𑍈𑌦𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌪𑍂𑌜𑌿𑌤𑌾𑌃 । 𑌕𑌚𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌕𑍁𑌰𑍁𑌷𑍇𑌭𑌾𑌵𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥𑌪𑌾𑌪𑍇𑌷𑍁 𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 ।” என்று ஆரம்பித்து விசாரித்தனர். தர்மபுத்ரரும் ப்ரத்யுத்தரமாக ருஷி சொல்லிய தர்மநிஶ்சயங்களை 𑌯𑌥𑌾𑌶𑌕𑍍𑌤𑌿 𑌯𑌥𑌾𑌨𑍍𑌯𑌾𑌯𑌂 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑌿ப்பதாகச் சொன்னார். பிறகு ருஷி, ஆகாச ஸஞ்சார ஸமர்த்தர்களான ருஷிகள், பரஸ்பர காமயுக்தர்களான கிம்புருஷர்கள், நிர்மலமான வெண்பட்டாடைகள் உடுத்திய கந்தர்வ கணங்கள், அப்ஸரஸ்ஸுகள், அழகுடையவர்களும் மாலையணிந்தவர்களுமான வித்யாதரர்கள் இவர்கள் ஸந்நிஹிதங்களான பர்வத சிகரங்கள்மீது காணப்படுவார்கள் என்று சொன்னார். விசேஷ காநங்கள் கேட்கப்படு மென்றார். ஆனால் அதற்குமேல் மநுஷ்ய ஸஞ்சாரம் கூடாதென்றும் சொன்னார். சபலத்தால் அவ்விடம் நின்று மலையேறியவர்களை ராக்ஷஸாதிகள் அடிப்பார்க ளென்பதையும் தெரிவித்தார். அம்மலையின் சிகரத்தில் குபேரனுடைய உத்யாநம் இருப்பதென்றும், அவ்விடம் அப்ஸரஸ்ஸுகள் சூழ்ந்துவர வைஶ்ரவணன் ஸர்வபூதங்களுக்கும் தர்சந மளிப்பனென்றும், அத்தர்சநம் பாண்டவர்க்கும் கிடைக்கு மென்றும் சொல்லி முநிகள் புஜிக்கத்தக்க ரஸத்துடன் கூடிய பலங்களை உண்டு, அர்ஜுநன் வருமளவும் பாண்டவர் அங்கிருக்கலா மென்றும் ருஷி மொழிந்தார்.

பாண்டவர்களும் ருஷி மொழிந்தவற்றை மறவாமல் அவ்வாஶ்ரமத்தில் வாஸம் செய்தார்கள். கடோத்கசன் முதலான ராக்ஷஸர்கள் விடைபெற்றுச் சென்றனர். பல ருஷிகள் பாண்டவர்களைக் காண அவ்விடம் வந்தனர். அவர்களுடன் தர்மராஜ ப்ரப்ருதிகள் பல கதைகளைப்பற்றி வார்த்தை சொல்லிக்கொண்டு காலம் போக்கினார்கள். ஒரு நாள் ஸுபர்ணன் ஒரு மஹாநாகத்தைப் பிடித்துக்கொண்டார். அப்போது மலை கம்பித்தது; வ்ருக்ஷங்கள் எரிந்துபோயின. இதை யாவரும் பார்த்துக்கொண்டிருக்கையில், மலையின் உச்சியினின்று காற்றானது, நல்ல வாஸனையுடன் கூடிய மாலைகள், பஞ்சவர்ணத்துடன் கூடிய திவ்யமான புஷ்பங்கள் இவற்றைப் பாண்டவர் க்ருஷ்ணையுடன் நின்றிருந்த ஸ்தலத்தில் கொண்டு போட்டது. இவற்றைப் பார்த்தாள் த்ரௌபதி. “இவ்வகை மலர்கள் என் மநஸ்ஸைக் கவர்கின்றன. இவற்றால் நான் தேவபூஜை செய்ய இச்சிக்கின்றேன். உன் தோள்வலியால் ராக்ஷ

ஸர்கள் நாற்புறமும் ஓடிப்போவார்கள். ஆதலால் இம்மலையேறி அவர்களைத் துரத்தியடித்து, எனக்கு இவ்வகை மலர்களை ஏராளமாகக் கொண்டுவந்து கொடு” என்று பீமஸேநனை ஏவினார். இவ்வுத்தரவுடன் பீமஸேநன் ஸர்வாயுதங்களையும் கைக்கொண்டு மலைமீதேறினான். அங்கிருந்த யாவரையும் விரட்டினான். குபேரன் வாஸஸ்தாநத்தை நோக்கினான். வெண் ஸ்படிகக் கற்களாலும் ஸ்வர்ணத்தாலும் நிர்மிதமான பஹு மாளிகைகளைக் கண்ணுற்றான். அவற்றின்மேல் நாட்டப்பட்ட கொடிகள் காற்றினாலசைக்கப்பட்டுப் பறந்தன. இவற்றையெல்லாம் கண்டு பீமன் சங்கமெடுத்து ஊதினான். உடனே யக்ஷராக்ஷஸ கந்தர்வர்கள் அவனிடம் ஓடிவந்தார்கள். தமது ஆயுதங்களை அவன் மேலெறிந்தார்கள். வில்லெடுத்துச் சரங்களைத் துரந்தும், கதையை ப்ரயோகித்தும், அவர்கள் யாவரையும் பீமஸேநன் முறியடித்தான். அவர்கள் உடம்பெலாம் நோக ஆர்த்தஸ்வரம் செய்தார்கள். உடனே குபேரன் ஸகாவான மணிமான் எனும் ராக்ஷஸன் சூலத்தையும் கதையையும் எடுத்துக்கொண்டு, ஓடிப்போகும் ராக்ஷஸர்களை மடக்கிப் பீமனுடன் சண்டைசெய்ய வந்தான். இருவர்க்கும் யுத்தமுண்டாய் முடிவில் மணிமான் பீமஸேநன் கதையால் உயிரிழந்தனன். மற்ற ராக்ஷஸர்கள் கீழ்த்திசையை நோக்கி ஓடினார்கள்.

இச்சண்டையின் அரவத்தைக் கீழே பாண்டவர் கேட்டார்கள். பீமஸேநன் ஸமீபத்திலில்லை யென்பதையும் கண்டுகொண்டார்கள். த்ரௌபதியை ஆர்ஷ்டிஷேணரிடம் ஒப்பிவித்துவிட்டு அவர்கள் மலையேறினார்கள். ஆயுதபாணியாய் நின்ற பீமனையும், உயிரிழந்த ராக்ஷஸர் சரீரங்களையும் பார்த்தார்கள். குபேரன் பவநத்தையும் நோக்கினார்கள். தர்மபுத்ரர் பீமனை ஆலிங்கநம் செய்துகொண்டு ‘பீமா! இப்பாபத்தொழிலை ஸாஹஸத்தாலோ மோஹத்தாலோ செய்தாய். த்ரிதசர்களுக்கு நீ அப்ரியம் புரிந்தாய். தர்மத்தைத் துறந்து பாபம் ஆசரிப்பவன் பாப பலத்தை அநுபவிப்பன். இவ்வண்ணம் நீ இனி நடவாதே” என்று சொன்னார்.

ராக்ஷஸர்கள் பீமனிடம் அடிபட்டு ஓடிக் குபேரனிடம் நடந்ததைச் சொன்னார்கள். பீமனுடைய இந்த இரண்டாவது அபராதத்தை வைச்ரவணன் கேட்டுக் கோபித்தனர். ரதத்தை ஆயத்தம் செய்யச் சொன்னார். யுத்தஸந்நாஹத்துடன் போர்வீரரால் சூழப்பட்டுப் பாண்டவர் இருந்தவிடம் வந்து சேர்ந்தார்.

பாண்டவர்கள் ராஜாதிராஜனை ஸந்தோஷத்துடன் கண்டார்கள். அவரும் இவர்களை ப்ரியத்துடன் வீக்ஷித்தார். இந்த நரச்ரேஷ்டர்கள் தேவகார்யம் செய்கின்றவர்கள் என்று யோசித்தார். தர்மபுத்ரரும் நகுல ஸஹதேவர்களும் யக்ஷராஜனிடம் சென்று தண்டன் ஸமர்ப்பித்துத் தாங்கள் செய்த அபராதத்தை அறிந்தவர்கள்போல் அஞ்சலிபத்தராய் நின்றார்கள். பீமஸேநனோ பொன்மாலை யொன்றைத் தலையில் அணிந்துகொண்டு தானிருந்தவிடத்தில் நின்றுகொண்டே குபேரனைப் பார்த்தான். அவனுக்குப் பயமில்லை; சரீரச்ரமுமில்லை. அப்படி நின்றவனைப் பார்த்துக்கொண்டு குபேரன் யுதிஷ்டிரருடன் இவ்வண்ணம் ஸம்பாஷித்தார்.

“பார்த்த! நீ ஸர்வபூதங்கட்கும் ஹிதம் செய்பவனென்று யாவர்க்கும் தெரியும். ப்ராதாக்களுடன் நிர்ப்பயமாய் இம்மலையின்கண் வஸிப்பாய். பீமஸேநனிடம் கோபம் செய்யவேண்டாம். அவன் ஸாஹஸம் செய்தான். ஆயினும் அதற்காக அவன் வெட்கப்படவேண்டாம். இறந்தவர்கள் தாம் ஸம்பாதித்த சாபத்தால் இறந்தார்கள். தேவர்க்கு இது முன்பே தெரியும்” என்று இவ்வண்ணம் மொழிந்தார். பீமஸேநனுடனும் அவ்வண்ணம் குபேரன் வார்த்தை சொன்னார். அதன்மேல் பீமஸேநன் ஆயுதங்களை வைத்துவிட்டுவந்து குபேரனை வணங்கினான். குபேரனும், “சத்ருக்களுடைய மானத்தைப் போக்குகின்றவனும் ஸுஹ்ருத்துக்களுடைய ஆநந்தத்தை வ்ருத்தி பண்ணுகின்றவனும் இரு” என்று அவனை ஆசீர்வதித்தார். பிறகு, “ருஜுமார்க்கத்தை அநுஷ்டிப்பீர்கள். கோண வழியில் நடக்கவேண்டாம். ஸத்யமே சொல்லுங்கள்; பொய்யை ஸ்மரிக்க வேண்டாம். தீர்க்கமாய் யோசியுங்கள். பரத்திலே புத்தியைச் செலுத்துங்கள். இங்கே நீங்கள் ஸுகமாய் வாஸம் செய்யலாம். உங்களுடைய இஷ்டத்தை யக்ஷர்கள் தடுக்கமாட்டார்கள். இந்த்ரனிடம் ஸர்வாஸ்த்ரங்களையும் ஸம்பாதித்துக்கொண்டு அவரிடம் விடைபெற்று அர்ஜுநன் சீக்ரமாக உங்களிடம் வந்து சேர்வான்” என்று சொல்லிக் குபே

ரன் பரிவாரங்களுடன் திரும்பிச் சென்றார். பாண்டவர்களும் தம்முடைய வாஸஸ்தலத்தை அடைந்தார்கள்.

மறுநாள் காலையில் தௌம்யரும் ஆர்ஷ்டிஷேணரும் ஆஹ்நிக க்ரியைகளை முடித்துக்கொண்டு பாண்டவர்களுடைய வாஸஸ்தானத்துக்கு வந்தார்கள். பாண்டவர்கள் அவர்களுக்கு நமஸ்காராபிவாதனங்கள் செய்தார்கள். பிறகு ஆர்ஷ்டிஷேணர் தர்மபுத்ரரைத் தன் புத்ரன்போல் பாவித்து ஆலிங்கனம் செய்துகொண்டு சொல்ல ஆரம்பித்தார்.

“இதோ கிழக்கே கடல்வரையில் செல்லுகின்ற மந்தர பர்வதம் ப்ரகாசிக்கின்றது. இத்திசையை இந்த்ர வைஶ்ரவணர்கள் ரக்ஷிக்கின்றார்கள். ம்ருத ப்ராணிகளால் அடையப்பட்ட இத்தெற்கு திசையை யமன் ரக்ஷிக்கின்றார். இதோ மேற்கே தோன்றும் பர்வதத்தை அஸ்தகிரி யென்பார்கள். இந்தப் பர்வதத்தையும் ஸமுத்ரத்தையும் வருணன் ரக்ஷிக்கின்றார். இந்த வடதிக்கில் ப்ரஹ்மவித்துக்களுக்கு ப்ராப்ய பூமியான மேரு பர்வதம் ப்ரகாசிக்கின்றது. அங்கே ப்ராஹ்மணர்களுடன் ப்ரஜாபதி வீற்றிருக்கின்றார். ஸ்தாவர ஜங்கமங்களை அவர் ஸ்ருஷ்டிக்கின்றார். ப்ரஹ்மாவினுடைய மானஸ புத்ரர்களான தக்ஷர் முதலானவர்களுடைய ஸ்தானமும் மேரு பர்வதந்தான். ஸர்வபூதங்கட்கும் ப்ரக்ருதிக்கும் உபாதான நிமித்த காரணமாகப் பெரியோர் எதைச் சொல்கின்றனரோ, ஆத்யந்த ரஹிதனும், ஶாஶ்வதனும், ஸர்வத்ர ப்ரகாசிக்கின்றவனும், ஸர்வேஶ்வரனும், ஸர்வோத்க்ருஷ்டனுமான நாராயணனுடைய ப்ராக்ருத வைகுண்டமெனும் அந்த ஸ்தானமானது, ப்ரஹ்மாவினுடைய ஸ்தானத்துக்கும் மேற்பட்டதாய் மேரு பர்வதத்தின் கிழக்கே ப்ரகாசிக்கின்றது. மஹா ப்ரகாசத்துடன் கூடிய அந்த மங்களகரமான ஸ்தானத்தைத் தேவர்களும் தர்சிக்க அர்ஹரல்லர். அக்நி ஸூர்யன் முதலானோர் அங்கே ப்ரகாசிப்பதில்லை. அந்த ஸ்தானம் ஸ்வயம் ப்ரகாசம். யதிகளால் அது ப்ராப்யம். ப்ரஹ்மர்ஷிகள் மஹர்ஷிகள் அவ்விடம் போகமாட்டார். பரமமான தபஸ்ஸைச் செய்து, சுப கர்மங்களுடன்கூடி, அஜ்ஞானம் நீங்கி, யோகஸித்தி யடைந்த மஹாத்மாக்கள் அங்கே சென்று மறுபடி ஜன்மமெடுக்கமாட்டார்கள். ஓ யுதிஷ்டிர! இங்கிருந்து அந்த ஸ்தானத்தை நமஸ்காரம் செய். இந்த மேரு பர்வதத்தைத் தினந்தோறும் ஸூர்யன் ப்ரதக்ஷிணம் செய்கின்றார். சந்த்ரனும் இதை மாஸத்துக் கொருதரம் ப்ரதக்ஷிணம் செய்கின்றார்.” என்றிவ்வண்ணம் ஆர்ஷ்டிஷேணர் ஸம்பாஷித்தனர்.

இவ்விதம் அர்ஜுனன் வரவை எதிர்பார்த்துக்கொண்டு பாண்டவர் அங்கே வஸித்தனர். அவர்கள் மனஸ்ஸுகள் அவ்விடத்தில் மிகுந்த தெளிவை அடைந்தன. “ஸ்வாத்₄யாயவந்தஸ்ஸததம் க்ரியா [illegible] ஸம்ஶிதவ்ரதாஶ்ச । [illegible] த₃ர்ஶநப்ரதீக்ஷா: ॥ த்₃ருஷ்ட்வா விசித்ராணி கி₃ரௌ வநாநி கிரீடிநம் சிந்தயதாமபீ₄க்ஷ்ணம் । ப₃பூ₄வ ராத்ரிர்தி₃வஸஶ்ச தேஷாம் ஸம்வத்ஸரேணைவ ஸமாநரூப: ॥ தத: கதா₃சித்₃த₄ரிஸம்ப்ரயுக்தம் மஹேந்த்₃ரவாஹம் ஸஹஸோபயாதம் । வித்₃யுத்ப்ரப₄ம் ப்ரேக்ஷ்ய மஹாரதா₂நாம் ஹர்ஷோ(அ)ர்ஜுநம் சிந்தயதாம் ப₃பூ₄வ ॥ [illegible] கிரீடீ ஸ்ரக்₃வீ வராண்யாப₄ரணாநி பி₃ப்₄ரத் । த₄நஞ்ஜயோ வஜ்ரத₄ரப்ரபா₄வ: ஶ்ரியா ஜ்வலந்பர்வதமாஜகா₃ம ॥” என்கிறபடியே, ஸத்யப்ரதானராயும் ஸத்கர்ம நிரதராயும் அர்ஜுனன் ஸமாகமத்தை ப்ரதீக்ஷித்துக்கொண்டிருந்த பாண்டவர்க்குப் பர்வதங்கள் மத்யே ரம்ய ப்ரதேசங்களின் காட்சியானது இடைவிடாது ஸம்பவித்திருந்தபோதிலும், ஒவ்வொரு நாளும் வர்ஷம்போல் நீண்டது. இப்படியிருக்கையில், இந்த்ர ரதமானது மின்னலென ஆகாசத்தில் ப்ரகாசிக்க அவர்கள் கண்டு களிப்புற்றனர். அதில் கிரீடியானவன் திவ்யாபரணங்களையும் திவ்ய மாலையையும் தரித்தவனாய்க்கொண்டு காணப்பட்டான்; பாண்டவர் நிற்கும் பர்வதத்தை அடைந்தான்; இறங்கினான்; தௌம்யர் பாதத்தை வணங்கினான்; பிறகு அஜாதஶத்ரு, வ்ருகோதரன் இவர்கள் பாதங்களில் நமஸ்காரம் செய்தான்; நகுல ஸஹதேவர்கள் அவனை வணங்கினார்கள்; க்ருஷ்ணையினிடம் போய் உபசாரோக்திகள் சொன்னான். இவ்வண்ணம் அவர்கட்குள் பரமஹர்ஷம் உண்டாயது. பிறகு அவர்கள் இந்த்ர ரதத்தை ப்ரதக்ஷிணம்

செய்தார்கள். இந்த்ரனுக்குப்போல் மாதலிக்கு ஸத்காரம் செய்தார்கள். மாதலியும் அவர்களை ஆசீர்வதித்து ரதத்துடன் சென்றனன்.

பிறகு அர்ஜுனன் ஶக்ரனால் தனக்குக் கொடுக்கப்பட்ட தநங்கள் திவ்யாபரணங்கள் முதலானவற்றைத் தன் தேஹத்தினின்று கழற்றிப் பாஞ்சாலியிடம் கொடுத்தான். பிறகு ஸஹோதரர்களையும் ப்ராஹ்மணர்களையும் தன்னைச் சுற்றி உட்காரவைத்துக் கொண்டு தன்னுடைய கதை முழுதும் சொன்னான்.

மறுநாள் பரிவாரத்துடன் தேவராஜன் பாண்டவர்களைப் பார்க்க வந்தார். ரதத்தினின்று இறங்கிவந்த இந்த்ரனைத் தர்மபுத்ரர் விதிப்படி பூஜித்தார். அர்ஜுனன் பிதாவை வணங்கி அவர் பக்கத்தில் நின்றான். இந்த்ரன் தர்மபுத்ரரைப் பார்த்து, “கௌந்தேய! உனக்கு மங்களம் உண்டாகும். நீ ராஜ்யத்தை அடைந்து பூமி யாள்வாய்; திரும்பிக் காம்யக வநத்துக்குச் செல். என்னிடம் தநஞ்சயன் எல்லா அஸ்த்ரங்களையும் பெற்றான். மூன்று லோகத்திலும் அவனை ஜயிப்பவர் இல்லை” என்று சொல்லிவிட்டு ஸ்வர்க்கம் சென்றனர்.

தர்மபுத்ரர் அர்ஜுனனை நோக்கி, “தநஞ்ஜய! தெய்வாநுகூலத்தால் ஸர்வாஸ்த்ரங்களையும் நீயடைந்தாய்; தேவராஜனை ஆராதித்தாய்; பார்வதியும் சிவனும் உன்னால் ஸாக்ஷாத்தாகத் தர்சிக்கப்பட்டார்கள்; லோக பாலர்கள் தர்சநம் உனக்குக் கிடைத்தது; மறுபடி திரும்பி எங்களுடன் சேர்ந்தாய்; இப்போது இந்த பூமி முழுதும் உன்னால் நான் அடையப்போவதை நிச்சயிக்கின்றேன்; த்ருதராஷ்ட்ர புத்ரர் என் வசமாவதையும் பார்க்கின்றேன்” என்றனர்.

மறுநாள் அவர் கேட்டபடி அர்ஜுனன் அவர்க்குத் தான் ஸம்பாதித்த திவ்யாஸ்த்ரங்களைக் காட்டினான்.

அர்ஜுனன் வருமுன் இரண்டு வர்ஷமும், வந்து சேர்ந்தபின் நாலு வர்ஷமும், பாண்டவர்கள் வைஶ்ரவணன் ப்ரதேசத்தில்

ஸுகமாய் வஸித்தார்கள். பிறகு அந்த ரமணீயஸ்தலத்தை விட்டுப்போக இஷ்டமற்றவராய், வநவாஸம் பதினொன்றாவது வருஷம் நடப்பதை யோசித்துத் திரும்பிப்போக ஆரம்பித்தனர். ஆர்ஷ்டிஷேணரிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டார்கள்.

“ തതസ്തേഷാം വസതാം നഗവഹൃഷ്ടാഃ കൈലാസശൈലേ കൃഷ്ണാനുബന്ധുവ । കുബേരകാന്താം സഹ കിങ്കരാണാം ഉഷി യത്രാവാസിയാത്രവ്യകാശം ॥ * * പ്രേതാധിവാസം ബഹുധാ നിരീക്ഷ്യ വൃത്തീ തു കൈലാസശിലം ത്രിദിവം । ശ്വേതം ഗൃഹീത്വാ നാരദം ചേ തന്ദ്രാശ്രമാതൃം വൃഷപർവണസ്ഥ” என்கிறபடியே, தாங்கள் அதுவரையில் வஸித்த கைலாஸ பர்வதத்தைப் பார்த்துக்கொண்டு, அதைக் கடந்து வ்ருஷபர்வாவினுடைய ஆஶ்ரமம் வந்து சேர்ந்தனர். அங்கொரு நாளிருந்து புறப்பட்டார்கள். மறுபடியும் நர நாராயணாஶ்ரமத்துக்கு வந்தார்கள். அங்கொரு மாஸம் இருந்துவிட்டு இறங்கினார்கள். பிறகு கிராதராஜனான ஸுபாஹுவின் நாட்டை யடைந்து அவனால் பூஜிக்கப்பட்டார்கள். அதையும் விட்டு த்வைத வநம் வந்து சேர்ந்தார்கள். முடிவில் காம்யக வநத்தையும் அடைந்தனர்.

இக்கதைகளை யோசிக்குமிடத்து, பதர்யாஶ்ரமம் மாநஸரோவரம் கைலாஸம் இவற்றால் ப்ரஸித்தியடைந்த ஹிமவத் ப்ரதேசமானது, விவிக்த ஸேவிகளான விப்ரவர்யர்களாலும், ராஜர்ஷிகளாலும், மஹா பாரதகாலத்திலும், அதற்கு முன்பட்டும், பின்பட்டும், தபஸ்ஸின் பொருட்டும், யோகஸித்தியின் பொருட்டும் ஆஶ்ரயிக்கப்பட்டதென்று நிச்சயிக்கக்கூடும். நாம் எடுத்துக் காட்டிய இதிஹாஸ ப்ரகரணங்களில் அந்த ஸ்தலங்கள் பலத்ருமங்களாலும், புஷ்ப வ்ருக்ஷங்களாலும், உயர்ந்து மகன்றும் நின்ற இதர மரங்களாலும் வ்யாப்தமாயிருந்தனவாகத் தெரிகின்றன. இப்படி அடர்ந்த வநப்ரதேசங்களில் பல அழகான பக்ஷிகள் செவிகளுக்கு இனிய சப்தங்களைச் செய்தனவாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கின்றது; இன்னும் மலைகளின் குகைகளில் காட்டு ம்ருங்க

கள் மிகுதியாகக் குடிகொண்டு மிருந்தனபோலும்! இந்த ஸ்திதிகள் அப்ரதேசங்களில் இப்போது நிலைபெறுகின்றனவோ வென்பதை நாமறியோம். கேள்விப்பட்டவரையில் அவை அங்ஙனம் இல்லை போல் தோன்றுகின்றது. இது காலவைகுண்யத்தால் ஏற்பட்டிருக்கலாம். இதிஹாஸம் எழுதப்பட்ட காலங்களில், இக்காலங்களில்போல், ஹிமவத் ப்ரதேசங்கள், ஆர்யா வர்த்தத்தினின்று யாத்ரையாகச் சென்ற ஜநஸஞ்சாரமுள்ளனவாகத்தான் இருக்கவேண்டும். ஆதலால் இதிஹாஸங்களில் காணப்பட்ட ஸ்தல விவரணத்தைக் கேவலம் கவியினுடைய உத்ப்ரேக்ஷையாகக் கொள்ளுதல் கஷ்டம். இன்னும் யக்ஷ ராக்ஷஸ வித்யாதர அப்ஸரஸ்ஸுகள் முதலான ஜநங்களால் அப்ரதேசம் பஹுமாநிக்கப்பட்டதாகவும் இதிஹாஸம் காட்டுகின்றது. அந்த ஜநங்கட்குத் தத்கால ப்ரதிநிதிகள் யாவரோ நாம் கண்டிலேம். டிபட் தேசவாஸிகள், சீனதேசத்தார், மங்கோலியா ப்ரதேசத்தார், துர்க்கிஸ்தாநமென்று பேர் வழங்கும் நாட்டினர்கள், இவர்கள் கந்தர்வ யக்ஷ கிந்நராதி நாமங்களால் முன் ப்ரஸித்தியடைந்த ஜநங்களின் ஸந்ததிகளாயிருக்கலாம். நாகர் எனும் ஜாதியார் வட இந்தியாவின் வாஸிகளுக்குள் மறைந்துபோயிருக்கவேண்டும்.

தேவதைகள் தத்காலம் தேவாலயங்களில் ஸாந்நித்யம் செய்கின்றார்களென ஜநங்கள் நம்புகின்றனர். கர்மகாண்ட க்ரியைகளாலும் ஸ்தோத்ரங்களாலும் ஆராதிதர்களான இந்த்ராதி தேவர்கள், ஹிமாசலத்தில் அவ்வவர்க்குரிய ப்ரதேச விசேஷங்களில் முன் ஸாந்நித்யம் செய்திருக்கவேண்டும். கைலாஸம் மஹாதேவன் உகந்தருளிய ப்ரதேசம். ஜகதந்தராத்மாவான நாராயணன் ஓர் அவதார விசேஷத்தால் அநுக்ரஹித்த ஸ்தலம் பதர்யாச்ரமம். இப்படிப்பட்ட புண்ய ப்ரதேசங்கள் நமக்கு இப்போது சதாசேஷங்களாக நிலைத்துவிட்டன.

பத்ராதிபர்.

உபோத்காதாதிகார சிந்தனை.

குருபரம்பரா ஸாரத்தில் விசேஷமாக ப்ரதிபாதிக்கப்பட்ட குருபரம்பராநுஸந்தாநத்தை உபோத்காதாதிகாரத்தில் மீண்டும் ஓர் ச்லோகத்தால் செய்தருளுகின்றார் (1). அந்தப் பரம்பரை தேசிகனுடைய ஆசார்யன் முதல் பகவத் பர்யந்தமாக விஸ்தரித்து நிற்கின்றது; பல கல்யாண குணங்களால் ப்ரஸித்தமானது; ஸகல நிஷித்த குணங்களு மற்றது. ஆதலால் அவ்வாசார்ய பரம்பரையில் ஒவ்வொரு ஆசார்யனும் பகவானைப்போல் அகிலஹேய ப்ரத்யநீக கல்யாணகுணைகதாநர் என்று ஏற்படுகின்றது. பகவானையும் ஆசார்யர்களையும் சேர்த்து இவ்வண்ணம் ஸ்மரிப்பதால் அவர் எல்லோர்க்கும் பகவத் ஸாம்யம் சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட ஆசார்ய ஸந்ததியை வந்தநம் செய்கின்றார். ஏனென்றால், அவர்கள் செய்தருளின மஹோபகாரமின்றித் தமக்கு க்ரந்தாரம்பமே ஸம்பவித்திராது என்பது திருவுள்ளம். அவர்களுடைய ப்ரஸாதத்தால், தம்முடைய மநஸ்ஸில், ரஹஸ்ய த்ரயங்களென்னும் மஹாமந்த்ரங்களுடைய ஸாரார்த்தங்கள் ஸ்திரமாக ப்ரகாசிப்பனவாய் ஸாதித்தருளுகின்றார். "என்னுடைய ஆசார்யன் முதற்கொண்டு பகவத் பர்யந்தமாகக் குணங்களால் ப்ரஸித்தமானதும் ஹேயகுணங்க ளற்றதுமான ஆசார்ய பரம்பரையை வந்தநம் செய்கின்றேன். யாதொரு பரம்பரையினுடைய க்ருபையினால் ரஹஸ்த்ரயங்களுடைய ஸாரபூதமான இவ்வர்த்தங்கள் என்னுடைய மநஸ்ஸில் ஸ்திரமாக ப்ரகாசிக்கின்றனவோ" என்பது ச்லோகார்த்தம்.

க்ரந்தாரம்பத்தில் இவ்வண்ணம் குருவந்தந மூலமாக மங்களாசரணம் செய்து, தாம் சொல்லப்போகின்ற அர்த்தங்கள் ஸாம்ப்ரதாயிகமென்றும் ஸூசிப்பித்தார்.

---

(1) [illegible]
[illegible]

இதன் பிறகு, பேரருளாளன் கைங்கர்யத்தில் மிகவும் ஈடுபட்டவர்களும், தமக்கு அத்யாத்ம வித்யாப்ரதாநம் பண்ணித் தம்மைப் பகவானுடைய திருவடிகளிலே சேர்ப்பித்தவருமாகிய ஸந்நிஹித் ஆசார்யனுடைய வந்தநத்தைத் தனியே செய்கின்றார் (1). அவர் எப்படிப்பட்டவர் என்றால்: ‘கர்மப்ரதாநமாயும் ப்ரஹ்ம ப்ரதாநமாயும் இருக்கின்ற பூர்வோத்தர மீமாம்ஸா ஶாஸ்த்ரங்களில் குதஃ குதஃ என்று ஆக்ஷேபங்களை உத்ப்ரேக்ஷிக்கும் வாதிகளுடைய குதர்க்கங்களை நிரஸித்தவர்’ என்கின்றார். ஸ்வக்ரந்தத்தினுடைய முதலாவது இரண்டாவது பாகங்களுள் அர்த்தங்களின் அநுஸந்தாநத்தையும் அவற்றின் ஸ்திரீகரணத்தையும் செய்வதால், தமக்குக் கர்மப்ரஹ்ம விஷயத்தில் அநுஶாஸநமும் குதர்க்க மூலங்களான விவித வ்யாமோஹங்களின் ஶமநத்தால் அதனுடைய ஸ்திரீகரணமும் செய்யும்படி, அந்த ஶாஸ்த்ரங்களைத் தம்முடைய ஆசார்யர்கள் உபதேசித்தவர்கள் என்று ஸூசிப்பிக்கின்றார். ‘வீதீஶோதக கிங்கராந்’ என்பதால் ‘வீதியில் செத்தைகள் போக்குவதைப்போல் தம்முடைய ஆசார்யர் விரோதி நிரஸநத்தை அநாயாஸமாகப் பண்ணினவர்’ என்றும், ‘விரோதிகளும் அவர்கள் செய்த வாதங்களும் அவர்க்கு த்ருண ப்ராயமாயிருந்தன’ வென்றும் காட்டுகின்றார். ‘வீதீஶோதக கிங்கரர்’ என்பதால், ‘திருப்பணி செய்வார் ஒருவர் தேசிகனுக்குத் திருவாய்மொழியும் சில அர்த்த விஶேஷங்களும் ப்ரஸாதித்தார்’ என்று ப்ரஸித்தியிருந்தபடியால், அப்பதங்கள் அவர் விஷயமென்று சொல்வாருமுளர். ‘கௌதஸ்குத நிவர்தகர் தாமே வீதீஶோதக கிங்கரர்’ என்று ஶ்லோக தாத்பர்யமாதலால், திருவாய்மொழி சொன்னவர் உபய மீமாம்ஸா ஶாஸ்த்ரங்களிலும் விரோதி நிரஸநம் செய்தவரென்று ப்ரஸித்தியில்லாதபடியால், மேல்சொன்ன யோசனை பொருந்தியதன்று. ஆனால், அப்புள்ளார் ப்ரப்ருதிகளுக்கு ஹஸ்திகிரீஶனுடைய வீதீஶோதக கிங்கரத்வம் பொருந்துமோ? எனக்கூடும். பகவான் ஜீவகோடிகளிடம் அநுகம்பையை வஹித்துத் திருவீதி யலங்கரிக்கின்றான். அம்ருத ப்ரதனான பரமபுருஷன், அசித்கல்பர்களாய் ப்ரளயத்தில் மூழ்கிக் கிடக்கும் ஜந்துக்களிடம் க்ருபைகூர்ந்து, அவர்களுக்குக் கரண களேபரங்களைத் தருவதற்காக ஸ்வஸ்வரூபத்தை அதிக்ரமித்து ப்ரபஞ்சரூபத்தைத் தரிக்கின்றானென்று வேதம் சொல்லிற்று. “[illegible]” என்று ஸ்ரீ பாகவதத்தில் சொன்னபடி, ஸர்வேஶ்வரன், தன்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்டுப் பரிணமித்த ப்ரக்ருதி விகாரங்களில் அநுப்ரவேசம் செய்து, ஸத் அஸத் விபாகமும் நாமரூப வ்யாகரணமும் செய்தான். இவ்வண்ணம் புருஷத்வமடைந்த ஜீவகோடிகள் ஶாஸ்த்ர மில்லாவிட்டால், அவ்வவர்க்குரிய தர்மங்களையும் தத்வார்த்தங்களையும் அறிந்து, சதுர்வித புருஷார்த்தங்களையும் ஸம்பாதித்துக்கொள்ள மாட்டார்கள். ஆகையால் ஸர்வ புருஷார்த்த ப்ரதமும், கர்மகாண்டம் ப்ரஹ்ம காண்டமென்னும் இருபிரிவுடன் கூடினதுமான வேதமென்கிற ஶாஸ்த்ரத்தையும் சதுர்முகாதிகளைக்கொண்டு ப்ரவர்த்திப்பித்தான். பெருமாள் வீதிகளில் எழுந்தருளும்போதும், அர்த்த காமங்களால் அபஹரிக்கப்பட்ட சித்தமுடையோர்க்கு அவனுடைய தர்ஶநம் ப்ராயேண பயன்படுவதில்லை. அவ்வண்ணமே ஶாஸ்த்ரமும் ஸகல புருஷார்த்தங்களையும் ப்ரதிபாதிக்கின்றபடியால், அதைப்படிப்போர்க்கெல்லாம் அதனுடைய முக்ய ப்ரயோஜநம் கைகூடாது. அதில் பரம புருஷார்த்தத்தைத் தரும் ப்ரஹ்ம ஜ்ஞாநத்தையும், அதற்கு ஸஹகாரியாயுள்ள கர்ம ஸ்வரூபத்தையும் முக்யமாகக் கடைப்பிடித்து, ‘தத்கர்ம யந்ந பந்தாய ஸா வித்யா யா விமுக்தயே’ [எது பந்தத்தின் பொருட்டாகாதோ அது கர்மம்; எது முக்தியின் பொருட்டு உதவுமோ அது வித்யை.] எனும்படியே, குவாஸனைகளில் மேலிட்டவர்கள் குதர்க்கங்களாலும் துரூஹங்களாலும் ஶாஸ்த்ரங்களின் மேல் ஏற்றப்பட்ட விரோதங்களை நிரஸநம் பண்ணி, ஶாஸ்த்ரமாகிற வீதியை ஶோதித்துப் பகவானையும், அவன் ப்ராப்யனாகத்தக்க ஜ்ஞாநத்தையும், அவனை யடையத்தக்க உபாயத்தையும் கலக்கங்களறக் காட்டியருளினார் அப்புள்ளார் என்பது திருவுள்ளம்.

இங்கே ஹஸ்திகிரீஶனை விஶேஷித்து எடுத்தது ஏனென்றால்: பரமபுருஷன், தன்னுடைய பரத்வத்தையும், தனக்கும் ஜீவ

---

(1) கர்மப்ரஹ்மாத்மகே ஶாஸ்த்ரே கௌதஸ்குத நிவர்தகாந் ।
வந்தே ஹஸ்திகிரீஶஸ்ய வீதீஶோதக கிங்கராந் ॥

னுக்கும் உள்ள பேதத்தையும், தன்னை யடைவதற்கு உபாயமாகப் ப்ரபத்தியையும், இப்படி ஸம்ப்ரதாயத்தை முன் ஸ்தாபித்த நாதயாமுந முனிகள் பரம்பரையைச் சேர்ந்த மஹாபூர்ணனை ஆசார்யனாகவும், ஹஸ்திகிரீஶனாய் நின்று ஸ்ரீ பாஷ்யகாரருக்குக் காட்டியருளினான். ஸ்ரீ பாஷ்யகார ஸம்ப்ரதாயம் அப்புள்ளார் வழியாகத் தேசிகனுக்கு ப்ராப்தமாயிற்று. அப்புள்ளார் உள்ளத்தெழுதியதைத் தேசிகன் ஓலையிலிட்டனர். ஆதலால் தம்முடைய க்ரந்தம் அப்புள்ளார் செய்த உபதேசத்தை அநுஸரித்துப் பிறந்ததென்பது ஶ்லோக தாத்பர்யம்.

இனி ஒரு பாசுரத்தால், இந்த க்ரந்தாரம்பத்தைச் செய்யும்படித் தமக்கு வந்த பாக்ய விசேஷத்தை ஸாக்ஷாத்தாக வெளியிடுகின்றார் (1). எப்படியென்றால்:—நம்முடைய ஆசார்யர்கள் பத்மாஸஹாயனுடைய திருவடிகளை மோக்ஷோபாயமாக ஆஶ்ரயித்தவர்கள். அவ்வண்ணமே நாமும் ஆஶ்ரயித்தால் அவன் நம்மையும் அடைக்கலமாக ஆண்டுகொள்வன் [அதாவது, தன்னால் ரக்ஷிக்கப்பட வேண்டிய வஸ்துவாக நம்மையும் ஸ்வீகரிப்பன்] என்று நிச்சயித்து, அவர்களை ஆஶ்ரயித்த நமக்கும், அந்தப் பகவானுடைய பாதாரவிந்தங்களையே உபாயமாகக் காட்டிக்கொடுத்த பரமகாருணிகர்கள். அவர்கள், வ்ருத்தியடைகின்ற அஜ்ஞாநமெனும் இருளானது நிஶ்ஶேஷமாக நிவ்ருத்தமாகவேண்டுமென்கிற அபிநிவேஶத்துடன் கூடினவர்களாய், ரஹஸ்யத்ரயங்களின் தாத்பர்யார்த்தங்களை நமக்கு உபதேசித்தவர்கள். இந்த ப்ரபஞ்சமோ அதன் வஶமாகும் ஜநங்களுக்குப் பகவானுடைய ஸ்வரூப குணங்களையும், தம்முடைய நிஜஸ்வரூபத்தையும் எப்போதும் தெரியவொட்டாமல் மறைக்கின்றது. அப்படிப்பட்ட ஸம்ஸாரத்தின் மத்தியில் நிற்கின்ற நமக்கு, ஸர்வகாலங்களிலும் அந்த ரஹஸ்யத்ரயார்த்தங்களை அநுபவித்து ஆநந்திக்கவும், விலக்ஷணமான ஒரு பாக்ய விஶேஷம் நம்முடைய ஆசார்யர்கள் க்ருபா வஶத்தால் வந்து கிட்டுகின்றது. எப்படியென்றால்: 'இந்த ப்ரபந்த நிர்மாணத்தால் அவ்வர்த்தங்களின் அநுஸந்தாந பரீவாஹ ரூபமாக ப்ரதிதிநமும் அவற்றை அநுபவிக்கும்படியான பாக்யம் ஆசார்ய ப்ரஸாதத்தால் நமக்கு உண்டாகின்றது' என்று இவ்வண்ணம் பொருள் கொண்டது 'ஆளுமடைக்கலம்' என்னும் பாசுரம்.

இதனால், ஆரம்பிக்கப் போகின்ற க்ரந்தமானது ரஹஸ்யத்ரயார்த்த விவரணமென்றாகின்றது. இந்த ரஹஸ்யத்ரயத்தின் பத வாக்ய யோசனைகள் க்ரந்தத்தினுடைய மூன்றாவது பாகத்தின் விஷயமாகின்றன. ஸம்ப்ரதாய ப்ரக்ரியை நாலாவது பாக விஷயம். 'ரஹஸ்யத்ரயார்த்தங்களைத் தமக்கு ஆசார்யர்கள் உபதேசித்தார்கள்' என்கிறபடியால் ஆசார்ய க்ருத்யமும், 'தகவுடையார்' என்று அவர்களிடம் தம்முடைய க்ருதஜ்ஞதாநுஸந்தாநத்தாலும், அவர்களால் உபதிஷ்டார்த்தங்களை ப்ரதிதிநமும் அநுஸந்திக்கவேண்டுமென்பதாலும் ஶிஷ்யக்ருத்யமும், இவ்விரண்டும் ஸம்ப்ரதாய ப்ரக்ரியை என்பது கருத்து. இது சதுர்த்த பாக விஷயம்.

'பகவானுடைய தாளிணையை ஶரணமாக ஆசார்யர்கள் ஆஶ்ரயித்தார்கள்' என்பதாலும், 'அத்திருவடிகளையே நமக்கும் அவர்கள் மோக்ஷோபாயமாக உபதேசித்தார்கள்' என்பதாலும், இக்ரந்தத்திற்குப் பரம ப்ரயோஜநம் வெளியிடப்பட்டதாயிற்று. அந்த உபாயாநுஷ்டாந தசையிலும் பரமபுருஷன் ரமாஸஹாயனாக நிற்கின்றான் என்பது ஸூசிதம்.

'மூளுமிருட்கள் விள்ள' என்பதால் ரஹஸ்யார்த்தங்களின் உபதேசம் அஜ்ஞாந நிவாரகமென்றும் ஸித்திக்கின்றது. ஆதலால் அஜ்ஞாந நிவ்ருத்தியும் ஸ்வக்ரந்தத்துக்கு ஓர் அவாந்தர ப்ரயோஜநம் என்று காட்டுகின்றார்.

உபோத்காதாதிகார விஷயத்தை 'ஶ்ரீமாந்' என்று ஒரு ஶ்லோகத்தால் ஸங்க்ரஹிக்கின்றார் (1). 'பகவான் வக்ஷஸ்தலத்

---

(1) ஆளுமடைக்கல மென்றெம்மை யம்புயத்தாள்கணவன்
தாளிணைசேர்ந்தெமக்கு மவைதந்த தகவுடையார்
மூளுமிருட்கள்விள்ள முயன்றோதிய மூன்றினுள்ளம்
நாளுமுகக்கவிங்கே நமக்கோர்விதி வாய்க்கின்றதே.

(1) ஶ்ரீமாந் [illegible]
[illegible]
[illegible]
[illegible]

தில் அணிகின்ற கௌஸ்துப மணிபோல், ஜீவனும் பரமபுருஷனுக்கு நித்ய ஹ்ருத்யன். அந்த த்ருஷ்டாந்தத்தால் ஜீவனும் கௌஸ்துப மணியைப்போல் நிர்மலனும் கல்யாணதமனும் பகவானுக்கு அதிஶயத்தை உண்டுபண்ணுகின்றவனுமாய் நிற்கின்றான்' என்று ஏற்படுகின்றது. 'நித்ய ஹ்ருத்யன்' என்பதால் 'இவ்வாகாரங்கள் ஜீவனுக்கு ஸ்வாபாவிகம்' என்று ஸித்திக்கின்றது. கௌஸ்துபம் பகவானுக்கு ஹ்ருதயங்கம்மா யிருப்பதுபோல் ஜீவனும் ஜ்ஞாநாநந்த பகவத்ஶேஷத்வ அபஹத பாப்மத்வாதி குணங்களால் பகவானுக்கு ஹ்ருதயங்கமன். இன்னும் ஹ்ருதய ஸமீபத்தில் பகவானால் தரிக்கப்பட்ட கௌஸ்துபம் ஜீவாபிமாநி தத்வமாகையால், அதைப்போல் ஜீவனும் ஸர்வேஶ்வரனுக்கு ஹ்ருத்ய னென்று சொல்லலாம். அதாவது 'பகவானுடைய வக்ஷஸ்தலத்தில் இருப்பவன்' என்றர்த்தம். ஜீவனுக்கு ஸ்வபாவமாக ஏற்பட்டது கிங்கரத்வாதி ராஜ்யம். பகவானுக்கு நித்ய கைங்கர்யம் செய்வதை 'ஆதிராஜ்யம்' என்றார். ஏனென்றால், ஆதிராஜ்யம் எவ்வண்ணம் ஒருவனுக்கு இஷ்டமாகின்றதோ அவ்வண்ணமே ஶேஷவ்ருத்தியும் ஜீவனுக்கு மிகவும் ப்ரீதிவிஷயமாகத் தக்கது. அதுதான் அவனுக்கு மஹாபுருஷார்த்தம். இப்படி ஜீவனுக்கு ஸ்வபாவ ஸித்தமாயும், ஸ்வாயதநம் போல் ப்ராப்தமாயும் இருக்கும் கைங்கர்யத்தை அவன் இழந்த காரணத்தை 'க்ஷஷிதி:' என்பதால் காட்டுகின்றார். அவனுடைய ஸ்வாபாவிகமான அஸங்குசித ஜ்ஞாநமானது அநாத்யவித்யையால் மறைக்கப்பட்டு ப்ரகாசமற்றிருப்பதால், அவித்யை யெனப்பட்ட அஜ்ஞாநப்ரேரிதனாக அவன் துஷ்கர்மங்கள் புரிகின்றான்; பகவானுடைய ஆஜ்ஞைகளை அதிலங்கநம் பண்ணுகின்றான். ஆதலால் பகவந்நிக்ரஹத்துக்கு விஷயமாகி, மேல்சொன்ன கைங்கர்யத்தை ஜீவன் இழந்துபோனான். அப்படிப்பட்டவனுக்கு, 'விபச்யந்தி ஹதாஶ வீக்ஷிதஸ்யோத காரணே' என்று ஸாதித்த வண்ணம், அநாதியாக வ்ருத்தியாய் நின்ற அவனுடைய கர்மஸமூஹத்தில், அவனுக்கும் தெரியாததோர் ஸுக்ருத விஶேஷமானது பலதசைக்கு வரும்படியான

அவஸ்தாவிஶேஷத்தை அடைகின்றது. அதனால் ஒரு கால விஶேஷத்தில் அவனுடைய ஜாயமாந தசையில் பகவானுடைய கடாக்ஷம் அவனுக்கு உண்டாகின்றது. இந்த க்ரமங்கள் 'ஈஶ்வரஸ்ய ச ஸௌஹார்தம் யத்ருச்சா ஸுக்ருதம் ததா। விஷ்ணோ: கடாக்ஷம்' என்று விவரிக்கப்பட்டன. 'நித்ய ஹ்ருத்யன்' என்பதால் ஈஶ்வரனுடைய ஸௌஹார்த்த மெனப்பட்ட ஸஹஜகாருண்யம் விவக்ஷிதம். அது ஜீவனுடைய பாப விஶேஷங்களால் கார்யகர மாகாமல் நின்றது. அது அவனுக்கு அநுகூலமாகும் பொருட்டு, 'விபச்யந்தி ஹதாஶ' என்கிறபடியே, அவனுடைய ஸுக்ருத விஶேஷம் பலதசைக்கு வருகின்றதை ப்ரதீக்ஷிக்கின்றதென்பது ஸூசிதம். அப்படிப்பட்டதோர் ஜந்மாரம்பத்தில் பகவானுடைய கடாக்ஷம் அவனுக்கு உண்டாகின்றதென்று காட்டப்பட்டது. பிறகு மேல்சொன்ன ஸுக்ருதத்துக்குப் பரிபாக காலம் உண்டாம்போது, ஆசார்ய ப்ராப்தி நிமித்தமாக இதர ஹேதுக்கள் வந்து கூடுகின்றன. அவை "விஷ்ணோ: கடாக்ஷமத்வேஷ ஆபிமுக்யஞ்ச ஸாத்விகை: । ஸம்பாஷணம் ஷடேதாநி ஹ்யாசார்யப்ராப்தி ஹேதவ: ॥" என்கிற ஶ்லோகத்தில் ஸங்க்ரஹிக்கப்பட்டன. இந்த க்ரமத்தில் பகவானுடைய ஜாயமாந கடாக்ஷம் நேரிட்ட ஜந்மத்தில், முதலில் பகவானிடம் அத்வேஷமும், பின்பு ஆபிமுக்யமும், அதன்பிறகு ஸாத்விகருடன் ஸம்பாஷணமும் உண்டாகின்றன வென்று சொல்லலாம். அத்வேஷமும், ஆபிமுக்யமும் ஸாத்விகர் விஷயமென்றாலும் பொருந்தும். இந்த யோசனைகளை யெல்லாம், 'ஸத்பரிஷதுபஜ்ஞம்' என்று ஸங்க்ரஹித்தருளினர். 'ஸத்பரிஷத்' என்பதால் ஸம்ப்ரதாயாகதமான ஸதுபதேசத்தைப் பெறுகின்றானென்பது திருவுள்ளம். 'உபஜ்ஞம்' என்பதால், ஜீவன் அடையப்போகின்ற 'ஸ்வம்' எனப்பட்ட ஸ்வஸ்வரூபம் [அதாவது 'ஜ்ஞாநாநந்த பகவத்ஶேஷத்வங்களுடன் கூடிய ஆத்ம ஸ்வரூப ப்ராப்தியானது] ஆசார்யர்களுடைய பரம்பராகதமான உபதேசத்தை மூலமாகவுடையது என்பது அர்த்தம். ஏனென்றால் அவ்வாசார்யர்கள் இந்த ஆத்ம ஸ்வரூபத்தை முதலில் அறிந்த

வரும் ஸம்ப்ரதாய ப்ரதம ப்ரவர்த்தகர்களுமாய் இருக்கின்றார்கள். ஸ்வம்-பகவான் ஒருவனுக்கே ஶேஷமாயும், அவனுக்கே பரதந்த்ரமாயு மிருக்கும் தனது ஸ்வரூபத்தை, [illegible] - அது அவ்வண்ண மிருக்கின்றதாக அறிந்து, [illegible], ரக்ஷதி-அதாவது அஸ்வரூபத்தையும், அதற்கு உரித்தான கிங்கரத்வரூபமான ஆதிராஜ்யத்தையும் என்றும் அநுபவிப்பவனாகச் செய்து கொள்கின்றான் என்பது கருத்து. 'செய்துகொள்கின்றான்' என்பதால், முன்னே விவரித்த ஹேதுக்களால் இவனுக்கு ஆசார்ய ப்ராப்தி யுண்டாய், ஆசார்யர்கள் தத்வஹித புருஷார்த்த விஷயகமான ஜ்ஞாநத்தை இவனுக்கு உபதேசித்தார்கள் என்பது தாத்பர்யம். தன் ஆத்மாவின் ஸ்வரூப ஜ்ஞாநமுண்டான பின், அவன் அந்த ஸ்வரூப ப்ராப்தி ரூபமான கிங்கரத்வாதி ராஜ்யமெனப்படும் புருஷார்த்தத்தை அடைந்து அநுபவிக்க விரும்புகின்றான். அதை அவன் அடைவதற்கு ப்ரதிபந்தகங்களாய் நிற்கும் ஸர்வபாபங்களினுடைய விமோக்ஷணத்தின் பொருட்டு, ஶரண்யன், ஸ்வயமே விதித்தருளிய ஶரணாகதி யெனும் உபாயத்தைப் பற்றுகின்றான்; உபாயாநுஷ்டாநம் பண்ணின பின்பு அதன் பலனாக, இந்த லோகத்தில் இருக்கும் வரையில் ஶாஸ்த்ர வேத்யமானவையும், பகவான் உகந்தருளினவையுமான கைங்கர்யங்கள் ஆரம்பமாகத் தனது ஶேஷவ்ருத்தியைக் கடைப்பிடிக்கின்றான். சரீராவஸாநத்தின் பிறகு அவன் ஈஶ்வரன் திருவுள்ளத்தை ஸாக்ஷாத்தாக அறிந்து, அந்த ஶேஷவ்ருத்தியைப் பிற்காலம் என்றும் இழவாதபடி அடைந்து காப்பாற்றிக்கொள்கின்றான் என்பது கருத்து.

பத்ராதிபர்.

(இன்னும் வரும்)

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ஹயக்ரீவாய நம:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பாஞ்சராத்ரம்.*

(முதல் பாகம்.)

" [illegible] ।
[illegible] ॥ "

[ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன்]

[ஸ்ரீ பாஞ்சராத்ர மென்பது மிகப் பெரிதான ஒரு ஶாஸ்த்ரம். அதைப் பற்றி அஜ்ஞனாயிருக்கும் அடியேன் ப்ரஸ்தாவிக்க யத்நிப்பதைப் பெரியோர்கள் க்ஷமித்தருளவேணும். ஸ்ரீ பாஞ்சராத்ர ஸம்பந்தமாக ஸ்ரீ ஆளவந்தாரும் ஸ்ரீ பாஷ்யகாரரும் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனும் பஹுவான விசாரத்தைச் செய்து அவர்களுக்கு ந்யாய்யமாகத் தோன்றின ஸித்தாந்தத்தைச் செய்திருக்கின்றார்கள். அந்த க்ரந்தங்களி லுள்ள சில விஷயங்களை யதாமதி ஸங்க்ரஹித்து அந்த ஸங்க்ரஹத்தை மூன்று ப்ரகாரமாக விஜ்ஞாபநம் செய்துகொள்ளலா மென்பது அடியேனுடைய கருத்து. ஸ்ரீ பாஞ்சராத்ர மென்பது ஆதுநிக மென்று சிலர் நினைத்திருக்கிறார்கள். அது அப்படி யன்று என்பதை முதலில் நிரூபிக்கிறேன். இரண்டாவது, அந்த ஶாஸ்த்ரம் நமக்குப் போதிப்பது யாது என்பதை விவரிக்கிறேன். மூன்றாவது, அந்த ஶாஸ்த்ரத்தின் மீது மதாந்தரஸ்தர்கள் செய்யும் தூஷணங்கட்கு நமது ஆசார்யர்கள் எவ்வித ஸமாதானத்தைச் செய்திருக்கிறார்கள் என்பதை ஸங்க்ரஹிக்கிறேன்.]

---

* இது, இம்மாஸத்தில் [19. 11. 16] மயிலாப்பூரில் நடந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ஸங்கத்தில் ஸ்ரீ. உ.ஸ. எஸ். வாஸுதேவாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்.

ஸ்ரீ விஶிஷ்டாத்வைதம் அத்வைதம் த்வைதம் என்று வ்யவஹரிக்கப்படும் மூன்று மதங்களுள் நாம் அவலம்பித்திருக்கும் மதம் ஸ்ரீ விஶிஷ்டாத்வைதம் என்பதே. இதைத் தான் நாம் இப்பொழுது ஸ்ரீ ராமாநுஜ மதமென்றும் ஸ்ரீ வைஷ்ணவ மதமென்றும் வ்யவஹரிக்கின்றோம். ஶங்கராசார்யர் காலத்திலும் அதற்குக் கொஞ்சம் முந்தியுள்ள காலங்களிலும் இதற்கு ஸ்ரீ பாகவத மதமென்று பெயர் வழங்கிவந்ததாகத் தெரிகிறது. ஸ்ரீவ்யாஸ ஸூத்ரத்திற்குப் பாஷ்யம் எழுதிவரும்பொழுது "𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍" என்னும் ஸூத்ர வ்யாக்யாநாவஸரத்தில், ஶங்கராசார்யர் '𑌭𑌾𑌗𑌵𑌤𑌾 𑌏𑌵𑌂 𑌮𑌨𑍍𑌯𑌨𑍍𑌤𑍇' என்று நம்முடைய மதத்தை உபந்யஸித்துப் பிறகு நிராகரிக்க ஆரம்பிக்கிறார். அதற்கும் முந்தின காலங்களில் இதற்குப் பௌதாயந மதமென்றும் வ்ருத்திகார மதமென்றும் வ்யவஹாரம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. அதாவது: மஹர்ஷி போதாயநரால் ஒரு வ்ருத்திரூபமாக ஸ்ரீ வ்யாஸ ஸூத்ரங்களுக்குச் செய்யப்பட்ட தாத்பர்யார்த்த நிரூபணத்தையே நமது மதம் கைக்கொண்டிருக்கின்றது என்றும், இது, ருஷிப்ரோக்தங்களான வ்ருத்திகளை நிராகரித்துவிட்டுத் தமக்குத் தோன்றும் அர்த்தங்களை நிரூபிக்கும் அர்வாசீநர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள சில மதாந்தரங்களைப்போன்றதன்று என்றும் நாம் அறிகிறோம். அதனாலேயே இதற்கு ஆர்ஷ மதமென்று ஒரு ஏற்றமுமுண்டு.

இந்த மதத்தின் ஸ்வரூபத்தை நாம் கொஞ்சம் விசாரித்தால் '𑌵𑍇𑌦𑍈𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑍈𑌰𑌹𑌮𑍇𑌵 𑌵𑍇𑌦𑍍𑌯𑌃' என்கிறபடி ஸ்ரீமந்நாராயணனையே ப்ரதிபாதிக்கும் ஶ்ருதியை இது மூலாதாரமாக உடையது என்பதை நாம் அறிகிறோம். பகவானுடைய ஸ்வரூப ரூப குண விபூதி சேஷ்டிதங்களை விளக்கும் ஶ்ருதியை ஆதாரமாகவுடைய க்ரந்தங்கள் பல உண்டு. அவைகளுள் ஸ்ரீ வ்யாஸ ஸூத்ரமென்பது ஒன்று. அதற்குத் தான் ஸ்ரீ ராமாநுஜாசார்யர் என்னும் ஸ்ரீ பாஷ்யகாரர், ஸ்ரீ போதாயநராலும் பூர்வாசார்யர்களாலும் செய்யப்பட்டுள்ள வ்ருத்தி பாஷ்யங்களை அவலம்பித்து ஸ்ரீ பாஷ்யம் என்னும் மஹோபகாரகமான க்ரந்த ரத்நத்தைச் செய்திருக்கிறார். அதைக்கொண்டே நாம், தத்வார்த்தத்தைத் தெரிந்து கொள்ளுகிறோம். இதே ரீதியாக ஸ்ரீ பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளென்று பல ஸம்ஹிதைகள், அதி விததமாயும் கஹநமாயும் கம்பீரமாயுமுள்ள ஶ்ருதியின் ஸாரதமமான அர்த்தத்தை மந்தமதிகளான நமக்கு எளிதில் தெரிவிக்கும்படி ஒரு ஶ்ருதி ஸங்க்ரஹம் போல ப்ரவ்ருத்தித்திருக்கின்றன என்பதையும் நாம் பார்க்கிறோம்.

"𑌇𑌦𑌂 𑌮𑌹𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌯𑍋𑌗𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌤𑍇𑌨 𑌪𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑌾𑌨𑍁𑌶𑌬𑍍𑌦𑌿𑌤𑌂 ।
𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑍇𑌷𑍁 𑌯𑌥𑌾𑌸𑌾𑌰𑌂 𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌯 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌹𑌰𑌿𑌃 ॥
𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌯𑌾 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌸𑌂𑌚𑌿𑌕𑍍𑌷𑍇𑌪 𑌯𑌥𑌾𑌸𑍁𑌖𑌂 ॥"

என்கிறபடி இந்த ஸம்ஹிதைகள், பரமபுருஷார்த்தமென்ன, ததுபாயமென்ன, ததிதிகர்த்தவ்யதையென்ன இவைகளை ஶ்ருதியிலிருந்து ஸங்க்ரஹிக்கின்றனவென்றே நாம் தெரிந்துகொள்ளுகிறோம். ஸூத்ரங்களும், பாஷ்யங்களும் தத்வார்த்தத்தை உணர்த்துவதுபோல இந்த ஸம்ஹிதைகள் பகவானுடைய ஆராதந விதியில் பர்யவஸிக்கின்றன. இப்படி ஒரே ஶ்ருதியிலிருந்து ப்ரவஹித்துநிற்கும் இரண்டு ஸங்க்ரஹங்களுமே நமது ஸ்ரீ வைஷ்ணவ மதத்துக்கு முக்ய அவலம்பங்கள். எப்படியானால் ஸூத்ரோக்த தத்வார்த்த நிரூபணமின்றிக்கு நமக்குப் பரமபுருஷ ஸ்வரூபாதி ஜ்ஞாநம் ஏற்படாதோ, அப்படியே ஸ்ரீ பாஞ்சராத்ரோக்த பகவதாராதநமின்றிக்கு நமக்குப் பரம புருஷார்த்த ப்ராப்தி ஸம்பவிக்காது என்பதுதான் நமது கொள்கை. நாம் விஶிஷ்டாத்வைதி என்று சொல்லிக்கொள்வதற்கும், ஸ்ரீ வைஷ்ணவன் என்று சொல்லிக்கொள்வதற்கும் இவை இரண்டுமே காரணங்கள். இப்படி இவை இரண்டையுமே, போதாயந ப்ரப்ருதிகளான த்ரமிட குஹதேவ டங்க பாருசி முதலியவர்கள் எல்லாரும் அநாதி காலமாகத் தமது மதத்திற்கு முக்ய ப்ரமாணமாய் ஒத்துக்கொண்டிருந்ததாகத் தெரியவருகிறது.

இந்தப் பாஞ்சராத்ரத்தை வேத மூலமான ஒரு க்ரந்தமாக ஒத்துக்கொள்ளாமல், வேதத்திற்கும் இது ஜ்யாயஸ் என்று சொல்

வார் சிலர்; மற்றும் சிலர், வேதத்திற்கு ‘ஏகாயந ஶாகை’ என்று ஒரு ஶாகை பூர்வம் இருந்ததென்றும், அது தான் இப்பொழுது பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளாகக் காணப்படுகின்றது என்றும் சொல்வர். இப்படிச் சொல்வதெல்லாம் ப்ரமாணத்துக்குப் பொருந்தாது என்பதை நாம்,

“𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑍇𑌷𑍁 𑌯𑌥𑌾𑌸𑌾𑌰𑌂 𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌯 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌹𑌰𑌿𑌃 ।
𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌯𑌾 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌸𑌂𑌚𑌿𑌕𑍍𑌷𑍇𑌪 𑌯𑌥𑌾𑌸𑍁𑌖𑌮𑍍 ।”

இத்யாதியான ஸ்ரீ பாஞ்சராத்ர வாக்யங்களினாலேயே அறிகிறோம். தவிரவும், நமது ஆசார்யர்களான ஸ்ரீ ஆளவந்தார், ஸ்ரீ பாஷ்யகாரர் முதலிய எல்லாரும் இந்தப் பாஞ்சராத்ரத்தை வேத மூலமென்று ஒத்துக்கொண்டிருப்பதாகவே அவர்களுடைய ஸூக்திகளிலிருந்து ஏற்படுகிறது. ஆகையால், இதை வேதத்தை விட ஜ்யாயஸ் என்றாவது, வேதத்தில் ஒரு பாகமென்றாவது சொல்வது ஒவ்வாது. தவிரவும்,

“𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌤𑌾 𑌛𑌨𑍍𑌦𑌸𑌾𑌂 𑌵𑌕𑍍𑌤𑌾 𑌪𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌯𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍”

என்னும் இடத்திலும் ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன், “வேதங்களை ப்ரவசநம் பண்ணினவனும் பாஞ்சராத்ரத்தைத் தானே அருளிச்செய்தவனுமானி” என்று பூர்வம் வேத ப்ரவசநத்தைச் சொல்லி, பிறகு பஞ்சராத்ர வசநத்தைப்பற்றி ப்ரஸ்தாவித்திருக்கிறபடியால், முதலில் ஶ்ருதி ஏற்பட்டதென்றும், பிறகு அதனை ஆதாரமாகக்கொண்டு பஞ்சராத்ரம் சொல்லப்பட்டதென்றும் நாம் அறிகிறோம்.

ஆனால் இப்படிப்பட்ட பஞ்சராத்ரத்தைப்பற்றிச் சிலர், அது ஆலயாதிகளைப்பற்றியும், அவ்விடத்திற் செய்யப்படும் விக்ரஹாராதநத்தைப்பற்றியும் மட்டில் பேசும் க்ரந்தமென்றும், தம்மால் நித்யம் அநுஷ்டிக்கப்படும் கர்மங்களுக்கும் பரமபுருஷார்த்த ப்ராப்திக்கு உபயுக்தமான ஜ்ஞாந ஸம்பாதநத்துக்கும் இது அநுபயுக்தமென்றும் இத்யாதியான தவறுதலான எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள். மற்றும் சிலர், இந்தப் பாஞ்சராத்ரமென்பது அர்வாசீநமானது; சில பக்ஷபாதிகளாற் செய்யப்பட்டும் புராதந க்ரந்தம்போல ப்ரகடநம் செய்யப்பட்டிருக்கின்றது என்று

அபிப்ராயப் படுகிறார்கள். இதுவும் தவறுதலான எண்ணமென்பதை இதைப்பற்றி நாம் கொஞ்சம் விமர்ஶித்தால் தெரிந்துகொள்ளலாம். முதலில் வேதார்த்தத்தின் தத்வத்தை ப்ரத்யக்ஷமாக அறிந்திருக்கும் பாராஶர்ய ப்ரப்ருதிகள் மஹாபாரதம் முதலிய க்ரந்தங்களில் இந்த பகவத்ஶாஸ்த்ரத்தின் ப்ராமாண்யத்தைப் பஹுப்ரகாரமாக நிர்வஹித்திருக்கிறார்கள் என்பது ஸுப்ரஸித்தம்.

“𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍈𑌃 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑍈𑌰𑍍𑌵𑍈𑌶𑍍𑌯𑍈𑌃 𑌶𑍂𑌦𑍍𑌰𑍈𑌶𑍍𑌚 𑌕𑍃𑌤𑌲𑌕𑍍𑌷𑌣𑍈𑌃 । 𑌅𑌰𑍍𑌚𑌨𑍀𑌯𑌶𑍍𑌚 𑌸𑍇𑌵𑍍𑌯𑌶𑍍𑌚 𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑍈𑌃 𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌃 । 𑌸𑌾𑌤𑍍𑌵𑌤𑌂 𑌵𑌿𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌾𑌯 𑌗𑍀𑌤𑌃 𑌸𑌙𑍍𑌕𑌰𑍍𑌷𑌣𑍇𑌨 𑌯𑌃 ” ॥

என்று ப்ரஹ்ம க்ஷத்ரிய வைஶ்ய ஶூத்ரர்களாகிற நாலுவர்ணத்தாராலும் பஞ்சராத்ரோக்த மார்க்கத்தினால் பகவதர்ச்சநாதிகம் செய்யப்பட வேண்டியதென்று ஸ்ரீபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடியால், இந்தப் பாஞ்சராத்ர மதம் மஹாபாரத காலத்திற்கும் முற்பட்டதென்பது வ்யக்தம்.

“𑌇𑌦𑌂 𑌶𑌤𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌿 𑌭𑌾𑌰𑌤𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌾𑌤𑍍 ।
𑌆𑌵𑌿𑌧𑍍𑌯 𑌮𑌤𑌿𑌮𑌨𑍍𑌥𑌾𑌨𑌂 𑌦𑌧𑍍𑌨𑍋 𑌘𑍃𑌤𑌮𑌿𑌵𑍋𑌦𑍍𑌧𑍃𑌤𑌮𑍍 ॥
𑌨𑌵𑌨𑍀𑌤𑌂 𑌯𑌥𑌾 𑌦𑌧𑍍𑌨𑌃 𑌦𑍍𑌵𑌿𑌪𑌦𑌾𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌯𑌥𑌾 ।
𑌆𑌰𑌣𑍍𑌯𑌕𑌂 𑌚 𑌵𑍇𑌦𑍇𑌭𑍍𑌯𑌃 𑌓𑌷𑌧𑍀𑌭𑍍𑌯𑍋 𑌯𑌥𑌾𑌮𑍃𑌤𑌮𑍍 ॥
𑌇𑌦𑌂 𑌮𑌹𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌯𑍋𑌗𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌤𑍇𑌨 𑌪𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑌾𑌨𑍁𑌶𑌬𑍍𑌦𑌿𑌤𑌮𑍍 ।
𑌇𑌦𑌂 𑌶𑍍𑌰𑍇𑌯 𑌇𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌇𑌦𑌂 𑌹𑌿𑌤𑌮𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌋𑌗𑍍𑌯𑌜𑍁𑌸𑍍𑌸𑌾𑌮𑌭𑌿𑌰𑍍𑌜𑍁𑌷𑍍𑌟𑌮𑌥𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌿𑌰𑌸𑍈𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌵𑍈 𑌏𑌤𑌦𑍇𑌵𑌾𑌨𑍁𑌶𑌾𑌸𑌨𑌮𑍍 ।”

என்றும்,

“𑌅𑌵𑌶𑍍𑌯𑌂 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍋 𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍇𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌯𑌤𑍍𑌨𑌤𑌃 ।
𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌯 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑍇𑌨𑍍𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾 𑌹𑌰𑌿𑌃 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌦𑍀𑌕𑍍𑌷𑌯𑍇𑌦𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌂 𑌰𑌾𑌜𑌨𑍍𑌯𑌮𑍇𑌵 𑌚 ।

ஶாஸ்த: ஸ்வபதேவஸ்யாம் வேதேந ஶாஸ்த்ரேண ச |
ஶ்ரீ பஞ்சவர்ஷாகாரேண தத் ஸம்வத்ஸர்த்வ வியாநத: ||'

என்றும் பஹு ப்ரகாரமாக ஸ்ரீ பாரதத்தில் ஸ்ரீ பாஞ்சராத்ரத்தைப்பற்றி ஶ்லாகித்திருப்பதை நாம் பார்க்கிறோம். மற்றும் ஓரிடத்தில், ஸ்ரீ வ்யாஸரே,

“வ்யூஹ்யாத்மாநம் சதுர்தா வை வாஸுதேவாதிமூர்திபி: |
ஸ்ருஷ்ட்யாதீந் ப்ரகரோத்யேஷ விஶ்ருதாத்மா ஜநார்தந: ||”

என்று, பகவான், வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த ரூபமாக நாலு விதமாய்த் தன்னை வ்யூஹித்துக்கொண்டு, ஜகத்தின் ஸ்ருஷ்டி முதலிய கார்யங்களைச் செய்துவருகிறான் என்று சொல்லியிருக்கிறார். இந்த மாதிரியான சதுர்வித வ்யூஹம் பஞ்சராத்ரத்திற்கு அஸாதாரணமான கொள்கை யானதால், அக்காலத்தில் பாஞ்சராத்ரம் பஹுதா ப்ரமாணீக்ருதம் என்று நாம் அநுமானிக்கக்கூடும். தவிரவும், ஸ்ரீ மஹாபாரதத்தின் காலத்திற்குப் பஹு காலம் முற்பட்டே ஸர்வ ஸம்மதமாக வழங்கிவந்து, பிறகு மஹாபாரதத்தில் ப்ரகடநம் செய்யப்பட்டிருக்கும் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம் என்னும் ஸ்ரீ விஷ்ணு ஸ்தோத்ரத்தில் இந்த வ்யூஹ விபாகத்தைப்பற்றி இரண்டு இடங்களில் பேசப்பட்டிருக்கின்றது.

“சதுராத்மா சதுர்வ்யூஹஶ்சதுர்தம்ஷ்ட்ரஶ்சதுர்புஜ: |”
“சதுர்மூர்திஶ்சதுர்பாஹுஶ்சதுர்வ்யூஹஶ்சதுர்கதி:”

என்னும் வாக்யங்கள் இருக்கின்றன. இதற்கு வ்யாக்யாநமும் பின்வருமாறு செய்யப்பட்டிருக்கின்றது. ஓரிடத்தில் ‘சதுர்வ்யூஹ:’ என்னும் பதம் பாஞ்சராத்ரத்திற் சொல்லப்பட்டுள்ள வாஸுதேவாதி பேதங்களைக் குறிக்கின்றது என்றும், மற்றோரிடத்தில், பஹ்வ்ருசோபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்குமான ஶரீர புருஷன், சந்த: புருஷன், வேத புருஷன், மஹா புருஷன் என்னும் விபாகத்தைக் குறிக்கின்றதென்றும் வ்யாக்யாதாக்கள் சொல்லி யிருக்கிறார்கள். இரண்டு இடங்களிலும் அந்த ஶப்தம் இரண்டாவது அர்த்தத்தையே குறிக்கின்றதென்றும், வ்யூஹ விபாகத்தைக் குறிக்கவில்லையென்றும் சொல்வது ஸரியன்று. அப்படிச் சொன்னால், அர்த்தபேதமின்றிக்கு ஒரே பதத்தைப் பல விடங்களில் ப்ரயோகித்து, ஆயிரம் ஸங்க்யை கணக்குச் செய்யவேண்டுமென்பது ஸ்ரீ ஸஹஸ்ர நாமம் செய்தவரின் அபிஸந்தி என்று சொல்லும்படி ப்ரஸங்கிக்கும். அது அஸங்கத மன்றோ?

ஶாரீரக ஸூத்ரத்தில், கபில, கணபக்ஷ, பிக்ஷு, க்ஷபணக, பசுபதி முதலியவர்களின் ஸமயங்களை ப்ரதிக்ஷேபம் செய்தபிறகு, பாஞ்சராத்ராதிகரணம் வருமிடத்தில், ‘உத்பத்த்யஸம்பவாத்,’ ‘ந ச கர்து: கரணம்’ என்னும் இரண்டு ஸூத்ரங்களால் பாஞ்சராத்ர ஸம்பத்தமான பூர்வ பக்ஷத்தை உபக்ஷேபம் செய்துகொண்டு, “விஜ்ஞாநாதிபாவே வா ததப்ரதிஷேத:,” “விப்ரதிஷேதாச்ச” என்னும் இரண்டு ஸூத்ரங்களால், ஸ்ரீ வ்யாஸர் பாஞ்சராத்ர ப்ராமாண்யத்தை ஸமர்த்தித்திருக்கிறதாக, ஸ்ரீ யாமுந முநியும் ஸ்ரீ பாஷ்யகாரரும் ஸித்தாந்தம் செய்திருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். இதனாலும் வ்யாஸருடைய காலத்திற்கு முந்தியே பஞ்சராத்ரம் ப்ரசாரம் பெற்றிருந்தது என்று தெரிகிறது. சிலருக்கு இவ்விடத்தில் ஸ்ரீ பாஞ்சராத்ர ஸமர்த்தநம் ஸ்ரீ வ்யாஸருடைய அபிப்ராயமா? இல்லாவிட்டால் அதன் ப்ரதிக்ஷேபமே அவருடைய கருத்தா? என்று ஒரு ஸந்தேஹம் ஜநிக்கக்கூடும். கபிலாதி தந்த்ராந்த்ரங்களுடன் ஸஹபாடம் ஸம்பவித்திருப்பதே இம்மாதிரியான ஸந்தேஹத்திற்கு முக்யமான காரணம். முதலில், ஸ்ரீ வ்யாஸர் தம்மால் செய்யப்பட்ட ஸ்ரீ மஹாபாரதத்தில் ஸ்ரீபாஞ்சராத்ரத்தைப்பற்றி ஏற்றமாகப் பேசியிருக்கிறபடியால், அதன் நிராகரணத்தை இவ்விடத்தில் அபிப்ராயப்பட்டிருக்க மாட்டார் என்று ஊஹிக்கலாம். தவிரவும், ஸ்ரீ யாமுநாசார்யரும் ஸ்ரீ பாஷ்யகாரரும் இது விஷயமாகச் செய்திருக்கும் சர்ச்சையைப் பார்க்

கும் நமக்குப் பாஞ்சராத்ர ஸமர்த்தநமே ஸ்ரீ வ்யாஸருடைய அபிப்ராய மென்று ஒரு நிர்ணயம் ஏற்படுகின்றது. மேலும், ஸ்ரீ வ்யாஸருடைய கருத்திற்கு விருத்தமாக ஸ்ரீ போதாயநர் வ்ருத்தி விவரணம் செய்திருப்பர் என்பது அவிச்'வஸநீயமாகிற படியாலும், ஸ்ரீ போதாயநரால் செய்யப்பட்டுள்ள வ்ருத்தியை அநுஸரித்தே தாம் ஸ்ரீ பாஷ்யம் செய்வதாக ஸ்ரீ பாஷ்யகாரர் ப்ரதிஜ்ஞை செய்திருக்கிறபடியாலும், ஸ்ரீ வ்யாஸருடைய அபிப்ராயம் ஸ்ரீ பாஷ்யகாரர் விவரித்திருக்கிறபடி இருக்கவேண்டுமே தவிர, அந்யதாவாக இருக்க ஹேதுவில்லை யென்றும் நாம் ஊஹிக்கலாம். இந்தப் பாஞ்சராத்ராதிகரணத்தில் மட்டில் ஸ்ரீ போதாயந வ்ருத்திக்கு விருத்தமாகப் பாஷ்யம் செய்துவிட்டுத் தமது ப்ரதிஜ்ஞா பங்கத்தை ஸ்ரீ பாஷ்யகாரர் ஸம்பாதித்துக்கொள்வர் என்று நினைப்பது அவருடைய ஆர்ஜவத்தில் அதி விச்'வாஸங்கொண்டிருக்கும் நமக்கு உசிதமாகாதன்றோ? அப்படி ஸ்ரீ பாஞ்சராத்ரத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் ஒரு வித துராக்ரஹம் கொள்வதற்கு யாதொரு ஹேதுவையும் காணோம். இதைப்பற்றி விஸ்தாரமாகப் பிந்தி விசாரிப்போம். இது எப்படி இருந்தபோதிலும் உத்பத்த்ய ஸம்பவாதிகரணத்தில் ஸ்ரீ வ்யாஸர் பாஞ்சராத்ரத்தைப்பற்றியே பேசுகிறார் என்பது ஸர்வ ஸம்ப்ரதிபந்நமாகையால், அந்த மதம் அவர் காலத்திலேயே ப்ரசாரம் பெற்றிருந்தது என்பது வ்யக்தமாகின்றது.

(இன்னும் வரும்.)

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

இவ்வருஷத்திய ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கம்.

இவ்வருஷத்திய ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்க ஸம்பந்தமாக, ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் கார்ய நிர்வாஹகர்கள் இரண்டு மூன்று மாஸ காலமாய்ப் பலவிதமான ஆலோசனைகளைச் செய்து, அவைகளில் ஒன்றும் த்ருப்திகரமாக இல்லை யென்பதைப் பார்த்து, இவ்வருஷத்திய ஸங்கத்தைச் சென்னையிலேயே நடத்துவதாக நிர்ணயம் செய்திருக்கின்றார்கள். ப்ராயேண, நமக்கு ஸர்வ ப்ரகாரத்திலும் ஸர்வ வித ப்ரதிபத்திக்கும் அர்ஹரும், முதல் மூன்று ஆழ்வார்களுக்குள் அந்யதமருமான ஸ்ரீ பேயாழ்வார் திருவவதார ஸ்தலமாயும், ஸ்ரீ ஆதிகேஶவப் பெருமாள் அர்ச்சா ரூபியாக எழுந்தருளி அலங்கரிக்கும் திவ்ய தேஶமாயும், ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகனுடைய விஶேஷித்த அநுக்ரஹத்திற்குப் பெரியதொரு பாத்ரமாயும் ஶோபித்து நிற்கும் திருமயிலாப்பூரில், ஸ்ரீ கேசவனுடைய திருவடி வாரத்தில் ஸ்ரீ தேஶிகனது மண்டபத்தில், வருகிற மார்கழி மாஸம் 13உ ஶ்ரவண நக்ஷத்ரம் கூடிய புத வாஸரத்தில் 20 - நாழிகைக்கு மேல் அந்த ஸங்கம் உபக்ரமிக்கப்பட்டு, அன்றை தினத்திலும் அடுத்துவரும் வியாழன் வெள்ளி இந்த இரண்டு தினங்களிலும் ஸ்ரீ கேஶவனுடைய அநுக்ரஹத்தினால் நடைபெறலாம். அக்காலத்தில் யதா பூர்வம் அநேக வைதிக பண்டிதர்களும் லௌகிக ஜ்ஞாநவான்களும் தர்மஶாஸ்த்ரம் வேதாந்தம் முதலிய ஶாஸ்த்ரங்கள் ஸம்பந்தமான பல விஷயங்களைப்பற்றி உபந்யாஸங்களைச் செய்வார். நமது ஶாஸ்த்ரங்களிலும் நமது ஸித்தாந்தத்திலும் விஶ்வாஸமுள்ள அநேக ப்ரபுக்களும் அவர்களுடைய ஸாந்நித்யத்தினால் ஸதஸ்ஸை அலங்கரிக்கலாம். இந்த மூன்று தினங்களிலும் பூர்வ ராத்ரியில், பகவானுடைய திவ்ய சேஷ்டிதங்கள், அவனது கல்யாண குணங்கள் இவைகளைப்பற்றிய திவ்ய கதைகளும் நடைபெறும். இவை யெல்லாவற்றுடன், வியாழன் வெள்ளி இந்த இரண்டு தினங்களிலும் காலையில் வேத வேதாந்த ஸம்பந்தமான வித்வத் ஸதஸ் ஒன்று நடக்கவேண்டுமென்றும், அதில் பெரிய வித்வான்கள் சேர்ந்து வாக்யார்த்தம் சொல்லி நமது பூர்வ பரிபாடியை லுப்தமாக வொட்டாமல் தடுத்து அதை நிலைநிறுத்த வேண்டுமென்றும் சிலர் அபிப்ராயப்பட்டு, அதைத் த்ருப்திகரமாக நடத்துவதற்கு

வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். அது நடைபெற்றால், இந்த வருஷத்திய ஸங்கத்திற்கு அது ஒரு புதிய அலங்காரமாக இருக்கும். விதேஶத்திலிருந்து இதம்பரமாக வரும் ஆஸ்திகர்களுக்கு இந்த ஸங்க காலத்தில் எவ்வித கஷ்டமும் நேராமல் யதாஶக்தி ஆதித்யாதிகளைச் செய்ய ஸ்ரீ மயிலாப்பூர் வாஸிகளான பாகவத ப்ரவணர்கள் எல்லாரும் அதிமாத்ரம் உத்ஸுகர்களாக இருப்பதாகவும் தெரியவருகிறது. பகவத் கைங்கர்ய புத்தியுடன் செய்யப்படும் இந்த ப்ரயத்நத்தைப் பகவானே நிர்விக்நமாகத் தலைக்கட்டிக்கொள்ள வேணுமென்று நாம் ஹார்த்தமாக ப்ரார்த்திக்கிறோம். பஹுஜநஸாத்யமான இந்த வ்யாபாரத்தை, ஸகல ஆஸ்திகர்களும் தங்கள் தங்கள் கார்யம் போலத் திருவுள்ளம் பற்றி, யதாஶக்தி எந்த ப்ரகாரத்தினாலாவது இந்த விஷயத்தில் உபகரிப்பதுடன், ஸங்க காலத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்து அதைப் பூர்த்திசெய்து வைக்க வேண்டுமென்பதும் நமது ப்ரார்த்தனை.

இதைப்பற்றிய மற்றை விஷயங்கள் அடுத்த ஸஞ்சிகையில் விஸ்தாரமாக ப்ரசுரம் செய்யப்படும். இந்த ஸங்கத்திற்கு த்ரவ்ய ஸஹாயம் செய்ய வேணுமென்று திருவுள்ளம் உள்ளவர்கள் அந்த த்ரவ்யத்தைக் கீழ்க்கண்டிருக்கும் அடியேனுடைய விலாஸத்திற்கு அனுப்பினால், அப்படி வரும் த்ரவ்யத்திற்கெல்லாம் ப்ருதக்காகக் கணக்கு வைத்துக்கொண்டு, அந்தக் கணக்கை, ஸங்கம் முடிந்த பிறகு வெளிவரும் 'ஸ்ரீ வேதாந்த தீபிகை' ஸஞ்சிகையில் ப்ரசுரம் செய்வோம். இந்த ஸங்கத்தின் நிர்வாஹகர்களால் உத்தேஶிக்கப்படுமளவு த்ரவ்யஸஹாயம் நேர்ந்தால், ஸங்கத்தை மிகச் சிறப்புடன் நடத்தலாமென்பது அவர்களுடைய நம்பிக்கை.

மயிலாப்பூர்,
21-11-16.

எஸ். வாஸுதேவன்.
ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்
கார்யதர்ஶி.

ஸ்ரீ:

கடிதங்கள்.

வ்யாகரண விஷய ப்ரஶ்நத்திற்கு ஸமாதாநம்

(1)

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

சென்ற ஸஞ்சிகையில் 'உத: ஸ்தாஸ்தம்போ:' என்னும் ஸூத்ர விஷயமாக ஒரு ஸம்ஶயம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதற்குப் பின்வருமாறு ஸமாதாநமுண்டு:—

'உத: ஸ்தாஸ்தம்போ:' என்பதற்கு முந்தின ஸூத்ரம் 'தோர்லி' என்பது. அந்தப் பூர்வ ஸூத்ரத்திலிருந்து 'தோ:' என்று அநுவ்ருத்தி செய்துகொண்டு, 'உத: தோ: பரயோ: ஸ்தாஸ்தம்போ:' என்று அந்வயித்து 'உத் ஶப்த ஸம்பந்தியான தவர்க்கத்தைக் காட்டிலும், அதாவது தகாரத்தைக் காட்டிலும் பரங்களாக இருக்கும் ஸ்தா ஸ்தம்பு தாதுக்களுக்கு' என்று அர்த்தம் சொல்ல வேணும். அப்படி அர்த்தம் சொல்வது ந்யாயத்திற்கு ஒத்தது; ப்ராக்ருத ஶங்கையையும் நிவ்ருத்தி செய்கிறது.

ஸ்ரீ வாஸுதேவாசார்யர் ஏற்கனவே இதற்குச் சொல்லியிருக்கும் ஸமாதாந ரீதியாக, ஒரு ந்யாயத்திற்கும் எவ்வித ஸங்கோசமும் செய்துகொள்வதற்கு அவஶ்யமில்லை. 'அவ்யக்தாநுகரணஸ்யாத இதௌ' என்னும் ஸூத்ரத்திற்கு அர்த்தம் சொல்லுகையில் 'இகோ யணசி' என்னும் ஸூத்ரத்திலிருந்து 'அசி' என்று அநுவ்ருத்தி செய்துகொண்டு 'இதௌ' ஶப்த வர்த்தியான 'அசிபரே' என்று வ்யாக்யாநம் செய்தால் ஸர்வமும் ஸமஞ்ஜஸமாகிவிடும்.

பரசுபாக்கம்,
17-11-16.

ஆர். வி. க்ருஷ்ணமாசார்யர்.

(2)

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

சென்ற ஐப்பிசி மாஸ தீபிகையில் ஸ்ரீ. கி. கிருஷ்ணமாசார்யர் ஸ்வாமி ஒரு ப்ரஶ்நம் செய்திருக்கிறார். அதற்கு மகாவித்வான்கள் அநேக ஸமாதாநங்களை எழுதலாம். அடியேனும் ஒரு ஸமாதாநத்தை எழுதத் துணிகிறேன். மஹாஶயர்கள் தோஷலேஶங்களை விலக்கி குணலேசங்களை க்ரஹித்துக்கொண்டு பாலிஶனான அடியேனை அநுக்ரஹிப்பார்கள் என்று நம்புகிறேன்.

I. ஸவர்ண ஸம்ஜ்ஞை என்பது வர்ணத்துக்கே தவிர ஸமுதாயத்திற்கு இல்லை. பூர்வ ஸவர்ண மென்றால் ஸவர்ணபத ஸமாகமத்தினால் பூர்வ வர்ண ஸவர்ணம் வருகிறதென்றே தாத்பர்யம். ப்ரக்ருதத்தில், 'உத:' 'உச' என்பவற்றைக் காட்டிலும் பரமான தாதுகளுக்குப் பூர்வ ஸவர்ணம் வருகிறதென்று சொன்னால் ஸவர்ண பதசேர்க்கையினால் பூர்வ வர்ணத்தையே வாங்கிக்கொண்டு தாதுவின் ஆதியான ஸகாரத்திற்குத் தகார ஆதேசம் சொல்லவேண்டும். ஸமுதாயத்தை வாங்கக்கூடாது. இதுவே ஸரியான ஸமாதாநமாகும்.

II. அல்லது '𑌉𑌦𑌃 𑌸𑍍𑌥𑌾𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑍋𑌃' என்னும் ஸூத்ரத்தின் முந்தின ஸூத்ரமான '𑌤𑍋𑌰𑍍𑌲𑌿' என்னும் ஸூத்ரத்தில் இருந்து '𑌤𑍋𑌃' என்கிற பதத்தை மட்டும் அநுவ்ருத்தி செய்துவந்து, '𑌉𑌦𑌃' என்பதை ஷஷ்ட்யந்தமாகவும் '𑌤𑍋𑌃' என்பதைப் பஞ்சம்யந்தமாகவும் செய்துகொண்டு '𑌉𑌦𑌃 𑌉𑌤𑍍𑌤𑌰𑌯𑍋𑌃 (𑌆𑌦𑍇𑌃 𑌪𑌰𑌸𑍍𑌯 𑌸𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇) 𑌤𑌸𑍍𑌥𑌾𑌨𑌯𑍋𑌃 𑌸𑍍𑌥𑌾𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑍋𑌃 𑌤𑌯𑍋𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑌵𑌰𑍍𑌣𑌾𑌦𑍇𑌶𑍋 𑌭𑌵𑌤𑌿' உபயமான யாதொரு தவர்க்கமுண்டோ என்றால், ப்ருக்ருதத்தில் 𑌉𑌦𑍍 என்பதில் இருக்கும் தகாரமே, அதைக்காட்டிலும் பரமான 𑌸𑍍𑌥𑌾𑌸𑍍𑌤𑌮𑍍𑌭 தாதுக்களுக்குப் பூர்வ ஸவர்ணாதேசம் வருகிறது. '𑌆𑌦𑍇𑌃 𑌪𑌰𑌸𑍍𑌯' என்னும் ஸூத்ரப்படிக்கு தாதுவின் ஆதியான ஸகாரத்திற்கு என்று ஏற்படுகிறது. ஆதலால் 𑌉𑌦𑍍 ஸமுதாய ஸவர்ணம் தேடவேண்டிய அவஶ்யமில்லை. இந்த இரண்டு ஸமாதாநங்களும் ப்ராமாணிகம். ஆதலால் மஹான்கள் அங்கீகரிப்பார்களென்பதில் ஐயமில்லை.

விசய விவேசநம் செய்தவர், பூர்வபர நிர்வசநம் செய்து '𑌅𑌣𑍁𑌦𑌿𑌤𑍍𑌸𑌵𑌰𑍍𑌣𑌸𑍍𑌯' ஸூத்ரத்தில் எப்படி அச்சப்த ஸமுதாயத்திற்குக் கார்யம் வருகிறதோ, அதுபோல் இந்த ஸூத்ரத்திலும் 'உத்' ஸமுதாயத்திற்கே ஸவர்ணவர்ணாதேசம் வரவேண்டும் என்று '𑌅𑌣𑍁𑌦𑌿𑌤𑍍' ஸூத்ரத்தை த்ருஷ்டாந்தமாகக் கொடுத்திருக்கிறார். விசய ஸூத்ரத்திற்கும் த்ருஷ்டாந்த ஸூத்ரத்திற்கும் ஸம்பந்தமே இல்லை. 𑌉𑌦𑌃𑌸𑍍𑌥𑌾 - ஸூத்ரத்தின் 'உத: பரஸ்ய' என்பதால் பரத்திற்கு மாத்திரம் கார்யம் விதிக்கப்பட்டிருக்கிறது. '𑌏𑌕𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑌰𑌯𑍋𑌃' என்றும் அதிகார ஸூத்திரத்தின் அதிகாரத்திற் குட்பட்டிருப்பதால் ஷி ஸூத்ரத்தில் பூர்வபர உபயத்திற்கும் கார்யம் விதிக்கப்படுகிறது. த்ருஷ்டாந்த தார்ஷ்டாந்திகங்களுக்கு வைஷம்யமிருக்கிறது என்பதை மஹான்கள் நன்று உணரலாமென்றும் விஜ்ஞாபநம் செய்துகொள்ளுகிறேன்.

பட்டுக்கோட்டை }
6-11-16. }

வி. ஆர். திருமலைதாதாசார்யர்.

OFFICE OF THE REGISTRAR ... MADRAS

ஸ்ரீ:.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 7.] நள௵ மார்கழி௴ [ஸஞ்சிகை 3.

𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌕𑌮𑌨𑌂 𑌤𑌮𑌾𑌲𑌵𑌰𑍍𑌣𑌂 𑌰𑌵𑌿𑌕𑌰𑌗𑍌𑌰𑌵𑌰𑌾𑌮𑍍𑌬𑌰𑌂
𑌦𑌧𑌾𑌨𑍇 - 𑌵𑌪𑍁𑌰𑌲𑌕𑌕𑍁𑌲𑌾𑌵𑍃𑌤𑌾𑌨𑌨𑌾𑌬𑍍𑌜𑌂 𑌵𑌿𑌜𑌯𑌸𑌖𑍇
𑌰𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇𑌽𑌨𑌵𑌦𑍍𑌯𑌾 ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

பத்ராதிபரின் குறிப்புகள்.

தநம் மோக்ஷ விரோதியா?

"ஒட்டகம் ஊசியின் காதுக்குள் நுழைந்து வெளிப்பட்டாலும் படலாம்; பணக்காரன் மோக்ஷஸாம்ராஜ்யத்தை அடையமாட்டான்." என்று சொன்னாராம் கிறிஸ்து. இதனால் பணக்காரனுக்கு மோக்ஷப்ராப்தி யில்லையென்று கருத்து. ஆனால், லோகத்தில் பகு தநவந்தர்கள் புண்ய க்ருத்துக்களாயும், பகவத்பக்தராகவும் இருந்தார்கள். இவர்களுக்கு மோக்ஷமில்லையெனக் கூடுமா? த்யாகத்தின் பொருட்டு ரகுகுல மன்னர்கள் அர்த்தார்ஜநம் செய்தார்களென்றும், அவர்கள், வார்த்தகம் வந்த பின்பு முநிஸீலர்களாய் நின்று யோகத்தால் முடிவில் சரீரத்யாகம் செய்தார்களென்றும் காளிதாஸ மஹாகவி சொன்னது பொய்யாகுமோ?

தநமே மோக்ஷப்ராப்தியைத் தடுக்காது. ப்ராயேண ஜநங்கள் தம்முடைய ஆத்மாவிற்கு ச்ரேயஸ்ஸைத் தேடுவதை மறந்து,

சரீராபிமாநிகளாய்ப் போந்து, சரீரங்கட்கு ப்ரியத்தைத் தேடுகின்றனர். இப்படி ப்ரியங்களைத் தேடி யநுபவிக்கப் பொருள் உதவி செய்கின்றமையால், பொருளுடைய கார்யத்தை உத்தேசித்துப் பொருளைத் தூஷித்த தென்னலாம்.

இந்த விஷயத்தை, '𑌅𑌸𑌤𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑌾𑌨𑍍𑌧𑌸𑍍𑌯 𑌦𑌾𑌰𑌿𑌦𑍍𑌰𑍍𑌯𑌂 𑌪𑌰𑌮𑌞𑍍𑌜𑌨𑌂' எனும் ஸ்ரீ க்ருஷ்ண வசநம் தெளிவாய்ச் சொல்லுகின்றது. பணக்காரன் ஸ்ரீமத மெனப்பட்ட செல்வச் செருக்கைப் பாராட்டினானாகில், அவனைக் குருடன் என்று ஸ்வாமி வெளியிட்டார். அவனுக்கு ஜ்ஞாந சக்ஷுஸ் இல்லை; ஆத்மாநாத்ம விவேகமில்லை; ஈஶ்வராஸ்தித்வத்தை அவன் அநுஷ்டாநத்தில் காட்டுவதில்லை. அந்த ஜ்ஞாநக் குருடன் அஸத் எனச் சொல்லப்பட்டது ஏனென்றால்:—'𑌅𑌸𑌨𑍍𑌨𑍇𑌵 𑌸 𑌭𑌵𑌤𑌿 𑌅𑌸𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑌿 𑌵𑍇𑌦 𑌚𑍇𑌤𑍍' [அதாவது, ப்ரஹ்மாஸ்தித்வத்தை எவன் அறியவில்லையோ அவன் அஸத்தே] என்று உபநிஷத் கூறியது. ஆதலால் அவனை ஒரு வஸ்துவாகத் தத்வதர்சிகள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ப்ரஹ்மாஸ்தித்வத்தை அறிந்தவனைப்பற்றி, '𑌅𑌸𑍍𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑌿 𑌚𑍇𑌦𑍍𑌵𑍇𑌦 𑌸𑌨𑍍𑌤𑌮𑍇𑌨𑌂 𑌤𑌤𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃' என்று உபநிஷத் கூறியது. அவன் தான் ஸத். அவனுக்குத் தான் ஆத்மஸத்தை உண்டு. ப்ரஹ்மாஸ்தித்வத்தை அறிந்தவன் யாவன்? ஸங்கேதத்திற்காக ப்ரஹ்மத்தை ஒப்புக்கொள்கின்றவன் அல்லன். பரர் சொல்கின்றாரென்று ஒப்புக்கொள்கின்றவனல்லன். எல்லா மதங்களும் சொல்கின்றமையால், அவற்றில் ஒன்றையும் நம்பாமல், ப்ரஹ்மம் மாத்ரம் உண்டெனச் சொல்கின்றேனென்று, சில நூதந ஸமாஜத்தாரை யொத்துச் சொல்பவனல்லன். Philosophers எனப்பட்ட தத்வ விமர்சிகள் 'ப்ரஹ்மம் இருக்கலாம், இருக்கத்தான் வேண்டும்' என்கின்றார்கள்; ஆதலால் 'நானும் ப்ரஹ்மத்தை ஒப்புக்கொள்கின்றேன்', என்று புதுக் கோட்பாடுகள் செய்பவரும் அல்லர். '𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌵𑍇𑌦𑍍𑌮𑌿 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌂' என்று ஸஞ்ஜயன் சொன்னபடியே, ஶாஸ்த்ரம் காட்டின வழியே ப்ரஹ்மத்தை யறிந்து, ஶாஸ்த்ரம் இட்ட கட்டளையில் ப்ரஹ்மோபாஸ்தி செய்பவன்தான் ப்ரஹ்மாஸ்தித்வத்தை அறிந்தவன். மற்றவர்களுக்கு ப்ரஹ்மாஸ்தித்வ விஷயத்தில் ப்ரமாணமில்லை. ஜ்ஞாநம் என்பதைப்பற்றி நிரூபிக்குமிடத்து, ஸ்ரீ விஷ்ணு புராணம் ஶாஸ்த்ரத்தால் ப்ரஹ்மத்தை அறிந்து, யோகத்தால் தர்சித்துப் பக்தியால் அடைய வேண்டுமெனச்சொல்லி, இம்மூன்று ப்ரவ்ருத்திகளுக்கும் ஸாதநங்களாக நிற்கின்ற ஜ்ஞாநமும் யோக ஸாக்ஷாத்காரமும் பக்தியும் சேர்ந்துதான் ப்ரஹ்மத்தை அறிவதாகும் ஜ்ஞாநமென்று சொல்லிற்று.

இப்படிப்பட்ட ஜ்ஞாநத்தை அடைவதற்குத் தநம் தடையாய் நிற்கின்றது. பணக்கொழுப்பு உள்ளவனுக்குத்தான் அது அவ்வண்ணம் தடையாகும். அவன்தான் ஜ்ஞாந ப்ராப்தி விஷயத்தில் பிறவிக் குருடன். அவனை ஒரு வஸ்துவாகத் தத்வதர்சிகள் அங்கீகரிக்கமாட்டார்கள். அவனுக்குத் தான் தாரித்ரியம் கண் திறக்கும் மையை யொத்ததெனச் சொல்லப்பட்டது. செல்வ முடையவன் பகவத் பக்தனாகில், அவனைப் பகவான் மிகவும் ஶோதிப்பர். அவனை அநுக்ரஹிக்கத் திருவுள்ளம் பற்றும்போது, '𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌤𑍍𑌤𑌂 𑌹𑌰𑌾𑌮𑍍𑌯𑌹𑌂' [அதாவது, எவனை அநுக்ரஹிக்க இச்சிக்கின்றேனோ அவனது செல்வத்தைப் போக்குவேன்] என்கிறபடியே, முதலில் அவன் தநத்தை ஹரிக்கின்றார். இதனால் அநுக்ரஹ பாத்ரமானவனுக்கெல்லாம், தநநாசம் நியதமென்று கொள்ளக்கூடாது. தநம் எவன் பக்திக்கு ப்ரதிபந்தகமாகுமோ, எவனுக்கு அதனால் ஸாதிக்கத்தக்க ப்ரிய வஸ்துக்களிடம் சாபல்யம் நீங்கியிலதோ, அப்படிப்பட்டவன் விஷயத்தில் தான் இந்த ஸங்கல்பம் அந்வயிப்பது. கேஶித்வஜ ஜநகன் மஹாப்ரஹ்மவித்தாக இருந்து ராஜ்யம் ஆண்டார். குலசேகரன் பகவானைத் தவிர மற்றெதிலும் பற்று நீங்கி யரசும் ஆளவில்லையா? அப்படிப்பட்ட அதிகாரிகள் விஷயத்தில் தநம் பகவத் ப்ராப்தி விரோதி யன்று. அந்ய அதிகாரிகள் விஷயத்தில் தநநாசம் பகவானால் ஸங்கல்பிக்கப்பட்டது. “𑌤𑍇𑌷𑌾𑌮𑍇𑌵𑌾𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌾𑌰𑍍𑌥𑌮𑌹𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌜𑌂 𑌤𑌮𑌃 । 𑌨𑌾𑌶𑌯𑌾𑌮𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌭𑌾𑌵𑌸𑍍𑌥𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑍀𑌪𑍇𑌨 𑌭𑌾𑌸𑍍𑌵𑌤𑌾 ।” என்கிறபடியே, பகவானைப்பற்றி ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டும்,

பகவத் கதைகளைத் நிதம் கேட்டுக்கொண்டும், உள்ளும் புறமும் ஆநந்தம் பெருகப் பகவதநுபவம் செய்யும் பகவத்தைகசித்தர்கள் விஷயத்தில் பகவான் மிகவும் க்ருபைகூர்ந்து, அவர்கள் ஹ்ருதயத்தில் நின்று, அவர்களுடைய அஜ்ஞாநமாகின்ற இருளைப் போக்கி, அவர்கள் தன்னை அடைவதற்கு ஸாதநமாகின்ற ஜ்ஞாநத்தையும் அவர்களுக்குத் தந்தருளுகின்றான். இப்படி அஜ்ஞாநத்தைப் போக்குங்கால், அதனுள் சேர்ந்ததாகும் தநேச்சையையும் நாசம் செய்வான். அது ப்ராயேண தநநாசத்தால் தான் முடியும்.

இப்படிப்பட்ட மத்யமாதிகாரிகளைப்பற்றி ரக்ஷகன், 'வாமய வெஷு வியொமெந ஸஹாஸவதிஷ்டேவிதஃ' என்றும் சொன்னான். அவர்களுக்கு ப்ரிய பந்துக்களின் வியோகத்தையும் உண்டு பண்ணுவான். ஏனென்றால், செல்வத்தைப்போலத் தாரபுத்ராதிகளும் ஹ்ருதயக்ரந்தியென்னப்பட்ட மனத்தின் பற்றுக்களுக்குக் காரணமாகின்றார்கள். பற்று அற்றதெனின் வீடு உற்றது என்றார் நம்மாழ்வார். பகவானிடம் ஹ்ருதயம் முழுதும் சென்று லயிக்குமட்டும் பரபக்தியெனப்பட்டது ஸ்திரப்படமாட்டாது. ஆனபடியால் ஶரண்யனுடைய அநுக்ரஹத்துக்கு விஷயமானவன் நிஶ்சலமான பகவத் பக்தியைப் பொருந்துமட்டும் மேலே குறித்த ப்ரகாரமெல்லாம் பகவானால் ஶோதிக்கப்படுவான். அவ்வதிகாரிக்குத் துக்காவஸரங்கள் நீண்டு வளரும். "தெநது:கேந ஸந்தப்த: யஸ்ரோம் நவஸிதந்ஜெஜ। த வ்யஸாதம் கரிஷ்யாமி யஸ்ய ஸௌஶீல்யம்" என்கிறபடியே, துக்க காரணங்கள் பலவாறாகப் பெருகின போதிலும், பகவானிடம் பக்தியை விட்டிலனாகில், இந்த்ராதிகளுக்கும் கிட்டாததோர் க்ருபையை ரக்ஷகன் அவனிடம் செய்கின்றான்.

ஸ்ரீக்ருஷ்ணனுடைய ப்ரஸாத ப்ராப்திக்கு மேல்குறித்த துக்க பரம்பரைகள் நியமேந பூர்வவ்ருத்தங்கள் எனப்படாது. சிலர் விஷயத்தில் நிஶ்சல பக்திக்கு ஜந்மாந்தர ஸுக்ருதங்கள், பூர்வ ஜந்மத்தில் ஸம்பாதிதங்களான வித்யை, யோகம் முதலானவை போதுமான ஸாதநங்களாய் நிற்கக்கூடும். அவர்களுக்குத்

தநம், ஐஶ்வர்யம், தாரபுத்ராதி ஸுகம் இவற்றின் சேர்க்கை மோக்ஷப்ராப்திக்கு விரோதமாக மாட்டாது. 'காமாநாம் ஹ்ருத்யஸம்ரோஹம் பவதஸ்து வ்ருணே வரம்' என்கிறபடியே, ப்ரஹ்லாதன் தனது ஹ்ருதயத்தில் காமங்கள் ஏறிடா வண்ணம் ஸ்ரீ ந்ருஸிம்ஹனை வரம் கேட்டான். அப்படிப்பட்ட உத்தமாதிகாரி விஷயத்தில் ஈஶ்வரன் தநநாசம் செய்கின்றானில்லை; பந்துவியோகங்களையும் உண்டாக்க மாட்டான். இன்னும், "நைகாந்திநோ நிஜாக்ஷிமா ஶ்ரேஷ்டாஹ்ரா ஶாஸதே து வைஷ்ணவீயா:। தயாஹி ஸ்வர்க நரக ஸ்வாஸ்த்யாணா ஸுக து:க்ஷா மாது" என்கிறபடியே, பகவானிடம் ஏகாந்த பக்தியுள்ள ப்ரஹ்லாதனைப் போன்ற அதிகாரிகள் இவ்வுலகிலும் லோகாந்தரத்திலும் அபேக்ஷிக்கக்கூடிய ஸுகபோகங்களைப் பகவானிடம் விரும்பமாட்டார்கள். ஆயினும் தைத்யேஶ்வரர்களுடைய போகங்களை அநுபவிக்கும்படி ஸர்வேஶ்வரன் ப்ரஹ்லாதனுக்கு ஆஜ்ஞாபித்தான். த்ருவன் முதலானோர்களும் அப்படிப்பட்ட அதிகாரிகளே. ஆதலால் முமுக்ஷுக்களில் சில அதிகாரிகள் விஷயத்தில் மாத்ரம் தநக்ஷயம் முதலானவற்றைப் பகவான் ஸங்கல்பிக்கின்றான். செல்வச் செருக்கால் ஜ்ஞாநக் குருடனானவனுக்குத் தாரித்ரியம் ஜ்ஞாநக்கண்ணைத் திறப்பதோர் மையாகும். அதாவது அவனுக்கு ஜ்ஞாநத்தை அடைவதற்கேற்றதொரு ராஜமார்க்கத்தைத் தெளிவாகக் காட்டும். அவ்வழி நடப்பதற்கும் நடவாமல் நிற்பதற்கும் அவன் ஸ்வதந்த்ரன். தநப்ராப்தியை ஸர்வவிதத்தாலும் தேசிகன் நிராகரித்தார். இருந்த பொருளைத் துறந்தார் கூரநாதன். மஹா ப்ரஹ்மவித்துக்கள் பொருளுடைமையால் கெடமாட்டார்கள். ஆனாலும், ஸாதாரண ஜநங்கள் விஷயத்தில், பொருளுடைமை பரமபுருஷார்த்த விரோதியாக நிற்கின்றமையால், லோகஸங்க்ரஹத்தின் பொருட்டாவது பெரியோர் தநச்சேர்க்கையை விரும்பமாட்டார்கள்.

யாஜ்ஞவல்க்யர் துர்யாஶ்ரமியாகப் போவதற்குமுன் தமது ஆஸ்தியைத் தம்முடைய பத்நிமார்களுக்குள் விபாகம் செய்ய

யத்தநித்தார். அவர்க்குள் மைத்ரேயீ, "பகவந்! இந்த லோகத்தின் முழுவித்தமும் என் வஶமாயிற்றாகில், அதனால் எனக்கு அம்ருதத்வம் ஸித்திக்குமா?" என்றனள். அதற்கு யாஜ்ஞவல்க்யர் "ஸித்திக்கமாட்டாது. பணக்காரர்க்கு ஸுகஜீவநம் கிடைப்பதை யொத்து உனக்கும் ஸுகமான வாழ்வுண்டாம்; வித்தத்தால் மோக்ஷத்தை அடைய எதிர்பார்க்க வேண்டாம்" என்று சொன்னார். பிறகு மைத்ரேயீ மோக்ஷஸாதந மாகாத செல்வம் தனக்கு வேண்டா மென்று மோக்ஷோபயோகியான ஜ்ஞாநத்தை ப்ரார்த்தித்தாள். ஆதலால் பொருள் நேராக மோக்ஷவிரோதியாக மாட்டாது. அதனால் ஸாத்யமாகும் ஐஹிக ஸுகங்கள் மோக்ஷப்ரதிபந்திக ளென்பது தத்வம்.

* * * * * *

உயர் வாழ்வு.

ப்ரமதாநாத போஸ் என்பவர் பாஶ்சாத்ய வித்யா ஸாத்யமான நாகரிகம் ஶ்ரேஷ்டமென்று நம்மவர் ப்ரமிப்பதைக் கண்டிக்கின்றாரென்று முன்பே சொன்னோம். பங்காளி பத்ராதிபரான ஸுரேந்த்ரநாத பானர்ஜியும் அவ்வண்ணமே எழுதுகின்றார். உயர்ந்த வாழ்வு (Higher life) என்பதைப் பாஶ்சாத்யர் பதார்த்த ஶாஸ்த்ரப் பயிற்சியினால் வ்ருத்தி பண்ணப்பட்ட ஐஹிக ஸுகங்களிலும், பொருள் சேர்க்கையிலும், ஸ்வதேசாபிமாநத்திலும், தேசாந்தராக்ரமணத்திலும், படைகள் பலத்திலும், ஸ்வாராஜ்ய பூர்த்தியிலும் காண்கின்றனர். இதன் முடிவான ப்ரயோஜநத்தைப் பெல்ஜியம் முதலான நாட்டுச் சீரழிவிலும், அந்நாட்டினர் துக்கங்களிலும், நிராயுத பாணிகளாக இறந்த ஜநங்களுடைய விதியிலும், அழிந்துபோன நகரங்களிலும், பதார்த்த ஶாஸ்த்ரங்கள் ப்ரஜாக்ஷயத்திற்கு உபகாரமாக நின்று பிறந்த ஶஸ்த்ரக் கூட்டங்களிலும் காணலாம். ஆதலால் நம்மவர் இதை யெல்லாம் சிந்தித்து, ஆத்ம வித்யையில் ப்ரதிஷ்டிதர்களாய் ஸர்வத்ர ஶாந்தியை வேண்டிய நம் பூர்வீகருடைய உயர்வாழ்வை யுகந்து வழிபடுதல் யுக்தமென்று பங்காளி பத்ராதிபர் வெளியிடுகின்றார். ப்ரக்ருதி ப்ரக்ருதியினிடம் ப்ரியம் பாராட்டாது. அது அசேதநம். அஹம் ப்ரத்யயத்துக்கு விஷயமாகும் ஜீவனையும், அவனது முக்ய குணமான ஜ்ஞாநத்தையும் ப்ரக்ருதியைக் காட்டிலும் வேறல்ல வென்பவர், பரோபகாரத்தையும் பூததயையையும் கொண்டாடக் காரணம் கண்டிலர். இவை ஆத்ம தர்மங்கள். ஆத்மாவினுடைய ஸ்வரூப ப்ராப்திக்கு அநுகூலமான ப்ரவ்ருத்திகள் தான் ஒவ்வொரு விவேகியாலும் சிந்திக்கத்தக்கவை. ஐஹிக ஸுகங்களைத் தேடுதல் ஸ்வரூப ப்ராப்திக்கு விரோதமாகும். அதற்காகப் பரஹிம்ஸையை ஸாதகமாக் கொள்பவர்கள் ஸ்வாத்ம த்ரோஹம் புரிபவர்களே. ஆத்மாவை ஒப்புக்கொள்ளாமலும், ஒப்புக்கொண்டு அதனுடைய ஶாஶ்வதமான ஶ்ரேயஸ்ஸைப்பற்றித் தர்க்கிக்காமலும், ஐஹிக ஸுகங்களே புருஷார்த்த மென்று நினைத்துக் கார்யவான்களாகப்பட்டவர்கள் ஶ்ரேஷ்டராக மதிக்கப்படும் காலம் இது.

இதற்கு நிதர்சநமாகச் சென்ற அக்டோபர் மாஸம் 'மாடர்ன் ரிவ்யூ' பத்ரிகையில் விநயகுமார் ஸர்க்கார் என்பவர் எழுதிய விஷயத்தைச் சுட்டிக் காட்டலாம். அவ்விஷயம் இந்தியா, சைனா, ஜபான் முதலான தேசத்தார்கள், சென்ற 2,200 வருஷம் முதற்கொண்டு, 1,200 வருஷம் வரையிலும் ராஜ்ய தந்த்ரத்திலும், வர்த்தகத்திலும், கல்வியிலும், லோகத்தில் முதன்மையை வஹித்தவர்கள் என்றும், ஒவ்வொரு தேசத்தாரும் மற்ற தேசத்தாருடன் ஸ்நேஹமும் பழக்கமும் பாராட்டினார்கள் என்றும் நிரூபிக்க எழுதப்பட்டது. இந்த யோசனையை நாம் நிராகரிக்கவில்லை. ஆனால் விநயகுமார ஸர்க்கார் ஸர்வ மதவிஷயத்திலும் உதாஸீநதையையும் அலக்ஷ்யதையையும் பாராட்டுவானேன்? அவருடைய நிந்தைக்கு உபநிஷத் மதமும் யோக ப்ரக்ரியைகளும் விலக்காகவில்லை. இதுகால ஸ்வரூபம்.

* * * * * *

வேரற்ற ஸம்ப்ரதாயம்.

அதே பத்ரிகையில் எஸ். ஸி. ராய் என்றொருவர், 'மதமும் தத்கால நாகரிகமும்' என்றொரு விஷயம் வெளிப்படுத்தினார். அவர் ப்ரஹ்ம ஸமாஜத்தினர். அந்த ஸமாஜத்தார்கள் தான் பூமியில் வரப்போகின்ற மதத்தைக் கண்டுபிடித்தனராம்,

அந்த மதம் ராம் மோஹன்ராய் என்பவர்க்குப் புலப்பட்டதாம்; தேவேந்த்ரநாத டாகூர், கேஶப் சந்தர் ஸன் முதலானோரால் அநுஸரிக்கப்பட்டதாம். அந்த மதத்தின் தத்வங்களாவன: (1) விஶ்வம் எனப்பட்ட ப்ரபஞ்சத்தின் பின்னால் ஸர்வஜ்ஞனாய், தர்மப்ரவ்ருத்தியுள்ளவனாய், ந்யாயத்தில் நிலைத்தவனாய், ஶுத்தனாய், லோகஹிதனாய், சேதநனாய், நம்முடைய பிதாவாய் ஒரு ஸர்வஶக்தி விஶிஷ்டன் இருக்கின்றான். அவன் இருப்பை ருஜுப்படுத்த ஸாத்யமில்லை. எல்லா மதங்களும் அவனை ஒப்புக்கொள்கின்றன. தத்வ விசார ஸமர்த்தர்கள் (Philosophers) செய்யும் யோசனைகள் அவன் இருப்புக்கு அநுகூலமாகின்றன. (2) ப்ரக்ருதிக்கு மேற்பட்டு ஒரு அப்ராக்ருத லோகமுண்டு. அது கால தேசங்கட்கு உட்பட்டதன்று; அநிந்த்ரிய கோசரம்; அதனின்று உண்மை, அழகு, நன்மை முதலான ப்ரத்யயங்கள் உதிக்கின்றன; தத்வ த்ரஷ்டாக்களும் தீர்க்க தர்ஶிகளும், ஹ்ருதய ஶுத்தமுள்ளவர்களும் அவற்றை ஸாக்ஷாத்கரித்து, இந்த்ரிய ஜந்ய ஜ்ஞாநத்தாலறிந்த லோகங்களில் அநுபவிக்கின்றார்கள். (3) மநுஷ்யன் ஆத்மா; அவன் அப்ராக்ருத லோகத்துடனும், அதன் மத்தியில் இருக்கும் பரமாத்மாவுடனும் கலக்கலாம்; ப்ரார்த்தனையும் த்யாநமும் அதற்கு ஸாதநங்கள். ஒரு சேதநன் தானே பரமாத்மா வென்று நம்பினானாகில் அப்ராக்ருத லோக ப்ரதீதிகள் அவனுக்கு உண்டாகின்றன; அப்போது லோகத்தை அதிக்ரமித்த ஶக்தி விஶேஷங்கள் அவனுக்கு உண்டாகின்றன. அவனை அவதார புருஷன் எனக் கூடும்.

இந்த நிஶ்சயங்களுக்கு ப்ரமாணங்கள், ஸர் ஆலிவர்லாட்ஜ், யூகன், பெர்க்ஸன் முதலான விமர்சிகளுடைய அபிப்ராயங்கள். மேன்மேலும் வ்ருத்தியடைகின்ற நூதந மதங்களெல்லாம், பதார்த்த ஶாஸ்த்ர நிரூபணங்களை அவலம்பித்துப் பழய விஶ்வாஸங்கட்குப் புதிய ரூபங்களை மேல்விவரித்தபடி கல்பிக்கின்றன. ஆதலால், ஶாஸ்த்ரம், அவதாரம், ஸாக்ஷாத்காரம், அதிமாநுஷ சேஷ்டிதம், அம்ருதத்வம் முதலான நம்பிக்கைகள் மேல்சொன்ன நூதந

கோட்பாட்டுக்காரர்களால் நவீநமான யோசனைகளுக்கு உட்படுத்தப்பட்டன.

ஆனாலும், மேலே தத்வங்களென விவரிக்கப்பட்டவைகள் முடிவானவைகளென்று நூதந மதக்காரர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. இந்த லோகத்தைப் பரமாத்மா எப்படி உண்டாக்கினான்? எவ்வண்ணம் காக்கின்றான்? இவ்வுலகத்தைப்பற்றி அவனுடைய முடிவான யோசனையென்ன? அவனுடைய தர்மம் வ்யாபிரிக்கும் க்ரமங்களென்ன? இறந்தபின் ஜீவனுடைய ஸ்திதியென்ன? இந்த ப்ரஶ்நங்கட்கு ப்ரத்யுத்தரம் இல்லையாம்; விமர்சிகள் (Philosophers) யோசனைகளுயர்ந்து, நம்முடைய அநுபவமும் மேற்சொன்ன விஷயங்களை க்ரஹிக்கும் வரையில், அந்த ப்ரஶ்நங்கள் அப்படியே நிற்கவேண்டுமாம்.

இவ்வண்ணம் யோசித்துவிட்டு, எஸ். ஸி. ராய் தமது ப்ரஹ்மஸமாஜம் தான் முடிவில் பிழைக்கப்போகின்றதென நிர்ணயித்துவிட்டார்.

நம்முடைய தேசத்துக்கு ஏற்பட்ட ஏற்றமாவது, நம் பூர்வாசார்யர்கள் வீண்யோசனைகளுக்கு இடந்தரவில்லை என்பதே. தத்கால தத்வவிமர்சிகள் ஸாங்க்யர்க்கு மேற்பட்டாரில்லை. ஸாங்க்யர்கள் ஈஶ்வராஸ்தித்வம் ப்ரமாண கோசரமன்றென நிஶ்சயித்தார்கள். புத்தர் ப்ரஹ்மாஸ்தித்வத்தை ஒப்புக்கொண்டாரில்லை. ஸர்வ வைதிக ஸம்ப்ரதாயங்களுக்கும் ஸமாநாசார்யனான பாதராயணர் 'ஶாஸ்த்ரயோநித்வாத்' எனும் ஸூத்ரத்தால் வேத ஶாஸ்த்ரம் விநா ப்ரஹ்மம் அறியத்தகாததென்று முடித்தார். ஶங்கரராமாநுஜ பாஷ்யங்கள் இம்முடிவை ஆதரிக்கின்றன. "[illegible]' என்று சொல்லி, உபநிஷத்தும், ஶாஸ்த்ரம் ஒன்றினாலேயே ப்ரஹ்மம் அறியத்தக்கதென்று முடித்தது. தர்க்கத்தால், [அதாவது - அநுமாநத்தால்] ப்ரஹ்மம் ஊஹிக்கத்தக்கதென்று வாதிக்கும் கௌதம காணாத தர்ஶநங்களைப் பாதராயணர் நிராகரித்து, மேலே ஸமாஜயோசனையில் விவரித்தபடி, ஒரு ஈஶ்வரன் அநுமாநத்தால் ஸாதிக்கத்தக்

கவனல்லன் என்று தீர்மாநித்தார். நம் தேசத்தில் பிறந்த விமர்சிகளைக் காட்டிலும் பாஶ்சாத்ய விமர்சிகள் (Philosophers) அதீந்த்ரிய விஷயங்களை விசேஷித்து அறியவில்லை. இப்படிப்பட்ட விமர்சிகளை உத்தேசித்து, ஶ்ருதியும், “𑌯𑌸𑍍𑌯𑌾𑌮𑌤𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌮𑌤𑌂 𑌮𑌤𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌵𑍇𑌦 𑌸𑌃 𑌅𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌂 𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌾𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌮𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌾𑌂” என்று சொல்லிற்று. இந்த வாக்யத்தைப்பற்றி ஸ்ரீ பாஷ்யகாரர், ‘𑌯𑌤𑍋 𑌵𑌾𑌚𑍋 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌅𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌮𑌨𑌸𑌾 𑌸𑌹’ என்று, அநந்தனை [அதாவது எண்ணிறந்த கல்யாண குணங்களுடன் கூடினவனை] ப்ரஹ்மத்தை வாக்காலும் மநஸ்ஸாலும் இப்படிப்பட்டவனென்று நிர்த்தேசிக்கக்கூடாமையை ஶ்ருதியே கூறுகின்றபடியால், ப்ரஹ்மம் இன்னதென்றும் இவ்வளவினதென்றும் அறிந்ததாக ப்ரமிப்பவர்க்கு அது அறியப்படாததே” என்று ஸாதிக்கின்றார். பர்யாலோசனையில், தர்க்கத்தால் ப்ரஹ்மத்தை அறிந்ததாக ப்ரமிப்பவர் விஷயம் இந்த ஶ்ருதி, இன்னும் ஶாஸ்த்ரத்தால் அறியத்தக்கதென்பதைப்பற்றியும், பாஷ்யகாரர் ப்ரஹ்மம் ஸம்பூர்ணமாக ஒருவகையாலும் அறியத்தகாததென்று திருவுள்ளம் பற்றி, ஶ்ருதி இடங்கொடுத்தவரையில் தான் அது அறியத்தக்கதென்று முடிக்கின்றார்.

ஶப்த ப்ராமண மொன்று தவிர ப்ரமாணாந்தரங்களால் அறியக்கூடாத ப்ரஹ்மத்தைப்பற்றி, ஸ்வயுக்தியால் சில ஏற்பாடுகளைச் செய்துகொண்டு புது மதங்களைக் கல்பிப்பது நிரர்த்தகம். ப்ரபஞ்சாதீதனாய் நம்மால் இச்சிக்கப்பட்ட குணவிஶிஷ்டனாய் ஒரு ஈஶ்வரனையாவது, இந்த்ரிய கோசரமல்லாத ஒரு பரலோகத்தையாவது, ஶப்த ப்ரமாணத்தை யொழித்தவர்கள் விஶ்வஸிக்க ந்யாயமில்லை. தங்களால் நம்பப்படாத மதங்கள் இவற்றை ஒப்புக்கொள்வதால், ஒப்புக்கொள்வோ மென்பவர்கள், தாங்கள் நிற்கும் கிளைகளை வெட்டிக்கொண்டே அவற்றை ஆஶ்ரயமாக நம்புகின்றவர்களை ஒத்தவர்கள். ப்ரமாணமற்ற வஸ்துக்களுடன் மநுஷ்யன் கலப்பதென்பதும், அதற்காக ஸாதநங்கள் கல்பிப்பதும் முயலின் கொம்புக்கு நீளம் நிச்சயிப்ப தொத்ததே.

லோக ஸ்ருஷ்டிக்ரமமும், ப்ரபஞ்ச ரக்ஷண வ்யாபாரமும், ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரளயங்களுக்குக் காரணமும், ப்ரயோஜநமும், கர்மரூபமான ஈஶ்வர ஶக்தியின் ஸ்வரூபமும், ப்ரக்ருதியும், புருஷனும் அநாதி பெனும் ஶாஸ்த்ரப்படி ஜீவனுடைய ஶாஶ்வதமான இருப்பும், அவன் விலக்ஷணங்களான பல ஶரீரங்களைப் பொருந்தும் வண்ணமும், ஈஶ்வர ஸ்வரூபத்தையும், அவனை யடைவதற்குத் தகுந்த உபாயங்களையும் நம்முடைய வேதாந்த ஶாஸ்த்ரமே தெளிவாக வெளியிடுகின்றது. இவற்றிற்கு ருஜுவில்லையென்றால் ஈஶ்வராஸ்தித்வத்துக்கும் ருஜுவில்லை. ஈஶ்வராஸ்தித்வத்தைக் கிறிஸ்தவ மஹம்மதிய மதங்கள் ஒப்புக்கொள்கின்றன. மற்றைய விஷயங்களை விவேகிகள் ஸம்மதிக்கும்படியாக அந்த மதங்கள் வெளிப்படுத்தவில்லை. ஆதலால் அம்மதங்கள் அநுமதி செய்யும்வரையில் தான் ப்ரஹ்ம ஸமாஜத்தார் வேதாந்த மதத்தை ஒப்புக்கொள்கின்றார்கள் என்றால், நாஸ்திகதை அதைக்காட்டிலும் அவர்க்கு நன்மை செய்யும் என்று நமக்குத் தோன்றுகின்றது.

இதனுடன் நிற்காமல், தியாஸபியாகின்ற புது மரம் விலக்ஷணமாகப் புஷ்பிக்க ஆரம்பித்துவிட்டது. மநுஷ்யர் அறியாத மஹாத்மக்களுடைய கூட்டமொன்று உண்டாம். அதுவோ மற்றெந்தக் கூட்டமோ சுத்த தர்ம மண்டலமாம். ‘ப்ரணவவாதம்’ என்றொரு க்ரந்தம் அதையொட்டி முன் பிறந்தது. ‘யோகதீபிகை’ யென்றொன்று தலைகாட்ட ஆரம்பித்துவிட்டது. 26-அத்யாயமுள்ள பகவத்கீதையொன்றும் கண்டரஹஸ்யமென்று அதன் வ்யாக்யாநமொன்றும் முளையில் நிற்கின்றன. இவற்றின் விசாரம் ஹிந்து பத்ரிகையில் வெளிப்பட்டது.

ஶங்கர ராமாநுஜ மத்வ பாஷ்யங்களில் ஸர்வேஶ்வரனே ஸ்ரீ க்ருஷ்ணனாய் அவதரித்தானென்று சொல்லியிருக்கிறது. கீதையில் தான் ஸர்வலோக மஹேஶ்வரன் என்றும், ஸர்வாந்தர்யாமியென்றும், ஸர்வரக்ஷகனென்றும், மோக்ஷப்ரதனென்றும் ஸ்ரீ க்ருஷ்ணன் பலமுறை வெளியிட்டும், ஹம்ஸயோகியெனப் பெயர்கொண்ட ஒருவர் கீதையெங்கும் ஸ்ரீ க்ருஷ்ணன் 𑌸𑌹𑌂 என்றும்,

மாம் என்றும் சொல்லுமிடங்களில், அவர் தன்னைக் குறித்தாரில்லை யென்றும், தன்னைக்காட்டிலும் வேறுபட்டதோர் பரமாத்மாவை நிர்த்தேசித்தாரென்றும் அபிப்ராயப்படுகின்றார் எனச் சொல்லப்படுகின்றது. "அஜோऽபிஸந் அவ்யயாத்மா பூதாநாமீஶ்வரோऽபி ஸந்", என்று, பகவான் தன்னுடைய அவதார ரஹஸ்யத்தை வெளியிட்டது, இந்த நூதந வ்யாக்யாதாவுக்கு வேண்டாம். தன்னைக்காட்டிலும் மேற்பட்ட தொன்றில்லை யென்று வெளிப்படுத்தி, "மத்த꞉ பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய।" என்று மொழிந்ததும் வேண்டாம். விபுவான் ஈஶ்வரன் ஸ்வாம்ஶத்தால் அவதரித்தாலும், தன் விஸ்தாரத்தின் ஒவ்வொரு ப்ரதேசத்திலும் ஸர்வஜ்ஞனாய், ஸர்வ ஶக்தியாய், ஸமஸ்த கல்யாணகுண பரிபூர்ணனாய் அவன் இருப்பதை மறந்ததோர் வ்யாக்யாநமும் உண்டோ? ஶுத்த தர்மமண்டலத்தார்க்கு வர்ணாஶ்ரமங்களும் வைதிக தர்மங்களும் வேண்டியதில்லை. இதுவரையில் ஒருவராலும் எக்காலத்திலும் கேட்கப்படாத ப்ரமாணங்கள் தியாஸபியில் சேர்ந்தவர்களுக்கு அகப்படுகின்றன. ஸநாதநமான வைதிக ஸம்ப்ரதாயங்கட்குத் தேசாந்தரஸ்தர் ஸம்பந்தங்களால் விளைந்த கேடுகளைச் சிந்தித்து ஶோகிக்க, யுகஸஹஸ்ரங்கள்கூடப் போதுமான காலமாகத் தோன்றவில்லை. இவ்வண்ணம் பலர் பலவாறாகப் பகவானுடைய கலிகோலாஹல க்ரீடைகளை விஸ்தரிக்கின்றார்கள். கலியின் ஸாதுத்வம் மனம்போனபடி யெல்லாம் மதங்கள் கல்பிப்பதைப்பற்றிச் சொன்னதன்று. "த்யாயந் க்ருதே யஜந் யஜ்ஞைஸ் த்ரேதாயாம் த்வாபரேऽர்சயந் । யதாப்நோதி ததாப்நோதி கலௌ ஸங்கீர்த்ய கேஶவம் ॥" என்கிறபடியே, பகவானுடைய நாமஸங்கீர்த்தநமே கலியுகத்தில் ஶ்ரேயஸ்கரமென்பதாலும், இவ்விதமான உபாயத்தை ஸர்வஜாதி நிஷ்டர்களும் அவலம்பிக்கலா மாதலாலும், கலியின் ஸாதுத்வத்தை மஹர்ஷி வெளிப்படுத்தினர். அவ்வவருடைய வர்ணாஶ்ரம தர்மங்களை ப்ரயத்ந பூர்வமாக நாசம்செய்வதை யோசித்துக் கலியின் ஸாதுத்வம் சொல்லப்பட்டதன்று.

ஸ்ரீ꞉.

ஶ்ரீமதே ஹயக்ரீவாய நம꞉.

ஶ்ரீமதே [illegible] நம꞉.

ஸ்ரீ பாஞ்சராத்ரம்.

(இரண்டாவது பாகம்)

இந்தப் பஞ்சராத்ரஶாஸ்த்ரம் நமக்கு உபதேஶிப்பது என்ன வென்பதைச் சற்று ஆலோசித்துப் பார்ப்போம். முதலில், வேதங்களின் தத்வார்த்தத்தை யதாவத்தாகத் தெரிந்து கொள்ளாமல் தடுமாறும் ஜீவகோடிகளை உஜ்ஜீவிப்பிக்கவேண்டு மென்னும் கருணையால், ஸ்ரீபகவான், எல்லாராலும் எளிதில் அறியக்கூடியதான இந்த ஶாஸ்த்ரத்தை ஸ்வயமே அவதரிப்பித்தார் என்பதை நாம் மறக்கக்கூடாது. இந்த ஶாஸ்த்ரம் முக்கியமாகப் போதிப்பவையாவன :—

(1) ஸ்ரீமந்நாராயண னென்று சொல்லப்படும் ஸ்ரீ வாஸுதேவனாகிற பரமாத்மாவே அகில ஜகத்திற்கும் காரணம்;

(2) அவனுடைய குணங்கள், அவனுடைய விபூதிகள்போலக் கணக்கற்றவையா யிருக்கையிலும், ஜ்ஞாநம் ஐஶ்வர்யம் ஶக்தி வீர்யம் பலம் தேஜஸ் ஆகிய இந்த ஆறு குணங்களும் ரத்நத்தைக் காந்திகள் போல அவனை எப்பொழுதும் அலங்கரித்துக்கொண்டே நிற்கின்றன;

(3) இப்படி ஷாட்குண்ய பரிபூர்ணனான இந்தப் பகவான், ஆஶ்ரிதர்களின் மீது தனக்கு உள்ள அநுகம்பையினால், அவர்கள் தன்னை ஸுலபமாக ஆஶ்ரயித்து உஜ்ஜீவிக்கும் பொருட்டு ஸ்வேச்சையாகவே தன்னை வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த ரூபியாக வ்யூஹித்து நிற்கின்றான்;

(4) அப்படி வ்யூஹித்து நிற்கும் பரமாத்மாவை உபாஸிப்பதன் ப்ரகாரமும், ஒவ்வொருவரும் தன்தன் வர்ணாஶ்ரம தர்மங்களைக் குறைவின்றிப் பரிபாலநம் செய்துகொண்டே, அபிகமந உபாதாந இஜ்யா ஸ்வாத்யாய யோகங்களென்று வ்யவஹரிக்கப்படும் அநுஷ்டாநங்களை அந்தந்தக் காலங்களில் அந்தப் பரமாத்மாவின் ஆராதநரூபமாக அநுஷ்டித்து வருவதேயாம்;

(5) அப்படிப் பாரமைகாந்த்யத்துடனும் பஞ்சகால பராயணதையுடனும் இந்த அநுஷ்டாநங்களை யதாக்ரமம் நடத்திவந்தால் அப்படி அநுஷ்டிக்கிறவன் அந்த அநுஷ்டாநத்தின் பலமாக பரம புருஷார்த்தமான பரமபதத்தை அடைகிறான்;

(6) தவிரவும், அவாங்மநஸ கோசரமான தனது ஸௌஶீல்யத்தை அந்யாத்ருஶமாக வெளியிட்டுக்கொண்டு, அந்தப் பரமாத்மா, பூமியில் உண்டான கோயில்களிலும் மாளிகைகளிலும் ஆஶ்ரமங்களிலும் அஜ்ஞாபிஜ்ஞ விபாகமற எல்லாராலும் ஆராதநீயனாய், மத்யே ஸம்பாவ்யங்களான அபராதங்களெல்லாவற்றையும் பொறுத்து, ஆஸந போஜந ஶயநாதிகளெல்லாம் ஆராதகர்களிட்ட வழக்காய், அதனால் மஹத்தான த்ருப்தியை அடைந்துகொண்டு, ‘அர்ச்சை’ என்று வ்யவஹரிக்கப்படும் விக்ரங்களிலும் ஒரு அவதாரத்தைச் செய்கிறானென்றும் இந்த ஶாஸ்த்ரம் சொல்லுகின்றது; அந்த அர்ச்சையில் ஸ்ரீ பகவானை ஆராதிப்பதன் ப்ரகாரங்களைப் பற்றியும் இது பரக்கப் பேசுகின்றது. இப்படி ஆராதிப்பதன் பலமும் பரமபுருஷார்த்தமாம்.

இந்த உபதேஶங்களெல்லாம் ஶ்ருதிஸ்ம்ருதிகளுக்கு விருத்தங்களென்று சொல்வது ஸாத்யமில்லை; மந்த மதிகளாயும் ஸர்வ ப்ரகாரத்திலும் அஶக்தர்களாயுமுள்ள நமக்கு, ஶ்ருதிகளிலும் ஸ்ம்ருதிகளிலும் சொல்லப்பட்டுள்ள தத்வார்த்தத்தை எளிதில் போதிப்பிப்பதுடன், பரம புருஷார்த்தத்தையும் இவை ஸாதித்துக் கொடுக்கின்றனவென்றே நாம் அறிகிறோம். ஸர்வ ப்ரஜைகளிடத்திலும் அளவற்ற அநுகம்பையை உடைத்தாயிருக்கும் ஸ்ரீ பகவானுக்கு, ‘𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑌮𑌿𑌵 𑌕𑌾𑌰𑍁𑌣𑌿𑌕𑍋 𑌦𑌦𑌾𑌤𑌿’ என்கிறபடி இந்தமாதிரியான ஒரு ஶாஸ்த்ரத்தை அவதரிப்பிப்பது அநுபபந்நமன்று. ஸ்ரீ வேத ஶாஸ்த்ரத்தை அவதரிப்பித்ததற்கு இந்த அநுகம்பை காரணமானாற்போல, இந்தப் பஞ்சராத்ர ஶாஸ்த்ரத்தை அவதரிப்பிப்பதற்கும் அதுவே காரணமாகக் கூடும். இந்த ஶாஸ்த்ரத்தில் விஶ்வாஸம் செய்யாதவர்களின் தூஷணங்களைப் பரிஶீலநம் செய்யும் முன்னதாக, இதன் கொள்கைகளை நாம் விஶதமாகத் தெரிந்துகொள்வது அவஶ்யமாதலால் அதைச் சற்றுக் கவனிப்போம்.

(1) ஸ்ரீ பாஞ்சராத்ரத்தின் முதல் கொள்கையைப்பற்றி அதிகமாக விவாதம் ஏற்படுமென்றாவது, அது ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் சொல்லப்படவில்லையென்றாவது சொல்வது உபபந்நமாகாது.

> “[illegible] ॥
> [illegible] ॥”

என்றும்,

> “𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌤𑍍 𑌪𑌰𑍋 𑌦𑍇𑌵𑍋 𑌨 𑌭𑍂𑌤𑍋 𑌨 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ।
> 𑌏𑌤𑌦𑍍𑌰𑌹𑌸𑍍𑌯𑌂 𑌵𑍇𑌦𑌾𑌨𑌾𑌂 𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌸𑌤𑍍𑌤𑌮𑌾𑌃 ॥”

என்றும், ஸ்ரீமந் நாராயணனுக்கே ஜகத் காரணத்வமும் பரதேவதாத்வமும் இதிஹாஸ புராணங்களினால் வேதரஹஸ்யங்களென்று பலவாறாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

> “[illegible]
> [illegible] ।
> [illegible]
> [illegible] ॥”

[ஸர்வ வேதங்களிலும் படிதமாயும் * எல்லாராலும் அங்கீக்ருதமாயுமுள்ள நாராயண ஸூக்தமென்னும் புருஷ ஸூக்தமானது, ஹே பகவந்! உன்னையே பரமபுருஷனென்று ப்ரதிபாதிக்கின்ற

---

* புருஷ ஸூக்தமானது எல்லா வேதங்களிலும் படிதமாக இருக்கின்றது என்பது பின்வரும் ஶ்லோகத்தினால் விளங்கும்:—

> “𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑍇 𑌷𑍋𑌡𑌶𑌰𑍍𑌚𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌯𑌜𑍁𑌷𑍍𑌯𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑌰𑍍𑌚𑌕𑌮𑍍 ;
> 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑍇𑌷𑍁 𑌸𑌪𑍍𑌤𑌰𑍍𑌚𑌂 𑌤𑌥𑌾 𑌵𑌾𑌜𑌸𑌨𑍇𑌯𑌕𑍇 ॥”

தன்றோ?] என்று ஸ்ரீ ஆழ்வான் அநுக்ரஹித்திருக்கிறபடி வேதங்களெல்லாம் ஸ்ரீமந்நாராயணனையே ப்ரதிபாதிக்கின்றன வென்பது நாம் எல்லாரும் ஒப்புக்கொண்ட விஷயம்.

(2) இரண்டாவது கொள்கையான அவனுடைய ஷாட்குண்ய பூர்த்தியைப்பற்றி நமக்கு ஒரு ஶங்கை ஜநிக்கக்கூடும். பகவானிடத்தில் அளவற்ற கல்யாண குணங்க ளிருக்கையில், இந்த ஆறு குணங்களை மட்டில் தனித்தெடுப்பதற்குக் காரணமென்? என்று கேட்கலாம். இந்தக் குணங்கள்தாம் பகவானுடைய பரத்வத்தை விஶேஷித்து ப்ரதி பாதிக்கின்றன வென்பதே அதற்கு ஸமாதானமாகத் தோன்றுகிறது. தயை க்ஷமை முதலிய மற்றைத் திருக்கல்யாண குணங்களெல்லாம் இந்த ஆறு குணங்களின் ஶாகா பேதங்கள்; இவைகளினின்று அவை உத்பந்நமாகின்றன வென்றே ஆசார்யர்களுடைய நிர்வாஹம்.

“ப்ரக்ருஷ்டம் விஜ்ஞாநம் பலமதுலமைஶ்வர்யமகிலம்
விமர்யாதம் வீர்யம் வரத! பரமா ஶக்திரபி ச ।
பரம் தேஜஶ்சேதி ப்ரவரகுணஷட்கம் ப்ரதமஜம்
குணாநாம் நிஸ்ஸீம்நாம் கணநவிகுணாநாம் ப்ரஸவபூ: ।”

[ஜ்ஞானம், பலம், ஐஶ்வர்யம், ஶக்தி, தேஜஸ் ஆகிய இந்த ஆறு குணங்களும், எல்லையற்றிருக்கும் மற்றைக் குணங்களுக்கு உத்பத்தி ஸ்தானம்] என்று ஸ்ரீ ஆழ்வானும்,

“நிர்தோஷவஶ்ய ஸமஸ்த குணௌக ப்ரஸவா: ஷடேதே: ”

[ப்ரஸித்தங்களான இந்த ஆறு குணங்களும், எவ்வித தோஷ ஸம்பந்தமு மின்றிக்கே ஸதா கல்யாணங்களாக இருக்கும் தயாதி குணங்களை ஜநிப்பிக்கின்றன] என்று ஸ்ரீ பட்டரும் அநுக்ரஹித்திருக்கிறார்கள்.

இந்த ஆறு குணங்களையும் ஸ்ரீ பட்டரே பின் வருமாறு விவரித்திருக்கிறார்.

“யுகபதநிஶமக்ஷைஸ்ஸர்வம் ஸ்வத: ஸாக்ஷாத்கலயந்
நியதநியமம் ப்ராப்ய ரங்காதிராஜ! ।
கரணநிரபேக்ஷம் பஶ்யஸி ஸ்வப்ரகாஶம்
ததவரணமஸீமம் ஜ்ஞாநமாஹுர்குணஷட்கே ।”

[லோகத்தில் நாமெல்லாரும் இந்த்ரியங்களைக் கொண்டே விஷயங்களை ஸாக்ஷாத்கரிக்க வேண்டுமென்றும், ரூப ஸாக்ஷாத்காரத்திற்கு ஒரு இந்த்ரியம் ஶப்தத்திற்கு மற்றொரு இந்த்ரியம் என்றும், இத்யாதியான நியமத்திற்குக் கட்டுப்பட்டவராக காணப்படுகிறோம். பகவானிடத்திலோ அப்படிப்பட்ட நியமமென்பதே வேண்டாம்; ஸமஸ்த வஸ்துவையும் ஏககாலத்தில் எவ்வித நியமுமின்றிக்கே உள்ளங்கையோடு துல்யமாகவும் நித்யமாகவும் ஸாக்ஷாத்கரிக்கும் யோக்யதை அவனிடத்தில் எப்பொழுது மிருக்கின்றது. அஸாதாரணமான அந்த ஸாக்ஷாத்காரமே அவருடைய ஜ்ஞானம் என்று சொல்லப்படுகின்றது.]

“ஸாமாந்யே ஜ்ஞாநாஜ்ஞாநம் ஜகதுதயமிதா வாதிதா
ஸாங்க்யோக்தா ஸாம்க்யாநாம் காரணம் ப்ரயதிமாமவநேந்த்ர
ஶாஸ்த்ரம் ஸம்மாயிது! । ஶஸ்த்ரைர்நிரஸ்தாஸ்ஸ்வப்ரதி
ஸந்திஸ்ஸ்வ தத்ஸ்வவேத்யா நிருத்தம் யதீந்த்ரைர்மதஶ்ஶக்ஷ்யம்
ப்ரமாணமயது விஶ்வாவிஶ்வக்ஷ்யு ।”

[கீழ்சொல்லப்பட்ட ஜ்ஞானம் பகவானுக்கு உண்டு என்று சொன்னதால், ‘ஜகத், அசேதநமான ப்ரதான மென்னும் தத்வத்திலிருந்து உண்டானது’ என்று சொல்லும் ஸாங்க்யரும், ‘ப்ருஹ்மம் நிர்விஶேஷமாகையால் அதற்கு ஜ்ஞானம் ஸம்பவிக்காது; அப்படி ஜ்ஞானமு மில்லாத ப்ருஹ்மத்திலிருந்து ஜகத் உண்டாயிற்று’ என்று சொல்லும் ஶாங்கராதிகளும் நிரஸிக்கப்பட்டார்கள். அப்படி ஸர்வஜ்ஞனான இந்தப் பரமாத்மாவுக்கு ஐஶ்வர்யமென்றும் ஒரு குணமுண்டு. அதாவது - வேறொருப் ப்ரேரகனின்றிக்கே ஸர்வ ஸ்வதந்த்ரனாய், புண்யபாப ரூபங்களான கர்மங்களின் வைசித்ர்யத்தினால் விசித்ரமாயிருக்கும் ஸர்வ ஜகத்தையும் ஸங்கல்ப லேஶத்தினால் ஒரே காலத்தில் எவ்வித இடையூறுமில்லாமல் லீலையாகவே பகவான் ஸ்ருஷ்டிக்கிறானென்கையே அவனது ஐஶ்வர்யமாம்.]

“காலேயக்ஷணதே ஸ்வதந்த்ரவத ஸ்ராதவாதாநதா ஹ
ஸ்வா தே ஶக்தி ஸ்வகாரஜிதாஸ்த்யுதி வேலாம் விலம்ப்ய ।
ஊஹ்யா யாவதிஹாரதி ஸதா ரங்கராஜ நவேக்ஷா
வைவேஶாநாதிஶ்பகஶ்வேஶாண்நாமளவிஹாரவ்யா ।

[ஒன்று ஶக்யம் மற்றொன்று அஶக்யமென்றும், சில ஹேதுக்களைக் கொண்டே கார்யத்தை ஸாதித்துக்கொள்ள வேண்டுமென்றும், சில ஸமயங்களில்தான் கார்யம் ஸாதிதமாகிறதென்றும், ஸித்தியிலும் ஒரு அளவு உண்டென்றும் இத்யாதியான ஒரு வரம்பு நமக்குண்டு; அப்படியில்லாமல் எல்லா வரம்பையும் தாண்டி ஸகல கார்யங்களிலும் தனது ஸங்கல்பத்தை மட்டில் அநுஸரித்து அவனது ஶக்தி ப்ரஸரிக்கின்றதன்றோ? அப்படி அந்த ஶக்தி ப்ரஸரிக்கும் ஸகல கார்யத்திலும் பகவானே சிதசிதாத்மகமாயுள்ள தனது ஶரீரத்வாரா சிலந்திப்பூச்சிபோல ஜகத்திற்கு உபாதாந காரணமாகிறான் என்று ஶ்ருதி சொல்லுகின்றது. * அப்படி ஜகத் ஸ்ருஷ்ட்யாதிகளில் நிரர்க்களமாக ப்ரஸரிக்கும் ஶக்திக்கே ஶக்தி என்று பெயர்.]

"[illegible]
[illegible]
[illegible]
[illegible]"

[கணக்கற்ற வ்யாபாரங்களில் ப்ரவ்ருத்தித்தாலும், எவ்வித ஶ்ரமமுமின்றிக்கே தனது திருமேனியைப் போல ஸர்வ ஜகத்தையும் பகவான் பரிக்கிறான் என்பதே அவனுடைய அஸாதாரண பலத்தைக் காட்டுகின்றது.]

"[illegible]
[illegible]
[illegible]
[illegible]"

[கஸ்தூரிகா கந்தமானது, தான் எவ்வித விகாரத்தையுமடையாமல், தனது ஸந்நிதி மாத்ரத்தால் ஸந்நிஹிதருடைய மநஸ்ஸை விகாரமடையும்படி செய்வதுபோல, பகவானும், தான் எவ்வித விகாரமும் அடையாமல் ஸகல பதார்த்தங்களையும் விகரிப்பிக்கிறான். இதைத்தான் அவனுடைய வீர்யம் என்று சொல்லுகிறார்கள்.]

---

* "[illegible]" என்பது ஶ்ருதி வாக்யம்.

"[illegible]
[illegible]
[illegible]"

[லோகத்தில் ஸர்வவித கர்த்ருத்வமும் ஸ்வதந்த்ரங்களான சில ஸஹகாரிகளை அபேக்ஷித்தே நிற்கின்றது. பகவானுடைய கர்த்ருத்வமோ அப்படியன்று. ஸர்வமும் பகவச் சரீரமாகையால் ஸ்வதந்த்ரங்களான ஸஹகார்யந்தரங்களை அபேக்ஷியாததன்றோ அவனுடைய கர்த்ருத்வம்? அது ஆஶ்ரிதர்களுடைய தாபத்ரயத்தையும் அவர்களின் விரோதிகளையும் ஸதா கீழ் அழுத்திக்கொண்டே நிற்கின்றது. இதைத்தான் அவனது தேஜஸ் என்று சொல்லுகிறார்கள்.]

(3) இந்த ஶாஸ்த்ரத்தின் மூன்றாவது கொள்கை இதற்கு அஸாதாரணமானது. ஸாதுக்களை ஸம்ரக்ஷிப்பதற்காக வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன் என்று தன்னை நாலுவிதமாக வ்யூஹித்துக்கொண்டு ஸ்ரீ பகவான், வ்யூஹாவதாரங்கள் என்று வ்யவஹரிக்கப்படும் இந்த அவதார விஶேஷங்களைச் செய்கிறான் என்னும் இந்தக் கொள்கையும் ஶ்ருதிக்கு ஒத்ததே.

"𑌅𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑍋 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌵𑌿𑌜𑌾𑌯𑌤𑍇"

[பகவான், தான் பிறப்பற்றவனாக இருக்கையிலும், பஹுப்ரகாரமாக அவதரிக்கிறான்] என்று ஶ்ருதி சொல்லுகிறதன்றோ?

"[illegible]"

[பகவான் இப்படி வ்யூஹித்து அவதரிக்கிறான், என்றும் வ்யவஸ்தையானது அவனுடைய ஐச்சிகமான விஹாரமே] என்று ஸ்ரீ ஆழ்வானும் இந்த வ்யூஹாவதாரத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார்.

இந்த நாலு வ்யூஹங்களுள், ஒவ்வொன்றிலும் பகவான் கணக்கற்ற ஸகல கல்யாண குணங்களுடன் கூடியே இருக்கிறான் என்பது தத்வ ஸ்திதியானாலும், ஆஶ்ரிதர்களுடைய ஸௌகர்யத்தை உத்தேஶித்து, கீழ்சொல்லப்பட்டுள்ள ஆறுகுணங்களையும்

பின் வருமாறு ஒரு விதமாக விபாகித்துக்கொண்டு அவதரிக்கிறான் என்பதும் இந்த ஶாஸ்த்ரத்திற் சொல்லப்படுகிறது போலத் தெரியவருகிறது. வாஸுதேவ ரூபியானவன், பரத்வத்தோடு ஒத்து ஷாட்குண்ய பரிபூர்ணனாய் நித்யராலும் முக்தராலும் அநுபவிக்கத் தகுந்தவனாய் நிற்கிறானென்றும், ஸங்கர்ஷண ரூபியானவன் ஜ்ஞாநம் பலம் இந்த இரண்டு குணங்களுடன் கூடினவனாய் ஶாஸ்த்ர ப்ரதாநம் ஸம்ஹாரம் இவைகளைச் செய்கிறானென்றும், ப்ரத்யும்ந ரூபியானவன் ஐஶ்வர்யம் வீர்யம் இவைகளை மேற்கொண்டவனாய் ஸ்ருஷ்டியையும் தர்ம ப்ரவர்த்தநத்தையும் செய்கிறானென்றும், அநிருத்த ரூபியானவன் ஶக்தி தேஜஸ் இந்தக் குணங்களை யுடையவனாய் ரக்ஷணத்தையும் மோக்ஷஹேதுவான ஸத்வ ப்ரவர்த்தநத்தையும் செய்கிறானென்றும் இந்த ஶாஸ்த்ரம் சொல்லுகின்றது. இந்த வ்யவஸ்தையை ஸ்ரீ பட்டர் ஸ்ரீரங்க ராஜ ஸ்தவத்தில் பின்வருமாறு ஸங்க்ரஹித்திருக்கிறார் :—

“ 𑌷𑌾𑌡𑍍𑌗𑍁𑌣𑍍𑌯𑌾𑌦𑍍 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌃 𑌪𑌰 𑌇𑌤𑌿 𑌸 𑌭𑌵𑌾𑌨𑍍 𑌮𑍁𑌕𑍍𑌤𑌭𑍋
𑌗𑍍𑌯𑍋 𑌬𑌲𑌾𑌢𑍍𑌯𑌾𑌦𑍍 𑌬𑍋𑌧𑌾𑌤𑍍 𑌸𑌙𑍍𑌕𑌰𑍍𑌷𑌣𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌹𑌰𑌸𑌿 𑌵𑌿𑌤𑌨𑍁
𑌷𑍇 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌵𑍀𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌪𑍍𑌰𑌦𑍍𑌯𑍁𑌮𑍍𑌨𑌃 𑌸𑌰𑍍𑌗𑌧𑌰𑍍𑌮𑍌
𑌨𑌯𑌸𑌿 𑌚 𑌭𑌗𑌵𑌨𑍍 𑌶𑌕𑍍𑌤𑌿𑌤𑍇𑌜𑍋𑌽𑌨𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑍋 𑌬𑌿𑌭𑍍𑌰𑌾𑌣𑌃 𑌪𑌾𑌸𑌿
𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌗𑌮𑌯𑌸𑌿 𑌚 𑌤𑌥𑌾 𑌵𑍍𑌯𑍂𑌹𑍍𑌯 𑌰𑌙𑍍𑌗𑌾𑌧𑌿𑌰𑌾𑌜 ! ; ”

இந்த விபாகத்தினால் வ்யூஹாவதாரங்களில் பிரித்துச் சொல்லப்பட்ட குணங்கள் தவிர்த்து மற்றைக் குணங்களில்லை யென்று நினைப்பது ஸரியன்று. சிற்சில குணங்களை விஶேஷித்து வெளியிட்ட போதிலும், ஒவ்வொரு அவதாரத்திலும் அவன் ஸமஸ்த கல்யாணகுண பரிபூர்ணனே.

“ [illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ”

[ஹே ஷாட்குண்ய பரிபூர்ணனான பகவானே! ‘உன்னுடைய முதல் மூர்த்தியாகிற பரவாஸுதேவ மூர்த்தியானது ஆறு குணங்களாலும் விளங்குகின்றது. மற்றை மூன்று மூர்த்திகளும் ஒவ்வொன்றுக்கு இரண்டு குணங்கள் வீதம் பிரித்துக்கொண்டு நிற்கின்றன’ என்னும் இந்த வ்யவஸ்தை உபாஸகர்களின் ஸௌகர்யத்திற்காகவே தவிர வேறு குணாந்தரங்களின் இல்லாமையைக் குறிப்பதற்கன்று. நீ எல்லா அவதாரங்களிலும் ஸமஸ்த கல்யாண குண விஶிஷ்டனன்றோ?] என்று ஸ்ரீ ஆழ்வான் அநுக்ரஹித்திருக்கிறார்.

இப்படிப்பட்ட பரமாத்மாவை உபாஸிப்பதன் ப்ரகாரமும் ஸ்ம்ருதிகளிற் சொல்லப்பட்டிருக்கும் வர்ணாஶ்ரம தர்மங்களைக் குறைவறப் பரிபாலநம் செய்துகொண்டே பஞ்ச கால பராயணர்களாய்ப் பகவதாராதநம் செய்வதேயாம். பஞ்சகால விபாகத்தைக் கீழ் குறிக்கப்படும் பஞ்சராத்ர ஶ்லோகங்களிலேயே காணலாம்.

(1) அபிகமநம் :

“ 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍇 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑍇 𑌚𑍋𑌤𑍍𑌥𑌾𑌯 [illegible] ।
[illegible] ।
𑌅𑌭𑌿𑌗𑌚𑍍𑌛𑍇𑌜𑍍𑌜𑌗𑌨𑍍𑌨𑌾𑌥𑌂 𑌤𑌦𑌭𑌿𑌗𑌮𑌨𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌂 ॥

[ப்ராஹ்ம முஹூர்த்தமென்று சொல்லப்படும் விடியற் காலத்தில் எழுந்து ஶுத்தமான சித்தம் வாக் கர்மம் இவைகளுடன் கூடினவனாய் ஜகத் காரணனான பகவானைப்பற்றி ஒவ்வொரு உபாஸகனும் த்யாநம் ஸ்தோத்ரம் முதலியவைகளால் புகழவேண்டும். இப்படிச் செய்வதற்கு அபிகமநம் என்று பெயர்.] இந்தக் காலத்தில் தேஹாதிகளின் ஶுத்தியை ஸம்பாதித்துக் கொள்ளும் பொருட்டு ஸ்நாநம் முதலியவற்றைச் செய்வதும் ஶ்ருதி சோதிதங்களான ஸந்த்யோபாஸநாதிகளைச் செய்வதும் ப்ராப்தம்.

(2) உபாதாநம் :

“ [illegible] ।
[illegible] ।
[illegible] । ”

[ப்ராதஃ கால கர்மங்கள் முடிந்தவுடன் ஸ்ரீ பகவானுடைய திவ்யாராதநமாகிற யாக நிஷ்பத்தியின் பொருட்டுப் புஷ்பம் பலம் முதலியவற்றை ஸம்பாதிக்க வேண்டும். இதற்கு உபாதாந மென்று பெயர்.] நாம் தர்மத்திற்கு ஒத்துச் செய்யவேண்டிய த்ரவ்யார்ஜநமும், பகவதாராதநத்திற்காகவே உபயோகப்பட வேண்டு மாதலால், அப்படிப்பட்ட த்ரவ்யார்ஜநமும் இந்தக் காலத்திலேயே ப்ராப்த மாகின்றது.

(3) இஜ்யை :

“𑌤𑌤𑍋𑌽𑌷𑍍𑌟𑌾𑌂𑌗𑍇𑌨 𑌯𑍋𑌗𑍇𑌨 𑌪𑍂𑌜𑌯𑍇𑌤𑍍 [illegible] ।
[illegible] 𑌪𑍍𑌰𑌹𑌰𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰 𑌇𑌜𑍍𑌯𑌾𑌕𑌾𑌲𑌸𑍍𑌤𑍁 𑌸 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ।”

[பிறகு அஷ்டாங்க யோக புரஸ்ஸரமாகப் பகவானைப் பூஜிக்க வேண்டும். அதற்கு இஜ்யை என்று பெயர்.] மாத்யாஹ்நிக கர்மங்களைச் செய்துவிட்டு பிறகு இந்தப் பூஜையைச் செய்யவேண்டுமென்பது தாத்பர்யம்.

(4) ஸ்வாத்யாயம் :

“𑌶𑍍𑌰𑌵𑌣𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑌨𑌂 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾 [illegible] ।
𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯 𑌸𑌂𑌜𑍍𑌞𑌂 [illegible] ॥”

[பிறகு அபராஹ்நத்தில், பகவத் கதைகளின் ஶ்ரவணம், அவைகளைப்பற்றிய சிந்தநம், பகவானைப்பற்றிய க்ரந்தங்களின் படநம் இவையெல்லாவற்றையும் செய்யவேண்டும். இதற்கு ஸ்வாத்யாயம் என்று பெயர்.]

(5) யோகம் :

“𑌨𑌿𑌶𑌾𑌵𑌸𑌾𑌨𑍇 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌪𑍂𑌜𑌾𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 [illegible] ।
𑌯𑍋𑌗𑌂 𑌨𑌿𑌶𑌾𑌵𑌸𑌾𑌨𑍇 𑌚 [illegible] 𑌕𑍃𑌤𑌂 ।
[illegible] ॥”

[ஸாயங்கால ப்ராப்தங்களான ஸ்மார்த்த கர்மங்களைச் செய்துவிட்டு, யதோசிதம் பகவந்நிவேதநம் முதலிய கார்யம் முடிந்த பிறகு விஶ்ரமத்தை அடையும் முன்னதாகப் பகவானை உபாஸிக்க வேண்டும். இதற்கு யோகம் என்று பெயர்.]

இம்மாதிரி ஒவ்வொரு திநத்தையும் ஐந்தாகப் பகுத்து ஶாஸ்த்ரங்கள் சொல்லுகிறபடி கர்மங்களை யதாக்ரமம் அநுஷ்டித்து வந்தால்,

“[illegible]”

என்கிறபடி, பகவான் நம்மிடத்தில் த்ருப்தியடைந்து பரம புருஷார்த்தத்தைக் கொடுக்கிறான் என்றும் இந்த ஶாஸ்த்ரம் போதிப்பிக்கின்றது. இக்காலத்தில் இம்மாதிரியான அநுஷ்டாநம் லௌகிக வ்யாபாரத்தில் ப்ரவ்ருத்தித்திருக்கும் அஸ்மதாதிகளுக்கு ஸாத்யமில்லை யென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆனாலும், இப்பொழுது, யதாஶக்தி இவைகளை அநுஷ்டித்து, பிறகு விராமம் கிடைக்குங் காலத்தில் யதோக்தமாகப் பரிபாலித்து வந்தால், நம்மிடத்திலுள்ள ஏற்றக்குறைவுகளைக் கணிசியாமலே பகவான் நமக்கு ஶ்ரேயஸ்ஸைக் கொடுப்பான் என்பதில் ஐயமில்லை.

இவை யெல்லாவற்றையும் சொல்வதுடன், ஸ்ரீ பஞ்சராத்ர ஶாஸ்த்ரம் மற்றும் ஒரு அவதாரத்தைப்பற்றியும் பேசுகிறது. அதாவது - அர்ச்சாவதார மென்பது தான். கோயில்களிலும் மற்றை இடங்களிலும் பகவான் விக்ரஹ ரூபியாக எழுந்தருளியிருப்பதையே நாம் அர்ச்சாவதாரமென்று சொல்கிறோம். இந்த அவதாரமும் ஆஶ்ரிதர்களுடைய ஸௌகர்யத்தின் பொருட்டே ஏற்பட்ட அவதாரம். இதைப்பற்றிய விஷயங்கள் பஹுவாக இருக்கிறபடியால் இவ்விடத்தில் அவற்றைப்பற்றி விசாரிப்பது ஸாத்யமாகாது. நமது ஆசார்யர்கள் இந்த அவதாரத்தை விஶேஷமாகக் கொண்டாடியிருக்கிறார்கள் என்பதை நாம் மனத்தில் வாங்கிக்கொண்டு, ஆலயாதிகளில் விக்ரஹ ரூபியாகக் காணப்ப

டும் பகவானைப் பகவதவதார மென்று த்யாநித்து நாம் பக்தியுடன் உபாஸித்து வந்தால், இந்த ஶாஸ்த்ரம் இது விஷயமாகச் சொல்லுமவற்றைச் சரியாய் உணர்ந்தவர்களாவோம்.

“[illegible] தே [illegible] ஜந்தூநாம்
[illegible] ।
[illegible]
[illegible] ஸ்ரீ[illegible] ॥”

[ஹே ரங்கேஶ்வர! நீ கணக்கற்ற அவதாரங்களைச் செய்திருக்கிறாய்; ஆனால் இந்த அர்ச்சாவதாரத்திற்குத் துல்யமாக மற்றொன்றையும் சொல்லமுடியாது. இந்த அவதாரத்தில், மநுஷ்யனால் கல்பிக்கப்படும் குடீ குஞ்சங்களிலும் ஜுகுப்ஸை யின்றிக்கு வஸித்துக்கொண்டு, அவர்களாற் செய்யப்படும் ஆராதநங்களை அதிபோக்யமாகத் திருவுள்ளம் பற்றி, மத்யே ஸம்பாவிதங்களான அபராதங்க ளெல்லாவற்றையும் பொறுத்து, ஸர்வ விஷயங்களிலும் அவர்களிட்ட வழக்காய் எழுந்தருளி யிருக்கின்றாய். இந்த ஸௌஶீல்யத்தைப் பார்க்கப் பார்க்க உன்னை ஆஶ்ரயிக்கும் எங்களுக்கு மெய் மறந்து போவது போலிருக்கின்றதே] என்று ஸ்ரீ பட்டர் இந்த அவதார மாஹாத்ம்யத்தைப் பற்றி புகழ்ந்திருக்கிறார்.

பஞ்சராத்ரத்தின் உபதேஶம் இவ்வாறு இருந்தால், இதை விட நமக்கு ஶ்ரேயஸ்கரமான உபாயமும் உண்டோ? என்று நாம் ஏன் நினைக்கக் கூடாது?

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ அஹோபிலமும் இரண்டு கந்தர்வர்களும்.

“[illegible] தேவ ! [illegible]
[illegible] ।
[illegible] ।”

ஹிமவத் பர்வதத்தில் வஸிக்கும் மதுராலாபன் வல்குபாஷணன் எனும் இரண்டு கந்தர்வர்கள், கலியுகாதி 5017-ம் ௵-க்குச் சரியான நள ௵ ஆவணி ௴ 26௳ ஸ்ரீ அஹோபிலத்தில் நடக்கும் ஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவத்தைக் கர்ணாகர்ணிகையாகச் செவியுற்று, ‘[illegible] ।
[illegible] ।’ என்று புராண ப்ரஸித்தி யடைந்த அஹோபிலம் சென்று ஸம்ப்ரோக்ஷணோத்ஸவத்தையும் ஒன்பது ந்ருஸிம்ஹர்களையும் ஸேவித்து க்ருதார்த்தர்களாகலா மென ஸங்கேதம் பண்ணிக்கொண்டு, அதிக வேகமுள்ளதோர் விமாநத்தி லேறி, அஹோபில யாத்ரையாகப் புறப்பட்டு வந்தார்கள். அப்பொழுது, மதுராலாபன் “ஓ! வல்குபாஷண! இதோ ஓர் ஶிவ க்ஷேத்ரம் தெரிகின்றது பார். இவ்விடத்தில் ருத்ரன் ந்ருஸிம்ஹனைக் குறித்துத் தவம் புரிந்து மந்த்ரராஜஸ்தவத்தைப் பண்ணி ஸ்தோத்ரம் செய்தான்; ஆகையால் இந்த க்ஷேத்ரத்திற்கு ‘ருத்ரபுரம்’ என்று பெயர் வந்தது. இதோ நம் விமாநத்திற்கு நேராகக் கீழ் ப்ரதேசத்தில் ஓர் பந்தநம் தெரிகின்றது பார். இங்கு, நந்தி தேவர் இருந்து ருத்ரனைக் குறித்து அதே காலத்தில் தவம் புரிந்தான். அப்பொழுது ருத்ரன் ப்ரஸந்நனாய் அவனுக்கு ப்ரதமாதிபத்யத்தையும் இந்த தேசத்

திற்கு ‘நந்திபுரம்’ என்கிற பெயரையும் அளித்தான். இப்பொழுது இது ‘நந்தியால்’ என்று வ்யவஹரிக்கப்படுகிறது. இந்த விஷயம் புராணத்தில், ‘[illegible]’ என்னும் ஶ்லோகங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அஹோ! விமானத்தின் வேகத்தைப் பார். அஹோபிலத்தைக் கிட்டினோம்” என்று சொன்னான்.

பிறகு இருவரும் கீழ் அஹோபிலம் ஸந்நிதியின் ஸமீபத்தில் சென்று, ஆயிரக் கணக்கான பரமைகாந்திகளுடைய கோஷ்டியைக் கண்டு, விநயத்தோடும் பயத்தோடும் விமாநத்தை விட்டுக் கீழே இறங்கி ஸந்நிதியுள் சென்றார்கள். அங்கு ஓரிடத்தில் ‘𑌵𑍇𑌦𑌾𑌨𑌾𑌂 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑍋𑌸𑍍𑌮𑌿’ என்று ஸர்வஜ்ஞன் புகழ்ந்த ஸாமவேத காநத்தையும், மற்றோரிடத்தில் கம்பீர ஸ்வரமான யஜுர்வேத கோஷத்தையும், மற்றுமோரிடத்தில் உபநிஷத் கோஷங்களையும், பின்னுமோரிடத்தில் ஆழ்வார்களின் செவிக்கினிய செஞ்சொற்களையும், வேறோரிடத்தில் இதிஹாஸ புராண ப்ருஹ்மஸூத்ர பாஷ்யாதிகளின் படநத்தையும் கேட்டு, ‘𑌸𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑍂𑌰𑌯𑌃’ என்றும், ‘𑌵𑌿𑌪𑌨𑍍𑌯𑌵𑍋 𑌜𑌾𑌗𑍃𑌵𑌾𑌂𑌸 𑌸𑌮𑌿𑌨𑍍𑌧𑌤𑍇’ என்றும் சொல்லுகிறபடி ஸூரிகள் காநம் பண்ணும் பரமபதம் இது தானோ வென்று ப்ரமித்துப் பரமாநந்த பரிதர்களாய், ஶ்ரோத்ரங்கள் ஸபலமாயின வென்று எண்ணிக்கொண்டு முன் மண்டபத்திற்குச் சென்றார்கள்.

அங்கு விசால ரமணீயமாக இருக்கும் கல்பிதமான யாகசாலையின் ஸௌந்தர்யத்தையும், அதில் யதாஶாஸ்த்ரம் நிர்மிதங்களான சயந குண்டத்வாராதிகளின் ஸந்நிவேஶங்களையும், அங்கு விதிவிபர்யாஸ மின்றியே ஹோமாதிகளைப் பண்ணும் பாகவத குலோத்பவர்களான பாஞ்சராத்ரிகளின் அநுஷ்டாந பாடவ வைலக்ஷண்யாதிகளையும், அதன் மத்தியிலுள்ள வேதிகையில் “[illegible]யான [illegible]ஶ்ரயத்தோடும் திவ்யாயுதங்களோடும் திவ்யாபரணங்களோடும் திவ்ய மஹிஷிகளோடும் திவ்ய ஸிம்ஹாஸநத்தில் எழுந்தருளியிருக்கும் ப்ரஹ்லாத வரதனையும் லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனையும், அவர்கட்கு அருகில் [illegible]த்துடனும் ஆநந்த பாஷ்பத்துடனும் ப்ரஶ்ரய விநய ஸாத்வஸத்தோடும் நிற்கிற ஜீயரையும் பார்த்துத் தங்களுடைய ஜந்மமும் கண்களும் க்ருதார்த்தமடைந்தனவாகப் பாவித்துக்கொண்டார்கள். அப்பொழுது வல்குபாஷணன், “ஓ! மதுராலாப! இத்திவ்ய தேசத்தின் த்ருவ பேரத்திற்கு உத்ஸவ பேரமான லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனன்றோ மத்தியில் எழுந்தருளியிருப்பது? இவருக்கு வலது புறத்தில் ப்ரஸந்ந முகத்துடன் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுடைய திருநாமம் என்ன? இந்தக் கீழ் அஹோபிலத் தெம்பெருமானும் இந்த க்ஷேத்ர மாஹாத்ம்யத்தில் ப்ரஸித்தர் தானோ? இதோ இவர்கட்கு அருகில் நிற்கிற ஜீயர் யார்? இவருக்கு இந்த க்ஷேத்ரத்தில் விஶேஷ ஸம்பந்த மென்னை? இவைகளை விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும்” என்று கேட்க, மதுராலாபன் பின்வருமாறு ப்ரதிவசநம் கூறுகின்றனன்:—

“மித்ரனே! இதோ தெற்குத் திசையில் எழுந்தருளியுள்ள பகவான், ஹிரண்யகஶிபுவினால் ஸமுத்ரத்தில் தள்ளப்பட்டு மலையினால் மூடப்பட்ட ப்ரஹ்லாதனுக்கு எதிரில் வந்து தோன்றின ப்ரஹ்லாத வரதன். இவருடைய வைபவம் ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் ப்ரஸித்தம். இந்த ஸந்நிதியின் லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன், ‘𑌜𑍍𑌵𑌾𑌲𑌾𑌹𑍋𑌬𑌿𑌲 𑌮𑌾𑌲𑍋𑌲 𑌕𑍍𑌰𑍋𑌡 𑌕𑌾𑌰𑌞𑍍𑌜 𑌭𑌾𑌰𑍍𑌗𑌵𑌾𑌃। 𑌯𑍋𑌗𑌾𑌨𑌨𑍍𑌦 𑌶𑍍𑌛𑌤𑍍𑌰𑌵𑌟 𑌪𑌾𑌵𑌨𑌾 𑌨𑌵𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑌃॥’ என்று இந்த க்ஷேத்ர மாஹாத்ம்யத்தில் சொல்லப்பட்ட ஒன்பது ந்ருஸிம்ஹர்களில் சேர்ந்தவரல்லர். இவர் வேங்கடாசல மாஹாத்ம்ய ப்ரதிபாத்யர். ஆகாஶராஜ புத்ரியாய் அவதரித்த பத்மாவதிக்கும் ஸ்ரீநிவாஸனுக்

கும் வைவாஹிகோத்ஸவம் நடந்தபொழுது, பிராட்டி, பகவதாராதந பூர்வகம் ததீயாராதநம் பண்ணித் தன்னைப் பாணிக்ரஹணம் பண்ணிக்கொள்ளுமாறு நியமிக்க, ஸ்ரீநிவாஸனும் இம்மலையிலுள்ள ஒன்பது ந்ருஸிம்ஹர்களுள் ஒருவரான லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை இங்கு எழுந்தருளப்பண்ணி ஆராதித்து, ததீயாராதநத்தை நடத்திப் பாணிக்ரஹணம் பண்ணிக்கொண்டதாக அப்புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு நிதர்ஶநமாக இதோ தெற்கிலுள்ள மண்டபத்தில் இப்பொழுதும் ஸ்ரீநிவாஸன் எழுந்தருளி யிருக்கிறார் பார். ஆகையால் தான் இம்மண்டபத்தைக் 'கல்யாண மண்டபம்' என்று வ்யவஹரிக்கின்றார்கள். இக்கதையை அநுஸரித்து, விபவத்தில் ஸ்ரீ சக்ரவர்த்தித்திருமகனால் ஆராதிக்கப்பட்ட ஸ்ரீரங்கநாதனுக்கும், அர்ச்சா ஸமாதியில் ஸ்ரீநிவாஸனால் ஆராதிக்கப்பட்ட இந்த லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்கும் ஸாம்யத்தைப் பெரியோர் கூறுவர். "ஸஹ பத்ந்யா விஶாலாக்ஷ்யா நாராயணமுபாகமத்' என்கிறபடி பத்நீ ஸஹிதனாய் ஸ்ரீ ரங்கநாதனை ஆராதித்த சக்ரவர்த்தித்திருமகன், மறுநாளே ராஜ்ய லக்ஷ்மியை இழந்தார். இவரை ஆராதித்த ஓர் மலைவாஸி நித்யம் ஸ்ரீநிவாஸன் ஆனான் என்றும் சிலர் சாடூக்தி. இங்கு நிற்பவர் தான் அஹோபிலம் ஜீயர். இவரோடு 40 - ஜீயர்களாய் இந்த க்ஷேத்ரத்தின் தர்மங்களைப் பரிபாலித்து வருகிறார்கள். இவர்களில் முதன்மையானவர் ஆதிவண் சடகோபஜீயர் என்பவர். அவர் திருநாராயணபுரத்தில் கிடாம்பி கேஶவாசார்யர் குமாரராய் அவதரித்து, பால்யத்திலேயே ஸர்வ ஶாஸ்த்ர விஶாரதராய், காஞ்சீபுரத்தில் நிகமாந்த மஹாதேசிகன் ப்ரஶிஷ்யராய், ந்ருஸிம்ஹோபாஸநத்தால் ஒரு நாழிகைக்கு நூறு ஶ்லோகம் பண்ணும் கடிகாஶதம் அம்மாளிடத்தில் ஶாரீரக பாஷ்யாதி காலக்ஷேபம் பண்ணிக்கொண்டிருக்கும்போது, இச்சிங்கவேழ்குன்றத் தெம்பெருமான் ஸ்வப்நத்தில் சென்று 'கிடாம்பி ஸ்ரீநிவாஸாசார்யரே! நீர் தெய்வமல்லால் செல்லவொண்ணாச் சிங்கவேழ்குன்றமேற வந்து, நம்மிடத்தில் ப்ரேஷமந்த்ர துர்யாஶ்ரமாதிகளை ஸ்வீகரித்து, நம் நவமூர்த்திகளில் ஒருவரை நித்யமாக ஆராதித்துக்கொண்டு, க்ராம நகரங்கள்தோறும் சென்று, ராமாநுஜ ஸித்தாந்தத்தைத் தழைக்கச் செய்யும்' என்று நியமிக்க, அவரும் விஸ்மிதராய், தம் ஆசார்யரிடத்தில் ஸ்வப்நத்தை விஜ்ஞாபித்து, அவருடைய நியமநத்தின் பேரில் இந்த அஹோபிலத்திற்கு வந்து, ஸ்வப்நத்தில் நியமித்தபடி பிக்ஷு ரூபியாய் வந்த லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனிடத்தில் ப்ரேஷ துர்யாஶ்ரமாதிகளை ஸ்வீகரித்து, நவமூர்த்திகளில் ஒருவரான லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனைத் தமக்கு ஆராத்யராக எழுந்தருளப்பண்ணிக்கொண்டு, க்ராமைகராத்ரமாகச் சென்று, தம் அடியார்களைத் திருவிலச்சனை காலக்ஷேப பரஸமர்ப்பணாதிகளாலே உஜ்ஜீவிப்பித்துக்கொண்டு, ராமாநுஜ ஸித்தாந்தத்தைத் தழைக்கச்செய்து வந்தார். அவர், தம் ஶிஷ்யனாய் இருந்த விஜயநகரம் ராஜாவான முகுந்த தேவராயன் மூலமாக இந்தத் திவ்யதேசத்தின் நித்யோத்ஸவாதிகளை நடத்திவந்தார். அது முதல் இது பர்யந்தம் இந்தத் திவ்யதேசம் பரம்பரையாக அஹோபிலம் ஜீயர்களுக்கு ஸர்வ ஸ்வாதீநமாய் இருக்கிறது. 'அஹோபிலே ஸ்ரீ ந்ருஸிம்ஹாத் ப்ரைஷமந்த்ரம் ஸமாப்நுவந்' என்கிறபடி ந்ருஸிம்ஹன் உபதேசித்த ப்ரேஷமந்த்ர பரம்பரை இந்த ஸந்நிதி ஜீயர்களுக்கு வருவதால், பெரியோர் இந்த ஸம்ப்ரதாயத்திற்கு எற்றம் கூறுவர்" என்றான்.

பிறகு இருவரும் அந்த ஸந்நிதியை ப்ரதக்ஷிணம் செய்து கொண்டு வருகையில், மதுராலாபன் ஓ! வல்குபாஷண! இந்த நூற்றுக்கால் மண்டபத்தைப் பார். இதிலுள்ள பிம்பங்களின் ஸௌந்தர்யத்தைக் கருது. இந்த மண்டபமும், கரஞ்சீபுரத்தில் வரதன் ஸந்நிதியில் பார்த்த நூற்றுக்கால் மண்டபமும் ஆதிவண் ஶடகோப ஜீயரின் நியமநத்தின்பேரில் முகுந்த தேவராயனால் கட்டப்பட்டன. இந்த ஐதிஹ்யத்திற்கு நிதர்சநமாகக் காஞ்சீபுரம் மண்டபத்தில் ஒரு ஸதம்பத்தில் லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனும் அதற்கு எதிரிலுள்ள மற்றொரு ஸ்தம்பத்தில் ஆதிவண் ஶடகோப ஜீயரும் இருப்பதை இப்பொழுதும் காணலாம். இந்த மண்டபத்திலும் வ்ருத்த யதியான லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனையும் அவரிடத்தில் காஷாயாதிகளை ஸ்வீகரித்த ஆதிவண் ஶடகோப ஜீயரையும் பார்.

இந்த மண்டபம் முடிவதற்கு முன் முகுந்த தேவராயன் காலஞ் சென்றபடியால் இது முடிவை யடையாமல் போய்விட்டது." என்று சொல்ல, வல்குபாஷணனும் அவைகளைச் செவியுற்று ஸந்தோஷித்தான். பிறகு இருவரும் ஸம்ப்ரோக்ஷத்தின் முடிவையும், அன்று நடந்த கருடோத்ஸவத்தையும் ஸேவித்து க்ருதார்த்தர்களாய், உதித்தவுடனே நவந்ருஸிம்ஹர்களையும் ஸேவிக்கக் கருதி விமாநத்தில் ஏறினார்கள். விமாநம் ஆகாயமார்க்கமாய்ப் போய்க்கொண்டிருக்கையில், மதுராலாபன் "ஓ! நண்ப! இதோ மேற்கில் ஒரு குளம் தெரிகின்றது பார். இதற்கு 'ஆழ்வார் கோனேரி' என்று பெயர். இதோ தெற்கில் விசித்ரமான கட்டிடத்தோடு ஓர் நடவாபி தெரிகின்றதே. இதற்கு 'லக்ஷ்மீ தீர்த்தம்' என்று பெயர். இதோ கிழக்கிலுள்ள தீர்த்தம் 'ஹநுமத் தீர்த்தம்.' இதோ கிழக்காக ஸ்ரீ வைஷ்ணவ ஸங்கம் போகின்றது பார். அதனுடன் நாமும் போவோம். அங்கு இரண்டு மைல் தூரத்தில், '𑌭𑌾𑌰𑍍𑌗𑌵𑌾𑌖𑍍𑌯𑌂 𑌮𑌹𑌾𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌘𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 । 𑌤𑌥𑍈𑌵 𑌹𑍍𑌯𑌕𑍍𑌷𑌯𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌰𑌕𑍍𑌷𑌕𑌂 𑌸𑌰𑍍𑌵𑌜𑌨𑌸𑍍𑌯 𑌚 । 𑌤𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍇 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌦𑍇𑌵𑍇𑌶𑍋 𑌹𑍍𑌯𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌨𑍃𑌕𑍇𑌸𑌰𑍀' என்றும், '𑌭𑌾𑌰𑍍𑌗𑌵𑍇 𑌤𑍀𑌰𑍍𑌥𑌰𑍂𑌪𑍇 𑌚 𑌸𑌦𑌾𑌸𑍍𑌤𑍇 𑌨𑍃𑌕𑍇𑌸𑌰𑍀' என்றும் சொல்லப்பட்ட மஹா புண்யமான பார்க்கவ க்ஷேத்ரமும், அமோக்ஷ்யமாய் லோக பாவநமுமான பார்க்கவ தீர்த்தமும் இருக்கின்றன. அங்கு ஸமீபத்திலுள்ள ஓர் மலையில் பார்க்கவ ந்ருஸிம்ஹன் ஸர்வாபீஷ்டப்ரதனாய் எழுந்தருளியிருக்கிறார். அவரை விமாநத்தினின்றே ஸேவிப்போம் வா. இதோ, கீழ் அஹோபிலம் ஸந்நிதிக்கு ஆக்நேயத்தில் ஓர் ஸந்நிதி தெரிகின்றது பார். இது யோகாநந்த ந்ருஸிம்ஹன் ஸந்நிதி. இவர் யோக பட்டையுடன் ஸேவை ஸாதிக்கிறார். இவர் ப்ரஹ்லாதனுக்கு யோகாப்பாஸத்தைப் பண்ணிவைத்தபடியால் 'யோகா ந்ருஸிம்ஹன்' என்று பெயர் பெற்றார். இதை '𑌵𑍇𑌦𑌾𑌦𑍍𑌰𑍇𑌃 𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑍇 𑌭𑌾𑌗𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌤𑌪𑍋𑌵𑌨𑌮𑍍 । 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑍋 𑌦𑍇𑌵𑍋 𑌯𑍋𑌗𑌾𑌨𑌨𑍍𑌦𑍋 𑌨𑍃𑌕𑍇𑌸𑌰𑍀 ॥ 𑌯𑍋𑌗𑌾𑌭𑍍𑌯𑌾𑌸𑌂 𑌚 𑌕𑍃𑌤𑌵𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌹𑍍𑌲𑌾𑌦𑌸𑍍𑌯 𑌉𑌪𑌾𑌸𑌨𑌂 । 𑌤𑌦𑌾𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌿 𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌯𑍋𑌗𑌾𑌨𑌨𑍍𑌦 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃' என்னும் புராண ச்லோகங்களாலும் காணலாம். இதோ அதற்கு ஒரு மைல் மேற்கில் பாகவதர்களின் கூட்டம் போவதைப் பார். அங்கே தான் சத்ரவட ந்ருஸிம்ஹன் ஸந்நிதி. அவர் இந்த்ராதி ஸேவித பதபங்கஜராய்க் கிழக்கு முகமாக நின்று லோகத்தை அநுக்ரஹிக்கிறார் என்று '𑌤𑌥𑌾 𑌛𑌤𑍍𑌰𑌵𑌟𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍀𑌰𑍍𑌥𑌰𑍍𑌷𑌿𑌭𑌿𑌰𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌂 । 𑌯𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍇 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌚𑍀 [illegible] 𑌕𑍇𑌸𑌰𑍀 ॥' என்னும் புராண ச்லோகத்தால் ஸ்துதிக்கப்பட்டவர். ஸமீபத்தில் சென்று ஸேவிப்போம் வா. இதோ ஸேவார்த்திகள் கர்ப்பூரம் முதலான உபஹாரங்களைக்கொண்டு, கையில் தீவட்டியுடன் ஸந்நிதியில் ப்ரவேசிக்கிறார்கள் பார். இங்கே மிகவும் இருட்டாகையால், தீபமில்லாவிடில் பகவத் ஸேவை கிடைப்பது அரிது. இவருடைய ஸௌஷ்டவம் மற்ற எட்டு ந்ருஸிம்ஹர்களுக்கும் இல்லை. இங்கு ஸமீபத்தில் வந்து ஸேவி. ஆனால் இந்த ஸந்நிதி புற்றினால் ஆக்ராந்தமாய் விட்டது. இனி எப்படி யாகுமோ? இந்த மூன்று திவ்யதேசங்களும் கீழ் ஸந்நிதிக்குச் சுமார் இரண்டு இரண்டரை மைல் தூரத்தில் உள்ள குன்றுகளில் இருக்கின்றன. இனி மேலே போவோம் வா" என்று சொல்லிக்கொண்டே மேல் அஹோபிலம் சென்றார்கள்.

(இன்னும் வரும்)

அஹோபில யாத்ரை செய்த பௌராணிகர்.

ஜநகநந்தினி.

வைசாக உத்ஸவம் வழக்கப்படிதான் நடந்தது. வேதகோஷ்டியும் அவ்விதமே நடந்தேறிற்று. அத்யாபக கோஷ்டிகளும் அப்படியே. போலீஸ் கோஷ்டியும் பழையபடியே. கலகங்களும் முன் போலவே. அதிகாரிகளும், அயலூர்களைக் காட்டிலும் அவ்வூரில் தம் உத்யோகம் பெருத்ததாக வெண்ணி வ்யாபரித்தார்கள். ஸேவார்த்திகளின் கூட்டமும் முன்போலவே தான். பகவானும், நவம்நவமாகவும் அதிகம் அதிகமாகவும் திருமேனியின் சோபையைத் தரித்தான். ஒன்றும் குறைவுபட்டதன்று. ஆகிலும் இவை யாவும் கானிடை வதியக் கருத்துடையார்களான கேசவாசார்யர் இல்லத்தவர்க்கும் ஸ்ரீநிவாஸனுக்கும் களிப்பளிக்கின்றன வில்லையே! வஸ்துக்கள் வஸ்து ஸ்வபாவத்தால் ஸுககரமாகவும் துக்ககரமாகவும் பரிணமித்தலில்லை. போக்தாவின் சித்த ஸ்வபாவத்தால் அவற்றிற்கு ஸுகதுக்க ஹேதுத்வம் சொல்லப்படுகின்றது. வஸ்துக்களை த்யாகம் செய்ய, ஸமர்த்தர்க்குப் பரமார்த்த வஸ்துவான வரதன், எத்துணையும் பரமபோக்யமான பொருள் ஆகின்றான். அந்த மனோநிலை ப்ரயத்நத்தாலும் அப்யாஸத்தாலும் யாரோ ஒருவர்க்கு உண்டாகத்தக்கது. அப்படிப்பட்ட அதிகாரி கேசவாசார்யர். ஆகிலும், அவர் ஜநகத்தை நினைத்தாராகில் உடனே கொஞ்சம் சித்தகாலுஷ்யம் அடைவர்.

ஜநகம் ஸந்மார்க்கத்தில் வளர்க்கப்பட்டாள். அவள் பாரமைகாந்த்யத்தை அடைவதற்குத் தக்க ஸாமக்ரியை ஸம்பாதித்தாள். ஆனாலும், ப்ரக்ருதி ஸம்பந்தம் எளிதில் ஜயிக்கக்கூடியதன்று. தனக்கு நேர்ந்த கஷ்டத்தை நினைத்து நினைத்து உருகிநின்றாள். ஆகாரத்தில் ருசிகொண்டாளில்லை. நித்ரை அவளுக்கு ஸுலபமாக வந்ததில்லை. அவள் வேண்டுமென்று இச்சிக்காமலே அவளுடைய சரீரம் இளைத்தது. வேறெங்கும் காணாதவண்ணம் அவள் முகத்தில் விளையாடிய காந்தியானது குறைவுபட ஆரம்பித்தது.

யுதைக் கேசவாசார்யர் கண்டார்; வருத்தம் கொண்டார். அதற்குத் தக்க பரிஹாரம் அவர் யோசனைக்கு எட்டவில்லை.

உத்ஸவம் கழிந்தபிறகு ஒரு நாள் மத்யாஹ்நம் கேசவாசார்யர் நடைத் திண்ணைமீது உட்கார்ந்து புஸ்தக நிரீக்ஷணம் செய்துகொண்டிருக்கையில், ஜநகநந்தினி வந்து ஸேவித்தாள்; எழுந்து நின்றாள்.

“ குழந்தாய்! என்ன வேண்டுகின்றாய்? ” என்றனர் கேசவாசார்யர்.

“ அப்பா! என் மநஸுக்கு ஆறுதல் உண்டாகவில்லை” என்று சொன்னாள் ஜநகநந்தினி.

“பகவத் பக்தி வளரவும் வைராக்யம் நிலைப்படவும் ஸ்ரீ பாகவதம் வாசிக்கலாமே! முன்னமே என்னிடம் அதை நன்றாய்ப் படித்திருக்கின்றாயே! ஸர்வ லோகத்தார்க்கும் ஹ்ருதயங்கமனான வாஸுதேவன் திவ்ய கதைகள் உனக்குச் சித்த வைசத்யத்தை அளிக்குமே. ஸ்ரீ பகவத் விஷயத்தைச் சிந்திக்கக் கூடாதோ! ஆழ்வாருடைய அநுபவத்தில் ஏகதேசம்கூட பரம சாந்தியை உனக்கு உண்டாக்குமே! மாயையின் கட்டைத் தளரச்செய்யுமே! பகவானுடைய தர்சந ஸமாநமான ப்ரத்யக்ஷத்தையும் தந்திடுமே! நாமிருவரும் சேர்ந்து பகவத்குணாநுபவம் செய்யலாமா? ” என்று கூறினார் கேசவாசார்யர்.

“ இதெல்லாம் செய்யலாம். என் சித்தம் என்னை அந்த வழிகளில் போகவொட்டாது. அவ்விதம் ப்ரயத்நம் செய்தேன். அது முடியவில்லை. இன்ன விதமென்று தெளியவொட்டாமலே ஒரு க்லேசம் என் உள்ளத்தில் குடிகொண்டது. எவ்வளவு படித்தாலும் எம்மட்டும் கேட்டாலும் அதற்குப் 'பரிஹாரம் உண்டாகமாட்டாதுபோல் தோன்றுகின்றது. எனக்கு வேறு ஆச்ரயமிலது. ஆதலால் தேவரீரை இவ்வண்ணம் வருத்துகின்றேன் ” என்று ஜநகநந்தினி சொன்னாள்.

கேசவாசார்யர் அச்சொற்களைக் கேட்டார். என் செய்வர்? எவ்வளவு தத்வஜ்ஞாநம் ஸம்பாதித்தால் என்ன? அந்த ஸமயத்துக்கு அது உதவவில்லை. அவர் பெற்றெடுத்த கண்மணியானவள் சோகத்தில் மூழ்கி எதிரே நின்றாள். அவர் வித்யாப்ரதாநம்

பண்ணின பெண்மணியானவள் ஒரு போக்கும் அற்றவளாய் அவரைப் பரிஹாரம் கேட்கின்றாள். எவ்வளவு தூரம் யோசித்த போதிலும் உலகவழியில் அவளுக்குப் பரிஹாரம் இல்லை.

“அம்மா! உனக்காக நான் என்ன செய்ய வேண்டுகின்றாய்? இந்த லோகத்தில் நம்மைக் காப்பாற்றுவார் இல்லை. பேரருளாளனைச் சரணமடைவாயாக. அவனைத் தவிர நமக்கோர் துணையில்லை” என்று சொன்னார்.

“அப்பா! இங்கே இருக்க எனக்கு ப்ரியமில்லை. தேசாந்தரம் போவோம். நூதநமான காட்சிகளைக் கண்டு என் துக்கத்தை ஶமிப்பிக்கப் பார்க்கின்றேன்” என்று சொன்னாள் ஜநகநந்தினி.

“குழந்தாய்! திவ்யதேசயாத்ரை செய்யலாமா? அங்கங்கே சென்று பெருமாளுடைய திவ்ய மூர்த்திகளுடைய தர்சநம் செய்யலாமா?” என்று கேட்டார் கேசவாசார்யர்.

“அதைத்தான் வேண்டுகின்றேன்” என்றாள் ஜநகம்.

“அம்மா! அப்படியே செய்வோம்” என்றார் கேசவாசார்யர். ஜநகம் உள்ளே போனாள்.

கேசவாசார்யர், பிறந்த நாள் முதல் காஞ்சீபுரத்தை விட்டு வெளியில் சென்றதில்லை. அவர் உபாஸித்த தெய்வம் வரதனே. மற்றோரிடத்தில் பகவானுடைய அர்ச்சாரூபமான மூர்த்தியை அவர் தர்சித்ததில்லை. தூமசகடம் ஏறினதில்லை. தேசாந்தர ஸஞ்சாரம் செய்ய அவர் அத்யந்தம் அஶக்தர். என் செய்வர்! வழக்கப்படி அன்றிராத்ரி பகவத் ஸந்நிதிக்குப் போகும்போது, பத்மநாபாசார்யருடன் யோசிப்பதாக எண்ணி முடித்தார்.

ராத்ரி ஸந்நிதியில் கேசவாசார்யரைப் பத்மநாபாசார்யர் பார்த்து, “ஸ்வாமிந்! குழந்தை என்னமா யிருக்கின்றாள்?” என்று விசாரித்தார்.

“கஷ்டப்படுகின்றாள்; ஆஶ்வாஸநம் இல்லை. எங்கேயாவது போகவேண்டு மென்று சொல்லுகின்றாள். திவ்ய தேச யாத்ரையாக அழைத்துக்கொண்டு போவதாய்ச் சொல்லி ஸமாதாநப்படுத்தி யிருக்கின்றேன். அதை எப்படி ஸாதிப்பேனோ தெரியவில்லை” என்று கேசவாசார்யர் சொன்னார்.

“தேவரீருக்கு அது மிகவும் கஷ்டமாச்சுதே. தேச ஸஞ்சாரமென்பதே தேவரீர் அறியமாட்டாதே. தூமஶகடம் ஏறி ப்ரயாணம் செய்ய ஸம்மதிக்குமோ?” என்றார் பத்மநாபாசார்யர்.

“தூமஶகடம் ஏற எப்படித் துணிவேன்? அதனால் ஸம்பவிக்கும் தீட்டையும் எச்சிலையும் எவ்வண்ணம் ஸஹிப்பேன்? லோகத்தார் பழிப்பு ஒரு பக்கம் இருக்கட்டும். அடியேனுக்கு நினைக்க அருவருப்பா யிருக்கின்றதே” என்று சொன்னார் கேசவாசார்யர்.

“கஷ்ட காலங்களில் மஹநீயர்களும் விதியில்லாமல் தூமஶகடம் ஏறுகின்றார்கள். இது தேவரீர்க்குக் கஷ்டகாலமே. ஆனாலும் தேவரீர் தனியே ப்ரயாணிக்க முடியாது. அடியேன் தேவரீருடன் வருகின்றேன். தேவரீருடைய யஶஸ்ஸு விபுலமானது. அதைக்கொண்டு தேவரீரை யதாஸுகம் அழைத்துக்கொண்டு போகின்றேன்” என்று சொன்னார் பத்மநாபாசார்.

“தேவரீருடைய யோகக்ஷேமங்களை யெல்லாம் கைவிட்டு அடியேனுடன் ப்ரயாணிக்க ஸம்மதிக்கின்றதே! தேவரீரைப் போல் பரம ஸுஹ்ருத் ஆருண்டு? தேவரீருடைய உபகாரத்தை நிராகரித்து ப்ரயாணம் செய்யவும் அடியேன் அஶக்தன்” என்று கேசவாசார்யர் சொன்னார். இவ்வண்ணம் திவ்ய தேசஸஞ்சாரம் ஜநகநந்தினிக்கு அமைந்தது.

ஒரு வாரத்துக்குள்ளாகக் கேசவாசார்யரும் ஹரிப்ரியையும் ஜநகநந்தினியை அழைத்துக்கொண்டுப்ரயாணப்பட்டார்கள். ஜநகநந்தினியின் கல்யாணத்துக்கும் கஷ்டத்துக்கும் தாம் வ்யாஜமாக நினைத்த பத்மநாபாசார்யரும், கேசவாசார்யரிடம் தமக்குண்டாயிருந்த பரமஸ்நேஹத்தின் காரணத்தையிட்டு அவர்களுடன் ப்ரயாணப்பட்டனர். அவர்கள் ப்ரயாணம் செய்த க்ரமத்தில் தூமஶகடத்தின் நிர்ப்பந்தங்களை விசேஷமாக அநுபவிக்காமல் சென்றார்கள்.

முதலில் ஸ்ரீமதுராந்தகம் வந்து சேர்ந்தார்கள். ஸ்நாநார்த்தம் யாவரும் அந்த ஊர் தடாகம் சென்றார்கள். ஜநகம் தடாகத்தைப் பார்த்தாள். அவ்வளவு விஸ்தாரமான ஜலாஶயத்தை அவள் என்றும் கண்டவள் அல்லள். அதைக் கண்டு அவள் விஸ்மயம் கொண்

டாள். அவள் மநஸ்ஸை அது ஆகர்ஷித்தது. அதில் நீராடி த்ருப்தி யடைந்தாள்.

கேசவாசார்யருடைய க்யாதியும் கஷ்டமும், ஸமீபதேசமானபடியால், மதுராந்தகத்தில் யாவர்க்கும் தெரிந்தவையே. ஸ்த்ரீ புருஷர்கள் எல்லோரும் அவரையும் ஜநகத்தையும் நன்றாகப் பார்த்தார்கள். வாடின புஷ்பம்போன்ற அவள் முகத்தையும், ஸத்வ்ருத்தத்தில் படிந்தவளெனக் காட்டும் அவள் நடையையும் பார்த்த ஜநங்கள், ‘சந்திரனைப் பழிக்கப்பெற்ற பருவத்தாளை, அருள் நிறைந்த நாட்டத்துடன் கூடிய அக்கண்ணினாளை, மயிலின் தோகையைப்போல் விளங்கும் அக்கூந்தலுடையாளை, மண்ணெல்லாம் செய்த புண்ணிய மனைத்தும் திரண்டு பலித்தாற்போல் வந்துதித்த அக்கீர்த்தி பொருந்திய பெண்மணியைப் பெற்றும் இழப்பதோர் துர்பாக்யம் உண்டோ? இதற்கும் துணிவதோர் வைராக்யம் உண்டோ? ஆனதற்கு, ஆகாததைக் கொண்டிணைத்த ஈசன் செயல் என்ன விபரீதம்!!’ என்று ஸம்பாஷித்தார்கள்.

மத்யாஹ்நம் பகவத் ஸேவார்த்தம் ஸந்நிதிக்குக் கேசவாசார்யர், பத்மநாபாசார்யர், ஹரிப்ரியை, ஜநகநந்தினி முதலானோர் போனார்கள். ஸீதாலக்ஷ்மண ஸமேதனான ராமபத்ரனைத் தர்ஶித்தார்கள். பிறகு இருப்பிடத்துக்குத் திரும்புங்கால், கேசவாசார்யர் பெண்ணைப் பார்த்து இவ்வண்ணம் மொழிந்தார் :—

“ஜநகம்! பெருமாளை ஸேவித்தையே! இதன் ப்ரயோஜநத்தைப்பற்றிச் சிந்திக்கின்றையோ? ஸீதா லக்ஷ்மணர்களுடன் ஸ்ரீராமன் ஆரண்யவாஸம் செய்தார். பகவான் ராக்ஷஸர்களால் அமரர்கள் அடைந்த துயரத்தை நிவர்த்திக்க அவதரித்தாரென்பார்கள். அதுவே அவதார ப்ரயோஜநமன்று. அவரை த்யாநித்துத் தபஸ் செய்த ருஷிகளுக்கு ராவணாதிகளால் ஸம்பவித்த உபத்ரவத்தை நீக்கி, அவர்களுடைய த்யாநம் ஸுகரமாய் வளரும்படியும், அவர்களுடைய கரணங்கள் விஷயங்களில் பாய்ந்தோடாம லிருக்கவேண்டியும், நீருண்ட மேகம் போன்ற திருமேனியையும், செந்தாமரைக் கண்களையும், தநுஸ்ஸையும் சரத்தையும் ஏந்திய கைகளையும், அவர்க்கு த்யாநவிஷயமாகக் காட்டியருளினார் என்பார்கள். அதுவே அவதார ப்ரயோஜநமன்று. லோகத்தில் ப்ரியத்தைத் தேடும் பலர்க்கு அது கிட்டுவதில்லை. அப்ரியத்தை விலக்கவேண்டி முயல்வோர்க்கும் அது விட்டுப் போவதுமில்லை. இந்த ஜகத்தானது துக்கமயமானது. துக்காநுபவம் பண்ணும் ஜநங்கள் அது பகவத்க்ருபையால் உண்டாகின்றதென்று நினைப்பது துர்லபம். கர்மம் கழியும் மார்க்கம் அதுவேயாம். பகவான் ஸ்வதந்த்ரன். ‘𑌰𑌸𑍋 𑌵𑍈 𑌸𑌃, 𑌰𑌸𑌂 𑌹𑍍𑌯𑍇𑌵𑌾𑌯𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾𑌨𑌨𑍍𑌦𑍀 𑌭𑌵𑌤𑌿’ என்று உபநிஷத் சொல்லிற்று. அவன் ஶுத்த ஆநந்தஸ்வரூபி. அவனை யடைந்த சேதநன்தான் நிஜமாக ஆநந்தமடைந்தவனாகின்றான். அப்படிப்பட்ட ஆநந்தமயனான ஸர்வேஶ்வரன், க்ரமமாக ப்ராப்தமான ராஜ்யத்தைப் பெறுங்காலே இழந்தான். ஸாதாரண ஜநங்களைப்போல் ஜீவிக்கப் பொருந்தாமல், அவனுக்கு வநவாஸம் ஏற்பட்டது. வநத்தில் போய் வஸிக்குங்கால், பத்நியை ராவணன் அபஹரித்தான். அப்படிப்பட்ட ராவணனைத் தடுக்கச்சென்ற மஹா ஸுஹ்ருத்தான ஜடாயுவானவர் ராவணனால் கொல்லப்பட்டார். “இப்படிப்பட்ட எனது அலக்ஷ்மீயானது நெருப்பையும் கொளுத்திவிடும்” என்று ஸ்ரீராமனே சொன்னார். மஹா ஸங்கடங்களையெல்லாம் கடந்து, பகுப்ரயத்நத்தாலே ராவணாதிகளை ஸம்ஹரித்து, ஸீதையை மீட்டனர். ராக்ஷஸ க்ருஹத்தில் அவள் வஸித்தாள் எனும் அபவாத ப்ராயஶ்சித்த நிமித்தமாகவும், லோகத்தார் அவள் பதிவ்ரதை என்று விஶ்வஸிக்கும்படியாகவும், ஸீதை அக்நிப்ரவேசம் செய்கையில் உபேக்ஷையாக நின்றார். பிறகு ராஜ்யத்தில் பட்டாபிஷிக்தராய் இருந்தவளவில், ஜநங்களுக்குள் ஸீதா ஸம்பந்தமான அபவாதம் நிலைத்திருப்பதைக் கண்டு, ஸீதையை விவாஸநம் செய்துவிட்டுத் தனியாக ராஜ்யபாரம் செய்தார். பிறகு லக்ஷ்மண வியோகமும் நேரிடவே, துக்கம் முற்றுப் பெற்றதாகத் தெரிந்துகொண்டு, மஹா ப்ரஸ்தாநமெனப்பட்ட விதியை ஆஶ்ரயித்துத் தமது விஷ்ணு ஸ்வரூபத்தில் லயித்தனர். த்யாந நிமித்தமாகச் சித்தத்துக்கு மிகவும் ஶுபாஶ்ரயமென்று மஹர்ஷிகளால் நிஶ்சயிக்கப்பட்ட ஸ்ரீராமசந்த்ரன் துக்கமயமானதோர் ஜீவநத்தை அவலம்பித்தார். அதற்குக் காரண மென்னவென்றால், சரீரப்ராப்தியானது யாவர்க்கும் துக்கமயமானதென்று காட்டவேண்டுமென்பதே. ஜந்மம், மரணம், வ்யாதி, ஜரை, அநிஷ்டப்ராப்தி, இஷ்டவியோகம், அநீஶத்வம், இம்மாதிரியான துக்க ஸஹஸ்ரங்களை யநுபவிக்காதவர் யாவர்? இன்னும், “எவனை அநுக்ரஹிக்க ஸங்

கல்பிக்கின்றேனோ, அவனுடைய வித்தத்தை ஹரிக்கின்றேன். அவனுக்கு ஸதா பந்துவியோகத்தை உண்டாக்குவேன். இவ்வண்ணம் கஷ்டப்படுகையில் அவனுக்கு என்னிடம் பக்தி நிலைத்ததாகில், இந்த்ராதிகட்கும் கிட்டாத ப்ரஸாதத்தை அவனிடம் செய்வேன்" என்று பகவான் தாமே சொன்னாரன்றோ? இவ்வண்ணம் ஸ்ரீராமசந்த்ரனுடைய அவதாரமானது துக்கப்பட்டவர்களுக்கெல்லாம் துக்கமே பகவத்ப்ராப்தி ஹேதுவாகலாம் என்று காண்பிக்கவென்று தோன்றுகின்றது. குழந்தாய்! நீயும் உன் வ்யஸநத்தை ஜயித்தவளாய்க்கொண்டு, பகவத்க்ருபையானவள் உனது ரக்ஷணார்த்தம் அவஸர ப்ரதீக்ஷையாய் நிற்கின்றாளென்று தைர்யம் கொள்ளவேண்டும்.

இவ்வண்ணம் ஸம்பாஷித்துக்கொண்டே கேசவாசார்யர் முதலானோர் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள். மதுராந்தக வாஸம் நாலு நாள் செய்து, பின் திருவஹீந்த்ரபுரம் சென்றனர். அங்கே கருடநதியில் தீர்த்தமாடி, நித்யகர்மங்களைச்செய்து முடித்தார்கள். தேவநாதனை ஸேவித்துப் பின் மலை மீதேறி ஹயக்ரீவனையும் வணங்கினார்கள். அதன் பிறகு, இருப்பிடம் நோக்கித் திரும்பும்போது, கேசவாசார்யர் ஜநகநந்தினியைப் பார்த்துச்சொல்லவாரம்பித்தனர்:—"ஜநகம்! ஜ்ஞாநத்தாலும் வைராக்யத்தாலும் நம்முடைய பூர்வாசார்யர்களுக்குள் ஸர்வோத்க்ருஷ்டமான ஸ்தாநத்தை அடைந்த நிகமாந்தமஹாதேசிகன் உகந்தருளிய ஔஷதாத்ரி எனப்பட்ட குன்று இது. ஆசார்யோபதிஷ்டமான வைநதேய மந்த்ரஸித்தியின் பொருட்டுத் தேசிகன் இவ்வரையை அடைந்தனர். இங்கே வைநதேயன் தேசிகனுக்கு ப்ரத்யக்ஷமாகி ஹயக்ரீவ மஹா மந்த்ரத்தை உபதேசித்தார். அம் மந்த்ரஸித்தியைப் பெற்றுத் தேசிகன், ஹயக்ரீவனுடைய விசேஷ கடாக்ஷத்தையும் இவ்விடம் பொருந்தினார். ஆதலால் இந்த ஸ்தல விசேஷம் மந்த்ரஸித்தியையும் தேவதாப்ரத்யக்ஷத்தையும் வேண்டுகின்றவர்கள் சாருமிடம். இங்கே ஸர்வேஶ்வரன் தேவநாதனென்னுந் திருநாமம் கொண்ட காரணத்தை யோசிப்பாய். பெருமாள் கோவிலில் தேவாதிராஜனெனக் கொண்டாடப்படுகின்றான். ஏனென்றால், அங்கே அவன் அயர்வறு மமரர்கட் கதிபனாய் விளங்குகின்றான், இங்கே அந்த அமரர்களால் அதிஷ்டிதங்களான

இந்த்ரியங்கட்கு ஈசனாய் விளங்குகின்றான். அதனால் பரமபுருஷனுக்கு ஹ்ருஷீகேசன் என்றும் திருநாமமுண்டு. அவன் இந்தத் திவ்ய தேசத்தை யாஶ்ரயித்து, இந்த்ரியஜயத்தை அபேக்ஷித்துத் தன்னை உபாஸித்தவர்களுக்கு அதையும் தந்தருளினான். ஆதலால், தேசிகன் இந்தத் திவ்யதேசத்தில் மிகவும் உகந்தனர். நீயும் தேவநாதனை ப்ரார்த்தித்தாயாகில் மநஸ்ஸை ஜயிப்பாய். இந்த்ரியங்கள் உனக்கு வஶ்யமாய் நிற்கும். வைராக்யமும் உன் சித்தத்தில் நிலைகொள்ளும்" என்றிவ்வண்ணம் தன் புத்ரிக்குக் கேசவாசார்யர் உபதேசம் செய்தார்.

அவ்விடம் நாலு நாள் இருந்து, திருக்குடந்தைக்குச் சென்றார்கள். உப்பிலியப்பன் கோவிலுடைய அதிஸாமீப்யத்தால், அவ்விடம் ஒரே நாள் தான் இருந்தார்கள். ஆராவமுதனை ஸேவித்துவிட்டு இறங்கியிருந்த வீட்டுக்கு வரும்போது கேசவாசார்யர் பெண்ணைப் பார்த்து இவ்வண்ணம் ஸம்பாஷித்தார்:—"குழந்தாய்! இங்கே பெருமாளை ஸேவித்தையா? ஸர்வேஶ்வரன் இவ்விடம் திருக்கோயில் கொண்டருளி யிருக்கின்றான். இங்கே அவனுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை அபர்யாப்தாம்ருதம் [அதாவது - ஆராத அம்ருதம்] என்பார்கள். ஹ்ருதயாகாசத்தின் மத்யத்தில் யாவற்றையும் தன் வசமாக்கி நிற்பவனும், யாவற்றையும் தனக்கு ஶேஷமாயுடையவனும், யாவற்றையும் ஆள்பவனும், எல்லார்க்கும் ரக்ஷகனுமான பகவான் ஶயநிக்கின்றானென்று வேதம் சொல்லுகின்றது. அவனுடன் கூடவே ஜீவனும் அங்கே இருப்பதாகவும் சொல்லுகின்றது. ஆனால் ஜீவன் இந்த்ரிய ஜயமற்றவனாய் விஷயாஸக்த மநஸ்கனாய் ஸம்ஸரித்துக்கொண்டும் துக்கப்பட்டுக்கொண்டும் காலங் கழிக்கின்றான். இவற்றுள் நிர்வேதம் பிறந்து, இவற்றை முற்றிலும் துறந்து, தன்னுடனே ஹ்ருதய குஹையில் ப்ரகாசிக்கின்ற தனது ஈஶனை முழுபக்தியுடன் எப்போது காண்கின்றானோ, எப்போது, தான் முன் களித்துத் தேடிய ப்ருக்ருதியின் விகாரங்களையெல்லாம் அந்தக் கர்மாத்யக்ஷனுடைய மஹிமையென்று அறிந்துகொள்கின்றானோ அப்போது ஶோகத்

தை த்யஜிக்கின்றான். எப்போது ஸ்வர்ணமயமான தேஜஸ்ஸுடன் கூடினவனும், ஸர்வ லோககர்த்தாவும், ஸர்வலோகேஶ்வரனும், ஸர்வஹ்ருதயாந்தர்வர்த்தியும், ப்ரக்ருதிக்கும் காரணபூதனுமான வாஸுதேவனை ஸாக்ஷாத்கரிக்கின்றானோ, அப்போது புண்ய பாப ரூபமான உபயவித கர்மங்களாலும் விடப்பட்டவனாய்க் கொண்டு ஸர்வ ப்ரக்ருதி ஸம்பந்த விநிர்முக்தனாய் ஈஶ்வரனைப் போல் கேவலம் ஜ்ஞாநாநந்தமயனாக நிலைப்பான். இப்படியெல்லாம் ஶ்ருதி வெளியிடுகின்றது. இவ்வர்த்தங்களை இந்தத் திவ்ய தேசத்தில் எம்பெருமான் ஸேவை ஸாதிப்பது தெளிவிக்கின்றது. மேலே சொன்ன வண்ணம், ஸர்வ பந்தங்களையும் போக்கின ஜீவன், தன்னுடன் என்றும் பிரிவற்றிருக்கும் பெருமானைக் கண்டு, ஸேவித்து ஸேவித்து, ஆநந்தம் பெருகி, த்ருப்திபடாமல் இருக்கும் ஸ்திதியை யோசித்தே பகவானை இவ்வூரில் ஆராவமுதம் என்கிறார்கள். பகவான் எழுந்தருளியிருக்கும் கர்ப்ப க்ருஹம் தான் ஹ்ருதயம். ஜ்ஞாநத்தை யடைந்த ஜீவன் அங்கே சென்றவுடன், தானும் அவனும் பிரிவற்று ஒரே ஹ்ருதயத்தில் நிற்பதைக் கண்டுகொள்கின்றான். அந்த ஜ்ஞாநத்தால் ஸம்ஸாரத்தில் பற்றை விலக்கியவன், ரஸமென்றும் அம்ருதமென்றும் ஶ்ருதி சொன்ன பரப்ரஹ்மத்தை எவ்வளவு தூரம் அநுபவித்தும் பர்யாப்தியைப் பொருந்தமாட்டான். இவ்வர்த்தங்களை நீ யோசிப்பாய். ப்ராக்ருத விஷயங்கள் உன் மநஸ்ஸை இனி இழுக்காமலிருக்கும்படி நீ அதை அடக்கிவரவேண்டும். உன் முழு மநஸ்ஸும் பகவானிடம் நிலைக்கட்டும். தத்காலம் அவன் உனக்கு ஏகாஶ்ரயமாய் நிற்கின்றான்.''

இவ்வண்ணம் சொல்லிக்கொண்டே கேசவாசார்யர், தாம் இறங்கியிருந்த இல்லம் போய்ச் சேர்ந்தனர். மற்றோரும் அவருடனே அவ்விடம் அடைந்தார்கள். மறுநாள் யாவரும் ஸ்ரீரங்கத்தை உத்தேசித்து ப்ரயாணப்பட்டார்கள்.

பத்ராதிபர்.

புஸ்தக விமர்சம்.

1. **அஷ்ட ப்ரபந்தம்:** — அழகிய மணவாளதாஸரென்கிற திவ்யகவி ஸ்ரீ. பிள்ளைப்பெருமாளையங்கார் அருளிச்செய்த அஷ்டப்ரபந்தம் என்னும் க்ரந்தம், திருவல்லிக்கேணி ஸ்ரீ. வை. மு. ஶடகோப ராமாநுஜாசார்யர், சே. க்ருஷ்ணமாசார்யர், வை. மு. கோபால க்ருஷ்ணமாசார்யர் ஆகிய இம்மூவரால் இயற்றப்பட்டுள்ள விரிவான உரையுடன் பதிப்பிக்கப்பட்டு, திருவல்லிக்கேணி தென்னண்டை மாடவீதி 19-நெ. க்ருஹத்திலிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய புஸ்தக ஶாலையில் ப்ரதி யொன்று ரூ. 3—8—0 வீதம் விற்கப்படுகின்றது என்பதை ஸ்ரீ தீபிகையைப் படிக்கும் அன்பர்களெல்லார்க்கும் இதனால் விஜ்ஞாபநம் செய்துகொள்கின்றோம். அந்தப் புஸ்தக ஶாலையின் சொந்தக்காரராயும், ப்ராக்ருத உரையை இயற்றிய மூவருள் அந்யதமராயு மிருக்கும் ஸ்ரீ. சே. க்ருஷ்ணமாசார்யர் என்னும் ஸ்வாமி, அந்த க்ரந்தத்தின் ஒரு ப்ரதியை நமக்கு மஹத்தான க்ருபையுடன் கொடுத்து, அதைப் பற்றி விமர்ஶித்து ஸ்ரீ தீபிகையில் நமது அபிப்ராயத்தை எழுத வேண்டுமென்று நியமித்திருக்கிறார்.

“ 𑌲𑌵𑌣 𑌵𑌣𑌿𑌜𑌃 [illegible] ”

என்கிறபடி, உப்பு வ்யாபாரியை ஒத்த நாம், பச்சைக்கற்பூரம் போன்றுள்ள அந்த க்ரந்தத்தின் மஹிமையைப்பேச எவ்விதத்திலும் அநதிகாரிகளே! என்பதை நன்றாக உணர்ந்து இருக்கையிலும், நாம், அந்த ஸ்வாமியின் நியமநத்தைப் பெரிதாக எண்ணி, அதை அதிலங்கநம் செய்வது உசிதமாகாது என்னும் புத்தியினால் அந்த க்ரந்தத்தைப் பற்றி நமக்குத் தோன்றுமவற்றை எழுதத் துணிகின்றோம். அப்படி எழுதுவதில் குற்றங்கள் இருந்தால் அவற்றைப் பொறுத்தருளுமாறு பெரியோரைப் ப்ரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ பிள்ளைப்பெருமாளையங்காரென்பவர் சோழநாட்டில் திருமங்கையென்னும் திவ்ய தேஶத்தில் சற்றேறக்குறைய எழுநூற்றறுபது வர்ஷத்து

க்கு முன்னதாக ஒரு ஸ்ரீவைஷ்ணவருடைய வம்ஶத்தில் அவதரித்தாரென்று தெரிய வருகிறது. இவரைத் ‘தென்கலை வைணவர்’ என்பர் புலவர் புராண நூலுடையார். ஆனால் அவரை அப்படி தென்கலை ஸ்ரீவைஷ்ணவரென்று சொல்வதற்கு அவருடைய ப்ரபந்தத்தில் யாதொரு ஸூசகத்தையும் நாம் பார்த்தவரையில் காணோம். அவர் ஆழ்வார்களின் அருளிச்செயல்களில் ஆழ்ந்து ஈடுபட்டவரென்றும், திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற நம் பெரிய பெருமாளுடைய திருவடித்தாமரைகளில் மிக்க பக்தி பூண்டவரென்றும் அவருடைய க்ரந்தம் விளக்குகின்றதே தவிர வேறு கலா ப்ரயுக்தங்களான விஶேஷங்களொன்றையும் அது தெரிவிக்க வில்லை. ஆனால், அவர் காலத்திற்குப் பின்னர் அவதரித்திருக்கும் நமது வடகலை ஆசார்யர்களி லொருவரும், புகழ்ச்சிக்கு அர்ஹமென்று நமக்குப் புலப்படும் இந்த ப்ரபந்தத்தைப் புகழ்ந்து பேசியிருக்கிறாரில்லை. இதைப் பார்த்தால், ஒருகால் புலவர்புராண முடையார் சொல்லியிருப்பது உண்மையோ? என்று ஒரு தோற்றமும் உதிக்கின்றது. ‘வடகலை ஆசார்யர்கள் இதை இகழ்ந்திருப்பதையும் நாம் அறியோம்.

இவர் அருளிச்செய்திருக்கும் நூல்களாவன :— திருவரங்கத்தந்தாதி, திருவரங்கத்துமாலை, திருவரங்கக்கலம்பகம், திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி, அழகரந்தாதி, நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி, ஸ்ரீ ரங்கநாயகரூசல், ஆக எட்டு. அது காரணமாகவே இதற்கு ‘அஷ்டப்ரபந்தம்’ என்று பெயர் வழங்குகின்றது. இந்த ப்ரபந்தங்களெல்லாவற்றிலும், நமது ஆழ்வார்கள் அருளிச்செய்திருக்கும் திவ்ய ப்ரபந்தங்களின் ஸாரார்த்தங்களும், ஸ்ரீ நாதமுனிகள் முதலிய நமது ஆசார்யர்களுடைய திவ்யஸூக்திகளின் ஸம்ப்ரதாய ரஹஸ்யங்களும் மிகச் சீராகப் பொதிந்திருக்கின்றனவென்பதை ஒவ்வொரு ப்ரபந்தத்திலுமுள்ள ஒவ்வொரு செய்யுளும் நன்கு விளக்குகின்றது. யாத்ருச்சிகமாக எடுக்கப்பட்ட கீழ்க்கண்ட செய்யுள்களை நிதர்ஶநமாகக் காண்க.

“அண்டமடங்கலையுந்தந்து காத்த வையந்தந்தன்பால்
அண்டமடங்கலைச்செய் காரணமம்பொன் முத்தலைவான்
அண்டமடங்கலை யீர்த்தோடும் பொன்னியரங்கன்புட்கார்
அண்டமடங்கலை முந்நீர்மக ளுகப்பாகவென்றே.”

‘ஸ்ரீ பகவான் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார மென்னும் ஜகத்வ்யாபாரத்தைச் செய்வதெல்லாம் லக்ஷ்மீ பிராட்டியின் மனத்தை மகிழ்விக்குந் திருவிளையாடலேயாம்’ என்னும் கருத்தையுடைய இந்தச்செய்யுள்,

“𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌰𑍍𑌦𑌿𑌶𑌤𑌾𑌦𑌶𑍇𑌷𑌜𑌗𑌤𑌾𑌂 𑌸𑌰𑍍𑌗𑍋𑌪𑌸𑌰𑍍𑌗-
𑌸𑍍𑌥𑌿𑌤𑍀𑌃 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌦𑍁𑌰𑍍𑌗𑌤𑌿𑌮𑌾𑌪𑌵𑌰𑍍𑌗𑌿𑌕𑌪𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌚 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌹𑌰𑌿𑌃 ।
𑌯𑌸𑍍𑌯𑌾 𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌮𑍁𑌖𑌂 𑌤𑌦𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌪𑌰𑌾𑌧𑍀𑌨𑍋 𑌵𑌿𑌧𑌤𑍍𑌤𑍇𑌽𑌖𑌿𑌲𑌂 𑌕𑍍𑌰𑍀-
𑌡𑍇𑌯𑌂 𑌖𑌲𑍁 𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾𑌸𑍍𑌯 𑌰𑌸𑌦𑌾 𑌸𑍍𑌯𑌾𑌦𑍈𑌕𑌰𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌯𑌾 ॥”

என்னும் ஸ்ரீ கூரேஶனுடைய திவ்ய ஸூக்தியிலுள்ள ரஹஸ்யார்த்தத்தை வற்புறுத்துகின்றது.

“அக்கரவம்புனைந்தா ரயனாரிடையா யிருகால்
அக்கரவம்பு மலராள் கொழுநனரங்கன் செங்கோல்
அக்கரவம்புயன்றன் மூலமென்ப தறிவித்திடான்
அக்கரவம்புவிமேல் வேழமே வெளியாக்கியதே”

‘ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரர் என்று கூறப்படும் த்ரிமூர்த்திகளுள் இடைப்பட்டவனான திருமால், மற்றை இருவருக்கும் ஸமன் போல விருந்துகொண்டு மெய்ம்மையை மறைக்க ப்ரயத்னப்பட்டாலும் அது கூடாமல் போய்விடுகிறதே’ என்னும் கருத்துள்ள இந்தச் செய்யுள்,

“[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥”

என்னும் ஸ்ரீ பட்டரின் திவ்ய ஸூக்தியை ஸ்மரிப்பிக்கின்றது. இன்னும் இவ்வாறு நூற்றுக்கணக்காகப் பாடல்களை எடுத்து நிதர்ஶநமாகக் காட்டலாம். முக்கியமாக ஸ்ரீ பகவானுடைய விபவாவதார சேஷ்டிதங்களைப் பற்றிய செய்யுள்களைப் படிக்கும்பொழுது, ‘மனம் உருகும்படி தத்வார்த்தங்களைப் பாடியிருக்கும் நமது ஆழ்வார் ஆசார்யர்களே மறுபடியும் இவ்வாறு அவதரித்தாரோ?’ என்று நமக்கு ஒரு தோற்றமுண்டாயிற்று. இப்படிப்பட்ட அரிய க்ரந்த ரத்நங்களை ஸரியானபடி அநுபவியாமல், கழுத்தில் விழும் மாலையைப் பாம்பென்று பயந்து உதறும் குருடன்போல அவைகளை உதறிவிடும் பல பக்ஷபாதிகளையும், ‘தமிழிலும் குணம் உளதோ?’ என்று நினைக்கும் பல அஜ்ஞர்களையும் பார்க்கும் நமக்கு அளவற்ற ஶோகம் ஜநிக்கின்றது. ஸ்ரீ பகவான் தான் இந்த ஜநங்களுக்கு நல்ல புத்தியைக் கொடுத்து அவர்களை உஜ்ஜீவிப்பிக்க வேணும்.

அதிமிதமான பாஷாஜ்ஞானமுடைய நமக்கும் இந்த க்ரந்தத்தின் மஹிமையைக் கொஞ்சம் உணரும்படி செய்தது, அதற்கு எழுதப்பட்டிருக்கும் உரையே. உரை எழுதும் பலரை நாம் அறிவோம்; பல உரைகளையும் பார்த்துளோம். கவிஹ்ருதயத்தை ஸஹ்ருதயர்களுக்கு ரஸிக்கும்படி விளக்கும் விஷயத்தில் இந்த உரையைப் போன்ற உரையை நாம் கண்டதில்லை. தாத்பர்யத்தை விளக்குவதிலும், ஸமானார்த்தமுள்ள ஆழ்வாராதிகளுடைய பாசுரங்களை எடுத்துச் சொல்லிக் கருத்தை வற்புறுத்துவதிலும், வடமொழிகள் வருமிடத்தில் எவ்வித அபத்தமுமில்லாமல் ஸரியானபடி பொருளுரைப்பதிலும் இந்த உரை மிகச் சிறந்தது. இதை இயற்றியவர்களுடைய பெயர் தாமே இதன் மஹிமையை விளக்கப் போதுமானவை. நிதிபோன்ற இந்த ப்ரபந்தத்தின் அர்த்தம் எளிதில் எல்லாருக்கும் விளங்கும்படி எடுத்து உரைத்திருக்கும் இந்த மஹான்களுக்கு நாமெல்லாரும் மிக்க க்ருதஜ்ஞதையுள்ளவர்களாக இருக்கின்றோம்.

2. நாலடியார் :— சமண முனிவர் இயற்றிய ‘நாலடியார்’ என்னும் நூலின் ஒரு ப்ரதியும் நாம் வரப்பெற்றோம். அதுவும், கீழ்க்கூறிய திருவல்லிக்கேணி ஸ்வாமிகளாலேயே உரை எழுதப் பெற்றுள்ளது. இந்த ‘நாலடியார்’ என்னும் நூல், நீதி நூல்களுக்குள் மிகச் சிறந்தது என்பது ப்ராயேண எல்லாருக்கும் தெரிந்த விஷயம். சொற்செறிவு, நடைச் சிறப்பு, பொருள் நுணுக்கம், ஆழ்ந்த கருத்து முதலியன பொதிந்துள்ள இந்நீதி நூலுக்குத் தக்கவாறு, அறிவிற் பெரியவரான இந்தத் திருவல்லிக்கேணி ஸ்வாமிகள் சிறந்த உரை யியற்றி யிருக்கின்றார்கள் என்று நாம் சொல்லவும் வேண்டுமோ? இப்புஸ்தகத்தின் விலை ரூ. 2—0—0.

இப்புஸ்தகங்களை அபேக்ஷிப்போர், திருவல்லிக்கேணி தென்னண்டை மாடவீதி, 19 - ம் நெ. வீட்டிலிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய புஸ்தகசாலைக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

மயிலாப்பூர், }
22-11-16. }

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை.

(ஸ்ரீரங்கம்.)

ஸ்ரீரங்கத்திலுள்ள ஆஸ்திக மஹான்களின் பெரு முயற்சியால் 1916௵ டிஸம்பர்௴ 2௳ ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ மணவாள மாமுனிகள் ஸந்நிதி ஸ்ரீமத் பரமஹம்ஸ சடகோப ராமாநுஜ ஜீயர் அவர்கள் அக்ராஸநத்தின் கீழ் ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸங்கம் ஒன்று கூடிற்று. அப்போது ஷை ஸபையாரின் ப்ரார்த்தனையின் பேரில் ஸ்ரீரங்கத்தில் விஜயம் செய்திருந்த மைஸூர் ஸ்ரீமத் உ. வே. வித்யாபூஷணம் வேதாந்தரத்நம் ஆள்கொண்டவல்லி கோவிந்தாசார்ய ஸ்வாமிகள் செய்தருளிய உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம் :—

‘ஸ்ரீவைஷ்ணவம்’ என்பது ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களில் ப்ரதிபாதிக்கப்பட்டுள்ள ஸநாதந தர்மமாகுமென்று அவ்வற்றிலுமுள்ள ப்ரமாணங்களைக்கொண்டு விளக்கியும், த்ரிவித மதாசார்யர்களால் செய்யப்பட்ட க்ரந்தங்களிலும் ஸ்ரீ வைஷ்ணவம் ப்ரபலமாக எடுத்துரைக்கப்பட்டிருப்பதை த்ருஷ்டாந்த பூர்வமாக விளக்கியும், ப்ரத்யக்ஷ ஸித்தமாய் உலகமெங்கும் ஸ்ரீ வைஷ்ணவம் பரவியிருப்பதென்பதை வெளிநாடாகிய அமெரிக்கா கண்டத்தில் மெக்ஸிகோ முதலான பலவிடங்களில் அர்ச்சாவதார எம்பெருமான்களாகிய ஸ்ரீராமன், ஸீதாபிராட்டியார் முதலாகிய திவ்ய மங்கள மூர்த்திகள் நிக்ஷேபமாயிருந்து கண்டெடுக்கப்பட்ட வரலாற்றையும், பார்ஸீ, ‘மகம்மதீயம் முதலான மதக்ரந்தங்களில் வேத வேதாங்கங்களில் ப்ரதிபாதிக்கப்பட்ட விபவாவதாரங்களின் அழகிய பெயர்கள் ப்ரயோகிக்கப்பட்டுள்ளன வென்பதை அந்நாமங்களின் ஒற்றுமை நயத்தால் தெள்ளென எடுத்துக்காட்டியும், பண்டித ஸ்த்ரீ பாலர்கள் யாவரும் அறிந்து விஶ்வஸிக்கும்படி உபந்யஸித்தார்கள். ஆகவே இத்தகைய மேன்மையுற்ற ஸநாதந தர்ம மார்க்கத்தை அவலம்பித்து ஒழுகும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் இக்காலத்தில் அபிப்ராய பேதங்களை முன்னிட்டவர்களாய்க்கொண்டு தமக்குள் ஒற்றுமை இல்லாததுபற்றிக் கழிவிரக்கம்கொண்டு, இனி இப்படி காலத்தை வீணாகப் போக்காமல் ஒருமித்து ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை யநுஸரித்துப் பக

வங் முகோல்லாஸகரமாய் வாழ ப்ராப்தமாம்படி வர்த்தித்தல் முக்யமென்றும், அதற்கு இப்ரதாந க்ஷேத்ரத்தில் ஓர் ஸ்ரீவைஷ்ணவ ஸபை ஏற்பட்டு நடந்தேறினால் மிக்க ஸாதகமாயிருக்குமென்றும் வற்புறுத்தி ஸாதித்ததன்மேல், ஸபையில் எழுந்தருளியிருந்த ஆஸ்திக ஶிரோமணிகள் அனைவராலும் அதுவே உசிதம் என்று ஆமோதிக்கப்பட்டு, 'பாரதீய ஸ்ரீ வைஷ்ணவ ஸபை' என நாமம் கொண்டதோர் ஸபை ஸ்தாபிக்கப்பட்டது. அச்சபையின் நோக்கங்களாவன:—

i. ஸ்ரீ வைஷ்ணவ மதத்தைச் சார்ந்த விஷயங்களைக் கற்பிக்க ஓர் ஸம்ஸ்க்ருத பாடஶாலையை ஸ்ரீரங்கத்தில் ஸ்தாபித்தல். அதற்குரிய விஷயங்களை ஏற்பாடு செய்வதற்கென்றே கமிட்டி ஒன்றை ஏற்படுத்துதல்.

ii. பாடஶாலா ஸ்தாபநமாகும் மஹத்தான கார்யம் ஸாத்யமாகும்வரையில், அச்சபையார் ஸ்ரீ வைஷ்ணவ மத ஸித்தாந்தத்துக்குரிய மற்றை விஷயங்களைக் கவனித்தல். அவையாவன:— 1. உபந்யாஸம். 2. வாக்யார்த்தம். 3. ஸம்ஸ்க்ருதத்திலும் ஸ்வதேஶ பாஷைகளிலும் பத்ரிகாப்ரசுரம் இவை முதலியன.

iii. இந்தியாவில் வியாபித்திருக்கும் மற்றை ஸ்ரீ வைஷ்ணவ ஸபைகளோடு இது ஐகமத்யம் செய்வதுடன், சென்னையில் விளங்கிவரும் 'ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை'யுடன் சேர்ந்து, அச்சபையோரால் நடத்தப்படும் 'ஸ்ரீ வேதாந்த தீபிகை' என்னும் பத்ரிகை மூலமாக ஷை ஸ்ரீரங்கம் ஸபையின் நடவடிக்கைகளை ப்ரசுரித்தல்.

iv. அநேக ஏட்டுப்ரதிகள், அச்சிட்ட புத்தகங்கள், மற்றும் அகப்படக்கூடிய புராதந க்ரந்தங்கள்-இவைகள் அடங்கிய புத்தகசாலை ஒன்றை ஸ்தாபித்தல்.

v. ஸபை நடத்துவதற்கென்றே, நாளாவர்த்தியில், ஓர் கட்டிடத்தை அமைக்க ஏற்பாடு செய்தல் முதலியன.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

இவ்வருஷத்திய மஹாஸங்கம்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை அங்கத்தினர்களுக்கு:—

சென்ற ஸஞ்சிகையில் விஜ்ஞாபநம் செய்துகொண்டபடி, இவ்வர்ஷத்திய மஹாஸங்கத்தை, சென்னை மயிலாப்பூரிலேயே, ஸ்ரீ கேஶவப் பெருமாள் ஸந்நிதி வீதியிலுள்ள ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன் மண்டபத்தில், நிகழும் மார்கழி௴ 13, 14, 15-ம் தேதிகளில் நடத்தவேண்டுமென்று அதன் நிர்வாஹகர்கள் நிஶ்சயித்திருக்கிறார்கள். சென்னை ஹை கோர்ட் ஜட்ஜ் மகாகனம் பொருந்திய ஸ்ரீ. உப. கே. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி, முதல் திநத்தில் அக்ராஸநாதிபதியாக இருந்து ஸதஸ்ஸை அலங்கரிக்க க்ருபையாக அங்கீகரித்திருக்கிறார். பல விடங்களிலிருந்து அநேக வைதிக வித்வான்களும் லௌகிக ஆஸ்திகர்களும் அக்காலத்தில் இவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்து வேதாந்த வாக்யார்த்த விசாரம் செய்வதாகவும் உபந்யாஸங்களைச் செய்வதாகவும் திருவுள்ளம்பற்றி யிருக்கிறார்கள். இந்தத் தீபிகையைப் படிக்கும் அன்பர்களும் அப்பொழுது இவ்விடத்திற்கு எழுந்தருளி ஸதஸ்ஸை அலங்கரிக்க க்ருபை செய்யவேணுமென்று விநயத்துடன் ப்ரார்த்திக்கிறோம்.

குறிப்பிட்ட மூன்று திநங்களில் உபந்யாஸங்கள் நடைபெறும் க்ரமம் பின்வருமாறு வ்யவஸ்தை செய்யப்பட்டிருக்கின்றது.

மயிலாப்பூர்,
நள௵
மார்கழி௴ 1௳.

டி. கோதண்டராம ஐயங்கார்.
எஸ். வாஸுதேவன்.
கார்யதர்ஶிகள்.

ஆறாவது ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கம்.

(நள௵ மார்கழி௴)

13௳ புதன்கிழமை.

பகல் 2 - மணி — i. ஸ்வாகதம்: ராவ் பஹதூர் ஸ்ரீ. உப. எஸ். ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி.
ii. அக்ராஸநாதிபதியின் உபந்யாஸம்.

iii. "பாஞ்சராத்ரமும் ஸ்ரீ வைஷ்ணவ ஆசாரமும்": ஸ்ரீ. உப. டி. ராஜகோபாலாசார்ய ஸ்வாமி.

iv. "ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயம்": ஸ்ரீ. உப. சதுஶ் ஶாஸ்த்ர வித்வான் ஶேஷாசார்ய ஸ்வாமி.

இரவு 7-30 மணி — ஹரிகதை: "திருமங்கை மன்னன் சரித்ரம்": ஸ்ரீ. உப. எம். கே. தாதாசார்ய ஸ்வாமி.

14௳ வியாழக்கிழமை.

காலை 8 - மணி — i. அங்கத்தினர்களின் ஸங்கம்.

ii. ஸ்ரீ வேதாந்த வாக்யார்த்தம் — ஸ்ரீ. உப. வித்வான் சேட்லூர் நரஸிம்ஹமாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உப. வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உப. வித்வான் இஞ்சிமேடு ரங்கநாதாசார்ய ஸ்வாமி முதலிய பண்டிதர்கள்.

பகல் 2 - மணி — i. "ஆர்யாப்யுதயம்" ஸ்ரீ. உப. டி. ஈ. ஶடகோபாசார்ய ஸ்வாமி.

ii. "ஹம்ஸ ஸந்தேஶம்": ஸ்ரீ. உப. எம். கே. தாதாசார்ய ஸ்வாமி.

iii. "விஶிஷ்டாத்வைதம்": ஸ்ரீ. உப. வித்யா பூஷணம் எ. கோவிந்தாசார்ய ஸ்வாமி.

இரவு 8-30 மணி — "ஸ்ரீ பாகவதம்": ஸ்ரீ. உப. வித்வான் மலையாங்குளத்தூர் குப்புஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி.

15௳ வெள்ளிக்கிழமை.

காலை 8 - மணி — ஸ்ரீ வேதாந்த வாக்யார்த்தம்: வித்வான்கள்.

பகல் 2 - மணி — i. "ஸ்மார்த்த ஸம்ஸ்காரங்கள்": ஸ்ரீ. உப. வித்வான் தட்டை ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி.

ii. "உபய வேதாந்தமும் மணிப்ரவாள நடையும்": ஸ்ரீ. உப. பண்டிதர் தி. வெங்கடராமய்யங்கார் ஸ்வாமி.

iii. ஸ்ரீ. உப. ப்ரொபெஸ்ஸர் எஸ். க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியின் உபந்யாஸம்.

iv. ஸபாத்யக்ஷர் ஸ்ரீ. உப. டி. டி. ரங்காசார்ய ஸ்வாமியின் நிகமநம்.

இரவு 8-30 மணி — ஹரி கதை: "பாதுகா பட்டாபிஷேகம்": ஸ்ரீ. உப. கே. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 7.] நள ஹுஷ தைமீ [ஸஞ்சிகை 4.

𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌕𑌮𑌨𑌂 𑌤𑌮𑌾𑌲𑌵𑌰𑍍𑌣𑌂 𑌰𑌵𑌿𑌕𑌰𑌗𑍌𑌰𑌵𑌰𑌾𑌮𑍍𑌬𑌰𑌂
𑌦𑌧𑌾𑌨𑍇 . 𑌵𑌪𑍁𑌰𑌲𑌕𑌕𑍁𑌲𑌾𑌵𑍃𑌤𑌾𑌨𑌨𑌾𑌬𑍍𑌜𑌂 விஜயஸகெ
𑌰𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇𑌽𑌨𑌵𑌦𑍍𑌯𑌾 ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

பத்ராதிபரின் குறிப்புகள்.

லோகாந்தரம்.

ஸர் ஆலிவர் லாட்ஜ் எனும் பதார்த்த ஶாஸ்த்ர வித்வான் மரணாந்தரம் ஜீவன் நிலைத்திருக்கின்றான் என் ற விச்வாஸத்தை த்ருடமாகக் கொண்டவர் எனும் விஷயத்தைப் பலதரம் வெளியிட்டோம். பல விதமாகப் பராமர்சித்து, அந்த உண்மையை அவர் அங்கீகரித் தனர் என்பதையும் காட்டியிருக்கின்றனம். ஸமீப காலத்திற்குள் அவருடைய தநயன் யுத்தத்தில் இறந்தான். அவன் இறந்த பிறகும் அவன் அநுவர்த்தித்து இருந்ததைத் தம்முடைய அநுப வத்தால் ஸர் ஆலிவர் லாட்ஜ் தெரிந்துகொண்டனர் என்று சில நாட்களுக்கு முன்பு ஹிந்து பத்ரிகையில் வெளியிட்டிருந்தது. பாஶ்சாத்ய வித்யா நிஷ்டர்கள் மரணாந்தரம் ஜீவாநுவ்ருத்தியைத் தெரிந்துகொள்ளும் ப்ரகாரம் ஏகரூபமானது. சில மநுஷ்யர் இறந்தார்க்கும் இறவாதார்க்கும் மத்யே மத்யஸ்தர் (Medium)

எனப்படுகின்றார்கள். நமது பாஷையில் அவர்களை 'த்வாரம்' என்றும் சொல்லலாம். ஆங்கிலேய பாஷையில் மீடியம் (Medium) எனும் சப்தத்திற்கு வ்யாக்யானமாக, "எவனுடைய மூலமாக அசரீரிகள் பேசுகின்றனவோ வ்யாபரிக்கின்றனவோ அவன்" என்று சொல்லப்படுகின்றது. இப்படி த்வாரமாகின்றவர் ப்ராயேண பெண்பாலர். ம்ருதரான சேதநர்கள் த்வாரபூதருடைய சரீரங்களையும் இந்த்ரியங்களையும் சித்தங்களையும் அவர்க்குப் பராதீநங்களாகச் செய்து, தாம் அவற்றை ஸ்வாதீநப்படுத்திக்கொண்டு அந்தச் சரீராதிகள் மூலமாகப் பேசுகின்றார்கள்; கார்யமும் செய்கின்றார்கள். இதில் மோசமில்லை யென்று நிர்ணயிப்பதற்காக இவ்வண்ணம் விமர்ஸை செய்பவர்கள், த்வாரபூதர்க்குத் தெரியாதனவும், ம்ருதமானவர்க்கும் தமக்கும் ஏகதேசத்தில் தெரிந்தனவுமான அநுபவங்கள் த்வார்பூதர் மூலமாக வெளியாவதைக் கண்டுகொள்கின்றார்கள். ஸர் ஆலிவர் லாட்ஜ் என்பவர், தமக்கும், தம்முடைய இறந்துபோன புத்ரனுக்கும் மாத்ரம் தெரிந்த விஷயங்களை, அவற்றை யறியாத த்வாரம் மூலமாக வெளியாகக் கண்டனராம். அதாவது, த்வாரத்தின் மூலமாகத் தமது மகன் தம்முடன் பேசி, தனது இருப்பைத் தெரிவித்தா னென்கின்றார்.

* * * * * * *

இது இப்படி நிற்க, ஶரீர வியோகா நந்தரம் ஜீவன் இருக்கின்றா னென்பது தான் விசாரித்தறிந்த உண்மை யென்று, ஸர் ஆர்தர் கோனன் டாயல் (Sir Arthur Conan Doyle) என்றொரு ஆங்கிலேயர் உரைப்பதாக 1916௵ நவம்பர் மாஸம் 29-ம் தேதி ஹிந்து பத்ரிகையில் வெளிப்படுத்தி யிருக்கின்றது. அவ்வுண்மைக்கு ஸாக்ஷிகளாக க்ருக்ஸ், (Crookes), வாலஸ் (Wallace), ப்ளம்மாரியன் (Flammarion), லாட்ஜ் (Lodge), பாரட் (Barret), ஜனரல் ட்ரேஸன் (General Drayson), ஜனரல் டர்னர் (General Turner), ஸார்ஜண்ட் பாலன்டைன் (Sergeant Ballantyne), ஸ்டெட் (W. T. Stead), எட்மாண்ட்ஸ் எனும் ஜட்ஜ் (Judge Edmondes), வைஸ் அட்மிரல் ஆஸ்போர்ன்-மூர் (Vice Admiral Osborne-Moore), கானன் வில்பர் போர்ஸ் (Canon Wilber force) இவர்களையும் இன்னும் பல வித்வாங்களையும் குறிப்பிடுகின்றார். இவர்கள் விசாரித்துத் தீர்மானித்த விஷயத்தைப்பற்றி

இன்னும் ஸாக்ஷ்யம் தேடவேண்டா மென்றும், அதை மறுக்கின்றவர்கள் மரணாநந்தரம் ஆத்மாநுவ்ருத்தியில்லை யென்று ஸித்தாந்தப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றா ரென்றும் ஜெ. ஆர்தர் ஹில் (J. Arthur Hill) என்பவர் அபிப்ராயப்படுகின்றனராம்; அதைத் தீர்மானமாக ஒப்புக்கொண்டு மதத்தைப்பற்றிய நூதந ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு மென்றும் அபிப்ராயப்படுகின்றனராம்.

* * * * * * *

ஸர் ஆர்தர் கோனன்டாயில் அதன்மேல் நிச்சயிப்பது என்னென்றால்: "நம்மைக் காட்டிலும் உத்க்ருஷ்ட சேதநர் உளர். அவர்களை ஏஞ்ஜல்கள் (Angels) என்று சொல்லலாம். அவர்கள் தரதம பாவத்தால் பல வகுப்புகளாய்ப் பிரிந்து மேன்மேலும் உயர்கின்றனர். அவர்களுடைய ஆதிக்யம் நமக்கு த்ருஷ்டி கோசரமன்று; நம்முடைய சித்தத்துக்கும் எட்டாதது. இவர்களுக்கெல்லாம் மேல்பட்டவனாக ஸர்வஶக்தி விஶிஷ்டனான ஈஶ்வரன் ஒருவன் உளன். பரலோகம் ஒன்று உண்டு. எல்லா ஜீவன்களும் முடிவில் அதை அடைய வேண்டுமானாலும், யாவரும் அதை அடைவர் என்று நிச்சயமில்லை", என்று இந்த ப்ரகாரமாக ஏற்படுகின்றது.

* * * * * * *

ஐரோப்யர் ஸ்வாநுபவங்களைக் கொண்டு நிஶ்சயிக்கக் கூடிய விஷயம், மரணாநந்தரம் ஜீவன் இருக்கின்றான் என்பது ஒன்றே. மற்றதெல்லாம் பல மதங்களின் தத்வங்களை யோசித்து அவர் ஊஹிக்கின்ற விஷயங்கள். மதமென்பது ஸ்வாநுபவத்தாலோ, ஶாஸ்த்ர மெனப்பட்ட ஆப்தவாக்யங்களில் விஶ்வாஸத்தாலோ, த்ருடமாக நம்பப்பட்ட உண்மைகளுடன் கூடியிருக்கத்தக்கது. கேவலம் யுக்திகளால் மதமொன்று ஏற்படத்தக்கதன்று. பேதிக்கும் பல மதங்களின் நம்பிக்கைகளைக் குறித்து ஸம்பாவிதாம்ஶத்தை யுக்திகளால் நிர்ணயிக்கப் பொருந்தும்.

* * * * * *

மேலெழுதிய வண்ணம் ஏற்பட்ட ஜீவாநுவ்ருத்தியைப்பற்றிய நிர்ணயத்தைக் குறித்தும், அந்நிர்ணயத்தை ஆஶ்ரயித்து உதிக்கின்ற ஊஹங்களைப்பற்றியும் சிறிது விசாரிக்கப் பொருந்தும். த்வாரம் (Medium) ஒன்று ஏற்படாவிட்டால் இறந்தவர் நம்முடன்

ஸம்பாஷிக்கவாவது, நாமறிய ஒரு கார்யம் செய்யவாவது அமைய மாட்டாது. நாம் கரண களேபரங்களைக்கொண்டு நம் எண்ணங்களை வெளியிடுகின்றோம்; பாஹ்ய விஷய ஜ்ஞாநங்களை ஸம்பாதிக்கின்றோம்; அவற்றிற் கேற்றபடிச் செயல் புரிகின்றோம். அவ்வண்ணமே சரீரமிழந்த சேதநர்களும் தமது எண்ணங்களை நமக்கு அறிவிக்க வேண்டியிருக்கின்றது; தமது செயல்களை நமக்குக் காட்ட வேண்டி யிருக்கின்றது. அவர்களுக்கு நமக்குப்போல் ஸ்தூல சரீரங்கள் இல்லை; இந்த்ரியாதிகளும் இல்லை. அந்தரிந்த்ரியங்களான புத்தி, மநஸ், அஹங்காரம் இவை நடைபெறுவதற்கு உபாதிகளாக ஏற்பட்டிருக்கிற மூளை, ஹ்ருதயம் முதலானவைகளும் இறந்த சேதநர்க்கு இல்லை போலும்! ஆதலால் ஜீவிப்பவர்களுக்குள் ஒருவருடைய சரீரத்தையும் அதைச் சார்ந்த மூளை ஹ்ருதயம் இந்த்ரியங்கள் இவற்றையும் இறந்தவர் வசப்படுத்திக்கொள்ளவேண்டும். அப்படி வசப்படுத்துகையில் அந்தச் சரீராதிகளைத் தனதென்று அபிமானித்த சேதநன் அச்சரீரத்தில் எங்கோ உள்ளடங்கிப்போக வேண்டும்.

* * * * * *

டிஸம்பர் மாஸம் 23-ம் தேதி ஹிந்து பத்ரிகையில் ஸர்ஆலிவர் லாட்ஜ் உரைப்பதாக வெளிப்படுத்தி யிருந்தபடி, மூளையைத் துன்பப்படுத்தினால் அஹம் ப்ரத்யயம் நிவர்த்திக்கின்றது. அதைச் சீர்படுத்த அஹம் ப்ரத்யயம் மறுபடி ப்ரகாசிக்கின்றது. ஒருவன் தான் நினைத்தவண்ணம் கரணங்களை உபயோகப்படுத்தி ஓர் செயல் புரிந்தால் தான், அவனுடைய அஹம் ப்ரத்யயம் பார்க்கு ப்ரகாசிப்பதாகச் சொல்லலாம். கரணங்கள் இல்லாவிட்டாலும், கெட்டுப்போனாலும், அவற்றிற்குரிய ப்ரவ்ருத்திகள் இல்லை; அந்த ப்ரவ்ருத்திகளால் அநுமிக்கக்கூடிய அஹம் ப்ரத்யயத்தின் ப்ரகாசமும் இல்லை. அந்தரிந்த்ரியங்கட்கும் பாஹ்யேந்த்ரியங்கட்கும் ஸம்பந்தம் அற்றதாகில், புத்தி மநஸ்ஸுக்களின் ப்ரவ்ருத்திகள் ஒருவகையாலும் அநுமிக்கக்கூடியவை அல்ல. மூளை கெட்டால் மேல்சொன்ன ஸம்பந்தம் அற்றுப்போம்.

* * * * * *

இந்த யோசனைகளை அநுஸரித்து நாம் சொல்லக்கூடிய விஷயம் உண்டு. அஹங்காரம், மநஸ், புத்தி யெனப்பட்ட அந்தரிந்த்ரியங்களுடைய ஒவ்வொரு வ்யாபாரத்துக்கும் ஏற்றபடி மூளையின் ஸ்தாந விசேஷங்களில் சலநங்கள் உண்டென்பார்கள். அச்சலநங்களையே மேற்படி வ்யாபாரங்கட்குக் காரணங்களாகச் சொல்வாருமுளர். வ்யாபாரங்களால் சலநங்கள் உத்பந்நமாகின்றன எனவும் பொருந்தும்.

பாஹ்யேந்த்ரியங்கள் மூலமாக விஷய ஜ்ஞாநங்கள் உதிக்கும்போது மூளையில் சலநங்கள் தற்செயலாய் உதிக்கவேண்டும். ஆனால் விஷய ஜ்ஞாநங்களை 'நான்' என்று எண்ணும் சேதநன் ஸாக்ஷாத்கரிக்கின்றான். கண்களுக்கும், காணப்படும் வஸ்துக்களுக்கும் ஸம்யோகம் உண்டாகி, விஷய ப்ரதீதிக்கு அநுகுணமானதோர் சலநம் மூளையில் உதிக்கும். பல ப்ரத்யயங்களினுடைய பகுத்தறிவு சேதநனை ஆச்ரயித்தது. அவனுடைய விமர்சைகளுக்கும் அத்யவஸாயங்களுக்கும் ஸஹகாரிகளாக மூளை பாகங்களில் விகாரங்கள் உண்டான போதிலும், அவற்றை அவனுடைய விவேசநாதிகளுக்குக் காரணங்களெனத் தகாது.

ஆதலால் சரீரேந்த்ரியங்கட்கு உடையவனான சேதநன் யாதேனுமோர் ஹேதுவால் அவற்றினுடைய ஸ்வாதீநத்தை இழக்கலாம். மூளைக்குத் தீங்கு வந்தாலும் அது நேரிடலாம். ஒரு இந்த்ரியம் கெட்டால் அதனுடைய உடைமை சேதநனுக்கு அற்றுப்போம். அவனைக் காட்டிலும் பலிஷ்டனான மற்றொரு சேதநன், அவனை உள்ளடக்கி, அவன் சரீரேந்த்ரியங்களைத் தன் வசமாக்கிக்கொண்டு தானெண்ணியபடி அவற்றை உபயோகப்படுத்தக்கூடும். சரீரமில்லாத ஒரு சேதநனுடைய ப்ரவ்ருத்திகளுக்குச் சரீரவானான மற்றொருவனுடைய கரணகளேபரங்கள் இவ்வண்ணம் அநுகூலமாகப் பொருந்தும்.

புத்திபலம் உடையவர் மேல் விவரித்த வண்ணம் அடங்கிப்போகமாட்டார்கள். அஃது அற்றவர் ப்ராயேண பெண்பாலர். புத்தி பலமுடைய பெண்களும் உளர். அது இல்லாத ஆண்மக்களும் உண்டு. ஒரு கார்யத்தை உத்தேசித்துப் பாரவச்யதையை இச்சையால் பொருந்துபவரும் உண்டு. த்வாரமாகப்பட்டவர்கள் இவ்வகுப்புகளில் ஒன்றில் சேர்ந்தவர்.

பிசாசுகள் என்று சொல்லப்பட்ட சில க்ஷுத்ர ஜீவன்கள் புத்தி பலமற்ற சேதநர்களை ஆவேசித்துப் பேசவும் செயல்புரிய

வும் கண்டவர்களும் கேட்டவர்களும் இருக்கின்றார்கள். ஸூந்யம் முதலான அபிசார ப்ரயோகங்களால் சிலர் பரருடைய சரீரங்களின்மேல் க்ஷுத்ர ஜீவன்களை ஏவுகின்றார்கள் எனவும் ப்ரஸித்தியுண்டு. இந்த விஷயங்களில் நம்பிக்கையற்றவர்கள், மேல் குறித்த வண்ணம் தூஷிதங்களான சரீராதிகளையுடையவர்களுக்கு (Hysteria) எனப்பட்ட ஒரு வ்யாதி விஶேஷத்தைக் கல்பிக்கின்றனர்.

க்ஷுத்ரங்களால் ஆவேசித சித்தர்கள், என்றும் பேசாத பாஷைகளைப் பேசுவதும், என்றும் அறியாத விஷயங்களைச் சொல்வதும், சில அதி மாநுஷ சேஷ்டிதங்களைச் செய்வதும் உண்டென்று ப்ரஸித்தி யிருக்கின்றது. இவ்வநுபவங்களைப் பற்றி நன்றாக விமர்சித்து நம்பிக்கை கொள்ளல் வேண்டும். ஐரோப்ய வித்வாங்கள் ப்ரஸ்தாபிக்கும் அநுபவங்களும் விமர்சார்ஹங்களே. வ்யாதியால், தெரியாத பாஷைகளையும் அறியாத விஷயங்களையும் ஒருவரும் வெளிப்படுத்தமாட்டார்கள்.

* * * * * *

ஆதலால் பதார்த்த ஶாஸ்த்ரம் அறிந்தவர்களுடைய அநுபவங்களால் ஏற்பட்டபடி ம்ருதமான ஜீவன்கள் அந்யசேதநர்களை ஆவேஶித்துக் கார்யங்களைச் செய்கின்றனரானால், அதே ரீதியான அநுபவங்களை ஸாதாரண ஜநங்கள் கண்டு நம்புவதைப்பற்றிப் பரிஹஸித்தல் யுக்தமன்று. இந்நம்பிக்கைகளும் அங்கீகரிக்கத்தக்கனவென்று ஸர் ஆலிவர் லாட்ஜ் ஒப்புக்கொள்கின்றார். பழைய விஶ்வாஸங்கட்குப் புதியதோர் பெயர் வைத்துச் சொல்வதனால் பழைய விஶ்வாஸங்கள் பரிஹாஸார்ஹங்களன்று. அவை Superstition எனப்பட்ட அகாரண விஶ்வாஸங்களாகமாட்டா. மோசக்காரர்கள் ஸாதாரண ஜநங்களைப் பலவிதமாக வஞ்சிப்பார்களென்பதை யாம் ஒப்புக்கொள்கின்றோம். மோசம் செய்ய வேண்டுமென்று ப்ரயத்நப்படுபவர்கள் கற்றோர்களையும் காலங்களில் பாதிக்கக் கூடும்.

* * * * * *

இறந்தவர்கள் இருப்பையும் கதியையும்பற்றி மதாந்தரங்களில் யோசனையில்லை. அந்த யோசனைகள் ஆர்யமத க்ரந்தங்களில் காணப்படுகின்றன. அவற்றை ஆர்யர் ப்ரமாணமாகக் கொள்கின்றார்கள். அந்யர் அவற்றை வேடிக்கையாக நினைத்துப் பரிஹஸிப்பதும் ப்ரலபிப்பதும் உண்டு.

* * * * * *

மநுஷ்யரைக் காட்டிலும் உத்க்ருஷ்டரான சேதநர் உண்டென்று ஐரோப்யர் இப்போது யோசிக்கின்றனர். அவர்கள் மதம் அவ்வகைப்பட்ட சேதநர்களை இருவகுப்பாகப் பிரிக்கின்றது. ஒரு வகுப்பினர் ஏஞ்ஜல்கள்; மற்றொரு வகுப்பினர் பிசாசுகள். இருவகுப்பினரும் நித்யர்கள். ஏஞ்ஜல்களுக்கு அதிபதி, காட் (God) என்று சொல்லப்பட்ட ஈஶ்வரன். பிசாசுகளுக்குத் தலைவன் ஸாத்தன். இவ்விரு வகுப்பினரும் நித்யவிரோதிகள். ஏஞ்ஜல்களுக்குரிய தொழில் ஈஶனுக்காகத் தூதத் தொழில் புரிதல்; பிசாசுகளுடன் யுத்தம் செய்தல்; ஈஶன் ஸிங்காஸநத்தின்முன் நின்று கொண்டு பாடுதல். பிசாசுகள் செய்யும் தொழில் ஈஶன் செய்வதை யெல்லாம் சீரழித்தல். இப்படிப்பட்ட நித்ய சேதநர் வகுப்புகளில் ஒன்றின்மேல் ஒன்று உயரும்படியான அந்தஸ்துகள் சொல்லப்படவில்லை.

* * * * * *

நம்முடைய மதம் தத்வங்களை மூன்று விதமாகப் பாகிக்கின்றது. "க்ஷரம் ப்ரதாநம் அம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீஶதே தேவ ஏக:" "[illegible] [illegible]" என்று இவ்விதமாக பஹுப்ரமாணங்களால் ப்ரக்ருதி, புருஷன், ஈஶ்வரன் என்று மூன்று தத்வங்கள் ஸித்திக்கின்றன. புருஷன் எனும் சேதநன் மூன்று பிரிவுடையவன். ஸம்ஸாரத்தை நித்யமாகக் கடந்தவர்கள் நித்யர். இவர்களைக் கிறிஸ்தவர்கள் ஏஞ்ஜல்களென்பார்கள். ஸம்ஸாரத்தில் இருந்து பின் அதைக் கடந்தவர்கள் முக்தர். ஸம்ஸாரத்திற்குள் அகப்பட்டவர்கள் பத்தசேதநர்கள். பத்தர்களுக்குள் பல வகுப்புகள் உண்டு. மநுஷ்யர்க்குத் தாழ்ந்த ஜீவன்கள் பலவகைப்பட்டவை. மநுஷ்யர்க்குள்ளும் ஜந்மத்தாலும், ஜந்மாந்தர ஸம்ஸ்காரங்களாலும், ஸம்ஸர்க்கங்களாலும் உண்டாகப்பட்ட ஸத்வாதி குணங்களின் தாரதம்யத்தால் வர்ணபேதங்

கள் ஸம்பாவிதங்களானபோதிலும், மநுஷ்யத்வேந அவர்களுக்குள் ஒரு ஸமாநாகாரம் உண்டு.

* * * * * * *

தைத்திரீயோபநிஷத்தில், ஆநந்தவிசாரணாவஸரத்தில், மநுஷ்யர்க்கு உத்க்ருஷ்டர் மநுஷ்யகந்தர்வர் என்றும், அவர்க்கும் மேல்பட்டவர் தேவகந்தர்வர் என்றும், அவர்களைக் காட்டிலும் ஆநந்தாநுபவத்தில் அதிக்ரமித்தவர் சிரகாலவாஸம் செய்யத்தக்க லோகத்தை யடைந்த பித்ருக்கள் என்றும், அவர்களிலும் மேல்பட்டவர்கள் புண்யகர்ம விசேஷங்களால் தேவலோகத்தை அடைந்தவர்கள் என்றும், அவர்களிலும் அதிஶயித்தவர்கள் வைதிக கர்மங்கள் செய்து இந்த்ராதி தேவதைகளுடைய ஸாயுஜ்யம் பெற்றவர்கள் என்றும், அவர்களைக்காட்டிலும் அதிஶயித்த ஆநந்தாநுபவம்செய்பவர்கள் வஸுருத்ராதித்யர்களெனப்பட்ட ஹவிர்பாகாதிகாரிகளான முப்பத்துமூன்று தேவர்கள் என்றும், அவர்களுக்கும் ஆநந்தாநுபவத்தால் ஶ்ரேஷ்டன் இந்த்ரன் என்றும், இந்த்ரனுக்கும் ஆசார்யனான ப்ருஹஸ்பதி இந்த்ரனில் மிக்கவர் என்றும், அவரைக்காட்டிலும் ஸர்வலோக ஸ்வாமியான சதுர்முகன் விசேஷித்தவர் என்றும், நிரதிஶயாநந்தாநுபவம் ப்ரஹ்மாதிகளால் உபாஸிக்கப்பட்ட ஸர்வேஶ்வரனுடையது என்றும் வ்யவஸ்தை பண்ணப்பட்டிருக்கிறது. மநுஷ்ய கந்தர்வர் என்றால், மநுஷ்யத்வம் போகாமலே கர்மவிசேஷங்களாலும் வித்யா விஶேஷங்களாலும் கந்தர்வத்வமடைந்தவர்கள்; அவர்களுக்கு அந்தர்தாநாதி ஶக்தியுண்டு; ஸூக்ஷ்ம கார்யங்களை ஸாதிக்கத்தக்க இந்த்ரிய விசேஷங்களுண்டு; அவர்கள் த்வந்த்வங்களை ஜயிக்கவல்லவர்கள்; இஷ்டங்களை ஸாதித்துக்கொள்பவர்கள்; அவர்களுக்குச் சித்தப்ரஸாதம் உண்டு; ஸுகவிசேஷங்களுமுண்டு. தேவகந்தர்வர்கள் பிறப்பாலே கந்தர்வர்கள்; மேல்சொன்னவருடைய விசேஷ ஶக்திகளை ஸ்வபாவமாகவே அடைந்தவர்கள்.

இப்படிப் படிப்படியாக உயர்கின்ற சேதந வர்க்கங்களுடைய ஆநந்தாநுபவம் யாவும், இன்னும் ப்ரஹ்மத்தினுடைய நிரதிஶயித ஆநந்தமும், ஶ்ரோத்ரியனும் ப்ரஹ்மநிஷ்டனும் காமங்களால் ஜயிக்கப்படாத மநஸ்ஸுடன் கூடினவனுமான க்ருதக்ருத்யனுக்கு உண்டென்றும் சொல்லப்படுகின்றது. அதனால் மநுஷ்யர்க்கு

மேற்பட்டு உத்க்ருஷ்டங்களான பல ஜந்மங்களை யடையாமலே, ஒவ்வொரு புருஷனும் ப்ரஹ்ம ப்ராப்தியை இந்த லோகத்திலின்றே ஸம்பாதிக்கக்கூடுமென்று காட்டப்பட்டது.

ப்ரகரணாந்தரத்தில் (ப்ருஹதாரண்யகோபநிஷத்தில்) "𑌅𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌦𑌂 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌨𑌿𑌹𑌤𑍍𑌯 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌗𑌮𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌅𑌨𑍍𑌯𑌨𑍍𑌨𑌵𑌤𑌰𑌂 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌤𑌰𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌪𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑌂 𑌵𑌾 𑌗𑌾𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌂 𑌵𑌾 𑌦𑍈𑌵𑌂 𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌂 𑌵𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌂 𑌵𑌾 𑌅𑌨𑍍𑌯𑍇𑌷𑌾𑌂 𑌵𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 ॥" (ப்ராணோத்க்ரமணமான பிறகு) இந்த ஜீவாத்மாவானவன் இந்தச் சரீரத்தை நாசம்செய்து, அதாவது, அதில் முன்னிருந்த சைதந்ய பாவத்தைப்போக்கி, அதைக் காட்டிலும் அழகானதோர் புதிய ரூபத்தைக் கர்மாநுகுணமாகத் தனக்கு உண்டுபண்ணிக் கொள்கின்றான்; அதாவது, பித்ருலோக வாஸயோக்யமான ரூபமோ, கந்தர்வரூபமோ, தேவலோக வாஸ யோக்யமான ரூபமோ, ப்ரஜாபதிலோகவாஸ யோக்யமான ரூபமோ, ப்ரஹ்மலோக வாஸ யோக்யமான ரூபமோ, வேறு ப்ராணிகளுடையதானதோர் சரீரமோ (அடைகின்றான்)" என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இப்படிப்பட்ட சரீர விசேஷங்கட்குப் பொருந்திய ஸுக்ருத மற்றவர்கள் ஸாதாரண மநுஷ்யர்களாகவோ, இன்னும் கீழ்ப்பட்ட ஜந்துக்களாகவோ புநர்ஜந்மத்தை அடைவார்கள் என்பது உபநிஷத்துக்களால் ஏற்படுகின்றது.

சேதநனுடைய ஜ்ஞாநஶக்தியானது ஸர்வத்ர ஸமாநமாயிருந்தும், சேதநன் ஜந்மமெடுக்கின்ற சரீரங்களுக்கு அநுகுணமாக அதனுடைய ப்ரகாஶமானது ஸங்கோச விகாஸங்களை யடைகின்றதென்பதை, "𑌅𑌪𑍍𑌰𑌾𑌣𑌵𑌤𑍍𑌸𑍁 𑌸𑍍𑌵𑌲𑍍𑌪𑌾 𑌸𑌾 𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑍇𑌷𑍁 𑌤𑌤𑍋𑌽𑌧𑌿𑌕𑌾", என்று ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ விஷ்ணுபுராண ஶ்லோகங்களைத் தமிழ் படுத்தித் தத்வவிசாரத்தில் காட்டியிருக்கின்றோம்.

* * * * * * *

ஜீவகோடிகளுக்கு லோகாந்தரத்தை ஒப்புக்கொள்கின்றவர்கள், அவர்களுக்கு ஜ்ஞாந விகாஸத்தாலும் ஆநந்தாநுபவத்தாலும்

பேதிக்கப்பட்ட பல சரீரங்களை யடையத்தக்கப் பல லோகப்ராபதியையும் அங்கீகரிப்பது யுக்தம். இந்த் யோசனையை மதாந்தரங்கள் செய்யவில்லை. ஆர்யமதத்தால் ஏற்பட்ட லோகாந்தரக்ரமம் யுக்திவாதங்கட்கும் பொருந்தி நிற்கின்றது. இப்படிப்பட்ட லோகங்களை ஜீவன் ஸ்வகர்மத்தால் ஆர்ஜிக்கத்தக்கவன் என்பதும் யுக்தியுக்தம். ஒவ்வொருவன் கர்மாநுகுணமாகக் கர்மாத்யக்ஷன் ஸங்கல்பத்தால் மாத்ரமே ஒவ்வொருவனுக்கும் லோகாந்தர வாஸவ்யவஸ்தை ஏற்படுகின்றது. கர்மாவஸாநத்தில், (அதாவது,ஒவ்வொருவனும் ஸ்வகர்ம பலத்தை யநுபவித்த பிறகு) லோகாந்தரங்களினின்று, "𑌕𑍍𑌷𑍀𑌣𑍇 𑌪𑍁𑌣𑍍𑌯𑍇 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌲𑍋𑌕𑌂 𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿", என்கிறபடியே, இந்தக் கர்ம்பூமியில் ஜந்மமெடுக்கின்றானென்பதும் யுக்தமே. ஆதலால், இந்த லோகத்தில் மநுஷ்யர்க்குள் காணப்படுகின்ற ஸுகதுக்க தாரதம்யங்களும், அவ்வவனுடைய கர்மத்தைப் பொறுத்ததென்பது அங்கீகரிக்கத்தக்க விஷயம். ஐரோப்யர் நூதநமாகக் கண்டுபிடிக்கின்ற உண்மைகள் ஆர்யமதத்தின் உண்மைகளை ஸ்திரப்படுத்துகின்றன. ஸநாதநமான வைதிக மதம், நம் பூர்வீகர்களான மஹர்ஷிகளால் ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்வலாப ஸந்துஷ்டரும், ஸாதுக்களும், சாந்தமநஸ்கரும், ஸர்வபூதங்களுக்கும் ஹிதத்தைச் செய்பவருமான விப்ரச்ரேஷ்டர்களால் இதுவரையில் ரக்ஷிக்கப்பட்டது. இப்போது அம்மஹாத்மாக்களுடைய வம்சத்தில் ஜநித்து, விஷயாஸக்தசித்தர்களாய் நின்று, தமக்குப் பரமச்ரேயஸ் இன்னதென்று அறியத் திறனற்றுப் போனவர்கள், துஸ்ஸங்கங்களில் விழுந்து, துர்வாஸனைகளால் ஆகர்ஷிக்கப்பட்டுப்போய், வைதிக மதத்தூஷகர்களாகவும் பரிணமிக்கின்றனர்.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

ஆறாவது வர்ஷத்திய ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கம்.

" [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] । "

இவ்வர்ஷத்திய ஸ்ரீவைஷ்ணவ மஹாஸங்கம், சென்ற மார்கழி மீ 13, 14, 15 - ம் தேதிகளில் ஸ்ரீ ஆதிகேசவனுடைய திருவடி வாரத்தில் ஸதஸ்ஸை உத்தேசித்து எழுந்தருளி யிருந்த ஸகல பாகவதர்களுடைய திருவுள்ளமும் உகக்கும்படி நடைபெற்றதென்பது ப்ராயேண எல்லாருக்கும் தெரிந்திருக்கும். 13 - ம் தேதி புதன் கிழமை பூர்வாஹ்ணம் முதலாக 16 - ம் தேதி சனிக்கிழமை ராத்ரி வரையிலுள்ள நாலு தினங்களிலும், ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன் மண்டபமும் ஸ்ரீ கேசவப் பெருமாள் ஸந்நிதி வீதியும் பெரியதொரு மஹோத்ஸவத்தினால் பெறக்கூடிய அஸாதாரண சோபையைப் பெற்றிருந்தன. ஸித்தாந்தத்தின் ஸம்ருத்தியைக் குறைவறப் புகழ்ந்து பேச உசிதமான அவகாசம் லப்தமானது பற்றி மிக்க ஆநந்தத்தை அடைந்துள்ள பல வைதிக வித்வான்களும், அந்தப் புகழ்ச்சியைச் செவி குளிரக் கேட்டு ஸந்தோஷிப்பதில் மஹத்தான ஔத்ஸுக்யம் கொண்டு பற்பல இடங்களிலிருந்து வந்திருந்த கணக்கற்ற லௌகிக ஆஸ்திகர்களும், இவர்களெல்லாருக்கும் கைங்கர்யம் செய்வதையே பரமபாக்யமாக உணர்ந்திருந்த இந்த ஸ்தலவாஸிகளான சிறுவர்களும், தம் தம் வர்ணாச்ரம தர்மங்களுக்குரிய மநோ பாவங்களினாலும் அவைகளுக்கு அநு

குணங்களான நடையுடைகளினாலும் இந்த ப்ரதேஶம் முழுவதையும் ப்ரகாஶிப்பித்து வந்ததை அங்கு வந்திருந்த எல்லாரும் பார்த்திருக்கலாம். இம்மாதிரியான ப்ரவ்ருத்திகளில் அதிகமான அபிநிவேஶம் கொள்ளாமலிருக்கும் சில உதாஸீநர்கள்கூட இந்த உத்ஸாஹத்தையும் இதன் ஸாதுத்வத்தையும் பார்த்து மிக்க ஆஶ்சர்யமடையும் படியும், இயற்கையாக காமக்ரோதாதிகளில் நோக்கும் மநோபாவநைகளை அவைகளுக்குப் பரிசிதங்களான வ்யாபாரங்களிலிருந்து சற்று விலக்கி ஸாத்விகத் தன்மையை மேல்கொள்ளும்படியும், அவ்வளவு மஹிமை பொருந்தினதாக இந்த ஸங்கம் நடைபெற்றதென்றே சொல்லவேண்டும். பகவான் இம்மாதிரி இந்தக் கைங்கர்யத்தைப் பூர்த்தி செய்துகொண்டது பற்றி நாமெல்லாரும் அவன் விஷயத்தில் அளவற்ற க்ருதஜ்ஞதை யுள்ளவர்களாகவே இருக்கிறோம்.

ஆனால், இந்தப் பரிஶ்ரமத்தின் லாபாம்ஶமென்ன? என்று ஒரு ஶங்கை ஜநிக்கலாம். 'தாத்காலிகமான ஒரு ஆநந்தத்தை இது ஜநிப்பிக்கின்றதே தவிர ஶாஶ்வதமான எவ்வித பலமும் இதனால் ஏற்பட்டதாகத் தென்படவில்லை' என்று சிலர் ஆக்ஷேபிப்பதை நாம் கேட்டிருக்கிறோம். அவர்களுக்கு நாம் சொல்லும் ப்ரத்யுத்தரம் ஒன்றே. நமது ஆசார்யர்களால் லோகோஜ்ஜீவநார்த்தமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஸித்தாந்தத்தின் ப்ரசாரமாகிற நமது முக்கியமான உத்தேஶ்யத்தை, இம்மாதிரியான ஸங்கங்கள் ஸாக்ஷாத்தாக ஸாதித்துக் கொடுக்க யோக்யதை யற்றனவாயினும், அதற்கு இவை பரம்பரையாக உபகாரங்களாகின்றன வென்றே நாம் நினைக்கிறோம். மூன்று தினங்களில் பல பெயர்களாற் பல ப்ரகாரமாகச் செய்யப்படும் உபந்யாஸங்களும் சர்ச்சைகளும் ஸித்தாந்தாநபிஜ்ஞர்களுக்கு ஸித்தாந்தத்தைப் போதிப்பித்து விடுமென்றாவது, ஆத்ம குணங்கள் இல்லாதவர்களுக்கு அந்தக் குணங்களை உத்பத்தி செய்துவிடுமென்றாவது நாம் வாதிக்கவில்லை. ஆனால், மிதஜ்ஞர்களான ஸாமாந்ய ஜநங்கள், வயதினாலும் ஜ்ஞாநத்தினாலும் பெரியோர்களாயுள்ள மஹான்கள் நமது ஸித்தாந்தத்தைப் பற்றி புகழ்ந்து பேசுவதையும், அதிலுள்ள மாஹாத்ம்யத்தைக் கொண்டாடுவதையும் பார்த்தால், அவர்களின் அநுஷ்டாநமடியாக நமது ஸித்தாந்தத்தில் ஒரு விஶ்வாஸத்தைப் பாராட்டி அதைத் தெரிந்துகொள்வதில் ஒருவித ருசியைக் கொள்வார்கள் என்பதில்

ஸந்தேஹமில்லை. பாஷாந்தரத்தில் ஒருவிதத் தேர்ச்சியை யடைந்து அதனால் உயர்ந்த லௌகிக பதவியைப் பெற்றிருக்கும் சில நாஸ்திகர்களுடைய ஸமாகமத்தை அடைந்திருக்கும் நமது சிறுவர்கள், அந்த நாஸ்திகர்களையே ப்ரமாணமாகக்கொண்டு அவர்களின் ஆசாரத்தையே அநுவர்த்தித்து ஆத்ம நாஶத்தை விளைவித்துக்கொள்ளுகிறார்க ளென்பதை நாம் ப்ரதி தினமும் பார்க்கவில்லையா?

"𑌯𑌦𑍍𑌯𑌦𑌾𑌚𑌰𑌤𑌿 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑌦𑍇𑌵𑍇𑌤𑌰𑍋 𑌜𑌨𑌃 ।
𑌸 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌲𑍋𑌕𑌸𑍍𑌤𑌦𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥"

அப்படிப் பாஷாந்தராப்யாஸம் செய்து லௌகிகத்தில் மேன்மை பெற்றவர்களுக்குள், நாஸ்திக்யத்தை அவலம்பியாமல் ஶாஸ்த்ரவஶ்யர்களா யிருப்பவர்களும் சிலருண்டு என்பதை எவ்விதத்திலாவது இந்த ஸாமாந்ய ஜநங்களுக்குக் கோசரமாகும்படி நாம் செய்தால், தீங்கு அவ்வளவாக விளையாது என்பது யுக்திக்கும் அநுபவத்திற்கும் ஒத்திருக்கின்றது 'அந்த விதத்தில் இம்மாதிரியான ஸங்கங்கள் உபகாரகங்களாகின்றன என்பது நமது நம்பிக்கை. தவிரவும், சில ஸுக்ருத விஶேஷமடியாகச் சிற்சில பாகவதர்களின் கடாக்ஷம் பிறந்தவுடன், நமது புத்திக்கு ஒருவிதமான ஸந்மார்க்க ப்ரவ்ருத்தி ஏற்படுவதும் உண்டு. அநேக பாகவதர்களும் வைதிக பண்டிதர்களும் ஒன்று சேரும் இம்மாதிரியான ஸங்கங்களில் அப்படிப்பட்ட கடாக்ஷம் சில சேதநர்களுக்கு நேராதென்றும் ஸந்மார்க்கப்ரவ்ருத்தி உண்டாகாது என்றும் யாராய் சொல்லக்கூடும்? ப்ரத்யுத, இரண்டொரு வ்யக்தி விஶேஷங்களில் அம்மாதிரியான அநுக்ரஹம் ப்ரக்ருதத்தில் நேர்ந்திருப்பதை நாம் ஸாக்ஷாத்தாகப் பார்க்கிறோம். இப்படி நமது ஶாஸ்த்ரத்தில் ஒரு வித ருசியை ஜநிப்பிப்பதிலும், உபசித புண்யர்களாயுள்ள சில வ்யக்திகளுக்கு ஸந்மார்க்க ப்ரவ்ருத்தியை ஸாதித்துக் கொடுப்பதிலும் இம்மாதிரியான ப்ரயத்நம் உபகாரகமாயிருந்தால் அதை நிஷ்பலமென்றாவது அல்ப பலமென்றாவது உதாஸிப்பது எப்படி உசிதமாகும்? இந்த ப்ரவ்ருத்தியில் பூர்ணமான விஶ்வாஸமுள்ள நாம், மேன்மேல் இது வ்ருத்தியாக வேண்டுமென்றும், இப்பொழுது இதில் கொஞ்சம் ஔதாஸீந்யத்தை வஹிக்கும் சில ஆஸ்திகர்களும் இனி

இதில் சேர்ந்து இதற்கு உசிதமான ஸஹாயத்தைச் செய்யவேண்டுமென்றும் ஹார்த்தமாக ப்ரார்த்திக்கிறோம்.

இவ்வர்ஷத்திய ஸதஸ், இதற்கு முந்தின வர்ஷங்களில் நடைபெற்ற ஸதஸ்ஸுகளிலிருந்து இரண்டொரு அம்ஶங்களில் கொஞ்சம் நூதநமான ஒரு பரிபாடியை அநுஸரித்திருந்தது. அந்த அம்ஶங்களைப் பற்றி மாத்திரம் இவ்விடத்தில் ப்ரஸ்தாவிப்பது அவஸர ப்ராப்தமாக இருப்பதால் அது ஸம்பத்தமான இரண்டொரு விஜ்ஞாபநங்களைச் செய்துகொள்ள யத்நிக்கின்றோம். முதலாவது, ப்ராசீந காலங்களில் வாக்யார்த்த மென்று ஶாஸ்த்ர ஸம்பத்தமான ஒரு வித விஷயசர்ச்சை வித்வான்களுக்குள் நடைபெற்று வந்தது என்று பலர் கேட்டிருக்கலாம். அவ்விதமான சர்ச்சை, ஸ்ரீ வேதாந்த ஶாஸ்த்ரம் ஸம்பந்தப்பட்ட வரையிலாவது இவ்வர்ஷத்தில் இந்த ஸதஸ்ஸில் நடக்கவேண்டுமென்று சிலருக்கு ஆஸ்தை யிருந்தபடியால், அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மூன்று தினங்களிலும் பூர்வாஹ்ணத்தில் அவ்வித சர்ச்சை நடைபெற்றது. ஸ்ரீ. உ.ஸ. சேட்லூர் நரஸிம்மாசார்யர், புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர், இஞ்ஜிமேடு ரங்கநாதாசார்யர், ஸ்ரீ ஶைலம் தாதாசார்யர், வாங்கல் ஸ்ரீநிவாஸாசார்யர் இன்னும் அநேக வித்வான்கள் அதில் அந்வயித்தார்கள். கேவலம் ஸம்ஸ்க்ருத பாஷையில் அந்தச் சர்ச்சை நடந்தால், அந்தப் பாஷாஜ்ஞாநமில்லாத மற்றவர்களுக்கு அது விளங்காமலிருக்குமென்று ஶங்கித்து, தமிழ் கலந்த ஸம்ஸ்க்ருத நடையில் விஷயங்களைப் பற்றி அவர்கள் வ்யவஹரிக்க, அதில் உத்ஸாஹமுள்ள மற்றவர்களும் அவர்களாற் செய்யப்பட்ட ஆக்ஷேப ஸமாதாநங்களை நன்றாக உணர்ந்து அதை மிகவும் ஆநந்தித்தார்கள். வித்வான்களுக்கும் உபந்யாஸாதிகளில் விட இதில் அதிக நோக்கம் இருந்தது என்பதும் வெளிப்பட்டது. இம்மாதிரியான சர்ச்சைகளால் நமது மதஸ்தாபநமாவது அந்யர்களுடைய மதத்தின் பங்கமாவது செய்யப்படவேண்டுமென்பது நமது கருத்தன்று.” இப்படிப்பட்ட ஒரு ஏற்பாடு நடைபெற்று வந்தால், அநேகர்களுக்கு இது ஶாஸ்த்ர பரிசயத்தை ஸமீசீநதரமாகச் செய்ய ஒரு ப்ரோத்ஸாஹந ஹேதுவாகுமென்றும், இம்மாதிரியான சர்ச்சைகளில் அவரவர்களுடைய புத்தி கௌஶலத்துக்குத் தக்கபடி யுக்த்யதிஶயங்கள் ஸ்புரிப்பதும் அவைகளை சமத்காரத்துடன் அவர்கள் ப்ரயோகம் செய்வதும் ஶ்ரோதாக்களுக்கு ஒரு வித ஸந்தோஷத்தை ஜநிப்பிப்பதுடன் சர்ச்சை செய்யுமவர்களுக்கும் புத்தி தைக்ஷ்ண்யத்தை ஸம்பாதித்துக் கொடுக்குமென்றும் இந்தப் பரிபாடியை நாம் ஆதரிக்க யத்நப்பட்டோம். இது நமக்கு ப்ரதம ப்ரவ்ருத்தியானதனால், அவ்வளவாக த்ருப்திகரமாக இப்பொழுது நடைபெற்றிராம லிருந்தபோதிலும், இதை மிக்க ப்ரயோஜநவத்தாகச் செய்வதற்கு வித்வான்களெல்லாரும் உத்ஸுகர்களாக இருக்கிறபடியால், எவ்வித தோஷமு மின்றிக்கே இது இனி நடைபெறுமென்று நாம் நம்புகிறோம்.

இரண்டாவது - சென்ற ஸம்வத்ஸரத்தில் இந்த ஸபை, ஸகல ஸ்ரீ வைஷ்ணவர்களாலும் ஆதரிக்கப்படும்படி ஒருவித விஸ்தாரத்தை அடைந்தது என்பது ப்ராயேண எல்லாருக்கும் தெரிந்திருக்கும். அப்படி விஸ்தரித்ததைப் பற்றி பல பெயர் பல விதமான அபிப்ராயத்தைக் கொண்டிருக்கிறார்கள். விஷ்ணு பக்தர்களான பாகவதர்களுக்குள் பரஸ்பரம் துராக்ரஹமும் த்வேஷமும் இருக்கும் வரையில் நமக்குப் பகவதநுக்ரஹம் கிடைக்காது என்று உணர்ந்திருக்கும் நாமோ, இந்த விஸ்தாரம், நமது உத்தேஶ்யமான ஸௌஹார்த்தத்தையும் ஐகமத்யத்தையும் ஸாதித்துக் கொடுக்கத் தகுந்ததென்றும், ஆகையினால் அதிமாத்ரம் ஶ்லாகிக்கத் தகுந்ததே என்றும் த்ருடமாக நம்பி யிருக்கிறோம். கலை, வர்ணம், ஆஶ்ரமம், இவை முதலிய வ்யத்யாஸங்களற்ற ஸர்வ பாகவதர்களுக்கும் பரஸ்பரம் ஸௌஹார்த்தம் இருக்கவேண்டுமென்பதே நமது தீவ்ரமான கொள்கை. ஜந்ம நிபந்தநங்களான அநுஷ்டாநங்களையும் ஸம்ப்ரதாயங்களையும் கொஞ்சமேனும் கைவிடாமல், நாம் பரஸ்பரம் ஹார்த்தமான விஶ்வாஸத்தையும் ப்ரீதியையும் செய்துகொள்ளலாமென்பது அநுபவத்திற்கும் யுக்திக்கும் ஒத்ததே. அப்படிப்பட்ட ஸாத்விகமான மநோபாவத்தைக் கருதி செய்யப்பட்டிருக்கும் ப்ரக்ருத விஸ்தார விஷயமாக வெவ்வேறான அபிப்ராயங்கள் வெளிப்பட்டால், அது யுக்திஸஹமான ஆலோசனையில்லாததால் உண்டாகின்றதென்றே நாம் நினைக்கிறோம். இந்த ஸதஸ்ஸில், இருகலையாரும் ஒன்று சேர்ந்து பரஸ்பரம் ப்ரீதர்களாக கோஷ்டீ ஸுகாதிகளை அநுபவித்ததும், மற்றவர்களுக்கும் அம்மாதிரியான மநோபாவத்தை ஜநிப்பித்ததுமே இந்த ஸம்வத்ஸரத்திய ஸதஸ்ஸின் மற்றொரு நூதந ப்ரக்ரியை.

இந்த ப்ரக்ரியை உத்தரோத்தரம் அபிவ்ருத்தமாகி, பஹு காலமாக நமக்குள் பரஸ்பரம் வளர்ந்து வந்திருக்கும் ஆந்தர த்வேஷத்தை வேரறுத்து ஜகத்துக்கே பரம நிஶ்ரேயஸமாயுள்ள ஐகமத்யத்தையும் ஸௌஹார்த்தத்தையும் ஸகல பாகவதர்களுக்கும் ஸாதித்துக்கொடுக்க வேண்டுமென்பது தான் நமது ப்ரார்த்தனை.

இன்னும் இந்த ஸதஸ்ஸைச் சேர்ந்த அநேக விஷயங்கள் இவ்விடத்தில் விஜ்ஞாபநீயங்களாக இருக்கையிலும், அவகாஶம் மிதமாக இருப்பதால் ஒரு அம்ஶத்தை மட்டில் விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறோம். இந்த ஸதஸ் நிர்விக்நமாகவும் பூர்ண பலவத்தாகவும் முடிந்ததற்கு அநேகம் பெயர்களுடைய ஸஹாயம் காரணம். த்ரவ்யத்தினாலும் வாக்கினாலும் ஶரீரத்தினாலும் ஸஹாயம் செய்தவர் பலர். மாநஸிகமான ப்ரீதி பூர்வக அநுக்ரஹத்தினால் உதவி புரிந்தவர் சிலர். இவர்களெல்லாருக்கும் நாம் நமது நன்றியறிவை இப்பொழுது இந்தப் பத்ரிகை வழியாக ஆவிஷ்கரிக்கிறோம். இவர்களுட் சிலர், ஸதஸ் ப்ரயுக்தமான உத்ஸாஹத்தினால் மாத்திரமின்றிக்கே வ்யக்திநிஷ்ட விஶ்வாஸத்தினாலும் ப்ரீதியினாலும் தூண்டப்பட்டவர்களாய்க்கொண்டு, தமக்கு ஜநிக்கும் க்லேஶத்தைக் கொஞ்சமேனும் பாராட்டாமல் இரவும் பகலுமாக இந்த ஸதஸ்ஸைப் பூர்த்திசெய்து வைக்கும் பொருட்டு மிகப் பரிஶ்ரமப்பட்டிருக்கிறார்கள். அவர்களுள் முக்கியமானவர்கள், மயிலாப்பூர் வாஸிகளான நமது ஸுஹ்ருத்துக்கள். 'இந்த ஸதஸ்ஸை நடத்துவதை ஏற்றுக்கொண்டிருக்குமவன் நமது விஶ்வாஸ பாத்ரமன்றோ? தவிரவும் அதைச் சரிவர நடத்த அஶக்தனாச்சுதே!' என்று கருணையாற்போல ஸமஸ்த லௌகிக வ்யாபாரங்களையும் வைதிக வ்யாபாரங்களையும் தமக்குள் விபாகித்துக்கொண்டு, அவைகளில் அளவற்ற உத்ஸாஹத்துடன் ஹார்த்தமாக ப்ரவ்ருத்தித்து, ஒரு விதத்திலும் எவ்வித குறைவும் ஸம்பவிக்காமல், ஸதஸ்ஸைப் பூர்த்தி செய்துவைத்த அவர்களுக்கு, நாம் விஶேஷித்த க்ருதஜ்ஞதையைப் பாராட்டுகிறோம்; அந்த உபகாரத்தை ஒரு பொழுதும் மறவாமல் ஸதா மநஸ்ஸில் அநுஸந்தாநம் செய்துகொண்டிருப்போமென்றும் இதனால் வெளிப்படுத்தத் துணிகின்றோம்.

மயிலாப்பூர்,
8-1-17. } எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:

ஆறாவது ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸங்கம்.

ஸ்வாகதம்.

[இது, சென்ற மார்கழி மாஸத்தில், மயிலாப்பூரில் நடந்த ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸங்கத்தில், ஸ்ரீ. உப. ராவ் பஹதூர் எஸ். ராமஸ்வாமி ஐயங்காரால், அந்த ஸதஸ்ஸுக்கு எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளுக்குச் செய்யப்பட்ட ஸ்வாகத உபந்யாஸம்.]

புராண ப்ரஸித்தமாய், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த கூடஸ்தர்களில் முதன்மை பெற்றவர்களான நித்யஸூரி அவதாரர்களான முதலாழ்வார்களில் ஒருவராய், ஸ்ரீ பகவத் மதாம்ஶராய் அவதரித்தருளிய பேயாழ்வார் நமது குலதநமான ஸ்ரீ ஆதிகேஶவ ஸ்வாமி கைங்கர்ய போகத்தை அநுபவித்த இந்தத் திவ்ய தேசத்தில், ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனுடைய கடாக்ஷ பாதத்தாலே அத்யந்த மஹிமையை அடைந்த இந்த மஹாமண்டபத்தில் விஶேஷமான க்ருபையினாலே அடியோங்களை அநுக்ரஹிக்கும் பொருட்டு எழுந்தருளியிருக்கும் பரமைகாந்திகளுக்கும் மஹாந்களுக்கும், ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் கார்ய நிர்வாஹ கைங்கர்யத்திற்கு ஏற்பட்டிருக்கும் ஸங்கத்தினர்களுக்காக அவர்களுடைய நியமநத்தை ஶிரஸ்ஸில் வைத்து, அவர்களில் ஒருவரான தாஸன், அடியோங்களுடைய க்ருதஜ்ஞதையை விஜ்ஞாபநம் செய்து கொள்ளுகிறேன். இந்தப் பாகவதகோஷ்டியின் மஹிமை ப்ரபாவம் வாசாமகோசரம். இவைகளை அறிய அஶக்தர்களாயிருக்கும் அடியோங்கள், அப்படிப்பட்ட பாகவதோத்தமர்களுக்கு ஏற்ற ஆராதநம் செய்ய எள்ளளவிலும் அர்ஹருமல்லர்; ஶக்தருமல்லர். ஆயினும் பாகவத நிஷ்டமான ஔதார்யத்தை நினைத்து, அடியோங்களுடைய தாழ்மைகளையும் குறைவுகளையும் மறந்து, அடியோங்களுக்கு உள்ள ஶ்ரத்தைகளையும் ருஜுபாவத்தையும் மாத்ரமே திருவுள்ளம்பற்றி, அடியோங்களை தந்யர்களாய்ச் செய்தருளி, இந்த ஸபையின் உத்தரோத்தர வ்ருத்தியை அநுக்ரஹிக்கும்படி ப்ரார்த்திக்கிறேன்.

2. இந்த ஸபையை முதலில் 'ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்யஸபை, யென்று ஆரம்பித்து, அதற்கு உபகரணமாயும் அங்கமாயும் உள்ள 'வேதாந்த தீபிகை' என்னும் பத்ரிகையை ஏற்படுத்தி, ஸ்ரீமடத்துஶிஷ்யர்கள், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை வ்ருத்தி செய்துகொண்டு வந்தார்கள் என்பதும், சென்ற வர்ஷம் அந்த நாமத்தை மாற்றி ஸகல ஸ்ரீ வைஷ்ணவர்களும் ஸ்ரீ மடத்து ஶிஷ்யர்களுடன் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தினுடைய போக்யாம்ஶங்களை அநுபவித்து ஆநந்தமடைய வேண்டுமென்று இந்த ஸபை 'ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தஸபை' என்று பெயரிடப்பட்டது என்பதும் அநேகமாக எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இதன் முக்ய தாத்பர்யம்: ஸ்ரீ பாஷ்யகார ஸித்தாந்தமாகிற வ்ருக்ஷத்திற்கு, ஸம்ப்ரதாயபரம்பரை ஆசார்ய பரம்பரை முதலானவற்றால் ஏற்படக்கூடிய ப்ரகாரங்களையெல்லாம் ஶாகைகளாகக்கொண்டு, அவையெல்லாம் பரஸ்பரம் உபஜீவ்யமாக இருக்கும்படியான மார்க்கத்தையே தேடவேண்டுமென்பது தான். இந்த ஸபை இவ்விதம் ஏற்பட்ட பிறகு, ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்யர்களுடன் அநேக ஸ்ரீ வைஷ்ணவர்களும் சேர்ந்து ஸபையை நடத்திவருகிறார்கள்.

3. சென்ற வர்ஷத்தில் திருமலையில் 'இதற்கு ஒரு கிளையும் அந்தக்கிளை ஏற்படுத்தப்பட்டு ஸபையும் நடந்து வருகிறது. சில நாட்களுக்கு முன் 'கோயில்' என்கிற 'ஸ்ரீரங்கம்' என்னும் திவ்ய தேசத்திலும் ஒரு ஸபை ஏற்படுத்தப்பட்டு, இந்த ஸபையின் நோக்கத்தை ஒத்து அது நடந்து வருவதாயும் ஸ்ரீ வேதாந்த தீபிகையே இதற்கும் உபகரணமான ஸஞ்சிகையாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதாயும் தெரியவருகிறது. அதிலிருந்து சில கனவான்கள் இந்த ஸதஸ்ஸுக்கு விஜயம் செய்திருக்கிறார்கள். இவ்விதமாகவே பற்பல இடங்களில் ஸபைகள் ஏற்பட்டு, ஸித்தாந்தம் பரவித்தழைத்து, ஸ்ரீ வைஷ்ணவர்கள் எல்லோரும் ஒருமித்துத் தங்கள் தங்கள் பரம்பரா ரீதியாய் மாத்ஸர்யமின்றி, திவ்ய தேசங்களில் அர்ச்சாரூபமாய்த் தனது கல்யாணகுணாநுபவம் பண்ணஸுலபமாய் அவதரித்திருக்கும் எம்பெருமான் ஸந்நிதிகளில் இதரர்கள் கண்ணுற்று ஆஶ்சர்யப்படும் விதமாகக் கைங்கர்யங்களை நடத்தி, குணாநுபவம் செய்யத்தக்க மார்க்கங்களை இந்த ஸதஸ்ஸில் மஹான்கள் யோஜிக்கவேண்டியிருக்கிறது.

4. மேற்சொல்லிய விஷயத்தில் முதலில் கவனிக்கவேண்டியவை: ஆசார்ய பரம்பரை அநுஷ்டாந பரம்பரை முதலிய காரணங்களைப்பற்றித் தத்காலம் அடிக்கடி உண்டாகும் மநோ விகாரங்களையும், ஆக்ரஹ க்ருத்யங்களையும் குறைக்க வேண்டிய உபாயங்கள் முதலியன. இவை விஶேஷமாக இப்போது வ்ருத்தியாகி வரும் ஸ்தலங்கள், ஆழ்வார் ஆசார்யர்கள் ஈடுபட்டு மெய்மறந்து பகவதநுபவத்தில் மூழ்கி, ப்ருஹ்மாநந்தத்தை இந்த லோகத்திலேயே அநுபவித்துவந்த கோயில், திருமலை, பெருமாள் கோயில். கால விஶேஷத்தால் அவ்விடங்களில் வ்ருத்தியாய்வரும் ப்ராக்ருத ஸம்பந்தமான வ்யாபாரங்கள், ஸித்தாந்தத்திற்கும் அதைச் சரணமடைந்த பரமைகாந்திகளுக்கும் அவர்கள் அநுபந்தியான மந்தர்களான தாஸர்களுக்கும் மானக்குறைவை உண்டு பண்ணியும் ஆசார்யன் ஸூக்திகளினால் நமது மநோநிஷ்டையையும் நமது மனப்பயிற்சியையும் கண்டு விஸ்மய மடையும்படியான இதரர்களிடத்திலும், ஸித்தாந்தத்தில் ஒரு ஹேளந புத்தியையும் பரிஹாஸோக்திகளையும் உண்டுபண்ண ஹேதுவாயு மிருக்கின்றன. இதனால் திவ்ய தேசங்களையும் அவைகளின் மஹிமைகளையும் நாம் இழந்து விடுவதுமன்றி நமக்குப் பரமோபகாரர்களான ஆழ்வார் ஆசார்யர்களுடைய ஸ்மாரகங்களான அடையாளங்கள் பொருந்திய திவ்ய தேசங்களில் ப்ரீதி விஶேஷமும் குன்றுகிறது. அந்த இடங்களில்போனமாத்ரம் ஆசார்ய ஜ்ஞாபகத்தால் உடம்பு பூரித்து மனமகிழ்ந்து யாம் வர்த்திக்க வேண்டிய உத்தமமான வ்யாபாரங்களையும் நினைக்க ஹேது வில்லாமல், கேவலம் லௌகிகமாக தேச சரித்ரம் காலவ்யதிக்ரமம் முதலிய விஷய பரிசீலநம் செய்துவரும்படி ஏற்படுகிறது. ஆகையால் அப்படிப்பட்ட திவ்ய தேசங்களில் ஸாத்விகமான மநோ வ்யாபாரங்களை ஜ்ஞாபகப்படுத்தக்கூடிய மாதிரி அர்ச்சாரூபமாக எழுந்தருளியிருக்கும் பகவானுடைய கைங்கர்யங்களை, யார், யார், அவரவர் ஸம்ப்ரதாய ப்ராப்தமான ப்ரகாரம் செய்தருளினாலும், அவை யாவற்றையும் தாம்தாம் செய்ததுபோல அநுபவித்து இருளிலாப் பெருஞாலமான் நித்ய விபூதியில் அநுபவிக்கிற விதத்திற்கு வாசியற அநுபவிக்கும்படியான மார்க்கத்தைச் சிந்திக்க வேண்டியது.

இன்னும் ஒரு விஷயம்: தத்காலத்தில் பாஶ்சாத்ய வித்யையில் ப்ரவீணராயும் விஶேஷமான புத்திப்பயிற்சி யுள்ளவர்களா

யும் பரிசுத்தமான மனோதர்மங்களை யுடையவர்களாயும் தேசாந்தர சரித்ரங்களின் பயிற்சியினாலும் தேசாந்தரர்கள் ஸம்பாஷணத்தாலும் அவரவர்களின் குணதோஷங்களைச் செம்மையாகத் தெரிந்து, நமது தேசத்தவர்களின் குறைகளைக்கண்டு அவற்றை நிவ்ருத்தி செய்து, தேசவ்ருத்தி, ஸுகஜீவநவ்ருத்தி, ததுபாயங்கள், நமது லௌகிக பயிற்சிவ்ருத்தி, இவைகளைச் செய்யவேண்டுமென்று ஊக்கத்துடன், ஸகல வர்ணாஶ்ரமஸ்தர்களும் ஆசண்டாளம் எல்லாரும் ஸுகமாக ஜீவிக்கும் மனப்பயிற்சி தேகப்பயிற்சி அடையும் மார்க்கங்களைத் தேடுபவர்களாயும் உள்ள அநேக கநவாங்களும் ப்ரபுக்களும் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பரமேகாந்திகளுடைய ஸம்ஸர்க்க விஶேஷமும் ஸல்லாபாதி விஶேஷங்களும் அவர்களுடைய ஆந்தரபாஹ்யமான ஆசாராநுஷ்டாந ஸாக்ஷாத்காரங்களும் நேருவதற்கு மார்க்க மன்றியில் இவர்கள் ப்ராயஶஃ கார்யா ஸக்தர்களாகவும் நகரஸ்தர்களாகவும், அவர்கள் ப்ராயஶஃ ஆத்ம தர்மத்திற்கும் ஶமாத்யநுஷ்டாநத்துக்கும் குறைவு வருமென்கிற பயத்தாலும் ஸங்கரத்தால் தர்ம லேஶத்தையும் ஶங்கித்து, க்ராமவாஸிகளாயும் ஏகாந்தவாஸப்ரியர்களாயும் இருக்கின்றார்கள். அவ்வாறே நமது பாலர்களும் லௌகிக ஶ்ரேயஸ்ஸை ஸாதித்துக்கொள்ளும் நிமித்தம் பாஷாந்தராப்யாஸம் தேசாந்தரப்பயிற்சி ஜ்ஞாநம் அடைய நகரங்களில் வஸிப்பவர்களாய்ப்போய் ஶிஷ்டாசாராநுஷ்டாநங்களை ஸாக்ஷாத்கரித்து, அதைத் தன் நடவடிக்கைகளில் சேர்த்துக்கொள்ள மார்க்கமில்லாமல் இருக்கிறார்கள். இவ்விதம் இருந்துவரும் இருதிறத்தவர்களுக்கும் இருவிதப் பயிற்சியும், [அதாவது, ஶாரீரகமாயும் பாஹ்ய லௌகிகமாயும் உள்ள விஷயப் பயிற்சியும் ஆந்தரவிஷயமாயுள்ள மநஸ் ஆத்மா இவைகளின் பயிற்சியும்] ஒன்றுக்கொன்று விரோதமின்றி பரஸ்பரம் உபகாரகமாய் ஐஹிக ஆமுஷ்மிக ஶ்ரேயஸ்கரமாக வ்ருத்தியாக வேண்டிய அம்சத்தை மஹாங்கள் ஆலோசிப்பார்களாக.

இனி அடியேனுடைய அதிப்ரஸங்கங்களையும் அடியோங்களுடைய ஆதித்யாதிகளில் உள்ள ந்யூநாதிக்யங்களையும் நோக்காமல் மறந்து, அடியோங்களை ஸம்ரக்ஷித்து நிர்விக்நமாக இந்த ஸபையின் கார்யங்களை முடிக்கும்படி கோருகிறேன்.

ராவ்பஹதூர் எஸ். ராமஸ்வாமி ஐயங்கார்.

SRI VAISHNAVA SIDDHANTA SABHA, MADRAS.

The Sixth Annual Conference.

PRESIDENTIAL ADDRESS.

The Hon'ble Justice K. Srinivasa Iyengar, B. A., B. L., rose amidst loud applause and delivered the following interesting, instructive and inspiring address:—

Gentlemen,—I accepted the task of opening this Conference with considerable diffidence and if I had known that I would have to face this learned audience I would certainly have declined the offer to enable you to select one more learned than myself, more worthy than myself to address you on this occasion.

I have to begin with an apology for addressing you in English; for it has so come to pass that your English educated person has had time to forget his Vernacular and could not manage a speech even on the simplest or the most intimate and vital subject without a large admixture of foreign words so as to make his language unrecognisable. I was told by Mr. Vasudeva Chariar that your proceedings were always conducted in Tamil and I therein espied a loophole of escape from the task imposed on me; but he gave me liberty to speak in English.

Our great religious literature is in unspoken Sanskrit and even after our great-hearted Acharyas began to teach us in our Vernacular, so that all may understand, we have not cared to cultivate even that. To an ordinary cultured person, our Tamil Literature is as much a sealed book as the classical Sanskrit.

Time was, and that not long since, when the so-called educated person fed with the marvels of the 19th century science was willing to brush aside as silly superstition the precious thoughts of the great teachers, the great seers who gave out great truths. Fortunately all that is changing. We cannot so easily get rid of our precious heritage. There is now a genuine desire on our part to know and understand our religious literature and those of us who are educated in Western scientific methods are beginning to appreciate the rigid logic and the brilliant intellectual quality of that literature.

According to us every act and every thought is and must be a preparation for a higher spiritual life and the least that we can do is to sit humbly at the feet of those who are able to teach us, and learn. There is a certain amount of impatience at the traditional method of teaching but it must be remembered that human speech and language is but a poor medium to express spiritual truths. Nothing can be more beautiful than the relation of Guru or Acharya to the pupil or Sishya as conceived in our religious literature; and if we think that a considerable number of pretended gurus are cheats or ignorant impostres, if we will only search for them, we will not find much difficulty in finding men of real knowledge and sanctity of life willing and able to impart that knowledge or give us the training necessary for further progress. It is therefore necessary that the Western educated man and the Pandit learned in traditional knowledge should come into contact with each other; and without a close and careful cultivation of Vernacular so as to make the ordinary speech of the cultured person capable of expressing the highest thoughts and without a much more general spread of Sanskrit the contact is neither possible nor useful. It is here that the wealthy Mutts scattered all over the Presidency can be of great service.

I have no desire to trouble you with the origin of these Mutts but those of you who want information will find it in the classical Judgment of Sir T. Muthuswamy Iyer, one of the greatest lawyers this province produced and a most pious Brahmin. These mutts were endowed with large properties to enable the heads to impart religious instruction to people. The mutts were Colleges for religious teaching and for the teaching of the Sastras. Unfortunately the original purpose is mostly forgotten and vast revenues are wasted in useless expenditure. The revenues, if properly utilised, will be found sufficient to support several Hindu Universities.

Public sentiment and the character of the heads who were pious ascetics were in former times found sufficient to ensure the proper

administration of these valuable properties; but I am afraid nowadays they do not afford sufficient safeguards and the tendency is to look upon them as the private property of the heads. It is interesting to note that recently the Privy Council characterised these mutts as public trusts as, in fact, we always considered them to be.

Though a very large portion of the income of the temples is needed for the worship, in some of the noted temples at least a very considerable sum can be released for the teaching of the Agamas so that the Archakas and other worshippers in temples may realise the use of the temples as a source of spiritual joy and development.. There has been a tendency on the part of some the English educated people, due no doubt to the undisguised contempt in which the so-called worship of the idols is held by foreign thinkers, to condemn such worship, at any rate to imagine that such worship was not intended to such superior persons as themselves. It need scarcely be pointed out that we do not worship the stone, the wood or the brick and mortar, but the spiritual idea or ideal behind. It must be remembered that the great Alwars, the passionate devotees of God have found grace within the Holy of Holies of these temples and have been divinely inspired. I fondly believe that holy thoughts are equally subject to the laws of conservation of energy and may perhaps linger to inspire one out of the countless millions who go to the temple for worship. If perchance they enable you for a few minutes in a day to lift yourself above the petty worries, anxieties and hopes of things earthly, to contemplate of things which almost all mankind agree to think is higher, you have no right to neglect them. It seems to me that after all it is really ignorance which makes you ashamed of temple worship, and knowledge of the meaning of rituals and symbols is necessary before we can adequately profit by that worship. There is no mystery about truths and there should not be any about the most absolute truths. There is no excuse whatever for our ignorance; there is no excuse whatever for any neglect of the processes which lead you on to those truths. I am afraid that owing to ignorance we are fast losing our grip of facts, and to a considerable number who still cling on to the forms of religious exercise they are nothing more than meaningless symbols. We cannot disguise from ourselves that as many go to a temple for fun as from piety. It behoves then those who have been educated in western methods to use these instruments of knowledge for a critical study of our religious literature and spread that knowledge as far as possible. It is equally their duty to see that all funds legitimately available for that purpose are so utilised. I cannot here omit to mention what the Dharma Rakshana Sabha with its handful of patriotic Hindus, without any funds at its back, has been able to achieve in correcting abuses in temple administration.

There is one matter in connection with our Vishnu temples which I cannot omit. We pretend to be the followers of the great Udayavar who was willing to forfeit his immortal soul if he can bring salvation to the multitude without distinction of caste. For I have heard of the beautiful story that when he was told of the mantram which he was to keep secret on pain of eternal hell, he proclaimed it from the hilltops for all mankind to be saved. But yet we allow small doctrinal differences or even petty differences in practice to keep us asunder as "Tengalais' and "Vadagalais" and we have the most unedifying disputes as to the 'patram' and 'mantram,' as to who should have the first teertham or the last, or even as to who should sit beneath a particular pillar when reciting stotrams in the presence of God. No sane man can imagine that such things add to spirituality or to seemly worship. There is no salvation for persons who think or say that stotrams in praise of one Acharya or the other is blasphemous and it is about such stotrams that most of the temple fights arose. It is an indication of the degeneracy of the latter days which has twisted all duties into rights.

I have had a good deal to do with these litigations in the course of which I had to study the ancient history of many of these institutions. The conclusion I have come to is that, when temple rituals were reframed at or after the time of the introduction of the Tamil Prabandam so as to suit them for the common people who understood only the Vernaculars, it was thought necessary to employ a certain number of people to recite them out and pay for it as those services were considered inferior; but it has since gained in prestige so much so that the office-holders claim a monopoly and the ordinary worshippers attempt to get a share of the office by means fair or foul. I have no desire to touch on the controversies as to caste or the Brahmin versus non Brahmin. We in this

Conference are not concerned with the fair distribution of Government posts or the allotment of political rights. What we are concerned with is as to how to develop and progress in the spiritual plane and that progress we want not merely to the Brahmins but to all castes alike.

The fabric of our society was framed for spiritual ends and not for accumulating wealth or even for material welfare except as a means to that end. To achieve that supreme end, each had his duty to perform and that duty fixed his caste. There was no question of superiority but only a differentiation of function. There was no question of rights for anybody but a protection in the performance of that duty fixed on him. These duties after careful consideration were fixed and prescribed in the Varnashrama Dharma which, if followed as prescribed, is likely to lead to righteousness. These are not cast iron laws. Some of the rules, either owing to our ignorance or change of circumstances may appear arbitrary, meaningless or absurd, we have, however, no right to summarily reject whatever does not suit our convenience or taste without an attempt to understand them. Some of them which at first sight appeared to be silly have subsequently been proved to be sound. At the same time we must remember that these laws of conduct come down to us from a time when Nature was nearer to us, when the world was not too much with us, and more than all when the organic life of society was directed towards spiritual ends. If each of us should do our duty as prescribed, I have no doubt we shall have less of any jealous questioning of each other's rights. Spiritial wealth is unlimited and each can take as much as he wants; as much as he can but only we do not know what is good for us. Knowledge, the highest knowledge, is for all and the more you give the more you have.

Gentlemen, I have done. I do not like to think that this assembly is merely a sectarian Conference intended to benefit Sri Vaishnavites alone. We have no quarrel with others. We merely want to develop in the ways pointed out by our Acharyas. Our duty should be not merely to meet for a few days and disperse. We should, as much as is in us, spread the knowledge of Visishtadvaitic Philosophy and religion, rescue forgotten books from oblivion, preserve those that are likely to be lost and enter into an active propaganda for the spread of true knowledge as we understand it.

K. SRINIVASA IYENGAR.

ஸ்ரீ:

ஸ்ரீ பாஞ்ச ராத்ரமும்
ஸ்ரீ வைஷ்ணவாசாரமும்.*

1. நமக்கு ஶ்ருதிகள், ஸ்ம்ருதிகள், இதிஹாஸங்கள், புராணங்கள் இவை ப்ரமாணங்கள். இவைகளில் ஶ்ருதிகளின் விஷயங்களை மற்றவை வ்யாக்யாநம் செய்வதால் அவைகளுக்கு உபப்ரஹ்மணங்கள் என்று பெயர். இவைகளல்லாமல் நம் தேசத்திய ஒவ்வொரு அவாந்தர மதஸ்தரும் தங்கள் தங்களுக்கு ஆதாரமாக சிற்சில ஆகமங்களென்கிற க்ரந்தங்களை ஆதரித்து வருகிறார்கள். அவைகள் பௌத்த, ஜைந, சாக்த, பாசுபத, பாஞ்சராத்ரங்களாக ஐந்துவகைப்பட்டன. அவற்றுள் பாஞ்சராத்ராகமம் என்பதைப் பற்றிச் சில விஷயங்களைச் சொல்லுகிறோம்.

2. பாஞ்சராத்ரம் என்று ஏன் பெயர் வந்தது? இதற்கு மூலம் நிச்சயமாய்ச் சொல்லக்கூடவில்லை. பல வகையாய் இந்தப் பெயரை இந்த ஆகமங்களே நிர்வசநம் செய்கின்றன.

(1) சிலர், ஸ்ரீமந்நாராயணன் இந்த ஆகமத்தின் ஸம்ஹிதைகளென்னப்படும் க்ரந்தங்களை, ஐந்து ராத்ரிகளில், அநந்தன் கருடன் விஷ்வக்ஸேநன் ப்ரஹ்மா ருத்ரன் ஆகிய ஐந்து அதிகாரிகளுக்கு முதலில் உபதேசம் செய்ததால் இதற்குப் பஞ்சராத்ரம் என்று பெயர் என்கிறார்கள்.

(2) வேறு சிலர், ஐந்து விரோதிகளான தந்த்ரங்களை ராத்ரியாக, அதாவது இருட்டி மங்கிப்போனதாகச் செய்வதால், இவைகளைப் பஞ்சராத்ரம் என்கிறார்கள்.

---

* இந்த விஷயம், மயிலாப்பூரில் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் 6-வது வார்ஷிக மஹா ஸங்கத்தில் 27-12-1916-ல் ஸ்ரீ. உப. டி. ராஜகோபாலா சாரியரால் செய்யப்பட்ட உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.

[illegible] । *
[illegible] ॥

[[illegible]த்ம தந்த்ரம்.

(3) சிலர் அபிப்ராயம், ஐந்து ஜ்ஞாநங்களை போதிப்பதால் இதற்கு இந்தப் பேர் வந்தது. அவை: தத்வம், முக்தி, பக்தி, யோகம், வைஷயிகம் என்பன.

ராத்ரம் ச ஜ்ஞாந வசநம் ஜ்ஞாநம் பஞ்சவிதம் ஸ்ம்ருதம் |
தேநேதம் பாஞ்சராத்ரம் ச ப்ரவதந்தி மநீஷிண: ||

[நாரதபஞ்சராத்ரம்.

(4) இன்னும், இதற்கு எதிரிடையாய், ராத்ர மென்றால்-அஜ்ஞாநம்; பஞ்ச வென்றால் - அதைப் போக்கடிப்பது; அதனால் பஞ்சராத்ர மெனப்பெயர் பெற்றது என்று சிலர் சொல்லுகிறார்கள்.

ராத்ரிரஜ்ஞாநவசநம் பஞ்சேதி ஜ்ஞாந நாஶகம் |

[ஸ்ரீப்ரஶ்நம்.

(5) ஐந்து விதமாய் அதாவது பரம், வ்யூஹம், விபவம், ஹார்தம், அர்ச்சை என்று பகவதாவிர்பாவங்களை இந்த சாஸ்திரம் போதிப்பதால் இதற்கு இந்தப் பெயர் அமைந்தது என்று வேறு சிலர் வாக்யம்.

(6) சதபத ப்ராஹ்மணத்தில் பஞ்சராத்ர மென்றொரு ஸத்ரம் சொல்லியிருப்பதால் அதை அநுஸரித்து இந்தப் பெயர்வந்திருக்கலாம் என்று சில பாஶ்சாத்யர்களின் ஊஹம்.

3. இந்த தந்த்ரத்தில் க்ரந்த விஸ்தாரம். இந்த தந்த்ரம் பஹு-விஸ்தாரமாயுள்ளது. ஸமீபத்தில், அடையார் லைப்ரெரியின் அத்யக்ஷரான டாக்டர் ஷ்ராடர் என்பவர் இந்த விஷயத்தைப் பரிசீலநம் பண்ணி அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை என்ற ஒரு பாஞ்சராத்ர க்ரந்தத்தைப் பதிப்பித்து இந்த சாஸ்த்ரத்தில் ஸாமாந்ய விஷயங்களையும் ஷை ஸம்ஹிதையின் விசேஷ விஷயங்களையும் விசதமாய் எழுதியிருக்கிறார். அதில் இந்த தந்த்ரத்துக்கு ஸம்பந்தமாக 200 ஸம்ஹிதைகளுக்கு மேலிருப்பதாய்த் தெரிகிறது. எல்லாம் 1½-கோடி க்ரந்தங்களென்கிற ஶ்லோகங்களிருப்பதாயும்

---

* இங்குள்ள வசநங்கள் J. R. A. S. என்னும் பத்ரிகையின் 1911-ம் வருஷத்தின் ஸம்புடத்தில் வித்யாபூஷணம். T. கோவிந்தாசார்ய ஸ்வாமியின் வ்யாஸத்தில் வரைப்பட்டுள்ளவை.

தெரிகிறது. இந்த ஸம்ஹிதைகளில் சில இப்போது அச்சுப் ப்ரதிகளாகவே அகப்படும். அவையாவன :

1. ஈஶ்வர ஸம்ஹிதை
2. ஸாத்வத ஸம்ஹிதை.
3. பாத்ம ஸம்ஹிதை.
4. லக்ஷ்மீ தந்த்ரம்.
5. பாராசர ஸம்ஹிதை.
6. காபிஞ்சல ஸம்ஹிதை.
7. விஷ்ணு திலகம்.
8. பாரத்வாஜ ஸம்ஹிதை.
9. ஸ்ரீப்ரஶ்நம்.
10. ப்ருஹத் ப்ராஹ்மம்.
11. அஹிர் புத்ந்யம்.

இவைகள்தவிர சுமார் 12-வேறு ஸம்ஹிதைகள் ஏட்டு ப்ரதிகளில் கிடைக்கின்றன. மற்ற ஸம்ஹிதைகள் இன்னம் வெளியாகவில்லை. ப்ராசீந ஸ்ரீ கோசாலயங்கள் வைத்திருக்கும் ப்ரபுக்கள் இதைக் கவனித்தால் அநேக ஸம்ஹிதைகள் இன்னும் வெளிக்கு வரலாம். நம் ஆசார்யர்களில் ஸ்ரீயாமுனாசார்யர் ஈஶ்வரஸம்ஹிதை, பரமஸம்ஹிதை, சாண்டில்ய ஸம்ஹிதை முதலான சில ஸம்ஹிதைகளை மாத்ரம் ஆகம ப்ராமாண்யம் என்னும் தமது க்ரந்தத்தில் உதாஹரித்திருக்கிறார். ஸ்ரீராமாநுஜாசார்யரும் 3, 4-ஸம்ஹிதைகளையே உத்தாரம் செய்திருக்கிறார். ஸ்ரீ வேதாந்த தேசிகனே தம்முடைய பாஞ்சராத்ர ரக்ஷையில் 30-க்கு மேல்பட்ட ஸம்ஹிதைகளைப் பேராலும் வசநோத்தாரத்தாலும் நிர்த்தேசித்திருக்கிறார். இந்த தந்த்ரத்தின் ஸ்வரூபத்தையும் ப்ரகாரத்தையும் இந்த ஆசார்யரே விஸ்தாரமாய் விசாரித்திருக்கிறார்.

4. பாஞ்சராத்ரத்தின் விஷயங்களும் பேதங்களும். இந்த தந்த்ரத்தில் 4-பாதங்களாக விஷயங்கள் ப்ராயிகமாய் விசாரிக்கப்படுகின்றன. அதாவது, ஜ்ஞாநபாதத்தில் ஈஶ்வரஸ்வரூபமும் விபூதிகளும் விசாரிக்கப்படுகின்றன. யோகபாதத்தில் யோக ப்ரகாரங்கள் மோக்ஷஸாதநமாக விசாரிக்கப்படுகின்றன. க்ரியாபாதத்தில் தேவாலய நிர்மாணங்களும் ஆராதந ப்ரகாரங்களும் உத்ஸவ ப்ரகாரங்களும் விவரிக்கப்படுகின்றன. சர்யாபாதத்தில், இந்த தந்த்ர நிஷ்டர்களின் தீக்ஷாதிநியமங்களும் ஸம்ஸ்கார க்ரமங்களும் புண்ட்ரதாரணம் முதலான அஸாதாரண வைஷ்ணவ தர்மங்களும் பஞ்சகால விபாகமும் சொல்லப்படுகின்றன. ஒவ்வொரு தந்த்ரங்கள், இந்த விபாகத்தை அவலம்பிக்காமலும், ஒவ்வொரு விஷயத்தைச் சொல்லாமலும் ஸங்க்ரகித்தும் விஸ்தரித்தும் காணப்படுகின்றன. இந்த சாஸ்திரத்தின் பேதங்கள் பல விதமாய் ஏற்படுகின்றன. முதலாவது:—ஆகமஸித்தாந்தம், மந்த்ர ஸித்தாந்தம், தந்த்ர ஸித்தாந்தம், தந்த்ராந்தர ஸித்தாந்தம் என்று நால்வகை ஸித்தாந்தங்களுண்டென்றும், இவைகளில் ஆகம ஸித்தாந்தம் ஸாக்ஷாத்தாய் மோக்ஷப்ரதமென்றும், மற்றவைகள் நாம் கோரினபடி இதர புருஷார்த்தங்களையும் கொடுக்கக் கூடியவையென்றும் தெரிகிறது. இந்த விபாகத்தையே ஸ்வயம், வ்யக்தம், திவ்யம், ஸைத்தம், ஆர்ஷம் என்றும் வ்யவஹரிக்கிறார்கள். இரண்டாவது:—திவ்யம், முநிபாஷிதமென்று இருவகையாய் அவைகளைப் பிரித்து, முநிபாஷிதத்தை ஸாத்விக, ராஜஸ, தாமஸங்களாகவும் பிரிக்கிறார்கள். மேலும் திவ்ய ஸம்ஹிதைகள் முதலானவை ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷையில் விசதமாய்ப் பரிகணநம் செய்யப்பட்டுள்ளன. ஆனால் இப்படி ஸாத்விக ராஜஸ தாமஸ பிந்நமான ஸம்ஹிதைகளிலும், தாமஸாதி புராணங்களில் போலே அப்ராமாண்ய சங்கை செய்யக்கூடாதென்று கண்டிக்கப்பட்டிருக்கிறது.

5. பாஞ்சராத்ர ப்ராமாண்யம். இந்த விஷயத்தில் ஆகம ப்ராமாண்யமும் ஸ்ரீ பாஷ்யகாரருடைய பாஞ்சராத்ராதிகரண விசாரங்களும் ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷையும் முக்கியாதாரங்கள். இந்த சாஸ்த்ரத்துக்கு அப்ராமாண்யம் சொல்லும் ஹேதுக்களாவன :

(1) இது, வேத விருத்தங்களாயும் வேதத்திலில்லாததுமான ஸம்ஸ்காரங்களையும் தீக்ஷைகளையும் விதிக்கிறது.

(2) ப்ராயிகமாய் இது சூத்ரர்களாலேயே அநுஷ்டிக்கப்பட்டும் ஆதரிக்கப்பட்டும் வருகிறது.

(3) இந்த சாஸ்த்ரத்தில் வேதாந்த விருத்தமான ஜீவோத்பத்தியும் ஜீவனிடமிருந்து மநஸ்ஸின் உத்பத்தியும் சொல்லியிருக்கிறது.

(4) ஸம்ஹிதா கர்த்தாவான ஶாண்டில்ய மஹர்ஷி, நாலு வேதங்களிலும் தத்வஜ்ஞாநத்தை அறியாமல் இந்த சாஸ்த்ரத்தை அப்யஸித்தாரென்று சொல்லியிருப்பதாலும் வேத விரோதம் ஸ்பஷ்டம்.

இந்த நாலு காரணங்களையும் ஒப்புக்கொண்டு ஸ்ரீ பாஞ்சராத்ரத்தில் விருத்த பாகங்களை ஸூத்ரகாரர் ப்ரதிக்ஷேபம் செய்தாரென்றே ஸ்ரீ சங்கராசாரியர் வ்யாக்யாநம் செய்திருக்கிறார். த்ரமிட பாஷ்யகாரரென்னும் நம் ஸித்தாந்தத்தின் ப்ராசீந ஆசார்யரும் இதை அப்யுகமம் செய்திருப்பதாய் ஆகம ப்ராமாண்யம் பூர்வபக்ஷ வசனத்தினால் தோன்றுகிறது. (ஆனால் ஸ்ரீ ஆளவந்தார் ஸூதிக்கிறபடி அது அங்வாருஹ்யவாதமாயிருக்கவேணும்) இந்த ஆக்ஷேபத்துக்கு ஸமாதானம்: ஆளவந்தார் தமது க்ரந்தத்தில் மேற்சொன்ன அதிகரணத்தில் இரண்டு ஸூத்ரம் பூர்வபக்ஷம் என்றும், மற்ற இரண்டும் ஸித்தாந்தம் என்றும் பஹு ப்ரகாரமாய் நிர்ணயித்திருக்கிறார். ஸ்ரீ பாஷ்யகாரரும் இந்த அர்த்தங்களில் ஒன்றை ஸ்திரப்படுத்தி, ஸூத்ரக்காரருக்குப் பாஞ்சராத்ரம் ப்ரமாணந்தானென்றும், மஹாபாரதத்தில் இதை “மஹோபநிஷதம்” என்றும் “சதுர்வேதஸமந்விதம்” என்றும் சொல்லிவிட்டு, அவரே அதை ஸூத்ரத்தில் ப்ரதிக்ஷேபிப்பது அஸம்பாவிதமென்றும் அருளிச்செய்திருக்கிறார்: மற்ற ஆக்ஷேபங்களுக்கும் ஸமாதானங்கள் ஆகம ப்ராமாண்யத்திலும் பாஞ்சராத்ர ரக்ஷையிலும் கண்டுகொள்வது.

6. **கால நிர்ணயம்.** இந்த சாஸ்த்ரம் வைஷ்ணவ மதத்துக்கு முக்கிய ஆதாரமாகையாலும் வேதங்களில் விஷ்ணுவைப் பரதைவமாகச் சொல்லும் வசநங்கள் அதிகமாயில்லையாகையாலும், ஸ்ரீ க்ருஷ்ணன், பலராமன், முதலானவர்கள்தாம், பாஞ்சராத்ர ப்ரதிபாதிதர்களான வாஸுதேவ ஸங்கர்ஷணாதிகளாகையாலும் அவர்களுக்குப் பிறகு தான் இந்த சாஸ்த்ரம் உண்டாயிருக்க வேண்டும் என்றும் பாஶ்சாத்ய வித்வான்கள் ஊஹிக்கிறார்கள். மேலும், ஸ்ரீ க்ருஷ்ணாதிகள் கலியுகாரம்பத்தில் இருந்தார்களென்னும் நம்முடைய ஸித்தாந்தத்தை மேற்சொன்னவர்கள் பல காரணங்களால் ஆக்ஷேபிக்கிறார்கள். அதாவது:—மஹாபாரதத்தில் துர்யோதந சிசுபாலாதிகள் ஸ்ரீ க்ருஷ்ணன் நாராயணாவதாரமென்பதை ஆக்ஷேபித்திருப்பதாய்த் தெரிகிறபடியாலும், பதஞ்சலி மஹர்ஷியின் மஹா பாஷ்யத்தில் வாஸுதேவ பக்தர்கள் - சிலர், கம்ஸபக்தர்கள் சிலர் என்னும் இரண்டு கக்ஷிக்காரர்களை நிர்த்தேசித்திருப்பதாலும், மஹா பாஷ்யத்திலேயே “[illegible]” என்று மாத்திரம் சொல்லி அவர்செய்த கம்ஸவதத்தை ப்ரலாகித்துச் சொல்லாமலிருப்பதாலும், அக்காலத்தில் அதாவது—(150. B. C.) இரண்டாவது கிறிஸ்து பூர்வீகமான சதகாப்தத்தில் ஸ்ரீ க்ருஷ்ணாதிகளின் அவதாரஸத்வம் ஒப்புக்கொள்ளப்படவில்லையென்றும், கேவல ராஜாவான வஸுதேவர் பிள்ளையான க்ருஷ்ணனோ அல்லது கோபால ஜாதியிற் பிறந்த கிருஷ்ணனோ பிந்தி அவதார புருஷராய்க் கொள்ளப்பட்டாரென்றும், இதுதான் அவதாரங்களின் ப்ரவருத்திக்கு நிதாநமென்றும் அபிப்ராயப்படுகிறார்கள். சில ஸம்ஹிதைகளில் ஆழ்வார்களையும் மற்றும் சில ஸம்ஹிதைகளில் ஸ்ரீராமாநுஜாசார்யர் ஜநநத்தையும் சொல்லி இருப்பதால், இவைகள் க்ருஷ்ணாவதாரத்திற்குப் பிறகு எவ்வளவோ காலம் கழித்துத் தெற்கு தேசங்களில் விஷ்ணு புராண ஹரிவம்ஶாதி கதைகள் பரவ அவகாசம் வேண்டுமாகையாலும், புராணகாலமாகிய கிறிஸ்துவுக்கு அநந்தரமான (கி.பி. 400) 4-வது சதகத்துக்குப் பிந்தி - அதாவது 7,8-வது சதகங்களிலே தான் இந்த ஸம்ஹிதைகள் உண்டாயிருக்க வேண்டுமென்றும் ஊஹிக்கிறார்கள். இவர்கள் பூர்வபக்ஷ ஹேதுக்களை இங்கு விஸ்தரிக்க ஸாத்யப்படாததால் ஸமாதானமும் விஸ்தாரமாய்ச் சொல்லக்கூடவில்லை. நாம் ஊஹிக்கக்கூடியது என்னவென்றால்:—

(1) மஹாபாரதத்துக்கு வெகுகாலம் முன்னால் இந்த தந்த்ரத்தின் ஸம்ஹிதைகள் இருந்திருக்க வேண்டும். இல்லாவிடில் அதில் இந்த ஸம்ஹிதை “மஹோபநிஷதம்” என்று சொல்லப்பட்டிருக்கமாட்டாது.

(2) வாஸுதேவ ஸங்கர்ஷணாதி வ்யூஹாவதாரங்கள் ஸ்ரீ க்ருஷ்ணன் காலத்துக்கு முற்பட்டவைகள். அந்த அவதாரங்களை அநுஸரித்துப் பெயர்கள் உண்டாயிருக்கலாமேயொழியப் பெயர்களை அநுஸரித்து அவதாரங்களைக் கல்பித்தார்களென்பது [illegible]ரியல்ல.

(3) க்ருஷ்ணன் காலத்திலேயே அவரை யறிந்த மஹான்கள், அவதாரமென்று பேசியிருப்பதால் சிலர் நிஷேதித்திருப்பதைக் கொண்டு அவதாரத்வம் கல்பிதமென்பது நாம் ஒப்புக்கொள்ளக் கூடியதில்லை.

(4) க்ருஷ்ணாவதாரமாய் இப்போது 5000 வருஷத்திற்கு மேலானது வாஸ்தவமானால், தீர்க்காயுளர்களான ஆழ்வார்கள் அவரைப் பக்தி ஸ்துதி செய்வதானது ஆழ்வார்களை அதி நவீநரென்று சொல்லக் காரணமாகாது.

என்றிப்படி சில ஸமாதானங்களை நாம் சொல்லலாம். பூர்ணமாய் இந்த விஷயத்தை விமர்சம் செய்ய இந்த ஸங்க்ரகத்தில் அவகாசமில்லை.

7. பாஞ்ச ராத்ரத்தின் முக்ய ஸித்தாந்தங்கள்.

(1) வாஸுதேவன் பரதத்வம் : வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன் என்று நான்கு ரூபங்களும் அவருடைய வ்யூஹாவதாரங்கள். கேசவன், நாராயணன் முதலாக இன்னும் பல வ்யூஹங்கள் உண்டு. இவர்களின் ஸ்வபாவங்களும் குணங்களும் ஏற்கெனவே வேதாந்ததீபிகையில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

(2) மேலே சொன்ன 4 விதமான ஸித்தாந்தங்களில் எந்த ஸித்தாந்தம் எந்தக் கோவிலிலே வழக்கமோ அந்த ஸம்ப்ரதாயத்தை மாற்றாமல் அனுஷ்டிக்கவேணும். ஸித்தாந்த ஸங்கரம் கூடாது.

(3) இந்த ஸித்தாந்தங்களில் சொல்லி இருக்கிறபடி ஸ்ரீ வைஷ்ணவர்கள் தாபம் அதாவது சங்க சக்ரங்களினால் அடையாளம் செய்து கொள்வது, புண்ட்ரம் என்கிற நெற்றி அடையாளங்கள், பகவானுக்கு தாஸன் என்று காட்டக்கூடிய பெயர், பகவத்த்யானத்துக்கு உசிதமான மந்த்ரம் இவைகளை அனுஷ்டித்துத் தங்களை ஸம்ஸ்கரித்துக் கொள்ளவேண்டும். இந்த அடையாளங்கள் இல்லாதவர் வைஷ்ணவரல்லர்.

(4) பகவானையடையச் சரணாகதியென்னும் மார்க்கமே முக்கியமானது. இது ஸ்த்ரீ சூத்ரர்கள் முதலான எல்லாருக்கும் ஸாதாரணமான உபாயம். பகவானுடன் நித்யாநபாயிநீயாய் கருணாமயையாய் இருக்கும் ஸ்ரீ அல்லது லக்ஷ்மியைப் புருஷகாரமாகக்கொண்டு ஸ்ரீ ப்ரபத்தியைச்செய்து பிறகு பகவானை ப்ரபத்தி செய்ய வேணும்.

(5) ஸ்ரீ வைஷ்ணவர்கள் திநத்தை ஐந்து பாகமாய் விவரித்து, அபிகமநம், உபாதாநம், இஜ்யா, ஸ்வாத்யாயம், யோகங்களாகிற காலங்களில் க்ரமமாய் காலை பகவத் பூஜையையும் பிறகு அதற்கு அநுகூலமான த்ரவ்யார்ஜநத்தையும், பிறகு மத்யாந்ஹாராதநத்தையும், பிறகு வேதாந்தம் முதலான சாஸ்திரப்பயிற்சியையும் ராத்திரி போஜநத்துக்குப்பிறகு பகவத்த்யாநமாகிய யோகத்தையும் செய்யவேணும். இப்படிச் செய்தால் அவர்கள் பஞ்சகால பராயணர்களாகிறார்கள். இது முக்யமான வைஷ்ணவ தர்மம்.

8. இப்படி ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு வேதோக்தமானவும் ஸ்மார்த்தமானவுமாயிருக்கிற நித்ய நைமித்திகங்களுக்கு விரோதமில்லாமல் சில விசேஷ தர்மங்களையும் இந்த சாஸ்திரம் போதிக்கிறது. அது அநுஷ்டாநத்துக்கு வந்திருப்பதுடன் வீண்காலம் போகாமல் நல்ல விஷயங்களில அதாவது பகவானின் த்யாநத்தில் நம் காலத்தைச் செலவழிக்க வழிகாட்டி இருப்பதால் இது ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு மிகவும் உபாதேயமான முக்யமான சாஸ்திரம். இதை நன்றாய் அறிந்து அநுஷ்டிப்பது எல்லா வைஷ்ணவர்களுக்கும் ஆவ்ச்யகம்.

டி. ராஜகோபாலாசார்யர்.

ஸ்ரீ அஹோபிலமும் இரண்டு கந்தர்வர்களும்.

(தொடர்ச்சி.)

அப்போது மதுராலாபன் "ஓ! மித்ரனே! இதோ ஓர் நதி ப்ரவஹிக்கின்றது பார். இது தான் பவநாஶிநீ. இதில் ராத்ரி மழையினால் ப்ரவாஹம் விஞ்சிவிட்டது. ஆகையால் இதைத் தாண்ட முடியாமல் இரண்டு கரைகளிலும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் நூற்றுக் கணக்காய் நிற்கிறார்கள் பார். இங்கு சற்று நிற்போம். இதோ கொஞ்சம் ஜலம் வடிந்தது. இவ்விடத்தில் சிலர் தைர்யமாய் வெள்ளத்தில் இறங்கி ஒரு பக்கத்தில் வழியைக் கண்டு பிடித்தார்கள். சிலர் வெள்ளத்திற்குப் பயந்து திரும்பிவிட்டார்கள். சிலர் பரஸ்பர ஊத்த ஹஸ்தாவலம்பர்களாய்க் கரை சேர்ந்தார்கள். நாம் இனி மேலே செல்வோம். இதோ பவநாஶிநியின் கரையில் மார்க்கத்திற்கு ஸமீபத்திலேயே ஓர் ஸந்நிதி தெரிகின்றது பார். இது "[illegible]" என்று சொல்லப்பட்ட காரஞ்ச ந்ருஸிஹ்மன் ஸந்நிதி. இதோ ஶார்ங்கத்தோடும் சக்ரத்தோடும் வீற்றிருக்கும் காரஞ்ச ந்ருஸிஹ்மனை ஸேவி. ஓர் காலத்தில் துர்வாஸஸ்ஸின் ஶாபத்தால் ஜ்ஞானத்தை இழந்த ஷோபிலர் இங்கு மந்த்ரராஜனை ஜபித்து ந்ருஸிஹ்மானுக்ரஹத்தால் ஸர்வஜ்ஞரானா ரென்று இப்புராணத்தில் ப்ரஸித்தம். இதோ ஸுமார் ஒரு மைலுக்குள் தெரிகிற ஸந்நிதியைப் பார். இதுதான் அஹோபில ந்ருஸிஹ்மன் ஸந்நிதி. இங்குள்ள பவநாஶிநீயின் குண்டத்தைக் 'கஜதீர்த்தம்' என்று புராணம் கூறுகிறது. இங்கு இறங்கி மண்டபங்களால் அலங்கரிக்கப்பட்ட குஹையிலுள்ள அஹோபில ந்ருஸிஹ்மனை ஸேவிப்போம் வா. இதோ சக்ராகாரமாய் மேலே மலை நீரின் கீழ் ஓர் மேடையில் த்விபுஜனும் ஹிரண்ய கஶிபுவின் ஸம்ஹாரத் திருக்கோலத்துடன் ஸேவை ஸாதிப்பதைப் பார். இவர் திருவடிகளில் ஒழிவில் கால மெல்லா முடனாய் மன்னி வழுவிலா வருனம் செய்யக் கருது. இவர்தான் ஒன்பது பேர்களிலும் ப்ரதாநர் என்று "[illegible]" இத்யாதிகளில் ப்ரதி பாதிக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு ஆஶ்சர்யம் பார். இந்த ஜநங்கள் ஆற்றின் வெள்ளத்தால் தாமஸித்து வர இக்கோயில் அர்ச்சகர் 'நான் ப்ரஸாதத்தை ஸ்வீகரித்துவிட்டேன். இனி ஸந்நிதிக்கு வரமுடியாது. நீங்களே உபஹாரம் ஸமர்ப்பித்து ஸேவியுங்கோள்' என்று நியமிக்க, இங்குள்ள பாகவதர்களும் அந்நியமநத்தை அங்கீகரித்து, எல்லாரும் ஒருமுகமாய் இந்த வ்யக்தியைத் தத்கால கைங்கர்யத்தைப் பண்ணும்படி நியமித்தார்கள். இவரும் அர்ச்சக முகத்தாலே ந்ருஸிஹ்மனே நியமிப்பதாக எண்ணி, பாகவத நியமநத்தைச் சிரஸா வஹித்து 'அகலி லகலு மணுகி லணுகும்' என்னும் திவ்யஸூக்தியை மநஸ்ஸால் நினைத்து, 'விதிவாய்கின்ற காப்பார்' என்று ஸந்தோஷத்துடன் உபஹாராதிகளை ஸமர்ப்பிக்கின்றார் பார். இவர் துண்டீர மண்டலத்தில் ஷஷ்டபராங்குஶ ஸ்வாமியால் ப்ரதிஷ்டிதமான 'இஞ்சிமேடு' என்கிற அக்ரஹாரத்தில் ஜநித்தவர். இவருடைய ஜ்ஞாதிகளில் ஒருமஹான் முன்பு இந்த அஹோபிலாஸ்தாநத்தை அலங்கரித்திருந்தார். அவருக்கு 'அத்திப்பட்டு ஶடகோப ராமாநுஜ ஸ்வாமி' என்று திருநாமம். இவர் ராமாநுஜ ஸித்தாந்தத்தில் சிறந்த ஜ்ஞாந முடையவர். ஸ்ரீ முஷ்ணத்தில் அவதரித்த ஸ்ரீமத் ஸ்வர்ணம் ஸ்வாமி திருவடிகளையே ஸர்வ ப்ரகாரத்தாலும் உத்தாரகமாக நினைத்தவர். இவர் க்ஷண காலமாவது இந்த ந்ருஸிஹ்மனை நிருபாதிகமாக ஆராதித்ததற்கு இவருடைய ஜந்மாந்தர ஸுக்ருதமே காரணம்.

இதோ ஒரு சிறிய ஸந்நிதி தெரிகிறது பார். ருத்ரனுக்குப் பகவான் வரமளித்த இடம் இது. இதில் லிங்கமும் உக்ர ந்ருஸிஹ்மனும் இருக்கின்றார்கள் பார். இதோ ஒரு குஹை மூடப்பட்டிருக்கிறது. இதன் வழியால் அஹோபில மடத்தின் ஆறாவது ஜீயர் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் பகவானோடு ஐக்யமாயினராம். ஆகையால், இது அதுமுதல் மூடப்பட்டிருக்கிறது. இனி ஸந்நிதிக்கு வெளியில் செல்வோம். இங்குநின்று பயங்கரமான காடுகளையும் அரை மைல் உயரத்திலிருந்து ஶிவன் தலை

மேல் தான் குதித்த தேவகங்கை போன்ற மலையருவிகளின் வைசித்ர்யத்தையும் இரண்டு பக்கத்திலுமுள்ள மலைகளின் அழகையும் பார். இந்த ஸந்நிதி இருக்குமிடம் தான் கருடாசலம். இந்த ஸ்தலத்தின் கௌரவமாஹாத்மியத்தை நினைத்தே 'தெய்வமல்லாற் செல்லவொண்ணா' என்றும், 'சென்றுகாண்டற் கரியகோயில்' என்றும், 'தினைத்தனையும் சொல்லவொண்ணாச் சிங்கவேழ்குன்றமே' என்றும் கலியன் அருளினார்.

இதோ இடது புறத்தில் ப்ருஹ்மவித் ஸங்கம் நிறைந்த தொருமலை தெரிகின்றது பார். இதற்கு 'வேதாத்ரி' என்று பெயர். முன் க்ருத யுகத்தில் ஸோமகன் என்னும் அஸுரன் ப்ருஹ்மாவினிடத்திலிருந்து வேதங்களை அபஹரித்துப்போனான். பின்பு பகவான் அவனைக் கொன்று வேதங்களை மீட்டு ப்ருஹ்மாவுக்குக் கொடுத்தான். பிறகு வேதங்கள் ப்ருஹ்மாவினிடத்தில் தங்களுக்கு அடிக்கடி நேரும் விபத்தைத் தீர்த்துக்கொள்ள இம்மலையில் வந்து பகவானைக் குறித்துத் தபஸ் செய்ய பகவானும் ப்ரஸந்நராய் வேதங்களின் அபீஷ்டங்களைக் கொடுத்து "ஸுகம் வஸ்த்வ ஸ்ருதயோ [illegible] । ரக்ஷிஷ்யாமி ந ஸம்சய:" என்று சொல்லி மறைந்துவிட்டார். அதுமுதல் இதற்கு 'வேதாத்ரி' என்று பெயர் வந்தது. இதன் சிகரத்தை 'லக்ஷ்மீக்ஷேத்ர மென்றும், இங்கு லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் எழுந்தருளியிருக்கிறார் என்றும் 'வேதாத்ரௌ ஸ்ரீநிவாஸஸ்ய லக்ஷ்மீக்ஷேத்ரம் ஸமாஹ்ருதம் । தத்ர ஸௌம்யவாதவிஷ்ணு லக்ஷ்ம்யா ஸஹ ந்ருகேஸரீ' என்கிற புராண ச்லோகம் சொல்லுகிறது. அங்கு சென்று பகவானைத் தொழுவோம் வா. இவர் தான் அஹோபிலமடத்தில் எழுந்தருளியிருக்கும் லக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்கு மூல பேரம். இவருக்கு முன்னிருக்கும் பீடத்தில் தான் முன்பு உத்ஸவர் எழுந்தருளியிருந்தார். இந்த அஹோபிலம் ஜீயர் தம் மடத்து லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை இரண்டு மாதத்திற்கு முன் இந்தப் பீடத்தில் எழுந்தருளப்பண்ணி அபிகமநாராதநம் செய்தருளினராம்" என்றான்.

அப்பொழுது வல்குபாஷணன் "ஓ! நண்பனே! இந்தஜீயர் இங்கு எழுந்தருளப்பண்ணி அபிகமநாராதநம் செய்தருளினதாகச் சொன்ன லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் இவருடைய அர்ச்சாபேரமன்றோ? இவர் இந்த மூலஸ்தாநத்தைவிட்டு வெகுகாலம் விதேசத்தில் எழுந்தருளியிருப்பது கூடுமோ? பலிஹோமாதிகளில்லாமல் வெகு காலம் பிரிந்திருந்தால் பகவத் ஸாந்நித்யம் விசேஷித்திருக்குமோ? இப்படி இருப்பது சாஸ்த்ரத்திற்காவது இதர திவ்ய தேசங்களின் அநுஷ்டாநத்திற்காவது பொருந்துமோ வென்கிற ஸம்சயத்தினால் என்மனம் கலங்கியிருக்கிறது. ப்ருஹ்மஜ்ஞனே நீ இந்த ஸம்சயத்தைத் தீர்த்து என்மனத்தைத் தெளியச் செய்ய வேண்டும்." என்று வினவ, மதுராலாபனும் "ஓ! மித்ரனே! நீ ஸம்சயித்த விஷயம் ந்யாயமே. அதற்குப் பெரியோர்களால் நான் கேட்டிருக்கும் ஸமாதாநத்தைச் சொல்லுகிறேன் கேள். அதாவது – உத்ஸவபேரம் மூல பேரத்திற்கு இவ்வளவு ஸமீபத்தில்தான் இருக்கவேண்டு மென்றும், இத்தனைநாள் பிரியலாமென்றும், அதற்குமேல் கூடாதென்றும் நியமிக்கிற ப்ரமாணம் புலப்படவில்லை. அப்படி புலப்பட்டாலும் அவைகளெல்லாம் 'ஶாநஷ்டாதி' விஷயமேயொழிய ஸ்வயம்வ்யக்தாதிகளில் பாதகமாக மாட்டாது. அப்படி பாதகமாகுமாகில் ஸ்ரீமுஷ்ணாஹீந்த்ரபுராதி திவ்ய தேசங்களில் சில நாள் பிரிந்திருப்பதும் பாதகமாகும். கலாப காலங்களில் திருநாராயணனைவிட்டு டெல்லியில் செல்வப்பிள்ளையும், வரதனைப்பிரிந்து உடையார் பாளையத்தில் தேவப்பெருமாளும், ஸ்ரீரங்கத்தைவிட்டு செஞ்சி முதலான இடங்களில் ரங்கநாதனும் வெகுகாலம் எழுந்தருளியிருந்தார்களெனச் செவியுற்றிருக்கிறோமல்லவா? இந்த விஷயத்தை மானிடம் பாடாத கவியான ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன், ரங்கநாதனைச் செஞ்சியிலிருந்து மறுபடி ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளப்பண்ணின கோபண்ணராயன் நாமாங்கிதமான "ஆநீயாநீலச்ருங்கத்யுதிரசிதஜகத்ரஞ்ஜநாதஞ்ஜநாத்ரே: செஞ்ச்யாமாராத்ய கஞ்சித் ஸமயமத நிஹத்யோத்தநுஷ்காந் துருஷ்காந் । லக்ஷ்மீக்ஷ்மாப்யாமுபாப்யாம் ஸஹ நிஜநிலயே ஸ்தாபயந் ரங்கநாதம் ஸம்யக்வர்யாம் ஸபர்யாமக்ருத நிஜயசோதர்பணோ கோபணார்ய:" என்கிற ச்லோகத்திலும் அருளிச் செய்திருக்கிறாரன்றோ? அப்படிப் பிரிந்திருந்த காலங்களிலும் அந்தந்த அர்ச்சா பேரங்களில் சரண்ய ஸாந்நித்யம் பூர்ணமாய் இருந்ததென்பதற்கு, உடையவர் டெல்லிக்கு எழுந்தருளி 'செல்வப்பிள்ளையைக் கொடுக்க வேண்டு' மென்று அந்த ராஜாவைக்கேட்க, ராஜாவும், 'உம்முடைய பெருமாளை

நீர்பார்த்து எடுத்துக்கொள்ளும்' என, உடையவரும் ராமப்ரியரைக்கண்டு, எல்லாரும் காணும்படி பொற்சதங்கை ஶப்திக்கக் குதித்து உடையவர் மடியிலே எழுந்தருளியிருக்க, உடையவரும் 'என்னுடைய செல்வப் பிள்ளையோ! வென்று எடுத்து அணைத்துக்கொண்டருளினர்' என்கிற ஸ்ரீ த்ரிதீய பரகாலஜீயர் குருபரம்பராவாக்யமும் பெரியோர்களின் நல்வார்த்தையுமே ப்ரமாணம். அவை விபத்தினால் நேர்ந்த பிரிவுகள். இது விலக்ஷணப்ரைஷோபதேசத்தால் ஆசார்யனாய் நின்ற பகவந்நியமநத்தால் வந்த பிரிவு. காஞ்ச்யாதி மஹாதிவ்ய தேசங்களிலும் அபசாரத்தையால் வந்த ஹோமாதிலோபங்கள் பாதகாவஹமன்றாகில், இங்கு பிரிவினால் யாத்ராஷோத்திற்கு மாத்திரமுண்டான பலிஹோமாதிகளின் அநந்வயம் பாதகாவஹமாகுமோ? ப்ரத்யக்ஷ ஶ்ருதிபோலே பகவந்நியமநமும் நிரபேக்ஷப்ரமாணதமமென்று இதை ஸ்ரீஷஷ்டபராங்குஶ ஜீயர் பர்யந்தமுள்ள ஸகல மஹான்களும் ஆதரித்து வந்தார்கள். பின்புள்ள கலக்கங்கள் வைஷம்யத்தாலும் புராணாத்யபரிஶீலநத்தாலும் ஸ்வயம் வ்யக்தாதி ப்ரபாவம் சொல்லும் பாஞ்சராத்ர க்ரந்தா வேக்ஷணத்தாலும் வந்தனவாகையால், அவை மஹான்களுக்கு ஹ்ருதயங்கமங்களன்று. ஆகையால் இனி நீ இதில் ஸம்ஶயிக்க வேண்டியதொன்றுமில்லை" என்றான்.

அதன்மேல் இருவரும் மண்டபத்தில் செல்லுகையில் மதுராலாபன் வல்கு பாஷணனைப்பார்த்து ஓ! நண்ப! இதோ இம்மண்டபத்தில் ஒருசிலையில் சுஞ்சு லக்ஷ்மீயின் பரிணயத்தாலே கோபத்துடன் முகத்தைத் திருப்பிக்கொண்டு ஒதுங்கி நிற்கும் லக்ஷ்மியை ந்ருஸிம்ஹன் அநுநயம் பண்ணுகிறார் பார். இதோ அருகிலிருப்பது தான் சுஞ்சுமலை. இந்தக் குஹையின் வழியால் தான் சுஞ்சு லக்ஷ்மீ இவ்விடம் வந்துசேர்ந்தாள். வேதாத்ரியின் மேற்குப் பாகத்தில் "[illegible]" என்று சொல்லப்படும் மண்மகள் கேள்வனான வராஹ ந்ருஸிம்ஹன் ஸந்நிதி. இது அஹோபில ந்ருஸிம்ஹன் ஸந்நிதிக்கும் லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதிக்கும் மத்யமார்க்கத்திலிருக்கிறது. இந்த '[illegible]ர்களுடைய ஸந்நிதிகள் நான்கும் சுமார் இரண்டு மைலுக்குட்பட்டன. இதோ க்ரோஶ மாத்ர தூரத்தில் கருடாசல வேதாசல மத்தியில் 'அசலச்சாய மேரு' வென்று ஓர் பர்வதம்தெரிகின்றது பார். இதன் மத்தியில் 'ஜ்வாலா ந்ருஸிம்ஹன்' ஸந்நிதி இருக்கிறது. இந்த ந்ருஸிம்ஹன் விஷயம் தான் '[illegible]' என்கிற புராண ஶ்லோகமும் '[illegible]' என்ற கூரேஶ ஸூக்தியும். இவருடைய ஜ்வாலையின் ஶமநார்த்தமாகத் தேவதைகள் கங்கையினால் இவரை ஸ்நாநம் பண்ணிவைத்தார்கள். அது தான் பவநாஶிநியாக ப்ரவஹிக்கிறது என்பதை "[illegible] பவநாஶிநீ" என்கிற ஶ்லோகங்கள் ப்ரதிபாதிக்கின்றன. இப்பொழுது இந்த க்ஷேத்ரம் இந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸங்கத்திற்கு ஸுகமமன்று. விமாநகாமிகளான நமக்கு ஸர்வஸ்தாநமும் ஸுகமமாச்சுது.

இதோ கருட நதிக்குத் தெற்கில் பாவந தீர்த்தக் கரையில் பாவந ந்ருஸிம்ஹன் ஸந்நிதியைப் பார். இவர் ஆஶ்ரிதர்களுக்கு அபீஷ்டத்தைக் கொடுப்பவர் என்று "[illegible]" என்கிற ஶ்லோகத்தினால் ஸ்துதிக்கப்பட்டவர். இப்பொழுதும் இங்கு ஜநங்களின் ப்ரார்த்தனை அதிகமாக நிறைவேறுகின்றது.

இதோ ஒரு மலை இரண்டாக வெடித்ததுபோல் உந்நதமாகத் தெரிகின்றதே! இதற்கு 'உக்ரஸ்தம்பம்' என்று பெயர். இதன் மத்தியில் அவதார வேஷத்தோடு நிற்கும் ந்ருஸிம்ஹனை ஸேவி,

இந்த ந்ருஸிம்ஹனைத் தான் “[illegible] 𑌜𑍍𑌵𑌾𑌲𑌾𑌕𑌾𑌰 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌾𑌯 [illegible] ॥” என்கிற ச்லோகம் சொல்லுகிறது. இது ஹிரண்ய கசிபுவின் க்ருஹ ஸ்தம்பத்தில் அவதரித்தபடி. இங்குத் தபம் புரிந்த பக்தர்களுக்குத் தோன்றிய ப்ரகாரம் ஹிரண்யகசிபுவின் நகரமேஇதென்றும் அவன் க்ருஹஸ்தம்பம் காலேந பர்வதமாகப் பரிணமித்ததென்றும் புராணமும் மஹான்களும் கூறுவர். அதற்கும் நாம் கீழ்ச்சொன்னபடியே தாத்பர்யம். ‘பஞ்சாப்’ என்னும் பாஞ்சால நகரத்தில் ‘ஹிரண்யபுரம்’ என்றும் அங்கு அவதரித்த ஸ்தம்பம் இருக்கிறதென்றும் சில மஹான்கள் சொல்கிறார்கள். அவதரித்துச் சிரகால மானதால் நமக்குத் தேச நிச்சயம் உண்டாவது அரிது. இந்த அர்ச்சா ஸமாதியில் நவந்ருஸிம்ஹர்களையும் ஸேவித்ததாலும் ஸம்ப்ரோக்ஷணோத்ஸவ தர்சநத்தாலும் நம்முடைய ஜந்மம்க்ருதார்த்தமாய்விட்டது. இனி இந்த குதூஹலத்தோடே ‘பஞ்சாப்’ தேசம் போய் அங்குள்ள நவந்ருஸிம்ஹர்களையும் ஸேவித்து க்ருதார்த்தர்களாய் நம் ஹிமயமலைக்குச் செல்வோம்” என்றுசொல்லிக்கொண்டே விமாநத்துடன் ஆகாசமார்க்கத்தில் சென்றார்கள்.

அஹோபில யாத்ரை செய்த பௌராணிகன்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌹𑌯𑌵𑌦𑌨𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃

ஸ்ரீ விஷ்ணுபக்தியில்லாதவனுக்கு

ப்ரஹ்ம வித்யோபதேசாநர்ஹத்வ ப்ரகடநம்.

𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 [illegible] 𑌪𑌾𑌦𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌂 𑌕𑍍𑌷𑌾𑌲𑌯𑌨𑍍 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌵𑌹𑌨𑍍 [illegible] 𑌨𑌃 [illegible] ।

ப்ரதமோபந்யாஸத்திலே கௌதமோக்தங்களான எட்டு ஆத்ம குணங்களை யுடையவனுக்கு ப்ருஹ்ம வித்யை உபதேசித்தல் ஸதாசார்ய க்ருத்யமென்று சொல்லப்பட்டிருக்கிறது. மீமாம்ஸா ந்யாயங்களோடுகூடின வேதாந்தார்த்தங்களை உபதேசித்தல் ப்ருஹ்ம வித்யோபதேசமென்று சொல்லப்படும். அந்த வேதாந்தார்த்தங்கள் எவையென்றால், ப்ராப்யனான பரமாத்மாவினுடைய ஸ்வரூப குணங்களும் ப்ராப்தாவான ஜீவாத்மாவின் ஸ்வரூப குணங்களும், பரமாத்ம ப்ராப்த்யுபாயமும், ப்ராப்திரூப பலமும், ப்ராப்தி விரோதியும். இவைகளே ‘அர்த்தபஞ்சகங்கள்’ என்று சொல்லப்படும். இந்த அர்த்தத்தை “𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌰𑍂𑌪𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍁𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 । 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌂 𑌫𑌲𑌂 𑌚𑍈𑌵 𑌤𑌥𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌵𑌿𑌰𑍋𑌧𑌿 𑌚 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌸𑌕𑌲𑌾 𑌵𑍇𑌦𑌾𑌸𑍍𑌸𑍇𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌕𑌾𑌃 ।” என்று ஸங்க்ரஹித்தார்கள். இப்

படிப்பட்ட ப்ருஹ்ம வித்யையானது விஷ்ணுத்வேஷ முடையவனிடத்தில், கௌதமோக்தங்களான எட்டு ஆத்ம குணங்களும் பூர்ணமாயிருந்தால் அவனுக்கு உபதேசிக்கக்கூடுமோ? கூடாதோ? என்கிற ஶங்கையில் இந்த உபந்யாஸம் ஆரம்பிக்கப்படுகிறது. பூர்வோபந்யாஸத்தில் '𑌈𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌚 𑌸𑍌𑌹𑌾𑌰𑍍𑌦𑌂' என்னும் ஶ்லோகத்திலே விஷ்ணுவினிடத்தில் அத்வேஷமும் ஆசார்ய ஸம்பந்தத்துக்குக் காரணமென்று சொல்லி யிருக்கிறபடியால், விஷ்ணு த்வேஷத்தை யுடையவனுக்கு ஆசார்ய ஸம்பந்தமே கடிக்கமாட்டாதபடியால் அவனுக்கு ப்ரஹ்மவித்யோபதேச ஶங்கைக்கு ப்ரஸக்தியே இல்லை யாகையால், இந்த உபந்யாஸத்துக்கு நிஷ்ப்ரயோஜநத்வம் ப்ரஸங்கிக்குமென்னில், இது ப்ரஸங்கியாது. எங்ஙனே யென்னில்: விஷ்ணுத்வேஷத்தை யுடையவனுக்கு ஶாஸ்த்ரத்தாலே ஆசார்ய ஸம்பந்த யோக்யதை இல்லாவிட்டாலும், அத்வேஷ பாவநயா ஶிஷ்யனாகவந்த இவனுக்கு ஆசார்யன், ஸாதுத்வ ப்ரமத்தாலே ப்ருஹ்ம வித்யை உபதேசிக்கிறது ஸம்பவிக்கலா மாகையாலே அந்த ஆசார்யோபதிஷ்டமான ப்ருஹ்மவித்யையானது இவனிடத்தில் ஸபலமாமோ? விபலமாமோ? என்கிற சங்கை உதிக்கிலாமிறே. ஆகையால் இந்த உபந்யாஸாரம்பம் ஸப்ரயோஜனம்.

'𑌯𑌸𑍍𑌯𑍈𑌤𑍇 𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑌤𑍍𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌾 𑌨𑌚𑌾𑌷𑍍𑌟𑌾𑌵𑌾𑌤𑍍𑌮𑌗𑍁𑌣𑌾 𑌨𑌸 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌸𑌾𑌯𑍁𑌜𑍍𑌯𑌂 𑌸𑌾𑌲𑍋𑌕𑍍𑌯𑌞𑍍𑌚 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿' என்கிற கௌதம ஸூத்ரத்தாலே ஆத்மகுணங்கள் இல்லாவிட்டால் ப்ருஹ்ம ப்ராப்தி இல்லை யென்கிற வ்யதிரேகோக்தியாலே ஆத்ம குணங்களுக்கு ப்ருஹ்ம ப்ராப்தி ஸாதநத்வம் த்ருடீக்ருதமாயிற்று. ஆகையாலே இந்த ஆத்மகுணங்களை யுடையவனிடத்தில் விஷ்ணுத்வேஷ மிருந்தாலும் ப்ருஹ்ம ப்ராப்த்யுபாயமான ப்ருஹ்ம வித்யையை உபதேசித்தால் இந்த ப்ருஹ்ம வித்யாபலத்தாலே பின்பு இவனுக்கு கண்டாகர்ணாதிகளுக்குப்போலவே விஷ்ணு த்வேஷம் நிவ்ருத்தமாகலாமாகையாலே விஷ்ணு த்வேஷத்தை யுடையவனுக்கு கௌதமோக்தங்களான தயை, க்ஷாந்தி, அநஸூயை, ஶௌசம், அநாயாஸம், மங்களம், அகார்ப்பண்யம், அஸ்ப்ருஹை என்னும் எட்டு ஆத்மகுண பூர்த்தி இருந்தால் ப்ருஹ்ம வித்யோபதேசத்துக்குத் தடையுண்டோ வென்னில், '𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌭𑌕𑍍𑌤𑌿𑌪𑌰𑍋 𑌦𑍈𑌵𑍋 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌸𑍍𑌤𑌥𑌾𑌽𑌽𑌸𑍁𑌰𑌃' இத்யாதி ப்ராமணங்களிலே விஷ்ணு பக்திபரனை 'தைவப்ரக்ருதி' என்றும், விஷ்ணு த்வேஷபரனை 'ஆஸுரப்ரக்ருதி' என்றும் சொல்லுகிறபடியாலே ஸம்ஸார பந்தார்ஹனான இவ்வாஸுர ப்ரக்ருதிக்கு மோக்ஷஸாதநமான ப்ருஹ்ம வித்யையை உபதேசிக்கலாகாது.

இவ்வாஸுர ப்ரக்ருதிக்கு ஸம்ஸார பந்தார்ஹத்வமானது '𑌦𑍈𑌵𑍀 𑌸𑌂𑌪𑌦𑍍𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌯 𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌾𑌯𑌾𑌸𑍁𑌰𑍀 𑌮𑌤𑌾 ।' என்கிற ஸ்ரீ கீதா ஷோடஶாத்யாய ஶ்லோகத்திலே விஷ்ண்வாஜ்ஞாநுவர்த்தநரூபமான தைவ ஸம்பத்தானது மோக்ஷ ஹேதுவென்றும் விஷ்ண்வாஜ்ஞாதி லங்கநரூபமான ஆஸுர ஸம்பத்தானது ஸம்ஸாரபந்த ஹேதுவென்றும் சொல்லியிருக்கிறபடியாலே ஸித்தம். இந்த ஆஸுரப்ரக்ருதிக்கு ஸாதுத்வ ப்ரமத்தாலே ஆசார்யன் ப்ருஹ்ம வித்யை உபதேசித்தாலும் இந்த ப்ருஹ்மவித்யை ஊஷர க்ஷேத்ரத்திலே உப்தமான பீஜம்போலே வ்யர்த்தமாய் விடும். இந்த அர்த்தமானது '𑌊𑌷𑌰𑍇 𑌨𑌿𑌵𑌪𑍇𑌦𑍍𑌬𑍀𑌜𑌂 𑌷𑌣𑍍𑌡𑍇 𑌕𑌨𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 । 𑌸𑍍𑌰𑌜𑌂 𑌵𑌾𑌨𑌰𑌕𑌣𑍍𑌠𑍇 𑌵𑌾 𑌨𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑍇 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑍇𑌤𑍍 ॥' இத்யாதி மஹர்ஷி வாக்யங்களாலே ஸித்தம். [ஊஷர க்ஷேத்ரத்திலே பீஜாவாபமாவது செய்யலாம்; நபும்ஸகனுக்கு கந்யாதாநமாவது செய்யலாம்; குரங்குக்கு மாலா தாநமாவது செய்யலாம்; அபாத்ரத்திலே ஶாஸ்த்ரதாநம் செய்யலாகாது என்பது இந்த ஶ்லோகார்த்தம்.] தவிரவும், ஆஸுர ப்ரக்ருதிக்கு ப்ருஹ்மவித்யை உபதேசித்தால் இவன் இதனாலே வரம்பெற்ற ராவணாதிகளைப்போலே உத்வ்ருத்தனாய் வேதாந்த ஜ்ஞாந துர்ப்பலர்களான ஸாதுக்களுக்குத் தன் துர்வாதங்களாலே புத்தி வ்யாமோஹத்தை உண்டாக்கத்தக்கவனாகையாலே, இந்த உபதேசம் பஹ்வநர்த்தாவஹமாயிருக்கும். '𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌸𑍂𑌯𑌃 [illegible]

தாநயாத ஜ்ஞாநதேவேஷு ஸாதூந் । ஸர்வவிஷ்ணோ ஸாதவமேஷு மோஹயந்த்யவிசக்ஷணாந் ॥' என்று ஸ்ரீ மஹாபாரதத்திலே வேதாந்த ஜ்ஞாந துர்ப்பலர்களான ஸாதுக்களுடைய வ்யாமோஹநமானது மஹா பாதகமாயிறே சொல்லப்பட்டிருக்கிறது.

'ஶ்ரேயாம்ஸி ஸர்வஶாஸ்த்ராணி விஹிதாநி மநீஷிபி: ॥' இத்யாதி ப்ரமாணங்களிலே ஸர்வ ஶாஸ்த்ரங்களுக்கும் குணவத்த்வம் ஸ்வபாவமாகச் சொல்லியிருக்க, ஆஸுர ப்ரக்ருதிக்கு உபதேசித்த ப்ருஹ்ம வித்யைக்கு இப்படி தோஷாவஹத்வம் ஸம்பவிக்குமோ வென்னில்: மாதுர்யாதி ஸ்வபாவத்தையுடைய க்ஷீரத்துக்கு ஸர்ப்பத்தினிடத்தில் விநியோகத்தாலே விஷரூபேண பரிணமம் உண்டாகிறதுபோல இந்த ப்ருஹ்ம வித்யைக்கு ஆஶ்ரயதோஷத்தாலே தோஷாவஹத்வம் ஸம்பவிக்கலாம். இந்த அர்த்தத்தில் 'ந மாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா: । மாயயாபஹ்ருதஜ்ஞாநா ஆஸுரம் பாவமாஶ்ரிதா: ॥' என்கிற ஸ்ரீ கீதா ஶ்லோகத்தை ப்ரமாணமாகத் தெரிந்துகொள்வது. [என்னைச் சரணமடையாத துஷ்க்ருதிகள், மூடர்களென்றும் நராதமர்களென்றும் மாயயாபஹ்ருத ஜ்ஞாநர்களென்றும் ஆஸுர பாவாஶ்ரிதர்களென்றும் நான்குவகையாக இருப்பார்கள். அவர்களில் ஈஶ்வரஜ்ஞாந மில்லாதபடியினாலே ததீயமான ஸ்வரூபத்திலும் ஸ்வ போக்யமான க்ருஹ க்ஷேத்ராதி வர்க்கத்திலும் ஸ்வகீயத்வஜ்ஞாநத்தை யுடையவர்கள் மூடர்கள். இதிஹாஸ புராணாதிகளாலே ஈஶ்வர ஜ்ஞாநம் பிறந்தாலும் அவனுடைய ஸௌலப்ய குணத்தை அறியாதபடியாலே அவனிடத்தில் ஆபிமுக்யத்தை அடையாதவர்கள் நராதமர்கள். 'ஹரேரவஜ்ஞா [illegible] । ஸௌஶீல்ய [illegible] ॥' என்று மஹர்ஷிகளும் சொன்னார்களிறே. (விஷ்ணுவினுடைய பரத்வ குணமாத்ரத்தை யறிந்து அவனைத் துர்லப புத்தியாலேயும் ஸ்வதோஷாநுஸந்தாந ஜந்ய பயத்தாலேயும் பஜிக்காதவன் நராதமன். ஸ்வதோஷாநு ஸந்தாநம் இருக்கச் செய்தே

யும் அவனுடைய ஸௌலப்ய குணத்தை நன்றாக அறிந்து இடைச்சிகளைப்போலே அவனை பஜிக்கின்றவன் பரமாஸ்திகன் என்பது இந்த ஶ்லோகார்த்தம்.) ஈஶ்வர ஸ்வரூப குணங்களில் விபரீதமாக உண்டான ஜ்ஞாநத்தை குத்ருஷ்டிகள் சொல்லும் குயுக்திகளாலே விடுகிறவர்கள் மாயயாபஹ்ருதஜ்ஞாநர்கள். ஈஶ்வரஸ்வரூப குணாதிவிஷயக பரிபூர்ண ஜ்ஞாநம் ஒருவராலேயும் சலிப்பிக்கவொண்ணாதபடி ப்ரதிஷ்டிதமா யிருந்தாலும் அவனிடத்தில் அஸுரர்களைப்போலே த்வேஷத்தையே, பண்ணுகிறவர்கள் ஆஸுரபாவாஶ்ரிதர்கள்.] இவர்களில் உத்தரோத்தரன் பாபிஷ்டதமன் என்று ஸ்ரீ கீதா ஶ்லோகதாத்பர்யம்.

இவ்விடத்தில்,

"உத்தரோத்தரா இதி விஶேஷாத் க்ருதே [illegible] ந்யாயேந ஜ்ஞாநப்ரகர்ஷ [illegible] ஜ்ஞாநாதிஶயேபி [illegible] பாவாதிஶயாதிதி பாவ: ।"

என்று ஸ்ரீ தாத்பர்ய சந்த்ரிகையிலே பாவவிவரணம் அருளிச்செய்யப்பட்டது. ஆகையாலே ஆஸுரப்ரக்ருதிக்கு உபதேசித்த ப்ருஹ்மவித்யைக்கு ஆஶ்ரய தோஷத்தாலே தோஷாவஹத்வம் ஸம்பவிக்கலாம் என்கிற அர்த்தம் த்ருடீக்ருதமாயிற்று. ஒரு வஸ்துவுக்கு ஆஶ்ரய பேதத்தாலே விருத்த குணவத்த்வம் ஸம்பவிக்கலாமென்கிற விஷயத்தில் "[illegible] ஶ்ரவண [illegible] நயதி [illegible] ஸஜ்ஜநாம் [illegible]" என்று அடியேனாலே லிகிதமான 'ஸுபாஷிதஶதகம்' என்கிற க்ரந்தத்திலே ஜிஹ்வாதஶகஸ்த ஶ்லோகத்தை உதாஹரணமாகத் தெரிந்துகொள்வது. நாககானது துஷ்டனிடத்திலே சேர்ந்து அவனாலே ஸாது ஜநங்கள் விஷயத்தில் அதி கருமீநாக்களைக் கூறுவித்து அந்தத் துஷ்டனை நரகத்திலே தள்ளிவைக்கும். ஶிஷ்டனிடத்தில்

சேர்ந்து ‘ஸ்ரீ க்ருஷ்ணா! கோவிந்தா! வாஸுதேவா! நாராயணா!’ இத்யாதி பாவநதமங்களான பகவந்நாமங்களைச் சொல்லி வைப்பித்து அந்த ஶிஷ்டனை மோக்ஷம் சேரப்பண்ணும். ரஸஜ்ஞர்களுடைய வ்யாபாரமானது பாத்ராநுகுணமா யன்றோ இருக்கும்! என்பது இந்த ஶ்லோகதாத்பர்யம். இங்கு ரஸஜ்ஞாநாம் என்னும் ஶப்தமானது ஶ்லேஷ பலத்தாலே நாக்கையும் ரஸிகர்களையும் சொல்லும். இப்படியாகில் ‘ஶ்ரேயாம்ஸி ஸர்வஶாஸ்த்ராணி விஹிதாநி மநீஷிபி:’ இத்யாதி பூர்வோக்த ப்ரமாணம் வாராதோ வென்னில், அந்த ப்ரமாணங்கள் தைவப்ரக்ருதி விஷயங்களாகையால் விரோதமில்லை. கண்டாகர்ணனுக்கு விஷ்ணுத்வேஷம் நிவ்ருத்தமான பின்பு தத்வஜ்ஞாநம் ப்ரதிஷ்டிதமானபடியால் ஸ்ரீ விஷ்ணுபக்தி மேலிட்டதிறே. இந்த கண்டாகர்ணனுடைய உபாக்யாநம் ஸ்ரீ ஹரிவம்ஶத்தில் 80-வது அத்யாயத்திலே சொல்லியிருக்கிறது. அதாவது:—

‘ஸததம் [illegible] கர்ணயோ: [illegible] விஷ்ணோரிதி [illegible]’ என்கிறபடியே விஷ்ணு நாமத்தை ஒருக்காலும் கேட்கக்கூடாது என்கிற அபிஸந்தியாலே காதுகளிலே கண்டையைக் கட்டிக்கொண்டபடியால் கண்டாகர்ணனென்று பேரையுடைய பிஶாசஶ்ரேஷ்டனை ஒருவன் ருத்ரபக்தனாய் ஒரு காலத்திலே கைலாஸத்தில் ருத்ரனை ‘எனக்கு மோக்ஷம் தாரும்’ என்று ப்ரார்த்தித்தான். அநந்தரம் ஸர்வருக்கும் மோக்ஷம் கொடுக்கிற ஶக்தி விஷ்ணு வ்யதிரிக்த தேவதைகளிலே ஒருவருக்கும் இல்லையாகையால் நீ பதரிகாஶ்ரமத்திலே விஷ்ணுவைப் பஜித்து அவரிடம் மோக்ஷத்தை அடையக்கடவாய்’ என்று ருத்ர வாக்யத்தைக் கண்டாகர்ணனவன் கேட்டு, ‘ஸர்வோத்தமன் ஸ்ரீ விஷ்ணுவே’ என்று தெரிந்துகொண்டு ஸ்ரீ பதரிகாஶ்ரமத்தில் ஒரு கார்ய விஶேஷார்த்தமாக எழுந்தருளின ஸ்ரீ க்ருஷ்ண பகவானைப் பஜித்து ஸத்கதியை யடைந்தான். ஆகையால் ஶிஷ்யனாகவந்த விஷ்ணுத்வேஷிக்கு

ஆசார்யன் விஷ்ணுவினுடைய பரத்வாதிகுணங்களை நன்றாக உபபாதித்து அவனுக்கு விஷ்ணுத்வேஷம் நிவ்ருத்தமாகும்படி பண்ணி, பின்பு ப்ருஹ்ம வித்யையை உபதேசிக்கலாம். விஷ்ணுத்வேஷம் இருக்கும்போது உபதேசிக்கக் கூடாது என்கிற அர்த்தம் நிஷ்பந்நமாயிற்று.

விஷ்ணுவினிடத்தில் த்வேஷமும் பக்தியும் இல்லாமல் உதாஸீநனாய் இருக்கிறவனுக்கு ‘அத்³வேஷ ஏவ விஷ்ணௌ ஸ்யாத் கு³ண:’ என்று குணமில்லாதவனுக்குத் தோஷாபாவமாத்ரமே குணமென்கிற லோகந்யாயத்தாலே விஷ்ணு பக்திரூப குணமில்லாமற்போனாலும் விஷ்ணு த்வேஷ ரூப தோஷா பாவமாத்ரத்தைப்பார்த்து ப்ருஹ்ம வித்யையை உபதேசிக்கலாகாதோ வென்னில் ‘இத³ம் தே நாதபஸ்காய நாப⁴க்தாய கதா³சந । ந சாஶுஶ்ரூஷவே வாச்யம் ந ச மாம் யோ(அ)ப்⁴யஸூயதி ॥’ என்கிற ஸ்ரீ கீதாசார்ய வசந ப்ரமாணத்தாலே உபதேசிக்கலாகாது. இந்த ஸ்ரீ கீதாஶாஸ்த்ரத்தைத் தபஸ்பண்ணாதவனுக்கு நீ சொல்லக்கூடாது; தபஸ்பண்ணியிருந்தாலும் ஶாஸ்த்ர ப்ரதனான உன்னிடத்திலேயும் ஶாஸ்த்ர பரதிபாத்யனான என்னிடத்திலேயும் பக்தி இல்லாதவனுக்குச் சொல்லக்கூடாது. அந்த பக்தி இருந்தாலும் ஶ்ரத்தை இல்லாதவனுக்குச் சொல்லக்கூடாது. என்னைத் த்வேஷிக்கிறவனுக்கு ஸுதராம் சொல்லக்கூடாது’ என்று ஸ்ரீ கீதாவசந தாத்பர்யம்.

ஆகையாலே விஷ்ணுபக்தி யில்லாதவனுக்கு ப்ருஹ்மவித்யையை உபதேசிக்கிறது ப்ரமாண விருத்த மென்பது ஸித்தம். இப்படி நிஷ்கர்ஷத்தாலே விஷ்ணு பக்தி யிருக்கிறவனுக்கே ப்ருஹ்ம வித்யை உபதேசிக்க வேண்டும் என்கிற அர்த்தம் லபிக்கிறது. இப்படியானால், ‘ஸாத்விக பரிஶீலனாதிகளாலே வந்த பகவத் விஷயத்தில் ப்ரீதி விஶேஷம் ஸர்வேஶ்வரனைத் தெளிய வறியவேணுமென்னும் அபிநிவேசத்துக்குக் காரணமாய் ‘பக்தி’ என்று பேர்பெற்றிருக்கும். இத்தாலே ‘ஶுஶ்ரூஷா [illegible] ஶாஸ்த்ரா

வேத்தி ஜநார்த³நம்’ என்கிறபடியே ஶாஸ்த்ர ஜந்ய தத்வ ஜ்ஞாந கர்ம யோகாதி பரம்பரையாலே’ என்கிற ஸ்ரீமத்ரஹஸ்யத்ரஸாரத்தில் உபாய விபாகாதிகார ஸ்ரீ ஸூக்தி விரோதம்வரும். எங்ஙனே யென்னில்: இந்த ப்ரகரணத்திலே “இங்கவனே’ என்று நிர்த்தேஶிக்கலாயிருக்க, ‘ஸர்வேஶ்வனே’ என்று நிர்த்தேஶித்தது ஸர்வேஶ்வரன் இன்னான் என்று பரத்வாதி யாதாத்ம்ய நிர்ணயத்தில் அபிநிவேஶத்திலே ப்ராதாந்யேந ஹேதுரயம் ப்ரீதி விஶேஷ இதி ஜ்ஞாபநார்த்தம்.” என்று ஸ்ரீ ஸாராஸ்வாதிநியில் வ்யாக்யாநம் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. இந்த வ்யாக்யாநத்தாலேயும் ‘ஸத்த்வஶுத்³தா⁴வம் மஹாஶ்ரத்³தோ⁴ ஜநார்த³நம் வேத்தி’ என்று இங்கு உதாஹ்ருத ப்ரமாண ஸ்வாரஸ்யத்தாலேயும் ஸாத்விக ஸம்பாஷணாதிகளாலுண்டாகும் ஸர்வேஶ்வர விஷயக ஸாமாந்ய பக்தியானது, வேதாந்த ஶாஸ்த்ர ஶ்ரவணத்துக்குப் பூர்வபாவி என்றும், ஸர்வேஶ்வரன் விஷ்ணு வென்கிற பரதத்வ விஶேஷ நிஶ்சயம் ஶாஸ்த்ர ஶ்ரவணத்துக்கு அநந்தரபாவி என்றும் தோன்றுகிறது. இங்கு ஸர்வேஶ்வர விஷயக ஸாமாந்ய பக்தியாவது - ஸர்வேஶ்வரன் இன்னானென்று விஶேஷ நிஶ்சயமில்லாமல் ஸர்வேஶ்வரன் ஒருவன் இருக்கிறான் என்று ஸாமாந்ய நிஶ்சயத்தாலே அவனிடத்தில் உண்டான பக்தி. இப்படி உக்தார்த்தத்துக்கு “யதோ வா இமாநி பூ⁴தாநி ஜாயந்தே யேந ஜாதாநி ஜீவந்தி - யத்ப்ரயந்த்யபி⁴ஸம்விஶந்தி தத்³விஜிஜ்ஞாஸஸ்வ தத்³ப்³ரஹ்மேதி - ஏகோ ஹ வை நாராயண ஆஸீந்ந ப்³ரஹ்மா நேஶாநோ நேமே த்³யாவாப்ருதி²வீ” இத்யாதி வேதாந்த வாக்யங்களினாலே ஜகத் காரண பூதனானவன் ‘ப்ருஹ்ம ஶப்தவாச்ய னென்றும், நாராயணன் ஜகத் காரண பூதனென்றும் சொல்லுகிறபடியாலே ப்ராமாணிக த்வம் ஸித்தம். ஆகையாலே வேதாந்த ஶாஸ்த்ர ஶ்ரவண பலமான பரதத்வ விஶேஷ நிஶ்சயத்தால் உண்டாகும் விஷ்ணு பக்திக்கு வேதாந்த ஶாஸ்த்ர ஶ்ரவண பூர்வ பாவித்வம் சொன்னால் இந்த உபாய விபாகாதிகார ஸ்ரீஸூக்தி விரோதம் துஷ்பரிஹாரமென்னில் இந்த விரோதம் வாராது. எங்ஙனேயென்னில்: “ஸர்வேஷாமேவ லோகாநாம் த்³ருஶ்யேதே க்ஷயஸம்ப⁴வௌ । விஷ்ணோஸ்ஸகாஶாது³த்³பூ⁴தம் ஜக³த்தத்ரைவ வ்யவஸ்தி²தம் । க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாமுத்பத்திரபி சாப்யய꞉ ॥” இத்யாதீதிஹாஸ புராண வாக்யங்களிலேயும் விஷ்ணுவுக்கு ஜகத்காரணத்வம் சொல்லுகிறபடியாலே ஏதாத்ருஶ வாக்யார்த்த ஶ்ரவண ரூபமான ஸாத்விக ஸம்பாஷணத்தாலேயே பரதத்வவிஶேஷ நிஶ்சயம் உண்டாய், அதன் மூலமாக விஷ்ணு பக்தி உதிக்கிலாமிறே. ஆசார்யனிடத்தில் வேதாந்த வாக்யார்த்த ஶ்ரவண பலமான பரதத்வ விஶேஷ நிஶ்சயம் தத்பூர்வ பாவியான ஸாத்விக ஸம்பாஷணத்தாலேயே வருமென்று சொன்னால், ஆசார்யனிடத்தில் வேதாந்த வாக்யார்த்த ஶ்ரவணம் அநாவஶ்யகமாக ப்ரஸங்கியாதோ வென்னில், இது ப்ரஸங்கியாது. ததி மந்தநம்பண்ணி நவநீதத்தை எடுக்கிறாப்போல் ஸமீசீந யுக்திகளாலே விசாரம் பண்ணி வேதார்த்தத்தை நிஷ்கரிஷிக்கிறது கர்ம ப்ரஹ்மோபய விஷயக மீமாம்ஸா ஶாஸ்த்ரம். உத்ருத நவநீதத்தைக் காட்டுகிறாப்போல் இந்த மீமாம்ஸா ஶாஸ்த்ர நிஷ்க்ருஷ்டமான வேதார்த்தத்தை அநாயாஸேந காட்டுகின்றன இதிஹாஸ புராணாதிகள். ஆகையாலே இதிஹாஸ புராண வாக்யார்த்த ஶ்ரவண ரூபமான ஸாத்விக ஸம்பாஷணத்தாலே உண்டாகிற பாதத்வ விஶேஷ நிஶ்சயமானது ஆபாத ப்ரதீதி ரூபமாயிருக்குமான படியாலே இதற்கு குத்ருஷ்டிகள் சொல்லும் துர்வாதங்களாலே அபஹாரம் ஸம்பாவிதமா யிருக்கும். ஆபாதப்ரதீதி ரூபத்வமாவது - ஸம்ஶயாதி ஸஹமா யிருக்கை. ஆகையாலே குத்ருஷ்டி துர்வாதங்களையும் தன்மூலகங்களான அத்பாத்ம ஜ்ஞாந துர்ப்பலர்களான ஆஸ்திகர்களுடைய புத்தி வ்யாமோஹங்களையும் நிரஸிக்கத்தக்கதான பரதத்வ விஶேஷ நிர்ணயம் தனக்கு ப்ரதிஷ்டிதமா கைக்காக ஆசார்யனிடத்தில் மீமாம்ஸாந்யாயங்களோடே கூடின வேதாந்த வாக்யார்த்த ஶ்ரவணம் அவஶ்யம் கர்த்தவ்யம். உபாய விபாகாதிகார ஸ்ரீ ஸூக்திக்கு ஸாத்விக ஸம்பாஷணத்தாலே உண்டாகிற ஆபாத ப்ரதீதிரூபமான பரதத்வ விஶேஷ நிஶ்சய மூலக

ப்ரீதி விஶேஷரூப விஷ்ணுபக்தியானது ஶாஸ்த்ர ஶ்ரவணத்துக்கு ஹேது வென்றும் பூர்வோக்த ஸுத்ருட பரதத்வ விஶேஷ நிர்ணயமானது ஶாஸ்த்ர ஶ்ரவணத்துக்கு பலமென்றும் தாத்பர்யம் கொள்ளலாம். இந்தத் தாத்பர்யமானது ஸாத்விக பரிஶீலநாதிகளாலே வந்த பகவத் விஷயத்தில் ப்ரீதி விஶேஷம் என்கிற ஸூக்தியாலேயும் ஸர்வேஶ்வரனைத் தெளிய வறிய வேணுமென்கிற ஸூக்தியாலேயும் வ்யஞ்ஜித மாகிறது.

தெளிய வறிகையாவது-விஶதமாகத் தெரிந்து கொள்ளுகை. வைசத்யமாவது ஸம்ஶயமில்லாம லிருக்கை. இப்படி ஸ்ரீ ஸாராஸ்வாதிநீ ஸூக்தியிலும் பரதத்வாதி யாதாத்ம்ய நிர்ணயத்தில் என்று நிர்ணய ஶப்தத்தாலே வ்யஞ்ஜிதம். ஆகையாலே விஷ்ணு பக்தியை யுடையவனுக்கு ப்ருஹ்ம வித்யையை உபதேசிக்கவேணுமென்று சொன்னால், ஒருவிரோதமும் இல்லை. இப்படி மீமாம்ஸாந்யாயங்களோடே கூடின வேதாந்த வாக்யார்த்த ஶ்ரவணம் அவஶ்யம் கர்த்தவ்யம் என்கிற அர்த்தத்தை '𑌆𑌰𑍍𑌷𑌂 𑌧𑌰𑍍𑌮𑍋𑌪𑌦𑍇𑌶𑌂 𑌚 𑌵𑍇𑌦𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌵𑌿𑌰𑍋𑌧𑌿𑌨𑌾 । 𑌯𑌸𑍍𑌤𑌰𑍍𑌕𑍇𑌣𑌾𑌨𑍁𑌸𑌂𑌧𑌤𑍍𑌤𑍇 𑌸 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌵𑍇𑌦 𑌨𑍇𑌤𑌰𑌃 ॥' இத்யாதிகளிலே மந்வாதிகளும் சொன்னார்கள்.

இப்படி இந்த ஶ்லோகமானது "𑌋𑌷𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌃 - [illegible] - [illegible] 𑌋𑌷𑌿𑌣𑌾' என்ற விடத்தில் ருஷிஶப்தத்துக்கு வேதபரமாக ஶிஷ்டர் வ்யாக்யாநம் பண்ணுகையால் தர்மோபதேசமாவது தர்ம ஶாஸ்த்ரம்" என்று ஸ்ரீ ஸாரதீபிகையில் ஸித்தோபாய ஶோதநாதி காரத்திலே அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. இப்படி '𑌬𑌹𑍁𑌭𑍍𑌯𑌶𑍍𑌚 𑌮𑌹𑌦𑍍𑌭𑍍𑌯𑌶𑍍𑌚 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌭𑍍𑌯𑍋 𑌮𑌤𑌿𑌮𑌾𑌨𑍍𑌨𑌰𑌃 । 𑌸𑌰𑍍𑌵𑌤 𑌸𑌾𑌰𑌮𑌾𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑍁𑌷𑍍𑌪𑍇𑌭𑍍𑌯 𑌇𑌵 𑌷𑌟𑍍𑌪𑌦𑌃' இத்யாதிகளிலேயும் ந்யாய விசாரம்பண்ணி ஸாரத்தை க்ரஹிக்கவேணுமென்கிற அர்த்தத்தைத் தெரிந்து கொள்வது. இந்த ஶ்லோகத்தில் '𑌬𑌹𑍁𑌭𑍍𑌯𑌃' என்கிறபதம் ஶாஸ்த்ராநேக த்வத்தைச் சொல்லுகிறது. '𑌮𑌹𑌦𑍍𑌭𑍍𑌯𑌃" என்கிறபதம் ஶாஸ்த்ரவைபுல்யத்தைச் சொல்லுகிறது. '𑌸𑌰𑍍𑌵𑌤𑌃' என்கிற பதத்துக்கு '𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌭𑍍𑌯𑌃' என்கிற பதத்தோடே அந்வயம். வண்டானது ஸகல புஷ்பங்களினின்றும் ஸாரத்தை க்ரஹிக்குமாப்போல் புத்திமானாயிருக்குமவன் அநேகங்களாயும் அதி விபுலங்களாயும் இருக்கிற ஸகல ஶாஸ்த்ரங்களினின்றும் ஸாரார்த்தத்தை ந்யாய விசாரம்பண்ணி க்ரஹிக்க வேணுமென்று இந்த ஶ்லோகார்த்தம். '𑌯𑌦𑍍𑌵𑌾 - 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 என்கிற பதத்துக்கு ஸாரம் என்கிற பதத்தோடே அந்வயம் சொல்லலாம். ஸர்வதஸ்ஸாரம் ஸர்வப்ரகாரத்தாலேயும் ஸாரமென்கிறபடி. ஸர்வப்ரகாரமாவது ஸ்வரூபமும் குணமும். ஆகையால், ஸ்வரூப மாத்ரத்தாலே ஸாரமான அர்த்தத்தையும் குணமாத்ரத்தாலே ஸாரமான அர்த்தத்தையும்விட்டு ஸ்வரூப குணோபயங்களாலேயும் ஸாரமான அர்த்தத்தை விசாரித்து ஶாஸ்த்ரங்களி னின்றும் க்ரஹிக்க வேணுமென்கிற தாத்பர்யம் ஸித்திக்கிறது. இவற்றில் ஸ்வரூப மாத்ரத்தாலே ஸாரமானஶாஸ்த்ரார்த்தம் எது வென்றில், ஐஶ்வர்ய கைவல்ய ஸித்யர்த்தமாகப் பகவானிடத்தில் பண்ணும் பக்திப்ரபத்திகள். இந்த பக்திப்ரபத்திகள் விஷயமான பகவானுடைய உத்கர்ஷத்தாலே ஸ்வரூப தஸ்ஸாரங்களா யிருக்கும் பலமான ஐஶ்வர்ய கைவல்ய ஸுகங்கள் அல்பாஸ்திரங்களான படியாலே குண தஸ்ஸாரங்களல்ல. தத்வஜ்ஞாந ஸித்யர்த்தமாகப் பண்ணும் ருத்ருபக்தியானது குணமாத்ரத்தாலே ஸாரமா யிருக்கும். இந்த பக்திக்குப் பலமான தத்வ ஜ்ஞாநமானது நியமேந ப்ராப்ய ஸ்வரூபாத்யர்த்த பஞ்சக விஷயகமா யிருக்கு மானபடியாலே மோக்ஷோபாய ப்ரவ்ருத்தி த்வாரா மோக்ஷபர்யந்தமாய்ப் பர்யவஸிக்கு மாகையாலே குண தஸ்ஸாரத்வமுண்டு. இந்த பக்திக்கு விஷய பூதனான ருத்ரன் ஸர்வேஶ்வரனைக் காட்டிலும் அதி நிக்ருஷ்ட னானபடியாலே ராஜப்ருத்ய விஷயக பக்திக்குப்போலே ஸ்வரூப தஸ்ஸாரத்வமில்லை. ருத்ரபக்திக்குத் தத்வ ஜ்ஞாநஸாதநத்வ மாவது '𑌆𑌰𑍋𑌗𑍍𑌯𑌂 𑌭𑌾𑌸𑍍𑌕𑌰𑌾𑌦𑌿𑌚𑍍𑌛𑍇𑌤𑍍 𑌶𑍍𑌰𑌿𑌯𑌮𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑍍𑌧𑍁𑌤𑌾𑌶𑌨𑌾𑌤𑍍 । 𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌿𑌚𑍍𑌛𑍇

𑌮𑍋𑌕𑍍𑌷𑌮𑌿𑌚𑍍𑌛𑍇𑌜𑍍𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌾𑌤𑍍’ இத்யாதி ப்ரமாண ப்ரஸித்தம். இப்படி ருத்ரனிடத்தி னின்றும் தத்வ ஜ்ஞாநத்தை அபேக்ஷிக்கிறது ஸர்வாதிகாரிகளுக்கும் சொன்னபடி யன்று. ‘𑌨𑌾𑌨𑍍𑌯𑌂 𑌦𑍇𑌵𑌂 𑌨𑌮𑌸𑍍𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌨𑌾𑌨𑍍𑌯𑌂 𑌦𑍇𑌵𑌂 𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑌯𑍇𑌤𑍍 । 𑌨𑌾𑌨𑍍𑌯𑌂 𑌦𑍇𑌵𑌂 𑌨𑌮𑌸𑍍𑌯𑍇𑌤𑍍𑌤𑍁 𑌜𑌿𑌷𑍍𑌣𑍁𑌵𑌾𑌦𑌾 𑌶𑍍𑌰𑍇𑌯𑍋𑌨𑌰𑌃 ॥’ இத்யாதிகளிலே ஸ்ரீ வைஷ்ணவனுக்கு தேவதாந்தர நமஸ்காரமானது நிஷித்தமா யிருக்கிறபடியாலே வைஷ்ணவேதரனுக்குச் சொன்னபடி. அந்த வைஷ்ணவேதரனும் ருத்ரபக்தியைப் பண்ணும்போது ருத்ரனிடத்தில் பரதேவதா புத்தியைப் பண்ணக்கூடாது. அப்படிப் பண்ணினால் ‘𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑌨𑍍𑌯𑌂 𑌪𑌰𑌤𑍍𑌵𑍇𑌨 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌯𑍋 𑌸𑌾𑌵𑌚𑍇𑌤𑌨𑌃 । 𑌸 𑌪𑌾𑌷𑌣𑍍𑌡𑍀𑌤𑌿 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌬𑌹𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌃’ இத்யாதி ப்ரமாணங்களிலே விஷ்ணு வ்யதிரிக்த னிடத்திலே விஷ்ணுவைக் காட்டிலும் பரத்வபுத்தியைப் பண்ணுகிறவன் அசேதநப்ராயனென்றும் பாஷண்டியென்றும் ஸர்வ வைதிக கர்மாநதிகாரி யென்றும் சொல்லியிருக்கிறபடியாலே இஷ்டஸித்தி நேரிடாது; ப்ரத்யுத - அநிஷ்டமே ஸித்திக்கும். இப்படி விஷ்ணுவி னிடத்தில் தேவதாந்தர ஸாம்ய புத்தியைப் பண்ணுகிறவனும் பாஷண்டி யென்றும் ஸர்வ கர்மாநதிகாரி யென்றும் ‘𑌯𑍇 𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌦𑍇𑌵𑌸𑌾𑌮𑍍𑌯𑍇𑌨 𑌮𑌨𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 । 𑌤𑍇 𑌵𑍈 𑌪𑌾𑌷𑌣𑍍𑌡𑌿𑌨𑍋 𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌬𑌹𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌾’ இத்யாதி ப்ரமாணங்களிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ப்ரமாணத்திலே புருஷோத்தம ஶப்தத்துக்கு ஸ்ரீவிஷ்ணு பரத்வமாவது ‘𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌕𑍍𑌷𑌰𑌮𑌤𑍀𑌤𑍋𑌽𑌹𑌮𑌕𑍍𑌷𑌰𑌾𑌦𑌪𑌿 𑌚𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 । 𑌅𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌲𑍋𑌕𑍇 𑌵𑍇𑌦𑍇 𑌚 𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ॥’ என்று ஸ்ரீகீதாசார்யனுடைய ஸ்வவாக்யத்தாலே ஸித்தம். ஆகையாலே தேவதாந்தரத்தி னிடத்திலே பக்தி பண்ணுகிறவன் விஷ்ணுஶரீரமென்கிற புத்தியாலே பண்ணலாம். இந்த அர்த்தத்தை ‘𑌯𑍇 𑌯𑌜𑌨𑍍𑌤𑌿 𑌪𑌿𑌤𑍄𑌨𑍍𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑍍 𑌸𑌹𑍁𑌤𑌾𑌶𑌨𑌾𑌨𑍍 । 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌮𑍇𑌵 𑌯𑌜𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 ॥’ இத்யாதிப்ரமாணங்களாலே தெரிந்து கொள்வது. தத்வஜ்ஞாநார்த்தமாவது

மோக்ஷார்த்தமாவது பகவானிடத்தில் பண்ணும் பக்திப்ரபத்திகள், ஸ்வரூபத்தாலேயும் குணத்தாலேயும் ஸாரங்களா யிருக்கும். இவற்றிற்கு விஷயோத்கர்ஷத்தாலே ஸ்வரூபதஸ் ஸாரத்வம் ஸித்தம். பலமான மோக்ஷமானது ஸ்வரூபோசிதமாயும் இதர பலங்களைக்காட்டிலும் அநல்பஸ்திரத்வங்களாலே அதிஶயிதமாயும் இருக்கிறபடியாலே குணதோபி ஸாரத்வம் ஸித்தம். ஆகையால் ஸர்வ ப்ரகாரத்தாலேயும் ஸாரமான அர்த்தத்தை ஸகல ஶாஸ்த்ரங்களி னின்றும் ந்யாய விசாரம் பண்ணி க்ரஹிப்பது புத்தி மத்க்ருத்ய மென்று ‘𑌸𑌰𑍍𑌵𑌤𑌸𑍍𑌸𑌾𑌰𑌮𑌾𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍’ என்கிற பூர்வோக்த வசந தாத்பர்யம் ஸுஸங்கதமாயிற்று. ஆனால் இந்த வசநத்திலே ந்யாய விசாரம் சொல்லவில்லையே. ஆகையால் அதற்கு ஸித்தி எங்ஙனே யென்னில், இங்கு ந்யாய விசாரம் ஶாப்தமாக ஸித்தியாமற்போனாலும் ஷட்பத த்ருஷ்டாந்தத்தாலேயும், மதிமான் என்கிற ஶப்த ப்ரயோகத்தாலேயும் ஆர்த்தமாக ஸித்திக்கலாம். எப்படி யென்றால், வண்டானது தன்னுடைய ஆறு பாதங்களினாலேயும் புஷ்பங்களிலே நிஸ்ஸாரங்களைத் தள்ளிவைத்து ஸாரத்தை க்ரஹிக்குமாப்போல், புத்திமானாயிருக்கிறவனும் தன்னுடையபுத்தி ஶக்திகளினாலே ஶாஸ்த்ரங்களிலே நிஸ்ஸாரங்களை நிரஸித்து ஸாரத்தை க்ரஹிக்க வேணுமென்று இந்த வசநத்துக்குத் தாத்பர்யம் சொல்லலாமிறே. ‘𑌪𑍁𑌷𑍍𑌪𑍇𑌭𑍍𑌯 𑌇𑌵 𑌷𑌟𑍍𑌪𑌦𑌃’ என்று யோகரூடமான ப்ரமரவாசக பதம் இந்த வசநத்திலே உபாத்தமாயிருக்கிறது. ஆகையாலே ந்யாய விசாரத்துக்கு இந்தவசநத்திலே அர்த்ததஸ்ஸித்தி உண்டு. இப்படி பூர்வோக்தாத்மகுண விதாயகமான கௌதம ஸூத்ரத்துக்கு ஸ்ரீ விஷ்ணுபக்தியோடேகூடின ஆத்மகுண விதியிலே தாத்பர்யமானது ப்ரமாணாந்தர பராமர்ஶத்தாலே சொல்லப்பட்டது. இனி அந்த ஸூத்ரத்துக்கு ஸ்வார்த்த பராமர்சத்தாலேயும் விஷ்ணு பக்தியிலே தாத்பர்யம் சொல்லப்படுகிறது. எங்ஙனே, யென்னில், ‘𑌅𑌥𑌾𑌷𑍍𑌟𑌾𑌵𑌾𑌤𑍍𑌮𑌗𑍁𑌣𑌾𑌃 𑌦𑌯𑌾 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑌨𑌸𑍂𑌯𑌾 𑌶𑍌𑌚𑌮𑌨𑌾𑌯𑌾𑌸𑍋 𑌮𑌙𑍍𑌗𑌲𑌮𑌕𑌾𑌰𑍍𑌪𑌣𑍍𑌯𑌮𑌸𑍍𑌪𑍃𑌹𑍇𑌤𑌿’ - என்பது கௌதம ஸூத்ரம்,

இந்த ஸூத்ரத்திலே ப்ரதமோபாத்தமான ஆத்மகுணம், ஸர்வபூததயை. இந்த தயாஸ்வரூபத்தை ‘𑌪𑌰𑍇 𑌵𑌾 𑌬𑌨𑍍𑌧𑍁𑌵𑌰𑍍𑌗𑍇 𑌵𑌾 𑌮𑌿𑌤𑍍𑌰𑍇 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌰𑌿 𑌵𑌾 𑌸𑌦𑌾 । 𑌆𑌪𑌨𑍍𑌨𑍇 𑌰𑌕𑍍𑌷𑌣𑌂 𑌯𑌤𑍍𑌤𑍁 𑌦𑌯𑍈𑌷𑌾 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾’ என்று ப்ருஹஸ்பதி விவேசநம் பண்ணினார். இதனால், ஸர்வபூதங்களுக்கும் இஷ்டத்தைப் பண்ணுகிறது தயை என்று ஸித்திக்கிறது. இப்படி ஸர்வ பூதங்களுக்கும் இஷ்டத்தைப் பண்ணவேணு மென்கிற விதிக்கு நிமித்தம் எது வென்று விசாரித்தால், ஸர்வ பூதங்களும் ஸர்வேஶ்வரனுக்கு ஶரீரமாயிருக்கிறது நிமித்த மென்று ஸித்திக்கும். எங்ஙனே யென்னில்: ஸ்வாமிக்கு இஷ்டமானதையே பண்ணுகிற தன்றோ தாஸனுக்கு ஸ்வரூபோசிதம். இந்த இஷ்டாசரணமானது ஸத்வாரக மென்றும் அத்வாரக மென்றும் இருவகைப்படும். இவற்றில் ஸ்வாமி ஸம்பந்தி வஸ்துக்களிலே இஷ்டாசரண மானது ஸத்வாரகம். ஸ்வாமிக்கு ஸாக்ஷாதிஷ்டாசரணமானது அத்வாரகம். ப்ரக்ருதத்திலே ஸர்வேஶ்வரனுடைய ஆஜ்ஞாரூப ஶாஸ்த்ரங்களான நித்ய நைமித்யாதி கர்மங்களுடைய அநுஷ்டாநமானது அத்வாரகேஷ்டாசரணத்திலே சேரும். ‘𑌚𑌰𑌾𑌚𑌰𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑌗𑌵𑌦𑍍𑌵𑌪𑍁𑌃 । 𑌅𑌤𑌸𑍍𑌤𑌦𑌾𑌨𑍁𑌕𑍂𑌲𑍍𑌯𑌂 𑌮𑍇 𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌵 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌾 𑌮𑌤𑌿𑌃 ॥’ இத்யாதி ப்ரமாணங்களிலே ஸர்வ பூதங்களும் ஸர்வேஶ்வரனுக்கு ஶரீரமா யிருக்கிறபடியாலே அந்த பூதங்களுக்கு ஆநுகூல்யத்தைச் செய்ய வேண்டு மென்று சொல்லப்படுகிற ஸர்வ பூதாநுகூல்யா சரணமானது ஸர்வாந்தராத்ம பூதனான ஸ்வாமிக்கு ஸத்வார கேஷ்டா சரணத்திலே சேரும். ஶரீரத்திலே பண்ணுகிறது ஆத்மாவிலே யன்றோ பர்யவஸிக்கும். இப்படிப்பட்ட ஸ்வாமீஷ்டாசரணமானது ஸ்வாமியினிடத்திலே ப்ரீதி யில்லாமல் போனால் ஸம்பவிக்க மாட்டாது. ஆகையாலே ஸ்வாமீஷ்டா சரணத்தை விதிக்கிற வாக்யங்களுக்கு ஸ்வாமியினிடத்திலே ப்ரீதி விதியிலேயும் தாத்பர்யம் அவஶ்யம் கொள்ள வேண்டும். ஆகையாலே பூர்வோக்த கௌதம ஸூத்ரத்திலே ஸர்வபூத தயா விதிக்கு ஸர்வ ஸ்வாமியான ஸ்ரீ விஷ்ணுவினிடத்திலே ப்ரீதி விதியிலேயும் தாத்பர்யம் ஸித்தம். இப்படி குணாந்தரவிதிக்கும் தாத்பர்யமூஹ்யம். ஆகையாலே ‘𑌯𑌸𑍍𑌯𑍈𑌤𑍇 𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑌤𑍍 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌾 𑌨 𑌚𑌾𑌷𑍍𑌟𑌾𑌵𑌾𑌤𑍍𑌮𑌗𑍁𑌣𑌾𑌃 𑌨 𑌸 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌸𑌾𑌯𑍁𑌜𑍍𑌯𑌂 𑌸𑌾𑌲𑍋𑌕𑍍𑌯𑌂 𑌚 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿.’ என்கிற கௌதம ஸூத்ரத்திலே உக்தமான குணாஷ்டகம் இல்லாமற்போனால் ப்ருஹ்ம ப்ராப்தி இல்லை என்கிற அர்த்தம் ஶாப்தமாக ஸித்திக்கிறாப்போலே பூர்வ ஸூத்ர தாத்பர்ய விஷயமான ஸ்ரீ விஷ்ணுபக்தி யில்லாமற்போனாலும் ப்ருஹ்ம ப்ராப்தி இல்லையென்கிற அர்த்தம் ஆர்த்தமாக ஸித்திக்கின்றபடியாலும் ப்ரமாணாந்தரங்களிலே கண்டோக்தமாயிருக்கிறபடியாலும் ப்ருஹ்ம ப்ராப்தி ஸாதநமான ப்ருஹ்மவித்யையை ஸ்ரீ விஷ்ணு பக்தி யில்லாதவனுக்குச் சொல்லக்கூடாது என்கிற அர்த்தம் இப்படி ஸுப்ரதிஷ்டிதமாயிற்று.

𑌇𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑌮𑌞𑍍𑌜𑌸𑌮𑍍.

[illegible] ।
[illegible] ॥’

𑌇𑌤𑌿 [illegible] ॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 நிகமாந்த மஹாதேசிகாய 𑌨𑌮𑌃

𑌇𑌤𑌿 விஜ்ஞாபயிதா - கபிஸ்தலம் ரங்கநாததாஸ꞉.

ஸ்ரீ:

கடிதங்கள்.

ஒரு ஸம்சயம்.

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம் ஸ்ரீ. உ. வே. நரஸிம்மா சாரியார் ஸ்வாமியால் தமிழில் மொழிபெயர்த்து அச்சிட்டிருக்கும் பகவத் கீதாபாஷ்ய தாத்பர்ய சந்திரிகையில் இரண்டாவது அத்யாயம் 52-வது சுலோக வியாக்கியானத்தில் (𑌯𑌦𑌾 𑌤𑍇 𑌮𑍋𑌹𑌕𑌲𑌿𑌲𑌂) '𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌪𑌦𑍀𑌰𑍍𑌷𑍍𑌯𑌾𑌦𑍇𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌃 𑌸𑍍𑌵𑌾𑌵𑌮𑌾𑌨𑌨𑌂' என்று எழுதப்பட்டிருக்கிறது. (முதல் ஷட்கம் ஸம்புடம் 262-ம் பக்கம்). அதன் புட்நோட்டில் "தசரூபகம் 4-பரிச்சேதத்தில் - '𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌜𑍍𑌞𑌾𑌨' உண்மை தெரியாமையினாலும், 'ஆபதீர்ஷ்யாதேஃ' துக்கத்தில் பொருமையாலும், 'ஸ்வாவ மாநநம்' தன்னை யவமானம் செய்து கொள்ளல் 'நிர் வேதஃ' நிர்வேதமென்று சொல்லப்படுகிறது" என்று காணப்படுகிறது. தசரூபகத்திலோ '𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌪𑌦𑍀𑌰𑍍𑌷𑍍𑌯𑌾𑌦𑍇𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌃 𑌸𑍍𑌵𑌾𑌵𑌮𑌾𑌨𑌨𑌂' என்று இருப்பதும் தவிற, '𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑍋 𑌯𑌥𑌾 — 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾𑌃 𑌶𑍍𑌰𑌿𑌯𑌃 …… 𑌤𑌤𑌃 𑌕𑌿𑌂, 𑌆𑌪𑌦𑍋 𑌯𑌥𑌾 —— 𑌰𑌾𑌜𑍍𑌞𑍋 𑌵𑌿𑌪𑌦𑍍𑌬𑌨𑍍𑌧𑍁 …… 𑌚𑌿𑌰𑌜𑍀𑌵𑌿𑌤𑌾𑌯𑌾𑌃, 𑌈𑌰𑍍𑌷𑍍𑌯𑌾𑌤𑍋 𑌯𑌥𑌾 —— [illegible] 𑌶𑌕𑍍𑌰𑌜𑌿𑌤𑌂 …… [illegible]" என்று காணப்படுகிறது - '[illegible] த்திலும் 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌪𑌰𑍍𑌵ாவில் '𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕 𑌸𑌂𑌭𑌾𑌷𑌣𑌾𑌦𑌿களாலே முகிழ்த்த 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌂 … … [illegible] மடியிட நடுங்கும்படியாம். 𑌈𑌰𑍍𑌷𑍍𑌯𑌾𑌦𑌿களாலே '𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌃' பிறக்குமாகில் அது மேலும் 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤 வ்ருத்தாந்தங்களிலே கைவளரப்பண்ணும், ' என்றும், 𑌵𑌿𑌰𑌕𑍍𑌤𑌿𑌪𑌰𑍍𑌵ாவில் ஆரம்பத்தில் 'இப்படி 𑌵𑌿𑌵𑍇𑌕[illegible] 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦[illegible]யாலே என்றும் ஸ்ரீ𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤 𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕ன் அருளிச்செய்ததைக் காண்கிறோம்.

இதினுண்மையை சேட்லூர் ஸ்வாமியோ, அல்லது வேறு மஹான்களோ, வேதாந்ததீபிகை மூலமாய் வெளிப்படுத்தி அடியேனை [illegible] ஸம்ஶயனுய் [illegible]க்கும்படி பிரார்த்திக்கிறேன்.

புரசைப் பாக்கம்,
10-1-17.

𑌦𑍇𑌶𑌿𑌕𑌦𑌾𑌸ன்.

OFFICE OF THE REGISTRAR OF ...
23 MAR 1917
MADRAS

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 7.] நள௵ மாசி௴ [ஸஞ்சிகை 5.

𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌕𑌮𑌨𑌂 𑌤𑌮𑌾𑌲𑌵𑌰𑍍𑌣𑌂 𑌰𑌵𑌿𑌕𑌰𑌗𑍌𑌰𑌵𑌰𑌾𑌮𑍍𑌬𑌰𑌂 𑌦𑌧𑌾𑌨𑍇 - 𑌵𑌪𑍁𑌰𑌲𑌕𑌕𑍁𑌲𑌾𑌵𑍃𑌤𑌾𑌨𑌨𑌾𑌬𑍍𑌜 விஜயஸகே 𑌰𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇𑌽𑌨𑌵𑌦𑍍𑌯𑌾 ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

பத்ராதிபரின் குறிப்புகள்.

லோகாந்தரம். ப்ராக்ருத ஸ்தூல சரீர வியோகத்தை அடைந்தவர்கள், [அதாவது, இறந்துபோனவர்கள்] த்வாரம் (Medium) மூலமாக மநுஷ்யருடன் ஸம்பாஷிக்கின்றனர் என்பது, ஐரோப்பா தேசங்களில் மாத்ரம் ஆசாரத்துக்கு வந்திருக்கின்றது; நமது தேசத்தில் காணோம். ஐரோப்பாவிலும் 50, 100 வருஷங்கட்குமுன் அத்தகைய அநுபவம் இலது. ஆனால் பிசாசுகள் மநுஷ்யரை ஆவேசித்து ஹிம்ஸிப்பதெனும் அநுபவம் எக்காலமும் எல்லாத் தேசங்களிலும் உண்டு. பிசாசுகளால் ஆவேசிக்கப்பட்டவர்களும் த்வாரம் எனும் வகுப்பில் சேர்ந்தவர்களே. ஆனால் அவர்கள் தம் இச்சையால் அவ்வண்ணம் ஆகின்றார் இல்லை. அப்படியாகிலும் த்வாரம் கிடைக்குமிடங்களில், மநுஷ்யருடன் ஸம்பாஷிக்க இச்சைகொ

ண்ட ப்ரேதர்கள், அத்வாரத்தின் மூலமாகத் தம்முடைய இருப்பை அவர்க்குக் கொஞ்சமேனும் தெரிவிக்க முயலமாட்டாரோ? முயன்றதாகத் தெரியவில்லை.

* * * * * *

இறந்தவர் த்வாரமூலமாக ஐரோப்பா தேசங்களில் மநுஷ்யருடன் பேசும் விவரங்களைப்பற்றி, ஸர் ஆலிவர் லாட்ஜ் இவ்வகை விவரிக்கின்றார்:—தாங்கள் இருக்கும் ஸ்திதி, தங்களுடைய ஸம்ஸர்க்கம், சுற்று ப்ரதேசங்கள், இவ்வுலக வ்யாபாரங்களில் தங்களுடைய ஆஸக்தி, உலகத்தார்க்குத் தமது வ்ருத்தாந்தங்களைத் தெரிவிப்பதில் உண்டான கஷ்டம், இவற்றைப்பற்றி இறந்தவர் பேசுகின்றார்களாம். அவர்கள் வார்த்தைகளுடைய உண்மையைப் பரிசோதிக்க நமக்கு ஸாத்யமில்லையாம். ஆனாலும் அவ்வார்த்தைகளால் அவர்களுடைய தத்கால ஸ்திதியானது ஏறக்குறைய நமது ஸ்திதியை ஒத்ததாகவே இருக்கின்றதாய்த் தெரிய வருகின்றதாம். அவர்கள், புஷ்பங்கள், ம்ருகங்கள், புஸ்தகங்கள், இவற்றைப்பற்றியும், தமக்குள்ள பல ஆசைகளைப்பற்றியும், வஸ்துக்களின் அழகைப்பற்றியும் பேசுகின்றனராம். நாம் அறிந்ததைக் காட்டிலும் அவர்கள் அறிந்த விஷயம் மிகவும் விஸ்தரித்ததல்லவாம். அவர்கள் தன்மையும் குணங்களும் ருசியும் ஶக்திகளும், இவ்வுலகில் இருந்தவண்ணமே அநுவர்த்திக்கின்றனவென்று அவர்கள் சொல்கின்றனராம். ஆகிலும், ஸ்தூல ஶரீர ஸம்பந்த ஸ்திதியில் காட்டிலும், தத்கால ஸ்திதியில் அவர்கள் ஸுகாநுபவத்துக்கும், ஜ்ஞாந வ்ருத்திக்கும் அதிக அநுகூலத்தையும், ப்ரதிகூலங்களின் குறைவையும், பூதங்களால் உண்டாகப்பட்ட துன்பங்களின் நிவ்ருத்தியையும் அடைந்திருக்கின்றனராம்.

இன்னும் அவர்கள் இருக்கும் ப்ரதேசங்களில், ப்ராக்ருத வஸ்துக்கள் முன்போல ஸ்தூலமாக இருந்தபோதிலும், பார்வைக்கு ம்ருகத்ருஷ்ணிகை போல் காணப்பட்டு மறைந்துபோகின்றனவென்றும், ஆதலால் ஸாதாரணமாக லோக வ்ருத்தாந்தங்கள் அவர்களுக்குத் தெரிவதில்லையென்றும் சொல்கின்றனராம்.

லோகாந்தர ப்ராப்திக்கு அபிமுகரானவர்க்கு உதவிசெய்ய ஆஜ்ஞப்தராயும், தம் இச்சையால் பூர்வ பந்துக்களை நெருங்க இச்சித்தவராயும், அவர்கள் நரலோகம் வருங்காலத்தில் அவர்களுக்கு ப்ராக்ருத வஸ்துக்கள் முன்போலத் தெரிகின்றனவெனவும் சொல்கின்றனராம். அவர்கள் மநுஷ்யரிடம் ஸ்நேஹம் பக்ஷம் முதலான குணங்களைக் காட்டுகின்றனராம். இவ்வுலகுக்கு நெருங்கிய ப்ரதேசங்களில் தான் அவர் வஸிக்கின்றனராம்.

அவரது பழைய சரீரங்கள் ஸ்தூல ப்ரக்ருதி பரிணாமமாக உண்டான வண்ணமே, [அதாவது, பூதங்களின் அணுக்கள் சேர்ந்து உண்டான வண்ணமே] தத்காலம் அவர்கள் இருக்கும் நிலையில், ஆகாசம்போன்ற ஸூக்ஷ்ம த்ரவ்யங்களைக்கொண்டு அவர்களுக்கு நூதந சரீரங்கள், பழைய சரீரங்களுடைய ஆகாரங்களை அநுஸரித்து உண்டாயிருக்கின்றனவாம். இப்படிப்பட்ட சரீரப்ராப்தி, ம்ருதரான மநுஷ்யர்களைப்போல் ம்ருதமான மற்ற ஜந்துக்களுக்கும் உண்டாயிருக்கக்கூடுமாம். ஆதலால் லோகாந்தர ஸம்ஸ்தாநம், இவ்வுலகின் ஸம்ஸ்தாநத்தை ஒத்தே நிற்கலாமென்று ஸர் ஆலிவர் லாட்ஜ் முடிக்கின்றார்.

* * * * * * *

இந்த யோசனைகள், தாமறிந்த விஷயங்களைக்கொண்டு ஸர் ஆலிவர் லாட்ஜ் ஊஹம்செய்யும் ப்ரகாரங்கள். மரணமடைந்தவர்கள் அவ்வவர்களுடைய கர்மங்களின்படிப் படிப்படியாய் உயர்கின்ற பல வகுப்புகளை அடைகின்றார்களென்று ஸர் ஆர்தர் கோனன் டாயில் அபிப்ராயப்பட்டார். அவ்வகுப்புகளுக் கேற்றபடி லோகங்களும் இருக்கவேண்டும். அந்த லோகங்களின் ப்ரகாரத்தை பித்ரு கந்தர்வ தெய்வ ப்ரஜாபதி சதுர்முகாதி லோகங்களென்று நமது ப்ரமாணங்கள் விவரிப்பதை முன்பே சொல்லியிருக்கின்றோம். அப்படிப்பட்ட லோகங்களை யடைந்தவர்கள் ப்ராயேண மநுஷ்ய லோகத்துக்குத் திரும்பிவந்து மநுஷ்யர்களுடன் ஸம்பாஷிப்பதில்லை. தேவகணங்களெனப்பட்ட வித்யாதர யக்ஷ கிந்நராதி கணங்களும், அவர்களிருப்பிடம் சென்ற மநுஷ்

யர்க்குக் கதாசித் ப்ரகாசமாகின்றனர் என்பது இதிஹாஸ புராண ப்ரஸித்தி. மரண மடைந்தவர்கள் அவ்வவர்க்குரிய லோகங்களை அடையாமல் நமது ஸமீப ப்ரதேசங்களில் நின்றுகொண்டு, நம்முடைய ஸுகதுக்கங்களில் அந்வயிப்பதென்பதை நமது ப்ரமாண க்ரந்தங்கள் காட்டவில்லை. சரீரத்யாகாநந்தரம் பித்ருலோக ப்ராப்திக்கு அநுகூலமான உத்தரக்ரியைகளின் அபாவத்தாலும், அக்ரியைகளுக்கு அநர்ஹதையை உண்டாக்குகின்ற துர்மரணாதிகளாலும், மரணமடைந்தவர், நமது ஸமீப ப்ரதேசங்களில் ப்ரேத சரீரங்களெனப்பட்ட ஒருவித ஸூக்ஷ்ம சரீர விசிஷ்டராக ஸஞ்சரிக்கின்றாரென்று நம்முடைய தேசஸ்தர்கள் நம்புகின்றார்கள்.

* * * * * *

ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் யாஜ்ஞவல்க்யர் ஜநகராஜனுக்கு ஆத்ம ஸ்வரூபோபதேசம் செய்கின்ற ப்ரகரணத்தில், ஜநகப்ரச்நம் 'கிம்ஜ்யோதிரயம் புருஷ:' என்று உபக்ரமிக்கின்றது. அதாவது: மநுஷ்யன் உட்காருவதற்கும் நடப்பதற்கும் கர்மம் செய்வதற்கும் ஸாதகமாயிருக்கின்ற ஜ்யோதிஸ் எது என்று கேள்வி. பகலில் ஸூர்யனுடைய ஜ்யோதிஸ் என்றும், இரவில் சந்த்ரஜ்யோதிஸ் என்றும், ஸூர்ய சந்த்ரர்கள் அஸ்தமித்தால் அக்நியினுடைய ஜ்யோதிஸ் என்றும், அக்நியுமில்லாத காலத்தில் புருஷன் யாதேனுமோர் சப்தத்தைக் கேட்டு தத்ப்ரதேசத்தை நெருங்குகின்றானென்றும், ப்ரச்நங்களின் க்ரமப்படி ப்ரதிவசநங்கள் பிறந்தன. மேற்சொன்ன ஸர்வ ஸாதநங்களுடைய அபாவத்தில், பாஹ்யேந்த்ரியங்கள் உபரதியடைந்தகாலத்தில் "கிம்ஜ்யோதிரேவாயம் புருஷ:' என்று மறுபடி ப்ரச்நம் உதிக்க, 'ஆத்மைவாஸ்ய ஜ்யோதிர்பவதி' ஆத்மாவே, தனது தர்மபூத ஜ்ஞாநத்தைக்கொண்டு ஸ்திதி கமந ப்ரவ்ருத்திகளுக்கு ஸாதகமான ப்ரகாசத்தை யுடைத்தாயிருக்கின்றான் என்று மஹர்ஷி சொன்னார்.

அநுக்ராஹகங்களா யிருந்த ஸர்வ பாஹ்யேந்த்ரியங்களும் ஸ்வப்ந ஸுஷுப்தி காலங்களில் சாந்தியடைந்து, ஸர்வ பாஹ்ய ஜ்யோதிஸ்ஸுகளின் அஸ்தமநத்தால் ப்ரவ்ருத்தி நிரோதநத்தையடைந்த புருஷன், ஸ்வப்ந காலங்களில் விவித அநுபவங்களையடைகின்றான்; ஸுஷுப்தியில் யாதொரு அநுபவமும் இல்லாமற் போனபோதிலும், எழுந்தவுடன் 'ஸுகமாகத் தூங்கினேன், ஒன்றையும் நான் அறிந்தேனில்லை' என்று, தத்ஸம காலாநுபவத்தை ஸாக்ஷாத்கரிக்கின்றான். ஆதலால் ஸ்வப்ந ஸுஷுப்தி காலங்களில், பாஹ்ய ஜ்யோதிஸ்ஸுகளுடைய அபாவத்தால், தத்காலகார்யங்கட்கு ஸாதகமாக யாதொரு அந்ய ஜ்யோதிஸ்ஸையும் அபேக்ஷிக்காமல், ஆத்ம ஜ்யோதிஸ்ஸே அநுக்ராஹகமாய் நிற்கின்றது. இப்படி, சரீர விலக்ஷணமான ஆத்மா ஸ்வயமே ப்ரகாசிக்க, அவனை ஒப்புக்கொண்டு, இந்த லோகத்தின் ஸர்வ வ்யாபாரத்தையும் பரலோக வ்யாபாரங்களையும் பற்றி வேதாந்திகள் விசாரிக்கின்றனர். அந்த ஆத்மாவின் அஸ்தித்வத்தை பாஹ்ய ஸாக்ஷ்யங்களைக் கொண்டு ஐரோப்ய பண்டிதர்கள் அநுமிக்க வேண்டியதாயிற்று.

* * * * * * *

உபநிஷத் ப்ரகரணத்தில் 'கதம ஆத்மா' என்று ஜநகன் ஆத்ம ஸ்வரூப விஷயமான ப்ரச்நம் செய்கின்றார். மஹர்ஷியின் ப்ரத்யுத்தரம், "யோயம் விஜ்ஞாநமய:, ப்ராணேஷு ஹ்ருத்யந்தர்ஜ்யோதி: புருஷ:, ஸஸமாந: ஸந் உபௌ லோகாவநுஸஞ்சரதி, த்யாயதீவ லேலாயதீவ, ஸஹி ஸ்வப்நோ பூத்வேமம் லோகமதிக்ராமதி ம்ருத்யோ ரூபாணி" என்று பிறந்தது. அதாவது: இந்த்ரிய முக்ய ப்ராணாதிகளுக்கு நடுவில், ஹ்ருதய கமலத்தில், விஜ்ஞாநமயனாய் [அதாவது, ஜ்ஞாந ஸ்வரூபியாய்] ஜ்ஞாநத்தையே ஸ்வதர்மமாக வுடையவனாய், அந்தத் தர்மரூப ஜ்ஞாந மூலமாக ப்ரகாசிக்கின்றவனாய், சரீரத்தை ஆச்ரயித்திருக்கின்ற ஜீவன்தான் ஆத்மா என்று கருத்து. அவன் பரதந்த்ரன்; அவனுடைய கர்த்ருத்வமும் பராயத்த கர்த்ருத்வம். ஆகிலும் ஸ்வதந்த்ரனென்

றும், ஸ்வாதீந கர்த்தாவென்றும், அபிமாநத்துடன் கூடினவனாய், ஜாக்ரத் லோகத்திலும், ஸ்வப்ந லோகத்திலும் ஸஞ்சரிக்கின்றான்; தன்னை ஸ்வதந்த்ரனாகச் சிந்திக்கின்றான்; அவ்வண்ணமே வ்யாபாரங்களில் அந்வயிக்கின்றான். அந்த ஜீவன் ஸ்வப்நாவஸ்தையை அடைந்து காணப்படும் ப்ரபஞ்சத்தையும், அதன்கண் உள்ள ஸம்ஸார துக்கங்களையும் அதிக்ரமிக்கின்றான், என்று யாஜ்ஞவல்க்யர் சொல்லி முடிக்கின்றார். இவ்வண்ணம் நம்முடைய பாஷ்யகாரர் திருவுள்ளம். ஸ்ரீ ஶங்கராசார்யாபிப்ராயத்தில், விஜ்ஞாநமென்றால் புத்தி: ஆத்மா அதனுடன் சேர்ந்தவன்; முக்ய ப்ராணனுடைய ஸமீபத்தில், ஹ்ருதி- புத்திக்குள்ளே, ஸ்வயமே ப்ரகாசிக்கின்றவன் ஆத்மா;, மற்ற கரணங்கள் புத்திக்கு த்வாரமாத்ரங்களாயிருக்கின்றன; புத்தியானது ஸ்வச்சத்ரவ்யம்; ஆத்மாவின் ஸமீபத்தில் நிற்கின்றது; ஆதலால் ஆத்மாவினுடைய சைதந்ய ரூப்மான ஜ்யோதிஸ்ஸானது அதில் ப்ரகாசிக்கின்றது; இவ்வண்ணம் முதலில் புத்தியில், தானே ஆத்மாவெனும் மித்யாபிமாநம் உண்டாகி, முடிவில் சரீராதிகளிலும் உண்டாகின்றது. ஸர்வ கார்ய காரண ஸங்காதங்களும் ஆத்மாவின் சைதந்ய ஸ்வரூப ஜ்யோதிஸ்ஸால் ப்ரகாசிக்கின்றன. ஆதித்யாதி ஜ்யோதிஸ்ஸுகள் இருக்கையிலும், புத்தியும் இந்த்ரியங்களும் ஆத்ம ஜ்யோதிஸ்ஸால் அநுக்ரஹிக்கப்படாவிட்டால், கார்ய கரங்களாகமாட்டா; வ்யவஹாரத்தின் பொருட்டும் உதவமாட்டா. ஆதித்யாதி ஜ்யோதிஸ்ஸுகள் ஸ்வப்ந ஸுஷுப்தி காலங்களில் கார்யகரங்களன்று. அப்போது ஆத்மஜ்யோதிஸ் ஒன்றே அநுக்ராஹகமாய் இருக்கின்றது. அப்படிப்பட்ட ஆத்மா, தனது சைதந்யரூப ப்ரகாசத்தால் புத்தியை ப்ரகாசிப்பித்துக்கொண்டே, புத்தியுடன் தன்னை ஸமாநமாகவெண்ணிக்கொண்டு, த்யாந வ்யாபாரங்களுடன் கூடினவனாக எண்ணிக்கொண்டு இரண்டு லோகங்களிலும் ஸஞ்சரிக்கின்றான். புத்திக்கு ஸ்வாப வ்ருத்தியுண்டானபோது ஆத்மாவும் ஸ்வப்நாவஸ்தையைப் பொருந்துகின்றான்; புத்தி ஜாக்ரதவஸ்தையில் நிற்கையில் தானும் நிற்கின்றான். அவ்வவஸ்தையில் அவித்யா ரூபமானதும் வ்யவஹார லக்ஷணத்துடன் கூடியதுமான லோகத்தை அநுபவிக்கின்றனன். அதையும் அவன் ஸ்வப்நகாலத்தில் அதிக்ரமித்துத் தனது ஜ்யோதிஸ்ஸால் ஸ்வப்நரூபமான புத்தியின் வ்ருத்தியை ப்ரகாசிப்பித்துக்கொண்டு நிற்கின்றான்.

இது அத்வைத வ்யாக்யாநம். புத்திக்கு மேற்பட்டதோர் ஆத்மாவைப் பௌத்தர் ஒப்புக்கொள்கின்றாரில்லை. வேதாந்திகள், ‘𑌯𑌥𑌾 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌯𑌤𑍍𑌯𑍇𑌕𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌲𑍋𑌕𑌮𑌿𑌮𑌂 𑌰𑌵𑌿𑌃। 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍀 𑌤𑌥𑌾 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌯𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤’ எனும் ப்ராமாணப்படி, ஸர்வ கரணங்களுடன் கூடிய சரீரத்தினுடைய ஸர்வ ப்ரவ்ருத்திகளுக்கும், சரீரநிஷ்டனான ஜீவன் தனது ஜ்ஞாநத்வாரா அநுக்ராஹகனாயிருக்கின்றான் என்பார்கள். அவனிடம் இல்லாததும் புத்தியினிடம் உள்ளதுமான த்யாநக்ரியைகளை அவனதென்று ப்ராந்தியால் நினைக்கின்றானென்கின்றார் ஸ்ரீஶங்கராசார்யர். த்யாநக்ரியைகள் அவனுடையதேயாயினும், அவற்றுள் ஸ்வாதந்த்ரிய புத்திமட்டும் ப்ரமையால் அவனுக்கு உண்டாகின்றதென்று நம்முடைய பாஷ்யகாரர் ஸித்தாந்தம்.

உபநிஷத்தில் ‘ஐவ’ எனும் பதம் இப்படி பேதிக்கின்ற அர்த்தங்கட்குக் காரணம். ஆனாலும் ப்ரகரணஸ்த சப்தங்களின் பர்யாலோசனையால் எந்த அர்த்தம் ஸ்வரஸமானதென்பதை ஒவ்வொருவரும் யோசித்துக்கொள்ளலாம்.

ஆத்மாவானவன் ஜாக்ரத் ஸ்வப்நரூப உபய லோக ஸஞ்சாரத்திலும் ஸமாநமாகவே நிற்கின்றான்; ஜாக்ரத் லோகத்தை அதிக்ரமித்து ஸ்வப்நாவஸ்தையை அடைந்த காலத்தில், த்யாந க்ரியா வ்யாபாரவான்போல் காணப்படுகின்றான் என்று பொருள்படுத்தவும் கூடும்.

* * * * * *

ஸ்ரீஶங்கராசார்யர் த்யாநசலந வ்யாபாரங்கள் புத்தியுடையதென்பதால் மூளைக்கு வ்யாபாரம் கல்பிக்க அமையாது. மூளை

புத்தியைப்போல் ஸ்வச்ச த்ரவ்யமன்று. புத்தி மஹத் எனும் தத்வத்தின் அம்சம். மஹத்தினின்று அஹங்காரமும், அஹங்காரத்தினின்று ஆகாச தந்மாத்ரையும், அதனின்று ஆகாசமும் க்ரமமாகப் பரிணமிக்கின்றன. லோக வ்யவஹாரத்துக்கு அநுகுணமான ஸ்தூலத்வம் ஆகாசம் வரையில் ஏற்படவில்லை. மூளை ஸ்தூல த்ரவ்யம்.

* * * * * *

ஆதலால் மரண காலத்தில் ஜீவன் முன்னடைந்த ஸ்தூல சரீரத்தை யிழந்துபோய், பூதஸூக்ஷ்மங்களா லமைந்ததோர் ஸூக்ஷ்ம சரீரத்துடன் வெளிப்படுகின்றான். ‘𑌅𑌥𑍈𑌨𑌮𑍇𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾 𑌅𑌭𑌿𑌸𑌮𑌾𑌯𑌨𑍍𑌤𑌿, 𑌸 𑌏𑌤𑌾𑌸𑍍𑌤𑍇𑌜𑍋𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌃 𑌸𑌮𑌭𑍍𑌯𑌾𑌦𑌦𑌾𑌨𑍋 𑌹𑍃𑌦𑌯𑌮𑍇𑌵𑌾𑌨𑍍𑌵𑌵𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑌿’ என்கிறபடியே, இந்த்ரியாதிகளுடைய ப்ரகாஶாம்ஶங்களை, அவற்றின் வாஸனைகளுடன் க்ரஹித்துக்கொண்டு ஹ்ருதய கமலத்தில் ப்ரவேசிக்கின்றான். ‘𑌤𑌮𑍁𑌤𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑍋𑌽𑌨𑍂𑌤𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑌿, 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑌨𑍂𑌤𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌨𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾 𑌅𑌨𑍂𑌤𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌨𑍍𑌤𑌿’ என்கிறபடியே, முக்ய ப்ராணனும், அவர்க்கு அதீநராயிருக்கப்பட்ட இதர ப்ராணங்களும் இறந்தவனை அநுஸரித்துச் செல்கின்றன. ‘𑌤𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑌰𑍍𑌮𑌣𑍀 𑌸𑌮𑌨𑍍𑌵𑌾𑌰𑌭𑍇𑌤𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌚’ என்கிறபடியே, மரணாநந்தரம் அவன் ஸம்பாதித்த வித்யை யென்ன, அவன் அநுஷ்டித்த கர்மமென்ன, (அதாவது பலத்தை உண்டு பண்ணத்தக்க தான அவன் செய்த கர்மங்களின் அத்ருஷ்ட மென்ன,) பூர்வாநுபவங்களுக்கேற்ற வாஸனைக ளென்ன, இவை அவனை அநுவர்த்திக்கின்றன. ‘𑌸𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌸𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍇𑌵𑌾𑌨𑍍𑌵𑌵𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑌿’ என்கிறபடியே, உத்க்ரமண காலத்தில், அவனுடைய பஶ்சாத் ஜந்மஸ்திதி ஸம்பந்தமான ஜ்ஞாநம் உண்டாகி அவனுடன் நிலைக்கின்றது. இப்படி யெல்லாம், மரணாநந்தரம் ஜீவனுடைய நிலையைப் பற்றிய சிந்தநத்தை உபநிஷத் பண்ணுகின்றது.

முன்பே, ‘𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌃’ எனும் சப்தத்தின் அர்த்தத்தால், ஸ்ரீஶங்கராசார்யர், ‘புத்தியெனும் தத்வத்தை உபாதியாக அடைந்த ஆத்மா ஜீவனென்று வ்யவஹரிக்கப்படுகின்றான், என்று நிஷ்கர்ஷித்தார் என்பதைக் காட்டினோம். ‘𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌯𑌜𑍍𑌞𑌂 𑌤𑌨𑍁𑌤𑍇 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌤𑌨𑍁𑌤𑍇𑌽𑌪𑌿 𑌚’ எனும் தைத்திரீய உபநிஷத் வாக்யங்கள் விஷயமாக, நமது பாஷ்யகாரர் ‘விஜ்ஞாநம்’ என்றாலும் ‘𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌃’ என்றாலும் ஜீவன் என்று அர்த்தம் செய்கின்றனர். ஸ்ரீ ஶங்கராசார்யரோ, ‘விஜ்ஞாநவான் கர்மம் செய்கின்றான்; எல்லாம் விஜ்ஞாநத்தினுடைய கர்த்ருகம்; ஆதலால் விஜ்ஞாநமயன் ஆத்மா’ என்று சொல்வது யுக்தம் என்கின்றார். நம்முடைய ஆசார்யர்கள் ஜீவனுடைய தர்மபூத ஜ்ஞாநத்தை விஜ்ஞாநமென்கின்றார்கள். அத்வைதிகள் ப்ரக்ருதியின் விகாரமான புத்தியை விஜ்ஞாந மென்று சொல்வார்கள்.

ப்ருஹதாரண்யகோபநிஷத் ப்ரகரணத்தில், ‘𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌃’ என்றால் புத்தியை உபாதியாக் உடையவன் என்றே அத்வைதிகள் நிச்சயம். அந்த உபாதியெனும் சரீரவிஶிஷ்டனாகவே ஸ்தூல சரீரத்தை ஆத்மா விடுகின்றான். இன்னும் ‘𑌤𑌦𑌾𑌸𑍌 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇 𑌉𑌪𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌾𑌨𑍍 𑌭𑌵𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑌵𑌶𑌾𑌚𑍍𑌚’ என்றும், ‘𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌾𑌨𑍍𑌤𑌃’ என்றும், ‘𑌸𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍇𑌵𑌾𑌨𑍍𑌵𑌵𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑌿’ என்றும், ஸ்ரீ ஶங்கர பாஷ்ய வாக்ய ரீத்யா, உபாதிகளாகின்ற புத்தி, இந்த்ரியங்களின் ப்ரகாஶாம்ஶங்கள், இவற்றுடன் கலந்த ப்ராணன், இவற்றுள் தங்கிய ஜ்ஞாநம், பூர்வ வாஸனைகள், இவை யாவும், அவனால் ஸம்பாதிதங்களான கர்மங்களின் காரணத்தால் அவனை (அவித்யையால் தன்னையும் புத்தியையும் ஒன்றாக எண்ணிக்கொண்ட ஆத்மாவை) தேஹாந்தர ப்ராப்தியின் பொருட்டுக் கொண்டுபோகின்றன. அப்போது அந்த ஆத்மா ஸ்வப்ந காலத்தில் போல் விசேஷ விஜ்ஞாநவான் ஆகின்றான். அதாவது, பாஹ்யேந்த்ரியங்களுடனும் பாஹ்ய விஷயங்களுடனும் அவன் ஸம்பந்தமற்று நிற்கையில், அவனுடைய ஆத்மஜ்யோதிஸ்ஸினுடைய ப்ரகாஶத்

தைக் கொண்ட விஜ்ஞாநமெனும் புத்தியானது த்யாநமும் கர்மமும் செய்ய ஆரம்பிக்கின்றது. இப்படி ஸ்ரீ ஶங்கர பாஷ்யார்த்தம்.

இவ்வண்ணம் ஸ்வப்நாவஸ்தைக்கும் ப்ராணோத்க்ரமண காலத்தின் பிறகு உண்டாகும் ஸ்திதிக்கும், ஸாத்ருஶ்யத்தை உபநிஷத் சொல்லுகின்றது. ஸர் ஆலிவர் லாட்ஜ் என்பவருடைய ஊஹத்தைச் சிந்திப்பவர்க்கு உபநிஷத்தின் தத்வ விவேகம் ப்ரகாசிக்கும்.

மரணாநந்தரம் ஜீவன் அஸ்வதந்த்ரன் எனப்பட்டது. இந்த யோசனையும், ஸர் ஆலிவர் லாட்ஜ் ஊஹங்களில் அந்தர்கதம். ஜீவன் ஸ்வதந்த்ரனாகில், அவனுடைய ஸம்ஸார தசையில் அவன் விஶ்வஸித்தவரும் அவனிடம் மிகுந்த ப்ரியத்தைப் பாராட்டியவருமான மாதா பிதா தார புத்ராதிகளை ஆஶ்வஸிக்க முயலமாட்டானோ? அவர்களுடைய துக்கம் பார்ப்பவர் மநஸ்ஸுக்களை வருத்தும் வண்ணம் அவனையும் வ்ருத்தமாட்டாதோ? அவ்வருத்தத்தைக் காட்டவும், மரணாநந்தரம் அவனுடைய அநுவ்ருத்தியைத் தெரிவிக்கவும், த்வாரபூதராகத் தக்கவர் ஒருவர் அவனுக்கு அப்போது நேரமாட்டாரோ? துர்மரணம்போல் யாதேனுமோர் விசேஷ ஹேதுவின்றி, மரித்தவர் தாம் முன் இருந்த விடங்களில் நடமாடுவதும், த்வாரமாகத் தக்கதோர் சேதந சரீரத்தை ஆக்ரமித்துத் தமது எண்ணங்களை வெளிப்படுத்துவதும், கார்யங்கள் செய்வதும் துர்லபம்.

* * * * * *

மரித்தவர் ஸ்திதியைப்பற்றியும், அநுபவங்களைப் பற்றியும் ஸர் ஆலிவர் லாட்ஜ் அபிப்ராயப்படுகிறபடி, வஸ்துக்கள் ஸ்தூலமாக அவர்க்குத் தெரிவதில்லை; வஸ்து ஸாக்ஷாத்காரம் ஸ்வப்நத்தில்போல அவர்களுக்கு உண்டாகின்றது; ஸாதாரணமாக லோக வ்யாபாரங்கள் அவர்கள் புத்திக்கு எட்டுவதில்லை; கஷ்டப்பட்டும், தீவ்ரமான இச்சையாலும், லோகத்தை அவர்கள் நெருங்குகின்றார்கள்; சில சேதநர் சரீரங்களை ஆவேசித்துச் சில வார்த்தைகள் சொல்கின்றனர்; சில கார்யங்கள் செய்கின்றனர். ஆதலால் இதர சரீரங்களைப் பற்றாதவரையில், உபநிஷத் காட்டினபடியும், ஸ்ரீ ஶங்கராசார்யர் வெளியிட்டபடியும், மரணாநந்தரம் ஒரு ஜீவனுடைய அநுபவமானது அவன் ஜீவித்திருக்கையில் அவனுடைய ஸ்வப்நாநுபவ துல்யமாயிருக்கின்றது. இரண்டு காலங்களிலும், ஜீவனுக்குச் சரீரம் ஒரு ஸாதநமாக உதவவில்லை. கண், காது முதலான இந்த்ரிய ஸ்தாநங்களும் வ்யாபாரங்கட்கு ஸாதநங்களாக உதவமாட்டா. அந்தரிந்த்ரிய ஸ்தாநமெனக் கொள்ளப்பட்ட மூளையும் ஸாதநமாகமாட்டாது. மரணாநந்தரம் ஆத்மாவானவன் ஸ்வப்ந காலங்களில்போல் கர்மவஶத்தால் விஶேஷ விஜ்ஞாநவான் ஆகின்றான். இது ஶங்கர பாஷ்ய பங்க்தி; [' 𑌤𑌦𑌾 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌵𑌦𑍇𑌵 𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌾𑌨𑍍 𑌭𑌵𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑌵𑌶𑌾𑌤𑍍. ']

இரண்டு காலங்களிலும், ஜீவன் இந்த்ரியங்களுடைய தேஜோமாத்ரைகளையும், பூர்வாநுபவ வாஸனைகளையும், புத்தியையும், அந்தரிந்த்ரியங்களுடைய ஸூக்ஷ்மாம்ஶங்களையும் உட்கொண்டதான ஒரு ஸூக்ஷ்ம சரீரத்துடன் கூடினவன் எனக்கூடும். இவற்றின் வ்யாபாரங்கட்கு அநுக்ரஹம் செய்வது அவனுடைய ஆத்ம ஜ்யோதிஸ். இதை நம்மாசார்யர்கள் தர்மபூத ஜ்ஞாநமென்பார்கள். ஜ்ஞாந ஸ்வரூபியான ஆத்மாவை ஒரு மணிக்கோ ஸூர்யனுக்கோ ஸத்ருஶமாகச் சொல்லலாம். அவனுடைய குணமாகப்பட்ட ஜ்ஞாநத்தை மணியினுடைய ப்ரகாசத்துக்கோ, ஸூர்யனுடைய கிரணத்துக்கோ ஒப்பிடலாம். ஶங்கர மதப்படி, ஆத்மாவின் ப்ரகாசம் புத்திக்கு அநுக்ராஹகம்; புத்தியின் மூலமாக, மநஸ்ஸு இந்த்ரியங்கள் இவற்றையும், அதனதனுடைய வ்யாபாரங்களுக்கு உதவும்படி அநுக்ரஹிக்கின்றது; புத்தியின் வ்யாபாரத்தைத் தனதென்று ஆத்மா ப்ரமிக்கின்றான். நமது மதப்படி ஸர்வேந்த்ரியங்களுடைய வ்யாபாரங்களும் ஆத்மாவினுடைய இச்சையாலே நடக்கின்றன. ஆனால் ஆத்மா தான் ஸ்வதந்த்ர கர்த்தாவென்று ப்ரமையால் எண்ணுகின்றான்.

ஆதலால் மரித்த ஜீவனுடைய அநுபவத்தைப்பற்றித் தெளிவாக அறிவதற்கு உபகாரமாயிருக்குமென்று, உபநிஷத்துக்கள் ஜீவனுடைய ஸ்வப்ந காலாநுபவத்தைப்பற்றி யோசிக்கும் ப்ரகாரங்களைப்பற்றிப் பின்னால் விசாரிப்போம்.

பத்ராதிபர்.

ஸ்ரீ:

ஜநகநந்தினீ.

ஸ்ரீரங்கம் என்னும் சப்தத்தின் மாதுர்யத்தைச் சிந்திக்கவொண்ணுமோ? 'மூன்று தண்டர் ஒன்றினர், அற்ற பற்றர் சுற்றி வாழும் அந்தணீர் அரங்கமே' என்று சொன்னார் பக்திஸாரன். வேதாந்த விஜ்ஞாநத்தால் நன்றாக நிஶ்சயித்தறிந்த தத்வத்தைத் தர்ஶிக்க ஸமர்த்தரானவர்களும், ஏகதண்டிகளாயும் த்ரிதண்டிகளாயும் ஸந்யஸித்துக் கொண்ட யதிஶ்ரேஷ்டர்களும், மஹா பரிசுத்த சித்தமுடையோர்களும், பரமாத்மாவினிடம் தங்களுக்குண்டான பரபக்தியால் மற்றெல்லா விஷயங்களிலும் பற்றறுத்த க்ரஹஸ்தர்களும் நாற்புறமும் நிறைந்து வாஸம் செய்தார்கள் ஸ்ரீரங்கத்தில். அதனால் அந்தணீர் அரங்கமென அந்நகரை வர்ணித்தார்கள். ப்ரஹ்மத்துடன்கூட ஸர்வ காமங்களையும் முக்தர் அநுபவிக்கின்றார் என்று உபநிஷத் சொல்ல, 'காமங்களென்றால் ப்ராக்ருதாநுபவங்கள் அன்று; அவை பகவானுடைய கல்யாண குணங்கள்' என்று நம் ஆசார்யர்கள் மொழிந்தபடியே, அம்-என்றால் கல்யாண தமங்களென்றும், தண்-என்றால் ஶாந்தி ரஸத்துடன் கூடியவை யென்றும், நீர்-என்றால் குணவிஶேஷங்கள் என்றும், ஶாந்த சித்தர்களான பாகவதர்களுடைய ஸம்ருத்தியால் அந்நகர்க்குள் இருப்பவர்கள் யாவரும் ஆத்மகுண பூர்த்தியைப் பொருந்தி நின்றனர் என்றும் ஆழ்வார் திருவுள்ளம் எனக்கூடும். அப்படிப்பட்ட மஹாக்ஷேத்ரத்தில் திவ்யமங்கள விக்ரஹ ரூபமாய் எழுந்தருளியிருக்கும் ரங்கநாதனுடைய நாமோச்சாரணத்தால் அளவற்ற ஆநந்தங் கொண்ட தொண்டரடிப் பொடியாழ்வாரும், ஸுரநாயகனுடைய அநுபவத்தையும் துச்சமாக வெண்ணினாரன்றோ? திவ்ய தேசங்கட்கெல்லாம் ப்ரதர்சநமாக 'அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்ஸ்வ' [அதாவது, இந்த ஸ்ரீரங்கத்திலேயே ஸுகமாய் இரு] என்று சரணாகதி கத்யத்தில் சொல்லியிருக்கின்றதே. உடல் கழித்து வீடு பெற அரங்கம் தக்க நகரென்றும், அவ்வண்ணம் உடலிழந்தார்க்கு, ஸம்ஸார நிமித்தமாக மறு வுடல் வாராதென்றும், வந்தால் வைகுண்டத்தில் நித்ய கைங்கர்யம் செய்வதற்கு, நித்யஸூரிகளை யொக்கச் சங்க சக்ராதிகளால் அலங்க்ருதமான திருக்கைகளுடன் கூடிய அப்ராக்ருதமான சரீரமுண்டாகுமென்றும் ஸ்ரீஶங்கராசார்யரால் புகழப்பட்ட திவ்ய தேசம் ஸ்ரீரங்கம். அப்படிப்பட்ட திருவரங்கப் பெருநகருள், தெண்ணீர்ப் பொன்னி யெனும் காவிரியானவள் ஸஹ்ய பர்வதத்தின் தாழ்வரைகளில் வர்ஷா காலங்களில் கார்மேகங்கள் வர்ஷித்த குளிர்ந்த ஜலங்களைக் கொண்டுவந்து, க்ரீஷ்ம காலத்தில் அரங்கன் திருமேனி வர்ட்டமடைந்ததோ வென்று ஐயுற்று, அவனுக்கு ஶீதோபசாரங்கள் செய்தும், தனது திரைகளாகின்ற கரங்களால் அவன் பாதகமல ஸம்வாஹநம் செய்தும், களித்து நால் புறமும் நிறைந்து ஓடவும், மணியொளியுடன் கூடின அநந்தனெனும் வெள்ளை யணைமீது பள்ளிகொண்ட 'கருமணியைக் கோமளத்தைக் கண்டுகொண்டு என் கண்ணிணைகள் என்றுகொலோ களிக்குநாளே' என்று, குலசேகரன் ப்ரார்த்தித்த வெம்பெருமானைக் கண்ணாரக் கண்டுகக்கும் காதல் ஜநகநந்தினிக்கு உண்டாயிருந்த தென்றால் வியப்புளதோ? திவ்ய தேச யாத்ரை ஆரம்பித்த முதல் கதா கதா வென்று, அரங்கனை வணங்க ஜநகம் காதல்கொண்டாள்.

மாதாபிதாக்களுடன் ஆலயத்துக்குள் சென்று பெருமாளை ஸேவித்தாள். ஆலயத்தின் விஸ்தாரம் அவள் மநஸ்ஸுக்கும் ஓர் விஸ்தாரத்தை உண்டு பண்ணியது. அதாவது - அல்பமான ஐஹிகத்தை மறந்து, அநந்தனுடைய ஆநந்த்யத்தை உன்னினாள். ஆலய நடுவே ஓர் சிற்றறையில் பள்ளிகொண்ட வெம்பெருமானை ஸேவித்தபின், எல்லையற்ற காலத்துக்கும் எல்லையற்ற தேசத்துக்கும் ஈஶனாய் நின்றவன், எல்லையற்ற விஸ்தாரத்துடன் கூடிய ப்ரக்ருதியின் அந்தராத்மாவாயும், ஸூக்ஷ்மாத் ஸூக்ஷ்மதரனாயும்

ப்ரகாசிப்பதைச் சிந்தித்தாள். ஏன் அப்படிச் சிந்திக்க வேண்டும்? அது திவ்யதேசத்தின் மஹிமை யன்றோ? ஆழ்வார்கள் ஆசார்யர்கள் யாவரும் உகந்தருளின திவ்யதேசம் இது. இந்தப் பெருமாளைப் பகுகாலமாக ஸங்க்யைக்கு எட்டக்கூடாத ஜநங்கள் வந்து தர்சித்துப் பேராநந்தம் அடைந்தார்கள். இதற்குக் காரணம் பலவாறாக யோசிக்கப் பொருந்தும். உறையூரில் ராஜ்யம் ஆண்ட தர்மவர்மன் எனும் சோழன் இந்த ஸந்நிதியினுடைய கர்ப்பக்ருஹத்தைக் கட்டினதாகச் சொல்வார்கள். ஆனால் அது ஸந்நிதி பிறந்த காலமன்று. இக்ஷ்வாகு வம்சத்தில் ஆராதிதனான வெம்பெருமானை ஸ்ரீராமன் விபீஷணனுக்குத் தந்ததாயும், அந்தப் பெருமாளே இந்த ஸ்தலத்தில் திருக்கோயில் கொண்டருளினா ரென்றும் ஸ்தலபுராணம் சொல்லும். அயோத்யாகாண்டம் ஆறாவது ஸர்க்கத்தில், ஸ்ரீராமன், “𑌸𑌹 𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑌾 𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑌾 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌮𑍁𑌪𑌾𑌗𑌮𑌤𑍍 । 𑌪𑍍𑌰𑌗𑍃𑌹𑍍𑌯 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌪𑌾𑌤𑍍𑌰𑍀𑌂 𑌹𑌵𑌿𑌷𑍋 𑌵𑌿𑌧𑌿𑌵𑌤𑍍𑌤𑌦𑌾 । 𑌮𑌹𑌤𑍇 𑌦𑍈𑌵𑌤𑌾𑌯𑌾𑌜𑍍𑌯𑌂 𑌜𑍁𑌹𑌾𑌵 𑌜𑍍𑌵𑌲𑌿𑌤𑍇𑌨𑌲𑍇 । 𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌦𑍇𑌵𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌯𑌾𑌯𑌤𑌨𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌶𑌿𑌶𑍍𑌯𑍇 𑌨𑌰𑌵𑌰𑌾𑌤𑍍𑌮𑌜𑌃” எனும் வாக்யங்கள் உள. கோவிந்த ராஜீயத்தில், அவ்வாக்யங்கள், அயோத்தியில் பரம்பரையாக இக்ஷ்வாகு வம்சஸ்தர்களால் ஆராதிக்கப்பட்ட ஸ்ரீரங்கநாதனையும் அவனுக்கு அங்கே ஏற்பட்டிருந்த ஸந்நிதியையும் குறிப்பதாக வ்யாக்யாநம் செய்யப்பட்டிருக்கின்றன. தீர்த்தீய வ்யாக்யாநத்தில் ‘𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑌾𑌯𑌤𑌨𑍇 𑌗𑍃𑌹𑌾𑌯𑌤𑌨𑌭𑍂𑌤 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑌾𑌲𑌯𑍇” என்று எழுதப்பட்டிருப்பதால் க்ருஹார்ச்சையாக எழுந்தருளியிருந்த வெம்பெருமானுக்கு ஆலயமும் ஏற்பட்டிருந்ததாக எண்ணக்கூடும். ‘𑌮𑌹𑌤𑍇 𑌦𑍈𑌵𑌤𑌾𑌯’ எனும் சப்தங்கள் ப்ரகரணத்தில் ஸ்பஷ்டமாக வெளியிடப்பட்ட நாராயணன் தானென்று இரண்டு வ்யாக்யாதாக்களும் ஒப்புக்கொள்கின்றார்கள்.

யுத்தகாண்டம் முடிவான ஸர்க்கத்தில், ‘𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌕𑍁𑌲𑌧𑌨𑌂 𑌰𑌾𑌜𑌾 𑌲𑌙𑍍𑌕𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌾𑌤𑍍 𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌃’ எனும் வாக்யத்தில், குலதநமென்றால் - இக்ஷ்வாகு வம்சஸ்தர்களுடைய குலதநமான ஸ்ரீரங்கநாதனென்று கோவிந்தராஜர் சொல்லுகின்றார். அத்வைத வ்யாக்யாதா அதை மறுக்கின்றார். ஏனென்றால், உத்தர ஸ்ரீராமாயண முடிவில், ‘𑌕𑌿𑌞𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌤𑍍 𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌮𑌹𑌾𑌬𑌲 । 𑌆𑌰𑌾𑌧𑌯 𑌜𑌗𑌨𑍍𑌨𑌾𑌥𑌂 𑌇𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑍁𑌕𑍁𑌲𑌦𑍈𑌵𑌤𑌂 ॥ 𑌆𑌰𑌾𑌧𑌨𑍀𑌯𑌮𑌨𑌿𑌶𑌂 𑌦𑍇𑌵𑍈𑌰𑌪𑌿 𑌸𑌵𑌾𑌸𑌵𑍈𑌃’, என்று ஸ்ரீராமன் விபீஷணனுக்குச் சொன்னபடியால், அவதார ஸமாப்தி காலத்தில் தான் ஸ்ரீராமன் விபீஷணனுக்குத் தம் குல தேவதையான ரங்கநாதனைத் தந்தாரென்று தீர்த்தீய வ்யாக்யாநம். மேலே எடுத்த ச்லோகங்கள் ஸ்ரீராமன் விபீஷணனிடம் பெருமாளைக் கொடுத்ததாய்க் காட்டவில்லை. பெருமாளை ஆராதிக்கும்படியாக மட்டும் ஸ்வாமி விபீஷணனுக்குச் சொன்னார். அதனிமித்தம், “𑌯𑌾𑌵𑌚𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍍𑌚 𑌸𑍂𑌰𑍍𑌯𑌶𑍍𑌚 𑌯𑌾𑌵𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 𑌮𑍇𑌦𑌿𑌨𑍀 । 𑌤𑌾𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌰𑌾𑌜𑍍𑌯𑌸𑍍𑌥𑌃 𑌕𑌾𑌲𑍇 𑌮𑌮 𑌪𑌦𑌂 𑌵𑍍𑌰𑌜 ॥ 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌦𑌦𑍌 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌸 𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌶𑌃 𑌸𑌹𑌿𑌷𑍍𑌣𑌵𑍇 । 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌶𑌾𑌯𑌿𑌨𑌂 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯𑌂 𑌇𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑍁𑌕𑍁𑌲𑌦𑍈𑌵𑌤𑌂 ॥ 𑌰𑌙𑍍𑌗𑌂 𑌵𑌿𑌮𑌾𑌨𑌮𑌾𑌦𑌾𑌯 𑌲𑌙𑍍𑌕𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌾𑌤𑍍 𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌃” எனும் பாத்மபுராண ச்லோகங்கள் தீர்த்தீய வ்யாக்யாநத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. ‘𑌯𑌾𑌵𑌚𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍍𑌚 𑌸𑍂𑌰𑍍𑌯𑌶𑍍𑌚’ எனும் ச்லோகமும் ஏறக்குறைய அதே சப்தங்களால் உத்தர ஸ்ரீராமாயண ப்ரகரணத்தில் இருக்கின்றது. இவ்வண்ணம், அவதார ஸமாப்தி காலத்திலாவது ஸ்ரீராமனிடம் விபீஷணன் ஸ்ரீரங்கநாதனைப் பெற்றுக்கொண்டா ரென்பதும், பகவான் அயோத்தி மன்னர்களுடைய குலதேவதை யென்பதும் அநாதியாக ஏற்பட்ட ஐதிஹ்யம். இது திவ்யதேசத்தின் மஹிமை.

அயோத்தியில் க்ருஹார்ச்சையாய் ஆராதிக்கப்பட்ட பெருமாள் இப்போது ஸ்ரீரங்கத்தில் சயநிக்கும் பெருமாளென்பது ஸம்பாவித மன்று. அவர் உத்ஸவ பேரமென்பது யோசிக்கக்கூடியதே. “ரங்கம் விமாநம் ஆதாய” வென்று ச்லோக பதங்கள் இருந்தாலும் இக்ஷ்வாகு வம்சஸ்தர் ஆராதித்த வெம்பெருமானை ஆராதிக்கும்படி ரகுநாதன் பண்ணின ஆஜ்ஞையை விபீஷணன் சிர

ஸா வஹித்து ஸ்ரீரங்க விமாந ரூபமான ரஹஸ்யத்தைப் பகவானிடம் க்ரஹித்துக்கொண்டு வந்தாரெனவும் எண்ணக்கூடும். ஆந்தப் பெருமாளுடைய திருவுள்ளப்படி ஸ்ரீரங்கத்தில் திருக்கோயில் பணித்தாரெனவும் கூடும்.

இந்த ஸம்ப்ரதாயம் ஸ்ரீமத்ராமாயண வ்யாக்யாதாக்கள் காலத்திலும், ‘அம்புயத்தோனயோத்தி மன்னர்க்களித்தகோயில், துணையான வீடணற்குத் துணையாங்கோயில்’ என்று தேசிகன் ஸாதிப்பதால், அவர் காலத்திலும் யாவராலும் கொண்டாடப்பட்டிருக்க வேண்டும். அதற்கு மூலம் மேலெடுத்துக் காட்டிய இதிஹாஸ புராண வசநங்களே. ஆதலால் புராண காலத்தின் முன்பே திவ்ய தேசம் இருந்திருக்க வேண்டும். உத்தர ஸ்ரீராமாயண ஶ்லோகங்கள் ப்ராக்ருத திவ்யதேசத்தின் உத்பத்தியை ஸூசிப்பிக்கின்றன. அயோத்யா காண்ட ஶ்லோகங்கள் அதனுடைய பூர்வ ஸ்திதியையும் அதன் அநாதிமத்வத்தையும் காட்டுகின்றன.

மேல் குறித்த வண்ணம் ராவணனுடைய ராஜ்யத்தில் சேர்ந்திருந்த த்ராவிட தேசத்தில், அத்யந்தம் ரமணீயமாய் அமைந்ததோர் ப்ரதேசத்தில் உண்டான தென்னரங்கத்தில் பள்ளிகொண்ட பரமாத்மனை எல்லா ஆழ்வார்களும் ஆசார்யர்களும் அநுபவித்தாரென்பதிலும், அவ்வநுபவத்தில் ஆழ்ந்தாரென்பதிலும், ஆழ்ந்த வண்ணமே யாவதாயுஷம் நிலைத்தாரென்பதிலும் ஆஶ்சர்யமென்ன?

இக்கதைகளை யெல்லாம் உட்கொண்ட பெண்மணியானவள் பகவானைத் தர்சித்தாள். கண்களினின்றும் ஆநந்த பாஷ்பம் சொரிந்தாள். கண்ண நீர் கைகளா லிறைத்தாள். ஸேவித்து ஸேவித்துக் கைகூப்பினாள். அவன் ஸௌந்தர விக்ரஹத்தை உட்கொண்டு தளர்ந்தாள். அவனை விட்டு நீங்கப் பிரியமின்றி நின்றாள். ‘பிரிந்தால் எவ்வண்ணம் உயிர் தரிப்பேன்’ என்று சோகமுற்றாள். ‘இப்போது அநாதையாய் நின்றவெனக்கு நாதனாக வுற்ற நீ என் திறத்து என் செய்யப் போகின்றாய்?’ என்று மனத்தால் கேட்டனள். இவ்வண்ணம் பகவதநுபவம் செய்ய, ஆழ்வார்க்குத் தடையாக

நின்றதோர் பும்பாவம் ஜநகத்துக்கு இல்லாமையாலும், அவளுடைய ஸுக்ருதமானது அக்காலம் பகவதநுபவத்தின் காஷ்டையை அவள் ஸுகமாக அடைவதற்கேற்ற ஸாமக்ரிகளை முன்னமே ஸம்பாதித்துத் தந்தமையாலும், உலக வழக்கில் அவள் இழந்ததாக நினைக்கக்கூடியவை யெல்லாம், அந்தப் பேறு அவள் பெறுவதற்குப் படிக்கட்டுகளாய் அமைந்துபோயின.

சிரகாலம் யாவரும் பகவானைத் தர்சித்தனர். பின்பு திரும்பிப்போனார்கள். அப்போது கேசவாசார்யர் இவ்வண்ணம் ஜநகநந்தினியுடன் ஸம்பாஷித்தனர்:—“குழந்தாய்! ஸ்ரீரங்க விமாநத்தை ப்ரணவாகாரமென்று சொல்வார்கள். அதற்குக் காரணம் என்னென்றால்: ப்ரணவத்தில் போல் இந்த ஸந்நிதியில் பரப்ரஹ்மமான ஸ்ரீமந்நாராயணனுடைய நிருபாதிக ஶேஷித்வம் ஸ்புடமாகக் காணப்படுகின்றது. ப்ரணவம் ஒவ்வொரு சேதநனையும் பரமாத்மாவுக்கே உரிய ஶேஷபூதனெனக் காட்டுகின்றது. ப்ரணவ விவரணமான அஷ்டாக்ஷரம், சேதநாசேதநாத்மகமான ஸர்வ ப்ரபஞ்சமும் பகவானுக்கே ஶேஷமாய் நிற்கின்றதென நாராயண சப்தத்தால் காட்டிக்கொண்டு ப்ரணவ விவரணமாக நிற்கின்றது. இந்த ஸந்நிதியில் பகவானிடம் நாம் நிற்கையில் ப்ரணவார்த்தத்தை அநுஸந்திக்கத் தகும். இன்னும் பகவானுக்கு ரங்கநாதனென விஶேஷித்த திருநாமமானது, மஹா ப்ரஹ்ம வித்துக்களும் பாகவத ஶ்ரேஷ்டர்களும் கூடியிருக்கும் ரங்கத்துக்கு அவன் அத்யக்ஷனாயிருப்பதை வெளியிடுகின்றது. ‘𑌵𑍈𑌕𑍁𑌣𑍍𑌠𑍇 𑌤𑍁 𑌪𑌰𑍇 𑌲𑍋𑌕𑍇 𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌜𑌗𑌤𑍍𑌪𑌤𑌿𑌃 । 𑌆𑌸𑍍𑌤𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌭𑌕𑍍𑌤𑍈𑌰𑍍𑌭𑌾𑌗𑌵𑌤𑍈𑌸𑍍𑌸𑌹’ என்கிறபடியே, நித்ய முக்தர்களால் எப்போதும் சூழப்பட்டு லக்ஷ்மீநாதன் ஸ்ரீ வைகுண்டத்தில் ஸேவை ஸாதிக்கின்றான். முக்த துல்யர்களான ஸந்யாஸிகளும், பரமபாகவதர்களான க்ரஹஸ்தர்களும் இந்தத் திவ்ய தேசத்தில் முற்காலம் நிறைந்துநின்று பகவானை உபாஸித்தார்கள். ஆதலால் இதற்குப் ‘பூலோக வைகுண்டம்’ என்றும் பெயர் வாய்ந்தது. ப்ரஹ்மாதி ஸர்வதேவர்களும் மற்றவர்களைப்பற்றிப் பரர்களென மதிக்கப்பட்டாலும் பகவான் விஷயத்தில் அவரர்களாக

நிற்கின்றார்கள். ஆனபடியால் ஸ்ரீமந்நாராயணனைப் பராவரன் என்று உபநிஷத் சொல்லும். அப்படிப்பட்ட பராவரனை ரங்கநாதனை ஶாஸ்த்ரப்படி யறிந்து பரமபக்தியுடன் தர்சித்த ப்ரயோஜநத்தை ஶ்ருதி இவ்வண்ணம் வர்ணிக்கின்றது. அதாவது:—தர்சித்தவுடன் நமது ஹ்ருதயத்துக்குள் உண்டாயிருந்த விஷயப்பற்றெல்லாம் நாசமடைகின்றன; ஸர்வஸம்ஶயங்களும் நிவ்ருத்தமாகின்றன. நம்மிட்டும் காம்யகர்மங்கள் க்ஷயத்தை யடைகின்றன—என்றிவ்வண்ணம் ஶ்ருதி வெளியிடும் சித்த ஸ்வரூபத்தை யடைய வேண்டும். அது நிரந்தர பகவத் த்யாநத்தால் ஸாதிக்கத்தக்கது. ஸ்ரீமத் ராமாயணத்திலும், "𑌰𑌾𑌮𑍇𑌤𑌿 𑌰𑌾𑌮𑍇𑌤𑌿 𑌸𑌦𑍈𑌵 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯 𑌵𑌾𑌚𑌾 𑌬𑍍𑌰𑍁𑌵𑌤𑍀 𑌤𑌮𑍇𑌵 । 𑌤𑌸𑍍𑌯𑌾𑌨𑍁𑌰𑍂𑌪𑌾𑌂 𑌚 𑌕𑌥𑌾𑌂 𑌤𑌮𑌰𑍍𑌥𑌂 𑌏𑌵𑌂 𑌪𑍍𑌰𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌤𑌥𑌾 𑌶𑍃𑌣𑍋𑌮𑌿" எனும் ஸீதா வசநத்தை யோசிப்பாய். ஸீதை அஶோக வநத்தில் தகையப்பட்டிருக்கையில், அவளுடைய புத்தியானது இடைவிடாமல் ஸ்ரீராமனையே சிந்தித்துக்கொண்டிருந்தது. அவளுடைய வாக்கானது ஸ்ரீராம நாமத்தையே உச்சரித்துக்கொண்டிருந்தது. அவளுடைய புத்தியினால் விசேஷமாகச் சிந்திக்கப்பட்டவனும், வாக்கினால் உச்சரிக்கப்பட்டவனுமான ஸ்ரீராமனுக்கு அநுரூபமான திவ்ய சரித்ரங்களைக் காதால் கேட்டதாக நினைத்தாள். அக்கதைகளுடைய அர்த்தங்களைக் கேட்டபடி அறிந்ததாகவும் நினைத்தாள். இது விஶ்லேஷாநுபவம். அவனுடன்கூட இருக்கையில், அவளுடைய த்ரிகரணங்களுக்கும் அவனைத் தவிர மற்றோர் விஷயம் உதிக்கவில்லை. விரஹ ஸ்திதியினால் நம்மாழ்வார் எம்பெருமானை அநுபவித்தார். ஸ்ரீரங்கநாதன் உனக்கும் அவ்வண்ணமே அநுபவிக்கும்படி ஆகட்டும். அவனுடைய விசேஷகடாக்ஷம் உன்னிடம் நிலைக்கட்டும்" என்றிவ்வண்ணம் சொல்லிக்கொண்டே இருக்கையில் கேசவாசார்யரும் மற்றோரும் தங்கியிருந்த வீடுவந்து சேர்ந்தார்கள்.

இப்படி ஸ்ரீரங்கவாஸம் ஏழு நாள் செய்துவிட்டு, எல்லோரும் திருவணைக்குச் சென்றார்கள். அங்கே ரத்நாகரமும் மஹோததியும் கூடும் ப்ரதேசத்தில் நீராடினார்கள். அங்கே புரோஹிதர்கள் ஸங்கல்ப காலத்தில், '𑌰𑌾𑌮𑍇𑌣 𑌯𑌾 𑌕𑍃𑌤𑌾 [illegible] 𑌕𑍍𑌷𑌾𑌰𑌸𑌾𑌗𑌰𑍇 । [illegible] 𑌨 𑌜𑌾𑌨𑍇 𑌨 𑌸𑍍𑌨𑌾𑌨𑌜𑌂 𑌫𑌲𑌂' எனும் ஶ்லோகத்தைச் சொல்வார்கள். இதனால் ஸேதுவெனப்பட்ட ஸ்தாநத்தில் பகவானுடைய தநுஸ்ஸால் இரண்டு ஸமுத்ரங்களும் சேரும்படியாக ஒரு ரேகையானது செய்யப்பட்டது என்று ஏற்படுகின்றது. இது எப்படி யிருந்தபோதிலும், பகவானே மஹா ஸமுத்திரத்தில் ஸேது நிர்மாணம் செய்வித்தனனென்பது அநாதி சரித்ரம். ஆனால், புஷ்பக விமாநமேறி அயோத்திக்குத் திரும்பிப் போகையில், ஸ்ரீராமன் ஸேதுவை ஸீதைக்குக் காட்டி '𑌏𑌷 𑌸𑍇𑌤𑍁𑌰𑍍𑌮𑌯𑌾 𑌬𑌦𑍍𑌧𑌃 𑌸𑌾𑌗𑌰𑍇 𑌸𑌲𑌿𑌲𑌾𑌰𑍍𑌣𑌵𑍇 । 𑌤𑌵 𑌹𑍇𑌤𑍋𑌰𑍍𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑌿' என்றும், '𑌏𑌤𑌤𑍍𑌤𑍁 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌸𑌾𑌗𑌰𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 । 𑌸𑍇𑌤𑍁𑌬𑌨𑍍𑌧 𑌇𑌤𑌿 𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑍇𑌨 𑌚 𑌪𑍂𑌜𑌿𑌤𑌂 । 𑌏𑌤𑌤𑍍𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌮𑌹𑌾𑌪𑌾𑌤𑌕𑌨𑌾𑌶𑌨𑌂' என்னும் வாக்யங்களைச் சொன்னார். பூர்வவாக்யம் ராமஸேதுவின் தென்கோடியைப் பற்றினது. உத்தரவாக்யம் அதன் வடகோடியைக் குறிக்கின்றது. மேல் குறித்த வாக்யங்களால் வடபாகம் ஸேதுவானது ஸ்ரீராமனால் கட்டப்பட்டதென்பதற்கு ஸந்தேஹமில்லை. தென்பாகம் ஸேது பந்தமெனப்பட்டது. அவ்விடத்தில் தான் ஸமுத்ரதீர்த்தம் மஹா புண்யதீர்த்தமென க்யாதி யடைந்தது. அந்த க்யாதிக்கு ஸ்ரீராமனுடைய ஸம்பந்தம் தான் காரணமானதோ, அல்லது, ஸ்ரீராமனுடைய காலத்துக்கு முன்பட்டே ஸேது பந்தத்துக்கு அந்த க்யாதி உண்டாயிருந்ததோ தெரியவில்லை.

அதெப்படி யிருந்தபோதிலும், ஸேதுவினுடைய தர்சநம் விலக்ஷணமானது. அங்கே நாற்புறமும் மஹா ஸமுத்ரத்தின் விஸ்தாரமானது சித்தத்தைக் கவர்கின்றது. ஸ்தலத்தின் பரிஶுத்த ஸ்திதியானது ஒவ்வொருவர் சித்தத்துக்கும் அதே தன்மையை உண்டு பண்ணுகின்றது. பகவான் அயோத்தியை விட்டு அவ்

விடம் வரைக்கும் வந்த கதையும், அதன் பின் நடந்த பகவத் சரித்ரமும் ஒவ்வொருவன் ஜ்ஞாபகத்துக்கும் வருகின்றது. இச்சித்த பரமபுருஷார்த்தத்தை ஸம்பாதிக்க வழியற்று நிற்கும் சேதநன் க்ருபணன் எனப்படுவான். அவன் அபேக்ஷித்ததை அவனுக்குத் தரவல்ல பகவானுடைய க்ருபை க்ருபண ஜந்துக்களுக்கு ஓர் சிந்தாமணியை ஒத்தது. அந்த க்ருபையானது ஜகத்துக்கு எப்போதும் ஹிதம் செய்வது. அப்படிப்பட்ட க்ருபையால், ரமாநாதன் ஏவப்பட்டவனாய்க்கொண்டு, ரகுவம்ஶ திலகனாக அயோத்தியில் அவதரித்தனன். அவதரித்துப் பின் அந்த க்ருபா ப்ரேரிதனாய், மஹோததியில் ஸேதுபந்தநம் செய்து ஸமுத்ரத்தைப் பிரித்தான். அந்த ஸேதுவைப் பார்த்த மாத்ரத்தில் பார்ப்பவனுடைய ஸர்வ பாபங்களும் நாசமடைகின்றன. இவ்வர்த்தங்களை யெல்லாம் க்ரோடீகரித்துத் தேசிகன், “𑌕𑍃𑌪𑍇𑌵 𑌕𑍢𑌪𑍍𑌤𑌾 𑌜𑌗𑌦𑍍𑌧𑌿𑌤𑍇 𑌕𑍃𑌪𑌣𑌜𑌨𑍍𑌤𑍁- 𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌮𑌣𑍇 [illegible] । 𑌵𑍍𑌯𑌜𑍍𑌯𑍇𑌤 [illegible] 𑌸𑍇𑌤𑍁𑌨𑌾” எனும் ஶ்லோகத்தை ஸாதித்தார். இந்த ஶ்லோகமும் ஸ்நாநகாலத்தில் ஸ்மரிக்கப்படுகின்றது. ஸ்ரீராமன் ஸாதித்தவண்ணம், ஸீதையின்பொருட்டு ஸேதுவை ஸ்வாமி ஸமுத்ரத்தின் நடுவே கட்டினார். இதை ஓர் க்ருபா விசேஷம் எனத்தகும். இந்த ஸேதுவைப் பார்த்தவர்க்கெல்லாம் பாப விமோக்ஷணத்தைச் செய்வதும் க்ருபாவிசேஷமே. க்ருபண ஜநங்கட்கு மோக்ஷத்தைத் தருவதும் க்ருபாவிசேஷமே. மோக்ஷம் ஸர்வ பாப நிவாரணத்தால் பலிக்கின்றதாகையால், இரண்டு பலமும் ஒரே க்ருபையின் கார்யமாய் முடிகின்றது. பாப விமோக்ஷணத்தை அபேக்ஷித்தவன், மோக்ஷத்தையும் அபேக்ஷித்தவனாகின்றான் என்று சொல்லவொண்ணாது, என்றால், மோக்ஷத்திற்கு ஓர் உபாயமாக விதிக்கப்பட்ட ஶரணாகதியின் லக்ஷணமானது, ஸேதுவின் வடகோடியில் விபீஷணனுடைய அநுஷ்டாநத்தால் தெரிவிக்கப்பட்டது. பகவானை மநஸ்ஸில் உட்கொண்டு அவனையே த்யாநித்த ஸீதைக்காக ஸேதுவைக் கட்டினவண்ணம், பகவானை ஆஶ்ரயித்த பக்தர்களனைவர்க்கும், அவர் பகவானைப் போய் அடைவதற்குத் தக்கதோர் ஸேதுவை ரக்ஷகன் பண்ண ஸித்தமாயிருக்கின்றான், என்று அவனுடைய விலக்ஷணமான க்ருபையின் மாஹாத்ம்யம் ஸேதுரூபமாக லோகத்தார்க்கு விளங்குகின்றது.

இவ்வர்த்தங்களை யெல்லாம் கேசவாசார்யர் ஜநகநந்தினிக்கு வெளியிட்டார். ஸேதுவாஸம் மூன்று நாள் செய்து, பிறகு ‘திருப்புல்லணை’ எனப்பட்ட தர்ப்பஶயநத்துக்குக் கேசவாசார்யர் மற்றவர்களுடன் வந்து சேர்ந்தனர். அங்கே ஆதிஸேது வெனப்பட்ட ஸேதுவின் ஆரம்ப ஸ்தாநத்தில் யாவரும் நீராடினார்கள். பகவத் ஸந்நிதிக்குச்சென்று பத்மாஸநித் தாயாரையும், ஜகந்நாதனையும் ஸேவித்துக்கொண்டு, வடபுறத்தில் ஶயநித்திருக்கும் ரகுநாதனை ஸேவித்தார்கள். ஸீதா வியோகத்தால் முன்னமே மிகவும் துக்கப்பட்டிருந்த ராகவன், வருணனுடைய தாமஸத்தால் மநஸ்ஸில் மிகுந்த கஷ்டத்தை வஹித்தவராய், ‘[illegible] 𑌮𑌰𑌣𑌂 𑌵𑌾𑌽𑌥 𑌤𑌰𑌣𑌂 𑌸𑌾𑌗𑌰𑌸𑍍𑌯 𑌵𑌾 ‖ 𑌇𑌤𑌿 𑌰𑌾𑌮𑍋 𑌧𑍃𑌤𑌿𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍁𑌰𑍍𑌮𑌹𑍋𑌦𑌧𑌿𑌂 । [illegible]’, எனும் வண்ணம், தமது புஜத்தையே தலையணையாகக்கொண்டு, “ஸமுத்ரத்தைத் தாண்டுவேன்: அன்றேல் ப்ராணனையாகிலும் விடுகின்றேன்,” என நிஶ்சயித்துக்கொண்டு ஶயநித்த வண்ணம் ஸேவை ஸாதிக்கின்றார். அந்தத் திருமுகத்தில் நிலைத்துக் காணப்படும் வருத்தம் தர்சிப்பவர் சித்தங்களை இன்றும் கலக்குகின்றது. அந்த ஸந்நிதியில் கேசவாசார்யர் பெண்ணைப் பார்த்து, “ஜநகம்! இந்த லோகத்தில் ஶரண்யனே மஹா கஷ்டங்களை மேற்கொண்டானென்று ஸ்ரீ மதுராந்தகத்தில் சொன்னேன். இதோ அந்தத் திவ்ய வதநத்தைப் பார். நான் சொன்னதெல்லாம் ப்ரத்யக்ஷமாகத் தெரிகின்றது. பெருமாளுடன் ஸீதையைக் காணோம். இளைய பெருமாளும், ஹநுமானும் கலங்கி நிற்கின்றார்கள். ‘[illegible],’ என்று பகவானே அரு

ளிச்செய்தான். அவன் கருணாநிதி. பரமசாந்தியே உருவெடுத்து வந்ததுபோல் அவன் அவதரித்தான். ஆதலால் ஸமுத்ரராஜனும் அவனை அவமதிக்க இடம் உண்டாயது. இந்த துக்கரூபமான தர்சநம் லோகத்தையே பீடித்தபடியால், இந்த ஸந்நிதிக்கு முன்பாக ஸீதாலக்ஷ்மண ஸமேதனாய்ப் பெருமாளை வேறு ஸந்நிதி கட்டி எழுந்தருளப்பண்ணி யிருக்கின்றார்கள். இதோ, அவ்விடம் சென்று அங்கும் ஸேவிக்கப்போகின்றோம்.” என்று சொன்னார்.

திருப்புல்லாணியை விட்டு மதுரைக்குப் போனார்கள். அங்கே கூடலழகரையும் திருமாலிருஞ்சோலையில் ஸுந்தரராஜனையும் ஸேவித்தார்கள். பிறகு ஸ்ரீ வில்லிபுத்தூரில் ஆண்டாளையும், திருநகரியில் ஆழ்வாரையும், பாண்டியநாட்டுத் திவ்யதேசங்களில் ஸேவை ஸாதிக்கும் பகவந்மூர்த்திகளையும் தர்சித்துவிட்டு வடபுறம் திரும்பினார்கள்.

பத்ராதிபர்.

ஸ்ரீ:

ஶ்ரீயை நம:

ஸ்மார்த்த ஸம்ஸ்காரங்கள். *

கற்றறிந்தவர்கள் நிறைந்த இச்சபையின்கண் சிற்றறிவுள்ள என்னுடைய உபந்யாஸம் மிகவும் பரிஹஸிக்கத்தக்கயாகும். ஆயினும் தோஷங்களிருந்தாலும் அவைகளை அடக்கி குணங்களைக் கொண்டாடுகிற ஸ்வபாவமுள்ள அறிஞர்களிடத்திலுள்ள ஆதரத்தினால் நான் பயமற்றவனாக இந்த உபந்யாஸத்தை வெளியிடத் துணிந்தேன்.

இதன் லக்ஷண மென்னவென்றால் சாஸ்த்ரப் பயிற்சியிலும் தத்வத்திலும் ஒழுக்கத்திலும் ஸமமாகவும், சத்ரு மித்ரன் உதாஸீநன் என்கிற போதஜ்ஞாந மில்லாதவர்களாகவும் எல்லோருமிருக்க ஒருவரை ப்ரவசநம் பண்ணும்படி செய்வித்து மற்றவர்கள் கேழ்க்கிறதென்பதுதான்.

யதா- (ஸ்ரீ [illegible])

‘[illegible] ।
[illegible] ॥

அப்படிப்பட்ட ப்ருஹ்ம ஸத்ரம் பரிசுத்தமான ஸ்தலத்திலன்றோ செய்யவேண்டும். அதை எவ்வாறு இந்த நகரத்தில்

---

* இது, மயிலாப்பூரில் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தஸபையின் 6 - வது மஹா ஸங்கத்தில் ஸ்ரீ. உபய. வாங்கல் ஸ்ரீநிவாஸாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.

செய்யத் துணிந்தார்க ளென்றால், இது நகரமாக இருந்த போதிலும் பேயாழ்வாரவதரித்த ஸ்தலமானதால் இந்த இடத்துக்கு நிகரற்ற மேன்மை யுண்டாய்விட்டது. பாகவதர்கள் உகந்த இடமே எல்லா க்ஷேத்ரங்களையும் புண்ய நதிகளையும்விட சிறந்ததென ஸ்ரீ நிகமாந்த மகாதேசிகனே ஸாதித்தருளினார் :—

'𑌸𑌾𑌕𑌾𑌶𑍀𑌤𑌿 𑌨𑌵𑌾𑌕𑌾𑌶𑍀𑌤𑌿 𑌸𑍈𑌵𑌾𑌯𑍋𑌧𑍍𑌯𑍇𑌤𑌿 𑌨𑌾𑌧𑍍𑌯𑌾 𑌸𑍍𑌯𑌤𑍇 𑌸𑌾𑌵𑌨𑍍𑌤𑍀𑌤𑌿 𑌨𑌕𑍁𑌶𑌾𑌚𑌵𑌤𑍀𑌸𑌾 𑌕𑌾𑌂𑌚𑍀𑌤𑌿 𑌚𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌯𑌤𑍍𑌤𑍇𑌸𑌾 𑌮𑌯𑍂𑌰𑍇𑌤𑌿 𑌨𑍋𑌤𑌮𑌯𑍂𑌰𑌂 𑌨𑌾𑌮𑍍𑌨𑌾𑌵𑌿𑌮𑌾𑌨𑍍𑌯𑌾𑌪𑍁𑌰𑍀 𑌯𑌾𑌪𑍇𑌵𑌕𑌂𑌣 𑌕𑌯𑌾𑌪𑍁𑌯𑌾𑌸𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌪𑍋𑌤𑌪𑍇𑌤 𑌪𑍋𑌤𑍋𑌪𑌤𑌪𑍇.

'தேனார் கமலத் திருமகள் நாதன் திகழ்ந்துறையும்
வானாடுகந்தவர் வையத் திருப்பிடம் வண்தருமக்
கானாரிமயமும் கங்கையும் காவிரியும் கடலும்
நானாநகரமும் கூடிய நன்னிலமே'

உபந்யாஸம் என்பது வைகரீ ரூபமானவர்க்கு இது ஸரஸ்வதீ தேவியினுடைய மஹிமையின் நாலில் ஒரு பாகமாகும். அதாவது கலைமகள், சிறந்ததான தன்னுடைய மூன்று பாகத்தை உள்ளே அடக்கித் தெரியாம லிருக்கச் செய்துகொண்டு அஸாரமான (தன் வைபவத்தி னுடைய) நான்காவது அம்சத்தை வெளியிடல்தான். இந்த விஷயத்தில் ஶ்ருதி ப்ரமாணமு முண்டு.

"𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌵𑌾𑌕𑍍 𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌾𑌪𑌦𑌾𑌨𑌿
𑌤𑌾𑌨𑌿𑌵𑌿𑌦𑍁𑌰𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾 𑌯𑍇𑌮𑌨𑍀𑌷𑌿𑌣𑌃 ।
𑌗𑍁𑌹𑌾𑌤𑍍𑌰𑍀𑌣𑌿 𑌨𑌿𑌹𑌿𑌤𑌾 𑌨𑍇𑌂𑌗𑌯𑌂𑌤𑌿
𑌤𑍁𑌰𑍀𑌯𑌂𑌵𑌾𑌚𑍋 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 ॥

மற்றும் ஸ்ம்ருதி ப்ரமாணமுமுண்டு.

'𑌪𑌰𑌾𑌵𑌾𑌙𑍍𑌮𑍂𑌲 𑌚𑌕𑍍𑌰𑌸𑍍𑌥𑌾 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍀 𑌨𑌾𑌭𑌿 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 ।
𑌹𑍃𑌦𑌿𑌸𑍍𑌥𑌾 𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌜𑍍𑌞𑍇𑌯𑌾 𑌵𑍈𑌖𑌰𑍀𑌕𑌣𑍍𑌠𑌦𑍇𑌶𑌗𑌾 ॥'

இன்றை தினம் உபந்யஸிப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட விஷயம் யாதெனில்:—முதலில் ப்ராஹ்மண லக்ஷணம்; இவர்களுக்கு ஏற்பட்டுள்ள ஶ்ரௌத ஸ்மார்த்த ஸம்ஸ்காரங்கள் - இவற்றுள் எவை முக்யமானவை, எந்த ஸம்ஸ்காரங்களைச் செய்வதினால் யாது பயன் என்பது தான்.

ப்ருஹ்மத்தின் புதல்வர்களாவது பற்றி ப்ராஹ்மணர்களென்று கூறப்படுகிறார்கள். ப்ருஹ்மத்தினது முகத்திநின்று இவர்களுண்டானதுபோல க்ஷத்ரியர்களும் வைஶ்யர்களும் சூத்ரர்களும் ப்ருஹ்மத்தினுடைய கையினின்றும் தொடையினின்றும் காலினின்றும் முறையே உண்டாயிருக்க, ப்ராஹ்மணர்களை மாத்ரம் புத்ரர்களெனப் பகர்வது பொருந்துமோ வென்றால், இவர்கள் உத்தமாங்கத்தினின்று பிறந்ததாலும் முதலில் தோன்றினதினாலும் புத்ரனெனக் கூறப்படுகிறார்கள். உலகத்திலும் மூத்தவன் தான் புத்ரனென்றும் மற்ற பிள்ளைகள் காமத்தினால் உண்டாகிறபடியினால் புத்ரனெனக் கருதப்படுகிறார்களில்லை என்றும் பெரியோர்கள் சாஸ்த்ர ப்ரமாணங்களுடன் உரைக்கக் காண்கிறோம். இந்த அர்த்தத்தை '𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍋𑌜𑌾𑌤𑍌' என்கிற ஸூத்ரத்தில் பாணிநி மஹர்ஷியும் பரக்கக் கூறினார். வஜ்ரஸூசிகோபநிஷத்தில் - நிகரில்லாததும் ஜாதி, குணம், க்ரியை இவைகளால் விடுபட்டதும் ஆறு ஊர்மிகளையும் ஆறு பாவ விகாரங்களையு மிழந்ததும் ஸத்ய ஜ்ஞாநாநந்த ஸ்வரூபியும் நாசமில்லாததும் ஸ்வயம் நிர்விகல்பமாக இருப்பதும், எல்லா கல்பங்களுக்கும் ஆதாரமும், எல்லா ப்ராணிகளுக்கும் அந்தர்யாமியாக இருப்பதும், உள்ளும் புறமும் ஆகாயம் போல் தொடர்ந்திருக்கின்றதும், அகண்டாநந்த ஸ்வபாவ முள்ளதும், அறியத்தகாததும், அநுபவத்தினாலேயே அறியத்தக்கதும், நேரில் ப்ரகாசிக்கின்றதுமான ப்ருஹ்மத்தை, உள்ளங் கையிலுள்ள நெல்லிக் கனியைப்போல் நேரில் கண்டு க்ருதார்த்தனாய்க் காமம் ராகம் முதலான மனோதோஷங்களை இழந்தவனாகவும் ஶமாதி குணங்களோடு

கூடியவனாகவும், மாத்ஸர்யம் ஆசை மோஹம் இவை முதலானவைகளால் விடுபட்டவனும், அஹங்காரம் முதலான துர்க்குணங்களால் தொடப்படாத உள்ளத்துடன் கூடியவனுமாக எவன் இருக்கிறானோ அவன் ப்ராஹ்மணன் எனக் கூறப்பட்டிருக்கிறது.

'𑌶𑌮𑍋𑌦𑌮𑌸𑍍𑌤𑌪𑌃 𑌶𑍌𑌚𑌂𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌿 𑌰𑌾𑌰𑍍𑌜𑌵𑌮𑍇𑌵𑌚 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌂 ॥'

என்று ப்ராஹ்மணனுக்கு ஶமதமாதி குணங்கள் ஜந்ம ஸித்தமானவையென்று ஸ்ரீ பக³வான் அருளிச்செய்தார். மேலும் எப்பொழுதும் ஸந்தோஷமும் மனத்தில் த்ருப்தியும் தயையும் அஹங்காரத்தை ஒழித்திருத்தலும் ப்ராஹ்மணனுக்கு முக்யமான தர்மமாகும்.

ஸ்ரீ பாகவதத்தில் 10-வது ஸ்கந்தத்தில் ஸ்ரீ கண்ணபிரான் ருக்மிணியினால் அனுப்பப்பட்ட ப்ராஹ்மணனைப் பார்த்து குஶலப்ரஶ்நம் பண்ணும் ஸமயத்தில் ப்ராஹ்மணர்களின் அஸாதாரணமான குணங்களை வெளியிட்டார்.

'𑌕𑌚𑍍𑌚𑌿𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌵𑌰𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌤𑍇 𑌵𑍃𑌦𑍍𑌧𑌸𑌮𑍍𑌮𑌤𑌃 ।
𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌨𑌾𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌣 𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌮𑌨𑌸𑌃 𑌸𑌦𑌾 ।
𑌅𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑍋𑌽𑌸𑌕𑍃𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑍍𑌯𑌪𑌿𑌸𑍁𑌰𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ।
𑌅𑌕𑌿𑌞𑍍𑌚𑌨𑍋𑌽𑌪𑌿 𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌃 𑌶𑍇𑌤𑍇𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌵𑌿𑌜𑍍𑌵𑌰𑌃 ।
𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌨𑍍𑌸𑍍𑌵𑌲𑌾𑌭𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌸𑌾𑌧𑍂𑌨𑍍𑌭𑍂𑌤𑌸𑍁𑌹𑍃𑌤𑍍𑌤𑌮𑌾𑌨𑍍 ।
𑌨𑌿𑌰𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌿𑌣𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌾 𑌨𑍍𑌨𑌮𑌸𑍍𑌯𑍇 𑌶𑌿𑌰𑌸𑌾𑌽𑌸𑌕𑍃𑌤𑍍 ॥'

ப்ராஹ்மணர்களுக்கு மேன்மையும் ஸ்ரீ 𑌭𑌾𑌗𑌵𑌤த்திலேயே கூறப்பட்டிருக்கிறது.

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌃 𑌸𑌾𑌧𑌵𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌃 𑌨𑌿𑌸𑍍𑌸𑌙𑍍𑌗𑌾 𑌭𑍂𑌤𑌵𑌤𑍍𑌸𑌲𑌾𑌃 ।
𑌸𑌲𑍋𑌕𑌾 𑌲𑍋𑌕𑌪𑌾𑌲𑌾𑌸𑍍𑌤𑌾𑌨𑍍 𑌵𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌚𑌨𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑌸𑍍𑌯𑌾𑌮𑍋 𑌯𑍇𑌽𑌸𑍍𑌮𑌦𑍍𑌰𑍂𑌪𑌂 𑌤𑍍𑌰𑌯𑍀𑌮𑌯𑌂 ।
𑌬𑌿𑌭𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮 𑌸𑌮𑌾𑌧𑌾𑌨 𑌤𑌪𑌃𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌸𑌂𑌯𑌮𑍈𑌃 ॥' என்று

மநு ஸ்ம்ருதியிலும் காண்க.

'𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌵𑍈 𑌸𑌰𑍍𑌵𑌾𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑍍𑌭𑍍𑌯𑍋 𑌦𑌿𑌵𑍇𑌦𑌿𑌵𑍇 𑌨𑌮𑌸𑍍𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 ॥' என்று ஶ்ருதியிலும் காண்க.

இஷ்ட ப்ராப்தி அநிஷ்ட நிவ்ருத்தி இவைகளுக்கு ஸாதநமான அலௌகிகமான உபாயத்தை எந்த க்ரந்தம் அறிவிக்கின்றதோ அப்படிப்பட்ட ஆரண நூலைப் பாதுகாப்பதினாலும் ப்ராஹ்மணர்களுக்கு ஏற்றம் கூறப்பட்டது.

ப்ராஹ்மணர்களுக்கு ஸாமாந்யமாக 𑌯𑌜𑌨𑌂, 𑌯𑌾𑌜𑌨𑌂, 𑌅𑌧𑍍𑌯𑌯𑌨𑌂, 𑌅𑌧𑍍𑌯𑌾𑌪𑌨𑌂, 𑌦𑌾𑌨𑌂, 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑌂 என்கிற ஆறு கர்மங்கள் விதிக்கப்பட்டுள்ளன. தினந்தோறும் விசேஷித்தும் ஆறு கர்மங்கள் விதிக்கப்பட்டுள்ளன. அவை: 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌵𑌨𑍍𑌦𑌨𑌂, ஜபம், ஹோமம், தேவதைகளைப் பூஜித்தல், அதிதிகளுடைய பூஜை, வைஶ்வதேவம்.

ஸம்ஸ்காரம் என்கிற பதம் மேன்மையை உண்டு பண்ணுதல் என்று பொருளுள்ளதாகும். ஸ்ரீ 𑌭𑌗𑌵𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜ர், தம் ஸ்ரீ 𑌭𑌾𑌷𑍍𑌯த்தில் "𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑍋𑌹𑌿𑌨𑌾𑌮 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰 𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾𑌕𑌰𑌣𑌂" என்று அர்த்தத்தை அநுக்ரஹித்தார்.

ஆகரங்களில் உண்டாகிற மணிகளுக்கு (ரத்நங்களுக்கு) சாணை பிடிப்பதினால் அதிக காந்தியும் மேன்மையும் உண்டாவது போல் பிறப்பினால் உண்டான ப்ராஹ்மண்யத்திற்கு ஸம்ஸ்காரங்களால் சிறப்பு உண்டாகிறது. அந்த ஸம்ஸ்காரங்கள் இருவகைப் ஸ்மார் படுகின்றன. அவை:—ஶ்ரௌதம், ஸ்மார்த்தம் என்பன. ஸமாநமாக உளது. த்த ஸம்ஸ்காரம் எல்லா ப்ராஹ்மணர்களுக்கும் உரித்தா ஶ்ரௌத ஸம்ஸ்காரமானது ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கே ஸ்ம்ருதி னது. ஶ்ருதியில் விதிக்கப்பட்டது ஶ்ரௌதமென்றும் யில் விதிக்கப்பட்டது ஸ்மார்த்தமென்றும் கருதப்படுகின்றது.

இந்த ஸ்மார்த்தமான ஸம்ஸ்காரங்கள், 48 - வகைப்படும். இதில், 40 - க்ரியா ரூபமாயும், 8 - ஆத்மகுண ரூபமாகவு மிருக்கிறது.

க்ரியா ரூபங்களான ஸம்ஸ்காரங்களாவன :—கர்ப்பாதாநம், பும்ஸவநம், ஸீமந்தோந்நயநம், ஜாதகர்மம், நாமகரணம், அந்நப்ராஶநம், சௌளம், உபநயநம், ப்ராஜாபத்ய வ்ரதம், ஸௌம்ய வ்ரதம், ஆக்நேய வ்ரதம், வைஶ்வதேவ வ்ரதம், ஸ்நாதக வ்ரதம், விவாஹம், தேவயஜ்ஞம், பித்ருயஜ்ஞம், பூதயஜ்ஞம், மநுஷ்ய யஜ்ஞம், ப்ருஹ்ம யஜ்ஞம்.

பாகயஜ்ஞ ஸம்ஸ்தைகள் - 7. அவை :—அஷ்டகை, பார்வணம், ஶ்ராத்தம், ஶ்ராவணீ, ஆக்ரஹாயணீ, சைத்ரீ, ஆஶ்வயுஜீ. ஹவிர்யஜ்ஞ ஸம்ஸ்தைகள் - 7. அவை :—அக்நியாதேயம், அக்நிஹோத்ரம், தர்சபூர்ண மாஸம், ஆக்ரயணம், சாதுர் மாஸ்யங்கள், நிரூட பசுபந்தம், ஸௌத்ராமணீ என்பன. இந்த ஏழு ஸம்ஸ்காரங்களுக்கும் ஸோம ஸம்பந்த மில்லாததினால் ஹவிர்யஜ்ஞங்கள் என்று கூறப்படுகின்றன.

ஸோம ஸம்ஸ்தைகள் - 7. அவை :—அக்நிஷ்டோமம், அத்யக்நிஷ்டோமம், உக்த்யம், ஷோடசிவாஜபேயம், அதிராத்ரம், அப்தோர்யாமம்.

இந்த நாற்பது ஸம்ஸ்காரங்கள் ஸ்ம்ருதிகளால் கூறப்பட்டிருக்கின்றபடியால் ஸ்மார்த்த ஸம்ஸ்காரங்க ளென்று கூறப்படுகின்றன. இந்த 40 - ஸம்ஸ்காரங்களைத் தவிர மற்ற எட்டும் ஆத்மகுணங்கள். அவை :—தயை, பொறுமை, அநஸூயை, சௌசம், அநாயாஸம், மங்களம், அகார்பண்யம், அஸ்ப்ருஹை.

இந்த 48 - க்குள் பிந்தி உரைக்கப்பட்ட எட்டு ஆத்ம குணங்கள் முக்யமானவைகள். இந்த எட்டு குணங்களும் ப்ராஹ்மணனுக்கு இருக்குமேயாகில், முற்கூறின நாற்பது ஸம்ஸ்காரங்களுள் ஏதேனும் குறைவிருந்தாலும் பாதகமில்லை. கீழ்ச்சொன்ன நாற்பது ஸம்ஸ்காரங்கள் இருந்தும் பிந்தின எட்டு ஆத்மகுணங்களில்லாவிடில் அவைகள் பயன்படா. நிற்க, ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு கீழ்குறிக்கப்பட்டுள்ள ௪அ - ஸம்ஸ்காரங்களோடு, ஐந்து ஶ்ரௌத ஸம்ஸ்காரங்களு முண்டு. இந்த ஶ்ரௌத ஸம்ஸ்காரங்களால் எல்லா ப்ராஹ்மணர்களை விட ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஏற்றம் ஏற்பட்டது. அந்த ஸம்ஸ்காரங்களாவன :—தாபம், புண்ட்ரம், நாம, மந்த்ரம், யாகம் என்பன.

தாபமாவது : மந்த்ரங்களால் பரிசுத்தமான அக்நியில் காய்ச்சப்பட்ட சக்ரத்தினாலும் சங்கத்தினாலும் முறையே வலது கையிலும் இடது கையிலும் அடையாளம் செய்துகொள்வது. (ஆசார்யனால் இது செய்யப்பட வேண்டும்.)

புண்ட்ரமாவது : ஆசார்யன் மந்த்ர புரஸ்ஸரமாகத் திருமண் ஸ்ரீ சூர்ணங்களைத் தரிக்கச்செய்வது.

நாம : ஆசார்யனால் சிஷ்யனுடைய காதில் ரஹஸ்யமாகச் சொல்லப்படும் தாஸ சப்தாந்தமான ஒரு நாமதேயம்.

மந்த்ரமாவது :—ஆசார்யனால் உபதேசிக்கப்படும் அஷ்டாக்ஷரம், த்வயம், சரம ஶ்லோகம், ஷடக்ஷரம், துவாதசாக்ஷரம் முதலானவை.

யாகமாவது : பகவதாராதந க்ரமம். இந்த ஐந்தும் ஸங்கர்ஷண ரூபியான ஶ்ரிய:பதியினால் உரைக்கப்பட்ட வேதம்போன்ற பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்டுள்ளது. ப்ராமாண்ய விஷயத்தில் வேதத்தோடு இந்தப் பாஞ்சராத்ர சாஸ்த்ரம் ஸமமானது. நான்முகனுக்கு வேதத்தை உபதேசித்த ஶ்ரிய:பதியினாலேயே இதுவும் உபதேசிக்கப்பட்டிருப்பதால், வேதத்தோடு ஸமமாகவே அபியுக்தர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இது விஷயம் ஸ்ரீ நிகமாந்த தேசிகனால் ஸச்சரித்ர ரக்ஷையில் விசதமாக உபந்யஸிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பஞ்ச ஸம்ஸ்காரங்

களை விதிக்கிற ஶ்ருதி வாக்யங்கள் வேதத்திலும் அநந்ய பரங்களாகவே காணப்படுகின்றன.

இந்த ஐம்பத்து மூன்று ஸம்ஸ்காரங்களுக்குள் உபநயநம் ஒன்றே முக்யமா யுள்ளது. ஏனெனில், ப்ராஹ்மணனால் பலனைக் கருதாமல் ஆறு அங்கங்களுடன் கூடின வேதமானது ஓதத்தக்க தென்றும், அர்த்தத்தோடு அறியத்தக்க தென்றும் வேதம் விதித்து விட்டது. அப்படிப்பட்ட வேதத்தை எட்டு வயதுள்ள ப்ராஹ்மணனுக்கு உபநயநத்தைச் செய்வித்து ஓதுவிக்கவேண்டு மென்று ஆசார்யனுக்கு ஶ்ருதி விதித்து விட்டது. ப்ராஹ்மண்ய ஸித்திக்கு முக்ய ஸாதநமான வேதாத்யயநமானது உபநயந மடியாக ஏற்பட வேண்டி யிருத்தலால் உபநயந மொன்றே முக்ய ஸம்ஸ்கார மென்று கருதப்படுகிறது. அதில்லாவிடில் மேற்பட்ட விவரணம் முதலான ஸம்ஸ்காரங்களில் ப்ராஹ்மணனுக்கு அதிகாரமே உண்டாவ தில்லை; சூத்ரன்போலவே ஆகிறான். உபநயநம் என்கிற பதம் - மந்த்ரங்களை க்ரஹிப்பதற்காக ஆசார்ய ஸமீபத்தில் சிஷ்யன் எந்தக் கர்மாவினால் நெருங்கும்படி செய்விக்கப் படுகிறானோ அந்தக் கர்மாவை உணர்த்துகிறது. அந்தக் கர்மாவில் எல்லா வேதங்களுடைய ஸாரமான காயத்ரி மந்த்ரமானது உபதேசிக்கப்படுகிறது. அதனால் ப்ராஹ்மணனுக்கு இரண்டாவது பிறப்பு ஏற்படுகிறது. தாய் தகப்பனால் உண்டுபண்ணப்பட்ட முதல் ஜந்மமானது தாழ்வுடையது. உபநயநம் என்கிற ஸம்ஸ்காரத்தினால் ஆசார்யன் வித்யையுடன் சேர்ந்து உண்டுபண்ணும் இந்த ப்ராஹ்மண ஜந்மமே சிறப்புற்றது. இந்த ஸம்ஸ்காரமானது கர்ப்பம் தொடங்கியோ, அல்லது பிறந்த காலம் தொடங்கியோ, எட்டாவது வர்ஷத்தில் ப்ராஹ்மணனுக்கு செய்விக்கத்தக்க தென்றும், அதுவும் வஸந்த காலத்தில் செய்விக்க வேண்டுவ தென்றும், ஆபஸ்தம்பர் முதலான ஸூத்ரகாரர்களின் அபிப்பிராயம். காம்ய பலங்களை உத்தேசிப்பவர்களுக்கு இந்த ஸம்ஸ்காரமானது பல பே

தத்தினால் கால பேதங்களில் செய்யப்படலா மென்று தர்மஸூத்ர காரர்கள் சொல்லி யிருக்கின்றார்கள். இவ்வாறு உபநயநத்தினால் ஸம்ஸ்கரிக்கப்பட்டுக் காயத்ரியையும் வேதத்தையும் நியமத்துடன் உபதேசம் பெற்று அதற்கு உரித்தான வ்ரதங்களை அநுஷ்டித்தலால் ப்ருஹ்மசாரி யென்று சொல்லப்படுகிறான். இந்த ப்ருஹ்மசாரி - ஸாவித்ரன், ப்ராஜாபத்யன், ஸௌம்யன், ஆக்நேயன், வைஶ்வதேவன், உபகுர்வாணன், நைஷ்டிக னென்று ஏழுவகைப் படுவான். ப்ருஹ்மசாரி யென்பவன் குருகுல வாஸம் செய்து, 48 - வருஷமோ, 36 - வருஷமோ, 24 - வருஷமோ, 12 - வருஷமோ, நியமாத்யயநம் செய்து வ்ரதங்களையும் அநுஷ்டித்தல் வேண்டும். அப்படி வேதங்களையும், வ்ரதங்களையும் கற்றும் அநுஷ்டித்தும், ஆசார்யனுக்கு இஷ்டப்பட்ட தக்ஷிணையைக் கொடுத்து, ஸ்நாதக விரதத்தை அநுஷ்டித்து க்ருஹஸ்தாஶ்ரமத்தையோ, வாநப்ரஸ்தாஶ்ரமத்தையோ, ஸந்யாஸத்தையோ நாடவேண்டும். குருகுலத்தில் வாஸம் செய்து உள்ளபடி வேதத்தை அத்யயநம் செய்து வ்ரதத்தையும் அநுஷ்டித்துக் குருவின் அநுமதியின் பேரில் ஸ்நாதக வ்ரதத்தைச் செய்தவன் உபய ஸ்நாதக னென்றும், வித்யையை மட்டும் அறிந்து வ்ரதத்தை அநுஷ்டியாதவன், வித்யா ஸ்நாதக னென்றும், வேதாத்யயந மின்றி வ்ரதத்தை மட்டும் அநுஷ்டித்தவன் வ்ரத ஸ்நாதக னென்றும் சொல்லப்படுகிறான். ப்ருஹ்மசாரி மூன்று வேதங்களையோ, இரண்டு வேதங்களையோ, ஒரு வேதத்தையோ க்ரமப்படி அத்யயநம் செய்து, ப்ருஹ்மசர்யம் நிலைகுலையாமல் ஸ்நாதக வ்ரதத்தைச் செய்து ஆஶ்ரமாந்தரங்களை அடைய வேண்டியவனாக இருக்கிறான். ஸ்நாதக வ்ரதம் செய்துகொண்ட பிறகு அவன் க்ருஹஸ்த தர்மத்தையாவது ஸந்யாஸத்தையாவது, நைஷ்டிக ப்ருஹ்மசர்யத்தையாவது ஏற்றுக்கொள்ள அதிகாரமுள்ளவனாக ஆகிறான். இவ்வாறு கீழ்கூறப்பட்டுள்ள ஸம்ஸ்காரங்களால் மேன்மை யுண்டுபண்ணப்

பட்ட ப்ராஹ்மணனுக்கு வர்ணாஶ்ரம தர்மாநுஷ்டாநத்தில் யோக்யதை உண்டாகின்றது. அந்த வர்ணாஶ்ரம தர்மாநுஷ்டாநத்தால் ஸஞ்சித பாபங்களும் ஆகாமிகளான பாபங்களும் நாசமடைகின்றன. அதனால் சித்தம் சுத்தி அடைகின்றது. சித்த சுத்தியினால் ஜ்ஞாநயோகம் வ்ருத்தி யடைகின்றது. அதினின்று பக்தி யோகம் செய்வதில் அதிகாரம் ஏற்பட்டு இடை வெளியற்ற தைலதாரைபோன்ற ஸ்ம்ருதி ஸந்தாநத்தால் பகவத் ஸ்வரூபத்தை த்யாநம் செய்து தர்சந ஸமாநாகாரமான நிதித்யாஸநத்தினால் பகவானை அநுபவித்து சரீரத்தை இழந்து ஸாயுஜ்ய ரூபமான மோக்ஷ ஸாம்ராஜ்ய ஸுகத்தை ஜீவன் பெறுகிறான்.

𑌕. 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌃
𑌸𑌾𑌹𑌿𑌤𑍍𑌯𑌰𑌤𑍍𑌨𑌂
𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌃
ஸெண்ட் ஜோஸப் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

ஸ்ரீ:.

வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

		ரூ.	அ.	பை.
1.	ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்)	0	2	0
2.	ஸ்ரீ த்ராவிடவேத தாத்பர்யம்— (ஸ்ரீ. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது)	0	2	0
3.	ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யராற் செய்யப்பட்ட உபந்யாஸம்)	0	2	0
4.	ஸ்ரீ பாகவத தனிஶ்லோகீ - (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர்)	0	4	0
5.	ஸ்ரீ சதுஶ்லோகீ விவரணம்	0	4	0

இவை வேண்டுவோர்கள் **சென்னை, மயிலாப்பூர், கேசவப்பெருமாள் ஸந்நிதிவீதியில்** இருக்கும் **ஸ்ரீ வேதாந்த தீபிகை மானேஜருக்கு** எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

உபய வேதாந்தமும் மணிப்ரவாளமும். *

வேதாந்தம்:—𑌵𑌿𑌦 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 - எனும் தாதுவிலிருந்து வேதமெனும் பத முண்டாயிற்று. வேதம் ப்ருஹ்ம ஜ்ஞாந மளிப்பது. அது வேதாந்த ஜ்ஞாநமென்பது. அந்தம் ஶிரஸாயது. வேதஶிரஸ் என்பது வேதாந்தமாயிற்று. இங்கே ஶிரஸ், ஶிரஸ்ஸில் விளங்கும் பரஞ்சுடராம் பரமபுருஷனே. தமிழர் ஶிரஸ்ஸைத் தலையென்றும் முடி யென்றும் வழங்குவர். அடியுளதாயி னன்றோ முடியுமுளதாய் நிலைபெறுவது. அடியாகும் கர்மகாண்டம் பூர்வ மீமாம்ஸையாம். முடியாகும் ஜ்ஞாநகாண்டம் உத்தர மீமாம்ஸையாம். ஸ்ரீ ராமாநுஜ தர்சநத்தார், தொடர்பு பற்றி இவ்விரண்டையும் ஒரே சாஸ்த்ர மென்பர். வேதாந்த சாஸ்த்ரங்கள் முக்யமாய் மூன்றேயாம். அவை: வேதாந்த ஸூத்ரங்கள், பகவத்கீதை, தச உபநிஷத்துக்களுமே. த்ரமிடோபநிஷத்தை நம்மவர் ஸ்ரீ பகவத்விஷய மென்பர். கர்மமும் ஜ்ஞாநமும் சாந்துணையும் பிரியாமலே நடைபெறு மென்பது கீதாசார்யன் வாக்கு. மானிட சரீரம் இடும்பை நிறைந்த பை போன்றதாம். விண்பத முதவலால் நர ஜந்மம் உத்தம ஜந்மமாகின்றது. ஆதலால் நர ஜந்ம மரிது. ஒழுக்கமுடையராதல் அதனினு மரிது. வேத உண்மை கண்டு ஒழுகுமவரே வேதியர். அறிவாலு மொழுக்கத்தாலும் அறங் காப்போ ரவரே.

அந்தண ரென்போ ரறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான். (குறள்.)

---

* இது, மயிலாப்பூரில் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் 6-வது வார்ஷிக மஹா ஸங்கத்தில் ஸ்ரீ. உ. ஸ. தமிழ்ப் பண்டிதர் தி. வேங்கடராம ஐயங்காரால் செய்யப்பட்ட உபந்யாஸம்.

வேத மிலையானால் வேதாவும் படைக்குந் தொழிலறியான். வேதிய ரிலையானால் வேள்வி முதலிய கைவிடும். ஆக்களில்லையானாலும் யாகங்கள் நிறைவேறா. எனவே ஆக்களு மந்தணர்களு முக்யம். இவ்விரு ஸாதநங்களையும் அரசர்கள் காத்தல் வேண்டும். காவாவிடிலோ ஆக்கள் பால் குன்றும்; அந்தணர் முதலினோர் வேதத்தை மறந்து விடுவர்; யாகங்களும் நிறைவேறா; மழையும் பெய்யாது.

ஆபயன்குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவானெனில். (குறள்.)

ஆக்களும் அந்தணர்களும் சுகமுறில் எவ்வுலகும் சுகமுறும். இவை அரசர் காப்புக் குரியன.

வேதாந்தத்தை வேதவ்யாஸர் ஸூத்ரமா யருளிச்செய்தார். அதற்குப் பாஷ்யங்கள் பல. முக்யம் மூன்றேயாம். டங்கர், குகதேவர், போதாயநர் முதலிய பலர் விசிஷ்டாத்வைத பாஷ்யங்கள் செய்தனர். விசிஷ்டாத்வைதிகள், த்வைதிகள்-இவ்விருவகையார்க்கும் பரதத்வம் திருமகள் காந்தனேயாம். அத்வைத பாஷ்யம் செய்த ஸ்ரீ சங்கராசார்யரும் துரியப்ரஹ்மம் திருமா லென்றனர். மூன்று பாஷ்யகாரர்களுக்கும் உபாஸநா மூர்த்தி முகுந்தராதலறிக. ஸ்ரீ பாரதம் ஸபாபர்வத்தில் உண்மை புலப்படத் தர்மபுத்ரர் நான்கு வினா வினவினர். அவைகட்கு நாரதரும் நான்கு விடைக ளளித்தனர். பொருள் வெளிப்படை.

வினாக்கள்.	விடைகள்.
௧. 𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌦𑍇𑌵 𑌫𑌲𑌾 𑌵𑍇𑌦𑌾𑌃।	𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰 𑌫𑌲𑌾𑌵𑍇𑌦𑌾𑌃।
௨. 𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌦𑍇𑌵 𑌫𑌲𑌂 𑌧𑌨𑌮𑍍।	𑌦𑌤𑍍𑌤𑌭𑍁𑌕𑍍𑌤 𑌫𑌲𑌂 𑌧𑌨𑌮𑍍।
௩. 𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌦𑍇𑌵 𑌫𑌲𑌾 𑌦𑌾𑌰𑌾𑌃।	𑌰𑌤𑌿𑌪𑍁𑌤𑍍𑌰 𑌫𑌲𑌾 𑌦𑌾𑌰𑌾𑌃।
௪. 𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌦𑍇𑌵 𑌫𑌲𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌮𑍍।	𑌶𑍀𑌲𑌵𑍃𑌤𑍍𑌤 𑌫𑌲𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌮𑍍।

எவ்வகை யறிவினும் ப்ருஹ்ம ஜ்ஞாநம் தலைமை பெற்றதாம். அப்யாஸத்தாலும் வைராக்யத்தாலும் அது பெறப்படும்.

தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப்போட்டாலும் வராது;
கண்டவர் விள்ளார் விள்ளக் கருதுவார் காண்கிலாரே.

விட்ட குறைபாற்றொட்ட தொடர்பு முட்டவுநின்று தட்டுதலின்றிப் பரம்பொருளை யொட்டுவிக்கும்.

உபய வேதாந்தம் :—பழைய மறைகள் உண்மைப் பொருளை ஆன்மானுபவிகட்கு மட்டும் விளங்கும்படி மறைத்துக் காட்டியதால் அவைகள் மறைகளெனப்பட்டன. கலிக் கொடுமையா லவ்வகை யனுபவிகளி னொழுக்கம் குன்றி, நிலைமாறுத லுண்டாமெனக் கருதி, த்வாபர யுகாந்தத்து நால்வரையும் மற்றையோரைக் கலியுகத்திலும் ஆழ்வார்களாக அவதரிப்பித்து, அவர்களொழுக்கத்தாலும் பாடல்களாலும் பழைய மறைகளி லடங்கிய உண்மையைப் பரமபுருஷன் இனிது விளங்கச் செய்தான். ஸரஸ்வதி விலஸிதங்களி லெல்லாம் சடகோபரின் பாடல்களாம் தமிழ் வேதம் சாந்தி ரஸத்திற்கு நிலையிடமாய்த் தலைமை பெற்றதென்று, த்ரமிடோபநிஷத் ஸாரத்திலும் "தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே" என்று தமது தமிழ் ப்ரபந்தத்தும் ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனால் கூறப்பட்டுள்ளது. குமரகுருபராராம் வரகவியும் 'பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே' என்றார். இதனால் புராதநமாகிய வேதம் பரமபுருஷனைப் பின்பற்றியதும் பரமபுருஷன் திருமழிசையாழ்வார் பாடல் கேட்டு அதைத் தொடர்ந்ததும் வெளியாகின்றது.

"வேதத்தின் முன்செல்க மெய்யுணர்ந்தோர் விரிஞ்சன்முதலோர்
கோதற்ற ஞானக்கொழுந்தின் முன்செல்க குணங்கடந்த
போதக்கடலெங்கள் தென்குருகூர்ப்புனிதன் கவியோர்
பாதத்தின்முன்செல்லுமோதொல்லைமூலப்பரஞ்சுடரே." (சடகோபரந்தாதி.)

ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியில் அவர் நியமநப்படி ஸ்ரீ சடகோபற்கு அந்தாதி பாடியபோது கல்வியிற் பெரியவனும் கம்பநாட்டாழ்வானும், பரமபுருஷன் வேதத்தின் பின் செல்பவனாயினும் ஸ்ரீ சடகோபர் பாடலின் ஒரு பாதத்தின் முன் செல்ல வல்லனோ வென்று கூறியுள்ளான்.

இவ்வாழ்வான் பாடல்கள், 'இடம்கொண்ட', 'ஊராது' 'என்னிலைமை' - இம்மூன்றும் நாலாயிரத்துள் நாதமுநிகள் நாளில் சேர்க்கப்பட்டன. 'தொங்கல் மூன்றே' என்றது தேசிகன் வாக்கு. நம்மவர் இதை 'அடியோங்கள் வாழ்வே' எனமாற்றி விட்டனர். வேதாந்த உண்மைப் பொருள் ஒன்றேயாயினும் பாஷைக ளிரண்டாயின காண்க. உபய வேதங்களினாலும் பெறப்படும் முடிவுப் பொருளொன்றே யென்பது உபயவேதாந்தப் பொருளாம். எப்படியெனிலோ, வேத முடிவைப் பின்பற்றி அதன் ஸாரத்தை

விளக்கவந்தது தமிழ் மறையாம். இங்கே அம்மறையைப் பின்பற்றிய தமிழ் மறை அதை விளக்குவித்தமையால் தலைமை பெற்றது. ஒன்றிற்கொன்று தொடர்புடையதாயினும் குணங் கருதிப் பிந்தியது முந்தி நிற்ப தாயிற்று.

சில பாடல்கள் வருமாறு:—1. பரமபுருஷன் வடிவம் எத்தன்மைத்து? 2. அவனைக் கூறும் வாசகம் எது? 3. அவன் நிலையை யடைவ தெப்படி? 4. அவனைக் கூறும் வாசகம் எது? 5. ப்ரணவத்திற்கு மாத்ரையளவு யாது? 6. புருஷத்திடை விளக்கொளி காணலாமோ? 7. பரமபுருஷனது நாம உச்சாரண பலன் யாது? 8. உபதேச வகையா லவன் நாமம் பெற்ருருண்டோ? 9. இருபிறப்பாவ தெப்படி? 10. த்யாநம் முதிர்ந்து உணர்வடைவ தெப்படி? 11. எது தோன்றில் பிறவித்துயர் தொலையும்?

எண்முறைப்படி பாடலின் முதல் குறிப்பு:—

	பாடல் முதற் குறிப்பு.	பாடினர் பெயர்.
1.	ஆணல்லன்.	ஸ்ரீசடகோபன்.
2.	யாவரும்.	ஷை. ஷை
3.	நன்ருய் ஞானம்.	ஷை ஷை
4.	மூன்றெழுத்து.	மங்கைமன்னன்.
5.	மேலெழுந்தோர்.	விஷ்ணுசித்தன்.
6.	இளைப்பினை.	மங்கைமன்னன்.
7.	குலந்தரும்.	ஷை ஷை
8.	வாடினேன்.	ஷை ஷை
9.	நின்றது அன்றுநான்.	திருமழிசையார்.
10.	நின்ற ஒன்றை.	ஸ்ரீசடகோபன்.
11.	மூன்றில்.	ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகன்.

ஒழுக்கம் விழுப்பந்தரலா லொழுக்க
முயிரினு மோம்பப்படும். (குறள்.)

விவேகமாம் முதற்படியிற் காலூன்றி முறையே மேலாகுமேழுபடிகளு மேறி எட்டற்கரிய எட்டாம் படியு மேறித் திவ்ய வடிவம் பெற்று ஒன்பதாம் பதமடைந்து அங்கே ‘ஶேஷீ ஶரணம்’ என்கிறபடியே சேஷசேஷி பாவ முணர்ந்தார்க்குப் பரமபுருஷனைக் கிட்டி அடிமை புரியும் நிலை வாய்ப்பது திண்ணம். பரமபத

ஸோபாநத்தை நமக்கு அருளிய ஸ்ரீ தேசிகன் நாமத்தின் பொருளை நாமிங்குச் சிந்தித்தல்வேண்டும்.

‘ தேவதாபார ம்யவஸ்தாஹீஷ்ர நாந்ஹ ஹகாரணாச ।
கார்ணாபார வ்யவஸ்தா தேஶிகஃ ஶாஸ்த்ரஸங்க்ரஹே. ’

வேதம், ஆகமம், உபநிடதம், இதிஹாஸம், ஸ்ம்ருதி புராணங்களின் ஸாரந்தான் தமிழ்த் தேசிகப் பிரபந்தம். இதில் தேர்ந்து சீலமடைந்தார் பரமபத நிலை பெறுவர். வேறுவகை ஜ்ஞாநமடைவோர் பலன் பெருர்.

ஸ்ரீ வைஷ்ணவராவார் குணங்களெவை என்பதைப் பற்றிச் சிறிது இங்கே கூறுவோம். ஸ்ரீ பட்டரின் சிஷ்ய ரொருவர் குருவின் நியமநப்படி ஸ்ரீ வைஷ்ணவ லக்ஷண மறிந்துவரத் திருமலை சென்று அங்கே நந்தநவநம் வைத்துக்கொண்டு திருவேங்கடமுடையாற்குத் திருமாலை கைங்கர்யஞ் செய்துகொண்டிருந்த அநந்தாழ்வான் திருமாளிகையில் சிலநாள் வாஸம்செய்து திருவேங்கடச் செல்வனையும் நாடோறும் வழிப்பட்டுத் திருவரங்கத் தலத்திற்குத் திரும்பி யாத்ரை போக விடைபெற்றுக்கொண்டபோது ஸ்ரீ அநந்தாழ்வான் ஸ்வாமிகள், கொக்கைப்போல்வும், கோழியைப் போலவும், உப்பைப்போலவும், உம்மைப்போலவும், ஸ்ரீ வைஷ்வர்க ளிருப்பார்க ளென்றும், ஒவ்வொன்றிற்கும் நான்கு பொருளென்றும், அவைகள் ஆசார்யராம் பட்டர்பாற் கேட்டறியலாமென்றும் திருவாக் களித்தா ரென்பது தனிஶ்லோகியின் முகவுரையிற் கண்டது. ஸ்ரீ பட்டரா லவைகள் விவரிக்கப்பட்டுள்ளன.

‘ விஷ்ராவிவாதிர்ய யநஜீாய ஶக்திவேஶேஷாவி வீலநாய ।
வஷவஸ்லஸாயோவிஷ்வவஸீ தஶதசஜ்ஞா நாயநாநாயலக்ஷணாய ॥’

மணிப்ரவாள நடை:—வடமொழிச் சொற்களோடு தமிழ்ச்சொற்கள் கலந்து வசநப் போக்காயும் செய்யுள் நடையாயும் எழுதப்பட்டு வழங்கிவருவது தான் மணிப்பவள நடை. முன்னுளில் பௌத்தர்களும் ஜைநர்களும் இந்நடையைக் கைப்பற்றினர். இவர்கள் தங்கள் காலத்தில் வடமொழியிலுந் தென்மொழியிலும் சுயஞ்சத்தி சொலிப்பதாயும், அமுதொழுக்குப் போன்றதாயும் விளங்கும் பல நூல்களை இவ்வுலகுளார் போற்றும்படி செய்துள்ளார். வேதாந்த பாஷா வல்லபத்தி லிவர்கட்கு இணை யாருமில்லை.

உண்மையில் நம்மவர் சிறந்தனரே யன்றிப் பாஷாவல்லபத்திற் சிறந்தாரில்லை. இவ்விரு பாஷைகளிலும் தேர்ச்சி குன்றிய தமது ஸமயத்தார்கள் உண்மை கண்டொழுக முக்யமா மென்று மணிப்பவளத்தைக் கைக்கொண்டனர். அதன் உண்மை கண்டு நம்மவரும் பின் பற்றினர். உபய வேதமார்க்கங் கொண்ட நமக்கு உபய பாஷைகள் முக்யமாகின்றன. நமது தர்சநத்தி லுள்ள மணிப்பவள நூல்களிற் சில வருமாறு :—

(1) பகவத்விஷய உரை. (2) ஆசார்யஹ்ருதயம். (3) ரகஸ்யத்ரயஸாரம். (4) இருவகையார் ரகஸ்யங்கள். (5) விரோதிபரிஹாரம். (6) ப்ரதாந சதகம். (7) அபயப்ரதாந ஸாரம். (8) தனிஶ்லோகி உரை. (9) பரமபதஸோபாந ரகஸ்யம். (10) பரமதபங்க ரகஸ்யம். (11) அத்திகிரிமான்மிய ரகஸ்யம்.

நிலத்திற்கு உரமுண்டாக வேறு நில மண் எருவாதல் போல வடமொழி வேத வுண்மை நிலத்திற்குத் தமிழ்மொழி யவ்வுண்மையை வளமுறச் செய்யப்போந்த நல்ல எரு வாதலால் மணிப்பவள ரூபமான நம் தர்சந நூல்களெல்லாம் ஸாரதமமா யமைந்துள்ளன. பாஷா வல்லபம் நம்மவருட் பலருக்கு இருமொழிகளிலும் மேலெழுந்தவாரி போல் தெளிவின்றிக் கலங்கி நிற்பதால் மணிப்பவள நூல்களின் ஜ்ஞாநம் ரத்ந பரீக்ஷை யறியாதவர் ஜ்ஞாநம் போலாகின்றது. இதுமட்டோ? ஸமய பரிபாஷைகளு மிடையிடையே தலைநீட்டுகின்றன. நீட்டவே மணிப்பவள நடையின் ஸார முணர்தல் இந்நாளில் பகீரத ப்ரயத்நம் போன்றது.

வேதங்களையும் வேதாங்கங்களையும் இதிஹாஸங்களையும் உபநிஷதங்களையும் வேதாந்த ஸூத்ரங்களையும் புராணங்களையும், சாஸ்த்ரங்களின் உணர்ச்சியால் வடமொழி வாயிலாகக் கற்றுணர்ந்து, நாதமுநிகள் ஆளவந்தார் ஸ்ரீராமாநுஜ ஸ்ரீதேசிகாதிகளைப் போல் விரக்தராய்த் திநசரியில் வழுவாது த்யாநநிஷ்டைகளால் திருமாலை உபாஸித்தல் இக்காலத்து ஸுலப ஸாத்யமல்ல. அருமையாக எங்கேனும் சிலர் இலைமறை காய்கள் போலிருக்கலாம். இருமொழிப் பழக்கம் இடங்கொண்டு ஒருவழிப்படு மாயின் மணிப்பவள நடையோடு நடைகொள்ள லெளிதாம். இக்கலியுகத்திலும் கலி ஸாதுவாதல் உளதாம். பெண்பாலாரும் சூத்ரர்களும் ஸாதுவாகுங் காலம். குலந்தாங்கு ஜாதியரெல்லாரும் அநுஷ்டிப்பதாகிய பகவந்நாம ஸங்கீர்த்தநம் தானது. வர்ணாச்ரம தர்மங்களை யழிக்குந் திறம் கலிக்கு உளதாதலால், அவ்வகையால் கலியின் குணம் கூறியதன்று. இங்கு மஹர்ஷியின் வாக்கைச் சிந்திக்கலாம்.

‘𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍 𑌕𑍃𑌤𑍇 𑌯𑌜𑌨𑍍 𑌯𑌜𑍍𑌞𑍈𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑌾𑌂 𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑍇𑌽𑌰𑍍𑌚𑌯𑌨𑍍 ।
𑌯𑌦𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌤𑌦𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌕𑌲𑍌 𑌸𑌙𑍍𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌯 𑌕𑍇𑌶𑌵𑌮𑍍 ॥’

பகவத்விஷய பாராயணஞ் செய்யும் முன்பும் மணிப்பவள க்ரந்தங்களைக் குரு ஸந்நிதியில் ஶ்ரவணம் செய்யும் முன்பும், பூர்வாங்கமாக நம்மவர்கள் இருமொழியிலும் பயிற்சி செய்தல் இன்றியமையாததாலும் கலிக் கொடுமையால் ஸித்தாந்த நிலை க்ஷீணகதி யடையும்போது போதநா வகையாலும் ப்ரஸங்க வகையாலும் அதனைத் தலையெடுக்கச் செய்யப் பாஷைகள் ஸாதந மாதலாலும் பாஷாஜ்ஞாந முண்டாகச் சில நூல்களை இவர்கள் கற்க வேண்டும். இலக்கணநூல் ந்யாய நூற்பழக்க மில்லார் கல்வி பயனளிக்காது.

‘𑌕𑌾𑌣𑌾𑌦𑌂 𑌪𑌾𑌣𑌿𑌨𑍀𑌯𑌞𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍋𑌪𑌕𑌾𑌰𑌕𑌮𑍍 ।
[illegible] ॥’

எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. (குறள்.)

இவ்விரு கருவிகளும் சாஸ்த்ர ஆராய்ச்சிக்கு இரு கண்கள் போன்றதென்றார் திருவள்ளுவரும். இவர் குறளும் சங்கத்தார் குறளும் பகவத்விஷய உரைகளில் எடுத்துக் காட்டப்பட்டன. பாஷா ஜ்ஞாநமும் போதநா சக்தியும் முக்யமாகின்றன. சிறுவர்கள் படிப்பு விஷயத்தில் ஒழுக்கநிலை இடமுற முதல் முதலிலே முக்யமாய சிறுநூல்களைப் போதித்து நெட்டுருச் செய்வித்து, அவர்கள் மனதில் அவைகள் வேரூன்றும்படி செய்தல் வேண்டும். இப்படிச் செய்யாமையால் உலகநடைப் படிப்பு ஒழுக்கமின்றிக் கோணலாகிக் குலக் கேட்டையும் மரணத்தையும் உண்டாக்குகின்றன. பேசுந் திறமை வாய்ந்த நம் சிறுவர்களை ப்ரஸங்கம் செய்யப் பழக்குவித்து நமது நாடு புறநாடுகளிலுஞ் சென்று ப்ரஸங்கம் செய்ய அனுப்பவேண்டும். ப்ரஸங்க விஷயங்கள் வாக் கலங்காரமாய் ஸபைகளில்மட்டும் முழங்காது வெளியிடங்க ளெங்கும் பரவச்

சஞ்சிகா ரூபமாய்த் தமிழிலும் ராஜ பாஷையிலும் நாடெங்கும் பரவச்செய்யவும் வேண்டும். புறநாட்டுப் போதகரிலும் நமது நாட்டாரிடம் ஏராளமான உண்மை நூல்களும் புத்தி நுட்பமுமிருந்தும், பொது நன்மைக்கு உழைக்க மனமில்லாமலும் வகையறியாமலும் பக்கபல மில்லாமலும் நமது தர்சநங்களின் நிலை பரிதாபத்திற் கேதுவாகின்றது. இராஜ தந்த்ரங்களில் தலையிட்டுக்கொள்ளாமலும் இராஜ பக்தியில் எள்ளளவுங் குறையாமலும் த்ருடமாய் நமது வேலையை நாம் ஸந்தோஷமாய்ச் செய்யலாம். தலைவர்களாம் போதகர்கள் மாதாந்த ஸஞ்சிகையாலும் ப்ரஸங்கத்தாலும் திவ்யதேச ஸஞ்சாரத்தாலும் புதிய ஸபைகளை ஏற்படுத்துவதாலும் தொழிலைத் திடமுறச்செய்யலாம்.

முக்யப் படிப்பு.

தமிழ்ப்பாடல். 1. நீதிநூல் ஆத்திசூடி முதல் ஏழு. 2. மணவாள நாராயண சதகம். 3. கோவிந்த சதகம். 4. பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் ப்ரபந்தம். 5. வசனம்.பஞ்சதந்திரம். 6. ஐந்திலக்கணம். 7. தர்க்க ஸங்க்ரஹம், பாஷை.

வடமொழிபத்யம். 1. பாலராமாயணம். 2. ஸஹஸ்ரநாமம், 3. நீதிஸாரம். 4. லகுகவுமுதி. 5. கத்தியம் - பஞ்சதந்த்ரம். 6. சந்த்ராலோகம். 7. தர்க்க ஸங்க்ரஹ தீபிகை.

தில்லையம்பூர் ஸோமயாஜி,
வேங்கடராம ஐயங்கார்,
தமிழ்ப் பண்டிதர்.

1916-ம் வருஷம் டிஸம்பர் மாஸத்தில் சேர்ந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸதஸ்ஸின் சாயா படம் (Group Photo) விலைக்கு அகப்படும். காபி ஒன்றுக்கு ரூபாய் 2. படத்தை அபேக்ஷிக்கிறவர்கள் மயிலாப்பூர் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபைக் கார்யதர்சிகளுக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

சீலமில்லாச் சிறியனும் அவன் மனமும்.

𑌯𑌦𑍍𑌵𑌶𑍇 𑌤𑍍𑌵𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌵𑌶𑍍𑌯𑌤𑌾 𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑍇 𑌶𑍍𑌰𑍁𑌤𑍌 ।
𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀 𑌪𑌦𑌪𑌂𑌕𑌜𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇 ॥

ஓ மித்ரனை மநஸ்ஸே! நீ ப்ரளயாவஸாநம் முதல் மோக்ஷபர்யந்தம் என்னை விட்டுப் பிரியாதவனன்றோ? நீயன்றோ ஸமயத்தில் எனக்கு அநுகூல வ்ருத்தியைப் பண்ண வேண்டியவன்! இந்த ப்ரபஞ்சம் முழுவதும் உன் வசத்திலிருக்கின்றது. நீ ஒருவனுக்கும் வசப்பட்டவனன்றென்று '𑌮𑌨𑍋𑌵𑌶𑍇 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌬𑌭𑍂𑌵 𑌨𑌾𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌮𑌨𑍋 𑌵𑌶𑌮𑌨𑍍𑌵𑌿𑌯𑌾𑌯' என்கிற ஶ்ருதி வாக்யம் சொல்லுகிறது. கடவல்லியும் '𑌯𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌾𑌨𑍍 𑌭𑌵𑌤𑌿' என்று ஆரம்பித்து, எந்தப் புருஷனுக்கு மநஸ் ஸமீசீநமாக வில்லையோ அவனுக்குத் துஷ்டக் குதிரைகள் ஸாரதிக்கு வசப்படாபோல், இந்த்ரியங்கள் வசப்படுவதில்லை. வஶ்யமில்லாத மநஸ்ஸை யுடையவன் ஸர்வதா அசுத்தனாய், புநராவ்ருத்தி இல்லாத பரமபதத்தையு மிழந்து ஸம்ஸாரத்தில் உழன்று கொண்டிருப்பன். எவனுக்கு மநஸ் ஸமீசீநமாக விருக்கின்றதோ, அவனுக்கு, நல்ல குதிரைகள் ஸாரதிக்கு வஶ்யப்படுமாப்போல் இந்த்ரியங்கள் வஶ்யப்படுவதுடன் அவன் ஸர்வதா ஶுசியாய் அபுநராவ்ருத்தமான பரமபதத்தையும் அடைகிறானென்று ஶ்ருதி உத்கோஷிக்கின்றதல்லவா? ஒன்றுக்குங் கோசரமில்லாத பரம புருஷனும்

சுத்தமான உன்னால் க்ரஹிக்கப்படுகிறானென்று ‘𑌨 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 𑌨𑌾𑌪𑌿 𑌵𑌾𑌚𑌾 𑌮𑌨𑌸𑌾 𑌤𑍁 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑍇𑌨 𑌮𑌨𑍋𑌮𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌶𑌰𑍀𑌰𑌨𑍇𑌤𑌾’ என்கிற வாக்யங்கள் சொல்லுகின்றன. நீ விஷய ப்ரவணனால் ஸம்ஸார பந்தமும், நீ விஷய நிவ்ருத்தனால் மோக்ஷமும் ஸித்திக்குமென்பதை ‘𑌮𑌨 𑌏𑌵 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌬𑌨𑍍𑌧𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑍋𑌃 । 𑌬𑌨𑍍𑌧𑌾𑌯 𑌵𑌿𑌷𑌯𑌾𑌸𑌙𑍍𑌗𑌿 𑌮𑍋𑌕𑍍𑌷𑍇 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌷𑌯𑌂 𑌮𑌨𑌃’ என்று மஹர்ஷி அறுதியிட்டார்.

அஷ்டாங்க யோகத்தில் இழிய வேண்டியவன் முதலில் மநஸ்ஸையே ஶுபாஶ்ரயத்தில் நிறுத்தி, அது ஸர்வாவஸ்தையிலும் ஶுபாஶ்ரயத்தினின்று சலியாமலிருந்தால் தாரணா ஸித்தியை நிஶ்சயித்துப் பிறகு யோகத்தை அநுஷ்டிக்கக் கடவனென்று ‘𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑍇𑌨 𑌪𑌵𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌹𑌾𑌰𑍇𑌣 𑌚𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 । 𑌵𑌶𑍀𑌕𑍃𑌤𑍍𑌯 𑌤𑌤𑌃 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌚𑍇𑌤𑌃 𑌶𑍁𑌭𑌾𑌶𑍍𑌰𑌯𑍇 । [illegible]’ இத்யாதி ப்ரமாணங்கள் விதிக்கின்றன. மநோவ்ருத்தி நிரோதத்தையே யோகமென்று ‘𑌯𑍋𑌗𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌰𑍋𑌧𑌃’ என்ற பாதஞ்ஜல ஸூத்ரம் சொல்லுகிறது. இப்படி வந்த மோக்ஷாதி ஸர்வமும் உனக்கு அதீநமாயிருக்க, நீ என்னை நிவ்ருத்தி மார்க்கத்தில் மூட்டாமல் விஷய ப்ரவணனாக்குவது ந்யாய்யமோ? ஜந்மாந்தர ஸுக்ருத விஶேஷத்தால் ஒருவன் நிவ்ருத்தி மார்க்கத்தில் நடைபெறுங் காலத்தில், நீ சஞ்சலனாய் அவனை விஷயங்களில் ப்ரவ்ருத்தனாகச் செய்வதைக் கணிசித்தல்லவோ ‘𑌚𑌞𑍍𑌚𑌲𑌂 𑌹𑌿 𑌮𑌨𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌪𑍍𑌰𑌮𑌾𑌥𑌿 𑌬𑌲𑌵𑌦𑍍𑌦𑍃𑌢𑌮𑍍 । 𑌤𑌸𑍍𑌯𑌾𑌹𑌂 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌵𑌾𑌯𑍋𑌰𑌿𑌵 𑌸𑍁𑌦𑍁𑌷𑍍𑌕𑌰𑌮𑍍 ॥’’ என்று ஸர்வஜ்ஞ ஸகாவான அர்ஜுநன் சொன்னான். அதைக்கேட்டு ஸர்வஜ்ஞனும், ‘ஏன் ஸம்ஶயப்படுகிறாய்? அந்த விஷயத்தில் எனக்கு ஸம்ஶயமில்லை. (𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋) உன் பாஹுபலத்தினால் மநஸ்ஸை நிக்ரஹிக்க முடியாது. (𑌮𑌨𑌃) ஸாவயவமாய் இந்த்ரியங்களுக்குப் புலப்படும் வஸ்துவானாலன்றோ அதை ஸுலபமாய் நிக்ரஹிக்க ப்ரயத்நிப்பது? அது ஆந்தர பதார்த்தமாய் அணுவாயன்றோ இருப்பது! (𑌦𑍁𑌰𑍍𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌂) நாம் கஷ்டப்பட்டும் அதை நிக்ரஹிப்பதரிது. (𑌚𑌲𑌂) மநஸ்ஸுக்குச் சாஞ்சல்யம் வந்தேறியானால் அதை நீக்க முடியும். அது ஸ்வாபாவிகமாச்சுதே! என்று ப்ரத்யுத்தரம் அளித்தான்.

நீ பத்து இந்த்ரியங்களையும் உனக்கு ஸ்வாதீநமாக்கிக்கொண்டு ஆசார்ய ஸம்பந்தத்தால் ஹேயோபாதேய விபாகத்தையறிந்து, பகவத் விஶ்லேஷா ஸஹிஷ்ணுக்களான மஹான்களையும் ஸம்ஸார ஸாகரத்தின் மத்யத்தில் நிறுத்தி விலபிக்கும்படி செய்வதைக் கண்டன்றோ ‘[illegible]’, என்கிற ஶ்லோகத்தில் நம் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் உன்னை ராவணனாக ரூபித்துப் பேசினார். நீ ப்ராசீந ஸுக்ருத விஶேஷ ஸஹகாரியாய் எனக்கு ஆசார்ய ஸம்பந்தத்தையும் அதனடியாக ஹேயோபாதேய ஜ்ஞாநத்தையும் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி விபாக ஜ்ஞாநம் முதலானவற்றையும் உண்டு பண்ணி பல காலத்தில் வக்ரித்து ஸம்ஸார பந்தத்திலேயே அழுத்தப் பார்க்கின்றனையே! ஆதிமுதல் நீ ஒருபடிப் பட்டிருந்தால் விசாரமில்லையே! ‘[illegible] 𑌨𑍋 𑌹𑌿 𑌵𑌿𑌷𑌾𑌦𑍀 𑌨 𑌵𑌿𑌷𑌾𑌦𑍀 𑌭𑌵𑌤𑌿 𑌜𑌾𑌤𑍁 𑌨𑌃’ என்றன்றோ நிருபகர்களின் வார்த்தை. நீ இத்தனை நாளாய் என்னை ஶமதம வ்ருத்த ஸம்யிகளில் நைஷ்டிக பாவனையைப் பண்ணும் டாம்பிகர்களைக் காட்டிலும் பத்துகோடி பங்கு அதிகமான அடம்ப டம்பனாக்கி, ‘[illegible]’ என்று ஸர்வதந்த்ர ஸ்வதந்

த்ரர் சொன்னபடி, பரமைகாந்திகளுடைய அநுகரண மாத்ரத்தையே செய்வித்தையே யொழிய, '𑌨𑌿𑌜𑌕𑌰𑍍𑌮𑌾𑌦𑌿 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑍀𑌤𑍍𑌯𑍈𑌵 𑌕𑌾𑌰𑌿𑌤𑌃। 𑌉𑌪𑌾𑌯𑌤𑌾𑌂 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑍇𑌦𑍍𑌦𑍇𑌵𑍇 𑌤𑍁 𑌤𑌾𑌮𑌭𑍀𑌃' என்று ஆளவந்தார் அருளிச்செய்தபடி ஒரு வேளையாவது ப்ரீதி பூர்வகமாகப் பகவந் நித்ய நைமித்திக கர்மங்களைச் செய்வித்ததுண்டோ? ப்ரபாத ஸமயத்தில் '𑌨𑌾𑌹𑌾𑌰𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍋 𑌧𑌰𑍍𑌮𑌮𑍇𑌵𑌾𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌤𑍍' என்று விதித்த தர்ம சிந்தையில் ப்ரவ்ருத்தி பண்ணி வைக்காமல் அர்த்த காம சிந்தையோடன்றோ என்னை நீ எழுப்புவது! எழுந்தவுடன் செய்ய வேண்டிய அபரராத்ரி யோகத்தை ஆசார்ய ஸந்நிதியில் ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷாதி ஸேவா முகத்தாலே அறிந்தது மாத்ரமே யொழிய உன் ஸஹாயத்தைக் கொண்டு அநுஷ்டித்த திநமில்லை. குயவன் சக்ரத்தைச் சுழற்றிவிட்டால் சிலகாலம் தானாய்ச் சுற்றுமாப்போல், பெரியோர்கள் செய்து வைத்த ஸந்த்யோபாஸநம் முதலிய அநுஷ்டாநாபிநயங்களை யன்றோ நான் தினந்தோறும் அநுஷ்டித்து வருகிறேன். முதலில் ப்ரணவ பூர்வகமாய் நம꞉ பதஶிரஸ்கமாய் சதுர்த்யந்தங்களுமான பதினைந்து பகவந்நாமங்களை உச்சரித்து விதிப்படி ஓர் ஆசமநமும் செய்தறியேன். ஸப்த லோக ஶரீரகஞ்க ஶரண்யனை த்யாநித்து, காயத்ரீ அதன் ஶிரஸ் இவைகளின் அர்த்தங்களைச் சிந்தித்து, ரேசக பூரக கும்பக பூர்வகமாக ஒரு ப்ராணாயாமமும் செய்தறியேன். பகவானையே ப்ரதிபாதிக்கிற அந்தந்த மந்த்ரங்களின் அர்த்தத்தை அநுஸந்தித்து, ப்ரோக்ஷண ரூபங்களான அங்கங்களை அநுஷ்டித்து ஸூர்ய மண்டல மத்யவர்த்தியாய் ரமணீய கேஶனாய் ரமணீய சரீரகனாய் அகாதமான ஜலத்தில் முளைத்து ஸூர்ய கிரணங்களால் அலர்த்தப்பட்டு நாளத்தில் மலர்ந்திருக்கும் செந்தாமரை போன்ற திருக்கண்களை யுடையவனுமான நம் ஶரண்யன் திருவடிகளில் யதாஶாஸ்த்ரம் அர்க்யதாந ரூபமான அங்கியையும் அநுஷ்டித்தறியேன். மேலே ஜபாதி காலங்களில் நீ ஸர்வ விஷய ஸஞ்சாரியா யிருப்பது உனக்கே விஶத

மன்றோ? நளிநாக்ஷ மாலாதிகளைக் கையில் எடுக்கும்போதெல்லாம் இந்த * ஆள் மருட்டுங் கொட்டையையும் † விருவிருத்தான் பூண்டையும் ‡ நாக்கறுத்தான் புல்லையும் கண்டன்றோ ஜநங்கள் ப்ரமிக்கின்றார்கள் என்று ஸ்ரீ ஈச்சம்பாடியர் தேசிகாசார்யர் ஸ்வாமி சொன்னது ஜ்ஞாபகத்திற்கு வருகிறது. வேஷதாரியான நம் போலியர் விஷயத்தில் அவர் சொன்னது உண்மையே. '𑌨𑍈𑌵 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌨𑍈𑌵 𑌹𑌾𑌸𑍍𑌯𑌂 𑌨 𑌪𑌾𑌷𑌣𑍍𑌡𑍈𑌰𑍍𑌵𑌿𑌲𑍋𑌕𑌯𑍇𑌤𑍍' இத்யாதிகளால் ஜபகாலத்தில் விதிக்கப்பட்ட நியமங்களில் நாம் அநுஷ்டித்தது ஒன்றுமில்லை. வம்பளப்பு மலிவாய் இருக்குமிடந்தேடியன்றோ நம்போலியர் அநுஷ்டாநத்திற்குப் போவது! அவனூதருக்கும் யதுவுக்கும் நடந்த ஸம்வாதத்தில் குமாரி என்னும் ஆசார்யனிடத்திலிருந்து அவதூதர் க்ரஹித்த விஷயத்தைப் பலதரம் கேட்டிருந்தும் அது உன் உள்ளத்தில் இறங்கவில்லையே! ஓ! நண்பனான மனமே! அந்தக் கதையை மற்றும் ஒருதரம் சொல்லுகிறேன். ஸாவதாநமாய்க் கேள். ஓர் ஆஶ்ரமத்தில் ஓர் கந்நிகையை விவாஹார்த்தம் கேட்பதற்காகச் சில ப்ராஹ்மணர்கள் வந்தனர். அந்த ஸமயத்தில் அந்தக் கந்நிகையின் மாதா பிதாக்கள் க்ராமாந்தரம் சென்றிருந்தமையால், அந்தக் கந்நிகையே வந்த வேதியர்களை ஆராதிக்க யத்நித்தாள். அப்பொழுது தாரித்ர்யம் விஞ்சியிருந்தமையாலும் கடன் கொடுப்பா ரில்லாமையாலும் தானே தன் அகத்தில் முன்னால் ஸஞ்சிதமா யிருந்த நெல்லைக் குற்ற வேண்டி வந்தது. அவள் கதவைச் சாத்திக் கொண்டு நெல்லுக் குற்ற ஆரம்பித்தவுடன் அதிதிகளும் ஸ்நாநாதி நித்ய கர்மங்களை முடித்துக்கொண்டு வாசல் திண்ணையில் உட்கார்ந்தார்கள். அப்பொழுது அச்சிறுமியும் அதி லஜ்ஜிதையாய்க் குற்றும்பொழுது கலீரென்று ஶப்திக்கும் இரு கை வளைகளையும் உடைத்து, ஒவ்வொரு

---

* ஆள் மருட்டுங் கொட்டை - தாமரைமணி, துளஸிமணி முதலியன.

† விருவிருத்தான் பூண்டு - இரண்டு காதுகளிலும் வைக்கும் துளஸீ.

‡ நாக்கறுத்தான் புல் - இரண்டு கைகளில் அணியும் தர்ப்ப பவித்ரங்கள்.

கைக்கும் இரண்டு வளைகளை மாத்ரம் மீற்றிக்கொண்டு, மறுபடி குற்ற ஆரம்பித்தாள். அப்பொழுதும் அவ்வளைகள் ஸ்வல்பமாக ஶப்திக்கக் கண்டு இரண்டிலும் ஒன்றை உடைத்து ஒவ்வொரு கையிலும் ஒவ்வொன்றையே மீற்றிக் கார்யத்தை நடத்தினாள். இதனால் பலரிருந்தால் கலஹமும், இரண்டுபேர் இருந்தால் வார்த்தையும் நடக்குமாகையால் ஒருவனாயிருந்தே அநுஷ்டாந பகவச்சிந்தநாதிகளைச் செய்ய வடுக்கும் என்று தான் க்ரஹித்ததாக '𑌵𑌾𑌸𑍇 𑌬𑌹𑍂𑌨𑌾𑌂 𑌕𑌲𑌹𑍋 𑌭𑌵𑍇𑌦𑍍𑌵𑌾𑌰𑍍𑌤𑌾 𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑌪𑌿 । 𑌏𑌕 𑌏𑌵 𑌵𑌸𑍇𑌤𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑍍𑌯𑌾 𑌇𑌵 𑌕𑌙𑍍𑌕𑌣𑌃 ॥' என்கிற ஶ்லோகத்தால் அவதூதர் உபதேசித்தனர்.

(இன்னும் வரும்.)

இஞ்சிமேடு. ரங்கநாதாசார்யர்.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑌿𑌯𑍈 𑌨𑌮𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை.

ஆறுவது வார்ஷிக மஹா ஸங்கம்.

பரம காருணிகனான ஸ்ரீ ஆதி கேசவ ஸ்வாமியின் அநுக்ரஹத்தினால், திருமயிலாப்பூரில் அர்ச்சா ரூபியாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனுடைய திருவடி வாரத்தில், சென்ற 1916-ம் ௵ டிஸம்பர் ௴ 27, 28, 29-ம் தேதிகளில், ஆறுவது ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸங்கம், பூர்வமே ஏற்படுத்தப்பட்டிருந்த க்ரமத்தை அநுஸரித்து மிகுந்த சிறப்புடன் நடைபெற்றது. இந்த ஸதஸ் விஷயத்திலும் நமது ஸித்தாந்தத்திலும் மிக்க ஊக்கமுள்ளவர்களாக விருக்கும் அநேக வைதிகர், லௌகிகர், இவர்களின் ஸஹாயத்தின் பேரில், ஸதஸ்ஸின் நிஷ்பத்திக்கு அபேக்ஷிதமாயுள்ள பூர்வாங்கங்களெல்லாம் எவ்வித குறைவுமின்றிக்குப் பூர்த்தி பெற்றிருந்தன. ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் ஸந்நிதியின் தர்மகர்த்தர்களால் க்ருபையுடன் ஸதஸ்ஸின் உபயோகத்திற்காகக் கொடுக்கப்பட்டிருந்த ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகன் மண்டபத்தில் ஸதஸ் சேர்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளும், அந்த மண்டபத்தைச் சேர்ந்துள்ள கிடங்கிலும் வாஹந மண்டபத்திலும் முற்ற வெளியிலும் ததீயாராதநத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளும் வ்யவஸ்தை செய்யப்பட்டிருந்தன. ஸதஸ் சேர்வதற்கு இரண்டொரு தினங்கள் முன்னதாகவே ஸ்ரீ உப. இஞ்சிமேடு ரங்கநாதாசார்யர் ஸ்ரீ உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர் முதலிய சில வித்வாங்களும், ஸ்ரீ. உப. ஸி. ராஜகோபாலாசார்யர் முதலிய சில லௌகிக ஆஸ்திகர்களும் எழுந்தருளி, ஸதஸ்ஸின் உபக்ரமத்திற்காக வேண்டிய ஸம்விதாநங்களை யெல்லாம் பரிசீலநம் செய்து, அவைகளைப் பூர்த்திசெய்வதில் மிக்க ஸஹாயத்தைச் செய்தார்கள். வெளி ஊர்களிலிருந்து ஸதஸ்ஸை உத்தேசித்து வரும் அதிதிகளின் ஸௌகர்யத்திற்காக, ஸ்ரீ ஆதி கேசவஸ்வாமி ஸந்நிதியைச் சேர்ந்ததான ஸ்ரீ ராமாநுஜகூடமென்று வ்யவஹரிக்கப்படும் ரமணீயமான மண்டபமும், சித்திர குளத்தின் வடகரையிலுள்ள பாலிகாபாடசாலையும், ஸதஸ் ஸம்பந்தமான

4 [illegible]ங்களுக்கு ஸபையின் ஸ்வாதீநத்தில் இருக்கும்படி ஸம்பாதிக்கப்பட்டிருந்தன. ஸ்ரீ ராமாநுஜகூடத்தின் அதிகாரிகளும், பாலிகா பாடசாலையின் கார்யதர்ஶியும் அந்த ஸ்தலங்களைக் கொடுத்து க்ருபையுடன் ஸஹாயம் செய்தது ஒரு பொழுதும் மறக்கத் தகுந்ததன்று.

மயிலாப்பூர் ஸ்தல வாஸிகளான ஸ்ரீ. உ.ப. பி. என். ஸ்ரீநிவாஸாசார்யர், இ. ஶார்ங்கபாணி ஐயங்கார், எம். சேஷாசார்யர், எம். ஸ்ரீநிவாஸாசார்யர், ஸி. பி. ஸ்ரீநிவாஸாசார்யர், கட்டம் நரஸிம்ஹாசார்யர் முதலிய அநேக ஆஸ்திகர்கள், இந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸதஸ் இவ்விடத்தில் நடைபெறப்போகிறது என்று கேட்ட க்ஷணம் முதல் அது விஷயத்தில் மிகுந்த உத்ஸாஹம் கொண்டவர்களாய், மயிலாப்பூரில் ஏற்கெனவே ஏற்பட்டுள்ள ஸ்ரீ வடகலை ஸபையின் அங்கத்தினர்களெல்லாரையும் ஒன்றுசேர்த்து, ஸதஸ்ஸின் கைங்கர்யத்தைச் சரிவர நடத்துவதற்காக அவர்களுக்கு ஸதஸ்ஸின் 'வாலன்டியர்' என்று பெயர் கொடுத்து, அவர்களைக்கொண்டு ஸதஸ்யர்களாக எழுந்தருளும் ஸ்வாமிகளுக்கு ஆதித்யம் செய்விப்பதிலும் இன்னும் ஸதஸ் ஸம்பந்தமான மற்றை அம்ஶங்களிலும் எவ்வித குறைவும் ஸம்பவியாமல் பார்ப்பதிலும் அதிமாத்ரம் ஜாகரூகர்களாக இருந்துகொண்டு ஸதஸ் நடத்துவதைத் தங்களுடைய சொந்த கார்யம்போல் கவனித்து வந்தார்கள். இவர்களுடைய உதவி இல்லாவிட்டால் ஸதஸ் நடைபெற்றிராது என்பது நிஶ்சயம். வாலன்டியர்கள் இது விஷயமாக எடுத்துக்கொண்ட ஶ்ரத்தையும், ஐகமத்யத்துடன் ஸகல கார்யங்களையும் தங்களுக்குள் விபாகித்துக்கொண்டு ஒன்றுக்கும் லோபம் வராமல் அவர்கள் நிர்வஹித்து வந்த திறமையும் அத்யாஶ்சர்யகரங்களாக இருந்தன.

ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகன் முதல் முதலில் அர்ச்சாரூபியாக அவதரித்த தினமாகிற மார்க்க ஶீர்ஷ ஶ்ரவண நக்ஷத்ரம் கூடிய மார்கழிமீ 13உ புத வாரத்தில், மத்யாஹ்நம் ததீயாராதநம் ஆன பிறகு சற்றேறக்குறைய 2-மணிக்கு ஸதஸ்ஸை உத்தேசித்து எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளெல்லாரும் ரமணீயமாக அலங்கரிக்கப்பட்டிருந்த ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகன் மண்டபத்தில் அளவற்ற ஆநந்தத்துடனும் குதூஹலத்துடனும் ஒன்று சேர்ந்தனர். ஸபையின் அங்கத்தினர்களாகவும் மைஸூர், ஸ்ரீரங்கம், தஞ்சாவூர், திருநெல்வேலி முதலிய இடங்களிலிருந்து அதிதிகளாகவும் எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளின் ஸங்க்யை சற்றேறக்குறைய ஐந்நூறு இருக்கலாம். ஸ்ரீ. உ.ப. திவான் பஹதூர் டி. டி. ரங்காசார்யர், ராவ் பஹதூர் ராமஸ்வாமி ஐயங்கார், திருவல்லிக்கேணி டி. நரஸிம்ம ஐயங்கார், மயிலாப்பூர் வி. ஸி. ஶேஷாசார்யர், டி. ராஜகோபாலாசார்யர், கூடலூர் டி. இ. ஶடகோபாசார்யர், சைதாப்பேட்டை டி. ரங்கஸ்வாமி ஐயங்கார், செங்கல்பட்டு வி. இ. சின்னஸ்வாமி ஐயங்கார், மைஸூர் நாராயண ஐயங்கார், ஆள்கொண்டவில்லி கோவிந்தாசார்யர், ஸி. ஸ்ரீநிவாஸாசார்யர், எஸ். வரதாசார்யர், முதலிய லௌகிக வித்வாந்களும், ஸ்ரீ. உ.ப. சேட்லூர் நரஸிம்ஹாசாரியர், இஞ்சிமேடு ரங்கநாதாசாரியர், புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசாரியர், ஸ்ரீஶைலம் தாதாசாரியர், வாங்கல் ஸ்ரீநிவாஸாசாரியர் முதலிய வைதிக வித்வாந்களும், ப்ரஹ்ம ஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி ஶாஸ்த்ரிகள், எ. பஞ்சாபகேஶ ஐயர், எஸ். கஸ்தூரி ரங்க ஐயர் முதலிய அதிதிகளும் இன்னும் அநேக ஆஸ்திக ஶிரோமணிகளும் அப்பொழுது அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்தவர்களுட் சிலர்.

இரண்டு மணி ஆனதும், அன்றைதிநம் அக்ராஸநாதிபதியாக இருக்கும் ஆநரெபில் ஜஸ்டிஸ் கே. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸதஸ்ஸுக்கு எழுந்தருளுவதைக் கண்டு, ஸ்ரீ. உ.ப. டி. ராஜகோபாலாசார்யர், ஸபையின் அதிகாரிகளுட் சிலருடனும் அநேக வைதிக வித்வான்களுடனும் எதிர்கொண்டு போய், ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன் ஸந்நிதிக்கு எதிரில் பூர்ண கும்பத்துடன் ஸத்கரித்து, ஸ்வஸ்தி வாசநத்துடன் மண்டபத்துக்கு அழைத்துவந்தார். தேசிகன் ஸந்நிதிக்கு எதிரிலும் வீதியிலும் பல இடங்களில் தோரணங்களால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. எல்லாரும் மண்டபத்தில் ஒன்று சேர்ந்தவுடன் ஸ்ரீ. உ.ப. ராவ் பஹதூர் எஸ். ராமஸ்வாமி ஐயங்கார், ஸபையின் ப்ரதிநிதியாக இருந்துகொண்டு, ஸதஸ்ஸுக்காக எழுந்தருளியிருக்கும் ஸ்வாமிகளெல்லாருக்கும் மிகுந்த ஆதரத்துடன் ஸ்வாகதம் சொல்லி, அந்த ஸந்தர்ப்பத்தில், ஸ்ரீ மயிலாப்பூரின் வைதிக மாஹாத்ம்யத்தின் பெருமையையும், இம்மாதிரியான ஸதஸ் சேர்வதற்கு அந்த ஸ்தலத்தின் ஆநுரூப்யத்தையும் விஸ்தாரமாக உபபாதநம் செய்தார். அந்த உபபாதநம் இந்தத் தீபிகையின் சென்ற மாஸத்திய ஸஞ்சிகையில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. பிறகு, ஸதஸ்ஸின் அக்ராஸநாதிபதியாகிற ஸ்ரீ. உ.ப. கே. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், மிகுந்த உத்ஸாஹத்துடன் ஸதஸ்யர்களனைவரும் கரகோஷத்தைச் செய்ய, எழுந்து, ஸர்வப்ரகாரத்திலும் அதிமாத்ரம் ஶ்லாகிக்கத்தக்கதாயுள்ளதும், தமக்கு இந்த ஸித்தாந்தத்திலுள்ள அபிமாநத்தை விளக்கக்கூடியதுமான ஓர் அத்புத உபந்யாஸத்தைச் செய்தார். சில அஸௌகர்யங்களால் அந்த உபந்யாஸம் இங்க்லிஷ் பாஷையிலேயே செய்யும்படி ஸம்பவித்தது. சென்ற ஸஞ்சிகையில் அது இங்க்லிஷ் பாஷையிலேயே ப்ரசுரம் செய்யப்பட்டிருந்தது.

அது முடிந்தவுடன், ஸ்ரீ. உப. டி. ராஜகோபாலாசார்யர், “ஸ்ரீ பாஞ்சராத்ரமும் ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஆசாரமும்” என்னும் விஷயத்தைப்பற்றிச் சிறந்ததோர் உபந்யாஸத்தைச் செய்தார். இந்த உபந்யாஸமும் இங்க்லிஷ் பாஷையிலேயே செய்யப்பட்டது. ஆனால், அதன் ஸங்க்ரஹம் சென்ற ஸஞ்சிகையிலேயே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. அதற்குப் பிறகு ஸ்ரீ. உப. இஞ்சிமேடு ரங்கநாதாசார்யர், சார்வாக மதத்தின் கொள்கைகளை ஸங்க்ரஹமாக உபபாதநம் செய்து, பிறகு அந்தக் கொள்கைகளின் அஸாதுத்வத்தைப் பலவாறாக வெளியிட்டு, அதீந்த்ரிய வஸ்துக்களின் ஜ்ஞாநத்தில் நமது யுக்தி அத்யந்தம் அநுபயுக்த மென்பதையும் த்ரிகால ஜ்ஞாநிகளாகவும் பகவத் ப்ரியர்களாகவுமுள்ள மஹர்ஷிகள் வழியாக வெளிவந்திருக்கும் ஶ்ருதி ஸ்ம்ருதிகளே நமக்கு உத்தாரகங்களென்றும் விஶதமாக விவரித்தார். அந்த உபந்யாஸம் முடிந்தவுடன் அக்ராஸநாதிபதி ஸ்ரீ. உப. கே. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், ம-ள-ள-ஸ்ரீ ராவ் ஸாஹிப் ஸி. ராமாநுஜம் செட்டியார் அவர்கள் இந்த ஸதஸ்ஸின் உபயோகத்திற்காக ரூபா 100 கொடுத்திருக்கிறாரென்று ஸதஸ்ஸுக்குத் தெரியப்படுத்தி, அவருடைய தர்ம சிந்தையைப் பற்றியும் இம்மாதிரியான ஸத்விஷயங்களுக்கு அவர் செய்யும் பெரிய உதவியைப் பற்றியும் புகழ்ந்து பேசினார். ஸதஸ்யர்களெல்லாரும் கரகோஷத்தினால் அதை அநுமோதித்தார்கள்.

பிறகு, ஸபாத்யக்ஷரான ஸ்ரீ. உப. திவான் பஹதூர் டி. டி. ரங்காசார்யர், ஸ்ரீ. உப. கே. ஸ்ரீநிவாஸ ஐயங்காருக்கு, அவர் அன்றை திநம் இந்த ஸதஸ்ஸின் அக்ராஸநாதிபத்யத்தை வஹித்து ஸதஸ்ஸுக்கு அஸாதாரண கௌரவத்தையும் தென்பையும் ஸம்பாதித்துக் கொடுத்த நிமித்தம் ஸதஸ்யர்கள் அவர் விஷயமாகக் கொண்டிருக்கும் க்ருதஜ்ஞதையை ஆவிஷ்கரிக்கவே, அன்றை ஸதஸ் முடிவு பெற்றது.

இரவில் 8-மணிக்கு விஶேஷித்த ததீயாராதநம் நடந்தவுடன், சற்றேறக்குறைய 9-மணிக்கு, ஸெக்ரிடேரியட் ஆபீஸில் உத்யோகஸ்தராயுள்ள ஸ்ரீ. உப. எம். கே. தாதாசார்யர், “திருமங்கை மன்னன் சரித்ரம்” என்னும் ஹரிகதையை, அவருடைய இயற்கையான திறமையுடனும் ரமணீயதையுடனும் காலக்ஷேப ரூபமாகச் செய்தார். அம்ருத வர்ஷம் போன்ற அந்தக் கதையை அநுபவித்து விட்டு இரவு 12-மணிக்கு, ஸதஸ்யர்களும் மயிலாப்பூர் வாஸிகளான மற்றவர்களும் எல்லாரும் விஶ்ரமார்த்தம் தங்கள் தங்கள் ஆவஸதம் போனார்கள்.

மறு திநம் வியாழக்கிழமை காலையில் மறுபடியும் ஸதஸ் சேர்ந்தது. ராவ் பஹதூர் ஸ்ரீ. உப. ராமஸ்வாமி ஐயங்கார் அக்ராஸநாதிபத்யத்தை வஹித்தார். பின் வருமாறு சில நிர்ணயங்கள் செய்யப்பட்டன :—

(i) ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ஆதரணையிற் சேர்ந்திருக்கும் இந்த ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸங்கத்தினரனைவரும், இந்தத் தேஶத்துச் சக்ரவர்த்தியினிடம் தமக்குள்ள த்ருடமும் பூர்ணமுமான ராஜ விஶ்வாஸத்தை ஸவிநயம் ஆவிஷ்கரிப்பதுடன், ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தால் இந்தத் தேஶத்திற்குக் கிடைத்திருக்கும் பல வித நன்மைகளை உணர்ந்தவர்களாய், இப்பொழுது நடந்து வரும் ஐரோப்பா கண்டத்திய மஹா யுத்தத்தில் தமது ராஜாங்கத்தார் ஶீக்ரம் ஜயமடைய வேண்டுமென்றும், அப்படி ஜயமடைவதற்கு அபேக்ஷிதமான ஸஹாயத்தைத் தம்மால் இயன்றவரையிற் செய்யத் தாம் உத்ஸாஹ ஸம்பந்நர்களாக இருக்கிறார்களென்றும் மிகுந்த விநயத்துடன் ப்ரிட்டிஷ் கவர்ன்மென்டாரிடம் விஜ்ஞாபநம் செய்து கொள்ளுகிறார்கள்.

[இந்த நிர்ணயம் அக்ராஸநாதிபதியினால் ஸதஸ்யர்களுக்கு விஜ்ஞாபநம் செய்து கொள்ளப்பட்டு, ஸதஸ்யரெல்லாராலும் மிகுந்த உத்ஸாஹத்துடன் ஆமோதிக்கப்பட்டது.]

(ii) இந்த ஸ்ரீ வைஷ்ணவ மஹா ஸங்கத்தினரனைவரும், ஸ்ரீ அஹோபில மடத்தின் ஆஸ்தாநத்தை இப்பொழுது அலங்கரித்து வரும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய ஜ்ஞாநத்தையும் அநுஷ்டாநத்தையும் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசாரத்திலுள்ள ஊக்கத்தையும் உணர்ந்தவர்களாய் அவர் விஷயமாக விஶேஷ ப்ரதிபத்தியுள்ளவர்களாய் இருக்கிறார்களென்றும், இப்பொழுது ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் யாத்ரோத்ஸவம் நித்ய திவ்யாராதநம் முதலியவற்றைக் கண்டருளும் ப்ரகாரமும், ஸ்ரீ அஹோபிலத்திற்கு ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளி ஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவத்தை நடப்பித்துவைத்த ஶ்லாக்யதமமான ரீதியும் எல்லாருக்கும் மிக்க ஆநந்தத்தை ஜநிப்பிக்கின்றன வென்றும், இது போலவே ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸம்பந்தமான கைங்கர்யத்தை த்ருப்திகரமாகச் செய்து கொண்டு பஹுகாலம் ஸ்ரீ அழகிய சிங்கர் எழுந்தருளியிருந்து ஸமஸ்த சேதந வர்க்கத்திற்கும் ஆத்யந்திக ஶ்ரேயஸ்ஸை ஸாதித்துக் கொடுக்க வேண்டுமென்று பகவானை ப்ரார்த்திக்கிறார்களென்றும் பக்தி புரஸ்ஸரமாக ஸ்ரீ அழகிய சிங்கர் ஸந்நிதியில் விஜ்ஞாபநம்செய்து கொள்ளுகிறார்கள்.

[இந்தத் தீர்மாநம் ஸ்ரீ. உப. எஸ். வாஸுதேவாசார்யரால் ஸதஸ்யர்களுக்கு விஜ்ஞாபநம் செய்யப் பெற்று ஸதஸ்யர்களெல்லாராலும் ஆமோதிக்கப்பட்டது.]

(iii) இந்த மஹா ஸங்கத்தினரனைவரும் இந்த ஸபையின் விதிகளில் கண்டிருக்கிறபடி "ரிகன்ஸிலியேஷன் போர்ட்" என்னும் 'தேவாலய ஸம்பந்த விவாத ப்ரஶமந கமிடி' ஒன்று ஏற்பட வேண்டியது அவசியமென்று எண்ணி, அந்த விஷயத்தில் கீழ் குறிக்கப்பட்டுள்ள ஸ்வாமிகள், ஶ்ரத்தையுடன் ப்ரவ்ருத்தித்து இருகக்ஷிக்காரர்களுடைய அபிப்ராயங்களையும் அறிந்து உசிதமான நிர்த்தாரணங்களை நிஶ்சயிக்க வேண்டுமென்றும், அவர்கள் எந்தத் தேவாலய விஷயத்தில் ப்ரவ்ருத்தித்தாலும் அந்தத் தேவாலயத்தின் தத்வ ஸ்திதியை விசாரித்துத் தெரிந்து கொள்வதில் தங்களுடன் அந்தந்த ஸ்தல வாஸிகளாக இருக்கும் இதர ஸ்வாமிகளையும் சேர்த்துக்கொண்டு அவர்களுடன் கூட அந்த விசாரணையில் ப்ரவ்ருத்திக்கலாமென்றும், அப்படி அவர்களாற் செய்யப்படும் ப்ரவ்ருத்திகளும் நிர்த்தாரணங்களும் ஸௌகர்யப்பட்ட காலங்களில் ஒரு வர்ஷத்திற்கு ஒரு தடவைக்குக் குறையாமல் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் கார்ய தர்ஶியின் வழியாக அந்த ஸபைக்கு அறிவிக்கப்பட வேண்டுமென்றும், இங்கு குறிக்கப்பட்டுள்ள ஸ்வாமிகளை ப்ரார்த்திக்கிறார்கள்.

(1) ஸ்ரீ. உப. திவான் பஹதூர் டி. டி. ரங்காசார்யர் பி-எ. பி-எல்
(2) ,, ,, ,, எம். ஓ. பார்த்தஸாரதி ஐயங்கார். ,,
(3) ,, ராவ் பஹதூர் எஸ். ராமஸ்வாமி ஐயங்கார் ,,
(4) ,, ஆநரபில் எழும்பூர் டி. ரங்காசார்யர் ,,
(5) ,, ஆனரபில் கே. வி. ரங்கஸ்வாமி ஐயங்கார் ,,
(6) ,, மயிலாப்பூர் எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார் ,,
(7) ,, ,, டி. ராஜகோபாலா சார்யர் ,,
(8) ,, ,, எஸ். வாஸுதேவாசார்யர் பி-எ. எல்.டி.
(9) ,, காஞ்சீபுரம் கூர்மம் ஸ்ரீரங்காசார்யர் பி-எ. பி-எல்.
(10) ,, வித்யா பூஷணம் மைஸூர் ஏ. கோவிந்தாசார்யர்.
(11) ,, காஞ்சீபுரம் கெ.எ. வீரராகவதாதாசார்யர் பி-எ எல்-டி.

இந்தக் கமிடிக்கு ஸ்ரீ. உப. கெ. எ. வீரராகவ தாதாசார்யர் கார்யதர்ஶியாக இருக்க க்ருபை செய்ய வேண்டுமென்றும் ப்ரார்த்திக்கப்படுகிறது.

[இந்தத் தீர்மாநமும் எல்லாராலும் ஆமோதிக்கப்பட்டது.]

iv. பிறகு ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் 1916-ம் வர்ஷத்திய அறிக்கையும் வரவு செலவு கணக்கும் அந்தக் கணக்கைப் பரிஶோதித்துப் பார்த்த ஆடிடருடைய அறிக்கையும் ஸதஸ்ஸால் அங்கீகரிக்கப்பட்டன. அவைகள் ஏற்கெனவே அச்சுப் பதிப்பிக்கப்பட்டு ஸபையின் அங்கத்தினர்களுக்குப் பத்து திநங்களுக்கு முன்னதாகவே அனுப்பப்பட்டிருந்தன; அக்காலத்திலும் அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாயிருந்த ஸ்வாமிகளுக்கும் கொடுக்கப்பட்டன.

v. பிறகு 1916-17-ம் வருஷத்திற்கு ஸபையின் நிர்வாஹக அங்கத்தினர் நியமிக்கப்பட்டனர். அவர்களாவார் :—

1. ஸபாத்யக்ஷர் : ஸ்ரீ. உப. திவான் பஹதூர் டி. டி. ரங்காசார்யர்.
2. தத்ப்ரதி நிதிகள் : ,, ராவ் பஹதூர் ராமஸ்வாமி ஐயங்கார்.
3. ,, டி. ராஜகோபாலாசார்யர்.
4. கார்யதர்ஶியும் கோஶாதிகாரியும் : ,, எஸ். வாஸுதேவாசார்யர்.
5. கார்யதர்ஶி மட்டில் : ,, டி. கோதண்டராம ஐயங்கார்.
6. மற்றை அங்கத்தினர் : ,, ஆனரபில் கே. வி. ரங்கஸ்வாமி ஐயங்கார்.
7. ,, ,, ஆனரபில் ஜஸ்டிஸ் கே. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்.
8. ,, ஸ்ரீ. உப. ஸி. ராஜகோபாலாசார்யர், சித்தூர்.
9. ,, ,, டி. நரஸிம்ஹ ஐயங்கார், திருவல்லிக்கேணி.
10. ,, ,, ஸ்ரீநிவாஸ ஐயங்கார், மயிலாப்பூர்.
11. ,, ,, டி. அநந்தாசார்யர், திருப்பதி.
12. ,, ,, எஸ். ராஜகோபாலாசார்யர், மதராஸ்.
13. ,, ,, குமார சக்ரவர்த்தி ஐயங்கார், திருச்சி.
14. ,, ,, ஸுந்தராசார்யர், ப்ரொதத்தூர்.
15. ,, ,, வெ. இ. சின்னஸ்வாமி ஐயங்கார், செங்கல்பட்டு.
16. ,, ,, டி. பி. ஸ்ரீநிவாஸாசார்யர், திருவெவ்வுளூர்.
17. ,, ,, ஆர். நரஸிம்ஹ ஐயங்கார், திருவல்லிக்கேணி.
18. ,, ,, கே. ஏ. வீரராகவாசார்யர், மதராஸ்.
19. ,, ,, ஸி. ஸ்ரீநிவாஸாசார்யர், திருவல்லிக்கேணி.
20. ,, ,, டி. இ. சடகோபாசார்யர், கூடலூர்.

21. ஸ்ரீ. உப. வி. ரங்காசார்யர், திருவல்லிக்கேணி.
22. ,, என். ரங்கஸாமி ஐயங்கார், கர்னூல்.
28. ,, ஆர். ரங்கஸாமி ஐயங்கார், திருநெல்வேலி.
24. ,, எம். நரஸிஹ்மாசார்யர், நெல்லூர்.
25. ,, துரைஸாமி ஐயங்கார், சித்தூர்.
26. ,, டி. ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், கோயம்புத்தூர்.
27. ,, என். கிருஷ்ணஸாமி ஐயங்கார், கும்பகோணம்.
28. ,, எஸ். டி. கிருஷ்ண ஐயங்கார், மதுரை.
29. ,, கொடியாலம் சேஷாத்திரி ஐயங்கார், ஸ்ரீரங்கம்.
30. ,, கே. எஸ். கிருஷ்ணஸாமி ஐயங்கார், நாகப்பட்டணம்.
31. ,, பி. கே, கருடாசார்யர், மைஸூர்.
32. ,, பி. ஆர். க்ருஷ்ணஸாமி ஐயங்கார், எழும்பூர்.
33. ,, டி. ரங்கஸாமி ஐயங்கார், சைதாப்பேட்டை.
34. ,, ஆர். க்ருஷ்ணமாசாரியர், மயிலாப்பூர்.
35. ,, புரோபெசர் எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மயிலாப்பூர்
36. ,, வித்யாபூஷணம் ஏ. கோவிந்தாசாரியர், மைஸூர்.
37. ,, ஸி. கோபாலசார்யர், பூந்தமல்லி.

vi. பிறகு, ஆனரபில் ஜஸ்டிஸ் ஸ்ரீ. உப. கே. ஸ்ரீநிவாஸ ஐயங்காரும், ஸ்ரீ. உப. ஆனரபில் கொடியாலம் ரங்கஸ்வாமி ஐயங்காரும் இந்த ஸபைக்குப் போஷகர்களாக இருக்க ப்ரார்த்திக்கப்பட வேண்டு மென்று நிர்ணயிக்கப்பட்டது.

vii. அடுத்த ஸம்வத்ஸரத்திய மஹாஸங்கத்தைப் பெருமாள் கோயில் என்னப்படும் ஸ்ரீ காஞ்சீ நகரத்தில் நடத்தவேண்டு மென்றும், அது ஸம்பத்தமான ஸகல பரிஶ்ரமத்தையும் ஸ்ரீ காஞ்சீநகர வாஸிகளான ஸ்ரீ வைஷ்ணவர்கள் வஹிப்பார்க ளென்றும், ஸ்ரீ. உப. ஸ்ரீ ஶைல தாதாசார்யர் ஸதஸ்ஸுக்கு விஜ்ஞாபநம் செய்தார். ஸதஸ்யர்கள் அவருடைய ஆஹ்வாநத்தை ஸந்தோஷத்துடன் அப்யுபகமம் செய்தார்கள்.

இந்த வார்ஷிக வ்யாபாரம் முடிந்தவுடன், அன்று காலையில் நடக்கவேண்டிய வாக்யார்த்தம் உபக்ரமிக்கப்பட்டது. பூர்வ தினத்தின் காலையிலேயே, இந்த வாக்யார்த்தத்திற்குப் பூர்வாங்கமாக, அப்பொழுது அவ்விடம் எழுந்தருளியிருந்த வித்வான்க ளெல்லாரும் "ஸகுண நிர்குண வாதம்" என்னும்

விஷயத்தைப்பற்றி சர்ச்சை செய்திருந்தார்கள். அதை அநுஸரித்து அதன் தொடர்ச்சியாக வாதத்தைச் செய்கிறதென்று நிஶ்சயித்தவுடன், அந்த வாத காலத்தில் ஸதஸ்ஸுக்கு அக்ராஸநாதிபதியாக இருக்கும் பொருட்டு ஸ்ரீ. உப. ஆனரபில் கொடியாலம் ரங்கஸ்வாமி ஐயங்கார் ப்ரார்த்திக்கப்பட்டார். க்ருபையுடன் அதை அவர் அங்கீகரிக்கவே, ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர் பூர்வ பக்ஷம் செய்கிறதென்றும், ஸ்ரீ. உப. சேட்லூர் நரஸிஹ்மாசார்யர் ஸித்தாந்தம் செய்கிறதென்றும், ஸ்ரீ. உப. இஞ்சிமேடு ரங்கநாதாசார்யர் மத்யஸ்தராக இருக்கிறதென்றும் இத்யாதியான வ்யவஸ்தையுடன் வாதம் நடைபெற்றது. சற்றேறக்குறைய 11-மணி வரையில் இந்த வாதம் நடந்து அப்பொழுதும் பூர்த்தி பெறாமல் மறுநாள் இதை மறுபடியும் உபக்ரமித்துப் பூர்த்தி செய்யலாம் என்னும் எண்ணத்துடன் மாத்யாஹ்நிகாநுஷ்டாநார்த்தம் ஸதஸ் கலைந்தது.

அன்று மத்யாஹ்ந ததீயாராதந கைங்கர்யம் ஸ்ரீ. உப. மயிலாப்பூர் எஸ். வரதாசார்யருடைய செலவில் நடந்தது. சற்றேறக்குறைய நானூறு ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்த அந்த கோஷ்டியும் அஹமஹமிகயா அவர்களுடைய கைங்கர்யத்தில் ப்ரவ்ருத்தித்த உத்ஸாஹிகளுடைய ஆநந்தமும் எல்லாருக்கும் மிக்க ஆஹ்லாதத்தைக் கொடுத்தன.

இரண்டு மணிக்கு மறுபடியும் ஸதஸ் சேர்ந்தது. ஸ்ரீ. உப. திருவஹீந்த்ரபுரம் ஶடகோபாசார்யர், "ஆர்யதர்மம்" என்னும் விஷயத்தைப் பற்றியும், ஸ்ரீ. உப. எம். கே. தாதாசார்யர் "ஹம்ஸ ஸந்தேஶம்" என்னும் ஸ்ரீ தேசிகனுடைய திவ்ய ஸூக்திகளுள் ஒன்றாகிய ஒரு காவ்யத்தைப் பற்றியும் விஸ்தாரமாக உபந்யாஸம் செய்தார்கள். அர்த்த புஷ்டியிலும் ஶப்த ஶைலியிலும் யுக்த்யதிஶயங்களிலும் நிரர்க்களமான வாக்ப்ரவாஹத்திலும் அந்த உபந்யாஸங்களிரண்டும் நிகரற்றனவாகவே இருந்தன. 'பாஷாந்தரத்தில் தேர்ச்சி பெற்று ஸம்ஸ்க்ருத பாஷையிலும் விசேஷித்த ஜ்ஞாநத்தை அடைந்து வைதிக விஶ்வாஸத்திலும் ஸித்தாந்தாபிநிவேஶத்திலும் எவ்வித குறைவுமில்லாமல் நிற்கும் இம்மாதிரி வ்யக்திகளே கலியினால் ஆக்ராந்தமாயுள்ள இக்காலத்தில் ஜகதுபகாரகர்கள் ஆகிறார்கள்; அவர்களுடைய ஸங்க்யை மேன்மேல் வ்ருத்தியாக வேணும்' என்னும் எண்ணம் அப்பொழுது அங்கு ஸந்நிஹிதர்களாக இருந்த எல்லாருடைய மனத்திலும் உதித்தது என்று சொல்லலாம். இந்த இரண்டு உபந்யாஸங்களும் க்ரமஶ: ப்ரசுரம் செய்யப்படும்.

பிறகு ஸ்ரீ. உப. மைஸூர் எ. கோவிந்தாசார்ய ஸ்வாமி "விசிஷ்டாத்வைதம்" என்னும் விஷயத்தைப்பற்றிச் சிறந்தோர் உபந்யாஸத்தைச் செய்

தார். அது ஸம்ஸ்க்ருத பாஷையில் இருந்தபடியால் அநேகருக்கு விளங்கவில்லை. ஆனால், அந்த ஸ்வாமியினுடைய உருக்கமான மாதிரி எல்லாருடைய மநஸ்ஸையும் கவர்ந்தது. இந்த உபந்யாஸம் முடிந்த பிறகு கொஞ்சம் அவகாஶம் இருந்தபடியால் ஸ்ரீ. உப. ஸ்ரீபெரும்பூதூர் கண்ணன் ஸ்வாமி என்னும் ஒரு வைதிக வித்வான் சில வைதிக விஷயங்களைப் பற்றி ப்ரஸ்தாவித்தார்.

ஸ்ரீ. உப. தஞ்சாவூர் டி. கோதண்டராம ஐயங்கார், இரண்டு மூன்று நாள் முன்னதாகவே ஸதஸ்ஸுக்காக வர ப்ரயத்நப்பட்டும் அப்படி வரக்கூடாதவராய், பெருத்த அஸௌகர்யங்களிருக்கையிலும் அவைகளை அநாதரித்து, இன்று காலையில் இவ்விடம் வந்து சேர்ந்தார். ப்ரஹ்மஸ்ரீ மீமாம்ஸை பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள், ப்ரஹ்மஸ்ரீ தர்மஶாஸ்த்ரம் ஸ்ரீநிவாஸ ஶாஸ்த்ரிகள், ப்ரஹ்மஸ்ரீ. ஸி. வி. க்ருஷ்ணஸ்வாமி ஐயர் பி. எ. பி., எல்., ராவ் ஸாஹிப் ஸி. ராமாநுஜம் செட்டியார், ராவ் ஸாஹிப் ஸி. கண்ணன் செட்டியார், ராவ் ஸாஹிப் நம்பெருமாள் செட்டியார் இன்னும் சிலரும் இன்றைதினம் புதிதாக ஸதஸ்ஸுக்கு வந்தார்கள்.

ராத்ரி ததீயாராதநாநந்தரம் ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர், ஸ்ரீபாகவதத்தில் குசேலோபாக்யாநத்தைப் பாராயணம் செய்து, தமிழில் அதன் அர்த்தத்தை எல்லாரும் கேட்டு ஆநந்திக்கும்படி எடுத்துரைத்தார். அதனுடன் அன்றை வ்யாபாரம் முடிந்தது.

மறுநாள் காலையில் 8-மணிக்கு யதாபூர்வம் விஷய சர்ச்சை ஆரம்பித்தது. ஸகுண நிர்குண வாதம் இரண்டுநாள் சர்ச்சை ஆகிவிட்டது என்னும் காரணத்தால் அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவேண்டுவதில்லை யென்று நிர்த்தாரணம் செய்து, அதற்கு பதிலாக வேத ப்ராமாண்யத்தைப் பற்றி விவாதத்தை உபக்ரமிப்பதாக பூர்வ ஸம்விதாநம் ஆகியிருந்தபடியால், அதை அநுஸரித்து ஸ்ரீ. உப. டி. ராஜகோபாலாசார்யர் பூர்வபக்ஷம் செய்தார். ஶ்ருதி என்பது பற்பல காலங்களில் பற்பல ருஷிகளாற் செய்யப்பட்ட க்ரந்தமே தவிர அபௌருஷேய மன்றென்றும், வர்ண வ்யத்யாஸமென்பது புராதநமான ஶ்ருதிகளிற் சொல்லப்படாதபடியாலும் ருக்வேதத்தில் 'ப்ரஹ்ம' 'க்ஷத்ர' 'வைஶ்ய' ஶப்தங்கள் ஜாதியைக் குறிக்காமல் வேறு அர்த்தத்தில் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறபடியாலும் வர்ண வ்யத்யாஸங்களெல்லாம் பின்னிட்ட காலத்தில் ஏற்பட்டனவென்றும், புருஷஸூக்தத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கும் வர்ண விஶேஷங்கள் பகவத் விராட் ஸ்வரூப வர்ணனையென்றும், மநுஸ்ம்ருதி முதலிய பிற்பட்ட ப்ராஹ்மண க்ரந்தங்களெல்லாம் ஶூத்ரர்களை வீணில் நிந்திப்பதுடன் அக்ரமமான ப்ராஹ்மண பக்ஷபாதங்களை வெளியிடுகின்றன வென்றும், இவை முதலிய காரணங்களினால் ஜாதி யென்பது குண நிபந்தநமே தவிர ஜந்ம நிபந்தந மன்றென்றும், இன்னும் லௌகிகர்களால் இக்காலத்திற் செய்யப்படும் அநேக பூர்வபக்ஷங்களைப் பலவித உபபத்திகளுடன் உபபாதநம் செய்தார். ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர் இந்தப் பூர்வபக்ஷங்களை ஒவ்வொரு அம்ஶமாக எடுத்துக் கண்டிக்க ஆரம்பித்து, வேதம் அபௌருஷேயமென்பதற்கு வேண்டிய ப்ரமாணங்களை பஹுவாக எடுத்து விஸ்தரித்து, ஆதுநிகர்களாற் செய்யப்படும் ஆக்ஷேபங்களுக்கு ஸமாதாநத்தைச் சொல்லி, புருஷஸூக்தம் ஸ்ருஷ்டி க்ரமத்தைப் பற்றியே பேசுகிறதென்றும், வேறு விதமாக அதற்கு அர்த்தம் சொல்வது அநுபபந்நமென்றும் நிரூபித்தார். மற்றை அம்ஶங்களை விசாரிக்க அவகாஶமில்லாததால் ஸங்கம் கலைந்தது.

மத்யாஹ்நம் ததீயாராதநம் ஆன பிறகு 2-மணிக்கு ஸ்ரீ தேசிகன் ஸந்நிதி வாசலில் ஸதஸ்யர்களெல்லாரும் சேர்ந்தார்கள். அப்பொழுது ஒரு சாயா படம் எடுக்கப்பட்டது. இடம் போதாததால் பஹுபெயர்கள் படத்திற் சேராமல் வெளியில் நிற்கும்படி ஸம்பவித்தது. 'வாலண்டியர்' என்று வ்யவஹரிக்கப்படும் நியாம்யர்களுட்பட சற்றேறக்குறைய இருநூறு பெயர்கள் அதில் சேர்ந்தார்கள். படம் க்ரஹிக்கப்பட்ட பிறகு, மண்டபத்தில் மறுபடியும் ஸதஸ் சேர்ந்தவுடன், ஸ்ரீ. உப. ப்ரொபெஸர் எஸ். கிருஷ்ணஸாமி ஐயங்கார் மதங்கள் எப்படி உத்பந்நங்களாகின்றன? எப்படி அபிவ்ருத்தியைப் பெறுகின்றன? என்றும், இம்மாதிரியாகப் பரிஶீலநம் செய்வதில் புராதந ஶிலா ஶாஸநங்கள் எப்படி அநர்க்கங்களான ஸாக்ஷ்யங்களாகின்றன வென்றும், இப்பொழுது ஸம்ஸ்க்ருத பாஷாப்யாஸம் செய்பவர்கள் இந்தப் பரிஶீலநம் செய்வதில் ஸூதராம் கடமைப்பட்டவர்களென்றும், இது விஷயமாக ராஜாங்கத்தார் மிகுந்த ஶ்ரத்தையை எடுத்துக்கொள்ளுகிறார்களென்றும் பல ஹேதுக்களுடன் விவரித்துப் பேசிப்பெரியதொரு உபந்யாஸத்தைச் செய்தார். பிறகு, ஸ்ரீ. உப. வாங்கல் தட்டை ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்மார்த்த ஸம்ஸ்காரங்களைப் பற்றி விஸ்தாரமான ஒரு உபந்யாஸத்தையும், ஸ்ரீ. உப. தில்லியம்பூர் வெங்கடராம ஐயங்கார் "உபய வேதாந்தமும் மணிப்ரவாள நடையும்" என்னும் விஷயத்தைப் பற்றி ஸங்க்ரஹமான ஒரு உபந்யாஸத்தையும் செய்தார்கள். இவை முடிந்த பிறகு, ப்ரஹ்ம ஸ்ரீ. எ. பஞ்சாபகேச ஐயர் அவர்கள், இப்பொழுது பாடசாலைகளில் ஸம்ஸ்க்ருத பாஷையின்

அத்யயநம் அதிமாத்ரம் மிதமாகிவிட்டதென்றும், வித்யாதிகாரிகள் அந்த மாதிரி அந்தப் பாஷையை அநாதரிப்பது ஶ்ரேயஸ்கரமன்றாகையால் அவர்கள் அதற்கு ஒருவித ப்ராதாந்யத்தைக் கொடுத்து பஹுபெயர் அதைப் படிக்கும்படி செய்யவேண்டுமென்றும், இன்னும் அது ஸம்பந்தமான வஸ்து ஸ்திதியை எடுத்து விவரித்துப் பேசி, இந்த ஸதஸ் இதைப்பற்றி ஒரு தீர்மான ரூபமாக ஸர்க்காருக்கு மனுச்செய்துகொள்ளவேண்டுமென்று ப்ரார்த்தித்தார். அப்படியே அந்தக் கருத்தடங்கிய இரண்டு தீர்மானங்கள் செய்யப்பட்டன.

பிறகு, ஸபாத்யக்ஷரான ஸ்ரீ. உப. டி. டி. ரங்காசார்யர், இந்த ஸதஸ் நடந்ததில் தமக்குள்ள ஆநந்தத்தைப் பற்றிப் பலவாறாகப் பேசி, இந்த ஸதஸ்ஸைப் பூர்த்திசெய்துவைத்த ஸகல வைதிக வித்வான்களுக்கும் லௌகிக ஆஸ்திகர்களுக்கும் ஸப்யர்களெல்லாரும் கொண்டிருக்கும் க்ருதஜ்ஞதையை ஆவிஷ்கரித்து, 'ஸ்ரீ வேதாந்த தீபிகை' யென்னும் பத்ரிகை மிகுந்த ஸஹாயத்தை அபேக்ஷித்து நிற்கிறதென்றும் அதற்கு எல்லாரும் உதவிசெய்யவேண்டுமென்றும் அங்கு வந்திருந்தவர்களெல்லாரையும் ப்ரார்த்தித்தார். பிறகு, இந்த ஸபையின் கார்யதர்ஶியான ஸ்ரீ. உப. எஸ். வாஸுதேவாசார்யர், இந்த ஸதஸ் விஷயமாகத் தமக்கு உதவி செய்த எல்லாருக்கும் விஶேஷண வாலண்டியர்கட்கும் தம்முடைய நன்றியறிவை வெளியிட்டார். ஸ்ரீ. உப. திருவஹீந்த்ரபுரம் ஶடகோபாசாரியரால் ஸபையின் கார்யதர்ஶிகளுக்கு யதோசிதம் ஸத்கார ஸூசகங்களான உக்திகள் சொல்லப்பட்டவுடன் ஸதஸ் முடிந்தது.

ஸதஸ்ஸுக்கு எழுந்தருளின வித்வான்களையும் மற்றை வித்யார்த்திகளையும் உத்தேஶித்து, ராவ் ஸாஹிப் ஸி. ராமாநுஜம் செட்டியார், பகவத் விஷயம் ஸ்ரீ பாஷ்யம் ஆகிய ஸ்ரீகோஶங்களில் 12 - காபிகளை ஸபையின் எக்ஸிக்யுடிவ் போர்டாருக்கு அனுப்பி, அவர்களை யதோசிதம் அவற்றை விநியோகிக்கும்படி கேட்டுக்கொண்டார். ஸபையார் மிகுந்த ஸந்தோஷத்துடன் அதை அங்கீகரித்தார்கள்.

அன்றிரவு 9 - மணிக்கு ஸ்ரீ. உப. கே. ராமஸ்வாமி ஐயங்கார், "பாதுகா பட்டாபிஷேகம்" என்பதைப்பற்றி மிக நேர்த்தியான ஒரு ஹரிகதை காலக்ஷேபம் நடத்தினார்.

இதனுடன் ஸதஸ் முடிந்த போதிலும், மறுநாள் காலையில் 8-மணிக்கு மறுபடியும் அநேக வித்வான்களும் இதர ஆஸ்திகர்களும் சேர்ந்து, பூர்வ தினத்தில் முடிவு பெறாமல் நிறுத்தப்பட்ட "வேத ப்ராமாண்ய" ஸம்பந்தமான பூர்வபக்ஷத்தின் ஸமாதானத்தைப் பூர்த்திசெய்தார்கள்.

மயிலாப்பூர், }
20-1-17. }
எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ꞉

ஸ்ரீ𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 7.] நள௵ பங்குனி௴ [ஸஞ்சிகை 6.

𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌕𑌮𑌨𑌂 𑌤𑌮𑌾𑌲𑌵𑌰𑍍𑌣𑌂 𑌰𑌵𑌿𑌕𑌰𑌗𑍌𑌰𑌵𑌰𑌾𑌮𑍍𑌬𑌰𑌂
𑌦𑌧𑌾𑌨𑍇 - 𑌵𑌪𑍁𑌰𑌲𑌕𑌕𑍁𑌲𑌾𑌵𑍃𑌤𑌾𑌨𑌨𑌾𑌬𑍍𑌜𑌂 𑌵𑌿𑌜𑌯𑌸𑌖𑍇
𑌰𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇𑌽𑌨𑌵𑌦𑍍𑌯𑌾 ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

பத்ராதிபரின் குறிப்புகள்.

லோகாந்தரம்.

"𑌸 𑌹𑌿 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌇𑌮𑌂 𑌲𑍋𑌕𑌮𑌤𑌿𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑌿 𑌮𑍃𑌤𑍍𑌯𑍋𑌰𑍍𑌰𑍂𑌪𑌾𑌣𑌿" [ஜீவன் ஸ்வப்நாவஸ்தையை அடைந்து அவன் விழித்திருக்கையில் காண்கின்ற லோகத்தை, அதாவது ஸம்ஸாரத்தினுடைய துக்கங்களை அதிக்ரமிக்கின்றான்] என்று உபநிஷத் வாக்யத்தை முன்னமே சொல்லியிருக்கிறோம். ஸ்ரீ ஶங்கராசார்ய பாஷ்யத்தின்படி ஜீவன் ஸ்வப்ந காலத்தில் ஜாக்ரதநுபவங்களைக் கடந்தவனாய்க்கொண்டு, தனது ஆத்ம ஜ்யோதிஸ்ஸால் புத்தியினுடைய ஸ்வப்நரூபமான வ்யாபாரங்களை ப்ரகாஶிப்பித்துக்கொண்டிருக்கின்றான். ம்ருத்யுவினுடைய அநுபவமும் அதற்குத் துல்யமாக இருக்கும்.

"𑌸 𑌵𑌾 𑌅𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌃 𑌶𑌰𑍀𑌰𑌮𑌭𑌿𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌃 𑌪𑌾𑌪𑍍𑌮𑌭𑌿𑌃 𑌸𑌂𑌸𑍃𑌜𑍍𑌯𑌤𑍇", "𑌸 𑌉𑌤𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌨𑍍 𑌮𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌃 𑌪𑌾𑌪𑍍𑌮𑌨𑍋 𑌵𑌿𑌜𑌹𑌾𑌤𑌿" என்பவை உபநிஷத்தினுடைய அடுத்த வாக்யங்கள், அவற்றின் தாத்பர்யம்:—ஆத்மாவானவன் ஸ்வப்ந காலத்தில் நம்

மால் காணப்படும் லோகத்தை அதிக்ரமித்து, தனது ஜ்யோதிஸ்ஸுடன் கூடி நிற்கின்றான் என்று சொல்லப்பட்டது. ஆத்மா சரீரத்தை அடையுங்கால் பிறக்கின்றான் என்று வ்யவஹாரம்; அவன் சரீரத்தை விடுங்கால் இறக்கின்றான் என்று வ்யவஹாரம். நித்யனான ஆத்மாவுக்கு பிறப்பு மில்லை இறப்பு மில்லை. சரீரஸம்பந்த வியோகங்களால் அவனுக்கு ஜந்ம மரணங்கள் சொல்லப்படுகின்றன. சரீரத்தைப் பொருந்திப் பாபரூபமானதும் கார்ய காரணக் கூட்டமெனக்கூடியதுமான ஸம்ஸாரத்தினுடைய ஸம்பந்தத்தை அடைகின்றான்; அதனின்றும் விடுபட்டு அந்த ஸம்பந்தத்தைப் பரித்யாகம் செய்கின்றான். ஜீவன் விழித்திருக்கையில் கார்ய காரண ரூப ப்ரபஞ்சத்தை அநுபவிக்கின்றான்; ஸ்வப்நத்தில் அவ்வநுபவத்தை த்யாகம் செய்கின்றான். அவ்வண்ணமே ஜீவதசையில் இவ்வுலகில் புருஷன் கார்யகாரணரூப ஸ்தூல ப்ரபஞ்சத்தை அநுபவிக்கின்றான்; மரணாநந்தரம் அதைப் பரித்யாகம் செய்கின்றான். ஸம்ஸார மோக்ஷத்தை அடையும் பர்யந்தம் அவன் அவ்வண்ணம் ஸம்ஸரிக்கின்றான். ஆதலால் அவனுடைய ஆத்மஜ்யோதிஸ்ஸானது அவன் ஸம்பந்தப்படும் ஸர்வ வ்யவஹாரங்கட்கும் மூலகாரணமென்பதும், அவன் ஸ்வரூபத்தினால் பாபமென்று சொல்லப்பட்ட கார்யகாரண ரூபங்களின் ஸம்பந்தமற்றவன் என்பதும், சரீரம் இந்த்ரியங்கள் மநஸ் புத்தி முதலான உபாதிகளைக் காட்டிலும் விலக்ஷணனான அவனுக்கு அவ்வுபாதிகள் மூலமாகவே பாபஸம்பந்தம் ஜநிக்கின்றதென்பதும் ஸித்தம்.

இந்த ப்ரகரணத்தில், மேலெடுத்துக் காட்டிய வாக்யங்களினால் ஏற்படுவது என்னென்றால்: ஜீவனுடைய ஸ்வப்நாவஸ்தையானது அவனுடைய மரணாநந்தர நிலையைப்போன்றதென்பதே. அந்த விஷயம் பின்தொடர்கின்ற உபநிஷத் வாக்யங்களால் ஸ்பஷ்டமாகின்றது. அதாவது :—

“𑌤𑌸𑍍𑌯 𑌵𑌾 𑌏𑌤𑌸𑍍𑌯 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌦𑍍𑌵𑍇 𑌏𑌵 𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌭𑌵𑌤𑌃, 𑌇𑌦𑌂 𑌚 𑌪𑌰𑌲𑍋𑌕𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌚, 𑌸𑌂𑌧𑍍𑌯𑌂 𑌤𑍃𑌤𑍀𑌯𑌂 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌸𑍍𑌥𑌾𑌨𑌂, 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌸𑌂𑌧𑍍𑌯𑍇 𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍, 𑌏𑌤𑍇 𑌉𑌭𑍇 𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌇𑌦𑌂 𑌚 𑌪𑌰𑌲𑍋𑌕𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌚, 𑌅𑌥 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑍋𑌽𑌯𑌂 𑌪𑌰𑌲𑍋𑌕𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌭𑌵𑌤𑌿, 𑌤𑌮𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑌾𑌕𑍍𑌰𑌮𑍍𑌯, 𑌉𑌭𑌯𑌾𑌨𑍍 𑌪𑌾𑌪𑍍𑌮𑌨 𑌆𑌨𑌨𑍍𑌦𑌾𑌂𑌶𑍍𑌚 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿; 𑌸 𑌯𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌸𑍍𑌵𑌪𑌿𑌤𑌿 𑌅𑌸𑍍𑌯 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌾𑌵𑌤𑍋

𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌮𑌪𑌾𑌦𑌾𑌯, 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌵𑌿𑌹𑌤𑍍𑌯 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌯, 𑌸𑍍𑌵𑍇𑌨 𑌭𑌾𑌸𑌾 𑌸𑍍𑌵𑍇𑌨 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌾 𑌪𑍍𑌰𑌸𑍍𑌵𑌪𑌿𑌤𑌿; 𑌅𑌤𑍍𑌰𑌾𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿”

முன்னமே புருஷன் ஜாக்ரத் [விழித்திருக்கும்] காலத்தில் அநுபவிக்கும் லோகத்தை ஸ்வப்ந காலத்தில் கடந்து, வேறு அநுபவங்களை அடைகின்றான் என்று சொல்லப்பட்டது. இப்போது ஜீவன் ஸ்தூல சரீரத்துடன் அநுபவிக்கின்ற இந்த லோகமாகிய ஸ்தாநம், அந்தச் சரீரம் போனபிறகு, பித்ரு கந்தர்வ தேவலோகாதிகள் ஒன்றில் அந்தந்த லோகோசிதங்களான ஸூக்ஷ்ம சரீரங்களில் ஒன்றை யடைந்து அநுபவிக்கும் பரலோகமெனும் ஸ்தாநம், ஆக இவ்விரண்டு ஸ்தாநங்கள் ஒவ்வொரு ஜீவனுக்கும் உண்டு, என்று லோகப்ரஸித்தம். நரகம் எனப்பட்ட ஸ்தாந விசேஷமும், பரலோகத்தில் அந்தர்க்கதம். இவ்விரண்டு லோகாநுபவங்களையும் ஒவ்வொரு கால விசேஷத்தில் ஸ்வப்ந தசையில் புருஷன் பொருந்துகின்றான். ஆதலால் மூன்றாவதான ஸ்வப்ந ஸ்தாநம் இரண்டு லோகங்களின் ஸந்தி எனப்படும். அது இரண்டு லோகங்களுடைய அநுபவங்களின் தர்சந யோக்யமானது. ஆதலால் அதில் புருஷன் நிற்கையில், இந்த லோகாநுபவத்தையும் பரலோகாநுபவத்தையும் அடைகின்றான். அவன் எத்தகைய புண்ய பாப ரூப கர்மங்களாகிய அவலம்பத்தால் பரலோகத்தில் ஸுக துக்கங்களை அநுபவிக்கின்றானோ, அத்தகையதான அல்ப புண்ய பாபங்களின் பலமாக அநுகூல ப்ரதிகூல ரூப பதார்த்தங்களை ஸ்வப்நாவஸ்தையில் தர்சிக்கின்றான்; அதாவது, அப்போது அவனுக்குச் சில ஆநந்தமும் கிடைக்கின்றது; துக்கமும் நேரிடுகின்றது. அவன் அவ்வண்ணம் ஸ்வப்நாவஸ்தையில் நிற்கும்போது, இந்த ஸ்தூல ப்ரபஞ்சத்தில் போக வஸ்துக்களை அநுபவிக்க ஸாதநங்களாயிருக்கின்ற இந்த்ரியங்களினுடைய ஸூக்ஷ்மாம்சங்களை க்ரஹித்துக்கொண்டு, தேஹேந்த்ரியாதிகளைச் சேஷ்டையற்று நிற்கச் செய்து, ஸ்வ கர்மாநுகுணமாக மாயாமயமானதோர் ஸ்வப்ந சரீரத்தை ஈஶ்வர ஸங்கல்பத்வாரா அடைந்தவனாய்க்கொண்டு, தனது ஜ்யோதிஸ்ஸினுடைய ப்ரகாஶத்தாலேயே ஸ்வப்நாநுபவம் செய்கின்றான். அக்காலம் இந்தப் புருஷன் ஸ்வப்ரகாஶத்துடன் கூடினவனாகின்றான்; அதாவது, பாஹ்யங்களான ஆதித்யாதி ஜ்யோதிஸ்ஸுக்கள், அவனுடைய ஸ்தூலசரீர நிஷ்டங்களான இந்த்ரியங்கள், இவை

களின் ஸம்பந்தமற்று அவனிடம் உள்ள ஜ்யோதிஸ் தனிமையில் ப்ரகாசிக்கின்றது.

பிறகு ஸ்வப்ந காலத்தில், ரதம், குதிரைகள், மார்க்கங்கள், ஆநந்தம், ஸந்தோஷம், அதிஸந்தோஷம், குட்டை, புஷ்கரிணீ, நதிகள் இவை இல்லையென்றும், வாஸநாவஶத்தால் புருஷன் தத்காலாநுபவ யோக்யமாகவும், ஸ்வகர்ம பலமாகவும், ஈஶ்வரனால் ஸ்ருஷ்டங்களான ரதாதி பதார்த்தங்களை அநுபவிக்கின்றானென்றும் ஶ்ருதி சொல்லுகின்றது.

பின்னால் ப்ராசீந சில ஶ்லோகங்கள் எடுக்கப்படுகின்றன :—

"𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇𑌨 𑌶𑌾𑌰𑍀𑌰𑌮𑌭𑌿𑌪𑍍𑌰𑌹𑌤𑍍𑌯𑌾𑌸𑍁𑌪𑍍𑌤𑌃 𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌨𑌭𑌿𑌚𑌾𑌕𑌶𑍀𑌤𑌿 । 𑌶𑍁𑌕𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌯 𑌪𑍁𑌨𑌰𑍈𑌤𑌿 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷 𑌏𑌕𑌹𑌂𑌸𑌃 ॥ 𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌨 𑌰𑌕𑍍𑌷𑌨𑍍𑌨𑌵𑌰𑌂 𑌕𑍁𑌲𑌾𑌯𑌂 𑌬𑌹𑌿𑌷𑍍𑌕𑍁𑌲𑌾𑌯𑌾𑌦𑌮𑍃𑌤𑌶𑍍𑌚𑌰𑌿𑌤𑍍𑌵𑌾 । 𑌸 𑌈𑌯𑌤𑍇ऽ𑌮𑍃𑌤𑍋 𑌯𑌤𑍍𑌰 𑌕𑌾𑌮𑌂 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷 𑌏𑌕𑌹𑌂𑌸𑌃 ॥ 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌾𑌨𑍍𑌤 𑌉𑌚𑍍𑌚𑌾𑌵𑌚𑌮𑍀𑌯𑌮𑌾𑌨𑍋 𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 𑌦𑍇𑌵𑌃 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌬𑌹𑍂𑌨𑌿 । 𑌉𑌤𑍇𑌵 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌭𑌿𑌃 𑌸𑌹 𑌮𑍋𑌦𑌮𑌾𑌨𑍋 𑌜𑌕𑍍𑌷𑌦𑍁𑌤𑍇𑌵𑌾𑌪𑌿 𑌭𑌯𑌾𑌨𑌿 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 । 𑌆𑌰𑌾𑌮𑌮𑌸𑍍𑌯 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌨 𑌤𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌕𑌶𑍍𑌚𑌨𑍇𑌤𑌿". இவற்றின் தாத்பர்யம்:—புருஷன் ஸ்வப்ந தசையில் சரீரத்தைச் சேஷ்டையறச் செய்து, ஸ்வயம் குறைவற்ற ப்ரகாசத்துடன் கூடினவனாய்த் தத்காலம் ப்ரகாச மற்றுப்போன இந்த்ரியாதிகளைப் பார்க்கின்றான். பிறகு, தன்னிடம் அந்தர்க்கதங்களாய் நின்ற மேற்சொன்ன இந்த்ரியங்களுடைய ப்ரகாசகாம்ஶங்களை க்ரஹித்துக்கொண்டு, ஸ்வப்ந முடிவில் ஜாக்ரத் தசையை மறுபடியும் பொருந்துகின்றான். அவன் சைதந்ய ஜ்யோதிஸ்வபாவத்துடன் கூடினவன். ஒருவனே ஜாக்ரத் ஸ்வப்நாவஸ்தைகளை அடைகின்றான். அந்த ஜீவன் ஸ்வப்ந தசையில் நிக்ருஷ்டமான ஸ்தூல சரீரத்தை ப்ராணனைக்கொண்டு ரக்ஷித்தவனாய் கொண்டு, ஸ்வயம் மரணமற்றவனானதால் அந்தச் சரீரத்தின் வெளியே சென்று, தந் நிஷ்டமான ப்ரதேசங்களில் ஸஞ்சரித்துவிட்டுப் பிறகு ஸ்வசரீரத்தை யடைகின்றான். அவன் ஸ்வப்ந மத்யகாலத்தில் உத்க்ருஷ்டா பக்ருஷ்டங்களான ஸ்திதிகளை அடைகின்றான். ஸ்வயம் ப்ரகாச விஶிஷ்டனாய்க்கொண்டு, தேவாதி பல ரூபங்களைத் தரிக்கின்றான். இன்னும் சில ஸமயங்களில்

ஸ்த்ரீகளுடன்கூடி ஸந்தோஷிக்கின்றான் ; சிரிக்கின்றான் ; பக்ஷிக்கின்றான். சில ஸமயங்களில் பயந்தரும் பதார்த்தங்களைப் பார்க்கின்றான்.

லோகத்தார் ஸ்வப்ந தசையில் இந்த ஜீவன் அடைகின்ற ரூபங்களையும், அநுபவிக்கின்ற போகங்களையும் பார்க்கின்றனர். ஆனால் ஸ்தூல சரீரமற்று, இந்த்ரியாதிகளைத் துறந்து, ஸஞ்சரிக்கின்றவனும் அநுபவிக்கின்றவனுமான ஜீவனை யாவரும் காண்கின்றாரிலர்.

சிலர் புருஷனுடைய ஸ்வப்ந தசையும் ஜாக்ரத் தசையே என்பார்கள். ஏனென்றால் விழித்திருக்கையில் எவற்றைப் பார்க்கின்றானோ, அவற்றையே ஸ்வப்நத்திலும் காண்கின்றான். இதை ஶ்ருதி மொழிந்து ஸமாதாநம் சொல்கின்றது. விழித்திருக்கையில் விஷயங்களுடைய ஸம்பந்தம் இந்த்ரியங்களுக்கு உண்டாகிப் பிறகு புருஷன் விஷய ஸாக்ஷாத்காரம் செய்கின்றான். ஸ்வப்ந காலத்தில் இந்த்ரியங்கள் சாந்தமாகின்றன. ஆதலால் விஷய தர்சநத்துக்கு ஸஹாயமான பாஹ்ய ஜ்யோதிஸ் ஒன்றும் ஸ்வப்ந காலத்தில் உதவமாட்டாது. ஆகையால் புருஷன் ஸ்வப்ந காலத்தில் ஸ்வப்ரகாஶ மாத்ரமே யுடையவனாகின்றான் என்று ஸித்தாந்தம்.

அதன் பிறகு ஶ்ருதி வெளியிடுகின்றது என்னவெனில் : புருஷன் ஜாக்ரத் தசையில் சரீரேந்த்ரிய ஸாத்யங்களான பகு வ்யாபாரங்களால் கலங்கி, ஸ்வப்ந காலத்தில் கொஞ்சம் தெளிவை யடைகின்றான். அப்போது புண்ய பாபங்களுடைய பலரூபமான அநுபவங்களை அடைந்து களித்து விளையாடி, அந்த ஸ்தாநத்துக்கு அவன் சென்ற க்ரமப்படி, மறுபடி திரும்பி ஜாக்ரத் தசைக்கு வருகின்றான். ஸ்வப்நத்தில் அவன் கண்ட வஸ்துக்கள் அவன் விழித்துக்கொள்ளும்போது அவனைத் தொடர்வதில்லை. அவன் ஸ்வரூபத்தால் சரீராதி ஸம்பந்தமற்றவன் ; அவித்யையால் சரீர ஸம்பந்த முற்றவன். ஒரு நதியின் இருகரைகளை மஹாமத்ஸ்யம் ஒன்றின் பின் ஒன்றாக அடைவதை யொத்துப் புருஷனும் மாறி மாறி ஜாக்ரத் ஸ்வப்ந தசைகளை அடைகின்றான். ஆகாஶத்தில் மிகப் பறந்து ஓய்ந்த பக்ஷி கூட்டுக்குள் ப்ரவேசிப்பதை யொத்துப் புருஷனும் ஜாக்ரத் ஸ்வப்ந தசைகளைக் கடந்து ஸுஷுப்தியில் ப்ரவேசிக்கின்றான். அங்கே அவனுக்கோர் இச்சையுமில்லை ; யாதொரு ஸ்வப்நத்தையும் அவன் காண்பதில்லை.

ஹிதா எனும் நாடிகளில் நிற்கும் வரையில் ஜீவன் ஸ்வப்நம் காண்கின்றான்; ஒருவன் தன்னை அடிப்பது போலும், ஜயிப்பது போலும், யானை தன்னைத் துரத்துவது போலும், தான் பள்ளத்தில் விழுவது போலும், விழித்திருக்கையில் கண்ட பயங்களைக் கர்ம வசத்தால் அப்போது நினைக்கின்றான். எந்த ஸ்தானத்தில் புருஷன் தேவனைப் போலும் ராஜனைப் போலும் ஆநந்தாநுபவம் பண்ணுகின்றானோ, தானே ஸர்வமென்றெண்ணித் தன்னைத் தவிர யாதொரு வஸ்துவையும் தர்ஶிக்கின்றானில்லையோ, அந்த ஸ்தானம்தான் அவனுக்கு முக்யாஶ்ரயம். அந்த ஸ்தானமானது அவனுக்கு ஸர்வகாமவர்ஜிதமானது; பாபங்களை அதிக்ரமித்தது; ஸர்வ பயமும் அற்றது. அதாவது: ஹ்ருதயநிகேதனான பரமாத்மாவே அந்த ஸ்தானம். ஸுஷுப்தி தசையில் யாவராலும் அடையத்தக்க ஸ்தானம் அது. எவ்வண்ணம் ப்ரியையான ஸ்த்ரீயால் ஆலிங்கித புருஷன், பாஹ்ய விஷயமொன்றையாவது, மனத்தில் பற்றிய துக்கமொன்றையாவது அறியமாட்டானோ, அவ்வண்ணமே ஜீவன் ஸுஷுப்தியில் பரமப்ரியனான ப்ராஜ்ஞனால் [அதாவது ஸர்வஜ்ஞனான அந்தர்யாமியால்] நன்றாக ஆலிங்கநம் பண்ணப்பட்டவனாய்க் கொண்டு ஒரு பாஹ்ய வஸ்துவையாவது ஒரு ஸுக துக்கத்தையாவது அறிகின்றானில்லை. ப்ராஜ்ஞனுடைய ஆலிங்கநமென்றால் புருஷன் ஸுஷுப்தியில் ஹார்த்தனிடம் லயமடைகின்றானென்று கருத்து. அவனுடைய ஸுஷுப்தி ஸ்தானமாகின்ற பரமாத்மா அவாப்த ஸமஸ்தகாமன்; ஆத்மாநந்த த்ருப்தன்; இதர காமமற்றவன்; ஸர்வஶோக வர்ஜிதன்; ஜீவனால் மோக்ஷ தசையில் அடையத்தக்கவன்.

அந்த ஸ்தானத்தை ஸுஷுப்தியில் அடைந்த புருஷனுக்குத் தத்காலம் பிதா முதலான பந்துக்கள் இல்லை; அபேக்ஷிக்க வேண்டிய லோகங்கள் இல்லை; அவனை அநுக்ரஹிக்கவேண்டிய தேவர்கள் இல்லை; அவனால் அறியவேண்டிய வேதங்கள் இல்லை; பரிசுத்த ஸ்வரூபத்தை ப்ராஜ்ஞனிடம் அவ்வாறு அடைந்த புருஷன், முன் திருடனாயிருந்தாலும் அப்போது திருடனல்லன்; முன் சிசு ஹத்தி பண்ணியிருந்தாலும் அக்காலம் அப்படிப்பட்டவனல்லன்; ஜாக்ரத் தசையில் சண்டாளனாயிருந்தாலும் பௌல்கஸனாயிருந்தாலும் அப்போது அவன் சுத்தன். ஸந்யாஸியும் தபஸ்வியும் கூட ஸுஷுப்தியில் அவ்வாகாரங்களற்றவர். சரீரஸம்பந்த காரணங்களான

புண்ய பாபங்கள் அப்போது அவனைத் தொடர்வதில்லை. ஸர்வ ஹ்ருதய ஶோகங்களையும் ஸுஷுப்தியில் புருஷன் கடந்தவனாகின்றான்.

இதே விஷயத்தைப்பற்றிச் சாந்தோக்யோபநிஷத் வெளியிடுவதைச் சொல்வோம். தேனீக்கள் பல வ்ருக்ஷங்களினின்று தேனைச் சேகரிக்கின்றன. பிறகு சேகரித்த தேனின் அம்சங்களை அந்தந்த வ்ருக்ஷத்தினுடையதெனப் பிரித்துக் காட்ட வழியற்றிருக்கும்வண்ணம், ஜீவன் ஜாக்ரத் தசையில் மநுஷ்யனென்றும், ஸிம்ஹமென்றும், புலியென்றும், கோநாயென்றும், வராஹமென்றும், ஈயென்றும், கொசுவென்றும், பல சரீரப்ரயுக்தமாகப் பல வகுப்புக்களாக வ்யவஹரிக்கப்படுகிறானாலும், ஸுஷுப்தி காலத்தில் ஹ்ருதயத்திலிருக்கும் ஈஶ்வரனிடம் லயித்தபோது தனது சுத்த ஜீவஸ்வரூபத்தில் நிலைக்கின்றான்; ஸுஷுப்தியினின்று விடுபட்டவுடன் பூர்வசரீரங்களை அபிமாநித்துத், தேவதத்தனென்றும், யஜ்ஞதத்தனென்றும், மநுஷ்யனென்றும், புலியென்றும், வராஹமென்றும் தன்னை நினைத்துக்கொள்கின்றான். ஈஶ்வரனிடம் தான் லயித்து நின்றதும் பின் ஸ்வ சரீராபிமாநத்துக்குத் திரும்பினதும் அவனுக்குப் புலப்படுவதில்லை.

அதே உபநிஷத்தில் ஸ்தலாந்தரத்தில், பொன் புதையல் இருந்த வீட்டில் அதை அறியாமல் அதன் மேல் அநவரதம் ஸஞ்சரிக்கின்ற வீட்டுக்காரரைப்போல, இந்த எல்லா ப்ரஜைகளும் தம்முடைய ஹ்ருதயங்களுக்குள் இருக்கின்ற ஸர்வேஶ்வரனை அறிவதில்லை. ஸுஷுப்தி காலத்தில் தினந்தோறும் அவனிடம் விஶ்ரமித்த போதிலும், அவனை உபாஸித்து அடைகின்றாரில்லை என்று சொல்லப்படுகின்றது.

ஸுஷுப்தியில் ஆத்மா பார்ப்பதில்லை, முகர்வதில்லை, ருசியறிவதில்லை, பேசுவதில்லை, கேட்பதில்லை, நினைப்பதில்லை, அறிவதில்லை என்று வ்யவஹாரம். உபநிஷத்தானது, பார்ப்பதற்கும் கேட்பதற்கும் நினைப்பதற்கும் அறிவதற்கும் யோக்யதையுடையவனாகவே ஆத்மா ஸுஷுப்தி காலத்திலும் இருக்கின்றனன் என்கிறது. அவனுடைய ஸ்வயம் ஜ்யோதிஷ்ட்வமெனும் தன்மையானது அவனுடைய சைதந்ய ஸ்வபாவத்வம் தான். அக்நியின் ஔஷ்ண்யம்போல அவனுடன் என்றும் நிலைத்த குணம் அவனுடைய தர்மபூத ஜ்ஞானம். அதைக்கொண்டு ஆத்மா நினைக்கின்றான்,

அறிகின்றான், பார்க்கின்றான், கேட்கின்றான். அத்தொழில்களுக்கு ஸாதநமாயுள்ள அந்த ஜ்ஞாநமானது, அவனைப்போல் நித்யமான படியால் அதற்கு என்றும் நாசமில்லை. சரீராபிமாநியாக அவன் விழித்திருக்கையில் அவனுடைய இந்த்ரியங்களுக்கும் பதார்த்தங்களுக்கும் ஸம்பந்தம் உண்டு ; அவற்றிற்கும் ஜீவனுக்கும் தர்மபூத ஜ்ஞாந மூலமாக ஸம்பந்தம் ஜநிக்கின்றது ; அதனால் இந்த்ரியங்களைக்கொண்டு அவன் வ்யாபாரவானாகின்றான். ஸ்வப்ந காலத்தில் இந்த்ரியங்களுடைய தேஜோம்ஶங்களும், அவனுடைய வித்யையும், பூர்வவாஸனைகளும் அடங்கிய ஸூக்ஷ்ம தேஹமுடையவனாய் அதற்கேற்றபடி ஸ்வப்ந விஷயாநுபவம் செய்கின்றான். ஸுஷுப்தியில் அத்தேஹமுமின்றி இதர தசைகளில் அவனைக் கட்டுப்படுத்தும் கர்மங்களை அதிக்ரமித்தவனாய்த் தன்னுடைய ஸர்வ பாபவிநிர்முக்தமான ஶுத்த ஸ்வரூபத்துடன் பரமாத்மாவினிடம் லயிக்கின்றான். அப்போது அவனுக்கு இந்த்ரியங்கள், பாஹ்ய பதார்த்தங்கள், ஆகிய இவைகளின் ஸம்பந்தமில்லை. தன்னைக் காட்டிலும் வேறொரு வஸ்துவை அவன் ஸாக்ஷாத்கரிக்கின்றானில்லை. அவ்வளவேயன்றி ஸர்வ ஸாக்ஷாத்காரங்களுக்கும் முக்ய ஸாதநமாய் நித்யமாயிருக்கும் அவனது ஜ்ஞாநரூபமான சக்திக்கு எள்ளளவும் லோபமில்லை என்றிவ்வண்ணம் உபநிஷத் வெளியிடுகின்றது.

இதன்மேல், ஜலம் ஜலத்துடன் கலந்தால் ஒன்றாவது போல், ஜீவனும் தனது தேவ மநுஷ்யசரீர சூந்யனாய்த் தனது கேவல சைதந்ய ஸ்வபாவத்துடன் கூடினவனைப் பரமாத்ம பரிஷ்வங்க வசத்தால் பரமாத்மாவுடன் ஸுஷுப்தியில் லயித்து ஒன்றாகின்றான். அந்தஸர்வேஶ்வரனைத்தான் மோக்ஷார்ஹனான சேதநன் பரமமான கதியாக அடைகின்றான். ஸர்வேஶ்வரனுக்குக் கீழ்ப்பட்டு ப்ரஹ்மாவினுடைய லோகபர்யந்தம் உள்ள ஸ்தாநங்கள் புநராவ்ருத்திக்குட்பட்டவை ; கேவல கர்மஸாத்யங்கள். பரமாத்மா தான் தத்வ ஜ்ஞாந பக்திகளால் அடையத்தக்க உத்க்ருஷ்டமான ஸம்பத்து. ஜீவன் அடையத்தக்க ஶாஶ்வதமான லோகமும் பரமாத்மாவே. அவனே ஜீவன் அடையத்தக்க உத்க்ருஷ்டமான ஆநந்தஸ்வரூபம். மற்ற ப்ரஹ்மா முதல் ஸர்வசேதநர்களும் அந்தப் பரமாநந்தத்தினுடைய ஓர் அல்பமான அம்சத்தை அடைந்து அநுபவிக்கின்றார்கள் ; என்றிவ்வண்ணம் அந்தர்யாமியினுடைய ஸ்வரூபம் விவரிக்கப்பட்டது.

இதன்மேல், எவ்வண்ணம் ஜீவன் ஸ்வப்ந தசையினின்று ஜாக்ரத் தசைக்கும், அதனின்று மறுபடியும் ஸ்வப்ந தசைக்கும் ஸஞ்சரிக்கின்றானோ, அவ்வண்ணமே ஒரு சரீரத்தினின்று சரீராந்தரத்தை அடைகின்றான் என்று காட்டப்படுகின்றது. ஊர்த்வஶ்வாஸ காலத்தில் ஜீவன் பரமாத்மப்ரேரிதனாய் சரீரத்தைத் துறந்துபோகின்றான். அவன் மூப்பாலோ, வ்யாதியாலோ, ஶ்ரமமடைந்து, கை கால் முதலான அங்கங்களுடன் கூடிய சரீரத்தினின்று விடுபட்டு ஸ்வகர்மாநுகுணமாக அந்ய சரீரத்தை அடைவதற்காக முன்போலவே த்வரித்துச் செல்கின்றான். ஒருராஜா வருகின்றான் என்று கேள்விப்பட்டு உக்ரரான ஸேவகர்கள், குற்றம் செய்பவர்களைத் தண்டிக்கும் அதிகாரிகள், வந்திகள், க்ராமாதிகாரிகள் முதலானோர், ராஜா தங்கவேண்டிய ஸ்தாநங்களையும், ராஜாவுக்குரிய அந்நபாநாதி விஶேஷங்களையும் ஏற்படுத்திக்கொண்டு, இதோ மஹாராஜா வருகின்றார் என்று காத்திருப்பார்கள். அவ்வண்ணமே ஸ்வகர்ம பலயுக்தனாய் மரணமடைந்த ஜீவனுக்கு நூதந சரீர ப்ரார்ப்தியின் பொருட்டுப் பூதேந்த்ரிய தேவதைகள் யாவரும் அவனுடைய கர்ம ப்ரேரிதர்களாய், இதோ ஜீவன் வருகின்றான் என்று அவன் வரவை ப்ரதீக்ஷிக்கின்றார்கள். இன்னும் ப்ரயாணம் செய்ய இச்சித்த ராஜனுடன் கூட ஸேவகர்களும் அதிகாரிகளும் நாற்புறமும் தொடர்ந்து செல்லும் வண்ணம், ஊர்த்வஶ்வாஸ காலத்தில் [அதாவது மரணகாலத்தில்] வாக் முதலான ஸர்வேந்த்ரியங்களுடைய தேஜோம்ஶங்களும் ஜீவனோடு பூர்வ சரீரத்தைத் துறந்து செல்கின்றன.

இவ்வண்ணம் உபநிஷதர்த்தத்தை ஸங்க்ரஹித்தோம். ஜாக்ரதநுபவம்தான் ப்ராயேண ஸ்வப்நத்தில் வருகின்றதென்பதைப் பொதுவாக உபநிஷத் அங்கீகரிக்கிறது. ஆகிலும் அவ்வநுபவாம்சங்கள் ஸவப்நகாலங்களில் வ்யத்யாஸமாகச் சேர்க்கப்படுகின்றன ; பலவாறாக மாற்றப்படுகின்றன ; விகாரமாகக் கோக்கப்படுகின்றன ; நாம் இச்சிக்கும் வண்ணம் ஸ்வப்நாநுபவம் ஏற்படுகின்றதில்லை ; வேண்டாத அநுபவம் ஜநிப்பதும் உண்டு. இது நிற்க: என்

றும் காணாத ஸ்தல விசேஷங்களையும், என்றும் பாராத மஹா புருஷர்களையும், என்றும் பரிசய மில்லாத திவ்ய ஸ்த்ரீகளையும், என்றும் நினைக்காத ஆநந்தங்களையும், ஸ்வப்ந காலங்களில் தரிசிக்கின்றார்கள். ஸ்தூல சரீரங்களைக் காட்டிலும் விலக்ஷணமான ஸூக்ஷ்ம சரீரத்தில் பூர்வாநுபவவாஸனைகள் பதிந்திருக்கின்றன. இந்தஜந்மத்தைக்காட்டிலும் வேறுபட்ட ஜந்மாந்தர வாஸனைகளும் சேதநனைப் பற்றிருக்கின்றன. '𑌭𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌰𑌾𑌣𑌿 𑌜𑌨𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌸𑍌𑌹𑍃𑌦𑌾𑌨𑌿' என்று காளிதாஸன் இவற்றை வர்ணித்தான். இந்த லோகத்தை அதிக்ரமித்த தேவகந்தர்வாதி லோகங்களில் முன் இருந்து இக்கர்ம பூமியில் ஜநித்தவர்கள், அந்த லோகாநுபவ வாஸனைகளுடன் ஜநித்திருப்பார்கள். இவ்வநுபவங்களுடைய ப்ரத்யபிஜ்ஞை ஸ்வப்ந தசையில் உண்டாகின்றன. '𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌭𑌿𑌃 𑌸𑌹 𑌮𑍋𑌦𑌮𑌾𑌨𑌃' என்றும், '𑌆𑌨𑌨𑍍𑌦𑌾𑌨𑍍 𑌮𑍁𑌦𑌃 𑌪𑍍𑌰𑌮𑍁𑌦𑌃 𑌸𑍃𑌜𑌤𑍇' என்றும், '𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌿𑌣𑍀𑌃 𑌸𑍍𑌰𑌵𑌨𑍍𑌤𑌿' என்றும் இவற்றை உபநிஷத் வர்ணித்தது. ஆதலால் பரலோக மெனப்பட்ட தேவகந்தர்வாதி லோகாநுபவங்களும், மரணாநந்தரம் உண்டாகக் கூடிய தர்ஶநங்களும் ஸ்வப்ந காலத்தில் ஸம்பாவிதம். ஆத்மாவின் ஸ்வயம் ஜ்யோதிஷ்ட்வம் விஶ்வஸிக்கப்பட்டதாகில் மற்ற விஶ்வாஸங்கள் க்ரமேண தொடரும்.

இந்த உபநிஷத்ப்ரகரணத்தைப் பற்றி, நமது மதத்தில் விஶ்வாஸமற்றவரும், (Oxford) ஆக்ஸ்போர்டு பட்டணத்தில் ஸம்ஸ்க்ருத பண்டிதராய்த் தத்காலம் வஸிப்பவருமான Arthur A. Mac Donnel என்பவர், " It presents a picture of the soul in the conditions of waking, dreaming, deep sleep, dying, transmigration, and salvation. For wealth of illustration, fervour of conviction, beauty and elevation of thought, this piece is unequaled in the Upanishads or any other work of Indian literature.

ப்ரகரணார்த்தத்தின் அந்யாத்ருஶமான அழகும், விஷயத்தின் மஹத்வமும், விஶ்வாஸ மற்றவர் சித்தத்தையும் அபஹரித்தது. உபநிஷத்துக்கு ஒரு கர்த்தாவை அநுமித்து, அந்தக் கர்த்தாவினுடைய ஶ்ரத்தாதிஶயத்தையும் அவர் வியக்கின்றார். ஜர்மனி, ப்ரான்ஸ் முதலான தேசஸ்தர்களான பல தத்வ விமர்சிகள் (Philosophers) ஸ்வயம் உபநிஷத் விஷயங்களை ஶ்ரத்தையுடனும் பக்தியுடனும் அங்கீகரித்தார்கள்.

இது நமக்கு ஶாஸ்த்ரம். நாம் அறிந்து விஶ்வஸிக்க வேண்டிய தத்வார்த்தங்களை,' இது ஆதேஶம், இது உபதேசம், இது அநுஶாஸநம், இவ்வண்ணம் உபாஸிக்கவேண்டும், இதை ஶ்ரத்தையுடன் அறிந்துகொள்ளவேண்டும் என்று சொல்லி நமக்கு அளிக்கப்பட்டது. ஐரோப்ய தத்வ விமர்சிகளைப்போல் யுக்தாயுக்த விசாரம் செய்து, ஊஹித்த அநுமானங்களை ஶ்ருதி நமக்குச் சொல்லவில்லை. வைதிக ஸம்ப்ரதாயப்படி ஶ்ருதியானது நித்யம்; அதன் ப்ராமாண்யம் ப்ரத்யக்ஷ ப்ராமாண்யத்தை அதிக்ரமித்தது. பாஶ்சாத்ய வித்யா நிஷ்டர்களான ஆஸ்திகர்களும் தத்வ விஷயங்களில் அபரோக்ஷ ஸாக்ஷாத்கார ஸமர்த்தர்களான யாஜ்ஞவல்க்ய ஜநகாதிகளுடைய உபதேசமென்று உபநிஷத்தை அங்கீகரிக்கின்றனர்.

இதைத் தாயதநமென ஜந்மத்தாலடைந்த தத்கால சிறுவர் விருத்த ஸம்ஸர்க்கத்தால் சித்தகாலுஷ்யம் பொருந்தி, அவருடைய அபூர்வ துஷ்கர்ம பலத்தால் தூஷித மநஸ்ஸுடன் கூடி, ஜந்மாந்தர வாஸநா பலத்தால் ஆஸுரபாவத்தில் ஸ்திரப்பட்டு வைதிக ஸம்ப்ரதாய த்வேஷிகளாய்ப் போனாராகில் அதற்கு ஶ்ருதி யென்ன செய்யும்.?

பத்ராதிபர்.

ஸ்ரீ:

ஜநகநந்தினீ.

கேசவாசார்யர் குடும்ப ஸமேதராய்ப் பத்மநாபாசார்யருடன் திருமலையை உத்தேசித்துத் திருப்பதிக்கு வந்து சேர்ந்தார். அங்கே கோவிந்த ராஜனை ஸேவித்து விட்டு, மறுநாள் மத்யாஹ்நத்திற்குமேல் யாவரும் திருமலை யடிவாரத்தை அடைந்தார்கள். ‘‘வ்யவஸ்ருதம் ஶிலாவ்யாஜாத் ஸ்ரீநிவாஸாநுகம்பயா । இக்ஷுஸாரஸ்ரவந்தீவ யத்ர த்ருஷ்ட்வா ஶர்கராயிதம் ’’ என்னும் ஶ்லோகத்தை அநுஸந்தித்து ஜநகநந்தினி மலை யடிவாரத்தில் ப்ரணமம் செய்தாள். ஸ்ரீநிவாஸனுடைய க்ருபை யொன்றுதான் அக்காலம் அவளுக்கு நேர்ந்த பற்று. அந்த க்ருபையே ஸ்ரீஶைல ரூபமாகப் பரிணமித்த தென்று ஶ்லோக தாத்பர்யம். மற்றோரிடத்தில் கமலாகாந்தனுடைய காருண்யத்தை ஆஶ்ரிதர்களுடைய ஸர்வ பாபங்களையும் போக்குகின்ற கங்கையென வர்ணிக்கின்றார் நிகமாந்தாசார்யன். ஸாதாரண கங்காஜலம் அதைப் பாநம் செய்பவர்க்கு ஆதராதிஶயத்தால் ருசியுடன் கூடியிருக்கும். இங்கு பகவத் கருணையைக் கரும்பின் ரஸத்தைப் பெருக்குகின்ற நதியென்று வர்ணித்தார். அதனுடைய தாத்பர்யம் என்னென்றால், தயாரூபமான அந்த நதியின் பெருக்கை ஹரிதாஸர்கள் மிகவும் களித்துப் பருகுவார்கள் போலும். ஸ்ரீ ஶைலத்தில் அது யாவர்க்கும் ஐஹிகாமுஷ்மிகங்களை ஸாதித்துத் தருகின்றது. ஸந்த்யா காலங்களில் ஶிரஸ்ஸில் ப்ரோக்ஷித்துக்கொள்ளப்பட்ட ஜலத்தனுடைய ஶிவதமமான ரஸம் த்விஜர்களால் ப்ரார்த்திக்கப்படுகின்றது. அதுவும் ஸாதாரண ஜலவிஷய மன்று. பகவானுடைய ஶரீரமாக எண்ணப்பட்டநிலையில், அந்த ஶரீர விஶிஷ்டனான பரமாத்மாவினுடைய கருணாரஸத்தைப் பகவதநுபவ ரூப ஸுகாதிஶயத்தின் பொருட்டு நாம் அடையும்படியாகப் பகவானை ப்ரார்த்தித்த வண்ணம். அவனை ரஸமென்றும், அப்படிப்பட்ட ரஸத்தை, அடைந்து சேதநன் ஆநந்தாநுபவம் பண்ணுகின்றானென்றும் ஶ்ருதிப்ரஸித்தம். இக்ஷுஸாரம் ஜநங்களுக்கு ருசியால் ப்ரியப்படுவதுபோல, பகவானுடைய க்ருபையாகின்ற நதியின் ரஸமும் பகவத்பரர்க்கு மிகவும் ஆதரணீய மாகின்றது. கரும்பு ரஸம் க்ரமேண கற்கண்டாக மாறுகின்றதுபோல், பகவத் கருணாநதியின் ஶிவதமமான ரஸமும் சர்க்கரை, அதாவது கற்குண்டுகள் நிறைந்த கிரிரூபமாகப் பரிணமித்துப் பகவத் வாஸஸ்தாநமாகிக் கேவல தர்ஶந மாத்ரத்தாலே பக்த ஜநங்கட்கு அளவிற்ற ஆநந்தத்தை அளிக்கின்றது. ஆதலால் ஸ்ரீநிவாஸ தயாரூபமான கிரியை மற்றோர் பற்றிலாத மாது தயாஶதகத்தின் முதல் ஶ்லோகத்தை ஸ்மரித்து ஶரணமடைந்தாள்.

லோகத்தில் பகவத் வாஸ ஸ்தாநமாகின்ற மற்றெவ்விடமும் திருமலையைப்போல் ஸேவார்த்திகளுடைய ஹ்ருதயங்களைக் கவர்வதில்லை. த்ராவிட ப்ரதேசத்தில் கண்ணன் உகந்தருளின திவ்ய தேசங்களில் திருமலைக்கு ஸமமானது வேறொன்றில்லை. முதலாழ்வார்கள் இத்திருப்பதியில் ஈடுபட்டவண்ணம் மற்றொரு ஸ்தலத்தில் ஈடுபட்டார்களில்லை. பொய்கை யாழ்வார் ஸ்ரீரங்கத்தை இரண்டுதரம் ஸ்மரித்துத் திருமலையை பதினொருதரம் பாடினார். பூதத்தார் திருமலையை ஒன்பதுதரம் சொல்லி ஸ்ரீரங்கத்தை நாலுதரம் பாடினார். பேயாழ்வாரோ ஸ்ரீரங்கத்தை ஒரேதரம் எண்ணித் திருமலையை இருபதுதரம் நினைத்தார். மழிசைப்பிரானும் நான்முகன் திருவந்தாதியில் ஸ்ரீரங்கத்தை நாலுதரம் பாடித் திருமலையைப் பன்னிரண்டு முறை புகழ்ந்தார். முதலாழ்வார்கள் காலத்தில் ஸ்ரீநிவாஸன் ஸந்நிதியே பெரிய கோவிலாயிருந்தது.

தமிழ்நாட்டில் அநாதியாகப் புகழ்பெற்ற திவ்யதேசம் இது. வடவேங்கடம் தென்குமரி யென்று தமிழ் நாட்டுக்குத் தொல்காப்பிய காலம் தொடங்கி எல்லை வகுக்கப்பட்டது. தொல்காப்பிய உரையாசிரியர் நச்சினார்க்கினியரும், வேங்கடநாதனை ‘நிலங்கடந்த நெடுமுடி யண்ணல்’ என்று விவரித்துளர். அன்றியும் 1,800 வர்ஷங்கட்கு முன் ஜைந ஸமயத்தினரான இளங்கோவடிகள் செய்த சிலப்பதிகாரத்தில் ஸ்ரீநிவாஸனைப்பற்றி, ‘நன்னிற மேக நின்றது போலப் - பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்-தகைபெறு தாமரைக் கையினேந்தி - நலங்கிளராரமார்பிற்பூண்டு - பொலம்பூவாடையிற் பொலிந்து தோன்றிய-செங்கண் நெடியோன்’-என்று பாடியிருக்கின்றனர்.

ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்ம்யமெனும் க்ரந்தத்தில், வாராஹம், பாத்மம், காருடம், ப்ரஹ்மாண்டம், மார்க்கண்டேயம், வாமநம், ப்ராஹ்மம், பவிஷ்யோத்தரம், ஸ்காந்தம் முதலான புராணங்களில் திருமலை ப்ரஶம்ஸாபரமான அத்யாயங்கள் இருப்பதாகக் கண்டிருக்கின்றது. நம்மிட மிருக்கும் ப்ராஹ்ம மார்கண்டேய புராணங்களையும், சங்கரஸூத ஸம்ஹிதைகளையும் நாம் மேலெழுந்தவாறாக ஶோதித்தவளவில், அவற்றுள் திருமலை ஸம்பந்தமான அத்யாயங்களைக் காணோம். இதர புராணங்களில் அப்படிப்பட்ட அத்யாயங்கள் இருக்கக்கூடும்.

பலராமனுடைய தீர்த்த யாத்ரையை ஸ்ரீ பாகவதத்தில் விவரித்தபடி, ஸ்ரீ வேங்கடாத்ரி ஸ்ரீரங்கம் முதலான ஸ்தலங்கள் பலராமனால் தர்சிக்கப்பட்டன. அதே யாத்ரை மஹாபாரதத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. அங்கே இந்த ஸ்தலங்களின் பெயர்களைக் காணோம்.

இது எப்படி யிருந்தபோதிலும், த்ராவிட தேசத்தில் உள்ள திவ்ய தேசங்கட்குள் சேஷாத்ரி உத்க்ருஷ்டமானது. அதுவுமன்றி இக்காலம் பகவானுடைய ஸாந்நித்யம் அவ்விடம் ப்ரகாசிக்கின்றபடி மற்றெங்கும் ப்ரகாசிப்பதில்லை. '𑌕𑌲𑍌 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌯𑌕𑌃' என்று கலியுகத்தில் ஸ்ரீநிவாஸனே ப்ரத்யக்ஷ தெய்வமென்று சொல்வார்கள். இந்தப் பெருமாளே ஆழ்வார்களுடைய மங்களாசாஸநம் பொருந்திய உப்பிலியப்பன் ஸந்நிதி நாச்சியார் கோவில் முதலான பல திவ்யதேசங்களில் ஸேவை ஸாதிக்கின்றாரென வெண்ணக்கூடும். ஆனாலும், பகு ஜநங்கட்கு அபேக்ஷிதமான ப்ரயோஜநங்களைத் தந்தருளுவதால், பகுதந ஸஞ்சயத்தைப் பகவான் விதியின்றி ஆகர்ஷிக்கின்றார். அதனுடைய் அபஹாரார்த்தம் பயமின்றி அபராத பரம்பரைகளை ஸம்பாதிக்கும் மதிகேடர்களும் அந்த ஸ்தலத்தில் பெருகுகின்றார்கள்.

அப்படிப்பட்ட ஸ்ரீ ஶைலத்தில் ஜநகநந்தினி மாதா பிதர்க்களுடன் ஏற ஆரம்பித்தாள்; பத்மநாபாசார்யரும் அவர்களுடன் நடந்தார். பகவத் ஸேவையைப்பற்றிய உத்ஸாஹம் நடையின் ஶ்ரமத்தை அவர்களுக்குக் காட்டவில்லை. மலையின்மீது பார்க்கத் தக்க பல காட்சிகளை நோக்கிக்கொண்டே அவர்கள் நடந்தார்கள்.

அவ்வண்ணம் நடந்துபோய் ஸூர்யாஸ்தமநத்துக்கு முன்பே பகவத் ஸந்நிதியைத் தர்சித்தார்கள். பரகால மடத்தில் தங்கினார்கள்.

ஸந்த்யாவந்தநம் முதலான ஆஜ்ஞா கைங்கர்யங்களை ஸ்வாமி புஷ்கரிணியில் செய்து முடித்துக்கொண்டு, கேசவாசார்யர் மற்றவருடன் பகவத் ஸேவார்த்தம் ஸந்நிதிக்குள் சென்றார். ஸேவைக்கு உசிதமான ஸௌகர்யங்களைப் பத்மநாபாசார்யர் ஆப்தர்கள் ஸஹாயத்தைக்கொண்டு திருப்பதியிலேயே தேடிக்கொண்டார். ஆனபடியால் பகவத் ஸந்நிதி த்வார ரக்ஷகர்கள் கேசவாசார்யரையும் மற்றவர்களையும் ஶ்ரமப்படுத்தாமல் உள்ளே விட்டனர்.

உள்ளே ப்ரவேசித்த க்ஷணமே பகவானுடைய அத்புதமான தர்சநத்தை ஜநகநந்தினி அடைந்தாள். லீலாவிபூதியில் அத்தகைய தோற்றத்தை மற்றெவ்விடத்திலும் எவரும் கண்டிருக்கமாட்டார்கள். ஸ்ரீ வைகுண்டம் சென்று வைகுண்டநாதனைக் கண்ணுற்ற வண்ணம் ஸ்ரீநிவாஸனை ஜநகம் கண்டாள். திசைதிசையின் வேதியர்கள் சென்றிறைஞ்சும் வேங்கட மெனும் கீர்த்தியைத் தெளிந்தாள். பகவான் திவ்ய மங்கள விக்ரஹம் ஆகர்ஷகமா யிருக்கையிலும் பயோத்பாதகமா யிருந்தது. வேங்கடநாதனுடைய மஹாஸுந்தர விக்ரஹம் அவள் சித்தத்தைக் கவர்ந்தது. அவனுடைய கிங்கரர் அவனுக்குத் திலகம் சாற்றினவகை பயஹேதுவாயிற்று. ஆயினும் நெருங்க நெருங்க அவன் திருமுகத்தின் அழியா வழகை ஜநகம் தெரிந்து அநுபவம் செய்தாள். வாசித்துக் கேட்டு வணங்கி வழிபட்டுப் பூசித்துப் போக்கின போதெல்லாம் தானாக ஹ்ருதயத்தின்கண் வந்தேறிநின்ற வெம்பெருமானை அன்று வெளியே கண்ணாரக் கண்டதாக எண்ணினாள். வேங்கடத்தான் உள்ளுவார் உள்ளத்தினுள்ளே உளன் எனும் உண்மையை அப்போது அறிந்தாள். அளவரிய வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர் முடிதோயும் பாதத்தான் பாதத்தை நெஞ்சுள் நிறுத்தினாள். வெற்பென்று வேங்கடத்தை நினைத்து அங்கே யாத்ரையாக வந்தனள். வந்து விண்ணோர் தொழும் கோயிலைக் கண்டு, அதனை வைகுண்டமெனவே எண்ணினாள். எண்ணியபின், பத்மா ஸஹாயன் பக்கல் சென்று நின்றாள். நின்று நினைவுற்றாள். நினைவும் கெடவே, எங்கும் தெரியத்தானோங்கிநின்றானை கண்களால் உள்ளிழுத்துத் தன் நெஞ்சத்தினுள்ளே நிறுத்தினாள். நிறுத்தியபின், இனி யவனைப்போ

கவொட்டே னென்று, அவன் உள்வந்த வழியாகும் தன்னுடைய நேத்ரங்களைக் கெட்டியாக மூடிக்கொண்டாள். அவ்வண்ணம் அவனைச் சிறிதுகாலம் த்யாநம் செய்தபின் அவன் உருவத்தைத் தன்னுடைய ஹ்ருதயத்தில் காணாமல் மீண்டும் விழிகளைத் திறந்தாள். இவ்வண்ணம் அவள் பெருமாளை அநுபவம் செய்வதற்கு ஆராதநகாலம் இடம் கொடுத்தது.

ஜநகம் பகவத் ஸேவையி லீடுபட்டதைக் கேசவாசார்யர் கண்டு கொண்டார். "ஜநகம்! நீயறிந்த ஸ்தோத்ரங்களில் ஏதேனுமொன்றை ஸ்மரிக்க இது தக்க காலம்" என்று சொன்னார். உடனே ஜநகநந்தினி, 'உலகமுண்ட பெருவாயா உலப்பில் கீர்த்தி யம்மானே, நிலவும்சுடர்சூ ழொளிமூர்த்தி நெடியாயடியே னாருயிரே, திலதமுலகுக் காய்நின்ற திருவேங்கடத்தெம் பெருமானே, குல தொல்லடியே னுனபாதங் கூடுமாறுகூறாயே' எனும் பாசுரத்தை நினைத்தாள். பின்பு அத்திருவாய்மொழி யாவும் சிந்தித்தாள். சிந்திக்கையில், அடியேன் உன்னடி சேர் வண்ணமருளாயே! உன்னடிசேர அடியேற்கு ஆவா வென்னாயே! பூவார்கழல்கள் அருவினையேன் பொருந்துமாறு புணராயே! உன் பாதம் சேர்வதடியேன் எந்நாளே! எந்நாளுன்னடிக்கீழ் அடியேன் மேவுவதே! உன்பாதம் காண நோலா தாற்றேனே! அந்தோ அடியேன் உன்பாதம் அகலகில்லேன், இறையுமே! எனும் வாக்யங்களை மீண்டு மீண்டும் மெல்லவே சொன்னாள். முடிவில் 'அகலகில்லே னிறையுமென்று அலர்மேல் மங்கை யுறைமார்பா, நிகரிற் புகழா யுலகமூன்றுடையா யென்னை யாள்வானே, நிகரி லமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே, புகலொன்றில்லா வடியேன் உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே' எனும் பாசுரத்தைப்பாடி, ஆழ்வார் பண்ணின சரணாகதியைத் தானும் மனத்தால் அநுபவம் செய்தனள்.

அதற்குள், பகவத் ஸேவா காலம் அவர்களுக்கு முடிவுபெற்றது. ஸேவார்த்திகள் பலர் வெளியே காத்திருந்தார்கள். ஆதலால் கேசவாசார்யரும் மற்றவர்களுடன் ஸந்நிதியின் வெளிப்புறம் சென்று ப்ரதக்ஷிணமாக வந்தனர். வருகையில், ஜநகம்! எவ்வண்ணம் பகவானை ஸ்துதித்தாய்?" என்றனர். "அறுபதாம் திருவாய்மொழியை அநுஸந்தித்தேன்" என்று ஜநகநந்தினி மொழிந்தாள்.

"என்ன? உபாயாநுஷ்டாநத்தில் தீவ்ரேச்சையோ?" என்றனர் கேசவாசார்யர். "அடியேனுக்குக் கர்த்தவ்யாம்சம் அது ஒன்றுதானே மோக்ஷத்தில் நிற்கின்றது" என்றாள் ஜநகநந்தினீ. அதற்குக் கேசவாசார்யர் ப்ரத்யுத்தரம் அளித்திலர்.

மறுநாள் பகவத் ஸேவார்த்தம் ஸந்நிதிக்குச் செல்லுமுன், "அடியேனைப்பற்றி ஸ்ரீநிவாஸன் ஸந்நிதியில் ஒரு அஞ்சலி ஸமர்ப்பிக்கவேண்டும்." என்று ப்ரார்த்தித்து ஜநகநந்திநி பிதாவைத் தண்டம் ஸமர்ப்பித்தாள். சிறிது காலம் கேசவாசார்யர் மௌநமாய் இருந்தார். ஜநகநந்தினியும் கூப்பின கைகளுடன் எதிரில் நின்றாள். பிறகு, "குழந்தாய்! பெருமாளை உன் நிமித்தம் ப்ரார்த்திக்க இந்த ஸந்நிதியில் ஸௌகர்யப்படாது. கலாவைஷம்யம் இவ்விடத்தில் உண்டு. விசாரணை கர்த்தரும் தக்ஷிண கலாந்தர்மதர். விமாநத்தைத் தர்சித்துக்கொண்டு ப்ரபத்யநுஷ்டாநம் செய்யலாம். மலையை நோக்கியும் செய்யலாம். இப்படி இங்கே ஆசாரமுண்டு. பெருமாள் ஸமீபம் ஏகாந்தத்தில் ப்ரார்த்திக்க இங்கே அமையமாட்டாது. உன்னைப்போன்ற அதிகாரிக்கு அவ்வண்ணம் ப்ரார்த்திப்பது யுக்தம். ஆதலால் அவஸரப்படாதே. ஸர்வேஶ்வரன் ஸாந்நித்யம் செய்யும் மூர்த்திகள் பேதித்தாலும் அவன் ஒருவனே ஸர்வத்ர அத்விதீயனாய் இருக்கின்றான். நீ கிஞ்சித்காலம் பொறுத்திருக்கலாம்." என்று கேசவாசார்யர் சொன்னார்.

ஸ்ரீ ஶைலவாஸம் நாலு நாள் செய்து பெருமாளை த்ருப்தியாக ஸேவித்துக் கேசவாசார்யர் முதலானோர் எவ்வுண்மாயவன் கோயில் தொழ வெண்ணி அத்திருப்திக்குச் சென்றார்கள். ஹ்ருத்தாபநாஶிநியில் நீராடி, நித்ய கைங்கர்யங்களைச் செய்து முடித்துக் கொண்டு கேசவாசார்யர் மற்றவர்களுடன் கோவிலுக்குச் சென்று, ஸ்ரீ வீரராகவனையும் கநகவல்லித் தாயாரையும் ஸேவித்தார். அதற்குமுன் என்றும் ஸேவிக்காத எவ்வுட் பெருமலையை அன்று ஜநகநந்தினி தர்சித்தாள். "இது வீர ஶயனமன்றோ?" என்று பிதாவை வினவினாள். அதற்குக் கேசவாசாரியர், "நீ சொல்வது நிஜமே. தஶக்ரீவன் ஸம்ஹாராநந்தரமே, ஶாலிஹோத்ரர் எனும் தபஸ்விக்குப் பகவான் ஸேவை ஸாதித்தாரென்று ஸ்தலபுராணம்" என்று சொன்னார்.

தவ ஹேதோர் விஶாலாக்ஷி ராவணோ நிஹதோ மயா ।
[illegible] ।
தவ ஹேதோர் விஶாலாக்ஷி [illegible] ॥

என்கிற வாக்யங்களை ஜநகநந்தினி உச்சரித்தாள்.

“குழந்தாய்! ஏன் அந்த ச்லோகங்களை உச்சரிக்கின்றனை?” என்றனர் கேசவாசார்யர். “அப்படிப்பட்ட கருணா ஸமுத்ரத்தின் ஒரு திவலை யளவு அடியேனுக்கு உதவாமல் போயிற்றே!” என்று சொன்னாள் ஜநகம்.

“ஜநகம்! அவனுடைய க்ருபையால் தான் உன் பாபம் மிகை யறுக்கின்றதெனச் சொல்லி யிருக்கின்றேனே! ஸாக்ஷாத் வைதேஹிக்குக் கூட உன்னுடைய அவஸ்தை தான் நிலைத்து நின்றது. மநோதௌர்பல்யத்தை ஆவிஷ்கரிக்கின்றையே!” என்று சொன்னார் கேசவாசார்யர்.

ஸந்நிதி ப்ரதக்ஷிணமாக வருகையில், கேசவாசார்யர் குமாரியைப் பார்த்துச் சில விஷயங்கள் சொல்லத்தொடங்கினார்:—“ஜநகம்! ஸ்ரீ வீரராகவன் மஹா வரப்ரஸாதி. நமது குலத்தை அலங்கரித்த கவி வேங்கடாசார்யர் இந்தப் பெருமாள் விஷயமாக “ஜந்மாத்யஸ்ய ஜகத: [illegible]லக்ஷ்மீநிகேதோரஸ: ஸாக்ஷாதேஷ பர: புமாந் க்ருதநதிர் தாக்ஷாயணீஶம்புபி: । வீக்ஷாரண்யவநே விராஜதி ஸ ந: [illegible] க்ஷாந்த்யாயுராரோக்யதநயஶோமோக்ஷாத்யபேக்ஷாவதாம் ॥” எனும் ச்லோகத்தைச் செய்தார். த்யாநிக்கத்தக்க விஷயம் ஜகத்காரணம். ப்ரஹ்மம் இன்னதென்று விவரிக்கு மளவில் இரண்டாவது ஸூத்ரத்தால் இந்த ப்ரபஞ்சத்துக்கு ஸ்ருஷ்டி ஸ்திதி லயங்கள் எவனிடம் உண்டாகின்றனவோ, அவன்தான் ‘ப்ரஹ்மமென்று ஸூத்ரகாரர் நிஷ்கர்ஷித்தார். ஜகத்காரணம் அசேதநமாயிருக்கக்கூடாதென்பதைக் காட்ட ஐந்தாவது ஸூத்ரத்தால் ஸர்வேச்வரன் தனது ஈக்ஷணம் ஒன்றினாலேயே ஸர்வ ஜகத் வ்யாபாரங்களையும் நடத்துகின்றானெனக் காட்டினார். அதாவது, அவன் ஸங்கல்ப மாத்ரத்தால் அவை யாவும் நடந்தேறுகின்றன. இவ்வண்ணம், ‘ஜந்மாத்யஸ்ய ஜகத:’ என்பதால் ஸர்வேச்வரன் ஸ்ரீ வீரராகவன் என்று தாத்பர்யம். இந்த ப்ரஹ்மத்வம்

தேவதாந்தரங்களினிடம் ஸங்க்ரமிக்க மாட்டாது எனும் ப்ரஸித்தியை ‘[illegible]’ என்று ஸ்தாபிக்கின்றார். லக்ஷ்மீ நியதவாஸம் செய்யும் திருமார்பன் என்று சொல்லி ஸ்ரீமந்நாராயணனே ஸ்ரீ வீரராகவனாய் இங்கு ஸேவை ஸாதிக்கின்றார் என்றார். இதெல்லாம் ஸரிதான்; லக்ஷ்மீ பதித்வம் பரம புருஷன் ஒருவனுக்கேயுரிய அடையாளம். அம்ருத ப்ரதனென்று ஏற்பட்டால் தான் பாரமைச்வர்யம் த்ருடப்படும் என்று சொல்லக்கூடும். ஆதலால் ‘ஸாக்ஷாதேஷ பர: புமாந்’ என்று சொன்னார். ஸ்ரீ விஷ்ணுபுராணம் ப்ரஹ்லாத ஸ்தோத்ரத்தில் ‘[illegible] த்வமேவ பர: புமாந்’ என்று சொல்லி யிருக்கிறது. அதாவது, காரணத்வம் ப்ரஹ்ம சப்தத்தாலும் அம்ருத ப்ரதத்வம் பரமபுருஷ சப்தத்தாலும் ஸூசிதங்கள். ஆதலால், நிஸ்ஸம்சயமாக ஸ்ரீவீரராகவனே அம்ருத ப்ரதனென்பதை ‘ஸாக்ஷாதேஷ பர: புமாந்’ என்று சொன்னார். அந்யாக்ம நிஷ்டர்கள் காரணத்வ சங்கையை சங்கரனிடமும் பார்வதியினிடமும் ப்ரமித்துச் செய்கின்றனர். அந்தசங்கா நிவ்ருத்யர்த்தம், அவர்களும் மற்ற எல்லாத் தேவர்களும் வீரராகவனை உபாஸிக்கின்றனர் என்பதை ‘க்ருதநதிர் தாக்ஷாயணீ சம்புபி:’ என்று காட்டுகின்றார். அப்படிப்பட்ட ஸர்வேச்வரன் இந்த வீக்ஷாரண்யத்தில் ஸேவைஸாதிப்பனென் எனும் ப்ரசம்ஸைக்கு ப்ரதிவசந மளிக்கின்றார். உத்தமம் ஸாஹித்யம், கூர்மையான புத்தி, க்ஷமை, ஆயுஸ், வ்யாதியின்மை, செல்வம், கீர்த்தி, மோக்ஷம், முதலான ஸர்வாபேக்ஷிதங்களையும் விரும்பும் ஜநங்களுக்குக் கதியாகப் பெருமாள் இந்த வீக்ஷாரண்ய க்ஷேத்ரத்தில் ப்ரகாசிக்கின்றனர் என்று ச்லோகத்தை முடிக்கின்றார்.

“தேசிகன் பேரருளாளனை ஸ்ரீராமனுயும் க்ருஷ்ணனுயும் அநுஸந்தித்து அருளிச்செய்த ‘உத்தமவர்த்தலம்’ எனும் பாசுரம் உனக்கு ஜ்ஞாபகம் இருக்குமே. ஸ்ரீ வீரராகவனைக் கலியன் அவ்வண்ணமே மங்களாசாஸம் செய்திருக்கின்றார்.

‘காசையாடை மூடிபோடிக் காதல்செய்தா னவனூர்
நாசமாக நம்பவல்ல நம்பிநம் பெருமான்
வேயினன்ன தோண்மடவார் வெண்ணெயுண்டா னிவனென்
றேசநின்ற வெம்பெருமா னெவ்வுட்கிடந்தானே’

இது ஆழ்வார் பாசுரம். காஷாயத்தால் தன்னுடைய ராக்ஷஸ ரூபத்தை மறைத்துத் தெய்வக் கற்பின் பேர்மகள்மேல் காதல் கொண்டு அவளைக் கவர்ந்து போன ராவணனுடைய லங்கா நகரத்தை, 'ஶரைஸ்து ஸங்க்ராமக்ருத்வா ஹுங்காரம்' என்கிறபடியே, முற்றும் அழித்தவன் என்பது முற்பாதியின் பொருள். இது பரத்வத்தைக் காட்டுகின்றது. காலங்களில் எவ்வளவு ஸௌலப்யத்தைக் காட்டினபோதிலும் ஸ்ரீராகவன் பரத்வத்தை என்றும் விட்டதில்லை. இடைச்சிகள் ஏசவும் பேசவும் இடங்கொடுத்த ஸௌலப்யம் கண்ணனிடம் உண்டென்று அதைப்பற்றிப் பாடினார் பிற்பாதியில். இப்படி இரண்டு அவதார மஹிமையும் எம்பெருமானிடம் தங்கிநிற்கப் பரத்வத்தை மிகுதியாகப் பெரிய பெருமாளிடமும், ஸௌலப்யத்தை முக்யமாக அதிஸுந்தரமூர்த்தியான உத்ஸவரிடமும் கொண்டாடுகின்றனர். ஸக்ருத் ப்ரபதநம்செய்து, யானுன்னடிமை யென்பார்க்கெல்லாம் அபய ப்ரதாநத்தை வ்ரதமாகக் கொண்ட பெருமாள் இங்கே ஸேவை ஸாதிக்கின்றார். மஹாபாதகம் செய்தவரானாலும் இந்த ப்ரதிஜ்ஞைக்கு விலக்காகமாட்டார். 'யதிவா ராவணஸ்ஸ்வயம்' என்றருளிச் செய்தன ரன்றோ? நெருங்க அஞ்சும் சேதநர்க்கு 'ரூபௌதார்யகுணை: பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்' என்கிற படியே, தர்சிப்பவர் மநஸ்ஸுக்களைத் தன் ரூபாதிசயத்தால் ஆகர்ஷிக்கின்றார் உத்ஸவமூர்த்தி. ஆகர்ஷித்து, "மாமேகம் சரணம் வ்ரஜ | அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:' என்கிறபடியே, 'என் திருவடிகளைச் சரணமாகக் கொள்வாய்; என்னிடம் சேரத் தடையாய் நிற்கும் உன் தீவினை யனைத்தையும் நான் போக்குகின்றேன். அவற்றை நினைத்து நீ சோகிக்க வேண்டாம்' என்று சொல்லித் தம்முடைய உதார கல்யாண குணங்களையும் ஆவிஷ்கரிக்கின்றார்.

இப்படிக்கெல்லாம் இந்தத் திவ்ய தேசத்தெம்பெருமானை அநுபவிப்பாய்." என்று சொல்லி முடித்தார் கேசவாசார்யர்

உடனே ஜநகநந்தினி, "அப்பா! தேவரீர் விவரித்தபடியே ஸமஸ்த கல்யாண குணங்கட்கு ஆச்ரயனாய், ஸர்வ பூதங்கட்கும் அபயப்ரதாநம் செய்வதில் தீக்ஷிதனாய், பரத்வத்துடன் ஸௌலப்யாதிசயம் பூண்டவனாய், அடியேனுடைய த்ருஷ்டி சித்தங்களை அபஹரிக்கின்றவனாய் ஸேவை ஸாதிக்கும் இந்த எம்பெருமான்

ஸந்நிதியில் அடியேனுடைய ஆத்மரக்ஷாபரத்தை ஸமர்ப்பிக்க திருவுள்ளம் பற்றக் கூடாதோ?" என்று சொன்னாள்.

அதைக் கேட்டார் கேசவாசார்யர். ஈஷத் பெரு மூச்சுவிட்டார். பிறகு, "குழந்தாய்! இந்த ஸந்நிதியிலும், அதற்கு ஸௌகர்யக் குறைவு உண்டு" என்று சொன்னார்.

"ஏன் அப்படி? திருமலையில் தான் தென்கலையார் தடுப்பாரென்று யோசிக்கும்படி இருந்தது. இது வடகலை ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு ஏகதேசமாய் நேர்ந்த ஸந்நிதியாச்சுதே." என்று ஜநகநந்தினி மொழிந்தாள்.

"நீ சொன்னது ஸரியே. ஆனாலும் இந்த ஸந்நிதி விசாரணை அஹோபிலம் மடம் ஸ்வாமிகளுடையது. அவர்கள் பெருமாள் முன்னிலையில் யாரையும் ப்ரபத்யநுஷ்டாநம் பண்ண வொட்டுகின்றதில்லை என்று ப்ரஸித்தி" என்றார் கேசவாசார்யர்.

"அவர்கள் ஏன் அப்படிச்செய்யவேண்டும்? தேசிகன் ஸம்ப்ரதாயத்தில் விச்வாஸக் குறைவா? பெருமாள் கோவிலில் நிராடங்கமாய் அநுஷ்டிக்கிறார்களே." என்றனள் ஜநகநந்தினி.

"பெருமாள் கோவில், திருக்குடந்தை முதலான திவ்யதேசங்களில் ப்ரபத்யநுஷ்டாநம் ஸுகமாக நடக்கின்றது. தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு அதிகப்ரவேசமுள்ள ஸ்ரீரங்கம் முதலான திவ்யதேசங்களிலும் உபாயாநுஷ்டாநம் பெருமாள் முன்னிலையில் பண்ணலாம். இங்கே மடம் ஸ்வாமிகள் தாங்களும் ராகவன் முன்னால் ஒருவர்க்கும் பரந்யாஸம் செய்வதில்லை. அதற்குக்காரணத்தை விசாரித்துப் பயனில்லை." என்றனர் கேசவாசார்யர்.

"இப்படியும் தேசிகன் ஸம்ப்ரதாயஸ்தர்கள் செய்வார்களோ? பெருமாளுடைய ப்ரதிஜ்ஞையை வ்யர்த்தமாக்கினால் பெருமாள் அதைத் திருவுள்ளம் பற்றுவரோ? என்றாள் ஜநகநந்தினி.

"பகு பெயர்கள் இந்த ஊரில் பரந்யாஸம் அநுஷ்டிக்க வேண்டுமானால், புஷ்கரிணி கரையில் நின்று கொண்டு விமாநத்தைத் தர்சித்துக்கொண்டு அநுஷ்டிக்கின்றார்கள். பெருமாளெதிரில ஏகாந்தத்தில் உபாயாநுஷ்டாநம் செய்வது உன் விஷயத்தில் உசிதமாகத் தோன்றுகின்றது. உன் ஆத்மரக்ஷாபரத்தை ஸ்வீகரிக்

கப் பேரருளாளன் அவஸரப்ரதீக்ஷனாய் நிற்கின்றான். ஆதலால் நீ கொஞ்சம் பொறுமையை வஹித்திருக்கக் கூடாதோ? பகவான் எல்லாத் திவ்யதேசங்களிலும் ஸாந்நித்யம் செய்கின்றான். மூர்த்தி பேதத்தால் அவனுக்கு நாம பேதம் உண்டாயிருக்கின்றது. ப்ரணதார்த்திஹரனுடைய '[illegible]'த்தை நிரந்தரம் அநுபவித்த உனக்கு, அவனே த்யாந விஷயமானால் நல்லது." என்று சொல்லி முடித்தார் கேசவாசார்யர்.

திருவெவ்வுளூரில் நாலு நாளிருந்து பின்பு கேசவாசார்யர் ஸகுடும்பமாகப் பெருமாள் கோவிலுக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்.

பத்ராதிபர்

ஸ்ரீ:

வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

	ரூ.	அ.	பை.
1. ஸ்ரீ ஸ்தோத்ர ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யானத்துடன்)	0	2	0
2. ஸ்ரீ த்ராவிடவேத தாத்பர்யம்—(ஸ்ரீ. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது)	0	2	0
3. ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்)	0	2	0
4. ஸ்ரீ பாகவத தனிஶ்லோகீ - (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர்)	0	4	0
5. ஸ்ரீ சதுஶ்லோகீ விவரணம்	0	4	0

இவை வேண்டுமவர்கள் சென்னை, மயிலாப்பூர், கேசவப்பெருமாள் ஸந்நிதிவீதியில் இருக்கும் ஸ்ரீ வேதாந்த தீபிகை மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀 𑌹𑌯𑌵𑌦𑌨 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

வர்ணாஶ்ரம தர்மாபிவ்ருத்தி.*

[illegible] ।
[illegible] ॥

அநேக ஆஸ்திக வித்வத் ப்ரபுக்களாலே பரிபூர்ணமான இந்த மஹாஸபையில் மிதஜ்ஞனான அடியேன் ஸப்யர்களின் நியமந பலத்தினால் ப்ருஹ்மவித்யா வர்ணாஶ்ரம தர்மாபிவ்ருத்தியைப் பற்றிக் கிஞ்சித் விஜ்ஞாபிக்கிறேன். அவற்றிலுள்ள ந்யூநாதிரேகங்களை க்ஷமித்து க்ருபயா திருவுள்ள முவக்கவேண்டும்.

"𑌯𑌦𑌾 𑌯𑌦𑌾 𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌗𑍍𑌲𑌾𑌨𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 𑌅𑌭𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑍃𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍" ॥ என்றும், '[illegible] । [illegible]' என்றும் சொல்லுகிறபடி இந்தக் கலிதோஷத்தினால் கொஞ்சம் மாலிந்யத்தை யடைய யத்தனித்த இந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை ரக்ஷித்து அபிவ்ருத்தி பண்ணுவதற்காக, பகவதம்ஶ பூதர்களான அநேக ஆசார்யர்களையும் ப்ருஹ்மவித்துக்களையும் பூர்வகாலத்தில் பகவான் அவதரிப்பித்தார். இப்பொழுது, ஸ்ரீ பாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப்பித்தல் இத்யாதி ஸ்ரீ பாஷ்யகார நியமநத்தினாலும் '[illegible]' என்கிற ஶ்ருதியினாலும் '[illegible]...... [illegible]' என்கிற ஸ்ரீகீதையினாலும் அவஶ்ய கர்த்தவ்யமாக ஏற்பட்ட இந்த ஸம்ப்ரதாய ஜ்ஞாநாபிவ்ருத்தியைப் பண்ணும்படி அநேக ஆஸ்திகர்களை இந்த ஸபையை ஏற்படுத்தும் விஷயத்தில் ஸ்ரீ பகவாந் ப்ரவர்த்திப்பித்ததைப்பற்றி மிகவும் ஆநந்திக்கிறேன்.

---

* இது, சென்ற மார்கழி மாஸத்திய ஸ்ரீவைஷ்ணவ மஹாஸங்கத்தில் ஸ்ரீ. உ.ப. சதுஶ்ஶாஸ்த்ர கல்பதரு திருக்குடந்தை சேஷாசார்யர் ஸ்வாமியால் செய்யப்பட்ட உபந்யாஸம்.

'[illegible]ணிவா உபாஸதே நித்யஸூரிபிரிவ ஜீவ:' என்கிறபடியே, நித்யஸூரிகள்போலே நித்யாநந்தாநுபவத்துக்கு யோக்யர்களான இச்சேதநர்களுக்கு, அநாதியான பகவதாஜ்ஞாதிலங்கநத்தாலே 'ஶரீரஜை: கர்மதோஷைர்யாதி ஸ்தாவரதாம் நர: । வாசிகை: பக்ஷிம்ருகதாம் மாநஸைரந்த்யஜாதிதாம்' என்கிறபடியே பூர்வம் ஸ்தாவர திர்யக் ஜந்மங்கள் உண்டாகி, அவைகளில் ஸம்பாவிதமான ஸாமாந்ய தர்மாநுஷ்டாந ஸத்ஸங்காதிகளான ஸுக்ருதங்களால் வஶாச்ச, 'துர்லபோ மாநுஷோ தேஹ:' என்கிறபடியே ஆசார்யனிடத்தில் தத்வஹிதங்களைக் கேட்டறியும்படியான மநுஷ்ய ஜந்மம் பஹுஜந்ம ஸுக்ருதத்தால் கிடைத்தது. அதிலும் முதலில், "சண்டாலோ யவநோ ஹூண: கபிலகாபி நிவிஷ்டோ வைராக்யஶூந்ய: க்ரூர: ஸாங்க்யோ [illegible] தார்க்கிக: க்ஷபணகோ [illegible] பௌத்தோ [illegible] யத்வேத நீசஸ்ததா [illegible] ஸம்ஸாரமண்டலே [illegible]" என்கிற தேசிக ஸூக்தியின்படி சண்டாள ம்லேச்ச பௌத்த சார்வாக ஸாங்க்யாதி ஜந்மங்கள் கிடைத்து, பகவத் தத்வஜ்ஞாநத்துக்கு விரகில்லாமல் பஹுகாலம் கழிந்து, பின்பு 'தஸ்யைவ ராஜ: க்ஷத்ரோ ப்ராஹ்மண ஸங்க்ருதம்' என்கிறபடி ஶூத்ர வைஶ்ய க்ஷத்ரியாதி ஜந்மங்களில் கேவலராஜஸ தாமஸ ஸங்க ஸங்கத்தால் அநேக காலம் சென்றது. அவைகளில் ஸம்பாவிதமான பகவத் பாகவதாசார்யோபசர்யையினால் அதிதுர்லபமான இந்த ப்ராஹ்மண ஜந்ம லப்தமாச்சுது. அதிலும் ஸ்ரீய:பதியான நாராயணன் பரதேவதையென்று அறிந்து, அவனை ஆஶ்ரயிக்க அவகாஶமின்றி, அநேக ஜந்மங்கள் கழிந்து, 'யேஜந்ம கோடிபி: ஸித்தா: தேஷாமந்தேத்ர ஸம்ஸ்தித:' என்றும், 'ஶ்ருதீநாம் ஸ்ரீகராம் தேவ யோமஹாத்மா த்விஜாதயே வைஷ்ணவாநாம் குலே ஜந்ம யதீச்ச்யம்' என்றும், 'ஸத்வஶ்ரீ ராஷ்ட்ர ஸம்வித [ஸம்ஶய] ஸங்கதே கார்த்யந்தி' என்றும் சொல்லப்பட்ட 'ஸ்ரீ வைஷ்ணவ குல ஜந்ம என்கிற மஹா பாக்யம் அநேக கோடி ஜந்ம ஸுக்ருதத்தால் லப்தமாச்சுது.

இப்படிப்பட்ட துர்லபமான பதவியை அடைந்திருக்கிற அநேக பாகவதர்கள், 'பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே । வாஸுதேவ ஸர்வமிதி' என்கிற ஸ்ரீமந் நாராயணனை ப்ராப்யத்வ ப்ராபகத்வ ஸர்வவித பந்துத்வ புத்தியுடன் 'அநந்யாஶ்சிந்தயந்தோ மாம் யே ஜநா: பர்யுபாஸதே' என்கிறபடி அவன் திருவடிகளில் அவ்யபிசரித நிரதிஶய ப்ரீதி பூர்வக ப்ரபத்தியைப் பண்ணி 'ஸ மஹாத்மா ஸுதுர்லப:' என்றும், 'ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்' என்றும் பகவானால் கொண்டாடப்பட்டும், 'நிரஹங்காரிண: ஶாந்தாந் நமேச்சிரஸா ஸக்ருத்' என்று கௌரவிக்கப்பட்டும், 'யோ மமேக்ஷம் மஹாத்மநாம்' என்றும், 'ஶரீராரோக்யம் ஐஶ்வர்யம் போகாம்ஶ்சைவ நாஶம் கிம் தத்வார்த்தி ஸ்ரீயம் நித்யைவம் ப்ரோக்தா மஹர்ஷிபி:' என்றும், 'ஶாவிநேதி யதாக்ருஷ்ண கீர்த்தநாத் வாஸிநாம் தீர்த்தம் ஸர்வபாபஹரம் ஹ்ருதயம் ஶாஸ்வதம் பக்தி' என்றும், 'யே ப்ராஹ்மணோத்தம ஸம்ஶயம் ப்ராப தேஷூத்தமே தேஷூத்தமா ஹம் யதாவச । தேஷ்வேவ தத்வேஷு ஹமேவ தத்ஸ்ய வேதம் வதேதயத்ஸ்வ ஶாவி வேதம்' என்றும் சொல்லுகிறபடியே அந்த ஸ்ரீய:பதியால் கொடுக்கப்பட்ட தர்மார்த்த காமமோக்ஷ ரூப சதுர்வித புருஷார்த்தங்களை உடையவர்களாயும், அவனால் நிர்வஹிக்கப்பட்ட ஸர்வாநிஷ்ட நிவ்ருத்தி பூர்வக ஸர்வவித யோக க்ஷேமங்களை யுடையவர்களாயும் 'க்ஷேத்ராணி ராஜ்யம் யதநம் மமேவ [illegible] வாஸநாநி [illegible] வேத [illegible] க்ஷிதம் ஸதா' என்கிறபடியே நம்முடைய ஸகல பரிகரங்களும் நாமும் அவனுடைய வஸ்துக்களென்று தெரிந்து ஸஞ்சித ஜந்மாந்தர புண்ய பாப பலங்களாகிய ஸுக்ருதக்கங்களால், '[illegible] ஸ்வம்ஶேவி யமதஸ்ய ஹ்ருதம்' என்கிறபடியே பொன்விலங்கும் இருப்பு விலங்கும் நிவ்ருத்திக்கிறதென்று நிரதிஶய ஹர்ஷ ஸமந்விதர்களாய், 'த்ராஹி யச காயமே தேவகி கிஞ்சி த்வாயநம் பாவஸ்யதம் மோஹாந்தம் ஸுவா

ஊர்க்ரமேய ப்ரயோகம் நிவேத்ய வகார ஶுஶ்ராஸ ஸாரதோ யதாஹம்’ என்கிறபடி நம்முடைய க்ருஹத்தில் ஆசார்யனாக எழுந்தருளியிருக்கிற பகவானிடத்தில் நம்முடைய வஸ்துக்களை ஒப்புவித்து, ‘தஸ்மா ஶாஸ்த்ரம் ப்ரணம்ய ந காயப்ரகாயம் ஸ்வஸ்திதேள - ஜ்ஞாநா ஶாஸ்த்ர வியாதேநாதம் கர்த்தவ்யம் இதாஹம்ஸி’ ‘தத்விஷ்ணுர்வ்யாப்தக’ என்கிறபடியே ஶாஸ்த்ரத்தில் வ்யாபிக்கப்பட்டதும் நம்முடைய ஆசார்யர்களாகிய ஸ்ரீ ஹயக்ரீவ சதுர்முக வஸிஷ்ட ஶக்தி பராஶர வ்யாஸ போதாயந டங்க த்ரமிட குஹதேவ ப்ருஹ்ம நந்திகளால் அநாதிகாலமாய் இந்தக் கலியுகம் பிறந்து நந்தந வர்ஷம் வரையில் ப்ரவர்த்திப்பிக்கப்பட்டு பிறகு, பரவாஸுதேவ லக்ஷ்மீ விஷ்வக்ஸேந பராங்குஶ நாதயாமுந பாஷ்யக்ருத் தேஶிக ப்ருஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ராதி வண் ஶடகோப மஹாதேசிக ஸ்ரீமத் கோபால மஹாதேசிக ப்ரப்ருதி பகவந்நித்ய ஸூர்யம்ஶ பூதர்களுடைய திவ்யஸூக்திகளால் ப்ரவர்த்திப்பிக்கப் பட்டதும் பேதஶ்ருத் யபேதஶ்ருதி கடகஶ்ருத்யர்த்தங்களின் ஐக கண்ட்ய பூர்வகமுமான ஸ்ரீமத் விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸம்ப்ரதாயார்த்தங்களை நம்முடைய ஆசார்யர்களிடத்தில் ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்ய ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார பகவத்விஷய ரூப க்ரந்த சதுஷ்டய காலக்ஷேபம் பண்ணி அதன் மூலமாய்த் தெரிந்துகொண்டு ஶரண்ய ஸ்ரீய:பதி திருவடிகளில் அங்க பஞ்சக ஸம்பந்நாத்மரக்ஷா பரஸமர்ப்பணத்தைப் பண்ணி க்ருத க்ருத்யர்களாய் நிர்ப்பயத்வ நிர்ப்பரத்வாநுஸந்தாந ஜநித நிரவதிக நிர்வ்ருதி ஸம்பந்நர்களாய் ‘ஶம்போதாராதமோ வமெநகமிர தஃ ப்ரஜ்ஞாந மெஶமாஶ்ரயஃ வஹாகாதேவு ஸ்யூஹாவஸ்ர நதீமிதாஶி ஹிமேஷகோஜ்ஞஃ - கஸ்யாதுஶ்ராக்திம் தமேநந தவஸா நிஜஸ்ய தநோஷஃ வஸூநோ கமேஸு கூது யஶிஷ்யதி ஸ்யி ஹிதம் கமேஸுவ நிதநக்ஷ்யதி ।’ என்கிறபடி அபிமமநோபாதாநே ஜ்யாஸ்வாத்யாய யோக ரூபாச்சித்ர பஞ்சகால பராயணர்களாய், ஜ்ஞாநபக்தி தபோநிஷ்டர்களாய் ‘யத்தஸ்மை விஷதிவ வஶிண்யாமேஷ்டேத்யதா வஷம் - தத்ஸ்வம் ஸாக்ஷிகம் ஜேதும் ஶ்ருத்வைஶ்வர்ய ப்ரஸாதஜம்’ என்கிறபடியும், ‘ஸஞ்சாலஸஞ்சித: க்ருஷ்ணே தஶ்யாமேநா ஷேஹா

ரமேஶ: - நவிஸ்வஸாத்மநா யாதும் தத்ர தத்ர ஹாஸ்வஸ்தித: ’’ என்கிறபடியும் ஆசார்ய திவ்ய ஸூக்த்யர்த்தாநுஸந்தாநமுகத்தாலே அநவதிகாதிஶய பரப்ருஹ்மாநந்தத்தை இங்கேயே அநுபவித்து, அவ்வநுபவ ஜநிதாநந்த பரீவாஹமாக ‘ஸந்தோஷா ஸப்தம் விஶ்ராந்தி ஸ்தைஸ்ஸ்தி ஸ்வாத்மவித்யாம் நிதாம் ப்ரபத்தே நிஶ்சயதி ஷ ஸ்வாத்மா ஸம்வ்ருத்தஜ்ஞாதாதி - கம்ஸீகஸ்ய நந்தயதி தாரம் வ்ருத்தி தாரதஹவாதா ஸ்வஷாதிரஷ்ட ஸம்ஸாரமுக்தி தத் த்ருஷ்டி: ப்ரபந்ந: ॥’ என்று நம் தேசிக ரூபனான கலிநிராஸக திருவேங்கடமுடையான் அருளிச்செய்தபடியும் ‘தத்ர ஸாத்ர ஸாத்ராவா ஸ்தம்பிதேஷா ஸ்தாத்ரிகா: - தத்வஜ்ஞாநேந மாயதோ நாதாமாராணி ஸஸ்ராஶ் !’ ‘ஸா ஶாந்தி ஸந்தஹ ஸ்திதம் ஸா ஹரந்தி ஸா ச வித்யா - யந்தஸ்த்ரதாம் க்ஷணம் வாஸி வாஸ்வோஷவோ ந விஸ்ம்ருதே ॥’ என்று அருளிச்செய்த படியும் ஸர்வதா ஸ்வயம் சிந்தந பூர்வகம், ஸச்சிஷ்யர்களுக்கு ப்ருஹ்மவித்யா தாநம் பண்ணிக்கொண்டு, ‘ஸம்ப்ரதாய நிஷ்டம் ப்ரஸாதய ஸதாம் வ்ருத்திம் வ்யவஸாய்ய த்ரஸ்யந்து ப்ருஹ்மதாமஸ ஸ்தவ்ய ஶிவ மேத்ரவஶிகாநு ஶாவய - நிமேதம் மேஷிணி நிக்ஷிப நிஜஹரம் ஸவம் ஸமேஹ ஸ்ரீஸமேவ யஶம் யாரய வாதகஸ்ய கமஶாநு யாராயமேர காஷிநஃ ।’ என்கிறபடியே, ‘விப்ராணா ஷட்கஷட்ஶ: ஸ்ம்ருத:’ - ‘ஷம்ஶோ ராஜ்ஞஸ்த்வ விப்ராணாம்’ இத்யாதிகளில் ராஜாக்களுக்கு ஆறிலொரு பாகம் விதிக்கப்பட்டது போல, தமக்கு அவஶ்யதேயமாக விதிக்கப்பட்ட த்ரவ்யத்தைக்கொண்டு தேஹயாத்ரையை நடத்திக்கொண்டு, ‘அஸந்துஷ்டா த்விஜா நஷ்டா:’ என்றும், ‘ஶக்நோதீஹைவ ய: ஸோடும் ப்ராக் ஶரீரவிமோக்ஷணாத் - காமக்ரோதோத்பவம் வேகம் ஸ யுக்த: ஸ ஸுகீ நர: ।’ என்றும் சொல்லுகிறபடியே அயாசித லப்தஸந்துஷ்டர்களாய், காமக்ரோத ரஹிதர்களாய் ‘ஸ்திதோ ஹஸிதமௌசாவ்ரு வஸ்தும் மௌநாசேஷ்டம் யதம்’ என்கிறபடி ஸ்ரிய:பதி ரூப மஹாநித்யாநுபவ ஜநித நிரவதிக நிர்வ்ருதிக

ளாய் ஸத்காலக்ஷேபம் பண்ணிக்கொண்டு அநேக வித்வாங்களும் ஆஸ்திக ப்ரபுக்களும் ஆநந்திக்கிறார்கள்.

இப்படியிருக்க, இப்போது சில வைஷ்ணவர்களிடத்தில் கலி ப்ரவேசித்து நம்முடைய ஸத்ஸம்ப்ரதாயாபிவ்ருத்திக்கு பஹுவிதமான விக்நங்கள் செய்கிறான். அவைகள் என்னவெனில்:—வைதிக வ்ருத்தியில் எழுந்தருளியிருக்கிற சில பாகவதர்கள், தங்கள் குமாரர்களுக்குப் பாஷாந்தராப்யாஸம் பண்ணிவைக்க த்ரவ்யம் இல்லாததனாலும், வேதாத்யயநாதிகளைப் பண்ணிவைத்தால் அதில் த்ருஷ்ட ப்ரயோஜநமில்லை யென்கிற எண்ணத்தினாலும், ஒரு வித்யாப்யாஸமும் பண்ணி வைக்காமல் அவர்களை யதேச்சமாகத் திரியும்படி விட்டு விடுகிறார்கள். அந்தக் குமாரர்களும் ஒருவிதமான யோக்யதையுமின்றி த்யூதாதிபரர்களாகத் திரிந்துகொண்டு, ‘வேதாந்த காலக்ஷேபம் வர்ணாச்ரம தர்மாநுஷ்டாநம், இவைகளை ஒரு ப்ரயோஜநமு மில்லாமல் எதற்காகச் செய்கிறது? செய்யாவிட்டால், நரகாதிகள் வருமே யென்னில்: ‘ஸைன்ஸ் (Science) சாஸ்த்ரப்படி ஈச்வரன், புண்யம், பாபம், ஸ்வர்க்கம், நரகம் என்கிற இவைகளெல்லாம் பொய்; அதில் எங்கட்கு நம்பிக்கையில்லை. நீங்கள் சொல்லுகிறபடி வேதாந்த காலக்ஷேபம், அநுஷ்டாநங்கள், எதாவது த்ருஷ்ட ப்ரயோஜநமாக த்ரவ்யோபகாரம் பண்ணினால் செய்கிறோம்’ என்று உத்கோஷிக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நாஸ்திகர்களுடைய வார்த்தையினால் அநேக வைதிக வ்ருத்திமான்களும் பாஷாந்தராப்யாஸம் பண்ணுமவர்களும் உத்யோகி வ்யவஸாயி வ்யாபாரி தநிகர்களும் கெட்டுப்போகிறார்கள். மேலும் இப்போது ஸகல பதார்த்தங்களும் விலை அதிகமானதால் குடும்பத்தை வைதிக வரும்படியைக்கொண்டு நிர்வஹிக்க முடியாமல் வைதிக வ்ருத்தியி லிருப்பவர்களிலும் அநேகம் பேர்கள் ‘அந்யாயமாய் பாஷாந்தரம் வாசித்து உத்யோகம் பண்ணமல் இந்த வேதாந்தாப்யாஸமாகிற பெரிய பாழ்ங்கிணற்றில் விழுந்து விட்டோமே’ யென்று நிர்வேதப்பட்டு அப்யஸ்தமான வேதவேதாந்தங்களை மறந்து ஆஜ்ஞாநுஜ்ஞா கைங்கர்யங்களிலும் அச்ரத்தையுடன் விட்ப்ராயர்களாக இருக்கிறார்கள்.

மேலும் ந்யாய்யமாய் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஏகவிம்சதி பாகமும் 30, 40 வர்ஷங்கட்கு முன் க்ஷத்ரிய ப்ரபுக்கள் வர்ணாச்ரம தர்ம பரிபாலகர்களாக இருக்கும்போது உத்யோகி வ்யவஸாயி வ்யாபாரி தநிகர்களிடமிருந்து கிடைத்துக்கொண்டிருந்தது. ‘நாராஜகே ஜநபதே’ என்று ஸ்ரீமத்ராமாயணத்திற் சொன்னதுபோல் இப்போது வர்ணாச்ரம தர்மவேத வித்யா பரிபாலக ப்ரபுக்கள் துர்லபர்களானதால், அது கிடைக்கவில்லை. ‘[illegible]’ என்றும், ‘தஸ்மாத் ப்ராஹ்மணோ [illegible] பவதி’ என்றும். ‘ஏதே வை தேவா: ப்ரத்யக்ஷம் யத் ப்ராஹ்மணா: [illegible] ப்ரீணாதி. தஸ்மாத் ப்ராஹ்மணேப்யோ வேதவித்ப்யோ திவே திவே நமஸ்குர்யாத்’ என்றும் ச்ருதியில் சொல்லியபடி ப்ருஹ்ம வித்துக்களுடைய கௌரவத்தை அறிந்து உபகரிப்பவர்களும் அபூர்வமாக இருக்கிறது.

ப்ருஹ்ம வித்துக்களான மஹாமஹோபாத்யாய பட்டம்பெற்றவர்களுக்கு லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் மெம்பர், டிஸ்ட்ரிக்ட் தாலுக் போர்ட் மெம்பர்கள், முனிஸிபல் கௌன்ஸிலர், கோவில் கமிட்டி, பஞ்சாயத் முதலிய அதிகாரங்கள் கிடைத்தால், அவர்கள் ராஜப்ரதிநிதி முதலானவர்களிடத்தில் வாதித்து ராஜாக்களால் வேதவ்ருத்திக்கும் ஸத்ரங்களுக்கும் வைக்கப்பட்ட ஜீவேஜநங்கள் ஹிந்து வேதசாஸ்த்ராபிவ்ருத்திக்கு வைக்கப்பட்டதாகையால், அந்த ஜீவேஜைக்கொண்டு வித்வத் ஸபையை ஏற்படுத்தி, வித்வத் ஸம்மாநம் வருஷந்தோறும் நடப்பிவிக்கும்படி ஸ்கீம் ஏற்படுத்துவதுடன் ஆலய ஜீவேஜநங்களில் ஸ்ரீ பாஞ்சராத்ர வைகாநஸாதி க்ரந்தங்களில் சொல்லியபடி வருஷந்தோறும் வருகிற வரும்படியை ஐந்து பாகமாகப் பண்ணி நித்யாராதநத்துக்கு ஒரு பாகமும் உத்ஸவங்களுக்கு ஒரு பாகமும், திருப்பணி திருவாபரணங்களுக்கு ஒரு பாகமும், மூலதநத்துக்கு ஒரு பாகமும், வேத திவ்யப்ரபந்த பாராயண பரர்களுக்கு ஒரு பாகமும் செலவு செய்யும்படி ஸ்கீம் ஏற்படுத்தியும், மடங்களின் ஜீவேஜநங்களிலும் வேதசாஸ்த்ராபிவ்ருத்தி ஸபா ஸம்மாநாதிகள் பண்ணும்படி ஆசார்யர்களைக் கொண்டும், தர்மரக்ஷண ஸபா மூலமாகவும் ஸ்கீம் ஏற்படுத்தியும், வித்வாங்களுக்கு வ்ருத்தி கல்பநம்பண்ணுவார்கள்,

வைதிகர்களுடைய தௌர்ப்பாக்யத்தினால் அவர்களுக்கு அந்த ஸ்தாநம் கிடைக்கவில்லை. அப்படி கிடைக்கும்படி செய்யவேணுமென்று சில ப்ரபுக்களிடத்தில் ஜ்ஞாபித்ததில் இங்க்லீஷ் தெரியாததனால் அது முடியாதென்று சொல்லுகிறார்கள். இது பெரிய ஆக்ஷேபமாகுமோ? ஜில்லா ஸிவில் ஸெஷன்ஸ் கோர்ட்டுகளில் வித்வாங்களுக்கு ஜூரி அதிகாரம் கொடுத்து, இவர்கள் தமிழில் சொல்வதை மொழிபெயர்ப்போர் [Translator] மூலமாய்த் துரைகள் தெரிந்துகொள்ள வில்லையா? அப்படிப்போல இதிலும் மொழிபெயர்ப்போர் மூலமாய் ராஜப்ரதிநிதிகளுக்குத் தெரிவிக்கலாம். இங்க்லிஷ் தெரிந்த மெம்பர்களை இந்த விஷயங்களை ராஜப்ரதி நிதிகளிடத்தில் ஜ்ஞாபிக்க வேணுமென்று கேட்டுக்கொண்டாலும் அவர்கள் ஜ்ஞாபிக்கவில்லை. அவர்கள் ஜ்ஞாபித்தாலும் கார்யம் ஸித்திக்கும். இப்படி இந்த வித்வாங்களுக்குக் கிடைக்கக் கூடிய வரும்படிகள் கிடைக்க வழியில்லாததனால் வ்ருத்திகர்ஶிதர்களாய் வைதிகர்கள் அதிமாத்ரம் கஷ்டப்படுகிறார்கள்.

இப்படிப்பட்ட ஸமயத்தில் இப்படிப்பட்ட ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையை ஏற்படுத்தி, ஸ்ரீராமபத்ரன் ‘[illegible]’ என்றும், ‘[illegible]’ என்றும் ‘[illegible]’ என்றும் பாகவதா பீஷ்ட ப்ரதானைக தீக்ஷிதனாக இருந்ததுபோல், ஆஸ்திக வித்வத்ப்ரபுக்கள் பாகவத வித்வத பீஷ்டப்ரதாந தீக்ஷிதர்களாக இருப்பது ‘[illegible]’ என்கிறபடி இருக்கிற வைதிக ப்ருஹ்ம வித்துக்களுடைய மஹா பாக்யம் என்று ஆநந்தித்து இவர்கள் பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருந்து, இந்த ஸபைக்கு விஶேஷ மூலதநம் சேர்த்து வைதிக வ்ருத்திகளையும் பாஷாந்தராப்யாஸம் பண்ணுமவர்களையும் இதரர்களான எல்லாரையும் நம்முடைய ஸம்ப்ரதாய க்ரந்தங்களையும் ஸ்ரீ வைதிக ஸார்வபௌமக்ருத தர்மஶாஸ்த்ரங்களையும் தங்கள் தங்கள் ஆசார்யர்களிடத்தில்

காலக்ஷேபம் பண்ணி பகவதாஜ்ஞாநு ஜ்ஞாரூப வர்ணாஶ்ரம தர்மங்களையும் அநுஷ்டிக்கும்படி செய்து, அப்படிப்பட்டவர்களுக்கு மாஸம் தோறும் 30 - ரூ. முதல் 60 - ரூ. வரையில் ஸம்மாநித்து ஜ்ஞாநாநுஷ்டாநங்களை அபிவ்ருத்திபண்ணி அதனால் உண்டாகும் பகவத் க்ருபா பூர்வக ஸர்வவித புருஷார்த்தங்களையும் கைக்கொள்ள வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறேன்.

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥

சதுஶ்ஶாஸ்த்ர வித்வான்,
திருக்குடந்தை - சேஷாசார்யர்.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌹𑌯𑌗𑍍𑌰𑍀𑌵𑌾𑌯 𑌨𑌮𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤 𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃.

ஆர்யாப்யுதயம்.

𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌵𑍍𑌯𑌾𑌕𑍃𑌤𑌿 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌨𑌾𑌂 ।
𑌯𑌂 𑌸𑍍𑌤𑍌𑌤𑌿 𑌨𑌿𑌖𑌿𑌲𑍋 𑌵𑍇𑌦𑌃 𑌸 𑌨𑍋 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌶𑍍𑌰𑌿𑌯𑌂 𑌹𑌰𑌿𑌃 ॥

ஸ்ரீ பகவத் ஸ்ருஷ்டமான ப்ருஹ்மாதி ஸ்தம்ப பர்யந்தமாய் அமைந்துள்ள சராசரங்கள், அனைத்துக்கும், வ்ருத்தி ஹ்ராஸம் என்று இருவகைப்பட்ட தஶாபேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வ்ருத்தி தசையில் மேன்மேலும் பலம், ஶக்தி, தேஜஸ் முதலியன, உத்ரிக்தமாயும் ஹ்ராஸ தசையில் அதற்கு விபரீதமாயும் இருப்பதைக் காண்கிறோம். ஆனால் லோகத்தில், சில வஸ்துக்களின் வ்ருத்தியே சிலவற்றின் ஹ்ராஸத்துக்கு ஹேதுவாகவும், சிலவற்றின் ஹ்ராஸமே வேறு சிலவற்றின் வ்ருத்திக்கு ஹேதுவாகவும் காணப்படுவதாலும், அப்படிக் கார்யகாரண மில்லாத ஸந்தர்ப்பங்களில் கூட ஏகதேஶத்தில் வ்ருத்தியும் ஸ்தலாந்தரத்தில் ஹ்ராஸமும் ஸமகாலிகமாயிருப்பதாலும், ப்ரத்யேகம் வ்யக்திகளுக்கு நித்யமாய் ஏற்படும் உபசயாபசயங்கள் ஜகத்தாகிற ஸமுதாயத்தில் அவைகட்கு ஹேது வாகிறதில்லை. ஒரு மநுஷ்யனுக்கு வார்த்தகத்தினால் பலக்குறைவு நேர்ந்தால் அதே காலத்தில் மற்றொருவனுக்கு யௌவநத்தினால் பலோத்ரேகம் ஏற்படுகிறது. ஒருவனுக்கு மரணம் நேர்ந்தால், அதே காலத்தில் மற்றொருவன் ஜநிக்கிறான். ஒருவனுக்குத் தநவ்யயம் நேர்ந்தால் அப்பொழுதே அல்லது அது காரணமாகவே வேறொருவனுக்குத் தநலாபம் உண்டாகிறது. இம்மாதிரியே ஸ்ரீ காளிதாஸ மஹாகவி, "𑌯𑌾𑌤𑍍𑌯𑍇𑌕𑌤𑍋𑌽𑌸𑍍𑌤𑌶𑌿𑌖𑌰𑌂 𑌪𑌤𑌿𑌰𑍋𑌷𑌧𑍀𑌨𑌾𑌮𑍍 𑌆𑌵𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑍋𑌽𑌰𑍁𑌣𑌪𑍁𑌰𑌸𑍍𑌸𑌰 𑌏𑌕𑌤𑍋𑌽𑌰𑍍𑌕𑌃 । 𑌤𑍇𑌜𑍋𑌦𑍍𑌵𑌯𑌸𑍍𑌯 𑌯𑍁𑌗𑌪𑌦𑍍𑌵𑍍𑌯𑌸𑌨𑍋𑌦𑌯𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌲𑍋𑌕𑍋 𑌨𑌿𑌯𑌮𑍍𑌯𑌤 𑌇𑌵𑌾𑌤𑍍𑌮𑌦𑌶𑌾𑌨𑍍𑌤𑌰𑍇𑌷𑍁 ॥" என்று கூறியபடி ஒரு பக்கத்தில் சந்த்ரன் அஸ்தமநமாவதும் அதே காலத்தில் மற்றொரு பக்கத்தில் ஸூர்யன் உதயமாவதும் ஜகத்திலுள்ள ஸர்வ பூதங்களின் தஶா பேதங்களுக்கு ப்ரகாஶமான த்ருஷ்டாந்தமாகக் காணப்படுகிறது. அப்படிக்கு ஸ்ருஷ்டியில் உதயாஸ்தமய தசைகள் பர்யாய க்ரமத்தில் அமைக்கப்பட்டிருப்பதனால் தான் லோகம் ஒரு மஹாப்ரவாஹம் போல் நடைபெற்று வருகிறது. இல்லாவிடில் ஜகத் எவ்வித மாறுதலுமில்லாமல் நித்யமாகவாவது நின்றுவிடும்; அல்லது சிறிது காலத்தில் நிஶ்ஶேஷமாய் மறைந்தாவது போகும். ப்ரவஹிக்கிற ஒரு நதியின் ஜலம் ஸமுத்ரத்தில் போய் விழுந்துகொண்டிருக்க, மேன்மேலும் அந்நதியில் புது ஜலம் வந்து கொண்டிருப்பதால் ப்ரவாஹத்தின் ரூபமும் அளவும் முன்போலவே இருப்பது போல், ஜகத்தில் சில வ்யக்திகளுக்கு க்ஷயமுண்டாகையிலேயே இதர வ்யக்திகளுக்கு அப்யுதயம் ஏற்படுவதால், காலமாகிற பூமியில் லோகமாகிற நதி அவிச்சிந்நமாய் ஏகரூபமாக ப்ரவஹித்து வருகிறது. இப்படிப்பட்ட லோக ப்ரவாஹத்தை ஒழுங்கு தவறாமல் கட்டிக் காப்பதற்காகவே லோக கர்த்தாவினால் ஶாஸ்த்ரமாகிற கரைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கரைக்கு அடங்கிப் போகும்வரையில் தான் நதிக்கு ஸ்வரூபம் ஸித்திக்கிறது; ஜநங்களுக்கும் க்ஷேமம். கரைபுரண்டு எங்குமோடினால் நதியின் ஸ்வரூபம் மாறிப் போவதுடன் எல்லாருக்கும் அநர்த்தமும் ஸம்பவிக்கிறது.

இம்மாதிரியே பகவச் சாஸநமான ஶாஸ்த்ர விதிக்குக் கட்டுப்பட்டு ஶாஸ்த்ர நிபத்தமான மர்யாதை தவறாமல் ஒழுங்காய் நடக்கும் வரையில் தான் லோகத்துக்கு ஜந்மஸாபல்யம் உண்டு. ஶாஸ்த்ர மர்யாதை தவறி உத்வ்ருத்தமாய் நடக்கும் பக்ஷத்தில், கரைபுரண்ட நதியைப் போல லோகமும் தன் ஸ்வரூப ஹாநியைத் தேடிக்கொள்வதுடன் ஸர்வப்ரகாரமான விபத்தையே விளைவிக்கும் என்பதற்கு ஸந்தேஹமில்லை.

ஶாஸ்த்ரம் லோக கதியாகிற ப்ரவாஹத்தால் அநர்த்தம் நேரிடாதபடி இருபுறமும் காக்கிற கரைக்கு ஒப்பாயிருப்பதும் தவிர, அப்ரவாஹத்தை ஆங்காங்கு ஏரி வாய்க்கால் முதலியவற்றில் ப்ரவ்ருத்திப்பிக்க வேண்டிய மார்க்கங்களை ஏற்படுத்தி, அதைக் கொண்டு ஸஸ்யம் முதலியவற்றைப் போஷித்து ஸௌக்யத்தைத் தரும் மதகு போலுமிருக்கிறது. அதாவது ஆத்மஹாநியை விளைவிக்கும் ப்ரவ்ருத்திகளை நிஷேதித்தும் ஶ்ரேயஸ்ஸாத

நமான வ்யாபாரங்களை விதித்தும் இரண்டு ப்ரகாரமாகவும் ஶாஸ்த்ரம் நமக்கு உபகாரம் செய்கிறது. ஆகையால் தான் ‘𑌮𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑍃𑌸𑌹𑌸𑍍𑌰𑍇𑌭𑍍𑌯𑍋𑌽𑌪𑌿 𑌵𑌤𑍍𑌸𑌲𑌤𑌰𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂’ என்று ஆயிரக்கணக்கான தாய்தந்தையரைக் காட்டிலும் சிறந்த மஹோபகாரியாக ஶாஸ்த்ரத்தைப் பெரியோர்கள் உகந்திருக்கிறார்கள்.

அவ்வகை மஹிமை பொருந்தியது ஶாஸ்த்ரம்.

‘𑌵𑍇𑌦𑍋𑌽𑌖𑌿𑌲𑍋 𑌧𑌰𑍍𑌮𑌮𑍂𑌲𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌶𑍀𑌲𑍇 𑌚 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌾𑌂 - 𑌆𑌚𑌾𑌰𑌶𑍍𑌚𑍈𑌵 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌂 𑌆𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌿𑌰𑍇𑌵 𑌚’ என்றும், ‘𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿 𑌸𑌦𑌾𑌚𑌾𑌰𑌃 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯 𑌚 𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃’ என்றும் தர்மஶாஸ்த்ரங்கள் கூறுகின்றன. அதாவது :—வேதங்கள் முதன்மையான மார்க்கதர்ஶிகள். அடுத்தாப்போல் அவைகளின் உபப்ருஹ்மண ரூபமான ஸ்ம்ருத்யாதிகள் நமக்கு நியாமகங்கள். இவைகளில் விஶதமாக்கப் படாமலிருக்கும் விஶேஷாம்ஶங்களில் சில ஸமயம் ஸம்ஶயம் நேர்ந்தால், ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் நிஷ்ணாதர்களான அநந்ய ப்ரயோஜநமாய்க் கேவலம் பகவதாஜ்ஞை என்கிற அபிஸந்தியுடன் தர்மாநுஷ்டாநம் பண்ணிவரும் ஸாதுக்களின் ஒழுக்கத்தைப் பார்த்து அந்த ஸம்ஶயத்தைத் தெளிந்துகொள்ள வேண்டியது. அதிலும் ஏற்பட்டிராத அம்ஶங்களுக்குத் தம்தம் மநஸ்ஸின் த்ருப்தியைக்கொண்டே கார்யாகார்யத்வ நிர்த்தாரணம் செய்துகொள்ள வேண்டியது. இவ்வரிசையில் பின்வரும் ஒவ்வொன்றும் முன் கூறப்பட்டவைகளுக்கு அநுகுணமாக அவைகளுக்குப் போஷகமாகவும் விவரணமாகவும் இருக்க வேண்டியதே தவிர, விருத்தமா யிருப்பதற்கு இடமேயில்லை. அப்படிக்கிருந்தால் அவை த்யாகார்ஹமே தவிர வேறில்லை; அதாவது வேதம் ஸர்வப்ரபலம். அதற்கு விருத்தமாகஸ்ம்ருத்யாதிகள் எது இருந்தபோதிலும் அப்யுபகமார்ஹமில்லை. அப்படியே ஶ்ருதி ஸ்ம்ருதி விருத்தமான ஆசாரமாவது மநஃப்ரவ்ருத்தியாவது கொஞ்சமேனும் ஆதரிக்கத்தக்கதல்ல.

இப்படி நால்வகையான ஆதாரத்தைக்கொண்டுப்ரவ்ருத்தித்த ஆசாரப்ரக்ரியைதான் தர்மமென்று ப்ரஸித்தி யடைந்திருக்கிறது. ‘𑌧𑌰𑌤𑍀𑌤𑌿 𑌧𑌰𑍍𑌮𑌃’ ‘𑌧𑌾𑌰𑌣𑌾𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌮𑌿𑌤𑍍𑌯𑌾𑌹𑍁𑌃 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌧𑌾𑌰𑌯𑌤𑌿 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃’ என்கிறபடி லோகத்தில் அடங்கிய ஒவ்வொரு ப்ராணியும் ஒவ்வொரு வஸ்துவும் தன்தன் ஸ்வரூப ஸ்வபாவங்களுக்கு

அநுகுணமாக நிலைபெற்று சரிதார்த்தமாவதற்குத் தேவையான ஒழுக்கமே தர்மம் என்பது. அது நிஸர்க்க தர்ம மென்றும் ஆசாரம் என்றும் இருவகைப்படும். ஒவ்வொரு வ்யக்திக்கு ஸ்வபாவத்திலேயே வ்ருத்தி நியதமாய் ஏற்பட்டிருக்கும் ப்ரவ்ருத்தியை நிஸர்க்க தர்மமென்று கூறலாம். அதாவது இயற்கை. மநுஷ்யர்களுக்கு இதர ப்ராணிகளுக்கு இல்லாத புத்தி ஶக்தி ஒன்று ப்ரபலமாயிருப்பதால் அதைக்கொண்டு அவர்கள் தங்களுக்கு ஶ்ரேயஸ்ஸாதகமான கார்யங்களைச் செய்துகொள்ள ஸமர்த்தர்களா யிருப்பதுபற்றி ஸர்வ ஸாதாரணமான நிஸர்க்க தர்மங்களைத் தவிர அவர்களுக்குக் கர்மாநுஷ்டாநமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதுதான் ஆசாரம் என்பது. ஸாதாரணமாய்க் கர்மம் தர்மம் என்னும் பதங்களினாலும் இது தெரிவிக்கப்படுகிறது. அவ்வித தர்மத்தை நாம் எதிலிருந்து தெரிந்து கொள்கின்றோமோ அதுதான் ஶாஸ்த்ரம். ஒரு அரசன் ஒரு பட்டணத்தை நிர்மாணம் செய்தாலும், அல்லது ஒரு தேசத்தைப் பிடித்துத் தன் வசமாக்கிக்கொண்டாலும் அங்கு வஸிக்கும் ப்ரஜைகள் பரஸ்பரம் கலஹம் செய்யாமல் தங்கள் க்ஷேமத்தை நாடுவதற்காகச் சட்டதிட்டங்கள் ஏற்படுத்தி, அவைகட்கு அநுகுணமாக ஜநங்கள் நடக்கும்படி செய்ய வேண்டியது அவஶ்யம். அப்படிச் செய்வதையும் பார்க்கிறோம். ஆகையால் ப்ரபஞ்சம் முழுவதும் ஸ்ருஷ்டிசெய்த ஸர்வஜ்ஞனும் ஸர்வஶக்தனும் பரமகாருணிகனுமான ஸ்ரீபகவாந் தம்முடைய ப்ரஜைகளின் ஶ்ரேயஸ் ஸாதநார்த்தம் தர்மமார்க்கம் ஏற்படுத்தியிருக்கவேண்டியது அவஶ்யம். அப்படி ஏற்படுத்தாமல் ப்ரபஞ்சத்தை அதேஶிகமாகப் பகவான் நிறுத்திவிட்டார் என்று சொல்வது யுக்திக்காவது ஶாஸ்த்ரத்துக்காவது ஸம்மதப்படாது. எந்த மதத்திலும் அப்படிப்பட்ட அபிப்ராயமும் கிடையாது. ‘பகவான் ஒருவர் இருக்கிறார், அவரே ஸ்ருஷ்டிகாரணம், என்கிற அம்ஶத்தை ஒப்புக்கொள்பவர் எல்லோரும் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ப்ரஜைகளுக்குக் கர்மாநுஷ்டாந ப்ரகாரத்தைக் காட்ட, ஸ்ரீபகவாந் ஸ்வயமாகவே நியமநங்கள் செய்திருக்கிறார் என்பதையும் அவஶ்யம் ஒப்புக்கொள்ள வேண்டியது தான். அப்படிக்கு ஏற்பட்டிருக்கும் பகவந் நியமநங்களை நாம் எதிலிருந்து தெரிந்து கொள்வோம் என்பதை மாத்ரம் நாம் தேடியறிய வேண்டியதே யொழிய அதற்கு மேற்பட்டு நம் யுக்தியால கல்பிக்கவேண்டிய விஷயம இதில் ஒன்றும் கிடையாது. ‘𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑍀 𑌮𑌮𑍈𑌵𑌾𑌜𑍍𑌞𑌾’ என்று

பகவான் சொல்லியிருப்பதால் அவருடைய ஆஜ்ஞாரூபமான வேதங்கள் தர்ம ஶாஸ்த்ரங்கள் முதலியவற்றைக்கொண்டு நமது தர்மாநுஷ்டாந பத்ததியை நாம் அறிந்து கொள்ள வேண்டியது. ஆகையால் தர்மம் என்பது ஸ்ருஷ்டியைப்போல் பகவானிடத்திலிருந்தே ப்ரவர்த்தித்திருக்கிறதென்றும், அதை நம் இஷ்டம்போல மாற்றவோ குறைக்கவோ மறைக்கவோ நமக்கு அதிகாரம் இல்லையென்றும், அப்படி யத்நப்பட்டால் அதனால் அநர்த்தம் ஸம்பவிக்குமே தவிர வேறில்லையென்றும் உறுதியாய்த் தெரிந்து கொள்வது ஆஸ்திகருடைய ப்ரதமலக்ஷணம். '[illegible]' என்கிற ஜ்ஞாநம் ஏற்பட்டவுடன் பகவான் தர்மப்ரவர்த்தகன் என்கிற ஜ்ஞாநமும் நியமேந ஏற்படுகிறது. ஆஸ்திக்யத்துக்கு விலக்காயுள்ள நாஸ்திகர்களைக் குறித்து இப்போது ப்ரஸ்தாவமில்லை. ஆனால் அவர்கள் [illegible]வான் ஒருவன் ஸர்வஜ்ஞத்வாதி குணவிஶிஷ்டனாயிருக்[illegible]னே ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரகர்த்தா' என்பதை ஒ[illegible] ஸம்மதிக்காமற் போனபோதிலும் மநுஷ்யஶக்தி மிகவும் பரிமிதம் என்றும், மநுஷ்ய ஶக்திக்கு மேற்பட்ட ஶக்தி ஏதோ ஒன்று இருந்து தான் லோக வ்யாபாரங்கள் நடைபெறுகின்றனவென்றும், அதை ஸ்வபாவமென்று கூறலாமென்றும், ஒழுங்குதவறி நினைத்தபடி ப்ரபஞ்ச வ்யாபாரம் நடப்பதல்லாமல் ஒவ்வொரு விஷயமும் ஒவ்வொரு ஏற்பாட்டை அநுஸரித்தே ஸம்பவிக்கின்றதென்றும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதுவரையில் ஒப்புக்கொண்டு விட்டால் பிறகு இவர்கள் சொல்லும் ஸ்வபாவம் என்பதற்குப் பதிலாக ஆஸ்திகர்கள் பகவான் என்று சொல்லுகிற ஶப்த பேதம் தவிர அர்த்தபேதம் ஒன்றும் முக்யாம்ஶத்தில் இருப்பதாக ஏற்படவில்லை. இந்தக் காரணத்தினாலும் எல்லா விதமான ஆஸ்திக மதங்களும் இந்த ஒரு விஷயத்தில் ஏக கண்டமாயிருப்பதாலும் '[illegible]' என்றபடி பகவதாஜ்ஞையே தர்மமென்பது நிஸ்ஸந்தேஹமாக எல்லாரும் அப்யுபகமம் பண்ணவேண்டிய விஷயம் என்பதற்கு ஆக்ஷேபமில்லை.

ஆனால் நம்முடைய ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் கூறப்பட்டது தான் எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டிய தர்மம் என்று சொல்வதற்கு ந்யாயம் என்ன? தேஶாந்தரங்களிலும் மதாந்தரங்களிலும் ஏற்பட்டிருக்கும் விதிகளை ஏன் நாம் ஸரியான தர்ம பத்ததியாகக் கைக்கொள்ளக்கூடாது? தர்மம் என்று வழங்குவது ஸங்கேதத்தினால் அக்கறை யுள்ளவர்கள் ஏற்படுத்தியதாகச் சிலர் சொல்வதை ஏன் நம்பக்கூடாது? என்கிற ஶங்கை உண்டாகக்கூடும். ஆனால் அப்படி ஶங்கிப்பவர்கள் நம்முடைய ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் ப்ரதிபாதிக்கப்பட்ட விஷயங்களைச் செம்மையாய்க் கற்றறிந்து இவைகளுக்கு அநுகுணமாயிராத ஆசாரங்களையும் நியமங்களையும் விதிக்கும் மதங்களை ஸம்பூர்ணமாகத் தெரிந்துகொண்டு ஒன்றுக்கொன்று தரதம பாவத்தைச் சீர்தூக்குவதற்குப் போதுமான ஸாமர்த்யமுள்ளவர்களா வென்பதை முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படிக் கல்லாமல் நம்முடைய ஶாஸ்த்ரத்தின் ஸாரம் அறியாமலே ஏதோ ஆபாதக்ரஹணத்தைக்கொண்டு பரீக்ஷகர்களாக வெளிக்கிளம்புகிறவர்கள் சொல்வதை நாம் கவனிக்க வேண்டியதில்லை. இதுவரையில் பார்த்து வருவதில் நம்முடைய பெரியோர்களான மஹர்ஷிகளால் வெளியிடப்பட்டிருக்கும் ஶாஸ்த்ராம்ஶத்தை ஜிஜ்ஞாஸையுடன் தடஸ்தமாகப் பரிஶீலநம் பண்ணினவர்கள் யாவரும் [அதாவது எத்தேஶத்தினரும் எம்மதத்தினரும்] 'நம் ஶாஸ்த்ரம் ஸர்வப்ரகாரமாயும் பழுதற்றது; அதுவே அநுஷ்டாநார்ஹம்; அதுவே ஶ்ரேயஸ்ஸாதநம்; இவ்விதமான ப்ரக்ரியை வேறெங்குமில்லை' என்று பலவாறாக உத்கோஷித்திருக்கிறார்களே தவிர, கொஞ்சங்கூட அது விஷயத்தில் தோஷபுத்தி அவர்களுக்கு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அன்றியும் நம்முடை ஶாஸ்த்ர கந்தமே யறியாத தேசாந்தர வாஸிகளில் சில புத்திமான்கள் தங்களிடம் வழங்கிவரும் அநுஷ்டாநங்கள் தோஷ பஹுளமாயிருப்பதைப்பற்றி ஶோசித்துச் சரியான மார்க்கம் எவ்விதமாகவிருந்தால் ஶ்ரேயஸ்கர மென்று அபிப்ராயப்பட்டிருக்கிறார்களோ அவ்வபிப்ராயங்களுக்கு ஒற்றுமையான அம்ஶங்கள் நம் ஶாஸ்த்ரங்களில் பலவாறாகக் காண்கிறோம். இப்போது பாஶ்சாத்யர்கள் யுக்தியாலும், அநுபவத்தாலும் அநவரதம் ஆராய்ச்சி செய்வதாலும் தர்ம வ்யவஸ்தை முதலியவற்றில் புதிதாகக் கண்டுபிடிப்பதாகச் செல்லும் அம்ஶங்களை யெல்லாம் ஏற்கெனவே நம் ஶாஸ்த்ரங்களில் சர்விதமாயிருப்பதையும் பார்க்கிறோம். இதையெல்லாம் யோஜிக்குமிடத்து, நம்முடைய ஶாஸ்த்ரங்களில் அப்ராமாண்யபுத்தி பண்ணுவது மிகவும் ஹாநிகரமே தவிர ஶ்ரேயஸ்கரமல்ல வென்று தெளிவாய் ஏற்படுகிறது.

மேலும் அநந்ய ப்ரயோஜநமாய் தத்வாந்வேஷணம் பண்ணி ஆத்மோஜ்ஜீவநத்தைத் தேடிக்கொண்டு, லோகோஜ்ஜீவநத்துக்கும் வழிகாட்டவேண்டுமென்று, ஆதிகாலம் தொடங்கித் தபஸ் முதலானவைகளைச் செய்து பகவத் க்ருபையை ஸம்பாதித்து, தந் மூலமாக ஜ்ஞாநலாபத்தைப் பெற்ற நம் முன்னோர்களான மஹர்ஷிகள் ப்ரவர்த்திப்பித்த தர்மமார்க்கத்தில் தோஷம் இருப்பதற்கு ஹேதுவே கிடையாது. தத்வஸ்வரூபம் இன்னதென்று அறியாதவர்க்கு மஹர்ஷிகள் ஏற்படுத்திய தர்ம ஸம்விதாநத்தின் ஆஶயம் ஏற்படாமல் அது ஆக்ஷேபார்ஹமென்று தோன்றுமேயொழிய தத்வஸ்வரூபத்தை அறிந்தவர்களுக்கு அப்படித் தோன்றமாட்டாது. ப்ரத்யுத, அந்தத் தர்மப்ரக்ரியையைப் பற்றிச் சிந்திக்கச் சிந்திக்க அதன் ஆவஶ்யகதையும் ஸாமஞ்ஜஸ்யமும் அது எப்படி ஸர்வாத்மநா ஶ்ரேயஸ் ஸாதகமாகுமென்பதும் தெளிவாய் ஏற்படும். அப்படி தத்வ ஸ்வரூபம் அறிந்தவர்கள் தான் ஆர்யர்கள் என்றும், அறியாதவர்கள் ஆர்ய வ்யபதேசத்துக்கு விலக்கானவர்கள் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. ‘[illegible]’ என்று ஆர்ய ஶப்தத்தைப் பெரியோர்கள் நிர்வசநம் பண்ணியிருக்கிறார்கள். ஆர்யர்கள் என்கிற வ்யபதேசத்துக்கு லக்ஷ்யமாயிருப்பவர்கள், யதார்த்த ஜ்ஞாநமுள்ளவர்கள் என்றும், அதத்வத்தைத் தத்வமென்று ப்ரமிக்கும் நிலைமையற்றவர்களென்றும் ஏற்படுகிறது. அவ்வகையான தத்வதர்ஶிகள் பூயிஷ்டமாக ஏற்பட்டு அவர்கள் பரம்பரை நிலைகொண்டிருந்து வந்ததால் தான் நம் தேசத்திற்கு ‘ஆர்யாவர்த்தம்’ என்கிற பெயரும் வழங்கிவந்திருக்கிறது.

ஆனால் இப்போது வெவ்வேறு ஹேதுக்களால் அப்படிப்பட்ட ஆர்ய பரம்பரை முன்போல ஓங்கி வளராமல் மாலிந்யத்தை அடைந்திருப்பதை நாம் எல்லோரும் காண்கிறோம். அதனாலேயே தான் நம் தேசத்துக்கும் அவஸாதமுண்டாயிருக்கிறதென்று விமர்ஶகர்களுக்கு ஸ்பஷ்டமாக ஏற்படும். சக்ஷுரிந்த்ரியத்தின் ஶக்தி குறைந்தால் முகத்தில் தேஜோ வைகல்யம் உண்டாவதுபோல், தத்வதர்ஶிகள் விரளமாய்ப் போய்விட்டதால் தான் நம் தேசத்துக்கு மஹிமை குறைந்துவிட்டதென்பதற்கு ஸந்தேஹமே இல்லை. பாஹுபலம், த்ரவிண பலம் முதலியவைகளெல்லாம் காலதேஶ ஸௌகர்யங்களைப் பொறுத்தவை. அவைகளால் ஏற்படும் ஸுகம், கீர்த்தி முதலான ப்ரயோஜநங்களும் அவைகளைப்போலவே அல்பமும் அஸ்திரமுமானவைகள். ஜ்ஞாந ஸம்ருத்தியொன்று தான் எப்போதும் ப்ரகாஶமாகவும் எல்லாருக்கும் ஶாஶ்வதமாய் உபஜீவ்யமாயும் இருக்கக்கூடியது. அதனால் ஏற்படும் பலமும் அளவற்ற ஆநந்தத்தைத் தரக்கூடியது. ஜ்ஞாந ஸம்பத்திற் சிறந்த இந்தத் தேசத்தில் ஜ்ஞாநஸங்கோசம் உண்டானது தான் நம்முடைய தைந்யத்துக்கு முக்ய காரணம். ஜ்ஞாநஸங்கோசத்துக்கு ஹேது என்னவென்றால்: ப்ராசீந வித்யாப்ரவசநம் குறைவுபட்டதுதான். அப்படிப்பட்ட குறைவு பற்பல காரணங்களால் நேர்ந்ததென்பது நமக்குத் தெரிந்த விஷயம். இப்போது மறுபடியும் நம்முடைய ஆர்யாவர்த்தத்தை அந்வர்த்தமாக்க வேண்டுமானால் நம்முடைய ஆர்ய வித்யாப்ரசாரத்தை விஸ்தரிப்பித்து, அதனால் நம் தேசத்தவர்களுக்கு யதாக்ரமமாக தத்வ ஜ்ஞாநம் ஏற்படும்படி முயற்சி செய்வதைவிட வேறு உபாயமில்லை. ஜ்ஞாநம் முன்போல் மறுபடியும் நம் தேசத்தில் ஓங்குகிற மாத்ரத்தில் நாம் தீர்க்க நித்ரையிலிருந்து எழுந்தவர்கள்போல், முன்விட அதிக சுறுசுறுப்பாகவும் அதிக புத்தி ஶக்தியுடனும் மநோ நைர்மல்யத்துடனும் ஶாஶ்வதமான ஶ்ரேயஸ்ஸைத் தரும்படியான வ்யாபாரங்களைக் கைக்கொண்டு யாவத் பலோதயம் விடாமுயற்சியுடன் பாடுபட்டுப் பலஸித்தியை அடைவோம் என்பதற்கு ஆக்ஷேபமில்லை. அவ்விதமான ஜ்ஞாநோந்மேஷம் உண்டுபண்ணாத வரையில் எவ்வளவு அதிகமாக இதர வகையில் ப்ரயத்நப்பட்டபோதிலும் வ்ருதா ஶ்ரமமாக முடியுமே தவிர, பல ப்ராப்தியடைவது ஶக்யமில்லை. ஒருவனுக்கு வ்யாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது ப்ரஜ்ஞாபங்கம் நேர்ந்திருக்குமாகில், முதலில் ப்ரஜ்ஞை தெளிய வேண்டியதற்குத் தக்க சிகித்ஸையைச் செய்து புத்தியை ஸ்வபாவ நிலைமைக்குக் கொண்டுவந்த பிறகு தான் மற்ற உபாதிகளுக்குப் பரிஹாரம் தேடுவது ப்ரயோஜநப்படுமேயொழிய, புத்தி வைகல்யத்தைச் சீர்ப்படுத்தாத வரையில் இதர சிகித்ஸை செய்வது வ்யர்த்தமென்பது நிஶ்சயம். அப்படியே தான் நம் ஆர்யாவர்த்த வாஸிகளாகிய ஆர்யர்களுக்கும் புத்தி வைஶத்யத்தை ஸத்வித்யா ப்ரவசநமூலமாக ஸித்திக்கச் செய்த பிறகுதான் இதர ப்ரகாரமான யத்நங்கள் பலவத்தாக முடியும். முன்னமே கூறியபடி ஆர்யர்களுடைய ஆர்யத்வமே தத்வ ஜ்ஞாநத்தைப் பொறுத்திருப்பதால் அந்த ஜ்ஞாநமில்லாத வரையில்

அவர்களுக்கு ஸ்வரூப ஸித்தியே இல்லை. அப்படியிருக்க அதற்கு மேற்பட்ட ஶ்ரேயஸ்ஸுக்களின் கதை ஏது?

இந்த ஸூக்ஷ்மத்தை உணராமல் ப்ரவ்ருத்திப்பதால்தான் இதுவரையில் நம்முடைய அப்யுதயத்துக்காகப் பல பெயர்கள் பல ப்ரகாரமாய்ச் செய்யும் யத்நங்கள் எல்லாம் கார்யகாரியாகாமல் இன்னும் யத்நாவஸ்தையிலேயே இருந்து வருகின்றன. ஆர்யாப்யுதயத்துக்கு ப்ரதமோபகரணம் ஆர்யவித்யை என்பதைச் செம்மையாய் உணர்ந்து நம்முடைய ஆர்ய ஜநங்களுக்கு [முக்யமாய் வித்யார்த்திகளுக்கு] மஹர்ஷிகள் பஹு ப்ரகாரமாய்த் தேவார்ஹமான ஆர்யபாஷையில் லலிதோதார மனோஹரமான ஶைலியில் ஒவ்வொருவரும் யதாதிகாரம் அப்யஸிக்கும்படி விஶதவிஶதமாய் உரைத்திருக்கும் விஷயங்களைப் போதிப்பித்து அதனால் அவர்களுடைய புத்தியும் மநஸ்ஸும் ஸம்ஸ்கரிக்கப்பட்டுத் தத்வாவபோதம் ஏற்பட்டுவிட்டால் பிறகு நம்முடைய அப்யுதயத்தைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய அவஶ்யமே இராது. அவ்விதமான ஸம்ஸ்காரம் ரூட மூலமாக வேண்டியதற்கு ஸம்ஸ்க்ருத பாஷையிலேயே ஸ்ம்ருதீதிஹாஸாதி க்ரந்தங்களை நம் ஆர்ய பாலர்களுக்கு அவற்றின் ஸாரம் அறிந்த பெரியோர்களைக்கொண்டு அத்யாபநம் பண்ணிவைக்க வேண்டியது அவஶ்யம். அப்படி வித்யா ப்ரவசநம் நடந்து வரும்போது அந்த வித்யார்த்திகளுக்கு நம்முடைய பூர்விகமான வித்யா ஸம்ப்ரதாயத்தின் மஹிமையையும், அதற்கு ப்ரசாரக் குறைவு நேர்ந்ததற்குக் காரணத்தையும், அதனால் நாம் அநுபவிக்கும் துக்கங்களையும், மறுபடியும் வித்யாலாபத்தினால் நமக்கு வரக்கூடிய ஶ்ரேயஸ்ஸையும், அதற்குப் பாடுபட வேண்டிய மார்க்கத்தையும் எடுத்துக்காட்டிக்கொண்டே வரவேண்டியது. அப்போது அவர்களுக்கு ஸம்ஶயம் இல்லாமல் வஸ்து ஸ்திதி ஸ்பஷ்டமாய் ஏற்படுவதுடன் இப்போதிய துஸ்ஸ்திதிக்குப் பரிஹாரம் தேடவேண்டிய ப்ரகாரமும் அநுபவ ஸித்தமாய் விடும். ஆர்யவித்யையின் மஹிமையைச் செம்மையாய் ஒருவன் உணர்ந்துவிட்டால் அதை வ்ருத்தி செய்ய ப்ரயத்நம்படும்படி ஒருவரும் அவனைத் தூண்டவேண்டுவதில்லை. அம்ருதத்தின் ருசியை அறிந்தவனுக்கு அதை மேன்மேலும் கைக்கொள்ள முயற்சிக்கும்படி சொல்லவேண்டிய அவஶ்யம் ஏது?

நம்முடைய வித்யைக்கு இவ்வளவு உத்கர்ஷம் இருக்கும் பக்ஷத்தில் அதை இந்தக் காலத்தில் மிகவும் உபேக்ஷிப்பதற்குக் காரணம் என்ன? அதற்கு ஏன் இவ்வளவு ப்ரசாரக்குறைவு ஏற்பட வேண்டும்? இப்போது எல்லாத் தேஶங்களிலும் வித்யாவ்ருத்திதான் க்ஷேமகரம். ஆகையால் முதன்மையாக வித்யையையே ராஜாங்கத்தவரும் ஜநங்களும் சேர்ந்து வ்ருத்தி செய்யவேண்டியது அவஶ்யம். அந்த விஷயத்தில் கொஞ்சம்கூட யத்நக்குறைவு ஏற்படக்கூடாது என்று உத்கோஷிக்கப்படுகிறதே. அதே ப்ரகாரமாய் வித்யாவிஷயத்தில் பலவிதமான யத்நங்கள் ஒவ்வொரு தேசத்திலும் எடுத்துக்கொள்ளப் படுவதையும் பார்க்கிறோமே. அப்படியிருக்க நம் ஆர்ய வித்யையினால் உண்மையில் ஜநங்களுக்கு உபகார மிருந்தால் அதை ஏன் எல்லாரும் கைவிடவேண்டும்? அதனால் ப்ரயோஜந மிருப்பதாகவே நினைக்காமல் இந்தத் தேஶத்தில்கூட தேசாந்தர வித்யையையே அவலம்பிக்க வேண்டிய அவஶ்யம் என்ன? என்கிற ஶங்கைகள் உண்டாகக்கூடும். இதற்குச் சுருக்கமான ஸமாதாநம் ஆர்யவித்யையின் தத்வத்தை நாம் ஸரியாக உணராததுதான். நாம் அதைத் தெரிந்துகொள்ளாத வரையில் அந்யர்களுக்கு அதன் ஸ்வரூபம் ஏற்படுமென்று நினைக்க ஹேதுவில்லை. நம் வித்யை ஒரு நிதிக்கு ஒப்பானது. அது எல்லாருக்கும் புலப்படாது. அஞ்ஜநத்தினால் ஸம்ஸ்கரிக்கப்பட்ட நேத்ரத்துக்கு மாத்ரம் நிதி புலப்படுவது போல், நம்முடைய மஹர்ஷிகளிடமிருந்து பரம்பரா ப்ராப்தமான ஸம்ஸ்காரத்தையுடைய ஶ்ரத்தாளுக்களுக்குத்தான் நம் ஆர்ய வித்யாஸ்வரூபம் சரியாகப் பிடிபடும். இதைத்தான் சாந்தோக்ய ப்ராஹ்மணத்தில் ‘வித்யா ஹ வை ப்ராஹ்மணமாஜகாம, கோபாய மா ஶேவதிஷ்டேஹமஸ்மி, அஸூயகாயாந்ருஜவேயதாய ந மா ப்ரூயா வீர்யவதீ ததா ஸ்யாமிதி’ என்றும், மநு ஸ்ம்ருதியில் ‘வித்யா ப்ராஹ்மணமேத்யாஹ ஶேவதிஸ்தேஸ்மி ரக்ஷ மாம் । அஸூயகாய மாம் மாதாஸ்ததா ஸ்யாம் வீர்யவத்தமா ।’ என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது: வித்யை ப்ராஹ்மணனிடம் வந்து ‘என்னை நீ காப்பாற்ற வேண்டும்; நான் உனக்கு ஸர்வோபகாரமாக இருப்பேன்; என்னை ஶ்ரத்தை யில்லாதவர்களிடம் காட்டிக்கொடாதே; அப்படியானால் நான் மிகவும் நன்மையை உண்டாக்குவேன்’ என்று சொன்னதாகக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது: வித்யையின் ஸ்வரூபத்

தையும் ஶக்தியையும் ப்ரயோஜநத்தையும் செம்மையாய்த் தெரிந்துகொண்டு பூர்ணமான ஶ்ரத்தையோடு அதே ஸர்வஶ்ரேயஸ்ஸாதநம் என்று நம்பியிருப்பவர்கள் தான் வித்யைக்குப் பாத்ரபூதர்களே தவிர, ஶ்ரத்தைக் குறைவுள்ளவர்களாய் அஹங்கார மமகாராதிகளினின்று விடுபடாமல் வித்யையை லௌகிக பலத்துக்கு உபகரணமாக ப்ரயோகிக்க இச்சிப்பவர்களும் பாத்ரமாகமாட்டார்கள் என்பது தான். அப்படிப்பட்ட அபாத்ரத்தில் ப்ரதிபாதநம் செய்தால் வித்யையின் வீர்யம் போய் க்ரஹிக்கிறவர்களுக்கு ப்ரயோஜநப் படுவதில்லை. அவ்விதமாகத் தன்னை நிஷ்பலமாக்கிக் கொள்ள ஸம்மதிக்காமல் தான், வித்யை தன்னைக் காப்பாற்றும்படி ப்ராஹ்மணனிடம் சொல்லிக்கொண்டது. இந்த விஷயத்தையே ஸ்ரீமத் ராமாயணத்தில் வஸிஷ்டருக்கும் விஶ்வாமித்ரருக்கும் ஶபலையைப்பற்றி ஏற்பட்ட விவாதத்தால் ஸ்பஷ்டமாக உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. ப்ராஹ்மணனுடைய வித்யாஸ்வத்தை க்ஷத்ரியன் ஆசைகொண்டு பலாத்காரமாய் அபஹரிக்க யத்நப்பட்டால் அது பயன்படுவதில்லை யென்றும், வித்யையினிடத்தில் ப்ராஹ்மணனுக்கு எவ்வளவு ப்ரதிபத்தி இருக்கிறதோ, அவ்வளவு பற்றுதல் வித்யைக்கும் ப்ராஹ்மணனிடத்தி லிருக்கிறதென்றும், இப்படி பரஸ்பரம் ஸ்வதஸ்ஸித்தமாய் அமைந்திருக்கும் மைத்ரியை விச்சேதம் பண்ணுவது யுக்தமுமல்ல ஸாத்யமுமல்ல வென்றும், அப்படி ப்ரவ்ருத்திப்பவர்களுக்குக் கெடுதியே தவிர லாபமில்லை யென்றும் இதனால் தெளிவாகிறது. ஆகையால் நம்முடைய வித்யாபலத்தைத் தெரிந்துகொண்டு அதனால் ப்ரயோஜநமடைய வேண்டியது அவஶ்ய மென்று நினைத்தால், முதலில் பரம்பரா பாத்யமுள்ள நாம் பூர்வ ஸம்ப்ரதாயத்துக்கு அநுகுணமாக ஶ்ரத்தாதிகளான அங்க ஸம்பத்திகளுடன் சரியான மார்க்கத்தை அவலம்பித்து வித்யாப்ரசாரம் செய்தாலொழிய இதரர்களைக்கொண்டு இந்தக் கார்யம் நடந்தேறும் என்று நினைக்க இடமே இராது.

லோகத்துக்கு நம் ஆர்யவித்யை இல்லாமற் போனதால் என்ன நஷ்டம்? இப்போது ஆங்காங்கு பாஶ்சாத்ய ஶாஸ்த்ரங்களின் ப்ரசாரத்தினால் எங்கும் வித்யா ஸம்ருத்தி இருந்து கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோமே. அப்படியிருக்க, பழைய காலத்திய நம் ஆர்யவித்யை இல்லாம லிருப்பதைப்பற்றி ஶோசிக்க இடமேது? என்று கேட்டால் அதற்கு இவ்வாறு ஸமாதாநம்:— இக்காலத்தில் வித்யை யென்று நடைபெற்று வருவது வித்யாசப்தத்தினால் விவக்ஷிக்கத்தக்க தல்ல. நமக்கு ஜ்ஞாநோத்பாதநத்துக்கு ஹேதுவாகும் ஸம்ஸ்காரமே வித்யை யென்று சொல்லத்தக்கது. ஜ்ஞாநம் என்றால் தத்வஜ்ஞாநம். அதாவது ப்ரக்ருதி, ஜீவாத்மா, பரமாத்மா இவைகளின் ஸ்வரூப ஸ்வபாவங்களை நாநாப்ரகாரமாக ப்ரதிபாதநம் பண்ணி, அவற்றை நம் புத்திக்கு விஶதமாக்கி, அந்த ஜ்ஞாநத்தை அநவரதாப்யாஸத்தால் அநுபவஸித்தமாக்கி, ததநுகுணமான அநுஷ்டாநத்தைச் செய்விப்பது தான் வித்யையின் முக்யோத்தேஶம். அப்படிச் செய்ய அஸமர்த்தமான உபாயங்கள் வித்யையல்ல. இப்போது இதர தேசங்களில் வித்யை யென்று ப்ரசார மடைந்திருப்ப தெல்லாம் ஶில்பமே தவிர வித்யையல்ல. ஶில்பத்தின் உத்தேஶம் மநுஷ்யர்களுக்கு லௌகிகமரன ஶக்தியையும் ஸௌகர்யத்தையும் உண்டாக்குவதும் இந்த்ரியங்களுக்கு ப்ரீதியைத் தேடுவதும் தான். இதற்கு உபஷ்டம்பகமாக ஏற்பட்டிருக்கும் விசாரங்கள் தான் இப்போது ஶாஸ்த்ரமாக ப்ரஸித்தி பெற்றிருக்கின்றன. ‘மேன்மேலும் அர்த்த ஸஞ்சயம் பண்ணுவதற்குத் தேவையான உபாயங்கள் என்ன? இதர ஜநங்களை ஜயித்து வசப்படுத்திக்கொண்டு அவர்கள் தேசத்திலிருக்கும் ஸாமக்ரிகளைக்கொண்டும் தநத்தைக்கொண்டும் நாம் வ்ருத்தியடைவதற்கு என்ன உபாயம்? என்ன விதமாய் லோகத்திலுள்ள த்ரவ்யம் நமக்கு வசமாகும்?’ என்கிற வண்ணமாக ஒவ்வொரு தேஶத்தினரும் இப்போது யோஜனை செய்துகொண்டு அந்த அபிப்ராயத்துக்கு அநுகுணமாக வித்யாப்ரசாரம் பண்ணி வருகிறார்களே யொழிய தத்வஜ்ஞாநத்துக்கு ஸாதகமான முயற்சி ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. பரஸ்பரம் அத்யந்தம் பிந்நமான வித்யா-வ்ருத்தி என்னும் இரண்டு ஶப்தங்களும் இந்தக் காலத்தில் ஸமாநார்த்தங்களாக விருக்கின்றன வென்பது தத்வஜ்ஞர்களுக்கு ஆஶ்சர்யத்தையும் ஶோகத்தையும் உண்டாக்குகிறது. நன்றாக வ்யாபாரம் செய்வதும், செம்மையாய்ப் போர்புரிவதும், நன்றாகப் பயிரிடுவதும், ஸாமர்த்யத்துடன் கப்பலோட்டுவதும், பலமான கட்டிடங்கள் கட்டுவதும், அழகான துணிகள் நெய்வதும், தந்த்ரமாய் வ்யவஹாரங்கள் நடத்துவதும் ஒரு நாளும் வித்யையாகமாட்டா. அவைகளெல்லாம் ஶில்பங்கள். அவைகள் ஶரீரபோஷணத்துக்கு அவஶ்யம் தான். ஆனால் அவைகளை நம்

முடைய பரமோத்தேசமாக வைத்துக்கொள்ளாமல் ‘ஶரீரமாத்யம் கலு தர்மஸாதநம்’ என்பதுபோல அவை நம்முடைய பரம விவக்ஷிதமான ஜ்ஞாந வ்ருத்திக்கு உபகரணமான ஶரீரபோஷணத்துக்குத் தேவையான ஸஹகாரி வர்க்கத்தில் சேர்ந்தவைகளே தவிர, ஸ்வயம் ப்ரயோஜந மல்லவென்று நினைக்க வேண்டியது அவஶ்யம். அப்படிக் கொள்ளாமல் அர்த்தமே பரம புருஷார்த்தமென்று ஸித்தாந்தம் செய்துகொண்டு மநுஷ்யனுடைய யாவத் ப்ரவ்ருத்திகளையும் அர்த்த ஸஞ்சயத்துக்காகவே உபயோகப்படுத்த வேண்டு மென்று இந்தக் காலத்தில் நினைத்து வருவதால் தான் ஸாத்விக வ்ருத்தியான ஶாந்தியில்லாமல் ராஜஸமான ஆததாயித்வம் எங்கும் பரவியிருக்கிறது. அதனால் தான் எப்போதும் ஸ்பர்த்தையும் கலஹமும் வ்ருத்தியாய் வருகின்றன. இப்போது பாஶ்சாத்ய தேஶங்களில் நடக்கும் மஹாயுத்தத்துக்கு மூலகாரணம், அர்த்தத்தைப் பரமபுருஷார்த்தமாக வைத்துக்கொண்டு எவ்வளவுக் கெவ்வளவு ஒரு தேசத்துக்கு அர்த்தோபபத்தி ஏற்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு ப்ராதாந்ய மென்று நினைத்ததால் உண்டான ஸங்கர்ஷம் தான் என்பது யாருக்கும் தெரிந்த விஷயம். ‘விரை யொன்று போடச் சுரையொன்று முளைக்குமா?’ என்பதுபோல நாம் எதை உத்தேசித்து யத்நப்படுகிறோமோ அந்த பலம் தான் நமக்குக் கிடைக்கும். பாஶ்சாத்யர்கள் இதுவரையில் அர்த்த லாபத்தையே பரமோத்தேசமாக வைத்துக்கொண்டு தங்களுடைய ஸர்வப்ரகாரமான ஶக்தியையும் அந்த உத்தேசத்தைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு ஸஹகாரியாக உபயோகித்து வந்ததால் தான் அவர்கள் இவ்வளவு காலமாகச் செய்துவந்த கார்யங்க ளெல்லாம் க்ஷணமாத்ரத்தில் வ்ருதாஶ்ரமமாகவும் அநர்த்தாவஹமாகவும் பரிணமித்திருக்கின்றன. இப்போது அவர்களில் சில விமர்சகர்கள் இதுவரையில் தாங்கள் அர்த்த லாபத்திலேயே ஸர்வ க்ஷேமமும் அடங்கியிருப்பதாக நினைத்திருந்தது சரியல்லவென்றும், அர்த்தத்தைவிட மேலான புருஷார்த்தம் ஒன்று இருக்க வேண்டு மென்றும், அதைத் தேட முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, அர்த்தத்தையே ஸ்வயம் ப்ரயோஜநமாக

பாவிப்பது யுக்தமல்ல வென்றும் தெரிந்துகொண்டிருக்கின்றனர். ஆனால் இந்த விஷயத்தில் அவர்களுக்கு நம்மைப்போல பரம்பரா ப்ராப்தமான ஸம்ஸ்காரம் இல்லாததனால் நிஷ்பந்நமான பத்ததி யொன்றும் ஏற்படுத்தவாவது விஶதமான தத்வஜ்ஞாநாவலம்பத்தை ஸாதிக்கவாவது முடியவில்லை. ஆகையால் அவ்விதமான உபகாரம் லோகத்துக்குச் செய்யக்கூடுமானால் நம் ஆர்யாவர்த்தத்திலிருந்து ஆர்யவித்யையில் நிஷ்ணாதர்களான ஶ்ரத்தாளுக்கள் ஏற்பட்டு மார்க்கம் காட்டினாலொழிய வேறு எவராலும் அது விஷயத்தில் நிஷ்பத்தி ஏற்படுத்த முடியாது. ஆகையால் லோகோபகாரார்த்தத்தை உத்தேசித்துக்கூட ஆர்யவித்யா வ்ருத்தி விஷயத்தில் நாம் சரியாக முயற்சிக்க வேண்டியது அவஶ்யம்.

(இன்னும் வரும்.)

தி. இ. சடகோபாசார்யர்.

1916-ம் வருஷம் டிஸம்பர் மாஸத்தில் சேர்ந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸதஸ்ஸின் சாயா படம் (Group Photo) விலைக்கு அகப்படும். காபி ஒன்றுக்கு ரூபாய் 2. படத்தை அபேக்ஷிக்கிறவர்கள் மயிலாப்பூர் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்ஶிகளுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

வதூ வித்யா விசாரம்.

உபநிஷத்துகளில் கார்கீ மைத்ரேய்யாதிகள் ப்ரஹ்ம வித்யையை அத்யயநம் பண்ணக் காண்கையினாலும், அபஶூத்ராதிகரணத்திலும் ஸ்த்ரீகளை நிஷேதிக்காததனாலும், ந்யாய ஸித்தாஞ்ஜந பாவ ப்ரகாஶாதிகளில் ஸ்த்ரீகளுக்கு வித்யாத்யயநம் அங்கீகரிக்கப்பட்டிருப்பதாலும், ஸ்த்ரீகள் ப்ரஹ்மவித்யாத்யயநம் செய்யலாம் என்று சிலர் சொல்வது இக்காலத்துக்குப் பொருந்தாது.

‘நிர்ணய ஸிந்து’, என்னும் தர்மஶாஸ்த்ர நிபந்தந க்ரந்தத்தில் மூன்றாவது பரிச்சேதத்தில் ப்ரகீர்ண நிர்ணயத்தில் ஆந்த்ர லிபியில் அச்சிட்ட புத்தகத்தில் 156 - ம் பக்கத்தில்,

“𑌯𑌤𑍍𑌤𑍁 𑌹𑌾𑌰𑍀𑌤𑌃 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑍍𑌯𑌃 𑌸𑌦𑍍𑌯𑍋𑌵𑌧𑍍𑌵𑌶𑍍𑌚 - 𑌤𑌤𑍍𑌰 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑍀𑌨𑌾𑌂 𑌉𑌪𑌨𑌯𑌨𑌂 𑌅𑌗𑍍𑌨𑍀𑌨𑍍𑌧𑌨𑌂 𑌵𑍇𑌦𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑌂 𑌸𑍍𑌵𑌗𑍃𑌹𑍇 𑌭𑍈𑌕𑍍𑌷𑌚𑌰𑍍𑌯𑍇𑌤𑌿 - 𑌸𑌦𑍍𑌯𑍋𑌵𑌧𑍂𑌨𑌾𑌂 𑌉𑌪𑌨𑌯𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌵𑌾𑌹𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯 𑌇𑌤𑌿 - 𑌯𑍁𑌗𑌾𑌨𑍍𑌤𑌰 𑌵𑌿𑌷𑌯𑌂.”
“𑌪𑍁𑌰𑌾𑌕𑌲𑍍𑌪𑍇𑌷𑍁 𑌨𑌾𑌰𑍀𑌣𑌾𑌂 𑌮𑍌𑌞𑍍𑌜𑍀𑌬𑌨𑍍𑌧𑌨𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ।
𑌅𑌧𑍍𑌯𑌾𑌪𑌨𑌂 𑌚 𑌵𑍇𑌦𑌾𑌨𑌾𑌂 𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍀𑌵𑌚𑌨𑌂 𑌤𑌥𑌾” 𑌇𑌤𑌿 𑌯𑌮𑍋𑌕𑍍𑌤𑍇𑌃.

என்று கலியுகத்தில் ஸ்த்ரீகளுக்கு வேதாத்யயநம் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. மநோரமா முதலான க்ரந்தங்களில் ‘𑌪𑍁𑌰𑌾𑌯𑍁𑌗𑍇𑌷𑍁 𑌨𑌾𑌰𑍀𑌣𑌾𑌂’ என்று பாடபேதம் இருக்கிறது. வைத்யநாதீய வர்ணாஶ்ரம காண்டத்தில் ‘𑌜𑌪𑍇𑌚𑍍𑌚 𑌶𑍂𑌦𑍍𑌰𑌵𑌚𑍍𑌚 𑌸𑌾𑌤𑍁’ என்று ஶூத்ரனைப்போல ஸ்த்ரீகள் ஜெபிக்க வேணுமென்று இருக்கையினாலும் ஸ்த்ரீகளுக்கு வேதாத்யயநம் இல்லாததனால் கலியுகத்தில் வதூக்களுக்கு ப்ரஹ்ம வித்யாதிகாரமில்லை. ஸ்ரீதேஶிகாதி ஸ்ரீஸூக்திகளில் கலியுகத்திலும் ஸ்த்ரீகள் ப்ரஹ்மவித்யா க்ரஹணம் செய்யலாம் என்கிற வாக்யமில்லாததனால், அப்படிச் செய்ய அங்கீகரிக்கும் ஹாரீத வாக்யம் முன் யுகத்தில் நடந்த வ்ருத்தாந்தங்களைப் பற்றிச் சொல்லுகின்றனவென்று நாம் ஊகிக்க வேண்டும். மநுஸ்ம்ருதியில் ஒன்பதாவது அத்யாயத்தில்,

“𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍈𑌰𑌿𑌤𑌿 𑌧𑌰𑍍𑌮𑍇 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 ।
𑌨𑌿𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾 𑌹𑍍𑌯𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌨𑍃𑌤𑌮𑌿𑌤𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 ॥”

இதற்கு வ்யாக்யாநமான குல்லூக பட்டீயத்தில் ‘[illegible] 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿 𑌰𑌹𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 [illegible]’ என்று ஆரம்பித்துத் தர்மம் தெரிந்து கொள்வதற்கு ஸாதநமான வேதஸ்ம்ருதிகளில் யோக்யதை யில்லாததனால் ஸ்த்ரீகள் தர்மம் தெரியாதவர்கள். ‘𑌅𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌃’ - பாபத்தைப் போக்கிக்கொள்ளக்கூடிய மந்த்ர ஜபம் ஸ்த்ரீகளுக்கு இல்லாமையினால், பாபம் உண்டானாலும் அதைப் போக்கிக்கொள்ள யோக்யதை யில்லாதவர்கள். ஆகையால் அசுத்தர்கள் பொய்போன்றவர் என்பது ஶாஸ்த்ர மர்யாதை என்றிருக்கிறது.

ஸ்ரீகீதா 18 - வது அத்யாயத்தில் ‘[illegible]’ என்கிற ஶ்லோக வ்யாக்யாந பாஷ்ய, தாத்பர்ய சந்த்ரிகையில் ‘[illegible] 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌶𑍍𑌚 [illegible] 𑌪𑌾𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑌵𑌿𑌧𑌾𑌨𑌤𑌃’ என்று ஸ்த்ரீகளுக்கும் ஶூத்ரர்களுக்கும் வைதிகதீக்ஷை கூடாதென்று ‘𑌪𑌾𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌦𑍀𑌕𑍍𑌷𑍇’ ஆராதநார்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினால் ஹாரீத வாக்யத்தின்படி அங்கீகரிக்கப்படும் உபநயநாதி ஸம்ஸ்காரங்களும் வேதாந்தாத்யயந உபாஸநாதிகளும் கலியுகத்தில் ஸ்த்ரீகளுக்கு இல்லை என்பது தான் நிஶ்சயம். இக்கலியுகம் பிறந்தது முதல் ஒரு ப்ராஹ்மண ஸ்த்ரீயும் உபாஸநம் செய்ததாகக் கேட்கப்படவுமில்லை.

புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்.

ஸ்ரீ:

ப்ராஹ்மண்யம் ஜந்ம ஸித்தம்.

இக்காலத்தில் பாஶ்சாத்ய வித்யா நிபுணர்களான சிலர், சில காலமாக ப்ராஹ்மண்யம் முதலான ஜாதிகள் ஜந்ம ஸித்தங்கள் அல்லவென்றும், ஶமம், தமம், தபஸ் முதலான சில நல்ல குணங்கள் இருப்பனவற்றைக் கொண்டு ப்ராஹ்மணன் முதலான வ்யவஹாரங்கள் ஆதியில் இருந்தன வென்றும், பின்பு சிலர் பக்ஷபாதத்தினாலும் கெட்ட குணங்களில் இருந்த த்வேஷத்தினாலும் அக்குண முள்ளவர்களின் ஸந்ததியைக்கூட உத்க்ருஷ்ட நிக்ருஷ்ட ஜாதியால் வ்யவஹரித்து, அநேகம் ஸம்ருதிகளை அதற்கு ஆதாரமாக ஏற்படுத்திவிட்டார்க ளென்றும், ஜாதி ஜந்மத்தினால் கிடைப்பதற்கு ஸாதகமான ஶ்ருதிகள் கிடையாவென்றும், சில இடங்களில் இருந்தாலும் அவை வேறு அர்த்தங்களை உடையன வென்றும், ஒரு ஜாதியால் வ்யவஹரிக்கப்படுமவன் மற்றொரு ஜாதியை அடைவதாகவும் ஶ்ருதி ஸம்ருதிகள் ப்ரமாணம் இருப்பதாகவும் ப்ரஸித்தமாக ஆங்காங்கு க்ரந்தமூலமாகவும் உபந்யாஸங்கள் மூலமாகவும் பிறருக்குப் போதித்து அதனால் சில மந்தமதிகள் மயங்குவதையும் நாம் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறோம்.

'𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌚𑌾𑌰𑌵𑌤𑍀 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌨 𑌕𑌲𑍌 𑌨𑍃𑌣𑌾𑌮𑍍'

என்னும் 'பவிஷ்யத்யதரோத்தரம்' என்னும் வர்ணாஶ்ரமங்கள் கலியுகத்தில் மாறிவிடு மென்கிற புராண வாக்யங்கள் ப்ரஸித்தமாயிருந்தாலும் இன்னுமும் கொஞ்சம் கொஞ்சம் ஜாதி வ்யவஸ்தையை ஆங்காங்கு நாம் அநுஷ்டித்தும் ஆஸ்திகர்களைப் பார்க்கிறபடியினால் அவர்களுக்குக் கலக்கம் வாராமலிருப்பதன் பொருட்டு ஶ்ருதி ஸ்ம்ருத்யுக்த ப்ரமாணங்களில் சில எழுதப்படுகின்றன.

புருஷ ஸூக்தத்தில் '𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌸𑍍𑌯 𑌮𑍁𑌖𑌮𑌾𑌸𑍀𑌤𑍍 - 𑌬𑌾𑌹𑍂 𑌰𑌾𑌜𑌨𑍍𑌯𑌃 𑌕𑍃𑌤𑌃 - 𑌊𑌰𑍂 𑌤𑌦𑌸𑍍𑌯 𑌯𑌦𑍍𑌵𑍈𑌶𑍍𑌯𑌃 - 𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑍋 𑌅𑌜𑌾𑌯𑌤' - என்கிற வாக்யங்கள், ப்ராஹ்மணன் ஈஶ்வரனுடைய முகத்தில் உண்டானதாகவும், க்ஷத்ரியன் கைகளில் உண்டானதாகவும், வைஶ்யன் துடைகளில் உண்டானதாகவும், ஶூத்ரன் கால்களில் உண்டானதாகவும் சொல்லுகின்றன. ஆனால் இந்த வாக்யங்கள் யஜ்ஞத்தை வர்ணிக்கு மிடத்தில் இருப்பதனால் இந்த வாக்யங்களுக்கு ஜாதியின் உத்பத்தியைப்பற்றிச் சொல்வதில் அபிப்ராயம் இல்லையென்றும், அர்த்த வாதங்கள் என்றும் சிலர் சொல்லுகிறார்கள். அது சரியல்ல.

உபநிஷத்துக்களில் ஸ்ருஷ்டி ப்ரகரணங்களில் [𑌸 𑌤𑌪𑍋𑌽𑌤𑌪𑍍𑌯𑌤] ப்ருஹ்மமானது தபஸ்ஸைப் பண்ணினது என்று சொல்லி உலகத்தை ஸ்ருஷ்டித்தது என்பதுபோல இந்தப் புருஷ ஸூக்தத்தில் யாகத்தைப் பண்ணி உலகத்தை உண்டுபண்ணினது என்று சொல்லியிருக்கிறது. அங்கு ஈஶ்வரனை வணங்கி த்யானம் செய்யக்கூடிய வேறு தேவதை இல்லாததனாலும், '𑌯𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌂 𑌤𑌪𑌃' என்று அவனுக்கு ஸங்கல்பமே தபஸ்ஸு என்கிற ஶ்ருதியினாலும் ஈஶ்வரனுடைய ஸங்கல்பத்தைத் தபஸ்லாகச் சொல்வதுபோல், இங்கு புருஷஸூக்தத்தில் அதையே யாகமாகக் கல்பித்துச் சொன்னாலும் உபநிஷத்துக்களில் அடுத்த வாக்யங்களிற் சொல்லப்படும் ஜகத்ஸ்ருஷ்டி வாஸ்தவமானதுபோல ஸூக்தத்திலும் வேதங்கள் உண்டாயின '𑌛𑌨𑍍𑌦𑌾𑌂𑌸𑌿 𑌜𑌜𑍍𑌞𑌿𑌰𑍇' இத்யாதி வாக்யங்கள் உலகத்தின் ஸ்ருஷ்டியைச் சொல்லுகின்றன. ஆனால் அங்கு ஸமஷ்டி ஸ்ருஷ்டி, ஸூக்தத்தில் வ்யஷ்டி ஸ்ருஷ்டி என்பது தான் வ்யத்யாஸம். ஆகையினாலும் இதற்கு வ்யாக்யானம் போன்ற மந்வாதி ஸ்ம்ருதிகளில் மேல் எழுதப்போகிறபடி ஜாதி ஜந்மத்தினாலே ஏற்படுகின்றது என்று தெளிவாய்ச் சொல்வதாலும் புருஷ ஸூக்தத்தில் கீழ்ச்சொன்ன வாக்யங்கள் ஜாதியின் ஸ்ருஷ்டியையே சொல்லுகின்றன.

சாந்தோக்யத்தில் '𑌰𑌮𑌣𑍀𑌯 𑌚𑌰𑌣𑌾𑌃 𑌅𑌭𑍍𑌯𑌾𑌶𑍋 𑌹 𑌯𑌤𑍍𑌤𑍇 𑌰𑌮𑌣𑍀𑌯𑌾𑌂 𑌯𑍋𑌨𑌿𑌮𑌾𑌪𑌦𑍍𑌯𑍇𑌰𑌨𑍍 - 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌯𑍋𑌨𑌿𑌂 𑌵𑌾 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯 𑌯𑍋𑌨𑌿𑌂 𑌵𑌾 𑌵𑍈𑌶𑍍𑌯𑌯𑍋𑌨𑌿𑌂 𑌵𑌾 - 𑌅𑌥 - 𑌯 𑌇𑌹 𑌕𑌪𑍂𑌯 𑌚𑌰𑌣𑌾𑌃 𑌕𑌪𑍂𑌯𑌾𑌂 𑌯𑍋𑌨𑌿𑌮𑌾𑌪𑌦𑍍𑌯𑍇𑌰𑌨𑍍 - 𑌶𑍍𑌵𑌯𑍋𑌨𑌿𑌂 𑌵𑌾 𑌸𑍂𑌕𑌰𑌯𑍋𑌨𑌿𑌂 𑌵𑌾 𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌯𑍋𑌨𑌿𑌂 𑌵𑌾' என்கிற வாக்யத்தினால் புண்ய கர்மங்களைச் செய்தவர்கள் ப்ராஹ்மண க்ஷத்ரிய வைஶ்ய ஜாதிகளிலும், பாபத்தைச் செய்தவர்கள் ஶ்வா, பன்றி, சண்டாள ஜாதிகளிலும்

பிறக்கிறார்க ளென்றும் இருக்கிறது. இந்த ஶ்ருதியில் புருஷஸூக்தத்தில் போல் வேறுவிதமான ஆக்ஷேபங்களுக்கு அவகாஶமே இல்லை.

‘𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑍍𑌭𑍍𑌯𑍋 𑌦𑌿𑌵𑍇 𑌦𑌿𑌵𑍇 𑌨𑌮𑌸𑍍𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍’ என்னும் வேதத்தில், ‘வேதம் தெரிந்த ப்ராஹ்மணனைத் தினந்தோறும் வணங்கவேண்டும், என்னும் விதியில், ‘𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑍍𑌭𑍍𑌯𑌃’ என்னும் பதத்துக்கு ப்ரயோஜநம் ப்ராஹ்மண்ய குடும்பத்தில் வருமாகில் ஏற்படாது. வேதம் தெரியாதவனுக்குப் பூர்வ பக்ஷிகளுடைய அபிப்ராயப்படி ப்ராஹ்மண்யமே கிடையா தாகையினால் அது வ்யர்த்தமாகும். ஆகையினால் இந்த வேதவாக்யத்தில் ஜந்மத்தினால் ப்ராஹ்மண்யம் இருந்தாலும், வேதம் தெரியாதவனை வணங்கக்கூடா தென்னும் அபிப்ராயத்தை வெளியிடுவதால் இரண்டு பதங்களும் ப்ரயோஜந முள்ளன வாகையால் இந்த வேதவாக்யமும் ஜாதி ஜந்மஸித்த மென்பதில் ப்ரமாணமாகும்.

கடோபநிஷத்திலும் ‘𑌹𑌨𑍍𑌤 𑌤 𑌇𑌦𑌂 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿’ என்று ஆரம்பித்து, ஒருவன் பண்ணின கர்மத்துக்கு அநுகுணமாக மநுஷ்யனாகவும் மரமாகவும் பிறக்கிறான் என்று ஸங்க்ரஹித்துச் சொல்வதினால் மநுஷ்யர்களுக்குள் உண்டாகிய பேதங்களுக்கும் கர்ம காரண மென்று சொல்வதால் ஜாதி பேதத்தை ஒப்புக்கொண்டதாகத் தெரிகிறது. ‘𑌯𑌦𑍍𑌵𑍈𑌕𑌿𑌞𑍍𑌚 𑌮𑌨𑍁𑌰𑌵𑌦𑌤𑍍 𑌤𑌦𑍍𑌭𑍇𑌷𑌜𑌂’ என்று வேதபுருஷனால் கொண்டாடப்பட்ட மநுஸ்ம்ருதியில்,

‘𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌮𑍁𑌖𑌬𑌾𑌹𑍂𑌰𑍁𑌪𑌾𑌦𑌤𑌃
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌂 𑌵𑍈𑌶𑍍𑌯𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌞𑍍𑌚 𑌨𑌿𑌰𑌵𑌰𑍍𑌤𑌯𑌤𑍍
𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌸𑌰𑍍𑌗𑌸𑍍𑌯 𑌗𑍁𑌪𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌸 𑌮𑌹𑌾𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃
𑌮𑍁𑌖𑌬𑌾𑌹𑍂𑌰𑍁𑌪𑌜𑍍𑌜𑌾𑌨𑌾𑌂 𑌪𑍃𑌥𑌕𑍍𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍍𑌯𑌕𑌲𑍍𑌪𑌯𑌤𑍍’

என்கிற ஶ்லோகத்தில் 4 - ஜாதியையும் ஸ்ருஷ்டித்ததாகவும் அதனதனுக்கு உத்பத்தி ஸித்த ஜாதிகளுக்கு அநுகுணமாகக் கர்மாநுஷ்டாநங்களையும் உண்டு பண்ணினதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

தேவல ஸ்ம்ருதியில் ‘𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌾𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌜𑍍𑌜𑌾𑌤𑌃 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 । 𑌏𑌵𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯 𑌵𑌿𑌟𑍍𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌃

𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌸𑍍𑌸𑍍𑌵𑌸𑍍𑌵𑌯𑍋𑌨𑌿𑌜𑌾𑌃’ என்பதனால் ப்ராஹ்மண ஸ்த் யினிடத்தில் ப்ராஹ்மணனுக்குப் பிறந்தவன் ப்ராஹ்மணன் என்றும் இம்மாதிரி க்ஷத்ரியாதி ஜாதிகளும் உண்டாகின்றனவென்று எழுதியிருக்கிறார்.

யாஜ்ஞவல்க்யர்:— ‘𑌤𑌪𑌸𑍍𑌤𑌪𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑍃𑌜𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑍍
𑌵𑍇𑌦𑌗𑍁𑌪𑍍𑌤𑌯𑍇 । 𑌸𑌵𑌰𑍍𑌣𑍇𑌭𑍍𑌯𑌃 𑌸𑌵𑌰𑍍𑌣𑌾𑌸𑍁
𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌹𑌿 𑌸𑌜𑌾𑌤𑌯𑌃’

ஹாரிதர்:— ‘𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌾𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇𑌨𑍈𑌵𑌹𑍍𑌯𑍁𑌤𑍍
𑌪𑌨𑍍𑌨𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 । 𑌯𑌜𑍍𑌞𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯
𑌰𑍍𑌥𑌮𑌨𑌘𑌾𑌨𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑍍 𑌮𑍁𑌖𑌤𑍋 𑌸𑍃𑌜𑌤𑍍’

ஆபஸ்தம்பர்:— ‘𑌸𑌵𑌰𑍍𑌣𑌾𑌪𑍂𑌰𑍍𑌵 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂
𑌯𑌥𑌰𑍍𑌤𑍁 𑌗𑌚𑍍𑌛𑌤𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌭𑌿
𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌃’ என்றும், ‘𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑍋 𑌵𑌰𑍍𑌣𑌾𑌃
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌵𑌿𑌟𑍍 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌃 𑌤𑍇𑌷𑌾𑌂
𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑍂𑌰𑍍𑌵𑌃 𑌜𑌨𑍍𑌮𑌤𑌃 𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍’ 𑌇𑌤𑌿

ஶாதாதபர்— ‘𑌜𑌨𑍍𑌮𑌨𑍈𑌵 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌾
𑌮𑌜𑌾𑌯𑌤𑍇’

ஆபஸ்தம்பர்— ‘𑌗𑌰𑍍𑌭𑌾𑌷𑍍𑌟𑌮𑍇 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣 𑌮𑍁𑌪𑌨𑌯𑍀𑌤 - [illegible]
[illegible] 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯’ என்று ஏழாவது வயஸ்ஸில் ப்ராஹ்மண்யத்துக்குச் சிலகார்யங்களைச் சொல்லி யிருக்கின்றனர்.

பாரதத்தில்— [illegible] - 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌾𑌮 [illegible]
𑌜𑌨𑍍𑌮𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌿 𑌜𑌾𑌯𑌤𑍇 । [illegible]
𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑌿𑌷𑍁’

[illegible]:— 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑍇𑌵 𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌯 𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌶𑌾
𑌶𑍍𑌵𑌤𑍀, [illegible]
[illegible] - 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾 [illegible]
[illegible]

ஸம்ஸ்க்ருதா: ப்ராக்ருதாஸ்ததா - ப்ராஹ்மணா
நாஶாஸ்த்ரேண தேவிவர்ஜ்யா யாயிஷ்ர ॥

பராஶர:— 'து:ஶ்ஶீலோபி த்விஜ: பூஜ்ய: ந ஶூ
த்ரோ ஜிதேந்த்ரிய: । க: பரித்யஜ்ய காம் து
ஷ்டாம் துஹேச் ச்சீலவதீம் கரீம் ॥ பாதா
வர்ண்யம் ஶோகஸ்யஷ்டம் கணகாஜ்ஞ விஹாம
ஶ: । தஸ்யகதுர் ஸஶவிஶாம் விஸ்யகதா
ஸஶவேத்யம் ॥ தஸ்மாச் சூத்ரஜ: க்ஷேத்ரே ப்ரா
ஹ்மணே வாக்ஸம்ஸ்க்ருதம்'

இவை முதலான பரஶ்ஶத ஸ்ம்ருதி வாக்யங்கள் ப்ராஹ்மண்யம் ஜன்மஸித்த மென்றும் மரணாந்த மென்றும் வ்யக்தமாகச் சொல்லுகின்றன. மநுஸ்ம்ருதியில், "அப்ராஹ்மணா தத்யயநம் ஆபத்காலே விதீயதே । அநுவ்ரஜ்யா ச ஶுஶ்ரூஷா யாவதத்யயநம் குரோ: - அபீதவேத்ஷாவிப்ரஸ்ய ததைவஸ்வ ஶாஸ்ர ஶாஸ்த்ரே" என்கிற வாக்யம் ப்ராஹ்மணனுக்கு ப்ராஹ்மணனை ஆசார்யன் அகப்படாவிட்டால் க்ஷத்ரியனிடம் அத்யயநம் செய்யலாமென்றும் அவனுக்குக்கூட போவது தான் ஶுஶ்ரூஷை யென்றும் அத்யயநம் முடிந்தால் அந்த க்ஷத்ரியனுக்கு முன் சிஷ்யனாக இருந்த ப்ராஹ்மணனே குரு, அதாவது பூஜார்ஹனென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. கீழ்எழுதப்பட்டுள்ள ஸ்ம்ருதிகளுக்கு விஸ்தரபயத்தினால் அர்த்தம் எழுதப்படவில்லை.

பிறந்தது முதல் ப்ராக்ருத ஶிஶுவைப் போல் இராமல் பகவத்குணாநுபவத்தையே ஆஹாரமாக உடைத்தான நம்மாழ்வார், திருவிருத்தத்தில் 'இருக்கார் மொழியால்' என்கிற பாசுரத்தில் தாமும் ப்ராஹ்மணரைப் போல் வேதவாக்யங்களைச் சொல்லிப் பகவானை ஆராதிக்க யத்நித்து, தாம் சூத்ர ஜாதியில் பிறந்திருப்பதால் அதற்கு யோக்யமில்லா திருப்பதை நினைத்துத் துக்கப்பட்டு, பழமில்லாதவன் காயைக் கடிப்பது போல் வேதத்தைச் சொல்ல மாட்டாமல் திருநாமங்களைச் சொல்வதாகச் சொல்கிறார். ப்ருகு மஹர்ஷிக்கு அப்ஸரஸ்ஸினிடத்தில் ஜநித்த திருமழிசையாழ்வார் 'குலங்களாய வீரிரண்டி லொன்றிலும் பிறந்திலேன்' என்று தம்முடைய ஸங்கர ஜாதியை நினைத்து வருத்தப்பட்டிருக்கிறார்.

'ஏழையேதலன்' என்கிற பாசுரத்தில் 'கீழ்மகன்' என்பதற்கு வ்யாக்யாநம் செய்த பெரியவாச்சான் பிள்ளை, ஜாதி ஒருநாளும் போகாதென்று எழுதியிருக்கிறார்.

ஸ்ரீ பாரதத்தில் ஆநுஶாஸநிகத்தில் மதங்கன் என்கிற சண்டாளன் ப்ராஹ்மண்யத்தைத் தான் அடையவேணு மென்று நினைத்து, இந்த்ரனைக் குறித்துத் தவம் செய்ததாகவும் அவனுக்கு இந்த்ரன் ப்ரத்யக்ஷமாகி, 'நீ எவ்வளவு கடோரமான தபஸ் செய்தாலும் ப்ராஹ்மண்யம் கிடைக்க மாட்டாது' என்று சொல்லி அவனுக்குச் சந்தோதேவன் என்று வரம் கொடுத்து விட்டதாகவும் இருக்கிறது. ஸ்ரீ விதுரர், 'ஶூத்ரயோநாவஹம் ஜாதோ நாதோ ந்யத்வக்துமுத்ஸஹே' என்று தான் ஶூத்ர ஜாதியை அங்கீகரித்திருக்கிறார். 'குலந்தரும்' என்னும் பாட்டிலும் ஜாதி போகாது என்று பெரியவாச்சான் பிள்ளை நியமித்திருக்கிறார்.

மநுஸ்ம்ருதியில் ப்ராஹ்மணன் ஶூத்ரனாவான் என்பதும் சூத்ரன் ப்ராஹ்மணனாவான் என்பதும் முன் யுகத்தில் சொன்னபடி. ஒரு ப்ராஹ்மணன் சூத்ர கந்நிகையைக் கல்யாணம் செய்து கொண்டு அவளுக்குப் பிறந்த பெண்ணை ப்ராஹ்மணனுக்குக் கொடுத்துப் பிறகு ஹீநஜாதி ஸம்பந்த மில்லாமல் வந்தால், 8-வது தலைமுறையில் ப்ராஹ்மணனாவான் என்றும், 7 - தலைமுறை சூத்ர வ்ருத்தியால் ஜீவித்தால் 8-ம் தலைமுறையில் ப்ராஹ்மணனும் சூத்ரனாவான் என்றும் சொல்லுகிறது என்பது முன் ஶ்லோகங்களினால் ஸித்தம். 'ஸ விப்ரோ ஶாங்கீ ஶ்ரீமாந் ஸ யதிஸ்ஸ ச பண்டித:' என்பதும், 'விப்ரோ ஹா ரணவக:' என்பது போல் ஸ்தோத்ரம் செய்தபடி. அப்படி ஒப்புக் கொள்ளாவிட்டால் 'ஸ யதி:' என்றும், அதே வாக்யத்தில் இருப்பதால் அவன் ஸந்யாஸி தர்மங்களையும் செய்யும்படிவரும். இதுபோலவே, நிஹீநாசாரமுள்ள ப்ராஹ்மணனைச் சண்டாளனென்று சொன்னதும் நற்குணமில்லாமையையிட்டு அவனைத் தூஷித்தபடி.

ஆகையினால் இந்த மாதிரியான ஸ்தோத்ர வாக்யங்களில் காணப்படும் ப்ராஹ்மண்யம் ஆத்மாவினிடமிருக்கிறது. முன் சொன்ன ஶ்ருதி ஸ்ம்ருதி ஸித்தமான ப்ராஹ்மண்யம் ஶரீரத்தினிடமிருக்கிறது. ஆகையால் இந்த இரண்டு ப்ராஹ்மண்யங்களும் பரஸ்பரம் விருத்தங்களல்ல. ரத்நங்களிலும், பவழத்திலும், விஶேஷ ஒளி இல்லாவிட்டாலும் ஜாதியினால் உத்கர்ஷத்தைக் கண்டிருக்கிறோம். 3-மாற்று தங்கமானாலும் நல்ல வெள்ளியைக் காட்டிலும் உயர்ந்தது தான் என்பது அநுபவஸித்தம். ஆகையினால் ஜாதி ஜந்மஸித்தம் என்பது ப்ராமாணிகர்களுக்கு ஸித்தம்.

புத்தங்கோட்டகம். ஸ்ரீநிவாஸாசார்யர்.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤 𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃.

கடிதங்கள்.

(1)

ஓர் ஸம்சயம்.

ஸ்ரீவேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு :—

சென்றமுன் 70-வது ஸம்புடம் 4-வது ஸஞ்சிகையில் 192-ம் பக்கத்தில், 10—1—17-ல் "ஓர் ஸம்ஶயம்" என்னும் கடிதத்துக்கு யதாமதி ஸமாதாநம் விஜ்ஞாபநம் செய்கிறேன்.

ஸ்ரீபகவத்கீதை 2-வது அத்யாயம் 52-வது ஶ்லோகம் ஸ்ரீகீதா பாஷ்யத்தில் '𑌤𑌦𑌾 𑌶𑍁𑌦𑍍𑌧𑌃 𑌇𑌤𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌤𑌯𑌾 𑌶𑍍𑌰𑍁𑌤𑌸𑍍𑌯 𑌸𑌾𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑌃 𑌪𑌶𑍍𑌚𑌾𑌚𑍍𑌛𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌸𑍍𑌯 𑌚 𑌸𑌕𑌾𑌶𑌾𑌤𑍍 𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌂 𑌗𑌨𑍍𑌤𑌾𑌸𑌿 - 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌸𑌿" என்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீ தாத்பர்ய சந்த்ரிகையில், '𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌤𑌯𑍇𑌤𑌿 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌯𑍋𑌗𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑍋𑌕𑍍𑌤𑌂, 𑌨 𑌹𑌿 𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑍇𑌷𑍁 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌷𑍁 𑌚 𑌉𑌪𑌾𑌦𑍇𑌯𑌾𑌂𑌶𑍋 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌹𑍇𑌤𑍁𑌃' என்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. இதில் தத்வஜ்ஞாநம் உபாதேயம் என்பது, "இவ்வளவு விவேகிக்கை அவஶ்யாபேக்ஷிதம்", '𑌉𑌪𑌾𑌯𑍋𑌪𑍇𑌯𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌶𑌤𑍍𑌰𑌯𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌰𑍍𑌗𑍇 𑌨𑌿𑌰𑌪𑍇𑌕𑍍𑌷𑌤𑌾 । 𑌕𑌾𑌰𑌣𑌤𑍍𑌰𑌯𑌸𑌾𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑍍𑌯𑌂 𑌇𑌤𑌿 𑌸𑌂𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌨𑌂 ॥' என்கிற ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் தத்வத்ரய சிந்தநாதிகார ஸ்ரீ ஸூக்தியாலும், 'ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே பராவர தத்வஜ்ஞாநம் பிறந்தவன் ஸர்வேஶ்வரன் திருவடிகளை உபாயோபேயங்களாகப் பற்றி உஜ்ஜீவிக்கவேண்டும். முத்திக்கருள் சூட மூன்றைத் தெளிமுன்னம், இத்திக்கா லேற்குமிதம்' என்கிற ஸ்ரீமத் தத்வபதவீ ஸ்ரீ ஸூக்தியாலும், மற்றும் அநேக ஸ்ரீ ஸூக்திகளிலும் ஸ்பஷ்டம். ஆகையால் உபாதேயமாகிய தத்வஜ்ஞாநம் நிர்வேதத்துக்குக் காரணமல்ல. த்யாஜ்யங்களாகிய அவித்யா கர்மாதிகளே நிர்வேத ஹேது வென்பதும் ஸ்ரீதேசிகனுடைய திருவுள்ளம் என்று ஏற்படுகிறது. பிறகு, '𑌯𑌦𑌾' என்று ஆரம்பித்து வேறு விதமாக அர்த்தம் அருளிச்செய்யப்பட்டது. அதாவது '𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌤𑌯𑌾' என்பது '𑌶𑍍𑌰𑍁𑌤𑌸𑍍𑌯' என்பதனோடும் '𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌸𑍍𑌯' என்பதனோடும் அந்வயிக்கிறதாக வைத்துக்கொண்டு முதல் யோஜனை அருளிச்செய்தபடியால், மேல் இரண்டாவதாகிய இந்த யோஜனையில் '𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌤𑌯𑌾' என்பது '𑌶𑍍𑌰𑍁𑌤𑌸𑍍𑌯' என்பதனோடு மாத்ரம் அந்வயிக்கிறது. '𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌸𑍍𑌯' என்பது உபாதேயத்தைச் சொல்லுகிறது என்பது திருவுள்ளம். அவ்விடத்தில் '𑌹𑍇𑌯𑌸𑌙𑍍𑌗𑍋𑌪𑌾𑌦𑍇𑌯𑌵𑍈𑌤𑍃𑌷𑍍𑌣𑍍𑌯𑌂 𑌸𑌾𑌰𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌸𑌤𑌤𑌂 𑌹𑌿 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌃 । 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌭𑍂𑌤𑌃 𑌯𑌥𑌾𑌹𑍁𑌃 𑌸𑌾𑌰𑌮𑍍𑌸𑌵𑌾𑌸𑌿𑌨𑌃 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍 𑌤𑍀𑌕𑍍𑌷𑍍𑌣𑌾 𑌦𑍇𑌹𑌿𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌸𑌾𑌧𑌨𑌂 𑌇𑌤𑌿' என்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் '𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨' என்று பாடமானால், தத்வஜ்ஞாநத்தை ஹேய ஸங்கத்தில் சேர்க்கலாமோ? உபாதேய வைத்ருஷ்ண்யத்தில் சேர்க்கலாமோ? என்னில் இரண்டிலும் சேர்க்கமுடியாது. ஆனாலும் தாத்பர்ய சந்த்ரிகையில் '𑌹𑍇𑌯𑌸𑌙𑍍𑌗𑍋𑌪𑌾𑌦𑍇𑌯𑌵𑍈𑌤𑍃𑌷𑍍𑌣𑍍𑌯𑌂 𑌸𑌾𑌰𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌸𑌤𑌤𑌂 𑌹𑌿 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌃' என்று அருளிச்செய்யப்பட்டிருப்பதனால் ஹேயஸங்கம், உபாதேய வைத்ருஷ்ண்யம் இவைகளின் ஜ்ஞாநம் நிர்வேதத்துக்குக் காரணமென்று ஏற்படுகிறபடியால் '𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌂' என்று இருக்கலாம் என்பதும் உசிதமல்ல. '𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂' என்னும் பதத்துக்கு சிதசிதீஶ்வரர்களாகிய தத்வங்களிலேயே அதிகமாக ப்ரயோகம் இருப்பதினாலும், உண்மை என்னும் அர்த்தத்தைக் கொண்டபோதிலும் 'தத்வஜ்ஞாந' என்னும் பதத்திற்கு உண்மையைப்பற்றின ஜ்ஞாநம் என்று அர்த்தமாகிறபடியினாலும், 'எவைகளின் உண்மையைப்பற்றின ஜ்ஞாநம்' என்றுகேட்க இடமுண்டாகிறபடியினாலும் ஹேயஸங்கம் முதலியவற்றின் உண்மையைப்பற்றிய ஜ்ஞாநம் என்று கீழே சில பதங்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டிய கௌரவமிருக்கிறபடியினாலும், அப்படி கௌரவத்தை ஸஹித்துக்கொண்டாலும் தாத்பர்ய சந்த்ரிகையில் '𑌸𑌾𑌰𑌜𑍍𑌞𑌸𑍍𑌯' என்று அருளிச்செய்திருப்பதனாலும், அர்ஜுநன் ஸ்வதர்மமாகிற யுத்தத்தை ஹேயமான அதர்மமாக ப்ரமித்து '𑌅𑌹𑍋 𑌬𑌤 𑌮𑌹𑌤𑍍𑌪𑌾𑌪𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌂 𑌵𑍍𑌯𑌵𑌸𑌿𑌤𑌾 𑌵𑌯𑌮𑍍 । 𑌯𑌦𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌸𑍁𑌖𑌲𑍋𑌭𑍇𑌨 𑌹𑌨𑍍𑌤𑍁𑌂 𑌸𑍍𑌵𑌜𑌨𑌮𑍁𑌦𑍍𑌯𑌤𑌾𑌃' என்று

நிர்வேதப்படுமிடத்தில் உண்மையைப்பற்றின ஜ்ஞாந மில்லாமையாலும், ஹேயஸங்காதிகளைப்பற்றிய ஜ்ஞாநமே நிர்வேதத்திற்குக் காரணமென்றேற்படுகிறபடியினாலும், ‘தத்த்வஜ்ஞாநவைஶிஷ்ட்யா[illegible]’ என்று பாடமானால் தாத்பர்ய சந்த்ரிகை முன் வாக்யத்தோடு பொருத்தமுடையதாக இல்லை.

மேலும் இதர க்ரந்தங்களிலும் தத்வாஜ்ஞாநம் நிர்வேதத்திற்குக் காரணம் என்று அருளிச்செய்யப்பட்டிருப்பதும் யோசிக்கத்தக்கது. எப்படியென்னில்: ந்யாஸ விம்ஶதிக்குத் தாமே அருளிச்செய்திருக்கும் வ்யாக்யாநத்தில் ஸ்ரீதேசிகன் ‘[illegible] ஜ்ஞாநம் [illegible] ஜ்ஞாந [illegible] நிர்விண்ண:’ என்று அருளிச்செய்திருக்கிறார். ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திலும் சரமஶ்லோகாதிகாரத்தில் “நிர்வேதமும் ஶோகநிவ்ருத்தியும் பிந்ந விஷயங்களாகையாலே விரோதமில்லை” என்கிற வாக்யத்திற்கு வ்யாக்யாநங்கள் எல்லாவற்றிலும் உபாய ஸௌகர்யாதிகள் ஶோக நிவ்ருத்திக்குக் காரணம்; ஶரீராதி ஸம்பந்தம் நிர்வேத ஹேதுவென்று அர்த்தம் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. இதனால் ‘ஶரீர’ ஶப்தத்தினால் ஶரீரத்தோடு அவிநாபூதங்களாய்ச் சக்ரம்போலச் சுழன்று ஒன்றுக்கொன்று காரணமாயும் கார்யமாயும் இருக்கிற அவித்யா கர்ம வாஸநாதிகளும் சொல்லப்படுகின்றன. ஆகையால் தாத்பர்ய சந்த்ரிகையின் ஸந்தர்ப்பத்தினாலும், இதர க்ரந்தங்களில் அருளிச்செய்திருப்பதினாலும் ‘தத்த்வாஜ்ஞாநவைஶிஷ்ட்யா[illegible]’ என்கிற பாடமே ஸாது வென்பது ஸ்ரீதேசிகன் திருவுள்ளமாகத் தோன்றுகிறது. பரமபத ஸோபாநத்திலும் நிர்வேத பர்வத்தில் முதல் பாட்டில்,

“மறுத்தார் திருவுடன் மார்பிற் றரித்தவன் வாசகத்தை
மறுத்தார்மயக்கமு மற்றதனால் வந்த மாநரகும்
நிறுத்தார்பவத்தி னெடுநா ளுழன்றமை கண்டதனால்
வெறுத்தாரண நெறியே வெள்கியோட விரைவர்களே.”

என்று பகவதாஜ்ஞாதிலங்கநத்தால் உண்டாகிய மதிமயக்கம் வெறுப்புக்குக் காரணமென்று அருளிச்செய்யப்பட்டது. பிறகு, “இப்படி தானும் பிறரும் தனக்கு ஶேஷியும் தஞ்சமும் போக்யமு மன்றென்று” என்று ஆரம்பித்து, “பராவர தத்வவிவேகம் பெற்றவன்” என்னு மளவாகிய வாக்யத்தினால் முன் பர்வத்தில் அருளிச்செய்த விவேகத்தை அநுவதித்துக்கொண்டு “தான் முன்பு அநாதிகாலம் அஸமஞ்ஜஸன்படியே நடக்கையாலே

‘[illegible]’ என்னும்படி துறப்புண்டு” என்று ஆரம்பித்து “மஹா வாக்யத்தினால் முதல்பாட்டில் அருளிச்செய்த பகவதாஜ்ஞாதிலங்கநாதிகளே நிர்வேதத்திற்கு அவ்யவஹித காரண” மென்று அருளிச்செய்யப்பட்டது. ‘[illegible] நிஷ்டுரா ஜநஸங்கதி:।’ “யானே யென்னை யறியகிலாதே யானே யென்றனதே யென்றிருந்தேன்” “நானே நானாவித நரகம்புகும் பாவம்செய்தேன்” “அருநரகத் தழுந்தும் பயன் படைத்தேன்” ‘[illegible] விமோஹந[illegible]’ இத்யாதி பரிதேவநங்களைப் பண்ணும்படி முன்பு ஸாத்விக ஸம்பாஷணாதிகளாலே முகிழ்த்த நிர்வேதம்” என்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. நிர்வேதமாவது மாநஸவ்யாபாரம். இது ‘[illegible]’ இத்யாதி பரிதேவநங்களுக்குக் காரணமாகிறது என்று அருளிச்செய்தபடியால் ‘[illegible]’ என்கிற ந்யாயத்தினாலே மாநஸ வ்யாபாரமாகிய நிர்வேதமும் வாக்வ்யாபாரமாகிய பரிதேவநத்திற்கு ஸமாநவிஷயமாகவே இருக்கவேண்டு மாகையினால் ‘யானே யென்னை யறியகிலாதே’ என்று சொல்லப்பட்ட அஜ்ஞாநாதிகளைப் பற்றியே இருக்கவேண்டு மென்கிறது ஸ்பஷ்டமாகிறது. பிறகு கடைசி பாட்டிலும் “வான்பட்ட மன்னிருளில் மயங்குமாறும்’ என்று ஆரம்பித்து அஜ்ஞாநாதிகளே நிர்வேதத்திற்குக் காரணமென்று நிகமநம் செய்யப்பட்டது. ஆகையினால் பரமபதஸோபாநத்தில் ‘[illegible] விவேக [illegible]’ என்றும், விரக்திபர்வத்தில் ‘இப்படி விவேகமூல நிர்வேத பூர்த்தியாலே’ என்றும் அருளிச்செய்திருப்பது பர்வங்களின் க்ரமத்தை அநுவதிக்கிறபடியினாலும், மேலும் பர்வங்கள்தோறும் கீழ்ப் பர்வங்களின் அர்த்தத்தை அநுவதித்திருப்பதனாலும், பூர்வம் நிர்வேத பர்வத்தில் ‘இப்படி’ என்று ஆரம்பித்துப் பராவர தத்வ விவேகம் பெற்றவன், என்று அநுவாதம் செய்திருப்பதனாலும் பராவர தத்வவிவேகத்தைப் பற்றியது என்பது ஸ்பஷ்டம்.

ஆகையினால் தாத்பர்ய சந்த்ரிகையில் ப்ரமாணமாக உதாஹரித்த மோக்ஷ தர்ம ஶ்லோகத்தில் ‘தத்த்வஜ்ஞாந’ என்கிற பாடத்தை அங்கீகரித்தாலும் பரமபத ஸோபாநத்தில் அருளிச்செய்திருக்கும் ‘விவேக’ என்னும் பதத்தோடு ஸமாநார்த்தகமென்று சொல்வது உசிதமல்ல. பராவர தத்வவிவேகம் ஹேயஸங்கத்திலாவது உபாதேய வைத்ருஷ்ண்யத்திலாவது அந்தர்ப்பவித்து நின்று நிர்வேதத்துக்குக் காரணமாகா தாகையினாலே ஹேயஸங்கம் இத்யாதி வாக்யத்திற்கு உபபாதகமாகா தாகையினால், பரமபத ஸோ

பாதத்திலும் ‘[illegible]’ இத்யாதி அருளிச்செய்திருப்பதும் தத்வவிவேகம் நிர்வேதத்திற்குப் பரம்பரையாகக் காரணமென்பது பற்றியே என்பது நிர்வேத பர்வத்தில் பராவர தத்வவிவேகம் பெற்றவன் என்று அநுவதித்துக்கொண்டு பகவதாஜ்ஞாதிலங்கநாதிகளை அவ்யவஹித காரணமாய் அருளிச்செய்திருப்பதனாலும் கீழ் உதாஹரித்திருக்கும் ந்யாஸவிம்ஶதி வ்யாக்யாந வாக்யத்தினாலும் தத்வவிவேகத்திற்கும் ஆசார்ய ப்ராப்திக்கும் காரணமாகிய ஸாத்விக ஸம்பாஷணத்தை “ஸாத்விக ஸம்பாஷணாதிகளினாலே முகிழ்த்த நிர்வேதம்” என்று பரமபத ஸோபாநத்தில் அருளிச்செய்திருப்பதனாலும் வ்யக்தம். [illegible] நிரூபணத்தாலே ‘முற்றி’ என்று நமஸ்ஶப்த நிஷேத்யங்களான அவித்யாதிகளாகிய அவ்யவஹித காரணங்களை அருளிச்செய் திருப்பதனால் முன்பு ஸாத்விக ஸம்பாஷணாதிகளாலே முகிழ்த்த நிர்வேதம்,” என்கிற வாக்யத்தில் அருளிச்செய்யப்பட்ட ஸாத்விக ஸம்பாஷணம் ஆதிபத க்ராஹ்யங்களான ஆசார்ய ப்ராப்தி, தத்வவிவேகம் இவைகள் பரம்பரா காரணங்கள். ஆகையினாலே நிர்ணயஸாகரமுத்ராக்ஷர ஶாலையில் ப்ரசுரம் செய்யப்பட்ட தஶரூபக புஸ்தகத்தில் ‘தத்வஜ்ஞாந’ வென்றிருப்பது அஜ்ஞாந மூலமாகவும் இருக்கலாம்; அச்சுப்பிழையாயு மிருக்கலாம்.

‘[illegible]’ இத்யாதிகளையும் தஶரூபகத்திலோ என்று எழுதியிருப்பதற்கு மூலம், ப்ரம விப்ரலம்பங்களில் அந்யதரங்களாக வேண்டும். தநிகன் என்பவனால் எழுதப்பட்ட ‘அவலோகம்’ என்னும் க்ரந்தத்தி லிருப்பதாக மேற்படி அச்சுப் புஸ்தகத்தினாலேயே ஏற்படுகின்றது. தநிகன் உதாஹரணமாக எடுத்த ‘[illegible]’ என்கிற ஶ்லோகத்தில் தத்வஜ்ஞாநத்தினால் உண்டானது என்பதற்கு அநந்யதாஸித்தலிங்கத்தைக் காணோம். ஜாநஶ்ருதிக்கு ஹம்ஸங்களின் வார்த்தையைக் கேட்டவுடனே உண்டான நிர்வேதத்தைப்போலவே, தத்வஜ்ஞாநமில்லாமையினால் அவைகள் நிஷ்ப்ரயோஜநங்கள் என்கிற தாத்பர்யமும் சொல்லலாம். துக்கத்தினால் பொருமையினாலும் என்கிற இடத்தில் ‘னா’ என்பது அச்சில் விட்டுப்போயும், ‘று’ என்கிற வல்லினத்தை ‘ரு’ என்று ப்ரமித்தும் அச்சுப்பிழைகள் விழுந்திருக்கின்றன. பரமபத ஸோபாநத்தில் ‘[illegible]களாலே நிர்வேதம் பிறக்குமாகிலது மேலும் விபரீத வ்ருத்தங்களிலே கைவளரப்பண்ணும்’ என்றிருக்க வேண்டிய வாக்யத்தை அச்சிலிருப்பதையே பரம ப்ரமாணமாக நம்பி ‘விபரீத வ்ருத்தாந்தங்களிலே பதைவளரப்பண்ணும்’ என்று எடுத்தவர்களுக்கு அச்சுப்பிழைகளெல்லாம் தோஷங்களாகக் குறையில்லை.

கோமளேஶ்வரன்பேட்டை,
16–2–17.

கோமடம். ஸ்ரீநிவாஸய்யங்கார்.

---

(2)

ஸ்ரீ அஹோபில மடம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

ஸ்ரீ ஸர்வேஶ்வரன் ராமக்ருஷ்ணாத்யவதாரங்களில் ‘𑌰𑍂𑌪𑍌𑌦𑌾𑌰𑍍𑌯𑌗𑍁𑌣𑍈𑌃 𑌪𑍁𑌂𑌸𑌾𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌪𑌹𑌾𑌰𑌿𑌣𑌂’ என்று புருஷர்களும் பார்த்து மதிமயங்கும்படியான தன்னுடைய வடிவழகை இக்காலத்தில் ஜநித்திருக்கும் சேதநர்களும் ஸேவித்து க்ருதார்த்தராக வேண்டுமென்கிற திருவுள்ளத்தினாலேபோல ஒப்பில்லாத அழகமர்ந்த அர்ச்சாரூப திருமேனியோடு நித்யவாஸம் செய்வதால் ‘தக்ஷிண த்வாரகா’ என்று ப்ரஸித்தி பெற்ற ‘ராஜமன்னார்குடி’ என்னும் க்ஷேத்ரத்தில் கோபால ஸமுத்ரம் கீழ வீதியில் ஸ்ரீபராங்குஶ யதீந்த்ர மஹாதேசிகனுடைய ப்ருந்தாவநத்துக்கு ஸமீபத்தில் நெடுங்காலமாக ஸ்ரீ அஹோபில மடத்துக்குச் சொந்தமாய்த் தரிசியாக இருந்த ஓர் புன்செய் நிலத்தில் ‘ஸ்ரீரங்கநாத ஶடகோப புரம்’ என்கிற பெயரோடு நூதநமாக ஓர் அக்ரஹாரம் ப்ரதிஷ்டை செய்தருள வேணுமென்று சில ஸ்ரீ பாகவதர்களுடைய விஜ்ஞாபநத்தைத் தத்காலம் ஸ்ரீ ஸந்நிதி ஆஸ்தாநத்தை அலங்கரித்துவரும் ஸ்ரீரங்கநாத ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருவுள்ளம்பற்றி அப்படியே ஏஜெண்ட் வில்லிபுத்தூர் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸையங்காரை நியமித்ததன்பேரில் அந்த ஸ்வாமி ஷெ நிலத்தை அக்ரஹாரம் உண்டுபண்ண யோக்யமாக மனைகளாகப் பிரித்து அநேக ஸ்ரீ வைஷ்ணவர்களிடம் 100 – வருஷ காலம் ஷெ மனையில் வீடுகட்டிக்கொண்டு வஸிப்பதற்காக ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிஹ்மனுக்கு ஸ்வல்பமான காணிக்கையும் ப்ரதி வருஷம் கொஞ்சம் குடிக்கூலியும் ஸமர்ப்பிப்பதாக ஏற்பாடு செய்து அநேகம் ஸ்வாமிகளுக்கு ஷெ மனைகளைக் கொடுத்துத் தஸ்தாவேஜு ஏற்படுத்தினதன்பேரில் அந்த ஸ்வாமிகள் திருமாளிகை கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். சற்றேறக்குறைய ரூ. 2,000 ஸ்ரீ ந்ருஸிஹ்மன் ஸந்நிதிக்கு இப்போது வீணாக இருந்த நிலத்தில் கிடைத்ததுபோல் ப்ரதிவர்ஷமும் சுமார் ரூ. 350 ஸ்ரீஸந்நிதிக்கு வரும்படி ஏற்பட்டது; ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் அல்பமான க்ரயத்துக்கு பூமிகிடைத்தது. இதுபோல் ஆங்காங்கு இவ்விதமாய் ஸந்நிதிக்கு இருக்கும் பூமிகளை ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்ரீ அழகிய சிங்கருக்கு விஜ்ஞாபநம் செய்து கொண்டால், ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிஹ்மனுடைய கைங்கர்யங்களுக்கும் விஶேஷ ஸௌகர்ய முண்டாகு மென்பது நிஶ்சயம்.

மன்னார்குடி,
1—3—17.

ஸ்ரீநிவாஸாசார்யர்.

(3)

வர்ணாஶ்ரம தர்ம ஸம்ரக்ஷண ஸபை.

(2-வது வர்ஷத்திய மஹாஸங்கம்.)

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு :—

வர்ணாஶ்ரம தர்ம ஸம்ரக்ஷண ஸபை ஸம்பந்தமான இந்த விளம்பரத்தைத் தங்களுடைய பத்ரிகையில் ப்ரசுரம் செய்ய க்ருபை செய்ய வேணுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

வர்ணாச்ரம தர்ம ஸம்ரக்ஷண ஸபையில் 2-வது வருஷத்திய ஸங்கம் தஞ்சாவூர் ஜில்லா, நன்னிலம் தாலூகா தேதியூரில் நாளது வருஷம் பங்குனி௴ 24, 25, 26௳ களுக்குச் சரியான 1917-ம் ௵ ஏப்ரல்௴ 6, 7, 8௳ வெள்ளி, சனி, ஞாயற்றுக் கிழமைகளில்கூடப் போகிறபடியால் ௸ ஸபையின் அபிவிர்த்தியின், நோக்கமுள்ள எல்லோரும் ௸ ஸங்கத்துக்கு வந்து அதை ஒழுங்காய் நடப்பிவிக்கக் கோருகிறேன். மாயவரத்திலிருந்து திருவாலூருக்கு போகும் பாதையில் 3-வது ஸ்டேஷன் பூந்தோட்டத்தி லிறங்கவேண்டும்.

மயிலாப்பூர்,
17-3-17.

டி. ஆர். ராமச்சந்த்ர ஐயர்.
கார்யதர்ஸி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
28 MAY 1917
MADRAS

ஸ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 7.] பிங்கள௵ சித்திரை௴ [ஸஞ்சிகை 7.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம்
ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே
ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

பத்ராதிபரின் குறிப்புகள்.

ஆர்யதேசத்துக்கு உற்றதோர் ஏற்றம்.

லோகத்தில் ஸர்வமதஸ்தர்களும் இந்தியாவுக்கு வந்திருக்கின்றார்கள். மஹம்மதியரால் பீடிக்கப்பட்டு ஸ்வமதங்களை த்யாகம் செய்ய இஷ்டமின்றிச் சில கிறிஸ்தவர்களும் பார்ஸிகளும் முன் காலத்தில் நம் தேசத்திற்கு வந்தார்கள். வந்தவர்களை நம் பூர்வீகர்கள் ப்ரீதியுடன் இடம் தந்து ஆதரித்தார்கள். நம் தேசத்தில் மதபேதங்கள் பூர்வ காலங்களில் பரஸ்பர ஹிம்ஸைக்குக் காரணங்களாகவில்லை. தேசத்தை ஆக்ரமிக்க வந்த மஹம்மதியர் ஹிந்துக்களைப் பல வகையாகப் பீடித்தார்கள். தத்காலம் ராஜாங்கத்தாருடைய மதப்ரசாரத்தைத் தொழிலாகக்கொண்ட பாதிரிமார்கள் செல்வத்தாலும் செல்வாக்காலும் நிகரற்றவர்களாதலால், பல உபாயங்களைக் கைக்கொண்டு ஹிந்துக்களை ஸ்வமதத்தில் ஆகர்ஷிக்கின்றார்கள். பாஶ்சாத்ய வித்யா பரிசயமே நம்மவர்க்குள் பலரை சார்வாக ஸமயாநுஸாரிகளாக்குகின்றது.

மதாந்தரங்களின் வாஸனையால், ஸிக் ஸமயமென்றும் ப்ரஹ்ம ஸமாஜமென்றும் கிளை மதங்களும் உத்பந்நமாயின. ஸநாதந தர்மமெனப்பட்ட ஆர்ய மதத்திலும் பல உட்பிரிவுகள் உண்டாய், அப்பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் பரஸ்பரம் த்வேஷத்தை வ்ருத்திபண்ணிக்கொண்டிருக்கின்றார்கள்.

ஒவ்வொரு தேசாபிமாநிக்கும் இந்த ஸ்திதி சோகஸ்தாநமாக இருக்கவேண்டுமானாலும், மர்யாதைகளை அழிக்கப் பல பேர் பல விதமாக முயற்சி செய்கின்றார்கள்: இதைப்பற்றி ஸந்தோஷிக்கின்றவர்களும் உளர்.

அன்னி பெஸண்டு துரைஸானி ஸமீபகாலத்தில் ப்ரஹ்ம ஸமாஜ ஸபை யொன்றில் உபந்யாஸம் செய்கையில், மேலே விவரித்தபடி நமது நாட்டில் பல மதங்கள் வந்து சேர்ந்ததை அந்நாட்டுக்கு ஒரு அப்யுதய ஸூசகமென்று சொன்னதாய்க் கேள்விப்பட்டோம். இது அப்யுதயமாகில், பல தேசங்களில் ஒவ்வொன்றிற்கும் உரியவையாக ஏற்பட்ட வ்யாதிகளைப் பல தேச ஜநங்கள் இத்தேசத்தில் ப்ரவேசித்து இங்கே கொண்டுவிட்டதும் இந்நாட்டுக்கு அப்யுதய ஸூசகமாகலாம். ஸர்வதேசஸ்தர்களும் நம் தேசத்தில் கூடி, வர்த்தகத்தாலும் மற்ற வகையாலும் இந்நாட்டின் செல்வத்தை ஆகர்ஷிப்பதும் அதற்கு அப்யுதய ஸாதநமாகலாம்.

இத்தேசம் துருஷ்கர்க்கு வசப்பட்டதும், துருஷ்கர்களால் இந்த தேசப்ரஜைகள் துன்பங்கள் அடைந்ததும் இத்தேசத்தின் அப்யுதயார்த்தம் ஈச்வரனால் ஸங்கல்பிக்கப்பட்டதென்று சொல்வாரும் உளர். தேசிகனே ‘[illegible]’ என்று துருஷ்கர் வரவைப் பயோத்பாதகமாக நினைத்தார். ‘யவநா [illegible]’ என்று கவி வேங்கடாசார்யரும் துருஷ்கரால் நம் தேச ஸஞ்சாரமானது பயத்தை விளைவித்ததெனக் கூறினார்.

ஒவ்வொரு ஸமயத்துக்கும் ஒவ்வொரு விசேஷ லக்ஷணம் உண்டென்றும், அவற்றின் சேர்க்கையால் ஸர்வ விசேஷங்களுடன் கூடிய புதிய ஸமயம் ஒன்று உண்டாகுமென்றும், அதனால் இந்நாட்டுக்கு அப்யுதயம் உண்டாகப் போகின்றதென்றும் பெஸண்டு துரைஸானி சொல்லுகின்றாள். நமது அநுபவத்தில் மேற்குறித்தபடிப் புதுமையைத் தேடிய ஸமயங்கள் யாவும் முன்னால் ஏற்பட்டிருந்த ஸமயபேதங்களினுடைய ஸங்க்யா வ்ருத்தியில் முடிகின்றன. இந்த முடிவைத்தான் தியாஸபியும் தேடியது. காலதேச வைகுண்யம் பூர்வ மர்யாதைகளைப் படிப்படியாக அழிக்கின்றது. கட்டினின்று தளர்ந்து போனதும், ஸ்வபாவத்தில் ஸதா சலாத்மகமானதுமான நம் சிறுவர்களுடைய சித்தங்கள் ஸம்ஸர்க்க தோஷங்களால் பல வழிகளில் பாய்ந்தோடுகின்றன. நமக்குத் தோன்றியவரையில் அந்த ஸ்திதிக்குத் தக்கதோர் பரிஹாரம் காணப்படவில்லை. ஹிந்துக்களுடைய அநீச்வரத்வம் ஸர்வதோமுகமானது. மஹம்மதியர் தமது நிலையை ஹிந்துக்களைப்போல் துறக்கின்றாரில்லை.

* * * * * *

ஒரு அநர்த்த விசேஷம்.

தநாட்யராய்ப் பரோபகாரத்தில் ப்ரவ்ருத்தியுள்ள மஹாராஜராஜஸ்ரீ கண்ணன் செட்டியார் அவர்கள் தமது தர்மபத்நீ க்ஷேமத்தைக் கருதி ஸம்ஸ்க்ருத பாடசாலை யொன்றை ஸ்தாபித்தார். அதனுடைய ஜந்மாவஸரத்தில் சில லௌகிக ப்ரதாநர்களுடைய அநுக்ரஹத்தை அவர் அபேக்ஷித்தார். ஸத்யாந்வேஷி யென்று தர்க்கிக்கக்கூடியவரான ஸர். எஸ். ஸுப்ரஹ்மண்ய அய்யர் அவர்கள் அக்காலம் ஓர் உபந்யாஸம் செய்தனர். உபந்யாஸ மத்தியில், நமது பாஷ்யகாரர் சூத்ரர்களுக்கு வேதாத்யயநம் செய்வித்ததாயும், இராமாநுஜன் தத்காலம் ஹிமவத் பர்வதத்தில் ஒரு குஹாசயராய் இருந்து நமது தேசத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதாயும் சொன்னார். அபசூத்ராதிகரண பாஷ்யத்தைக் கொண்டு முதலாவது ப்ரஸ்தாபம் அஸம்பாவிதமென்று ப்ரஹ்மஸ்ரீ ஸுந்தரராமய்யராலும், உ. வே. எம். ஓ. பார்த்தஸாரதி அய்யங்கார், உ. வே. எஸ். ராமஸ்வாமி அய்யங்கார் முதலானவர்களாலும் நிராகரிக்கப்பட்டது. ராமாநுஜனுடைய பர்வத குஹாவாஸம் தத்தர்சநஸ்தர்களுள் ஒருவராலும் அங்கீகரிக்கக் கூடியதன்று.

இது ஸம்பந்தமாக ஹிந்து பத்ரிகையில் விவாதம் வளர்வதைப் பார்த்த ப்ராஹ்மண த்வேஷியென்று எண்ணக்கூடிய ஒருவர் அந்த த்வேஷத்தை ஆவிஷ்கரிக்கின்றதோர், இங்கிலீஷ் பத்ரிகையில் எழுதின கடிதத்தில், சில சைவ நாயன்மார்கள் பாடல்களைச்

செப்பி, த்ராவிட சைவ மதமானது வேதநிந்தையிலும் விப்ரத்வேஷத்திலும் ப்ரதிஷ்டிதமென்று காட்டினார். காலத்தின் கோலமானது இவ்வண்ண மெல்லாம் புஷ்பிக்கின்றது. விஷய விசாரத்தை சரியாகச் செய்யாமலும், நூதந விஶ்வாஸ தூஷித சித்தராய், ஸ்வோக்திகளால் ஸம்பவிக்கக்கூடிய அநர்த்த பரம்பரைகளைக் கணிசிக்காமலும், ஶ்ரேஷ்டர்களென மதிக்கப்பட்டவர்கள் கூட உபந்யாஸங்கள் செய்ய யத்நித்தார்களாகில், வைதிக ஸம்ப்ரதாயம் எவ்வண்ணம் க்லேசியா தொழியும்?

* * * * * *

ஆத்ம ஸ்வரூபமும் லோகாந்தரமும்.

சென்ற மாஸங்களின் குறிப்புகளில் விசாரித்த விஷயங்களின்மேல் சிறிது யோசிக்கவேண்டிய அம்சங்களை யோசிப்போம். ஆத்மாவானவன், தன்னுடன் என்றும் பிரிவின்றிச் சேர்ந்திருக்கின்ற ஜ்யோதிஸ் எனும் ப்ரகாசத்தாலேயே, தனது புத்தி, மநஸ், இந்த்ரியங்கள் முதலான ஸாதநங்களைக்கொண்டு, தன்னுடைய ஸர்வ வ்யவஹாரங்களையும் நடத்துகின்றானென்று உரைத்தோம். ஜாக்ரத் தசையிலும் ஸ்வப்ந தசையிலும் மேற்சொல்லிய வ்யவஹார ஸம்பந்தம் அவனுக்கு உண்டென்றும், ஸுஷுப்தியில் அவன் ப்ராஜ்ஞனிடம் லயித்து, யாதொரு பாஹ்ய ஜ்ஞாநத்தையும் யாதொரு ஆந்தர ஜ்ஞாநத்தையும் ஸாக்ஷாத்கரிக்கின்றானில்லை என்றும் சொன்னோம். ப்ருஹதாரண்யகோபநிஷத்தினுடைய யாஜ்ஞவல்க்ய ஜநக ஸம்வாதத்தாலும், சாந்தோக்யோபநிஷத்தின் ப்ரகரணங்களாலும், ஜீவாத்மாவானவன் ப்ராஜ்ஞனெனப்பட்ட பரமாத்மாவைக் காட்டிலும் வேறுபட்டவன் என்பதையும் காட்டினோம். ஸுஷுப்தியில் பரமாத்மாவினிடம் லயிக்கின்ற ஜீவன் அவ்வண்ணம் லயிக்கின்றதை அறிகின்றிலன் என்பதையும் உபநிஷத் சொல்லிற்று. ஜீவனுடைய தர்மபூதஜ்ஞாநம் அழிவற்றதென்பதும் காட்டப்பட்டது. அதைக்கொண்டு ஸுஷுப்தியில் ஜீவன் யாதொன்றையும் அறிகின்றானில்லை யென்பது, அவனைக்காட்டிலும் வேறொன்று ஸுஷுப்தி தசையில் அவன் அறியும்படியான ஸ்திதியில் இல்லை யென்னும் காரணத்தாலேற்பட்டதென்றும் உபநிஷத் கூறிற்று.

ப்ருஹதாரண்யகோபநிஷத்தினுடைய தொடர்ச்சியில், '𑌸𑌯𑌤𑍍𑌰𑌾𑌯 𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌅𑌬𑌲𑍍𑌯𑌂 𑌨𑍍𑌯𑍇𑌤𑍍𑌯 𑌸𑌂𑌮𑍋𑌹 𑌮𑌿𑌵𑌨𑍍𑌯𑍇𑌤𑌿' என்று ஆரம்பிக்கின்ற ப்ரகரணமானது ஜீவனுடைய மரணப்ரகாரத்தைச் சிந்திக்கின்றபடியால், ஜீவாத்மாவைப் பற்றினதென்பது ஏற்படுகின்றது. மரணாநந்தரம் ஜீவன் பித்ரு காந்தர்வ ஸ்வர்க்கம் முதலான லோகங்களை யடைவதைப்பற்றியும், அந்தந்த லோகோசிதங்களான சரீரங்களை அடைவதைப்பற்றியும் சொன்னோம்.

OFFICE OF THE REGISTRAR OF
23 MAY 1917
MADRAS

இவற்றையெல்லாம் விவரணம் செய்தபிறகு உபநிஷத்தானது, '𑌸 𑌵𑌾 𑌅𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮' என்று வெளியிடுகின்றது. அத்வைதிகள் அந்த வாக்யத்தைக்கொண்டு, ஜீவன் குணாஷ்டக விசிஷ்டனான பரமாத்மாவே என்று நிஶ்சயிக்கின்றார்கள். ப்ரகரணத்தில், ஜீவனையும் ப்ராஜ்ஞனையும் பிரித்து முன்னமே காட்டப்பட்டிருக்கின்றபடியால், நம்முடைய ஸம்ப்ரதாயாசார்யர்கள் மேலெடுத்த வாக்யத்தால் குணாஷ்டகங்களுடன் கூடின ப்ரஹ்மத்தினுடைய ரூபமே ஜீவனுக்கும் ஸ்வரூபமென்றும், அதனால் ப்ரஹ்ம சப்தம் அவ்விடத்தில் ஜீவனைக் குறிக்கின்றதென்றும் சொல்வார்கள். இந்த யோசனையில் வித்யாஸமில்லை. பகவான் கீதையில் ப்ரக்ருதியை ப்ரஹ்ம சப்தத்தால் வ்யவஹரிக்கின்றார். '𑌮𑌮 𑌯𑍋𑌨𑌿𑌰𑍍𑌮𑌹𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮' எனும் ஶ்லோகத்திலே ப்ரஹ்ம சப்தம் ஜீவவிஷயமாகவும் ப்ரயோகிக்கப்படுகின்றது. உபநிஷத்திலும் '𑌤𑌪𑌸𑌾 𑌚𑍀𑌯𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮', '𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮' என்று ப்ரஹ்ம சப்தம் மூலப்ரக்ருதி பரமாக ப்ரயோகிக்கப்படுகிறது.

விஜ்ஞாநம், மநஸ், ப்ராணன், இந்த்ரியங்கள், பஞ்சமஹாபூதங்கள், தேஜஸ், காமம், அகாமம், க்ரோதம், அக்ரோதம், தர்மம் அதர்மம் முதலானவற்றைச் சொல்லி, அதனதன் மயனாகின்றான், ஸ்வரூபத்தால் கேவல குணாஷ்டக விசிஷ்டனான ஜீவன் என்று உபநிஷத் வெளியிடுகின்றது. அத்வைதிகளோ மேற்கூறிய விகாரங்களை ப்ரஹ்மமே அடைவதாகச் சொல்வார்கள். உபாதிகளாயும் உபகரணங்களாயும் இருக்கின்ற பல பதார்த்தங்களுடைய ஸம்பந்தத்தால் ஜீவனுக்கு அதனதன் மயத்வம் [அதாவது ப்ரசுரத்வம்] கூறப்படுகின்றது. ஆதலால், ஜீவனை தர்மாதர்ம மயனென்றும், ஸர்வமயனென்றும் வர்ணித்து, '𑌧𑌰𑍍𑌮𑌮𑌯𑍋𑌽𑌧𑌰𑍍𑌮𑌮𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌮𑌯𑌃' என்று உபநிஷத் சொல்லிற்று. அதாவது: அவனுடைய வ்யாபாரங்களனைத்தும் தர்மாதர்ம மயங்கள். அவற்றின் பலங்களை அவனே அடைகின்றானாதலால் அவனையே தர்மாதர்ம மயனென்றும் ஸர்வமயனென்றும் சொல்லிற்று; ஆத

லால் அந்தந்த ஸமயங்களில் அவனுடைய கார்யங்களைக்கொண்டு ஜீவன் '𑌇𑌦𑌂𑌮𑌯𑌃' என்றும், '𑌅𑌦𑍋𑌮𑌯𑌃' என்றும் பரரால் ஊஹிக்கப்படுகின்றான்; அதாவது இந்த வ்யவஸாயத்துடன்கூடினவன், அந்த வ்யவஸாயத்துடன் கூடினவன் என்று யோசிக்கப்படுகின்றான். "𑌯𑌥𑌾𑌕𑌾𑌰𑍀 𑌯𑌥𑌾𑌚𑌾𑌰𑍀 𑌤𑌥𑌾 𑌭𑌵𑌤𑌿, 𑌸𑌾𑌧𑍁𑌕𑌾𑌰𑍀 𑌸𑌾𑌧𑍁𑌰𑍍𑌭𑌵𑌤𑌿, 𑌪𑌾𑌪𑌕𑌾𑌰𑍀 𑌪𑌾𑌪𑍋 𑌭𑌵𑌤𑌿, 𑌪𑍁𑌣𑍍𑌯𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑍇𑌨 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌭𑌵𑌤𑌿, 𑌪𑌾𑌪𑌃 𑌪𑌾𑌪𑍇𑌨। 𑌅𑌥𑍋 𑌖𑌲𑍍𑌵𑌾𑌹𑍁𑌃 𑌕𑌾𑌮𑌮𑌯 𑌏𑌵𑌾𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷 𑌇𑌤𑌿। 𑌸 𑌯𑌥𑌾𑌕𑌾𑌮𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌤𑌤𑍍𑌕𑍍𑌰𑌤𑍁𑌰𑍍𑌭𑌵𑌤𑌿, 𑌯𑌤𑍍𑌕𑍍𑌰𑌤𑍁𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌤𑌤𑍍𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇, 𑌯𑌤𑍍𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌤𑌦𑌭𑌿𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ॥ 𑌤𑌦𑍇𑌷 𑌶𑍍𑌲𑍋𑌕𑍋 𑌭𑌵𑌤𑌿 ॥ 𑌤𑌦𑍇𑌵 𑌸𑌕𑍍𑌤𑌃 𑌸𑌹 𑌕𑌰𑍍𑌮𑌣𑍈𑌤𑌿 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌮𑌨𑍋 𑌯𑌤𑍍𑌰 𑌨𑌿𑌷𑌕𑍍𑌤𑌮𑌸𑍍𑌯। 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌯𑌤𑍍𑌕𑌿𑌞𑍍𑌚𑍇𑌹 𑌕𑌰𑍋𑌤𑍍𑌯𑌯𑌂। 𑌤𑌸𑍍𑌮𑌾𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌤𑍍𑌪𑍁𑌨𑌰𑍈𑌤𑍍𑌯𑌸𑍍𑌮𑍈 𑌲𑍋𑌕𑌾𑌯 𑌕𑌰𑍍𑌮𑌣𑍇, 𑌇𑌤𑌿 𑌨𑍁 𑌕𑌾𑌮𑌯𑌮𑌾𑌨𑌃 ॥ 𑌅𑌥 𑌅𑌕𑌾𑌮𑌯𑌮𑌾𑌨𑌃 𑌯𑌃 𑌅𑌕𑌾𑌮𑌃, 𑌨𑌿𑌷𑍍𑌕𑌾𑌮𑌃, 𑌆𑌪𑍍𑌤𑌕𑌾𑌮𑌃, 𑌆𑌤𑍍𑌮𑌕𑌾𑌮𑌃 𑌨 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾 𑌉𑌤𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌨𑍍𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌸𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌪𑍍𑌯𑍇𑌤𑌿" இவை உபநிஷத்தினுடைய தொடர்ந்த வாக்யங்கள். இவற்றின் தாத்பர்யம்:—

ஒரு புருஷன் விரும்பியபடியே கர்மங்கள் செய்கின்றான், ஆசரிக்கின்றான்; (நடக்கின்றான்) அக்கர்மங்களுடையவும் நடத்தைகளுடையவும் பலத்தை அடைகின்றான்; ஆதலால் ஸத்கர்மங்கள் புரிந்து ஸாதுக்கள் க்ரஹங்களில் பிறக்கின்றான்; பாபகர்மங்கள் புரிந்து பாபிஷ்டர்கள் வம்சங்களில் ஜநநம் எடுக்கின்றான்; புண்யகர்மங்கள் செய்து இன்னும் புண்யன் [அதாவது புண்யமயன்] ஆகின்றான்; பாபங்கள் செய்து அவ்வண்ணம்மே பாபி ஆகின்றான். ஆகையால் ஸம்ஸார மோக்ஷங்களுடைய காரணம் அறிந்த வித்வான்கள் புருஷனைக் காமமயன் என்று சொல்கின்றார்கள். ஏனென்றால் காமமே ஸம்ஸாரமூலம். புருஷனுடைய காமத்தை அநுஸரித்தே அவன் மநஸ்ஸில் அத்யவஸாயம் உண்டாகின்றது; அந்த அத்யவஸாயத்தை அநுஸரித்தே அவன் கார்யம் செய்கின்றான்; பிறகு அந்தக் கார்யத்தின் பலத்தை அடைகின்றான். இந்த விஷயத்தில் பூர்வீகர்களால் ஸ்மரிக்கப்பட்ட ஶ்லோகத்தை உபநிஷத் சொல்லுகின்றது. அதாவது: புருஷனுடைய மநஸ்ஸானது எந்த பலத்தில் பற்றுடையதோ, அந்த பலத்தை அடைவதன்பொருட்டு அவன் கார்யம் செய்கின்றான்; அக்கார்யத்தினுடைய கர்மம் எனப்பட்ட அத்ருஷ்ட விசேஷத்துடன் கூடினவனாய், மேற்கூறப்பட்ட அக்கார்ய பலங்களில் இந்த ஜந்மத்தில் அடையாதவற்றை ஜந்மாந்தரத்திலாவது அடைகின்றான். இது ஶ்லோக தாத்பர்யம். ஆதலால் ஸம்ஸாரம் காமமூலம் என்பது ஸித்திக்கின்றது. இந்த ஸம்ஸாரி இந்த லோகத்தில் லோகாந்தர ரூப பலாபேக்ஷையால் எந்த கர்மம் செய்கின்றானோ, அந்த கர்ம பலத்தின் முடிவை அநுபவத்தினால் லோகாந்தரத்தில் பொருந்தி, அந்த லோகாந்தரத்தினின்று இந்த கர்மப்ரதானமான லோகத்தின்பொருட்டு மறுபடியும் வருகின்றான். இவ்வண்ணம் காமமுள்ளவன் ஸம்ஸரிக்கின்றான். காமமற்றவன் என்றால், எவன் மநஸ்ஸினின்று காமங்கள் விலகினவோ அவன்; மறுபடி காமங்கள் அவன் மநஸ்ஸில் உதிக்கமாட்டாவென்று அவனை ஆப்தகாமனென்றும் ஆத்மகாமனென்றும் சொல்லுகின்றது. ஆத்மவ்யதிரிக்த வஸ்துக்களில் காமத்தைப் போக்கி, ஆத்மாவையே [அதாவது பரமாத்மாவையே] அபேக்ஷிக்கின்றவன் ஆத்மகாமன். இந்த உபநிஷத்தின் பின் பாகத்தில், ஆத்மவ்யதிரிக்த வஸ்துக்களின் அபாவத்தாலும், வஸ்துக்களில் வஸ்துக்களெனும் ஜ்ஞானத்தால்வருகின்ற காமங்கட்கெல்லாம் அவற்றுள் ஆத்மாவின் ஸந்நிதானமே காரணமானபடியாலும், ஆத்மாவைப்பற்றிய ஜ்ஞானமே அடையத்தக்கதென்றும், ஆத்மாவே சிந்திக்கத்தக்கதென்றும், த்யானிக்கத்தக்கதென்றும், ஸாக்ஷாத்கரிக்கத்தக்கதென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால் ஆத்மகாமன் எனப்பட்டவன் ஆப்தகாமன் [அதாவது: அவாப்த ஸமஸ்தகாமன்] எனப்படுகின்றான். அவனுக்குப் புண்ய பாப பலரூபமான ப்ரயோஜநங்களில் அபேக்ஷையில்லை; ஆதலால் அவற்றை அடையவேண்டிச் செய்யப்படுகின்ற காம்ய கர்ம ஸம்பந்தமும் இல்லை; காமயமானனைப்போல் ஜந்மாந்தரங்களில் அடையவேண்டிய சரீரங்களின் பொருட்டு ப்ராணங்களின் உத்க்ரமணமும் இல்லை. ஆதலால், அவன் விஷயமாக உபநிஷத்தானது '𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌸𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌪𑍍𑌯𑍇𑌤𑌿' என்று சொல்லிற்று. இந்த பலமானது இந்த லோகத்திலேயே அடையத்தக்கதென்று ஸ்ரீ ஶங்கராசார்யரும் நம்முடைய ஆசார்யர்களும் ஒப்புக்கொள்கின்றார்கள். ஶ்ருதி சப்தங்களின் அர்த்தம் ப்ரஹ்மமாகவே இருக்கின்றபடியால் ப்ரஹ்மத்தை அடைகின்றான்; ப்ரஹ்மத்தில் லயிக்

கின்றான்; என்று ஏற்படுகின்றது. ஶங்கராசார்யர் இவ்வுலகிலேயே அவன் ப்ரஹ்மமாகின்றான் என்கின்றார். அவனுக்குத் தேஹாந்தர ப்ராப்தி இல்லை. அவனுடைய நித்ய ஸ்வபாவமான ப்ரஹ்மத்வம் அவனுக்கு ஜ்ஞாநத்தாலும் அவித்யா நிவ்ருத்தியாலும் நேர்ந்துவிட்டபடியால், சரீரம் இருக்கும்போதும் அவன் முக்தனே. பூர்வ கர்மார்ஜிதமான அவனுடைய சரீரம் கர்மாவஸாநத்தில் தானே போய்விடும். ஜ்ஞாநம் உண்டாய்விட்ட பிறகு, '𑌤𑌸𑍍𑌯 𑌤𑌾𑌵𑌦𑍇𑌵 𑌚𑌿𑌰𑌂 𑌯𑌾𑌵𑌨𑍍𑌨 𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑍇, 𑌅𑌥 𑌸𑌂𑌪𑌤𑍍𑌸𑍍𑌯, 𑌇𑌤𑌿' எனும் சாந்தோக்ய ஶ்ருதியின்படி ஶரீரவியோகாநந்தரம் சரீர ஸம்பந்தமற்ற ப்ரஹ்ம பாவத்தை அடைகின்றான். இப்படி அத்வைதிகள் கொள்கை. ப்ரஹ்மத்வம் ஜீவனுக்குண்டு; அதாவது, பரமாத்மாவைப்போல் ஜீவனுக்கும் குணாஷ்டக விஶிஷ்ட சுத்த ரூபம் தான் உண்மையாக உள்ளது. தேஹாந்தர ப்ராப்திக்கு ஹேதுக்களான காமங்களும் கர்மங்களும் அற்றுக் கேவலம் ஆத்மகாமனாக நிலைத்தவன், ஸ்வஸ்வரூபமான குணாஷ்டக விஶிஷ்ட சுத்த ஜீவரூபத்தை அடைந்துவிடுகின்றான். '𑌸𑍍𑌵𑍇𑌨 𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌭𑌿𑌨𑌿𑌷𑍍𑌪𑌦𑍍𑌯𑌤𑍇' என்கிற முக்தரூபத்தின் ஸத்ருஶரூபம் அவனுக்கு வந்துவிடுகின்றது. ஆதலால், இவ்வுலகத்திலேயே '𑌅𑌤𑍍𑌰 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇' என்று ஶ்ருத்யந்தரம் சொல்கின்றபடி, உபாஸந வேளைகளில் பரப்ரஹ்மாநுபவமும், பரப்ரஹ்மத்தில் லயமும் அவனுக்குக் கிடைத்துவிடுகின்றன, என்பார் நம்முடைய ஆசார்யர்கள்.

பாஷ்யகாரர்கள் மேல் விவரித்தபடியே வ்யாக்யாநம் பண்ணுகின்றார்கள். ஆனால், ஆத்மகாமனாய்ப் போந்தவன் அந்த ஸ்திதியிலேயே அவாப்த ஸமஸ்த காமனாகின்றான். ஏனெனில், அவனுக்கு ஆத்மாவைத் தவிர இச்சிக்கவேண்டியதோர் வஸ்து இலது. இந்த நிலையை அடைகிறவன் விஷயமாக ஶ்ருதியானது, '𑌨 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾 𑌉𑌤𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌨𑍍𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌸𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌪𑍍𑌯𑍇𑌤𑌿' என்று சொல்லிற்று. அதாவது, தத்வஜ்ஞாநமில்லாதவர்கள் விஷயத்தில், சரீராவஸாந காலத்திலே, தேஹாந்தர ப்ராப்தியின்பொருட்டு ப்ராணன்களுடைய உத்க்ரமணம் உண்டாவதுபோல, ஆத்மகாமனுடைய சரீர வியோக காலத்தில் ப்ராணோத்க்ரமணம் நேரிடுவதில்லை. ஸ்வஸ்வரூபேண ஆவிர்பாவம் மோக்ஷமென்று ஶ்ருதியினால் சொல்லப்பட்டது. ஆத்மகாமன் ப்ரஹ்மமாகவே இருக்கின்றபடியால், [அதாவது, குணாஷ்டக விஶிஷ்ட சுத்தாத்ம ஸ்வரூபத்தை அடைந்து விட்டபடியால்] சரீராவஸாந காலத்தில் சரீராந்தர ப்ராப்தி அவனுக்கில்லை; அதனிமித்தமாக ப்ராணோத்க்ரமணமும் இல்லை. இப்படிப்பட்ட அதிகாரிக்கு, '𑌤𑌸𑍍𑌯 𑌤𑌾𑌵𑌦𑍇𑌵 𑌚𑌿𑌰𑌂 𑌯𑌾𑌵𑌨𑍍𑌨 𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌅𑌥 𑌸𑌂𑌪𑌤𑍍𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿' என்று சாந்தோக்யோபநிஷத் சொல்லுகின்றபடி, சரீராவஸாந பர்யந்தம் மோக்ஷம் விளம்பிக்கும் என்பதும், சரீராவஸாநத்தில் பரப்ரஹ்ம ஸம்பத்தியுண்டாம் என்பதும் ஸித்தம். ஆகையால், சரீராவஸாந காலத்திலேயே ப்ரஹ்ம ப்ராப்தியை ப்ருஹதாரண்யகோபநிஷத்தும் சொல்லுகின்றது என்றும் கொள்ளக்கூடும்.

ப்ரஹ்மாப்யம் இவ்வுலகிலேயே நேரிடுகின்ற தென்பதற்காக, ஸ்ரீ ஶங்கராசார்யர், ஶ்ருதியில் இல்லாத '𑌇𑌹' என்னும் பதத்தை அத்யாஹாரம் பண்ணினார். அதை ஒப்புக்கொண்டே நம்முடைய உபநிஷத் பாஷ்யகாரரும் வ்யாக்யாநம் செய்தார். அப்பதத்தை அபேக்ஷிக்காமலே நாம் ஶ்ருத்யர்த்தத்தை விசாரித்தோம்.

ஆனால் மேல்யோசித்த உபநிஷத் வாக்யங்களைத் தொடர்ந்து, '𑌤𑌦𑍇𑌷 𑌶𑍍𑌲𑍋𑌕𑍋 𑌭𑌵𑌤𑌿 । 𑌯𑌦𑌾 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌕𑌾𑌮𑌾 𑌯𑍇𑌽𑌸𑍍𑌯 𑌹𑍃𑌦𑌿 𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 । 𑌅𑌥 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑍋𑌽𑌮𑍃𑌤𑍋 𑌭𑌵𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 ॥' என்று ப்ரகரணம் விஸ்தரிக்கின்றது. இந்த ஶ்லோகம் கடோபநிஷத்திலும் காணப்படுகின்றது. ஆப்தகாமனான ஆத்மகாமன் விஷயம் இந்த ஶ்லோகம். அவன் அகாமனென்றும் நிஷ்காமனென்றும் சொல்லப்படுகிறான். நிஷ்காமனென்றால், எவனுடைய ஹ்ருதயத்தினின்று காமங்கள் வெளிப்பட்டனவோ அவன்தான், என்று முன்னமே விவரிக்கப்பட்டது. "புருஷனுடைய ஹ்ருதயத்தை ஆஶ்ரயித்திருக்கின்ற ஸர்வகாமங்களும் அதாவது விஷயத்ருஷ்ணைகளும், எப்போது ஸமூலமாக நாசமடைகின்றனவோ, அப்போது மரணத்தைத் தர்மமாயுடைய புருஷன் அம்ருதனாகின்றான்; அதாவது சரீராந்தர ப்ராப்தி ஹேதுக்களான காமங்களாலும், அவற்றைத் தொடர்ந்து விளைகின்ற புண்ய பாபங்களாலும், பூர்வோத்தராகங்களாலும் விடப்பட்டவனாகின்றான். இங்கேயே உபாஸந வேளையில் ப்ரஹ்மத்தை அநுபவிக்கின்றான்." இது ஶ்லோகார்த்தம். கடோபநிஷத்தில் ப்ரஹ்ம ப்ரகரணத்தில் இந்த ஶ்லோகம் இருக்கின்றது.

ஶ்லோகமும் ஜீவனுடைய ப்ரஹ்மாநுபவத்தைச் சொல்லுகின்றது. ஆதலால் ஆப்தகாம னென்பதும் ஆத்மகாம னென்பதும் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் செய்த புருஷனைப்பற்றிய விவரணங்கள். இந்த ஸாக்ஷாத்காரமானது, ஹ்ருதயத்தை ஸாதாரணமாகப் பற்றிய விஷயேச்சைகளுடைய பூர்ண நாசத்தை அபேக்ஷிக்கின்றது. இப்படிப்பட்ட அதிகாரி விஷயமாக முண்டகோபநிஷத்தில், ' 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌃 𑌕𑌾𑌮𑌯𑌤𑍇 𑌮𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌃 𑌸𑌕𑌾𑌮𑌭𑌿𑌰𑍍𑌜𑌾𑌯𑌤𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 । 𑌪𑌰𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌕𑌾𑌮𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁 𑌇𑌹𑍈𑌵 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌵𑌿𑌲𑍀𑌯𑌨𑍍𑌤𑌿 𑌕𑌾𑌮𑌾𑌃 ' எனும் ஶ்லோகம் காணப்படுகின்றது. “விஷயங்களைப் போக்யமாக யாவனொருவன் இச்சிக்கின்றானோ, அவன் தன்னுடைய காமாநுகுணமாக புத்தியால் அத்யவஸித்து, அத்யவஸாயாநுகுணமாகக் கார்யங்கள் செய்து, அக்கர்மபலாநுகுணமாக, [அதாவது அவனுடைய கர்மங்களாகின்ற ப்ரதம ஹேதுக்களடியாக] தேவமநுஷ்யாதி லோகங்களில் ஒன்றில் ஜந்ம மெடுக்கின்றான். பர்யாப்தகாமனுக்கோ, [அதாவது, ஆப்தகாமனுக்கோ,] க்ருதாத்மாவுக்கோ, [அதாவது, ஆத்மாவை அறிந்து ஆத்மாவாகும் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் ஒன்றினாலேயே பூர்ணகாமனான ஆத்மகாமனுக்கோ,] இந்த ஜந்மத்திலேயே ஸர்வவிஷய த்ருஷ்ணைகளும் நாசமடைகின்றன.” இது ஶ்லோகார்த்தம். இந்த அதிகாரிக்கு ஜந்மாந்தர ப்ரஸக்தியில்லை. இவனைப்பற்றித்தான், ' 𑌤𑌦𑌧𑌿𑌗𑌮 𑌉𑌤𑍍𑌤𑌰 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌘𑌯𑍋𑌰𑌶𑍍𑌲𑍇𑌷𑌵𑌿𑌨𑌾𑌶𑍌 ' என்று ஶ்ருத்யநுஸாரியான ப்ரஹ்மஸூத்ரம் வெளியிட்டது. ப்ரஹ்ம ஸாக்ஷாத்கார மடைந்தவனுடைய பூர்வகர்மங்கள் உடனே நாசமடைகின்றன; உத்தரகர்மங்கள் அவனை லேபிக்கமாட்டா என்பது கருத்து.

பத்ராதிபர்.

1916-ம் வருஷம் டிஸம்பர் மாஸத்தில் சேர்ந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸதஸ்ஸின் சாயா படம் (Group Photo) விலைக்கு அகப்படும். காபி ஒன்றுக்கு ரூபாய் 2. படத்தை அபேக்ஷிக்கிறவர்கள் மயிலாப்பூர் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்ஶிகளுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

ஜநகநந்தினீ.

கேசவாசார்யர் பெருமாள் கோவிலுக்குத் திரும்பிவந்ததும், நவராத்ரி உத்ஸவம் ஆரம்பித்துவிட்டது, தூப்புல் தேசிகனுக்கும் வர்ஷோத்ஸவம் நடந்தது. அது அவ்வர்ஷம் விபவமாக நடக்கவே, அக்ரஹார வாஸிகளெல்லோரும் ஆகமாந்தார்யன் உத்ஸவத்தை அநுபவிக்கக் காஞ்சீபுரத்தில் வந்து கூடினார்கள். மத்யாஹ்நங்களில் திருப்பல்லக்கிலும், ராத்ரி காலங்களில் வெவ்வேறு வாஹநங்கள் மீதிலும், ஸ்ரீதேசிகன் உத்ஸவம் கண்டருளினார். தினந்தோறும் இரண்டு காலங்களிலும் தேவாதிராஜனுடைய ஸந்நிதி வீதியிலும் மாடவீதிகளிலும் தேசிகன் எழுந்தருளினார். தேசிகனுடன் பின்சென்ற வேதபாராயண கோஷ்டிகளில் ஸ்வாமிகள் விசேஷமாக ஸேவை ஸாதித்தார்கள். வைசாக உத்ஸவங்களிலும் அவ்வளவு வைதிக ஸம்ருத்தி ப்ரகாசிப்பதில்லை. தேசிக பக்தர்கள் அவ்வுத்ஸவத்தை ஸேவித்து ஆநந்தித்தார்கள்.

தேசிகன் ராத்ரி சாலங்களில் ஸந்நிதி வீதிக்கு எழுந்தருளுமுன், ஸந்நிதிக்குள் பெருமாளும் தாயாரும் நூற்றுக்கால் மண்டபத்தின் முன்பாக அமைக்கப்பட்ட சித்திரப்பந்தரில் பத்தி உலாவி, மண்டபத்தின்மேல் எழுந்தருளுவது வழக்கமா யிருந்தது. தேசிகன் திரும்பித் தூப்புலுக்குச் சென்றபிறகு, பெருமாள் தாயார் மிகுந்த உத்ஸவத்தைக் கண்டருளினார்கள்.

கேசவாசார்யர் தேசிகன் எழுந்தருளும்போதெல்லாம் வேதபாராயண கைங்கர்யத்தில் அந்வயிப்பர். அக்கைங்கர்யம் நிறைவேறின பிறகு ஸந்நிதிக்குச் சென்று பெருமாளையும் தாயாரையும் ஸேவிப்பர். தேசிகன் வீதியை அலங்கரிக்கும்போது ஹரிப்ரியை வாசலில் வந்து ஸேவிப்பள். ஜநகநந்தினியோ வாசற்படி தாண்டாமல் உள்நின்று ஆசார்யனைத் தர்சிப்பள்.

அவளுடைய உள்ளத்தினின்று ஸுகமும் ஸந்தோஷமும் முற்றிலும் வெளிப்பட்டுப்போயின. அவளுடைய சரிதத்தில்

சாயாமாத்ரமளவும் வைகுண்யம் தட்டவில்லை. அவளுடைய அருமை யறியாத புருஷன் செயலால், அவள் ஆடவர் முன் வர வெட்கப்பட்டனள். திவ்ய தேசங்கள் ஸஞ்சரிக்கும் வரையில் தன்னுடைய க்லேசத்தைக் கொஞ்சம் மறந்திருந்தாள். கச்சிநகர் வந்தவுடன் முன்போலவே அது அவளைப் பாதிக்கத் தொடங்கியது. கோவிலுக்கு அவளும் போவதில்லை; ஹரிப்ரியையும் போவதில்லை.

பெருமாள் கோவில் திரும்பிவந்தது முதல் ஜநகம் ரஹஸ்ய த்ரய ஸாரத்தை ரஸித்துச் சிந்தனைசெய்ய ஆரம்பித்தாள். க்ருஹவ்யாபாரத்தில் அந்வயித்த காலம் நீங்க, மிகுதியான காலமெல்லாம் புஸ்தக நிரீக்ஷணம் செய்வள். இப்படி அவள் இடைவிடாமல் புஸ்தகம் பார்ப்பதைக் கேசவாசார்யர் அடிக்கடிக் கண்டார். ஒருதரம் அவள் ஸமீபத்தில் சென்றார். புஸ்தகக்கையுடன் ஜநகம் எழுந்து நின்றாள்.

“ஜநகம்! என்ன வாசிக்கின்றாய்?” என்று கேசவாசார்யர் கேட்டார். ஜநகநந்தினி ஸ்ரீகோஶத்தைத் திறந்துகாட்டினாள். நிர்யாணாதிகாரம் அவள் விரலிட்ட விடத்தில் காணப்பட்டது. “ஆனபின்பு பகவத்விஷயத்தில் அந்திம ஸ்ம்ருதி, முக்தராகிறவர்க்கும், மோக்ஷம் கொடுக்கிறவர்க்கும் தெரியு மித்தனை. இதுக்கு அநந்தரம் யோகிகளோடும் அயோகிகளோடும் வாசியற ஹார்தனான பரமாத்மாவின் பக்கலிலே விஶ்ரமிக்குமளவும் ஸுஷுப்தி துல்யமாயிருக்கும்” என்கிற பங்க்தியைக் கேஶவாசார்யர் வாசித்தார். சிந்தையி லாழ்ந்தார்.

“குழந்தாய்! இந்தச் சிந்தனை செய்வதில் உன் அபிப்ராயமென்ன?” என்று கேட்டார்.

“தேவரீர் அடியேனை அநுக்ரஹிக்கத் திருவுள்ளம் பற்றியிருப்பதாக நம்பியிருக்கின்றேன். அதற்காக அடியேனுக்கு உசிதமான ஜ்ஞாநத்தையும் உபதேசம் செய்திருக்கின்றது. இந்த க்ரந்தாவலோகநத்தினால் அந்த ஜ்ஞாநத்தை த்ருடப்படுத்திக் கொள்கின்றேன்.” என்று சொன்னாள் ஜநகநந்தினி.

கேசவாசார்யருக்கு மேல்வார்த்தை சொல்ல இடங்கொடுக்கவில்லை. பகவத் ஸேவார்த்தம் ஸந்நிதிக்குச் சென்றார். அன்று மஹாநவமி ஐந்தாவது உத்ஸவம். பெருமாளும் தாயாரும் அபி

ஷேக மண்டபத்தில் கண்ணாடி யறையில் ஸேவை தந்தார்கள். பகவத் ஸேவாநந்தரம் வெளியேவரும்போது கேசவாசார்யர், பத்மநாபாசார்யரும் மாதவாசார்யரும் முன்மண்டபத்தில் ஓர் புறமாக உட்கார்ந்து ஸம்பாஷித்துக்கொண்டிருக்கக் கண்டார். அவர்களும் கேசவாசார்யரைக் கூப்பிட்டு உட்காரச்சொன்னார்கள். அவரும் அவர்கள் ஸமீபத்தில் போய் உட்கார்ந்தனர். “ஸ்வாமிந்! குமாரத்தி எவ்வண்ணம் இருக்கின்றாள்?” என்று மாதவாசார்யர் கேட்டார்.

“பத்மநாபாசார்யருக்கு எல்லாம் தெரியுமே. அந்த ஸ்வாமி தேவரீருடன் சொல்லவில்லையா” என்றனர் கேசவாசார்யர்.

“அந்த ஸ்வாமியும் ப்ரஸ்தாபித்திருக்கின்றார். அடியேனுக்கும் கிஞ்சித் தெரிந்திருக்கின்றது. க்லேஶ நிவாரணார்த்தமாகத் திவ்ய தேச யாத்ரை செய்தாயிற்றே. ததநந்தரம் எப்படி யிருக்கின்றாள் என்று அடியேன் கேட்டபடி.” என்று சொன்னார் மாதவாசார்யர்.

“யாத்ரை காலம்வரையில் துக்கத்தின் ப்ரகாசம் அவ்வளவாகத் தெரியவில்லை. பெருமாள் கோவிலுக்குத் திரும்பிவந்த பிறகு அது பூர்வஸ்திதியில் தான் இருப்பதாக யோசிக்கின்றேன். பகவத் ஸங்கல்பம் எப்படியிருக்குமோ?” என்று சொல்லிக் கேசவாசார்யர் மௌநத்தை ஆஶ்ரயித்தார். பத்மநாபாசார்யர் முகம் கறுத்தது. மேலே வார்த்தைகள் சொல்ல மூவர்க்கும் அமையவில்லை. இதற்குள் வாத்ய ஶப்தம் ஸந்நிதிக்கு வெளியே கேட்டது. தேசிகன் எழுந்தருளிவிட்டாரென்று மூன்று ஸ்வாமிகளும் ஸந்நிதிக்கு வெளியே சென்றார்கள். நிகம சூடா தேசிகேந்த்ரனை ஸேவித்தார்கள். வேத கோஷ்டியில் போய்ச் சேர்ந்தார்கள்.

தேசிகனும் மாடவீதி ப்ரதக்ஷிணமாக வலம் வந்து,பிறகு ஸந்நிதி வீதிக்குள் ப்ரவேசித்துக் கோபுரத்வாரம் வரையில் எழுந்தருளினார். அவ்விடம் க்ஷணகாலம் தாமதித்துத் திரும்பி ஸந்நிதி வீதியைக் கடந்து திருத்தண்காவுக்குத் திரும்பினார். அநுயாத்ரையைக் கோபுரத்வார ஸமீபத்தில் ஸ்ரீநிவாஸன் செய்ய ஆரம்பித்தான். ஸந்நிதி வீதியின் முடிவில் அதை முடித்தான். கேசவாசார்யர் முதலானவர்கள் பெருமாள் கோவிலுக்குத் திரும்பிவந்த பிறகு, அன்றுவரையில் ஸ்ரீநிவாஸன் அவர்களைப் பார்க்க

வில்லை; அவர்கள் அகத்துக்கும் அவன் செல்லவில்லை. அவர்களுடைய கஷ்டம் பெரிதாயிருந்தாலும், ஸ்ரீநிவாஸனுடைய துயரம் அதற்குக் குறைந்ததாயில்லை. ஆகலால் அவனும் அவச்யமின்றி வீட்டைவிட்டுப் போனதில்லை.

ஜநகநந்தினியுடைய திவ்யதேசயாத்ரை யாரம்பித்த பிறகு ஸ்ரீநிவாஸன் பி. எ. பரீக்ஷையில் தேறினனென்று ஸமாசாரம் வந்தது. அதனால் அவனுக்குக் குதூஹலம் சிறிதுமில்லை. லோகத்தில், காமுகர்க்கு, ‘நஸுஹவா ஸகூஞெளஷ்டு ஊுலவீவஸா’ என்கிறபடியே, இச்சாவிஷயமாகின்ற பெண்கள் கிடைப்பதரிதென்று தோன்றும் போதும், அஸுலப வஸ்து ப்ரார்த்தனையும், அதற்குக் காரணமாகின்ற பஞ்சபாணனுடைய பாதையும் ஸஹஜம். அவ்வஸ்து மற்றொருவனுடையதாகப் போனபிறகும், காமத்தின் அநுவ்ருத்தியானது சிலவிடங்களில் காணப்படுகின்றது. அந்த அநுவ்ருத்தியானது ராவணாதிகளைப்போன்ற துஷ்டர்களிடம் அஸஹ்யமான பாபத்தொழிற்குக் காரணமாகின்றது. ஸ்ரீநிவாஸனைப் போன்ற சிலர்களிடம், அது மிகவும் கடினமான மனோவ்யாதியை உண்டாக்கி அக்காமத்தை நிலைக்கச் செய்கின்றது. ஜநகத்தின் நற்குணங்கள், ஸ்ரீநிவாஸனுடைய ப்ரதம ப்ரார்த்தனையையும், பின்னேர்ந்த மனோவ்யாதியையும், மர்யாதைகளைக் கடக்காத வழியில் நிறுத்தின. இப்படிப்பட்ட தசையில் கேவலம் பந்து க்ருத்யப்ரயுக்தமாக ஸ்ரீநிவாஸன் ஜநகநந்தினி முதலானோர்க்குச் சொல்லக்கூடிய உபசாரோக்திகளையும் சொல்ல அசக்தனாயிருந்தான்.

திருவடி கோவிலில் தூப்புல் தேசிகனைப் பிரிந்து ஸ்வக்ருஹத்தை நோக்கி ஸ்ரீநிவாஸன் நடந்தான். நடக்கும்போது அம்மான் திருமாளிகையைக் கண்ணுற்றான். அதற்குள் செல்லவேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. உடனே உள்ளே சென்றான். ஓர் தாழ்வாரத்தில் ஜநகநந்தினி உட்கார்ந்திருக்கக் கண்டான். அவள் கையில் புஸ்தகம் ஒன்று அதனுள்ளிட்ட விரலுடன் ப்ரகாசித்தது. அவள் கண்களோ தரையைப் பார்த்துக்கொண்டிருந்தன. அவன் உள்நுழைந்தவுடன் அவள் தலைநிமிர்ந்தாள். இருவரும் ஒருவரை யொருவர் பார்த்தார்கள். துக்கத்தால் ஜநகத்தின் மேனியடைந்த வாட்டத்தை ஸ்ரீநிவாஸன் அப்போது தான் கண்டான்; உடனே திடுக்கிட்டு நின்றான். அவனுக்கு வாயெழவில்லை. அவளும் ஒன்றும் பேசவில்லை.

தன்னுடைய புத்தியைச் சிறிது நிலைப்படுத்திக்கொண்டு ஸ்ரீநிவாஸன் பேச ஆரம்பித்தான்: “ஜநகம்! என்ன புஸ்தகம் உன் கையிலிருக்கின்றது?” என்றனன்.

“ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம்” என்றாள் ஜநகநந்தினீ.

“அதுவும் உனக்குத் தெளிவைத் தரவில்லையோ? தைர்யத்தை இழந்தாய். உன் துக்கத்தால் உனது சரீரம் பட்டபாட்டை அறிவையோ?” என்றான் ஸ்ரீநிவாஸன். ஜநகநந்தினி ப்ரத்யுத்தரம் அளிக்காமல் தரையை நோக்கிக்கொண்டிருந்தாள். “நான் செய்யத் தகாத கார்யம் செய்தேனோ? சொல்லக்கூடாத வார்த்தைகள் சொன்னேனோ? நீ மறந்திருந்த துன்பத்தைத் தூண்டிக் கிளப்பினேனோ? தெரியரமல் நடந்தேன்; என்னை க்ஷமிப்பாய். அம்மா எங்கே?” என்று ஸ்ரீநிவாஸன் சொன்னான்.

“உள்ளே தளிகை பண்ணுகின்றாள்,” என்று ஜநகநந்தினி தலைகுனிந்த வண்ணம் விடை தந்தாள்.

“நான் வந்த வேளை நன்றாயில்லை. பிற்பாடு வருகின்றேன்” என்று சொல்லிவிட்டு ஸ்ரீநிவாஸன் நடந்தான். நடுப்பகலில் அந்த ஸந்நிதி வீதி அவனுக்கு இருள் மூடி நின்றது. “தீராத் துயரத்தால் தபிக்கப்பட்டாள். மநுஷ்யர் எதிர் அவள்வர வெட்கப்படுகின்றாள். காயக்லேசம் செய்கின்றாள், அவள் உடல் இளைத்தது. தன் ஶோகத்தை ஸதா சிந்திக்கின்றாள். துக்கமே அவள் ஹ்ருதயத்தில் நிலைக்கின்றது. அவள் ஸுகார்ஹை. அவளைத் துக்கம் மிகவும் பீடிக்கின்றது. வ்யஸநத்தைப் பரிக்கவும் திறனற்றவள். பூர்ண சந்த்ர முகத்தோடும், வில்லைப்போல் வளைந்து கறுத்த புருவக் கொடியோடும், செந்தாமரைக் கண்களுடனும், கார்மேகம் போன்ற கூந்தலுடனும், கோவைப் பழம்போன்ற உதடுகளுடனும், மெல்லிடையோடும், அழகாயமைந்த ஸர்வாவயவங்களுடனும், ஸ்வர்ணச்சாயையை யொத்த மேனியுடனும், இந்துவின் நிலாவைப்போல் பார்ப்பவர் கண்களைக் குளிரச்செய்யு மிவளைப் பெற்றவர்கள், இவளை வித்யையில் வளர்த்து, ஸர்வகுணங்களோடு கொடுத்து, முடிவில் ஶோகத்துக்குத் தாரை வார்த்தார்களே!” என்று இவ்வண்ணம் எண்ணமிட்டுக் கொண்டே ஸ்ரீநிவாஸன் தன் இல்லம் சென்றனன்.

ஓர் புறம் தேசிகன் உத்ஸவமும், மற்றோர் புறம் நவராத்ரி உத்ஸவமும், சின்ன காஞ்சீபுரவாஸிகளுக்குப் போது போக்காக

வளர்ந்தன. கோவிலுக்குப் போய் வந்துகொண்டும், வீதிகளில் நடந்துகொண்டும், உத்ஸாகத்துடன் யாவரும் உத்ஸவங்கள் அநுபவித்தார்கள். கேசவாசார்யரோ தம்முடைய வ்யஸநத்தைக் காட்டாமல் கைங்கர்ய புத்தியால் உத்ஸவங்களுக்குப் போனார். ஹரிப்ரியைக்கும் ஜநகநந்தினிக்கும் அவ்வளவுமில்லை.

நவராத்ரி முடிந்தது. மறுநாள் தேசிகன் மங்களாஶாஸநத்தின் பொருட்டு வரதன் ஸந்நிதிக்கு எழுந்தருளினார். அன்று காலையில் கேசவாசார்யர் பெண்ணைப் பார்த்து, "குழந்தாய்! இன்று தேசிகன் மங்களாஶாஸநம் நடக்கப்போகின்றது; ஸந்நிதிக்குப் போகின்றையோ?" என்று கேட்டார்.

"நியமித்தால் போகின்றேன். ஆர் என்னை அழைத்துக்கொண்டு போவார்கள்?" என்று ஜநகநந்தினி சொன்னாள்.

"ஏன் அப்படிக் கேட்கின்றாய்? அம்மாவை அழைத்துக்கொண்டுபோ. வாசற்கதவைப் பூட்டிக்கொண்டு போகலாம். தேசிகன் ஸந்நிதி வீதிக்கு எழுந்தருளும் முன்னமே நீங்கள் மலைக்குப் போய்க் கார்த்திருப்பீர்கள். பெருமாளும் தேசிகனும் கீழே எழுந்தருளும்போது நீங்களும் அநுயாத்ரையாகக் கீழே வரலாம். தேசிகன் வாஹந மண்டபம் எழுந்தருளின பிறகு அகத்துக்குப் போவீர்கள். தேசிகன் திருவீதி யலங்கரிக்கும்போது, அகத்து வாசலில் நின்று ஸேவிக்கலாம்." என்று கேசவாசார்யர் சொன்னார்.

பிதாவின் வாக்யத்தைப் பரிபாலநம் செய்யவேண்டுமென்று ஜநகநந்தினி ஸந்நிதிக்குப் போக இசைந்தனள். தேசிகனிடத்திலும் பெருமாளிடத்திலும் குறைவற்ற பக்தியுள்ளவளானாலும் தன்னுடைய நிலையில் வீட்டைவிட்டு வெளியே போக அவளுக்கு ப்ரியமில்லாமல் போய்விட்டது. கூட்டத்தின் மிகுதியை யோசித்தும், போலீஸ் நிர்பந்தங்களை எதிர்பார்த்தும், தேசிகன் ஸந்நிதி வீதிக்கு எழுந்தருளு முன்னமே ஜநகநந்தினியும் அவள் ஜநநியும் மலைக்குப்போய்விட்டார்கள்.

தேசிகன், ஸந்நிதி வீதிமேல் கோடியில் எழுந்தருளும்போதே அவ்வீதி, தேசிக பக்தர்களான ஸ்ரீ வைஷ்ணவ மயமாய்ப் போயினது. அவர்கள் ப்ராயிகமாக விப்ரர்களா யிருந்தபடியால் அது ப்ராஹ்மண மயமாய்ப் போயிற்றென்றும் சொல்லலாம். ப்ரஹ்மண்ய தேவனும் ப்ராஹ்மண ஹிதனுமான புண்டரீகாக்ஷனுக்கு, அப்போது ஸந்நிதிவீதி ப்ரியதர்ஶநமா யிருந்தது. '𑌅𑌸𑍍𑌤𑌿𑌮𑍇𑌹𑌸𑍍𑌤𑌿𑌶𑍈𑌲𑌾𑌗𑍍𑌰𑍇𑌵𑌸𑍍𑌤𑍁 𑌪𑍈𑌤𑌾𑌮𑌹𑌂𑌧𑌨𑌮𑍍' என்கிறபடியே, வரதனைத் தவிரத் தமக்கு அபேக்ஷிதார்த்தம் ஒன்றுமில்லை என்று அத்யவஸித்த பரமாசார்யனுடைய திருவடியை நம்பின விப்ரர்கள், ஸ்ரீ க்ருஷ்ணன் உகந்தபடியே ஸ்வலாப ஸந்துஷ்டர்களாயும், ஸாதுக்களாயும், பூதஸுஹ்ருத்தமர்களாயும், நிரஹங்காரிகளாயும், ஶாந்தர்களாயும் ப்ராயிகமாகப் பரிணமிப்பார்கள். தேசிகன் உத்ஸவார்த்தமாகப் பெருமாள் கோவிலுக்கு வந்தவர்களுக்கு மேல்விவரித்தபடியே ஸந்நிதி வீதியில் ஸேவை ஸாதித்த த்விஜோத்தமர்களுடைய தர்சநமும் ப்ராப்தமாயிற்று.

இவ்வண்ணம், நிகமாந்தார்யனுடைய கோதிலாத் தாள் மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் தீதிலா நல்லோர் திரளை வருஷந்தோறும் தர்சித்து, அந்த ஸதாசார்ய ஸம்பந்தம் ஸ்வாசார்யத்வாரா தமக்குக் கிடைத்த ஸௌக்ருதத்தை மதித்த சிலர், அவ்வுத்ஸவம் மிகவும் பரிமளிக்கும்படி, ஸந்நிதி வீதிக்குத் திவ்யாலங்காரம் செய்து களித்தார்கள். பக்தி க்ருதமான விபவத்தைக் கடாக்ஷித்துக்கொண்டு தேசிகன் கோபுரத்வாரம் எழுந்தருளவும், ஸ்வாமிக்கு நித்யகைங்கர்யம் செய்கின்ற அர்ச்சகர் முதலான பரிஜநங்கள் விலகினார்கள். பேரருளாளன் ஆஜ்ஞா பரிபாலநத்தை ஶிரஸாவஹித்த பெரிய ஸந்நிதியைச் சேர்ந்த அர்ச்சகர் முதலான கிங்கரர்கள் தேசிகனை எதிர்கொண்டு, அவ்விடம் தேசிகனுடைய கைங்கர்யத்தில் அந்வயித்தார்கள். அவ்வண்ணமே, தூப்புல் தேசிகன் திருப்பல்லக்குடன் பெருமாள் ஸந்நிதியைச் சேர்ந்த தேசிகன் ஸந்நிதிக்கு எழுந்தருளினார். அங்கு ஸ்ரீ வைஷ்ணவ விப்ரர்கள் தோள்களுக்கு இனியதோர் கைப்பலகையில் எழுந்தருளப்பண்ணப்பட்டவராய், தேவாதிராஜனுடைய கிங்கரரால் ஸர்வப்ரகாரத்தாலும் உபசரிக்கப்பட்டவராய்த் தொண்டரடிப் பொடிக்குள் எழுந்தருளினார். சக்ரவர்த்தித் திருமகன், தாயார் முதலானவர்களுடைய ஸந்நிதிகளுக்குச் சென்று, அடியார் சேகரித்த உபஹாராதிகளை அங்கங்கே ஸமர்ப்பித்து, ஸ்வக்ருதமான திவ்ய ஸ்தோத்ரங்களை உசிதப்படி ஸ்வபக்தர்கள் படநம் செய்கையில், யதாக்ரமம் மங்களாஶாஸநம் செய்துகொண்டு ப்ரதக்ஷிணமாக எழுந்தருளினார். பிறகு ஸ்தோத்ர படநஸஹிதமாக வைநதேயனையும் ந்ருஸிம்ஹனையும் ஆண்டாளையும் ஸேவித்துக்கொண்டு, ஹஸ்தி

கிரீடனை ஸேவிக்க ஹஸ்திகிரிமீது எழுந்தருளினார்.

பெருமாள் ஸந்நிதி முன் மண்டபத்தின் மத்யே தேசிகன் எழுந்தருளி நின்றார். வடகலை ஸ்ரீ வைஷ்ணவர்கள் தேசிகன் முன்பாக இருபுறமும் கோஷ்டியாக நின்றனர். அம்மண்டபம், பெருமாள் ஸந்நிதி, ஸந்நிதி ப்ரதக்ஷிணம், இவை யாவற்றிலும் தேசிக பக்தர் நிறைந்து நின்றார்கள். அது போலீஸ் உத்யோகஸ்தர்கள் செய்த உபகாரம். கோவிலுக்குள் ப்ரவேசித்த தேசிக பக்தர்களில் நூற்றிலோர் பாகம்கூட மலையின்மேல் அடைவதற்கு இடமிராது.

தேசிகன் எழுந்தருளின உடனே வரதராஜ பஞ்சாஶத் ஸ்தோத்ரம் படிக்கப்பட்டது. பிறகு தேசிகன் கர்ப்ப க்ருஹத்துக்குள் எழுந்தருளி, பெருமாளுடன் ஏகாஸநத்தில் இருப்பதை யொத்து, வரதன் முன்னால் நிவேசிக்கப்பட்டார். தேசிக பக்தர்கள் கொண்டுவந்த விவித விசித்ரங்களான உபஹார வர்க்கங்கள் பெருமாளுக்கு ஸமர்ப்பிக்கப்பட்டன. பெருமாள் அவ்வுபஹாரங்களை ஸ்வீகரித்தவுடன் பெருமாளுக்குக் கற்பூர ஹாரத்தி பண்ணப்பட்டது. பிறகு ந்யாஸ தஶகமும், ந்யாஸவிம்ஶதியின் முடிவான ஶ்லோகமும் தேசிக பக்தர்களால் அத்யாதரத்துடன் படிக்கப்பட்டன. அது நடந்த உடனே தேசிகன் முன்போல் முன் மண்டபத்தில் எழுந்தருளி நின்றார். பெருமாளுடைய திருப்பரியட்டம், திருமாலை, ஸ்ரீ ஶடாரி முதலான ஸர்வமர்யாதைகளும் யதாந்யாயம் தேசிகனுக்குச் செய்யப்பட்டன.

> ‘[illegible]
> [illegible]
> [illegible] ।’

என்று, விபவ தசையில் மஹாதயாதீஶனை அநுபவித்தவண்ணம், நின்றவிடத்தில் நிலைத்துப் பெருமாளைச் சிறிது காலம் அநுபவித்துவிட்டு, ப்ரதக்ஷிணமாக எழுந்தருளித் தம்முடைய ப்ராசார்யனான நடாதூர் அம்மாள் காலக்ஷேப மண்டபத்தில் தேசிகன் வீற்றிருந்தார். அவ்விடம் பக்தஜநங்கள் தேசிகனுடைய இதர ஸ்தோத்ரங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

இதற்குள் பெருமாளும் அலங்காரம் செய்துகொண்டு மலையின் கீழிறங்கத் திருவுள்ளம் பற்றினார். ‘[illegible]’ என்றும், ‘[illegible]’ ‘[illegible]’ என்றும், வேங்கடநாதன் அநுஸந்தித்தபடியைத் தேவாதிராஜன் திருவுள்ளம் பற்றி, ஸந்தர்ப்பாநுகூலமாகக் கோபாலன் திருக்கோலங்கொண்டு ப்ரதக்ஷிணமாக எழுந்தருளினார். எழுந்தருளின பெருமாளைத் தேசிகன் எதிர்கொண்டு ஸமீபத்தில் நின்று, ‘[illegible]’ என்று கோபீஜநங்கள் ஸ்ரீக்ருஷ்ணனுடைய தர்சநத்தை ப்ரார்த்தித்த வண்ணம் நிரந்தரமாக அநுபவித்தார்.

அந்த க்ரமத்திலே பெருமாளும் தேசிகனும்கூடி ஸர்வ ஸேவார்த்திகளுக்கும் அமிதமான ஸந்தோஷத்தை அளித்துக்கொண்டு, அடிமேல் அடியாக மலையிறங்கி, மலை ப்ரதக்ஷிணமாக அபிஷேக மண்டபத்தின் முன் எழுந்தருளினார்கள்.

அங்கே பெருமாள் மண்டபத்தின்மீது நிற்கவும், தேசிகன் பகவானுக்கு எதிர்முகமாகக் கீழே நிற்கவும், ஸேவார்த்திகள் தேசிகனுடைய திவ்யஸூக்திகளால் பெருமாளை ஸ்துதிக்கவும், தர்சிப்பவர்களுடைய மனங் களிக்கச் சில காலம் சென்றது. பிற்பாடு, பெருமாள் உகந்தருளிய மர்யாதைகளைத் தேசிகன் மீண்டுமொருதரம் பெற்றுக்கொண்டு, வரதனைத் தர்சித்துக்கொண்டே தொண்டரடிப்பொடி வாசலுக்காக எழுந்தருளினார். வாத்ஸல்யாதிஶயத்தால் வரதனும் தம்முடைய பக்தனை விட்டுப் பிரிவாற்றாமல், தேசிகன் தர்சநபதத்தில் நிற்கும் வரையில் கடாக்ஷித்துக்கொண்டு நின்றார். பிறகு பெருமாள் மண்டபத்துக்குள் எழுந்தருளினார்.

தேசிகன் பெரிய ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி, ஸுதர்ஶநன் ஸந்நிதியில் ஸுதர்ஶநனையும், அவ்விடம் எழுந்தருளியிருக்கும் ஆழ்வார்களையும், மங்களாசாஸநம் செய்துகொண்டு, பாஷ்யகாரர் ஸந்நிதிக்கு எழுந்தருளி, யதிராஜ ஸப்ததியால் பாஷ்யகாரரை மங்களாசாஸநம் செய்து, அவர் அளித்த மர்யாதைகளைப் பெற்றுக்கொண்டு, வாஹநமண்டபம் எழுந்தருளித் திருப்பல்லக்கில்

மறுபடியும் ஸேவை ஸாதித்தனர்.

பிறகு ஸந்நிதி வீதியிலும் மாடவீதிகளிலும் தேசிகன் விசேஷோத்ஸவம் கண்டருளினார். அவ்வுத்ஸவ விபவத்தை விவரிக்க ஆரம்பித்தால் மிகவும் கதை வளரும். ப்ரஹ்ம தேஜஸ்ஸும் வைதிக ஸ்ரீயும், அந்தப்ரகாரமாக மற்றெக்காலத்திலும் அவ்வூரிலாவது எவ்வூரிலாவது ப்ரகாசிக்கக் காண்பதரிது. அப்படிப்பட்ட விபவம் சிறிதும் குறையாமல் தேசிகன் தூப்புல் ஸந்நிதிக்குத் திரும்பி எழுந்தருளினார். அதற்குள் ஸூர்யனும் அஸ்தமநத்தையடைந்தான்.

ஸ்த்ரீ ஜாதிக்குரிய ஸங்கோசத்துடன் அவ்வுத்ஸவ மஹிமையை எவ்வளவு பர்யந்தம் கண்டு களிக்கக்கூடுமோ, அவ்வளவிற் குறையாமல் ஜநகநந்தினி கண்டு களித்தாள். அவள் உள்ளத்தில் குடிகொண்ட வ்யஸநமும் அன்று மாறுதல் அடைந்தது. பெருமாளுடைய ஸேவையானது அவளுடைய சித்தத்தைக் கவர்ந்தது. தேசிகனுக்கு நடந்த விபவமெல்லாம் அவளுக்கு ஆநந்தப் பெருக்கை விளைத்தது. வாசற்படி தாண்டாமல் அன்றுவரையில் பகவானை ஸேவித்தவள், அன்று ஸந்நிதிக்கு யாவரும் அறியச் சென்றது மன்றித் தேசிகன் திரும்பவும் ஸந்நிதி வீதிக்குள் ப்ரவேசித்தது முதல், க்ருஹத்தின் வெளியில் நின்று உத்ஸவ விபவத்தைக் கண்ணுற்றாள். தேசிகன் வாஹந மண்டபத்துக்கு எழுந்தருளும்போது அவள் தாயுடன் இல்லத்துக்குத் திரும்பி வந்து விட்டாள். ஆதலால் தேசிகன் திருவடி ஸந்நிதியைக் கடந்து மாடவீதி ப்ரவேசம் செய்தருளின பர்யந்தம் பகுகாலம் அவள் வீட்டின் வெளியே நிலைத்து நிற்க அவகாசம் கொடுத்தது. மாடவீதி ப்ரதக்ஷிணமாக உத்ஸவம் கண்டருளித் தேசிகன் மறுபடியும் திருவடி ஸந்நிதியை நெருங்கவும் வ்ரதன் விஜயதசமி பாரிவேட்டைக்காகத் தண்டிகையில் எழுந்தருளி ஸந்நிதி வீதியைக் கடந்தனர். இவ்வண்ணம் பெருமாளும் தேசிகனும் மறுபடியும் கூடினதைத் தர்சித்து, அது தேசிகனிடம் பெருமாள் கொண்ட விசேஷ ப்ரீதியை ஆவிஷ்கரிப்பதாக ஜநகநந்தினி நினைத்தாள்.

பத்ராதிபர்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌹𑌯𑌗𑍍𑌰𑍀𑌵𑌾𑌯 𑌨𑌮𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤 𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃.

ஆர்யாப்யுதயம்.

(தொடர்ச்சி)

[illegible] ।
[illegible] 𑌸 𑌨𑍋 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 [illegible] 𑌹𑌰𑌿𑌃 ॥

தர்மார்த்த காம மோக்ஷங்களாகிற சதுர்வித புருஷார்த்தங்களில் அர்த்த காமங்கள் தர்மஸாதநமாயிருப்பதையன்றி, ஸ்வயம் ப்ரயோஜநமுள்ளவைகள் அல்லவென்றும், அவைகள் தர்மத்துக்கு அங்கமாக இல்லாமல் தனிப்பட்டுத் தலையெடுத்து நின்றால் அநர்த்தத்தையே விளைவிக்கின்றன வென்பதையும், தர்மம் யதாவத் அநுஷ்டிக்கப்பட்டால் அபவர்க்க ஸாதநமாகிற தென்பதையும் லோகத்துக்கு நாம் உபதேசிக்கவேண்டியது இப்போது ப்ராப்தாவஸரம். இதுவரையில் தநமாநத்திலும் பல உர்ப்பத்திலும் இப்படிப்பட்ட உபதேசத்தைக் கவனிக்காமல் இருந்தவர்கள், இப்போது அதை அவதாநத்துடன் கேட்டுப் பர்யாலோசனை செய்ய ஸந்தர்ப்பம் நேர்ந்திருக்கிறது. விஶ்வாமித்ரர் வஸிஷ்டரின் ப்ருஹ்மதண்டத்தினால் ஜயிக்கப்பட்டவுடன் ,𑌧𑌿𑌗𑍍𑌬𑌲𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌬𑌲𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑍇𑌜𑍋 𑌬𑌲𑌂𑌬𑌲𑌂’ என்று சொன்னபடி லோகத்தில் ப்ரபுக்களாயிருந்த பாஶ்சாத்யர்கள் அர்த்தத்தையே பெரிதாக எண்ணிக் கார்யங்கள் செய்து வந்ததன் தீங்கை அறிந்து, ‘அர்த்தத்தைவிடச் சிறந்த புருஷார்த்தம் ஒன்று இருக்கிறது; அதைத்தான் தேடுவது உசிதம் என்று நினைக்க யத்நப்படவேண்டிய அவஶ்யம் நேர்ந்திருக்கிறது. ஆகையால் இதுதான் ஆர்யவித்யையின் ப்ரவசநத்துக்கு முக்யமான ஸமயம். குருக்ஷேத்ர யுத்தாரம்பத்துக்கு முன் கீதோபதேசத்துக்கு அவஸரம் நேர்ந்ததுபோல் இப்போது நடக்கும் பாஶ

சாத்ய யுத்தாவஸாநத்தில் ஆர்யதர்மோபதேஶத்துக்கு யுக்தமான ஸந்தர்ப்பம் நேரும். ஆனால் உபதேஷ்டாக்களா யிருக்கவேண்டிய ஆர்ய ஜநங்களே தர்மஸ்வரூபம் அறிந்துகொள்ள யத்நப்படாமல் சபல புத்திகளாக இந்த்ரியார்த்தங்களையே ப்ரதாநமாக எண்ணி யிருந்தால் வித்யை எப்படி ஓங்கும்? ஜ்ஞாநம் எப்படி லோகத்தில் ப்ரகாஶிக்கும்? ஆர்யாப்யுதயம் ஏற்பட்டால்தான் லோகாப்யுதயம் ஸித்திக்கும். ஏனெனில் ஆர்யர்களால்தான் ஜ்ஞாநம் வெளியாகும். ஜ்ஞாநவலம்பத்தால் தான் லோகம் ஶாஶ்வதமாய் உஜ்ஜீவிக்கும். ஆர்ய பூமியில் ஆர்யவித்யையை வ்ருத்தி செய்வதால்தான் ஆர்யாப்யுதயம் உண்டாகும். ஆகையால் நம் தேசத்தின் அபிவ்ருத்தியையும் லோகத்தின் அபிவ்ருத்தியையும் கருதுகிற யாவத் ஜநங்களும் ஆர்யவித்யையை யதாவத்தாக இந்தத் தேஶத்தில் ஸந்துக்ஷணம் செய்து அது ப்ரசார மடைவதற்கு வேண்டிய ஸாதநங்களைத் தேடவேண்டியது அவஶ்யம். அதுகாரணமாக நமது தேசத்துக்கும் லோகத்துக்கும் ஸர்வப்காரமான ஶ்ரேயஸ்ஸுக்கள் ஶாஶ்வதமாகப் பெருகுமென்பதற்கு ஸந்தேஹமில்லை.

இப்போது ப்ரஸ்தாவிக்கப்படும் ஆர்யவித்யையின் உத்கர்ஷத்தையும் அதற்கும் இதர வித்யைகளுக்குமுள்ள பேதத்தையும் கொஞ்சம் கவனிக்க வேண்டியது அவஶ்யமாகிறது. எந்தக் கார்யம் செய்ய ஆரம்பித்தபோதிலும் உத்தேஶம் ஸாமக்ரீ இவ்விரண்டையும் பரீக்ஷித்துக்கொண்டுதான் ஆரம்பிக்கவேண்டும். அதாவது: எந்த பலத்தை உத்தேசித்து இந்த பத்நம் என்பதையும் எவ்விதமான கருவியைக்கொண்டு அதை ஸாதிப்பதாக முயற்சி என்பதையும் செம்மையாய் அறிந்துகொண்ட பிறகுதான் ஒரு கார்யத்தைச் செய்வது உபயோகப்படும். அதே மாதிரி வித்யையில் ப்ரவ்ருத்திப்பதற்கு முன் வித்யாதிகாரியின் ஸ்வரூபம் என்னவென்றும், வித்யாப்யாஸத்தின் பலமென்னவென்றும் ஸ்பஷ்டமாகத் தெரிந்துகொள்ள வேண்டியது அவஶ்யம். நம்முடைய பெரியோர்களாகிய மஹர்ஷிகளால் ப்ரவ்ருத்திப்பிக்கப்பட்டிருக்கும் ஶாஸ்த்ர ரீதியாக ஶரீரம் ஆத்மா என்னும் இரண்டு தத்வம் மநுஷ்யனிடத்திலிருப்பதாகவும் அதில் ஆத்மா தான் ப்ரபலம், அதுதான் அங்கீ, ஶரீரம் அதற்கு உபஸர்ஜநமென்றும், சரீரத்தைத் தனக்கு ஒரு கருவியாகக் கொண்டு ஆத்மா தனக்கு ஶ்ரேயஸ்கரமான ஸம்ஸ்காரங்களைத் தேடிக்கொள்ள வேண்டியதுதான் ஶரீரத்துக்கு க்ரமமான உபயோகமென்றும், ஶரீரத்துக்கும் ஆத்மாவுக்கும் மநஸ் என்கிற ஸூக்ஷ்மேந்த்ரியத்தின் த்வாரா ஸம்பந்த மிருப்பதாகவும், மநஸ்ஸையும் அதன் மூலமாக ஶரீரத்திலுள்ள ஸர்வேந்த்ரியங்களையும் ஆத்மாவுக்கு வசமாக்கி, அப்படி வசப்பட்ட ஶரீரத்தை உபகரணமாகக்கொண்டு ஆத்மா ஸம்ஸார பந்தத்திலிருந்து முக்தியடையும் மார்க்கத்தைத் தேடுவதற்கு வேண்டிய அம்ஶங்களை ஸாங்கோபாங்கமாய் விஸ்தரித்து ப்ரதர்ஶநம் பண்ணி அநுஷ்டாநத்துக்குக் கொண்டுவருவதுதான் ஸத்வித்யையின் ப்ரதமோத்தேசம் என்றும் தெளிவாகிறது. இதற்காக ஶரீர தத்வம் இன்ன வகையானதென்றும், அது த்ரிகுணாத்மகமான ப்ரக்ருதி பரிணாமமாகையாலும் ப்ரக்ருதி மோஹந ஸ்வபாவமுள்ள தாகையாலும் அதன் வ்யாபாரத்தால் ஜ்ஞாந திரோதாநம் வாராமலிருக்கும்படி செய்ய வேண்டிய முன் ஜாக்ரதையான கார்யங்கள் இன்னின்னவையென்றும், இந்த்ரிய க்ராமத்தை அடக்கி ஆளவேண்டிய ப்ரகாரத்தையும் படிப்படியாய் அநேக ப்ரகாரமாக மஹர்ஷிகள் ஶாஸ்த்ரங்களில் கூறியிருக்கிறார்கள். இவ்விதமான ப்ரக்ரியையின் கந்தமே இதர தேஶத்திய க்ரந்தங்களில் எங்கும் புலப்படவில்லை. அவைகளில் எதிலும் தேஹாத்ம பேதம் விஶதமாகக் கூறப்படவுமில்லை. அப்படிக்குப் பேதமிருப்பதாக ப்ரஸ்தாபிக்கப்பட்டாலும் அது ஏதோ ஸ்தூலமாகக் காதில் விழுந்த ஸமாசாரத்தைச் சொல்வது போல் வ்யக்தியில்லாமல் ஸமூஹாலம்பநமாய்ச் சொல்லப்படுகிறதே யொழிய தத்வவிசார பூர்வகமாய் நிர்ணயம் செய்யப்படவில்லை. ஆகையால் ஆர்யேதரர்களுக்குத் தேஹாத்ம பேதஸ்வரூபம் இன்னதென்று விஶதஜ்ஞாநமில்லையென்றே கண்டிப்பாய்ச் சொல்லலாம். இந்த விவேகம் ஏற்படாததினால் உண்டாகும் அநர்த்தம் கணக்கில்லாதது. தேஹம் அநித்யமென்றும், ஆத்மா நித்யமென்றும், கர்மங்களின் கர்த்தா ஆத்மாவென்றும், தேஹம் உபகரணமென்றும், கர்மங்களில் பல போக்தா ஆத்மா வென்றும் ஒருவனுக்குப் புலப்படாதவரையில் அவனுக்குத் தர்மாதர்ம விவேகம் பிடிபடாமல் தர்மம் செய்யவேண்டிய அவஶ்யமும் பாபத்தை ஒழிக்கவேண்டிய காரணமும் விஶதமாகமாட்டாது.

ஆனால் இதர தேசத்திலிருக்கும் ஜனங்கள் எல்லாரும் பாபமே செய்து வருகிறார்களா? தர்மம் செய்யவில்லையா? என்று கேட்டால், தான் செய்யும் கார்யத்தின் ஸ்வரூபம் தெரியாமலே ஒருவன் அநேக ஸத்க்ருத்யங்களையும் அஸத்க்ருத்யங்களையும் செய்வதை நாம் பார்த்து வருவதுபோல், இதரர்கள் செய்வதைப் பார்த்து அந்த வழக்கத்தை அநுஸரித்தும், அல்லது ராஜ தண்டத்துக்குப் பயந்தும், மதஸங்கேதத்துக்குக் கட்டுப்பட்டும், லோகாபவாதத்துக்கு அஞ்சியும், தாம் இதரர் விஷயத்தில் கெடுதி செய்தால் அவர்களும் தமக்குக் கெடுதி செய்ய நேரிடுமென்கிற பீதியாலும், இதர தேசத்தினர் அநேக விஷயங்களில் வரம்பு கடக்காமல் நடந்து வருகிறார்கள். ஆனால் அப்படிக்கு இருப்பது சரியான அபிஸந்தி பூர்வகமாயில்லாதபடியால் ஆத்மாவின் ஸம்ஸ்காரம் ஸம்பந்தப்பட்டவரையில் அதனால் உபகாரமில்லை. அதுவே ஆத்ம ஸ்வரூபத்தையும் கர்ம ஸ்வரூபத்தையும் தெரிந்து ஸத்கர்மம் செய்வதால் ஆத்மா நைர்மல்யத்தை அடைகிறது; துஷ்கர்மத்தால் அதற்கு மாலிந்ய முண்டாகிறது; ஆகையால் 'ஸத்கர்மத்தைக் கைவிடக்கூடாது, துஷ்கர்மத்தைச் செய்யவேகூடாது' என்கிற அபிஸந்தியுடன் கர்மம் செய்யும் பக்ஷத்தில் அது ஆத்ம சுத்திக்குப் பரமோபகாரமாகும். மேலும் இவ்விதமான விவேகமுள்ளவர்களுக்குக் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பாபவாஸனையே வேரறுந்து போய்விடுவதால் காலக்ரமேண அந்த ப்ரகாரமான ப்ரவ்ருத்தியே இல்லாமல் போய்விடுகிறது.

இவ்விதமான மநோபரிபாக மடைந்தவர்களுக்குத் தர்மாதர்ம ஸம்ஶயம் உண்டாகும் ஸந்தர்ப்பங்களில் இதுதான் க்ரமமென்று மநஸ்ஸுக்கு ஒரு நிச்சயம் ஏற்பட்டுவிடுகிறது. அதைத்தான் '𑌆𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌿𑌰𑍇𑌵𑌚' என்று மநுவும், '𑌸𑍍𑌵𑌸𑍍𑌯𑌚 𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃' என்று யோகி யாஜ்ஞவல்க்யரும், '𑌸𑌤𑌾𑌂𑌹𑌿 𑌸𑌨𑍍𑌦𑍇𑌹 𑌪𑌦𑍇𑌷𑍁 𑌵𑌸𑍍𑌤𑍁𑌷𑍁 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌮𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌯𑌃' (என்று) காளிதாஸ மஹாகவியும் கூறியிருக்கின்றனர். அவ்விதமான நிச்சயம் ஆத்மஜ்ஞான முள்ளவர்களுக்கு மாத்ரம் ஏற்படுமே தவிர, இதரர்கட்கு ஏற்பட ப்ரமேயமே யில்லை. அப்படிக்கு ஆத்மஜ்ஞான மில்லாதவர்கள் ஏதாவது ஒரு பிடிவாதத்தால் தங்களுக்கு ஏற்பட்டதாக ப்ரமித்தபோதிலும் அதன்படி அநுஷ்டானம் பண்ணுவது யுக்தமல்ல.

இம்மாதிரியாக தேஹாத்ம விவேகம் ஏற்பட்டிருக்கும் ஆர்யர்களுக்கும் அது ஏற்படாத இதர ஜனங்களுக்கும் இருக்கும் வித்யாஸங்களைச் சில அம்ஶங்களில் ஶோதித்துப் பார்த்தால் தாரதம்யம் சரியாய்த் தெரியவரும். முதலில் 'எல்லாத் தேசங்களிலும் இருக்கும் ஆத்மா ஏக ரூபமானது. அது ஜ்ஞாநமயம், நிர்துஷ்டம், ஸ்வயம் பாஸமானம், பூர்வ கர்ம வைவித்ய வசத்தால் நாநாவிதமான ஶரீரங்களை எடுத்துக்கொண்டிருக்கிறது' என்கிற ஜ்ஞாநம் சரியாய் உண்டான மாத்ரத்தில் எல்லா பூதங்களிடத்திலும் ஸமத்வ புத்தி உண்டாகிறது. இந்த விவேகமுள்ளவன் ஜீவஹிம்ஸை முதலான ந்ருஶம்ஸ க்ருத்யத்தினின்றும் ஸ்வபாவமாக விலகிவிடுகிறான். அஸத்யவசநம், பரஸ்வாபஹரணம் முதலிய துஷ்கர்மங்களால் ஆத்மநாஶம் உண்டாகிறதென்று தெரிந்துகொண்ட மாத்ரத்தில் தான் நன்மைக்காகவே அந்த பாபங்களை ஒழிக்கிறான். இப்படி விவேகத்தாலல்லது ராஜதண்டத்துக்கும் லோகாபவாதத்துக்கும் பயந்தாவது இதரர்கள் தன் விஷயத்தில் அதேமாதிரி தப்பு செய்யாமலிருக்க வேண்டுமென்கிற எண்ணத்தினாலாவது ஒருவன் கெட்ட கார்யத்தில் ப்ரவேஶிக்காமலிருந்தால் அந்த ஸ்திதி ஶாஶ்வதமாய் நிற்காது. எந்தெந்த ஸந்தர்ப்பங்களில் பிறருக்குத் தெரியாமல் தனக்கு லாபம் தேடிக்கொள்ளக் கூடுமோ அந்தந்த ஸமயங்களில் அவன் பாபம் செய்யப் பின்வாங்க மாட்டான். ஆகையால் ஆர்யர்கள் மாத்ரம்தான் தர்மாதர்மங்களின் ஸ்வரூபத்தையும் பலத்தையு முணர்ந்து விவேகமாகத் தம் அநுஷ்டானத்தைச் சீர்படுத்தி யிருக்கிறார்கள். இதரர்கள் லௌகிகமான பயத்தினாலாவது அல்லது லாபத்துக்காவது கேவலம் ஸங்கேதத்துக்கு உட்பட்டாவது சில கார்யங்களைச் செய்தும் சிலவற்றை ஒழித்தும் வருகிறார்களே தவிர, ஸ்வரூபஜ்ஞானத்தால் அல்ல. அவ்வித ஒழுக்கம் அவர்களில் நித்யமாகக் காணப்படாமல் நைமித்திகமாகவும் ஸாபேக்ஷமாகவுமே இருப்பதே இதற்கு நிதர்சனம். மேலும் மேற்சொன்ன விவேகம் யாருக்கு ஏற்பட்டிருக்கிறதோ அவர்கள் ரஜஸ் தமோ குணங்களை விலக்கி ஸத்வோத்தரர்களாக ஆகிறார்கள். அதனால் அவர்களிடம் ஶாந்தி, க்ஷமை, த்ருப்தி, ப்ரீதி, இவை மேலிட்டும், கோபம், ஆசை, த்வேஷம், முதலியன அடங்கியும் இருப்பதையும் பார்க்கிறோம். மேலும் 'மந்த்ரம்' 'யஜ்ஞம்' என்னும் இரண்டு விஷயங்களும் ஆர்யர்க

ளுக்கு அஸாதாரணமானவை. இதரர்களுக்கு மந்த்ர ஸ்வரூபமாவது மந்த்ர ஶக்தியாவது யஜ்ஞ ஸ்வரூபமாவது கொஞ்சங்கூட தெரியமாட்டாது.

‘𑌮𑌨𑌨𑌾𑌤𑍍𑌤𑍍𑌰𑌾 𑌯𑌤𑍇 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃’ என்று நிர்வசநம் செய்தபடி நிர்த்தேசிக்கப்பட்ட வர்ணக்ரமத்தை மநஸ்ஸில் ஏகாக்ரமாய் ஆவ்ருத்தி செய்தால் குறிப்பிடப்பட்ட பலத்தை ஸாதிக்கும் ஶக்தி அதிலிருந்து உண்டாகிறது என்பதுதான் மந்த்ரத்தின் ப்ரயோஜநம். இதை நம் பெரியோர்கள் ரொம்பவும் நிஶ்சயமாய் அறிந்து எல்லாக் கார்யங்களையும் மந்த்ரத்தாலேயே ஸாதிக்க வல்லவர்களாயிருந்தார்கள். இப்போது தேஹத்துக்கும் புத்திக்கும் அளவில்லாத க்லேஶத்தை உண்டுபண்ணி மஹா ப்ரயத்நம் செய்தும், கைகூடாத அநேக கார்யங்களை மந்த்ர ஶக்தியால் மிகவும் எளிதில் நம் பெரியோர்கள் செய்ய ஸமர்த்தர்களாயிருந்தார்கள் என்பது நிஸ்ஸம்சயமான விஷயம். இன்னமும்கூட மந்த்ரப்ரோயகத்தால் ஆஶ்சர்யப்படும்படியான பலங்களை ப்ரத்யக்ஷமாய்க் காண்கிறோம். இப்போது வ்யாதி முதலிய தேஹோபாதிகளில் மாத்ரம் மந்த்ரம் கொஞ்சம் ப்ரயோகிக்கப்பட்டு வருவதைப் பார்க்கிறோம். முற்காலத்தில் அஸ்த்ரவித்யை முதலியவற்றில்கூட மந்த்ரம் ப்ரசுரமாக உபயோகப்பட்டு வந்திருக்கிறது. இதுதவிர மநோவாக்காயங்களுக்கு சுத்தியை உண்டாக்கி ப்ருஹ்ம வித்யைக்கு ஒருவனைப் பாத்ரமாக்குவதற்கு மந்த்ரம் ரொம்பவும் ஸஹாயம் செய்கிறது. ‘𑌨𑌿𑌷𑍇𑌕𑌾𑌦𑌿 𑌶𑍍𑌮𑌶𑌾𑌨𑌾𑌨𑍍𑌤𑍋 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍈𑌰𑍍𑌯𑌸𑍍𑌯𑍋𑌦𑌿𑌤𑍋 𑌵𑌿𑌧𑌿𑌃’ என்று மநு சொல்லியவாறு கர்ப்பாதாநம் முதல் ப்ரயாணம் வரையில் ஸர்வஸம்ஸ்காரங்களும் த்விஜந்மாவுக்கு மந்த்ர பூர்வகமாகவே நடக்கவேண்டியது. அவ்விதம் ப்ரயோகிக்கப்படும் மந்த்ரங்கள் அந்தந்த ஸந்தர்ப்பத்துக்கு அநுகுணமாக நம்முடைய மநோவாக்காயங்களை ஶோதித்து அவைகளைத் தர்மஸாதநமாகச் செய்வதற்கு உபயோகமாகின்றன. மந்த்ர கதியை நம் முன்னோர்கள் அறிந்த மாதிரி நாமும் அறிந்து யதோக்தமாக நாம் உபயோகப்படுத்தினால் அந்த பலத்தை அவலம்பித்து நாம் பஹுப்ரகாரமான ஶ்ரேயஸ்ஸுக்களைத் தேடிக்கொள்ளலாம்.

யஜ்ஞம் என்பது பூஜை அல்லது ஆராதநம். அது ஶ்ரத்தாபுரஸ்ஸரமாகத் தேவாதிகளை உத்தேசித்துச் செய்யும் க்ரியை. பூஜ்ய வ்யக்திக்கு அநுகுணமாக விதிக்கப்பட்டிருக்கும் த்ரவ்யங்களை ‘[illegible], 𑌨𑌮𑌮’ என்கிற த்யாகாபிஸந்தியுடன் உபசார பூர்வமாய்த் தாநம்பண்ணுவது யஜ்ஞத்துக்கு முக்யாங்கம். அந்த தாநத்தை ஸபலமாக்குவதற்கு அததற்கு அநுகுணமான மந்த்ரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விதமான யஜ்ஞக்ரியையால் தேவதைகள் ப்ரீதர்களாய் நமக்கு ஶ்ரேயஸ்ஸைச் செய்விக்கிறார்கள் என்று ஶாஸ்த்ரம் சொல்வதை நாம் நம்புகிறோம். இது தவிர லோகத்தில் ஒவ்வொரு மநுஷ்யனும் தனிப்பட்டவனல்லன் என்றும், ஸ்ருஷ்டியில் அடங்கிய ஒவ்வொரு வ்யக்தியும் மற்றெல்லா வ்யக்திகளுடன் பல ப்ரகாரமாக ஸம்பத்தமாயிருக்கிறதும் எல்லாரும் ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம். ஆனால் அப்படி ஏற்பட்டிருக்கும் ஸம்பந்தம் எவ்விதமானது? அந்த ஸம்பந்தத்தினால் ஒவ்வொருவருக்கும் என்ன ப்ரயோஜநம்? அதை எப்படி நம்முடைய ஶ்ரேயஸ்ஸுக்கு ஸாதகமாக்கிக் கொள்வது? என்று விசாரிக்குமிடத்து, நம் பெரியோர்கள் ஏற்படுத்தியிருக்கும் யஜ்ஞ ப்ரக்ரியை அம்மாதிரியான ஸம்பந்தத்தை நமக்கு ஸார்த்தமாக்குவதற்கு ஏற்பட்டதென்று தெளிவாகிறது. நித்யமாக விதிக்கப்பட்ட யாகங்களையும் யதாக்ரமமாய்ச் செய்வதால் நாம் ப்ரபஞ்சத்தில் மற்றுமுள்ள எல்லா பூதவர்க்கங்களுடன் ஸம்பந்தமுள்ளவர்கள் என்றும், அவைகள் யாவற்றையும் நம் ஶக்திக்கு இயன்றமட்டும் ப்ரீணநம் பண்ணவேண்டியது நம்முடைய கடமை .யென்றும், நம்முடைய ஜந்மமே அவ்வித பரோபகாரார்த்தம் ஏற்பட்டிருப்பதால் அந்த ஸுக்ருதத்தைச் செய்வதற்கு நமக்கு இது ஒரு பெரிய ஸந்தர்ப்பம் வாய்த்ததேயொழிய வேறில்லை யென்றும் நமக்கு ஸுஸ்பஷ்டமாய் விளங்குகிறது. இந்த ப்ரகாரமாய் ஒவ்வொருவருக்கும் அபிஸந்தி ஏற்பட்டால் அந்த தேசத்துக்கு ஶ்ரேயஸ்ஸும் க்ஷேமமும் வ்ருத்தியும் மேன்மேலும் ஶாஶ்வதமாய் ஓங்குமே தவிர வேறில்லை. தவிரவும் யஜ்ஞத்தின் ஸ்வரூபத்தை ஶோதித்தால் அதை முன் கூறியபடி ஒரு விநிமயாவஸரமாக நாம் நிஶ்சயிக்கலாம். ஶாஸ்த்ரங்களும் பெரியோர்கள் கூறிய அநுபவமும்

அதை உறுதிப்படுத்துகின்றன. நாம் செய்யும் யஜ்ஞத்தால் தேவாதிகள் ப்ரீதர்களாகி நமக்கு க்ஷேமங்களை உண்டாக்குகிறார்களென்பது “ஜெ்ஷவாநு ஸாவயதா2ஜெந” இத்தியாதியாக ஸ்ரீபகவான் கீதையில் சொல்லியிருப்பதாலும் ச்ருதி வாக்யங்களாலும் ஸித்தமாகிறது. முன் கூறியபடி இதுவும் ஆர்யர்களுக்கு அஸாதாரணமான அம்சம்.

இன்னும் பல ப்ரகாரமான தாரதம்யம் தத்வ விவேகமுள்ள ஆர்யர்களுக்கும் இதரர்களுக்கும் இருப்பதால் தத்வஜ்ஞாநம் நமக்கு ப்ரதாநமான தநம் என்பதற்கு ஆக்ஷேபமில்லை. அது இப்போது நம்மிடத்தில் மாந்த்யத்தை அடைந்திருப்பதால் அதைப் புநரபி ஸந்துக்ஷணம் செய்வதால் தான் நமக்கு அப்யுதயம் உண்டாகும் என்பதற்கும் ஸந்தேஹமில்லை.

அதற்கு ப்ரதமோபாயம் என்னவென்றால்:—முன் சொன்னபடி நம்முடைய பாலர்களுக்கெல்லாம் மஹர்ஷிகளின் க்ரந்தங்களை [அதாவது ஸ்ரீமத்ராமாயணாதி இதிஹாஸங்களையும் மந்வாதி ஸம்ருதிகளையும்] நன்றாய்ப் போதிப்பித்து அவைகளின் தாத்பர்யத்தை அவர்கள் உணர்ந்து யாவச்சக்யம் அதற்கு அநுகுணமாக அநுஷ்டிக்கும்படி செய்விப்பதுதான். அம்மாதிரியான ஆர்ஷ க்ரந்தங்களுடைய பாஷையும் பாவமும் பால்யத்திலேயே பரிசயப்பட்டு மநஸ்ஸில் ரூடமூலமாய் விட்டால் அந்த ஸம்ஸ்காரம் நம்முடைய ஆர்ய பாலர்களுக்கு அந்யாத்ருசமான உத்கர்ஷத்தை உண்டாக்கிவிடுமென்பதற்கு ஆக்ஷேபமே கிடையாது. இம்மாதிரியான க்ரந்த ப்ரவசநம் நடந்துவருகையிலேயே பிள்ளைகளுக்கு மநோநியமந ப்ரகாரத்தைக் காண்பித்துக் கொடுத்து, ஜபம், த்யாநம் முதலான அப்யாஸத்தால் சித்தைகாக்ரதையை ஸாதிக்க வழி காட்டவேண்டியது அவச்யம் ‘ஸாயு்ராயாம்ஷு்ாம உவிஶ்வஸ, யொமாதுாயு்ராயஜெவ’ என்று சொல்லியிருக்கிறபடி, மஹர்ஷிகளின் வாக்குகளின் ஸாரத்தைப் புகட்டிக்கொண்டே அதன் அர்த்தத்தை அநுபவஸித்தமாக்கும் மார்க்கத்தையும் கற்பித்துக்கொடுத்து வந்தால் அதி சீக்ரத்தில் ஆர்ய பாலர்களுக்குத் தத்வோந்மேஷமுண்டாய் அவர்களுக்கு ஆர்யத்வம் ஸித்தித்துவிடும். அதற்குப் பிறகு அவரவர்கள் விருத்தி முதலியவற்றிற்கு அநுகூலமான வ்யாபாரங்கள் எதைச் செய்து கொண்டாலும் ஏற்கெனவே ஸித்தித்திருக்கும் ஆர்யத்வத்துக்கு யாதொரு ஹாநியுமில்லாமலே ஐஹிகமான லாபத்துக்கும் ஆமுஷ்மிக ச்ரேயஸ்ஸுக்கும் தகுந்த பாத்ரமாவார்கள். அப்போது தான் ஆர்ய பூமிக்கும் அதில் வஸிக்கும் ஆர்யர்களுக்கும் அப்யுதயம் மேன்மேலும் ஓங்கிவளரும்.

தி. இ. சடகோபாசார்யர்.

ஸ்ரீ:.

வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

	ரூ.	அ.	பை.
1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்)	0	2	0
2. ஸ்ரீ த்ராவிடவேத தாத்பர்யம்—(ஸ்ரீ. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது)	0	2	0
3. ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் சிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யராற் செய்யப்பட்ட உபந்யாஸம்)	0	2	0
4. ஸ்ரீ பாகவத தனிஶ்லோகீ - (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹமாசார்யர்)	0	4	0
5. ஸ்ரீ சதுஶ்லோகீ விவரணம்	0	4	0

இவை வேண்டுமெவர்கள் **சென்னை, மயிலாப்பூர், கேசவப்பெருமாள் ஸந்நிதிவீதியில்** இருக்கும், ஸ்ரீ வேதாந்த தீபிகை **மானேஜருக்கு** எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

ஸாத்விக ராஜஸ அஹங்காரங்கள்.

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் தத்வத்ரயாதிகாரத்திலுள்ள ‘புருடன் மணிவரமாக .... காக்கின்றனே’ என்னும் பாசுரத்தின் வ்யாக்யானத்தில், ‘ஆங்காரங்கள் = அஹங்காரங்கள், சார்ங்கம் சங்காக = தாமஸாஹங்காரம் ஶார்ங்கமும் ஸாத்விகாஹங்காரம் ஶங்கமுமாக வென்றபடி’ என்று ஸ்ரீஸாராஸ்வாதிநீகாரர் அருளிச்செய்திருக்கிறார். ஸாரதீபிகா வ்யாக்யையிலும் இவ்விதமே காணப்படுகிறது. ஸாரப்ரகாஶிகையிலோ ‘ஆங்காரங்கள் சார்ங்கம் சங்காக = 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌾𑌹𑌂𑌕𑌾𑌰 𑌤𑌾𑌮𑌸𑌾𑌹𑌂𑌕𑌾𑌰𑌯𑍋𑌰𑍍𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌂 𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗 𑌶𑌂𑌖𑌰𑍂𑌪𑍇𑌣, 𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑌿𑌂𑌚 𑌦𑍍𑌵𑌿𑌧𑌾𑌹𑌂𑌕𑌾𑌰𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌃 । 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑌿 𑌶𑌂𑌖𑌰𑍂𑌪𑍇𑌣 𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌰𑍂𑌪𑍇𑌣 𑌚 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂, 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍇𑌃’ என்று எழுதப்பட்டிருக்கிறது. ஸாரவிவரணியிலும் இதே அபிப்ராயம் தான் இருக்கிறது. ஸாரப்ரகாஶிகா ஸங்க்ரஹகாரர் ‘ஆங்காரங்கள் ...... = 𑌰𑌾𑌜𑌸 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌾𑌹𑌂𑌕𑌾𑌰𑌯𑍁𑌗𑌳𑌂 𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗 𑌶𑌂𑌖𑌰𑍂𑌪𑍇𑌣’ என்று சொல்லுகிறார். ‘𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑌿𑌂𑌚 𑌦𑍍𑌵𑌿𑌧𑌾𑌹𑌂𑌕𑌾𑌰𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌃’ என்கிற ப்ரமாண ஶ்லோகத்தில், ‘𑌭𑍂𑌤𑌾𑌦𑌿’ என்பது தாமஸாஹங்காரத்தையும், ‘𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑌿’ என்பது ஸாத்விகாஹங்காரத்தையும் குறிப்பிடுகிறது. 𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌃 = பூதங்களின் காரணம்; 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑌿𑌃 = இந்த்ரியங்களின் காரணம். விஷ்ணு புராணத்தில் ‘𑌵𑍈𑌕𑌾𑌰𑌿𑌕𑌸𑍍𑌤𑍈𑌜𑌸𑌶𑍍𑌚 𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌶𑍍𑌚𑍈𑌵 𑌤𑌾𑌮𑌸𑌃 । 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑍋𑌽𑌯𑌮𑌹𑌂𑌕𑌾𑌰𑍋 𑌮𑌹𑌤𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌜𑌾𑌯𑌤’ என்று ஆரம்பித்து, ‘𑌭𑍂𑌤𑌤𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌸𑌰𑍍𑌗𑍋𑌽𑌯𑌮𑌹𑌂𑌕𑌾𑌰𑌾𑌤𑍍𑌤𑍁 𑌤𑌾𑌮𑌸𑌾𑌤𑍍 । 𑌤𑍈𑌜𑌸𑌾𑌨𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍍𑌯𑌾𑌹𑍁𑌰𑍍𑌦𑍇𑌵𑌾 𑌵𑍈𑌕𑌾𑌰𑌿𑌕𑌾 𑌦𑌶 । 𑌏𑌕𑌾𑌦𑌶𑌂 𑌮𑌨𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌰 𑌦𑍇𑌵𑌾 𑌵𑍈𑌕𑌾𑌰𑌿𑌕𑌾𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃’ । என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதில் ‘𑌤𑍈𑌜𑌸𑌾𑌨𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿’ என்று சொல்லியிருப்பதால் தைஜஸமென்கிற ராஜஸாஹங்காரத்தின் கார்யங்கள் தான் இந்த்ரியங்கள் என்றும், ‘𑌦𑍇𑌵𑌾 𑌵𑍈𑌕𑌾𑌰𑌿𑌕𑌾 𑌦𑌶..............’ என்பதற்கு இந்த்ரியாதிஷ்டாதாக்களான, 𑌦𑌿𑌗𑍍𑌵𑌾𑌤𑌾𑌰𑍍𑌕𑌪𑍍𑌰𑌚𑍇𑌤𑍋𑌽𑌶𑍍𑌵𑌿 𑌵𑌹𑍍𑌨𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑍋𑌪𑍇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌮𑌿𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿 எனும் பத்து தேவர்களும், 𑌮𑌨𑍋𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌹𑌂𑌕𑌾𑌰 𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌤𑍍𑌮 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧மான அந்த꞉கரணத்திற்கு அதிஷ்டாதாக்களான சந்த்ர ப்ருஹ்ம ருத்ர க்ஷேத்ரஜ்ஞ என்கிற தேவர்களும், 𑌵𑍈𑌕𑌾𑌰𑌿𑌕𑌾𑌃 = ஸாத்விகாஹங்கார ஜாதர்கள் என்று அர்த்தமென்றும் சிலர் சொல்லுகிறார்கள். ‘𑌤𑍈𑌜𑌸𑌾𑌨𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍍𑌯𑌾𑌹𑍁𑌃’ என்று ‘𑌆𑌹𑍁𑌃’ என்னும் பதத்தால் பரமதத்தை உபந்யஸித்து விட்டு, ‘𑌦𑍇𑌵𑌾 𑌵𑍈𑌕𑌾𑌰𑌿𑌕𑌾 𑌦𑌶’ என்று ஸாத்விகாஹங்கார கார்யங்கள் இந்த்ரியங்கள் என்னும் ஸ்வாபிப்ராயத்தை பராஶர மஹர்ஷி வெளியிட்டார். ‘𑌦𑍇𑌵𑌾𑌃’ என்பதற்கு இந்த்ரியங்கள் என்று அர்த்தம். ஆகையால், ராஜஸாஹங்கார கார்யங்கள் இந்த்ரியங்கள் என்னும் பக்ஷம் ஸரியல்லவென்று ஸ்ரீபாஷ்யகாரர் வேதார்த்த ஸங்க்ரஹத்தில் அநுக்ரஹித்திருக்கிறார். பூர்வ பக்ஷத்தில் சொன்னபடி, இந்த்ரியங்கள் ராஜஸாஹங்கார கார்யங்கள் என்று நினைத்து, தந்மூலம் ‘𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌂......’ என்கிற ப்ரமாணத்தில் ‘𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑌿𑌂’ என்பதற்கு ராஜஸாஹங்காரமென்று அர்த்தம் செய்துகொண்டு பூர்ண ஸரஸ்வதி என்பவர், ஸ்ரீ ஶங்கராசார்யருடைய விஷ்ணு பாதாதி கேஶாந்த ஸ்தோத்ரத்தின் வ்யாக்யானத்தில் ‘[illegible] 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁[illegible] [illegible], 𑌇𑌤𑌿 𑌵𑌚𑌨𑌾𑌚𑍍 [illegible] [illegible] [illegible] [illegible], 𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌰𑌾𑌜𑌸𑌾𑌹𑌂𑌕𑌾𑌰 [illegible] 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑌿𑌂 𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗[illegible]

ஜ்ஞாந கர்மேந்த்ரிய வ்யவஸாதந ஸமர்த்தம் தைஜஸமாஹ' என்று மூன்றாவது ஶ்லோகத்தின் அவதாரிகையில் எழுதுகிறார். இவரே, 'பூதாதிஸ்து தாமஸ:' என்று ஸ்வயமேவ வ்யாக்யாநம் செய்யப்பட்டிருப்பதால் ஸம்ஶயம் வர இடமில்லாமையால் 'பூதாதி' பதத்திற்குத் தாமஸாஹங்காரம் என்கிற அர்த்தத்தை ஸ்வீகரித்துக்கொண்டு, 'நநு - தாமஸாஹங்கார பூர்வத்வ (ஸம்பவஸ்ய) கதம் ஸித்தவத்க்ருத்ய? காரணகுணா: கார்யகுணாநாரபந்தே இதி ந்யாயாத் காரணஸ்யைவ வக்தவ்யம்; 'அஜாமேகாம் லோஹித ஶுக்ல க்ருஷ்ணாம்' இதி தத் ஸத் க்ருஷ்ண வர்ணத்வ ப்ரதிபாதநாச்ச, ஸத்யம், ததாபி பூர்வாபரஸந்தர்பாநுரோதேந தாமஸாஹங்காரஸ்ய வாஸநாப்ராப்தே, நீலத்வம் - ஸத்த்வ ப்ரஸக்தமேவ தர்ஶயதி' என்று முதல் ஶ்லோக வ்யாக்யாநத்தில் எழுதியிருக்கிறார். எந்த பக்ஷத்திலும் ஶங்கம் தாமஸாஹங்கார ரூபம் என்பதற்குத் தடையில்லை.

'ஸாத்த்விகோऽஹங்காரோ ஜீவந ஸம்ரம்ப லக்ஷணோऽயம் | ஸம்பேதாதஸ்ய ஸதோ விஷயோ வ்யவஹாரயோக்யதாமேதி || ஸாத்த்விக ராஜஸ தாமஸ பேதாத் ஸஞ்ஜாயதே ச த்ரேதா | ஸ ச தைஜஸ வைகாரிக பூதாதிக நாமபி: ஸமுபலஸதி || தைஜஸதஸ்து மநோ வைகாரிகதோ பவந்தி சாக்ஷாணி | பூதாதேஸ்தந்மாத்ராண்யேஷாம் ஸமுதாய ஏதத்ஸ்யாத்' என்று போஜராஜன் சொல்லியிருப்பதில் ஶைவாகம மூலகங்களான விருத்தாம்ஶங்கள் உபேக்ஷிக்கப்பட வேண்டியவைகளே என்று ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் அருளிச்செய்திருக்கிறார். முன் விவரித்த வேதார்த்த ஸங்க்ரஹத்தை அநுஸரித்துத்தான் நமது தேஶிகன் ஸோऽபி '(அஹங்கார:) ஸத்த்வாத்யைஸ்த்ரிவித: - ததிஹ ஸாத்த்விகாதிந்த்ரியாணி தாமஸாத் பூததந்மாத்ரம் - ராஜஸ உபயாத்ம ஸஹாயக:' என்று ஸ்ரீ ந்யாய ஸித்தாஞ்ஜநத்திலும், 'இவ்வஹங்காரமும் தனக்குக் காரணமான மஹான்போலே யவ்வடைவே மூன்றுபடியா யிருக்கும். அதில் ஸாத்விகாஹங்காரம் வைகாரிக மென்றும், ராஜஸாஹங்காரம் தைஜஸ மென்றும், தாமஸாஹங்காரம் பூதாதி என்றும் பேர் பெற்றிருக்கும். இவற்றில் இந்த்ரியாதியாயும் பூதாதியாயுமுள்ள அஹங்காரங்களுக்கு ராஜஸாஹங்காரம் ப்ரவர்த்தகமாய்க்கொண்டு ஸஹகாரியாம். ஸாத்விகாஹங்காரத்தினின்றும் பிறந்த த்ரவ்யம் இந்த்ரியம்', என்று

தத்வத்ரய சுளகத்திலும் அநுக்ரஹித்திருக்கிறார். இந்த விஷயம் ஸ்ரீ பிள்ளை லோகாசார்யருடைய தத்வத்ரயத்திலும், அதன் வ்யாக்யாநத்திலும், ஸ்ரீ நைநாராசார்யருடைய தத்வத்ரய சுளக ஸங்க்ரஹத்திலும் பரக்கக் காணலாம். ததா ச 'க்ஷராக்ஷரமயோ விஷ்ணுர்பிபர்த்யகிலமீஶ்வர: - புருஷாவ்யாக்ருதமயம் பூஷணாஸ்த்ரஸ்வரூபவத் - ஆத்மாநமஸ்ய ஜகதோ நிர்லேபமகுணாமலம் - பிபர்த்தி கௌஸ்துபமணிஸ்வரூபம் பகவாந் ஹரி: - ஸ்ரீவத்ஸஸம்ஸ்தாநதரமநந்தே ச ஸமாஶ்ரிதம் - ப்ரதாநம் புத்திரப்யாஸ்தே கதாரூபேண மாதவே - பூதாதிமிந்த்ரியாதிஞ்ச த்விதாஹங்காரமீஶ்வர: - பிபர்த்தி ஶங்கரூபேண ஶார்ங்கரூபேண ச ஸ்திதம் - சலஸ்வரூபமத்யந்தஜவேநாந்தரிதாநிலம். சக்ரஸ்வரூபஞ்ச மநோ தத்தே விஷ்ணு: கரே ஸ்திதம் - பஞ்சரூபா து யா மாலா வைஜயந்தீ கதாப்ருத: - ஸா பூதஹேதுஸங்காதா பூதமாலா ச வை த்விஜ - யாநீந்த்ரியாண்யஶேஷாணி புத்திகர்மாத்மகாநி வை - ஶரரூபாண்யஶேஷாணி தாநி தத்தே ஜநார்தந: - பிபர்த்தி யச்சாஸிரத்நமச்யுதோऽத்யந்தநிர்மலம். வித்யாமயந்து தஜ்ஜ்ஞாநமவித்யாகோஶஸம்ஸ்திதம்' என்றுள்ள அஸ்த்ர பூஷணாத்யாய வசநத்தால் முன் விவரித்த ப்ரகாரம் ஸாத்வி

காஹங்காரம் ஶார்ங்க மென்றும் தாமஸாஹங்காரம் ஶங்க மென்றும் ஏற்படுகிறபடியால் தத்ஸாரியான ‘புருடன்மணி வரமாக’ என்கிற பாசுரத்திலும், இதேமாதிரி வ்யாக்யாநம் செய்ய வேண்டியது ந்யாயப்ராப்தம். ‘𑌯𑌂 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌮𑌹𑌂𑌕𑌾𑌰𑌂 𑌮𑌨𑌶𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌸𑌾𑌯𑌕𑌂 । 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌸𑍍𑌯 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌧𑌨𑍍𑌵𑌨𑌃’ என்று 𑌷𑍋𑌡𑌶𑌾𑌯𑍁𑌧𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰த்திலும், ‘𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌂 𑌉𑌭𑌯𑌵𑌿𑌧 𑌮𑌨𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵 𑌤𑌾𑌮𑌸𑌾𑌹𑌂𑌕𑌾𑌰𑌸𑌂𑌭𑍂𑌤𑌾𑌨𑍍 𑌪𑌾𑌞𑍍𑌚𑌜𑌨𑍍𑌯𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌾𑌹𑌂𑌕𑌾𑌰𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑍇 𑌚 𑌨 𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌃’ என்று ‘𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌶𑌙𑍍𑌖𑌾𑌸𑌿 𑌗𑌦𑌾 𑌰𑌥𑌾𑌙𑍍𑌗𑌵𑌰𑍈𑌃’ என்கிற ஸ்தோத்ரரத்நத்தின் வ்யாக்யாநத்திலும் ஸ்ரீதேஶிகன் ஶார்ங்கத்தை ஸாத்விகாஹங்காரமாக அநுக்ரஹித்திருக்கிறார். விஷய மிப்படியிருக்க: ஸர்வஜ்ஞான ஸாக்ஷாத் ஸ்வாமி ஸாரஸ்வாதிநியில் தாமஸாஹங்காரம் ஶார்ங்கம், ஸாத்விகாஹங்காரம் ஶங்கமென்று வ்யாக்யாநிக்கக் காரணம் என்ன? பழைய ஓலைப் புஸ்தகங்களிலும் பாடமிப்படியே இருப்பதாகத் தெரியவருகிறபடியாலும், மைஸூர் தெலுங்கு அச்சுப் புஸ்தகத்திலும் திருக்குடந்தை தமிழ் அச்சுப் புஸ்தகத்திலும் ஒரேமாதிரி காணப்படுகிறபடியாலும், இது கேவலம் ஶோதகப்ரமாதாபதிதமென்று நினைக்க முடியவில்லை. மேலும் ஸாரப்ரகாஶிகா ஸங்க்ரஹகாரர், ஸாரப்ரகாஶிகா விருத்தமாய் ‘ராஜஸ ஸாத்விகாஹங்காரயோ𑌃 𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌶𑌙𑍍𑌖𑌰𑍂𑌪𑍇𑌣’ என்று வ்யாக்யாநம் செய்ய ஹேதுவென்ன? இந்த ஸம்ஶயத்தை ஸத்ஸம்ப்ரதாய நிஷ்டர்களான மஹான்கள் நமது வேதாந்ததீபிகை மூலமாய் ப்ரமாணோபந்யாஸ புரஸ்ஸரம் நிவர்த்திப்பித்து அடியேனை அநுக்ரஹிக்க வேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

ரிரயம்பேட்டை க்ருஷ்ணமாசார்யன்.

ஸ்ரீ:

கடிதங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃.

(1)

ஓர் விண்ணப்பம்.

* * *

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

ஸ்ரீ வாணீவிலாஸ முத்ராக்ஷரஶாலையில் வித்யாநிதி ஸ்வாமியால் ப்ரகாஶிதமான பாஷ்ய ஸநாதமான கத்யத்ரயத்தின் பூமிகையில் [ஸ்ரீ. உ. அபிநவ பட்டபாண ஶப்த தர்க்காலங்கார வித்யாபூஷண ராயம்பேட்டை சக்ரவர்த்தி க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியால் எழுதப்பட்டதில்] 3-வது பக்கத்தில் “𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌦𑍍𑌵𑍈𑌤𑌿𑌨𑍋 𑌨𑌾𑌮𑌾𑌪𑌿 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌶𑍇𑌷𑌸𑍍𑌯𑌾𑌵𑌤𑌾𑌰 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌨 𑌰𑌾𑌮𑌾𑌵𑌤𑌿𑌸𑍍𑌤𑍁 𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌯 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑌃” என்று காணப்படுவது மல்லாமல், புட்நோட்டில் (foot-note) ‘𑌵𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌸𑍇𑌨𑌾𑌵𑌤𑌾𑌰𑌃, 𑌪𑌞𑍍𑌚𑌾𑌯𑍁𑌧𑌾𑌵𑌤𑌾𑌰 𑌇𑌤𑌿 𑌕𑍇𑌚𑌿𑌤𑍍, 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌾𑌵𑌤𑌾𑌰 𑌇𑌤𑍍𑌯𑌨𑍍𑌯𑍇’ என்று சேர்க்கப்பட்டும் இருக்கிறது. வஸ்துதஸ்து ஶேஷாவதாரமென்னும் ப்ரகட்டகத்திற்குப் பூர்வாசார்ய திவ்யஸூக்திகளில் ஆதாரமே இல்லை. வேங்கடாத்வரி யன்றோ முதலில் ‘𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌮𑍁𑌨𑌯𑍇 𑌨𑌮𑍋𑌽𑌶𑍇𑌷𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 𑌶𑍇𑌷𑌾𑌯’ என்று வ்யவஹரிக்கிறார். மற்றும் சில அர்வாசீநர் அவரை அநுஸரிக்கிறார்கள்.

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேஶிகனே ‘𑌪𑍍𑌰𑌥𑌯𑌨𑍍𑌵𑌿𑌮𑌤𑍇𑌷𑍁 𑌤𑍀𑌕𑍍𑌷𑍍𑌣𑌭𑌾𑌵𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑌸𑍍𑌮𑌤𑍍𑌪𑌰𑌿𑌰𑌕𑍍𑌷𑌣𑍇 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 । 𑌅𑌪𑍃𑌥𑌕𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌨𑍍𑌨𑌯𑌨𑍍𑌮𑌯𑌤𑍍𑌵𑍈𑌰𑍍𑌵𑌵𑍃𑌧𑍇 𑌪𑌞𑍍𑌚𑌭𑌿𑌰𑌾𑌯𑍁𑌧𑍈𑌰𑍍𑌮𑍁𑌰𑌾𑌰𑍇𑌃’ என்று ஸ்ரீ பாஷ்யகாரரின் பஞ்சாயுதாம்ஶத்தையும், ‘𑌨𑌾𑌨𑌾𑌭𑍂𑌤𑍈𑌰𑍍𑌜𑌗𑌤𑌿 𑌸𑌮𑌯𑍇 𑌨𑌨𑍍𑌤𑍁𑌭𑍂𑌤𑍈𑌃 𑌵𑌿𑌪𑌕𑍍𑌷𑍈𑌰𑍍𑌦𑍁𑌰𑍍𑌧𑌰𑌂 𑌖𑌣𑍍𑌡𑌂 𑌪𑍍𑌰𑌹𑌿𑌣𑍋𑌤𑍀 𑌵𑌿

[illegible] ' என்று விஷ்வக்ஸேநாவதாரத்தையும் '[illegible]' என்று பகவதவதாரத்தையுமே அங்கீகரிக்கிறார்.

மேலும் பாஷ்ய காரர் விபவதசையிலேயே வாஸ்தவமாய் அங்கீகரித்த திருவரங்கத்தமுதனாரால் அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீ ராமாநுச நூற்றந்தாதியிலும் பஞ்சாயுத மஹாவதாரமே ப்ரஸ்துதமாக இருப்பதே யல்லால் ஶேஷாவதார கதையே யில்லை என்று பெரியோரின் கொள்கை.

[illegible]கையில் அடியேனார் [திருவஹீந்த்ரபுரம்] பகவத்விஷய ஸ்வாமியாலும் இவ்விஷயம் சர்ச்சிக்கப்பட்டிருக்கிறது.

இப்படி தேசிகன் அமுதனார் இவர்கள் கொள்கையை [illegible] ' அர்வாசீநர்களின் கொள்கையை எடுத்துக்கொள்வது உசிதமாகுமோ ? [illegible] ஜநஸம்வாதத்தில் அஸ்தாந கௌரவாரோபணம் செய்து '[illegible]' என்று தேசிக வ்யவஹ்ருதி பொருந்துமோ ?

மேலும் தேசிகன் ஒருவரே விஷ்வக்ஸேந பஞ்சாயுத லக்ஷ்மீபத்யவதாரங்களை யங்கீகரிக்கின்றனர். [illegible] புட்நோட்டில் '[illegible]' என்னுமிடத்தில் புருஷத்வயம் ப்ரஸ்துதமானாற்போல் வ்யஸ்தமாய் '[illegible], [illegible]' என்று இரண்டு ஶப்த ப்ரயோக ப்ரயோஜநம் யாதோ ?

மேலும் அதே பூமிகையில் அடுத்த நாலாவது பக்கத்தில் '[illegible]' என்று ஆரம்பித்து ஓர் பாராவில் அவ்விஷயம் சர்ச்சிக்கப்பட்டிருக்கிறது.

பக்ஷபாதமின்றி பழக்கப்பட்டவர்கட்கு இதுவும் '[illegible]

[illegible] ' என்னும் ராமாயண பத்ய வ்யாக்யாநத்தில் '[illegible]' என்னும் கோவிந்தராஜீய விவரணத்தை யொத்தே ஸ்ரீ வைஷ்ணவர்கட்கு முதாக்ரஹம் அதிகமென்னும் ப்ரமத்தை யுண்டுபண்ணுகிறது. '[illegible]' பட்டபாண ஸ்வாமியால் ஶாங்கர க்ரந்த பரிஶீலநத்தாற் செய்யப்பட்டதோ, அன்றிக்கே அத்வைத பாஷ்யகார சரித்ரத்தின் பராமர்ஶத்தால் அவருக்கு உதித்ததோ ?

இதற்கெல்லாம் ஸ்ரீ தீபிகாத்வாரா ஸமாதாநம் க்ருபை செய்யுமாறு தீபிகாபிமாநிகளையும் விசேஷத: ஸ்ரீ பட்டபாண ஸூரியையுமே ப்ரார்த்திக்கிறேன்.

𑌇𑌤𑌿 𑌶𑌂

𑌦𑌾𑌸𑌃

தி. வெ. ர. [illegible],

[[illegible].]

(2)

ஓர் விஜ்ஞாபநம்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு :—

ஸ்ரீ உ.ப. அபிநவ பட்டபாண ஶப்த தர்க்காலங்கார வித்யாபூஷண ராயம்பேட்டை சக்ரவர்த்தி க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியால் நாகராக்ஷரங்களில் அச்சிடப்பட்ட ஸ்தோத்ரஜால ஸ்ரீகோஶத்தில் ந்யாஸதஶகத்தில் மூன்றாவது ஶ்லோகமாகிய '𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍍 𑌸𑍍𑌵𑌶𑍇𑌷' மென்பது ப்ராசீநாநுஸந்தாந க்ரமாகதமாயும் ஸ்ரீ பாஷ்யம் ஸ்ரீநிவாஸாசார்யராலும் அப்படியே வ்யாக்யாதமுமான ஶ்லோகம் '𑌸𑍍𑌵𑌾𑌮𑍀 𑌸𑍍𑌵𑌶𑍇𑌷𑌂' என்று மாற்றப்பட்டிருக்கிறது. இந்தத் திவ்யஸூக்தியில் பூர்வாபர ஶ்லோகங்களைப் பார்க்கும்போது முன்னிலையில் பகவானை அர்த்திப்பதாக இருக்கிறது. அதாவது:

' ந்யஸ்யாமி கிஞ்சந ஸ்ரீதே ' என்றும், அடுத்த ஶ்லோகத்தில் ' ஸ்ரீதேஜோ ஹீஷ்டவாஸு ' என்றும் மற்றெல்லா ஶ்லோகங்களிலும் முன்னிலையாகவே நிர்த்தேஶித்திருக்கிறது. ஆனாலும் இந்த ஸ்தோத்ரத்தின் கடைசி ஶ்லோகத்தில் ' ஸ்ரீர்ஜ்ஞியத ' வென்றும் ' ஸ்வீகுருஷ்வ ' மென்றும் வ்யாக்யாதாவினால் வழங்கிவரும் பாடத்தை இந்த ஸ்வாமி ' ஸ்ரீர்ஜ்ஞாயத ' வென்றும் ' ஸ்வீகரோதி ' என்றும் மாற்றியிருக்கிறாரே யொழிய மற்ற எல்லா ஶ்லோகங்களும் முன்னிலை நிர்த்தேஶ முடையனவே. ஆனால் இந்த ஶ்லோகத்தை ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ' ஸ்வாதீஸ்வஸேஷ ' மென்று எடுக்கிறார். அதைக் கொண்டு இந்த ஸ்தோத்ரத்தில் இப்படியே பாடமென்று பூர்வாபர ஸந்தர்ப்ப விரோதமாகுமாறு மாற்ற இடமில்லை. அப்படி தாம் ஓரிடத்தில் அருளிச்செய்திருப்பதை எடுத்துக் காட்டுவதாக இருந்தால் ' என்று ந்யாஸ திலகத்தில் சொன்னோம் ' இத்யாதிகளைப்போலே ' ந்யாஸதஶகத்திற் சொன்னோம் ' என்றிருப்பர். அப்படிக்குக் காணோம். மேலும் ரகுவீரகத்யாதிகளைத் தாமே யருளிச்செய்த ஸங்கல்ப ஸூர்யோதயாதிகளில் பத விபக்த்யாதிகளை மாற்றி யருளிச்செய்திருப்பதையும் காண்கிறோம். அப்படியே ப்ரக்ருத விஷயத்திலும் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் அருளிச்செய்திருக்கலாமென்றே தோன்றுகிறது. ஆதலால் இதனாலே ஸந்தர்ப்ப விரோதமும், வ்யாக்யாதாக்களால் அங்கீக்ருதமானவுமான பாடத்தின் அங்கீகார ஹேது ஸ்புடமாக வில்லை.

மேலும் அதே கோஶத்தில் வைராக்ய பஞ்சகத்தில் ' க்ஷோணீகோண ' என்கிற ஶ்லோகத்தை முதலாகவும் ' விதக்த ' என்கிறதை அதற்குப் பின்னரும் அச்சிட்டிருக்கிறார். இது தாக்ஷிணாத்ய லிபி கோஶங்களின் சீர்பாடு. வைபவப்ரகாஶிகையிலோ மஹாசார்யர் ' விதக்தஸ்த்ரீ ' [40-வது ஶ்லோகம்] என்னுமிடத்தில் க்ரமாந்தரத்தை அங்கீகரிக்கிறார். பர்யாலோசனையும் அதையே ஸமுசித க்ரமமாக எண்பிக்கிறது. ஏனெனில்: முதலில் யதாஸ்வாஸ்தேத்ர ஸ்துதிபூர்வகமான இந்த பத்யமே இருந்து பின்னர் யதாத்ருஷே யாத்ர ஹஸவத்ருஷ விஶேஷ சேர்ந்த மிகுதியான பத்யங்கள் வருவது உசிதமென்று தோன்றுகிறது. கத்யத்ரய பூமிகையில் பட்டபாண ஸ்வாமியே அப்படி அபிப்ராயப்படுகிறார். யதா

தத்ஸ்வ ஸம்ப்ரதாயஸ்ய ஸௌராஷ்ட்ர ஸம்ஸ்க த்ரிவ்ய வர்த்தஸ: ' தத்ராய ஸாஜி ஶ்லோக: விதக்த ஜநக த்ரிதக்ஷ ' இதில் எது ஸரி ? இரண்டும் ஸரியாயிருந்தால் அவைகட்குள் ஸங்கதி எப்படி ?

மேலும் அதே ஸ்ரீகோஶத்தில் ஶரணாகதி தீபிகையில் 11 - வது ஶ்லோகத்தில் ' ஸௌமித்ரி ஸங்கத ', என்னும் மிடத்தில் ' ஸாம்ஸாரிகா ஸம்பந்த விஶேஷண ஸௌமஸ்ராயீ, விஸ்ருஷ்டே ஸ்ராமஸ்ராயீ ' என்று பாடாந்தரங்களிருக்கின்றன. ஸௌமஸ்ராயீ என்பது ஸத்ராடி என்பதற்கு விசேஷணமா ? ஸ்வம் என்பதற்கா ? ஸாத்ராஸ்ஸுக்கென்றால் பகவானே ஸத்ராடி என்கிற பதத்திற்கு அர்த்தமாக வேண்டாவோ ? அப்போது உபமானோபமேய பாவம் எப்படி பொருந்தும் ? பொருந்தினாலும் பூர்வார்த்த ஸ்வாரஸ்ய மென்ன ? ஸ்வம் என்பதற்கு விஶேஷணமானால் ஸந்ராந்யதோஷம் ஸம்பவிக்காதோ ? தோஷங்களில்லாமல் பாடாந்தர பக்ஷங்களில் அர்த்த ஸ்வாரஸ்யம் யாதோ ?

இந்த ஸம்ஶயங்களுக்குத் தீபிகையைப் படிக்கும் மஹான்கள் ஸமாதானம் அருளிச்செய்து அடியேனை நிரஸ்த ஸம்ஶயனுக்குமாறு ப்ரார்த்திக்கிறேன்.

தாஸ:

நாராயணஶர்மா,

ஸ்ரீமதஹீந்த்ர பாடசாலா வித்யார்த்தியோன்.

---

(3)

ஓர் விண்ணப்பம்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

ஸ்ரீ. உ.ப. வங்கீபுரம் வேதாந்த ராமாநுஜாசார்யர் ஸ்வாமியால் ப்ரகாஶிதமான ஸ்ரீ மந்நிகமாந்த மஹாதேசிகாநுக்ருஹீதமான ஸ்தோத்ர ஜாலங்கள் அடங்கிய ஸ்ரீகோஶம் இப்போது நம் ஹஸ்தபுடங்களை யலங்கரிக்கிறது. தாக்ஷிணாத்ய ஸம்ஸ்க்ருதாக்ஷரங்களில் முத்ரித பூர்வமான ஸ்தோத்ர ஜாலப்ரதி ஜரண தசையிலிருக்கும்போது ஸம்ஸ்காரணந்தராவ தாரக

ரான அந்த ஸ்வாமியின் பக்கல் அதிகம் க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் செய்கிறோம்.

ஆனால் அந்த கோஶத்தின்கடைசியில் ‘[illegible]’ என்றோர் அநாகலித பூர்வமான ஸ்துதி காணப்படுகிறது. அது வீரராகவன் விஷயமாக இருக்கிறது. அவ்வீக்ஷாரண்ய நாதனிடத்தில் அதிக பக்திமான்கள் சிலர் தேசிகன் அவரை துதிக்கவில்லையே என்று தூயமாநாந்தராத்மாக்களாகவிருந்தனர். அந்த நிர்வேதத்திற்கு இப்போது அவகாஶமில்லாவண்ணம் ஸ்ரீ வங்கீபுரம் ஸ்வாமி உத்யோகம் செய்திருக்கிறார். இத்துதியோ ஏதத்கால பர்யந்தம் யாவருக்கும் தெரியாது. ஸ்ரீ கோஶங்களில் அதைக் காணோம். துதிக்கப்பட்ட ஸந்நிதியிலும் அநுஸந்திக்கப்பட்டதாக ஏற்படவில்லை. ஆனால் இதம் ப்ரதமமாக இதகப்பட்டதாகவே வைத்துக்கொள்ள வேண்டும்.

இதைப்பற்றி சற்று ஆந்தர விமர்சம் பின்னர் செய்வோம். ப்ரகாஶகரே அது தேசிக திவ்யஸூக்தி என்று ப்ரகடநம் செய்தும் அதை வரத தேசிகன் முதலியவர்கள் திவ்யஸூக்திக்கு அப்பால் முத்ரணம் செய்வித்திருக்கிறார். கிங்க்ருஹ ஶப்தத்திற்கு எவ்வீடோ என்பதல்லவோ பொருளாகும்? ஆனால் ஸ்தலபுராண வ்யவஹ்ருதி அப்படியே என்றாலோ [illegible]. அத்துதியில் ஓர் க்ரமமும் இல்லவேயில்லை. நான்கு பத்யங்கள் பரோக்ஷத்திலும், நடுவில் ஓர் பத்யம் முன்னிலையிலும் [illegible] பரோக்ஷத்திலும் இப்படி எவ்விதமான க்ரமமுமில்லாமலிருக்கிறது.

தவிரவும் ஓர் பத்யத்தில் ‘[illegible]’ என்று ஆரம்பமிருக்கிறது. ஹந்த! தேஶிகனா இப்படி காம்ய கர்மாவை ப்ரஸ்தாவிப்பர்? ஆசார்யன் அப்படி வேறிடத்தில் சொல்லியிருக்கிறாரா? தயாஶதகத்திலாவது தேவநாயக பஞ்சாஶத்திலாவது உண்டா? ஆனால் மாவிளக்குப் போடும் வ்யவஹாரம் ஶேஷாத்ரியிலும் அஹீந்த்ரபுரத்திலும் ப்ரஸித்தம். அந்த ப்ராஸார்த்தம் பலங்கள் கஷ்டோபபோக்யங்களாகின்றன. அப்படியே ‘[illegible]’ என்பதும்.

தாடீபஞ்சக ஶ்ரீ ஹரிதிந திலகங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நாமதை விமர்சித்து இல்லையென்று ஸ்தாபிப்பதற்கு ஆவஶ்யகமுமில்லை; அவகாஶமுமில்லை. விமர்ஶகாக்ரேஸரரான அபிநவபட்டபாண ஸ்வாமி ஸ்தோத்ரஜால ஸ்ரீகோஶ பூமிகையில் 4-வது பக்கத்தில் ‘ஹரிதிந திலகயோ [illegible] ... ... [illegible]’ என்று நிர்ணயித்திருக்கிறார். அதை ஆதாரமாய்க்கொண்டு ஸங்க்ரஹத: விமர்ஶிப்போம். ஸப்ததிக்கு அப்புறம் வேறாக தாடீபஞ்சகத்தை யருளிச்செய்ய இடமில்லை. அத்துதியின் பெயரே நூதநமாயும் [illegible] மாயுமிருக்கிறது. எவ்விடத்திலும் ப்ராஸத்திற்காக ஸ்வாமி ஶ்ரமப்படுவதில்லை. யஜ்ஞ ஸூத்ர த்ரிதண்டாதிகளை வர்ணிப்பதில்லை. ‘[illegible]’ என்று ரூபிப்பது தேசிகனதென்று எப்படியாகும்? மதநத்தினால் ஸாரமுண்டாகிறது. அப்படியானால் நம் மதம் அத்வைத ஸாரமா? ஸங்கல்ப ஸூர்யாதிகளில் தாடீபஞ்சக ஶ்லோகங்கள் காணோம். ஸந்நிதிகளிலும் அது அநுஸந்திக்கப்படக் காணோம். இவ்வெல்லா தோஷங்களாலும் தாடீபஞ்சகம் தேசிகனதல்ல வென்பதற்குத் தட்டுண்டோ?

மேலும் ஹரிதிந திலகத்திலும் தாடீபஞ்சகத்திலும் நாம முத்ரையைக் காணோம். தாமே ஸுபாஷிதநீவியில் ‘[illegible] கவி: । [illegible] ஸுபாஷிதநீவீ [illegible]’ என்று அருளிச்செய்து இங்கே அதை மறந்திருப்பாரா?

ஆகையால் இக்காரணங்களால் பட்டபாண ஸ்வாமியின் கொள்கையே த்ருடமாக்கப்படுகிறது. இம்மூன்று ஸ்தோத்ரங்களை விலக்கி மிகுதியானவற்றை மாத்ரம் அச்சிட்டிருந்தால் [illegible] மாகுமென்று விஜ்ஞாபிக்கலானேன்.

தாஸ:

[illegible] ராகவ கவி:

ஸ்ரீ[illegible] வித்யா [illegible].

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ அஹோபில மடம்.

𑌯𑌸𑍍𑌯𑌾𑌭𑌵𑌦𑍍𑌭𑌕𑍍𑌤 𑌜𑌨𑌾𑌰𑍍𑌤𑌿𑌹𑌨𑍍𑌤𑍁𑌃
𑌪𑌿𑌤𑍃𑌤𑍍𑌵𑌮𑌨𑍍𑌯𑍇𑌷𑍍𑌵 𑌵𑌿𑌚𑌾𑌰𑍍𑌯 𑌤𑍂𑌰𑍍𑌣𑌮𑍍 ।
𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑍇𑌽𑌵𑌤𑌾𑌰 𑌸𑍍𑌤𑌮𑌨𑌨𑍍𑌯 𑌲𑌭𑍍𑌯𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥

இப்பொழுது ஸ்ரீ அஹோபில மடத்தின் திவ்யாஸ்தாநத்தை அலங்கரித்து வரும் ஸ்ரீ அழகிய சிங்கர் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ஆராதந ரூபமான கைங்கர்யத்தை ஒத்துக்கொண்ட திநம் முதலாக இந்த க்ஷண பர்யந்தம் அந்த ஆராதநம் எவ்வித குறைவுமின்றிக்கு நடைபெற்று வருகிறதென்பதும், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அநேக ஸ்தலங்களுக்கு எழுந்தருளி அங்காங்கு திவ்யோத்ஸவத்தை அநுபவித்துக்கொண்டு தனது ஸேவையினாலும் கடாக்ஷத்தினாலும் ஆஶ்ரிதர்களை அநுக்ரஹித்து வருகிறான் என்பதும், 5 6 மாஸகாலம் முன் தனது முக்கிய ஸ்தாநமாகிற ஸ்ரீ அஹோபிலம் சென்று மூல பேரத்திற்கு ஸந்நிஹிதனாயிருந்து கொண்டு அந்த ப்ரதேஶத்திற்கு பலவித லௌகிக வைதிக பரிஷ்காரத்தைச் செய்து வைத்து அதனால் ஆநந்த விஶேஷ பரிதனாய் இப்பொழுது இன்னும் அநேக ஸ்தலாந்தரங்களில் யாத்ரோத்ஸவத்தைக் கண்டருளுகிறானென்பதும் ப்ராயேண எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இவ்விதமாக ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் யாத்ரோத்ஸவம் கண்டருளுவது நமது பாக்ய விஶேஷமே. ந்ருஸிம்ஹன் எழுந்தருளியிருக்குமிடம் போய் அவனது திவ்ய ஸேவையை அநுபவிக்க அஶக்தர்களாக இருக்கும் அநேக ஆஶ்ரிதர்களுக்கு இது அத்யந்தம் ஶ்ரேயஸ்கரமன்றோ?

அவ்விதமான ஶ்ரேயஸ் மதிராஸில் வஸிக்கும் ஆஸ்திகர்களுக்கும் ஸமீபகாலத்தில் ஸம்பவித்தது. நாளது சித்திரை மாஸம் 10௳ ஞாயிற்றுக்கிழமை முதல் 22௳ வெள்ளிக்கிழமை வரையில் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன், ஸ்ரீ பார்த்தஸாரதி எழுந்தருளியிருக்கும் திருவல்லிக்கேணியிலும் ஸ்ரீ ஆதிகேஶவப் பெருமாளால் அநுக்ருஹீதமாயிருக்கும் மயிலாப்பூரிலும் எழுந்தருளியிருந்து கணக்கற்ற ஜநங்களைத் தனது கடாக்ஷத்தினால் அநுக்ரஹித்து அந்த ஸ்தலங்களுக்கும் அவ்விடத்திலுள்ள ஆஶ்ரிதர்களுக்கும் விஶேஷித்த ஒரு ஶோபையையும் மனமலர்ச்சியையும் உண்டுபண்ணி பரமமான ஶ்ரேயஸ்ஸைச் செய்து வந்தான். இந்தப் பதின்மூன்று திநங்களிலும் ந்ருஸிம்ஹனுடைய ஸாந்நித்யத்தையும் அவனுடைய திவ்ய ஸேவையையும் ஸ்ரீ அழகியசிங்கர் அவனுக்கு செய்தருளின திவ்யாராதநத்தையும் அநுபவித்து வந்த ஜநங்களுக்கு தாத்காலிகமாக கர்மபந்தம் நிவ்ருத்தித்திருந்தாற்போல ஒரு பேராநந்தம் ஜநித்திருந்தது. அவனுடைய கைங்கர்யத்தில் அஹமஹமிகயா ப்ரவ்ருத்திப்பதும், அவனுடைய பரிஜநங்களை ஆராதிப்பதில் ப்ரயத்நப்படுவதும் இவை போன்ற வ்யாபாரங்களே ப்ரதி திநமும் அந்த ஜநங்கள் செய்யும் கார்யங்களாக இருந்தன. ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய திவ்ய கடாக்ஷம் போல, அவனது ஸ்தாநத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய ஸௌலப்ய ஸௌஶீல்யாதி கல்யாண குணங்களும் அத்யந்தம் ஆகர்ஷகங்களாக இருந்தன. சில திநங்களில் அபராஹ்நத்தில் அவர் திருவாய் மலர்ந்தருளிய ஸாமாந்ய உபதேஶங்களும் வ்யக்தி விஶேஷ விஷயமாக அவருடைய வாக்கிலிருந்து ப்ரவஹித்த திவ்ய ஸூக்திகளும் எல்லாராலும் அந்யாத்ருஶங்களென்றே உணரப்பட்டன. இப்படிப்பட்ட அநுக்ரஹ விஶேஷம் ஸம்வத்ஸரத்திற்கு ஒரு தடவையாவது ஆஶ்ரிதர்களுக்கு நேரும் பக்ஷத்தில் இந்த ஜகத்தில் இப்பொழுது காணப்படும் ராஜஸ தாமஸ பாகங்கள் குறைவுபட்டு ஸாத்விகாம்ஶம் ஓங்குமென்பதில் ஆக்ஷேபமில்லை.

மதிராஸுக்கு நேர்ந்த இந்த பாக்ய விஶேஷம் அசிந்திதோபநதமே. ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை இவ்விடம் எழுந்தருளப்பண்ண வேணுமென்று சிலர் ப்ரயத்நப்பட்டது உண்மையே. ஆனால், மஹாநகர ப்ரவேஶம் ஸ்ரீ அழகிய சிங்கருக்கு அநுரூபமன்று என்று பலர் நினைத்தார்கள். ஸ்ரீ அழ

இயசிங்கர்கூட முதலில் பத்தந ப்ரவேஶத்தில் திருவுள்ளமில்லாதவராகவே எழுந்தருளியிருந்தார். ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ஸங்கல்பம் அந்யதாவாக இருக்கவே இந்தத் தடைகள் மஶகம் போல பறந்துவிட்டன. ஆஶ்ரித ஸம்ரக்ஷணார்த்தம் பல பிறப்பும் பிறக்கும் எம்பெருமானுக்கு பத்தந ப்ரவேஶம் எவ்விதத்தில் தோஷாவஹமாகும்? 'துரீயாஶ்ரமத்தை வஹிக்கும் ஸ்ரீ அழகிய ஸிங்கருக்கு அது தோஷாவஹமாகாதோ?' என்னும் ஶங்கைப்படுமவர்களும், அந்த எம்பெருமானை எப்பொழுதும் [illegible]யியாக இருந்துகொண்டு ஆராதித்து வருவதையே ஸ்ரீ அழகியசிங்க தர்மமாகக் கொண்டிருக்கிறபடியால் அவன் செல்லுமிடமெல்லாம் அவர் அநுயாத்ரை செய்வது உசிதமே என்று ஸமாதாநம் கொள்ளவேணும்.

பலாம்ஶத்தை ஆலோசித்துப் பார்க்கும் பொழுதும் இவ்விதமான ஶங்கை கொண்டவர்கள்,

'𑌸𑍍𑌰𑌜𑌮𑌪𑌿 𑌶𑌿𑌰𑌸𑍍𑌯𑌨𑍍𑌧𑌃 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑌾𑌂 𑌧𑍁𑌨𑍋𑌤𑍍𑌯𑌹𑌿𑌶𑌂𑌕𑌯𑌾'

என்பது போல, 𑌅𑌨𑍍𑌧𑌪𑍍𑌰𑌾யர்களாக இருந்தார்களென்றே தோன்றுகிறது. எவ்வித ஶாஸ்த்ர விஶ்வாஸமு மில்லாமல் வர்ணாஶ்ரம தர்மங்களை யெல்லாம் கூச்சமற நிந்தித்து வழிதவறி சென்ற சில பெரியோர்களும் இந்த ஸ்ரீ அழகியசிங்கருடைய கடாக்ஷத்தினால் ஶாஸ்த்ர விஶ்வாஸம் பொருந்தினவர்களாகவும் ஶாஸ்த்ரோக்த கர்மங்களில் ஶ்ரத்தையுள்ளவர்களாகவும் நல்வழிக்குத் திரும்பிவந்தால், இதைவிட வேறு என்ன உயர்ந்த பலம் நமக்கு ஸம்பவிக்கக் கூடும்? நம்முடைய தோற்றங்களெல்லாம் அத்யந்தம் பரிச்சிந்நங்கள் என்பதற்கும், நம்முடைய த்ருஷ்டிக்கு அகோசரமாக அநேக ஆநுகூல்யங்கள் நம்மால் அப்ரதீக்ஷிதங்களாகவே குருடன் மேல் கங்கை ப்ரவஹிப்பதுபோல நம்மீது ப்ரவஹிக்கின்றன என்பதற்கும் இதுவே ஒரு நிதர்ஶநம்.

இப்பொழுது கத்தவால் யாத்ரையாக எழுந்தருளும் ஸ்ரீ அழகிய சிங்கருக்கு ஸகல ஆநுகூல்யங்களையும் ஸ்ரீ லக்ஷ்மீ நருஸிம்ஹன் ஸங்கல்பித்து, ஶீக்ரத்திலேயே ஸ்ரீ அழகிய சிங்கருடன் மறுபடியும் [illegible]ர்களை அநுக்ரஹிக்க இவ்விடம் எழுந்தருள வேணும் என்பதே இவ்விடத்திலிருக்கும் ஆஶ்ரிதர்களுடைய ஸார்வகாலிக ப்ரார்த்தனை.

மயிலாப்பூர்,
6—5—17.

வாஸுதேவன்.

ஸ்ரீ:

ஸ்ரீ𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 7.] பிங்கள௵ வைகாசிமீ [ஸஞ்சிகை 8.

𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌕𑌮𑌨𑌂 𑌤𑌮𑌾𑌲𑌵𑌰𑍍𑌣𑌂 𑌰𑌵𑌿𑌕𑌰𑌗𑍌𑌰𑌵𑌰𑌾𑌮𑍍𑌬𑌰𑌂
𑌦𑌧𑌾𑌨𑍇 - 𑌵𑌪𑍁𑌰𑌲𑌕𑌕𑍁𑌲𑌾𑌵𑍃𑌤𑌾𑌨𑌨𑌾𑌬𑍍𑌜𑌂 விஜயஸ𑌖𑍇
𑌰𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇𑌽𑌨𑌵𑌦𑍍𑌯𑌾 ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

பத்ராதிபரின் குறிப்புகள்.

புத்தியின் ப்ரவ்ருத்தி ப்ரகாரங்கள்.

'𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌯𑌜𑍍𑌞𑌂 𑌤𑌨𑍁𑌤𑍇 - 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌤𑌨𑍁𑌤𑍇𑌽𑌪𑌿 𑌚' என்று விஜ்ஞாநத்தை முக்ய குணமாகவுடைய ஜீவாத்மா விவரிக்கப்படுகின்றான். விஜ்ஞாநத்தைப் புத்தியென்றும் சொல்வர். விஜ்ஞாநம் ஆத்மகுணம். புத்தியாகின்ற கரணத்தின் மூலமாக அந்தக் குணம் முக்யமாக ப்ரவ்ருத்திக்கின்றது. புத்தியை ஸாரதியாக வர்ணித்து, புத்தியுடன் கூடிய புருஷனை, விஜ்ஞாநவான் என்றும் விஜ்ஞாந ஸாரதி என்றும் கடோபநிஷத்தில் சொல்லப்படுகின்றது.

புருஷன் இந்த்ரிய ஜந்ய ஜ்ஞாநங்களை மநஸ்ஸால் ஸாக்ஷாத்கரிக்கின்றான். அவற்றைப் புத்தியைக்கொண்டு ஊஹாபோஹ விஷயங்களாக்குகின்றான். யுக்தாயுக்த விசாரம், ஸாராஸாரவிவேசநம், இவை யாவும் புத்தியின் கார்யங்கள்; அதாவது ஆத்மாவினுடைய விஜ்ஞாநமெனும் தர்மபூத ஜ்ஞாநத்தினால் வ்யாப்ருதமான புத்தியாகிய கரணத்தின் கார்யங்கள்.

இந்தப் புத்தியானது லோகவ்யவஹாரங்களில் ஸங்கோசமின்றி ப்ரவர்த்திக்கத் தக்கது. ஆனால் அதனுடைய முடிவுகள் எப்போதும் ஸரியாகவே ஏற்படுவதில்லை. ஸரியாக அத்யவஸிப்பவரும் உண்டு. புத்தியைக்கொண்டு அத்யவஸிப்பதில் தவறிப்போகும் ஜநங்களும் உண்டு. மநுஷ்யனுக்குப் புத்தியைக் காட்டிலும் விசேஷித்த கரணமில்லை. அவனுக்கு ஸர்வ விஷயத்திலும் அபரோக்ஷ ஸாக்ஷாத்காரம் இல்லையாகையால், ஸாக்ஷாத்கரிக்கக்கூடிய விஷயங்களில் அவன் புத்தியைக்கொண்டு விவேசநம் செய்வது அவஶ்யமே. இப்படிப்பட்ட விவேசநமின்றி அவனுக்கு ஒருவித ப்ரவ்ருத்தியும் ஏற்படமாட்டாது.

ஆமுஷ்மிக விஷயங்களில் புத்தியினுடைய அதிகாரம் ஸங்கோசார்ஹம். அவற்றில் முக்ய ப்ரமாணம் சப்தரூபமாயும், ஆப்தவாக்ய ரூபமாயும் இருக்கின்றபடியால், அவை பேதிக்குமிடம் புருஷன் புத்தியைக்கொண்டு அவற்றை ஸமீசநமாகத் தர்க்கித்து நிச்சயம் செய்யக்கடவன். இப்படித் தர்க்கித்து நிச்சயித்த சப்த ரூப ப்ரமாணத்தை, ப்ரத்யக்ஷ விரோதமில்லாத விடங்களில் ஶ்ரத்தையோடு விஶ்வஸிக்கக்கடவன்.

ஶப்தப்ரமாணங்களில் விஶ்வாஸம் இவ்வண்ணம் ஸர்வ ஜநங்களுக்கும் ஸம்பவிக்கமாட்டாது. சில மஹான்கள்தான் இதற்கு அதிகாரிகள். பெரும்பான்மையோர் அவர்கள் வசநங்களை ஆப்தவாக்யமென்று ஆதரிக்கின்றார்கள்.

பகு ஜநங்கள் ஊஹாபோஹங்களுக்கு அக்ஷமராய் இருக்கின்றார்கள். இவர்கள் தமது மதத்தைத் தமது வஸ்த்ரத்தை மாற்றுவதுபோல் மாற்றுகின்றனர். சில த்ருட சித்தர்களுடைய ஸம்ஸர்க்கம் இவர்களைப் பரவஶராக்கிவிடுகின்றது. ஜந்ம மதத்தில் சில அம்ஶங்களைக் குறிப்பிட்டு. அவற்றில் ஸாமஞ்ஜஸ்யதை இல்லையென்று பரர் காட்டவும், அதையே உண்மையென்று ப்ரமித்துக்கொண்டு, பருடைய மதத்தில் ஆபாதமாகப் பாஸிக்கும் ஆபாஸங்களை விவேகிக்காமல் கொள்கின்றவர் உளர். இந்த ஸ்திதி ராஜாங்க விஷயத்திலும், வித்யா விஷயத்திலும், உபபத்தி விஷயத்திலும் பராதீநதையைப் பொருந்தின ஜநங்களிடம் மிகவும் ப்ரகாசிக்கின்றது. மேற்சொல்லிய பராதீநதை பகுகாலம் நீடித்ததாகில், அதனுடைய துர்க்குணமும் விஸ்தரிக்க வேண்டியதே

இவ்வண்ணம் ஒரு விதத்தாலும் பராதீநதையை அடையாதவர்கள், புத்தியில் சிறந்தவராக இருந்து, பக்ஷபாதமற்றுப் பரர் வித்யையைப் பராமர்சித்து, அதை விசேஷமாகப் பகுமாநித்தும், அப்படியே ஸ்வமதத்தை ஶோதித்து, அதன் குற்றங்களை ஆவிஷ்கரித்தும், க்ரந்தங்கள் எழுதினார்களானால் அக்ரந்தங்கள் விஜ்ஞாநவாங்களால் ஆதரிக்கத்தக்கவை.

ஸ்வமதத்தைவிட வேதாந்த ஸம்ப்ரதாயத்தின் ஏற்றத்தைக் கண்டறிந்து, அதை வெளிப்படுத்திய பாஶ்சாத்ய தத்வவிமர்சிகள் அநேகர். நம்முடைய தேசஸ்திதியில், பாஶ்சாத்ய வித்யை ஒன்றுக்கே ப்ரசாரம் ஸம்பவித்த நிலைமையில், அவ்வித்யா ஶிக்ஷகர்கள் ப்ராயேண விமர்ஶிகளென க்யாதியற்ற பாஶ்சாத்யராயும், தத்துல்யரான ஸ்வதேசிகளாயும் இருக்கின்ற தசையில், பாஶ்சாத்ய தத்வவிமர்ஶிகளுடைய யோசனையானது நம் சிறுவர்களுக்குத் தகுந்தபடியே குணம் செய்வதில்லை.

* * * * * *

தத்வ ஸாக்ஷாத்காரம், தீரர்களென்றும், தீமந்தரென்றும், ப்ரஶாந்த சித்தரென்றும், வித்வாம்ஸரென்றும், பண்டிதரென்றும், உபநிஷத் வர்ணிக்கின்ற உபாஸகர்க்குத் தான் ஸாத்யம். அதுவும் ஈஶ்வர ப்ரஸாதமின்றி நேரிடாது. '𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌤𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌭𑌜𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑍍 । 𑌦𑌦𑌾𑌮𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂 𑌤𑌂 𑌯𑍇𑌨 𑌮𑌾𑌮𑍁𑌪𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇' என்று ஈஶ்வரனே வெளியிட்டான். இப்படிப்பட்ட அதிகாரிகள் ஆர்யநாட்டின்கண் பெருகினார்கள். அவர்கள் த்ருணமெனச் செல்வத்தை நினைத்தார்கள். ஶரீர ஸுகத்தை நினைத்தாரில்லை. இந்த்ரியங்களை விஷயாந்வேஷணத்தினின்று விலக்கினார்கள். ஆத்மாவினுடைய ஶாஶ்வத நிலையைத் தேடினார்கள். தாம் தேடியறிந்ததைத் தக்க அதிகாரிகளுக்கு வெளியிட்டார்கள். மநுஷ்யர்க்குள் குணங்களுடைய தாரதம்யத்தையும் கர்மங்களுடைய தாரதம்யத்தையும் நன்றாக அறிந்து, தத்வஜ்ஞாநம் பல படிகளால் வளரவேண்டியதை யோசித்து, '𑌨𑌹𑌿 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌕𑍃𑌤𑍍 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌦𑍁𑌰𑍍𑌗𑌤𑌿𑌂 𑌤𑌾𑌤 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿' எனும் உண்மையால், பகவானிடம் பக்தி பண்ணுகின்றவன் இந்த ஜந்மத்திலோ, பின்னொரு ஜந்மத்திலோ பகவானை அடைய வேண்டும் ப்ரகாரங்களைக் காட்டினார்கள்.

இவர்களை ஆசார்யராகக் கொண்டு, ஸ்வதர்ம நிரதராய் ஆர்ய ஜநங்கள் சதுர்வித புருஷார்த்தங்களையும் தேடிக்கொண்டிருந்தார்கள். இவர்களுக்குள் புஷ்பித்த ஶாந்தி ரஸம் தான் லோகத்தை உஜ்ஜீவிக்கச் செய்யும். விஷயத்ருஷ்ணையால் பரர்களை ஹிம்ஸிப்பவர் நல்ல கதியை அடையமாட்டார். ஸ்வமதங்களில் துரபிநிவேசத்தால் மதாந்தரஸ்தர்களை ஹிம்ஸிப்பவர் துர்க்கதியை அடைவர். 'ஸர்வபூதாத்மகே தாத ஜகந்நாதே ஜகந்மயே। பரமாத்மநி கோவிந்தே மித்ராமித்ரகதா குத:' என்கிறப்படியே, எல்லா ப்ராணிகட்குள்ளும் ஈஶ்வரன் ஆத்மாவாக நிற்கும் உண்மையை ஆர்யர் தான் கண்டு கொண்டனர். அவ்வுண்மையை அறியாதவர்கள் ஸம்ஸார சக்ரத்தைத் தாண்டமாட்டார்கள். தேசாந்தரஸ்தர்களும் மதாந்தரஸ்தர்களும் நம்முடைய வித்யையில் தான் அவ்வுண்மையைத் தர்சிக்கத்தகும். உபநிஷத்தும் அதே உண்மையை 'யஸ்து ஸர்வாணி பூதாநி ஆத்மந்யேவாநுபஶ்யதி। ஸர்வபூதேஷு சாத்மாநம் ததோ ந விஜுகுப்ஸதே' என்று கூறியது.

* * * * * *

ஜீவாத்ம பரமாத்ம ஸ்வரூப சிந்தனை.

முன்பு ப்ரஸ்தாபித்த ப்ருஹதாரண்யகோபநிஷத் வாக்யங்களின் பின், சில ஶ்லோகங்களால் ப்ரகரணார்த்தம் ஸங்க்ரஹிக்கப்படுகின்றது. அவற்றின் பொருள் :— அர்ச்சிராதி யெனப்பட்ட அநாதியான மோக்ஷமார்க்கம் வேதாந்தங்களால் ப்ரதிபாதிக்கப்பட்டது. வேறு வித்யைகளால் அறியப்படாதது. ப்ரஹ்மவித் அதை யோகதசையில் ஸாக்ஷாத்காரம் செய்கின்றான்; மரண காலத்தில் அதில் ப்ரவேசிக்கின்றான். அதே மார்க்கத்தினால் ப்ரஜ்ஞாஶாலிகளான இதர ப்ரஹ்மவித்துக்களும் தங்களுடைய சரீர மோக்ஷாநந்தரம் ஸர்வலோகங்களுக்கும் மேலான பகவானுடைய லோகத்தைப் போய் அடைகின்றார்கள். அந்த மார்க்கத்தின் மத்யே, சுக்லம், நீலம், பிங்களம், ஹரிதம், லோஹிதம் என்று ஶ்ருத்யந்தரத்தால் வர்ணிக்கப்பட்ட ஆதித்யன் இருக்கின்றார் என்று ஶாஸ்த்ரஜ்ஞர்கள் சொல்லுகின்றார்கள். அந்த மார்க்கமானது உபாஸகரைப் பரமாத்மாவினிடம் கொண்டு போய்ச் சேர்க்கின்றதென்று ப்ரஸித்தம். பூர்வம் புண்ய கர்மங்கள் செய்து, அந்த:கரண சுத்தியை அடைந்து, ப்ரஹ்மவித்தானவர்களும், பஞ்சாக்நி வித்யாநிஷ்டர்களும் அந்த அர்ச்சிராதி மார்க்கத்தால் போகின்றனர். 'ஸூர்யத்வாரேண தே விரஜா: ப்ரயாந்தி யத்ராம்ருத: ஸ புருஷோ ஹ்யவ்யயாத்மா' என்று முண்டகோபநிஷத்திலும், மோக்ஷமார்க்கம் ஸூர்யத்வார மூலமாகப் போகின்றதென்று சொல்லப்படுகின்றது. ஸூர்யனை ஆஶ்ரயித்த லோகங்களில் வஸிப்பவர்க்கு அந்த லோகங்களுக்கு நடுவே ஆதாரமாக நிற்கும் ஸூர்யன் மோக்ஷத்வாரமாயிருப்பது ஸஹஜம். ஸூர்ய ரஶ்மிகளில் மேலே சுக்லம் நீலமென்று விவரித்த வர்ணங்கள் சேர்ந்திருக்கின்றனவென்பதும் ப்ரஸித்தம். கேவல கர்மாநுஷ்டாந பரர்கள் ஸம்ஸாரரூபமான அந்தகாரத்தில் ப்ரவேசிக்கின்றனர். கர்த்தவ்யங்களான வைதிக கர்மங்களை மோஹத்தால் த்யாகம் செய்துவிட்டு, ['மோஹாத்தஸ்ய பரித்யாகஸ் தாமஸ: பரிகீர்த்தித:' என்பது கீதாவசநம்.] வித்யையில் ஆசைகொண்டு ப்ரயத்நப்படுகின்றவர்கள் ஸம்ஸாரத்தில் இன்னும் அதிகமாக ப்ரவேசிப்பார்கள். ப்ரஹ்மஜ்ஞாந ஶூந்யரான அவித்வாம்ஸர்களும், பஞ்சாக்நி வித்யாப்ரதிபாதித ப்ரத்யகாத்மஜ்ஞாந ரஹிதர்களான அபுதர்களும், மரணாநந்தரம் ஸுகலேசமற்றவையும், காடாந்தகாரத்தால் சூழப்பட்டவையுமான லோகவிசேஷங்களுக்குப் போவார்கள். தேஹேந்த்ரிய மந ப்ராண புத்தி முதலான வஸ்துக்களைக் காட்டிலும் விலக்ஷணனாய், பரமாத்மாவையே தன் அந்தராத்மாவாயுடையவனாய் இருக்கும் ஜீவாத்மா, தன்னை இப்படிப்பட்டவன் என்று அறிந்தானாகில், தனக்காக ஒரு ப்ரயோஜநத்தை இச்சித்தாவது, தன் தேஹஸம்பந்திகளான, தாரபுத்ராதிகளுடைய இஷ்டத்தைச் செய்யும் பொருட்டாவது, தன்னுடைய சரீரத்தைக் கஷ்டப்படுத்தமாட்டான். பஹு அநர்த்தங்களுடைய சேர்க்கையால் ஸங்கடமான இந்தச் சரீரத்தில் ப்ரவேசித்திருக்கின்ற பரமாத்மா யாதொரு புருஷனால் அறியப்பட்டு ஸாக்ஷாத்கரிக்கப்படுகின்றானோ அந்தப் புருஷனே விஶ்வகர்த்தா, ஸர்வகர்த்தா. இந்த லோகம் அவனுக்கு வஶ்யமானது. அவனே லோகாஶ்ரயபூதன். [இவ்வண்ணம் வித்வானுக்கு ஈஶ்வர ஸாம்யம் முண்டகோபநிஷத்தில் சொல்லப்பட்டது; இங்கும் வெளியிடப்பட்டது.] ஆத

லால் இந்த ஜந்மத்திலேயே நாம் அந்த ப்ரஹ்மத்தை அறிவோம். அறியாமற்போனால் அஜ்ஞாநம் நிலைக்கும்; ஸம்ஸாரரூபமான மஹா ஹாநியும் தொடரும். இந்தப் பரமாத்மாவை அறிந்தவர்கள் முக்தராகின்றார்கள். இதரர்கள் ஸம்ஸாரரூப துக்கத்தையே அடைகின்றார்கள். மூன்று காலங்கட்கும் ஈச்வரனும், ஸர்வ பூதங்களுக்குள்ளும் அந்தர்யாமியும், ப்ரகாசத்துடன் கூடியிருக்கின்றவனுமான பரமாத்மாவை எப்போது புருஷன் ஸாக்ஷாத்தாகத் தர்சிக்கின்றானோ, அப்போது ஸர்வத்ர ஸமனாய் நிற்கின்ற ஸர்வேச்வர தர்சநத்தை அடைந்தவனாய் அவன் ஒரு வஸ்துவையும் நிந்திக்கமாட்டான். அந்தப் பரமாத்மா ஸம்வத்ஸரம் முதலான கால அளவுகளை அதிக்ரமித்தவர்; அம்ருதனும், ஆதித்யாதி ஜ்யோதிஸ்ஸுக்களை ப்ரகாசிப்பிக்கின்றவனும், ஸர்வ ப்ராணிகளுடையவும் ஜீவநஹேதுவுமான அந்த ப்ரஹ்மத்தை ஸர்வ தேவர்களும் உபாஸிக்கின்றார்கள். இந்த்ரியங்களும் ஆகாசம் முதலான மஹா பூதங்களும் யாதொரு ப்ரஹ்மத்தை ஆதாரமாய் உடையனவோ, அந்த அம்ருதனான ஆத்மாவை உபாஸிக்கின்ற வித்வான் அம்ருதனாகின்றான். ஸர்வேந்த்ரியங்களையும் தனது ஜ்யோதிஸ்ஸால் ப்ரகாசிப்பித்துக்கொண்டு, அவ்வவற்றின் வ்யாபாரங்கள் நடத்தவேண்டிய சக்தியை அவ்வவற்றிற்கு அளிக்கின்ற ப்ரத்யகாத்மாவை யார் அறிகின்றனரோ, அவர்களே சாச்வதமான பரப்ரஹ்மத்தை நிச்சயமாய் அறிகின்றவர்கள். ஆசார்யனிடம் சாஸ்த்ரத்தைக் கேட்டு சாஸ்த்ரார்த்தத்தை நன்றாகச் சிந்தித்து, சுத்தமான மநஸ்ஸால் மாத்ரம் ஸர்வத்ர ஸமமாய் இருக்கும் பரப்ரஹ்மம் ஸாக்ஷாத்கரிக்கத்தக்கது. அந்த ப்ரஹ்ம விஷயத்தில் பேத லேசம் இல்லை. அந்தப் பரமாத்மாவினிடம் அல்பமாவது பேதத்தை எவன் சிந்திக்கின்றானோ அவன் ஸம்ஸாரத்தினின்று ஸம்ஸாரத்தை அடைவன். நிச்சலமான அந்த ப்ரஹ்மம் சாஸ்த்ரம் வினா நிஷ்கர்ஷிக்கத்தக்கதன்று. சாஸ்த்ரார்த்த ச்ரவணாநந்தரம் ஒரே ப்ரகாரமாக அது அறியத்தக்கது. அது ராகம் முதலான ஸர்வ தோஷமும் அற்றது. ஸூக்ஷ்மமான ஆகாசத்தைக் காட்டிலும் ஸூக்ஷ்மமானது. உத்பத்தியில்லாதது. நாசமற்றது. ஸர்வாத்மாக்களுக்கும் அந்தராத்மாவாயிருப்பது. ப்ரஜ்ஞையுள்ள ப்ராஹ்மணன் அப்படிப்பட்ட பரமாத்மாவை ச்ரவண மநநங்களால் நன்றாக அறிந்து, த்யாநிக்கத்தக்கவன். அவனுக்கு ப்ரயோஜநமற்ற இதர சப்தங்களை அவன் சிந்திக்கவேண்டாம். அந்த சப்தோச்சாரணத்தால் அவனுடைய வாக்குக்கு ச்ரமம்தான் பலமாக நிற்கும்.

இவ்வண்ணம் ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் எடுக்கப்பட்ட ப்ராசீந ச்லோகங்களின் தாத்பர்யம் விவரிக்கப்பட்டது. அவ்வுபநிஷத்தினுடைய யாஜ்ஞவல்க்ய ஜநக ஸம்வாதமானது ஜீவாத்ம ஸ்வரூப சிந்தனையில் ஆரம்பித்தது. ஜீவனுடைய ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்த்யநுபவங்களை யோசித்தது. ஸ்வப்நாநுபவங்களை யோசிக்குமிடத்தில், அவற்றில் பகு பாகம் ஜாக்ரதநுபவ விகாரங்களாயிருப்பதையும், ஏகதேசம் லோகாந்தராநுபவ ஸ்மரணரூபமாயிருப்பதையும் சொல்லிற்று. லோகாந்தராநுபவத்தில் ஜந்மாந்தராநுபவமும் அந்தர்கதம். ஸுஷுப்தியில் வ்யக்தமற்றதும், தத்கால ஸ்மரண யோக்யமில்லாததுமான ஆநந்தாநுபவத்தைச் சொல்லி, அது ப்ராஜ்ஞனிடம் அஜ்ஞாதலயத்தாலே ஸம்பவிக்கின்றதென்று வெளியிட்டது. அந்த ப்ராஜ்ஞ ஸாக்ஷாத்காரம் வந்தவர்களுக்கே, சரீர வியோகாநந்தரம் புத்தி பூர்வாநுபவ யோக்யமான ஆநந்தம் பரமாத்ம ஸாயுஜ்யத்தால் உண்டாகும் என்று காட்டுவதற்காக, முதலில் ப்ரக்ருதி விலக்ஷணமான ஜீவாத்ம ஸ்வரூபத்தை உபநிஷத் போதித்தது. ஜீவன் தன்னுடைய ஸ்வரூப க்ரஹணபலமாக இந்த லோகத்திலேயே உபாஸந வேளையில் பரமாத்மாநுபவத்தை அடைகின்றானென்று வெளியிட்டுப் பரமாத்ம ஸ்வரூப குணங்களை விவரித்துச் சரீரவியோகாநந்தரம் பரமாத்மாவினுடைய ப்ராப்தியையும் உபநிஷத் கூறிற்று. இந்த ப்ராப்தியானது தனது சுத்த ஸ்வரூபத்தையும் பரமாத்ம ஸ்வரூபத்தையும் சாஸ்த்ரோபதேசத்தால் அறிந்து, பரமாத்மாவை உபாஸித்தவர்க்கே கிடைக்குமென்றும், அப்படிப்பட்ட ஜ்ஞாநமும் உபாஸநமும் இல்லாதவர்கள் இடைவிடாமல் ஸம்ஸரிக்கக்கடவர் என்றும் காட்டி உபதேச ப்ரகரணம் முடிகின்றது. பழைய ச்லோகங்கள் மூலமாய் உபநிஷதர்த்தம் பிறகு ஸங்க்ரஹிக்கப்பட்டது. ப்ரகரணத்தின் சரம பாகத்தைப்பற்றி இனி யோசிப்போம்.

பூர்வம் '𑌕𑌤𑌮 𑌆𑌤𑍍𑌮𑍇𑌤𑌿' என்று, ஜீவாத்ம ஸ்வரூப விஷய ப்ரஸங்கம் ஜநகரால் கேட்கப்பட்டு, '𑌯𑍋𑌯𑌂𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌷𑍁 𑌹𑍃𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍍𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌸 𑌸𑌮𑌾𑌨𑌸𑍍𑌸𑌨𑍍𑌨𑍁𑌭𑍌 𑌲𑍋𑌕𑌾𑌵𑌨𑍁𑌸𑌂𑌚𑌰𑌤𑌿' என்று யாஜ்ஞவல்க்யருடைய ப்ரதிவசநம் பிறந்ததைச் சொன்னோம். அதன் பொருள்:—“ஹ்ருதயத்துக்குள்ளே இந்த்ரிய முக்ய ப்ராணாதிகளின் நடுவே விஜ்ஞாநத்தைத் தர்மமாக வுடையவனும் ப்ரகாச ஸ்வரூபனுமான புருஷன் ஜீவன். அந்த ஜீவன் இந்த லோகத்திலும் பரலோகத்திலும் ஏகரூபனாய் ஸஞ்சரிக்கின்றான்” என்பதை முன்பு சொன்னோம்.

மேலே விவரித்த ச்லோகங்களுக்குள், '𑌵𑌿𑌰𑌜𑌃 𑌪𑌰 𑌆𑌕𑌾𑌶𑌾𑌤𑍍 𑌅𑌜 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌮𑌹𑌾𑌨𑍍 𑌧𑍍𑌰𑍁𑌵𑌃' என்று, பரமாத்ம ஸ்வரூபம் வர்ணிக்கப்பட்டது. அதாவது: ஜீவனைப்போல் ராகாதி தோஷமற்றவனும், ஆகாஶத்தைக் காட்டிலும் மேற்பட்டவனும், ஜீவனைப்போல் பிறப்பற்றவனும், ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் பல வித விகாரங்கட்கு உள்ளாகின்ற ஜீவனைப்போலன்றி நிச்சலனாயிருப்பவனுமான மஹா ஆத்மா உபாஸிக்கத் தக்கவன் என்று சொல்லப்பட்டது. சரம பாகத்தில் அதே பரமாத்மாவைப்பற்றிச் சொல்லுமிடத்தே, '𑌸 𑌵𑌾 𑌏𑌷 𑌮𑌹𑌾𑌨𑍍 𑌅𑌜 𑌆𑌤𑍍𑌮𑌾, 𑌯𑍋𑌯𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌷𑍁 𑌯 𑌏𑌷𑍋𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑍃𑌦𑌯 𑌆𑌕𑌾𑌶𑌃, 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌶𑍇𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌵𑌶𑍀 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑍇𑌶𑌾𑌨𑌃 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌧𑌿𑌪𑌤𑌿𑌃' என்று உபநிஷத் வெளியிட்டது.

இதனுடைய அர்த்தத்தை விசாரிக்கையில்:—“முன்னால் ப்ரஸ்தாபிக்கப்பட்ட ஜீவஸ்வரூப வாக்ய ப்ரதிபாதிதனான ஜ்யோதிஸ் எனும் ஆத்மாவானவன், அவித்யையாலும் காமத்தாலும் கர்மத்தாலும் தனக்கில்லாத அநாத்ம தர்மத்தை அடைவிக்கப்பட்டவனாய் இருந்து, அதனின்று ஜ்ஞாநத்தால் விடப்பட்டவனாகிப் பரமாத்ம ஸ்வரூபத்தை அடைகின்றான்; அவனே '𑌸 𑌵𑌾 𑌏𑌷 𑌮𑌹𑌾𑌨𑍍 𑌅𑌜 𑌆𑌤𑍍𑌮𑌾' என்று சரமபாகத்தில் விவரிக்கப்படுகின்றான்” என்று ஸ்ரீ ஶங்கராசார்யர் அபிப்ராயப்படுசின்றார்.

நம்முடைய பாஷ்யகாரரோ, '𑌯𑍋𑌯𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌷𑍁 𑌹𑍃𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍍𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃' என்று முன்னெடுத்த ஜீவாத்ம லக்ஷணமே சரமபாகத்தில், '𑌯𑍋𑌯𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌷𑍁 𑌯 𑌏𑌷𑍋𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑍃𑌦𑌯 𑌆𑌕𑌾𑌶𑌃' என்று மறுபடியும் சொல்லப்பட்டதென்று அபிப்ராயப்படுகின்றார். முன் வாக்யத்தில் ஜ்யோதிஸ் எனும் சப்தத்திற்குப் பதிலாக இங்கே ஆகாச சப்தம் ப்ரயோகிக்கப்பட்டது. ஆகாசம் என்றால் எங்கும் ப்ரகாசிப்பது என்று அர்த்தம். ஆதலால் அதை ஜ்யோதிஸ் எனவும் கூடும். ஆதலால் ஆகாசத்தைச் சொல்லி, ஸர்வேச்வரன் அதில் ஶயனிக்கின்றான் என்று சரமபாகத்தில் வெளியிடப்படுகின்றபடியால், இந்த உபநிஷத் ப்ரகரணத்தில் ஜீவப்ரஹ்ம ஐக்யம் சிறிதும் கூறப்படவில்லை. ஜீவனையும் ப்ராஜ்ஞனையும் வேறாகவே முன்பு பலதரம் சொல்லப்பட்டது. ஒருவன் ஸம்ஸாரி என்றும் மற்றுவன் ஸர்வேச்வரன் என்றும் காட்டப்பட்டது. ஒருவன் மற்றொருவனை உபாஸித்து மோக்ஷம் பெறவேண்டுமென்றும் காட்டப்பட்டது. பரப்ராஹ்மத்தைப் போல் ஜீவனுக்கும் மோக்ஷதசையில் குணாஷ்டகங்களுடைய ஆவிர்ப்பாவம் உண்டென்றும், மோக்ஷதசையில் ஜீவன் பரமாத்மாவுடன் அத்யந்த ஸமத்வத்தை அடைகின்றானென்றும் ச்ருதியே வெளியிடுகின்றது. ஆதலால் ஜீவனை ப்ரஹ்மசப்தத்தால் சொல்ல இசையும். ஶயநிப்பவனும் ஶயநஸ்தாநமாக இருப்பவனும் ஒன்றாவது ஸம்பாவிதமன்று.

'𑌵𑌿𑌰𑌜𑌃 𑌪𑌰 𑌆𑌕𑌾𑌶𑌾𑌤𑍍 𑌅𑌜 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌮𑌹𑌾𑌨𑍍 𑌧𑍍𑌰𑍁𑌵𑌃' என்கிற பதங்களில், 𑌮𑌹𑌾𑌨𑍍 𑌆𑌤𑍍𑌮𑌾 - என்று பரமாத்மா வர்ணிக்கப்பட்டு, '𑌤𑌮𑍇𑌵 𑌧𑍀𑌰𑍋 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌯 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑍀𑌤' என்பதால், ஜீவாத்மாவைக் காட்டிலும் அவர் வேறுபட்டவர் என்றும் காட்டப்படுகின்றார். முன்னால் நாம் விவரித்தவண்ணம், '𑌵𑌿𑌰𑌜𑌃, 𑌅𑌜𑌃, 𑌧𑍍𑌰𑍁𑌵𑌃' எனும் பதங்கள் பரமாத்ம வாசகங்களாய் நின்று, பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள பேதங்களை வெளியிடுகின்றன. '𑌪𑌰 𑌆𑌕𑌾𑌶𑌾𑌤𑍍' எனும் பதங்களும், ஆகாச பதம் ஜ்யோதிஸ் பதத்தைப்போல் ஸ்வயம் ப்ரகாசிக்கப்பட்ட வஸ்துவைச் சொல்

வதாலும், ப்ரகரணத்தில் ஜ்யோதிஸ் சப்தம் ஜீவாத்ம வாசகமாய் ஏற்படுகின்றபடியாலும், 'ய ஏஷோऽந்தர்ஹ்ருதய ஆகாஶ:' என்பதில் ஆகாச சப்தம் நம்முடைய பாஷ்யகாரரால் ஜீவபரமாக வ்யாக்யாதமாகையாலும், 'பர ஆகாஶாத்' எனுமிடத்திலும், ஜீவாத்மாவைக் காட்டிலும் பரன் என்று பொருள்படுத்தினால் ஸ்வரஸமாயிருக்கும். ஆதலால் ஜீவனைக் காட்டிலும் ஸர்வப்ரகாரத்தாலும் பின்னனான பரமபுருஷன், 'விரஜ: பர ஆகாஶாத்' எனும் ஶ்லோகத்தால் நிர்த்தேசிக்கப்படுகின்றான். 'தமேவ தீரோ விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர்வீத' என்று பரமாத்மோபாஸநம் நமக்கு விதிக்கப்படுகின்றது. அந்த மஹாந் ஆத்மாவைப்பற்றியே, 'ஸ வா ஏஷ மஹாநஜ ஆத்மா' என்று உபநிஷத்தின் முடிவான பாகம் சொல்லுகின்றது. ஜீவாத்மா ஜ்ஞாந ஸ்வரூபி; ஜ்ஞாநத்தையே குணமாகவுடையவன்; ஆதலால் ப்ரகரணாரம்பத்திலும், இங்கும், 'யோऽயம் விஜ்ஞாநமய:' என்று ஜீவன் விவரிக்கப்பட்டான். இந்த்ரிய முக்ய ப்ராணாதிகளுக்கு மத்யே இருக்கின்றானாதலால், முன்பும் இவ்விடத்திலும் 'ப்ராணேஷு' எனும் பதம் சேர்க்கப்பட்டது; ஜீவன் ஹ்ருதயத்துக்குள் இருக்கின்றானென்று முன்பு சொன்ன 'ஹ்ருத்யந்த:' எனும் பதங்கட்குப் பதிலாக, இவ்விடம் 'அந்தர்ஹ்ருதயே' என்று பதப்ரயோகம். பூர்வத்தில் 'ஜ்யோதி:' எனும் சப்த ஸ்தாநத்தில் இங்கே ஆகாஶசப்தம் ப்ரயோகிக்கப்பட்டு ஜீவாத்மாவின் ப்ரகாஶ ஸ்வரூபத்தை விளக்குகின்றது.

ப்ரகரணாரம்பத்தில் 'ஜ்யோதி: புருஷ:' என்று ப்ரகாஶ ஸ்வரூபத்துடன் கூடிய ஜீவனைமட்டும் காட்டியது. இவ்விடமோ அந்த ஜீவனையே ஆகாச சப்தத்தால் காட்டி, 'தஸ்மிஞ்சேதே ஸர்வஸ்ய வஶீ ஸர்வஸ்ய ஈஶாந: ஸர்வஸ்ய அதிபதி:' என்று, ஜீவனுக்கும் அந்தராத்மாவான பரமாத்மாவை, யாவரும் அவர் வசத்தில் இருக்கின்றனரென்றும், யாவருக்கும் அவர் நியந்தாவென்றும், ஸர்வத்துக்கும் அவர் ஶேஷி யென்றும்

சொல்லி, அவர் ஜீவாத்மாவுக்குள்ளே சயனிக்கின்றாரெனக் கண்டோக்தமாக உபநிஷத் தீர்மானித்தது. 'ஸர்வஸ்ய வஶீ ஸர்வஸ்ய ஈஶாந:' என்கிற விடங்களில் ப்ரஹ்மேந்த்ராதிகளுக்கு வஶீ என்றும் ஈஶிதாவென்றும் ஶங்கரபாஷ்யம். 'ப்ரஹ்மருத்ரேந்த்ராதிகள்' என்று நம்முடைய பாஷ்யகாரர். அதிபதி என்றால் ரக்ஷகர் என்கின்றார் ஶங்கராசார்யர். அவ்வுண்ணமே, நாராயணாநுவாகத்திலும், 'வஹ்நிஶிகா' என்று ஜ்யோதிஸ் ஸ்வரூபனான ஜீவாத்மாவைச் சொல்லி, 'தஸ்யா: ஶிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்தித:' என்று, பரம புருஷன் ஜீவாந்தர்யாமியாய் இருப்பது சொல்லப்பட்டது. ஸர்வேஶ்வரன் கர்மாத்யக்ஷனாயிருக்கின்றபடியால் கர்மஸம்பந்தம் ஜீவனையொத்து அவனுக்கில்லையென்றும் உபநிஷத் சொல்லுகின்றது.

உபநிஷத்தில், பரமாத்மாவைப்பற்றி மறுபடியும், 'ஏஷ ஸர்வேஶ்வர:, ஏஷ பூதாதிபதி: ஏஷ பூதபால:' [ஸர்வேஶ்வரன் என்றும் ஸர்வப்ராணிகளுக்கும் ஶேஷியாயும் ரக்ஷகனாயும் இருக்கிறார்] என்றும், 'ஏஷ ஸேதுர் விதரண ஏஷாம் லோகாநாம் அஸம்பேதாய' [ஸர்வ லோகங்களுடைய ஸாங்கர்யம் நேரிடாதபடி ஒரு ஸேதுவைப்போல் அந்தப் பரமாத்மா அவற்றைத் தரிக்கின்றார்] என்றும், 'தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி, யஜ்ஞேந தாநேந தபஸாநாஶகேந' [ஸ்வகர்மங்களைப் பகவத் ப்ரீணநமாகப் பண்ணும் ப்ராஹ்மணர்கள் ப்ரஹ்மசர்யாஶ்ரமத்தில் வேதாத்யயநம் செய்தும், க்ருஹஸ்தர்களாய் யஜ்ஞதாநங்கள் செய்தும், வாநப்ரஸ்தர்களாய் சரீரபோஷணத்தை அதிக்ரமித்த இஷ்டபோஜநங்களைத் தவிர்த்துத் தவம் புரிந்தும் பரமாத்மாவை அறிய விரும்புகின்றனர்] என்றும், 'ஏதமேவ விதித்வா முநிர்பவதி' [இந்தப் பரமாத்மாவை அறிந்து யோகி ஆகின்றான்] என்றும், 'ஏதமேவ ப்ரவ்ராஜிநோ லோகமிச்சந்த: ப்ரவ்ரஜந்தி' [இந்தப் பரமாத்மாவை ப்ராப்யமாக இச்சித்து ஸங்யாஸிகள் ஸங்யஸித்துக் கொள்கின்றார்கள்] என்றும், இந்த ப்ரஹ்மத்தை அறிந்த பூர்வீகர்கள் புத்

ராதி ஈஷணாத்ரய விநிர்முக்தர்களாய், பிக்ஷுக்களாய்ப் போந்தனர் என்றும், அப்படிப்பட்ட ப்ரஹ்மம் ஸர்வப்ரகாரத்தாலும் லோக விலக்ஷணமென்றும், ஜ்ஞாந மொன்றாலேயே அறியத்தக்கதென்றும், ப்ரஹ்மவித்தானவன் இந்த லோகத்தில் இருக்கும் போதே புண்ய பாபரூப ஸர்வகர்மங்களையும் கடக்கின்றானென்றும் ஸாதரத்துடன் சொல்லப்படுகின்றது.

முடிவில் ப்ரஹ்மவித்தினுடைய மஹிமையும் லக்ஷணமும் விவரிக்கப்படுகின்றன. " ப்ரஹ்ம ஸ்வரூப வித்தானவன் கர்மங்களால் உண்டாகப்பட்ட ஏற்றக் குறைவுகளை அடையமாட்டான்; பாபம் அவனை ஸ்பர்சிக்கமாட்டாது; அவன் ஶாந்த மநஸ்கனும், வஶீக்ருதங்களான இந்த்ரியங்களுடன் கூடியும், காம்ய கர்மங்களினின்று நிவ்ருத்தனும், த்வந்த்வங்களை ஸஹிக்கின்றவனும், ஏகாக்ரசித்தனும் இருப்பன்; தன் ஆத்மாவுக்குள்ளே அந்தராத்ம தர்சநம் செய்வன்; ஸர்வத்திலும் ஸர்வசரீரகனான பரமாத்மாவை ஸாக்ஷாத்கரிப்பன்; பாபங்களைக் கடப்பன்; அவற்றைத் தனது ஜ்ஞாநாக்நியால் பஸ்மம் செய்துவிடுவன்; சரீரவானாயிருந்தும் சரீர ப்ரயுக்தமாக வருகின்ற பாபங்களற்றும், ராகத்வேஷங்களற்றும், ஸம்ஶயங்களற்றும், ப்ராஹ்மண சப்தார்த்தத்துக்கு முக்யவிஷயமாகின்றான்.

யாஜ்ஞவல்க்யர் ஜநகருக்கு உபதேசித்த அர்த்தங்களை இவ்வண்ணம் ஸங்க்ரஹிக்கின்றார். இந்தப் பரமாத்மாவானவர் ஸர்வபூதங்களிலும் நின்று ஸர்வாந்நங்களையும் புஜிக்கின்றவர்; ஸர்வப்ராணிகளுடைய கர்மங்களுக்கும் பலமளிப்பவர். ‘𑌅𑌹𑌂 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌚 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑍇𑌵 𑌚’ என்றும், ‘𑌲𑌭𑌤𑍇 𑌚 𑌤𑌤𑌃 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 𑌮𑌯𑍈𑌵 𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌨𑍍 𑌹𑌿 𑌤𑌾𑌨𑍍’ என்றும், ‘𑌯𑍇 𑌯𑌜𑌂𑌤𑌿 𑌪𑌿𑌤𑍄𑌨𑍍 𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑍍 𑌸𑌹𑍁𑌤𑌾𑌶𑌨𑌾𑌨𑍍 । 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌮𑍇𑌵 𑌯𑌜𑌂𑌤𑌿 𑌤𑍇 ॥’ என்றும் ப்ரமாணங்களின்படியே, இந்த ஶ்ருத்யர்த்தத்தை அநுஸரித்தே, ‘𑌫𑌲𑌮𑌤 𑌉𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃’ எனும் ஸூத்ர பாஷ்யத்தில் ஸர்வகர்ம ஸமாராத்யன் பகவானே என்றும், கர்மபல ப்ரதத்வமும் அவனுடையதே எறுன்ம் நிஶ்சயிக்கப்பட்டன. இந்த ஶ்ருத்யர்த்தம் அறிந்தவனும் கர்மபல ரூபமான தநக்தையும் அடைகின்றானென்று பலஶ்ருதி. அதன் தாத்பர்யம் என்னெனில்: ஸர்வத்ர ஆத்ம ஸாக்ஷாத்காரபலம் பகவானுடைய பரமஸாம்யம் என்பதே. மறுபடியும் பரமாத்மா மநுஷ்யனுக்குள்ள ஜரா மரண பயாதி ரஹிதன் என்றும், அபயமே அவன் ரூபமென்றும், அவனை அறிகின்றவனும் அபயரூபத்தை அடைந்து ஸ்வஸ்வரூபத்தில் நிலைக்கின்றானென்றும் சொல்லி உபதேசம் ஸமாப்தம்.

ப்ரஹ்மவித்யாப்ரகரணங்கள் எதை எடுத்தபோதிலும், அவற்றுள் ‘ஒரொன்றுதானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு வானேறப் போமளவும் வாழ்வு’ எனும்படி இருக்கின்றன. ப்ரஹ்மஸ்வரூபம் விவரிக்கப்பட்டது. சுத்த ஜீவஸ்வரூபம் விவரிக்கப்பட்டது. ஜீவனுடைய அநாதி கர்மஸம்பந்தமும் தந்மூலமான ஸம்ஸாரமும் சொல்லப்பட்டன. ஜீவனுடைய வ்யாபாரங்களெல்லாம் காமப்ரயுக்தமென்றும், அவை அவனுடைய நித்ய ஜ்யோதிஸ்ஸினுடைய அநுக்ரஹபலத்தால் புத்தி மநஸ் இந்த்ரிய சரீராதிகளைக் கொண்டு நடத்தப்படுகின்றனவென்றும் காட்டப்பட்டது. ஜீவனுக்குப் பலவித சரீரங்களால் அநுபவிக்கக்கூடிய பல லோகாந்தரங்கள் உண்டென்று காட்டப்பட்டது. ஸ்வப்ந காலங்களில் ஸ்தூல சரீரேந்த்ரியங்களற்றும், பாஹ்ய ஜ்யோதிஸ்ஸுக்களுடைய அநுக்ரஹமின்றியும், ஜாக்ரத் தசாநுபவங்களையும், சிலகாலம் லோகாந்தராநுபவங்களையும், ஈஶ்வர ஸங்கல்பத்தால், ஸ்வகர்மாநுகுணமாக ஜீவன் பொருந்துகின்றானென்றும், ஸுஷுப்தியில் அந்தர்யாமியினிடம் ஜீவன் லயிக்கின்றானென்றும் காட்டப்பட்டது. அந்த அந்தர்யாமியே புருஷனுக்கு ப்ராப்யன் என்றும், ஶாஸ்த்ரத்தால் அறியத் தக்கவன் என்றும், உபாஸிக்கத்தக்கவனென்றும், தனக்குள்ளும் பிறர்க்குள்ளும் தர்சிக்கத்தக்கவன் என்றும், அவனைத் தவிர்த்து நிற்பதோர் பதார்த்தம் இல்லையென்றும், அவனையறிந்தவன் ஸர்வாத்ம தர்சநம் செய்கின்றவன் என்றும் சொல்லப்பட்டது. ஸ்வகர்மங்களைப் பலாபிஸந்தியின்றிப் பகவத் ப்ரீணநமாகச் செய்துகொண்டு, பரமாத்மாவை அறியக்கூடுமென்று காட்டப்பட்டது. பரமாத்மாவை அடைந்தவன் அவாப்தஸமஸ்தகாமனென்றும், கர்ம ப்ரயுக்தமான ஏற்றக்குறைவு அவனுக்கில்லையென்றும், பாபத்தை அவன் கடந்தவனென்றும், ஸர்வ பாபங்களையும் அவன் ஜ்ஞாநம் பஸ்

மம் செய்துவிடுமென்றும், பகவத் ப்ராப்தி அவனுக்கு இவ்வுலகத்திலேயே உபாஸந வேளைகளில் உண்டென்றும், பகவானுடைய நித்ய ப்ராப்தி அவனுடைய சரீராவஸாநத்தை அபேக்ஷிக்கின்றதென்றும் காட்டப்பட்டது. ஸர்வ பூதாந்தராத்மாவான பகவானே ஸர்வ கர்ம ஸமாராத்யன் என்றும், ஸர்வ தேவாந்தர்யாமியான அவனே ஸர்வ கர்ம பலப்ரதன் என்றும் உபதேசிக்கப்பட்டது. ப்ரஹ்மவித் உள்ளும் வெளியும் இந்த்ரியங்களை ஜயித்தவனென்றும், விஷய த்ருஷ்ணையற்றவன் என்றும், த்வந்த்வங்களை ஸஹிப்பவன் என்றும், ஏகாக்ரசித்தனென்றும், தன் ஆத்மாவுக்குள்ளும் ஸர்வத்தினிடமும் ஆத்மதர்சந சீலனென்றும், ஆதலால் ஸர்வதோஷ ரஹிதனென்றும் சொல்லப்பட்டது.

இப்படிப்பட்ட உபதேசரத்நத்தை அது இருக்கையிலே இழந்து, மதமென்று பெயர் பொருந்திய ஆபாஸ விச்வாஸங்களைக் கேட்டுக்கொண்டு, புத்திகளில் ப்ரமையைத் தாங்கிக்கொண்டு, ஒன்றும் தெரியாத நிலையில் எல்லாம் தெரிந்ததாய் நினைத்துக்கொண்டு, விஷயத்ருஷ்ணையில் மூழ்கி, நம்மவர் கெட்டுப்போவதற்கு இக்காலம் ஏற்பட்டதை நினைத்தால், ‘[illegible]’ எனும் ச்லோகார்த்தம் புத்தியில் நிலைக்கின்றது.

பத்ராதிபர்.

ஸ்ரீ:.

ஜநகநந்திநீ.

பரமாசார்யனுடைய விசேஷ உத்ஸவ தர்சநம், அவனால் ஸம்யக் ரக்ஷிதமான உபாயாநுஷ்டாந விஷயமாக ஜநகத்தின் ஹ்ருதயத்தில் த்வரையை விளைவித்தது. கேசவாசார்யரும், பெண் விளம்பத்தை ஸஹிக்கமாட்டாளென்று தெரிந்துகொண்டார். விளம்பித்தால் அவளுக்குச் சோகம் வளருமென்று நிச்சயமாய் அறிந்தனர். ஒருநாள் அவர் புஸ்தக நிரீக்ஷணம் செய்துகொண்டிருக்கையில் ஜநகம் வந்து தண்டன் ஸமர்ப்பித்தாள். பின் அவள் கைகளைக் கூப்பிக்கொண்டு நிற்கையில், “குழந்தாய்! ஆசார்ய நிஷ்டையை விரும்புகின்றையோ? உக்திநிஷ்டை உனக்கு ப்ரியமோ?” என்று கேசவாசார்யர் மொழிந்தார்.

“ஸம்ப்ரதாய வழக்கத்தை அடியேனுக்காகத் தேவரீர் மாற்றவேண்டாம்” என்று ஜநகநந்தினி சொன்னாள்.

“உனக்குத் தெரியாத அம்சம் ஒன்றுமில்லை. ஆனாலும் ப்ரபத்தி ப்ரயோகத்தை நாளைக்கு உனக்கு உபதேசிக்கின்றேன். அநுஷ்டாநகாலத்தில் அதனால் உனது அநுஸந்தாநம் ஸரியான க்ரமத்தில் நிலைக்கும்”, என்று சொன்னார் கேசவாசார்யர். அதைக் கேட்டுக்கொண்டு ஜநகம் உள்ளே சென்றாள்.

மறு தினம், கேசவாசார்யர் பகவதாராதநம் செய்து முடித்தவுடன் ஜநகத்தைப் பகவத்ஸந்நிதியண்டை அழைத்தார். ஜநகம் வந்தாள்; பெருமாளை ஸேவித்து நின்றாள்; ப்ரபத்தி ப்ரயோகத்தின் உபதேசத்தைப் பெற்றாள்; மறுபடி ஸேவித்தாள்; எழுந்து நின்றாள். “குழந்தாய்! நாளைக்குப் பேரருளாளன் உன்னை அநுக்ரஹிப்பன்”, என்று கேசவாசார்யர் சொல்ல, அதைக் கேட்டுக்கொண்டு வெளியே சென்றாள்.

அன்று ஸாயங்காலம் வழக்கப்படி பத்மநாபாசார்யர் கேச

வாசார்யரிடம் வந்தார். அவரைக்கொண்டு கேசவாசார்யர் மறுநாள் செய்யப்போகின்ற உபாயாநுஷ்டாநத்துக்கு வேண்டிய ஸௌகர்யங்களைச் செய்வித்துக்கொண்டார்.

அன்றிரவு ஜநகநந்தினி தூங்கினாளில்லை. படுக்கையில் படுத்த பிறகு சிந்தையில் ஆழ்ந்தனள். “ஓ! கருணாஸமுத்ர! எனக்கேன் இப்பிறவித் துயரம் கொடுத்தாய்? எனக்கு ஸத்ஸங்கமளித்தாய். உன் திருவடிக்கு எனை ஆளாக்கவல்லவோ அதை நீ செய்தது? உன்னிடம் பக்தி எனக்குத் தந்தாய்; அதன் பயனன்றோ தத்வஹித புருஷார்த்த ஜ்ஞாநம் எனக்கு நேர்ந்த நிலை? ப்ரவ்ருத்திமார்க்கம் எனக்கு அற்றது. நிவ்ருத்தி மார்க்கத்தை நான் அடையவேண்டியவளன்றோ? ஒவ்வொருவரும் ஸ்வகர்மங்களால் உன்னை ஆராதித்துக்கொண்டு, நிவ்ருத்தி தர்மத்தில் நின்று காலம் கழிக்கலாமென்றால், எனக்கு ஸ்வகர்மம் என்ன வைத்தாய்? நான் பர்த்ருமதியன்றோ? எனக்குப் பர்த்தாவின் பணிவிடை யற்றுப்போயிற்றே! ஸாக்ஷாத் ஸ்வாமி தாம், ப்ரியப்படாத பத்நியின் பொருட்டு ஆர்த்த ப்ரபத்தி பண்ணி, அவ்வுலகுக்கு அவளை அனுப்பிவிட்டுத் துர்யாஶ்ரமத்தைக் கைக்கொண்டாராமே! எனது பர்த்தா அந்த அநுக்ரஹத்தை அடியேனிடம் செய்தாரில்லையே!

“இந்தத் துக்கமெல்லாம் ப்ராரப்தம் சிகையறுக்க வென்று எண்ணுகின்றேன். அதற்காகத்தான் நீ எனக்கு இந்த ஜந்மம் அளித்தாய். இன்னும் நான் அநுபவிக்க வேண்டிய ப்ராரப்த பலம் விசேஷமா யிருந்தால், அதெல்லாம், உனது க்ருபையால் நாசமடையாதோ? எனக்கு உன் பணிவிடை யொன்று தவிர வேறேது வேண்டும்? அதை எனக்கு இப்போதே நீ அருளவேண்டும். ப்ரஹ்லாத த்ருவாதிகளுக்குப் போகாநுபவம் புண்யபலமாக ஸித்தித்தது. எனக்கு இனியொரு புண்யபலாநுபவமும் மிகுந்திருக்கின்றதோ? இந்த க்ருஹத்தில் எனக்குண்டாகிய ஜந்மம் ஸுக்ருத பலமே. உன் திருவடிகளில் பக்தியை நிலைக்கச்செய்தாய். அதுவும் ஸுக்ருத ப்ரயோஜநமே. ஸதாசார்ய கடாக்ஷமும், உன்னைப் பற்றிய ஜ்ஞாநமும், இவை எனக்கு ஸுக்ருதத்தால் நேரிட்டனவென்பதும் நிஜமே. இவற்றின் முடிவான பயன் உன் திருவடிகளில் எனது ஆத்மாவின் பரந்யாஸமன்றோ? அது நடந்தபின் வேறு ஸுக்ருத பலாநுபவம் ஏது? அதனுடைய பலம் உன் ப்ரஸாதம். ப்ரஸாதபலம் உனது நித்யகைங்கர்யம். அதைத்தான் அவிளம்பேந பெற வேண்டுகின்றேன். நீ உன் ப்ரதிஜ்ஞையை மறவாமல் முடித்தருள்வாய்.”

“இந்தீவரஶ்யாமனாய், பீதாம்பரதாரியாய், வநமாலையும் மயிற்றோகையும் பவழமாலையும் அணிந்துகொண்டு, தோழனுடைய தோளின் மீது ஒரு கையை வைத்துக்கொண்டு, மற்றொரு கையினால் ஒரு தாமரை மலரைச் சுழற்றிக்கொண்டு, செவிகளில் நீலோத்பலம் விளங்க, கபோலங்களில் அளகங்களாட, புன்னகை கொண்டு முகபத்மம் ஜ்வலிக்க நீ நின்றுகொண்டிருக்கையில், உன்னைக் கண்ட விப்ரஸ்த்ரீகள், யாவர்க்கும் ப்ரியதமனான உனது. திவ்ய சரித்ரங்களை முன்பே செவிகளாரக் கேட்டு, உனது பக்தியில் ஆழ்ந்த மநஸ்கராய் இருந்தபடியால், தமது நேத்ரங்களால் உன் விக்ரஹத்தை உள்ளே ஆகர்ஷித்து, அதைத் தமது ஹ்ருதயத்தில் நிலைக்கச்செய்து, சிலகாலம் தம் புத்தியினால் அதை ஆலிங்கநம் செய்து, உனை நெடுங்காலம் காணாமையால் வளர்ந்த தம்முடைய தாபத்தைத் தீர்த்துக்கொண்டார்கள். யாவர்க்கும் இவ்வநுபவம் ஸுஷுப்தியில் உண்டு என்பார்கள். அது அவர் அறிவதற்கு வழியின்றியே நேரிடுகிறது; ஆகையால் அதை அநுபவமெனத்தகுமோ? இப்படி எல்லாருடைய ஆத்மாக்களிடத்திலும் அவ்வாத்மாக்கள் அறியக்கூடாத தசையில் இருக்கின்ற ஸர்வேஶ்வரனை வேண்டி, அவனைத் தவிர்த்து மற்ற யாவத் வஸ்துக்களினிடமும் ஆசையைப் போக்கி, விப்ரஸ்த்ரீகள் வந்தார்களே! அந்த ஏற்றம் எனக்கிலதே! அந்த ரூபதர்சநம் எனக்கிலதே! அவர்களுடைய ஸுக்ருதம் எனக்கிலதே! அந்த ஸுக்ருதம் எனக்கும் இருந்தால், அவர்களுடன் அக்காலமே உனைத் தர்சித்திருக்கமாட்டேனோ? தர்சித்திருந்தால் இந்த ஜந்மம் எனக்கேன் வரும்? அவர்களுக்கும் நீ சொன்னதென்ன? மநஸ்ஸை உன்னிடம் செலுத்தச் சொன்னாய்; அதனால் பஹு ஶீக்ரமாக உனது ப்ராப்தியை அவர்க்கு நீ ப்ரதிஜ்ஞை பண்ணினாய். உன் கதாஶ்ரவணத்தாலும், உன் திவ்யமூர்த்தி தர்சநத்தாலும், உன் நாமஸங்கீர்த்தநத்தாலும், உன்னை த்யாநிப்பதாலும், உன்னிடம் பக்தி நிலைக்குமென்றும், உனது ஸந்நிகர்ஷமாத்ரத்தால் அது நிலைக்காதென்றும் சொல்லி, அவர்களுடைய பர்த்தாக்கள் செய்யும் தர்மங்கள் அவர்களாலே நிறைவேறவேண்டியிருந்தபடியால், பர்த்தாக்களிடமே அவர்களை அனுப்

பிவிட்டாய். என்னை அவ்வண்ணம் எங்கு அனுப்பப்போகின்றாய்? விப்ரபத்திமார் அபேக்ஷித்ததான உன்னுடைய பாதகமலங்களின் ஸேவையை எனக்கு உடனே தர நீ இரங்கவேண்டுமன்றோ? எனக்குள்ளது ஆகிஞ்சந்யம்; எனக்கு வேறு கதியில்லை; நான் செய்யத்தக்கது உன் திருவடிகளில் சரணாகதி; எனக்காக என் ஆசார்யன் அதைச் செய்யப்போகின்றார். இன்னும் லோகத்தில் நானிருந்தால் கெடுவேன். நானிருந்து செய்யவேண்டிய தொன்றுமில்லை. எனக்கு ஸ்வதர்மமென்று ஒன்றில்லை. உன் திருவடிகளுக்கு என்னை உத்தர க்ஷணமே கூவிக்கொள்ளவேண்டுமே!

“கோப ஸ்த்ரீகள் உன்னைத் துறந்து, உன் பிரிவாற்றாமையால் தளர்ந்து, உன்னை இடைவிடாமல் த்யானித்துக்கொண்டு லோகவாஸம் செய்தார்கள். அவ்வண்ணம் என்னை இருக்கச்செய்வையோ! அம்மஹாத்மாக்களுடன் என்னை ஒப்பாக நினைப்பையோ! அவர்களுக்குக் கிடைத்த உனது ஸம்ஶ்லேஷம் எனக்கெப்படிக் கிடைக்கும்? கிடைக்குவேண்டுமென்று எண்ணிக்கொண்டே பல ராத்ரிகளில் படுத்தேன். ஸ்வப்நத்திலும் அது எனக்குக் கிடைக்கவில்லை. அதற்கும் ஸுக்ருதம் வேண்டும். அதில்லாமையால் நீயும் எனக்கு அத்தகைய ஸ்வப்நம் தந்தாயில்லை.”

“கோப கன்னிகைகள் உன்னைத் தமது பதியாகக் கொள்ளவேண்டுமென்று வ்ரத மிருந்தார்கள். நான் அவ்வாசைகொள்ளலாமோ? அவரைப்போல் வ்ரதம் அநுஷ்டிக்கலாமோ? அவர்களுக்கும் நீ யாது சொன்னாய்?

‘𑌨 𑌮𑌯𑍍𑌯𑌾𑌵𑍇𑌶𑌿𑌤𑌧𑌿𑌯𑌾𑌂 𑌕𑌾𑌮𑌃 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌕𑌲𑍍𑌪𑌤𑍇 ।
𑌭𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌃 𑌕𑍍𑌵𑌥𑌿𑌤𑌾 𑌧𑌾𑌨𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌯𑍋 𑌬𑍀𑌜𑌾𑌯 𑌨𑍇𑌷𑍍𑌯𑌤𑍇 ।’

வறுத்த பயறும் சமைத்த நெல்லும் விதைக்குதவுமோ? விஷய ஸுகத்தை நாஶம் செய்வது பகவத்ப்ரேமை. காமபோகத்தைப் பரம புருஷனிடம் இச்சித்தால் காமம் கெடும்; போகமும் வாராது. அதற்கு த்ருஷ்டாந்தம் கோபஸ்த்ரீகளே. இதெல்லாம் நான் கற்று, உன்னிடம் விஷயஸுகத்தை இச்சித்து, விஶ்லேஷ ஶ்ருங்காரத்தை அநுபவமும் செய்ய வொண்ணுமோ? மநோரதங்களின் ப்ரவாஹங்களுக்கு அணைபோட அமையாதென்பர். ஆசைக்குப் பரிமிதி இல்லை யென்பர். ஆதலால் அத்யந்தம் அபலையான என்னை

ஆழ்வாரைப்போல் உன்னிடம் ப்ரேமையை வளர்க்கச் சொல்வையோ! ஆழ்வார்க்கு அது தகும்; என் தத்கால நிலைக்குத் தகுமோ? ஆழ்வார்க்கு அது ஸாத்யம்; எனக்கு ஸாத்யமோ? உன் குற்றேவலை நான் வேண்டுகின்றேன். வேறொன்றும் வேண்டுகின்றேனில்லை. அதை நீ எனக்கு இப்போதே தரவேண்டுமென்று ப்ரார்த்திக்கின்றேன்.”

“விஷ்ணுசித்தன் கன்னிகை அநுஷ்டித்த மார்க்கத்தை எனக்கு ஓதுவையோ! அவள் உன்னை மணவாளனாக வரித்தாள். உன்னிடம் அவளை ஆகர்ஷித்து அவள் ப்ரார்த்தனையை அங்கீகரித்தாய். வேதவதி உன்னை நாதனாக அபேக்ஷித்துத் தவம் புரிந்தாள். அக்நிரூபதாரியாய் அவளை நீ உட்கொண்டாய். லோகத்தார் அறிந்தபடியே, தங்கட்கு விவாஹத்தை அவர்கள் உன்னிடம் வேண்டினார்கள். என்க்கு விவாஹம் ஆய்விட்டதே! அவர்கள் அநுஷ்டாநம் எனக்குதவுமோ?”

“ஶரண்யா! நான் என் செய்வேன்! ஆலயம் சென்று உன் திவ்யமூர்த்தி தர்சநம் செய்யலாமென்றால், வீட்டின் வெளியே செல்ல என் மநஸ் இசையவில்லையே! புருஷர் கண்களுக்கு லக்ஷ்யமாகத் தக்க ரூபத்தை நீ எனக்குத் தந்தாய் என்பார்கள். நான் ஸதியாயிருந்தாலும் தாய் வீடே எனக்கு இருப்பிடமாயிற்று. புருஷர்களில் யோக்யரும் உண்டு; துஷ்டரும் உண்டு. அவர்கள் கண்களில் பட நாணமாயிருக்கிறது. மிகவும் பயப்படுகின்றேன். ஆபரணங்களைக் கழற்றியெறியச் சொல்வையோ? எனக்கு ஆபரணங்களேது? பிதாவும் உபபந்நரன்று; பர்த்தாவும் நகைகள் தந்திலர். நானிருக்கும் ஸ்திதியைக் காட்டிலும் வைதவ்யம் எனக்குக் குணமன்றோ? அவ்வண்ணம் நான் எண்ணக்கூடாது; என்னுடைய பதி இருக்கின்றாரே! ஆனால் என் கஷ்டத்தைச் சொல்கின்றேன். ரூபவிகாரத்தை நானாகச் செய்ய அமையுமோ? என் காயக்லேசத்தால் காலக்ரமத்தில் அது எனக்கு உண்டாகலாம். அதுவரையில் என் செய்வேன்! ஸ்த்ரீகளுடைய ஸாதுத்வ விஷயத்தில் ஜநம் ப்ராயேண துர்ஜநமாகும் என்பார்களே.”

“ஆதலால் இவ்வுலகில் உனக்கடிமை செய்ய எனக்கு இடமில்லை; உன்னடியார்க் கடிமையும் எனக்கு உற்றிலது. இந்த்ரிய மநோ

ஜயமுள்ள மாதர்கள் எவருடைய நோக்கத்தையும் லக்ஷ்யம் செய்ய மாட்டார்கள்; எவருடைய வார்த்தைகளையும் பாராட்டமாட்டார்கள். அப்படிப்பட்ட மாதர்களும் உளரோ? தேவாதிராஜ! நான் சிறு பெண்; ஜ்ஞாநமற்றவள்; தபஸ்ஸற்றவள்; சக்தியில்லாதவள்; பலமில்லாதவள்; பேதை; யுக்தாயுக்த விசார ஸாமர்த்யம் எனக்கில்லை. ‘[illegible]’ ஆதலால், ஓ ஜநார்த்தநா! தாவி வையங்கொண்ட தடந்தாமரைகட்கே என்னைக் கூவிக்கொள்வாய். அதற்குக் காலம் குறுகிற்று.”

“நண்ணாதார் முறுவலிப்ப நல்லுற்றார் கரைந்தேங்க
எண்ணாத் துயர்விளைக்கு மிவையென்ன வுலகியற்கை
கண்ணாளா! கடல்கடைந்தாய்! உன்கழற்கே வரும்பரிசு
தண்ணாவா தடியேனைப் பணிகண்டாய் சாமாறே.”

* * * * * *

“ஆமாறொன் றறியேன்நான் அரவணையா யம்மானே!
கூமாறே விரைகண்டாய் அடியேனைக் குறிக்கொண்டே.”

* * * * * *

“.................................... கடல்வண்ணா! அடியேனைப்
பண்டேபோல் கருதாதுன் னடிக்கேகூவிப் பணிகொள்ளே.”

* * * * * *

“ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப
கண்டசதிர் கண்டொழிந்தேன் அடைந்தேனுன் திருவடியே.”

இவ்வண்ணம் இரவெல்லாம் நினைந்தொழித்தாள். முடிவில் தன்னுடைய தேஹாவஸாநத்தையும், ததநந்தரம் நித்யவிபூதியில் அவன் திருவடி ஸேவையையும் விளம்பமின்றித் தரும்படி அவனை ப்ரார்த்தித்தாள். இப்படி மனந்தளர்ந்து, பெருமூச்செறிந்து, கண்ணீர்மல்கி, மாதவனையே நினைத்திருந்த பெண்மணிக்குக் கொஞ்சம் நித்ரையும் இராமுடிவில் நேரிட்டது.

நித்ரையில் பகவத் க்ருபையால் ஸ்தூல சரீரத்தை விட்டு வெளியில் சென்றாள். ஓர் நதிக்கரையில் தான் நிற்பதைக் கண்டாள். அது ஒரு மணல் மேடு. தன்னைச் சுற்றிப் பல வ்ருக்ஷங்களைக் கண்டாள். அவை யாவும் புஷ்பித்து நின்றன. நாற்புறமும் புஷ்பங்களின் மணம் பரவின. மரங்களில் பக்ஷி ராசிகள் ஆநந்தமாக உட்கார்ந்து

சப்தம் செய்தன. அது ஸாயம் ஸந்த்யாகாலம். சந்திரன் உதித்துக் கீழ்த்திசையை அலங்கரித்தான். ஆகாசத்தில் நக்ஷத்ரங்கள் தலைகாட்ட ஆரம்பித்தன. காலமும் தேசமும் அவ்வளவு ரமணீயமாய் நிற்கத் தான் ஒன்றியாய் அப்ரதேசத்தில் இருப்பதைப்பற்றி வியந்தாள். ஆனால் அவள் சித்தம் ப்ரஸாதத்தை அடைந்து நின்றது. அவளுக்கு யாதொரு பயமும் தோன்றவில்லை.

இவ்வண்ணம் அவள் நின்றுகொண்டிருக்கையில், மதுரமாகவும் அவள் மநஸ்ஸை ஹரிக்கத்தக்கதாகவும் ஓர் திவ்யகாநம் அவள் காதுகளைப் பூரித்தது. “இதென்ன ஆச்சர்யமாக இருக்கின்றதே! இந்த ப்ரதேசத்திற்கு நான் எவ்வண்ணம் வந்தேன்? இப்படிப்பட்ட திவ்ய காநம் யார் செய்கின்றார்களோ?” என்று அவள் எண்ணுகையில், ஸமீபத்தில் ஒரு மஹாபுருஷன் வரக் கண்டனள். ‘கடலோ! மலையோ! முழுநீலக்கல்லோ! காயாநறும் போதோ! படர்பூங்குவளை நாண்மலரோ! நீலோத்பலமோ! பானலோ!’ என்றிப்படியெல்லாம் அந்தப் புருஷனுடைய தூரதர்சநத்தை நிலாவெளிச்சத்தில் அவள் சங்கித்துக்கொண்டிருக்க, சாருப்ரஸந்நவதநனாய், மந்தஹாஸத்துடன் அவளைக் கடாக்ஷிப்பவனாய், நீலமேகம் போன்ற திருமேனியனாய், மஞ்சள்பட்டாடை தரித்தவனாய், பருத்து நீண்ட நான்கு திருத்தோள்களுடையவனாய், சங்கசக்ரகதாபாணியாய், பத்மபத்ரங்களைப் போன்ற தீர்க்கமான நேத்ரங்களுடன் கூடினவனாய், அழகுடன் வளைந்த புருவங்களும் அழகான மூக்கும் காதுகளும் கபோலங்களும் கொண்டவனாய், கோவைப்பழம் போன்ற அதர பல்லவம் சோபிக்கின்றவனாய், அகன்ற திருமார்பில் ப்ரஹ்ம ஸூத்ரமும் கௌஸ்துப மணியும் அலர்மேல்மங்கையும் விளங்கப் பெற்றவனாய், திவ்யாபரண பூஷிதனாய், நவரத்நங்கள் ஜ்வலிக்கின்ற கிரீடகுண்டலங்கள் அணிந்தவனாய், வநமாலை தோள்களின் மீது அசையப்பெற்றவனாய் அவன் தன்னிடம் நெருங்கக் கண்டாள். பல நாள் கற்றும், கேட்டும், நினைத்தும், த்யாநித்தும், அவள் உள்ளடக்கிய உருவம் எதிரில் வந்து நிற்கக் கண்டாள். தரையில் வீழ்ந்தாள். திருவடிகளைப் பற்றினாள். தனது கண்ணீரால் அவற்றை நீராட்டினாள். “கமலநாத! இந்த அநாதையை ரக்ஷிப்பாய்” என்று இவ்வளவு தான் அவள் சொல்லத் துணிந்தாள்.

உடனே ப்ருந்தாவந சரணும் விஸ்தரித்த க்ருபை கொண்டவனாய், தன் திருக்கைகளால் அவளைத் தூக்கி எழுப்பி, அவள் சிரஸ்ஸின்மேல் தன் அபய ஹஸ்தத்தை வைத்தான். “ வத்ஸே! உன் ஸங்கல்பம் எனக்குத் தெரியும். என்னை நீ வழிபட்டது வீணாகமாட்டாது. உனது பக்தியை நான் உகந்தேன். உனது இஷ்டம் கைகூடும் ” என்று சொன்னான்.

அப்போது ஜநகத்தின் பேராநந்தத்தை வர்ணிக்கப் பொருந்துமோ? அது அவள் கண்களினின்று ஆறாய்ப் பெருகிற்று. உடனே விழித்துக்கொண்டாள். அவள் ஸ்பஷ்டமாகக் கண்டதெல்லாம் காணாமல் போயின. கேட்ட சொற்களோ இன்னும் அவள் கர்ணங்களை விடவில்லை. தன்னுடைய அநுபவம் ஸ்வப்நாநுபவமென்று தெரிந்துகொண்டாள். “ ஆனால் என்ன? என் அநுபவம் பொய்யாகுமோ? புருஷோத்தமன் வேறு எவ்வண்ணம் தனது க்ருபையை ஆவிஷ்கரிப்பன்! நான் அவனைத் தர்சித்தது நிஜமே. முகுந்தா! உன் கருணையைப் பெற்றேன். என் துக்கத்தை விட்டேன். நான் வேண்டும்போது இந்தத் தர்சநம் தந்தருள்வாய். என் அந்திம ப்ரயாணத்தில் என் கண்முன் நிலைத்து நிற்பாய் ” என்று ப்ரார்த்தித்தாள்.

மறுநாள் கேசவாசார்யர் ஸபத்நீகராய் ஜநகநந்தினியை அழைத்துக்கொண்டு தேவாதிராஜன் ஸந்நிதிக்குச் சென்றார். அந்த ஸந்நிதி வீதி வாஸிகளுக்கு அபூர்வகாட்சி. இதென்னவென்று யாவரும் யோசித்தார்கள். ஜநகத்தின் கதை தெரியாதவர் யாருமில்லை. முன் அவள் ஸௌந்தர்யத்தை விஸ்மயத்துடன் கண்டு ஆநந்தித்த ஜநங்கள் அன்று அவள் தோற்றத்தைக் கண்டு கஷ்டம்கொண்டார்கள்.

‘[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥’

என்கிற ச்லோகம், ஜநகநந்தினீ நிமித்தமாகவே பிறந்ததுபோல் தோன்றியது. அவளுடைய கபோலங்கள் வெளுத்து இளைத்தன. ஆகிலும் அவற்றில் நின்ற ஸௌந்தர்யம் அவற்றை விடவில்லை.

ஸம்ஸ்காரமில்லாமையாலும், அன்று அவள் செய்த ஸ்நாநத்தாலும், கட்டுக்குள் அடங்காமல் அவளுடைய கூந்தல் மயிர்கள் விளையாடிக்கொண்டு அவள் வதநத்தை மறைத்தன. அவள் ஶோகமே ரூபமெடுத்தால்போல் தோன்றினாள். பர்த்தாவின் வியோகம் உடல்கொண்டதோவென விளங்கினாள். இன்னும் இரவெல்லாம் தூக்கமின்றிக் கண்ணீர் விட்டமையாலும், பெருமூச்சுகளின் ஔஷ்ண்யத்தாலும், கண்கள் செவந்தும், பருத்தும், அதரோஷ்டங்கள் வாட்டமிடைந்தும், ‘[illegible]’ எனும் வர்ணனையும் ஜநகநந்தினியின் தோற்றத்துக்குப் பொருந்தியது. அவளைப் பார்த்துத் துக்கிக்காதவர் யாருமில்லை.

ஸ்ரீநிவாஸன் வீட்டு வாசலில் உட்கார்ந்திருக்கையில் ஸந்நிதிக்குப் போனவர்களைப் பார்த்தான். “இதென்ன புதுமையாயிருக்கின்றதே!” என்று கொண்டு எழுந்து நின்றான். அவர்கள் சிறிது தூரம் சென்றபிறகு பின் தொடர்ந்தான்.

கோவிலுக்குள் சென்று, த்வஜஸ்தம்பத்தின் அருகில் ஸேவித்துவிட்டு ப்ரதக்ஷிணமாகச் சென்றார்கள். ஆழ்வார், பாஷ்யகாரர், நிகமாந்தார்யன், இவர்கள் ஸந்நிதிகளின் முன் நின்று ஸேவித்தார்கள். பிறகு தாயார் ஸந்நிதிக்குச் சென்றார்கள். அவ்விடம் பத்மநாபாசார்யரும், மாதவாசார்யரும் உபஹாரங்களுடன் காத்துக்கொண்டிருந்தார்கள். தாயாரைத் தர்சித்துவிட்டு, ஸ்ரீ அழகிய சிங்கர் ஸந்நிதி முன்பாக நின்று பெருமாளை ஸேவித்துக்கொண்டு மலை ஏறினார்கள். பெருமாள் ஸந்நிதி முன்பாகப் பல தரம் ப்ரணாமம் செய்தார்கள். பிறகு கேசவாசார்யர் உட்கார்ந்து ஸங்கல்பம் செய்துகொண்டு, “ குழந்தாய்! பெருமாளை ஸேவித்துக்கொண்டிரு. உபாயாநுஷ்டாந ஸமயோசிதமானபடி உன் புத்தியை ஸ்திரப்படுத்திக்கொள் ” என்று சொல்லிவிட்டுப் பெருமாள் ஸந்நிதிக்குள் சென்றனர். ஸந்நிதி கிங்கரர்கள் வெளியே நின்றார்கள்.

பத்மநாபாசார்யர் மாதவாசார்யருடன் முன் மண்டபத்தில் ஓர் பக்கமாக உட்கார்ந்தனர். ஸ்ரீநிவாஸனும் அவ்விடம் போய் அவர்களுடன் உட்கார்ந்தான். “ ஸ்வாமிந்! இன்றைக்கென்ன

விசேஷம்? மாமா, அவர் பத்நீ ஜநகம், எல்லோரும் சேர்ந்து ஸந்நிதிக்கு வருவது அபூர்வமாச்சுதே! தேவரீர்களும் இவ்வுபஹாரங்களுடன் எழுந்தருளிய விஶேஷமென்ன?" என்று பத்மநாபாசார்யரை வினவினன்.

"ஸ்ரீநிவாஸா! உனக்கொன்றும் தெரியாதுபோல் இருக்கிறது. ஜநகத்துக்குப் பரந்யாஸம் நடக்கின்றது" என்று பத்மநாபாசார்யர் சொன்னார்.

"ப்ரந்யாஸத்துக்கு த்வரை என்ன? அவளுக்கு வயஸ்ஸு இன்னும் பதினேழு ஆகவில்லையே!" என்றனன் ஸ்ரீநிவாஸன்.

"ப்ராயேண நம்மவர்கள் சிறு வயஸ்ஸில் பரந்யாஸம் செய்துகொள்வதில்லை. அதிகாராபாவம் அதற்குக் காரணம். ஜநகம் அதற்கு அதிகாரியாயிருக்கின்றாள் என்பது உனக்குத் தெரிந்த விஷயமே. உபாயாநுஷ்டாந விஷயமாக அவளுக்கு த்வரை உண்டாவதற்குக் காரணமும் நீ யோசிக்கத்தக்கதே" என்றார் பத்மநாபாசார்யர்.

ஸ்ரீநிவாஸன் வேறொன்றும் சொன்னானில்லை. இதெல்லாம் உசிதமாயில்லையென்று அவன் மநஸ் துடித்தது. எழுந்தான், அவ்விடம் விட்டு நடந்தான்.

ஜநகமோ சரீரத்தில் சக்தியுள்ளவரையில் பெருமாளை ஸேவித்தாள். பிறகு சிறிது காலம் கரங்களை அஞ்ஜலி பத்தங்களாய் வைத்துக்கொண்டு நின்றாள். மறுபடி தண்டன்ஸமர்ப்பித்தாள்; மறுபடி முன்போலவே நின்றாள். கேசவாசார்யர் ஸந்நிதிக்குள் இருந்தவரையில் அவ்வண்ணம் செய்துகொண்டிருந்தாள். நிற்கும் காலமெல்லாம் பிதாவின் ஆஜ்ஞையைச் சிரஸா வஹித்து த்வயத்தையும், த்வயவிவரணமான ஆளவந்தார் ஶ்லோகங்களையும், பாஷ்யகாரர் அருளிச்செய்த ஶ்லோகத்தையும், ந்யாஸதசகத்தையும் க்ரமேண அநுஸந்தித்தாள். பிறகு, ஆழ்வார் பாசுரங்களை அநுஸந்திக்க ஆரம்பித்தாள்.

"மாயம் செய்யேலென்னை உன் திருமார்வத்து மாலைநங்கை
வாசம்செய் பூங்குழலாள் திருவாணை நின்னாணைகண்டாய்
நேசம் செய்துன்னோடென்னை யுயிர் வேறின்றியொன்றாகவே
கூசம்செய்யாதுகொண்டாயென்னைக்கூவிக்கொள்ளாய்வந்தந்தோ"

"கூவிக்கொள்ளாய் வந்தந்தோ!என் பொல்லாக்கருமாணிக்கமே!
ஆவிக்கோர் பற்றுக்கொம்பு நின்னலால் அறிகின்றிலேன்நான்
மேவித்தொழும்பிரமன் சிவனிந்திரனாதிக்கெல்லாம்
நாபிக்கமல முதற் கிழங்கே! உம்பரந்ததுவே."

முடிவாக நிகமாந்தார்யன் செய்யுளை நினைவுற்றாள்.

"நின்னருளாங் கதியன்றி மற்றொன்றில்லேன்
நெடுங்காலம் பிழைசெய்த நிலைகழிந்தேன்
உன்னருளுக் கினிதான நிலையுகந்தேன்
உன்சரணே சரணென்னும் துணிவுபூண்டேன்
மன்னிருளாய் நின்றநிலை யெமக்குத்தீர்த்து
வானவர்தம் வாழ்ச்சிதரவரித்தேனுன்னை
இன்னருளால் இனியெமக்கோர் பரமேற்றாமல்
என்திருமால் அடைக்கலங்கொள் என்னைநீயே."

இதற்குள் பகவானை ப்ரார்த்தித்துவிட்டுக் கேசவாசார்யர் வெளியில் வந்தார். ஸந்நிதி கிங்கரர்கள் உள்ளே சென்றார்கள். பிறகு கேசவாசார்யரும் ஹரிப்ரியையும் ஜநகநந்தினியும் ஸந்நிதிக்குள் ப்ரவேசித்தார்கள். பத்மநாபாசார்யரும் மாதவாசார்யரும் உபஹாரங்களுடன் பின் தொடர்ந்தார்கள். உபஹாரங்களைப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்துவிட்டுப் பெருமாளை யாவரும் நன்றாகத் தர்ஸித்தார்கள். "ஜநகம்! ப்ரணதார்த்திஹரன் என்னுடைய ப்ரார்த்தனையைத் திருவுள்ளம் பற்றினான். இனி உன்னுடைய ஆத்மரக்ஷாபரம் வரதனைச் சேர்ந்தது. ரக்ஷா பலமும் அவனுடையதே. அவற்றைப்பற்றி இனியுனக்கு யாதொரு கவலையும் வேண்டியதில்லை. நீ இனிமேல் நிர்ப்பரையாக இருக்கலாம். இங்குள்ளவரையில் உசிதமான பகவத் கைங்கர்யங்கள் உனது சரணாகதியின் பலமென்றறி. உன்னுடைய சரீராவஸாநத்திலே, நித்யவிபூதியில், பகவான் உகந்தருளிய நித்ய கைங்கர்யங்கள் க்ரமமாக உனக்கு ப்ராப்தமாகும்" என்று கேசவாசார்யர் தம் புத்ரியை நோக்கிச் சொன்னார். இந்த ப்ரகாரம் ஜநகநந்தினிக்கு உபாயாநுஷ்டாநம் நிறைவேறிற்று.

திரும்பி யாவரும் கேசவாசார்யர் க்ருஹம் வந்து சேர்ந்தார்கள். ரேழித் திண்ணையில் கேசவாசார்யரும் பத்மநாபாசார்யரும் மாதவாசார்யரும் உட்கார்ந்தார்கள். ஹரிப்ரியை உள்ளே சென்றாள். ஜநகநந்தினி பிதாவைப் பலதரம் ப்ரணாமம் செய்தாள். கேசவாசார்யரும், "குழந்தாய்! உன்னிடம் மஹாதயாதீசன் க்ருபை செய்யட்டும். அவன் திருவடிகளில் உனது பக்தி விஸ்தரிக்கட்டும். உன்னை ஸத்வ்ருத்தத்திலே அவன் ஸ்திரப்படுத்தி ரக்ஷிக்கட்டும்" என்று சொல்லி ஜநகத்தை ஆசீர்வதித்தார்.

அன்றிராத்ரி கேசவாசார்யர் பகவத் ஸந்நிதிக்குப் போயிருக்கையில், ஸ்ரீநிவாஸன் கேசவாசார்யர் க்ருஹத்துக்கு வந்தான். ரேழியில் ஹரிப்ரியையும் ஜநகநந்தினியும் உட்கார்ந்திருக்கக் கண்டான். "அம்மா! ஜநகம் பரந்யாஸம் செய்துகொண்டாளா? என்று ஹரிப்ரியையைப் பார்த்துக் கேட்டான்.

"ஆமாம் பண்ணிக்கொண்டாள். நீயும் அப்போது கோவிலுக்கு வந்திருந்தாயே!" என்று சொன்னாள் ஹரிப்ரியை.

"அம்மா! பரந்யாஸவிஷயமாக ஜநகத்துக்கு இவ்வளவு அவஸரம் என்ன?" என்று ஸ்ரீநிவாஸன் கேட்டான்.

"அது பெண்ணுக்கும் பிதாவுக்கும் தெரியும். என்னைக் கேட்டால் நான் என்ன சொல்வேன்?" என்று ஹரிப்ரியை சொன்னாள்.

"மாமாவை நான் எப்படிக் கேட்பேன்? ஜநகம்! உன்னைத்தான் கேட்கின்றேன். உனக்கு ஶரணாகதியில் இவ்வளவு த்வரை என்ன?" என்றான் ஸ்ரீநிவாஸன். ஜநகம் மௌநமாயிருந்தாள்.

"ஜநகநந்தினீ! ஏன் எனக்கு ப்ரத்யுத்தரம் தருகின்றாய் இல்லை? என்னுடன் ஸம்பாஷிக்க உனக்கு ப்ரியமில்லையோ?" என்று ஸ்ரீநிவாஸன் மறுபடியும் சொன்னான்.

"உன்னுடன் பேசக்கூடாத நியமத்தை நான் வைத்துக்கொள்ளவில்லை. நீ கேட்பதற்கு ஸரியான ப்ரத்யுத்தரம் தோன்றவில்லை. நான் இஷ்டப்பட்டேன். அப்பாவை ப்ரார்த்தித்தேன்.

அவர் அநுக்ரஹித்தார். இதெல்லாம் நீயே அறிந்துகொண்டிருக்கலாம். இன்னும் யாது சொல்ல வேண்டுகின்றாய்?" என்றனள் ஜநகநந்தினி.

"உனக்குப் பரந்யாஸத்தில் த்வரை ஏன் என்று நான் கேட்டேன்" என்றான் ஸ்ரீநிவாஸன்.

"த்வரை உண்டாயிற்று. என் தத்கால ஸ்திதியில் நான் உபாயாநுஷ்டாநத்தை வேண்டினேன்" என்றாள் ஜநகநந்தினி.

"ஜநகம்! இப்படிப்பட்ட காலம் வரப்போகின்ற'தென்று நான் எண்ணினேனில்லை. இன்னும் என்ன வரப்போகின்றதோ வரட்டும். வந்ததையெல்லாம் அநுபவித்துத்தான் தீர வேண்டும்" என்று சொல்லிவிட்டு ஸ்ரீநிவாஸன் வெளியே சென்றான்.

பத்ராதிபர்.

ஸ்ரீ:.

வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

	ரூ.	அ.	பை.
1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்)	0	2	0
2. ஸ்ரீ த்ராவிடவேத தாத்பர்யம்—(ஸ்ரீ. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது)	0	2	0
3. ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யராற் செய்யபட்ட உபந்யாஸம்)	0	2	0
4. ஸ்ரீ பாகவத தஶஶ்லோகீ— (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர்)	0	4	0
5. ஸ்ரீ சதுஶ்லோகீ விவரணம்	0	4	0

இவை வேண்டுமவர்கள் சென்னை, மயிலாப்பூர், கேசவப்பெருமாள் ஸந்நிதிவீதியில் இருக்கும் ஸ்ரீ வேதாந்த தீபிகை மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஶ்ரீ:

அங்காத்யயந நிர்ணயம்.

விஶ்ராணநாய ஹ்ருத்யஸ்ய வேதாந்தஸ்ய யதாஶயம் ।
ஜாயதே ஜந்துநஃ பும்ஸாம் தந்த்ரத்வே ஸ்வாதுவர்ஷணே ॥

ஸ்ரீ அபஶூத்ராதிகரணத்தினால் வேதத்தைக் கேட்கவும் படனம் செய்யவும் ஶூத்ரர்களுக்கு அதிகாரம் இல்லையென்று ஏற்பட்டாலும், இதிஹாஸபுராண படனத்தில் ஶூத்ரர்களுக்கு அதிகாரம் உண்டென்றும், அதற்கு ஸஹகாரமான ப்ரமாணங்கள் இருக்கின்றன வென்றும் சில வித்வான்கள் அபிப்ராயப்பட்டும், அவர்கள் இதிஹாஸ புராணங்களைப் படிப்பதற்கு அநுகூலமாகச் சில ப்ரமாணங்களை எழுதி அனுப்பினதோடு அவர்கள் படிக்கக்கூடாதென்று சொல்வதற்கு ஆக்ரஹம் காரணமென்றும் எழுதியிருக்கிறார்கள்.

அவர்கள் சொல்லும் ப்ரமாணமாவது:— ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் சேர்ந்த குருபரம்பராஸாரத்தில் ஸாரப்ரகாஶிகா வ்யாக்யானத்தில்,

'ஸ்வப்ரபந்தஸ்ய ஸர்வாதிகாரகத்வாச்ச்ருதிமநுதாஹ்ருத்ய ஸ்ம்ருதிருதாஹ்ருதா'

என்றும், அதே இடத்தில் ஸாரவிவரணியில்,

'த்ரைவர்ணிகைகவிஷயத்வாத் ஶ்ருதேஸ்து கேவலம் ஸ்வப்ரபந்தஸ்ய ஸ்த்ரீஶூத்ராத்யதிகாரகத்வாச் ஸ்ம்ருதிருதாஹ்ருதா'

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு அர்த்தம்:— தாம் செய்தருளுகிற ரஹஸ்யத்ரயஸார க்ரந்தம் ஶூத்ரர்களும் காலக்ஷேபம் செய்யக்கூடியதாகச் செய்யவேண்டியிருத்தலால், ஶ்ருதியை ஓட்டாமல் ஸ்ம்ருதியைத் தேசிகன் ப்ரமாணமாக எடுத்தார் என்பது தான். இதனால் ஶூத்ரன் ஷை க்ரந்தத்தை ஆசார்யர்களிடம் காலக்ஷேபம் பண்ணலாமென்று ஏற்படுகிறது. ஷை க்ரந்தத்தில் ஸ்ரீகீதாஶ்லோகங்கள் இருக்கிறபடியினால் ஸ்ரீகீதையையும் ஶூத்ரர்கள் வாசிக்கலாம்.

'ஶ்ராவயேச்சதுரோ வர்ணாந் க்ருத்வா ப்ராஹ்மணமக்ரதஃ'

எபதாலும்,

'ஸ்த்ரீஶூத்ரத்விஜபந்தூநாம் த்ரயீ ந ஶ்ருதிகோசரா ।
இதி பாரதமாக்யாநம் க்ருபயா முநிநா க்ருதம்'

என்பதாலும் ஸ்ரீபாரதத்தை ஶூத்ரன் அத்யயநம் பண்ணலாமென்று ஏற்படுகிறது. ஸ்ரீகீதை அதில் அடங்கிய தாகையால் அதையும் படிக்கக் கேட்கவேண்டியதில்லை.

சரம ஶ்லோகத்தை ஶூத்ரர்களுக்கு உபதேசிக்கக் காண்கையினாலும், ஸூதபுராணிகர் புராண ப்ரவசநம் செய்தது ப்ரஸித்தமாகையினாலும், ராமாயணத்தில் 'ஶூத்ரோऽபி மஹத்த்வமீயாத்' என்று சொல்லுகையினாலும், இக்காலத்தில் ஶூத்ரர்கள் இதிஹாஸ புராணங்களைப் படிக்கக் காண்கையினாலும், ஸ்ரீகீதா முதலானவைகளை ஶூத்ரர்கள் வாசித்துக் காலக்ஷேபாதிகளைச் செய்யலாமென்பது தான்.

ஜநார்த்தநஸ்ய கீதாஸு வ்யாஸாத் ஸஞ்ஜயாச்ச மஹாத்மநஃ ।
ஶிக்ஷணம் ஶூத்ரஜாதீநாம் ஶ்ரவணம் ஶ்ரேயஸே ஹிதம் ॥

ஸ்ரீகீதாபுராணார்த்தத்தை ஶூத்ரர்கள் கேட்கக்கூடாதென்று சொல்பவர் ஒருவரும் இல்லை. கீதாஶ்லோகத்தை ஶூத்ரர்கள், வாசிக்கக் கூடாதென்பது ப்ராமாணிக மென்பதைத் தெரிவிக்கிறோம். மேலே சொல்லப்பட்ட ப்ரமாணங்கள், கேட்கமட்டும் அநுமதியைக் கொடுக்குமே தவிர அதைப் படிப்பதற்கு ப்ரமாணமாகமாட்டா.

ஸாரப்ரகாஶிகா, ஸாரவிவரிணியிலும், '𑌸𑌰𑍍𑌵𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌕𑌾𑌤𑍍' என்றும், '𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌕𑌾𑌤𑍍' என்றும், வாக்யங்களை எல்லாரும் கேட்கலாம் என்றும், ஸ்த்ரீ ஶூத்ரர்கள் கேட்கலாமென்பதைத் தான் சொல்லுகிறது. '𑌶𑍍𑌰𑌾𑌵𑌯𑍇𑌚𑍍𑌚𑌤𑍁𑌰𑍋 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑍍' என்கிற வாக்யத்திலும் '𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌶𑍂𑌦𑍍𑌰𑌦𑍍𑌵𑌿𑌜𑌬𑌨𑍍𑌧𑍂𑌨𑌾𑌂 𑌤𑍍𑌰𑌯𑍀 𑌨 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌗𑍋𑌚𑌰𑌾 । 𑌇𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌂 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌮𑍁𑌨𑌿𑌨𑌾 𑌕𑍃𑌤𑌮𑍍' என்கிற வாக்யத்தில், '𑌨 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌗𑍋𑌚𑌰𑌾 𑌇𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤𑌂 𑌕𑍃𑌤𑌮𑍍' என்பதின் தாத்பர்யத்தைப் பார்த்தால் பாரதத்தைக் கேட்பதற்காகவே வ்யாஸர் சொன்னார் என்பது நன்கு விளங்கும். ஏனென்றால்: வேதத்தை ஸ்த்ரீ ஶூத்ரர்கள் கேட்கக்கூடாது என்பதற்காகவே பாரதத்தைச் செய்தார் என்று சொன்னால், படிப்பதற்காகச் செய்தார் என்பது ஏற்படாது. இதை '𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌭𑌾𑌰𑌤𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 𑌶𑍍𑌰𑌵𑌣𑌮𑌭𑌿𑌮𑌤𑌂 𑌪𑌾𑌪𑌶𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑍈' என்று ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்திருக்கிறார். '𑌵𑌾𑌚𑌨𑌮𑌭𑌿𑌮𑌤𑌂' என்று சொல்லவில்லை.

சரம ஶ்லோகத்தை ஶூத்ரர்களுக்கு உபதேசிக்கும் விஷயத்தில் அநாதியான நிர்விவாத ஶிஷ்டாநுஷ்டாநம் இருப்பதால் ஸ்ரீ அஷ்டாக்ஷரத்தை தாந்த்ரிகமாக அவர்களுக்கு உபதேசிப்பது போல், இந்த ஶ்லோகத்தைத் தனித்து கீதாநுபூர்வியை விட்டுப் பிரித்தெடுத்து உபதேசிப்பதால், தாந்த்ரிக துல்யமாக உபதேசிக்கலாம். ஸங்க்ஷேப ராமாயணம் கடைசியில் '𑌪𑌠𑌨𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌃' என்கிற ஶ்லோகம் அதிக பலத்தைச் சொல்வதினால் அர்த்தவாதமாகையினால் [illegible] தாத்பர்யமாகாது. அங்கு கோவிந்தராஜீய வ்யாக்யாநத்தில் 'சூத்ரனும் படித்தால் தன் ஜாதிக்குள் மேன்மையை அடைவான்' என்று முதலில் வ்யாக்யாநம் பண்ணிவிட்டு, சூத்ரனுக்குப் படிக்க அதிகாரமில்லாமையை நினைத்து, '𑌸𑍍𑌯𑌾𑌤𑍍' என்னும் பதத்துக்கு '𑌕𑌥𑌞𑍍𑌚𑌿𑌤𑍍' அதாவது 'எப்படியாவது படித்தாலும், ஶாஸ்த்ர நியமத்தை விட்டுப் படித்தாலும், ஏகதேசத்தைப் படித்தாலும்' என்று அர்த்தம் பண்ணுகிறார். பின்பு, சூத்ரனுக்கு இதிஹாஸ புராணங்களைக் கேட்க மட்டும் தான் ஸ்ம்ருதிகள் அதிகாரத்தைக் கொடுக்கின்றன. படிக்க அதிகாரத்தைக் கொடுக்கவில்லை. ஆனாலும் ரிஷி சொல்லிவிட்டபடியினால் ரதகார ந்யாயத்தினால் ஸம்க்ஷேப ராமாயணத்தை மாத்ரம் படிக்க அதிகாரம் உண்டு என்று சொல்லிவிட்டு, கடைசியில் '𑌯𑌦𑌾' என்று ஆரம்பித்து, வேதோப ப்ருஹ்மணத்தில் சூத்ரர்களுக்கு ஸர்வதா அதிகாரமில்லாததனால் '𑌪𑌠𑌨𑍍' என்கிற பதத்துக்கு '𑌶𑍃𑌣𑍍𑌵𑌨𑍍' [கேட்பது] என்பது அர்த்தம் என்று ஸித்தாந்தம் செய்திருக்கிறார்.

இப்படிச் சொன்ன பக்ஷங்களில் படிப்பது வால்மீகிக்கு அநிஷ்டமென்பதை '𑌶𑍂𑌦𑍍𑌰𑍋𑌽𑌪𑌿' என்கிற '𑌅𑌪𑌿' ஶப்தத்தினால் வித்வான்கள் அறியலாம். இது, ஈஶ்வரனை நிந்தித்தாலும் எல்லா பாபமும் போகும் என்பதுபோல் அர்த்தவாதம்.

மூன்று வர்ணத்தாருக்குப் படிக்கலாமாகையினால், ஶப்தப்ரயோக ஸௌகர்யத்துக்காக எல்லாருக்கும் பொதுவாக '𑌪𑌠𑌨𑍍' என்று ஶப்தத்தை ப்ரயோகித்து, இதற்கு மேல் ஷ வ்யாக்யாநத்தில் '𑌪𑌠𑌨𑍍' என்கிற ப்ரயோக விதி பலத்தினால் சூத்ரர்களும் நிஷாதஸ்தபத்யதிகரண ந்யாயத்தினால் படிக்கலாம் என்று சொன்னது அதிவாதம். அப்படிக்கு ஆனாலும், ஸ்ரீ கீதா க்ரந்தத்தில் படந விதி இல்லாததனால் அந்த ந்யாயம் ராமாயண மாத்ரத்தில் ப்ரவர்த்திக்குமே யல்லது மற்றதில் ப்ரவர்த்திக்காது.

ஸ்ரீ ஸூத புராணிகர், புராணம் இதிஹாஸம் இவைகளைச் சொன்னபடியினால் சூத்ரர்கள் கீதாத்யயநம் செய்யலாம் என்று சொல்வதும் உசிதமன்று. ஏனென்றால்: யாஜ்ஞவல்க்யர், '𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌾𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌤𑍍 𑌸𑍂𑌤𑌃' என்றும், மநுஸ்ம்ருதியில், '𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌤𑍍 𑌵𑌿𑌪𑍍𑌰𑌕𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌸𑍂𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌜𑌾𑌤𑌿𑌤𑌃' என்கையாலும், '𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌾𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌤𑍍 𑌸𑍂𑌤𑌃' என்று அமரகோஶம் இருப்பதாலும் ஸ்ரீ ஸூதர் ஶங்கர ஜாதியில் ஜநித்தவர்.

'ப்ரதிலோமேஷு ச ஶ்ரேஷ்டோ விஶேஷாத் ராஜஸம்மத: ।
யதாவதேவாத்யயநம் தஸ்ய ஸாரத்யம் க்ருஷி க்ரிய: ॥ நித்யம் த்விஜ
வதாசார உக்த: ஸூதஸ்ய வ்ருத்தய:'

என்கிற மநுஸ்ம்ருதியினல் ஸூதஜாதியில் பிறந்தவன் தர்மஶாஸ்த்ரங்களைத் தெரிந்து பிறருக்கு உபதேசிக்கலா மென்றும், ப்ராஹ்மணனைப்போல் தர்மங்களை அநுஷ்டிக்கலா மென்றும் ஏற்படுகிற படியினல் ஸ்ரீ ஸூதர் "சூத்ரஜாதி யல்லரென்றும் அவர் உபதேசிப்பது ந்யாயமென்றும் ஏற்படுகிறது.

ஆகையினல் ஸ்ரீ பாகவதம் ப்ரதம ஸ்கந்தத்தில்,

'த்வயா கலு புராணாநி ஸேதிஹாஸாநி சாநக ।
ஆக்யாதாந்யப்யதீதாநி தர்மஶாஸ்த்ராணி யாந்யுத ।"

என்றும், 'மந்யே த்வாம் விஷயே வாசாம் ஸ்நாதமந்யத்ர சாந்தஸாத்' என்றும் வாக்யங்களினல் அவர் ஸ்ரீ வ்யாஸரிடம் வேதாங்கங்களை அத்யயநம் செய்தா ரென்றும் சொல்லியிருக்கிறது. ஆகையால் சூத்ரர்கள் ஸ்ரீ கீதாத்யயநம் செய்வதற்கு ஸூதரை த்ருஷ்டாந்தமாகச் சொல்லக்கூடாது.

ஶிஷ்டர்களுடைய அநுஷ்டாநமானது ஶாஸ்த்ரங்களுக்கு விரோதமில்லாத இடத்தில் தான் ப்ரமாணமாகு மென்பதை ஸ்ரீ நிகமாந்த தேசிகன் அருளிச்செய்திருக்கிருர். சூத்ரர்கள் படிக்கக் கூடாதென்று ஶிஷ்டர்கள் நிஷேதித்த ஶிஷ்டாசாரமும் உண்டு. ஸ்ரீ நிகமாந்த தேசிகன் அருளிச்செய்த அதிகரண ஸாராவளி அத்யாயம் 3, பாதம்-3-ல் 'ஶூத்ராணாம் ஸாரதாதே: ஶ்ரவணநிஷேதம்' என்கிற ஶ்லோகத்தில்,

'வித்யாஸ்தாநாநி ஶூத்ரே த்யாஜ்யாநீதி கஶ்யப: வர்ணாய
ஶிஷ்டாசார்ய ஸ்ருஷ்டவ்யாநி'

என்கிற வாக்யத்திஞல் வித்யாஸ்தாந மென்கிற

'அங்காநி வேதாஶ்சத்வாரோ மீமாம்ஸா ந்யாயவிஸ்தர:
புராணம் தர்மஶாஸ்த்ரம் ச வித்யா ஹ்யேதாஶ் சதுர்தஶ'

என்பதை ஶூத்ரர்கள் உச்சரிக்கக்கூடாதென்று தர்மபுத்ரருக்கு ஸ்ரீ க்ருஷ்ணன் அருளிச்செய்ததாக ஸாதித்திருக்கிருர். அதன் வ்யாக்யாநத்திலும்.

'ஶூத்ராதேவ ஹி யோக்யாநி பாவநாநி ஹ்ருஷீகிணாம் ।
ஜ்ஞாநாநி ஜ்ஞாநஸம்பந்நைர் ஶூத்ரைஶ் ஶ்ரோதவ்யாநீதி யுதிஷ்டிர'

என்கிற பாரதஶ்லோகம் ப்ரமாணமாக எழுதப்பட்டிருக்கிறது. ஆகையினல் இந்த 14-க்குட்பட்ட இதிஹாஸ புராணங்களை நாலாவது வர்ணத்தார் படிப்பது ஸப்ரமாண மாகாதென்பது தான் ஸ்ரீதேசிகாதிகளுடைய அபிப்ராய மென்பது ஸித்தாந்தம். 'ஶ்ராவ்யம் ஜ்ஞாநம் ஶூத்ராணாம்' என்பதும் ஸ்ரீ கீதாத்யயநத்தை ஶூத்ரர்களுக்கு விதிக்கமாட்டாது. வேறு பாஷையினல் ஸாமாந்ய ஜ்ஞாநத்தைத் தெரிந்து கொள்ளலா மென்பது ஸுப்ரஸித்தம்.

ஸ்ரீக்ருஷ்ணாய ஸமர்ப்பித்தஸ் ஸ்வசரணாம்போஜஷட்பத: ।
வேதவேத ஸ்ரீநிவாஸார்யோ வித்யாஸ்தாநாங்கநிர்ணயம் ॥

புத்தங்கோட்டகம் - ஸ்ரீநிவாஸாசார்யர்.

ஸ்ரீ:

குருபரம்பராநுஸந்தாந க்ரமம்.

‘[illegible] வம்ஶோ ஜ்ஞேய: – ஆசார்யாணாம் அஸாவஸாவித்யாபகவத்த:’ ‘[illegible]’ இத்யாதி ப்ரமாணங்களால் வேதாந்தார்த்தோபதேஶ காலத்தில் ஆசார்யனுடைய பரம்பரையை அநுஸந்திக்க வேண்டுமென்று ஏற்படுகிறது.

அந்தப் பரம்பரையும் ஜந்ம பரம்பரையல்ல; வித்யா பரம்பரைதான் என்றும், வேதாந்த ஶாஸ்த்ரோபதேஶ பரம்பரைதான் ஶ்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறதென்றும், ஸ்புடமாக ஸாரப்ரகாஶிகா ஸாரவிவரணீ முதலான க்ரந்தகர்த்தாக்கள் எழுதியிருக்கிறார்கள். அதில் சிலர் பகவான் முதல் தம் ஆசார்யன் வரையில் அநுஸந்திக்கிறார்கள்; சிலர் தம் ஆசார்யன் முதல் ஆரம்பித்து, பகவத் பர்யந்தமாக அநுஸந்திக்கிறார்கள்.

இவர்களுக்குள், தம் ஆசார்யனை ஆரம்பித்து ஈஶ்வரன் வரையில் அநுஸந்திப்பதற்கு ப்ரமாணங்கள்:—‘ஆபகவத்த:’ என்கிற ஶ்ருதியில் ‘ஆ’ என்கிற பதத்துக்கு ‘அபிவ்யாப்தி’ [முடிவு] என்னும் அர்த்தம் இருப்பதாலும் ‘இதைப் பகவானளவும் செல்ல’ என்று ஸ்ரீ தேஶிகன் விவரிக்கையாலும், ‘[illegible]’ என்று ஸ்ரீ தேஶிகன் ஸாதித்திருப்பதாலும், ‘என்னுயிர் தந்தளித்தவரை’ என்றும், ‘[illegible]’ என்றும், ‘[illegible]

ஶ்ருதிக்ரமா[illegible]’ [அதாவது: பகவானை ஆரம்பித்து ஸ்வாசார்ய பர்யந்தம் சொல்வது ஶ்ருதிக்ரமத்தை அநுஸரிக்காது] என்கிற ஸாரவிவரணீ க்ரந்தம் முதலானவை.

இவர்கள், பகவான் முதலாக அநுஸந்திப்பதன் ப்ரமாணங்களைத் தெரிந்துகொள்ளாமல், அது நிஷ்ப்ரமாணமென்றும், அந்த பரம்பரையென்றும் மற்றவர்களைத் தூஷிப்பது ஸாஹஸித்தம். ஆகையினால் பகவான் முதல் தன் ஆசார்ய பர்யந்தம் அநுஸந்திக்கப்படுமெதிலும் ப்ரமாணங்களில் சில எழுதப்படுகின்றன.

[illegible] ।
ஶ்ரீ[illegible] ॥

‘ஆசார்யாணாம் அஸாவஸாவித்யாபகவத்த:’ என்னும் ஶ்ருதியில் ‘ஆபகவத்த:’ என்கிற வாக்யத்துக்குப் ‘பகவானை ஆரம்பித்து’ என்கிற அர்த்தம் ந்யாய்யமானது. ஆனால் ‘அபிவ்யாப்தி’ என்னும் அர்த்தமுடைய ‘ஆ’ என்பதற்கு ‘ஆரம்பித்து’ என்னும் அர்த்தம் ப்ரஸித்தமா? என்கிற ஶங்கை உண்டாகலாம். இது விஷயமாக வ்யாகரணத்தில் ‘ஆங் மர்யாதாபிவித்யோ:’ என்னும் ஸூத்ரத்தில் ‘மர்யாதா’ என்கிற அர்த்தத்துக்கு உதாஹரணமாக ‘ஆமுக்தே: ஸம்ஸார:’ என்று எழுதிவிட்டு, ‘அபிவ்யாப்தி’ என்பதற்கு ‘ஆபாலேப்யோ ஹரிபக்தி:’ என்னும் உதாஹரணம் ஸித்தாந்த கௌமுதீ என்னும் க்ரந்தத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் வ்யாக்யாதாக்கள் ‘பாலர்களை ஆரம்பித்து பக்தி’ என்று எழுதியிருக்கிறார்கள். ‘தேந விநா மர்யாதா – தேந ஸஹ அபிவிதி:’ என்கிற ப்ரஸித்திக்கு ‘ஆரம்பித்து’ என்று அர்த்தம் சொல்வதும் விரோதமன்று. ‘ஆப்ரஹ்மஸ்தம்ப பர்யந்தா: ஜகதந்தர்வ்யவஸ்திதா:’ என்கிற புராண ஶ்லோகத்திலும் ‘ஆ’ என்கிற அவ்யயத்துக்கு ‘ஆரம்பித்து’ என்று தான் எல்லாராலும் அர்த்தம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த அர்த்தத்தை ‘[illegible]’

என்கிற வெங்கடாசார்யருடைய ப்ரயோகத்திலும் ஸ்வாரஸ்யத்தை அபேக்ஷிப்பவர்கள் அங்கீகரியார்கள். ஸ்ரீ நிகமாந்த தேசிகன் தஶாவதார ஸ்தோத்ரத்தில் '𑌆𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑍀𑌟𑌂 𑌮𑍁𑌨𑌿𑌃' என்று ப்ரயோகித்திருக்கிறார். அங்கு 'ப்ருஹ்மா முதல் கீடம் வரையிலுள்ள' என்று அர்த்தம் சொல்வதுதான் ஸங்கதமாகும்.

இப்படி அநேகம் ப்ரஸித்த ப்ரயோகங்களில் '𑌆' என்கிற அவ்யயத்துக்கு 'ஆரம்பம்' என்கிற அர்த்தம் ஸுப்ரஸித்தமாகையினால், '𑌆𑌭𑌗𑌵𑌤𑍍𑌤𑌃' ஶ்ருதியிலும் மற்ற ப்ரமாணங்களை அநுஸரித்து 'பகவானை ஆரம்பித்து' என்று அர்த்தம் சொல்வது தான் ந்யாயமாகும்.

முண்டகோபநிஷத் ஆரம்பத்தில் '𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌥𑌮𑌃 𑌸𑌮𑍍𑌭𑌭𑍂𑌵' என்று ஆரம்பித்து, ப்ருஹ்மா ஸர்வ வித்யைக்கும் ஆதாரமான ப்ருஹ்ம வித்யையை மூத்த குமாரனை அதர்வா என்பவனுக்கு உபதேஶித்தார். அந்த அதர்வா என்பவன் ப்ருஹ்மாவால் உபதேஶிக்கப்பட்ட வித்யையை அங்கிரஸ் என்பவனுக்குச் சொல்லிக்கொடுத்தான். அவன் ஸத்வவாஹன் என்பவனுக்குச் சொல்லிக்கொடுத்தான். ஸத்வ்வாஹன் மற்றொரு அங்கிரஸ் என்பவனுக்குப் போதித்தான். அவன் ஶௌநகனுக்கு உபதேசித்தான் என்று ப்ருஹ்மவித்யை உபதேஶிக்கும் காலத்தில் அவரோஹண க்ரமமாகவே ஆசார்ய பரம்பரை உபதேஶிக்கப்பட்டிருக்கிறது. சாந்தோக்யத்திலும் '𑌤𑌦𑍍𑌧𑍈𑌤𑌦𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌯 𑌉𑌵𑌾𑌚 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌰𑍍 𑌮𑌨𑌵𑍇 𑌮𑌨𑍁𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌭𑍍𑌯𑌃' என்று அவரோஹண க்ரமமாகவே ஆசார்ய பரம்பரை உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் '𑌕𑌥𑌯𑌾𑌮𑌿 𑌯𑌥𑌾𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌦𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌯𑍈𑌰𑍍𑌮𑍁𑌨𑌿𑌸𑌤𑍍𑌤𑌮𑍈𑌃 - 𑌪𑍃𑌷𑍍𑌟𑌃 𑌪𑍍𑌰𑍋𑌵𑌾𑌚 𑌭𑌗𑌵𑌾𑌨𑌬𑍍𑌜𑌯𑍋𑌨𑌿𑌃 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃' என்று ஆரம்பித்து, பராஶரமஹர்ஷி மைத்ரேயருக்கு உபதேஶித்த ரஹஸ்யார்த்தங்களை ப்ருஹ்மா தக்ஷர் முதலான ருஷிகளுக்குச் சொன்னாரென்றும், அவர்கள் புருகுத்ஸர் என்பவருக்கு உபதேசித்ததாகவும், அவர் ஸாரஸ்வதரென்பவர்க்கும், ஸாரஸ்வதர் பராஶர மஹர்ஷிக்கு உபதேசித்ததாகவும் அவரோஹண க்ரமமாகவே சொல்லப்பட்டிருக்கிறது.

இதை ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஶிஷ்ய க்ருத்யாதிகாரத்தில் விஸ்தாரமாக எழுதி, ஆசார்யன் ஶிஷ்யனுக்கு ஸாரதமமான ரஹஸ்யார்த்தங்களை உபதேஶிக்கும்போது 'பராஶரமஹர்ஷி மைத்ரேய பகவானுக்கு உபதேசித்தாப்போலே குருபரம்பரையை ப்ரகாஶிப்பித்துக்கொண்டு இப்படி உபதேஶிக்க வேணு'மென்று அருளிச்செய்திருக்கிறார். மைத்ரேயனுக்குச் சொன்னாப்போல் குருபரம்பரையை ப்ரகாஶிப்பிக்க வேணுமென்று ஸாதித்திருப்பதால் அவரோஹண க்ரமமே தமக்கு அபிப்ராயமென்று தெரிகிறது.

ஸ்ரீ கீதையில் '𑌇𑌮𑌂 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑍇 𑌯𑍋𑌗𑌂' என்று ஆரம்பித்து ஸ்ரீ க்ருஷ்ணன் ஸூர்யனுக்கும், ஸூர்யன் மநுவுக்கும், மநு இக்ஷ்வாகுக்கும் உபதேசித்தார் என்று சொல்லி, '𑌏𑌵𑌂 𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂' என்கிற பதத்தினால் அவரோஹண க்ரமத்தைக் காண்பித்திருக்கிறார்.

'𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌾𑌥 𑌸𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌂 𑌨𑌾𑌥𑌯𑌾𑌮𑍁𑌨𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌂 - 𑌅𑌸𑍍𑌮𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌂' என்றும் கூரத்தாழ்வான் பகவானை ஆரம்பித்து அருளிச்செய்திருக்கிறார்.

ஸ்ரீ தேசிகன் '𑌅𑌸𑍍𑌮𑌦𑍍𑌦𑍇𑌶𑌿𑌕𑌂' என்று ஆரம்பித்து அவரோஹண க்ரமத்தை ஸாதித்திருக்கிறார். அங்கு தம் ஆசார்யன் முதல் பகவானளவும் அநுஸந்தித்த பிறகு உடையவரை ஸ்துதி செய்யவில்லை.

தவிரவும் குருபரம்பரையைச் சொல்வதற்காக ஏற்பட்ட குருபரம்பராஸார க்ரந்தத்தில் நாதமுநிகளை ஆரம்பித்து அவரோஹண க்ரமமாகவே உபதேசிக்கப்பட்டிருக்கிறது. இந்த குருபரம்பரை க்ரந்தத்துக்கு, ஸங்க்ரஹ ஶ்லோகமான '[illegible]' என்கிற ஶ்லோகத்தில், '𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂' என்பதால்

நன்கு வ்யக்தமாகிறது. அடியில் '[illegible]' என்று அருளிச்செய்தது, மங்கள ஶ்லோகத்தில் விசேஷ உபகாரத்தை நினைத்துத் தம் ஆசார்யனை முன் அநுஸந்தித்தபடி.

'[illegible] ப்ராப்யம்' என்கிறதும், 'பகவானளவும் செல்ல' என்கிறதும், '[illegible]' என்கிற பத ஸ்வாரஸ்யத்தினாலும், '[illegible]' என்பதற்கு ஸாதகமாகச் சொல்லும் ப்ரகரணத்தைப் பார்த்தால், ஶரணாகதி காலத்தில் ஸ்வாசார்ய ப்ரார்த்தனை முதலில் செய்யவேண்டியதை ஸூசிப்பிப்பதற்காக என்றும் சொல்லலாம்; அப்யுபகம்ய வாதமாயிருந்தாலும் இருக்கலாம்.

தவிரவும் ஆரோஹண க்ரமாநுஸந்தாநத்தைத் தூஷிக்க நாம் யத்தனிக்கவில்லை. அது ஸப்ரமாணமோ நிஷ்ப்ரமாணமோ எப்படியோ இருக்கட்டும். அநேக ப்ரமாண ஸித்தமான அவரோஹண க்ரமாநுஸந்தாநத்தை நிஷ்ப்ரமாணம் என்பது அந்யாயம் என்பது தான் நம்முடைய அபிப்ராயம்.

மஹாபாரதாதிகளில் பீஷ்ம தர்மபுத்ர ஸம்வாத ப்ரகரணங்களில் அநேக இடங்களில் அவரோஹணமே சொல்லப்படுகின்றது.

'நாராயணம் பத்மபுவம் வஸிஷ்டம் ஶக்திம் ச தத்புத்ர பராஶரஞ்ச' என்று அத்வைதிகளுடைய பரம்பரையிலும் அவரோஹண க்ரமமே அநுஸந்திக்கப்படுகிறது. பரமதங்களிலும் அவிருத்தாம்ஶங்களைப் பூர்வாசார்யர்கள் அங்கீகரிக்கிறார்கள். தென்னாசார்ய ஸம்ப்ரதாயமும் அவரோஹண க்ரமத்தையே விசேஷமாக அங்கீகரிக்கிறது.

ஸ்ரீ க்ருஷ்ணாய [illegible] ।
[illegible] ஸ்ரீநிவாஸேந க்ருதா [illegible] ॥

புத்தங்கோட்டகம். ஸ்ரீநிவாஸாசார்யர்.

ஸ்ரீ:

கடிதங்கள்.

(1)

ஸ்ரீ வைதிக வித்வத் ஸபை.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

இப்பரத கண்டத்தில் பூலோக வைகுண்டமென ப்ரஸித்தி பெற்ற ஸ்ரீரங்கமெனும் திவ்ய க்ஷேத்ரத்துக்கு மேற்கில் சுமார் 8-மைல் தூரத்திலுள்ள கொடியாலம் என்று '[illegible] ஜாஹ்நவீ' என்றும் 'கங்கையிற் புனிதமாய காவிரி' என்றும் ப்ரஸித்தியடைந்த அகண்டகாவேரி என்கிற மஹா புண்ய நதிக்கரையில் உள்ள க்ராமத்தில் ஆனரபில் ஸ்ரீமான் ரங்கஸாமி அய்யங்கார் அவர்களால் நடத்தப்படும் ஸ்ரீ கண்ணபிரானுடைய உத்ஸவ காலத்தில் [illegible] பங்குனிமீ 1உ த்வைதம் அத்வைதம் விஶிஷ்டாத்வைதம் எனப்படும் மூன்று வைதிக மதஸ்தர்களான அநேக வித்வாங்களினால் ஸ்ரீ வைதிக தர்மாநுஷ்டாநங்கள் வைதிக வித்யை இவைகளின் அபிவ்ருத்தியை உத்தேசித்து 'ஸ்ரீவைதிக வித்வத்ஸபை' யென்று ஒரு ஸபை ஏற்படுத்தப்பட்டது.

ஷை ஸபையானது அன்றை மாலை 3-மணிக்குக் கூடிற்று. அக்காலத்தில் த்வைதம் அத்வைதம் விசிஷ்டாத்வைதம் என்னும் மூன்று மதஸ்தர்களாகிற அநேக பண்டிதர்கள் அங்கு வந்திருந்தனர். அப்போது புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீநிவாஸாசார்யர் கௌணமாக விசேஷமாக வ்ருத்தியடைந்து வந்த நம் வைதிகவித்யையும் தர்மாநுஷ்டாநங்களும் தற்காலத்தில் மிகவும் குறைந்துபோய்விட்டதென்றும் இப்போது இருக்கும் ஸ்திதியைப் பார்த்தால் சீக்ரத்தில் வைதிகாசாரங்களுக்கு ரொம்பவும் குறைவு நேர்வதோடு விபரீதாசாரங்களும் வ்ருத்தியடையுமென்றும் வைதிகர்களான வித்வாங்களுக்கு ஐகமத்யமிருந்தால் இக்குறையை நிவ்ருத்தி செய்து நம் வைதிக மதங்களையும் தர்மாநுஷ்டாநங்களையும் விசேஷ வ்ருத்தி

யடையும்படி செய்யலாமென்றும், அதற்காக ஒரு ஸபையை ஏற்படுத்த வேண்டியது அவஶ்யமென்றும் சொல்லி, இதற்காக வைதிக வித்யையை வ்ருத்திசெய்வதில் அதிக ஆசையுள்ளவராயும், பொது நன்மைக்காகவே தம்முடைய காலத்தைச் செலவழிப்பவரான சதுஶ்ஶாஸ்த்ர வித்வான் உபய ஏ. மா. சேஷாசார்யர் ஸ்வாமியை, அக்ராஸநாதிபதியாக இருக்கும்படி செய்தால் நம்முடைய இஷ்டம் பூர்ணமாகு மென்றும் சொன்னார். அதைக் கேட்டு அச்சபையில் வந்திருந்த எல்லா வித்வான்களும் அதை அநுமோதித்து ஶேஷாசார்யர் ஸ்வாமியை ப்ரார்த்திக்க, அந்த ஸ்வாமியும் அக்ராஸநத்தைத் திருவுள்ளம் பற்றினார்.

பிறகு அக்ராஸநாதிபதியான ஸ்ரீ ஶேஷாசார்ய ஸ்வாமியும் நம் வைதிக மதங்களுக்குள் வேதாந்த விஷயங்களில் சில அபிப்ராய பேதம் இருந்தாலும் வைதிக தர்மாநுஷ்டாநத்திலும் ஸம்ஸ்க்ருத வித்யையை வ்ருத்தி பண்ணுகிற விஷயத்திலும் நாம் ஒரே மனமுள்ளவர்களாக இருக்கவேண்டியது அவஶ்யமென்றும், அப்படி நாம் இல்லாவிட்டால் வைதிக வித்யையே நஷ்டமாகி விடுமென்பது வாஸ்தவ மென்றும் நாம் ஒன்று சேர்ந்து கேட்டுக்கொண்டால் அநேக மடாதிபதிகளும் ப்ரபுக்களும் அநேக விதமான உபகாரங்களினால் வைதிக வித்யையையும் தர்மாநுஷ்டாநங்களையும் வ்ருத்தி செய்ய அதிக ஆவலுடன் இருப்பதாகச் சொல்லி, மூன்று மதஸ்தர்களும் ஒன்று சேர்ந்து வைதிக வித்யை வ்ருத்தியடைவதன் பொருட்டு எப்போதும் ஒவ்வொரு மதஸ்தர்களுக்குள் ஒவ்வொருவர் இதற்கு அத்யக்ஷர்களாக இருக்கவேண்டியது அவஶ்யம் என்று சொல்லவே, அதை ஸபையார்கள் அநுமோதித்து, அப்படியே தர்க்க வேதாந்த வித்வான் குன்றியூர் ஸூர்ய நாராயண ஶாஸ்த்ரிகளும், ஸ்ரீரங்கம் சுப்பராயாசார்யரும் உபாத்யக்ஷர்களாக அங்கீகரிக்கப்பட்டார்கள்.

பின்பு அக்ராஸநாதிபதி இந்த ஸபையின் உத்தேஶமான கார்யங்களை ஆஸ்தையுடன் நிர்வஹித்துப் பார்த்து ௸ ஸபையை வ்ருத்திக்குக் கொண்டுவர வேண்டியதை உத்தேசித்துப் புத்தங்கோட்டகம் வ்யாகரண வேதாந்த வித்வான் ஸ்ரீநிவாஸாசார்யர் கார்யதர்ஶியாக இருக்கவேண்டியது அவஶ்யம் என்று சொல்ல, அதை உபாத்யக்ஷர்களும் மற்ற ஸபையார்களும் அநுமோதிக்கவே, அவர் கார்யதர்சியாக அங்கீகரிக்கப்பட்டார்.

பிறகு ஸூர்ய நாராயண ஶாஸ்த்ரிகளும் சுப்ராயாசார்யரும் இந்த ஸபை அவஶ்யகமென்றும், இதனால் எல்லா அபீஷ்டங்களும் நிஶ்சயமாய் நிறைவேறு மென்றும், அதிக உத்ஸாஹத்துடன் உபந்யஸித்தபின், அக்ராஸநாதிபதியின் உபஸம்ஹாரத்தோடு அன்று 6-மணிக்கு ஸபை கலைந்தது.

மறுநாள் மாலை 3 மணிக்கு முன் போலவே ௸ ஸபை ஒன்று சேர்ந்தது. அன்று ஸ்ரீ ஸூர்ய நாராயண ஶாஸ்த்ரிகள் அக்ராஸநத்தை வஹித்தார். அவர், த்வைத அத்வைத விஶிஷ்டாத்வைத மதஸ்தர்களான நாம் ஒன்று சேரவேண்டியது அவஶ்யமென்றும், இதுவரையில் அப்படிச் சேராததினால்தான் நம் வைதிகவித்யை குறைந்துபோய்விட்ட தென்றும், ஐகமத்ய மிருந்தால் நாம் எல்லா இஷ்டங்களையும் எளிதில் அடையலா மென்றும் விஸ்தாரமாக உபந்யஸித்தார்.

அதன் பின், திருச்சிறாப்பள்ளி காலெஜ் பண்டிதர் உபய தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர், ஜ்ஞாநம் என்பது அவஶ்யமென்றும், அது இக்காலம் குறைந்து விட்டதென்றும், அதை வ்ருத்திசெய்ய நமக்கு ஒற்றுமையிருந்தால் வேறு ஸாதநம் வேண்டியதில்லை யென்றும் இனிய மொழிகளால் உபந்யஸித்தார்.

அநந்தரம், ஸ்ரீரங்கம் பாடசாலை வித்வான் உபய ஸ்ரீநிவாஸாசார்யர், கர்மாநுஷ்டாநம் அவஶ்யம் என்பதையும், அதற்கு இந்த ஸபை ஏற்பட்டால் அதை ரொம்ப வ்ருத்திக்குக் கொண்டுவரலா மென்றும் மிகவும் தெளிவாக உபந்யாஸம் செய்தார்.

அதன் மேல், சிதம்பரம் மஹாமஹோபாத்யாயர் தண்டபாணி தீக்ஷிதர் ஐகமத்ய விஷயமாக விசித்ரமான ஓர் உபந்யாஸத்தை விஸ்தாரமாகச் செய்து முடித்தார்.

அதன் பின் உபய புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர், ஸபையின் ப்ரயோஜநங்களையும் அதன் உபாயங்களையும்பற்றி மிகவும் தெளிவாக உபந்யஸித்து, ஸபையின் விதிகளையும் உத்தேஶங்களையும் அதன் உபாயங்களையும் படித்தவுடன், அக்ராஸநாதிபதியின் உபஸம்ஹாரத்தோடு ஸபை கலைந்தது. அன்று ஆஸ்திகர்களான உப. ஜட்ஜ் கே. ஸ்ரீநிவாஸையங்கார், பால ஸுப்ரஹ்மண்யஅய்யர், ப்ரஸந்ந வேங்கடேஶ ராவ் முதலிய ப்ரபுக்கள் அங்கு விஜயம் செய்திருந்தனர்.

மறுநாள் ஸ்ரீரங்கத்தில் தாயார் ஸந்நிதி வாசலில் ௸ ஸபை 8-மணிக்கு ஆரம்பித்து 10-மணிவரை நடந்தது. அதில், தர்மம் ஜ்ஞாநம் - இவ்விஷயங்களைப்பற்றி தட்டை உப. ஸ்ரீநிவாஸாசார்யரும் உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யரும் உபந்யஸித்தார்கள். பிறகு அக்ராஸநாதிபதியின் உபஸம்ஹாரத்துடன் ௸ ஸபை முடிவு பெற்றது.

பங்குனி ௴ - 18, 19-௳ மன்னார்குடியில் ஸ்ரீ அஹோபிலமடத்தில் பெரியதான ௸ ஸபையின் கூட்டம் ஒன்று சேர்ந்தது. அதிலும்

காறப்பங்காடு - சிங்கப்பெருமாள் கோவில் ஸ்வாமி, நெடுந்தெரு ராஜகோபாலாசார்யர், தில்லைஸ்தானம் சக்ரவர்த்யாசார்யர், மதுராந்தகம் ஸ்ரீநிவாஸாசார்யர், காறப்பங்காடு தேசிகவரதாசார்யர் முதலிய வித்வான்களும், முன் அத்யக்ஷர் கார்யதர்ஶி முதலானவர்களும் வந்திருந்தார்கள். மிகுந்த ஆஶ்சர்யகரமாகவும் அழகாயும் அநேக உபந்யாஸங்கள் நடந்தன.

ஸபையின் ப்ரயோஜநங்கள்.

1. ராஜராஷ்ட்ராபிவ்ருத்திக்காகவே ஶாஸ்த்ரப்படி ஏற்படுத்தப்பட்ட தேவஸ்தாநங்களில் தேவதாஸாந்நித்யத்துக்குக் காரணமான வேதபாராயணம், வேதாந்தபாராயணம், புராணபடநம், மந்த்ரஜபம், யந்த்ர ஸ்தாபநம் முதலானவைகளை நன்றாக நடக்கும்படி செய்வித்தல்.

2. வைதிக மதஸ்தர்களுடைய சிறுவர்கள் பால்யம் முதல் நம் வைதிக மதத்தைத் தெரிந்து கொள்ளாததினால் அவர்களுக்கு உண்டாகும் விபரீத மார்க்க ப்ரவ்ருத்திகளைத் தடுப்பதற்காக ஒவ்வொரு பாடஶாலையிலும் தினந்தோறும் வைதிகமத ஸம்பந்தமான ஸாமாந்ய தர்ம உபந்யாஸங்களைச் செய்வித்தல்.

3. ஒவ்வொரு ஸ்தலத்திலும் ஆஸ்திகர்களான பண்டிதர்களைக்கொண்டு உபந்யாஸங்களைச் செய்வித்து, தர்மாநுஷ்டாநத்தில் ஶ்ரத்தையை உண்டு பண்ணி, தர்மங்களை நடத்தும்படி செய்வித்தல்.

4. வைதிகமடாதிபதிகளை இச்சபைக்குப் போஷகர்களாகவிருக்கும்படி ப்ரார்த்தித்து, வித்வத் ஸபை முதலானவற்றால் வித்யையையும் தர்மாநுஷ்டாநத்தையும் வ்ருத்திபண்ணச் செய்தல்.

5. ஆஸ்திகர்களான ப்ரபுக்களையும் இச்சபைக்குப் போஷகர்களாக இருக்கும்படி ப்ரார்த்தித்து, அவர்களின் உபகாரங்களைக்கொண்டு உபந்யாஸம் முதலியவற்றால் ஜ்ஞாநாநுஷ்டாநத்தை வ்ருத்தியடையச் செய்தல்.

6. வர்ணாஶ்ரம தர்மங்களைக் கூடியவரையில் ஸரியாக நடக்கும்படி செய்வித்தல்.

7. பாடஶாலைகளில் அநுஷ்டாநத்தோடு பிள்ளைகளை இருக்கும்படி செய்து வித்யாவ்ருத்தியை உண்டாக்குதல்.

8. தத்காலத்தில் லோபத்தை அடைந்ததுபோலிருக்கும் பாஞ்சராத்ரம் வைகாநஸம் பாஶுபதம் முதலான க்ரந்தங்களை அச்சிட்டு ப்ரஸித்திப் பித்தல் முதலியன.

மன்னார்குடி, }
பிங்களஸூ சித்திரைமீ 1வ. }

கார்யதர்ஶி,
(ஸ்ரீ வைதிக வித்வத் ஸபை.)

ஸ்ரீ:
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 7.] பிங்களஸூ ஆனிமீ [ஸஞ்சிகை 9.

𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌕𑌮𑌨𑌂 𑌤𑌮𑌾𑌲𑌵𑌰𑍍𑌣𑌂 𑌰𑌵𑌿𑌕𑌰𑌗𑍌𑌰𑌵𑌰𑌾𑌮𑍍𑌬𑌰𑌂
𑌦𑌧𑌾𑌨𑍇 । 𑌵𑌪𑍁𑌰𑌲𑌕𑌕𑍁𑌲𑌾𑌵𑍃𑌤𑌾𑌨𑌨𑌾𑌬𑍍𑌜𑌂 𑌵𑌿𑌜𑌯𑌸𑌖𑍇
𑌰𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇𑌽𑌨𑌵𑌦𑍍𑌯𑌾 ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

பத்ராதிபரின் குறிப்புகள்.

பஞ்சாக்நி வித்யையின்படி ஜீவனுடைய ஸம்ஸார நிரூபணம்.

ப்ருஹதாரண்யகோபநிஷத்தினுடைய யாஜ்ஞவல்க்ய ஜநக ஸம்வாதத்தில், அர்ச்சிராதி மார்க்க ப்ரஸ்தாவாவஸரத்தில், ‘𑌤𑍇𑌨𑍈𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌤𑍍 𑌪𑍁𑌣𑍍𑌯𑌕𑍃𑌤𑍍 𑌤𑍈𑌜𑌸𑌶𑍍𑌚’ [அந்த மார்க்கத்தால், பூர்வம் புண்யக்ருத்தாக விருந்து சித்த சுத்தியடைந்து, பிறகு ப்ரஹ்மவித்தானவனும், தைஜஸனெனப்பட்ட பஞ்சாக்நி வித்யாநிஷ்டனும் மரணாநந்தரம் செல்கின்றனர்] என்று சொல்லப்பட்டது. அந்த ஸந்தர்ப்பத்தில் ஶங்கராசார்யர், ‘𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍋𑌽𑌨𑍍𑌯𑍋𑌽𑌪𑌿 𑌤𑍇𑌨 𑌮𑌾𑌰𑍍𑌗𑍇𑌣 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿’ [ப்ரஹ்மவித்தல்லாதவரும் அந்த மார்க்கத்தால் போகின்றனர்] என்று சொல்லுகின்றார். நம்முடைய

பாஷ்யகாரர் 'தெஜஸ:' என்றால் 'தெஜஸ்ஸம்பந்தீ, தெஜஉவாஸக:, [illegible]' என்று வ்யாக்யாநம் செய்கின்றார்

பஞ்சாக்நி வித்யையானது சாந்தோக்யோபநிஷத் பஞ்சம ப்ரபாடகத்திலும், ப்ருஹதாரண்யகோபநிஷத் அஷ்டமாத்யாயத்திலும் இவ்வண்ணம் சொல்லப்பட்டிருக்கின்றது. ஶ்வேதகேது பாஞ்சால ராஜஸபைக்குச் சென்றார். அங்கே ஜீபல புத்ரனான ப்ரவாஹணன் எனும் ராஜா ஶ்வேதகேதுவைப் பார்த்து, "குமார! உன் பிதா உன்னைக் கற்பித்தாரா?" என்றனர். ஶ்வேதகேது "கற்பித்தார்" என்றார்.

அதன்மேல் ப்ரவாஹணன், கர்மம் செய்தவர்கள் மரணாநந்தரம் செல்லும் ப்ரதேசத்தைப் பற்றியும், அவர்கள் பூமிக்கு மறுபடியும் திரும்பி வரும் ப்ரகாரத்தைப் பற்றியும், தேவயாந பித்ருயாந மார்க்கங்களின் பேதிக்கும் ப்ரகாரங்களைப் பற்றியும், தேவலோக பித்ருலோகங்களுக்குப் போகாத ப்ராணிகளைப் பற்றியும், ஐந்தாவது ஆஹுதியில் பூதஸூக்ஷ்மங்கள் புருஷசப்தத்திற்கு வாச்யமாவதைப் பற்றியும் ஶ்வேதகேதுவை வினவ, ஶ்வேதகேது அவ்விஷயங்கள் தமக்குத் தெரியாவென்றுரைத்தார். ப்ரவாஹணன் அதன்மேல், ஶ்வேதகேது பிதாவால் கற்பிக்கப்பட்டவரென்பதை மறுத்தார். ஶ்வேதகேது வருத்தத்தோடு பிதாவினிடம் திரும்பி வந்தார். ப்ரவாஹணன் கேட்ட கேள்விகளையும், அவற்றிற்கு ப்ரத்யுத்தரம் தாம் அறியாதிருந்ததையும் பிதாவுடன் சொல்லி, ஸரியாகக் கற்பிக்கப்பட்டால் தமக்கு அவ்வண்ணம் நேர்ந்திராதென்றும் தெரிவித்தார். பிதாவான கௌதமர், அந்த விஷயங்கள் தமக்கும் தெரியமாட்டாவென்றுரைத்து, ஶ்வேதகேதுவுடன் ப்ரவாஹணனிடம் சென்றார். ப்ரவாஹணன் அவரை யதாவிதி பூஜித்தார். மறுநாள் காலையில் கௌதமர் ராஜஸதஸ்ஸுக்குச் சென்றார். ராஜா அவரை மநுஷ்யர் இச்சிக்கும் வித்தம் பூமி முதலானவற்றுள் எவை வேண்டுமென்று கேட்க, கௌதமரும் ராஜா ஶ்வேதகேதுவைக் கேட்ட பஞ்சப்ரஶ்நங்களுக்கு உத்தரத்தை அபேக்ஷித்தார்.

ப்ரவாஹணன் துக்கத்துடன் கௌதமரைப் பகுகாலம் காக்கும்படி ஆஜ்ஞாபித்தார். அந்த வித்யை அதுவரையில் ப்ராஹ்மணர் அறிந்திலர் என்றும், அது க்ஷத்ரியரிடமே உள்ளதென்றும் சொன்னார். பிறகு காலாந்தரத்தில், வித்யைக்காகக் காத்திருந்த கௌதமர்க்கு ப்ரவாஹணன் வித்யையை உபதேசம் செய்தார். அதை விவரிக்கின்றோம்.

ஐந்து ஆஹுதிகள் ப்ரஸ்தாவ விஷயங்கள். ஆஹுதி அக்நியில் ஸமர்ப்பிக்கத் தக்கது. அக்நி ஸமித்தால் வளர்ந்து ஸர்வத்ர ப்ரகாஶிக்கின்றது. இப்படிப்பட்ட உபமாநங்கள் ஐந்து ஆஹுதிகள் ஸம்பந்தமாகத் தொடர்ச்சியாகக் காட்டப்படுகின்றன.

இங்கே ஆஹுதி ஸ்தாநத்தில் பூதஸூக்ஷ்மங்கள் நிற்கின்றன. புருஷன் மரித்த பிறகு பூத ஸூக்ஷ்மங்களால் ஏற்படும் ஸூக்ஷ்ம சரீரத்துடன் லோகாந்தரம் போகின்றானென்பது வைதிக ஸம்ப்ரதாயஸ்தர்கள் விஶ்வஸிக்கும் விஷயம். ஸத்கர்மம் செய்த புருஷன் தன்னுடைய ஸூக்ஷ்ம சரீரத்துடன் அக்கர்மபலனை அநுபவிக்கத் தேவலோகம் செல்கின்றான். கர்மங்கள் இந்த்ரியங்களின்றி உண்டாகமாட்டா. ஆதலால் இந்த்ரியங்களுடைய அபிமாநி தேவதைகள் யஜமாநர்களாய் நின்று, தேவலோகமாகின்ற அக்நியில் பூதஸூக்ஷ்மங்களாலமைந்த ஸூக்ஷ்ம சரீரமாகின்ற ஆஹுதியை ஹோமம் செய்கின்றார்கள் என்று ஶ்ருதி சொல்லுகின்றது. தேவலோகமாகின்ற அக்நிக்கு ஸூர்யன் ஸமித்; ஏனெனில் ஸூர்யனால் தேவலோகம் ப்ரகாஶிக்கின்றது. ஸமித்தினின்று தூமம் கிளம்புகின்றது; ஸூர்யனிடமிருந்து வெளிப்படும் ரஶ்மிகள் தூமங்களெனப்படுகின்றன. அக்நிக்கு அர்ச்சிஸ் எனும் ஜ்வாலைகள் உண்டு; அவற்றால் ப்ரகாஶம் உண்டாகின்றது. ஸூர்யனால் லோகத்துக்கு ப்ரகாஶம், பகல் எனும் அஹஸ் மூலமாக ஸம்பவிக்கின்றது; அர்ச்சிஸ் ஸ்தாநத்தில் அஹஸ் நிற்கின்றது. ஜ்வாலை நீங்கி அங்காரமெனும் கொள்ளிக்கட்டை காணப்படுகின்றது; பகல் நீங்கின பிறகு அங்கார ஸ்தாநத்தில் சந்த்ரன் நிற்கின்றான். அங்காரத்தினின்றும் பொறிகள் கிளம்புகின்றன. அவற்றின் ஸ்தாநத்தில் நக்ஷத்ரங்கள் அமைகின்றன.

இப்படி அமைந்த ஹோமத்தினால் ஆஹுதி ஸ்தாநத்தில் நிற்கும் ஸூக்ஷ்ம சரீரவிஶிஷ்டனான ஜீவன் ஸோமராஜன் ஆகின்றான் என்று உபநிஷத் சொல்லுகின்றது: அதாவது ஸ்வர்க்காநுபவ யோக்யமான திவ்ய சரீரமொன்றைச் சந்த்ரனிடம் பொருந்துகின்றான்.

தேவலோக வாஸார்ஹதையை உண்டாக்கிய கர்மாவஸாநத்தில், முன் ஸோமாகாரத்தை அடைந்த பூத ஸூக்ஷ்ம விஶிஷ்ட சரீரத்துடன் கூடிய ஜீவன் தேவலோகத்தைத் துறந்து, பர்ஜந்யனெனும் அக்நியில் இந்த்ரியாபிமாநி தேவர்களால் இரண்டாவது தரம் ஹோமம் செய்யப்படுகின்றான். பர்ஜந்யன் வ்ருஷ்டியை ப்ரவர்த்திப்பிக்கும் தேவன். வ்ருஷ்டியை வ்ருத்திசெய்யும் வாயு ஸமித் ஆகின்றார்; மேகம் தூமம்; மின்னல் அர்ச்சிஸ்; இடி அங்காரங்கள்; அதன் சப்தங்கள் பொறிகள். இவ்வண்ணம் உபமாநங்கள் உபநிஷத்தில் யோசிக்கப்படுகின்றன.

மேல் விவரித்தவண்ணம் மேகமண்டலத்தில் விழுந்த ஸூக்ஷ்ம சரீரவிஶிஷ்டனான ஜீவன், அங்கிருந்து வர்ஷரூபமாகப் பூமியில் இறங்குகின்றான். இது மூன்றாவது ஆஹுதியாக வர்ணிக்கப்படுகின்றது. இந்த ஆஹுதிக்கு ஸ்தாநம் பூமி. அது அக்நியாகச் சொல்லப்படுகின்றது. அதற்கு ஸம்வத்ஸரம் ஸமித்; காலத்தால் பூமியில் ஸஸ்யங்கள் பக்வத்தை அடைகின்றன. ஆகாசம் தூமம்; ப்ருதிவீயாகின்ற அக்நியினின்று கிளம்பிய புகையைப் போல் ஆகாசம் காணப்படுகின்றது. ராத்ரி அர்ச்சிஸ்; பூமிக்கு ப்ரகாசிக்கும் தன்மையில்லை; அதற்குத் தக்க அர்ச்சிஸ் ராத்ரியே: அதாவது தமஸ்ஸே. சாந்தமாகத் தோன்றும் திக்குகள் அங்காரங்கள். அவாந்தர திக்குகள் அல்பமாக இருக்கின்றபடியால் பொறிகள். அப்படிப்பட்ட பூமியாகும் அக்நியில் இந்த்ரியாபிமாநி தேவதைகள் பூதஸூக்ஷ்மவிஶிஷ்ட ஜீவனாகும் ஆஹுதியை வர்ஷரூபமாக ஹோமம் செய்கின்றனர். அதனால் அவன் தாந்யங்கள் [அதாவது அந்ந] ரூபமாகப் பரிணமிக்கின்றான்.

அந்த மூலமாக ஸூக்ஷ்மசரீரவிஶிஷ்டஜீவன் புருஷனிடம் ப்ரவேசிக்கின்றான். இது நாலாவது ஆஹுதி. இதற்கு அக்நி புருஷனே; அவனுடைய வாக் ஸமித்; ப்ராணன் முகத்தால் வெளிப்படும்; அது தூமம். ஜிஹ்வா அர்ச்சிஸ்; அது சிவப்பாயிருக்கின்றது; கண்கள் அங்காரங்கள்; அவை ப்ரகாஶாஶ்ரயம்; காதுகள் பொறிகள். தேவதைகள் பூதஸூக்ஷ்ம சரீரவிஶிஷ்ட ஜீவனை மேல்விவரித்தபடிப் புருஷனிடம் ஹோமம் செய்கின்றார்கள். புருஷனிடம் ப்ரஜோத்பத்தி காரணமானதோர் வீர்யரூபத்தை ஜீவன் பொருந்துகின்றான்.

பிறகு, ஸ்த்ரீயினிடம் ஜீவப்ரவேஶம் ஐந்தாவது ஆஹுதி. அது கர்ப்பமாகப் பரிணமிக்கின்றது. இவ்வண்ணம் ஐந்தாவது ஆஹுதியில், பூர்வம் ஸ்தூலசரீரமொன்றைப் பூதஸூக்ஷ்மங்களாலமைந்ததோர் ஸூக்ஷ்மசரீரத்துடன் விட்டுக் கிளம்பின ஜீவன், மறுபடியும் புருஷசப்த வாச்யனாகின்றான்; அதாவது கர்ப்பத்தைத் துறந்து வெளிப்பட்டவுடன் அவன் புருஷனெனப் படுகின்றான்.

பிறந்து ஆயுஸ் உள்ளவரையில் அவன் ஜீவிக்கின்றான். அந்த ஆயுஸ்ஸின் பரிமாணமும் அவன் கர்மத்தைப் பொறுத்தது. பிறகு இறந்துபோகின்றான். தேவபித்ருலோக ப்ராப்திக்கு அநுகூலமான கர்மங்களை அவன் ஜீவித்திருக்கையில் பண்ணினானாகில், அக்கர்மங்களால் நிர்த்தேசிக்கப்பட்ட பரலோகத்தின் பொருட்டுத் தேவதைகள், முன் விவரித்த க்ரமத்திலே தேவலோகமாகிய அக்நியின் பொருட்டு அவனைக் கொண்டுபோகின்றார்கள். தேவலோக போகாநுபவத்தைக் கொடுத்த கர்மத்தின் முடிவில், எவ்வண்ணம், மேகம், வர்ஷம், தாந்யம், புருஷன் மூலமாக முன் ஸ்த்ரீகர்ப்பத்தில் ப்ரவேசித்தானோ, எவ்வண்ணம் அங்குநின்று பிறந்தானோ, அவ்வண்ணமே அவனை மறுபடியும் தேவர்கள் நயிப்பிக்கின்றார்கள்.

பிறகு உபநிஷத் சொல்கிறபடி எவர் மேல்விவரித்தபடி அறிகின்றார்களோ, இன்னும் எவர் அரண்யவாஸிகளாய் ஶ்ரத்தையுடன் கூடினவர்களாய்த் தபஸ் எனப்பட்ட ப்ரஹ்மத்தை உபாஸிக்கிறார்களோ அவர்கள் அர்ச்சிஸ்ஸெனும் தேவதையை அடைகின்றார்கள். தேவயாநமார்க்கமென்பது, அர்ச்சிஸ், அஹஸ், ஶுக்லபக்ஷம், உத்தராயணம், ஸம்வத்ஸரம், ஆதித்யன், சந்த்ரன், வித்யுத், தத்புருஷன் என்று வர்ணிக்கப்பட்ட அபிமாநி தேவதைகளுடன் கூடினது. அவர்கள் ப்ரஹ்மப்ராப்தியை அடையத்தக்க சேதநரை அழைத்துக்கொண்டு போகின்றார்கள். வித்யுத் புருஷன் எனப்பட்ட வருணனிடம் சென்ற சேதநனைத் தத்புருஷன் ப்ரஹ்மலோகத்தினின்று வந்து ப்ரஹ்மலோகத்துக்கு அழைத்துக்கொண்டு போகின்றார். அதாவது: பரப்ரஹ்மத்தினிடமே நயிப்பிக்கின்றார்.

க்ராமத்தில் வஸித்துக்கொண்டு எவர் யாகம் தாநம் ஹோமம் ஜநோபகாரம் முதலான கர்மங்களைச் செய்கின்றனரோ,

அவர் இறந்தபின்பு தூமம் என்றாரம்பிக்கப்பட்ட பித்ருயாநத்தில் ப்ரவேசிக்கின்றார்கள். இந்த மார்க்கத்தில், தூமம், ராத்ரி, க்ருஷ்ணபக்ஷம், தக்ஷிணாயநம், பித்ருலோகம், ஆகாசம், சந்த்ரன் இவ்வண்ணம் அபிமாநிதேவதைகள் ஆதிவாஹிகர்களாய் இருக்கின்றார்கள். சந்த்ரஸம்பந்தத்தால் தேவலோக வாஸயோக்யமான ஸோமராஜ னெனப்பட்ட திவ்யசரீரத்தை ஜீவன் பொருந்தி, அங்கே தேவர்கள் கிங்கரனாகத் தேவர்களுடன் ஸுகித்து வஸிக்கின்றான். அவ்வண்ணம் தனது புண்யகர்மங்களின் பலத்தை அநுபவித்துவிட்டு, மறுபடியும் மேற்கூறிய மார்க்கமாகத் திரும்புகின்றான். திரும்புகையில் சந்த்ரன், ஆகாசம், வாயு இவற்றை ப்ரவேசித்துத் தூமம் அப்ரம் [ஜலத்தைத் தாங்குவது] மேகம் [வர்ஷிப்பது] இவற்றை ப்ரவேசித்துப் பூமியில் ப்ரவேசிக்கின்றான். பிறகு ஸஸ்யங்களில் ஸம்பந்திக்கின்றான். பிறகு சீக்ரமாகப் புருஷனுக்கு அந்நமாகின்றான்; பிறக்கின்றான்.

மேலே ஆகாசம்முதல் அந்நம்வரையிலுள்ள பதார்த்தங்களின் ஸம்ச்லேஷமாத்ரம் ஸூக்ஷ்மசரீர விசிஷ்டஜீவனுக்கு உண்டாகின்றதென்று வ்யாஸபக்ஷம். உபநிஷத்தில் அந்தந்த ரூபங்களையே அவன் அடைவது போல் சொல்லப்படுகின்றது.

புண்யகர்மபலத்தை லோகாந்தரங்களில் அநுபவித்துவிட்டுக் கர்மசேஷிகளாய் இந்த லோகத்தில் பிறக்கின்றார்கள். சேஷகர்மம் ரமணீயகர்மமாகில் ப்ரஹ்ம க்ஷத்ரிய வைச்யாதி ரமணீய ஜந்மங்களைப் பொருந்துகின்றார்கள்; அது க்ரூரமாக நின்றதாகில், சண்டாளாதி க்ரூர ஜந்மங்களை அடைகின்றார்கள். க்ஷுத்ர ஜீவன்கள் மேலே சொன்ன தேவயாந பித்ருயாந மார்க்கங்கள் இரண்டிலும் ப்ரவேசிப்பதில்லை. அவர்கள் இடைவிடாமல் பிறக்கின்றனர்; நசிக்கின்றனர்; அவர்கள் மேற்குறித்த இரண்டு வகுப்புக்களிலும் சேராமல் மூன்றாம் வகுப்பில் சேர்ந்தவர்கள். ஆகையால் ஸ்வர்க்க லோகம் பூர்ணமாவதில்லை.

ஆதலால் ஸம்ஸாரிகளுடைய கதியானது மிகுந்த கஷ்டத்துடன் கூடியது. இதை அறிந்தவன் ஸம்ஸாரத்தில் ஜுகுப்ஸையைப் பாராட்டுவன்.

ஸ்வர்ணத்தைத் திருடுகிறவன், ஸுராபாநம் பண்ணுகிறவன், குருபத்நியுடன் ஸம்பந்திக்கின்றவன், ப்ரஹ்மஹத்தி பண்ணுகிறவன், இந்நால்வருடைய ஸம்ஸர்க்கமுள்ளவன், இவர்கள் மஹாபாபிஷ்டர்கள். மேல்விவரித்த பஞ்சாக்நிவித்யை அறிந்தவன் மஹாபாதகர்களுடைய ஸம்ஸர்க்க மடைந்தாலும் அவனைப் பாபம் தொடராது. அவன் மஹாபரிசுத்தன்; பூஜ்யன்; புண்ய லோகங்களை அடையப்போகின்றவன்.

இவ்விதமாகப் பஞ்சாக்நி வித்யையானது சாந்தோக்யோபநிஷத்தில் விவரிக்கப்படுகின்றது. ஏறக்குறைய ப்ருஹதாரண்யகோபநிஷத்திலும் அவ்வண்ணமே விவரிக்கப்படுகின்றது. ஆனால், ஐந்தாவது ஆஹுதியின் பிறகு புருஷனாய்ப் பிறந்து, ஆயுஸ் உள்ளவரையில் ஜீவித்திருந்து, இறந்தவனைப்பற்றி, 'அதைந மக்நயே ஹரந்தி' என்று ஆரம்பிக்கின்ற வாக்யங்களால், அவனை ருத்விக்குகள் ஸாக்ஷாத்தான அக்நியில் ஹோமம் செய்யக் கொண்டுபோகின்றார்கள் என்றும், அங்கே ஸமித் ஆகின்ற கட்டை முட்டைகளும், புகையும், ஜ்வாலைகளும், அங்காரங்களும், பொறிகளும் ஸ்வபாவமாகவே ஏற்படுகின்றனவென்றும், மற்றை ஐந்து ஆஹுதிகளில் போல் கல்பிக்கப்படுகின்றனவல்லவென்றும், அப்படிப்பட்ட நிஜமான அக்நியில் தேவர்களுடைய ஸ்தாநத்திலிருக்கும் ருத்விக்குகள் புருஷனை, 'அஸௌ ஸ்வர்காய லோகாய ஸ்வாஹா' எனும் மந்த்ரத்தை உச்சரித்து ஆஹுதி பண்ணுகின்றார்கள் என்றும், அந்த ஆஹுதியினால் புருஷன் தேவலோகத்தில் ப்ரகாசத்துடன் கூடியதொரு சரீரத்தை அடைகின்றானென்றும் விசேஷமாக அவ்வுபநிஷத் கூறுகின்றது.

மேலெடுத்த உபநிஷத் ப்ரகரணங்கள் ப்ரஹ்மஸூத்ரத்தில், வைராக்யபாதமெனப்பட்ட மூன்றாவது அத்யாயத்தினுடைய முதற் பாதத்தில், ததந்தரப்ரதிபத்யதிகரணம், க்ருதாத்யயாதிகரணம், தத்ஸ்வாபாவ்யாபத்யதிகரணம், நாதிசிராதிகரணம், அந்யாதிஷ்டிதாதிகரணம், இவ்வதிகரணங்களில் சிந்திக்கப்படுகின்றன. புருஷனுடைய ஸம்ஸாரகதிசிந்தநம், ஸம்ஸார விஷயமாக வைராக்யத்தை உண்டுபண்ணும்பொருட்டென்று அத்யாத்மவித்யா நிஷ்டர்கள் நிச்சயம். நாலாவது அத்யாயம் மூன்றாவது பாதத்தில் ஆதிவாஹிகாதிகரணத்திலும், கார்யாதிகரணத்திலும் அவை மறுபடியும் யோசிக்கப்படுகின்றன. ஸூத்ரபாஷ்யங்களிலும், உபநிஷத்பாஷ்யங்களிலும் இந்த ப்ரகரண விசாரம் விசேஷமாகப் பண்ணப்படுகின்றது. இங்கு உபநிஷத்தினுடைய அர்த்தத்தை நாம் ஸங்க்ரஹித்துச் சொன்னோம்.

ஜீவனுக்கு ஜ்ஞானமே ஸ்வரூபம். அவன் அணு ; ஸ்தூலத்வம் அவனுக்கிலது. அவன் ஸம்ஸரிக்குமளவும், பல லோகங்களில் பல சரீரப்ராப்தியைப் பொருந்துகின்றான். அவன் ஒரு ஸூக்ஷ்ம சரீரவிசிஷ்டனாதலால், அப்படி லோக ஸஞ்சாரத்துக்கும் சரீரப்ராப்திக்கும் அர்ஹதையை அடைகின்றான். ஸ்ரீ வைகுண்டத்திலும், அவன் இச்சித்தபடிப் பகவத் கைங்கர்யோபயுக்தமானதும், அப்ராக்ருதமென்றும், சுத்தஸத்வமென்றும் சொல்லப்பட்ட த்ரவ்யத்தால் நிர்மிதமானதுமான திவ்ய சரீரம் அவனுக்குக் கிடைக்கக் கூடியதே. அந்தத் தசையில் அவனைக் காமாந்நீ என்றும் காமரூபீ என்றும் சொல்லக்கூடும்.

மோக்ஷப்ராப்திக்கு அநர்ஹரானவர்களில் சிலர் மரணாநந்தரம் ஸூர்ய மண்டலாந்தர்க்கதமான ஸ்வர்க்காதி லோகங்களைக் கர்மாநுகுணமாக அடைந்து அநுபவிக்கின்றார்கள். பலர் இடைவிடாமல் இவ்வுலகத்திலேயே பிறந்தும் இறந்தும் ஸம்ஸரிக்கின்றனர். இவர்கள் யாவரும் பர்யாயத்தில் துக்காநுபவம் செய்பவரே. இவர்களுடைய கதியை இன்னதென்று உபநிஷத் காட்டி ஸம்ஸாரத்தில் வெறுப்பைத் தருகின்றது ; வைராக்யத்தில் நிஷ்டையைப் போதிக்கின்றது ; ஶாஶ்வதமான பரமபத ப்ராப்தியில் த்வரையை ஜநிப்பிக்கின்றது.

மதாந்தரங்கள் ஜீவபாவத்தை அறிந்தில. ப்ரபஞ்சமுடிவில் ஈஶ்வரனுடைய தீர்மாநதிநமென்பதை யோசித்து, ஸ்தூல சரீரங்களின்றித் தீர்மாந ஸதஸ்ஸுக்குச் செல்வது பொருந்தாதென்று நம்பி, புதைக்கப்பட்ட சரீரங்கள் மறுபடி எழுப்பப்பட்டுத் தீர்மாந ஸ்தஸ்ஸுக்குப் போக உதவுமென்று நினைக்கின்றார்கள். இப்படி அவர்கள் ப்ரமாண க்ரந்தங்கள் சொல்லும். ப்ரத்யக்ஷாநுபவங்களை ஶாஸ்த்ரமொன்றே அதிக்ரமிக்கும். மரணாநந்தரம் ஜீவனுடைய கதியைப்பற்றி மதாந்தரஸ்தர்கள் யோசிக்கவில்லை. அந்தரூபமான சப்தப்ரமாணமும் அவர்க்குக் கிடைக்கவில்லை. இந்த ஸ்திதிக்கு நம்முடைய மதமொன்றே விலக்காவது. ஶ்ருதி அறுதியிட்ட விஷயங்கள் யுக்தியுக்தமாயும் இருக்கின்றன. மதாந்தரஸ்தர்கள் தம் மதக்ரந்தங்கள் அறிவிக்காத ஜ்ஞானங்களை அந்யத்ர க்ரஹித்தல் ந்யாயம். அப்படி க்ரஹிக்காத காரணம் ஸ்வமதஸம்பந்தமான துரபிநிவேசந்தான். சிலர் உபநிஷத் வெளியிடும் ஜ்ஞானத்தைக் காரணமின்றிப் பரிஹாஸ விஷயமாக்கவும் துணிவர். இது நிர்வாணத்தில் ரமிக்கும் ஜநங்கள் வஸ்த்ரதாரணத்தை நிந்திப்ப தொத்ததே.

பத்ராதிபர்.

ஜநகநந்தினீ.

ஜநகநந்தினி க்ருதக்ருத்யாதிகாரத்தை அடைந்தாள். அடைந்தது முதல், பின்மாலைப் பொழுதில் மாதாபிதாக்களுடன் துயிலெழுவள். உசிதமான ஶ்லோகங்களைச் சொல்லிப் பகவத்க்ருபையை ப்ரார்த்திப்பள். பிதா ஸ்நாநார்த்தம் உதயமான குளத்துக்குச் சென்று திரும்புவதற்குள், ஜநகநந்தினியும் ஹரிப்ரியையுடன் அநந்த ஸரஸ்ஸுக்குச் சென்று நீராடி வீட்டுக்குத் திரும்புவள். புஷ்கரிணியில் நீராடினவுடனே விமாநத்தைத் தர்சித்துத் தன் விஷயமாகத் தயாதீக்ஷை செய்த ரக்ஷகனை த்யானிப்பள். புஷ்கரிணிக்குச் செல்லும்போதும், அங்குநின்று திரும்பி வருகையிலும், சித்தத்தை வரதனிடம் செலுத்தி, நேத்ரங்களை அவன் உத்ஸவகாலங்களில் அலங்கரிக்கின்ற வீதியினிடமே உய்த்து, உலகத்தில் வேறொரு பதார்த்தம் தர்சிக்க உள்ளதென்று அங்கீகரிக்காதவள் போல நடப்பள். அகத்துக்குள் ப்ரவேசித்து வஸ்த்ரதாரணம் செய்துகொண்டு, முகத்தைப் புண்ட்ரங்களால் அலங்கரித்துக்கொண்டு, ஆசார்யனை பிதாவைத் தண்டன் ஸமர்ப்பிப்பள். பிறகு, பகவத்ஸந்நிதியை யதாக்ரமம் சுத்திசெய்வள். ரங்கவல்லிகளால் அலங்கரிப்பள். ஆராதநத்துக்கு வேண்டிய பாத்ரங்களைச் சுத்தம்செய்து, ஸந்நிதியில் கொண்டு சேர்ப்பள். புஷ்பச் செடிகளினின்று புஷ்பங்களைப் பறித்து ஸந்நிதியில் கொண்டு சேர்ப்பள். பகவதாராதநத்துக்காகச் சந்தம் அரைத்து வைப்பள். இவ்வண்ணம் கைங்கர்ய புத்தியால் பண்ணக்கூடிய பரிசர்யை யெல்லாம் செய்துவிட்டுப் புஸ்தகம் பார்ப்பள். காலையில் ரஹஸ்யத்ரயஸாரமும் கீதாபாஷ்யமும் வாசிப்பள். மத்யாஹ்நத்தின்மேல் ஸ்ரீமத்ராமாயணம், ஸ்ரீவிஷ்ணுபுராணம், ஸ்ரீபாகவதம், பகவத் விஷயம் இவற்றில் இஷ்டமான பாகங்களைப் படிப்பள். இப்படி ஜநகநந்தினிக்குக் காலக்ஷேபம் அமைந்தது.

யாவர்க்கும் தர்சந யோக்யமாயும், தர்சந மாத்ரத்தால் மநஸ்ஸை ஹரிப்பதாயும் இருந்த அவளுடைய முகமானது முன் மந்மதனுடைய த்வஜம் போலிருந்தது. இப்போது அவ்வாகாரம் அதைவிட்டு விலகியது. அதற்குப் பதிலாக வைராக்யம் என்பது அவள் முகத்தில் ஜ்வலிக்க ஆரம்பித்தது. நாதிஸ்தூலமாயும், நாதிக்ருசமாயு மிருந்த அவள் சரீரத்தில் காய க்லேச ப்ரயுக்தமான இளைப்பு வ்யாபித்தது. ஸ்வர்ணமயமாக ப்ரகாசித்த அவள் தேஹ வளப்பம் மாறி ரக்த ஶோஷணத்தை ஜ்ஞாபிக்கின்ற ஒரு மாதிரியான வெளுப்பு அவள் உடலை மூடியது. காதாசித்கமாய் அவள் வதநத்தை அலங்கரித்த புன்னகையானது அதை முற்றிலும் துறந்தது. ஸம்ஸ்காரம் அற்றுப்போன அவளுடைய கேசபாசமானது, காந்தி யற்றும் காற்றிலடிக்கப்பட்டும் தளர்ந்து போயிற்று. மலர் வர்க்கங்கள் குதூஹலத்துடன் தேடிய அவள் குழல் அம்மணத்தை முற்றிலும் துறந்தது. அந்தப் பெண்மணியைப் பார்த்து யாவரும் துக்கத்தில் மூழ்கிப்போனார்கள். ‘ [illegible] ’ என்கிறபடியே, அவள் சரீரத்தை விட்டு ஒழியாததோர் அழகு மாத்ரம், இன்னும் பார்ப்பவர் கண்களை அபஹரித்தது.

ஒவ்வொரு ராத்ரியும் கேசவாசார்யர் ஸந்த்யாவந்தநம் செய்த பிறகு அகத்துக்கு வந்து, ஜநகநந்தினியை அழைத்துக்கொண்டு கோவிலுக்குப் போவது வழக்கமாய்விட்டது. கோவிலுக்குப் போகும்போதும், அவ்விடத்தினின்று திரும்பும்போதும், பகவத் ஸம்பந்தமான ப்ரஸ்தாவங்களை ஜநகத்துக்குச் சொல்லிக்கொண்டே கேசவாசார்யர் நடப்பர்.. உத்ஸவ திநங்கள் தவிர மற்ற திநங்களில் தாயாரையும் பெருமாளையும் பிதாவுடன் ஜநகம் ஸேவிப்பள். இந்த ப்ரகாரமாகப் பிதாவால் ரக்ஷிக்கப்பட்டவளாய், ஜநகம் பகவத் கைங்கர்யங்களில் ஜாகரூகையாயும், ப்ரதிதிநமும் பகவானைத் தர்சித்துக்கொண்டும், காலமெல்லாம் பகவானை ஸ்மரித்துக்கொண்டும், உத்தரக்ருத்யாதிகாரத்தை நிறைவேற்றினாள், அவள் ஹ்ருதயத்தினின்று முதம் வெளிப்பட்டது. அவ்விடத்தில் ஶோகம் குடிகொண்டது.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ஹரிப்ரியை, “இதற்கா ஶரண்யன் எனக்கொரு பெண்மணியைத் தந்தான்? புருஷனாயிருந்தால் அவளை ஸந்யாஸி என்னலாம். ஸந்யாஸியைப் பெறுவதற்கா நான் பிறந்தேன்! எனக்கிந்த லோகம் அஸ்தமித்துப் போச்சுதே! என் கட்டழகி முடிவில் அழகையெல்லாம் துறந்தாளே! ஸந்தோஷித்து விளையாடும் வயஸ்ஸில் பரமைகாந்தியாய்விட்டாளே!” என்று அடிக்கடி நினைத்துத் தனியே அழுவள்.

இவ்வண்ணம் தன் மாதா கண்ணீர் விடுவதை ஒருதரம் ஜநகம் பார்த்தாள்.. உடனே, “அம்மா! ஏன் இப்படித் துக்கிக்கின்றாய்?” என்று கேட்டாள்.

“பெண்ணே, எனக்குத் துக்க மில்லாமல் வேறே என்ன இருக்கின்றது? உனக்கு அது தெரியாதா? உன்னைப் பார்த்துக்கொண்டு ஸந்தோஷிக்கச் சொல்கின்றையா?” என்று ஹரிப்ரியை சொன்னாள்.

“அம்மா! இதை அப்பா தெரிந்துகொண்டால் மிகவும் கஷ்டப்படுவர். உங்கள் இருவர்க்கும் ஶோக காரணம் பெரிது. அவர் ஶோகத்தைக் காட்டாமல் உள்ளடக்கி வைக்கின்றார். நீயும் அப்படியே செய்யவேண்டு மன்றோ?” என்று ஜநகம் சொன்னாள்.

“அப்பா ஜ்ஞாதா. அவர் துக்கத்தைப் பாராட்டமாட்டார். நான் ஸ்த்ரீஜாதியாச்சுதே. வேறெவ்விதமாக என் காலத்தைக் கழிப்பேன். க்ருஹ வ்யாபார காலம் போக மற்றெல்லாக் காலமும் என் சிந்தைக்கு நீயொரு வஸ்துதான் விஷய மாகின்றாய். உன்னை நினைக்கும் போதெல்லாம் என் மனம் துடிக்கின்றதே!” என்றாள் ஹரிப்ரியை.

“அம்மா! நீயும் அப்பாவைப் பார்த்து அவரைப்போல் நடக்கவேண்டும்.” என்றாள் ஜநகநந்தினி.

“குழந்தாய்! நான் அப்பாவைப் போல் இருக்கப் பொருந்துமோ? லோக ரீதி தெரியாமல் வார்த்தை சொல்லுகின்றையே. உன்னுடைய அத்தை தனது பிள்ளைக்காக உன்னைக் கேட்டபோது, அப்பா ஸம்மதித்திருந்தாரானால், நமக்கு இந்த ஆபத்து வந்திருக்க மாட்டாதே. உனக்காக உன் அத்தான் ப்ராணனைக் கொடுப்பனே—” என்று ஹரிப்ரியை சொன்னவுடன், ஜநகம்,

“அம்மா! அம்மா! அப்படிச் சொல்லாதே. நான் பர்த்ருமதி. என்னை மற்றொருவர் கல்யாணம் பண்ணிக்கொண்டிருக்கலாம் என்று நினைக்கவும் கூடுமோ? என்னுடைய பர்த்தா மஹா தேஜஸ்வீ; யஶஸ்வீ. அவர் பாண்டித்யம் பெரிது. ஜ்ஞாநத்தாலும் வைராக்யத்தாலும் அவர் ஶ்ரேஷ்டர். எனது துரதிர்ஷ்டத்தால் நான் அவருடன் கூடி வாழ அமையாமல் போச்சுது—” என்று சொன்னாள்.

“ஆமாம் பெண்ணே! உன் பர்த்தா மஹாநுபாவர்தான். இப்படி எண்ணிக்கொண்டிருப்பதால் உன் பெற்றோர்க்கு என்ன ஆறுதல் உண்டு? உனக்குத் தான் அதனால் யாது ப்ரயோஜநம்? உன் சரீரத்தின் ஸ்திதி உன் துக்கத்தை விஸ்தாரமாகக் காட்டுகின்றதே. உன்னை நான் பெற்று வளர்த்தும், ‘உனைப் பார்த்துப் பார்த்து ஸந்தோஷப்பட்டும் இருந்ததற்கெல்லாம் இதுவா முடிவு? ஜநகம்! என் துக்கம் என்னை விடாது. நீ பண்ணும் ப்ரயத்நம் வீண்தான்” என்று ஹரிப்ரியை சொன்னாள்.

“அம்மா! நீ சொல்வது நிஜமே. நம்முடைய துக்கம் தீராததே. அதற்குப் பரிஹாரம் இல்லை. ஆதலால் அதை உள்ளடக்கி வைக்கவேண்டும். நீ அழுதால் நானும் அழுவேன். அந்த ஸ்திதியில் நம்மை அப்பா பார்த்தால் மிகவும் கஷ்டப்படுவர்” என்று ஜநகம் சொல்லிவிட்டு அப்புறம் நடந்தாள். ஜநகத்துக்கு மேல் விவரித்த ஸம்பாஷணை வருத்தம் தந்தது. தன்னுடைய நிலை தனக்கு மாத்ரம் ஶோக காரணமென்று எண்ணிக்கொண்டிருந்தவளுக்கு அபூர்வ யோசனைகள் உண்டாயின.

துலா மாஸமும் மழைக் காலமும் சேர்ந்து வந்தன. மழையை லக்ஷ்யம் செய்யாமலே ஜநகநந்தினி காலை வேளைகளில் குளத்துக்கு நீராடப் போனாள். புருஷர்களைப் போல் ஸ்த்ரீகள் குடைகள் பிடித்துக் கொள்வதில்லை. தாயார் மழையில் நனைந்து கொண்டு போனபடியால் பெண்ணும் அவ்வண்ணம் செய்ய ஆரம்பித்தாள். கேசவாசார்யர் வழக்கமாக வெளியில் செல்லும் காலமானபடியால் ஜநகம் மழையில் நனைவது அவர் பார்வைக்கு வாராமல் போயிற்று. ஒருநாள் ஹரிப்ரியையுடன் ஜநகம் மழையில் நனைந்துகொண்டு குளத்தினின்று திரும்பி வருவதைக் கேசவாசார்யர் பார்த்துவிட்டார்.

“குழந்தை மழையில் நனையக் குளத்துக்கு ஏன் அழைத்துக் கொண்டுபோனாய்?” என்று அவர் ஹரிப்ரியையைக் கேட்டார்.

“நானா அழைத்துக்கொண்டு போகிறேன்? அவள் நான் எவ்வளவு தடுத்தாலும் கேட்காமல் குளத்துக்கு வருகின்றாள். இன்று நாங்கள் புறப்படுகையில் மழையில்லை. திரும்புங்கால் மழையில் அகப்பட்டுக்கொண்டோம்” என்று ஹரிப்ரியை சொன்னாள்.

“ஜநகம்! நீ ஏன் புஷ்கரிணிக்குப் போகிற வழக்கம் வைத்துக்கொண்டாய்? புதிய வாடிக்கைகள் உன் தேஹத்துக்கு ஸரிப்படமாட்டா. இப்படியும் மழையில் நனைவையோ?” என்றார் கேசவாசார்யர். உடனே ஹரிப்ரியை உள்ளே நடந்தாள்.

“அப்பா! அடியேன் சரீர போஷணத்தைப் புத்தி பூர்வமாகச் செய்யவொண்ணுமோ! அடியேனுடைய தத்கால நிலைமைக்குப் புஷ்கரிணியில் ப்ராதஸ்நாநம் யுக்தமன்றோ? மழைக்குப் பயந்து அதை த்யஜிக்கலாமோ?” என்றாள் ஜநகநந்தினி.

“குழந்தாய்! சரீர போஷணம் வேண்டாம்; காயக்லேசம் நீ இவ்வண்ணம் செய்யலாமோ?” என்றார் கேசவாசார்யர்.

“அப்பா! காயக்லேசமின்றித் தேவரீர் பலதரம் அடியேனுக்கு உபதேசித்த இந்த்ரிய நிக்ரஹம் ஸித்திக்குமோ?” என்றாள் ஜநகநந்தினி.

“𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌾𑌨𑍍 𑌭𑌵𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑍇𑌨 𑌮𑌨𑌸𑌾 𑌸𑌦𑌾 । 𑌤𑌸𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍍𑌯𑌵𑌶𑍍𑌯𑌾𑌨𑌿 𑌦𑍁𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌵𑌾 𑌇𑌵 𑌸𑌾𑌰𑌥𑍇𑌃 । 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌾𑌨𑍍 𑌭𑌵𑌤𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑍇𑌨 𑌮𑌨𑌸𑌾 𑌸𑌦𑌾 । 𑌤𑌸𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌵𑌶𑍍𑌯𑌾𑌨𑌿 𑌸𑌦𑌶𑍍𑌵𑌾 𑌇𑌵 𑌸𑌾𑌰𑌥𑍇𑌃 ।” என்று உபநிஷத் சொல்லிற்று. இந்த்ரியங்கள் குதிரைகள். மநஸ் கடிவாளம். புத்தி ஸாரதி. புத்தியைக் கொண்டு மநஸ்ஸை இழுத்துப் பிடித்து இந்த்ரியங்களை வஶ்யங்களாகப் பண்ணவேண்டும். அதை விட்டுப் புத்தி பூர்வகமாய் காயக்லேசம் செய்தால், இந்த்ரியங்கள் கெடும். சரீரம் வ்யாதி பீடிதமாகும்.” என்றார் கேசவாசார்யர்.

“அப்பா! சரீரம் வ்யாதி பீடிதமானால் என்ன? எதை உத்தேசித்து அதை நான் ஸம்ரக்ஷிக்க வேண்டும்?” என்றாள் ஜநகம்.

“குழந்தாய்! உன் ப்ரஶ்நைகள் எனக்கு ஸந்தோஷம் அளிக்கவில்லை. உன் மாதாவை உத்தேசித்து நீ காயக்லேசம் செய்யா

மலிருக்கக் கூடாதோ? உன்னுடைய கஷ்டம் முன்னமே அவளைப் பாதிக்கின்றதே! உன் சரீரம் கெட அவள் இன்னும் துயரப் படாளோ? என் மநஸ்ஸு தான் உன் விஷயத்தில் கல்லா யிருக்குமோ? என்னைப் பற்றியும் நீ யுன்னை ரக்ஷித்துக் கொள்ளமாட்டாயோ? இன்னும் வ்யாதிகளால் சரீரம் பீடிக்கப்பட்டால் நீயே பாதைப்பட மாட்டாயோ? எப்படிப்பட்டவர்களும் சரீர பாதையை ஸுகமாக நினைக்கமாட்டார்கள். பகவத் ஸங்கல்பத்தை எவராலும் தடுக்கப் பொருந்தாது. உன் விஷயமாக நீயே ஒரு ஸங்கல்பம் பண்ணாதே. பதி வியோகம் ப்ரபல துக்கம். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். பதி வியோகம் வந்த பிறகும், மாதா பிதாக்கள் தநயா விஶ்லேஷத்தை ஸஹிக்கமாட்டார்களென்பதை நீ "சிந்திப்பாய்" என்று சொன்னார் கேசவாசார்யர். ஜநகம் உள்ளே சென்றாள்.

அன்று முதல் ஜநகநந்தினி மழையில் நனைந்துகொண்டு நடந்தாளில்லை. மழையில்லா நாட்களில் காலை நீராட்டம் மட்டும் முன்போலவே நடந்துகொண்டு வந்தது. கார்த்திகை மாஸம் கழிந்தது. மார்கழித் திங்கள் பிறந்தது. ‘மாஸாநாம் மார்கசீர்ஷோஹம்’ என்று கண்ணன் திருவுள்ளம் பற்றின மாஸமென்று ஜநகம் அதை நினைத்தாள். முன் ஸ்வப்நத்தில் தன்னை அநுக்ரஹித்த ப்ருந்தாவந ஸஞ்சாரியை நினைக்க ஆரம்பித்தாள். தான் வேண்டும்போதெல்லாம் தர்சநம் தந்தருளவேண்டுமென்று தான் பண்ணின ப்ரார்த்தநையை ஸ்மரித்தாள். தனதிஷ்டம் கைகூடுமென்று வரந் தந்தவனை தநுர் மாஸம் முற்றிலும் த்யாநித்துக் கொண்டே யிருக்கவேண்டுமென்று நிஶ்சயம் செய்தாள்.

இருட்டிலும், நிலவிலும், பனியிலும், குளிரிலும், நாள்தோறும் விடியற்காலத்தில் ஜநகத்துக்குப் புஷ்கரிணியில் மார்கழி நீராட்டம் நடந்தது. அப்போது அர்த்தாநுஸந்தாநத்துடன் அவள் திருப்பாவை முப்பதையும் தனக்குள்ளே ஒவ்வொரு நாளும் சொல்லிக்கொள்வள். ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம், கார்மேனி செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான் ஒருநாள் அவட்கு த்யாந விஷயமாவன். பாற்கடலுள் பையத் துயின்ற பரமன் ஒருநாள் அவளால் சிந்திக்கப்படுவன். ஓங்கி யுலகளந்த உத்தமனை மற்றொரு நாள் அவள் எண்ணித் துதிப்பள். ஊழிமுதல்வன் சங்கும் சக்கரமும் சார்ங்கமும் கைக்கேந்தி நீலமேகம் போன்ற மேனியுடன் மற்றொரு நாள் ஜநகநந்தினியால் நினைக்கப் பட்டான். தூயபெருநீர் யமுனைத்துறைவனை ஒருநாள் அவள் வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்தாள். புள்ளரையனை ஓர் நாள் அவள் உள்ளத்தில் கொண்டாள். நாராயணன் ஒருநாள் அவள் நெஞ்சில் குடிகொண்டான். மற்றொரு நாள் மல்லரை மாட்டிய தேவன் அவள் மனத்தே வந்து நின்றான். மாமாயன் மீண்டொருநாள் அவள் உள்ளத்திற் குடிகொண்டான். அவ்வண்ணமே துழாய்முடியானாய், முகில் வண்ணனாய், தென்னிலங்கைக் கோமானைச் செற்றவனாய், புள்ளின்வாய் கீண்டானாய், பங்கயக் கண்ணனாய், வல்லானை கொன்றானாய், மணிவண்ணனாய், எம்பெருமானாய், நந்தகோபாலனாய், பின்னைமணாளனாய், செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும் விமலனாய், பசுக்கள் ஆற்றப் படைத்தான் மகனாய், சந்த்ர சூர்யர்களைக் கண்களா யுடையோனாய், பூவைப்பூவண்ணனாய், பொன்றச்சகட முதைத்தவனாய், நெடுமாலாய், ஆலினிலையானாய், கோவிந்தனாய், ஒழிக்க ஒழியா உறவினனாய், தன்னைக் குற்றேவலென்றும் கொள்பவனாய், கடல் கடைந்த மாதவனாய், ஒவ்வொரு பாசுரத்தினுடையவும் விலக்ஷணமான பகவதாகாரத்தை க்ரமமாக ஒவ்வொரு தினத்திலும் நாள் முழுவதும் சிந்தித்தாள். அன்றொரிரவில் அவ்வண்ணம் தன்பக்கல் சென்று தாமரைத் திருக்கையைத் தன் சிரமேல் வைத்த வரதனை, அவனுக்கே உரியதான திங்கள் முழுதும் வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்தாள். ஜநகநந்தினிக்குக் கர்மபந்த மெனப்பட்டதெல்லாம் தீயினில் விழும் தூசுகள் போல் சாம்பலாய்ப் போயின.

அஸ்தமித்த பிறகு ஒவ்வொரு நாளும் கோபிகா கீதத்தை ஜநகம் தனக்குள் பாடி அநுபவித்தாள். தனக்கு அவன் தர்சநம் தந்து மறைந்தானாதலால், அவனை மீண்டும் காண மிக்க விரும்பினாள். வ்ரஜாங்கனைகளுக்கு மன்மத மன்மதனாய், மென்மாலையைத் தோளில் அணிந்தவனாய், பொற் பட்டாடை யுடுத்தினவனாய், புன்னகை விளையாடிய முகபங்கயத்தனாய், அவன் திவ்யதர்சநம் தந்தருளிய வண்ணம் தனக்கும் தந்தருளப் போகின்றான் என்று இடைவிடாமல் நம்பினாள்.

இவ்வளவோடு நிற்காமல் தினந்தோறும் பிதாவுடன் கோவிலுக்குச் சென்று ப்ரணதார்த்திஹரனைத் தர்சித்தாள். பிதாவால்

சொல்லப்பட்ட ஸத்விஷயங்களைப் பக்தியுடன் கேட்டாள். பரமாத்மாவான ஸ்ரீக்ருஷ்ணனிடம் மேல் விவரித்த ப்ரகாரம் ஜநகநந்தினியினுடைய பக்தியானது அந்த மார்கழி மாஸத்தில் அத்யுத்கர்ஷத்தை அடைந்தது. அடிக்கடி அவள் கண்கள் முன்பாக அவள் உகந்த ரூபம் ஆவிர்பவித்து மறைவதுபோல் தோன்றியது. போகி பண்டிகை வந்தது. பெருமாளையும் ஆண்டாளையும் ஜநகம் அன்று ஸேவித்தாள். ஆண்டாளுடைய பாக்யவிசேஷம் ஜநகத்துக்கு ஒரு சுபஸூசகமாய்த் தோன்றியது.

அன்றிரவு ஜநகத்தின் ஸ்வப்நத்தில் கோபீவல்லபன் முன்போலத் தர்சநம் தந்தான். அவனுடைய திவ்ய ரூபத்தை ஜநகம் கண்டாள்; களித்து உட்கொண்டாள். அவன் பாத கமலங்களில் விழுந்தாள்; கண்ணீர் சொரிந்தாள். அளவற்ற ஆநந்தத்தை அநுபவித்தாள். ‘𑌸𑍍𑌵𑌪𑌾𑌦𑌮𑍂𑌲𑍇 𑌪𑌤𑌿𑌤𑌂 𑌤𑌮𑍇𑌤𑌂 𑌵𑌿𑌲𑍋𑌕𑍍𑌯 𑌦𑍇𑌵𑌃 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌪𑌰𑍀𑌤𑌃 । 𑌉𑌤𑍍𑌥𑌾𑌪𑍍𑌯 [illegible] 𑌕𑌰𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌂’ என்கிறபடியே, ஸ்ரீபகவான் மிகுந்த கருணையுடன் ஜநகநந்தினியைத் தன்னுடைய திருக்கைகளால் எடுத்து, அவள் சிரத்தின்மீது தன் பத்மஹஸ்தத்தை வைத்தான். “ஜநகநந்தினீ! உனக்கு மங்களம் உண்டாகும். உன்னிடம் நான் ப்ரீதனானேன். விளம்பமின்றி நீ எனது ஸாயுஜ்யத்தை அடையப் போகின்றாய்.” என்று சொல்லிவிட்டு ஸ்ரீக்ருஷ்ணன் அந்தர்தாநத்தை அடைந்தான். உடனே ஜநகம் விழித்துக்கொண்டாள்.

தன்னுடைய ஜந்மபலம் பகவத்க்ருபையென்றும், அந்த க்ருபையினுடைய ப்ரயோஜநம் அவனுடைய நித்ய கைங்கர்ய ப்ராப்தியென்றும், அவ்விரண்டும் தனக்குக் கிடைத்து விட்டதென்றும் ஜநகம் அத்யவஸித்தாள்; ஆநந்த மடைந்தாள். அவள் ஹ்ருதயத்தில் நிறைந்து பெருகிய பேரின்பமானது அவள் முகத்தில் ப்ரகாசித்தது. ஸங்க்ராந்தியன்று காலையில் வழக்கப்படி, ஸ்நாநம் செய்து முடித்த கூந்தலுடனும், ஸ்ரீ சூர்ணம் ப்ரகாசிக்கும் முகத்தில் முன் என்றும் கண்டிராத ஒரு ஸந்தோஷக் குறிப்புடனும், க்ருஹ வ்யாபார நிமித்தம் ஸஞ்சரித்துக்கொண்டிருந்த தன் புத்ரியைக் கேசவாசார்யர் பார்த்தார். விஸ்மய மடைந்தார்.

“ஜநகம்! உன் முகத்தைப் பார்த்தால் ஏதோ விசேஷம் உண்டென்று யோசனை உதிக்கின்றது” என்றார் கேசவாசார்யர்.

“விசேஷம் உண்டு.” என்றாள் ஜநகநந்தினி.

“என்ன? அதை விவரிப்பாய்” என்றனர் பிதா.

“பகவான் ராத்ரி ஸ்வப்நத்தில் ஸேவை ஸாதித்தார். தேவரீர் அடியேனை அநுக்ரஹித்த தினத்துக்கு முன் ராத்ரியிலும் அவனுடைய தர்சநம் கிடைத்தது” என்றாள் ஜநகம்.

“எவ்வண்ணம் தர்சநமளித்தான்? என்ன நடந்தது.?” என்றார் கேசவாசார்யர்.

“கோபாலனாக இரண்டு காலத்திலும் ஸேவை ஸாதித்தார். ப்ரதம தர்சநத்தில் அடியேனுடைய பக்தியை உகந்ததாயும், அடியேன் இஷ்டம் கைகூடுமென்றும் திருவாய்மலர்ந்தருளினார். நேற்றிராத்ரி அடியேனுக்கு ஸ்வப்ராப்தியை விளம்பமில்லாமல் தருவதாக வரமளித்தார்” என்று சொன்னாள் ஜநகநந்தினி.

கேசவாசார்யர் யோசித்தார். அவர் புத்ரியின் ஏகாக்ர சித்ததை அவர்க்குத் தெரியும். அதற்கு அவரும் ஸஹாயமாக நின்றார். பெண்ணின் அநுபவம் கேவலம் ப்ரமையன்றென நினைத்தார்:

“குழந்தாய்! நீ சொல்வது உண்மையானால் நீ பகவத் ப்ரஸாதத்தை ஸம்பாதித்து விட்டாய். அதற்குத் தக்க ஸாமக்ரிகள் முன்னமே உன்னிடம் சேர்ந்தன. உன்னுடைய ஜந்மம் ஸபலமாயிற்று. ஜந்மாந்தரத்திலேயே பகவான் உன்னை உகந்தருளினான். நித்ய கைங்கர்ய ப்ராப்தியின் பொருட்டு உனக்கு யாதொரு உபாய ஸ்வீகாரமின்றி நீ இந்த ஜந்மமெடுத்தாய். உன் பூர்வ ஸுக்ருத பலமாக உனக்கு ஸத்ஸங்கம் உண்டாயது. தத்வ ஜ்ஞாநம் ஸ்திரப்பட்டது. ஸம்ஸார ஸ்ப்ருஹை நசித்தது. ஆசார்ய ப்ராப்தியை அடைந்தாய். ரமாகாந்தன் திருவடிகளில் ப்ரபதநம் செய்தாய். வாஸுதேவன் பர்யங்கத்தை ஆரோஹணம் செய்யப்போகின்றாய், உன் ஆசார்யனுக்கு மிகுந்த ஸந்தோஷத்தை உண்டுபண்ணினாய்.”

“ஆனால் உன்னுடைய பிதா உன் வியோகத்தை ஸஹிப்பது கஷ்டம். சிரகாலம் உன்னுடன் பழகினபடியால் உண்டான ஸ்நேஹம் அதற்குக் காரணம். உன் ஆத்மாவும் என்னுடையதும்

அவனுடைய ஸொத்துகள். நமக்கு அறியக்கூடாத சில ப்ராசீந ஸத்கர்மங்களடியாக, அவன் ஸங்கல்பத்தால் நமக்குள் இந்தச் சரீர ஸம்பந்தம் ஜநித்தது. அவன் ஸங்கல்பத்தாலேயே அது அற்றுப்போம். லோக ரீதியில் உன்னை நான் ழீந்திக்கொள்ளல் ந்யாயம். அவன் திருவடிகளில் நானே உன் ஆத்மாவை ஸமர்ப்பித்தேன். அவனுடைய ஸொத்தை [அதாவது, எனதென்று அபிமானிக்கத் தகாததை] அவன் திருவுள்ளத்தாலேயே சில காலம் என்னிடம் நிக்ஷேபித்திருந்ததை அவனிடமே தந்தேன். உன் மனோரதப்படியோ, உன் சரீராரம்பத்துக்குக் காரணமாய் நின்ற ப்ராப்தாவஸாநத்தாலோ, உனக்குப் பகவத் ப்ராப்தி க்ஷிப்ரமாக நேரிட்டால், ஶாஸ்த்ர ரீதியாக நான் ஶோகிக்கக்கூடாது.”

“நானெப்படியாவது போகின்றேன். உன் ஸ்வப்நம் ஸத்யமாக முடிந்தால் உன் மாதா என்ன செய்வள்?” என்றிவ்வண்ணம் கேசவாசார்யர் சொன்னார். ஜநகநந்தினி ஒன்றும் சொன்னாளில்லை. பிதாவைப் பலதரம் நமஸ்கரித்தாள். நமஸ்கரித்துக் கொண்டேயிருக்கையில், “குழந்தாய்! போதும். உன் கார்யங்களைப் பார். நாராயணன் உன்னை ரக்ஷிக்கட்டும்” என்று சொன்னார். ஜநகம் அப்புறம் சென்றனள்.

அன்றிராத்ரி பெருமாள் சீவரத்துக்கு எழுந்தருளினார். கேசவாசார்யர் கைங்கர்யார்த்தம் அநுயாத்ரையாகச் சென்றார். மறுநாள் காலையில் ஜநகம் எழுந்திருக்கும்போதே தன் சரீரம் உஷ்ணித்திருக்கவும் துர்ப்பலமடைந்திருக்கவும் கண்டாள். அந்நாளுக்குரிய கார்யங்களில் அந்வயிக்கவும் அவளுக்குச் சக்தியில்லை. மத்யாஹ்நத்தின் மேல் உக்ரமான ஜ்வரம் உண்டாகிப் படுக்கையாய்ப் படுத்துவிட்டாள். ஹரிப்ரியை ஸ்ரீநிவாஸனுக்குச் சொல்லியனுப்பினாள்.

உடனே ஸ்ரீநிவாஸன் வந்தான். ஸந்நிவேசங்களை ஹரிப்ரியையினிடம் தெரிந்துகெண்டான். உள்ளே சென்று ஜநகத்தைப் பார்த்தான். ஜ்வர வேகத்தால் தூங்குகின்றவள் போல் தென்பட்டாள். “ஜநகம்!” என்று கூப்பிட்டான். அவள் கண்திறந்தாள்.

“என்ன உடம்பு?” என்று ஸ்ரீநிவாஸன் கேட்டான். “ஜ்வரம்” என்றாள் ஜநகநந்தினி. “உன்னைத் தொடலாமா?” என்று ஸ்ரீநிவாஸன் கேட்டான். “தொடவேண்டுமா? தொட்டுப்பார்” என்றனள்.

ஸ்ரீநிவாஸன் அவள் கையைத் தொட்டான். பிறகு முகத்தைத் தொட்டுப்பார்த்தான். ஜ்வரம் மிகவும் உக்ரமானதென்று அறிந்தான். “ஜநகம்! நான் ஹாஸ்பிடல் வைத்யரை அழைத்துக்கொண்டு வருகிறேன்” என்று சொல்லிக்கொண்டு எழுந்தான்.

“நீ அவரைக் கூப்பிடாதே. நான் ஹாஸ்பிடல் மருந்து சாப்பிட மாட்டேன். எனக்கு வைத்யரே வேண்டாம்” என்று ஜநகநந்தினி சொன்னாள்.

“ஏன் அப்படிச் சொல்லுகின்றாய்? இதென்ன பைத்யம்?” என்றனன் ஸ்ரீநிவாஸன்.

“பைத்யம் ஒன்றுமில்லை. எனக்குச் சிகித்ஸை பயன்படாது” என்றாள் ஜநகம்.

“ஜ்வரவேகத்தால் பேசுகின்றாயோ?” என்றான் ஸ்ரீநிவாஸன்.

“ஆமாம். அதன் வேகம் சிகித்ஸையால் அடங்காது. தானே அடங்கும்” என்றாள் ஜநகநந்தினி. இதையெல்லாம் கேட்டிருந்த ஹரிப்ரியை,

“குழந்தாய்! நான்தான் ஸ்ரீநிவாஸனை வரவழைத்தேன். அப்பா இல்லையென்று உனக்குத் தெரியாதா? ஸ்ரீநிவாஸன் வைத்யரை அழைத்து வரட்டும். தடை சொல்லாதே.” என்றுசொன்னாள்.

“அம்மா! எனக்கு ஹாஸ்பிடல் வைத்யம் வேண்டாம். அப்பா வந்தபிறகு பார்த்துக்கொள்ளலாமே. உனக்கு அவஸரம் என்ன?” என்றாள் ஜநகம்.

“இந்த ஜ்வரத்தை வைத்யம் செய்யாமல் நிமிஷமும் வைத்துக்கொள்ளலாமோ? நான் வைத்யர் திருமலாசார்யரையாவது அழைத்துக்கொண்டு வருகிறேன்” என்றான் ஸ்ரீநிவாஸன்.

“வேண்டுமானால் அழைத்துக்கொண்டுவா” என்றனள் ஜநகம். ஸ்ரீநிவாஸன் வைத்யர் வீட்டுக்குப் போனான். ஹரிப்ரியை பெண்ணின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தாள்.

வைத்யர் வந்தார். ஜநகத்தின் கையைப் பிடித்துப் பார்த்தார். "என்னமாயிருக்கின்றது?" என்றாள் ஹரிப்ரியை. "ஜ்வரம் தான். இரண்டு மூன்று வேளை மருந்து கொடுத்தால் ஸ்வஸ்தமாகும்" என்றார் வைத்யர். தேன் கொண்டுவரச் சொல்லி இரண்டு மூன்று கட்டு மாத்ரைகளைத் தேய்த்துக்கொடுத்தார். ஜநகம் கஷ்டத்துடன் எழுந்து ஔஷதத்தைச் சாப்பிட்டாள். "மறுபடியும் ஸாயங்காலம் வருகின்றேன்" என்று சொல்லிவிட்டு வைத்யர் எழுந்துபோனார். ஸ்ரீநிவாஸன் அவரைப் பின்தொடர்ந்தான்.

"என்னமாயிருக்கிறது?" என்று வெளியில் வந்து வைத்யரைக் கேட்டான்.

"உக்ரமான ஜ்வரம். இரண்டு மூன்று வேளை ஔஷதம் செல்லட்டும்; அப்புறம் பார்ப்போம்" என்றார் வைத்யர். ஸ்ரீநிவாஸன் ஹ்ருதயத்தில் ஶோகாக்நி மூட்டப்பட்டது. கேசவாசார்யருடைய வீதித் திண்ணையில் ஸ்ரீநிவாஸன் உட்கார்ந்தான். உள்ளே செல்வன். கண்மூடிப் படுத்திருக்கும் ஜநகத்தைப் பார்ப்பன். வெளியே வந்து உட்கார்வன். இவ்வண்ணம் ஸாயங்காலம் வரையில் சென்றது. அவனுடைய மாதாவும் விஷயமறிந்து அவ்விடம் வந்து சேர்ந்தாள்.

அஸ்தமித்தவுடன் வைத்யர் வந்தார். கைபார்த்தார். அதுவரையில் ஜநகநந்தினி ஜ்வரவேகத்தால் கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தாள். கூப்பிட்டால் கண்களைத் திறந்து பார்ப்பள். கேட்ட கேள்விக்குப் பதில்சொல்வள். அந்த விஷயங்களை வைத்யர் கேட்டுத் தெரிந்துகொண்டார். முன்போலக் கட்டுமாத்ரைகளைத் தேனில் தேய்த்து ஜநகத்துக்கு மருந்து கொடுத்தார். ஆகாரத்துக்காகக் கஞ்சி கொடுக்கச் சொன்னார். மறுநாள் காலையில் வருவதாகச் சொல்லிவிட்டுப் போனார்.

அன்றிரவு ஜநகம் தூங்கினாளில்லை. ஜ்வரம் ஒரே நிதாநமாய் அடித்தது. அதிகமாகப் படுக்கையில் புரண்டாள். வாயில் வந்தபடியெல்லாம் பேசினாள். ஆனால் அவள் வார்த்தைகள் எல்லாம் ஸத்விஷயங்களைப் பொறுத்தன. பிதாவுடன் பேசுவதுபோல் பேசுவள். பகவத்விஷயமான ஶ்லோகங்களையும் பாசுரங்களையும் பாடுவள். கூப்பிட்டு, ஸந்தர்ப்ப மற்றபடிப் பேசுகிறதாகச் சொல்லப்பட்டால், "நான் அப்படியா சொன்னேன்?" என்று சொல்வள். படுக்கையைச் சுற்றி ஹரிப்ரியையும், ஜநகவல்லியும், ஸ்ரீநிவாஸனும் உட்கார்ந்து காலம் கழித்தார்கள்.

பின்மாலை வரதன் சீவரத்தினின்று திரும்பி எழுந்தருளினார். உடனே கேசவாசார்யர் வாசலில்வந்து கதவைத் தட்டினார். ஹரிப்ரியை எழுந்துபோய்க் கதவைத் திறந்தாள். கேசவாசார்யருடன் பத்மநாபாசார்யரும் நின்றார். "குழந்தை தாபஜ்வரத்தால் ஸங்கடப்படுகிறாள்; ராத்ரியெல்லாம் நாங்கள் தூங்கவில்லை; வந்து பாருங்கள்!" என்று சொன்னாள்.

கேசவாசார்யரும் பத்மநாபாசார்யரும் உள்ளே சென்றார்கள். கேசவாசார்யர் ஜநகநந்தினியிடம் போய் உட்கார்ந்து அவள் கையையும் முகத்தையும் தொட்டுப் பார்த்தார். ஜ்வரவேகத்தைத் தெரிந்துகொண்டார். "ஜநகம்!" என்றார். ஜநகம் கண்திறந்து பிதாவைப் பார்த்தாள். "குழந்தாய்! என்னமாயிருக்கிறாய்?" என்றார். "ஜ்வரம் மயக்கமாய் இருக்கின்றது. தாகம் எடுக்கின்றது" என்று சொன்னாள்.

வைத்யர் திருமலாசார்யர் வந்து இரண்டு வேளை மருந்து கொடுத்தாரென்றும், மறுபடியும் காலையில் வருவர் என்றும் ஹரிப்ரியை கேசவாசார்யருடன் சொன்னாள். கேசவாசார்யர் யோசிப்பதுபோல் இருந்தார்.

"ஜ்வரவேகம் பலமாய் இருக்கிறது போல் தோன்றுகிறதே. வைத்யம் போதுமா?" என்று பத்மநாபாசார்யர் கேட்டார்.

"திருமலாசார்யர் வந்தால் அவரைக் கேட்டுக்கொண்டு மேல் யோசனை செய்யலாமே" என்றார் கேசவாசார்யர்.

"நான் போய் திருமலாசார்யரை அழைத்துக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு ஸ்ரீநிவாஸன் போனான்.

"நான் சீவரத்துக்குப் போகும்போது குழந்தை ஸௌக்யமாயிருந்தாளே. இந்த ஜ்வரம் எப்போது வந்தது?" என்றார் கேசவாசார்யர்.

"நேற்று உதயம் முதற்கொண்டே அவளுக்கு உடம்பு செவ்வையில்லை. இந்த வேகமான ஜ்வரம் மத்யாஹ்நமே வந்துவிட்டது. அப்போதே படுக்கையாய்ப் படுத்துவிட்டாள். ஸ்ரீநிவாஸனை வரவழைத்தேன். அவன் ஆஸ்பத்ரி வைத்யரை அழைத்துக்கொண்டு வருவதாய்ச் சொன்னான். ஜநகம் அதை ஒப்ப

வில்லை. அதன்பிறகு திருமலாசார்யரை அழைத்துவந்தான்" என்று ஹரிப்ரியை சொன்னாள்.

"இந்த ஜ்வரத்துக்குக் காரணம் பஹு ப்ரகாரமாக ஏற்பட்டுவிட்டது. ஶரண்யன் ஸங்கல்பம் எப்படியிருக்குமோ தெரியாது" என்று சொன்னார் கேசவாசார்யர்.

"தேவரீர் இப்படி அதைர்யப் படலாமோ?" என்றார் பத்மநாபாசார்யர் மேலே யாதொரு வார்த்தையும் நடக்கவில்லை. ஸ்ரீநிவாஸனும் திருமலாசார்யருடன் வந்துசேர்ந்தான். வைத்யர் வந்தவுடன் ஜநகநந்தினியினுடைய கையைப் பிடித்துப் பார்த்தார். பிறகு "ராத்ரி தூங்கினாளா?" என்று கேட்டார். "தூக்கமில்லை. மிகவும் அரற்றிக்கொண்டிருந்தாள்" என்று ஸ்ரீநிவாஸன் சொன்னான். வைத்யர் நடைத்திண்ணைமீது போய் உட்கார்ந்தார். கேசவாசார்யர், பத்மநாபாசார்யர், ஸ்ரீநிவாஸன், இவர்களும் போய் உட்கார்ந்தார்கள். கேசவாசார்யர் வைத்யரைப் பார்த்து, "என்ன யோசிக்கின்றது? ஜ்வரத்தின் ஸ்வரூபம் என்ன?" என்று கேட்டார். "இந்த ஜ்வரம் அங்குரித்து மூன்று நாள் ஆயிருக்கவேண்டும். ஸாவதாந மில்லாமையால் அது வ்ருத்தியாய் விட்டது. இரண்டு வேளை ஔஷதம் கொடுத்தேன்: அது ப்ரயோஜநப்பட்டதாகத் தோன்றவில்லை. பெரிய காஞ்சீபுரம் ஸ்வாமிகுருக்களிடம் விஶேஷ மாத்ரைகள் உண்டு. அவரை அழைத்துவாருங்கள்" என்று வைத்யர் சொன்னார்.

"அடியேன் புறப்பட்டுப்போய்க் குருக்களை அழைத்துக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லிப் பத்மநாபாசார்யர் சென்றார். வைத்யர் திருமலாசார்யரும் "இதோ வந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனார். ஸ்ரீநிவாஸன் ஆற்றின் பக்கமாய்ப் போனான். கேசவாசார்யரும் உதயமான குளப்புறம் சென்று நீராட்டம் செய்துகொண்டு ஈரவஸ்த்ரங்களுடன் இல்லத்துக்குத் திரும்பிவந்தார். உடனே வஸ்த்ரதாரணம் செய்துகொண்டு ப்ராதஸ்ஸந்த்யாவந்தநம் முதலான நித்யகர்மங்களைச் செய்து முடித்துக்கொண்டார். அவருடைய பத்நியும் ஸஹோதரியும், மாறிமாறி ஜநகநந்தினியினுடைய பக்கத்தில் இருந்தார்கள். ஸ்ரீநிவாஸனும் அவர்கள் பக்கம்வந்து உட்கார்ந்தான்.

பத்ராதிபர்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:.

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் சரித்ர ஸங்க்ரஹம்.

"ஜீவநம் ஜகதாம் ஜீயாத் த்ரைவேத்ய மத ஸம்ஶ்ரயம் ।
ஸ்வதந்த்ரம் ஸர்வதந்த்ரஜ்ஞம் வேங்கடேச ஸமாஹ்வயம் மஹ: ।"

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் என்னும் இம்மஹாந் கலி 4371-ஆவதான சுக்ல வர்ஷம் புரட்டாசி மாஸம் திருவோண நக்ஷத்ரத்திலே [கி. பி. 13, 14 - வது நூற்றாண்டில்] பெருமாள் கோவிலில் [காஞ்சீபுரம்] தூப்புல் என்னும் திவ்யதேசத்தில் விஶ்வாமித்ர கோத்ரத்தில் அநந்தஸூரி என்பவருக்குத் தோதாரம்மை என்னும் தேவிகளிடத்தில் திருவவதரித்தார். இவ்வாசார்யோத்தமர் 101 - திருநக்ஷத்ரம் இந்த லீலாவிபூதியை அலங்கரித்துவிட்டு, ஸௌம்ய வர்ஷம் கார்த்திகைமீ பௌர்ணமி புதன்கிழமையன்று ஸ்ரீரங்கத்தில் அவதாரஸமாபநம் செய்யும்பொழுதும் திருமணியாகவே ஆய்விட்டனர். இவ்விஷயம் ஸ்வாமி திருக்குமாரர் நயினாராசார்யர் செய்தருளின சரம ஶ்லோகத்தினால் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. இவருடைய அவதார வைபவம் வருமாறு:—திருவேங்கடமுடையான் தமது ஸ்வப்நத்திலே நியமித்தபடி அநந்தஸூரி தேவிகளுடன் திருமலைக்கு எழுந்தருளின காலத்தில் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் திருமணியைக் கொடுத்ததாகவும், அதை மடியில் வைத்துக்கொண்டவுடனே மறைந்துவிட்டதாகவும் தோதாரம்மன் கனவுகண்டார். அப்படியே அடுத்த நாள் திருவேங்கடமுடையான் ஸந்நிதியில் திருமணி இல்லாமையினால், அத்திருமணிமூலமாகத் திருவேங்கடமுடையானே கர்ப்பத்தில் தோன்றி, பராஶர ப்ருஹ்மருஷியைப்போல் 12 - வர்ஷம் கர்ப்ப

வாஸம் செய்து பன்னிரண்டாவது வர்ஷத்தில் திருவவதரித்தார். ஸ்ரீபாஷ்யகாரர் தமது வரம தசையில் கலங்கிநின்ற சிஷ்யர்களுக்கு 'நாமே க்ருஹஸ்தாஶ்ரமத்தோடு ஒரு அவதாரம் செய்யப்போகிறோம்' என்று அநுக்ரஹித்ததை அறிந்த மஹநீயர்கள் 'இவர் உடையவர் அவதாரம்' என்றும் சொல்வார்கள். இவர் 5-வது வயது பூர்த்தியாவதற்கு முன்பே மாதுலனாகிய அப்புள்ளாரோடு சென்று அம்மாளுடைய கோஷ்டியில் காலக்ஷேபத்தில் மறந்து விட்ட இடத்தை எடுத்துக்கொடுத்து அர்த்தத்தையும் உபந்யஸித்து, அம்மாளால் 'உடையவருடைய ஸித்தாந்தத்தை ஸ்தாபிக்கக்கடவீர்' என்று ஆசீர்வதிக்கப்பெற்றார். 20-வயதுக்குள் அப்புள்ளாரிடத்தில் ஸகல சாஸ்த்ரங்களையும் ஐயந்திரிபற அப்யஸித்து, அவரால் உபதேசிக்கப்பட்ட கருடமந்த்ரத்தைத் திருவயிந்த்ரபுரம் என்னும் திருப்பதியிலுள்ள ஔஷதாசலம் என்னும் (கேபர்) மலையில் அரசமரத்தடியில் ஆவ்ருத்திசெய்தார். பிறகு கருடன் க்ருபையினால் ஹயீக்ரீவ மந்த்ரத்தை உபதேசிக்க, அதையும் ஆவ்ருத்தி செய்ததனால் ஹயக்ரீவன் ப்ரஸந்நனாகி லாலாம்ருதத்தைக் கொடுக்க, அதனால் ஏற்கெனவே பூர்ணமாக இருந்த ஜ்ஞாநம் நிஸ்ஸமாப்யதிகமாய் விளங்கிற்று. பிறகு, அவ்வயிந்தை மாநகரில் அநேக ஸம்வத்ஸரங்கள் எழுந்தருளியிருந்து, திருவடிகளுக்குக் காலக்ஷேபாதிகளை ஸாதித்துக்கொண்டிருந்தார். அதன்மேல், திவ்யதேச யாத்ரையாகப் புறப்பட்டு அநேக திருத்தலங்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களை மங்களாஶாஸநம் செய்துகொண்டு ஒரு ஸமயத்தில் மீண்டும் திருவஹீந்த்ரபுரம் எழுந்தருளி 'ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்' என்னும் பிருதை ப்ரகாஶப்படுத்தத் தமது திருக்கைகளாலேயே திருக்கிணறு ஒன்று கட்டினார். இவ்வாசார்யர் எழுந்தருளியிருந்து தவம் செய்த இடமும், ஹயக்ரீவன் கருடன் இவர்கள் இவர்க்கு ஸேவை ஸாதித்த வண்ணம் எழுந்தருளியிருப்பதும், இவர் எழுந்தருளி ஶிஷ்யர்களுக்குக் காலக்ஷேபம் ஸாதித்த திருமாளிகையும், அதில் தாம் கட்டிய திருக்கிணறும் ப்ரகாஶிப்பதை இன்றும் எல்லோரும் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கலாம்.

பிறகு ஒருகால் ஸ்ரீகாஞ்சீயில் எழுந்தருளியிருக்கும்பொழுது, ஒரு வைஶாகோத்ஸவ காலத்தில் சிவகாஞ்சியில், 'ஸ்ரீ வரதனுக்கு உத்ஸவம் செய்யக்கூடாது' என்று தடுத்த வாதிகளுடன் வாதம்செய்து விஷ்ணுபரத்வத்தை ஸ்தாபித்ததனால் 'கவிதார்க்கிக ஸிம்ஹம்' என்ற பிருது வித்வான்களால் கொடுக்கப்பட்டது.

திருமலையில் ஸ்ரீநிவாஸனை மங்களாஶாஸநம் செய்ய எழுந்தருளியிருக்கும்பொழுது விஜயநகரம் ராஜஸம்ஸ்தாநத்தில் வித்யாரண்ய முனிக்கும் அக்ஷோப்ய முனிக்கும் வாதம் நடக்கும் ஸமயத்தில் இவ்விரண்டு மஹா வித்வான்களுடைய வாதத்தில் மத்யஸ்தராயிருக்கத்தக்க யோக்யதையுள்ள வேறெவரும் இல்லாமையினால், ராஜா இவருக்கு ஸர்வஸ்வ தாநம் செய்வதாய் எழுதிச் சிவிகையும் அனுப்ப, 'வைராக்ய பஞ்சகம்' என்னும் ஶ்லோகங்களைச் செய்து அனுப்பினார். பிறகு ராஜாவும் பரமபக்தியுடன் அவர் வாதங்களை எழுதியனுப்ப, இவரும் தம்முடைய அபிப்ராயத்தைத் தீர்ப்பாக எழுதியனுப்பினார். பிறகு காஞ்சீபுரத்துக்கே எழுந்தருளிவிட்டனர். அந்த ஸமயத்தில் ஸ்ரீரங்கத்தில் ஒரு மாயாவாதி, தன்னை ஜயித்து விஷ்ணுபரத்வத்தை ஸ்தாபித்தபின்பு ஸ்ரீரங்கநாதனுக்குஆராதநம் செய்யவேண்டுமென்று ராஜஶாஸநத்தினால் ஸ்ரீரங்கநாதனுடைய ஆராதநத்தை மறைத்து விட்டான். அப்பொழுது அங்கேயிருக்கிற பெரியோர்கள் இவருக்கு ஸ்ரீமுகம் எழுதினார்கள். உடனே இந்த கண்டாவதாரரும், தாம் அமுது செய்யாமல் பட்டினியாகவே கோயிலுக்கு எழுந்தருளி, அம்மாயாவாதியை ஜயித்து, விஷ்ணுபரத்வத்தை ஸ்தாபித்து, ஸ்ரீரங்கநாதனுக்குத் திருவாராதநத்தைக் கண்டருளப்பண்ணினார். பிறகு ஸ்ரீரங்கநாதனை ஸேவிக்கும்பொழுது, அந்த ஸதஸ்ஸில் மிகவும் திருவுள்ளம் உவந்த ஸ்ரீரங்கநாதன் 'எனக்கே அஸாதாரணமாய், இதுவரையிலும் வேறொருவருக்கும் கிடைக்காத 'வேதாந்தாசார்யர்' என்னும் திருநாமத்தை உமக்குத் தந்தோம்' என்று திருவாய்மலர்ந்தருளினர். பிறகு ஸ்ரீரங்கநாயகியை மங்களாஶாஸநம் செய்யப்போன ஸமயத்தில் பிராட்டி, அநுக்ரஹத்தோடு 'ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்' என்னும் நாமத்தைச் சாத்தினாள். இப்படி ஸ்ரீரங்கத்தில் உபயவேதாந்த காலக்ஷேபங்களைச் செய்வித்துக்கொண்டு ஶிஷ்யர்களோடு எழுந்தருளியிருக்கிற காலத்திலே, காஞ்சிபுரத்திலிருந்து சில அஸூயர்களின் தூண்டுதலினால் இரண்டு ப்ருஹ்மசாரிகள் கல்யாணத்துக்கு த்ரவ்யம் வேண்டுமென்று ஸ்வாமியைச் சரணமாக அடைய, அப்பொழுது 'ஸ்ரீஸ்துதியை'ச் செய்தருளி அவர்களிடம் கொடுத்து ஸ்ரீரங்கநாயகி ஸந்நிதியில்

அநுஸந்திக்கும்படி சொன்னார். அப்படியே அவர்கள் அநுஸந்திக்க, கமலையின் கருணையினால் கநகவர்ஷம் உண்டாக, அவ்விருவரும் அதைப்பெற்றுத் தேசிகன் திருவடிகளில் அபசார க்ஷாபணம் செய்துகொண்டு சென்றார்கள்.

பின்னும் சில நாள் கழிந்தவாறே, பித்ரு ஶ்ராத்த திநத்தில் ப்ரார்த்திக்கப்பட்டுத் திருவுள்ள மிசைந்த சில ஸ்வாமிகள், ஶ்ராத்த காலத்தில் எழுந்தருளாததனால், தேசிகோத்தமனும் திரை ஸமர்ப்பித்து ப்ரார்த்தித்தவாறே, ஹயக்ரீவன் மூன்று திருநாமங்களாக எழுந்தருளி அமுதுசெய்துவிட்டு லாலாம்ருதத்தைத் தந்து போனார்.

மறுபடியும் கொஞ்சகாலம் கழித்து, க்ருஷ்ணமிஶ்ரன் 'திவ்யப்ரபந்தத்தை அநுஸந்திக்கக்கூடாது' என்றும், 'ஆழ்வார்களுடைய அர்ச்சையைக் கோயிலில் பூஜிக்கக்கூடாது' என்றும் ஆக்ஷேபித்து அத்யயந உத்ஸவத்தைத் தடுக்க, 'ஆழ்வார் தசாவதாரத்தைப் போன்றவர்,' 'திவ்யப்ரபந்தமும் வேதந்தான்' என்று ஸ்தாபித்து உத்ஸவத்தை நடத்திவைத்தார்.

மற்றொரு ஸமயம் ஸ்ரீரங்கத்தில் துருஷ்கர் கலாபம் நேர்ந்தபொழுது 'ஶ்ருதப்ரகாஶிகை' என்னும் க்ரந்தத்தையும், ஶ்ருதப்ரகாஶிகாசார்யருடைய குமாரர்கள் இருவரையும் காப்பாற்றிக்கொண்டு, 'அபீதிஸ்தவ' த்தால் பகவானை ப்ரார்த்திக்கக் கலாபம் நீங்கிற்று.

ஒரு காலத்தில் அழகியமணவாளப்பெருமாள் நயினார் என்கிற வித்வாந், 'எவர் ஒரே ராத்ரியில் 1000 - ஶ்லோகங்கள் செய்கின்றனரோ, அவருக்கு அந்தப் பெயர் தகும்' என்று சொல்லித் தாம் 'பதகமல ஸஹஸ்ரம்' செய்வதாய் ப்ரதிஜ்ஞை செய்தார். தேசிகனும் 'பாதுகா ஸஹஸ்ரம் செய்வதாய் ப்ரதிஜ்ஞை செய்து, பெரியோருடைய ப்ரார்த்தனையின்பேரில் ராத்ரி ஒரு யாமத்தில் ஆரம்பித்து 1000 - ஶ்லோகங்களையும் செய்து முடித்தார்.

பின்பு ஒருதினம் ஸ்வாமி ஶிஷ்யர்களுக்குக் காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டிருக்கும்பொழுது, வீதியில் கந்தாடை லக்ஷ்மணாசார்யர் என்பவர் போய்க்கொண்டிருந்தார். அப்பொழுது ஸ்வாமி எழுந்து நிற்காத கோபத்தினால் ஒரு ஶிஷ்யர் ஸ்வாமியைப் பிடித்து இழுக்க, ஸ்வாமியும் ஸந்த்யாகாலத்திற்கு எழுந்தருளினார். அதனால் அவருக்குக் குஷ்டரோகம் பிடிக்க, லக்ஷ்மணாசார்யர் தேவிகள் தேசிகனிடம் வந்து அபசாரக்ஷாபணம் செய்து ஸ்ரீ பாததீர்த்தத்தை உட்கொள்ள, அந்த தீர்த்த மஹிமையினால் அவருக்குப் பிள்ளை பிறந்தது. அக்குமாரருக்கு இக்காரணம் கருதியே 'தீர்த்தப்பிள்ளை' என்று திருநாமம் இடப்பட்டது.

பின்பு ஒரு ஸமயத்தில் சில்ப வித்வாந்கள் சிலர் ப்ரஸசகத்துக்கு வந்தார்கள். அப்பொழுது தாம் ஒரு விக்ரஹத்தைச் செய்வதாயும் அதற்குப் பீடம் சேர்க்கும்படி அவனிடம் நியமித்தனர். அவ்வாறே, 'எந்த விக்ரஹத்தைச் செய்யலாம்' என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது, ஸ்வப்நத்தில் ஸ்ரீரங்கநாதன் 'உம்முடைய விக்ரஹத்தையே காலக்ஷேபம் ஸாதிக்கிற ப்ரகாரமாய் ஸ்ரீகோசம் ஜ்ஞாந முத்ரையுடன் எழுந்தருளப்பண்ணிக்கொள்ளும்' என்று நியமித்தார். அப்படியே விக்ரஹத்தை எழுந்தருளப்பண்ணி, பீடத்தைச் சில்பியைச் சேர்க்கும்படி நியமிக்க, அது சேராமற்போனவாறே, விக்ரஹத்தில் அந்த சில்பி செதுக்க, ஸ்வாமியின் கபோலத்தில் ரக்தம் உண்டானது. சில்பியும் அபசாரக்ஷாபணம் செய்துகொண்டுபோனான். அப்பொழுது 'சில்பார்த்தஸாரம்' என்னும் க்ரந்தம் அருளிச்செய்தனர்.

ஒரு தேஶிக பக்தர்.

1916-ம் வருஷம் டிஸம்பர் மாஸத்தில் சேர்ந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸதஸ்ஸின் சாயா படம் (Group Photo) விலைக்கு அகப்படும். காபி ஒன்றுக்கு ரூபாய் 2. படத்தை அபேக்ஷிக்கிறவர்கள் மயிலாப்பூர் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்ஶிகளுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

ஸ்ரீ ஹயக்ரீவாய நம:

ஸ்ரீ ஹயக்ரீவாஷ்டகம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible] ॥ 1.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

[illegible]…………[illegible] ॥ 2.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

[illegible]…………[illegible] ॥ 3.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

[illegible]…………[illegible] ॥ 4.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

[illegible]…………[illegible] ॥ 5.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

[illegible]…………[illegible] ॥ 6.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

[illegible]…………[illegible] ॥ 7.

ப்ரதிவாதி கதா ஸந்த ஸம்ஸக்தி வ்யாக்ஷேபிணம் ஸம்ஹ்ருதவான்
யோ க3த்யம் தே3வேப்4யோ நந்த3ந தத்த்வத3ர்ஶநம் தி3ஶதி ச |
ஸ்வாம் ப்ரபஞ்ச நாதி2 ஸ்ம்ருதி ஸம்ஸக்தம் த3த3 ஜீவிதம்
வாஜிவக்த்ர தே3வாஸ்ய த3த3 கோடிபோ3த4யாத3ய: |
பாயாஸ்மா………. வாஜி தே3வ: | 8.

ஸ்ரீநிவாஸ கவீந்த்3ர க்லுப்த ஶ்ரீவாஜி தே3வாஷ்டகம்
ப4க்திவஶ்ய தே3வஸ்ய கீர்தந காமிநா ஸந்த3ர்பி4தம் |
ஸூக்திஸ்தோத்ர ஸமுச்சயம் கவிவாதி3 கீர்திகரம் ந்ருணாம்
ஶாஸ்த்ரபோ3த4ஸம்ருத்3தி4ம் ஶம ஸாம ஸந்மதி தா3யகம் ||
பாயாஸ்மா…………வாஜி தே3வ: || 9.

அத வாஜிவக்த்ர நிவேத3நம்
தே3ஹாரோக்3யம் ப்ரிய ஸந்தாநம் ராஜ்யம் |
யேந ச வர்த்3த4ந பத3ம்
யேயோக்தா ஸர்வ ப்ரஸாத3தே3வி ஹ்ருத3யே |

இதி ஹயக்3ரீவாஷ்டகம்

ஸம்பூர்ணம்.

… ஸ்ரீநிவாஸகவி:.

[இந்த ஸ்ரீ ஹயக்ரீவாஷ்டகம் என்னும் ஸ்தோத்ரமானது, தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த தில்லஸ்தாநம் என்று வ்யவஹரிக்கப்படும் ஸ்ரீ க்ராமத்தில் வஸித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீ ஹயக்ரீவ பக்தரான ஒரு ஸ்ரீ வைஷ்ணவரால் இயற்றப்பட்டது. அவர் வாதூல கோத்ரோத்பவர்; ஸ்ரீநிவாஸன் என்னும் திருநாம முடையவர்; ஸ்ரீ ஸ்ரீநிவாஸகோபால மஹா தேசிகனை ஆசார்யராகக் கொண்டவர். ஸ்ரீ விசிஷ்டாத்வைத வேதாந்த சாஸ்த்ரார்த்தத்தை அறிந்திருப்பதுடன், அவர், ஸாஹித்யத்திலும் ஜ்ஞானத்தை யுடையவ ரென்றே நாம் நினைக்கிறோம். அவர் செய்திருக்கும் க்ருதிகள் பல வுள. அவைகளுள் இந்த ஸ்தோத்ரம் ஸ்ரீ ஹயக்ரீவ விஷயகமானதாலும் அதைக் கீர்த்தநம் செய்பவர்களுக்குப் பலவித ச்ரேயஸ் ஸம்பவிக்குமென்று அதன் பலச்ருதியிற் சொல்லப்பட்டிருக்கிறபடியாலும், அது செவிகளுக்கு மிக இனியதாகத் தோன்றியபடியாலும் இவ்விடத்தில் அதை ப்ரசுரம் செய்ய நாம் துணிந்தோம். ஸ்ரீ வேதாந்த தீபிகையைப் படிக்கும் அன்பர்களும் அதை அப்படியே அநுபவிப்பார்க ளென்று நம்புகிறோம். அபிஜ்ஞர்கள் அதன் குணதோஷங்களை வெளியிட்டால் அது விஷயத்தில் அதன் கர்த்தா மிக க்ருதஜ்ஞதையுள்ளவராகவே இருப்பர் என்பதில் ஆக்ஷேப மில்லை.

வாஸுதேவதாஸ:.]

ஸ்ரீ:.

வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

	ரூ.	அ.	பை.
1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்) … …	0	2	0
2. ஸ்ரீ த்ராவிடவேத தாத்பர்யம்—(ஸ்ரீ. எஸ். கோபால ஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது) … …	0	2	0
3. ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் சிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்) … … … … …	0	2	0
4. ஸ்ரீ பாகவத தசிஸ்லோகீ - (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்மாசார்யர்) … … … … … …	0	4	0
5. ஸ்ரீ சதுஸ்லோகீ விவரணம் … … … …	0	0	4

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

𑌵𑌪𑍁𑌰𑌾𑌦𑌿𑌷𑍁 𑌯𑍋𑌽𑌪𑌿 𑌕𑍋𑌽𑌪𑌿 𑌵𑌾
𑌗𑍁𑌣𑌤𑍋𑌽𑌸𑌾𑌨𑌿 𑌯𑌥𑌾𑌤𑌥𑌾𑌵𑌿𑌧𑌃 ।
𑌤𑌦𑌯𑌂 𑌤𑌵 𑌪𑌾𑌦𑌪𑌦𑍍𑌮𑌯𑍋-
𑌰𑌹𑌮𑌦𑍍𑌯𑍈𑌵 𑌮𑌯𑌾 𑌸𑌮𑌰𑍍𑌪𑌿𑌤𑌃 ॥ 25.

---

52. கீழ் ஶ்லோகத்தினால், 'நீயோ தயாவான் நானோ தயநீயன், இப்படி ஒருவரையொழிய ஒருவர்க்குச் செல்லாத இந்த ஸம்பந்தத்தைக் கை விடாமல் ரக்ஷித்தருள வேணும்' என்று பகவானை ப்ரார்த்தித்துவிட்டு, இப்பொழுது ஆத்ம விஷயகமான தமது ஜ்ஞாந ஸங்கோசத்தை ஒருவாறு அநுஸந்தித்து, 'அஹம் புத்தி போத்யமான வஸ்து எதுவாக இருந்தாலும், அந்த வஸ்துவை உன்னுடையது என்று உணர்ந்து அதை உன் திருவடிகளிலே ஸமர்ப்பித்து விட்டேன்' என்று விஜ்ஞாபநம் செய்து கொள்ளுகிறார். பகவத் கடாக்ஷத்திற்கு ஆத்ம ஸ்வரூப ஜ்ஞாநம் அவஶ்யம் அபேக்ஷிதமே; அந்த ஸ்வரூபத்திற்கு அநுரூபமான புருஷார்த்தாபேக்ஷையை முன்னிட்டு உபாயாநுஷ்டாநம் செய்வது தான் ஶாஸ்த்ரம் சொல்லும் மார்க்கம். ஆனாலும், மோக்ஷத்தில் ஆசையுடையவர்களுக்கு 'தாமும் தம்மைச் சேர்ந்த எல்லா வஸ்துக்களும் பகவானுக்கு ஶேஷபூதங்கள்; அவன் தான் ஸர்வ ஶேஷீ' என்னும் ஸர்வ ஶாஸ்த்ர ஸாரதமமான நிஶ்சய புத்தி இருந்தால் போதுமானது என்பதை ஸூசிப்பித்துக் கொண்டு இந்த ஶ்லோகத்தை அநுக்ரஹிக்கிறார். ஜீவாத்மாக்களெல்லாம் தாஸர்கள், பகவான் ஸ்வாமீ என்னும் ஜ்ஞாநம் ஸுலப மன்று. ப்ராயேண

எல்லாரும் தாமே ஸ்வாமீ என்று நினைப்பவர்கள் தாம். அப்படி நினைப்பதை விட வேறு பெரியதான பாபம் கிடையாது என்பதை,

"𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌥𑌾 𑌸𑌨𑍍𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌨𑍍𑌯𑌥𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌕𑌿𑌂 𑌤𑍇𑌨 𑌨 𑌕𑍃𑌤𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌚𑍋𑌰𑍇𑌣𑌾𑌤𑍍𑌮𑌾𑌪𑌹𑌾𑌰𑌿𑌣𑌾 ॥"

என்று அபிஜ்ஞர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அந்தத் தவறுதலான ஜ்ஞாநம் மோக்ஷத்திற்குப் பெரியதொரு ப்ரதிபந்தகம் என்பது தான் இவ்விடத்தில் விவக்ஷிதம்.

𑌵𑌪𑍁𑌰𑌾𑌦𑌿𑌷𑍁 𑌯𑍋𑌽𑌪𑌿 𑌕𑍋𑌽𑌪𑌿 𑌵𑌾 (𑌅𑌹𑌂 𑌸𑍍𑌯𑌾𑌂); 𑌗𑍁𑌣𑌤𑍋 𑌯𑌥𑌾𑌤𑌥𑌾 𑌵𑌿𑌧𑌃 𑌅𑌸𑌾𑌨𑌿; 𑌤𑌤𑍍, 𑌅𑌯𑌮𑌹𑌂 𑌤𑌵 𑌪𑌾𑌦𑌪𑌦𑍍𑌮𑌯𑍋 𑌮𑌯𑌾 𑌅𑌦𑍍𑌯𑍈𑌵 𑌸𑌮𑌰𑍍𑌪𑌿𑌤𑌃 ॥ [தேஹம் முதலிய வஸ்துக்களில் ஏதேனுமொன்று என்னுடைய ஸ்வரூபமாக இருக்கட்டும்; அணுத்வம் முதலிய குணங்களில் ஏதேனுமொன்று என்னுடைய ஸ்வபாவமாக இருக்கட்டும். (இவைகளைப் பற்றிய விவேகம் இந்த விஷயத்தில் அவஶ்ய மில்லை). ஆகையால், (அதாவது - ப்ரஸ்துதமான இந்த உபாயாநுஷ்டாநத்திற்கு இந்த விவேகாபாவம் விரோதமில்லை யாதலால்) உன்னுடைய சொத்து என்றுமட்டில் நிஶ்சயமாய் என்னால் அறியப்பட்டுள்ள இந்த 'நான்' என்னும் வஸ்துவானது, என்னால் உன்னுடைய திருவடிகளில் இப்பொழுதே ஸமர்ப்பிக்கப்பட்டது.]

𑌵𑌪𑍁𑌰𑌾𑌦𑌿𑌷𑍁 𑌯𑍋𑌽𑌪𑌿 𑌕𑍋𑌽𑌪𑌿 𑌵𑌾 𑌅𑌹𑌂𑌸𑍍𑌯𑌾𑌂— 'நான்' என்னும் இந்த வஸ்து எவ்விதமான ஸ்வரூப முள்ளதாக இருந்தாலும் இருக்கட்டும்.

ஆத்மா என்பது தேஹமன்று, இந்த்ரியமன்று, மநஸ் அன்று, ப்ராணனன்று, புத்தியன்று; இவைகளை விட வேறு என்று

"𑌦𑍇𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌮𑌨𑌃𑌪𑍍𑌰𑌾𑌣𑌧𑍀𑌭𑍍𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑍋𑌽𑌨𑌨𑍍𑌯𑌸𑌾𑌧𑌨𑌃"

என்னும் வாக்யத்தில் விளக்கப்பட்டிருக்கின்றது. இதில் எவ்விதமான ஸந்தேஹம் ஜநித்தபோதிலும், அந்த ஸந்தேஹம், ஸாரதமமான ஶேஷத்வ ஜ்ஞாநம் உறுதியாக இருக்கும் வரையில், மோக்ஷத்தைக்குறித்து செய்யப்படும் உபாயாநுஷ்டாநத்தை பாதிக்காது என்பது தாத்பர்யம்

தவிரவும், ‘‘𑌯𑍋𑌽𑌹𑌮𑌸𑍍𑌮𑌿 𑌸 𑌸𑌨𑍍 𑌯𑌜𑍇’,

என்று ஒரு ஶ்ருதி வாக்யமுண்டு. ‘நான் எப்படிப்பட்டவனாக இருக்கிறேனோ அப்படிப்பட்டவனாகவே இருந்து தொண்டு யாகம் செய்கிறேன்’ என்பது அதன் அர்த்தம். இந்த உபாயாநுஷ்டாநத்தில் அந்த ந்யாயத்தை அநுஸரிக்கிறேன் என்பது குறிப்பு என்றும் சொல்லக்கூடும்.

𑌗𑍁𑌣𑌤𑍋 𑌯𑌥𑌾𑌤𑌥𑌾𑌵𑌿𑌧𑍋𑌽𑌸𑌾𑌨𑌿 - ஆத்மா அணுவா? இல்லாவிட்டால் ஸர்வவ்யாபியா? நித்யத்வமுடையதா? இல்லாவிட்டால் அநித்யமா? இத்யாதியான விஷயங்களில் நிஶ்சயஜ்ஞாநம் ஜநிக்காமல் இருந்தாலும் இருக்கட்டும். ‘ஆத்மாவின் ஸ்வரூப ப்ரகாரங்களை நன்றாக அறிவதில் எனக்கு ஶக்தியில்லை. ஸர்வஜ்ஞனாக இருக்கும் நீ இந்த ஆத்மாவை எவ்விதமான ஸ்வரூப ஸ்வபாவங்களை உடையவனென்று எண்ணுகிறாயோ அவ்விதமான ஸ்வரூபம் முதலியவற்றை அவன் உடையவனென்று மட்டில் நான் நன்றாக அறிந்திருக்கிறேன். இந்த அறிவே எனக்குப் போதுமானது’ என்பது தாத்பர்யம்.

𑌤𑌤𑌃 - ஆகையால். அதாவது - இப்படிப்பட்ட அறிவு போதுமானதால்.

𑌅𑌯𑌮𑌹𑌮𑍍 - இந்த நான். கீழ்ச்சொல்லியபடி உனக்கே ஶேஷபூதமாயுள்ள இந்த ‘நான்’ என்னும் வஸ்துவானது.

𑌤𑌵 𑌪𑌾𑌦𑌪𑌦𑍍𑌮𑌯𑍋𑌃 - உன்னுடைய திருவடிகளில். அந்தத் திருவடிகள் போக்யங்கள் என்பது அந்தர்கதமான அபிப்ராயம்.

𑌮𑌯𑌾 - என்னால். உன்னால் கொடுக்கப்பட்ட கரண களேபராதிகளை உடைத்தாயிருக்கும் என்னால்’ என்பது தாத்பர்யம்.

𑌅𑌦𑍍𑌯𑍈𑌵 - இப்பொழுதே. ‘இனி எவ்வித விவாதமுமில்லாமல் இருக்கும்படி.’ என்று கருத்து. ‘ஒருகால், கொஞ்சம் விளம்பித்தால், மோஹம் ஏதாவது ஸம்பவித்து விடுமோ?’ என்னும் பீதி ஸ்ரீ ஆளவந்தாருக்கு ஜநித்திருக்குமோ வென்றும் தோன்றுகிறது. ‘𑌅𑌹𑌂 𑌮𑍇’ [நான் என்னுடையவன்] என்னும் ஜ்ஞாநம் பெரிய பிஶாசமன்றோ? ‘𑌤𑍍𑌵𑌂 𑌮𑍇’ [நீ என்னுடையவன்] என்று ஈஶ்வரன் நம்மை அநுக்ரஹிக்க ப்ரயத்நப்பட்டாலும், நாம் அவனுடன் விவாதம் செய்யவன்றோ ஸந்நத்தராக இருக்கிறோம்?

‘‘𑌤𑍍𑌵𑌦𑍍𑌦𑌾𑌸𑍍𑌯𑌮𑌸𑍍𑌯 𑌹𑌿 𑌮𑌮 𑌸𑍍𑌵𑌰𑌸𑌪𑍍𑌰𑌸𑌕𑍍𑌤𑌂
𑌤𑌦𑍍𑌵𑌾𑌰𑌯𑌨𑍍𑌨𑌯𑌮𑌹𑌂 𑌕𑌿𑌮𑍁 𑌵𑌚𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑌿 ।
𑌤𑍍𑌵𑌂 𑌮𑌾𑌮𑌕𑍀𑌨 𑌇𑌤𑌿 𑌮𑌾𑌮𑌪𑌿 𑌮𑌨𑍍𑌯𑌸𑍇 𑌸𑍂
𑌹𑍃𑌦𑍀𑌶 ! 𑌸𑌂𑌶𑌯 𑌨 𑌹𑍃𑌦𑌿𑌦𑌂 𑌵𑌿𑌵𑌾𑌦𑌂 ॥’’

என்று ஸ்ரீ கூரேஶனுடைய ஸூக்தியும், ‘‘𑌤𑍍𑌵𑌂 𑌮𑍇𑌽𑌹𑌂 𑌮𑍇’’ என்னும் பட்டருடைய ஸூக்தியும் இவ்விடத்தில் அநுஸந்திக்கத் தக்கவை.

𑌸𑌮𑌰𑍍𑌪𑌿𑌤𑌃 - ஸமர்ப்பிக்கப்பட்டது. இம்மாதிரியான ஶேஷத்வாநுஸந்தாநத்துடன் ஆத்ம ஸமர்ப்பணம் செய்வதைத் தவிர வேறு ஒன்றும் மோக்ஷோபாய மாகாது என்பதை ஸ்ரீ ஆளவந்தார் இதனால் வெளியிடுகிறார்.

‘‘𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌧𑌨𑌂 𑌮𑌿𑌤𑍍𑌰𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌵𑌾𑌹𑌨𑌾𑌨𑌿 𑌚 ।
𑌨 𑌤𑌥𑌾 𑌹𑍃𑌷𑍍𑌯𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌃 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿 𑌤𑌤𑍍𑌰 𑌕𑍃𑌤𑌂 𑌸𑌦𑌾 ॥’’

என்றும்,

‘‘𑌦𑌾𑌸𑍋𑌽𑌹𑌂 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌿𑌣𑌃 ।
𑌶𑌰𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌮𑌹𑌾𑌬𑌾𑌣𑍇 𑌵𑍈𑌶𑍍𑌯𑍋𑌽𑌕𑍍𑌷𑍈𑌕𑌸𑍍𑌯 𑌕𑌵𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌃 ॥’’

என்றும் நமது புராணங்களும் இந்த அர்த்தத்தை வற்புறுத்துகின்றன.

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ப்ரபந்நநிஷ்டை.

[மைஸூர்-ஸ்ரீமத் உபயவேதாந்த ஆட்கொண்டவல்லி கோவந்தாசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீரங்கத்திலுள்ள நிகமம் ஜமீன்தார் ஸ்ரீமாந் இராமக்ருஷ்ண நாயுடு அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஸ்ரீராமாநுஜ கூடத்தில் 4-11-16 ல் செய்தருளிய உபந்யாஸ ஸங்க்ரஹம்.]

ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களில் ஜ்ஞாநத்தினால் மோக்ஷம் என்று நிரூபிக்கப்பட்டது. அந்த ஜ்ஞாநம் பக்திரூபாபந்நஜ்ஞாநமேயாம். அதாவது: ஆத்மா ப்ரக்ருதியைச், காட்டிலும் வேறுபட்டிருக்கிறதாகிற தத்வார்த்தத்தை யுணர்ந்து ஈஶ்வரனுடைய திருவடிகளில் இவ்வாத்மோஜ்ஜீவநத்திற்கு உறுப்பான ஸகல வ்யாபாரங்களையும் ஸமர்ப்பிக்கை. இதை ஆழ்வாரும் "யானே என்னை யறியகிலாதே, யானே யென்றனதே யென்றிருந்தேன், யானே நீயென் னுடைமையும் நீயே, வானே ஏத்தும் எம் வானவரேறே" என்றருளிச்செய்தார். ஸகல வேதார்த்தமான இச்சரமார்த்தத்தை ஸர்வேஶ்வரன் லோகோஜ்ஜீவநார்த்தமாகத் தானே யவதரித்து அர்ஜுநவ்யாஜேந ஸ்ரீகீதையில் 18-வது அத்யாயத்து இறுதியில் வெளியிட்டருளினான். இவ்விஶேஷார்த்தத்தைச் சீர்மையறியும் நம் பூர்வர்கள் தங்களுக்கு ஆபத்தநமாக அநுஸந்தித்தும் உபதேசித்தும் போந்தார்கள். இதைத் தான் வெளியிட்டதுமன்றி ஆசார்யர்களில் தலைவராகிய ஆழ்வாரைக் கொண்டும் வெளியிட்டருளினான். ஆழ்வா ரருளிச்செயலாகிற திருவாய்மொழி முற்றும் த்வயார்த்தமே. இதிஹாஸஶ்ரேஷ்டமான ஸ்ரீராமாயணமும் தீர்க்கஶரணாகதியேயாம். இப்படியிருந்துள்ள விஶேஷார்த்தத்தை ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகன் ஸ்ரீஸூக்திகளைக் கொண்டும் ஸ்ரீமத் வரவர முநிகளுடைய ஸ்ரீஸூக்திகளைக்கொண்டும் விளக்கிக் காட்டியருளினார். ஆகிஞ்சந்யமும் அநந்யகதித்வமும் உடையராய் ஸ்ரிய:பதியினது பாதாரவிந்தமே உபாயமென்றும் உபேயமென்றும் அத்யவஸித்திருத்தலே ப்ரபந்நத்வம். இப்படி அத்யவஸாய பூர்வகமாக சரணாகதி செய்தபோதே 'ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்று கண்ணன் அருளிச்செய்தபடியே

விரோதி நிவ்ருத்தியாய் மோக்ஷமடைய ப்ராப்தமாயிருக்க, பிறகு சில நாளில் விபூதியிலிருப்பது ஈஶ்வரனது அபிப்ராயத்தாலே. "மரணமாகில் வைகுந்தம் கொடுக்கும்பிரான்" என்ற ஆழ்வாரது ஸ்ரீஸூக்தி இந்த ஸௌலபதையே அநாதரஹேதுவானது பற்றி "மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்" என்று மாறின ஐதிஹ்யம் இங்கு அநுஸந்தேயம். பரமோத்க்ருஷ்டராகிய ஆழ்வாரையிட்டு லோகத்தைத் திருத்தவேண்டுமென்று திருவுள்ளத்திற் கொண்டு அவர் மூலமாக, திருவாய்மொழியாகிற திவ்யப்ரபந்தத்தை லோகோஜ்ஜீவநார்த்தமாக வெளியிட்டருளினான். அவ்வளவு அதிகாரபூர்த்தியில்லாமல் தன்னை மஹாபாபியாக அநுஸந்திப்பவர்களையும் இவ்விபூதியில் வைத்திருப்பது இவர்களைக்கொண்டு லீலாரஸத்தை அநுபவிக்கக் கோரின ஈஶ்வரதிருவுள்ளத்தை யறிந்து அதுவும் அவனது முகோல்லாஸகரமான கைங்கர்யமாகும் என்றமைந்து அதில் அந்வயித்திருத்தல் உசிதமாகும். கைங்கர்யம் - மாநஸம் வாசிகம் காயிகம் என த்ரிவிதமாகும். மாநஸ கைங்கர்யமாவது - மனனகமலமறக் கழுவி ஸர்வேஶ்வரன் உகந்தெழுந்தருளியிருப்பதற்குப் பாங்காக ஹ்ருதயத்தை அமைத்து வைத்திருத்தல். விஶேஷ்யமான இதில் ஊன்றுதலின்றி விஶேஷணமான பஹிர்ஶுத்தியால் மாத்ரம் ப்ரயோஜனமில்லை. தொண்டர்க் கமுதுண்ணச் சொன்ன சொன்மாலையாகிற திருவாய்மொழிமுதலிய அருளிச்செயல்களை ஸதா அர்த்தபூர்வகமாக அதுவே பொழுதுபோக்கா யநுஸந்தித்திருத்தல் வாசிக கைங்கர்யமாகும். தேனும் பாலுங் கன்னலும் அமுதுமாய இதைத் தவிர இதர ஶப்தங்கள் அனைத்தும் கடபடசப்தங்கள் போல ப்ரயாஸாத்மகமான நிஷ்ப்ரயோஜநமானவைகளே. ஸர்வேஶ்வர முகோல்லாஸார்த்தமாகச் செய்யும் ஸகல கார்யங்களும் காயிக கைங்கர்யமாகும். "பூசுஞ் சாந்தென் நெஞ்சமே" என்கிற பாசுரத்தால் ஆழ்வார் இந்த மூன்று வித கைங்கர்யங்களையும் வெளியிட்டருளினார். ஸகலாத்மாக்களுக்கும் பொதுவாகிய இந்த நிஷ்க்ருஷ்ட வேஷமான த்ரிவித கைங்கர்யத்தில் பூர்வாசார்யர்களும் ஊன்றிப்போனார்கள். சதுரங்கமாடுவதில் அவ்வப்போது நெருங்கணக்கை முன்னிட்டு ஒரே காயைத் தாழ்ந்த ஸ்தாநத்திலும் உயர்ந்த ஸ்தாநத்திலும் மாறிமாறி வைப்பது போல, ஸர்வேஶ்வரனும் அவரவர்களது கர்மாநுகுணமாக அவ்வப்போது அமைத்துவைக்கும் வர்ணாஶ்ரமாநுரூப விஶிஷ்ட வேஷமகன ஸகல கார்யங்களையும் பகவந்முகோல்லாஸகரமான கைங்கர்யமாகவே அநுஸந்தித்தல் வேண்டும் என்று ஸாங்கோபாங்கமாக உபந்யஸித்தனர்.

ஓர் பக்தன்.

ஸ்ரீ:

கடிதங்கள்.

(1.)

ஓர் ஸம்சயம்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

பகவத்பிம்பங்களுக்கு எல்லாத் திவ்ய தேசங்களிலும் திருமண்காப்பு ஸமர்ப்பிக்கிறார்களே! அது உசிதமாகுமா? புண்ட்ரங்களுக்கு ஹரிபாதாக்ருதியல்லவோ சொல்லியிருக்கிறது. அப்படியிருக்க அதைப் பகவானுக்கு ஸமர்ப்பிக்கலாமா வென்கிற ஸந்தேஹம் அடியேனுக்கு ஜநிக்கிறது. இது விஷயத்தைத் தீபிகையில் ப்ரசுரித்து, தீபிகையின் மூலமாகவோ மற்றெவ்விதத்தாலோ அடியேனுடைய ஸம்சயத்தைத் தீர்த்துவைக்கவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

திருக்கோட்டியூர்
வைகாசிமீ 3௳ } திருக்கோட்டியூர் வாஸுதேவதாஸ:

(2.)

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

ஆங்க்லேய சாஸ்த்ர ரீதியாகப் பூமி சுற்றவில்லையென்றும், ஸூர்யன் சுற்றுகிறதென்றும் ஏற்படுகின்றன. நமது ஹிந்து சாஸ்த்ரங்களில் இவைகளைப்பற்றிக் கூறப்பட்டிருப்பது யாதோ? ஸூர்யன்தான் சுற்றுகிறதென்றும், பூமிசுற்றவில்லையென்றும் பெரியோர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். இவ்விஷயங்களின் தத்வத்தை, மஹான்கள் ஸ்ரீதீபிகையின் த்வாரா தெரிவித்து என் மனக்கலக்கத்தைத் தெளிவிப்பார்களாக.

மேல்மங்கலம்
2. 2. 17. } ஜடாதரவல்லவர்.

(3.)

பாகவத ஸார்வபௌமர்களுக்கு:—

பூலோக வைகுண்டமாகிய ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தில் சென்ற டிஸம்பர் மீ 2௳ ஸ்திரவாரத்தில் ‘பாரதீய ஸ்ரீ வைஷ்ணவஸபை’ எனப்பெயர் கொண்டதோர் ஸபை மைஸூர் ஸ்ரீமாந் வித்யாபூஷணம் வேதாந்தரத்நம் ஆள்கொண்டவல்லி கோவிந்தாசார்யஸ்வாமி மூலமாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஸபையைச் சேர்ந்த விஷயங்கள் ‘ஸ்ரீவேதாந்ததீபிகை’ யில் மார்கழி மீ த்திய ஸஞ்சிகையில் ப்ரசுரப்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த ஸபையின் நோக்கங்களில் முக்யமானது, இந்தியாவில் வ்யாபித்திருக்கும் மற்ற ஸ்ரீவைஷ்ணவ ஸபையோடு ஐகமத்யம் செய்வதுடன், சென்னையில் விளங்கும் ‘ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்த ஸபை’ யுடன் சேர்ந்து, அச்சபையோரால் நடத்தப்படும் ‘ஸ்ரீவேதாந்ததீபிகை’ என்னும் பத்ரிகை மூலமாகவும் ஷை ஸ்ரீரங்கம்ஸபையின் நடவடிக்கைகளை ப்ரசுரித்தல் என்பது. ஆகையால் ஷை ஸ்ரீரங்கம் ஸபையார்கள் நாலு திருநாமங்களை இந்த மஹாஸங்கத்திற்கு ஷைஸபையின்ப்ரதிநிதிகளாக அனுப்பியிருக்கிறார்கள். அவர்களில் ஒருவனாகிய தாஸனுடைய விஜ்ஞாபநம் என்னவென்றால்:—

‘[illegible] [illegible] ஸ்ரீ[illegible] [illegible]’ என்று ஸ்ரீபாஷ்யகாரரால் கத்யத்தில் ஸாதித்தபடியும், ‘[illegible] ஸ்ரீ[illegible] [illegible] । [illegible] [illegible] ॥” என்றும், ‘கோயில் - திருமலை-பெருமாள்கோயில்’ என்று ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் உகந்தருளின அந்த வைதிக ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தியுள்ள க்ஷேத்ரத்தில் இதுவரையில் ஒருபொதுஸபை ஏற்படாததற்குக் காரணம் என்னவென்று யோஜிக்கும் விஷயத்தில் உபயகலைகளுடைய ஐகமத்யம் ஏற்படாததனால் தான் என்று தோன்றுகிறது. ஆனால் இப்பொழுது ஆசார்யர்களுடைய அநுக்ரஹத்தாலும் ஸ்ரீரங்கநாதனுடைய ஜாயமாந கடாக்ஷத்தாலும் ஸ்ரீ. உ. வே. கோவிந்தாசார்ய ஸ்வாமி புருஷகாரமாக ஆகி, ஸ்ரீரங்கநாச்சியார் ஸந்நிதியில் ஷை ஸபைஏற்பட்டு, பின்னும் ‘ஸ்ரீவைஷ்ணவ ப்ரமாணங்கள்’ என்கிற விஷயத்தைப்பற்றி இரண்டு உபந்யாஸங்கள் சென்ற வாரமும் அதற்கு முன்பும் நடைபெற்றன. ஷை ஸபையானது நிர்விக்நமாய் நடந்துவரும்படிக்கு இந்த மஹாஸபையிலுள்ள மஹான்கள் அநுக்ரஹிக்கும்படி ப்ரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன். தவிரவும்,

இந்த மஹாஸபையில் எழுந்தருளியிருக்கிற வித்வாம்ஸர்கள் எல்லோரும் அவரவர்களுக்கு ஸௌகர்யம் ஏற்பட்டபோது ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளி, விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கே அஸாதாரணமான அர்த்தவிஶேஷங்களையும், ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயத்தின் ஏற்றத்தையும், ஸ்ரீவைஷ்ணவர்கள் எல்லோருக்கும் அவஶ்யமாய் வேண்டிய ஐகமத்யத்தையும், அது இல்லாததனால் வரக்கூடிய அஸௌகர்யங்களையும் தெளிய எடுத்துக்காட்டி, அடியார்களை க்ருதார்த்தர்களாகச் செய்யும்படி ப்ரார்த்திக்கிறேன். ஸ்ரீரங்கம் பாரதீய ஸ்ரீவைஷ்ணவஸபையின் அதிபால்யதசையில் அடியேன் விஜ்ஞாபநம் செய்யக்கூடியது இப்போழுது இவ்வளவே.

'ஜயதி யதிராஜஸூக்திஜந்யா [illegible] ।
[illegible] நாஸ்ரீவேதவேத்ய[illegible] ॥'

வாதகோஷ்டீஸதஸ்ய:

தாஸ - ம. ரகுநாதஸ்வாமி

[ப்ரதிநிதிமுக்யன்.]

02 AUG 1917 MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 7.] பிங்கள௵ ஆடி௴ [ஸஞ்சிகை 10.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம்
ததாநே । வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே
ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

பத்ராதிபரின் குறிப்புகள்.

கார்யாதி கரணம்.

பஞ்சாக்நி வித்யா ஸம்பந்தமாகக் கார்யாதிகரணஸூத்ரங்களைக் கொஞ்சம் யோசிக்கின்றோம். கார்யாதிகரணத்தில் ப்ரதம ஸூத்ரம், அர்ச்சிராதியாகத் தத்புருஷனெனும் அமாநவன் அந்தமாயுள்ள ஆதிவாஹிகர்கள், கார்யமெனும் ஹிரண்யகர்ப்பனை உபாஸிக்கின்றவர்களை ஹிரண்யகர்ப்பனிடம் கொண்டு போகின்றார்கள் என்று, பாதரி எனும் ஆசார்யர் அபிப்ராயப்படுகின்றார் என்று வெளியிடுகின்றது. எங்கும் பரிபூர்ணமாய், யாவர்க்கும் அந்தர்யாமியாய் இருக்கும் பரப்ரஹ்மத்தை உபாஸிக்கின்றவர்களைத் தேசாந்தரம் கொண்டுபோகக் காரணமில்லையென்றும், அஜ்ஞாந நிவ்ருத்தியை யடைந்த புருஷன் தன்னிடம் என்றும் நிலைத்த ப்ரஹ்மத்தில் உடனே லயிக்கின்றானென்றும் காரணங்கள் சொல்லப்பட்டன. இரண்டாவது மூன்றாவது ஸூத்ரங்

கள் அதே யோசனையை த்ருடப்படுத்துகின்றன. அர்ச்சிராதி மார்க்கத்தால் போகின்றவர்க்குப் பரப்ரஹ்மப்ராப்தியும் புநராவ்ருத்தியில்லாமையும் ஶ்ருதியால் சொல்லப்படுகின்றபடியால், நாலாவது ஸூத்ரத்தால், கார்யமெனும் ஹிரண்யகர்ப்பலோகம் முடிவு பெறுங் காலத்தில், ஹிரண்யகர்ப்பனோடு கூட அவர்களும் அதைக் காட்டிலும் பரமான ப்ரஹ்மமாகிய விஷ்ணுவினுடைய பரம பதத்தை அடைகின்றார்கள் என்று நிஷ்கர்ஷிக்கப்பட்டது. ஐந்தாவது ஸூத்ரம், அந்த யோசனையை ஸ்திரப்படுத்த ஒரு ஸ்ம்ருதி வசநத்தைக் காட்டுகின்றது. அதாவது: மஹாப்ரளயம் ஸம்பவித்து, ப்ரஹ்மாவினுடைய ஆயுஸ்ஸும் முடிவுபெறும்போது, அவர்கள் யாவரும் ப்ரஹ்மாவுடன் பரமபதத்தை ப்ரவேசிக்கின்றார்கள் என்பதே.

இந்த ஸூத்ரங்களால் ஏற்படும் பாதரிமதம்தான் ஸ்ரீ சங்கராசார்யபக்ஷம். கார்யம் ப்ரஹ்மம் என்பதை, அபரம் ப்ரஹ்மம் என்றும், ஸகுண ப்ரஹ்மம் என்றும் அவர் சொல்லுகின்றார். அர்ச்சிராதி கதியாகச் செல்பவர்க்கு அபுநராவ்ருத்தியை [அதாவது: புநராவ்ருத்தியின் இன்மையை] ஶ்ருதி சொல்வதால், அதை ஒப்புக்கொண்டு, கார்ய ப்ரஹ்மலோகத்துக்கு ப்ரளயாவஸ்தை யுண்டாகும்போது, அந்த லோகத்திலேயே ஸம்யக் தர்சநத்தை அவர்கள் அடைந்தவர்களாய், அந்த லோகத்தினுடைய அத்யக்ஷனை ஹிரண்யகர்ப்பனுடன்கூட, அதற்கும் உத்க்ருஷ்டமானதும் பரிசுத்தமானதுமான விஷ்ணுவினுடைய பரமபதத்தை அடைகின்றார்கள் என்று ஸ்ரீ ஶங்கராசார்யர் ஸித்தாந்தம் செய்கின்றார். இந்த யோசனையின்படி ஸ்ரீ ஶங்கராசார்யருடைய பரம் நிர்குணம் ப்ரஹ்மம் விஷ்ணுவே. அர்ச்சிராதிகதியால் போகின்றவர்க்குப் பரப்ரஹ்ம ப்ராப்தி விளம்பித்துக் கிடைக்குமென்கிறார்.

இந்த ப்ரகாரம் பாதரிமதத்தைப்பற்றி ‘[illegible]’ என்று சொல்லி அதையே ஸ்வபக்ஷமாக்குகின்றார்.

அதே அதிகரணத்தில், ஆறு ஏழு எட்டு ஸூத்ரங்களால் ஜைமிநி பக்ஷம் சொல்லப்படுகின்றது. ஆறாம் ஸூத்ரத்தால் அர்ச்சிராதி மார்க்கம் பரம் ப்ரஹ்மத்தை உபாஸிக்கின்றவர்களையே கொண்டுபோகின்றதெனச் சொல்லப்பட்டது. அமாநவன் அம்மார்க்கத்தால் செல்பவரை ப்ரஹ்மத்தினிடம் கொண்டுபோகின்றாரென்று ஶ்ருதி வெளியிடுவதாலும், ப்ரஹ்மசப்தம் பரப்ரஹ்மத்தினிடமே முக்யவ்ருத்தியுடன் கூடியிருப்பதாலும் ஜைமிநி அவ்வண்ணம் நிஶ்சயிக்கின்றார். ஶ்ருத்யந்தரமும் ப்ரஹ்மநாடியின் வழியாகச் சரீரத்தை விடும் உபாஸகன் பரஞ்ஜ்யோதியை அடைந்து ஸ்வஸ்வரூபத்தில் நிலைக்கின்றான், என்று காட்டுவதை ஏழாவது ஸூத்ரம் வெளியிடுகின்றது. எட்டாவது ஸூத்ரத்தால் அர்ச்சிராதிகதி விஷயஶ்ருதிகள் கார்யப்ரஹ்மத்தை ஸ்மரிக்கவில்லை யென்று சொல்லப்பட்டது. இந்த மூன்று ஸூத்ரங்களால் ஏற்பட்ட ஜைமிநிமதத்தை ஸ்ரீ சங்கராசார்யர் பூர்வபக்ஷமாகக் கொள்கின்றார்.

பூர்வபக்ஷம் முன்னும், ஸித்தாந்தம் பின்னுமாக வருவது வழக்கம். ஆகிலும் இவ்விடம் ஜைமிநிமதத்தைப் பூர்வபக்ஷமாகவும், பாதரிமதத்தை ஸித்தாந்தமாகவும் தாம் அங்கீகரித்ததைப் பற்றி விஸ்தாரமாக ஸ்ரீ ஶங்கராசார்யர் யுக்திவிசாரம் செய்கின்றார். இப்படிப்பட்ட விசாரம் நம்முடைய பாஷ்யகாரர்க்கு அவஶ்யமில்லை. ஏனென்றால், ஒன்பதாவது பத்தாவது ஸூத்ரங்களால் ஸூத்ரகாரரான பகவத் பாதராயணபக்ஷம் ஸித்தாந்தமாகச் சொல்லப்படுகின்றது. பாதரிபக்ஷமும் ஜைமிநி பக்ஷமும் பாதராயணர்க்குப் பூர்வபக்ஷமாகின்றன. ஒன்பதாவது ஸூத்ரத்தில் ‘𑌉𑌭𑌯𑌥𑌾 𑌚 𑌦𑍋𑌷𑌾𑌤𑍍’ எனும் பதங்களைக்கொண்டு, கார்யப்ரஹ்மோபாஸகரே அர்ச்சிராதி மார்க்கத்தால் போகின்றாரெனும் பாதரிபக்ஷம், பரஞ்ஜ்யோதியையே அவர்கள் அடைகின்றார்கள் என்று பல ஶ்ருதிகளால் தூஷிக்கப்படுகின்றதென்றும், பரப்ரஹ்மோபாஸகரே போகின்றாரெனும் ஜைமிநிபக்ஷம், பஞ்சாக்நிவித்யா நிஷ்டர்களும் அர்ச்சிராதி மார்க்கத்தால் போய் ப்ரஹ்மப்ராப்தியை அடைகின்றார் எனும் ஶ்ருதியால் பாதிக்கப்படுகின்றதென்றும் நிஶ்சயித்து, ப்ரதீகாலம்பநமின்றி ப்ரஹ்மோபாஸ்தி செய்பவர்களையெல்லாம் அர்ச்சிராதி ஆதிவாஹிகர் ப்ரஹ்மத்தினிடம் நயிப்பிக்கின்றார் என்று ஸூத்ரகார பக்ஷத்தைப் பகவத் ராமாநுஜன் ஸ்ரீபாஷ்யத்தில் ஸித்தாந்தம் செய்கின்றார்.

ஒன்பதாவது ஸூத்ர முடிவில் '𑌤𑌤𑍍𑌕𑍍𑌰𑌤𑍁𑌶𑍍𑌚' என்றிருப்பதால் அந்த ந்யாயப்படி, உபாஸநாநுகுணமாக ப்ராப்யவஸ்துவும் இருக்க வேண்டுமாதலால், பஞ்சாக்நி வித்யையில் உபாஸ்யவஸ்து வெளியிடப்படவில்லையென்பதையிட்டு, அவ்வித்யாநிஷ்டர்கள் ப்ரக்ருதி ஸம்பந்தம் முற்றிலும் நீங்கிய ஸ்வாத்மாவை, ப்ரஹ்மாத்மகமாக உபாஸிக்கின்றனர் என்று, ஸ்ரீபாஷ்யம் நிஷ்கர்ஷிக்கின்றது. பத்தாவது ஸூத்ரம் ப்ரதீகாலம்பநரைக் காட்டுகிறது; அவர்கள் அசித் வஸ்துக்களையோ, அசித்துடன்கூடிய சேதநரையோ, ப்ரஹ்மத்ருஷ்டியால் உபாஸிக்கின்றவர். அவர்க்குப் பரிமித பலமே ஶ்ருதி சொல்லுகின்றது. அவ்வஸ்துக்களுக்குள் ஆத்மாவாக நிற்கும் ப்ரஹ்மம் அவருடைய உபாஸ்தி விஷயமன்று.

ஸ்ரீஶங்கராசார்யர் ஒன்பதாவது ஸூத்ரத்தை '𑌉𑌭𑌯𑌥𑌾 𑌚 𑌦𑍋𑌷𑌾𑌤𑍍' என்று எழுதுகின்றார்; அப்படி எழுதிவிட்டு, பாதராயணர் பாதரிமதத்தை அநுஸரித்து, விகாராலம்பநராகிய ஸகுண ப்ரஹ்மோபாஸ்தி செய்பவரை மாத்ரம் அர்ச்சிராதிகதி நயிப்பிக்கின்றதென்றும், இதர விகாராலம்பநர்களை நயிப்பிக்கின்றதில்லையென்றும் சொல்வதாகப் பாஷ்யம் எழுதுகின்றார். 𑌉𑌭𑌯𑌥𑌾 தோஷமில்லை எனும் ஸ்வஸூத்ர சப்தங்களை, ஸகுண ப்ரஹ்மோபாஸகர் ஸகுண ப்ரஹ்மத்தை அடைவதென்பதும், ப்ரதீகோபாஸகர் அந்த ஸகுணப்ரஹ்மத்தை அடையாரென்பதும் தோஷமில்லாத விஷயங்கள் என்றும் வ்யாக்யாநம் செய்து, இந்த யோசனையை த்ருடப்படுத்த ஸூத்ரத்தில் '𑌤𑌤𑍍𑌕𑍍𑌰𑌤𑍁𑌶𑍍𑌚' என்று தத்க்ரது ந்யாயம் ஸ்மரிக்கப்பட்டதென்று முடிக்கின்றார். பிறகு ஸகுணப்ரஹ்மோபாஸகரல்லாத பஞ்சாக்நி வித்யாநிஷ்டர்களையும் அமாநவன் ப்ரஹ்மத்தினிடம் நயிப்பிக்கின்றாரென்று ஶ்ருதியில் சொல்லப்பட்டிருப்பதை அபவாதமாகக்கொண்டு, மற்ற ஸகுண ப்ரஹ்மோபாஸகரல்லாதார்க்கு அர்ச்சிராதிகதியில்லையென்பதை உத்ஸர்க்கமாகக் கொள்கின்றார். இந்த ஒரு அபவாத நிமித்தமாக இந்த அதிகரணத்தில், பாதராயணர் தாம் செய்யவேண்டிய ஸித்தாந்தமின்றியே இரண்டு ஸூத்ரங்களைச்

சேர்த்தாரென்பதிலும், மற்ற மேற்சொன்ன விஷயங்களிலும், ஸ்வாரஸ்யத்தைப் புத்திமான்கள் சிந்திக்கத் தக்கவர். இன்னும் கார்ய ப்ரஹ்மமென்பதை ஹிரண்யகர்ப்பனென்று ஒப்புக்கொள்வதால் அர்ச்சிராதிமார்க்க விவரணஸ்தாநங்களில் ஹிரண்யகர்ப்போபாஸ்தி ஸ்மரிக்கப்படவில்லையென்பதையும் யோசிக்கவேண்டும்.

பஞ்சாக்நி வித்யாநிஷ்டர்க்கு அர்ச்சிராதிகதியும் ப்ரஹ்மப்ராப்தியும் ஶ்ருதி சொல்வதால், தத்க்ரதுந்யாயத்துக்கு அவ்வித்யையை ஒரு விலக்காகமாத்ரம் ஶங்கராசார்யர் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் உபநிஷத்துகள் அவ்வித்யையை விவரிக்கிறபடி அவ்வித்யாநிஷ்டர்க்கு அவை தத்க்ரதுந்யாயப்படி ஸம்பவிக்க ஹேதுவில்லை. ஸம்ஸாரிக்கின்ற ஜீவனுடைய அவஸ்தாவிஶேஷங்களை அறிந்து உபநிஷத் காட்டினபடி ஜுகுப்ஸையை வஹிப்பவன் ப்ரஹ்மோபாஸகன் ஆகமாட்டான்; ப்ரஹ்மத்தை அந்தராத்மாவாக உடைய சுத்த ஜீவோபாஸகனும் ஆகமாட்டான்; உபாஸநாவிஷயமாகாத தத்வங்களை அவன் அடைவதென்பது யுக்தியுக்தமன்று. ஶங்கராசார்யர் இந்த வித்யாபாஷ்யாரம்பத்தில், '𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌿𑌸𑍍𑌤𑌮𑍍𑌬𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌃 𑌸𑌂𑌸𑌾𑌰𑌗𑌤𑌯𑍋 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌃 𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌹𑍇𑌤𑍋𑌃 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍂𑌣𑌾𑌮𑌿𑌤𑍍𑌯𑌤 𑌆𑌖𑍍𑌯𑌾𑌯𑌿𑌕𑌾 𑌆𑌰𑌭𑍍𑌯𑌤𑍇' [ப்ரஹ்மாமுதல் ஸ்தம்பம் வரையில் உள்ள ஜீவன்களுடைய ஸம்ஸாரகதிகள் முமுக்ஷுக்களுக்கு வைராக்யத்தை உண்டுபண்ணும்பொருட்டுச் சொல்லப்படவேண்டுமென்று ஒரு சரித்ரரூபமான கதை ஆரம்பிக்கப்படுகின்றது.] என்றுரைக்கின்றார். நமது உபநிஷத் பாஷ்யகாரரும், '𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌜𑍀𑌵𑌾𑌤𑍍𑌮𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑌾𑌂 𑌪𑌞𑍍𑌚𑌾𑌗𑍍𑌨𑌿𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌸𑌂𑌸𑍃𑌤𑌿𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌾𑌯 𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑍌𑌤𑌿' [ப்ரக்ருதியைக் காட்டிலும் விலக்ஷணமான ஜீவனுடைய நிஜமான ஸ்வரூபத்தைப் பற்றிச் சொல்கின்ற பஞ்சாக்நிவித்யையை ஸம்ஸாரத்தில் வைராக்யம் உண்டாகவேண்டி ஆரம்பிக்கின்றார்.] என்று எழுதுகின்றார்.

கேவல வைராக்யம் உபாஸ்தியையாவது உபாஸநா விஷயத்தையாவது தெரிவிக்கமாட்டாது. ஆதலால் வைராக்யோத்பத்

தியைப் பலமாயுடைய வித்யைக்கு அர்ச்சிராதி மார்க்கம் பலாந்தரமாக ஏற்பட்டாலும் ப்ரஹ்மப்ராப்தியும் பலமாவதற்கு ந்யாயமில்லை. கார்யாதிகரணத்தில் ஸூத்ரகார மதத்தைக் காட்டும் ஸூத்ரத்தில் பஞ்சாக்நிவித்யையானது யோசிக்கப்பட்டதென்பதை ஶங்கராசார்யரும் நம்முடைய பாஷ்யகாரரும் அங்கீகரிக்கின்றனர். ஸூத்ரத்தில் '𑌤𑌤𑍍𑌕𑍍𑌰𑌤𑍁𑌶𑍍𑌚' எனும் சப்தங்கள், பஞ்சாக்நி வித்யைக்குள் தத்க்ரது ந்யாயத்தால் ஒருவித உபாஸநமும் அந்தர்க்கதமென்று ஸ்ரீபாஷ்யகாரருடைய பக்ஷத்துக்கு அநுகூலமாயிருக்கின்றன:

உபநிஷத்தோ '𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌽𑌮𑌾𑌨𑌵𑌃 𑌸 𑌏𑌨𑌾𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌗𑌮𑌯𑌤𑌿, 𑌏𑌷 𑌦𑍇𑌵𑌯𑌾𑌨𑌃 𑌪𑌨𑍍𑌥𑌾𑌃' என்று, பஞ்சாக்நிவித்யாநிஷ்டர்க்கு ப்ரஹ்மோபாஸகர்க்குப் போல் ப்ரஹ்ம ப்ராப்தியுடன் கூடிய தேவயாநமார்க்க ப்ரவேசத்தைக் கூறுகின்றது. ஆனால் அவர்களை '𑌯 𑌇𑌤𑍍𑌥𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃' என்று சொல்லி, '𑌯𑍇 𑌚𑍇𑌮𑍇𑌽𑌰𑌣𑍍𑌯𑍇 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾 𑌤𑌪 𑌇𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇' என்று ஸாக்ஷாத் ப்ரஹ்மோபாஸகரை வேறாகச் சொல்லுகின்றபடியால், பஞ்சாக்நிவித்யா நிஷ்டர்கள் ஸாக்ஷாத் ப்ரஹ்மோபாஸகர் அல்லர் என்றும் யோசிக்கப்படுகின்றது. ஆதலால் அவர்கள் 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿 𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌕𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑌂 [அத்யந்தம் ப்ரக்ருதியால் விடப்பட்ட ஆத்மாவை அதற்குள் ப்ரஹ்மம் அந்தராத்மாவாயிருப்பதெனும் ஜ்ஞாநத்துடன் அநுஸந்தாநம்] செய்பவர்கள் என்று நம்முடைய பாஷ்யகாரர் அபிப்ராயம். ப்ரக்ருதி விலக்ஷண ஜீவாத்மாநுஸந்தாநம் பஞ்சாக்நி வித்யையால் அர்த்தாத் ஏற்படலாம். அந்த ஜீவன் ப்ரஹ்மாத்மகனாயிருக்கவேண்டுமென்பது தத்க்ரதுந்யாயத்தால் அபேக்ஷிக்கப்படுகின்றதாக யோசிக்கப்பட்டது. அப்படிப்பட்ட உபாஸநம் அர்ச்சிராதிகதியை உண்டாக்கினபோதிலும் ஸாக்ஷாத் ப்ரஹ்மப்ராப்திக்கு ஸாதகமாயிருக்குமென்பது உபநிஷத் வாக்யத்தால் விஶ்வஸிக்க வேண்டிய விஷயம். அந்யதா தத்க்ரதுந்யாயம் அதை பாதிக்கின்றது. ஏனென்றால் ப்ரஹ்மாத்மகனாக

ஜீவன் உபாஸிக்கப்பட்டானாகில், ப்ராப்தி தசையில் ப்ராப்யனும் அப்படிப்பட்ட ஜீவனாகத்தான் முடியவேண்டும். ப்ரஹ்மாத்மகமான ஸ்வாத்மா ப்ராப்யனாகிப் பிறகு ஸாக்ஷாத்தாக ப்ரஹ்மோபாஸநமும் ஸித்தித்து ப்ரஹ்மப்ராப்தியும் புநராவ்ருத்தியின்றி ஸம்பவிக்கலாம்.

இந்த விஷயத்தில் ஶங்கராசார்யர், பஞ்சாக்நிவித்யாநிஷ்டனுக்கு அர்ச்சிராதிகதியையும் ஸகுணப்ரஹ்ம ப்ராப்தியையும், தத்க்ரது ந்யாய விரோதமாயிருக்கையிலும், ஶ்ருதி சொல்வதால் ஒப்புக்கொள்கின்றாரென முன் சொன்னோம். அவர் காலத்துக்கு முன்பாக ஸம்ப்ரதாயம் அறிந்தவர்கள் இதை எவ்வண்ணம் ஸமர்த்தித்தார்கள் என்பது தெரியவில்லை. அவர்கள் யாதொரு ப்ரகாரமாக ஸமர்த்தநம் செய்திருந்தாராகில் அதை அங்கீகரித்தோ, தூஷித்தோ, ஶங்கராசார்யர் யாதேனும் மொழிந்திருக்கலாம். அவர் அது செய்யவில்லை. நம்முடைய பாஷ்யகாரரும் தத்வஸாக்ஷாத்காரம் செய்தவண்ணம் எழுதவில்லை. ஸ்ரீபாஷ்ய பங்க்திகளும் ஶ்ருதப்ரகாஶிகையும் ந்யாயவிசாரம் செய்தே ஸூத்ரார்த்தத்தை நிஷ்கர்ஷிக்கின்றன. அப்படி நிஷ்கர்ஷிப்பதில், ப்ரஹ்மாத்மகனாக ஜீவன் உபாஸ்திவிஷயமானால், அர்ச்சிராதி மார்க்க ப்ரவேசம் உபாஸகனுக்கு உண்டென்று சொன்னார்கள். அவனுக்கு விளம்பமின்றி ப்ரஹ்மப்ராப்தியானது தத்க்ரது ந்யாயத்தால் பாதிக்கப்படுகின்றது. அது உண்டாகுமென்றால், '𑌯 𑌇𑌤𑍍𑌥𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃, 𑌯𑍇 𑌚𑍇𑌮𑍇𑌽𑌰𑌣𑍍𑌯𑍇 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾 𑌤𑌪 𑌇𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇,' என்று பிரித்துரைத்தல் வ்யர்த்தமாக முடியும். ஆதலால் ப்ரஹ்மாநுபவம் அவனுக்குக் கிடைத்தால், விளம்பித்தே கிடைக்குமென்று தான் கொள்ளவேண்டும். விளம்பிக்காமல் அது உண்டாக வேண்டுமானால் பஞ்சாக்நிவித்யாநிஷ்டன் ப்ரஹ்மோபாஸகனென்றே கொள்ளுதல் யுக்தம்.

இந்த வித்யையானது இரண்டு உபநிஷத்துகளில் விவரிக்கப்படுகின்றது. விவரணங்கள் பரஸ்பரம் கிஞ்சித் பேதங்களையும் காட்டுகின்றன. இவ்வித்யையை ப்ரஸ்தாபிக்கும் ஆக்யாயிகை

முதலில் இருந்தபடி இப்போது தெரியவில்லை. பாஶ்சாத்ய வித்யா பரிசய முள்ளவர்கள், உபநிஷத் ஸப்தாநுபூர்வியில் ஈஷத் பேதம் காலக்ரமத்தில் உண்டாயிருக்கலா மென்றும், பஞ்சாக்நி வித்யையை யறிந்து, நிர்விண்ணராகி, அரண்யம் போய் ப்ரஹ்மோபாஸநம் செய்பவர்கள் அர்ச்சிராதிகதியால் சென்று ப்ரஹ்ம ப்ராப்தியை அடைவார்கள் என்றும் ஆக்யாயிகை முதலில் ஏற்பட்டதாகவும் யோசிப்பார்கள். ஆனால் வைதிக ஸம்ப்ரதாயஸ்தர்கள் அந்த யோசனையை ஸஹிக்கமாட்டார்கள்.

ஶ்ருதப்ரகாசிகையில், "அர்ச்சிராதியால் ப்ரஹ்மப்ராப்தியைப் பலமாகவுடைய உபாஸநநிஷ்டனான பஞ்சாக்நிவித்யாநிஷ்டன் ப்ரஹ்மோபாஸகனே. அவ்வித்யா ப்ரகரணத்தில், எவர் இவ்வண்ணம் அறிகின்றனரோ, எந்த இவர்கள் அரண்யத்தில் ஶ்ரத்தாயுக்தராய் ப்ரஹ்மத்தை உபாஸிக்கின்றனரோ, என்று விபாகத்துக்கு வேறு உபபத்தி யின்மையால், ஸ்வாத்மாவுடன் கூடிய ப்ரஹ்மோபாஸநமும், ப்ரஹ்மத்தை ஆத்மாவாகவுடைய ஸ்வாத்மோபாஸநமும் கல்பிக்கவேண்டும்" என்று சொல்லப்படுகின்றது. மேலே சொன்ன விபாகத்துக்கு ப்ரயோஜநம், உபாஸ்தி விஷயத்தில் பஞ்சாக்நிவித்யாநிஷ்டனுக்கும் ஸாக்ஷாத் ப்ரஹ்மோபாஸகனுக்கும் ஈஷத் பேதமுண்டென்று ஸித்திக்கவேண்டும். ஆதலால், பஞ்சாக்நிவித்யாநிஷ்டன் அவஶ்யமாகக் கல்பிக்க வேண்டியிருந்த ப்ரஹ்மாத்மக ஸ்வாத்மாநுஸந்தாநம் செய்து, ஸ்வாத்மப்ராப்தியை முதலில் அடைந்து, புநராவ்ருத்தியின்றியும், விளம்பித்தும், ப்ரஹ்மப்ராப்தியைப் பின்னால் அடைவன் என்றும் யோசிக்கத்தக்கது.

இந்த விஷயத்தில் தேசிகன், "ப்ரஹ்மாத்மக ஸ்வாத்ம சிந்தந ப்ரவ்ருத்தரானவர்களையும், ஸ்வாத்மசரீரக பரமாத்ம சிந்தநபரரையும், அந்தராயமான ஆத்மாநுபவத்தாலேயாதல், அஷ்டைஶ்வர்ய ஸித்திகளாலேயாதல், வஸ்வாதிபத ப்ராப்தி ப்ரஹ்ம காய நிஷேவணாதிகளாலேயாதல், அபிஷேகத்துக்கு நாளிட்ட ராஜகுமாரனுக்குச் சிறையிலே எடுத்துக் கைநீட்டின சேடிமார் பக்கலிலே கண்ணோட்ட முண்டாமாப்போலே ப்ராரப்த கர்மபலமான தேஹேந்த்ரியங்களிலும், ததநுபந்திகளான பரிக்ரஹங்களிலும், தந்மூல போகங்களிலும், கால்தாழப் பண்ணியதால், அந்யபராக்கியும், இப்படிப் பல முகங்களாலே பகவத்ப்ராப்திக்கு விலக்காயிருக்கும். முப்பத்திரண்டடியான துரவு தத்துவார் முன்னடியிலே விழுந்ததோடும் முப்பதா மடியிலே விழுந்ததோடும் வாசியில்லாதாப் போலே ஏதேனு மொரு பர்வத்திலே அந்தராய முண்டானாலும், இவன் ஸம்ஸாரத்தைக் கடந்தானாகான்." என்று அர்த்த பஞ்சகாதிகாரத்தில் ஸாதித்திருக்கிறார்.

இந்த வாக்யங்களின் மேல், ஸாரதீபிகையில், "பூர்ணோபாஸந ப்ரவ்ருத்தியில் செய்யும் விக்நங்களைக் காட்டுகிறார் ப்ரஹ்மாத்மேத்யாதியால். அந்தராயம் விளம்பஹேது வென்கை. ஸ்வாத்ம ப்ரதாநோபாஸகனுக்கு ஆத்மப்ராப்தி. அஷ்டைஶ்வர்யாதி ப்ரஹ்ம ப்ரதாநோபாஸகனுக்குப் பலம்......ஆதிசப்தத்தால் ப்ரஹ்மலோகாதி க்ரஹணம். முமுக்ஷுக்களான ப்ரஹ்மோபாஸகர்க்கும் அஸாதாரணமான விளம்பத்தைச் சொல்லுகிறது. அபிஷேகத்துக் கென்கையாலே இவர்களுக்கு மோக்ஷமுண்டென்று ஸூசிதம். எடுத்துக் கைநீட்டுகை, ஶுஶ்ரூஷை பண்ணுகை, கண்ணோட்டம், அநுபவேச்சை......விலக்காயிருக்கும் விளம்பஹேதுவா யிருக்கு மென்கை. முப்பத்திரண்டித்யாதி. மோக்ஷார்த்த பரிபூர்ணோபாஸந பர்வத்திலும் அந்தராயம் வந்தால் விரஜையைக் கடக்குமளவும் நிவ்ருத்த ஸம்ஸாரனாகா னென்கை" என்று வ்யாக்யாநம் பண்ணப்பட்டது. வஸ்வாதிபதப்ராப்தி மதுவித்யா விஷயமென்றும், ஐஶ்வர்யம் அணிமாதிக ளென்றும் விவரிக்கப்பட்டன. ப்ரஹ்மகாய நிஷேவணத்தைக் காட்ட மோக்ஷதர்ம ஶ்லோகம் ஒன்று எடுக்கப்பட்டது.

ஸாராஸ்வாதிநியில், ப்ரஹ்மோபாஸந ப்ரவ்ருத்தி யுண்டானாலும், ப்ரஹ்மப்ரதாநோபாஸநத்தில் ருசியின்மை நிக்ரஹ பலமென்று மேலெடுத்த வாக்யங்கள் ஜ்ஞாபிக்கின்றன வென்று சொல்லப்

பட்டது. “ப்ரஹ்மோபாஸநத்தி லிழிவா ரெல்லாருக்கும் ஆத்மாவலோகநம் பிறந்த வளவிலே, வைஷயிக ஸுக வைத்ருஷ்ண்யாவஹமான ஆத்மாநுபவஸுகம் ஆகர்ஷகமாகத் தக்கதாகையாலே, அந்தராயமா மென்று கருத்து.” என்று எழுதப்பட்டு, ஸாரதீபிகையில் கண்டபடி, ஆத்மாநுபவம் ப்ரஹ்மாத்மக ஸ்வாத்மசிந்தநபரர்களுக்கு மாத்ரம் ஏகதேசமான வித்யாபல மென்பதை அநுவதித்துப் பிறகு, “அஷ்டைஶ்வர்யம் ஸர்வருக்கும் ஸாதாரணமான அந்தராயம்” என்று எழுதப்பட்டது. ப்ரஹ்மகாய நிஷேவணத்தால், சிலகாலம் சதுர்முகனோடு ஸமாந போகனாயிருக்கை கூடுமென்று அங்கே காட்டப்படுகின்றது. நிர்தேசிக்கப்பட்ட பலங்கள் வித்யா விசேஷங்களுக்கு நியதமாய் ஏற்பட்ட பலமென்றும், மோக்ஷப்ராப்திக்கு அவை யாவும் அந்தராயங்களென்றும் சொல்லப்படுகின்றது. அபிஷேகேத்யாதியால் ப்ரஹ்மோபாஸகனுக்கும் தேஹதத³நுபந்திகளில் ஆஸக்தி யுண்டாகக் கூடுமென்று த்ருஷ்டாந்த மூலமாக உபபாதிக்கப்படுகிறதெனப் படுகிறது. ராஜபோகங்கள் கிட்டியிருக்கச் செய்தேயும் ஹேயரான சேடிகளிடத்திலும் பூர்வம் சிரபரிசயத்தா லுள்ள ஸ்நேஹத்தாலே போகாஸக்தி யுண்டாம்; அவ்வண்ணமே, அநந்ய ப்ரயோஜநனாய் ஆஸந்ந ப்ரஹ்மப்ராப்திகனானவனுக்கு ப்ராரப்த மூலமான வாஸநாவசத்தாலே தேஹாதிகளில் ஆஸக்தி யுண்டாகக் கூடுமென்று கருத்து. இவ்வண்ணமெல்லாம் விளம்பம் ஸம்பாவித மென்று ஸாராஸ்வாதிநியில் காட்டப்பட்டது.

ஸாரப்ரகாஶிகையில், ‘[illegible]

[illegible] 𑌉𑌪𑌪𑌾𑌦𑌯𑌤𑌿,’ அபிஷேகத்துக்கு 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 என்று யோசிக்கப்படுகின்றது. ஸாரவிவரிணியில் பகவந்நிக்ரஹம் பகவதநுபவத்தில் அந்தராயம் என்றாரம்பித்து, ப்ரஹ்மாத்மக ஸ்வாத்மப்ராதாநசிந்தநத்துக்குப் பலம் கேவலாத்மாநுபவமென்றும், ஸ்வாத்மஶரீரக ப்ரஹ்மப்ரதநோபாஸநத்துக்கு அணிமாமுதலான அஷ்டைஶ்வர்யஸித்தி, வஸ்வாதிபதப்ராப்தி, ப்ரஹ்மகாயநிஷேவணம், இவை பலமென்றும் சொல்லப்படுகிறது. பகவத்பர்யந்தோபாஸகர்க்கும் ப்ரதிபந்தம் உண்டென்று த்ருஷ்டாந்தமாக அபிஷேகத்துக்கு என்றாரம்பித்துச் சொல்லப்படுகின்றதென்றும் வெளியிடப்படுகின்றது.

ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில், ப்ரதமாம்ஶம் ஆறாவது அத்யாயத்தில், 38, 39, 40-வது ஶ்லோக வ்யாக்யாநத்தில் ஸ்ரீவிஷ்ணுசித்தர், ஆஶ்ரமிகளுக்குள் ப்ரதீகோபாஸகர்கள் த்ருவ பதத்தின் மீது விஷ்ணுபத மென்றிருக்கும் ஸ்தாநத்தை அடைவார்கள் என்றும், ‘𑌭𑌗𑌵𑌦𑍁𑌪𑌾𑌸𑌕𑌾𑌨𑌾𑌮𑍇𑌵 𑌨 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌇𑌤𑌰𑍇𑌷𑌾𑌂 𑌤𑍁 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍇𑌵𑍇𑌤𑍍𑌯𑌾𑌹 𑌮𑌐𑌤𑍍𑌰𑍇𑌯𑍇𑌤𑌿 * * * 𑌆𑌹 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌕𑍍𑌷𑌰𑌾𑌦𑌿𑌨𑌾 𑌶𑍍𑌲𑍋𑌕𑍇𑌨 𑌭𑌗𑌵𑌦𑍁𑌪𑌾𑌸𑌕𑌾 𑌨 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇, 𑌨 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇, [illegible] 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤 𑌏𑌵,’ [பகவதுபாஸகர்க்கே புநராவ்ருத்தி யில்லை. இதரற்கு நிவ்ருத்தியேயென்று [illegible] என்னும் ஶ்லோகத்தால் சொல்கின்றார். … … த்வாதஶாக்ஷரம் முதலான பகவந் மந்த்ரங்களால் பகவானை உபாஸிக்கின்றவர்கள் மறுபடி திரும்புகின்றாரில்லை. இவர்களைத் தவிர்த்த மற்றோர் யாவரும் திரும்புகின்றவர்களே] என்றும் யோசிக்கின்றனர். 39, 40-வது ஶ்லோகங்கள், ‘𑌏𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌨𑌸𑍍𑌸𑌦𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌧𑍍𑌯𑌾𑌯𑌿𑌨𑍋 𑌯𑍋𑌗𑌿𑌨𑍋 𑌹𑌿 𑌯𑍇 । 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑌤𑍍 𑌪𑌰𑌮𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌯𑌦𑍍𑌵𑍈 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑍂𑌰𑌯𑌃 । 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌦𑌯𑍋 𑌗𑍍𑌰𑌹𑌾𑌃 । 𑌅𑌦𑍍𑌯𑌾𑌪𑌿 𑌨 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌕𑍍𑌷𑌰𑌚𑌿𑌨𑍍𑌤𑌕𑌾𑌃 ।’ [ஸதா ப்ரஹ்மத்யாநம் செய்கின்ற ஏகாந்திகளான யோகிகளுக்கு ஸதா ஸூரிகளால் தர்சிக்கப்பட்ட விஷ்ணு

வினுடைய பரமம் ஸ்தாநம் ப்ராப்ய மாகும். சந்த்ரஸூர்யர்களும் ப்ரஹ்மா முதல் ஸர்வ தேவர்களும் ஸ்வாதிகார ஸமாப்தி காலத்தில் தங்கள் தங்கள் பதத்தினின்று விழுகின்றனர். பகவத் ப்ரதாநமந்த்ர சிந்தகர்க்குப் பரமபதத்தினின்று என்றும் புநராவ்ருத்தி யில்லை.] என்றிவ்வண்ணம் தத்வ நிரூபணம் செய்கின்றன.

தேசிகன் திருவுள்ளம், தத்ஸம்ப்ரதாய மறிந்தவர்கள் யோசிக்கின்றபடி இவ்வண்ணம் இருக்கவேண்டும். ஸாக்ஷாத் ப்ரஹ்மோபாஸகனான ப்ரஹ்லாதன், '𑌉𑌪𑌮𑌾𑌨𑌮𑌶𑍇𑌷𑌾𑌣𑌾𑌂 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌂 𑌯𑌸𑍍𑌸𑌦𑌾𑌭𑌵𑌤𑍍' என்கிறபடியே உபாஸகர்க்குள். ஸர்வோத்க்ருஷ்டன். பெருமாளே, '𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑌸𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑍋𑌹𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌿𑌣𑍀𑌂,' என்று அவன் பக்தியை உகந்தார். பகவானே ப்ரஹ்லாதனை வரம் கேட்கும்படி நியமிக்க, '𑌯𑌾 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌰𑌵𑌿𑌵𑍇𑌕𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌷𑌯𑍇𑌷𑍍𑌵𑌨𑌪𑌾𑌯𑌿𑌨𑍀 । 𑌤𑍍𑌵𑌾𑌮𑌨𑍁𑌸𑍍𑌮𑌰𑌤𑌸𑍍𑌸𑌾 𑌮𑍇 𑌹𑍃𑌦𑌯𑌾𑌨𑍍𑌮𑌾𑌪𑌸𑌰𑍍𑌪𑌤𑍁 ॥' என்று, அஜ்ஞர் விஷயங்களில் நிலைத்த ப்ரீதியைப் பண்ணுகின்றபடியே, பகவானை ஸதா சிந்திக்கும் தனக்குப் பகவானிடமே பக்தி நிலைப்பதை வேண்டினன். பகவானும், '𑌮𑌯𑌿 𑌭𑌕𑍍𑌤𑌿𑌃 𑌤𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑍇𑌵,' என்றும், '𑌭𑍂𑌯𑍋𑌽𑌪𑍍𑌯𑍇𑌵𑌂 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿,' என்றும், ப்ரஹ்லாதன் அபேக்ஷித்த பக்தியானது முன்னமே உளதென்றும், பின்னும் நிலைத்து நிற்பதென்றும் திருவுள்ளம் பற்றினர். முடிவில், '𑌯𑌥𑌾 𑌤𑍇 𑌨𑌿𑌶𑍍𑌚𑌲𑌂 𑌚𑍇𑌤𑍋 𑌮𑌯𑌿 𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌂 । 𑌤𑌥𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑍇𑌨 𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌂 𑌪𑌰𑌮𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 ॥' என்று, ப்ரஹ்லாதனுடைய நிஶ்சலமான பக்திக்குப் பலம் பகவத்க்ருபையால் பகவத்ப்ராப்தியே யென்று பகவானாலே சொல்லப்பட்டது. ஸ்ரீ பாகவதத்திலும், "உன்போன்ற பரமைகாந்திகள் ஐஹிகத்திலும் ஆமுஷ்மிகத்திலும், என்னிடம் யாதொரு ப்ரயோஜநத்தையும் அபேக்ஷிக்கமாட்டாரென்று சொல்லி, '𑌤𑌥𑌾𑌪𑌿 𑌮𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌰𑌮𑍇𑌤𑌦𑌤𑍍𑌰 𑌦𑍈𑌤𑍍𑌯𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌣𑌾𑌮𑌨𑍁𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌷𑍍𑌵 𑌭𑍋𑌗𑌾𑌨𑍍' என்று அவனுடைய பூர்வபுண்யபலத்தை அநுபவிக்கும்படி ஆஜ்ஞாபித்த

தாகத் தெரிகின்றது. ஸர்வோத்க்ருஷ்டனான பக்தனுக்கும் இவ்வண்ணம் அந்தராயம் ஸம்பாவிதம்.

பகவானே த்ருவனைப்பற்றி, '𑌸𑌾𑌮𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌨𑌿𑌰𑌪𑍇𑌕𑍍𑌷𑌂 𑌤𑍇 𑌮𑌯𑌿 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌯𑌥𑌾𑌹𑌿𑌤𑌂,' என்று, அநந்யபக்தனென்று திருவுள்ளம் பற்றினர். த்ருவனுக்கு ஸ்வதர்ஶநத்தை அளித்து, '𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑌮𑍍𑌪𑌦𑍍𑌯𑍇𑌤𑍇 𑌪𑍁𑌂𑌸𑌾𑌂 𑌮𑌯𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌪𑌥𑌂 𑌗𑌤𑍇,' என்றும், '𑌮𑌾𑌮𑌾𑌰𑌾𑌧𑍍𑌯 𑌨𑌰𑍋 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌂 𑌅𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑍍𑌯𑌵𑌿𑌲𑌮𑍍𑌬𑌿𑌤𑌂,' என்றும், பகவதாராதநத்துக்கும் பகவத்தர்ஶநத்துக்கும் பலம் முக்திமுதல் யாவும் என்று அருளிச்செய்தார். த்ருவனும், '𑌕𑌿𑌂 𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌜𑌗𑌤𑍍𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌃 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑍇 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌂' என்று, பகவத் ப்ரஸாத பலத்துக்கு எல்லையில்லை யென்பதை யறிந்தான். ஆனாலும் பலாந்தராபேக்ஷையால் பகவானை உபாஸித்த நிமித்தம், பகவதுபாஸநையின் முக்ய ப்ரயோஜநத்தை இழந்தான். ஸ்ரீ பாகவதத்தில் விவரித்தபடியே '𑌮𑌾𑌤𑍁𑌃 𑌸𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑌾 𑌵𑌾𑌗𑍍𑌬𑌾𑌣𑍈𑌰𑍍𑌹𑍃𑌦𑌿 𑌵𑌿𑌦𑍍𑌧𑌸𑍍𑌤𑍁 𑌤𑌾𑌨𑍍𑌸𑍍𑌮𑌰𑌨𑍍 । 𑌨𑍈𑌚𑍍𑌛𑌨𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌪𑌤𑍇𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑌾𑌪𑌮𑍁𑌪𑍇𑌯𑌿𑌵𑌾𑌨𑍍 ॥' [ஸபத்நீமாதாவினுடைய வசநரூப பாணங்களால் ஹ்ருதயத்தில் புண்படுத்தப்பட்டவனாய், அவ்வசநங்களை ஸ்மரித்துக்கொண்டு மோக்ஷப்ரதனான பகவானிடம் மோக்ஷத்தை அபேக்ஷித்தானில்லை. ஆதலால் தாபத்தை அடைந்தான்.] '𑌭𑌵𑌚𑍍𑌛𑌿𑌦𑌃 𑌪𑌾𑌦𑌮𑍂𑌲𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌯𑌾𑌚𑍇 𑌯𑌦𑌨𑍍𑌤𑌵𑌤𑍍,' என்றும், '𑌭𑌵𑌚𑍍𑌛𑌿𑌦𑌮𑌯𑌾𑌚𑍇𑌹𑌂 𑌭𑌵𑌂 𑌭𑌾𑌗𑍍𑌯𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃,' என்றும், ஸம்ஸாரநிவர்த்தகனான வாஸுதேவனிடம் ஸம்ஸாரத்தை யாசித்தபடியால் துக்கித்தான். '𑌮𑌤𑌿𑌰𑍍𑌵𑌿𑌦𑍂𑌷𑌿𑌤𑌾 𑌦𑍇𑌵𑍈𑌃,' என்றும், '𑌕𑍍𑌷𑍀𑌣𑌪𑍁𑌣𑍍𑌯𑍇𑌨,' என்றும், தனது ப்ராரப்த கர்மத்தையும் ததநுஸாரியான பூர்வ வாஸனையையும், தன் மதி கேட்டுக்குக் காரணமாகக் கண்டுகொண்டான்.

ஆதலால், ஸாக்ஷாத் ப்ரஹ்மோபாஸகர்க்கும் அந்தராயங்கள் ஸம்பவித்துப் பகவத் ப்ராப்தி விளம்பிக்கும். ஸ்வாத்ம

ஶாரீரக ப்ரஹ்மோபாஸர்க்கு அஷ்டைஶ்வர்யஸித்திகள், வஸ்வாதி பதப்ராப்தி, ப்ரஹ்மகாட்ஸிஷேவணம் முதலானவை பலமாக நேரிட்டு அந்தராயங்களாகக் கூடும். ப்ரஹ்மாத்மக ஸ்வாத்ம சிந்தநத்துக்கு ஸ்வாத்மாநுபவம் வித்யாபலமாக ஏற்பட்டு அந்தராயமாகும். இவ்வளவே நிகமாந்தார்யன் தாத்பர்யமென்று அறிகின்றோம். ஸர்வர்க்கும் ஈஶ்வரனைத் தவிர்த்ததோர் ப்ரியவஸ்துவின் ஸத்பாவம் கர்மவாஸனையின்றி உதிக்க ஹேதுவில்லை. ஸம்யக் வ்யவஸிதர்களும், அவ்வாஸனையை முற்றிலும் ஜயித்திலராகில் பரமபுருஷார்த்தத்தைப் பெறமாட்டார்கள்.

ஸூத்ரகாரருடைய காலத்தில் உபநிஷத்வித்யைகள் எங்கேனும் அநுஷ்டாநத்திலிருக்கவேண்டும். அவை யாவும், பக்தியோகத்தில் சேர்ந்தவை; யோகத்தின் அங்கங்களாகிய யமநியமாதிகளை அபேக்ஷித்தவை; இன்னும் வித்யாதிகாரிகளுடைய வர்ணாஶ்ரம கர்மங்களையும் யாவதாயுஷம் அங்கமாக அபேக்ஷித்தவை. இவை யாவும் அநுஷ்டிக்கப்பட்ட காலத்தில், ப்ரஹ்ம ஸூத்ரங்களுடைய யாவத் விசாரமும் செய்ய வேண்டியவையே. பகவத்கீதையும் அப்படிப்பட்ட காலத்தினுடைய அபேக்ஷிதங்களை யோசிக்கின்றது.

இந்த யோசனைகள் ஶங்கரபாஷ்ய காலத்திலும் ஸ்ரீபாஷ்ய காலங்களிலும் மாறுதலை யடைந்தன. அப்போது உபநிஷத் வித்யைகளின் அநுஷ்டாநம் ஆசாரத்தில் இருந்ததாகக் கொள்ள இடம் இல்லை. ஶங்கராசார்யருடைய காலத்தில் யோகாப்யாஸம் மாத்ரம் இருந்ததாகக் கொள்ளல் கூடும். நம்முடைய ஸம்ப்ரதாயத்திலும் ஸ்ரீமந்நாதமுநிகள் பக்தியோகநிஷ்டரா யிருந்தார்.

உபநிஷத்வித்யைகள் யாவும் உபாஸந மெனப்படுகின்றது. ஆதலால் அவை, உபாஸகன், உபாஸ்திவிஷயமான ப்ரஹ்மம், உபாஸநரூபமான மநோவ்ருத்தி, எனும் விபாகங்களை ஸஹிக்கின்றன. ஶங்கராசார்யர் இவற்றை ஸகுணோபாஸநங்க ளென்று அபிப்ராயப்பட்டார்; இவற்றால் ஸம்யக் தர்சநம் லபிக்கமாட்டாதென்றும் யோசித்தார். ஆத்மா அவர்க்கு ஒன்றே; ப்ரபஞ்சத்தில் அது எல்லாவற்றிற்கும் ஆத்மா; அதனிடமே ஈஶ்வரபாவமும், ஜீவபாவமும் லோகத்தார் அஜ்ஞாநத்தால் செய்கின்றனர்; ஜ்ஞாநம் உண்டானால், தன்னுடைய ஆத்மாவே ஸர்வாத்மா வென்றும் அதைத்தவிர வஸ்த்வந்தரம் இல்லை யென்றும் கண்டு கொள்வார் என்றும் ஶங்கராசார்யர் தத்வவிசாரத்தை முடித்தார். ஆதலால் உபநிஷத்வித்யைகள் அவர்க்கு பரமார்த்த ஸாக்ஷாத்கார ஸாதகங்களன்று.

ராமாநுஜதர்சநம் ப்ரபத்தியை மோக்ஷோபாயமாகக் கொண்டது. உபநிஷத்வித்யைகள் அம்மதஸ்தர்க்குள் ஆசாரத்தில் இல்லை. ஆதலால் ப்ரஹ்மாத்மக ஸ்வாத்ம சிந்தநருடைய கதியைப்பற்றிய விசாரம் நம்முடைய மதஸ்தர்க்கு அவஶ்யமாகச் செய்யவேண்டியதன்று. தத்வங்களின் ஸத்தா ஸ்திதி ப்ரவ்ருத்திகளை அறிவதற்கு உபநிஷத் ப்ரஹ்ம ஸூத்ரங்களுடைய அர்த்தவிசாரம் நமக்கு வேண்டியதே யானாலும், வித்யாபலங்கள் அவஶ்யமாக அறிய வேண்டியவையன்று.

நாம் ப்ரமாணமாகக் கொண்ட க்ரந்தங்கள் ப்ரஹ்மாத்மக ஸ்வாத்மாநுஸந்தாநம் செய்பவன் கதியை விஶதமாகக் காட்டவில்லை. பஞ்சாக்நி வித்யையில் பல ஶ்ருதி தத்க்ரதுந்யாயத்தை விரோதிக்கின்றது. ஆதலால் அவற்றின் ஸமரஸத்தை ஶங்கராசார்யர் செய்ய யத்தனிக்கவில்லை; ஸ்ரீபாஷ்யகாரர் ஒரு விதமாகச் செய்தார். தேசிகன் ஸ்ரீபாஷ்யத்துக்கு விரோதமாக யோசனை செய்யவில்லை; செய்ததாகவும், எண்ணவில்லை. தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்கள், ஸ்ரீபாஷ்யயோசனைக்கும் தேசிகன் அபிப்ராயத்துக்கும் விரோதம் ஈஷத்தும் ஸ்மரித்தார்களில்லை; அந்யர்களும் இக்காலம் வரையில் சிந்தித்தாரில்லை. தேசிகனிடம் காரணாந்தரத்தால் கொண்ட த்வேஷத்தினால் சிலர், இந்த விஷயத்தில் தேசிகன் ராமாநுஜன் அபிப்ராயத்தை அநுஸரித்தா ரில்லை யென்று சோத்யங்கள் செய்துகொண்டு அவற்றை ஸமர்த்தித்து விட்டதாகவும் ஸந்

தோஷித்தனர். அவர்களை நிராகரணம் செய்தும் க்ரந்தங்கள் பிறந்தன. ப்ரமாணங்கள் மௌநத்தை அவலம்பித்த ப்ரகரணங்களில், யோசநா பேதங்கள் ஸம்பவித்தாலும் விரோதமில்லை. இவற்றில் த்வேஷத்தால் புத்தியைப் பீடித்தல் புருஷார்த்தப்ரதமாகமாட்டாது.

பஞ்சாக்நிவித்யா நிஷ்டர்களைக் காட்டிலும் விலக்ஷணராக, கேவலாத்மப்ரவணர் விஷயமாகத் தேசிகன், "ஆத்மப்ரவணரையும், ப்ரக்ருதிஸம்ஸ்ருஷ்டம் ப்ரக்ருதிவியுக்த மென்கிற இரண்டுபடியிலும், ப்ரஹ்மத்ருஷ்டியாலேயாதல், ஸ்வரூபமாத்ரத்தாலேயாதல், உபாஸிக்க மூட்டி, அவை நாலு வகைக்கும் பலமாக அல்பாஸ்வாதங்களைக் கொடுத்து புநராவ்ருத்தியைப் பண்ணியும்" என்று ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் அபிப்ராயப்பட்டார். பிள்ளை லோகாசார்யரும் இப்படிப்பட்ட அதிகாரிகளை உத்தேசித்து, "இவ்வல்பரஸத்திலே கால்தாழ்ந்து, உணர்முழுநலமான பரமாத்மவிவேகம் பண்ணமாட்டாதே, அமுதவெள்ளத்தானும் சிறப்புவிட்டு, அவ்வாத்ம ப்ராப்திக்கு ஸாதநமான ஜ்ஞாந யோகத்திலே நிஷ்டனாய், யோகபலமான ஆத்மாநுபவமாத்ரத்தையே புருஷார்த்தமாக அநுபவித்துப் பின்பு ஸம்ஸாரஸம்பந்தமும் பகவத்ப்ராப்தியும் அற்று, யாவதாத்மபாவி அஶரீரியாய்க் கொண்டு திரிவானொருவன்" என்று யோசிக்கின்றார். இந்த யோசனைகள், ஈஷத் அபிப்ராய பேதத்தைக் காட்டினாலும், பரமபுருஷார்த்தத்துக்கு ஆத்மப்ரவணர் விலக்காவார் என்பதை ஒப்புக்கொள்கின்றன. பஞ்சாக்நிவித்யாநிஷ்டன் ப்ரஹ்மோபாஸகர்க்குள் சேர்க்கப்பட்டு, உபநிஷத்தில் ப்ருதக்காக நிர்த்தேசிக்கப்பட்டானானதால் அவனுக்கும், '[illegible],' என்று சொல்லப்பட்டவர்க்கும் இருக்கவேண்டிய வ்யாவர்த்தகாகாரம் தேசிகனால் யோசிக்கப்பட்டது.

ஸ்ரீ:.

ஜநகநந்திநீ.

ஸூர்யோதயமாய் மூன்று நாழிகையாயிற்று. ஜநகம் கண் திறந்தாள். மாதாவைப் பார்த்து, "அப்பா எங்கே?" என்றனள். ஸ்ரீநிவாஸன் எழுந்துபோய்க் கேசவாசார்யரை அழைத்து வந்தான்.

"அப்பா! என் பக்கத்தில் உட்காரும்" என்றாள் ஜநகம். கேசவாசார்யர் வந்து உட்கார்ந்தார்.

"அப்பா! ஜ்வரவேகம் ஸஹிக்கப்போகவில்லை. இது பரண்யன் ஸங்கல்பம்போல் தோன்றுகிறது. சிகித்ஸைக்காக ப்ரமப்படுதல் ப்ரயோஜநப்படும்போல் தோன்றவில்லை." என்று ஜநகம் சொன்னாள்.

"குழந்தாய்! பரண்யன் ஸங்கல்பம் எப்படியிருந்தாலும், சிகித்ஸையில்லாமல் விட எங்களுக்கு மநஸ் துணியமாட்டாது. அது விஷயத்தில் நீ எங்களுடைய இஷ்டத்தைப் பகுமாநிக்க வேண்டும்" என்றார் கேசவாசார்யர்.

"தேவரீர் நியமநப்படி நடக்கின்றேன். தாகம் எடுக்கின்றதே. தீர்த்தம் கிடைக்குமோ?" என்றாள் ஜநகநந்திநி.

"வைத்யரை ப்ரதீக்ஷிக்கின்றோம்; அவர் வருகிறவரையில் பொறுத்திரு" என்றார் கேசவாசார்யர். ஜநகம் கண்களை மூடிக்கொண்டாள்.

அதன்பிறகு பத்மநாபாசார்யர் ஸ்வாமிகுருக்களை அழைத்துக்கொண்டு வந்தார். அவர்கள் பின்னால் திருமலாசார்யரும் வந்தார். பத்மநாபாசார்யரும் வைத்யர்களும் ஜநகநந்திநியிடம் வரவே பெண்டுகள் எழுந்து விலகினார்கள். ஸ்ரீநிவாஸனும் கேசவாசார்யரும் பக்கத்தில் இருந்தார்கள். ஸ்வாமிகுருக்கள் ஜநகத்தின் கையை நிதாநமாய்ப் பார்த்தார். பிறகு திருமலாசார்யரைப் பார்

த்து, "என்ன மாத்ரை ப்ரயோகித்தீர்கள்?" என்றார். திருமலாசார்யர் தாம் தேய்த்த மாத்ரைகளைச் சொன்னார்.

பிற்பாடு, தேன் கொண்டுவரச்சொல்லிச் சில கட்டுமாத்ரைகளைத் தேய்த்து ஜநகநந்தினியைச் சாப்பிடச்சொன்னார். தன் மாதாவின் ஸஹாயத்துடன் ஜநகம் எழுந்து ஔஷதத்தை உண்டாள். மீண்டுமொருதரம் மாத்ரைகளை முன்போல் தேய்த்து, அந்த மருந்தை மத்யாஹ்நம் கொடுக்கும்படி சொன்னார். ஆகாரத்துக்காகக் கோதுமைக்கஞ்சி கொடுக்கச்சொன்னார். தீர்த்தத்தில் இரும்பைப் போட்டுக் காய்ச்சி, கேட்டபோது கொஞ்சம் தீர்த்தம் கொடுக்கச்சொன்னார். ஸாயங்காலம் திரும்பி வருவதாகச் சொல்லிவிட்டுப் போனார்.

ஸாயங்காலம் வரைக்கும் ஜநகநந்தினிக்கு ஜ்வரம் குறையவில்லை. முதல்நாள் போலப் பெண்டுகள் சிந்தாக்ராந்தர்களாய்ப் பக்கத்தில் இருந்தார்கள். கேசவாசார்யரும், ஸ்ரீநிவாஸனும், அடிக்கடி வந்து பார்ப்பார்கள். ஸ்ரீநிவாஸன் செய்யச்சொன்ன தொழில்களைச் செய்துகொண்டிருந்தான். அன்றைய திநம் ஜநகநந்தினிக்கு ஆகாரம் குறைந்துவிட்டது. மத்யாஹ்நம் திருமலாசார்யர் வந்து கைபார்த்தார். ஜ்வரம் குறையாது ஓரே வேகமாய் அடிக்கின்றதென்று சொன்னார்.

அஸ்தமந வேளையில் ஸ்வாமிகுருக்கள் வந்தார். ஜநகத்தின் கையைப் பிடித்துப் பார்த்தார். முன்னே விட விசேஷ மாத்ரைகளைத் தேய்த்தார்; மருந்து கொடுத்தார். ஜநகம் படுக்கையிலேயே அதைச் சாப்பிட்டாள். பாதிராத்ரியில் கொடுப்பதற்காக மருந்து தேய்த்துவைத்தார். மறுநாள் காலையில் வருவதாகச் சொல்லிவிட்டு எழுந்துபோனார்.

போகும் வைத்யரைப் பத்மநாபாசார்யர் பின்தொடர்ந்தார். "குருக்கள்! வ்யாதியின் ஸ்வரூபம் என்ன?" என்று கேட்டார். "வ்யாதி பலந்தான். விசேஷ மருந்துகளைக் கொடுக்கின்றேன். இதுவரையில் மருந்துகள் வேலை செய்யவில்லை" என்று குருக்கள் சொன்னார். "ப்ராணபயம் உண்டோ?" என்று பத்மநாபாசார்யர் கேட்டார். "இல்லை என்று சொல்லக்கூடவில்லை; சக்தியுள்ளவரையில் பார்க்கின்றேன்; இப்போது சீதளம் வந்திருக்கின்றது; காலையில் வருகின்றேன்" என்று வைத்யர் சொன்னார்.

பத்மநாபாசார்யர் முகம் விழுந்துபோச்சுது. மெள்ளமெள்ளத் திரும்பி நடந்தார். கேசவாசார்யர் வீட்டுவாசலில் நின்று அவரைப் பார்த்துக்கொண்டு நின்றார். அவர் நெருங்கினவுடன் "வைத்யர் என்ன சொன்னார்? விசேஷமுண்டோ?" என்று கேசவாசார்யர் கேட்டார். "தோஷம் உண்டாயிருக்கின்றதென்றும், ப்ராணபயம் சங்கிக்கத்தக்கதென்றும், தம்மால் ஆனதைச் செய்வதாயும் சொல்லிப் போனார். காலையில் வருவதாயும் சொன்னார்" என்று பத்மநாபாசார்யர் சொன்னார். இப்படிப்பட்ட யோசனைகள் முன்னமே கேசவாசார்யருக்கு உண்டாய்விட்டன. அவர் பரமஸாது; என்ன செய்வர்? பகவான் தமக்களித்த விலையில்லாத ரத்நத்தை இழந்துபோகக் காலம் வந்ததே! என்று வருந்தினார்.

அன்றிராத்ரி ஜநகநந்தினிக்குப் படிப்படியாகப் பலம் குறைந்தது. சிலகாலம் மயக்கத்தால் கண்களை மூடிக்கொண்டிருப்பள். சிலகாலம் கண்களைத் திறந்துகொண்டு பக்கத்திலிருப்பவர்களைப் பார்ப்பள். கேட்ட கேள்விக்கு இரண்டொரு வார்த்தைகள் சொல்வள். அந்த க்ருஹத்திலிருந்தவர்களில் ஒருவர் கூட அன்றிராத்ரி கண்களை மூடினாரில்லை.

காலையில் குருக்கள் வந்தார். கையைப் பார்த்தார். சீதளம் மிதம் மீறி நிற்பதைத் தெரிந்துகொண்டார். மருந்து பயன்படாதென்று அறிந்திருந்தும், மருந்து தேய்த்துக் கொடுத்தார். ஸாயங்காலம் வருவதாகச் சொல்லி வெளிப்பட்டார்.

பத்மநாபாசார்யர் அவருடன்கூட நடந்துபோய் வ்யாதியின் ஸ்வரூபத்தைப் பற்றிக் கேட்டார். "இன்று மத்யாஹ்நம் வரையில் தள்ளினால் பிழைப்புண்டு" என்று வைத்யர் சொல்லிவிட்டுப் போனார். அந்த வார்த்தைகளின் அர்த்தத்தைப் பத்மநாபாசார்யர் தெளிவாக அறிந்தார்.

அன்றுகாலை பத்துநாழிகை ஆயிற்று. ஜநகம் கண்திறந்தாள். தாய் ஒரு பக்கமும், ஸ்ரீநிவாஸன் மற்றொரு பக்கமும் இருந்தார்கள். கநகவல்லி உள்ளே தளிகை பண்ணிக் கொண்டிருந்தாள். கேசவாசார்யர் ஸங்க்ரஹமாகப் பகவதாராதநம் செய்துகொண்டிருந்தார்.

ஜநகம் ஸ்ரீநிவாஸனைப் பார்த்தாள். "ஸ்ரீநிவாஸா! என்னுடைய மரணத்தைப்பற்றி ஸ்ரீக்ருஷ்ணனை ப்ரார்த்தித்தேன். பக

வான் க்ருபை செய்வதாக வரமளித்தார்; என்னுடைய நிர்யாணம் ஸமீபித்துவிட்டது. என்னுடைய ஸ்திதியில் அதற்காக யாரும் வ்யஸநப்படவேண்டாம். எனக்காக நீ உன்னுடைய ஸுகத்தைப் பறிகொடுத்தாய். அது ந்யாயமன்று. இனியாவது லோகரீதியை அநுஸரித்து நட. உன் மாதாபிதாக்களுக்கு நீயொரு பிள்ளை. என் மாதாபிதாக்களுக்கும் இனிமேல் நீதான் கதி." என்று சொன்னாள்.

ஸ்ரீநிவாஸனும் ஹரிப்ரியையும் கண்ணீர் தாரைதாரையாய் விட்டார்கள். பிறகு ஸ்ரீநிவாஸன் "உன்னுடைய ஸ்திதியைப் பற்றி ஶோகஸாகரத்தில் மக்நராயிருந்த உன் மாதாபிதாக்களுக்கு உன்னுடைய வியோகரூபமான மஹாஶோகத்தை நீ கொடுப்பதற்கு ஸம்மதித்தையே! எனக்குப் புத்தி சொல்லுகிறையே! உன்னைக் கண்ணால் பார்த்துக்கொண்டு, அதையே ஒரு பாக்யமாக வெண்ணிப் பிழைக்க நிஶ்சயித்திருந்த ஜநங்களுக்கு, உன்னுடைய வியோகாநந்தரம் ஆறுதலும் உண்டோ?" என்று சொன்னான்.

"ஸ்ரீநிவாஸா! மரணத்தை நான் ப்ரார்த்தித்த போதிலும், அது ஸந்நிஹிதமான பிறகு என் அப்பாவையும் அம்மாவையும் நினைத்துக் கஷ்டப்படுகின்றேன். இப்போது ஸர்வப்ரகாரத்தாலும் அஶக்தையாய் விட்டேன். உன் வார்த்தைகளால் நீ எனக்கு வருத்தம் தராதே." என்று ஜநகம் சொன்னாள். பின் மாதாவைப் பார்த்தாள்.

"அம்மா! என் வியோகத்தை நீ ஸஹிக்கமாட்டாய். ஆனாலும் அப்பாவினுடைய கைங்கர்யத்தை அநாதரிக்கவேண்டாம். நான் ஜீவித்திருக்க, என்னைத் திநமும் பார்த்துத் துக்கிக்கின்றாய். என் வியோகத்தால் உண்டாகும் துக்கம் இன்னும் பெரிதானாலும், அது, என்னைக் காணாத காரணத்தால் க்ரமேண குறையலாம். எனது துக்கமோ இத்தோடு முடிகின்றது. மரணம் இன்றோ, நின்றோ, யாவர்க்கும் ஸம்பவிப்பதே. ஆதலால் உனது ஜந்மலாபமான பர்த்தாவின் பணிவிடையை மறவாதே. ஸ்ரீவைகுண்டநிலயன் ஸ்தானத்திலே நாமெல்லோரும் சேரப்போகின்றோம் என்பது ஸத்யம்." என்று சொன்னாள்.

ஹரிப்ரியை அவ்வார்த்தைகளைக் கேட்டு, ஸஹிக்கமாட்டாமல் எழுந்து உள்ளேபோய் உட்கார்ந்து அழுதாள்.

"ஸ்ரீநிவாஸா! அப்பாவைக் கூப்பிடு" என்று ஜநகம் ஸ்ரீநிவாஸனுடன் சொன்னாள். ஸ்ரீநிவாஸன் போய் அதைச் சொல்லக் கேசவாசார்யர் பகவதாராதநத்தை முடித்துக்கொண்டு புத்ரியினிடம் வந்து உட்கார்ந்தார்.

"அப்பா! அடியேனை வாத்ஸல்யத்துடன் வளர்த்தீர்; ஜ்ஞாநமளித்தீர்; அடியேனுடைய ஆத்மரக்ஷணத்தின் பொருட்டுப் பகவானை ப்ரார்த்தித்தீர். ஸகல விதத்தாலும் தேவரீரைப் போன்ற ஸௌஹ்ருத்மரான பிதா கிடைத்தது அடியேனுடைய பாக்ய விஶேஷம். அடியேனுடைய வியோகம் தேவரீர்க்குத் துஸ்ஸஹமாயிருக்குமென்று இப்போது நன்றாகத் தெரிந்துகொண்டேன். தேவரீருடைய திருவுள்ளத்தை அநுஸரித்து அடியேனுடைய ப்ரார்த்தனைகள் இல்லாமல் போயின. அதுவும் ஶரண்யனுடைய ஸங்கல்பவிசேஷமே. அடியேன் ஏதாவது தெரிந்தும் தெரியாமலும் தேவரீர் திருவடிகளில் அபராதப்பட்டிருந்தால் அதைப்பற்றித் தேவரீருடைய க்ஷமையை ப்ரார்த்திக்கின்றேன். அடியேனுடைய மாதா கேவல ஸ்த்ரீபுத்தியுடன் கூடினவள். மிகவும் துக்கப்பட்டுப்போவள். அவளிடம் தேவரீர் க்ருபையாய் எழுந்தருளியிருக்கவேண்டும். வேறென்ன சொல்லப்போகின்றேன்? அடியேனுக்கும் அஶக்தி மேலிடுகின்றது." என்று ஜநகம் சொன்னாள்.

"குழந்தாய்! உன் இஷ்டபந்துக்களைப் பற்றிச் சிந்திக்க இது தகுந்த காலமன்று. உனக்கு இரண்டுதரம் ஸேவை ஸாதித்த ஶரண்யனை ஸ்மரி. உனக்கு ஸ்மரணஶக்தி யுள்ளவரையில் அவனையே ஸ்மரி. எங்களுடைய மஹா ஸுக்ருதத்தால் நீ எங்களுக்குக் குழந்தையாய் வந்து பிறந்தாய். அந்த ஸுக்ருதத்துக்கு முடிவு வந்துவிட்டது. நீ பரமபுருஷனுக்கு வரணீயையாய் விட்டாய். அவன் ஸங்கல்பத்தை யாரால் தடுக்க முடியும்?" என்று கேசவாசார்யர் மொழிந்தார். ஜநகம் கண்களை மூடிக்கொண்டு த்யானிப்பது போலிருந்தாள். கேசவாசார்யர் நடைத்திண்ணையில் போய் உட்கார்ந்தார்.

இவ்வண்ணம் இரண்டொரு நாழிகைகள் சென்றன. ஆதித்யன் உச்சி யேறினான். ஜநகம் கண்திறந்தாள். "அப்பா!" என்றாள். கேசவாசார்யரை அழைத்து வந்தார்கள். "அம்மா! என்

ணமாயிருக்கிறாய்? என்று கேசவாசார்யர் கேட்டார். ‘[illegible]’ என்று ஜநகநந்தினி சொன்னாள். “ப்ராஜ்ஞனிடம் விஶ்ராமிக்கப் போகின்றாயா?” என்றார் கேசவாசார்யர். “ஶரண்யன் அழைக்கின்றான்; போகின்றேன்.” என்று சொல்லி ஜநகம் கண்களை மூடிவிட்டாள்.

ஊர்த்வஶ்வாஸம் என்கிற கணக்குக்காக நாலு ஶ்வாஸம் வெளிவந்தது. ஜநகநந்தினியின் சரீரம் நிஶ்சலமாக நின்றுவிட்டது.

கேசவாசார்யர் கண்களில் நீர் தளும்ப ரேழிக்குச் சென்றார். ஸ்ரீநிவாஸன் கதறிக்கொண்டு வாசலுக்குப் போனான். ஹரிப்ரியை எழுந்தாள்; விழுந்தாள்; புரண்டாள்; கதறினாள். அவள் துக்கத்துக்கு அளவுண்டோ? “அம்மா! என்னை விட்டுப் போகிறையோ!” என்று பலதரம் கூவினாள். ஜநகத்தின் சரீரத்தை அணைந்தாள். முகத்துடன் முகத்தைச் சேர்த்துக்கொண்டு கண்ணீர் விட்டாள். உட்கார்ந்துகொண்டு புலம்பினாள். அதை யார் வர்ணிக்க முடியும்! எமக்கு அதை நினைக்கவும் திறனில்லை. செய்யுள் நடையால் சிறிது வரைகின்றோம்.

(1) தீவினை முற்றும் தீரத் தொடர்வதோ
ஆவி யென்னுடல் நீங்கி யகல்வதோ
யாவு மெற்கிவள் யாண்டுகொண் டேகுவாய்
தேவ னேபெருந் தேவிம ணாளனே.

(2) மண்ணிவள் வந்து வாழ்வுற்று மாண்பினைப்
புண்ண தாக்கினை போக்கினை யென்கொலோ
கண்ணனே யெந்தன் கண்ணிவள் நீகொளக்
கண்ணுங் கெட்டவட் கென்கதி சொல்லுவாய்.

(3) பேர ழகுடை யாளென்தன் பெண்மணி
சீர்க லைகள் தெளிவுற வோதினள்,
ஊர னைத்தும் புகழ்ந்துயர் நீர்மையாள்
யாரெ னக்கிணை யென்றிறு மாப்புற்றேன்.

(4) ஆசைக் கோர்சர ணாயினை யங்கனாய்
பேசக் கேட்டுநான் பேரின்ப மாழ்ந்தனன்
பாச மன்ன தெனக்குப் பணித்துநீ
நாசம் போயின ஞாயம் விளம்புவாய்.

(5) இந்தக் கால மெனக்குறு மென்றுநான்
சிந்தை கொண்டிலன் சிற்றறிவா னந்தோ!
சந்த மொன்றிய வென்னிளந் தையனீ
முந்திச் செல்லல் முறையோ மொழிந்திடாய்.

(6) எங்குநான் சென்றுன் இன்முகங் காணுவேன்
எங்கு நானுன தின்சொல் பருகுவேன்
கங்கு லும்பக லுங்கண்ண நீர்சொரிந்
திங்கு மங்கு முனைநினைந் தேங்குவன்.

(7) பொய்கை யாடநீ போக வெழுந்திராய்
கொய்ம லர்கள்நீ கொள்வதற் கேற்பன
அய்யன் நூலுனக் கோதுமக் காலமே
ணைசெய னத்தரை மேல்சய னிப்பையோ.

(8) கற்ற கல்வியும் கல்வியி னற்பயன்
பெற்ற வாறுங்கண் டெம்பெரு மானுவந்
துற்ற வேளையி தென்றுனைக் கொண்டனன்
அற்ற பற்றின ளாயினை யோசொலே.

(9) தாம ரைக்கண்கள் தண்மதி போல்முகம்
வாம நீள்குழல் செவ்விதழ் வாயுடன்
காம னேந்திய கார்முகம் போன்றநீ
ஈமத் தேற்று மெரிக்கிரை யாவதோ.

(10) கண்தி றந்தெனைப் பாரடி காதலி
பண்மொ ழியொன்று பார்த்தெனைப் பேசடி
எண்ணிய குற்றம் யாதுசெய் தேனடி
மண்ப டுத்தவென் மாதே யெழுந்திராய்.

(11) பூவின் மெல்லிய மேனியைப் பொங்கழல்
தாவி வேகத் தருணமும் வந்ததோ
ஆவிக் கோரமு தேயணங் கேயுனைப்
பாவி யேன்பறி தந்திடும் பாங்கிதோ.

(12) என்னெ னத்தரிப் பேனுயி ரின்னுநான்
என்னெ னப்பகர் வேனெந்தன் தீவினை
முன்செல் வாய்மட வாய்மொழி வாயுனைப்
பின்செ லும்வழி பெற்றிழந் தேற்குநீ.

இந்த ரீதியாகப் பலவாறு நினைத்து நினைத்தழுவாள். தன் காதலி இன்னும் உயிருடன் இருக்கின்றாளென்று எண்ணி அவளை ஏதேதோ கேட்டு இரப்பாள். அவள் அசைவற்றிருக்கக் கண்டு துயர்க் கடலில் ஆழ்ந்துபோவாள். ஒன்றோடொன்று ஒவ்வாத வருத்தங்களைப் படுவாள். பிராணன் உண்டோ! என்று யாவரும் ஐயுறுவண்ணம் கீழே விழுந்து மூர்ச்சை போவாள். முடிவில் புலம்பவும் சக்தியற்றுப் படுத்தாள்.

ஜநகநந்தினி பரமபதம் போயினள், கச்சிநகரும் திருநீங்கிய வண்ணம் தோன்றியது. யாவருக்கும் நல்லவரான கேசவாசாரியர் துக்கத்தைத் தமதென்று யாவரும் கருதினார்கள். அவர் இல்லம் முழுதும் அவ்வூர் பெண்டிரும் ஆடவரும் கூடி நிறைந்தது.

* * * * * *

ஸ்ரீநிவாஸனுக்கு முன்போல் வேகாநதிதான் சரணமாயிற்று. பெற்றவள் துயரத்தைப் பிறர் மதிக்கக்கூடும். அவன் துக்கம் ரஹஸ்யத்தில் தான் ப்ரகாசிக்கத்தக்கது. பந்துவினுடைய மரணம் துக்கத்தை விளைவிக்கும்; ஆயினும், ஸ்ரீநிவாஸன் அம்மான் மகள் இறந்தாளென்று அழுதானில்லை. உறவல்லாத அவ்வூர் ஜநங்களும் ஜநகநந்தினியை நினைந்து அழுதார்களாகையால், மற்றோரிடம் காணாத விசேஷ குணங்கள் ஜநகநந்தினியை ஆச்ரயித்து நின்றனவென்பது ஸித்தம். அந்தக் குணங்களுடைய சிந்தனையும், அவற்றால் இழுக்கப்பட்ட சித்தமுடையவனாய்; ஸ்ரீநிவாஸன் அவளைத் தானே அடையவேண்டுமென்று ப்ரதமத்தில் கொண்ட ஆசையும், அவ்வாசை நிராகரிக்கப்பட்ட பின்பும், அவளிடம் அவனுக்குண்டாயிருந்த அன்பானது அவன் மனத்தை விட்டகலாத காரணமும், ஜநகநந்தினியின் வியோகத்தை அவனுக்கு அஸஹ்யமாக்கிவிட்டன. யாது செய்வன்? உரத்த குரலின்றித் தாரை தாரையாய் கண்ணீர் விட்டான். "ஜநகநந்தினீ! உனை நான் எவ்வாறு மறப்பேன்? ஸகலேந்துமுகீ! உன் முகத்தை நான் இனி எங்கே காணப்போகின்றேன்? வாரெழில் கொண்ட நேத்ரமுடையவளே! உன் இந்தீவரம் போன்ற கண்களை இனியெங்கே பார்ப்பேன்! நீ ம்ருதுவாகவும் மதுரமாகவும் பேசும் சொற்களை எங்கு கேட்கப் போகின்றேன்! உன்னுடைய விநயமும், ஆசாரமும், பக்தியும், பொறுமையும் இனி எந்த ஸ்த்ரீயினிடம் ப்ரகாசிக்கப்போகின்றன! எனக்கு வெளியில் ஸஞ்சரிக்கின்ற ப்ராணன் போலிருந்தையே! நீ மரணமடைந்தபின் நான் எவ்வண்ணம் உயிர்த்து நிற்பேன்! உன்னை எனக்கென்றே ஈச்வரன் படைத்தானென்று எண்ணினேன். நீ பரர்பொருளாய்விட்டாய். ஆனபோதிலும் உன்னைக் கண்களால் பார்த்துக்கொண்டு, அதற்காகவாவது ஜீவித்திருக்க வெண்ணினேனே! அந்தப் பாக்யமும் அற்றுப்போனேனே! புஷ்பஹாரங்களிலும் லதைகளிலும் உன் சரீரத்தை யோசிப்பேனோ? பயந்த பெண்மான்கள் பார்வையில் உன் கண்களைத் தேடுவேனோ? சந்த்ரனிடமும் செந்தாமரையினிடமும் உன் முகத்தைத் தேடுவேனோ? மயிற்றோகையினிடம் உன் கூந்தலழகைச் சிந்திப்பேனோ? கோவைப் பழத்தில் உன் உதடுகளின் காந்தியைக் காண்பேனோ? எப்படித் தான் யோசித்தாலும் இவையெல்லாம் ஒன்று சேர்ந்து உன் உருவத்தைக் காட்டமாட்டாவே. நீ படுத்தாயென்று ஜநங்கள் அறிவதன் முன்னமே ப்ரயாணப்பட்டுவிட்டையோ! இனி நான் என் செய்வேன்! என் நினைப்பேன்! எவ்வாறு உய்வேன்! வரதா! என் தலைமேல் கல்லைப் போட்டுவிட்டையே!" இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு ஸ்ரீநிவாஸன் புலம்பிக்கொண்டிருந்தான்.

காலத்தின் வேகம் ப்ரியபந்துக்கள் மரித்த பிறகுதான் தெரிகின்றது. செத்தவரைச் சுமந்துபோகச் சாகவேண்டியவர் ப்ரயத்நப்படுவது லோகவழக்கம். உறவினர் துக்கித்துக்கொண்டிருக்கையில், ஆப்தர்கள் அத்தொழிலை மேற்கொள்கின்றார்கள். அவர்களில் சிலர், உறவினர் பக்கல் உட்கார்ந்து உபசார வார்த்தைகளும் சொல்வார்கள். யுவதி விஷயத்தில் பிதாமகனுடைய ப்ரதம ஸ்ருஷ்டியாக எண்ணத்தக்கவளானாலும், ஜீவனால் விடப்பட்ட ஜநகத்தின் சரீரத்தை வேகவதிக்குக் கொண்டு போகும் காலம் ஸமீபித்துவிட்டது. அதற்கு வேண்டிய க்ரியைகள் யாவும் ஆலஸ்யமின்றி நடத்தப்பட்டன. ஆதலால் ஸ்ரீநிவாஸன் தன்னையும் மறந்து தனியே அழுதுகொண்டிருக்கையில், ஸமீபத்தில் ஸ்த்ரீகள் குரல்விட்டுப் புலம்பும் சப்தத்தைக் கேட்டான். தலை நிமிர்ந்து பார்த்தான். ஜநகநந்தினியின் சரீரம் கொண்டு போகப்படுவதையும் அதன்பின் விப்ரகுலோத்தமர்கள் கூட்டமாகச் செல்வதையும் கண்டான்.

“ பெண்ணே! பதினாறு வருஷங்கள் பிழைத்து உன் ஆயுளை முடித்தையோ? கச்சிமா நகரத்தில் வஸிக்க இனி உனக்கு இடமிலதோ? உன் சந்தம் அமைந்த நாளளவுகூட உனக்கு ஜீவிக்கக் காலமில்லையோ? காட்டுத்தீக்கு அளிக்கவா உன் வடிவழகு அவ்வண்ணம் வளர்ந்தது? ஸர்வ ஶக்தி யுடையவனெனப் பெயர் கொண்ட பகவான் உன்னை அவ்வண்ணம் பண்ணி இவ்வண்ணம் அழிப்பானேன்?” என்று கதறினான்.

“ மீண்டொருதரம் அவள் முகத்தைப் போய்ப் பார்க்கின்றேன். அது தான் முடிவான தர்சநம். அதன் பிறகு என் மநஸ்ஸுதான் அவள் உருவைக் காட்டவேண்டும்” என்று சொல்லிக்கொண்டு எழுந்து போனான். இதற்குள் சிதையை அடுக்கினார்கள். பிறகு ஜநகத்தின் சரீரம் சிதையின் மேல் வைக்கப்பட்டது. அது கண்களுக்குத் தெரியும்வரையில் ஸ்ரீநிவாஸன் பக்கத்தில் நின்று விடாமல் பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு முட்டைகளால் அது மூடப்பட்டது. அதன்மேல் தீயு மிடப்பட்டு, ஒரு நிமிஷ காலத்துக்குள் அது சிதையெங்கும் வ்யாபித்து விட்டது.

ஹரிப்ரியை அக்காட்சியைக் கண்டாள். கலங்கினாள்; கதறினாள். பெண்டுகள் அவளை அவ்விடம் விட்டு அழைத்துக்கொண்டு நடந்தார்கள். ஆடவர்களும் சிறிதுகாலம் க்ரமித்தவுடன் ருத்ர பூமியைத் துறந்தார்கள். வரதாசார்யர் அப்போது ஸ்ரீநிவாஸனைத் தேடினார். அவன் அகப்படவில்லை. யாவரும் ஊருக்குள் திரும்பி ப்ரவேசித்தார்கள்.

பாடசாலை ஸம்ஸ்க்ருத உபாத்யாயர் திரும்பி நடக்கையில் ‘ 𑌅𑌹𑌨𑍍𑌯𑌹𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍀𑌹 𑌯𑌮𑌾𑌲𑌯𑌮𑍍 । 𑌶𑍇𑌷𑌾𑌃 𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌕𑌿𑌮𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌮𑌤𑌃 𑌪𑌰𑌮𑍍’ என்று சொன்னார். அதைக் கேட்ட தமிழ்ப்பண்டிதர் ‘ நாடோறு மக்கள் நரகம் செலக்கண்டும், நீடூழி வாழ நினைவர்’ என்று பின்பாட்டு பாடினார்.

கேசவாசார்யருடைய ஶோகம் உள்ளே அவரை எரித்துக் கொண்டே இருந்தது. ஆனாலும் அதை அவர் வெளியில் ப்ரகாசிக்க விடவில்லை. தமது நித்யகர்மங்களை க்ரமமாகச் செய்து கொண்டு வந்தார். பகவத் கைங்கர்யங்களை முன்போலவே நடத்தி வந்தார். ஆஶ்ரயித்த ஶிஷ்யர்களுக்கு அத்யாத்மவித்யா ப்ரதாநம் பண்ணிக்கொண்டு வந்தார். ப்ரஹ்மவித்துக்களுடைய வருத்தம் அப்படித்தான் இருக்கும்.

ஹரிப்ரியையே துக்கம் மூர்த்திகரித்தது போல் தோன்றினாள். ஸ்வதர்மம் அறிந்தவள் ஆதலால் பர்த்தாவின் கைங்கர்யத்தைத் தவறுதலின்றி நடத்தி வந்தாள். ஆனால் அன்று முதல் அவள் ஓரிடமும் போனாளில்லை; ஒருவருடனும் பேசினாளில்லை.

ஸ்ரீநிவாஸனை ஶ்மஶாநத்தில் பார்த்தபிறகு ஒருவரும் கண்டிலர். அவன் போனவழி யார்க்கும் தெரியாது. அவனுடைய மாதாபிதாக்கள் மஹா துக்கத்தை அநுபவித்தார்கள். தக்க காரண மில்லாமல் தங்களுக்குப் புத்ர வியோகம் நேர்ந்ததாக எண்ணினார்கள். கநகவல்லி மட்டும் அடிக்கடி, “ அண்ணா அப்படி நடந்திராவிட்டால், அவர்க்கும் கஷ்டம் வந்திராதே, நானும் துக்கப்படாதிருப்பேனே!” என்று சொல்லிக்கொண்டிருந்தாள். அது ஸ்த்ரீ புத்தி.

‘ [illegible] ।’

எனும் ஶ்லோகப்படி ஈஶ்வர ஸங்கல்பம் இருக்கு மென்பர். ஈஶ்வர ஸங்கல்பம் மநுஷ்யருடைய ஸுகதுக்க ப்ராப்தி விஷயத்தில் ஸாபேக்ஷமாய் நிற்கின்றது. ‘ [illegible] । ‘ [illegible]’ எனும் படியே, ஸுகதுக்கங்கள் கர்மாத்யக்ஷன் ஸங்கல்பாதீநங்கள், ப்ரயத்நம் மாத்ரம் மநுஷ்யஸாத்யம்; ப்ரயத்நத்தினுடைய பலத்தை அபேக்ஷித்தே ஸாதாரணமாக ஜநங்கள் ப்ரவ்ருத்திக்கின்றார்கள். பல தாநமோ, அவர்களுடைய ப்ராரப்தகர்மங்களை அநுஸரிக்கும் ஈஶ்வர ஸங்கல்பத்தைப் பொறுத்து நிற்கும். அத்யந்தம் நிவ்ருத்தி தர்மத்தை ஆஶ்ரயித்திருந்த கேசவாசார்யர், ‘ [illegible] 𑌹𑌿𑌤𑍇 𑌰𑌤𑌾𑌃’ என்கிறபடி அத்யவஸித்தவர்.

பத்ராதிபர்.

ஜநகநந்தினீ முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாகுரவே நம:.

ஸ்ரீ தேசிக ப்ரபந்தம் - பதவுரை.

கடவுள்வாழ்த்து.

நேரிசை வெண்பா.

சீராருந் தூப்புற் றிருவேங் கடமுடையா
னேராரு னூலி னிரும்பொருளை—ஆராய்ந்து
நன்குரைக்குந் திண்மைபெற நானிலமும் போற்றுமவ
ரொண்பதத்தைத் தாழ்ந்தனனு னேர்ந்து.

தனியன்.

இதுவுமது.

சீரொன்று தூப்புற் றிருவேங் கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள்—ஓரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

(இதன் பொருள்.) சீர் ஒன்று - சிறப்புப் பொருந்திய, தூப்புல் - தூப்புல் குடியில் அவதரித்த, திருவேங்கடம் உடையான் - வேதாந்த தேசிகர், பார் - பூமியில், ஒன்ற - நிலைத்திருக்கும்படி, சொன்ன - செய்தருளிய, பழமொழியுள் - பழமையான வேதஸாரமாகிய நூல்களுள், ஓரொன்று தானே - ஒவ்வொரு கிரந்தமே, தாரணியில் வாழ்வார்க்கு - இப்பூமியில் வாழும் மனிதர்களுக்கு, வான் - வைகுந்தத்தை, ஏறப்போம் அளவும் - முக்தி யடையும் வரைக்கும், வாழ்வு - வாழ்வாக, அமையாதோ - பொருந்தாதோ? [பொருந்து மென்றபடி] (என்றவாறு.)

(குறிப்பு.) வாழ்வார்க்கு என்பது அவரைப் பகைத்து நரகத்துக்கு ஆளாவாரை நீக்குகிறது.

அமிர்த ரஞ்சனி.

கட்டளைக்கலித்துறை.

தம்பர மென்றிரங் கித்தள ராமனந் தந்தருளால்
உம்பர்தொ ழுந்திரு மாலுகந் தேற்குமு பாயமொன்றால்
நம்பிற வித்துயர் மாற்றிய ஞானப் பெருந்தகவோர்
சம்பிர தாயமொன் றிச்சதிர்க் குந்நெறி சார்ந்தனமே. (க)

(இ - ள்.) உம்பர் தொழும் - நித்திய சூரிகளால் வணங்கப்பட்ட, திருமால் - திருநாராயணன், அருளால் - கிருபையால், தம்பரம் என்று இரங்கி - இவனைக் காப்பது தமக்குக் கடமை யென்று மன மிரங்கி, தளரா மனம் தந்து - சலியாத புத்தியைக் கொடுத்து, உகந்து - சந்தோஷித்து, ஏற்கும் - அங்கீகரிக்கும், உபாயம் ஒன்றால் - சரணாகதி என்னு மொரு உபாயத்தால், நம் பிறவி துயர் - நமது ஜனன் மரண துக்கத்தை, மாற்றிய - போக்கடித்த, ஞானம் - சிறந்த ஞானமும், பெரும் தகவோர் - மிகுந்த கிருபையுமுள்ள ஆசார்யர்களது, சம்பிரதாயம் - ஸம்ப்ரதாயத்தை, ஒன்றி - அடைந்து, சதிர்க்கும் நெறி - சுகமடையத்தக்க மார்க்கத்தை, சார்ந்தனம் - சேர்ந்தோம். (எ - று.)

(கருத்து.) ஸ்ரீமந்நாராயணனது திருவடிகளில் பரஸமர்ப்பணம் செய்விக்கும் ஆசார்யர்களுடைய சம்பிரதாயத்தைச் சேர்ந்து நற்கதியை யடைந்தோம் என்பதாம்.

(கு - பு.) இது ஆசார்ய நிஷ்டையின் பெருமையைக் காட்டுகிறது. சார்ந்தனம் என்பது உளப்பாட்டுத் தன்மைப் பன்மை; இவர் தம் போன்ற நல்லோரையும் தம்மொடு சேர்த்துச் சொல்வதால். 1.

அகவற்பா.

கடலமு தத்தைக் கடைந்து சேர்த்த
திருமா லடிகாட் டியநம்
தேசிகர் தந்நிலை பற்றிச் சேர்ந்தோமே. (உ)

(இ - ள்.) கடல் கடைந்து - திருப்பாற்கடலைக் கடைந்து, அமுதத்தை - அதில் பிறந்த அமிர்தத்தை, சேர்த்த - தேவர்களுக்கே பகிர்ந்து கொடுத்த,

திருமால் - திருநாராயணனது, அடி - திருவடிகளை, காட்டிய - உபாயமாகத் தெரிவித்த, நம் தேசிகர் தம் - நமது ஆசார்யருடைய, நிலை - நிஷ்டையை, பற்றி - உறுதியாகக் கொண்டு, சேர்ந்தோம் - அவரை அடைந்தோம். (எ - று.)

(க - து.) எம்பெருமானது ஸ்வரூபத்தைத் தெரிவித்த ஆசார்யரை அடைந்தோம் என்பதாம்.

(கு - பு.) ஸ்ரீமந்நாராயணன் துர்வாஸர் சாபத்தால் பாற்கடலிற் புக் கொளித்த ஆகண்டலனது செல்வ மெல்லாம் மீண்டும் அவன் பெறுமாறு அக்கடலைக் கடையும்படி அமரர்கட்குப் புகன்று தானும் அதற்கு மத்தாகிய மந்தர மலையைக் கூர்ம ரூபியாயிருந்து தாங்கினமையின் 'கட லமுதத்தைக் கடைந்து' என்றும், அதனின்றும் போந்த அமுதத்தை வம்புக்கு இழுத்த அசுரரை வஞ்சித்து அதற்குரிய தேவர்கட்கே பகிர்ந்து கொடுத்தமையின் 'சேர்த்த' வென்றும் கூறினர்.

இது ஈற்றுக்கயலடி சிந்தடியாயும், மற்றவை அளவடியாயும் வந்த நேரிசையாசிரியப்பா. 2.

குறள் வெண்பா.

முத்திக் கருள்சூட மூன்றைத் தெளிமுன்னம்
இத்திக்கா லேற்கு மிதம். (௩)

(இ - ள்.) முத்திக்கு - மோக்ஷம் பெறுவதற்காக, அருள் - எம்பெருமான் கிருபையை, சூட - அடைய, முன்னம் - முதலில், மூன்றை - மூன்று தத்துவங்களையும், தெளி - தெரிந்துகொள், இத்திக்கால் - இந்த வழியினால், இதம் ஏற்கும் - ஸ்வரூபத்திற்கு அநுரூபமான உபாயம் கைக்கூடும். (எ - று.)

(க - து.) மூன்று தத்துவங்களையும் முதலில் தெரிந்துகொண்டால் மோக்ஷோபாயத்தில் ப்ரவ்ருத்தி யுண்டாகும் என்க.

(கு - பு.) சித்து - அசித்து - ஈஶ்வரன் என்பவை மூன்று தத்துவங்கள். 3.

இதுவுமது.

மூன்றிலொரு மூன்று மூவிரண்டு முந்நான்குந்
தோன்றத் தொலையுந் துயர். (௪)

(இ - ள்.) மூன்றில் - திருமந்திரம் துவயம் சரம சுலோகம் என்னும் மூன்றினுள், ஒரு மூன்றும் - மூலமந்திரத்துள் இருக்கும் மூன்று பதங்களின் ஒப்பற்ற பொருளும், மூவிரண்டும் - துவயத்துள் இருக்கும் ஆறு பதங்களின் அர்த்தமும், முந்நான்கும் - சரம சுலோகத்துள் இருக்கும் பன்னிரண்டு பதங்களின் பொருளும், தோன்ற - ஒருவனுக்கு நன்றாய் விளங்குமானால், துயர் தொலையும் - பிறவித் துயர் ஒழியும். [அப்போது மோக்ஷம் கைகூடுமென்க.] (எ - று.)

(க - து.) மூல மந்த்ரம் - துவயம் - சரமசுலோகம் ஆகிய இவைகளின் பொருள்களை நன்றாய் அறிந்துகொண்டால் பிறவித் துயர் ஒழியுமென்க. 4.

நேரிசை வெண்பா.

உயிரு முடலு முடலாக வோங்கித்
தயிர் வெண்ணெய் தாரணியோ டுண்டான் — பயிரில்
களைபோ லசுரரைக் காய்ந்தான்றன் கையில்
வளைபோலெம் மாசிரியர் வாக்கு. (௫)

(இ - ள்.) உயிரும் - ஜீவராசிகளும், உடலும் - அவைகளின் சரீரங்களாகிய அசேதனங்களும், உடலாக - தனக்குச் சரீரமாகக்கொண்டு, ஓங்கி - வளர்ந்து, தயிர் வெண்ணெய் - (ஆயர்பாடியிலுள்ள) தயிர் வெண்ணெய்களை, தாரணியோடு - முன் உண்ட உலகத்தோடு, உண்டான் - உண்டவனும், பயிரில் - (இட்ட) பயிரில், களைபோல் - களை யெடுப்பதுபோல், அசுரரை - துஷ்டராகிய அசுரர்களை, காய்ந்தான் - அழித்தவனுமாகிய கண்ணபிரானுடைய, கையில் - திருக்கரத்தில் விளங்கும், வளைபோல் - சங்கம்போலாகும், எம் - எமது, ஆசிரியர் வாக்கு - ஆசார்யர் திருவாய்மலர்ந்த அருளிச்செயல்கள். (எ - று.)

(க - து.) நமது ஆசார்யரது அருளிச்செயல்கள் கண்ணனது திருக்கரத்தில் விளங்கும் பாஞ்சசன்னியம் போன்றது என்றார்; அது அசுரர்க்குப் பயங்கரமும் சுரர்க்குச் சந்தோஷகரமுமாவது போல, இதுவும் துஷ்டர்க்குப் பயங்கரமும் சிஷ்டர்க்குச் சுககரமுமாமென்பதற்கு.

(கு - பு.) சித்தும் அசித்தும் ஈஶ்வரனுக்குச் சரீரமாகையால் 'உயிரு முடலு முடலாக வோங்கி' என்றார். 'தயிர் வெண்ணெய் தாரணியோ டுண்டான்' என்பது 'உண்டாயுலகேழ் முன்னமே' என்பதை விளக்குகின்றது. 'அசுரரைக் காய்ந்தான்' என்பதற்குப் பொருந்த 'வளை' என்பதற்குச் சங்கம் என்று பொருள் கொள்வதே சிறந்தது. மேலும் 'வளைக்கிசைந்த கீர்த்தியார்' என்றார். 5.

கட்டளைக்கலித்துறை.

அலைபெற் றவாரமு தக்கட லக்கட லுண்டமுகில்
விலையற் றநன்மணி வெற்பு வெயினில வோங்கும்பகல்
துலையுற் றனவென்பர் தாமரை சூடுந் துழாய்முடியார்க்
கிலையொத் தனவவன் பாதம் பணிந்தவர்க் கெண்ணுதற்கே. (௬)

(இ - ள்.) தாமறை சூடும் - வேதங்களின் முடியில் வீற்றிருக்கும், துழாய் முடியான் கு - திருத்துழாயை முடியில் அணிந்த எம்பெருமானுக்கு, என்னுதற்கு - (ஒப்பாக) நினைத்துக்கொள்வதற்கு, அலை அற்ற - அலைதலில்லாத, ஆர் - நிறைந்த, அமுதம் கடல் - நீர்க்கடலும், அ கடல் - அக்கடலினது நீரை, உண்ட - குடித்த, முகில் - மேகமும், விலை அற்ற - விலைமதிக்கவொண்ணாத, நல்மணி வெற்பு - நல்ல நீலரந்ந பருவதமும், வெயில் - வெயிலாலும், நிலவு - நிலவாலும், ஓங்கு பகல் - ஓங்கியுள்ள தினமும், துலை - ஒப்புமையை, உற்ற என்பர் - சிறிது பெற்றனவென்று சொல்வர், (ஆயினும்) அவன் பாதம் பணிந்தவர்க்கு - அவனது திருவடியைப்பற்றிய பாகவதர்களுக்கு, ஒத்தன இலை - சமமானவை யொன்றுமே இல்லையாம். (எ - று.)

(க - து.) எம்பெருமானுக்கு நீலமேகம் முதலியவை சிறிது ஒத்திருப்பதாகக் கூறலாகும்; பாகவதர்களை ஒத்த பொருளொன்றுமே யில்லை யென்க.

(கு - பு.) அவனை நீர் வண்ணனென்பதால் அமுதமென்பதற்கு இங்கு நீரென்று பொருள்கொண்டனம். 6.

நேரிசை வெண்பா.

உத்தி திகழு முரை மூன்றின் மும்மூன்றுஞ்
சித்த முணரத் தெளிவித்தார் - முத்திதரு
மூல மறையின் முடிசேர் முகில்வண்ணன்
சீல மறிவார் சிலர். (எ)

(இ - ள்.) முத்தி தரும் - மோக்ஷத்தைத் தரத்தக்க, மூலம் மறையின் - நூல்களுக்குள் முதன்மைபெற்ற வேதத்தினுடைய, முடி சேர் - சிரத்திலே விளங்குகிற, முகில் வண்ணன் - மேகவர்ணனாகிய நாராயணனது, சீலம் அறிவார் சிலர் - ஸ்வபாவத்தை உள்ளபடி அறிந்த சில பெரியோர், உத்தி திகழும் - சப்தங்களால் விளங்குகின்ற, உரை மூன்றின் - வேதத்திலே விளங்குகிற ரஹஸ்யத்ரயத்திலுள்ள, மும்மூன்றும் - தனித்தனி மூன்று வாக்கியங்களின் பொருள்களையும், சித்தம் உணர - மனத்தில் நன்றாய் விளங்கும்படி, தெளிவித்தார் - அறிவித்தார்கள். (எ - று.)

(க - து.) வேதத்தில் முக்கியமாய் விளங்கும் திருமந்திரம் முதலான மூன்றிலும் உள்ள மும்மூன்று வாக்கியங்களையும் ஆசார்யர்கள் நன்றாய் விளக்கியருளினார்கள் என்பதாம்.

(கு - பு.) திருமந்திரம் முதலான ரஹஸ்யம் மூன்றில் ஒவ்வொன்றிலும் மும்மூன்று வாக்கியங்களிருப்பதைக் கண்டுகொள்க. உத்தி - சப்தம்; அதனாலாய வேதத்திற்குக் கருவியாகுபெயர். உரை - அதன்பொருளுக்குச் சொல்லாகுபெயர். 7.

எண்சீரடியாசிரிய விருத்தம்.

எனக்குரிய னெனதுபர மென்பே றென்னு
திவையனைத்து மிறையில்லா விறைக்க டைத்தோம்
தனக்கிணையொன் றில்லாத திருமால் பாதஞ்
சாதனமும் பயனுமெனச் சலங்க டீர்ந்தோம்
உனக்கிதமென் றொருபாக னுரைத்த துற்றோ
முத்தமனு மவனுதவி யெல்லாங் கண்டோம்
இனிக்கவரு மவைகவர விகந்தோஞ் சோக
மிமையவரோ டொன்றினிநா மிருக்குநாளே. (அ)

(இ - ள்.) எனக்கு உரியன் - நான் எனக்கே சொந்தமானவன், எனது பரம் - எனது ரக்ஷணமும் எனது கடமையே, என் பேறு - பயனும் என்னுடையதே, என்னுது - என்று நினையாமல், இவை அனைத்தும் - இவை யெல்லாவற்றையும், இறை இல்லா - தனக்கு மேலொரு தெய்வமு மில்லாத, இறைக்கு - ஸர்வேஶ்வரனாகிய மாதவனுக்கே, அடைத்தோம் - சேர்த்துவிட்டோம், தனக்கு இணை - தன்னையொத்தது, ஒன்று இல்லாத - ஒன்றுமில்லாத, திருமால் பாதம் - திருநாராயணனது திருவடியே, சாதனமும் பயனும் என - உபாயமும் பலனுமென்று நினைத்து, சலங்கள் தீர்த்தோம் - விரோதங்களைப் போக்கடித்தோம், உனக்கு இதம் என்று - இதுவே உனக்கு நன்மை யென்று, ஒரு - ஒப்பற்ற, பாகன் - பார்த்தசாரதியாகிய எம்பெருமான், உரைத்தது - சொன்னதையே, உற்றோம் - உறுதியாகக்கொண்டோம், உத்தமனும் - புருஷோத்தமனாகிய, அவன் உதவி எல்லாம் - அவன் கிருபை செய்துள்ள உபகாரம் அனைத்தையும், கண்டோம் - தெரிந்துகொண்டோம், இனி - இனிமேல், கவரும் அவை - அகற்றிவைக்கத்தக்கவைகளை, கவர - அடைய, (ஸர்வேசுவரனே அகற்றிவைப்பானாகையாலே) சோகம் இகந்தோம் - சோகத்தைவிட்டுவிட்டோம், இனி - இனிமேல், இமையவரோடு - நித்ய சூரிகளோடு, ஒன்றி - சேர்ந்து, நாம் இருக்கும் நாளே - நாம் நிலையாய் வாழும் நாளேயாம். (எ - று.)

(க - து.) கீதையின் அர்த்தத்தைத் தெரிந்து அகங்கார மமகாரங்களை விட்டுச் சமுசார துக்கத்தைத் துறந்து எம்பெருமான் திருவடியே கதியென்று நம்பி மோக்ஷத்தை எதிர் பார்க்கிறோம் என்க.

(கு - பு.) பாகன் உரைத்தது சரமசுலோகத்தின் பொருள். நீக்கவேண்டியவை பாபம் அபராதம் முதலியவை. ‘[illegible]’ என்றாரிறே. கவருமவை - மோக்ஷத்தில் அடையும் ஆனந்தங்கள். என்றும் கவர - கிடைக்கையாலே யென்றும் இங்கே கூறலுமொக்கும். ஒன்றியினி என்பது ஒன்றினி யென்று இடைக்குறை. ஒன்று - ஒன்றாக என்று கூறினுமாம். 8.

நேரிசை வெண்பா.

தத்துவங்க ளெல்லாந் தகவா லறிவித்து
முத்திவழி தந்தார் மொய்கழலே—அத்திவத்தில்
ஆரமுத மாறு மிருநிலத்தி லென்றுரைத்தார்
தாரமுத லோதுவித்தார் தாம். (௯)

(இ - ள்.) தாரம் முதல் - பிரணவம் முதலான ரஹஸ்யங்களை, ஓதுவித்தார் - தெரிவித்தவர்கள், தத்துவங்கள் எல்லாம் - சித்து அசித்து ஈசுவரன் என்றும் மூன்று தத்துவங்களையும், தகவால் - கிருபையோடு, அறிவித்து - நமக்குத் தெரிவித்து, முத்திவழி தந்தார் - மோக்ஷ மார்க்கத்தை விளக்கி யருளிச்செய்த எம்பெருமானுடைய, மொய்கழலே - நல்ல பாதங்களை, இரு நிலத்தில் - இப் பெரிய பூமியில், ஆறு ஆம் - உபாயமாகும், அத்திவத்தில் - பரமபதம் அடைகையில், ஆர் - நிறைந்த, அமுதம் ஆம் - உபேயமாம் என்று, உரைத்தார் - உபதேசித்தார்கள் (எ - று) தாம் - அசைநிலை.

(க - து.) நமது ஆசாரியர்கள் நமக்குப் பராவர ரூபங்களான தத்துவங்களை உபதேசித்துச் சமுசாரிகள் முத்தியடையும் மார்க்கத்தைச் சரமசுலோகத்தால் வெளியிட்ட எம்பெருமானது திருவடியே நமக்கு உபாயமும் ப்ராப்யமு (போக்யமு) மென்று உபதேசித்தார்களென்க.

(கு - பு.) மோக்ஷம்போகும் தினமே ஆத்மாவுக்குச் சுபகரமான தினமாகையால் அப்பெருமை தோன்ற 'அத்திவம்' என்றார். வடமொழியிலும் அகரச் சுட்டு பெருமையைக் குறிப்பதுண்டு.

கட்டளைக்கலித்துறை.

திருநா ரணனெனுந் தெய்வமுஞ் சித்தும சித்துமென்று
பெருநான் மறைமுடி பேசிய தத்துவ மூன்றிவைகேட்
டொருநா ளுணர்ந்தவ ருய்யும் வகையன் றியொன்றுகவார்
இருநா லெழுத்தி னிதயங் களோதிய வெண்குணரே. (௧௦)

(இ - ள்.) திருநாரணன் எனும் - ஸ்ரீமந்நாராயணன் என்கிற, தெய்வமும் - பரம்பொருளும், சித்தும் அசித்தும் - சிதசித்துக்களும், என்று ——, பெருநான் மறைமுடி - பெருமைபொருந்திய நான்கு வேதங்களின் சிரத்திலே, பேசிய - சொல்லிய, தத்துவம் மூன்று இவை - மூன்று தத்துவங்களையும், கேட்டு - பெரியோரிடம் கேட்டு, ஒருநாள் உணர்ந்தவர் - ஒரு வேளை மநநம் செய்தவர்கள், இரு நால் எழுத்தின் - திருவஷ்டாக்ஷர மந்திரத்தினுடைய, இதயங்கள் - கருத்துக்களை, ஓதிய - ஆசார்யரிடம் கேட்டறிந்த, எண்குணர் - எட்டுக்குணங்களும் பெற்றவராய், உய்யும் வகை அன்றி-

தமது ஆத்மா கடைத்தேறும் வழியைத் தவிர, ஒன்று - வேறொன்றையும், உகவார் - விரும்பார். (எ - று.)

(க - து.) வேதாந்தத்தில் விளங்கும் தத்துவத்ரயத்தை யொருதரம் கேட்டவர்கள் மூலமந்திரத்தின் கருத்தை அறிந்து அதிற்சொன்ன பல நிஷ்டைகளைப் பெற்று, அதனால் உஜ்ஜீவிக்கும் மார்க்கத்தையே விரும்புவார்கள் என்பதாம்.

(கு - பு.) எண்குணங்களாவன - தயை, பொறுமை, பொறாமையின்மை, அடக்கம், ஆசையின்மை, சுத்தி, ஆயாஸமின்மை, மங்களம் என்பன. 10.

எண்சீரடியாசிரிய விருத்தம்.

காரணமா யுயிராகி யனைத்துங் காக்குங்
கருணைமுகில் கமலையுட னிலங்கு மாறும்
நாரணனார் வடிவான வுயிர்க ளெல்லாம்
நமவென்று நல்லடிமைக் கேற்குமாறும்
தாரணிநீர் முதலான மாயை காலந்
தனிவானென் றிவையுருவாந் தன்மைதானும்
கூரணிசீர் மதியுடைய குருக்கள்காட்டக்
குறிப்புடனுங் கண்டவகை கூறினோமே. (௧௧)

(இ - ள்.) காரணமாய் - பிரபஞ்சத்துக்கு முதற்காரணமாய், உயிராகி - அனைத்துக்கும் அந்தர்யாமியாய், அனைத்தும் காக்கும் - எல்லாவற்றையும் ரக்ஷிக்கின்ற, கருணை முகில் - கருணையாகிற மழை பொழிகின்ற மேகத்தையொத்த கண்ணபிரான், கமலையுடன் - திருமகளுடன், இலங்கும் ஆறும் - எப்போதும் பிரியாமல் விளங்குகின்ற விதமும், நாரணனார் வடிவு ஆன - ஸ்ரீமந்நாராயணனுக்குச் சரீரமாயுள்ள, உயிர்கள் எல்லாம் - உயிர்களனைத்தும், நம வென்று - "நமஃ" என்று அநுஸந்தித்துக்கொண்டு, நல் அடிமைக்கு - நல்ல கைங்கர்யத்துக்கு, ஏற்கும் ஆறும் - ஆளாகும் விதமும், தாரணி நீர் முதலான - பூமி ஜலம் முதலான தத்துவரூபமாயுள்ள, மாயை - பிரகிருதி, காலம் ——, தனி வான் - ஒப்பற்ற பரமாகாசம், என்றிவை - என்று சொல்லப்பட்ட எல்லா தத்துவங்களும், உருவாம் தன்மை தானும் - அந்தப் பரமாத்மாவின் சரீரஸ்வமென்னும் விதமும், கூர் அணி - கூர்மை பொருந்திய, சீர் - சிறந்த, மதி உடைய - புத்தியுடைய, குருக்கள் காட்ட - ஆசார்யர்கள் தெரிவிக்க, நாம் ——, குறிப்புடன் - நன்றாக, கண்டவகை - கண்டபடியே, கூறினோம் - பின்னோர்கள் அறிந்து உஜ்ஜீவிக்குமாறு கிரந்தரூபமாய்ச் சொன்னோம். (எ - று.)

(க - து.) ஸ்ரீமந்நாராயணனே அனைத்துக்குங் காரணபூதனென்றும் காப்பவனென்றும் ஆசார்யர் தெரிவித்ததால் அவற்றையறிந்து சொன்னோம் என்கிறார்.

(கு - பு.) முகில் - ஆகுபெயர். நாம் வென்று என்றுபாடமாயின், அகங்கார மமகாரங்களைச் செயித்து என்பது பொருள். தனித்தன்மைப் பன்மை. 11.

“[illegible]” என்றது.

அடிதோறும் ஐந்தாஞ்சீர் முதலெழுத்துக் குறிலாயிருத்தலால் நமவென்றபாடம் சிறந்ததென்க. நாம் வென்று-அஹங்கார மமகாரங்களை ஜயித்தென்று பொருளெனப் பாடமாம்.

நேரிசை வெண்பா.

அப்படி நின்ற வமலன் படியெல்லா
மிப்படியெம் முள்ளத் தெழுதினார்—எப்படியும்
ஏரார் சுருதி யொளியா லிருணீக்குந்
தாரா பதியனையார் தாம். (கஉ)

(இ - ள்.) எப்படியும் - எல்லா விதத்தாலும், ஏர் ஆர் - அழகு பொருந்திய, சுருதி ஒளியால் - வேதங்களின் பிரகாசத்தால், இருள் நீக்கும் - அஞ்ஞானமாகிய இருட்டைப் போக்குகின்ற, தாராபதி - சந்திரனை, அனையார் - ஒத்த நம்மாசிரியர்கள், அப்படி நின்ற - அவ்விதம் விளங்காநின்ற, அமலன் - நிர்மலனான பகவானது, படி எல்லாம் - குணங்களை யெல்லாம், இப்படி - இந்தப் பிரகாரம், எம் உள்ளத்து - எமது மனத்தில், எழுதினார் - பதியப் பண்ணினார்கள். (எ - று.)

(க - து.) வேதங்களால் அஞ்ஞானத்தைப் போக்கும் பெரியோர், அப்படிப்பட்ட ஈஶ்வரனது குணங்களை யெல்லாம் எமக்கு விளங்கச் செய்தார்கள் என்பதாம்.

(கு - பு.) தாராபதி - நக்ஷத்ர நாயகன். அவன் வெளியிருளைப் போக்குவதுபோல், ஆசார்யர்கள் வேதஞானோபதேசத்தால் நமது உள்ளிருளைப் போக்குகின்றார்களென்பதாம். இருள் அதுபோன்ற அஞ்ஞானத்துக்கு ஆகுபெயர். 12.

1916-ம் வருஷம் டிஸம்பர் மாஸத்தில் சேர்ந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸதஸ்ஸின் சாயா படம் (Group Photo) விலைக்கு அகப்படும். காபி ஒன்றுக்கு ரூபாய் 2. படத்தை அபேக்ஷிக்கிறவர்கள் மயிலாப்பூர் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்ஶிகளுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

கடிதங்கள்.

தத்வாவபோதநம்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

ஸ்ரீ வேதாந்த தீபிகையில் இரண்டு மாஸத்திற்கு முன்னதாகச் சில ஆக்ஷேபங்கள் வெளியிடப்பட்டிருந்தன. அவைகளுக்குத் தக்கதொரு ஸமாதானம் எழுத யத்னிக்கிறேன்.

ஸ்ரீ. உஸய ராயம்பேட்டை க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமி நமது பாஷ்யகாரரை ஶேஷாவதாரமென்று சொல்லியிருப்பதற்கு ப்ராசீந ப்ரமாணங்கள் இல்லை யென்றும்; விஸ்வகுணாதர்சகாரர்தான் முதல் முதலில் ஶேஷாவதாரம் என்று சொன்னவர் என்றும், பிறகு இதை அநுஸரித்துச் சில அர்வாசீநர்களும் இவ்விதம் எழுதிவிட்டார்கள் என்றும் ஸாமாஜிகர் எழுதுகிறார்.

‘[illegible] ।[illegible] ॥’ என்னும் யாதவகிரி [illegible] மாஹாத்ம்ய வசநத்தை ஶேஷாவதாரத்வே ப்ரமாணமாக அத்யாவதி ஸம்ப்ரதாய மஹத்தரர்கள் அங்கீகரித்து வருகிறார்கள்.

திருவரங்கத்தமுதனார் ஸ்ரீ பாஷ்யகாரரை பஞ்சாயுதாவதார மென்று சொல்லியிருந்தாலும், ஶேஷாவதாரத்வத்தை நிஷேதிக்காமையாலே புராண வசந ப்ராப்தமான ஶேஷாவதாரத்வத்தை விகல்பமாகவோ ஸமுச்சயமாகவோ ஸ்வீகரிப்பதில் என்ன விரோதம்? திருவரங்கத்தமுதனார் ஸமகாலிகராகையாலும், அவருடைய நூற்றந்தாதி ஸாக்ஷாத் பாஷ்யகாரராலேயே ஸ்வீகரிக்கப்பட்டிருப்பதாலும், அதில் சொல்லாததை மற்றவர் அங்கீகரிக்கக்கூடாதென்றால், இந்த ப்ரஶ்நம், ‘விஷ்வக்ஸேநாவதாரம்’ என்றும், ‘பகவதவதாரம்’ என்றும் அருளிச்செய்யும் நம்தேசிகன் பக்கலிலும் ப்ர

ஸங்கியாதோ? ஸ்ரீ தேசிகன், ‘உத்ப்ரேக்ஷ்யதே புயஜந்மநா ராமாவதிஷ்ட்டோ வர்ணாஶ்ரம ஸூத்ரநிஷ்ட யதார்த்தநேத்’ என்று கண்டோக்தியால் அநுக்ரஹித்திருக்க, ‘வேங்கடேஶாவதாரோயம் தத்கண்டாம்ஶோயவா பவேத் । யதீந்த்ராம்ஶோயவேத்யேவம் விதர்க்யாயாஸ்து தேஜஸே’ என்று ஸ்ரீ குமாரதேசிகன் அநுக்ரஹிக்கக்கூடுமோ? ‘ஸ்கவே வாக்கிஸ்ஸம் தத்தத்ஸம்ஶப்ரயாநாந்வாஹிப்ரயேண’ எனகிற அபியுக்தர்களின் ஸமாதாநம் இங்கும் ப்ராப்தமன்றோ?

ஸ்ரீ பாஷ்யகாரருடைய திருவடிகளை ஆஸ்ரயித்தவரும், 43 - ஆவது ஸிம்ஹாஸநாதிபதியுமான ஸ்ரீ வடுகநம்பி அருளிச்செய்த யதிராஜ வைபவத்தில் ‘ஸ ஏஷ ராஜ யஶோமய விம்ஶோவ்யோ வேதாந்த ஸம்ப்ரதாய ஶோப்யுதய புண்டரீகே । ஶாஸ்த்ரார்த்தஸ்ய கேஶவ யஜ்வநோ வ்ருத்த ஹஸ்தே நந்தமராஜஸூநோ । வேதாந்தவித்யாநாம் ஸம்ப்ரதாய பாஷ்யகார ஹ்ருதயாவ தாரிதோ । ஶேஷாம்ஶகஃ கேஶவ யஜ்வநோபூத் தேஜோநிதிஃ க்ஷ்மாஸுரவர்யவம்ஶே’ என்றும், ஸ்ரீவடுகநம்பியின் ஸ்ரீ ராமாநுஜாஷ்டோத்தர ஶதநாம ஸ்தோத்ரத்தில் ‘பௌத்தத்வாந்த ஸஹஸ்ராம்ஶுஃ ஶேஷாம்ஶோ ப்ரதிதஸ்ருதிஃ’ என்றும் ஶேஷாம்ஶத்வம் சொல்லப்பட்டிருக்கிறது. ஏதத்வம்ஶ்யரான ரங்கநாதாசார்யர் செய்த ‘பஜ யதிராஜ ஸ்தோத்ரத்திலும்,’ ‘பஜேபாஷ்யகார ஸ்துதி’ யிலும் இந்த விஷயம் வ்யக்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளை ஆஸ்ரயித்த ஸ்ரீ ப்ருஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமியால் செய்யப்பட்ட ‘திவ்யஸூரி ஸ்தோத்ரத்திலும் ‘வேதாந்தத்வயஸம்ப்ரதாய ஸம்ஹவஸ்தோ பூயோ பூதபூர்வ நாதம் । தஸ்மாத்ஶேஷ ஶேஷ தத்புரம் ராமாநுஜம் பஜே’ என்றும் பத்யத்தைக் காண்கிறோம்.

மூவ்வாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவத்தில் எம்பெருமானார் வைபவப்ரகரணத்தில் ‘எம்பெருமான் வேதாந்த ஸூத்ரத்திற்கு ஸ்ரீபாஷ்ய முகத்தாலே ஸமீசீநார்த்தங்களைத் தெளிவிக்கைக்காக, திருவநந்தாழ்வானை ஸ்ரீ பெரும்பூதூரில் ஆஸூரிகுல திலகரான கேசவஸோமயாஜிகளுக்கு, கலியுகத்தில் 4119 - ஆவதான பிங்களஸூ சித்திரைமீ திருவாதிரை நக்ஷத்ரத்

தில் குமாராய் அவதரிப்பித்தான்’ என்று எழுதப்பட்டிருக்கிறது. ‘வயஃ ஜ்ஞாநமபதி ஸாவித்ர்யோம ப்ரத்யாவாஸஹ உவஹக்ஷுவத் வத்ஸா - யத்ராவேள ஸஹஸ்ரயோ பாரேவாஸம் வேங்கடேஶாரயதி கேஶவாஹிபாநஃ’ இத்யாதி ஶ்லோகங்களை திவ்யஸூரி சரிதகாவ்யத்தில் கருடவாஹந பண்டிதர் எழுதுகிறார். ப்ரபந்நாம்ருத க்ரந்தத்திலும் ‘ஜந்மக்ஷணமபிராஜந்தம் பாதேப்ராஸ ஹஸிதோதா । ஶேஷராஜ ஶேஷாவ்ராஜ ஸமஸ்த ஜநரக்ஷணே । ஶுவதீபஸ்ய வாஸுமஹ்யோஶே ஜநாநுரக்ஷிதா ஶேஷாத்ரி । தேஶாநாஜ்ஞா விதேதா நஶேஷா ஸஃபீணா ஜநரக்ஷணே । ஶேஷராஜஃ ப்ரஸஹாதாஸூத்ரம் வகேஷநஸ்ய ।’ என்று ஆரம்பித்து, ‘ஶேஷாஸம்ஶீ ஶேஷா தேஜாஃ ஶேஷாராஜே ஶேஷாஶ்ரஃ’ என்று சொல்லப்பட்டிருக்கிறது. ‘ஶேஷாயாமா ஆதிகவேயா ஶேஷநா ஶீஶ்ராஸ்கேஷ । ஸ்ரீராமாநுஜரூபேண ஸவிஷ்யதி ஸகாம்ஶோஶே’ என்று ப்ரஹ்ம புராணத்தில் ப்ருஹ்ம பகவத் ஸம்வாதத்தி லிருக்கிறதாகத் தெரிய வருகிறது. ‘ஶேஷாம்ஶம்பூராஸம் ஸவ விஶ்ஶோ தேஶஸ்ய ஶ்ரீஸாவ்யநாதிக்ஷம் । தாஜ்ஞீர ஶ்ஶேஷமேஶே ஶ்ரீமத்ராமாநுஜம் ஸதே’ என்று ஸ்ரீ பாஷ்யகார ஶிஷ்யரான ஸ்ரீ கோவிந்தபட்டாரகர் அருளிச்செய்ததாய் மஹான்கள் அநுஸந்தித்து வருகிறார்கள். யதிராஜ கத்யத்தில் ஸூநரபுரம் ஸ்வாமியும், ‘நரவேஷாய ஶேஷாய’, ‘ஶேஷாஷாதிஷூஷ்ராய ஶேஷாவதாராய’ என்று சொல்லுகிறார். தத்வஸ்திதி இப்படியிருக்க, “வேங்கடாத்வரியன்றோ முதலில் ‘ராமாநுஜாயமுநயே நரவேஷஸாஜ ஶேஷாய’ என்று வ்யவஹரிக்கிறார் என்று ஸாமாஜிகர் எழுதியது தவறுதலென்றே நாம் நினைக்கிறோம்.

பிறகு, ஷை ஸாமாஜிகர், ‘ஶேஷ ஸகலாஶேஷோவர்வா அநந்தஸூர க்ஷாரஶாஶா ஸாரஸ்வ பூமிகையில் அடியேனார் [திருவஹீந்த்ரபுரம்] பகவத்விஷய ஸ்வாமியாலும் இவ்விஷயம் சர்ச்சிக்கப்பட்டிருக்கிறது]’ என்று எழுதுகிறார். அந்தப் பூமிகையில் அடியேனுக்குத் தெரிந்தவரையில் இந்த விஷயத்தைப்பற்றிய சர்ச்சையொன்றும் காணப்படவில்லை.

மேலும் நமது ஸாமாஜிகர், பஞ்சாயுத விஷ்வக்ஸேந லக்ஷ்மீபத்யவதாரத்வத்தை நமது தேசிகன் ஒருவரே அங்கீகரித்திருக்கையில் ‘ஸுதர்ஶநாவதாரஃ, வஜ்ராயுதாவதார இதிகேசித், ஶங்கீவதார

𑌕𑍍𑌤𑌾𑌰𑍌 𑌇𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌯𑍋𑌃' என்று புருஷத்வயம் ப்ரஸ்துத மானாற்போல் வ்யஸ்தமாய் '𑌏𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍', '𑌦𑍍𑌵𑌯𑍋𑌃' என்று இரண்டு சப்தப்ரயோக ப்ரயோஜநம் யாதோ? என்று கேள்வி கேட்டிருக்கிறார்.

இந்த விஷயத்தைப்பற்றி ராயம்பேட்டை ஸ்வாமியை நேரில் நான் கேட்டதற்கு அந்த ஸ்வாமி சொன்னதாவது:—"ஸ்ரீதேசிகன் யதிராஜ ஸப்ததியில் மூன்று விதமாகவும் அநுக்ரஹித்திருந்தாலும் '[illegible]' என்கிற ந்யாயப்படி எந்த பக்ஷத்தில் ஸ்ரீமதாசார்யனுடைய ஆந்தராபிநிவேஸமிருக்கக்கூடுமென்று பர்யாலோசனை செய்யவேண்டியது ந்யாய்யம். ஸமுச்சயபக்ஷத்திலும் எந்த அம்சம் அதிகமென்று திருவுள்ளம் என்று பராமர்சிக்கத் தடையில்லை. ஸ்ரீதேசிகனுக்குப் பூர்வாசார்ய ஸூக்தி [illegible] பஞ்சாயுதாவதாரத்வ பக்ஷத்தில் தான் நோக்கு என்று சிலர் சொல்லுகிறார்கள். நம்மாழ்வார் ஸேநாம்ஸராகையாலும், நம்மாழ்வாருக்கு ஸகல தத்வார்த்தத்தையும் திவ்ய தம்பதி நியமிதரான விஷ்வக்ஸேநர் உபதேசித்து, நமது ஸித்தாந்தத்திற்கு உபகாரி யாகையாலும், ஸ்ரீ பாஷ்யகாரர் அந்த விஷ்வக்ஸேநாவதாரமெனும் பக்ஷத்தில் தான் ஸ்ரீ தேசிகனுக்கு ஆந்தராபிஸந்தியென்று வேறு சிலர் அபிப்ராயப்படுகிறார்கள். ஆனால் '𑌏𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌤𑌾𑌰𑍌' என்கிற கல்பம் தான் ஸ்ரீமதாசார்யனுக்குப் பரமாபிமதம் என்று நான் நினைக்கிறேன். ஏனெனில், '[illegible]', '[illegible]' என்னும் இரண்டு ஸ்லோகங்களைப்போலன்றிக்கே உபயாநுமத தர்மமாத்ர ஸித்தமான உத்கட ஸம்பாவனைக்கோ, கேவல ஸம்பாவனைக்கோ இடமில்லாமல், '[illegible] । [illegible] ॥' என்றும் ஸ்ம்ருதிப்ரமாணத்தைப்பற்றி '[illegible]' என்று ஸம்பாவநாதி விலக்ஷணமாய் ப்ரத்யக்ஷ த்ருஷ்டாகார ஸாமக்ரியாதிகளைக்கொண்டே, '[illegible]' என்று அநுக்ரஹித்திருப்பதாலும், ஸங்கல்ப ஸூர்யோதய ஸம்வாதத்தாலும் * எம்பெருமான் எம்பெருமானார், என்னும் அஸாதாரண ஸமாக்யா

---

* 𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌸𑍂𑌰𑍍𑌯𑍋𑌦𑌯𑌂 இரண்டாமங்கத்தைப் பார்க்க.

வைபவத்தாலும் ஸ்ரீ தேசிகன் ஸ்வோபகார ஸம்பந்தாதிகளை விமர்ஷ்ய இந்த பக்ஷத்தில் மாத்ரம் '[illegible]' என்று நிரூபித்திருக்கிறபடியாலும் இந்த அந்திமபக்ஷம் தான் ஸ்ரீ தேசிகனுக்கு ஆதராஸ்பதமென்று ஊஹிக்கக் காரணமிருக்கிறது.

இதில் ப்ரதமகல்பத்வயம் ஸ்ரீ தேசிகாபிமதமென்று வாதிக்கும் இரண்டு பக்ஷக்காரர்களும் எனக்கு அபிமதர்களாகையாலே அவர்களை ஏகராசிப் படுத்தி '𑌇𑌤𑍍𑌯𑍇𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍' என்று எழுதிவிட்டு, ஸ்வாபிமத பக்ஷத்தை '𑌏𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌤𑌾𑌰𑍌 𑌇𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌯𑍋𑌃' என்று சொல்லியிருக்கிறேன். அஸ்மச்சப்த ஸமாபிப்ராயகமாய் '𑌦𑍍𑌵𑌯𑍋𑌃' ஶப்தப்ரயோகம் பண்ணுவது சங்கராதி ஸாஸ்த்ரக்ரந்த ஸம்ப்ரதாயம் அறிந்த வித்யாவ்ருத்த ஸாமாஜிகர்களுக்கு மாத்திரம் ஸ்பஷ்டம். [illegible] தத்கல்பாநுஸாரிகளை '𑌏𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍' பதத்தாலே வ்யவஹரிப்பதில் யாதொரு ஸாஸ்த்ரீய ஸம்ப்ரதாய விரோதமும் இருக்க வழியில்லை.........."

பிறகு ஸாமாஜிகர் கத்யத்ரய பூமிகையிலுள்ள '[illegible]' என்கிற விஷயத்தை எடுத்துக்கொண்டு, இதுவும் பக்ஷபாதமின்றிப் பழக்கப்பட்டவர்கட்கு முதாக்ரஹம் என்று தோன்றக்கூடுமென்று எழுதுகிறார். இதோடு நிற்காமல், "ஸத்ருஶாநுமாநம் பட்டபாண ஸ்வாமியால் ஸாங்கரக்ரந்த பரிசீலநத்தால் செய்யப்பட்டதோ, அன்றிக்கே அத்வைத பாஷ்யகார சரித்ரத்தின் பராமர்சத்தால் அவருக்கு உதித்ததோ?" என்று எழுதி, தமக்குள்ள க்ராம்ய பரிஹாஸோக்தி ஸாமர்த்யத்தைக் காட்டுகிறார்.

கத்யத்ரய பூமிகையின் 4-வது பக்கத்தில் '[illegible]' என்று ஆரம்பித்திருக்கும் பாரா (Para) வானது ஐந்தாவது பக்கத்தில் '[illegible]' என்று முடிவடைகிறது.

மூன்று பாஷ்யகாரர்களுக்கும் ஐகமத்யத்தை ஸ்தாபிப்பதற்காக ப்ரயத்நப்படும் சில பாஸ்சாத்ய வித்யாபரிசிஷ்டிதர்கள், மூன்று பாஷ்யகாரர்களுக்கும் அத்வைதத்தில் தான் தாத்பர்யம் என்றும், த்வைதத்தில் தான் தாத்பர்யமென்றும், ஆங்கில பாஷையில் சில க்ரந்தங்கள் எழுதியிருப்பது,

உலகநடவடிக்கை தெரிந்த யாவரும் அறிந்த விஷயம். இதைத்தான் ராயம்பேட்டை ஸ்வாமி '[illegible]' என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்த விஷயம் அந்த ஸ்வாமிக்கு அபிமதமல்லவென்று, '[illegible]' என்கிற பதத்தாலேயே அறிந்துகொள்ளக்கூடியது. மேலும் அடுத்த பாராவில், "[illegible]" என்று எழுதியிருப்பதையும், ஷ பூமிகையின் இரண்டாவது பக்கத்தில் '[illegible]' என்று எழுதியிருப்பதையும் ஒரு தடவை பார்த்தால் எவனுக்கும் '[illegible]' என்கிற பாராவிலுள்ள விஷயம் பூமிகா கர்த்தாவுக்கு ஸ்வாபிமதமல்லவென்று ஸ்பஷ்டமாய்த் தோன்றக்கூடும்.

* * * * * *

இனி மற்றொரு ஸாமாஜிகரைப் பராமர்ஶிப்போம். இவர் ந்யாஸதஶகத்தில் 'ஸ்வாமீ ஸ்வஶேஷம்' என்றும் 'ஶ்ரீமந்நியத......அசீகர: ஸ்வயம்' என்றுமுள்ள பாடமானது ப்ராசீநாநுஸந்தாந க்ரமாகதமென்றும் வ்யாக்யாதாவினுல் ஆத்ருதமென்றும் பூர்வோத்தர பத்யரீத்யநுகுணமென்றும் எழுதிவிட்டு ராயம்பேட்டை ஸ்வாமி இதைமாற்றி 'ஸ்வாமீஸ்வஶேஷம்' என்றும், 'ஶ்ரீமந்நியத.......அசீகரஸ்ஸ்வயம்' என்றும் பாடத்தைப் போட்டுவிட்டதாகக் குற்றஞ்சாட்டுகிறார்.

ராயம்பேட்டை ஸ்வாமியால் பதிப்பிக்கப்பெற்றுள்ள ஸ்தோத்ரஜால புஸ்தகத்தில் 'ஸ்வாமீ', 'ந்யஸ்யதி', 'ஶ்ரீமந்' 'அசீகர:' என்ற பாடத்தையும் புட் - நோட்டில் (Foot Note) காண்பித்திருப்பதை ஸாமாஜிகர் பார்த்திருக்கவேணும். இந்த விஷயத்தைப்பற்றியும் நேரில் நான் கேட்டதற்கு ராயம்பேட்டை ஸ்வாமி சொல்லுகிறதாவது:—

"நான் பரிஶோதநார்த்தம் வரவழைத்திருந்த ப்ராசீந தாலபத்ர கோஶங்களில் 'ஸ்வாமீ......ந்யஸ்யதி', 'ஶ்ரீமந்......அசீகரஸ்' என்னும் பாடம் அநேக புஸ்தகங்களில் காணப்பட்டது. அநேக [illegible] இப்படியே அநுஸந்திப்பதாகவும், இந்த பாடத்தையே முக்யமாக ஸ்வீகரிக்கவேணுமென்றும், காஞ்சீபுரம் ஆசார்ய ஶ்யாமதேசிக திருமலை தாதாசார்ய ஸ்வாமி எனக்கு எழுதியிருந்ததும் தவிர, அந்த ஸ்வாமி கையாலெழுதிய க்ரந்தலிபி புஸ்தகத்தில் பாடத்தைத் திருத்தி யனுப்பின பாகமும் என்னிடம் இருக்கிறது. ஸ்வாரஸ்ய பர்யாலோசனையாலும், [illegible] ஸத்தாலுமே நான் பாடங்களின் [illegible] [illegible]ங்களை நிர்ணயிப்பதே தவிர கேவல வ்யக்தி கௌரவத்தை மாத்ரம் ஈத்ருஶ விஷயங்களில் ப்ரமாணமாக ஸ்வீகரிக்கிற வழக்கமில்லை. இந்த ந்யாஸதசகத்தில் ப்ரதம ஶ்லோகம் ஶாஸ்த்ரார்த்த ஸங்க்ஷேபரூபம். த்விதீய பத்யம் [illegible]. த்ருதீய ஶ்லோகம் [illegible]. ப்ரதி தினமும் ஸத்வத்யாகம் செய்யாமல் ஸாத்விகத்யாகம் செய்துவரும் மஹான்களுக்கு, ஸாத்விகத்யாக வாக்யத்திலுள்ளது போல் இவ்விடத்திலும் ப்ரதமபுருஷ நிர்த்தேசம் ஸ்வாரஸிகமென்று தெரியவரும். இது தான் முக்ய பாடத்வேந ஆதரிக்கக் காரணம். இந்த விஷயம் கேவல ப்ரபத்தி ஶாஸ்த்ரார்த்தமாகையால் இதற்குமேல் சொல்லவோ, பத்ரிகையில் எழுதவோ எனக்கு இஷ்டமில்லை. ஜிஜ்ஞாஸுக்கள் உபஸதந பூர்வகம் ஸதாசார்யனிடத்திலிருந்து தெரிந்துகொள்வது உசிதம்.... ...."

பிறகு வைராக்ய பஞ்சகத்தின் முதல் ஶ்லோகம் 'ஶிலம் கிமநலம்' என்கிற பத்யமென்று தாமே எழுதியிருப்பதற்கு விருத்தமாய் ராயம்பேட்டை ஸ்வாமி இப்போது, க்ஷோணீகோண என்னும் ஶ்லோகத்தை முதலாவதாகப் பதிப்பித்துவிட்டதாயும் வைபவ ப்ரகாஶிகையிலும் 'ஶிலம் கிமநலம்' என்று ஆரம்பிக்கும் க்ரமத்தைத்தான் ஸ்வீகரித்திருப்பதாயும் [illegible]மான 'ஶிலம் கிமநல' என்னும் பத்யத்துக்குத் தான் ப்ராதம்யம் உசிதமென்றும் த்விதீய ஸாமாஜிகர் வாதிக்கிறார். இதில் பத்யங்களின் பௌர்வாபர்யம் மாறினதாலே ஸித்தாந்த விஷயத்தில் என்ன மஹத்தான அநர்த்தம் ஸம்பவித்து விடுமோ எனக்குத் தெரியவில்லை. இனி வஸ்துஸ்திதியை எழுதுவோம்.

வைபவப்ரகாஶிககாருக்கு வெகுகாலம் முந்தியிருந்த த்ருதீய ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமியின் மூவாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவ

க்ரந்தத்தில் "பின்பு வித்யாரண்யன் அந்த ராஜபுத்ரியைப் பிடித்த ப்ருஹ்ம ரக்ஷஸ்ஸைப் போக்கி, விஜயநகரத்தையும் உண்டாக்கி, அதில் ராஜவல்லபனாயிருக்கையிலே, தூப்புல்பிள்ளை உபாதாந வ்ருத்தி செய்கின்றாரென்று கேட்டு, உம்மை ராஜாவிடத்தில் அறிவித்து, உமக்கு ராஜாவும் பவ்யனாகும்படி செய்கின்றேன்; இப்படி ஶ்ரமப்படவேண்டியதில்லையென்று ஒரு பத்ரிகையை அனுப்பிவைக்க, பிள்ளையும் அதைப்பார்த்தருளி 'க்ஷோணீகோண'.........' என்று ஒரு ஶ்லோகத்தை அனுப்பியருள, வித்யாரண்யனும் அதை வாசித்து, பிள்ளை வைராக்யத்தைக் கொலைக்கவேணுமென்று பின்பு சிலநாள் கழித்தவாறே முன்புபோல ஒரு பத்ரிகை அனுப்பிவைக்க, பிள்ளையும் அதற்கு உத்தரமாக 'ஶிலங்கிமநலம்......' 'வஸ்து பைதாமஹம் தநம்' என்று வைராக்ய பஞ்சக ஶ்லோகங்களைச் செய்தருளி அனுப்பியருள, வித்யாரண்யனும் ஈடுபட்டு, பிள்ளை திருவடிகளிலே ப்ரவணனாயிருந்தான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் 'க்ஷோணீ கோண' என்னும் பத்யம் முக்தமென்றும் 'ஶிலங்கிமநலம்' என்பது முதல் ஐந்து ஶ்லோகங்கள் அடங்கிய க்ரந்தத்துக்குத்தான் "வைராக்ய பஞ்சக க்ரந்தம்" என்கிற வ்யபதேசமென்றும் ஸுஸ்பஷ்டமாய் தெரியவருகிறது. ராஜவால்லப்யம் ஸம்பாதித்துத் தருகிறதாக முதலில் எழுதினதற்கு, அந்த ராஜாவின் யோக்யதையையும், எழுதினவருடைய யோக்யதையையும், தமது த்ருடாபிஸந்தியையும் காட்டும் 'க்ஷோணீகோண' என்னும் பத்யம் தான் ஸரியான ப்ரத்யுத்தரமென்பதை ஸ்வாமிஜிகர் ஆலோசிக்கவேண்டும். வைபவ ப்ரகாஶிகையில் க்ரந்தங்களையே நிரூபிக்கிறபடியால் முக்தக ஶ்லோகத்தைவிட்டு, க்ரந்தாதிம ஶ்லோகத்தைக் குறிப்பிட்டிருக்கிறது யாருக்கும் விருத்தமன்று. முத்ராபகரோ ஏக காலிகங்களான ஸகல பத்யங்களையும் ஒன்றுசேர்த்து உத்பத்தி க்ரமாநுஸாரேண பௌர்வாபர்ய நிர்ணயத்துடன் வெளிப்படுத்தியது அத்யந்த ந்யாய்யம். முக்தகத்திற்கு மாத்ரம் வேறு நாமதேயம் கல்பிப்பதும் அநுசிதம். பஞ்சாஶத் ஶதகாதிகளிலும் சில பத்யங்களை அதிகமாகவும் கண்டுவருகிறோம்.

பிறகு நமது ஸ்வாமிஜிகர் ஶரணாகதி தீபிகையின் 11-வது ஶ்லோகத்தில் காட்டியிருக்கும் பாடபேதங்களை எடுத்துக்கொண்டு 'ஸாம்ஸாரிகாம்ஶுக விஹீந ஸோமதாயீ' என்கிற பாடத்தில், இந்த விஶேஷணம் ஸம்ராட்டில் அந்வயித்தால் உபமாநோபமேய பாவம் பொருந்தாதென்றும் 'ஸ்வ' என்பதற்கு விஶேஷணமானால் தூராந்வயதோஷம் வருமென்றும், பாடாந்தரங்களில் நிர்த்துஷ்ட ஸ்வரஸார்த்தம் யாதென்றும் எழுதுகிறார். ஶரணாகதி ஶாஸ்த்ரார்த்தத்தை இப்படிக் கேட்பதும் அதற்குப் பதிலெழுதுவதும் ப்ரஶஸ்த க்ருத்யமல்லவாதலால், ஸம்ஸ்க்ருத பாஷையில் ஸ்ரீமாந் வெங்கடாசார்ய ஸ்வாமி செய்திருக்கும் வ்யாக்யாநத்திலிருந்து ப்ரக்ருதோபயோகியான வாக்யங்களை எடுத்து எழுதுகிறேன். "ஸாம்ஸாரிகாம்ஶுக விஹீந ஸோமதாயீ = ஸாம்ஸாரிகாயாஃ ஶௌவசிக்யாஃ அம்ஶுகாநி வஸ்த்ராணி விஹீநாநி ஶ்ரவணாதி-ஜந்ய 'யாவத்த்ருஷ்ட ஸத்யஸ்த' இத்யுக்த ஸ்வகாரவிஶிஷ்டா ராஜஸோமஃ தஸ்ய வ்யதாநஶீலஃ [ஸ்வ]. ஸாம்ஸாரிகாம்ஶுக விஹீநேஷு ஸோமதாயீதி ஸமீசீநஃ பாடஃ. அத்ராபஸம்ஹ்ருத்ய ஸாம்ஸாரிகா ஸத்ராஸாதயஃ க்ஷுத்ருட்வ்யதாயேஷாம் விஹீநேஷு ஸோமதாயீ விஹீநேஷு ஸாமாஸ்யம் ஸோமம் க்ஷீரஸாராதி ஸோமஸ்ய வஸ்துதாஸ்ய ஶீலமிதி ஸமாஸாந்தர விஶேஷணம்" இதி. இந்த பாடத்தில் பூர்வார்த்தாநுகுண்யம் அத்யந்தமாயிருப்பது, ஆசார்யாள் பக்கலிலே முறைப்படி கேட்டுத் தெரிந்துகொள்ளத்தக்கது. ஆகையால் தான் இது முக்யபாடம். விஷய விவேசநமில்லாமல், 'ஸம்ராட்டிற்கு விஶேஷணமானால் உபமாநோபமேய பாவம் எப்படிப்பொருந்தும்?' என்று ஸ்வாமிஜிகர் எழுதியிருப்பதைப் பார்க்கும்போது 'அவஸ்கந்த ஸ்வப்ந ஸ்கந்தஸ்வ தந்த்ரம்கரோதி' என்கிற ந்யாயம் ஜ்ஞாபகத்திற்கு வருகிறது.

புரசைவாக்கம்,
22—5—17.

வி. ரங்காசார்யன், B. A.
ரங்கபவநம், வேப்பேரி.

[இது விஷயமான சர்ச்சை இதனுடன் நிற்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

எஸ். வாஸுதேவஶாஸ்.]

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஆசார்யர்களுடைய சில அநுபவங்கள்.

ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன்.

ஸ்ரீய: பதியான ஸ்ரீமந் நாராயணன், பரதுக்கத்தை ஸஹியாதவனாய் சேதநருக்கு கரண களேபர ப்ரதாநத்தையும் “𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑌮𑌿𑌵 𑌕𑌾𑌰𑍁𑌣𑌿𑌕𑍋 𑌦𑌦𑌾𑌨𑍍” என்கிறபடி ஶாஸ்த்ர ப்ரதாநத்தையும் ஹிதமாக அடுத்தடுத்துச் செய்யச் செய்தேயும், சேதநர் அதன் வழி போகாமல் நிஷித்த கர்மங்களில் ப்ரவ்ருத்தித்து ஸாம்ஸாரிக துன்பங்களைப் பெருக்கிக் கொண்டு நிற்க, ‘அவர்கள் நல்வழி வருவார்களோ!’ என்னும் ப்ரத்யாஶையினால், ‘[illegible]’ என்கிறபடி தன்னுடைய ஸ்தநந்தய ப்ரஜை ரோக பீடிதையாக தான் ஔஷத ஸேவை செய்யும் மாதாவைப் போல ஸ்ரீ பகவான் ராம க்ருஷ்ணாத்யவதாரங்களைச் செய்கிறான் என்பது நமது ஸித்தாந்த மறிந்தவர்களுக்குத் தெரிந்த விஷயம். ஸ்ரீபகவானுடைய இந்தத் திவ்யாவதார சேஷ்டிதங்களின் பெருமையை மயர்வறமதிநலம் பெற்ற ஆழ்வார் முதலியவர்கள் அறிந்து ஈடுபடுகிறார்கள். அப்படி ஈடுபடுகிறவர்களுள் அக்ரதமர் **ஸ்ரீபட்டர்**. அவருடைய அநுபவத்தில் ஒருவித அந்யாத்ருஶமான உருக்கம் தெரிகிறபடியால், அதில் ஏகதேஶத்தை இவ்விடத்தில் எடுத்தெழுதத் துணிகின்றேன். ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகன் விஷயமானது பின்வரும் ஶ்லோகம்.

𑌮𑌨𑍁𑌜𑌸𑌮𑌯𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 [illegible] 𑌸𑌹𑌯𑌾
[illegible] 𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌗𑌤𑍇 ।
𑌕𑌿𑌮𑌿𑌤𑌿 𑌜𑌲𑌧𑌿𑌂 𑌬𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌰𑌕𑍍𑌷𑍋 𑌵𑌿𑌧𑍀𑌶𑌵𑌰𑍋𑌦𑍍𑌧𑌤𑌂
𑌬𑌲𑌿𑌮𑌿𑌵 𑌕𑌾𑌕𑍌𑌘𑍋𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌂 [illegible] ।

[ஹே நாத! மநுஷ்ய ஸஜாதீயராய் ஸ்ரீ பிராட்டியுடன் நீ ஒரு ஸமயத்தில் இந்த லோகத்தில் அவதரித்தா யன்றோ? அப்பொழுது உன்னுடைய

தேவியான அந்தப் பிராட்டி அஶோக வநிகையில் அந்தர்தாந லீலை கொண்டாடினாளாகில், நீ எதற்காக உன்னுடைய மநுஷ்ய பாவனைக்கு விருத்தமாயுள்ள ஸேது பந்தந ரூபமான அதிமாநுஷ வ்யாபாரத்தைச் செய்ய வேணும்? ப்ருஹ்ம ருத்ரர்களுடைய வரத்தினால் கர்விதனான ராவணனை காகங்களுக்குப் போஜநமாம்படியா யழியச்செய்ய வேணும்? இதன் பரிஹாரத்தை நீயே அருளிச்செய்.] பரத்வ ஸ்வரூபத்தை மறைக்க வேணுமென்னும் உன்னுடைய ஸங்கல்பம், ‘[illegible] 𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌂 𑌮𑍂𑌢𑌾𑌃’ என்கிறபடி உன் திருவடிகளிலிருந்து பராங்முகர்களான மூடர்களிடத்தில் ப்ரபவிக்குமே தவிர, உன் திருவடியை அவலம்பித்து நிற்கும் பக்தர்களிடத்தில் அது ப்ரபவிக்காது என்பது தாத்பர்யம். ‘[illegible] 𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 [illegible]’ என்றாரிறே.

இம்மாதிரியான அநுபவத்தில் ஸ்ரீ பட்டருக்கு வழிகாண்பித்தவர் அவருடைய பிதாவாகிய ஸ்ரீ ஆழ்வானே. தனது அதிமாநுஷ ஸ்தவத்தில், இம்மாதிரியான பாவ கர்பித ப்ரஶ்நங்கள் அநேகங்களைக் காணலாம்.

[illegible] 𑌰𑌾𑌘𑌵𑌸𑍍𑌯
[illegible] 𑌮𑌨𑍁𑌜𑌸𑍍𑌯 [illegible] ।
𑌸𑍀𑌤𑌾𑌵𑌿𑌯𑍋𑌗𑌵𑌿𑌵𑌶𑍋 𑌨 𑌚 [illegible]
[illegible] ।

𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌯𑌕𑌂 𑌚𑌰𑌿𑌤𑌮𑌾𑌚𑌰𑌿𑌤𑌂 [illegible]
[illegible] 𑌚𑌰𑌿𑌤 [illegible] ।
[illegible] 𑌨𑌾𑌥! [illegible]
[illegible] ।

இவ்வாறு ஏக மநஸ்கர்களாய் எம்பெருமானுடைய திவ்ய சேஷ்டிதங்களை அநுபவித்த மஹான்களே நமக்கு ஶரணமாகவேணும்.

எஸ். வாஸுதேவஶாஸன்.

ஸ்ரீ:

புஸ்தக விமர்ஶம்.

ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயம்

ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகப்ரணீதமான ஸங்கல்பஸூர்யோதய மெனப்பட்ட நாடகம் தேவநாகரலிபியில் அச்சிடப்பட்டு ராஜாங்கபாஷையில் மொழிபெயர்ப்புடன் ப்ரசுரப்படுத்தப் பட்டிருக்கிறது. முதல் ஐந்தங்கங்கள் அடங்கியுள்ள புஸ்தக மொன்று நமக்குக் கிடைத்திருக்கிறது. கவிஸார்வபௌமனுடைய கவிதாசக்தியைப்பற்றி யாம் புகழப்போகின்றோ மில்லை. தார்க்கிகஸிஹ்மனும், ஸ்ரீரங்கநாத திவ்யாஜ்ஞையால் வேதாந்த தேசிகபதத்தில் நிவேசிக்கப்பட்டவருமான நம்முடைய பரமாசார்யன் ஸம்ப்ரதாயரக்ஷணத்தின் பொருட்டு அருளிச்செய்த நாடகவிசேஷத்தின் ஸ்தோத்ர ரூபமாகவும் யாம் எழுதப் போகின்ற தொன்று மில்லை. தேசிகனைப்பரமாசார்யனாக ஒப்புக்கொள்பவர்க்கு அவருடைய யாவத்க்ரந்தங்களும் மிகவும் உபாதேயங்கள்; மற்றோர்க்கும் அவைஸந்தோஷார்த்தம் சிந்திக்கத்தக்கவையே.

இதுவரையில் நாகராக்ஷரத்தில் இந்நாடகம் அச்சிடப்படாதகாரணத்தால் ஸம்ஸ்க்ருதபண்டிதர்கள் யாவரும் அதைப்படிக்க அவகாசம் அற்றிருந்தது; இன்னும் ஸம்ஸ்க்ருதம் தெரியாதவர்களும் யதோசிதம் அந்நாடகச்செயலைத்தெரிந்து கொள்ள மார்க்கமில்லா மலிருந்தது. ஆகையால், உ-வே கல்யாணபுரம் நாராயணாசார்யரும், உ-வே ஸ்ரீரங்கம், டி. ரகுநாதஸ்வாமி அய்யங்காரும், லோகோபகாரத்தை உத்தேசித்து, சரீரஸ்ரமம், புத்திக்லேசம், அர்த்தவ்யயம் முதலான ஒன்றையும் பாராட்டாமல், மேலெழுதப்பட்ட குறைகளை நிவர்த்தித்தார்கள். தேசாந்தரங்களில் இந்த ரூபமானப்ரயத்நங்கள் அர்த்தலாபத்துடன் கூடியிருக்கின்றன. இங்கோ அத்தகைய ப்ரயோசனத்தையோசிக்க இடம் இலது. ஆசார்யபக்தி யொன்றே இந்தப்ரயத்நத்துக்கு ப்ரேரகமாயிருக்கிறது. நாகராக்ஷரத்தில் அச்சிடுவதற்கு வாணிவிலாஸ முத்ராக்ஷரசாலையை அதிக்ரமித்த அச்சாபீஸ் இல்லை. புஸ்தகமும் தர்சநமாத்ரத்தால் ஸந்தோஷப்ரத மாயிருக்கின்றது.

ஸாதாரணமாய் ஒருபாஷையின் க்ரந்தங்களைப் பாஷாந்தரத்தில் மொழிபெயர்த்தால், மூலக்ரந்தத்தின் அதிசயங்கள் மொழிபெயர்ப்பில் புலப்படுவதில்லை. ஸங்கல்பஸூர்யோதயத்தின் விஷயம் வேதாந்தவிசாரம்; நாடகபாத்ரங்கள், சேதநனுடைய குண தோஷங்கள். ஆதலால் அந்நாடகத்தின் மொழிபெயர்ப்பை ஏற்றிக்கொண்ட தேசிகபக்தர் களுடைய கஷ்டம் விசேஷித்ததே. மொழிபெயர்ப்பும் நாம் பார்த்தவரையில் ஸரியாகச செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. இவ்விதஸ்ரமத்தை ஏற்றிக்கொண்டவர்கள் விஷயமாக நம்மவர்கள் செய்யக்கூடியப்ரத்யுபகாரமும் உண்டு. புஸ்தகத்தை விஸ்தாரமாகவாங்குவ தாலும், அதைச்சக்திக்கு அநுகுணமாக ஒவ்வொருவரும் வாசிப்பதாலும் மேல்குறித்த ப்ரதயுபகார மானது வெளிப் படுத்தத்தக்கது. ராஜாங்கத்தார்களும் ஸங்கல்பஸூர்யோதய நாடகத்தை இவ்வண்ணம் ப்ரசுரப்படுத்தியவர்க்கு உசிதமான த்ரவ்ய ஸஹாயம் செய்வார்களென்று நம்புகின்றோம்.

பத்ராதிபர்.

OF THE REG… MAD…

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசாரியர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 7.] பிங்கள ௵ ஆவணி ௴ [ஸஞ்சிகை 11.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம்
ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே
ரதிரஸ்து மேநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

பத்ராதிபரின் குறிப்புகள்.

ஸந்த்யா வந்தந ஸம்பந்தமான ஒரு விசாரம்.

ஸந்த்யாவந்தந மென்பது உபநீதனாய்நின்ற ஒவ்வொரு புருஷனாலும் ஒவ்வொரு திநத்திலும் நியத காலங்களில் விடாமல் அநுஷ்டிக்கவேண்டிய பகவதாராதநம். அதை விட்டவன் தனது த்விஜ ஜந்மத்தை இழந்தவன்; அசுத்தன்; அவனுக்கு வேறொரு வைதிக கர்மத்திலும் அதிகாரம் இல்லை. அவனை த்விஜனென்று பாவித்தல் ந்யாயவிருத்தம்.

* * * * * *

ஸந்த்யாவந்தநத்தினால் ஆராதிக்கப்பட்ட பரமபுருஷனைப் பற்றி இந்த ஶ்லோகம் ப்ரஸித்தமாக யாவராலும் அநுஸந்திக்கப்படுகின்றது.

“𑌧𑍍𑌯𑍇𑌯𑌸𑍍𑌸𑌦𑌾 𑌸𑌵𑌿𑌤𑍃𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑌧𑍍𑌯𑌵𑌰𑍍𑌤𑍀 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌸𑍍𑌸𑌰𑌸𑌿𑌜𑌾𑌸𑌨𑌸𑌨𑍍𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌃 । 𑌕𑍇𑌯𑍂𑌰𑌵𑌾𑌨𑍍 𑌮𑌕𑌰𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌵𑌾𑌨𑍍 𑌕𑌿𑌰𑍀𑌟𑍀 𑌹𑌾𑌰𑍀 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌵𑌪𑍁𑌰𑍍𑌧𑍃𑌤𑌶𑌙𑍍𑌖𑌚𑌕𑍍𑌰𑌃 ॥”

[ஸூர்யமண்டல மத்தியில் எழுந்தருளியிருக்கின்ற நாராயணன் பத்மாஸநஸந்நிவிஷ்டனாகவும், கேயூர மகரகுண்டல கிரீட ஹாராதி பூஷணங்களால் அலங்க்ருதனாகவும், ஸ்வர்ணமயமான திருமேனியுடன் கூடினவனாகவும், சங்கசக்ரங்களை ஹஸ்தங்களில் தரிக்கின்றவனாகவும், இடைவிடாமல் யாவராலும் த்யாநம் பண்ணத்தக்கவன்.]

மேலெடுத்த ஶ்லோகம் ஆக்நேய நாரஸிம்ஹ புராணங்களில் இருக்கின்றதாம். ஸகல புருஷார்த்தங்களையும் கொடுப்பவனாயும், ஸகல துக்கங்களையும் நிவர்த்திப்பவனாயு மிருக்கப்பட்ட ஶரண்யனுடைய ஶரணாகதியே நமக்கு உற்ற துணையென்று யாவர்க்கும் எடுத்துக் காட்டும்பொருட்டு, ஸ்ரீ மஹாபாரதத்தில் பாஞ்சாலியால் ஸ்மரிக்கப்பட்ட ஶ்லோகங்களில் ஒன்றையும் ஸந்த்யாவந்தந முடிவில் யாவரும் சொல்கின்றார்கள். அதாவது:—

“𑌶𑌙𑍍𑌖𑌚𑌕𑍍𑌰𑌗𑌦𑌾𑌪𑌾𑌣𑍇 𑌦𑍍𑌵𑌾𑌰𑌕𑌾𑌨𑌿𑌲𑌯𑌾𑌚𑍍𑌯𑍁𑌤 ।
𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌾𑌕𑍍𑌷 𑌰𑌕𑍍𑌷 𑌮𑌾𑌂 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌮𑍍 ॥”

[சங்கசக்ரகதைகளைத் திருக்கைகளில் தரிக்கின்றவனே! த்வாரகையை வாஸஸ்தாநமா யுடையவனே! அச்யுதா! கோவிந்தா! செந்தாமரைக் கண்களையுடையவனே! உனைச் சரணமடைந்த என்னை ரக்ஷிப்பாய்.] முன்னெடுத்த புராணஶ்லோக சப்தங்களை இந்த ஶ்லோகமும் எடுக்கின்றது. இன்னும் அது மூலஶ்ருதியையும் அநுவதிக்கின்றது. மூலஶ்ருதி சாந்தோக்யோபநிஷத்தில் இவ்வண்ணம் இருக்கிறது:—

“𑌯 𑌏𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇, 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌶𑍍𑌮𑌶𑍍𑌰𑍁𑌃 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌕𑍇𑌶𑌃 𑌆𑌪𑍍𑌰𑌣𑌖𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵 𑌏𑌵 𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌃 ॥ 𑌤𑌸𑍍𑌯 𑌯𑌥𑌾 𑌕𑌪𑍍𑌯𑌾𑌸𑌂 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌮𑍇𑌵𑌮𑌕𑍍𑌷𑌿𑌣𑍀 ।”

[ஸூர்ய மண்டலத்துக்குள் ஸ்வர்ணமயமான திருமேனியுடனும், ரமணீயங்களான கேஶங்களுடனும், ரமணீய ஸர்வாவயவங்களுடனும், யாதொரு இந்தப் பரமபுருஷன், யோகிகளுக்குத்

தர்சநமளித்துக்கொண்டிருக்கின்றானோ, அவனுக்குக் கம்பீரமான ஜலத்தில், செம்மையாக உத்பந்நமாய், மிகவும் பரிசுத்தமாகக் கிளம்பிய கொடியின்மீது, ஸூர்யரஶ்மிகளால் விகாஸத்தைப் பெற்று விளங்குகின்ற புண்டரீக மலருடைய தளம் போன்று நிர்மலமாய் விஸ்தரித்த திருக்கண்கள் இருக்கின்றன.] புண்டரீகாக்ஷ சப்தம் ஸ்ரீபாஷ்யகாரர் திருவுள்ளப்படி விவரிக்கப்பட்டது.

ஶ்ருதியில் சொல்லப்பட்ட ஸ்வர்ணமயமான திருமேனியும், ஸூர்யமண்டல ஸ்திதியும், புராணஶ்லோகத்தில் ஸ்மரிக்கப்பட்டன; செந்தாமரைக் கண்களை மஹாபாரதஶ்லோகம் ஸ்மரித்தது. சங்கசக்ரபாணி யென்பதை ஶ்லோகங்களிரண்டும் உரைத்தன. இவ்வண்ணம் விவரிக்கப்பட்ட விக்ரஹம் உபாஸநார்த்தம் கல்பிக்கப்பட்டதன்று. '𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇' [தர்சிக்கப்படுகின்றான்] என்று ஶ்ருதி சொல்வதால் அது ப்ரஸித்தமான விஷயம்; உபாஸநத்துக்கு முற்பட்ட காலத்திலும் ஸூர்யமண்டலத்தில் ஸேவை ஸாதிக்கின்றான் என்று கருத்து. '𑌏𑌷 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌗𑍂𑌢𑍋𑌤𑍍𑌮𑌾 𑌨 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍇 । 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌤𑍍𑌵𑌗𑍍𑌰𑍍𑌯𑌯𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌯𑌾 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌦𑌰𑍍𑌶𑌿𑌭𑌿𑌃' [ஸர்வபூதங்களுக்குள்ளும் ஆத்மாவாக இருக்கின்ற பரமபுருஷன், மாயைக்குள் அகப்பட்டுக்கொண்டு இந்த்ரியஜயமற்றவர்க்கு ப்ரகாசிக்கின்றானில்லை. ஆனால் ஸூக்ஷ்மதர்சந ஸமர்த்தர்களால், இதர வ்யாபாரங்களிற் புகாது ஒரே லக்ஷ்யத்தில் செலுத்தக்கூடினதும், ஸூக்ஷ்மார்த்தங்களை விவேகிக்கத் தக்கதுமான புத்தியைக்கொண்டு தர்சிக்கப்படுகின்றான்] என்கிறபடியே, முன்பே எங்கும் இருக்கின்ற பரமபுருஷன் ஸூர்யனிடம் ஸாக்ஷாத்கரிக்கப்படுகின்றானேயன்றி உபாஸனையின் பொருட்டுக் கல்பிக்கப்பட்ட விக்ரஹயுக்தனன்று. '𑌯𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑍇 𑌰𑍁𑌕𑍍𑌮𑌵𑌰𑍍𑌣𑌮𑍍' [எப்போது உபாஸகன் ஸ்வர்ணமய விக்ரஹயுக்தனான ஸர்வேஶ்வரனைத் தர்சிக்கின்றானோ] என்று ஶ்ருத்யந்தரம் சொல்கின்றது. இங்கே தர்சநம் ஹ்ருதய நிகேதநனான பரமாத்மாவைப் பற்றி உரைக்கப்படுகின்றது.

ஆதித்யனுக்குள் பகவான் இருப்பதைப் பற்றித் தைத்திரீய ஶ்ருதியும் உபதேசிக்கின்றது.

"𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑍋 𑌵𑌾 𑌏𑌷 𑌏𑌤𑌨𑍍𑌮𑌣𑍍𑌡𑌲𑌂 𑌤𑌪𑌤𑌿, 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌾 𑌋𑌚𑌃 𑌸 𑌋𑌚𑌾𑌂 𑌮𑌣𑍍𑌡𑌲𑌂 𑌸 𑌋𑌚𑌾𑌂 𑌲𑍋𑌕𑌃 𑌅𑌥 𑌯 𑌏𑌷 𑌏𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌮𑌣𑍍𑌡𑌲𑍇𑌽𑌰𑍍𑌚𑌿𑌰𑍍𑌦𑍀𑌪𑍍𑌯𑌤𑍇 𑌤𑌾𑌨𑌿 𑌸𑌾𑌮𑌾𑌨𑌿, 𑌸 𑌸𑌾𑌮𑍍𑌨𑌾𑌂 𑌮𑌣𑍍𑌡𑌲𑌂 𑌸 𑌸𑌾𑌮𑍍𑌨𑌾𑌂 𑌲𑍋𑌕𑌃, 𑌅𑌥 𑌯 𑌏𑌷 𑌏𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌮𑌣𑍍𑌡𑌲𑍇𑌽𑌰𑍍𑌚𑌿𑌷𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃, 𑌤𑌾𑌨𑌿 𑌯𑌜𑍂𑌂𑌷𑌿 𑌸 𑌯𑌜𑍁𑌷𑌾𑌂 𑌮𑌣𑍍𑌡𑌲𑌂 𑌸 𑌯𑌜𑍁𑌷𑌾𑌂 𑌲𑍋𑌕𑌃, 𑌸𑍈𑌷𑌾 𑌤𑍍𑌰𑌯𑍍𑌯𑍇𑌵 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌤𑌪𑌤𑌿, 𑌯 𑌏𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃"

[ப்ரத்யக்ஷமாகத் தெரிகின்ற ஆதித்ய மண்டலமென்ன, அதின்கண் ஜ்வலிக்கின்ற ஜ்வாலைகளென்ன, அவற்றுள் நிற்கின்ற புருஷனென்ன, இவர்களுக்கு க்ரமமாக ருக்ஸாமயஜூரூபத்வம் சொல்லப்படுகின்றது. இன்னும் மண்டலம் ருக்குக்களுடைய மண்டல மென்றும் லோக மென்றும், ஜ்வாலைகள் ஸாமங்களுடைய மண்டல மென்றும் லோக மென்றும், புருஷன் யஜுஸ்ஸுக்களுடைய மண்டல மென்றும் லோக மென்றும் சொல்லப்படுகின்றது. ஆதலால் ஆதித்ய மண்டலாந்தர்வர்த்தியான ஸ்வர்ணமய புருஷன் த்ரயீவித்யை யெனும் வேத ஸ்வரூபியாகவே ப்ரகாசிக்கின்றான்.]

தைத்திரீய ஶ்ருதியானது நாராயணாநுவாகத்தில் அந்தர்க்கதம். சாந்தோக்ய ஶ்ருதியில் கண்ட, '𑌯 𑌏𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇' எனும் வாக்யத்தை அநுஸரித்தே தைத்திரீய ஶ்ருதியும், '𑌸𑍈𑌷𑌾 𑌤𑍍𑌰𑌯𑍍𑌯𑍇𑌵 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌤𑌪𑌤𑌿 𑌯 𑌏𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃' எனும் வாக்யத்தைச் சொல்வதால், முன் ப்ரகரண நிர்த்திஷ்டனான புண்டரீகாக்ஷனே, தைத்திரீய ஶ்ருதியில் நிர்த்தேசிக்கப் படுகின்றானென்றும், அந்த அநுவாக ப்ரகரணம் முழுவதும் அவனுடையதே என்றும் ஆசார்யர்கள் திருவுள்ளம்.

அவ்வண்ணம் மஹர்ஷிகளும் ஆதித்யாந்தர்யாமி, புருஷோத்தமனென்றே அறுதியிட்டார்கள். யோகயாஜ்ஞவல்க்யர்,

"𑌈𑌶𑍍𑌵𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌖𑍍𑌯𑌂 𑌚 𑌸𑌤𑍍𑌯𑌧𑌰𑍍𑌮𑌾𑌣𑌮𑌚𑍍𑌯𑍁𑌤𑌂 ।
𑌭𑌰𑍍𑌗𑌾𑌖𑍍𑌯𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑌂𑌜𑍍𑌞𑌂 𑌚 𑌤𑍍𑌯𑌾𑌗𑌾𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌤𑍇 ॥
[illegible]
[illegible] ।
𑌸𑌵𑌿𑌤𑍁 [illegible] 𑌵𑌰𑍇𑌣𑍍𑌯𑌂 𑌤𑌂 𑌸𑌤𑍍𑌯𑌧𑌰𑍍𑌮𑌾𑌣𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌂 ॥
𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 [illegible] 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌂 ।
𑌸𑍂𑌰𑍍𑌯𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 𑌸𑍋𑌮𑌃 𑌤𑌸𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌹𑍁𑌤𑌾𑌶𑌨𑌃 ॥
𑌤𑍇𑌜𑍋𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌸𑌤𑍍𑌵𑌂 𑌸𑌤𑍍𑌵𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑍋𑌚𑍍𑌯𑍁𑌤𑌃 ।"

[புருஷன் எனப்பட்ட ஈஶ்வரனை, ஸத்யத்தையே தர்மமாயுடையவனை, அச்யுதனை, பர்க்கஸ் என்றும் விஷ்ணு என்றும் நாமங்களை யுடையவனை புருஷன் த்யாகித்து மோக்ஷத்தை அடைகின்றான். அந்தப் பகவான் ஹ்ருதயாகாஶத்தில் ப்ரகாசிக்கின்றான். வெளியே ஸூர்யனுக்குள்ளும் ப்ரகாசிக்கின்றான். தூமமற்ற அக்நியில் ரமணீயமான ஜ்யோதிஸ்ஸாக ப்ரகாசிக்கின்றான். ஸவிதாவினிடம் ப்ரகாசிப்பவன் அவனே. யாவராலும் ப்ரார்த்திக்கத் தக்கவனும், ஸத்யமே தர்மமாயுடையவனுமான அந்த ஈஶ்வரனை, ஸ்வர்ணமயமான திருமேனியுடையவனை, புருஷனை, விஷ்ணு எனும் பெயருடன் கூடிய பரமாகாஶத்தை (த்யாகித்து) அம்ருதத்வத்தை அடைகின்றார்கள்.) ஸூர்யமண்டல நடுவில் ஸோமன் இருக்கின்றார்; அவர்க்குள் அக்நி இருக்கின்றார்; அந்தத் தேஜோரூபமான அக்நிக்குள் ஸத்வம், (அதாவது மண்டலாபிமானி தேவதையான ஜீவன்) இருக்கின்றான்; அதற்கும் உள்ளே அச்யுதன் இருக்கின்றார்.]

இந்த ஶ்லோகங்கள் மேலெடுத்த ஶ்ருதிகளின் அர்த்தங்களையும், இதர ஶ்ருதிகளின் பொருளையும் சேர்த்துக்கொண்டு, ஸந்த்யாவந்தநத்தில் அநுஸந்திக்கப்பட்ட முக்ய மந்த்ரமான காயத்ரியையும் விவரணம் செய்கின்றன. அன்றியும் காயத்ரி மந்த்ரத்தால் ப்ரதிபாதிக்கப்பட்ட தெய்வம் நாராயணனென்றே காட்டுகின்றன.

இது மிகவும் ந்யாயமான விஷயம். அந்தர்யாமி ப்ராஹ்மணமானது, ஆதித்யனுக்குள் இருக்கின்றவனும், ஆதித்யனால் அறியப்படாதவனும், ஆதித்யனைச் சரீரமாக உடைத்தாயிருக்கின்றவ

னும், ஆதித்யனுக்குள் நின்று அவனுக்கு நியந்தாவாக இருப்பவனும், ஒவ்வொரு புருஷனுக்குள்ளும் மரணதர்மமற்ற ஆத்மாவாகவும் அந்தர்யாமியாகவும் இருக்கின்றானென்று வெளியிட்டது. இவ்வண்ணமே அவனே, ஸர்வ வஸ்துக்களுக்குள்ளும் அந்தர்யாமியாக இருப்பதை விவரித்து, ஜீவாத்மாவுக்குள்ளும் அவ்வண்ணம் நிற்பதையும் காட்டுகின்றது. ஸுபாலோபநிஷத்தோ ஸ்பஷ்டமாக ஸர்வ பதார்த்தங்களுக்குள்ளும் மேல்சொன்னபடி அந்தர்யாமியாக இருப்பவன் நாராயணன் என்று சொல்லுகின்றது, அதை அநுஸரித்தே ஸ்ரீசங்கராசார்யரும், அந்தர்யாமி ப்ராஹ்மண பாஷ்யத்தில் குறிக்கப்பட்ட அந்தர்யாமி ‘நாராயணன் என்கிற பெயருடன் கூடின ஸர்வேச்வரன்’ என்று கண்டோக்தமாய் சொல்லுகிறார். தைத்திரீய உபநிஷத்தும் ஆதித்யனுக்குள்ளிருக்கும் பகவானே ஒவ்வொருவருடைய ஹ்ருதயத்துக்குள்ளும் இருக்கின்றான் என்பதை ‘𑌸 𑌯𑌶𑍍𑌚𑌾𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍇 𑌯𑌶𑍍𑌚𑌾𑌸𑌾𑌵𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 𑌸 𑌏𑌕𑌃’ என்று சொல்லுகிறது.

யம ஸ்ம்ருதியிலும் சங்க ஸ்ம்ருதியிலும்,

“𑌰𑌵𑌿𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌸𑍋𑌮𑌃 𑌸𑍋𑌮𑌮𑌧𑍍𑌯𑍇 𑌹𑍁𑌤𑌾𑌶𑌨𑌃 ।
𑌤𑍇𑌜𑍋𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌸𑌤𑍍𑌵𑌂 𑌸𑌤𑍍𑌵𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑍋𑌚𑍍𑌯𑍁𑌤𑌃 ॥
𑌏𑌷 𑌦𑍇𑌵𑌸𑍍𑌤𑍁 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌪𑌟𑍇𑌨𑍇𑌵 𑌤𑌿𑌰𑍋𑌹𑌿𑌤𑌃 ।
𑌏𑌷 𑌏𑌵 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑌨𑌾𑌤𑌨𑌃 ॥”

[ரவிமத்யத்தில் ஸோமனும், ஸோமன் மத்யத்தில் அக்நியும், அக்நி மத்தியில் ஸத்வமும், ஸத்வமத்தியில் அச்யுதனும் இருக்கின்றார்கள்; மநுஷ்யர்க்கு இந்தத் தேவன் ஒரு திரை போட்ட மாதிரியாக மறைக்கப்பட்டு நிற்கின்றான். இவனே புருஷனெனும் விஷ்ணு; கண்ணுக்கு அகப்படும் ப்ரபஞ்சத்தைச் சரீரமாயுடையவன்; ஸ்வரூபத்தில் யாவராலும் அறியப்படாதவன்; என்றுமுள்ளவன்;] என்று ச்லோகங்கள் உள.

தத்தாத்ரேய ஸ்ம்ருதியில் தீக்ஷாவிதி ப்ரகரணத்தில்,

“𑌯𑍋𑌸𑍌 𑌵𑌿𑌷𑍍𑌣𑍍𑌵𑌾𑌖𑍍𑌯 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑍃𑌦𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃
𑌸𑍋𑌹𑌂 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍋 𑌦𑍇𑌵𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌲𑍋𑌕𑌭𑌾𑌵𑌨𑌃 ॥”

[ஆதித்யனுக்குள்ளும் ஹ்ருதயத்துக்குள்ளும் இருக்கிற விஷ்ணு எனும் பெயருடன் கூடின யாதொரு இந்தப் புருஷன் உளனோ, அவனே நான் (என்னுடைய அந்தர்யாமி); அவன் நாராயணனெனும் தேவன்; லோகஸ்ரஷ்டாவான புருஷன்.] என்கிற ச்லோகம் இருக்கின்றது.

மஹாபாரதத்தில் மோக்ஷதர்மத்தில், ஸாக்ஷாத் பகவானே இவ்வண்ணம் சொல்கின்றார்:—

“𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌸𑌹𑌾𑌯𑌵𑌨𑍍𑌤𑌂 𑌤𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌥𑌂 𑌸𑌨𑌾𑌤𑌨𑌂 ।
𑌕𑌪𑌿𑌲𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌰𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌃 𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌾𑌃 ॥”

[தத்வநிச்சயம் பண்ணின ஸாங்க்ய ஆசார்யர்கள், வித்யாக்ரஹணத்துக்கு உபகாரகனாயிருக்கும் என்னை, ஸநாதனனாய் ஆதித்யனிடம் நிலைத்து நிற்பவரான கபிலரென்று சொல்வார்கள்.]

இவ்வண்ணம் மேலே எடுக்கப்பட்ட ச்லோகங்களெல்லாம் காயத்ரியினுடைய அர்த்தத்தைத் தெரியச் செய்கின்றன.

* * * * * *

இன்னும் ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில், பின் வருகின்ற ச்லோகங்கள் இருக்கின்றன.

“𑌸𑍈𑌷𑌾 𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 𑌪𑌰𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌋𑌗𑍍𑌯𑌜𑍁𑌃𑌸𑌾𑌮𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌾 ।
𑌸𑍈𑌷𑌾 𑌤𑍍𑌰𑌯𑍀 𑌤𑌪𑌤𑍍𑌯𑌂𑌹𑍋 𑌜𑌗𑌤𑌸𑍍𑌤𑍁 𑌹𑌿𑌨𑌸𑍍𑌤𑌿 𑌯𑌾 ॥
𑌸𑍈𑌷 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌯𑌾𑌂 𑌜𑌗𑌤𑌃 𑌪𑌾𑌲𑌨𑍋𑌦𑍍𑌯𑌤𑌃 ।
𑌋𑌗𑍍𑌯𑌜𑍁𑌃𑌸𑌾𑌮𑌭𑍂𑌤𑍋𑌨𑍍𑌤𑌃 𑌸𑌵𑌿𑌤𑍁𑌰𑍍𑌦𑍍𑌵𑌿𑌜 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 ॥
𑌮𑌾𑌸𑌿 𑌮𑌾𑌸𑌿 𑌰𑌵𑌿𑌰𑍍𑌯𑍋𑌯𑌃 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌹𑌿 𑌸𑌾 𑌪𑌰𑌾 ।
𑌤𑍍𑌰𑌯𑍀𑌮𑌯𑍀 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌵𑍈 ॥”

* * * * * *

“𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌸𑌦𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌸𑌾 ।”

* * * * * *

“[illegible] 𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌣𑍀𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍍𑌯𑍇𑌷𑌾 𑌤𑍍𑌰𑌯𑍀𑌮𑌯𑍀 ।
[illegible] ।

யயாஸாவதிஷ்டிதஸ்ஸோயம் ஜாஜ்வலீதி ஸ்வரஶ்மிபி: ॥
தமஸ்ஸமஸ்தஜகதாம் நாஶம் நயதி சாகிலம் ।”

* * * * * *

“ஏவம்ஸா வைஷ்ணவீ ஶக்தி: நைவாபைதி ததோ த்விஜ ।
மாஸாநுமாஸம் பாஸ்வந்தம் அத்யாஸ்தே தத்ர ஸம்ஸ்திதம் ॥”

ஸூர்யனைப் பற்றி, ‘ஸைஷா த்ரய்யேவ வித்யா தபதி’, என்று ஶ்ருதி சொல்லிற்று. அதை அநுஸரித்து, [“ருக் யஜுஸ் ஸாம மெனப்பட்ட த்ரயீவித்யையே விஷ்ணுவினுடைய உத்க்ருஷ்டையான ஸம்பூர்ணசக்தி; அந்த சக்தியே ஸூர்யரூபமாக ப்ரகாசிக்கின்றது; ஆகலால் ப்ரதிதிநமும் உபாஸிக்கப்பட்டால் அது ஜகத்தினுடைய அந்தந்த தினத்தினுடைய பாபங்களைப் போக்குகின்றது”] என்று முதல் ஶ்லோகம் காட்டுகின்றது. அடுத்த ஶ்லோகத்தில் விஷ்ணுசக்தியையும் விஷ்ணுவையும் ஒன்ருக எண்ணிச் சொல்லப்படுகிறது. [“ருக் யஜுஸ் ஸாம சரீரகனை விஷ்ணு ஸூர்யனுக்குள் எழுந்தருளியிருக்கின்ருர். ஜகத்ரக்ஷணத்தில் உத்யுக்தனை பகவான், அந்த சக்திரூபமாகவே ஜகத்ரக்ஷண வ்யாபாரத்தில் அந்வயிக்கின்ருர்.” “ஸூர்யமண்டலாதிஷ்டிதர்களான ஆதித்ய தேவதைகள் ப்ரதிமாஸமும் மாறிக்கொண்டிருக்கின்ருர்கள். ஆகிலும் வேதஸ்வரூபியாய் ஶ்ரேஷ்டமாய் இருக்கின்ற அந்த வைஷ்ணவீசக்தி ப்ரதிமாஸமும் ஸூர்யனிடம் நிலேத்து நிற்கின்றது.” “அந்த விஷ்ணுசக்தியானது ஸதா ஆதித்யனிடம் நிலேத்திருக்கின்றது.” “மேற்சொன்னபடியே, சுத்தஸத்வ குணவிஶிஷ்டமாய், வேதமயமாய், இருக்கிற அந்த விஷ்ணுசக்தி, தனது சரீரங்களாயிருக்கும் ஆதித்யன் முதலான ஏழு கணங்களுக்குள், ஆதித்யனிடமே விசேஷமாக அதிஷ்டாநம் செய்கின்றது.” “ஸூர்யனும், அந்த சக்தியால் அதிஷ்டிதனுய், ஸமஸ்த ஜகத்தினுடைய முழு இருளேயும் நாசம் செய்துகொண்டு விசேஷமாக ப்ரகாசிக்கின்ருன்.”]

ப்ரதிமாஸமும், ஸூர்யமண்டலத்தில், மண்டலாதிஷ்டாநம் செய்கிற ஆதித்யதேவதை, ருஷி, கந்தர்வன், அப்ஸரஸ், யக்ஷ, நாக ராக்ஷஸர்கள், ஆகிய ஸப்தகணங்கள் மாறிமாறி வஸித்துக்கொண்டிருக்கின்ருர்கள் என்று ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில், மேலெடுத்த ஶ்லோகங்களுக்கு முன்பாக விவரிக்கப்பட்டது. அவர்க்குள் ஆதித்ய தேவதைகள் மாஸக்ரமத்தில், யாதா, அர்யமா, மித்ரன், வருணன், இந்த்ரன், விவஸ்வான், பூஷன், விஶ்வாவஸு, அம்ஶன், ஹமன், த்வஷ்டா, விஷ்ணு எனும் உபேந்த்ரன், என்று விவரிக்கப்பட்டார்கள். ஸப்த கணங்களில் யாவரும் விஷ்ணு சக்தியுடன் கூடினவர்கள்; அதாவது: அவர்கள். அந்த சக்தியால் விசேஷித்தவர்கள். முன்னமே அந்த சக்தி வேதத்ரய ஸ்வரூபி என்று சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட அதிஷ்டாதாவாய், சக்திரூபதாரியாய் இருக்கின்ற பகவான் ஸூர்யமண்டலத்தில் ஸ்தாயியாக இருக்கின்ருர். அவரால் அதிஷ்டிதங்களான ஸப்தகணங்களோ, மாஸம் மாஸம் பேதிக்கின்றன. பகவத்சக்திக்கு மாத்ரம் உதயாஸ்தமந வ்யவஹாரம் கிடையாது. யாதொரு விகாரமும் அதைத் தொடாது. மாஸந்தோறும் மாறுகின்ற ஆதித்ய தேவர்களாவது, அவர்களுடைய கைங்கர்யத்தில் அந்வயித்த ருஷி முதலானவர்களாவது, ஸந்த்யா காலங்களில் உபாஸிக்கப்பட்டவர்கள் அல்லர். நிலேயாக மண்டல மத்தியில் ஸ்வசக்திரூபமான வேதமயனுய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமந்நாராயணனே ஸந்த்யா கர்ம ஸமாராத்யன் என்று, மேல் குறித்த ஶ்லோகங்கள் காட்டுகின்றன. அவற்றுள், முடிவான ஶ்லோகம் ஸர்வார்த்தங்களேயும் க்ரோடீகரித்துச் சொல்கின்றது. [“இவ்வண்ணம், அந்த விஷ்ணுசக்தியானது ஸூர்யமண்டலத்தை விட்டு, எப்போதும் விலகுவதில்லே; மாஸந்தோறும் அதில் இருந்து ப்ரகாசிக்கின்ற ஆதித்ய தேவர்களே அது அதிஷ்டாநம் செய்கின்றது.”]

* * * * * *

மேலெழுதிய யாவும் பதார்த்தஶாஸ்த்ர விமர்சிகளுடைய யோசனேகளே அநுஸரிக்கவில்லே. அவர்கள் த்ருஷ்ட வஸ்துக்களேப் பற்றி யோசிக்கின்ருர்கள். சரீராவயவங்கள் யாவும் அவர்களால் சோதிக்கப்படுகின்றன. சரீரத்தில் நிற்கும் ப்ராணனும் ஜீவனும் அவர்களுக்கு அகப்படா. அவ்வண்ணமே, ஸூர்யனென்னப்பட்ட கோளவிசேஷம் எந்தெந்த பதார்த்தங்களுடைய ஸங்காத மென்பதையும், அதன் ப்ரமாணம் இவ்வள வென்பதையும் அவர்கள் யோசிக்கப் பொருந்தும். அந்தக் கோளத்தின் அபிமாநி தேவதையோ, அதற்குள் நிற்கும் அந்தர்யாமியோ,

அவர்களுக்கு அகப்படார். நம்முடைய பூர்வருஷிகள் பரமார்த்த தத்வங்களை நமக்கு உபதேசித்தார்கள். அவர்கள் நமக்களித்த ஜ்ஞாநங்களைக் கொண்டுதான் மதமென்பது நிலைக்கக் கூடியது. அந்த ஜ்ஞாநங்களைக் கொண்டுதான் ஜகத்காரணன் ஸர்வேஶ்வரனென்றும், ஸ்ருஷ்டங்களான ஸர்வ பதார்த்தங்களுக் குள்ளும் அவன் அநுப்ரவேசம் செய்து நியமநம் செய்கின்றானென்றும் விஶ்வஸிக்கின்றார்கள். இந்த விஷயத்தில், '𑌇𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑌸𑍃𑌜𑌤 । 𑌯𑌦𑌿𑌦𑌂𑌕𑌿𑌂𑌚 । 𑌤𑌤𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 । 𑌤𑌦𑍇𑌵𑌾𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌤𑍍 ।' என்று தைத்திரீய ஶ்ருதி சொல்லிற்று. ஈஶ்வரன் ஜீவாத்மாவுடன் அநுப்ரவேஶம் செய்தானென்பதை, '𑌅𑌨𑍇𑌨 𑌜𑍀𑌵𑍇𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌅𑌨𑍁𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯', என்று சாந்தோக்ய ஶ்ருதி வெளியிட்டது.

* * * * * *

இவ்வண்ணம் ஸந்த்யாவந்தந மெனப்பட்ட வைதிக கர்மம் பகவதாராதந மென்றும், அதற்கு உத்தேஶ்யன் ஸ்ரீமந் நாராயணனென்றும், பெரியோர்களால் எடுத்துக் காட்டப்பட்டது. சாந்தோக்ய ஶ்ருதியும், ஸுபாலோபநிஷத்தும், வ்யக்தமாக மேலெழுதினபடி வெளியிட்டதைத் தடஸ்தரான ஸ்ரீ சங்கராசார்யர் ஒப்புக்கொண்டார். மேலெடுத்த இதிஹாஸ புராண ஸ்ம்ருதி வசநங்கள், பாஶ்சாத்ய வித்யாநிஷ்டர்களாலும், 2000 - வருஷங்களுக்கு முற்பட்டவை யென்று அங்கீகரிக்கத் தக்கவை. ஆதலால், மஹர்ஷிகளாலும் பரமாசார்யர்களாலும் ஆதரிக்கப்பட்ட க்ரமத்தை, இக்காலத்தில் நம்மவர்களும் ஆதரித்தல் யுக்தம். 2500 - வருஷங்கட்கு முற்பட்டவராக எண்ணக்கூடிய ஶௌநக மஹர்ஷியும், அவர் செய்த ருக்விதாநமெனும் க்ரந்தத்தில், "த்விஜந்ம மடைந்தவர்களால் படிக்கப்பட்ட வேதாக்ஷரங்கள் யாவும் ஸம்ஶயமின்றி, ஹரிநாமங்களுடைய ஸங்கீர்த்தநமே" என்று நிஷ்கர்ஷித்தார். ஆதலால், ஸந்த்யாவந்தந மெனப்பட்ட ஆஜ்ஞாகைங்கர்யத்தை த்விஜனாகப் பிறந்தவன் த்யாகம் செய்தால், பகவானுடைய அப்ரீதிக்கு விஷயமாவான் என்பது மஹநீயர்கள் யோசனை.

உபோத்காதாதிகாரசிந்தனை.

(தொடர்ச்சி.)

[இதனுடைய பூர்வபாகம், நள ௵ கார்த்திகை ௴ வேதாந்த தீபிகையில், 69 - வது பக்கம் முதல் 76 - வது பக்கம்வரையில் அச்சிடப்பட்டிருக்கிறது.]

"ப்ரிய! லோகத்தில் தஸ்கரர்கள், காந்தார தேசத்தினின்று, ஒரு புருஷனைக் கண்களைக் கட்டிக்கொண்டுவந்து, நிர்ஜநமான ப்ரதேசத்தில் கைகளையும் கட்டிவிட்டுப் போனாராகில், அப்புருஷன் அங்கே எவ்வண்ணம் 'கீழ்புறமோ, வடபுறமோ, மேல்புறமோ திரும்பிக் கண்கள் கட்டப்பட்டுக்கொண்டு விடப்பட்டேன், கண்கட்டுடன் கொண்டுவிடப்பட்டேன்', என்று கூவுவனோ; எவ்வண்ணம் கருணையுள்ள மற்றொரு புருஷன் அவனுடைய கண்கட்டை அவிழ்த்து, 'இந்தத் திசையில் காந்தாரதேசமிருக்கின்றது, இத்திசையாகப் போ,' என்று சொன்னானாகில், அந்தக் கட்டவிழ்க்கப்பட்ட புருஷன், பகுத்தறிவுள்ளவனாய், கேட்ட உபதேசத்தை மறவாதவனாய், மார்க்கத்தில் ஒரு க்ராமத்தினின்று க்ராமாந்தரத்தைக்குறித்து வழிகேட்டுத் தெரிந்துகொண்டு, காந்தார தேசத்திற்கே மறுபடிப்போய்ச் சேர்வனோ; அவ்வண்ணமே, ஆசார்யனை யடைந்த புருஷன், தனது ஆத்மஸ்வரூபமென்ன, அதை அறியவேண்டிய உபாயமென்ன, இத்தகைய ஜ்ஞாநத்தை அவ்வாசார்யனிடம் அடைகின்றான். அப்படி ஜ்ஞாநமுண்டாகி, அதை அநுஷ்டாநத்துக்குக் கொண்டுவந்தவனுக்கு, எவ்வளவில் அவனது ப்ராப்த கர்மாயத்தமான சரீரத்தினின்று அவன் விடப்படுகின்றானோ அவ்வளவே விளம்பம். சரீர மோக்ஷாவஸாநத்தில், அவன் ப்ரஹ்மத்தினிடம் சேர்ந்து, ஸ்வரூப ப்ராப்தியை

அடைகின்றான்" (1). இவை சாந்தோக்யோபநிஷத் வாக்யங்கள். இவற்றின்படி, பரம்புருஷனுடைய நிருபாதிக தாஸனாய் அவனுடன் இருக்கவேண்டிய சேதநன், அநாதிகர்ம சக்ரத்தில் சிக்கிக்கொண்டு, அஜ்ஞாநத்தால் மறைக்கப்பட்ட தர்மபூத ஜ்ஞாநத்துடன் கூடினவனாய், விஷயங்களால் அபஹரிக்கப்பட்ட மநஸ்ஸுடன்கூடி ஸம்ஸரிக்குமளவில், ஒரு காலவிசேஷத்தில். சில தார்மிகர்களுடைய ஸங்கம் அவனுக்கு நேர்பட்டு, அதனால் அவன் தனது நிஜஸ்வரூபத்தையும், தான் அப்போது அடைந்திருக்கும் துர்தசையையும் தெரிந்துகொண்டு, நிர்வேதம் பிறந்து, ஸந்மார்க்க ப்ரவேசத்தில் அபிநிவேசமுடையவனாகின்றான். அவ்வளவில், அவனுடைய யாத்ருச்சிக ஸுக்ருத பரிபாகத்தை அவஸர ப்ரதீக்ஷனாய்ப் பார்த்துக்கொண்டிருந்த பரமேச்வரனுடைய கடாக்ஷ பலனாகப் பரமகாருணிகனான ஒரு ஆசார்யன் அவனுக்கு ப்ராப்தனாகின்றான். அவ்வாசார்யன் அவனுக்கு ஸ்வரூப ஜ்ஞாநம் முதலானவற்றை உபதேசிக்கவும், அவன் அந்த உபதேசத்தை மறவாமல், ஊஹாபோஹ ஸமர்த்தமான புத்தியுடன் கூடினவனாய், வேண்டிய உபாய பூர்த்தியைப் பண்ணிக்கொண்டு, சரீராவஸாநத்தில் பரமபுருஷனை யடைந்து, அவ்விடத்தில் கிங்கரத்வாதி ராஜ்யத்தைப் பெற்று அநுபவிப்பான் என்று ஏற்படுகின்றது.

லோகத்தில் உபபந்நர்கள் க்ருஹத்தில் பிறந்த பிள்ளைகள் மற்றவரைப்போல் தம்மை நினைக்கின்றாரில்லை. ஒரு சிற்றரசன் மகன் தனது ஏற்றத்தை எவ்வாறு மதிப்பான் என்பதை எண்ணவும் வேண்டுமோ? ஒரு ஸார்வபௌமன் புத்ரன் எவ்வளவுமட்டும் தன் உயர்வைப் பாராட்டுவான் என்பதையும், அவன் எவ்வளவு லாளநத்துடன் வளர்க்கப்படுவான் என்பதையும் விவரிக்கவேண்டியதில்லை. அப்படிப்பட்ட ராஜச்ரேஷ்டன் ஒருவன், தன்னுடைய அந்தப்புரத்துடன் வேட்டைக்குச் சென்றனன். அவன் வேட்டையில் பற்றிய மநஸ்ஸுடன் விளையாடுமளவில், அவன் ராஜகுமாரனான குழந்தை, பேசவும் தெரியாத பருவத்தில் வழிதப்பி நடக்கும்போது காட்டினடுவே விடப்பட்டான்; ஸார்வபௌமனும் அவன் பரிஜநங்களும், மிகவும் தேடியும் அகப்பட்டானில்லை. ஸமீபத்தில் ஒரு வேடுவச்சேரியில் வஸித்த வேடன் ஒருவன், அக்குழந்தையைக் கண்டெடுத்துத் தன் குடிசைக்குக் கொண்டுபோய் வளர்த்தான்; குழந்தையோ வேடனல்லன். ஆனால் வளரவளரத் தன்னையோர் வேடப்பிள்ளையாக நினைத்துக்கொண்டு, ஸம்ஸர்க்க தோஷத்தால் வேடுவச்சேரியில் வளர்க்கப்படும் கிளியைப்போலே, வேடுவர் பழக்கிவைத்த வார்த்தைகளைப் பேசிக்கொண்டு, அவர் உணவையுண்டு, அவரைப்போல் நடந்துகொண்டிருந்தான். இப்படி ராஜகுமாரன் தன் பிறவிக்குரிய போகங்களையும், ஆசாரங்களையும், ஸம்ஸர்க்கங்களையும் நினைவற இழந்து, தன் பிறவிக்குத் தகாத ஜுகுப்ஸித விஷயங்களைப் பெற்றால் பேறாக வெண்ணி ஸந்தோஷித்தும், இழந்தால் இழவாக நினைத்துத் துக்கித்தும் காலம்கழித்தனன். அக்காட்டில் வஸிக்கும் ருஷிகளான சில தார்மிகர், இவ்விராஜ குமாரனை மறைக்காமல் காட்டவல்ல பல ராஜசிந்நங்களை அவனிடம் கண்டு, அவனுக்கு ஸம்பவித்த துர்த்தசையை விசாரித்தறிந்து, அவனிடம் இரக்கங்கொண்டு, அவஸரத்தை எதிர்பார்த்துநின்று, அவனுக்கு ப்ரமையடியாக வந்தேறியான தான் வேடனெனும் அபிமாநத்தைப் போக்கி, அவன் பிறப்புக்கேற்றபடி ஸ்நாநாதிகள் நல்ல வஸ்த்ரதாரணம் முதலான த்ருஷ்ட ஸம்ஸ்காரங்களையும், உபநயநம் முதலான அத்ருஷ்ட ஸம்ஸ்காரங்களையும் அவனுக்குப் பண்ணுவித்து, வைதிக கர்மாநுஷ்டாநங்களை அவனுக்குப் பழக்குவித்து, இவ்விதமாக அவனுக்குரிய ராஜபோகங்கட்கு அவனை யோக்யனாம்படி பண்ணினார்கள்; பின்னும் உசிதமான உபதேசங்களாலும், தங்களுடைய அநுஷ்டாநங்களாலும், க்ஷத்ரிய ஜாதிக்குரிய குணங்களையும் ஆசாரங்களையும் அவனிடம் நிலைக்கச்

---

(1) 𑌯𑌥𑌾 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌗𑌨𑍍𑌧𑌾𑌰𑍇𑌭𑍍𑌯𑌃 𑌅𑌭𑌿𑌨𑌦𑍍𑌧𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌨𑍀𑌯 𑌤𑌂 𑌤𑌤𑍋𑌽𑌤𑌿𑌜𑌨𑍇 𑌵𑌿𑌸𑍃𑌜𑍇𑌤𑍍 - 𑌸 𑌯𑌥𑌾 𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌾𑌙𑍍𑌵𑌾, 𑌉𑌦𑌙𑍍𑌵𑌾, 𑌅𑌧𑌰𑌾𑌙𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌧𑍍𑌮𑌾𑌯𑍀𑌤 𑌅𑌭𑌿𑌨𑌦𑍍𑌧𑌾𑌕𑍍𑌷 𑌆𑌨𑍀𑌤𑌃 𑌅𑌭𑌿𑌨𑌦𑍍𑌧𑌾𑌕𑍍𑌷𑍋 𑌵𑌿𑌸𑍃𑌷𑍍𑌟𑌃 - 𑌤𑌸𑍍𑌯 𑌯𑌥𑌾𑌭𑌿𑌨𑌹𑌨𑌂 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯 𑌪𑍍𑌰𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍, 𑌏𑌤𑌾𑌂 𑌦𑌿𑌶𑌂 𑌗𑌨𑍍𑌧𑌾𑌰𑌾 𑌏𑌤𑌾𑌂 𑌦𑌿𑌶𑌂 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑌿. 𑌸 𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌦𑍍𑌗𑍍𑌰𑌾𑌮𑌂 𑌪𑍃𑌚𑍍𑌛𑌨𑍍 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑍋 𑌮𑍇𑌧𑌾𑌵𑍀 𑌗𑌨𑍍𑌧𑌾𑌰𑌾𑌨𑍇𑌵𑍋𑌪𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑍇𑌤 𑌏𑌵𑌮𑍇𑌵𑍇𑌹 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌾𑌨𑍍 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌵𑍇𑌦 𑌤𑌸𑍍𑌯 𑌤𑌾𑌵𑌦𑍇𑌵 𑌚𑌿𑌰𑌂 𑌯𑌾𑌵𑌨𑍍𑌨 𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑍇. 𑌅𑌥 𑌸𑌂𑌪𑌤𑍍𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿.

செய்தனர். அநேக தோஷங்களுடன் கூடினவையும், பகுகாலம் வேடருடன் பழகிய வாஸனையால் அவனுக்குப் போக்யமெனத் தோன்றியவையுமான க்ஷுத்ர விஷயங்களில், அவற்றிலுள்ள தோஷங்களின் ப்ரதர்சநத்தாலே அவனுக்கு அருவருப்பை உண்டாக்கினார்கள். ஸார்வபௌமனான ராஜாவுக்குப் போக்யங்களான உத்க்ருஷ்ட புருஷார்த்தங்களை விவேசநம்செய்து பரிக்ரஹிக்கத் தக்க ஜ்ஞாந ஸாமக்ரியை அவனுக்கு உண்டுபண்ணி, அதில் அவன் நிலைக்கும்படி செய்தார்கள்.

இழந்துபோன தன் குமாரனைப்பற்றி ஶோகித்து நின்ற ஸார்வபௌமன், தான் வேட்டையாடின வநப்ரதேசங்களில் தன் குமாரனைத் தேடிப்பிடிக்க ஸமர்த்தரான சில புருஷர்களை, அவனுடைய அந்வேஷணத்தில் நியமித்தான். அவர்கள் சிரகாலம் தேடிப் பஹுப்ரகாரமாக விசாரித்துப் பின் மேலே சொன்ன ருஷிகளின் ஆஶ்ரமத்தினிடம் வந்தார்கள்; தமது வ்ருத்தாந்தத்தை அங்கே ருஷிகளுக்குத் தெரிவித்தார்கள். ருஷிகளும் தாங்கள் கண்டெடுத்துப் போஷித்துவந்த ராஜகுமாரனை அவர்கட்குக் காட்டினார்கள். அவர்களும் குமாரனைக் கண்டு அவன் குழந்தையாக இருந்தபோது ஏற்பட்டுப் பெற்றோராலும் பிறராலும் அறியத்தக்கவையான சில அடையாளங்களால், அவனே தம்முடைய அதிராஜனுடைய ப்ரிய குமாரனெனக் கண்டறிந்தார்கள். பிறகு அக்குமாரனுக்கு அவனுடைய ஜந்மவிஶேஷத்தை ஜ்ஞாபித்தார்கள். அதைக் கேட்ட ராஜகுமாரன் தான் இன்னானென்று அறிந்த பின்னும், தனக்கேற்பட்ட அநர்ஹதையை நினைத்து, அவர்களை விட்டு அகலும்படி யிருக்குமென்று அவர்கட்குத் தோன்றியது. ஆதலால் ஸார்வபௌமனுடைய அந்தரங்கர் குமாரனை நோக்கி, "நீ பிதாவினிடம் சென்றாயாகில் அவர் உன்னை ஸந்தோஷத்துடன் அங்கீகரிப்பர்; உனக்கு யௌவராஜ்ய பட்டாபிஷேகம் செய்து வைப்பர்." என்றிவ்வண்ணம் ப்ரியவசநங்களைச் சொன்னார்கள். இன்னும், பிதாவினிடம் அவன் போவதற்கு ஏற்ற உபாயங்களையும் எடுத்துரைத்தார்கள். இவ்வண்ணம் அக்குமாரனுக்குப் பிதாவினிடம்போய்ச் சேரவேண்டுமென்று ஆகாங்க்ஷை வ்ருத்தியாயிற்று. அவனும் அதற்காக அவ்விடம்விட்டுப் புறப்பட்டனன். ராஜாவினுடைய அந்தரங்கர், முன்பாக ஸார்வபௌமனிடம் சென்று, "உன் குமாரன் அகப்பட்டான்; சில தார்மிகரான ருஷிகள் அவனுக்கு யௌவராஜ்ய பட்டாபிஷேகார்ஹதையை உண்டாக்கியிருக்கின்றனர்; குமாரனும் உன் தர்சநவிஷயத்தில், கதாகதாவென்று ஆவல் கொண்டிருக்கின்றான்." என்று தெரிவித்தார்கள். இவ்வண்ணம் பிதாவுக்கும் புத்ரனுக்கும் பரஸ்பர தர்சநத்தில் த்வரையுண்டாயிற்று. ராஜ அந்தரங்கரால் முடிவில் அவ்விருவரும் சேர்க்கப்பட்டனர்.

இவ்வண்ணம், ஜீவனுடைய சரித்ரமும் யோசிக்கப்படுகின்றது. ஶ்ரிய:பதியான ஸர்வேஶ்வரனுக்கு ஜீவன் கௌஸ்துபஸ்தாநத்தில் நிற்கின்றான். ஜீவனே கௌஸ்துபமெனச் சொல்லவும் பொருந்தும். கௌஸ்துபத்தை ஜீவாபிமாநி தேவதையென்பர். கௌஸ்துபம்போல் சுத்தனாயும், ஹேயகுணரஹிதனாகவும் இருக்கின்றான் ஜீவன். கௌஸ்துபம்போல் ஜீவனும் ஈஶ்வரனுக்கு ஹ்ருதயங்கமன்; ஈஶ்வரனுடைய ப்ரீதிக்கு விஷயபூதன். ஶாஸ்த்ரங்கள் அங்கங்கே ஜீவனை ஈஶ்வரனுக்குக் குமாரனென்றும், ஶிஷ்யனென்றும், ப்ரேஷ்யனென்றும், ஶேஷபூதனென்றும், தாஸபூதனென்றும் யோசிக்கின்றன. பரமாத்மா ஜீவனுக்கு நிருபாதிகஶேஷி. அவன் 'அயர்வறு மமரர்களதிபதி' யெனப்பட்டான்; அதாவது அஜ்ஞாந ரஹிதராய் நிரந்தரம் பகவானுடைய அநுபவம் பண்ணும் நித்யஸூரிகளுக்கு ஸ்வாமி. அவன் 'உயர்வற உயர்நல முடையவன்'; அதாவது: தன்னைக்காட்டிலும் மற்றோரிடம் மேன்மை யில்லாதபடியே உயராநின்ற கல்யாண குணங்களையுடையவன். அவன், நமக்கும் பூவின்மிசை நங்கைக்கு மின்பன்; அதாவது: ஸர்வோத்க்ருஷ்டையான பத்மாலயையோடொக்க, அதிநிக்ருஷ்டரான நம்மிடமும் ஸமாந ஸ்நேஹமுடையவன்; ஏனென்றால், அவன் ஞாலத்தார்தமக்கும் வானவர்க்கும் பெருமான்; அதாவது: லீலாவிபூதியிலுள்ளவர்க்கும், நித்யவிபூதியிலுள்ளவர்க்கும் அவன் ஸமாநமாக ஸ்வாமியாக விருக்கின்றான். அப்படிப்பட்ட ஸர்வேஶ்வரன், ஸர்வதேச ஸர்வகால ஸர்வவஸ்துக்களையும் வ்யாபித்து, யாவத்துக்கும் விபுவாகவும், யாவத்தின் உள்நின்ற ஈஶனாகவும், இருந்துகொண்டு, 'ந தே ரூபம் ந சாகாரம் நாயுதாநி ந சாஸ்பதம்' என்றும், 'நாம ரூபம் ந யஸ்யாஸ்தி' என்றும் சொல்லுகிறபடியே, நாமரூபாதிகளற்றவனா யிருக்கின்றான். ஆனாலும், 'யஸ்யாவதார

[illegible]’ என்றும், ‘[illegible]’ என்றும் சொல்லுகிற புத்திக்கெட்டாத பரஸ்வரூபத்துடன் கூடினவனாயிருந்தும், தேவர்களால் உபாஸிக்கத்தக்க அவதார சரீரங்களைக் கொள்கின்றான். அன்றியும், ‘[illegible]’ எனும்வண்ணம் மற்ற பத்த ஜீவர்களால் அநுபவிக்கத்தக்க அவதார சரீரங்களையும், அர்ச்சா ரூபங்களையும், தன் கருணையால் தரிக்கின்றான். ஆதலால் அவன் நித்ய ஸூரிகளும் முக்தர்களும், ப்ரபஞ்சாதிரிக்தமான நித்யவிபூதியில் மனமுகந்த கைங்கர்யங்கள் பண்ணி யநுபவிக்கத்தக்கதானதும், நித்யஸித்தமானதுமான விக்ரஹ விசிஷ்டனாகப் பரலோகமெனப்பட்ட ஸ்ரீவைகுண்டத்தில் இந்திரா ஸஹசரனாய் எழுந்தருளி யிருக்கின்றான், என்று காட்ட ‘𑌵𑍈𑌕𑍁𑌣𑍍𑌠𑍇 𑌤𑍁 𑌪𑌰𑍇 𑌲𑍋𑌕𑍇 𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌜𑌗𑌤𑍍𑌪𑌤𑌿𑌃 । 𑌆𑌸𑍍𑌤𑍇 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾’ என்றும், “ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்க’ என்றும், ப்ரமாணங்கள் சொல்லப்பட்டன. ‘𑌪𑌰𑌮𑍇 𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑍍’ என்று உபநிஷத் சொன்ன தெளிவிசும்பில், ‘[illegible]’ என்கிறபடியே, ஸ்வர்க்காதிகளுக்கும் மேலுள்ள அயோத்யா என்றும், அபராஜிதா என்றும் வர்ணிக்கப்பட்ட கலங்காப் பெருநகரில், அதாவது: எவ்விடத்தில் பகவத் கிங்கரர்களான ஜீவர்க்குப் பகவதநுபவத்தில் விச்சேதம் விளைவிக்க யாரும் ஸமர்த்தராக மாட்டாரோ, அப்படிப்பட்ட பரமபதத்தில், கௌஷீதகீயுபநிஷத்தில் ப்ரஸித்தமான ஆயிரம் தூண்களுடன்கூடிய திருமாமணி மண்டபத்தில் ஸ்தாபிதமான பர்யங்க விசேஷத்தில், திருவநந்தாழ்வானென்ற மெத்தையில், பரமபுருஷன் எழுந்தருளி யிருக்கின்றானென்று வர்ணிக்கப்பட்டது. அவ்வநந்தனை, ‘சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம், நின்றால் மரவடியாம் நீள்கடலுள்—என்றும் புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்குமணையாம், நெடுமாற்கரவு” அதாவது: பகவான் நடந்தால் அநந்தன் குடையாகின்றான், வீற்றிருந்தகாலை ஆஸநமாகின்றான், நிற்குங்கால் பாதுகையாகின்றான், என்றும் திருப்பாற்கடலில் தெப்பமாகின்றான், ரத்நதீபமாகின்றான், பீதாம்பரமாகின்றான், படுக்கின்ற படுக்கையாகின்றான், என்று வர்ணிக்கப்பட்டது. இன்னும், ‘𑌨𑌿𑌵𑌾𑌸𑌶𑌯𑍍𑌯𑌾𑌸𑌨𑌪𑌾𑌦𑍁𑌕𑌾𑌂𑌶𑍁𑌕𑍋𑌪𑌧𑌾𑌨𑌵𑌰𑍍𑌷𑌾𑌤𑌪𑌵𑌾𑌰𑌣𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 । 𑌶𑌰𑍀𑌰𑌭𑍇𑌦𑍈𑌸𑍍𑌤𑌵 𑌶𑍇𑌷𑌤𑌾𑌂 𑌗𑌤𑍈𑌃 𑌯𑌥𑍋𑌚𑌿𑌤𑌂 𑌶𑍇𑌷 𑌇𑌤𑍀𑌰𑍍𑌯𑌤𑍇 𑌜𑌨𑍈𑌃’. அதாவது: வாஸஸ்தாநமாயும், படுக்கையாயும், ஆஸநமாயும், பாதுகையாயும், பீதாம்பரமாயும், தலையணையாகவும், மழை வெயில் இவற்றைத் தகைகின்ற குடையாகவும், பகவான் திருவுள்ள முகந்தபடித் திருவநந்தாழ்வான் பகவத் கைங்கர்ய நிமித்தமாகச் சரீரபேதங்களை யெடுத்துக்கொள்கின்றானதலால், ஸர்வஜநங்களும் ‘அவரை ‘சேஷன்’ என்று சொல்கின்றனர், என்று ஸ்தோத்ர ரத்நத்திலும் வர்ணிக்கப்பட்டது. அந்தப்படியே, ஸர்வதேசங்களிலும், ஸர்வகாலங்களிலும், ஸர்வாவஸ்தைகளிலும், அவ்வவற்றிற்கு உசிதமான ஸர்வ்வித கைங்கர்யங்களையும், பலவித சரீரங்களாலே அநுபவித்து பகவத் சேஷத்வமே தனக்கு நிரூபகமாகையால் சேஷனெனத் திருநாமம் பெற்றவர் திருவநந்தாழ்வான். அவ்வநந்தன்மீது ஸ்ரீமஹாலக்ஷ்மீ ஸமேதனாக நித்யயௌவநத்துடன்கூடி எழுந்தருளி யிருக்கின்ற ஸ்ரீமந்நாராயணன், தன்னுடைய பரிபூர்ணாநந்தத்தை, ‘𑌸𑍋𑌽𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 𑌸𑌹 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾’ என்றும், ‘𑌸𑌰𑍍𑌵𑌂 𑌹 𑌪𑌶𑍍𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿’ என்றும் ‘[illegible]’ என்றும், ப்ரமாணங்கள் காட்டியபடி, தன்னோடொத்து ஸர்வாத்மாக்களும் அநுபவித்து க்ருதார்த்தராக வேண்டுமென்று ஸஹ்ருதயனாய் இருக்கின்றான்.

அத்தகையதான ஸாரஸ்ய ஸங்கல்பத்தாலே, நித்யமானதும், எல்லையற்றதுமான பகவதநுபவம் செய்து மஹாநந்தசாலிகளாய் இருக்கின்றனர் நித்யஸூரிகள். அவர்களைப்போல் ஒவ்வொரு ஜீவனும், அவனுடைய ஸ்வரூபத்தால், ஸர்வேஶ்வரனுடைய கைங்கர்யாநுபவம் பண்ணயோக்யதையை அடைந்திருக்கின்றான்.

பத்ராதிபர்.

ஸ்ரீதேசிக ப்ரபந்தம் - பதவுரை.

அம்ருத ரஞ்ஜநீ.

(தொடர்ச்சி.)

கட்டளைக்கலித்துறை.

செம்பொற் கழலிணைச் செய்யா ளமருந் திருவரங்கர்
அன்பர்க் கடியவ ராயடி சூடிய நாமுரைத்தோம்
இன்பத் தொகையென வெண்ணிய மூன்றி னெழுத்தடைவே
ஐம்பத் தொருபொரு ளாருயிர் காக்கு மமுதெனவே. (கங)

(இ - ள்.) செம்பொன் - சிவந்த பொன் போன்ற, கழல் இணை - இரண்டு பாதங்களையுடைய, செய்யாள் - ஸ்ரீமகா லக்ஷ்மி, அமரும் - திருமார்பில் வீற்றிருக்கும், திரு அரங்கர் - பெரிய பெருமாளின், அன்பர்க்கு - அடியார்களுக்கு, அடியவராய் - தாஸர்களாய், அடி சூடிய - அவர் பாதங்களைச் சிரத்தில் சூடிய, நாம்—, இன்ப தொகை என - மிக்க ஆநந்தமென்று, எண்ணிய - எண்ணப்பட்ட, மூன்றின் - ரஹஸ்யத்ரயத்திலுள்ள, எழுத்து அடைவே - எழுத்தின் முறையே, ஐம்பத்தொரு பொருள் - ஐம்பத்தொரு அர்த்தங்களை, ஆர் உயிர் காக்கும் - அருமையான உயிரைக் காக்கின்ற, அமுது என - அமிர்தம் போல, உரைத்தோம் - சொன்னோம். (எ - று.)

(க - து.) ஸ்ரீரங்கநாதனது அடியார்க்கு அடியாராகிய நாம், ரஹஸ்யத்ரயத்திலுள்ள ஐம்பத்தோரர்த்தங்களையும் சொன்னோம் என்கிறார்.

(கு - பு.) மூலமந்திரத்தில் முப்பதும், துவயத்தில் பத்தும், சரமசுலோகத்தில் பதினொன்றுமாகிய பொருள்கள் ஐம்பத்தொன்று. 13.

இதுவுமது.

யானறி யுஞ்சுட ராகிநின் றேன்மற்றும் யாதுமல்லேன்
வானம ருந்திரு மாலடி யேன்மற்றோர் பற்றுமிலேன்
தானமு தாமவன் றன்சர ணேசர ணென்றடைந்தேன்
மானமி லாவடி மைப்பணி பூண்டம னத்தினனே. (கச)

(இ - ள்) யான் - நான், அறியும் - அறியத்தக்க, சுடர் ஆகிநின்றேன் - தேஜோமயமாகி இருக்கிறேன், மற்றும் யாதும் அல்லேன் - வேறொரு பொருளும் அன்று, வான் - பரமாகாசத்தில், அமரும் - வீற்றிருக்கின்ற, திருமால் அடியேன் - திருநாராயணனுக்கு அடிமையானவன், மற்று ஓர் பற்றும் இலேன் - வேறொரு ஆதாரமும் உடையவன் அன்று, மானம் இலா - அளவில்லாத, அடிமைப்பணி - கைங்கர்யங்களை, பூண்ட - மேற்கொண்ட, மனத்தினன் - மனத்தை உடையவனாகி, தான் அமுதாம் அவன் தன் - ஸ்வயமே அமிர்தம் போன்ற அவனுடைய, சரணே - பாதமே, சரண் என்று - சரணம் என்று, அடைந்தேன் - புகுந்தேன். (எ - று)

(க - து.) தேஜோமயமாகின்ற நான் எம்பெருமானது திருவடிகளில் அளவில்லாவடிமை செய்யவேண்டி வேறொரு ஆதாரமுமில்லாமல் ஸ்ரீமந்நாராயணன் திருவடிகளையே சரணமாக அடைந்தேன் என்கிறார்.

(கு - பு.) மானமென்பது இங்கு அளவைக் குறிக்கின்றது. 14.

இதுவுமது.

சீலங் கவர்ந்திடுந் தேசிகர் தேசின் பெருமையினால்
தூலங் களன்ன துரிதங்கள் மாய்ந்தன துஞ்சறரும்
கோலங் கழிந்திடக் கூறிய காலங் குறித்துநின்றோம்
மேலிங் குநாம்பிற வோம்வேலை வண்ணனை மேவுதுமே.(கரு)

(இ - ள்.) சீலம் கவர்ந்திடும் - ஸதாசாரத்தையுடையவராகிய, தேசிகர் - ஆசார்யருடைய, தேசின் - ஒளியினுடைய, பெருமையினால் - மேன்மையிதனால், தூலங்கள் அன்ன - தூசுகளைப் போன்ற, துரிதங்கள் - பாவங்கள், மாய்ந்தன - ஒழிந்தன, நாம்—, துஞ்சல் தரும் - அஞ்ஞானத்துக்கு இருப்பிடமான, கோலம் கழிந்திட - இந்தச் சரீரம் போக, கூறிய காலம் - (நாம் கேட்டபடி எம் பெருமான் அங்கீகரித்து) நியமித்த காலத்தை, குறித்து நின்றோம் - எதிர்பார்த்திருக்கிறோம், மேல் - இனிமேல், இங்கு பிறவோம் - இவ்வுலகத்தில் பிறக்கமாட்டோம், வேலை வண்ணனை - கடல் போலும் திருமேனியுடையவனை, மேவுதும் - அடைவோம். (எ - று.)

(க - து.) ஆசார்ய கடாக்ஷத்தால் பாவங்களெல்லாம் தூசு போலே பறந்தன ; இனி இச்சரீரத்தை விட்டு மோக்ஷத்தை அடையத்தக்க காலத்தை எதிர்பார்த்திருக்கிறோமென்கிறார்.

(கு - பு.) சீலங் கவர்ந்திடும் என்றதற்கு நமது நீசத்தன்மையைப் போக்கும் ஆசிரியர் தேஜஸ்ஸு என்றும் பொருள் கூறலாம். ஸ்பர்சவேதி இரும்பைப் பொன்னாக்குவது உண்டே. அப்யுபகத ப்ராரப்தாவஸாநகாலத்தைக் கூறிய கால மென்றது. தேஹாவஸாநத்தி லன்றோ மோக்ஷம் கோரியது. 15.

இதுவுமது.

வண்மை யுகந்த வருளால் வரந்தரு மாதவனார்
உண்மை யுணர்ந்தவ ரோதுவிக் கின்ற வுரைவழியே

திண்மை தருந்தெளி வொன்றாற் றிணியிரு ணீங்கியநாம்
தண்மை கழிந்திடத் தத்துவங் காணுந் திறத்தனமே. (கசு)

(இ - ள்.) வண்மை - கொடுப்பதை, உகந்த - விரும்பிய, அருளால் - கிருபையால், வரம் தரும் - அடியார்க்குக் கேட்ட வரத்தைக் கொடுக்கும், மாதவனார் - திருநாராயணருடைய, உண்மை - ஸ்வபாவத்தை, உணர்ந்தவர் - அறிந்த பெரியோர், ஓதுவிக்கின்ற - சொல்லுவிக்கின்ற, உரை வழியே - இரமப்படி, திண்மை தரும் - திடத்தைக் கொடுக்கின்ற, தெளிவு ஒன்றால் - தெளிந்த ஞானத்தாலேயே, திணி இருள் - மிகுந்த அஞ்ஞானமாகிய இருள், நீங்கிய நாம் - நீங்கப்பெற்ற நாம், தண்மை கழிந்திட - தாழ்மை தானே கழிகையாலே, தத்துவம் காணும் - உண்மை வழியை அறியத்தக்க, திறத்தன - சாமார்த்தியமுடையவராய் விட்டோம். (எ - று.)

∴ (க - து.) மாதவனது ஸ்வரூபத்தை அறிந்த பெரியோர்களது உபதேசத்தால் நாம் தெளிவடைந்து தத்துவ ஞானியாய் விட்டோம் என்பது.

(கு - பு.) தண்மை - இழிவு. திறத்தனம் - குறிப்புவினைமுற்று. 16.

இதுவுமது.

நாரா யணன்பர னுமவ னுக்கு நிலையடியோம்
சோரா தனைத்து மவனுடம் பென்னுஞ் சுருதிகளால்
சீரார் பெருந்தகைத் தேசிக ரெம்மைத் திருத்துதலால்
தீரா மயலகற் றுந்திறம் பாத்தெளி வுற்றனமே. (கஎ)

(இ - ள்.) சீர் ஆர் - மேன்மை பொருந்திய, பெரும் தகை - பெருமைக் குணமுள்ள, தேசிகர் - ஆசார்யர், 'நாராயணன் - ஸ்ரீமந்நாராயணனே, பரன் - பரம்பொருளாம்; நாம் —, அவனுக்கு - அந்த எம்பெருமானுக்கு, நிலை - நிலையான, அடியோம் - சேஷபூதர்கள், அனைத்தும் - எல்லாப்பொருள்களும், சோராது - சிறிதும் தப்பாமல், அவன் உடம்பு - அவனுக்குச் சரீரமாயுள்ளவை,' என்னும் - என்று சொல்லுகின்ற, சுருதிகளால் - வேதங்களால், எம்மைத் திருத்துதலால் - நம்மைத் தெளியச் செய்தமையால், தீரா மயல் - நீங்காத அஞ்ஞானத்தை, அகற்றும் - போக்குகின்ற, திறம்பா - அசையாத, தெளிவு உற்றனம் - தெளிவு அடைந்தோம். (எ - று.)

(க - து.) 'ஸ்ரீமந்நாராயணனே பரம் பொருள்; பிரபஞ்சமெல்லாம் அவனது சரீரம்; நாம் அவனது அடிமைகள்' என்று பெரியோர் வேதங்களால் தெளிவித்ததால், நாம் அஞ்ஞானத்தைப் போக்கி, மெய்ஞ்ஞானமடைந்தோம் என்க.

(கு - பு.) இது, எதிருபகாரத்தை எதிர்பாராத பெருந்தகை யாதலால், 'சீரார் பெருந்தகை' என்றார். 17.

இதுவுமது.

ஒன்றே புகலென் றுணர்ந்தவர் காட்டத் திருவருளால்
அன்றே யடைக்கலங் கொண்டநம் மத்திகி ரித்திருமால்
இன்றே யிசையி லிணையடி சேர்ப்ப ரினிப்பிறவோம்
நன்றே வருவதெல்லா நமக்குப் பரமொன் றிலதே. (கஅ)

(இ - ள்.) உணர்ந்தவர் - உண்மையை அறிந்த பெரியோர், ஒன்றே புகல் என்று - (நம்மைக் காக்கத்தக்கவன் ஸ்ரீமந்நாராயணன்) ஒருவனே என்று உபதேசித்து, காட்ட - (இவனுக்கு சரீராவஸாநகாலத்தில் மோக்ஷம் தந்தருளவேண்டுமென்று) ஸமர்ப்பிக்க, திரு அருளால் - பெரிய பிராட்டியின் கிருபையால், அன்றே - அப்போதே, அடைக்கலம் - அடைக்கலமாக, கொண்ட - அங்கீகரித்தருளிய, நம் - நமது, அத்திகிரி திருமால் - திருவத்தியூரில் விளங்கும் அருளாளன், இசையில் - நாம் ஒப்புக்கொண்டால், இன்றே - இப்போதே, இணை அடி சேர்ப்பர் - தமது திருவடியிலே சேர்த்துக்கொள்வர், இனி பிறவோம் - இனி நமக்கு ஜந்மமில்லை, வருவது எல்லாம் - இனிக் கர்மாநுகுணமாக் நமக்கு நேருமவை யெல்லாம், நன்றே - நல்லவையேயாம்; நமக்கு பரம் ஒன்று இலது - இனி நமக்கு ஒரு பாரமுமில்லை. (எ - று.)

(க - து.) நமக்குப் பேரருளாளன் திருவடி யொன்றே கதியென்று ஆசார்யர்கள் உபதேசித்து ஆசார்ய நிஷ்டையாக நமக்காகப் பரந்யாஸம் செய்ததால் இனி வருவன வெல்லாம் நமக்கு நன்மையே; இனிப் பிறப்பும் கிடையாது என்கிறார்.

(கு - பு.) புண்ய பாபங்களிரண்டையும் அநுபவித்தொழித்தே முக்தி பெற வேண்டியபடியால் 'வருவ தெல்லாம் நன்றே' என்றார். நன்றே - என்பதில் ஏகாரம் தேற்றம். இவனுக்குப் போருளாளப் பெருமாளொருவரே தஞ்சமென்று அபிஸந்திபண்ணி 'இவனைக் காத்தருள வேண்டும்' என்று ஸமர்ப்பிக்க, அப்த பூர்த்தி தினமாகிய அன்றை தினமே 'அப்படியே' என்று அங்கீகரித்தருளிய அருளாளன், 'நாம் இன்று பரமபதம் பெறவேண்டி தேஹாவஸாநத்தை இன்று ஸங்கல்பிக்கவேண்டும்' என்றோமானால் அப்படியே கிருபை செய்வர். எவ்வகையானும் மறுபிறவி நமக்கில்லை; ஆகையால் பயமில்லை அநுபவிக்க அநுபவிக்க வினைகள் கழிவதால் பாரமுமில்லை யென்பது. 18.

எண்சீரடியாசிரிய விருத்தம்.

சிறுபயனிற் படியாத தகவோ ரெம்மைச்
சேர்க்கவடைக் கலங்கொண்ட திருமா றானே
மறுபிறவி யறுத்தழியா வானில் வைக்கும்
மனமேநீ மகிழாதே யிருப்ப தென்கொல்.

உறுவதுனக் குரைக்கேனிங் கிருந்த கால
மொருபிழையும் புகுதாத வுணர்த்தி வேண்டிப்
பெறுவதெல்லா மிங்கேநாம் பெற்று வாழப்
பேரடிமை யாலேதென் றிகழேனீயே. (௧௬)

(இ - ள்.) மனமே - என் மனமே! சிறுபயனில் - அல்ப புருஷார்த்தங்களிலே, படியாத - இழியாத, தகேவார் - நற்குணங்களையுடைய ஆசார்யர், எம்மை - நம்மை, சேர்க்க - ஸமர்ப்பிக்கவே, அடைக்கலம் கொண்ட - ரக்ஷ்யவஸ்துவாக நம்மை ஏற்றுக்கொண்ட, திருமால் - திருநாராயணர், மறுபிறவி அறுத்து - இனி நமக்குப் பிறப்பை ஒழித்து, அழியா வானில் - நித்யவிபூதியில், வைக்கும் - வைத்தருளுவார்; (ஆகையால்) நீ மகிழாதே இருப்பது என் கொல் - நீசந்தோஷியாமலிருப்பானேன்? உனக்கு உறுவது - உனக்குத் தகுந்ததை, உரைக்கேன் - சொல்லுவேன், இங்கு - இவ்வுலகத்தில், இருந்த காலம் - இருக்கு மளவும், ஒரு பிழையும் - ஒரு குற்றமும், புகுதாத - அடையாத, உணர்த்தி - ஞானத்தை, வேண்டி - பிரார்த்தித்து அடைந்து, பெறுவது எல்லாம் - பரமபதத்தில் அடையும் கைங்கரியம் எல்லாம், இங்கே - இவ்விடத்திலேயே, நாம் பெற்று - நாம் அடைந்து, வாழ - வாழ்வதால், பேர் அடிமையால் - இங்குச் செய்யும் பெரிய கைங்கரியத்தால், ஏது என்று - என்ன உபயோகமென்று, நீ இகழேல் - நீ அவமதியாதே. (எ-று.)

(க - து.) 'மனமே! ஆசார்யரது கிருபையால் நம்மை எம்பெருமான் அடைக்கலமாகக் கொண்டுவிட்டான், இனிமேல் நீ ஒரு தவறும் நேராதபடி கைங்கர்யங்களைச் செய்துகொண்டு சந்தோஷமாயிரு' என்கிறார்.

(கு - பு.) இங்கிருக்குங் காலத்திலும் அவன் ஆணைக்குட்பட்டு நடப்பதால் இதுவும் அவனது கைங்கரியமேயாம் என்கிறார். உணர்த்தி - உணர்ச்சி. கொல் - அசை.

' [illegible] '

என்று பிரார்த்தித்தது தோன்ற 'ஒருபிழையும் புகுதாத' வென்றார். உணர்த்தி - ஞானம். அதன் கார்யமான கைங்கர்யத்தைச் சொல்லுகிறது. கைங்கர்யம் சேஷத்வஜ்ஞான கார்யம். அது ஸ்வயம் ப்ரயோஜனமானது; அமுத முண்பது போலே. 19.

(இன்னும் வரும்.)

1916-ம் வருஷம் டிஸம்பர் மாஸத்தில் சேர்ந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸதஸ்ஸின் சாயா படம் (Group Photo) விலைக்கு அகப்படும். காபி ஒன்றுக்கு ரூபாய் 2. படத்தை அபேக்ஷிக்கிறவர்கள் மயிலாப்பூர் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்ஸிகளுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑌿𑌯𑍈 𑌨𑌮𑌃.

ஸ்ரீ𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤 𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃.

தத்வஜ்ஞாநம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகையில் 'நிர்வேத' விஷயமான ஸம்சயத்தையும், அதற்கு ஒரு ஸ்வாமி 'யதாமதி ஸமாதாநம் விஜ்ஞாபநம் செய்த'தையும், பராமர்சித்த ஸதாசார்ய கடாக்ஷலப்த ஸத்ஸம்ப்ரதாய ரஹஸ்யர்களான பண்டிதர்களுக்கு, ஸமாதாநம் எழுதவந்த ஸ்வாமி 'தத்வாஜ்ஞாந'த்தை அவலம்பித்தது ந்யாய்யமென்றே தோன்றக்கூடும். ஆனாலும், 'தத்வாஜ்ஞாந'த்தை அவலம்பிப்பது ந்யாய்யமன்று என்றும், 'தத்வஜ்ஞாந'த்தை ஆதரிப்பதே ஆசார்யர்களுடைய திருவுள்ளமென்றும் அடியேனுக்குத் தோன்றுகிறபடியால் அதை நிரூபிக்க ப்ரயத்நப்படுகிறேன்.

இதில் 'தத்வஜ்ஞாந'த்தை ஆதரிப்பதற்கு அநுகூலங்களான ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகளை ப்ரதமம் நிரூபித்துவிட்டு, ஸ்ரீமதாசார்ய ஸூக்திகள் 'தத்வாஜ்ஞாந'த்திற்கு ஸர்வாத்மநா விலகிநிற்பவை என்பதைப் பிறகு வெளியிட உத்தேசிக்கிறேன்.

"𑌯𑌦𑌾 𑌤𑍇 𑌮𑍋𑌹𑌕𑌲𑌿𑌲𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌤𑌿𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 । 𑌤𑌦𑌾 𑌗𑌨𑍍𑌤𑌾𑌸𑌿 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌂 𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍁𑌤𑌸𑍍𑌯 𑌚 ॥".

இது பகவத்கீதையின் இரண்டாவது அத்யாயத்தில் 52-வது ச்லோகம். ["ஹே! அர்ஜுநா! உன்னுடைய புத்தியில் நின்றும் எப்போது மோஹமென்னும் மயக்கம் நீங்குமோ, அப்பொழுது நீ இதுவரையில் கேட்டதைப்பற்றியும் இனி கேட்கவேண்டியதைப் பற்றியும் நிர்வேதத்தை அடைவாய்" என்பது ச்லோக தாத்பர்யம்.]

ஸ்ரீ கீதாபாஷ்யத்தில், "உக்தப்ரகாரேண கர்மணி வர்த்தமாநஸ்ய தயா வ்ருத்த்யா நிர்தக்தகல்மஷஸ்ய தே புத்தி: யதா மோஹகலிலம்—ஃபலஸங்கமோஹக்ருதம் மோஹரூபம் கலுஷம் வ்யதிதரிஷ்யதி, ததா இத: பூர்வம் த்யாஜ்யதயா ச்ருதஸ்ய ஸதோ இத: பச்சாச்ச்ரோதவ்யஸ்ய ச க்ருத்ஸ்நஸ்யைவ நிர்வேதம் கந்தாஸி கமிஷ்யஸி" என்று அநுக்ரஹிக்கப்பட்டிருக்கிறது.

இதன் தாத்பர்யமாவது:— கீழே சொன்னபடி கர்மாநுஷ்டாநம் செய்து பாபத்தை விலக்கின உன்னுடைய புத்தியானது, எப்போது அல்பங்களான பலங்களைப்பற்றக் காரணமான மோஹமென்னும் மயக்கத்தைத் தாண்டப்போகிறதோ, அப்போது நம்மிடமிருந்து இதற்குமுன் ஹேயங்களென்று [தள்ளத்தகுந்தவை] கேட்டிருக்கும் பலம் முதலியவைகளைப் பற்றியும், இதற்குப் பின் கேட்கப்படவேண்டிய பலாதிகளைப்பற்றியும் தானாகவே நிர்வேதத்தை அடையப்போகிருய் என்பதாம். இந்த ப்ரகரணத்தில் தாத்பர்ய சந்த்ரிகையில்—"ஸ்வவக்ஷ்யோக்தப்ரகாரோ ஹேயோபாதேய விபாகோ யுக்த்யாகமநிரபேக்ஷம் தவைவ ஸ்வயம் ஸ்புடோ பவிஷ்யதீதி வக்தாரமாவிஷ்கரோதி—'யதா' இதி ச்லோகேந. மோஹகலிலசப்தேந ப்ரக்ருதம் தத்ஸ்யத் - உக்தம் - புண்யபாபரூபஸாம்ஸாரிக கர்மோச்யதே ஸம்ஸாரஹேது ஸ்வாரஸ்யாதி ரஹிதகர்மணா நிவர்த்யம். காரணாபாவாத் கார்யாபாவ இதி பாவ:. ஃபலஸங்கமோஹக்ருதமிதி - கர்மநோ மோஹஸ்ய ஜநநீம் நிவ்ருத்திப்ரதிபாதகத்வம் த்ருஶ்யதே...... .... த்யாஜ்யதயேதி நிர்வேதப்ராமாண்யோக்தம் - நஹி ச்ரோதவ்யே ச்ருதேஷு ச உபாதேயாம்சே நிர்வேதோ யுக்த:. யதா ச்ரோதவ்யச்ருதயோருபாதேயாம்சேஷ்யஸ்வாய ச்ருதஸ்ய த்யாஜ்யதயேதி விசேஷணம். ஹேயஸஜ்ஜாதீயோபாதேயத்வஞ்ச வைராக்யஸ்ய ஹேதுரிதி நிர்வேத:

ஸ ச ஸ்வாத்மஜ்ஞாநரூப: யதா (யா) ஹ மந்த்ரோபநிஷதி ப:— 'தத்வஜ்ஞாநாதேவ தீக்ஷ்ணாதே நிர்வேத ஸ்ஸாத்மஜநம்' இதி..... வைராக்யமிதி..." என்று வ்யாக்யாநம் செய்யப்பட்டிருக்கிறது.

இதில் ப்ரக்ருதோபயுக்தமான பாகங்களுக்கு மாத்ரம் தமிழில் தாத்பர்யம் எழுதுகிறேன். "நாம் க்ரஹித்துக் கொள்ள வேண்டியவை இவை, விடவேண்டியவை இவை, என்னும் பிரிவு உனக்கே நன்றாய்த் தெரியவரும். இதற்காக நீ யுக்தியையாவது ஶாஸ்த்ரத்தையாவது தேடவேண்டிய அவஶ்யமில்லை யென்று வேடிக்கையாய்ப் பகவான் அர்ஜுநனுக்குச் சொல்லுகிறார்......... மோஹமென்னும் மயக்கம் ஸம்ஸாரத்தில் ஏற்படும் அல்லது ஸம்ஸாரத்தை உண்டாக்கும் புண்யகர்மங்களாலும் பாபகர்மங்களாலும் உண்டாகிறது. பலத்தில் ஆசைவைக்காமல் கர்மம்செய்தால் புண்ய பாபகர்மங்கள் போய்விடும். அப்பொழுது மோஹத்திற்குக் காரணங்களான புண்ய பாபகர்மங்கள் இல்லாமையால் இவைகளின் கார்யமான மோஹம் உண்டாக வழியில்லை யென்பது கருத்து. "ஃபலஸங்க மோஹக்ருதம் மோஹரூபம் கலுஷம்' என்று பாஷ்யத்தில் 'ஃபலஸங்க மோஹக்ருதம்' என்கிற விஶேஷணம் கொடுத்திருப்பதனால்—இப்போது பலாபிஸந்தி ரஹிதமான கர்மம் இல்லாமையால் புண்ய பாப ரூப ஸாம்ஸாரிக கர்மம் உண்டாகவும், அதனால் மோஹம் உதிக்கவும் தடையில்லாதபடியால் அந்த மோஹமானது நிர்வேதத்தை உண்டாக்காமல் தடுத்து விடுகிறது—என்று ஏற்படுகிறது. [அதாவது: மதிமயக்கமுள்ள ஸமயத்தில் நிர்வேதம் உண்டாகாதென்றும் மதிமயக்கம் நீங்கி தத்வஜ்ஞாநம் உண்டானல் மாத்ரமே நிர்வேதம் உண்டாகுமென்றும் சொல்லியதாயிற்று.] கேட்கப்பட்டவைகளிலும் கேட்கப்பட வேண்டியவைகளிலும் நமக்கு உபாதேய (எடுத்துக்கொள்ளவேண்டிய) பாகம் நிர்வேதத்தை உண்டுபண்ணமாட்டா தாகையால், அவைகள் நிர்வேத விஷயங்களாவதற்காக [அதாவது: அவைகளைப்பற்றி நமக்கு

நிர்வேதம் உண்டாகிறதற்காக] “ஹேயங்களென்று கேட்கப்பட்ட ஹேயங்களென்று கேட்கப்பட வேண்டிய” என்று பாஷ்யத்தில் சொல்லப்பட்டது. [‘த்யாஜ்யதயா’ என்பது ‘ஶ்ரோதவ்யௌ’, ‘ஶ்ருதயோ꞉’ என்கிற இரண்டிலும் சேர்கிறதாக வைத்துக்கொண்டு இந்த வ்யாக்யாநம் ப்ரவ்ருத்தித்தது] அல்லது ‘த்யாஜ்யதயா’ என்பது ‘ஶ்ருதயோ꞉’ என்கிற விடத்தில் மாத்ரம் தான் அந்வயிக்கிறது. இப்படி ஶ்ருதாம்ஶத்தில் த்யாஜ்யத்வ விஶேஷணம் கொடுத்திருப்பது, ஶ்ரோதவ்யாம்ஶம் உபாதேய விஷயமென்று ஸித்திப்பதற்காக. [அதாவது: ஹேயங்களென்று கேட்கப்பட்டவைகளைப்பற்றியும், உபாதேயங்களென்று கேட்கப்படவேண்டியவைகளைப் பற்றியும் உனக்கு நிர்வேதம் உண்டாகும் என்பது கருத்து.] ஹேயாம்ஶத்தால் நிர்வேதம் உண்டாகலாம்; உபாதேய பாகத்தால் நிர்வேதம் பிறக்குமோவெனில், ஹேயாம்ஶத்தை ஶ்ரவணம் பண்ணி, ‘ஐயோ! வீணாய் இதுவரையில் ஹேயமான பலத்தில் ஆசைவைத்து அழிந்து போனேனே!’ என்று எண்ணி நிர்வேதம் பிறக்குமாப்போலே, உபாதேயாம்ஶ ஶ்ரவணம் பண்ணினாலும், ‘ஐயோ! இப்படிப்பட்ட ஸாரமான உபாதேய பாகத்தைக் கைக்கொள்ளாமல் காலங்கழித்தேனே!’ என்று நினைத்து நிர்வேதம் பிறக்கத்தட்டில்லை யாகையால், ஹேயாம்ஶம் போலவே உபாதேய பாகமும் நிர்வேத காரணமாகக் குறையில்லை. நிர்வேதமாவது, தன்னைத்தான் நிந்தித்துக் கொள்ளல். ‘உண்மையறிவு, ஆபத்து, பொறாமை முதலியவைகளால் தன்னைத் தானே நிந்தித்துக்கொள்வது நிர்வேதம்’ என்று நாட்ய ஶாஸ்த்ரஜ்ஞர்கள் கூறுவார்கள். ஶ்ருதத்தில் த்யாஜ்யாம்ஶமும், ஶ்ரோதவ்யத்தில் உபாதேயாம்ஶமும் நிர்வேத காரணமென்று சொன்னால், ஶ்ருதமான த்யாஜ்யாம்ஶமும் ஶ்ரோதவ்யமான உபாதேயாம்ஶமும் நிர்வேத காரணமென்று சொன்னதாயிற்று. த்யாஜ்யாம்ஶ ஶ்ரவணமும் உபாதேயாம்ஶ ஶ்ரவணமும் நிர்வேத காரணமென்று இதன் நிஷ்க்ருஷ்டார்த்தம் பலித்தது. த்யாஜ்யாம்ஶ ஶ்ரவணமாவது: த்யாஜ்யாம்ஶத்தை த்யாஜ்யாம்ஶமென்று

கேட்டுத் தெரிந்துகொள்வது. உபாதேயாம்ஶ ஶ்ரவணமும் இவ்விதந்தான். எந்த வஸ்து எத்தன்மையுடையதோ அந்த வஸ்துவை அத்தன்மையுடையதாக அறிவதுதான் ‘தத்வஜ்ஞாநம்’ என்று சொல்லப்படும்.

இனி ஸ்ரீ தேசிகன் “ப்ரஹ்லாத³ஸநகாத்³யாஸ்து வேதி³ந꞉”, “தத்த்வஜ்ஞாநவதீ த்³ருஷ்டிப்ராயேஷ꞉——” என்று காட்டியிருப்பதால் காந்தர்வவேதிகளின் க்ரந்தங்களிலிருந்து இதற்கு அநுகுணமான ப்ரமாணங்களை எடுத்துக்காட்டுவது உசிதமென்று நினைத்து, சில க்ரந்தங்களின் வாக்யத்தை எழுதுகிறேன்.

நாட்ய ஶாஸ்த்ரத்தில் பாவ வ்யஞ்ஜநாத்யாயத்தில் “தத்ர நிர்வேதோ நாம தா³ரித்³ர்யாவமாநாதி⁴க்ஷேபாக்ருஷ்ட க்ரோத⁴ தாட³நேஷ்டஜநவியோக³ தத்த்வஜ்ஞாநாதி³பி⁴ர்விபா⁴வைஸ்ஸமுத்பத்³யதே. தமபி⁴நயேத் ருதி³த நிஶ்வஸிதோச்ச்வஸித ஸம்ப்ரதா⁴ரணாதி³பி⁴ ரநுபா⁴வை꞉” என்று பரதமஹர்ஷி சொல்லுகிறார். “தத்த்வஜ்ஞாநாத்து ஶமதா³ பா⁴வதோ வ்யபி⁴சாரத꞉ । ஶாந்தேரபி ரவேஷ்யா இதி நிர்வேத³ உச்யதே” என்று பரதரஸ ப்ரகரண க்ரந்தத்தில் எழுதியிருக்கிறது. ஸ்ரீ ஶார்ங்கதேவனும் நர்த்தநாத்யாயத்தில் ஶாந்த ரஸ நிரூபண ப்ரகரணத்தில் “ஸம்ஸார பீ⁴ருதா தோ³ஷ த³ர்ஶநம் விஷயேஷ்வ ச..........நிர்வேத³ஸ்தத்த்வபோ³தோ⁴த்த²ஸ் ஸ்தா²யீ ஶாந்தோ ரஸோ மதௌ” என்றும், வ்யபிசாரி பாவநிரூபணாவஸரத்தில் “ஆக்ரோஶாதி⁴க்ஷேபாபமாநதா³ரித்³ர்யேஷ்ட விரஹை꞉ பரவ்ருத்³தி⁴ த³ர்ஶநம் - நீசேஷ்வபி விபா⁴வா꞉ ஸ்யு꞉ த்ரபாத³ய꞉ தத்த்வபோ³த⁴ஸ்ய யத்ர ஸ்யாத³நுபா⁴வா꞉ ஸ்த்ரோதநம் - நிஶ்வாஸோச்ச்வஸிதே தீ³நத்வம் ஸம்ப்ரதா⁴ரணம் - ஐக்ஷ்யாதய꞉ ஸ நிர்வேதோ³ பா⁴வ ஸ்ஸூரிபி⁴ரீரித꞉” என்றும் ஸங்கீத ரத்நாகரத்தில் சொல்லுகின்றான். ‘தத்வஜ்ஞா

𑌨𑌾𑌪𑌦𑍀𑌰𑍍𑌷𑍍𑌯𑌾𑌦𑍇𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌃 𑌸𑍍𑌵𑌾𑌵𑌮𑌾𑌨𑌨𑌮𑍍’ என்று தசரூபகத்திற் போலவே ஸாஹித்ய தர்ப்பணத்திலும் காணப்படுகிறது. ‘𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 - 𑌦𑍇𑌹𑌵𑌿𑌷𑌯𑌾𑌦𑌾𑌵𑌨𑌾𑌦𑍇𑌯𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍇𑌵’ என்று தர்க்கவாகீசன் வ்யாக்யானிக்கிறான். ‘𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌪𑌦𑍀𑌰𑍍𑌷𑍍𑌯𑌾𑌦𑍇𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑍋 𑌨𑌿𑌷𑍍𑌫𑌲𑌤𑍍𑌵𑌧𑍀𑌃’ என்று ப்ரகாசத்திலும் மகரந்தத்திலும் சிந்தாமணியிலும் ப்ரதீபத்திலும் சொல்லப்படுகிறது. “𑌦𑌾𑌰𑌿𑌦𑍍𑌰𑍍𑌯𑌾𑌕𑍍𑌷𑍇𑌪𑌤𑌾𑌡𑌨𑌾𑌦𑍀𑌷𑍍𑌟𑌵𑌿𑌯𑍋𑌗𑌾𑌵𑌮𑌾𑌨𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌸𑍍𑌵𑌾𑌵𑌮𑌾𑌨𑌨𑌾𑌤𑍍𑌮𑌕𑍋 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌃 - 𑌸 𑌰𑍋𑌦𑌿𑌤𑌶𑍍𑌵𑌸𑌿𑌤𑌾𑌨𑌾𑌦𑍇𑌯𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌃” என்று ஹேமசந்த்ரனும், ‘𑌦𑍁𑌃𑌖𑍇𑌰𑍍𑌷𑍍𑌯𑌾𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌬𑍋𑌧𑌾𑌦𑍇𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑍋 𑌨𑌿𑌷𑍍𑌫𑌲𑌤𑍍𑌵𑌧𑍀𑌃’ என்று வித்யாநாதனும் எழுதுகிறார்கள். ரஸகங்காதரத்தில் சாந்தரஸஸ்தாயி பாவமான நிர்வேதத்தை ‘𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌿𑌤𑍍𑌯𑌵𑌸𑍍𑌤𑍁𑌵𑌿𑌚𑌾𑌰𑌜𑌨𑍍𑌮𑌾 𑌵𑌿𑌷𑌯𑌵𑌿𑌰𑌾𑌗𑌾𑌖𑍍𑌯𑍋 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌃’ என்று ஜகந்நாதன் நிரூபித்திருக்கிறான். ‘𑌸𑍍𑌵𑌾𑌵𑌮𑌾𑌨𑌨𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌃 - 𑌸𑌂𑌸𑌾𑌰𑍇 𑌹𑍇𑌯𑌤𑌾𑌭𑌾𑌵𑌨𑌾 - 𑌤𑌤𑍍𑌰 𑌵𑌿𑌭𑌾𑌵𑌾𑌃 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌪𑌦𑍀𑌰𑍍𑌷𑍍𑌯𑌾𑌦𑌯𑌃 - 𑌅𑌨𑍁𑌭𑌾𑌵𑌾𑌃 𑌦𑍈𑌨𑍍𑌯𑌨𑌿𑌃𑌶𑍍𑌵𑌾𑌸𑌾𑌶𑍍𑌰𑍁𑌪𑌾𑌤𑌾𑌦𑌯𑌃’ என்று ரஸதரங்கிணியில் சொல்லியிருக்கும் ரீதியை அநுஸரித்தே ரஸார்ணவ ஸுதாகர ரஸசந்த்ரிகா ரஸமீமாம்ஸா ரஸஹாராதிகளிலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இவைகளின் அர்த்தத்தை (ஸுஸ்பஷ்டமாகையால்) லேகநதைர்க்யத்துக்குப் பயந்து தமிழில் எழுதவில்லை. இவைகளிலிருந்து தத்வஜ்ஞாநம் நிர்வேதத்துக்குக் காரணமென்று ஏற்படுகிறபடியால் காந்தர்வவேதிகளை ஸம்வாதத்திற்கு எடுத்த ஸ்ரீதேசிகனுக்கும் தத்வஜ்ஞாநபாடம் தான் ஸம்மதமென்று நிஸ்ஸம்சயம் சொல்லக்கூடுமல்லவா?

இந்த கீதாச்லோகத்தின் வ்யாக்யாநத்தில் ‘𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌂 𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌂’ என்று ஒரு பாஷ்யகாரரும், (𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌂) “𑌶𑌾𑌮𑌂 - 𑌪𑍍𑌰𑌯𑍋𑌮𑌾𑌸 ‘𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌪𑌾𑌣𑍍𑌡𑌿𑌤𑍍𑌯𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌦𑍍𑌯’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 - 𑌤𑌥𑌾 𑌸𑌤𑌿 𑌪𑌾𑌣𑍍𑌡𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌸𑍍𑌸𑌂𑌪𑌦𑌾 - 𑌨 𑌚 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑌾𑌂 𑌸𑌮𑌵𑌨𑍍𑌤𑌮𑌹𑍍𑌮𑌾𑌦𑌿𑌷𑍁 𑌵𑌿𑌰𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑌂𑌭𑌵𑌤𑌿” என்று மற்றொரு பாஷ்யகாரரும் சொல்லியிருக்கிறார். அதாவது:—நிர்வேதமென்றால் வைராக்யமென்று ஒருவருடைய அபிப்ராயம். பகவந் மஹிமையில் வைராக்யம் உண்டாகமாட்டாதாகையாலும் ‘𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃’ என்கிற ச்ருதியில் ‘𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌦𑍍𑌯’ என்பதற்கு ‘அடைந்து’ என்று எல்லாரும் அர்த்தம் செய்திருப்பதாலும் ததநுகுணமாக இவ்விடத்திலும் லாபார்த்தமாகவே நிர்வேத பதத்தை வ்யாக்யானிக்கவேண்டுமென்று மற்றொரு பாஷ்யகாரின் கருத்து.

ஸ்ரீதேசிகனோ நிர்வேதத்திற்கும் வைராக்யத்திற்கும் ஸ்வரூபத்திலும் பலத்திலும் பேதமிருப்பதாலும் பௌர்வாபர்யமடியாகக் கார்யகாரண பாவம் சொல்லக்கூடியதாயிருப்பதாலும், கீழே காட்டியபடி உபாதேய வைத்ருஷ்ண்ய பராமர்சமும் நிர்வேத ஹேதுவாகிறபடியால் விரக்தி பூர்வபாவியான நிர்வேதத்தை [ஸ்வாவமாநநத்தை]யே இவ்விடத்தில் சொல்லத் தட்டில்லாதபடியாலும், ‘𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌦𑍍𑌯’ என்னுமிடத்தில் 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 ஸ்வீகரித்த லாபார்த்தகத்வத்தை இங்கேயும் ஆச்ரயிக்கவேண்டிய நிர்ப்பந்தமில்லாதபடியாலும், ப்ரஸித்தமான நிர்வேத பதார்த்தத்தைப் பரித்யாகம் பண்ணுவது லோகவேதாதிகரண ந்யாய விருத்தமானபடியாலும், காந்தர்வ சாஸ்த்ர ஸம்மதமான அர்த்தம் ‘𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌕𑌰𑍍𑌮𑌚𑌿𑌤𑌾𑌨𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌮𑌾𑌯𑌾𑌨𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌕𑍃𑌤𑌃 𑌕𑍃𑌤𑍇𑌨’ என்கிற முண்டக ச்ருதியால் அநுக்ரஹீதமாயிருக்கிறபடியாலும், முண்டக ச்ருதியிலும் சாஸ்த்ர ச்ரவணோபயோகியான அபரவைராக்யத்தை நிர்வேத சப்தார்த்தயாக ஸ்வீகரிப்பதைக் காட்டிலும் உக்தலக்ஷணமான நிர்வேதத்தையே அங்கீகரிப்பது அத்யந்த ஸமுசிதமாயிருக்கிறபடியாலும், இவ்விடத்தில் மற்றவர்களைப்போல் எழுதாமல் பரதசாஸ்த்ர லக்ஷிதமான நிர்வேத பதார்த்தத்தையே ஸ்வீகரித்தருளினர்.

நிர்வேதமாவது:—ஹேயோபாதேயங்களைத் தெரிந்துகொண்டு ஹேயங்களை ப்ரியமாக பாவித்தோமே யென்றும், உபாதேயங்களை உபேக்ஷித்தோமே யென்றும் பராமர்சித்துத் தன்னையே தான் வெறுத்தல். வைராக்யமாவது:—'த்ருஷ்டாநுச்ரவிக விஷய விதருஷ்ணஸ்ய வசீகாரஸம்ஜ்ஞா வைராக்யம்' என்று யோகதர்சநத்தில் சொன்னபடி ஐஹிகாமுஷ்மிக ஸுகாபாஸங்களில் ஈடுபடாமை. இது இவைகளுக்குள்ள ஸ்வரூபபேதம்.

"இப்படி விவேகமூல நிர்வேத பூர்த்தியாலே அபாய ப்ராவண்யமற்றாலும், ஸாவசேஷமேந வஸ்யாதி யென்னுமளவாக ஸ்த்வமடியாய் ஐஹிகாமுஷ்மிக ஸுகஸங்காநுஷங்கத்தாலே போகஹேது புண்யங்களாகிற பொன்விலங்குகளைப் பூட்டிக்கொள்ளுமாகில் இவன் முமுக்ஷுவல்லனும். ஆகையால் கடையறப் பாசங்கள் விடும்படி இதர ஸுக தோஷங்களை யதாவஸ்திதமாக அநுஸந்திக்க வேண்டும்" என்றும், "இப்படி விவேக விசேஷத்தாலே ஆத்மாபஹாராதி நிவ்ருத்தியும், நிர்வேத விசேஷத்தாலே விஹித நிவ்ருத்தியும், விரக்தி விசேஷத்தாலே பந்தக காம்ய நிவ்ருத்தியும் பிறந்தாலும்" என்றுமுள்ள ஸ்ரீ தேசிக ஸூக்தியால் இவைகளின் பலபேதம் கண்டுகொள்ளக்கடவது.

பர்வங்களின் ஸந்நிவேசம் பௌர்வாபர்யமடி பற்றிவரும் ஹேது பலபாவத்தில் பர்யவஸிக்கிறபடியால் விவேகத்தால் நிர்வேதமும், நிர்வேதத்தால் விரக்தியும் பிறக்குமென்று சொல்லத் தட்டில்லை. 'விவிக்த நிவிஷ்ட ஸ்ருதிர் விஷயவ்ருத்தி நிவ்ருத்தவாந் விரக்திவசிரம்ஹண......' என்கிற ஸங்கல்ப ஸூர்யோதய பத்யத்திலும் இவ்வர்த்தத்தைக் காணலாம்.

ஹேயஸங்க பராமர்சத்தாலும், உபாதேய வைத்ருஷ்ண்ய பராமர்சத்தாலும் நிர்வேதம் உண்டாகுமென்று திருவுள்ளம்பற்றித் தான் ஸ்ரீ தேசிகன், நிர்வேத பர்வாவில், "இப்படி தானும் பிறரும் தனக்கு சேஷியும் தஞ்சமும் போக்யமு மன்றென்று

தோன்றும்படி..................நீ பகவத் கிங்கரனென்றால் 'ஓம்' இன்றிசையாதே யமகிங்கரர்க்கு இடமாம்படி இந்த்ரிய கிங்கரனாய்ப் போந்தபடிகளையும் .... முன்னடப்பைப் புரிந்து பார்த்து, 'வாடினேன் வாடி,' 'வாணிலா முறுவல்,' 'தாயே தந்தை' இத்யாதிகளில்படியே பச்சாத்தாபம் பிறந்து பழுதே பலபகலும் போயினவென்று அஞ்சியழ ப்ராப்தமாயிருக்க, ப்ரக்ருதி வேதாளீ பரவசனாய் 'க்ஷாமோதித நவஸ்தவாந்' என்னும்படி கலங்கிக் கண்டவாறு திரிந்தபடிகளையும் கண்டு, 'க்ஷோ ஹா மத்ய ஸ்ருதீ பாரதா நிஷ்டோ ஜநஸ்ய கதி:,' 'யானே யென்னை யறியகிலாதே யானே யென்றனதே யென்றிருந்தேன்' இத்யாதி பரிதேவநங்களைப் பண்ணும்படி முன்பு ஸாத்விக ஸம்பாஷணாதிகளாலே முகிழ்த்த நிர்வேதம்" என்று அம்சத்வயத்தையும் எடுத்துக் காட்டியருளினார். இவ்வர்த்தம் நிர்வேத காரிகையிலும் மோக்ஷ தர்மாந்தர்க்கத மங்கி நீதையிலும் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் முமுக்ஷுத்வாதிகார உத்தரக்ருத்யாதிகாரங்களிலும், பகவத்விஷயம் 7-வது சதகத்திலும் க்ரோடீக்ருதமாயிருக்கிறது.

இனி ஸ்ரீ தேசிகன் ஸூக்திகளிலிருந்தே ஹேயஸங்க பராமர்ச உபாதேய வைத்ருஷ்ண்ய பராமர்ச ரூபமான தத்வஜ்ஞாநம் தான் நிர்வேதத்துக்குக் காரணமென்பதை எடுத்துக் காட்டுகிறேன்.

தாத்பர்ய சந்த்ரிகையில், 'ஹேயஸம்ஸ்பர்சாபாதேய வைத்ருஷ்ண்யம் ச வைராக்யஸ்ய ஹேதுர் ஹி நிர்வேத: ஸ ச ஸ்வாவஜ்ஞாரூப:' என்று நிரூபித்துவிட்டு அதற்கு உபஷ்டம்பகமாய், 'யதா ஹம் மஹாஸ்வப்நே ஹிதஜ்ஞாநாபேக்ஷ்யா நிர்வேத ஸாவதீ நநா' என்று எடுத்திருப்பதால் 'வைராக்யஸ்ய' என்று ஸ்வஸ்யயத்தால் அவமதமான ப்ரக்ருத்யர்த்த பராமர்ச காரணத்வம், தாத்ருச பராமர்சாபிந்நமான தத்வஜ்ஞாநத்துக்குக் காந்தர்வவேதி ஸம்மதமான விபாவத்வரூபமாய்ப் பலிப்பது சாஸ்

த்ரஜ்ஞர்களுக்கு ஸ்பஷ்டம். ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் உத்தர க்ருத்யாதிகாரத்தில், "இப்படி தனக்கு அநாதிகாலம் பிறந்த அநர்ஹதையையும் அதனடியாக விழுந்த கைங்கர்யத்தையும் பார்த்து 'பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பும்' என்றலற்றப் பண்ணும் நிர்வேத ப்ராசுர்யத்தாலே அவஸந்நனாகாதே,...............அவதார ரஹஸ்யாதிகளாகிற தீர்த்தங்களை அவகாஹித்துத்தேறி" என்று அநுக்ரஹித்திருப்பதால், அம்ஸத்வய பராமர்ஸரூபமான தத்வஜ்ஞாநம் நிர்வேதகாரணமென்பது பெறப்பட்டது.

ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் 10-வது அங்கத்தில் "𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 - (𑌸𑌾𑌵𑌜𑍍𑌞𑌂 𑌪𑌰𑌾𑌵𑍃𑌤𑍍𑌯 [illegible]) [illegible] 𑌨𑌿𑌰𑍍𑌦𑌯 [illegible] 𑌦𑍁𑌰𑍍𑌲𑌲𑌿𑌤 [illegible]......... [illegible] 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿 [illegible] 𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌨𑍍𑌧𑌃......... [illegible]" என்கிற புருஷப்ரத்தா ஸம்வாதத்திலும் பூர்வோக்தமான அம்ஸத்வய பராமர்ஸரூப தத்வஜ்ஞாநம் நிர்வேத காரணமென்பது மர்ப்பிதமாயிருக்கிறது.

"𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯 [illegible] - [illegible] (𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌰𑌤𑍍𑌨𑌮𑍍)" என்று ஸ்தோத்ரரத்ந பாஷ்யத்தில் ஸ்ரீ தேசிகன் அம்ஸத்வய பராமர்ஸத்தைக் காட்டியிருக்கிறார். பரமபதஸோபாநத்தில் 'கண்டவாறு திரிந்த படிகளையுங் கண்டு' என்று அம்ஸத்வய பராமர்ஸத்தைக் காட்டிவிட்டு, 'அநாதிமாயா நித்ரையாலே உறங்கினவனுக்கு உணர்த்தியாலே நிர்வேதம் பிறந்தால் இது டம்பதர்ப்பாதிகளான ஆஸுர ஸ்வபாவங்களை அடியறுத்து அமாநித்வாதிகளான ஆத்ம குணங்களோடே அவிநாபூதமாய் அபவர்க்க ஸாதநாதிகாரியாக்கும்,

என்று ப்ரபோதத்தை [தத்வஜ்ஞாநத்தை] நிர்வேதகாரணமென்று [illegible] ஸ்ரீதேசிகன் அநுக்ரஹித்திருக்கிறார்.

"மறுத்தார்திருவுடன் மார்பிற்றரித்தவன் வாசகத்தை
மறுத்தார்மயக்கமு மற்றதனால் வந்தமாராகும்
நிறுத்தார்பவத்தி னெரோருழன்றமை கண்டதனால்
வெறுத்தாரணெறியே வெள்கியோட விரைவர்களே."

என்கிறபாசுரத்தில் 'உழன்றமை கண்டதனால் வெறுத்து' என்று ஹேயஸங்கபராமர்ஸாத்மகமான தத்வஜ்ஞாநம் நிர்வேதகாரணமென்பதை ஸ்ரீதேசிகன் ஸ்பஷ்டமாய்க் காட்டியிருக்கிறார். இவ்வர்த்தமே,

"வான்பட்ட மன்னிருளின் மயங்குமாறு
மறித்தொருகா லனையூழி சென்றலன்றோ
ஊன்பட்ட வுடலாழி வினையொழிக்கி
லொருகரையுங் காணாதே யொழுகுமாறும்
தேன்பட்ட விடம்போலத் தித்திக்கின்ற
சிறுபயனே யொருபயனென் றருந்துமாறும்
தான்பட்ட படியிந்நேர் தானேகண்டு
தளர்ந்திடுமேல் வளர்ந்திடுமே ஐக்கவாறே"

என்னும் பாசுரத்திலும் 'தான்பட்ட படியிந்நேர் தானே கண்டு தளர்ந்திடுமேல்' என்பதால் அநுக்ரஹிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரத்தில் நிர்வேத பத்ததியிலும் நிர்வேத ஹேதுவான அம்ஸத்வய பராமர்ஸாத்மக தத்வஜ்ஞாநம் நிரூபிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

ஸ்ரீமந் ந்யாய ஸித்தாஞ்ஜநத்திலுள்ள "[illegible] - [illegible] 𑌵𑌿𑌶𑍇𑌷 [illegible]", என்கிற வாக்யத்தை வ்யாக்யாநிக்கிற ப்ரகணத்தில்

ஸ்ரீ ரங்கராமாநுஜ ஸ்வாமி “[illegible]” என்று அருளிச்செய்திருக்கிறார். திருப்புட்குழி ஸ்வாமியின் வ்யாக்யாநத்திலும் இப்படியே எழுதப்பட்டிருக்கிறது.

இதுவரையில், காட்டியிருக்கும் ஸ்ரீமதாசார்ய ஸூக்திகளால் “𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸 𑌹𑍇𑌤𑍁𑌃” என்பது தான் ப்ரமாண ஸம்ப்ரதாய ஸித்தமென்று வ்யுத்பித்ஸுக்களும் அறிந்து கொள்ளக்கூடும். இனி ‘தத்வஜ்ஞாந’ பாடத்தில் காட்டியிருக்கும் அநுபபத்தி நிற்கமாட்டாதென்பதையும், தத்வாஜ்ஞாநபாடம் தான் ஸ்ரீமதாசார்ய ஸம்மதமென்று சொல்வது ஸர்வாத்மநா வ்யாஹதமென்பதையும் நிரூபிக்கிறேன்.

ராயம்பேட்டை உருப்பட்டூர்
சக்ரவர்த்தி. க்ருஷ்ணமாசார்யர்.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ:.

வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

		ரூ.	அ.	பை.
1.	ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்)	0	2	0
2.	ஸ்ரீ த்ராவிடவேத தாத்பர்யம்—(ஸ்ரீ. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது)	0	2	0
3.	ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் சிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்)	0	2	0
4.	ஸ்ரீ பாகவத சதுஸ்லோகீ - (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹமாசார்யர்)	0	4	0
5,	ஸ்ரீ சதுஸ்லோகீ விவரணம்	0	0	4

ஸ்ரீ:.

பூகோள ஸ்வரூபம்.

இக்காலத்தில் பூலோகம் முதலான உலகங்களுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களை சில புத்திமான்கள் ஏதோ ஒருவிதமாக நிஸ்சயித்து வந்தாலும், வேதங்களினதும், அதன் அர்த்தத்தை உள்ளபடி அறிந்தும் தங்களுடைய தபோமஹிமையினால் வஸ்துக்களை உள்ளபடி ஸாக்ஷாத்கரித்து ஸ்ம்ருதி புராணங்களை வெளிப்படுத்தின மஹர்ஷிகளினதும் அபிப்ராயமானது இவ்வுலகங்களை எவ்விதமாகத் தெரிவிக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ள ஆஸ்தையுடைய மஹாபுருஷர்கள் தீபிகை மூலமாக அதைத் தெரிவித்திருப்பதால் அந்த விஷயமாகப் புராணங்களிலும் வேதவாக்யங்களிலும் சொல்வதை ஸங்க்ரஹித்து எழுதுகிறோம்.

தத்கால புத்திமான்கள் சிலகாலமாகத் தாங்கள் உலகங்களை ஸாக்ஷாத்கரித்து வருவதில் அநேகம் விஷயங்கள் முன் தாங்கள் அநுபவித்தபடி இப்போது தோன்றவில்லை யென்றும், வேறுவிதமாகத் தோன்றுகிற தென்றும் எழுதியிருக்கிறார்கள். அதுபோலவே இன்னும் நன்றாக அவர்கள் கவனித்துப் பார்த்துவந்தால், நம் மஹர்ஷிகள் சொல்லுகிறபடியே ஒரு ஸமயம் இவ்வுலகங்களும் அவர்களுக்கே தோன்றினாலும் தோன்றலாமென்பது ஆஸ்திக வித்வான்களின் அபிப்ராயம்.

இவற்றுள் பூமியின் ஸ்வரூபத்தைப்பற்றி ஸ்ரீ விஷ்ணுபுராணம் 2-வது அம்ஸம் 2-வது அத்யாயம் தெளிவாகச் சொல்லுகிறது. ஸ்ரீ பாகவதம், வாயுபுராணம் முதலானவைகளும் நன்றாக மொழிகின்றன.

நம் மஹர்ஷிகளுடைய வாக்யங்கள் வேதாந்த தத்வவிஷயத்தில் சில மந்தமதிகளுக்கு ஒன்றுக்கொன்று விருத்தங்கள்போல தோன்றினாலும் இப்பூகோளம் முதலான விஷயங்களில் ஒரே அபிப்ராய முள்ளதாகக் காணப்படுகின்றன.

இந்த பூமியை நன்றாக விகஸிதமான தாமரைப்பூவுக்கு ஒப்பாகச் சொல்லுகிறார்கள். இதன் மேல்பாகம் தட்டையானது. பஞ்சாஸத்கோடி

யோஜனை விஸ்தாரமுள்ள இப்பூமி, உப்பு, கரும்புரஸம், கள், நெய், தயிர், பால், சுத்தஜலம் என்கிற 7 - [illegible]மான ஸமுத்ரத்தினால் 7 - பாகமாகப் பிரிக்கப்பட்[illegible]ப்தத்வீபம் * என்று சொல்லப்படுகிறது. இதன் [illegible] தாமரைப்பூவின் மத்தியில் அதன் காய்போல் அடியில் 16,000 யோஜனை அகலமும், மேல்பாகத்தில் 32,000 யோஜனை விஸ்தாரமும், 10,00,00 யோஜனை உயரமுமுள்ள மஹாமேரு வென்னும் ஸ்வர்ணமயமான மலை இருக்கிறது. இது பூமிக்குமேல் 84,000 யோஜனையும், பூமிக்குள் 16,000 யோஜனையும் ஆக லக்ஷம் யோஜனை உயரமுள்ளது,

இம்மலையின் மேல்பாகத்தில் 14,000 யோஜனை விஸ்தாரமுள்ள ப்ருஹ்மாவினுடைய பட்டணம் இருக்கிறது. அதைச் சுற்றிலும் 8 - திக்பாலகர்களுக்கும் 3½-ஆயிரம் யோஜனை விஸ்தாரமுள்ள 8 - பட்டணங்கள் இருக்கின்றன. த்ருவிக்ரமாவதாரம்பண்ணின காலத்தில் உயரத்தூக்கப்பட்ட பகவானுடைய இடதுகாலினால் துளைக்கப்பட்ட அண்டகடாஹத்துக்கு வெளியிலிருந்து பெருகின ஜலத்தை ப்ருஹ்மாவானவர் அர்க்யமாக ஸமர்ப்பித்துப் புண்ய ஜலமாகப் பெருகின கங்கையானது ஷை மஹாமேருவில் ப்ருஹ்மாவினுடைய பட்டணத்தில் ஸீதா, அளகநந்தா, சக்ஷு:, பத்ரா, என்று நான்கு பாகமாகப் பிரிந்து நாலுதிக்கிலும் ஓடி ஸமுத்ரத்தில் சேருகிறது.

கீழே சொன்னபடி 7 - பாகமாகப் பிரிக்கப்பட்ட இந்தப் பூமியினுடைய நடுபாகமாக உப்பு ஸமுத்ரத்தினால் சூழப்பட்ட பூமிக்கு 'ஜம்பூத்வீபம்' என்று பெயர். இது லக்ஷம் யோஜனை விஸ்தாரமுள்ளது; லக்ஷம் யோஜனை விஸ்தாரமுள்ள உப்புஸமுத்ரத்தினால் சூழப்பட்டது; இந்த த்வீபம் மேருவை நடுவில் உடையது. மேருவைச் சுற்றியிருக்கும் பூமிக்கு '𑌇𑌳𑌾𑌵𑍃𑌤𑌂' என்று பெயர்; அதற்கு அடுத்த தென்புறத்திலிருக்கும் பூமிக்கு '𑌹𑌰𑌿𑌵𑌰𑍍𑌷𑌂' என்று பெயர்; அதற்கும் தெற்கில் உள்ள பூமிக்கு '𑌕𑌿𑌂𑌪𑍁𑌰𑍁𑌷𑌂' என்று பெயர்; அதற்கு அடுத்த தென்புறம் பூமிக்கு '𑌭𑌾𑌰𑌤𑌂' என்று பெயர். இப்படியே '𑌇𑌳𑌾𑌵𑍃𑌤' பூமிக்கு வடபுறம் '𑌰𑌮𑍍𑌯𑌕𑌂' என்றும், '𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌂' என்றும், '𑌕𑍁𑌰𑍁𑌵𑌰𑍍𑌷𑌂' என்றும் மூன்று பாகங்கள் இருக்கின்றன. '𑌇𑌳𑌾𑌵𑍃𑌤' பூமிக்குக்கீழ்புறம் '𑌭𑌦𑍍𑌰𑌾𑌶𑍍𑌵𑌂' என்கிற பூமியும், ஷை மேற்புறம் '𑌕𑍇𑌤𑍁𑌮𑌾𑌲𑌂' என்கிற பூமியும் இருக்கின்றன.

---

* ஸப்த த்வீபங்களாவன :—ஜம்பூ, ப்லக்ஷம், ஶால்மலி, குஶம், க்ரௌஞ்சம், ஶாகம், புஷ்கரம் என்பன,

ஆகையால் இந்த ஜம்பூத்வீபமானது கீழ்சொன்னபடி 9 - பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதில் பாரத பூமிக்கு வடக்கு எல்லை ஹிமயமலையும், கிம்புருஷ பூமிக்கு வடக்கு எல்லை ஹேமகூடமலையும், ஹரிவர்ஷத்துக்கு வடக்கு எல்லை நிஷதம் என்கிற மலையும் இருக்கின்றன. நீலம் ஶ்வேதம், ஶ்ருங்கீ என்னும் மூன்று மலைகளும் ரம்யகம், ஹிரண்மயம், குரு என்கிற வடக்கு பூமிகளுக்கு எல்லைகளாக இருக்கின்றன.

இளாவ்ருத பூமிக்கு மேற்புறத்தில் கேதுமால பூமிக்கு எல்லையாகத் தெற்கு வடக்கு 34,000 யோஜனை நீளமாகக் கந்தமாதநம் என்கிற மலையும், கீழ் புறத்தில் பத்ராஶ்வ பூமிக்கு எல்லையாக 34,000 யோஜனை நீளமுள்ள மால்யவாந் என்கிறமலையும் இருக்கின்றன. இவைகளைத்தவிர இளாவ்ருதத்தில் அநேகம் மலைகள் மேருவின் அகன்றிருக்கிற மேல்பாகத்தைத் தாங்குகிற் கேஸரம்போல் இருக்கின்றன. இவைகளை விரிப்பிற் பெருகுமாகையால் அவையெல்லாம் எழுதப்படவில்லை.

இதற்குள் நாம் வஸிக்கும் பூமியானது ஷை த்வீபத்தின் தெற்குக்கோடி தநுஸ் போலிருக்கும் பாரதவர்ஷம் எனப்படுகிறது. முன் பரதன் என்கிற ஒரு மஹா புருஷனால் ஆளப்பட்டபடியினால் 'பாரதம்' என்று காரணப் பெயராயிற்று. இந்தப் பரதனைத்தான் ஜடபாரதர் என்கிற மஹாயோகியாகப் புராணங்கள் சொல்லுகின்றன. இந்த த்வீபத்தின் 9 - பாகத்துக்குள் இந்தப் பாரத பூமியானது கர்ம பூமியென்றும் மற்ற 8-ம் 𑌭𑍋𑌗 பூமிகள் என்றும் சொல்லப்படும்.

(இன்னும் வரும்)

புத்தங்கோட்டகம் - ஸ்ரீநிவாஸாசார்யர்.

ஸ்ரீ:

ஜம்பூ த்வீப படம்.


உப்பு ஸமுத்ரம்.
குரு வர்ஷம்.
ஶ்ருங்கி பர்வதம்.
ஹிரண்மய வர்ஷம்.
ஶ்வேத பர்வதம்.
ரம்யக வர்ஷம்.
நீல பர்வதம்.
இளா வ்ருத
மேரு
வர்ஷம்
கேதுமால
வர்ஷம்
கந்தமாதந
பர்வதம்.
மால்யவான்
பர்வதம்.
பத்ராஶ்வ
வர்ஷம்
நிஷத பர்வதம்.
ஹரி வர்ஷம்.
ஹேமகூட பர்வதம்.
கிம்புருஷ வர்ஷம்.
ஹிமவத் பர்வதம்.
பாரத வர்ஷம்.
உப்பு ஸமுத்ரம்.
உப்பு ஸமுத்ரம்.
உப்பு ஸமுத்ரம்.

ஸ்ரீ:

ஸ்ரீயை நம:

புஸ்தக விமர்சம்.

ஜநகநந்தினி:—ஜனகநந்தினியின் சரித்திரம் பூர்த்தியாயது. நவீனக் கதைப்பாங்கில் ஊரும், பெயரும், இடங்களும், விஷயங்களும் புகவைப்பினும் புராதன தரும ஸாரமெள்ளளவும் கெடாமல், ஆதியோடு முற்றுமளவும் இதில் குடிகொண்டுளது. தமிழ்நாட்டு ஸ்ரீவைஷ்ணவ மடந்தைமாரின் முன் சன்ம நல்வினைப் பயனே இந்நூல் வடிவம் பெற்று வந்துளதென்பதற்கு ஐயமில்லை.

இக்கலி நாளில் மாதர்களின் படிப்பும் ஒழுக்கமும் சீராதல் வெகு முக்கியம். அதற்கேற்ற நூல்களும் போதனைவகைகளும் முக்கியமாம். ஜநகநந்தினி நமக்குச் சமய ஸஞ்சீவியேயாம். இதைத் தம் கருணையா லுபகரித்தவர் நெடுநாளைக்கு முன் நந்திதுருகம் எனும் புஸ்தகமொன்றும் வேறொன்றும் [பூர்த்தியாய் வெளிவரவில்லை.] நன்னடையில் எழுதியுள்ளார். இவர் தமிழ் வசன நடையும் இவர் பாடும் பாடல்களின் நடையும் குளிர்ந்தும் மதுரமாயும் விளங்குகின்றன. இம்மகான் இளவயது தொடங்கி நாளது மட்டும் தமிழையும் வடமொழியையும் ஆங்கிலத்தையும் முக்கியமாய்க் கல்விப்பயன் கருதியே சம் பலம் வாய்க்கும்படி உழைத்துவருபவராதலால், இவர் மனோதருமத்தையும் வாக்கு மாதுரியத்தையும் நாம் கண்டு களிக்க ஜநகநந்தினீ நேர்ந்திருப்பது விசேஷமே. வைஷ்ணவ பரிபாஷைகள் தக்க விடங்களில் விழங்கப்பட்டிருப்பதால் இது ஸ்ரீவைஷ்ணவ சமயப் பிராமணப் பெண்ணினத்தார்க்கு முக்கியமாம். பரிபாஷைகளை விலக்கி வைத்துப் பார்க்கின், தமிழ் வசன நடை மாசு மறுவின்றி வெகு சீராயமைக்கப்பட்டுள்ளது. சீக்கிரம் வெளிப்படில் சிற்சில மாதர்பால் நல்லொழுக்கம் நிலைபெற ஜனகநந்தினீயாம் பீஜம் அங்குரிக்கும், காலமும் ஏற்றதே.

தம்பதிகளிடம நற்சந்ததிகளுதிக்க அத்தம்பதிகள் தெய்வபக்தியோடு நியமமுள்ளவராயிருத்தல் வேண்டும். பொன்னேர் பூட்டவும் விதை விதைக்கவும் நல்ல நாட்பார்ப்பது உண்டன்றோ? பலநாட்பயிராம் ஸந்ததிகள் தீர்க்காயுளும் பத்தியும் பெற்றுச் சுகமடையக் கால நியமம் இல்லறத்தார்க்கு முக்கியம். வித்தில்லாத சம்பிரதாய மேலுமில்லை கீழுமில்லை யென்பது பழமொழி. நல்வித்தை நற்காலத்திலிடில் நற்பயனளிக்கும்.

இனித் தமிழ் பாடல்கள் சில வருமாறு:—

(1) சனக நந்தினி தன்பெயர் பூண்டுதன்
னெனம ணஞ்செறி யின்றமிழ் மாண்பொடு
துனிதை மார்பதி மாவிர தஞ்சொலு
புனித மாக்கதை புக்கது போற்றவே.

(2) மனையின் மாட்சி வளந்திரு கிற்பதாய்த்
தனயர் தம்பதி தாயொடு தந்தையர்
தனொடு வந்தவர் சந்ததி வாழ்கிலோ
தினமு மோதிடிற் றீவினை தீயுமே.

(3) ஆங்கி லத்தமிழ்ப் போக்கை யகற்றியே
தேங்கு தென்றமிழ்ச் செல்வந் திருந்திய
பாங்கு சேர்தமிழ் நன்னடை பாவியல்
ஓங்கு நூலிது முத்தம மாகுமே.

(4) பத்தி வெள்ளம் பரந்துக ண்ணீருக
மத்த கக்கை மடங்கி விழுந்திட
தத்தி தெத்தி யுள்ள முருகிட
பித்த ரென்னவும் பேசிடச் செய்யுமே.

(5) நாரியர் தம்நெறி நாணுஞ் சிறக்கவே
யாரியர் நன்னெறி யாய்ந்து மனத்தினிற்
காரிய மிக்கலி காலப் போழ்தினிற்
சீரிய நூலிது செய்தது சீரிதே.

(6) கோணல் கொண்ட குவலய மிந்தநாள்
காணு நன்னெறி காணவு முண்டெனப்
பாணி நன்மணிப் பவளஞ் சிலசில
காணு நற்றமிழ் நூலிது கண்ணதே.

(7) கதைப்பெ ருக்கங் காணுங் கலியிதிற்
சுதைப்பெ ருக்கச் சொல்லுறு பெட்டகப்
புதைப்பி ருக்கப் போந்த நலத்தினாற்
விதைப்பெ ருக்க மறத்தின் விரிவிதே.

(8) தோன்றிற் புகழொடு தோன்றுகவென்றசொல்
சான்ற தாகத் தாரணி வந்தவர்க்
கூன்று பேர்தி வான்பக னூரொடு
மேன்ற * பீயே பீயெலு மாயதே.

(9) காலும் பிங்களஞ் சாலி சகமது
மேலு மாயிரத் தெண்ணூ றுநாற்பதாம்
மேலு மாங்கிலம் நூற்றுபத் தொன்பதின்
பால தாம்பதி னேழிற் பகர்ந்ததே.

(10) அந்த வெவ்வுநீர் தட்டைக் குலத்தினில்
வந்த ரங்கா சாரியர் வாக்கிது
சொந்தத் தென்றமிழ் சொன்னய வாரியம்
முந்து மாங்கிலம் மூன்றறி வேற்றதே.

வேறு

(11) இந்த நூல்கை யேந்தியே
சொந்த மாகத் தோய்பவர்
மைந்தர் பெற்று வாழ்ந்துபின்
தந்தம் நாயகர்ச் சார்வரே

வேறு

(12) முந்தை நூனெறி முற்றிய நூலிதை
முந்த வாய்ந்து மொழிந்தவ னாரெனில்
உந்து பொன்னி யமுதர் வலங்கையிற்
சொந்தத் தில்லையூர் வேங்கடன் சொன்மினே.

தி. வேங்கடராம ஐயங்கார்,
தமிழ்ப்பண்டிதர்.

திருக்குடந்தை,
பிங்கள சிங்கரவி-க.
16—8—17.

---

* B. A., B. L.

ஸ்ரீ:

ஹரிப்ரியாவிலாபம்.

ஹரிப்ரியாவிலாப:. *

1. அத [illegible] ப்ரஹாவத:
[illegible] ஸம்ஸ்திதம்।
அதிமாத்ரஶோகபராவ்ருதா ஸதீ
விலலாபாகுலதரம் ஹரிப்ரியா॥

2. அயி நந்தினி [illegible]
[illegible] மே யதியம் தஶா தவ।
ந ஜஹத்யஸவஸ்து மாமஹோ
யதிதம் நிஷ்கருணம் மனோ மம॥

3. அயி நாத [illegible] த்வயா
[illegible]॥
ந [illegible]
[illegible]॥

4. நயனம் மம நந்தினீ த்வயா
[illegible] மம காரணதா க்ருதா।

---

* இந்த ஶ்லோகங்கள் சென்ற ஆடிமாஸத்திய ஸஞ்சிகையில் 458 - ம் பக்கத்தில் ஜநகநந்தினீயில் திவான் பஹதூர். டி. டி. ரெங்காசாரியரால் இயற்றப்பட்ட செய்யுட்களுக்கு அநுவாதமான பத்யங்கள்: முதல் ஶ்லோகம். உபோத்காதம்; மற்றவைகள் தமிழின் அநுவாதங்கள்.

[illegible]
[illegible] ப்ரஸீத மே॥

5. விஜிதா [illegible]
[illegible]।
[illegible]
[illegible]॥

6. [illegible]
[illegible]॥
இதி [illegible]
[illegible] கிம் [illegible]॥

7. விஜயம் தவ [illegible]
[illegible]।
[illegible] த்வயா [illegible]
மம [illegible]॥

8. [illegible]
தவ [illegible]।
[illegible]
[illegible]॥

9. [illegible]
அத [illegible]।
[illegible]
[illegible]।

10. தவ வீக்ஷ்ய [illegible]
[illegible]।

𑌨𑌿𑌯𑌤𑌂 𑌕𑍃𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑌤𑌾𑌂 𑌵𑌿𑌦
𑌨𑍍𑌯𑌾𑌨𑌾𑌸𑍍𑌯 𑌮𑌾𑌵𑌹𑌾𑌦𑍍𑌤𑌵𑌾𑌸𑍍𑌮𑌿 𑌹𑌰𑌿𑌃 ॥

11. 𑌜𑌨𑍍𑌮𑌦𑍍𑌯 𑌨𑌵𑍇𑌦𑌂𑌦𑌾 𑌸𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌂
𑌵𑌦𑌨𑌂 𑌤𑍇𑌨𑌂𑌬𑍁𑌜 𑌵𑌾𑌰𑌾𑌶𑍇𑌵𑌨𑌂 ।
𑌶𑌰𑌣𑌾𑌯𑌮𑌤𑍍𑌰𑍀𑌸𑌾𑌨 𑌕𑌥𑌂
𑌕𑌥𑌯𑍇 𑌹𑌨𑍍𑌤 𑌮𑌰𑌾𑌦𑍃𑌕𑍍𑌸𑌂𑌤𑌮𑌂 ॥

12. 𑌨𑌨𑍁 𑌨𑌂𑌦𑌿𑌨𑌿 𑌭𑌵𑍍𑌯 𑌚𑌕𑍍𑌷𑌾𑌦𑌾
𑌵𑌚𑌨𑌂 𑌤𑍇𑌮 𑌦𑌯𑌿𑌤𑍇 𑌹𑌣 𑌭𑍍𑌰𑌿𑌯𑌂 ।
𑌅𑌭𑌰𑌾𑌯𑌶𑌵𑌂 𑌨 𑌤𑍇𑌮 𑌕𑌭𑌿
𑌤𑍍𑌯𑌜 𑌮𑌾𑌨𑌂 𑌮𑌯𑌾𑌰𑍇 𑌯𑌰𑌾𑌮𑌭𑌿 ॥

13. 𑌸𑌕𑌮𑌾𑌰𑌦𑌂 𑌭𑌵𑍍𑌯𑍍𑌯𑍁𑌵𑌂
𑌨𑌿𑌦𑌯𑌾𑌮𑍃𑌦𑍍𑌵𑌯𑍇𑌽𑌤𑌿𑌦𑌾𑌰𑌣𑍇 ।
𑌨𑌿𑌯𑌤𑍇𑌰𑌿𑌦𑌮𑌦𑍍𑌯 𑌕𑌾𑌰𑌿𑌤𑌂
𑌮𑌹𑌤𑍀 𑌤𑍇𑌮 𑌭𑌶𑌾 𑌮𑌂𑌦𑌸𑌾𑌦𑍍𑌯𑌤𑌾 ॥

14. 𑌸𑌹𑌹𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌕𑌥𑌂 𑌭𑍍𑌰𑌿𑌯𑍇 𑌹𑌰𑌿
𑌭𑍍𑌰𑌗𑌣𑌾𑌯𑌾 𑌹𑌶𑌮𑍇𑌷 𑌦𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇𑌃 ।
𑌕𑌯𑌮𑌦𑍍𑌯𑌿𑌤𑌾 𑌕𑍃𑌤𑌾 𑌕𑍃𑌯𑌾
𑌭𑍍𑌰𑌤𑌿𑌭𑌤𑍍𑌸𑍍𑌯 𑌭𑌦𑌵𑍀 𑌮𑌹𑌂𑌸𑌵 ॥

டி. ராஜகோபாலாசார்ய

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤 𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃

ஸ்ரீமூலமந்த்ரார்த்தம்.

𑌶𑍍𑌰𑍀 𑌉𑌪𑍋𑌦𑍍𑌘𑌾𑌤𑌂.

𑌆𑌮𑍍𑌨𑌾𑌯𑌕𑍋𑌟𑌿 𑌶𑌿𑌖𑌰𑌿𑌕𑍁𑌞𑍍𑌜 𑌗𑍃𑌹𑌾𑌵𑌗𑌾𑌹𑍀
𑌯 𑌸𑍍𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰 𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌗𑌮𑌭𑌣𑌿 𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 ।
𑌵𑍇𑌦𑌾𑌽𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌵𑍇𑌦𑌾𑌨𑌤𑌤𑍇𑌮𑍋𑌦𑌹𑌸𑍍𑌤𑌿𑌹𑍀𑌤𑌿𑌂
𑌦𑍂𑌰𑍀𑌕𑌰𑍋𑌤𑍁 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌸𑌿𑌂𑌹𑌃 ॥ 1

𑌦𑍇𑌶𑌿𑌕𑍇𑌨𑌾𑌮𑍍𑌯 𑌵𑌿𑌶𑌦𑌗𑌣𑌵𑌾𑌙𑍍𑌮𑌯𑌾𑌦𑍍𑌯-
𑌸𑍍𑌵𑌾𑌦𑌾𑌕𑌰𑍋𑌟𑌿𑌸𑌦𑍃𑌶𑌦𑍃𑌶𑍍𑌯𑌨𑌾𑌯𑌶𑍇𑌷𑌃 ।
𑌕𑌾𑌯𑌾𑌰𑍍𑌤𑍍𑌥𑌮𑌃 𑌭𑍍𑌰𑌶𑌮𑌨𑌾 𑌨𑌮 𑌵𑌿𑌤𑍍𑌤𑌭𑍍𑌰𑌤𑍍𑌤𑍇𑌃
𑌸𑍍𑌵𑌦𑌾𑌰𑌂 𑌸𑍍𑌵𑌰𑌾𑌦𑌭 𑌸𑌾𑌭𑌤𑌕𑌵 𑌹𑌿𑌤𑌾𑌯𑌨𑍍 𑌨𑌿𑌦𑌾𑌨𑌂 ॥ 2

𑌤𑌾𑌰𑌂 𑌭𑌦𑍍𑌭𑌵𑌂 𑌤𑌦𑌨𑌾 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌤𑌦𑍍𑌵𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌯𑍇
𑌤𑍍𑌯𑌾𑌮𑌾𑌯𑍇𑌤𑍍𑌯𑌕𑌂 𑌭𑌦𑌮𑌵𑌯𑌤𑌾𑌂 𑌸𑌾𑌯𑌮𑌾𑌵𑌾𑌯𑌦𑌤𑍍𑌤𑌂 ।
𑌅𑌂𑌗𑍀𑌕𑌾𑌭𑌨𑍍𑌦𑌶𑌸𑌮𑌨𑌸𑌾 𑌮𑌾𑌤𑍍𑌮𑌰𑌕𑍍𑌷𑌾 𑌹𑌰𑌨𑍍𑌤𑌃
𑌅𑌭𑍍𑌯𑌂𑌦𑍇𑌵𑌃𑌅𑌭𑌿𑌭𑌤𑌾𑌨𑌿𑌵𑌿𑌦𑌾𑌨𑌿𑌂𑌕𑍇𑌰𑍇𑌸𑍍𑌵𑌯𑌦𑌿𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 ॥ 3

𑌕𑌦𑍍𑌯𑌾𑌣𑌮𑌾𑌵𑌹𑌤𑌾 𑌕𑌾𑌤𑌦𑌯𑌾𑌗𑌂 𑌸𑍍𑌵𑌯𑌮𑌦𑌂
𑌭𑍍𑌰𑌭𑍍𑌯𑌾𑌭𑌯𑌦𑍍 𑌭𑍍𑌰𑌣𑌿𑌹𑌿𑌤𑍇𑌷𑍁 𑌨𑌰𑌾𑌦𑌿𑌕𑍇𑌷𑍁 ।
𑌆𑌦𑍍𑌯𑌂 𑌕𑌮𑌭𑍍𑌯𑌯𑌿𑌗𑌤𑌾 𑌰𑌯𑌮𑌦𑌚𑌕𑍍𑌰𑌂
𑌬𑌂𑌯𑌾 𑌸𑍍𑌸𑌤𑌾𑌂 𑌬𑌦𑌰𑌿𑌕𑌾𑌶𑍍𑌰𑌮𑌤𑌾𑌭𑌸𑌾𑌨𑌃 ॥ 4

𑌶𑍍𑌰𑍀𑌵𑍇𑌂𑌕𑌟𑍇𑌶 𑌕𑌰𑍁𑌣𑌾𑌕𑍃𑌤𑌿 𑌵𑍇𑌦𑌶𑍈𑌲
𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌪𑍍𑌰𑌕𑍢𑌪𑍍𑌤𑌮𑌹𑌾 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌵𑌾𑌕𑍍𑌯 𑌮𑌹𑌾𑌰𑍍𑌥𑌮𑍍 ।
𑌸𑌂𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌸𑌹𑍃𑌦𑌯𑌂 𑌸𑌮𑌯𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑌾𑌨𑍍
𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯 𑌹𑌵𑌿𑌷𑌾𑌂 𑌦𑌯𑌾𑌲𑍋𑌕𑌨𑌾𑌨𑌾𑌂 ॥ 5.

𑌯𑌦𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑌃 𑌸𑍍𑌮𑌶𑍇𑌷𑍇𑌣 𑌵𑌾𑌚𑍍𑌯𑌂 𑌵𑍇𑌦𑌵𑍈𑌦𑌿𑌕𑌂 ।
𑌤𑌸𑍍𑌮𑍈 𑌵𑍍𑌯𑌾𑌪𑌕𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌯 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌯 𑌮𑌹𑌤𑍇 𑌨𑌮𑌃 ॥ 6.

𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌯 𑌨𑌿𑌖𑌿𑌲𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑌾𑌰𑌤𑌾𑌰-
𑌭𑌾𑌵𑍍𑌯𑌾𑌯 𑌤𑍇 𑌨𑌮 𑌇𑌤𑌿 𑌨𑍍𑌯𑌸𑌨𑌂 𑌕𑌰𑍋𑌤𑌿 ।
𑌨𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯 𑌚 𑌸𑍍𑌵𑌂 𑌮𑌮 𑌵𑍈𑌰𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌯𑍋𑌗𑍍𑌯-
𑌮𑍂𑌰𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌲𑌮𑌤𑌿𑌰𑌸𑍍𑌯 𑌭𑌵𑍇 𑌵𑌿𑌨𑌾𑌶𑌂 ॥ 7.

𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌯 𑌭𑌵𑌤𑍇 𑌪𑍍𑌰𑌣𑌵𑌾𑌭𑌿𑌧𑌾𑌯
𑌸𑍍𑌵𑌂 𑌶𑍇𑌷𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌮𑌯𑌮𑌨𑍍𑌤𑍍𑌰 𑌨𑌮𑍋 𑌭𑌵 𑌯𑌾𑌚𑍇 ।
𑌭𑍋𑌗𑍈𑌵 𑌚 𑌰𑌸𑌤𑌯𑌾𑌽𑌪𑌿 𑌚 𑌭𑍋𑌗𑌮𑌾𑌤𑍍𑌰𑍇
𑌸𑌤𑍍𑌤𑌾𑌮𑌯𑌂 𑌭𑌵𑌤𑌿 𑌹𑍋𑌮𑌤𑌯𑌾 𑌤𑌵𑌾𑌪𑌿 ॥ 8.

𑌆𑌤𑍍𑌮𑍀𑌯 𑌤𑍇𑌽𑌸𑍍𑌮𑍍𑌯𑌹𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑌹𑌾𑌮𑌦𑌯𑍋𑌗𑍍𑌯𑌂
𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌯 𑌨𑌿𑌯𑌤𑌂 𑌸𑍍𑌵𑌮𑌹𑌂 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 ।
𑌦𑌾𑌸𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋𑌽𑌨𑌨𑍍𑌯𑌪𑌿 𑌨𑌃 𑌵𑌯𑌂 𑌶𑍇𑌷𑌿𑌣𑌃 𑌸𑍍𑌵𑌂
𑌦𑌾𑌸𑌸𑍍𑌯 𑌕𑌿𑌂 𑌸𑍍𑌵𑌯𑌮𑌿𑌹𑌾𑌪𑌿 𑌚 𑌭𑍋𑌗𑌶𑍇𑌷𑌿 ॥ 9.

𑌆𑌤𑍍𑌮𑍀𑌯 𑌤𑍇 𑌹𑌰𑌤𑌯𑌾𑌽𑌸𑍍𑌮𑌿 𑌸𑌮𑌲𑍍𑌪𑌿𑌤𑍋𑌽𑌹𑌂
𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌯 𑌹𑌿 𑌕𑌦𑌾𑌽𑌪𑌿 𑌨 𑌮𑍇 𑌹𑌰𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ।
𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌹𑌰𑌸𑍍𑌯 𑌤𑌵 𑌤𑍂𑌰𑍍𑌣𑌂 𑌯𑌦𑍇𑌤𑌤𑍍
𑌵𑌿𑌦𑌂 𑌸𑍍𑌵𑌤𑌃 𑌸𑍍𑌵𑌦𑌯𑌨𑍍𑌨𑍇𑌵 𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌚 ॥ 10.

𑌆𑌤𑍍𑌮𑍀𑌯 𑌤𑍇 𑌹𑍃𑌦𑌯𑌽𑌸𑍍𑌮𑍍𑌯𑌹𑌂 𑌸𑍍𑌥𑌿𑌰𑌕𑌿𑌂𑌕𑌰𑌃 𑌸𑍍𑌯𑌾𑌂
𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌯 𑌮𑌮 𑌕𑍇𑌶𑌵𑌿 𑌨𑌤𑌧𑍍𑌰𑍁𑌵𑌃 𑌸𑍍𑌯𑌾𑌂 ।

𑌸𑌤𑌤𑌂 𑌹𑌿𑌤𑌂 𑌮𑌹𑌿𑌤𑌂 𑌜𑌿𑌷𑍍𑌣𑍁-
𑌰𑍇𑌵𑌰𑍇𑌵 𑌦𑌾𑌸𑍍𑌯𑌮𑍇𑌵𑌾𑌸𑍍𑌯 𑌤𑌯𑌾 𑌹𑍃𑌦𑌯𑌾𑌃 ॥ 11.

𑌆𑌯𑌾𑌹𑌂 𑌕𑌿𑌂 𑌶𑍇𑌷𑌵𑌜𑌨𑍍𑌮𑌷𑌾𑌤𑍍 𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵 𑌶𑌾𑌹𑌂 𑌤𑌥𑌾
𑌨𑌾𑌹𑌂 𑌮𑌮 𑌵𑌶 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌕𑌮𑌪𑌿 𑌸𑍍𑌵𑌾𑌯𑌤𑍍𑌤𑌂 𑌸𑍍𑌵𑌤𑍋 𑌵𑌾 𑌨𑌮𑍇 ।
𑌮𑌮𑍇𑌦𑌂 𑌕𑍃𑌤𑍍𑌯𑌮𑌾𑌨𑌂 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑌪𑌿 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇
𑌨𑍈𑌷 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌕𑍃𑌤𑍇 𑌨𑌿𑌯𑍋𑌜𑌯𑌤𑌿 𑌕𑌾 𑌨𑍀𑌶𑍇𑌶𑌿𑌤𑌵𑍍𑌯𑌜𑍍𑌞𑌤𑌾 12.

𑌔𑌪𑍍𑌯𑌾𑌮𑍇𑌵 𑌹𑌿 𑌵𑌾𑌮𑌹𑌂 𑌹𑌵𑌿𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿 𑌜𑌯𑍋𑌵𑌾𑌥𑌿𑌤𑌂
𑌦𑍍𑌵𑍈𑌵𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌭𑌵𑌵𑍍𑌯𑌜𑌨𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌂 𑌮𑌮 ।
𑌨𑍈𑌕𑌂 𑌕𑌯𑌂 𑌚 𑌤𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌪𑌰𑍍𑌕𑌨𑌿𑌯𑌯𑍇 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇
𑌨𑍈𑌕𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌦𑌂 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌵𑌨𑌿𑌯𑌮𑍇𑌨𑍈𑌰𑍍𑌵𑍇𑌕 𑌨𑌿𑌵𑍇𑌷𑌕𑌯𑌾

𑌆𑌦𑍇𑌯𑌾𑌯𑌾𑌹𑌂 𑌸𑍍𑌵𑌤𑌾𑌦𑌿𑌯𑌿𑌤𑌂 𑌤𑌤𑍍𑌤𑌶𑍇𑌷𑌾𑌽𑌸𑍍𑌮𑌿 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍 𑌸𑌦𑌾
𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌂 𑌨𑌿𑌜𑌰𑌕𑍍𑌷𑌣𑍇 𑌨𑌵𑌂 𑌮𑍇 𑌪𑌰𑌾𑌯𑌤𑍍𑌤𑌸𑌤𑍍𑌤𑌾𑌵𑌤𑌃 ।
𑌧𑌾𑌵𑌾𑌯 𑌸𑍍𑌵𑌤𑌮𑍇𑌨𑌮𑌾𑌶𑍍𑌰𑌯 𑌭𑌵𑌤𑍇 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌯 𑌸𑍍𑌵𑌯𑌂
𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍 𑌶𑌰𑌣𑌂 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌵𑌶𑌿𑌕𑌃 𑌕𑍇𑌵𑌲𑌕𑍈𑌙𑍍𑌕𑌰𑍍𑌯𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 ॥

𑌆𑌦𑍇𑌯𑌾𑌯𑌾𑌹𑌂 𑌹𑌰𑌸𑍍𑌤𑌂 𑌭𑌵𑌤𑍇 𑌸𑍍𑌯𑌾𑌦𑌪𑍍𑌲𑍁𑌤𑌃 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑍇
𑌨𑍈𑌤𑌦𑌸𑍍𑌮𑌿 𑌮𑌮 𑌦𑍍𑌵𑌯𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌯𑌦𑌹𑌂 𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌮𑌪𑍍𑌯𑌂𑌵𑌿𑌤𑌃 ।
𑌕𑍈𑌂𑌕𑌰𑍍𑌯𑌂 𑌮𑌮 𑌦𑌾𑌸𑌨𑍈𑌕𑌨𑌿𑌯𑌤𑌂 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇
𑌨𑍈𑌵𑌾𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌮𑌮 𑌪𑍍𑌰𑌯𑌾𑌨𑌦𑍇𑌵𑌿𑌤𑌾 𑌸𑍍𑌵𑌦𑍇𑌹 𑌮𑌪𑍍𑌰𑌕𑌾𑌮𑌨𑌃 ॥

𑌆𑌦𑍇𑌯𑌾𑌯𑌾𑌹𑌂 𑌭𑌵𑌾𑌨𑌿 𑌭𑌵𑌤𑍇 𑌨𑍈𑌵𑌾𑌵𑌰𑌂 𑌚 𑌮𑍇
𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑌤 𑌸𑍍𑌵𑌯𑍀𑌹 𑌨𑌵𑌾𑌸𑌂 𑌤𑌸𑍍𑌯𑌪𑍍𑌰𑌪𑌕𑌂 ।
𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌤𑌿 𑌪𑍍𑌰𑌿𑌯𑌕𑌿𑌂𑌕𑌰𑌤𑍍𑌵𑌮𑌪𑌿 𑌮𑍇 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇
𑌵𑌿𑌜𑌂 𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌦𑌹𑍀𑌵𑍀 𑌤𑌂 𑌸𑍍𑌵𑌵𑌿𑌮𑍁𑌷𑌂 𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌨𑌂 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑌿 ॥ 16.

𑌕𑌵𑌿𑌶𑍍𑌯𑌾𑌵𑍍𑌯𑌤𑍇𑌨𑌾 𑌦𑍍𑌰𑍂𑌢𑌭𑌕𑍍𑌤𑍇𑌰𑌨𑌵𑌜𑍍𑌞𑌾𑌤𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌯𑍈𑌃 ।
𑌕𑌸𑌦𑌾𑌸𑍍𑌵𑌾𑌦𑌸𑌵𑍀𑌰𑍆𑌣 𑌰𑌾𑌟𑌿𑌷𑌟𑌿𑌤𑌿 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌕𑌂 ॥ 17.

𑌇𑌤𑍍𑌥𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌃 𑌪𑌦𑍇𑌷𑍁 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌿𑌰𑌸𑌾𑌂 𑌵𑌕𑍍𑌤𑍃𑌭𑌾𑌵𑌂 𑌵𑌾𑌕𑍍𑌷𑍇
𑌰𑌮𑍍𑌯𑍇𑌷𑍁 𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌷𑍁 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌵𑌿𑌷𑌯𑌤𑌯𑌾 𑌸𑌾𑌰𑌭𑍂𑌤𑍈𑌃
𑌸𑍂𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 𑌸𑍁𑌪𑌦𑍈𑌃 𑌸𑌂𑌸𑍃𑌤𑌿𑌜𑌲𑌧𑌿𑌤𑍋𑌯𑌾𑌤𑍍𑌰𑌿 𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑍍𑌯-
𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌮𑌨𑍍𑌯𑍋𑌪𑌯𑍋𑌗𑌂 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌸𑌹𑌿𑌤𑌾𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑌾𑌂 𑌸𑌾𑌧𑌵𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌵𑌾𑌸𑌦𑌾𑌸 𑌕𑌵𑌿𑌵𑌾𑌗𑍍𑌵𑌿𑌨𑌿𑌤𑌾 𑌸𑌂𑌵𑌶𑍍𑌯𑌾
𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑍇𑌯𑌸𑍍𑌫𑍂𑌰𑍍𑌤𑌿 𑌕𑌵𑌿𑌤𑌾𑌕𑌲𑌿𑌤𑌾 𑌪𑌾𑌨𑌹𑍃𑌦𑍍𑌯𑌾 ।
𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌸𑌤𑍍𑌯𑌵𑌸𑌿𑌤𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑍀 𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌂
𑌪𑍁𑌷𑍍𑌪𑍍𑌯𑌤𑍍𑌕𑌰𑍇 𑌮𑌨𑌸𑌿 𑌮𑌾𑌧𑍁𑌰𑍀𑌮𑌜𑌸𑍍𑌰𑌂 ॥ 19.

𑌕𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌮𑌨𑍋𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑌸𑌂𑌯𑍋𑌜𑌨𑌾𑌨𑌾𑌂
𑌪𑌦𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌮𑍂𑌨𑌿𑌵 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌧𑍀𑌸𑌿𑌤𑌾𑌨𑌿 ।
𑌤𑍇𑌷𑍁 𑌚𑌕𑌵𑌾𑌕𑍍𑌯𑌕𑌮𑌲𑌂 𑌤𑍍𑌰𑌯𑌂 𑌚 𑌵𑌾𑌕𑍍𑌯
𑌪𑌂𑌚𑌤𑍍𑌰𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌦𑌶𑌯𑌾𑌂𑌚𑌿𑌤𑌾𑌨𑌿 ॥ 20.

𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌕𑌵𑌿𑌃

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 7.] பிங்களஹூ புரட்டாசிமீ [ஸஞ்சிகை 12.

𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌕𑌮𑌨𑌂 𑌤𑌮𑌾𑌲𑌵𑌰𑍍𑌣𑌂 𑌰𑌵𑌿𑌕𑌰𑌗𑍌𑌰𑌵𑌰𑌾𑌮𑍍𑌬𑌰𑌂 𑌦𑌧𑌾𑌨𑍇 ।
𑌵𑌪𑍁𑌰𑌲𑌕𑌕𑍁𑌲𑌾𑌵𑍃𑌤𑌾𑌨𑌨𑌾𑌬𑍍𑌜𑌂 𑌵𑌿𑌜𑌯𑌸𑌖𑍇
𑌰𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇𑌽𑌨𑌵𑌦𑍍𑌯𑌾 ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

பத்ராதிபரின் குறிப்புகள்.

வேளிர் வரலாறு. செந்தமிழ்ப் பத்ராதிபரா யிருந்த இராமநாதபுரம் உ. வே. மு. ராகவய்யங்கார் இயற்றிய “வேளிர் வரலாறு” எனும் புஸ்தகத்தை ஸமீபித்த காலத்தில் நாம் படித்தோம். அந்நூலின் அத்யவஸாயங்களை இங்கு விவரிப்போம். வேளிர் என்பவர் இக்காலம் வேளாளர் எனப்படுவார்கள். இவர்கள் ஸ்ரீ க்ருஷ்ணன் த்வாரகையில் ராஜ்யபாரம் செய்த காலத்தில் கூர்ஜ்ஜர மெனப்பட்ட நாட்டில் குடியேறிய யாதவ குலத்தில் சேர்ந்தவர்கள். பகவானுடைய அவதார ஸமாப்தியின் பிறகு அவர்களுள் பலர் அந்நாடு விட்டுப் பல நாடுகளில் குடியேறினர்கள். மகதத்தில் ஆண்ட ஆந்த்ர ராஜர்களும், விக்ரமாதித்யன் முதலான மாளவ மன்னர்களும், காலசூரிகளும், காகதீயகணபதிகளும், கொண்டவீடு கஜபதிகளும், விஜயநகர யாதவராஜர்களும், சாலுக்யர் எனப்பட்ட

சளுக்க மஹீபர்களும், பேலாலர் எனும் ஹோய்சள யாதவர்களும், கதம்ப ராஜாக்களும், மேற்கூறிய யாதவ குலத்தைச் சேர்ந்தவர்கள். தொல்காப்பிய உரையில் நச்சினார்க்கினியர் எனும் உரை ஆசிரியர், அகஸ்த்யர் த்வாரகைக்குச் சென்று, நிலங்கடந்த நெடுமுடியண்ணலென்று தமிழ் நூல்களில் விவரிக்கப்பட்ட ஸ்ரீக்ருஷ்ணனுடைய வம்சத்தில் வந்த பதினெட்டு அரசர்களையும், பதினெட்டு குலத்தைச் சேர்ந்த வேளிர்களையும், தென்னாட்டுக்குக் கொண்டு சென்று, காடுகளை அழிப்பித்து, அவற்றை நாடுகளாக்கி, அவற்றுள் அவர்களைக் குடிபுகச் செய்து, தாம் பொதிய மலையில் இருந்தனர். என்று எழுதியிருக்கின்றார். அவ்வாசிரியர் மற்றோரிடத்திலும் "மலயமாதவன் நிலங்கடந்த நெடுமுடியண்ணலுழை நரபதியருடன் கொணர்ந்த பதினெண்வகைக் குடிப்பிறந்த வேளிர்" என்றும் எழுதுகின்றார். கடைச்சங்கத்தினராகிய கபிலர் என்பவர் இருங்கோவேள் எனும் சிற்றரசனை நோக்கி, "நீயே-வடபான் முனிவன் தடவினுள் தோன்றிச்-செம்பு புனைந்தியற்றிய சேணெடும் புரிசை-உவராவீகைத் துவரையாண்டு-நாற்பத்தொன்பது வழிமுறைவந்த-வேளிருள் வேளே" என்று கூறினார். இதனால் த்வாரகையை விட்டபிறகு இருங்கோவேள் நாற்பத்தொன்பதாவது தலைமுறையில் வந்தவன் என்று ஏற்படுகின்றது. தடவு என்றால் யாகம்; வேளெனும் யாகத்தில் உண்டானவர் எனும் ஓர் பழைய கதையடிபாக வேளிர் எனும் குடிப்பெயர் உண்டாயது.

"இவ்வாறு தமிழகத்துப் புகுந்து குடியேறிய வேளிராகிய யாதவகுலத்தார், ஆதியில் க்ஷத்ரிய வகுப்பினரேயாயினும், பன்னெடுங்காலமாகக் குடியேற்ற முயற்சியிற் சென்றமையாலும், உடனொத்த ஆரியக்கூட்டரவின்றித் (?) தமிழ்நாட்டில் தத்தம் தொழில் வேறுபாட்டால் பிரிந்தமையாலும், தமது புராதன ஆசரணையைச் சிறுகச்சிறுக நெகிழவிட்டனர்." "இன்னோர் நாகரிகம் வாய்ந்த ஜாதியராதலின், அரசுத்தொழில், படைத்திற முதலியவற்றினும், தாம் முயன்று நின்ற குடியேற்றத்துக்கு இன்றியமையாத உழுதொழில், கொற்றொழில், மண்சுடுதல், நூற்றல், கால்நடைகளை வளர்த்தல், முதலிய பலவகை விருத்திகளிலும் கைதேர்ந்திருந்தனர். இன்னோரது குடியேற்ற முயற்சிக்குப் பேருதவி புரிந்தருளியவர் அகத்தியமுனிவர் என்பர் நச்சினார்க்கினியர். இனி இவ்வேள் குலத்தோர் தம்மாற் காடுகெடுத்து நாடாக்கப்பட்ட பிரதேசங்களில் கோட்டை முதலிய அரண்களைப் பெருக்கித் தம் தலைவரின்கீழ் அமைதியுடன் அமர்ந்து வந்தனர். இங்ஙனம், நாடுகளிற் றங்கியவர் 'பதிக்குரியோர்' என்னும் பொருள்கொண்ட கிழார் எனவும், தம் முயற்சித்திறம் தோன்ற மருதநிலமக்கள் எனவும், தம் ஆதிநாட்டினடியாக வேளிர், வேளாளர் எனவும் பெயர் பெற்றனர். ஆந்த்ர நாட்டாரும் இன்னோரை (வேண்மார் என்பதின் திரிபாக) வேலமா என்பர். ஆரிய வகுப்பினருள் க்ஷத்ரிய ஜாதியைச் சேர்ந்த இவர்கள், தம் நாடு செழித்தல் கருதி வணங்கி வந்த தெய்வம், ஆரியமக்கள் வணங்கி வந்த தெய்வங்களுள் இந்திரனாவன்: 'வேந்தன் மேய தீம்புனலுலகமும்' என்றார் தொல்காப்பியனார். இவ்வேளாளர், ஆதியில் கங்கா தீரங்களில் வாழ்ந்தவராதலின், இவர்கள் தம்மை 'கங்கா-பத்திரர்' 'கங்கைவமிசத்தவர்' எனக் கூறிக்கொள்வர்."

வேளிர்வரலாற்றால் உழுதொழிலுடையோர், கொல்லர், மட்கலம் வனைவோர், நூற்றலுடன் சாயத்தொழில் புரிவோர், ஆயர், இவர் யாவரும் யதுவம்சத்தவர் என்று ஏற்படுகின்றது. கொல்லரை ஆந்திரமக்கள் 'கொல்ல-வேலம' என்பராம். மட்கலம் செய்யும் குயவரை நூல்கள் வேட்கோ, இருங்கோவேள் என்று சொல்வனவாம். பழைய நூலில் சாயவேளர் எனப்படுவோர் கம்பரால் சைக்களவரெனப்பட்டு, இப்போது கைக்களவர் எனப்படுவார் போலும். ஆயர் என்பவர் இடையர்; இவரில் நற்குடியோர் தம்மை யாதவர் என்று இப்போதும் சொல்லுவார். பாண்டிய ராஜரில் முதல்வர் தம்மரசை இங்கே ஸ்தாபித்த போது ஆயருடன் தென்னாடு வந்ததை, "வாடாச்சீர்த் தென்னவன்-தொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய-நல்லினத் தாயர்" எனும் கலித்தொகைச் செய்யுள் சொல்வதை அய்யங்கார் காட்டுகிறார்.

"[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ।"

[பௌண்ட்ரம், ஓட்ரம், த்ரவிடம், காம்போஜம், யவநம், சகம், பாரதம், பால்ஹீகம், சீனம், கிராதம், தரதம், கசம் முதலான தேசத்து ஜநங்கள் முன் க்ஷத்ரிய ஜாதியராக விருந்தும், காலக்ரமத்தில் ஸ்வதர்மாநுஷ்டா[illegible]க்காலும் ப்ராஹ்மணர்களுடைய அதர்ஶநத்தாலும், லோகத்தில் சூத்ரத்தன்மை[illegible]தார்கள்.] என்று மநுஸ்ம்ருதி சொல்வதையும் அய்யங்கார் எடுக்கின்றார். இவ்வேளிர் குலத்தவரான சில சிற்றரசர்களுக்கும் அந்தணர் குலத்தினரான கடைச்சங்கப் புலவர் சிலர்க்கும் உண்டாயிருந்த மிகுந்த நட்பை வேளிர்வரலாறு விளங்க வரைகின்றது. வேளிரை இந்நாடு கொண்டுவந்து குடிபுகச் செய்தவரும் அந்தணரே. இரண்டாயிரம் வருடங்கட்கு முற்பட்ட சங்கத்தமிழ் நூல்களால் ஏற்பட்ட தமது குல உண்மையை, ஆர்யநாகரிகத்தைப் பகைக்கும் சிலர் சொற்களைக் கேட்டு, மறந்தும், மறைத்தும், தங்கள் ஸ்வரூப விரோதமான ப்ராஹ்மணத்வேஷத்தை அவலம்பித்தல் திராவிடர் என்போர்க்குப் பொருந்தாது. தேசம் பாரவஶ்யதையை அடையவே, வ்ருத்தி லோபமும், வ்ருத்தி பேதங்களும் பகு ப்ரஜைகட்கு ஸம்பவிக்கவும், ஸ்வவ்ருத்தியை இழந்த விப்ர குலத்தவர்கள் ராஜபாஷையைக் கற்றுக்கொண்டு ஜீவநார்த்தமாய்க் கிடைக்கக்கூடிய உத்யோகங்களை மேற்கொண்டார்கள். இவற்றை மிக்க வேண்டும் த்ராவிடர் எனப்படுவோர், மற்றோர் சென்றவழியே தாமும் செல்லவேண்டியவர், மற்றோரைப் பகைக்கக் காரணம் தேடித் தமது பூர்வசரித்ரத்தை மறுத்து, மித்யா காரணங்களைப் பண்ணித் தருபவர்களோடு ஒன்றுவது நேர்மை படாது. வேளிர்வரலாற்றை அவர்கள் ஆவலுடன் படிப்பாரென்று வேண்டி இம்மட்டும் எழுதினோம்.

* * * * * *

ஸ்வதர்மரக்ஷணம்.

மநுஷ்யருடைய க்ஷேமத்தையும் மேன்மையையும் உத்தேசித்துப் பேதிக்கின்ற மநுஷ்யகுணங்கள் யாவும் கூடியமட்டும் வெவ்வேறு ஜநங்களிடமும், ஜநக்கூட்டங்களிடமும் பிரிந்திருக்கவேண்டியது அவஶ்யம்; ஏனென்றால், ஒவ்வொரு மநுஷ்யனும், மநுஷ்யருடைய ஒவ்வொரு வகுப்பும் அவனுக்கோ, அதற்கோ, நைஸர்க்கிகமாய் ஏற்பட்ட குணவிஶேஷங்களை வ்ருத்தி செய்யப் பொருந்தும். ஆதலால், ஒவ்வொரு மநுஷ்யனும், ஒவ்வொரு ஜாதியாரும் அவர்கள் மற்றோருனொக்க உடைத்தாயிருப்பதோடு, அவர்க்கே யுரியதாயிருக்கும் குணவிஶேஷங்களைக் குறித்துப் பகுமாநார்ஹராகின்றார்களென்று, அங்கீகரிப்பது ந்யாயம். அக்குணவிசேஷங்களால், அவர்கள் தனித்ததோர் மநுஷ்யத்வத்தைக் காட்டி, மற்றோரைக்காட்டிலும் வேறாக அவர்களுக்குள்ள பேதாகாரத்தை வெளிப்படுத்துகின்றனர். தனது தன்மையைக் காப்பாற்றி, அது பிறர் தன்மைக் கிடைஞ்சலின்றி வ்ருத்தியடையச் செய்வது ந்யாய மாகையால், அந்த விஷயத்தில் ஒருவனோ,—ஒருஜாதியாரோ, ஸ்வாதந்த்ர்யம் வஹிப்பதென்பது, கௌரவிக்கத் தக்கதும், லோகஹிதம் செய்வதுமான ஏற்பாடு. ஒவ்வொரு ஜாதியாரும், தமது விசேஷ தர்மங்களையும், தன்மைகளையும், ரக்ஷித்துத் தாம் விஶ்வஸித்த புருஷார்த்தங்களைக் கைவிடாமல் நிற்பதால், மநுஷ்ய லோகத்துக்கு உபகாரம் செய்வர். அந்யருடைய கக்ஷியை ஆதரிக்கும்படி அவர் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டால், அவ்வண்ணம் லோகஹிதம் ஸித்திக்கமாட்டாது.

இவ்விதமான யோசனைகள், புதிய 'ஸ்டேட்ஸ்மன்' எனும் ஒரு இங்கிலீஷ் பத்ரிகையில் பண்ணப்பட்டதாக நாளது ஆகஸ்டுமீ 9-ம் தேதி ஹிந்து பேபரில் படித்தறிந்தோம். மநுஷ்யனுடைய வ்ருத்தியெனக் கூடிய கர்மபேதங்கள் குணபேதங்களை யுண்டாக்குகின்றன. வ்ருத்தி பரம்பரையாகக் கொண்டாடப்பட்டால், குணங்களும் பரம்பரையில் பரிபாகங்களைப் பொருந்துகின்றன. குணதோஷங்கள் ஸம்ஸர்க்கங்களால் வளர்கின்றன வென்பது பெரியோர் உரைத்த உண்மை. பரம்பராகதமான வ்ருத்தியினால் ஸம்ஸர்க்கம் ஏக ரூபமாய் நீடிக்கின்றது. புநர்ஜந்மத்தை நம்புகின்றவர்கள் பூர்வ வாஸனைகளுக்கு அநுகூலமான மறுபிறப்பே ஜீவன்களுக்கு உண்டாகு மென்று நம்புகின்றார்கள். ஆதலால் கீதாசார்யனும் குணகர்ம விபாகங்களை அநுஸரித்தே, ப்ராஹ்மணாதி வர்ணங்களுக்குத் தான் ஸ்ருஷ்டிகர்த்தா வானதாயும், அப்படிப்பட்ட தனது கர்த்ருத்வம் ஸாபேக்ஷமாய் நிற்பதால், தான் அகர்த்தா வென்னும் ஸாதித்தருளினார். யோசனையில் உயர்ந்த சில ஐரோப்ய வித்வான்களும், ப்ராஹ்மணன் எனப்பட்டவன், அநேகமாயிரம் வருஷங்களாக அப்யஸிக்கப்பட்ட self-denial, self-culture, and self-control முதலான குணங்களுடைய பரி

பாக விசிஷ்டன் என்கிறார்கள். Self-denial என்பதை 'ஐஹாமுத்ரஃபலபோகவிராகம்' என்று சொன்னார் ஸ்ரீ சங்கராசார்யர். கர்மபலங்கள் இவ்வுலகிலும், ஸ்வர்க்காதி லோகாந்தரங்களிலும் போகரூபமாய் அநுபவிக்கத்தக்கன. அவை அநித்ய சரீரங்களால் அநுபவிக்கத்தக்கவை. ஸ்வரூபத்தால் அவையும் அநித்யங்களே. Self-culture எனப்பட்ட ஜ்ஞாநஸாமக்ரியானது, ஶ்ரவண மநந நிதித்யாஸநங்களால் ஏற்படக்கூடியது. அந்த ஜ்ஞாநம் ஶ்ரவணகாலத்திலேயே நித்ய வஸ்துக்களுக்கும் அநித்ய வஸ்துக்களுக்கும் உள்ள பேதங்களைக் காட்டிக் கொடுக்கின்றது. ஆதலால் அநித்ய புருஷார்த்த ஸாதகங்களான கர்மங்களிலும், தத்ஃபலரூபமான போகங்களிலும், விராக மெனப்பட்ட இச்சையின்மை ஸித்திக்கின்றது. மேலே சொன்ன ஜ்ஞாநஸம்பாதநத்துக்கும், அதனுடைய த்ருடீகரணத்துக்கும், Self-control எனப்பட்ட, ஶமம், தமம், உபரதி, திதிக்ஷை முதலான குணவிசேஷங்கள் அவஶ்யம். அதாவது: அந்தரிந்த்ரியம் பாஹ்யேந்த்ரியங்கள் இவற்றை வசத்தில் வைத்துக்கொள்ளல், சரீரதாரணத்துக்கு வேண்டிய அளவு பொருள் கிடைத்தால் அதனால் த்ருப்தியடைதல், பரரால் நேரிடும் பரிபவாதிகளைப் பொறுத்தல் முதலான குணங்கள் நீடித்த அப்யாஸத்தால் நிலைக்கத்தக்கவை. ஸ்வதர்மங்களைக் கர்த்தவ்யமென்று செய்வதால் இப்படிப்பட்ட மநோவ்ருத்தி யுண்டாகும். ப்ராஹ்மணர் முன்காலங்களில் ராஜ்யம் ஆண்டார்களில்லை; க்ருஷி வர்த்தகம் முதலான வ்ருத்திகளில் ப்ரவேசித்து அர்த்தார்ஜநம் செய்தாரில்லை. தம்முடைய மதத்தைப் பிறர் அபேக்ஷிக்க உபதேசித்தார்களே யன்றிப் பிறர்களைத் தமது மதத்தில் ப்ரவேசிக்கும்படிப் பலவந்தித்தார்க ளில்லை.

நம்முடைய பித்ருபிதாமஹர்கள், தம்முடைய ஸந்ததியார்களான நாம் ஸ்வதர்மங்களை விடாமல் காப்பாற்றவேண்டுமென்று அபேக்ஷித்தார்கள். அவர்கள் இப்போதும் லோகாந்தரங்களில், அந்தந்த லோகோசிதங்களான சரீரவிசிஷ்டர்களாய் இருக்கின்றார்கள். அவர்கள் நம்முடைய செயல்களையும் ஸாக்ஷாத்கரிக்க வல்லவர்கள். நம் முன்னோர்களான ருஷிகளினிடம் நாம் க்ருதஜ்ஞதையைப் பாராட்டவேண்டுமானால், அவர்களால் ஸம்ரக்ஷிதமான வைதிக ஸம்ப்ரதாயம் நம்மால் த்யாகம் செய்யத்தக்கதல்ல.

நம்முடைய பித்ருக்கள் த்ருப்திக்காகவும், அதினின்று நாம் தவறுதல் கூடாது. நமது பூர்வீகர்களிடம் ஸ்நேஹத்தைப் பாராட்டி, அவர்களுக்கு ஐஹிக ஆமுஷ்மிக ஸுக ஸாதநங்களைத் தேடிய தேவர்களையும் நாம் நிராகரித்தல் ந்யாயமன்று; இவர்களுக்கு நாம் ருணிகளாய்ப் பிறந்தோம். இவர்களுக்குள் அந்தர்யாமியாக நிற்கின்ற ஸர்வேஶ்வரன் ஆஜ்ஞையால், அவனுடைய ஆராதநரூபமாகச் செய்யப்பட்டதும், தேவருஷி பித்ருக்கள் ப்ரீணநமாக ஏற்பட்டதுமான வர்ணாஶ்ரம தர்மங்கள், அந்த ஈஶ்வராஜ்ஞையையும், அவனுடைய சரீரமாக பாவிக்கப்பட்ட தேவருஷிபித்ருக்களுடைய இருப்பையும் விஶ்வஸிக்கின்ற ஆர்யர்களால் த்யாகம் செய்யத்தக்கவை யல்ல.

வர்ணாஶ்ரமதர்மங்கள் ஆர்யஜாதியர்களுக்கே உரித்தாயிருக்கின்றன. அவற்றை ஸரியாகப் பண்ணி ஈஶ்வரனையும் தேவாதிகளையும் அவர்கள் த்ருப்தி செய்தார்கள்; அவற்றின் த்யாகத்தால் உண்டாகும் பாபங்களை விலக்கினார்கள்; அவற்றின் அநுஷ்டாநத்தால் சித்தசுத்தி, சரீரவஶ்யம், இந்த்ரியஜயம், பாபபயம், முதலான ஸாமக்ரிகளை ஸம்பாதித்தார்கள். இப்படிப்பட்ட ஸாமக்ரிகள் உடையவனுக்குத்தான் தத்வஜ்ஞாநம் ஸரிவர உண்டாகும்.

இப்படிப்பட்ட விஶ்வாஸங்கள் ஆர்யராய்ப் பிறந்த பல பெயர்க்கு அற்றுப்போயின. அவர்கள் ஸ்வகர்ம த்யாகம் செய்தார்களாகில், அதில் விஸ்மய ஹேது வில்லை. விஶ்வாஸங்கள் தவறாதவர்கள், காலாநுகுணமாகவும் உசிதத்தை யோசித்தும், வர்ணாஶ்ரம தர்மங்களை ரக்ஷிக்க ப்ரயத்நப்பட்டால், நம்மவராகப் பிறந்து கெட்டவர் அவர்களைப் பலவாறாகப் பேசித் தூஷிக்கின்றனர். இதுவும் ஓர் காலக்கேடு.

பரம்பராகதமாய், ஜந்மாந்தர வாஸனையால் கஷ்டமின்றி வளர்வதாய், பால்யகாலத்தில் ஏற்பட்ட ஸத்ஸங்கத்தால் ப்ரதிபந்தகமற்றுப் புஷ்பிப்பதாய், நம்முன்னோர் களிப்பதாய், வர்ணாஶ்ரம தர்மாநுஷ்டாநத்தால் ரக்ஷிக்கப்பட்டதாய், தொன்று தொட்டு வந்த ஆர்யகுணங்கள், இப்போது நடந்துவருகின்ற தேசகால வைகுண்யங்களால் வேரற்றுப் போகின்றன. இவை நம்மால் ரக்ஷிக்கத்தக்கவை யென்று காட்டவே, புதிய ஸ்டேட்ஸ்மன் பேபருடைய யோசனையை முதலில் வெளியிட்டோம்.

* * * * * *

வர்ணாஶ்ரமதர்மதூஷகர்க்குச் சில ஸமாதானங்கள்.

வர்ணங்களும் ஆஶ்ரமங்களும் பேதித்து நமது நாட்டில் ஜனங்களுக்குள் ஒற்றுமை யற்றுப்போயின; அதனால் தேசம் ஸ்வாதீநத்தை இழந்தது; பராதீநத்தில் ஆழ்ந்தது; ஜாதிபேத மற்று ஒற்றுமைப்பட்டால் தான் ஸ்வராஜ்யம் நமக்குக் கிடைக்கும்; ஆதலால் ஜாதிபேதங்கள் அழிய வேண்டும் என்று சிலர் சொல்வார்கள்.

கி. பி. 1200 - ம் ஆண்டுவரையில் இந்நாடு ஸ்வராஜ்யம் இழந்ததல்ல. அதற்குமுன் ஹர்ஷன் அதிராஜனாய் ஆண்டான். குப்தவம்ச சக்ரவர்த்திகள் 300 - வருஷங்கட்கு மேற்பட்டு அதிராஜராய் ஆண்டார்கள். அவர்கள் ராஜ்யம் தர்மராஜ்யமாய் வளர்ந்ததென்றும், ப்ரஜைகள் அப்போது ஸுகித்து வாழ்ந்தாரென்றும் சரித்ரம் கூறுகின்றது. மௌர்ய சக்ரவர்த்திகள் அதற்கு முன் அதிராஜராய் ஆண்டார்கள். அவர்களுக்கு முன்னும் பின்னும் பல ப்ரபல ராஜவம்சங்கள் தேசத்தை ஆண்டனவாகச் சரித்ரம் சொல்லும். அதற்கும் முன் பல ஸஹஸ்ர ஸம்வத்ஸரங்கள் நம்முடைய பூர்வ ராஜாக்கள் ஆண்டு வந்தனர் என்று இதிஹாஸ புராணங்கள் சொல்லுகின்றன. மேற்சொன்ன காலங்களில் வர்ண பேதங்கள் இருந்தன. ஜனங்களுக்குள் ஒற்றுமையை அவை தடுக்கில. அவரவர் தர்மங்களை அவரவர் ரக்ஷித்தார்கள்.

மஹம்மதியர் நம் தேசத்தைப் படையெடுக்க ஆரம்பித்தது 8-வது நூற்றாண்டிலே; டில்லியைக் கைப்பற்றியது 12 - ம் நூற்றாண்டின் முடிவில்; தேசத்தை ஏறக்குறைய முற்றிலும் கைக்கொண்டது 15 - ம் நூற்றாண்டில்; படிப்படியாய் இழந்தது 18-வது நூற்றாண்டில்; ஜாதிபேத மில்லாத பார்ஸீ தேசத்தார் ஒரே நாளில் மஹம்மதியர்க்குத் தமது தேசத்தைப் பறிகொடுத்தார்கள்; மேலும் தாங்களும் முற்றிலும் மஹம்மதிய மதத்தில் சேர்ந்தார்கள். டர்க்கி, டர்க்கிஸ்தாநம், வட ஆப்ரிக்கா, ஸ்பெயின், போர்ச்சுகல் முதலான தேசங்களனைத்தும், ஜாதிபேத மற்றிருந்தும் மஹம்மதியர்க்கு வசப்பட்டன. இன்னும் அவற்றின் ஜனங்கள் ப்ரயேண மஹம்மதியர் ஆனார்கள். பர்மாதேசம், ஜாதிபேதமில்லாதிருந்தும் ஒரே நாளில் இங்கிலீஷ்காரர் வசமாயிற்று. ஆதலால் ஜாதிபேதம் தேச ஸ்வாதந்த்ரியத்தை இழப்பதற்குக் காரணமாகமாட்டாது.

ஜய சந்த்ரனும், ப்ருதுராஜனும், ஒருவர்க்கொருவர் வைரப்பட்டு, அந்த ஸ்திதியில், ஜயசந்த்ரன் மஹம்மது கோரி யென்பவனை டில்லி ராஜ்யத்தைப் படையெடுக்கும்படி அழைக்கவும், அதனால் நேரிட்ட யுத்தத்தில் ப்ருதுராஜன் தன் படையை விட்டு முன்னோடித் துருஷ்கர் வசமாகிக் கொல்லப்படவும், டில்லி ராஜ்யம் மஹம்மதியர் வசமாயிற்று. அதில் ஸந்தோஷப்பட்ட கந்யகுப்ஜத்தரசன் அடுத்த வருஷம் தனது நாட்டையும் உயிரையும் துலுக்கருக்கு இழந்தான். முக்யராஜர்கள் இவ்வண்ணமாகவே முழுதேசமும் துலுக்கர் வசமாயிற்று. இதற்கு வர்ணங்களும் ஆஶ்ரமங்களும் எவ்வண்ணம் பழியேற்கும்? சரித்ரத்தை அறிந்துகொள்ளாமல் பேசுவோர்க்கு என்ன ஸமாதானம் பொருந்தும்?

அதே காலத்தில் இங்க்லீஷ் ராஜ்யம் முழுதும் ஓர் சிற்றரசனான வில்லியம் என்னும் நார்மன் மாகாண ப்ரபுவுக்கு வசமானது தெரியாதா? ஸாக்ஸன், ஆங்கிலன், டேன், நார்மன், கெல்ட், முதலான பல ஜாதியார் சேர்ந்து இங்க்லீஷ்காரர் ஆயினர். மதபேத மில்லாமையால் அவர்க்குள் ஒற்றுமை உண்டாயது. போலண்டு ராஜ்யம் ஒரே ஜாதியார் குடிகொண்டது. அதை மூன்றரசர் சூறையாடிப் பங்கிட்டுக்கொள்ளவில்லையா? தேசம் ஸ்வாதீநத்தை இழப்பதற்குக் காரணமாகாத முகாந்தரங்களை யோசனையின்றிக் கூறுதல் ந்யாயமன்று.

அதெப்படியாயினும் ஆகட்டும்; இப்போது ஜாதிபேதம் ஜனங்களுக்குள் ஒற்றுமையைத் தடுக்கின்றது என்று சொல்வார் உளர். ஆம்! தடியை யெடுத்து ஒருவனை அடித்துவிட்டு, அவனுக்கு உடம்பில் காயம் உண்டாயிற்றென்று அழுவதற்குத் தொடங்குவது போல் இருக்கின்றது. தேசத்தில் முன் க்ராமக் குடியரசு செம்மையாய் நடந்து வரவில்லையா? பார்ப்பான் வேதம் படித்தானென்றும், ஸந்த்யாவந்தநம் செய்தானென்றும் வேளாளன் வருந்தினானா? வேளாளர் க்ருஷி செய்தாரென்று செட்டிமார் திட்டினாரா? செட்டிமார் வர்த்தகம் பண்ணினாரென்று கைக்களர் பொறாமை கொண்டாரா? கைக்களர் நூற்றொழில் செய்யக் கொல்லர் அவரை வெறுத்தனரா? கொல்லர் கொற்றொழில் புரிந்தாரென்று குயவன் வியந்தானா? குயவன் மண்கலம் வனைந்தானென்று இடையர் இடைஞ்சல் பண்ணினாரா? அம்பட்டனைப் பார்த்து வண்ணான் அழுதானா? வண்ணானைப் பார்த்து வெட்டியான் திட்டினானா? ஒன்றுமில்லை. அவரவர் தொழிலை

அவரவர் புரிய அனைவரும் ஸுகமாக வஸித்தனர். பரஸ்பரம் த்வேஷத்தை வேணுமென்று உத்பத்தி செய்துவிட்டு, யாவரும் ஒன்றானாலொழிய த்வேஷம் நீங்காதெனல் மதியின் செயலாகத் தோன்றவில்லை.

இருக்கட்டும்: இப்போது குடியரசு உள்ள நாடுகளில் ஜாதிபேதமில்லை; நமக்கு ஸ்வாராஜ்யம் வேணுமானால் ஜாதிபேதம் அழியவேண்டும் என்பார் சிலர். ஸ்வாராஜ்யம் உள்ள ஆஸ்ட்ரியா, ஜர்மனி, ருஷியா முதலான தேசங்களில் பல ஜாதியார் வஸிக்கின்றார்களே என்றால், அவர்க்குள் ஸஹபோஜநம், பெண்கொடுத்தல் பெண்வாங்கல் இவை உண்டே என்பார். பஹு நீக்ரோ ஜநங்கள் வஸிக்கும் அமெரிக்கா தேசத்தில், நீக்ரோ ஜநங்கள் படும் பாடு தெரியாதா? வ்யவஹார ஸ்தலங்களுக்குப் போகாமலே வெள்ளைக்கார ஸ்த்ரீகளை அபேக்ஷிக்கும் கறுப்பு ஜாதியார் சின்னபின்னமாய்க் கொல்லப்படவில்லையா? வெள்ளைக்காரரை அடிக்கும் நீக்ரோ உயிர்தப்புவனா? அந்தத் தேசத்தில் குடியரசு இல்லையா? என்று கேட்போம். அதற்கு, நீக்ரோ தொட்ட சோற்றை வெள்ளைக்காரன் தின்பான்; பார்ப்பார் யார்தொட்ட சோற்றையும் தின்னமாட்டாரே என்பார்கள்.

இந்த விதமான யோசனைகளுக்கும், ஸ்வாராஜ்யார்ஹதைக்கும், தர்க்கிக்கக்கூடிய ஸம்பந்தம் உண்டா? ஜநங்களுடைய ப்ரதிநிதிகள் சட்டநிருபண ஸபையில் சட்டம் செய்வார்கள்; வரிகள் ஏற்படுத்துவார்கள்; வசூலான வரும்படிக்குத் தக்க செலவுகள் காட்டுவார்கள். இந்த விஷயங்களில் ஒரு ஜாதியார்க்கு அநுகூலமும் மற்றவர்க்கு ப்ரதிகூலமும் எவ்வண்ணம் ஏற்படக் கூடும்? ஏற்படுவதாக ஒப்புக்கொண்டாலும், முடிவான அதிகாரத்தை வஹிக்கும் ராஜப்ரதிநிதிகள் அதைத் தடுக்கமாட்டார்களா? இங்கிலாந்து முதலான தேசங்களில், மிகுதியாகப் பூமியுள்ளவர்கள் தக்கபடி வரி கொடுப்பதில்லை யென்றும், வ்யாபாரம் செய்யும் முதலாளிகள் மிக்க வரி கொடுக்கின்றார் என்றும், கூலிவேலை செய்பவர்கள் அவ்வண்ணம் வருந்துவதில்லை யென்றும் சொல்வார்கள். இப்படிப்பட்ட ஏற்றக்குறைச்சல்கள் ஜாதிபேதத்தால் வாரா. ஜாதிபேதங்கட்கும் ஸ்வாராஜ்யத்துக்கும் ஸம்பந்தம் யோசித்தால், சரீரத்தில் ஒரு புறம் ப்ரஹரித்தால் ஒரு புறத்தில் அடி படுவதுபோல் தோன்றுகிறது. ஒற்றுமைபட்டிருந்த ஹிந்துஜநங்களுக்குள் ஒற்றுமையைப் பலவகையாலும் போக்க முயன்றவர் ஒற்றுமைக்காகத் தமது வழியில் யாவரும், அவரவர் மநஸ்ஸாக்ஷியை நிராகரித்து வீரவேண்டுமென்று உத்கோஷிக்கிறார்கள்.

ஸ்ரீ:

உபோத்காதாதிகார சிந்தனை.

(தொடர்ச்சி.)

அப்படியிருக்க அக்கைங்கர்யத்தை அவன் இழந்து கிடப்பானேன்? என்றால், அதன் காரணம் யோசிக்கப்படுகின்றது: அநாதி மாயையினுடைய வசத்திலகப்பட்டு ஜீவன் தன்னுடைய நிஜஸ்வரூபத்தை அறியாமல் தூங்குகின்றான். "ஜந்மகோடி ஸஹஸ்ரேஷு ஸம்ஸாரபதவீம் வ்ரஜந் । மோஹச்ரமம் ப்ரயாதோஸௌ வாஸநாரேணுகுண்டித: ।" [இந்த ஜீவன் எல்லையற்ற பிறப்புகளால் அமைந்த ஸம்ஸாரமெனும் மார்க்கத்தில் ஓடியோடி, அஜ்ஞாநத்திலாழ்ந்து, வீண் துக்கங்களை யடைந்து, விஷயாஸக்தியாலுண்டான துர்வாஸனைகளாலும், அவற்றால் வரும் இச்சாத்வேஷாதிகளாலும், ரஜோகுண தமோகுணங்களால் மூடப்பட்டவனாகின்றான்.] என்கிற விஷ்ணுபுராண வசநப்படி, ப்ரக்ருதியாகின்ற மருகாந்தாரத்தில் விழுந்தான்; அதிசீக்ரமாகப் பகு ஜநநமரணங்களை யடைந்தான்; அவனுக்குரிய பரமபுருஷார்த்தம் அவனுக்குத் தட்டிப்போயிற்று; பகு பிறப்புகளின் இடையில் இளைப்பாறவும் அவகாசம் அற்றவனாகின்றான்; துர்வாஸனைகள் அவன் மநஸ்ஸைக் கவர்ந்தன; இச்சையென்றும் த்வேஷமென்றும், ஸந்தோஷமென்றும் துக்கமென்றும், இவ்விதமாக வர்ணிக்கப்பட்ட இரட்டைமோஹங்கள் அவனைப் பாதிக்கின்றன; ஆதலால் அவனுடைய அஜ்ஞாநம் மேலிட்டுப் போயிற்று; அவன் ஸ்வாபாவிகமான குறையற்ற ஜ்ஞாநத்தை இழந்துபோனான்; ஆதலால், தத்வங்களின் ஸ்வரூபங்களைப் பற்றியும், அவனுக்கு ஹிதமான விஷயங்களைப் பற்றியும், அவனடையவேண்டிய புருஷார்த்

த்தின் தன்மையைப் பற்றியும் வாஸ்தவ ஜ்ஞாநமும் அவனுக்கு இல்லாமல் போயிற்று. தன்னுடைய தேஹமே தானென்று நினைக்கின்றான்; தன் தேஹஸம்பந்திகளான, பார்யை, புத்ரர்கள், உறவினர்கள், வீடு, பொருள், முதலியவற்றில் தனதெனும் அபிமானத்தைக் கொள்கின்றான். இவ்வண்ணமாகத் தனக்கு ஸ்வபாவஸித்தங்களான ஜ்ஞாநாநந்தஸ்வரூபம், ஈஶ்வரபாரதந்த்ரியம், முதலான ஆகாரங்களை மறந்துபோய்விட்டான். தான் ஸ்வதந்த்ரன் என்று பொய்யானதோர் ஆகாரத்தை ஏறிட்டுக் கொள்கின்றான்.

ஈஶ்வரன் என்றும் ஜீவனிடம் விஶ்வாஸமுள்ளவன். அவனுடைய பாபங்களால் அவ்விஶ்வாஸம் தகையப்பட்டிருக்கின்றது. அவன் கர்மங்களில் ஒரு ஸுக்ருதவிசேஷம் பலதசைக்கு வருவதை அவ்விஶ்வாஸம் எதிர்பார்க்கின்றது. அப்போது ஸாத்விகர் எனப்பட்ட சில தர்மிஷ்டர் அவனுக்கு நேர்படுகின்றனர்; அவர் அவனுடைய ஹிதத்தை இச்சிக்கின்றனர்; அவன் தகப்பன் மூலமாக அவனுடன் ஸம்பாஷிக்க ப்ரயத்நிக்கின்றனர்; “𑌪𑍁𑌮𑌾𑌨𑍍 𑌨 𑌦𑍇𑌵𑍋 𑌨 𑌨𑌰𑍋 𑌨 𑌪𑌶𑍁𑌰𑍍𑌨 𑌚 𑌪𑌾𑌦𑌪𑌃 । 𑌶𑌰𑍀𑌰𑌾𑌕𑍃𑌤𑌿𑌭𑍇𑌦𑌾𑌸𑍍𑌤𑍁 𑌭𑍂𑌪𑍈𑌤𑍇 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌨𑌯𑌃 ॥” [ஓ ராஜனே! புருஷன் தேவனன்று, மநுஷ்யனன்று, ம்ருகமன்று, வ்ருக்ஷங்களுமன்று; இவை கர்மமடியாக உண்டான சரீரங்களின் ஆகாரபேதங்கள்] எனும்படியே, அச்சேதநனுடைய சரீரவிலக்ஷணமான ஆத்மாவின் ஸ்வரூபத்தையும், அந்த ஸ்வரூபத்துக்கு அநுரூபமான ஶேஷவ்ருத்தியாகும் புருஷார்த்தத்தையும், அவனுடன் ஸம்பாஷணை செய்துகொண்டே காட்டுகின்றனர்; அப்புருஷார்த்தத்தை அடைவதற்காக ஶாஸ்த்ரங்கள் விதித்த உபாயம் ஒன்றில் அவன் அந்வயிக்கத்தக்க ஹேதுக்களை உண்டுபண்ணுகின்றனர். அதெப்படியென்றால், ஆத்மயாதாத்ம்ய ஜ்ஞாநமுடையார்க்கு விலக்ஷணமானதோர் ப்ரகாஶம் உண்டாகக் காண்கின்றோம். அப்படிப்பட்டவர்க்கு நியமேந ஸத்குணங்களும் ஸதாசாரங்களும் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட குணங்களையும் ஆசாரங்களை

யும் அச்சேதநனுக்கு அந்த தார்மிகர் உண்டாக்குகின்றனர். இன்னும், பின்னால் அவனுக்கு ஆசார்யப்ராப்தி யுண்டாய், ஆசார்யோபதேசம் பெறுங்கால், அவன் ஹேயங்கள் இன்னவை யென்றும், உபாதேயங்கள் இன்னவை யென்றும் பகுத்தறியவேண்டிய யோக்யதையையும் கல்பிக்கின்றனர்.

அப்போது அந்தச் சேதநன் ஈஶ்வரனுடைய ஸஹஜகாருண்யத்துக்கு விஷயமாகத் தக்கவன் என்பதையும் அவன், சில பாகவத ஸம்ஸர்க்கமடியாக ஆஸ்திகனாகவும், ஶாஸ்த்ரவஶ்யனாகவும் இருக்கும் யோக்யதாவிஶேஷத்தையும், பகுத்தறிவாகிய ஸூக்ஷ்ம புத்தியுடன் கூடினவனாயிருப்பதையும் சில ஆசார்யர்கள் நேராகக் கண்டார்கள். அவர்கள் ஈஶ்வரப்ரேரிதராக அவ்வண்ணம் கண்டாரென்றும், ஸ்வயம் பரமகாருணிகராகையால் அவனிடம் க்ருபை கொண்டாரென்றும் கருத்து. அவர்கள், ‘𑌨𑌾𑌯𑌂 𑌦𑍇𑌵𑍋 𑌨 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑍋 𑌵𑌾 𑌨 𑌤𑌿𑌰𑍍𑌯𑌕𑍍𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑍋𑌪𑌿 𑌵𑌾 । 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑍇𑌷𑍋 𑌹𑌿 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥’ [இவன் தேவனல்லன்; மநுஷ்யனுமல்லன்; ம்ருகமல்லன்; ஸ்தாவரமுமல்லன்; இந்த ஆத்மா ஜ்ஞாநாநந்தமயன்; பரமாத்மாவுக்கு ஶேஷபூதன்.] என்றும், ‘𑌦𑌾𑌸𑌭𑍂𑌤𑌾𑌃 𑌸𑍍𑌵𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥’ [ஸர்வ ஆத்மாக்களும் ஸ்வரூபத்தால் பரமாத்மாவுக்கு ஶேஷபூதர்] என்றும் சொல்லுகிறபடியே, பொங்குகின்ற ஸமுத்ரங்களால் சூழப்பட்ட லீலாவிபூதியிலும், பரமபதத்திலும், ஓரிடமும் விடாமல் பரிபாலிக்கின்ற ஆஜ்ஞையுடன் கூடிய ஶ்ரிய:பதியான நாராயணனுடன் இந்தச் சேதநனுக்கு உண்டாயிருக்கிற ஸ்வபாவஸம்பந்தத்தை, அந்த நாராயண சப்த வ்யுத்பத்தியினாலேயே யதாவத்தாக ப்ரகாசிப்பிக்கின்றனர். அந்தப் பகவானை அடையவேண்டுமென்கிற ஆகாங்க்ஷையை அவனுக்குப் பெருகச்செய்கின்றனர். பகவத்ப்ராப்தி நிமித்தமாக அவன் அந்வயிக்கவேண்டிய உபாயங்களான பக்தி ப்ரபத்திகளில்; யாதேனுமொன்றில் அவனை அந்வயிக்கப்பண்ண மிகவும் ப்ரயத்நபரர் ஆகின்றனர். இத்தகையவர்க்குப் பிராட்டி உபயவிபூதிகளையும் ஸமர்ப்பிக்கத் திரு

வுள்ளம் பறறுவதுபோல் அர்த்தம் விளங்கும் திருவாய்மொழியை யோசித்து, இந்தச் சேதநன் பெறப்போகின்ற பாக்யமே தங்கட்கு அவ்வுபயவிபூதியின் ஆளுகைக்கு ஸமமென வெண்ணி, அவ்வளவிலே மிகவும் ஸந்தோஷிக்கின்றனர். அன்று ஈன்ற கன்றினிடம் வாத்ஸல்யாதிஶயத்தால் பாலை ஸ்ரவிக்கும் பசுவைப்போல், இவ்வாசார்யர்களும் கேவலம் வாத்ஸல்ய ப்ரேரிதராய், ஶிஷ்யனுடைய உஜ்ஜீவநமே தமக்கு முக்ய ப்ரயோஜநமாக வெண்ணி, அவனுக்கு உண்டாயிருந்த அஜ்ஞாநத்தையும் ஸந்தேஹங்களையும் அந்யதாஜ்ஞாநத்தையும் நிவர்த்திக்க இச்சைகொண்டு, அநபேக்ஷிதங்களில் விஸ்தாரமற்றும், அபேக்ஷிதங்களில் ஸங்கோசமற்றும் விஷயங்களை அவனுக்கு உபதேசிப்பார்கள். மேலே பலவிடங்களில் விவரித்திருப்பன போலும், ‘[illegible]’ [நான் ஆத்மா; தேஹமல்லன். விஷ்ணுவுக்கு ஶேஷபூதன். அகிஞ்சநன்; அவனுடைய கைங்கர்யம் செய்யவேண்டுமெனும் இச்சையால் அவனையே ரக்ஷகனாக அடைந்தேன்.] என்பன போலும், விஷயங்களை நன்கு விவரிக்கும் ப்ரமாணங்களைக் கொண்டும், ‘[illegible]’ எனும் ஶ்லோகத்தில் ஸ்மரித்த ப்ரகாரம், ஈஶ்வரன் ஸ்வரூபத்தால் விபுவென்றும், ஸகலஹேய ப்ரத்யநீக கல்யாணைகதாநன் என்றும், ஸ்வபாவத்தால் ஸஹஜமான க்ருபையோடு கூடினவனென்றும், ஜீவன் ஸ்வரூபத்தால் அணு வென்றும், பகவத்ஶேஷனென்றும், ஜ்ஞாநாநந்தமய னென்றும், ஸ்வபாவத்தால் அவனுடைய ஜ்ஞாத்ருத்வமும் கர்த்ருத்வமும் ஈஶ்வராதீநமென்றும், அவன் அசித் ஸம்பந்தத்தை அடையத்தக்கவனென்றும், அசித் ஸ்வரூபத்தால் ஜடமென்றும், ஸ்வபாவத்தால் பரிணாமத்துடன் கூடியதென்றும், ஈஶ்வரனுக்கும் ஜீவனுக்கும் ஶேஷஶேஷி பாவமென்றும், ஸ்வாமித்வ தாஸத்வமென்றும் ஸம்பந்தங்கள் உண்டென்றும், இந்த லோகத்திலும் ஸ்வர்க்கத்திலும், ப்ரஹ்மாவின் லோகத்திலும் சேதநன் ப்ரியமாக வெண்ணி யடையக்கூடிய புருஷார்த்தங்கள் போகங்களென்றும், நித்யவிபூதியில் ப்ராப்தமாகும் குறைவில்லாத கைங்கர்யாநுபவம் அபவர்க்கமென்றும், காம்ய கர்மங்கள் போகங்களை அடைவதற்கு உபாயமாகின்றன வென்றும், பக்திப்ரபத்திகள் மோக்ஷோபாயங்க ளென்றும், தூமாதி மார்க்கம் போகப்ராப்தியின் பொருட்டும் அர்ச்சிராதி மார்க்கம் அபவர்க்க ப்ராப்தியின் பொருட்டும் வேதத்தில் சொல்லப்பட்டன வென்றும், மோக்ஷவிரோதிகளாய் மேல் சொல்லப்பட்ட போகேச்சையையும் அவற்றையடைவதற்கு உபாயங்களையும் சொல்லப்படாத அஹங்கார மமகாராதிகளையும் த்யஜிக்கவேண்டுமென்றும், இவ்வர்த்தங்களை யெல்லாம் முமுக்ஷுவான அவனுக்கு ஜ்ஞாதவ்யங்களென்று அவ்வாசார்யர்கள் உபதேசிப்பார்கள்.

இவ்வர்த்தங்களை அத்யாத்மத்தை விஷயமாகவுடைய ஶப்தங்களுடைய ராஶியில், அதாவது, உபநிஷத் கீதை முதலானவற்றின் மத்யே, ஸர்வோத்க்ருஷ்டங்களான ரஹஸ்யத்ரயத்திலே, நம் ஸம்ப்ரதாய ஸாரார்த்தங்களை, ஶப்தங்களின் ஶக்தியால் ப்ரதிபாதிக்கும்போது, சில அர்த்தங்கள் ஸாக்ஷாத்தாகவும், மற்றவை ஆர்த்தமாகவும் ஸித்திக்கின்றபடியால், ஸர்வார்த்தங்களும் ரஹஸ்யத்ரயத்தில் ஸங்க்ரஹிக்கப்படுகின்றன.

இவ்வதிகாரத்தில் விவரித்த அர்த்தங்களை முமுக்ஷுக்களுக்கு அநுஸந்தாந யோக்யமாம்படி ஒரு செய்யுளில் ஸங்க்ரஹிக்கின்றார் திருவுடனென்று (1). க்ஷீராப்தியில் ஸ்ரீமஹாலக்ஷ்மியுடன் கௌஸ்துபமணியும் ஆவிர்பவித்தது. அது ஜீவாபிமாநிதேவதை; ஸர்வ சேதநரிடமும் ப்ரியதமனான ஈஶ்வரன் அதைப் பிராட்டியைப் போலே அதிப்ரேமையுடன் தன்னுடைய ஹ்ருதயத்தினருகே வைத்துக்கொண்டிருக்கின்றான். ஆதலால் ஸர்வ ஜீவர்களிடமும் ஈஶ்வரனுடைய விஶ்வாஸம் வெளியாகின்றது. அத

---

(1) திருவுடன்வந்த செழுமணிபோல் திருமாலிதயம்
மருவிடமென்ன மலரடிசூடும் வகைபெறுநாம்
கருவுடன்வந்த கடுவினையாற்றில் விழுந்தொழுகாது
அருவுட னைந்தறிவா ரருள்செய்ய வமைந்தனரே.

னால் பகவானுடைய வக்ஷஸ்தலம் நமக்கும் வாஸஸ்தாந மென்னலாம்படி யிருக்கின்றது. ஆதலால ஸ்ரீயஃபதியினுடைய திருவடிகளைச் சிரஸ்ஸினால் வஹித்து அவனுக்கு அடிமை செய்யும் வகையைப் பெறும்படியான யோக்யதையை நாம் பெற்றிருக்கின்றோம். அப்படிப்பட்ட நாம், நம்முடைய பிறப்புடன் வந்த க்ரூரமான கர்மமெனும் ஆற்றில் விழுந்து அதன் வெள்ளத்தில் கொண்டுபோகப் படுகின்றோம். இன்னும் நாம் அவ்வெள்ளத்துடன் போகாதபடிக்கு, ஜீவேச்வர ஸம்பந்த ஜ்ஞாநத்துடன் அர்த்த பஞ்சக ஜ்ஞாநத்தில் நிஷ்டையுடைய நம்மாசார்யர்கள், அபேக்ஷிதார்த்தங்களை நமக்கு உபதேசிக்கும்படி க்ருபைசெய்ய அமைந்தார்கள். இப்படி அப்பாட்டினர்த்தம் விளங்கும். அவ்வர்த்தங்களை மீண்டுமோர் ச்லோகத்தாலும் ஸங்க்ரஹிக்கின்றார். (1) அதனர்த்தம் இவ்வண்ணம் விளங்கும்:—கர்மமென்ன, சரீரத்தையே ஆத்மாவாக ப்ரமிக்கச் செய்வதாகிய அவித்யையெனும் விபரீத ஜ்ஞாநமென்ன, ஜந்மாந்தரங்களில் உண்டாகித் தொடரும் வாஸனையென்ன, அதனால் ஏற்படும் ருசியென்ன, இடைவிடாது தொடர்கின்ற ப்ரக்ருதி ஸம்பந்தமென்ன, இந்த ரூபமாகப் பரிணமித்தது ஸம்ஸாரசக்ரம். இதற்கு ஆரம்பமில்லாதபடியால் இதை அநாதி யென்பர். இதனுடைய ப்ரவாஹத்தைச் சித்ரப்ரவாஹ மென்கிறார். இது, இந்த லோகத்தில் யாவராலும் பார்க்கப்படலாம். இதை அஸாரமான ஸம்ஸார விவர்த்தந மென்றார் ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில். இதனுடைய சித்ர ஸ்வரூபமாவது பல புருஷர்களைக் குறித்துப் பல காலங்களில் பலவிதமான கர்ம பலங்கள் ஸம்பவிக்கின்றன என்பதுதான். ஆதலால் அந்த ஸம்ஸார சக்ரத்தில் ஒவ்வொரு புருஷனைக் குறித்தும் அந்தந்த காலத்தில் நாநாரூபமான கர்மபலோத்பத்தி யுண்டாகின்றதென்பது எல்லா ஸித்தாந்தங்களிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஒருவனுடைய கர்மபரிபாகம் அவனுக்கு ஸ்வர்க்கலோக ப்ராப்தியைத் தரும். மற்றொருவனுடையது இந்த லோகத்தில் அவனுக்கு போகத்தைத் தரும். இன்னும் ஒருவன் கர்மபரிபாகம் அவனுக்குப் பல துக்காநுபவத்துடன் கூடின ஜந்மத்தைத் தரும். மற்றொருவனுடைய ஸுக்ருத பரிபாகம் அவனுக்கு மோக்ஷத்துக்கு வேண்டிய ஸாதநங்களை உண்டாக்கிக் கொடுக்கும். ஆதலால் ஒரு புருஷன் ஒரு காலவிசேஷத்தில் அவனுடைய ஒரு ஸுக்ருத பரிபாக விசேஷத்தை அடைந்தவனாகின்றான். ஜகத்துக்கெல்லாம் பரமாசார்யனான நாராயணனுடைய ஸஹஜ காருண்யமானது, மேற்சொன்ன ஸுக்ருத பரிபாகத்தால் தனக்கு நேரிடும் அவஸரத்தை எதிர்பார்த்து நின்று அப்போது அப்புருஷனை விஷயீகரிக்கின்றது. ஆதலால் பலாந்தரங்களை அவற்றிற் கேற்ற கர்மபரிபாக தசையில் மற்றோர் அடைவதைப்போல், யாதேனுமோர் சேதநன் பகவானுடைய கடாக்ஷத்தை யடைந்தவனாய்க்கொண்டு ஸாத்விக ஸம்பாஷணாதி க்ரமத்தாலே உண்டாகி, மோக்ஷ ஸாம்ராஜ்ய பர்யந்தமாக வ்ருத்தியாகத் தக்க விவேக வைராக்யாதி ஸம்பத்துடனும் ஸ்வஸ்வரூப பரஸ்வரூபாதி ஜ்ஞாநங்களுடனும் கூடினவனாகின்றான்.

பத்ராதிபர்.

---

(1) கர்மாவித்யாதிசக்ரே ப்ரதிபுருஷமிஹாநாதி சித்ரப்ரவாஹே தத்தத்காலே [illegible] । [illegible]

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

தத்வஜ்ஞாநம்.

(தொடர்ச்சி.)

ஸமாதாநம் எழுதவந்த ஸ்வாமி, முதலில் ஸ்ரீ கீதாபாஷ்ய தாத்பர்ய சந்த்ரிகா பங்க்திகளை எழுதிவிட்டு, தத்வஜ்ஞாநத்தை உபாதேயாம்ஶத்தில் சேர்க்கவேணு மென்பதற்கு ப்ரமாணங்களைக் காட்டியிருக்கிறார். இதில் தத்வஜ்ஞாநம் உபாதேயம் என்பதற்கு ப்ரமாணோபந்யாஸம் செய்வது, ஸூர்யனுடைய ப்ரகாஶத்வத்தையை ஶபதம் பண்ணி ஸித்தாந்திப்பது போல் அத்யந்தாநாவஶ்யகம். பிறகு, அந்த ஸ்வாமி, தத்வஜ்ஞாநம் உபாதேயமாகையால், தாத்பர்யசந்த்ரிகையின் ப்ரதம வ்யாக்யாநப்படியும், தத்வஜ்ஞாநம் ஹேயஸங்கத்திலாவது உபாதேயவைத்ருஷ்ண்யத்திலாவது சேராதாகையால், த்விதீய வ்யாக்யாநப்படியும் தத்வஜ்ஞாநம் நிர்வேத ஹேது வென்று ஏற்படமாட்டாது என்று எழுதியிருக்கிறார்.

நான் முன் விவரணம்செய்து காட்டியபடி, ஸ்ரீகீதாபாஷ்ய தாத்பர்யசந்த்ரிகா பங்க்தியிலிருந்து ப்ரதம கல்பத்தில் உபாதேய ஶ்ரவணம் நிர்வேத ஹேது வல்லவென்று ஸ்ரீதேசிகன் திருவுள்ளம் பற்றியதாயும், த்விதீயபக்ஷத்தில் ஹேயஶ்ரவணம் போலவே உபாதேயஶ்ரவணமும் நிர்வேதத்திற்குக் காரணமாகலா மென்று திருவுள்ளம் பற்றியதாயும் அறிந்து கொள்ளக்கூடு மாகையால், தத்வஜ்ஞாநம் நிர்வேத ஹேது என்பது தான் ஸ்ரீ மதசாரயாபிமதம். "ஶ்ருதஶ்ரோதவ்யங்களில் உபாதேயாம்ஶம்" என்றால், ஶ்ருதமாயும் ஶ்ரோதவ்யமாயுமுள்ள உபாதேயாம்ஶம் என்று சொன்னது போலாகி, உபாதேயாம்ஶத்தை உபாதேயத்வேந கேட்டுத் தெரிந்துகொள்வது என்பதில் பர்யவஸிக்கிற விஷயம், 'ஜ்ஞாயதே அநேந கரணம், ஜ்ஞப்திர் ஜ்ஞாநம் கரணம்' என்கிற தார்க்கிகர்களின் பத்ததியை அறிந்துகொண்டிருக்கும் பண்டிதர்களுக்கு அநாயாஸேந ஸங்க்ரஹமாயிருக்கும். இந்த விவேசநமில்லாமல், யதாஶ்ருத க்ரஹணத்துடன், 'உபாதேயாம்ஶே ந நிர்வேத ஹேதுதா' என்கிற ஸ்ரீதேசிகன் ஸூக்தியை ப்ரமாணமாகக் காட்டி, 'உபாதேயமான தத்வஜ்ஞாநம் நிர்வேத ஹேதுவாகமாட்டாது' என்று வாதிக்கப்புகுந்தது பாண்டித்ய கடாக்ஷிதமன்று. இதனால், "ஆகையால், உபாதேயமாகிய தத்வஜ்ஞாநம் நிர்வேதத்திற்குக் காரணமல்ல. த்யாஜ்யங்களாகிய அவித்யாகர்மாதிகளே நிர்வேத ஹேது வென்பதும் ஸ்ரீதேசிகனுடைய திருவுள்ளம் என்று ஏற்படுகிறது" என்று ஸமாதாந ஸ்வாமியின் தீர்மாநம் சுவரில்லாச் சித்திரமே. த்விதீயகல்பத்தில் ஹேயஸங்க உபாதேய பராமர்ஶம் நிர்வேதஹேது வென்று நிரூபித்திருக்கிறபடியால், தாத்ருஶ பராமர்ஶாத்மக தத்வஜ்ஞாநம் நிர்வேத ஹேது வாகலாமென்று முன்னமே சொல்லி யிருக்கிறேன். ஆகையால் இந்த தத்வஜ்ஞாநம் ஹேய ஸங்கத்தில் சேருமா? அல்லது உபாதேய வைத்ருஷ்ண்யத்தில் சேருமா? என்று விகல்பிப்பது வந்த்யாபத்யத்தின் ஸ்த்ரீத்வ பும்ஸ்த்வ விகல்பம் போல் பண்டித பரிஹாஸ்யம்.

பிறகு, ஸமாதாந ஸ்வாமி, 'யாதாத்ம்ய' என்னும் பதத்தைத் தாமாகவே பராமர்ஶித்து [illegible] ஸ்வரஸ ப்ராப்தமான தத்வஜ்ஞாந பாடத்தை ஶங்கித்துக்கொண்டு, தத்வ பதத்திற்கு 'விஷயீபூத' தத்வங்களிலேயே அதிகமாக ப்ரயோகம் இருப்பதாலும், 'உண்மையைப்பற்றின அறிவு' என்று ஏற்படும்போது, 'எவைகளின் உண்மையைப்பற்றி' என்று அபேக்ஷை வருகிறபடியால் 'ஹேயஸங்கம் முதலியவற்றின்' என்று

கீழே சில பதங்களைச் சேர்க்கும்படி ஏற்படுகிறபடியால் கௌரவ தோஷம் வருமாகையாலும், தத்வஜ்ஞாந பாடம் ஸரியல்லவென்று எழுதுகிறார். ‘[illegible]’, ‘[illegible]’, ‘[illegible]’ இத்யாதி பகு ஸ்தலங்களில் யாதார்த்யார்த்தகமாய் தத்வ பதம் ப்ரயோகிக்கப்பட்டிருந்தாலும், தத்வ பதத்தை [illegible] தத்வத்ரயபரமாய்ச் சொல்லவேணுமென்று ஸமாதாந ஸ்வாமி எழுதுவது ஸரியன்று. தவிரவும், ‘[illegible]’ என்னும் பத்யம் காந்தர்வவேதிகளுடைய தாகையால், அவருடைய விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த நிஷ்டையானது இவ்விடத்தில் அஸ்தாநபதித மென்று அநுஶோசிக்கவேண்டியதாய் விட்டது. உண்மையை அறிந்துகொள்ளுதல் என்றால், ‘எதனுடைய?’ என்றுவரும் அபேக்ஷை, நியதோபஸ்திதிகமான ஸ்வஸம்பந்திக ஜ்ஞாயமாந பதார்த்தத்தால் நிவர்த்திக்கக்கூடியதே. இப்படிச் சொல்லுகிறவர்கள், ஸ்வபக்ஷத்தில் [illegible] கௌரவ தோஷத்தை எப்படி பரிஹரிப்பார்களோ? சேட்லூர் ஸ்வாமி எழுதியிருப்பதிலும், ‘தத்வாஜ்ஞாந உண்மை தெரியாமையாலும்’ என்று தான் காணப்படுகிறது. வஸ்துதஸ்து இவ்வித ஸ்தலங்களில் கௌரவத்தை ஸஹியாதவர்களுக்கு, ‘[illegible] கௌரவதோஷ [illegible]’ என்னும் அதிகரண சிந்தாமணி வாக்யோல்லங்கநத்தால் லாகவ தோஷம் ஹஸ்தப்ராப்தம்.

மேலும் ஸமாதாந ஸ்வாமி, “தாத்பர்ய சந்த்ரிகையில் ‘[illegible]’ என்று இருப்பதாலும் அர்ஜுநன் ‘[illegible]’ என்று நிர்வேதப்படு மிடத்தில் தத்வஜ்ஞாந மில்லாமையாலும் ஹேயஸங்காதிகளைப் பற்றின ஜ்ஞாநமே நிர்வேதத்திற்குக் காரணமென்று ஏற்படுகிறபடியாலும், ‘[illegible]’ என்று பாடமானால் தாத்பர்ய சந்த்ரிகையின் முன் வாக்யத்தோடு பொருத்தமுடையதாக இல்லை......” என்று எழுது

கிறார். இதில் ‘[illegible]’ என்று ஶ்ரீதேசிகன் அநுக்ரஹித்திருப்பது தத்வஜ்ஞாந பாடத்திற்கு எப்படி பாதகமாகிறது என்பதும், தத்வாஜ்ஞாந பாடத்திற்கு எப்படி ஸாதகமாகிறது என்பதும் ‘[illegible]’ என்னும் ரீதியை அநுஸரித்திருக்கிறது. ஹேயஸங்காதி பரிஜ்ஞாநமும் தத்வஜ்ஞாநமாகையால், ஸமாதாந ஸ்வாமியின் வாக்யம், ‘[illegible]’ எனும் வாக்யத்தோடு ஸமாநயோகக்ஷேமம். ‘[illegible]’ என்கிற ஸ்தலத்தில் அர்ஜுநனுடைய ஶோகப்ரகாரம் நிரூபிக்கப்பட்டிருக்கிறதே தவிர, நிர்வேதரீதி நிரூபிக்கப்படவில்லை. ‘விஷீதந்நிதமப்ரவீத்’ ‘ஶோகஸம்விக்நமாநஸ:’ ‘விஷீதந்தமிதம் வாக்யம்’, ‘விஷீதந்தமிதம் வச:’, ‘அஶோச்யாநந்வஶோசஸ்த்வம்’, ‘நாநுஶோசிதுமர்ஹஸி’, ‘நைவம் ஶோசிதுமர்ஹஸி’, ‘ந த்வம் ஶோசிதுமர்ஹஸி’, ‘மா ஶுச:’ என்று அர்ஜுநனுக்கு உண்டான ஶோகமே சொல்லப்பட்டிருக்கிறது. முதல் அத்யாயத்தில் [illegible] ஶோகம் தான் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தலங்களில் நிர்வேத பதமோ காணப்படவில்லை. சில ப்ரயோகங்களில் ஶோகார்த்தத்தில் நிர்வேத பதம் ப்ரயுக்தமானாலும், ஶோகமும் நிர்வேதமும் ஸ்வரூப பலங்களில் பரஸ்பரம் பிந்நங்களென்பது ஸாஹித்ய வேதிகளுக்கு ஸ்பஷ்டம். ஆகையால், ஶோகஸ்தாநத்தில் நிர்வேத ப்ரமம் வஸ்து விவேகாபாவ ப்ரயுக்தம்.

ந்யாஸ விம்ஶதி வ்யாக்யாநத்தில் ஶ்ரீதேசிகனே தத்வாஜ்ஞாநம் நிர்வேதஹேது வென்று அருளிச்செய்திருப்பதாயும், ஶ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸார வ்யாக்யாநங்களிலும் உபாய ஸௌகர்யாதிகள், ஶோக நிவ்ருத்திக்குக் காரணம், ஶரீராதி ஸம்பந்தம் நிர்வேத ஹேதுவென்று சொல்லப்பட்டிருப்பதாயும் எழுதிவிட்டு, இவைகளால் ‘தத்வாஜ்ஞாந பாடமே ஸாதுவென்பது ஶ்ரீதேசிகன் திருவுள்ளமாகத் தோன்றுகிறது’ என்று ஸமாதாந ஸ்வாமி எழுதுகிறார். ந்யாஸவிம்ஶதி வ்யாக்யாநத்திலுள்ள பங்க்தியாவது:—

“ அயந்து ஶாஸ்த்ரேக்ஷா க்ரமேண ஸம்ஸாரஸந்தீபஸந்தப்த: — ஸதாசார்யோபதேஶவஶாத் ஸாத்த்விக ஜ்ஞாநம் ஸம்பாத்ய ஶாஸ்த்ரோபாயாந்தர நிர்வாஹாஸாமர்த்யேந ஜ்ஞாநஶக்தி விரஹாச்ச நிர்விண்ண: ஸர்வஸ்வலக்ஷ்யக்ஷத த்வயவசநோபாய பரஶ்ரேயோ ந வ்யக்தமவ்யாவிதம்.....ஸர்வம் ஸமர்த்த இதி”

சேதநன் ஸதாசார்ய கடாக்ஷத்தாலே ‘ஸத்யோ வாப்யயோ வாபி வ்ருத்தோ வா ஶேஷாதீப்த-ப்ராப்யேப்ரஹா’ என்னும் ஶாஸ்த்ரார்த்தத்தைக் கசடறத் தெரிந்துகொண்டு, பிறகு, ஶாஸ்த்ரோபாயமான பக்தியை ஸாதிக்கத்தக்க ஜ்ஞாநமோ ஶக்தியோ தனக்கு இல்லையே யென்று ஏங்கி மனத்தளர்ச்சி யுற்றாலும், பச்சாத் லகுதரோபாயமான ப்ரபத்தியை அவலம்பிக்கலா மென்று தீர்மானித்துத் தேறினவனாய்..............’ என்று ஷை வாக்யத்தின் தாத்பர்யம். இவ்விடத்தில் நிர்வேத பதம் விஷாதார்த்தத்தில் ப்ரயுக்தமே யல்லாமல், பூர்வோக்தலக்ஷண லக்ஷித நிர்வேதார்த்தத்தில் (ஸ்வாவமாநார்த்தத்தில்) உபயோகிக்கப்படவில்லை. ‘அநிர்வேத: ஶ்ரியோ மூலம்’, ‘அநிர்வேதப்ராப்யாணி ஹி ஶ்ரேயாம்ஸி நாம’ இத்யாதிகளிலும் நிர்வேத பதம் மனச்சோர்வில்தான் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. நிர்வேதபதத்தை ஸ்வாவமாநரூபார்த்தத்தைத் தவிர ஶோகார்த்தத்திலும் ப்ரயோகித்திருக்கக் காண்கிறோம். ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ப்ராபாவ்யவஸ்தாதிகாரத்தில் “ இவை எல்லாவற்றையும் நினைத்து ‘அஹோ பத மஹத்கஷ்டம் விபரீதமிதம் ஜகத் - யேநாபத்ரபதே ஸாது: அஸாதுஸ்தேந துஷ்யதி’ என்று மஹர்ஷி நிர்விண்ணனானன்” என்று அருளிச்செய் திருப்பதில் நிர்வேதம் ஸ்வாவஜ்ஞாரூபமல்ல வென்பது அதிஸ்பஷ்டமன்றோ? ‘அநிர்விண்ண: அநஸூய: - அத ஏவ ஸ்வ்யாபாரநிர்வேதோ ஜகத்வ்யாபாரம்’; ‘ஶரீரஸ்த: ஸந் ஸர்வதா ப்ராணியாதநா ஸம்ஸாரஸம்ஸாரமாஹாத்ம்யாத் ஜ்ஞாநம் ப்ராப்ய ஸ்வதேஹாத்மாம்ஶம் வஶ்யத்வ அநிர்விண்ண:, க்ருதக்ருத்யஸ்திஷ்டாமீதி விஜ்ஞாய ப்ரதீக்ஷதே ஹ இதி

ஸ’ என்று ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் ஸ்ரீபட்டரும், ‘ஆத்மகாமத்வாச்ச நிர்வேதோऽஸ்ய ந வித்யத இத்யநிர்விண்ண:’, ‘அவாப்தஸர்வகாமத்வாச்ச அப்ராப்திஹேதோரபாவாச்ச நிர்வேதோऽஸ்ய நாஸ்தீத்யநிர்விண்ண:’, என்று ஸ்ரீ சங்கராசார்யரும் சொல்லியிருக்கிறார்கள். ந்யாஸவிம்ஶதி வாக்யத்திற்குள்ள வாஸ்தவார்த்தம் உபாயவிபாகாதிகாரத்தையும் ரஹஸ்யரத்நாவலீ ஹ்ருதயத்தையும் சிந்திப்பார்க்கு ஸ்பஷ்டம்.

“ இந்த ஹர்ஷம் விவேகியுமாய் ஹேயமான ஶரீராதிகளோடே துவக்குண்டிருக்கிற விவனுக்கு நிர்வேத மிஶ்ரமாய் நடந்ததேயாகிலும், இந்நிர்வேதமும் இந்த ஶோக நிவ்ருத்தியும் பிந்ந விஷயங்களாகையாலே விரோதமில்லை” என்று சரமஶ்லோகாதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. “ஆனாலும் ‘ஶாஶ்வத:’ என்று ஶோகநிஷேதமும் தத்ஸஹித ஹர்ஷமும் கூடுமோ? விவேகியாய் ஹேயஶரீரத்தோடே இருக்கிற இவனுக்கு நிர்வேதம் நடையாடுகையாலே ஶோகநிவ்ருத்தியும் நிர்வேதமும் பரஸ்பரம்விருத்தமன்றோ? என்று அருளிச் செய்கிறார் இந்த ‘ஹவேஷ்.திக்’ ‘ஹிமஹஸ்தி’ ஜந்மாந்தர நரகாதிப்ரயுக்த ஶோக நிவ்ருத்திக்கும் அவிஶேஷேண மோக்ஷப்ரதிபந்தக வர்த்தமான ஶரீரப்ரயுக்த நிர்வேதத்திற்கும் ஹிநவிஷயதயா விரோதமில்லை யென்று கருத்து” என்று அவ்விடத்தில் ஸாராஸ்வாதிநீ. இந்த மூலவ்யாக்யாநங்கள் தத்வாஜ்ஞாந பாடத்திற்கு எப்படி ஸாதகங்களோ தெரியவில்லை. ஶரீராதிஸம்பந்தமே தத்வாஜ்ஞாந ரூபமோ? வர்த்தமாந ஶரீரப்ரயுக்தம் நிர்வேதமென்றால் இது ஹேயஸங்க பராமர்ஶாத்மக தத்வஜ்ஞாநஜந்யமென்று தான் ஏற்படுகிறது. ஶரீராதி ஸம்பந்தம் ஸ்வரூபஸத்தாயிருந்து கொண்டு எப்படி நிர்வேதகாரணமாகக் கூடும்? கிஞ்ச வைராக்யஸ்ய ஶாந்தி க்ஷேத்ரத்வ அர்த்த ஏவ. ப்ரக்ருதத்தில் ப்ரயோஜ்ய ப்ரயோஜக பாவபோதகமான ப்ரயுக்தபதம் ப்ரயுக்தமாயிற்று.

பிறகு ஸமாதாந ஸ்வாமி ‘மறுத்தார்’ என்னும் பாசுரத்தில் பகவதாஜ்ஞாநிலங்கநத்தால் உண்டாகிய மதிமயக்கம் வெறுப்புக்

குக் காரண மென்று அருளிச் செய்யப்பட்டிருப்பதாயும் 'இப்படி தானும் பிறரும்' என்று ஆரம்பித்து, மஹாவாக்யத்தினால் முதல்பாட்டில் அருளிச்செய்த பகவதாஜ்ஞாதிலங்கநங்களே நிர்வேதத்திற்கு அவ்யவஹித காரணமென்று அருளிச்செய்யப்பட்டிருப்பதாயும் எழுதியிருக்கிறார். முதல் பாட்டில் 'உழன்றமை கண்டதனால்' என்றும், மஹாவாக்யத்திலும் 'திரிந்தபடிகளையும் கண்டு' என்றும் அருளிச்செய்திருப்பதை எடுத்துக்காட்டி, முன்னமே சரியான அர்த்தத்தையும் எழுதி, இவைகளால் தத்வஜ்ஞாந பாடந்தான் ஸ்ரீமதாசார்ய ஸம்மதமென்று நான் காட்டியிருப்பதால், இந்த விஷயத்தில் அதிகம் எழுதவேண்டிய ஆவஶ்யகம் இல்லை. பாட்டில் வெகுதூரத்தில் கிடக்கும் மயக்க எனும் பதத்திற்கும் வெறுத்த எனும் பதத்திற்கும் ஸ்வமதஸித்யர்த்தம் ஒரு அந்வயம் ஏற்படுத்தியது ஆஶ்சர்யாவஹம். மேலும் '𑌯𑌦𑌾 𑌤𑍇 𑌮𑍋𑌹𑌕𑌲𑌿𑌲𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌤𑌿𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿' என்கிற கீதாமூலத்தாலும், '[illegible]' என்னும் தாத்பர்ய சந்த்ரிகையாலும் மோஹம் நிர்வேத ப்ரதிபந்தகம் என்று ஸித்திக்கையில், விபரீதமாய் 'மதிமயக்கம் வெறுப்புக்குக் காரணம்' என்று எழுதியிருப்பது, '[illegible]' என்று சொல்லிவரும் தார்க்கிகர்களின் ஸித்தாந்தத்திற்கு எப்படிப் பொருந்தும்? 'மறுத்தார்' என்னும் பாசுரத்திலும் முதல் இரண்டு அடிகள் கீதாஶ்லோக பூர்வார்த்தத்தை விவரிக்கிற விஷயம் பராமர்ஶிகளுக்கு ஸுஸ்பஷ்டம்.

மேலும் ஸமாதாந ஸ்வாமி, வாக்வ்யாபாரமும் மாநஸவ்யாபாரமும் ஸமாநவிஷயகமாகையால் 'யானே யென்னை' என்று சொல்லப்பட்ட அஜ்ஞாநாதிகளே நிர்வேதத்திற்கும் விஷயமாயிருக்கவேணுமென்று எழுதியிருக்கிறார். வ்யாபாரத்வயமும் ஸமாந விஷயகமாயிருக்கவேண்டியது ந்யாய்யம்தான். தாவதா ப்ரக்ருதத்தில் என்ன ஸித்திபாச்சுது? வாக்வ்யாபாரமான பரிதேவநத்திலும் மாநஸ வ்யாபாரமான நிர்வேதத்திலும் அஜ்ஞாநாதிகளே விஷயமென்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். [illegible] அஜ்ஞாநாதி விஷயகமான ஜ்ஞாநமல்லவோ மாநஸ வ்யாபாரமான நிர்வேதம். இது தத்வஜ்ஞாநமன்றோ? ஜ்ஞாநகாரணத்தையும் ஜ்ஞாநவிஷயத்தையும் ஒன்றென்று ப்ரமிக்கலாமா?

பிறகு ஸமாதாந ஸ்வாமி, 'வான்பட்ட' என்னும் கடைசி பாட்டிலும் அஜ்ஞாநாதிகளே நிர்வேதத்திற்குக் காரணமென்று நிகமநம் செய்யப்பட்டதாய் எழுதுகிறார். அந்தப் பாசுரத்தின் அர்த்தத்தை ஆலோசிக்கும் பண்டிதர்கட்கு, இப்படி விபரீதமாய் எழுதியது, தமிழ்பாஷையில் நல்லபரிசயமில்லாமையாலேயென்று தோன்றாமலிருக்கமாட்டாது. இந்த ஸந்தர்ப்பத்தில், '[illegible]..................𑌉𑌪𑍇𑌕𑍍𑌷𑌣𑍀𑌯𑌃' என்கிற ஸ்ரீஶங்கராசார்யருடைய கீதாபாஷ்ய பங்க்தி நினைவில் வந்தேறுகின்றது.

பிறகு, ஸமாதாநஸ்வாமி, '[illegible]' என்கிற ஸ்தலத்திலும் 'இப்படி விவேக மூல நிர்வேத பூர்த்தியாலே' என்கிற இடத்திலும் பூர்வ ஸந்தர்ப்பாநுஸாரேண விவேகமென்பது பராவர தத்வவிவேகமென்று ஏற்படுகிறபடியால், தாத்பர்ய சந்த்ரிகையில் தத்வஜ்ஞாந பாடம் இருந்தாலும், அது பரமபத ஸோபாநத்தில் அருளிச்செய்திருக்கும் விவேக பதத்தோடு ஸமாநார்த்தகமல்ல" என்று எழுதுகிறார்.

கீழ் உபபாதித்திருக்கிறபடி பராவர தத்வவிவேகமே தத்வஜ்ஞாநமாகையால் இரண்டு பதங்களும் ஸமாநார்த்தகங்களென்று சொல்லுவதில் யாதொரு பாதகத்தையும் காணோம். ஸமாநார்த்தகங்களல்லவென்பது கேவலம் அந்த ஸ்வாமியின் நியமநருபம் தான். பிறகு, "பராவர தத்வவிவேகம் ஹேயஸங்கத்திலாவது உபாதேய வைத்ருஷ்ண்யத்திலாவது அந்தர்ப்பவிக்கமாட்டாதாகையால் '[illegible]' இத்யாதி வாக்யத்திற்கு உபபாதகமாகமாட்டாது. '[illegible]' இத்யாதி அருளிச்செய்திருப்பதும் தத்வவிவேகம் நிர்வேதத்திற்குப் [illegible]

காரணமென்பது பற்றியே” என்று ஸமாதாந ஸ்வாமி எழுதுகிறார். இது, ‘பராவரதத்வ விவேகம் ஹேயஸங்கத்தில் சேருமா? உபாதேய வைத்ருஷ்ண்யத்தில் சேருமா?’ என்று விசாரிக்கப் புகுந்தது தாத்பர்ய சந்த்ரிகா பங்க்த்யர்த்தத்தை ஸரியாய் ஸதாசார்யனிடத்திலிருந்து க்ரஹிக்காததின் விலாஸமே. ஸாக்ஷாத் காரணத்தை பரம்பரயா காரணமென்று ஒரு தடவை சொல்வதும், ப்ரதிபந்தகமான தத்வாஜ்ஞாநத்தைக் காரணமென்று மற்றொரு தடவை சொல்வதும், ஒரு ஸமயத்தில் ‘பகவதாஜ்ஞாதிலங்கநங்கள் அவ்யவஹித காரணமென்று எழுதுவதும், மற்றொரு ஸமயத்தில் அவித்யா கர்மாதிகளே காரணமென்று ஸித்தாந்திப்பதும், வாஸ்தவத்தில் வஸ்து ஸ்வரூபத்தையும் கார்யகாரணபாவத்தையும் அறியாமையால் வந்த விஷயமாகையால் ப்ராந்த க்ருத்யம்.

பிறகு, கீழ்ச்சொன்ன விஷயங்களையே [illegible]வர்வணம் செய்துவிட்டு, ஸமாதாந ஸ்வாமி, நிர்ணய ஸாகர முத்ராக்ஷர ஶாலையில் பதிப்பித்த புத்தகத்தில் ‘தத்வஜ்ஞாந’ என்றிருப்பது அஜ்ஞாநமூலகமாயுமிருக்கலாம் அச்சுப்பிழையாயுமிருக்கலாமென்று ஸித்தாந்தப்படுத்துகிறார். கீழே காட்டிய ப்ரதஶாஸ்த்ராதிகளைப் பார்த்தவர்கள் இப்படி ஸமாதாந ஸ்வாமி எழுதியது பஹுதர்ஶித்வமில்லாமையால் நேர்ந்த விபரீதமென்று ஸ்வயமேவ அறிந்து கொள்வார்கள். இப்படி காந்தர்வ வேதிகளான பஹுவ்யக்திகளுக்கு அஜ்ஞாந கல்பநத்தைக் காட்டிலும் ஏகவ்யக்திக்கு ப்ரமகல்பநம் லாகவாநுஸாரி யென்று தார்க்கிக ரஸிகர்கள் கூறுவர்.

வாஸ்தவம் இப்படியிருக்க, ‘தபஶ்ரூபகத்திலோ..........’ என்று ஸம்ஶயத்தில் எழுதியிருப்பதற்கு மூலம் ப்ரமவிப்ரலம்பங்களில் அந்யதரங்களாகவேண்டும்......’ என்று ஸமாதாநஸ்வாமி சொல்வது, ‘[illegible]’ என்று ஸ்ரீதேஶிகன் அநுக்ரஹித்திருக்கிறபடி மோஹாஞ்ஜந மஹிமையே. ‘அந்ய

தரங்கள்’ என்று எழுதியிருப்பது இரண்டில் ஒன்றுகள் என்பதுபோல் பாஷாஶைலீ விருத்தம்.

தநிகக்ருதமாய் அவலோகமென்னும் ஒரு க்ரந்தமிருப்பதாய் ஸமாதாநஸ்வாமி எழுதியிருப்பது ப்ரக்ருதத்தில் எந்த அம்ஶத்துக்கு எப்படி ஸாதகமென்று தெரியவில்லை. தநிகனும் தநஞ்சயனும் ஒருவனே யென்றும், ஸஹோதரர்களென்றும், அவலோக மென்பது வ்ருத்தி க்ரந்தமென்றும் ஸாஹித்ய வேதிகள் அபிப்ராயப்படுகின்றனர்.

ஸமாதாநஸ்வாமி, ‘ப்ராப்தா: ஶ்ரிய:’ என்கிற ஶ்லோகத்தில் நிர்வேதம் தத்வஜ்ஞாநத்தால் உண்டானது என்பதற்கு அந்யதாஸித்தலிங்கத்தைக் காணோம்......’ என்று சொல்லிவிட்டு, ‘ஜாநஶ்ருதிக்கு ஏற்பட்டதுபோல் தத்வஜ்ஞாநமில்லாமையால் அவைகள் நிஷ்ப்ரயோஜநங்கள் என்கிற தாத்பர்யமும் சொல்லலாம்......’ என்று உபஸம்ஹாரம் செய்கிறார். ஆலங்காரிகர்கள் உதாஹரணத்வேந எடுத்துக்காட்டும் பத்யங்களில் அந்யதாஸித்தலிங்க பராமர்ஶம் பண்ணுவது, ஸஹ்ருதய ஸம்ப்ரதாய ஸம்மதமல்ல. ருஜுவாகவே உபபந்நமாயிருக்குமிடத்தில் பாக்ஷிக ஸமர்த்தநாபேக்ஷை பரிஹாஸபதம்.

‘[illegible]’ ‘துக்கத்தில் பொருமையாலும்’ என்று சேட்லூர் ஸ்வாமி எழுதியிருப்பதைப் பார்த்து ஸம்ஶயம் கேட்டிருந்ததற்கு, ஸமாதாநஸ்வாமி, இது அச்சுப்பிழை யென்று எழுதுகிறார். இப்போது அந்த ஸ்வாமி திருத்தியபடி ‘துக்கத்தினால் பொறுமையாலும்’ என்று ஏற்படுகிறது. இப்போது ஆப்ச்சப்தம் துக்கார்த்தகமா? என்றும், உம் என்பது மத்யத்தில் வேண்டாமா? என்றும் வேறொரு ஸம்ஶயம் உண்டாகிறது.

முடிவில் ஸமாதாநஸ்வாமி, ‘மேலும் விபரீத வ்ருத்தங்களிலே கைவளரப்பண்ணும்’ என்று இருக்கவேண்டிய வாக்யத்தை, அச்சிலிருப்பதையே பரமப்ரமாணமாக நம்பி, ‘விபரீத வ்ருத்தாந்தங்களிலே பகைவளரப் பண்ணும்’ என்று எடுத்தவர்களு

க்கு அச்சுப்பிழைகளெல்லாம் தோஷங்களாகக் குறையில்லை......' என்று எழுதித் தமது பரிஹாஸ பாடவத்தைக் காண்பித்திருக்கிறார். ஸம்ஶய பத்ரத்தில் எழுதியது 'பகைவளரப் பண்ணும்' என்று தோன்றவில்லை. இது [illegible] வ்ருத்தாந்த பதப்ரயோகம் ஸ்ரீதேசிகன் க்ரந்தங்களில் அடிக்கடி காணலாம். மேலும் வ்ருத்த பதத்திற்கும் வ்ருத்தாந்த பதத்திற்கும் ப்ரக்ருத ஸ்தலத்தில் ப்ராயஶ்சித்தாவஹமான அர்த்தபேதம் வரமாட்டாதென்பது வாக்யஸ்வாரஸ்யாபிஜ்ஞர்களுக்கு மாத்ரம் கோசரம்.

ஆகையால் ஸமாதாநஸ்வாமி, ஸதாசார்யனிடத்தில் நன்றாய் விஷயங்களைத் தெரிந்துகொண்டு, வேறு இரண்டு பண்டிதர்களோடு சேர்ந்து, ஸம்ஸ்க்ருத தாத்பர்ய சந்த்ரிகையில் சேட்லூர் ஸ்வாமி பதிப்பித்திருக்கிற ப்ரகாரம் தத்வஜ்ஞாந பாடமே ஶுத்தமென்றும், சேட்லூர் ஸ்வாமி தனியாய்த் தமிழில்போட ஆரம்பித்தபோது நேர்ந்திருக்கும் தத்வார்ஜ்ஞாந ஶப்தம் ப்ரமாண விருத்தமென்றும் தெளிந்து, இப்படி வாஸ்தவார்த்தத்தை ஒளிக்காமல் சொல்லும் அடியேனிடத்தில் மித்ர பாவனை பண்ணும்படி ப்ரார்த்திக்கிறேன்.

ராயம்பேட்டை உருப்பட்டூர்
புரசைபாக்கம், 2—5—17. சக்ரவர்த்தி. க்ருஷ்ணமாசார்யன்.

[இந்த விஷய ஸம்பந்தமான விசாரம் இதனுடன் முடிவு பெறவேண்டு மென்பது தீபிகை ப்ரவர்த்தகர்களின் ப்ரார்த்தனை.]

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

𑌮𑌮 𑌨𑌾𑌥 ! 𑌯𑌦𑌸𑍍𑌤𑌿 𑌯𑍋𑌽𑌸𑍍𑌮𑍍𑌯𑌹𑌂
𑌸𑌕𑌲𑌂 𑌤𑌦𑍍𑌧𑌿 𑌤𑌵𑍈𑌵 𑌮𑌾𑌧𑌵 !|
𑌨𑌿𑌯𑌤 𑌸𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌬𑍁𑌦𑍍𑌧𑌧𑍀-
𑌰𑌥𑌵𑌾 𑌕𑌿𑌂𑌨𑍁 𑌸𑌮𑌰𑍍𑌪𑌯𑌾𑌮𑌿 𑌤𑍇 || 53.

---

53. இச்ஶ்லோகத்தினால், '𑌅𑌹𑌮𑌦𑍍𑌯𑍈𑌵 𑌮𑌯𑌾 𑌸𑌮𑌰𑍍𑌪𑌿𑌤𑌃' ['அஹம் புத்தி போத்யமான இந்த வஸ்துவை இப்பொழுதே உன்னுடைய திருவடிகளில் ஸமர்ப்பித்துவிட்டேன்'] என்று ஸ்ரீ ஆளவந்தார் விஜ்ஞாபநம் செய்துகொண்டார். அந்த ஸமர்ப்பணமும், ஶேஷத்வாநுஸந்தாந பூர்வகமாகவே [அதாவது - 'இந்த ஆத்மா பகவானுடைய சொத்து, பகவான் ஒருவனே இந்த ஆத்மாவுக்கு ஸ்வாமி' என்னும் ஜ்ஞாநத்துடனே] செய்யப்பட்டது. ஆனால், 'இந்த ஸமர்ப்பணத்தை நானே செய்கிறேன்; இதற்கு நானே ஸ்வாதீந கர்த்தா' என்னும் எண்ணத்துடன் அது செய்யப்பட்டதாகில், ஏற்கெனவே பகவானுடைய சொத்தாயுள்ள ஆத்மாவை அபஹரித்துக்கொண்டதான தோஷம் ஸம்பவிக்குமே என்று, ஶங்கித்து, ஸ்ரீ ஆளவந்தார், இந்த ஶ்லோகத்தினால், '𑌮𑌯𑌾 𑌸𑌮𑌰𑍍𑌪𑌿𑌤𑌃' என்று தாம் அருளிச்செய்த ஸூக்தியின் அபிப்ராயத்தை, அவ்விதமான ஶங்கையின் பரிஹாரார்த்தம் வெளியிடுகிறார். அந்த அபிப்ராயமாவது - 'ஸர்வத்திற்கும் ஶேஷியாகவும் ஸர்வத்திற்கும் ஈஶ்வரனாகவுமுள்ள உனக்கு, ஏற்கெ

ணவே ஶேஷபூதமாயில்லாத ஒரு வஸ்துவை இப்பொழுது புதிதாக ஸமர்ப்பணம் செய்யவில்லை; என்றால் ஸமர்ப்பிக்கப்படும் வஸ்து ஏற்கெனவே உனக்கு ஶேஷபூதமே; அந்த ஶேஷத்வ ப்ரதிபத்தி மாத்ரத்தை அநுஸந்தாநம் செய்து அதை ஒருவாறு ஆவிஷ்கரிக்க வேண்டுமென்பதுதான் அந்த ஸமர்ப்பணம் செய்த என்னுடைய கருத்து; அந்த ஸமர்ப்பணத்தை உன்னுடைய ஶேஷத்வ ப்ரதிபத்தி மாத்ர ரூபமாக நீ திருவுள்ளம் பற்ற வேணுமே தவிர, புதிதாக ஸ்வாதந்த்ர்யத்துடனும் ஸ்வாம்யத்துடனும் உனக்கு ஒரு சொத்தை நான் ஸம்பாதித்துக் கொடுக்க அபிப்ராயப்பட்டதாகத் திருவுள்ளம் பற்றக்கூடாது' என்பதுதான். ஆகையால், இந்த ஶ்லோகம், கீழ் ஶ்லோகத்திற் சொல்லப்பட்ட அபிப்ராயத்தை விவரணம் செய்கின்றது.

[𑌹𑍇] 𑌨𑌾𑌥! 𑌮𑌾𑌧𑌵! ‘𑌮𑌮 𑌯𑌦𑌸𑍍𑌤𑌿, 𑌅𑌹𑌂 𑌯𑍋𑌽𑌸𑍍𑌮𑌿, 𑌤𑌤𑍍𑌸𑌕𑌲𑌂 [[illegible]𑌹𑌿] 𑌤𑌵𑍈𑌵𑌹𑌿 𑌨𑌿𑌯𑌤𑌸𑍍𑌵𑌂’ 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌬𑍁𑌦𑍍𑌧𑌧𑍀 [𑌰𑌹𑌂] 𑌤𑍇, 𑌅𑌥𑌵𑌾, 𑌕𑌿𑌨𑍍𑌨𑍁 𑌸𑌮𑌰𑍍𑌪𑌯𑌾𑌮𑌿’ [ஹே ஸர்வ ஸ்வாமிந்! ஶ்ரிய: பதே! ‘என்னுடையவையென்று தோன்றும் குணங்கள் விக்ரஹம் முதலியவையும், அவைகளுக்கு ஆஶ்ரயமாயுள்ள ‘நான்’ என்று தோன்றும் வஸ்துவும், இவையெல்லாம் உன்னுடையவைகளே; அவையெல்லாம் உனக்கே நித்ய ஶேஷபூதங்கள்’ என்று தெரிந்த புத்தியையுடைய நான், எதை உனக்கு ஒரு புதிய ஶேஷபூதமான வஸ்துவாக ஸமர்ப்பிக்கக்கூடும்? ஸ்வாதந்த்ரியத்துடனும் ஸ்வாம்யத்துடனும் என்றால் உனக்கு அப்படி ஸமர்ப்பிக்கக் கூடிய வஸ்துவும் உளதோ?]

𑌹𑍇 𑌨𑌾𑌥! - ஹே ஸர்வ ஸ்வாமிந்! இந்த ஸம்போதநம், ஸர்வ ஜகத்தும் அவனுக்கு ஶேஷபூதம் என்பதை ஸூசிப்பிக்கிறது. அப்படியிருக்கையில், நான் உனக்குப் புதிதாக ஸமர்ப்பிக்கக்கூடிய வஸ்துவும் உண்டோ? என்பது குறிப்பு.

𑌹𑍇 𑌮𑌾𑌧𑌵! - ஹே ஶ்ரிய:பதே! ‘உன்னுடைய ஸர்வ ஶேஷித்வம் நிருபாதிகமன்றோ? லக்ஷ்மீபதியாயுள்ள நீ, மற்றை எதற்குத்தான் பதியன்று?’ என்பது கருத்து.

𑌮𑌮 𑌯𑌦𑌸𑍍𑌤𑌿 - என்னுடையனவென்று தோன்றுமவையெல்லாம். நமக்கு அநுபந்தியாயுள்ள ஶரீரம் குணம் முதலியவைகளை நாம் நம்முடையன என்று வ்யவஹரிக்கிறோமன்றோ? ப்ரமாண ஸித்தங்களான அவைகளெல்லாம் என்று அர்த்தம்.

𑌤𑌤𑍍𑌸𑌕𑌲𑌂 - அவைகளெல்லாம். ஆத்மாவும், அந்த ஆத்மாவைச் சேர்ந்தவைகளும் எல்லாம் என்பது தாத்பர்யம்.

𑌤𑌵𑍈𑌵𑌹𑌿 - ஸர்வஶேஷியாயுள்ள உன்னுடையவைகளே. ஸர்வ காரணமாயும் ஸர்வ ரக்ஷகனுமுள்ள உனக்கன்றிக்கே மற்றை எவனுக்கு அவை ஶேஷ பூதங்களாகும்? என்பது கருத்து. ‘ஹி’ என்னும் பதம், ப்ரமாண ப்ரஸித்தியைக் காண்பிக்கிறது.

“𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑍇𑌵 𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌪𑌿𑌤𑌾 𑌮𑌾𑌤𑌾 𑌚 𑌮𑌾𑌧𑌵𑌃” [எல்லா லோகத்திற்கும் மாதவனன்றோ பிதா? அவனன்றோ மாதா] என்று அவனுடைய காரணத்வமும் ரக்ஷகத்வமும் ப்ரஸித்தி பெற்றிருக்கின்றன.

“யானே நீ, என்னுடைமையும் நீயே” என்பதும் இவ்விடத்தில் ப்ரமாணம்.

𑌨𑌿𑌯𑌤𑌸𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌬𑍁𑌦𑍍𑌧𑌧𑍀𑌃 - உனக்கே நித்யஶேஷபூதமென்று தெரிந்த புத்தியையுடைய நான். இப்படி புத்தி விகஸிப்பதற்கும் பகவானுடைய ப்ரஸாதத்தால் ஸந்துக்ஷிதங்களாயுள்ள ஶாஸ்த்ரங்களே காரணம் என்பதும் இவ்விடத்தில் த்யோதிப்பிக்கப்படுகிறது.

𑌅𑌥𑌵𑌾 - இல்லாவிட்டால், ‘புதிதாக ஸமர்ப்பிக்கிறேன்’ என்று அபிப்ராயப்பட்டால் ஆத்மாபஹார ரூபமான தோஷம்

வருமென்று செய்யப்பட்ட ஶங்கையை வ்யவச்சேதிக்கும் பொருட்டு இந்தப்பதம் இவ்விடத்தில் ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது.

தே கிந்நு ஸமர்ப்பயாமி - உனக்கு எதை ஸமர்ப்பிப்பேன்? ஸர்வேஶ்வரனாகிற உனக்கு ஏற்கெனவே ஶேஷபூதமல்லாத எந்த வஸ்துவை இப்பொழுது ஶேஷமாகும்படி நான் செய்யக்கூடும்? அப்படிப்பட்ட வஸ்து ஒன்றுமில்லை என்பது தாத்பர்யம்.

இவ்விடத்தில் பூர்வ வ்யாக்யாதாக்களுக்குள் ஸ்வல்ப தாத்பர்ய பேதம் காணப்படுகின்றது. கீழே எழுதப்பட்டுள்ள தாத்பர்யம், ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகனுடைய திருவுள்ளத்தை அநுஸரித்தது. ‘ஸர்வேஶ்வரனாயுள்ள உனக்கே நித்ய ஶேஷபூதமாக இருக்கும் இந்த ஆத்மாவை, அது உன்னுடையது என்று தெரிந்துகொண்டு உன்னுடைய திருவடிகளில் ஸமர்ப்பிக்கிறேன். ஆனால், அந்த ஸமர்ப்பணத்தில் எனக்கு எவ்வித ஸ்வாதந்த்ரியமும் இல்லை, ஸ்வாம்யமும் இல்லை. என்னை நிமித்தமாத்ரமாகக் கொண்டு உனதை நீயே ஸ்வீகரிக்கிறாய். இந்த ஸ்வீகாரத்தால் உனக்குப் புதிய பெருமையொன்றும் ஆபாதநம் செய்யப்படவில்லையென்பதையும் நான் அறிந்துகொண்டே உன்னுடைய ஶேஷத்வ ப்ரதிபத்தி மாத்ர ரூபமான இந்த ஸமர்ப்பணத்தைப் பல ஸங்க கர்த்ருத்வாதி த்யாக பூர்வகமாக நான் செய்கிறேன்’ என்பதுதான் இந்த இரண்டு ஶ்லோகங்களின் கருத்து என்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகனுடைய திருவுள்ளம்.

ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையோ வேறுவிதமாகத் திருவுள்ளம் பற்றுகிறார்; அதாவது - ‘கீழ்ஶ்லோகத்தால் பகவானுடைய திருவடிகளில் ஆத்ம வஸ்துவை முதலில் ஸமர்ப்பித்து விட்டு ஆத்ம ஸமர்ப்பணமும் ஆத்மாபஹாரத்தோடொக்குமாதலால், பூர்வம் செய்யப்பட்ட ஸ்வரூப ஸமர்ப்பணத்தை அநுஶயித்து ஸ்ரீ ஆளவந்தார், இந்த ஶ்லோகத்தினால் அந்த ஸமர்ப்பணத்தை

ப்ரதிக்ஷேபிக்கிறார்’ என்பதுதான். இதனால், ‘ஆத்ம ஸமர்ப்பண ரூபமான ப்ரபத்தி ஸ்ரீ ஆளவந்தாரால் ப்ரதிக்ஷிப்தமாயிற்று’ என்பது ஸ்ரீ பிள்ளையின் திருவுள்ளமென்று சொல்லவும் ஸாத்யமில்லை. ஏனென்றால், அவருடைய வ்யாக்யாநத்தை நிகமநம் செய்யுமிடத்தில், பின்வரும் அவருடைய வாக்யத்தைக் காணலாம். “ஸம்ஸாரபீதியாலே ஸமர்ப்பிக்கையும், ஸ்வரூப யாதாத்ம்யஜ்ஞாநத்தாலே அநுஶயிக்கையும், இரண்டும் யாவந்மோக்ஷம் அநுவர்த்திக்கக்கடவது.” அதாவது - ஆத்ம ஸமர்ப்புணத்தைச் செய்யவும் வேண்டும், பிறகு யாதாத்ம்ய ஜ்ஞாநத்தைக்கொண்டு அநுஶயிக்கவும் வேண்டும்’ என்பது அவர் திருவுள்ளமென்று தெரிய வருகிறது.

ஆத்ம ஸமர்ப்பண காலத்தில் அப்ரதிபுத்தர்களாக இருக்குமவர்கள் விஷயத்தில் மாத்திரம் இம்மாதிரியாக முதலில் யாதாத்ம்ய ஜ்ஞாநமில்லாமல் ஆத்ம ஸமர்ப்பணம் செய்வதும் பிறகு யாதாத்ம்ய ஜ்ஞாநம் ஜநிக்கவே அந்த ஸமர்ப்பணத்தை அநுஶயிப்பதும் உபபந்நங்களாகுமென்றும், ஏற்கெனவே ப்ரதிபுத்தராயிருந்த ஸ்ரீ ஆளவந்தார் விஷயத்தில் அவை உபபந்நங்களாகாவென்றும் ஸ்ரீ தேஶிகனுடைய அபிப்ராயம்.

மற்றும் சிலர், முதல் ஶ்லோகம் ஆத்ம ஸமர்ப்பணரூப ப்ரபத்தியைச் சொல்லுகிறதென்றும், இரண்டாவது ஶ்லோகம் ‘தத்வத்தை அறிந்தவர்கள் அம்மாதிரியாக ப்ரபத்தியைச் செய்யக்கூடாது’ என்பதை உணர்த்துகிறதென்றும் வ்யாக்யாநம் செய்கிறார்கள்; இப்படிச் சொல்வது ஆத்ம ஸமர்ப்பணத்தை விதிக்கும் ஶாஸ்த்ரங்களுக்கெல்லாம் விரோதிக்குமாதலால் அநாதரணீயம்.

இன்னும் சிலர், பகவான் ஸர்வஶேஷி, ஜீவகோடிகளுள் அந்யதமர்களான நாம் அவனுக்கு நித்ய ஶேஷபூதர்கள் என்

கிற ஈஶ்வரனுக்கும் நமக்குமுள்ள ஸம்பந்த ஜ்ஞாநம் மாத்ரமே ப்ரபத்தியாகும் என்பது தான் இவ்விடத்தில் விவக்ஷிதம் என்று அபிப்ராயப்படுகிறார்கள். லோகத்தில் ஒரு யஜமானனுடைய தாஸனுக்கு ‘தான் இந்த ஸ்வாமியின் தாஸன்’ என்னும் ஸம்பந்த ஜ்ஞாநம் இருக்கையிலும் ‘அவன் அந்த ஸ்வாமியினிடத்தில் ப்ரபந்நன்’ என்று நாம் வ்யவஹரிக்காமலிருப்பதையும், வேறு புகலிடமில்லாமல் ஒரு மனிதனிடத்தில் அவனுடைய ஶத்ருவாக இருக்குமொருவன் அவனை ஶரணமாக அடைந்தால் அந்தக் காரணத்தைக் கொண்டு ‘அந்த ஶத்ரு அந்த மனிதனுக்கு தாஸன்’ என்று நாம் வ்யவஹரிக்கக்கூடாமலிருப்பதையும் இந்த வ்யாக்யாதாக்கள் ஆலோசித்துப் பார்த்தால் தமது வ்யாக்யாநம் லோகவிருத்தமென்பதை உணர்வார்கள்.” தவிரவும், ஸ்ரீ ஆளவந்தார் தமது ஸ்ரீஸ்துதியில்

“ 𑌤𑌾𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌦𑌾𑌸 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨 𑌇𑌤𑌿 𑌚 ”

என்று அருளிச் செய்திருப்பதைப் பார்த்தால், தாஸ்ய ஜ்ஞாநம் வேறு, ப்ரபத்தி வேறு என்பது விளங்கும். இந்த ஸம்பந்த ஜ்ஞாநம் முமுக்ஷுவுக்கு அவஶ்யம் அபேக்ஷிதமே; ஆனால் அந்த ஜ்ஞாநம்மாத்ரம் ப்ரபத்தியாகாது என்பது வ்யக்தம்.

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:

வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

	ரூ.	அ.	பை.
1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்)	0	2	0
2. ஸ்ரீ த்ராவிடவேத தாத்பர்யம்—(ஸ்ரீ. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது)	0	2	0
3. ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யபட்ட உபந்யாஸம்)	0	2	0
4. ஸ்ரீ பாகவத சதுஶ்லோகீ - (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர்)	0	4	0
5. ஸ்ரீ சதுஶ்லோகீ விவரணம்	0	4	0

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

மஹாமஹோபாத்யாய
பெருகவாழ்ந்தான் ரங்காசார்யர்.

𑌅𑌪𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌭𑌿𑌰𑌾𑌶𑍋𑌚𑍍𑌯𑌂 𑌅𑌶𑌕𑍍𑌯𑌂 𑌸𑍍𑌮𑌰𑍍𑌤𑍁𑌮𑍁𑌤𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ।
𑌅𑌹𑍋 𑌵𑍍𑌯𑌜𑌨𑌿 𑌯𑌦𑍍𑌦𑍁𑌃𑌖𑌂 𑌜𑌾𑌹𑍍𑌨𑌵𑍀𑌤𑌟𑌵𑌾𑌸𑌿𑌨𑌾𑌮𑍍 ।

சென்ற புரட்டாசி மாஸத்திய ஸஞ்சிகையில் ஸ்ரீ காஞ்சீ நகரத்தை அலங்கரித்துக்கொண்டு ஸ்வஜ்ஞாநத்தினாலும் ஸ்வாநுஷ்டாநத்தினாலும் வைதிக ஸித்தாந்தத்தை நிலைநிறுத்திவந்த ஸ்ரீ வில்லியம்பாக்கம் கோபால தாதாசார்யர் என்னும் மஹாந் இந்தப் பூமியை த்யஜித்து விட்டுப்போனதைப் பற்றி நாம் ஶோகித்து எழுதியிருந்தோம். அதற்குப் பிறகு ஒரு ஸம்வத்ஸரத்திற்குள்ளாக கணக்கற்ற ஸாதுக்கள் இந்தப் பூலோகத்திலிருந்து அந்தர்ஹிதர்களாகிவிட்டார்கள். ஸூர்யாஸ்தமயமாவது போல ஸாதுக்கள் மறைந்து விடுவதையும், அந்த மறைவு காரணமாகவே அஸாதுக்களுக்கு அதிகமான உந்மேஷம் ஸம்பவிப்பதையும் பார்க்கும்பொழுது, மஹர்ஷிகளால் புராணாதிகளில் நிர்த்திஷ்டமாயுள்ள கலியின் கொடுமைதான் இப்படி ஆவிர்பவிக்கின்றதோ என்னும் பீதி நம்முடைய மநஸ்ஸில் ஜநிக்கின்றது.

ப்ராக்ருதத்தில், ஸ்ரீ அபர்யாப்தாம்ருதனால் அதிஷ்டிதமாயுள்ள திருக்குடந்தை என்னும் திவ்ய தேஶத்தில், மஹாமஹோபாத்யாய பெருகவாழ்ந்தான் ரங்காசார்யரென்னும் மஹாந் ஒருவர் எழுந்தருளியிருந்தாரென்பது ப்ராயேண தக்ஷிண தேஶ வாஸிகளான ஸகல வைதிகர்கள் லௌகிகர்கள் இருவகையோருக்கும் தெரிந்த விஷயம். அவர், சென்ற ஆவணி மாஸம் 15-௳ வியாழக்கிழமை பகல் 3 மணிக்குத் திருநாட்டை அலங்கரித்துவிட்டாராம். அவருடைய திரோதாநத்தினால் நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்திக்கு மாத்திரமின்றிக்கே நமது தேஶம் முழுவதற்குமே பெரியதொரு குறைவு நேர்ந்ததென்று நாம் நினைக்கிறோம்.

அவர், ராஜமன்னார் ஸந்நிதி என்னும் பட்டணத்திற்குச் சற்றுத் தெற்கிலுள்ள பெருகவாழ்ந்தான் என்னும் ஸ்ரீ க்ராமத்தில், ஸ்ரீ க்ருஷ்ணமாசார்யரென்று அக்காலத்தில் ப்ரஸித்தி பெற்ற ஓர் மஹா வித்வானுடைய புத்ரராய் ஜநித்தவர். பால்யம் முதற்கொண்டே வைதிக வித்யையில் ப்ரவ்ருத்தி செய்யப்பட்டு ஸம்ஸ்க்ருத பாஷையில் தமது வித்வத் குலத்திற்கு அநுரூபமான வைதுஷ்யத்தைப் பெற்றவர். பூர்வ ஸுக்ருதமடியாக ஸம்பவித்த ஸத்ஸங்கத்தினால் ஸ்வதர்மாநுஷ்டாநாதிகளில் அஸாதாரணமான ஶ்ரத்தையை அடைந்து, அவைகளிலிருந்து நெறிதவறாதவராய், கர்ம ப்ராப்தமாகத் தமக்கு நேர்ந்த பௌராண ப்ரவசந ரூபமான வ்ருத்தியில், அவர் யதா ஶாஸ்த்ரம் ஸ்வல்ப காலம் வர்த்தித்து வந்தார். அவருக்கு நைஸர்க்கிகமாக ப்ரவசநத்தில் அந்யாத்ருஶமான பாடவம் இருந்தபடியாலும், ஸ்வபாவத்திலேயே அவரிடத்தில் ஸாத்விகாம்ஶம் தலையெடுத்திருந்தபடியாலும், அவருடைய அநுக்ரஹத்திற்குப் பாத்ரமாய் நேர்ந்த ஸகல ஶிஷ்யர்களும், அவருடைய ஸஹவாஸத்திற்கு ஆஸ்பதமான ஸகல லௌகிக பெரியோர்களும் அவரிடத்தில் ஹார்த்தமான விஶ்வாஸத்தைச் செய்யும்படி ஸம்பவித்தது. இவ்விதம் அநந்ய ஸாதாரணமான ஶ்ரேயஸ்ஸை அநுபவித்து வருகையிலும், ஏதோ சில ஜந்மாந்தரீய கர்ம ஶேஷத்தின் பலமாகப் பலவித ஸாம்ஸாரிக க்லேஶங்களும் அவருக்கு ஸம்பவித்தன. பால்யத்தில் பெற்றோர்களுடைய வியோகமும், யௌவநத்தில் ஸஹதர்மசாரிணியின் பிரிவும், வார்த்தகத்தில புத்ர ஶோகமும் இந்த மூன்றும் ஸாம்ஸாரிக தாபங்களுள் மிக உக்ரங்கள் என்று ஜநங்கள் சொல்வதுண்டு. இவைகளுள் ஒவ்வொன்றுக்கும் இந்த ஸ்வாமி பாத்ரமானார் என்பது அவருடைய குடும்ப ஸமாசாரத்தைத் தெரிந்தவர் அறிவார்கள். இப்படி மஹத்தான ஸுக துக்கங்களுக்கு விஷயமாக இருக்கையிலும்,

"𑌦𑍁𑌃𑌖𑍇𑌷𑍍𑌵𑌨𑍁𑌦𑍍𑌵𑌿𑌗𑍍𑌨𑌮𑌨𑌾𑌃 𑌸𑍁𑌖𑍇𑌷𑍁 𑌵𑌿𑌗𑌤𑌸𑍍𑌪𑍃𑌹𑌃"

என்கிறபடி அவைகளால் எவ்வித ஆநந்தோத்வேகாதிகளையும் அடையாமல் ஸ்திரமான புத்தியை உடையவராய் ஶாஸ்த்ரோக்தமான முநிவ்ருத்தியை இவர் செய்து வந்தார் என்பது இவரிடத்தில் தென்படும் விஶேஷ குணங்களில் ஒன்று. வய: ப்ரயுக்தமான இந்த்ரிய அபாடவம் ஸம்பவிக்கவே, லௌகிக வ்யாபாரத்திலிருந்து உபரதியை அடைந்து, அப்பொழுதும் ராஜகாரத்தில் அநேக ப்ரகாரமாய் ஸம்மாநிக்கப்பட்டவராய், சற்றேறக்குறைய இருபது ஸம்வத்ஸர காலம் இவ்விடத்திலேயே எம்பெருமானுடைய திவ்ய கல்யாண குணங்களைப் பலவாறாக அநுபவித்துவிட்டு, இப்பொழுது ஸ்ரீ பீஷ்மாசார்யர் போல

"𑌕𑍃𑌷𑍍𑌣𑍇 𑌭𑌾𑌵𑌂 𑌸𑌮𑌾𑌵𑍇𑌶𑍍𑌯 𑌮𑌨𑍋𑌵𑌾𑌕𑍍𑌕𑌾𑌯𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌭𑌿𑌃 ।
𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌽𑌤𑍍𑌰 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌸𑍍𑌵𑌂 𑌸𑌾𑌯𑍁𑌜𑍍𑌯𑌂 𑌸𑌮𑍁𑌪𑌾𑌗𑌮𑌤𑍍"

ஸ்ரீ க்ருஷ்ண பகவானிடத்திலேயே அர்ப்பிதமான மநோ வாக் காயங்களை உடையவராய், இந்தக் கர்ம ஶரீரத்தை த்யஜித்துவிட்டு ஸாக்ஷாத் ப்ரஹ்ம ஸாயுஜ்யத்தை அடைந்துவிட்டார்.

இம்மஹானுடைய நிர்யாணத்தினால் ஶோகப்படுபவர்கள் பலர் உளர். அவருடைய வைதுஷ்யத்தைப் பற்றி ஶ்லாகித்துப் பேசுபவர் சிலர்; கேவலம் ப்ராசீந பாண்டித்ய மின்றிக்கே நவீநமான குணதோஷ விமர்ஶ ரீதியிலும் சிறந்தவரென்று சொல்பவர் சிலர்; ப்ரவசநத்தில் மஹா பாடவம் பெற்றவரென்று ஆநந்திப்பவர் சிலர்; அவருடைய கடாக்ஷத்திற்குப் பாத்ரமாகாவிட்டால் கீர்வாண பாஷாகந்தமே தமக்கு துர்லபமாகிவிடு மென்று க்ருதஜ்ஞதை கொண்டாடுபவர் சிலர்; நமது தேஶீயர்களான லௌகிக ப்ரபுக்கள் மாத்திர மின்றிக்கே குணபக்ஷபாதிகளான பாஶ்சாத்யர்களும் கொண்டாடும்படியான பெருமை பெற்றவரென்று ஆஶ்சர்யப்படுபவர் சிலர்; இவ்வாறு பலவிதமான புகழுக்கு இவர் பாத்ரமாக இருக்கையிலும், எல்லாருடைய மநஸ்ஸையும் ஆவர்ஜநம் செய்யத்தக்க ஶ்லாக்யதமமான கல்யாணகுணம் வேறொன்று இவரிடத்தில் குடிகொண்டிருந்தது. அந்தக் குணமொன்றை ஸம்பாதித்துக் கொள்வதிலும் அதை வ்ருத்திசெய்து கொள்வதிலும், இவரை நிதர்ஶநமாகக்கொண்டு நாம் ப்ரயத்நப்பட்டால், ஸமஸ்தமான லௌகிக வைதிக ஶ்ரேயஸ்ஸுக்கும் நாம் அர்ஹர்களாகும்படி அவ்வளவு அபிவ்ருத்தியை அடைவோம் என்பதில் கொஞ்சமேனும் ஐயமில்லை.

"𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌗𑍍𑌰𑌾𑌯𑌃 𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌂 𑌸𑌾𑌰𑌲𑍍𑌯𑌂 𑌚 𑌸𑍌𑌹𑍃𑌦𑌂"

என்கிறபடி கலிதோஷத்தினால் அநேக விதமான குடில ஸ்வபாவத்தினாலும் மௌர்க்யத்தினாலும் வ்யாப்தமாக இருக்கும் இந்த ஜகத்தில், ஆர்ஜவமென்னும் அநர்க்கரத்நம் போன்ற குணத்துடன் இம்மஹான் அவதரித்தவர். அவருடைய வாழ்நாளில் எக்காலத்திலும் எவ்விடத்திலும் அந்த ஆர்ஜவமே ஸகல வ்யாபாரங்களிலும் அவருக்கு நியாமகமாக இருந்தது என்பதே அவரிடத்தில் நமக்கு முக்கியமான விஶ்வாஸ ஹேது. அந்தக்கரணத்திற்கு விருத்தமாக எவ்வித கார்யத்திலும், அவர் ப்ரவ்ருத்தித்ததே இல்லை. அஸத்ய வசந மென்பதை அவர் கொஞ்சமேனும் அறியார். ப்ர ப்ராமகமான வ்யாபாரங்களில். அவர் ப்ரவ்ருத்தித்தா ரென்றாவது, ஆத்மார்த்த மின்றிக்கு, கேவலம் டம்பத்திற்காக ஓர் அநுஷ்டாநத்தைச் செய்தாரென்றாவது ஒருவராலும் சொல்லமுடியாது. எப்பொழுதாவது ஸ்காலித்யம் நேர்ந்தால், அந்த ஸ்கலநத்தை எவ்விதமான

தாபிமாநமு மின்றிக்கே அவர் ஒத்துக்கொள்வதை நாம் அறிவோம். நமக்குள் நடை பெற்றுவரும் ஶாஸ்த்ர விருத்தங்களான சில கட்டுப்பாடுகளை அவர் அஶாஸ்த்ரீயமென்று அநாதரித்ததும், அப்படி அநாதரித்ததனால் அவ்வரை க்லேஶப்படுத்தச் சிலர் ப்ரயத்நப்பட்டதும், அந்த ப்ரயத்நத்தைச் சற்றேனும் கணிசியாமல் ஶாஸ்த்ரார்த்தத்தையே அவர் அநுஷ்டித்ததும் அந்த ஸ்தலவாஸிகளான எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஒருவனிடத்தில் அவர் ப்ரீதி பாராட்டினால் அது ஹார்த்தமான ப்ரீதியே; ப்ரத்யக்ஷத்தில் ப்ரீதி, பரோக்ஷத்தில் ஔதாஸீந்யம், என்று இராமல், யதா ஶக்தி அவனுக்கு ஶ்ரேயஸ்ஸை ஸம்பாதித்துக் கொடுப்பதில் அவனுடைய ப்ரேரணமின்றிக்கே அவர் ப்ரயத்நப்படும் ஸ்வபாவமுள்ளவர். அப்படிப்பட்ட உத்தம குணத்தினால் அஸாதாரணமான ஶோபையைப்பெற்ற ஜ்ஞாநம் அநுஷ்டாநம் ஆஸ்திக்யம் முதலிய கல்யாண குணங்களையுடைய இந்த மஹாந் அந்தர்தாநத்தை அடைந்துவிட்டாரென்று நாம் மிகவும் ஶோகிக்கிறோம்.

« விபாகம்ஸ்ய வர்த்மஷு ஶ்ருதாநி ஜநகஷூணா: |
ஆவேத்யஸ்ரீம் வ்ருத்தி ரஜிஹ்மாம் ஶடாம் ததா ||»

என்று ஸ்ரீ யாஜ்ஞவல்க்யர் சொல்லியிருக்கிறபடி அஜிஹ்மமாயும் அஶடமாயுமுள்ள வ்ருத்தியை எவ்விடத்தில் இனி காணப்போகிறோம்?

ஸ்யாத் ஸாயவேர் ஜோஷே ஸாதுவிஸ்வ ஸம்வ்ருதாம் |
காலே வ்யாஸஸத்வஷ்டிர் ஜநயதோ ஜம்ந: ||

பூர்வம் ‘ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபை’ யென்றும் இப்பொழுது ‘ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை’ யென்றும் வ்யவஹரிக்கப்பட்டு வரும் இந்த ஸபையும், இவரது ஸம்பந்தத்தால் விஶேஷித்த ஶோபையைப் பெற்றிருந்தது. இவருடைய பாண்டித்யம், ஆஸ்திக்யம், ஆத்ம குணபூர்த்தி இவைகளை உத்தேஶித்து, இந்த ஸபையின் ப்ரவர்த்தகர்கள், இதற்கு அவர் ஒரு **ஆனரேரி** அங்கத்தினராக எழுந்தருளியிருக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்க, அவர் அதற்கு இணங்கி, சென்ற 5 - வர்ஷகாலமாக அந்த ஆஸ்தாநத்தை க்ருபையுடன் வஹித்து வந்தார். சென்ற விரோதிக்ருத் வர்ஷம் மார்கழி மாஸத்தில் (1911 - டிஸம்பர் மாஸத்தில்) நீடாமங்கலத்தில் நடந்த வார்ஷிக ஸங்கத்திற்கு இந்த மஹாந், வார்த்தகத்தால் திருமேனி அஶக்தமாக இருக்கையிலும் வைதிக விஶ்வாஸத்தை முன்னிட்டு அக்ராஸநாதிபதியாக எழுந்தருளி யிருந்தார் என்பது ஸபையைச் சேர்ந்த எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இப்படிப் பலவாறாக அவரிடமிருந்து மஹோபகாரத்தைப் பெற்றிருக்கும் இந்த ஸபையோர்கள் அவருடைய இந்த நிர்யாண ஸமாசாரத்தைக் கேட்க மிகவும் துக்கிப்பார்கள் என்பதில் ஸந்தேஹமில்லை. ஆனால், பகவத் ஸங்கல்பத்தால் ஸம்பவிக்கும் காலகதியைப்பற்றி நாம் ஶோகிக்கவும் கூடுமோ?

எஸ். வாஸுதேவன்.

ஸ்ரீ:.

கடிதங்கள்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

« விஶ்வஸிதி தம் ஹ்ருந்நிக்ருதம் சாபலம் ஜநபங்க்தி » என்கிற மஹாகவி காளிதாஸனுடைய உக்தியை ஸ்மரித்து வெகு காலமாய் மனத்திலிருக்கும் ஒரு விஷயத்தை இப்பொழுது லப்தாவகாஶனாய் விஜ்ஞாபநம் செய்கிறேன். இதைப் பத்ராபிமாநிகள் அங்கீகரிக்காமல் இருக்கமாட்டார்களென்று நம்புகிறேன்.

இந்த வேதாந்த தீபிகை பத்ரிகையானது சுமார் 7-வருஷகாலமாய் இந்த பூமண்டலத்தை அலங்கரித்து வருகிறதென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். நாளது வரையில் தீபிகை மணிப்ரவாள ரூபமாய் (கேவல ஸம்ஸ்க்ருதத்துடன் அதற்கு வ்யாக்யாநம் சில இடத்தில் தனித்தமிழ் வசநங்களாகவும்) விஷயங்களை வெளிப்படுத்துகிறது. இதனுடைய முக்யநோக்கம் : கொஞ்சம் ஸம்ப்ரதாயம், ஸம்ஸ்க்ருத பாஷை, இவைகளை அறிந்த மஹாந்களுக்குக் கூட அநேக வேதாந்தவிஷய விசாரங்கள். விகஸிப்பதே யென்று சொல்லலாம். இதுபெரும்பாலும் பாஷாந்தராப்யாஸம் செய்தவர்களுக்கே உபகாரமாகுமே யல்லது ஸம்ஸ்க்ருத வித்வாந்களுக்கு அவ்வளவு (எல்லாவிஷயமும்) உபயோகமாக இருக்குமென்று சொல்ல முடியவில்லை. லோகத்தில் அநேகமாய் எங்கெங்கே கீர்வாண வாணீவிலாஸம் இருக்கிறதோ, அவ்விடத்தில் தாராஹித்யம் கூடவேயிருக்கிறது. இவைகளை ஸஹசாரிகளென்றும் சிலர் சொல்வர். பண்டிதர்களால் பத்ரிகையை வ்ருத்திசெய்ய முடியுமென்று சொல்லவும் இடமில்லை. தவிர, பண்டிதர்களுக்கு அநேக ப்ராசீந ஶாஸ்த்ரக்ரந்தங்களை முத்ரணம் செய்விக்க ஆஸ்தையிருந்தபோதிலும் «ஸாமர்த்ய தக்ஷய நாஶ்ர மநோரதா: | உத்ஸம்பாவ்ய ஹ்ருதி லீயந்தே» என்பதை நினைத்து ப்ரவ்ருத்தி மலிநமாகிறது. அப்படி ஒரு பண்டிதர் முத்ரணத்தில் ப்ரவ்ருத்தித்தாலும் இரண்டொரு ஸஞ்சிகையில் விஶ்ராந்தியை யடைகிறார்.

ஆதலால் தநிகர்களாலும் வித்வாந்களாலும் போஷிக்கப்பட்டு விளங்குகிற நமது வேதாந்த தீபிகையில், ப்ரதி மீ 8 அல்லது 4 பக்கத்தில் க்ரந்தாக்ஷரத்தில் ஏதாவது ஒரு ப்ராசீந ஶாஸ்த்ரக்ரந்தத்தை அச்சிட்டுவந்தால் வித்

வாங்களுக்கு அத்யுத்ஸாஹம் உண்டாகும்; மிகுந்த உபகாரமாகவு மிருக்கும். இதுவரை அச்சிடப்படாத அதிப்ராசீந க்ரந்தங்கள் வெளியாகும். நமது லோகாசார்யர்கள், நாம் உஜ்ஜீவிக்கவேண்டியதற்காக வெகு பரிஶ்ரமத்துடன் அநுக்ரஹித்ததும் ஸபலமாகு மென்றும் சில தீபிகாபிமானிகளின் நோக்கம்.

சிலர் ஜநகநந்திநி என்னும் விஷயத்தைப் பார்த்து, 'வேதாந்ததீபிகை' என்று பத்ரிகைக்குப் பெயரிட்டு, அதில் நாவல் (Novel) எழுதி ப்ரசுரிப்பது உசிதமல்ல வென்று சொல்லுகின்றனர். அது யுக்தமல்ல. அவர்கள் நாவல் என்பதை மாத்ரம் கவனித்தார்களேதவிர அதன் விஷயம் முழுவதும், தத்வங்களையும் திவ்யதேஶ சரித்ரங்களையும் ஐஹிகநைராஶ்யத்தையும் உபதேசித்து, மனத்திற்கு அதிமாத்ரம் ஆநந்தத்தை உண்டுபண்ணுகிறதென்பதைக் கவனித்தார்களில்லை. எல்லாருடைய மனத்துக்கும் அநுகூலமாக எப்படித் தான் நடக்க முடியும்? அப்படியே மஹாகவி பவபூதியும், "யதா ஸ்த்ரீணாம் ததா வாசாம் ஸாதுத்வே துர்ஜநோ ஜந: ।" என்று உரைத்தார்.

பூநா, காசீ, கல்கத்தா முதலிய இடங்களிலிருந்து அநேக ஸம்ஸ்க்ருத மாஸிக பத்ரிகைகள் ப்ரசுரமாகின்றன, அவைகளில் இரண்டு அல்லது ஒரு பாரமாவது [Form] ப்ராசீந க்ரந்தங்களாகவே இருக்கின்றன. ஆனால் அவர்கள், அந்த தேசத்திலிருந்த வித்வான்களால் செய்யப்பட்டதாயும், ப்ராயேண நாடக வ்யாக்யாநங்களாயும் அச்சிட்டு அனுப்புகிறார்களேதவிர ஶாஸ்த்ர க்ரந்தங்களாயும், அச்சிடாத அபூர்வ க்ரந்தங்களாகவும் பார்த்து அச்சிடுகிறதில்லை. அப்படி நமது தேசத்தார் செய்த க்ரந்தங்களை அவர்கள் அச்சிட்டால் அவைகளில் பிழை அதிகம். இதற்கு ப்ரமாணம் நிர்ணய ஸாகரத்தில் அச்சிட்ட பாதுகாஸஹஸ்ரம், காஶியில் அச்சிட்ட லக்ஷ்மீஸஹஸ்ரம் முதலிய அநேக க்ரந்தங்களே. ஆதலால் பத்ராத்யக்ஷர்கள் மிகுந்த க்ருபையுடன் நமது தேசத்தார் செய்த ப்ராசீநாபூர்வ ஸ்ரீகோஶங்களை ப்ரதிமாஸமும் தீபிகையில் கூடுமானவரையில் ப்ரசுரித்தால் மிக்க உபகாரமா மென்பதை புந: ஸவிநயம் ப்ரார்த்திக்கிறேன். தீபிகாபிமாநிகளும் இதை ஆதரவுடன் அங்கீகரிப்பார்களென்பதில் ஐயமில்லை. பேபர் விலை ஏறிவிட்டதை முன்னிட்டு அத்யபூர்வ ப்ராசீந க்ரந்தங்களைக்கூட அச்சிடமுடியவில்லை. ஓலைப்புத்தகங்களாக விருப்பதால் நாளாவட்டத்தில் அவை பாணப்பூச்சிகளுக்கு இரையாய் விடுகின்றன. பிறகு க்ரந்தமே லுப்தமாகிவிடுகிறது. அப்படி, தீபிகை அடியேன் ப்ரார்த்தனையை நிறைவேற்றினால் முதலில் எந்த க்ரந்தத்தை முத்ரணம் செய்வதென்று ஆலோசனை வரலாம். நமது லோகாசார்யனான ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த திவ்யஸூக்திகளில் ஒன்றாகிய **ஸேஶ்வர மீமாம்ஸை** என்னும் க்ரந்தத்தை அச்சிடலாம். சில நாள் முன் சில பண்டிதர்களை விசாரித்ததில் **ஸேஶ்வர மீமாம்ஸை** என்னும் க்ரந்தம் இரண்டு பாதந்தான் இப்பொழுது ப்ரசாரத்தில் இருக்கிறதென்றும், ஷை க்ரந்தம் முதல் அத்யாயம் முதல் இரண்டு பாதங்கள் காஞ்சீபுரத்தில் நாகராக்ஷரத்தில் அச்சிடப்பட்டிருப்பனவாகவும் சொன்னார்கள். பிறகு அதை வாங்கி

மேல் க்ரந்தம் கிடைக்க யத்நித்து விசாரித்ததில், சில வித்வான்கள், அதே காரணத்தை முன்னிட்டு ஸ்ரீதேசிகன் இரண்டு பாதத்துக்கு மேல் செய்தருளவேயில்லை யென்று சொன்னார்கள். 4-5 - மீ. முன் அடியேன் அகத்து ஓலைப்புஸ்தகங்களைப் பரிஶீலநம் பண்ணினபோது, முதல் அத்யாயம் 3 - வது பாதம் முதல், 2 - வது அத்யாயம் முழுவதும் 6 - பாதங்கள் அடங்கியதோர் ஸ்ரீகோஶம் கிடைத்தது. அதை மறுபடி வித்வான்களிடத்தில் விஜ்ஞாபநம் செய்ததில், ஓர் பெரிய புதையல் கண்டது போல் ஆநந்திக்கிறார்கள்; பேபர் கஷ்டத்தை நினைத்துக் கஷ்டப்படுகின்றனர். இதை முந்தி நமது தீபிகையில் முத்ரணம் செய்தால் மிகவும் அழகாயிருக்கும். தவிர 'ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை' என்கிற நாமத்தையுடைய ஸபையால் இந்தத் தீபிகை ப்ரசுரிக்கப்படுகிறபடியால் க்ரந்த முத்ரணங்களை ஆரம்பிக்கும்பொழுது மஹாமஹோபாத்யாய ஸ்ரீ திருப்புட்குழி ஸ்வாமியால் ஶாஸ்த்ர விசார மர்யாதையில் அநுக்ரஹிக்கப்பட்ட 'ஸ்ரீ வைஷ்ணவதத்வ நிரூபணம்' என்னும் க்ரந்தத்தை ப்ரசுரப்படுத்திப் பிறகு **ஸேஶ்வர மீமாம்ஸாதி** க்ரந்தங்களை முத்ரணம் செய்யலாம்.

அத்யாஸ்தையால் விஜ்ஞாபநம் செய்யும்பொழுது அநேக புநருக்த்யாதி தோஷங்கள் ஏற்பட்டிருக்கும். புரோபாகிகளைக் குறித்து நாம் எழுதமுயலவில்லை. மஹான்கள் குணபக்ஷபாதிகள்.

இதி

பட்டுக்கோட்டை } பண்டிதகுலதாஸ:,
22-8-17 } **வே. தி. க. திருமலைதாதாசார்யர்.**

[ஸ்ரீ திருமலை தாதாசார்யரால் நியமிக்கப்பட்டுள்ள விஷயம், ஸபாப்ரவர்த்தகர்களால் பூர்வமே பலதடவை பர்யாலோசிக்கப்பட்டது. ஆனால், அக்காலத்தில் திருவஹீந்த்ரபுரத்தில் ஸ்ரீவிஶிஷ்டாத்வைத புஸ்தக முத்ரணார்த்தம் ஏற்படுத்தப்பட்ட ஸபையொன்று இதம்பரமாக ப்ரஸ்துத வ்யாபாரத்தில் ப்ரவ்ருத்தித்திருந்தபடியாலும், ப்ரதிமாஸம் 4-பக்கம் வீதம் வெளிப்படுத்துவது பெரிய க்ரந்தங்களுக்கு அநநுரூபமாகத் தோன்றினபடியாலும் அந்த ஆலோசனை க்ரியாபர்யவஸாயி ஆகவில்லை. இப்பொழுது திருவஹீந்த்ரபுரம் ஸபை மாலிந்யத்தை அடைந்திருக்கிறது. அதன் ஸ்திதியின அந்யதா நிர்ணயம் ஏற்பட்டவுடன், ப்ரக்ருத பர்யாலோசனையை இந்த ஸபாப்ரவர்த்தகர்கள் யதோசிதம் செய்வார்களென்று நாம் விஜ்ஞாபநம் செய்துகொள்ளுகிறோம்.

ஸேஶ்வர மீமாம்ஸை விஷயமாக ஒரு ஶங்கை ஜநிக்கின்றது. ப்ரக்ருத ஓலைப் புஸ்தகத்தைப் பார்த்த இரண்டொரு வித்வான்கள், சில உபபத்திகளைக்கொண்டு 'அது க்ருத்ரிமம்போலத் தோன்றுகிறது' என்று சொல்லுகிறார்கள். ஸ்ரீ திருமலைதாதாசார்யர், அந்தப் புஸ்தகத்தை க்ருபையுடன் ஸ்ரீவேதாந்த தீபிகை ஆபீஸுக்கு அனுப்பினால், தகுந்த வித்வான்களைக்கொண்டு அதைப் பரிஶீலநம் செய்வித்து, பிறகு அதை யதோசிதம் விநியோகிக்க ப்ரயத்நப்படுவோம் என்பதையும் ஸவிநயம் விஜ்ஞாபிக்கிறோம்.

வாஸுதேவ தாஸ:.]

ஸ்ரீ:.

பூகோள ஸ்வரூபம்.

இதுவரையில் சொல்லப்பட்ட நூறாயிரம் யோஜனை அளவுள்ள 'ஜம்பூ' எனப்படும் பூமியானது லக்ஷயோஜனை அகலமுள்ள உப்பு ஸமுத்ரத்தினால் சுற்றிலும் சூழப்பட்டிருக்கிறது. இந்த ஸமுத்ரத்திற்கு அப்புறம், சுற்றிலும் வளையம்போல் இரண்டு லக்ஷம் யோஜனை அகலமுள்ள பூமிக்கு ப்லக்ஷத்வீபம் என்று பெயர். இது சாந்தஹயம், ஶிஶிரம், சுகதம், ஆநந்தம், ஶிவம், க்ஷேமகம், த்ருவம் எனப்படும் ஏழு விதமான பாகங்களை உடையது. இப்பாகங்கள் இருபுறம் ஸமுத்ரங்களையும் மற்ற இருபுறம் மலைகளையும் எல்லையாக உடையன. அம்மலைகளெல்லாம் இருபுறத்தில் ஸமுத்ரங்களையும் மற்ற இருபுறம் ப்லக்ஷத்வீப பூமிகளையும் உடையன. அவை கோமேதம், சந்த்ர நாரதஃ, துந்துபிஃ, சோமகாஃ ஸுமநஃ, வைப்ராஜஃ என வழங்கப்படுகின்றன. இம்மலைகளில் தேவர்களும் கந்தர்வர்களும் வஸிக்கின்றனர்.

ப்லக்ஷத்வீபம் முதல் ஶாகத்வீபம் வரையிலுள்ள பூமிகளில் வஸிக்கும் ஜநங்கள், வ்யாதியில்லாதவர்களாயும் துக்கமற்றவர்களாயும் எக்காலத்திலும் ஸுகத்துடன் ஐயாயிரம் வர்ஷம் வஸிக்கின்றனர். கீழ்சொல்லப்பட்ட மலைகளினின்றும் அநுதப்தா முதலான ஏழு மஹாநதிகளும் இன்னும் அநேக உபநதிகளும் ப்ரவஹிக்கின்றன. அந்த இடத்தில் வஸிக்கும் ஜநங்களுக்கு அபஸர்விணீ ப்ரஸர்விணீ எனப்படும் குறைதல் வளர்தல் கிடையா. க்ருதம், த்ரேதா முதலான யுகாவஸ்தையே இல்லை; த்ரேதாயுகம் போலவே இருக்கிறது. இங்கு ப்ராஹ்மணர், க்ஷத்ரியர், வைஶ்யர், ஶூத்ரர் என்பது போல், ப்லக்ஷத்வீபத்தில் ஆர்யகர், குற்றர், விதிச்யர், பாவிகர் என நான்கு ஜாதி மனிதர் வஸிக்கின்றனர். ஜம்பூத்வீபத்தில் நாவல் மரம்போல், ப்லக்ஷத்வீபத்தில் இறனி மரமிருப்பதால் அதற்கு அப்பெயர் உண்டாயிற்று. அந்த த்வீபத்தில் சந்த்ரரூபியான பகவான் கீழ்சொல்லப்பட்ட ஆர்யகர் முதலான நாலு ஜாதி மனிதர்களால் ஆராதிக்கப்படுகிறார். இந்த ப்லக்ஷத்வீபமானது இரண்டு லக்ஷம் யோஜனை அகலமுள்ள கருப்பஞ்சாறு மயமான ஸமுத்ரத்தினால் சூழப்பட்டது. ப்லக்ஷத்வீபத்திற்கு அடுத்த இக்ஷுஸமுத்ரத்திற்கு அப்புறம் 4 - லக்ஷம் யோஜனை அகல முள்ளது ஶால்மலித்வீபம். அதுவும் ஶ்வேதம், ஹரிதம், ஜீமூகம், ரோஹிதம், வைத்யுதம், மாநஸம், ஸுப்ரபம் என்று 7 - பாகமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அங்கும் குமுதம், உந்நதம், வலாஹகம், த்ரோணம், கங்கம், மஹிஷம், ககுத்மாந் என்று 7 - வர்ஷ பர்வதங்களும், யோனிமுதலான 7 - புண்ய நதிகளும் உண்டு. இவற்றுள் த்ரோணம் என்னும் மலையில் ம்ருதஸஞ்ஜீவிநீ முதலான மஹா ஓஷதிகள் இருக்கின்றன. இம்மலையானது யுத்தகாலத்தில் ஹிம்ஸிக்கப்பட்ட ஸைந்யங்களுடைய க்ஷேமத்தை உத்தேசித்து ஹநுமானால் கொண்டுபோகப்பட்டுத் திரும்பவும் கொண்டுவரப்பட்டதாக ஸ்ரீமத்ராமாயணம்.

இந்த இடங்களில் கபிலர், அருணர், பீதர், க்ருஷ்ணர் எனப்படுகிற 4 - ஜாதி மனிதர்களால் வாயுரூபியான பகவான் ஆராதிக்கப்படுகிறார். இதில் ஶால்மலீ எனப்படும் இலவமரமானது மிகவும் பெரியதாக இருப்பதால் இத்தீவுக்கு ஶால்மலித்வீபம் எனப்பெயர் உண்டாயிற்று.

இது, கள் மயமான நான்கு லக்ஷம் யோஜனை அகலமுள்ள ஸமுத்ரத்தினால் சூழப்பட்டது. இந்த ஸமுத்ரத்தைச் சுற்றிலும், அப்புறம் இருக்கும் 8 - லக்ஷம் அகலமுள்ள த்வீபத்திற்குக் குஶம் என்று பெயர். இந்த பூமியும் முன்போல் உத்பித், வேணுமான், சுவைரதன், லம்பநன், த்ருதி, ப்ரபாகரன், கபிலன் எனப்படும் 7 - பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இங்கும், தமிகன், சுஷ்மிகன், ஸ்தேஹர், மந்தேகர் என 4 - ஜாதி மனிதர் இருக்கின்றனர். இவர்கள், ப்ரஹ்மரூபியான பகவானை ஆராதிக்கின்றனர். இங்கும் வித்ருமம், ஹேமஶைலம், த்யுதிமான், புஷ்பவான், குசேலம், ஹரிஃ, மந்தரம் என்று 7 - வர்ஷ பர்வதங்கள் இருக்கின்றன; தூதபாபா முதலான 7 - ப்ரதாந புண்ய நதிகளும் உண்டு. ஷை குஶத்வீபத்தில் குஶம் எனப்படும் தர்ப்பையானது நடுவில் ஓர் பெரியதூண்போல் இருப்பதால் அத்தீவுக்கு அது காரணப்பெயராயிற்று. இத்தீவானது தனக்கு ஸமமான பரிமாண அகலமுள்ள நெய் மயமான ஸமுத்ரத்தினால் சூழப்பட்டிருக்கிறது.

ஷை குஶத்வீபத்திற்குச் சுற்றிலுமுள்ள நெய் ஸமுத்ரத்திற்கு அப்பால், அதற்கு இரண்டுபங்கு அகலமுள்ள பூமி க்ரௌஞ்சத்வீபம். அங்கும் குஶல, மநுக, உஷ்ண, ஸிவர, அந்தகாரக, முநி, துந்துபி என்று 7 - விபாகமுள்ள பூமிகளும், க்ரௌஞ்சம், வாமநம், அர்த்தகாரகம், ஶைலம், திவாவிருத், புண்டரீகவான், துந்துபி என்கிற - 7 - வர்ஷ பர்வதங்களும், கௌரீ முதலான 7 - முக்ய நதிகளும், இருக்கின்றன. அங்கு புஷ்கரர், புஷ்கலர், தந்யர், திஷ்யர் என்கிற 4 - ஜாதி மநுஷ்யர்கள், ருத்ரரூபனான பகவானைப் பூஜிக்கிறார்கள். ஷை க்ரௌஞ்ச த்வீபமானது தனக்குச் சமமான அகலமுள்ள தயிர் ஸமுத்ரத்தினால் சுற்றிலும் சூழப்பட்டுள்ளது. அந்த ஸமுத்ரம் 2-பங்கு அதிக அகலமுள்ள ஶாகத்வீபத்தினால் சூழப்பட்டுள்ளது. ஶாகம் என்பது, மேற்புறம் மெதுவாயும் பின்புறம் சொரசொரப்பாயும் உள்ள இலையையுடைய ஒரு மரம். இதைக் கீரைமரம் என்று சிலர் சொல்வர். இம்மரம் இத்தீவில் பெரியதாக நடுவில் இருப்பதால். இந்தத்வீபம் ஶாகமென வழங்கப்படுகின்றது. இதிலும் ஜலதம், குமாரம், ஸுகுமாரம், மரீசகம், குஸுமோதம், ஸுமோதம், மகாதருமம், என்னும் 7 - பாகமான பூமிகளும், உதயகிரி, ஜலநாரம், ரைவதகம் ஶ்யாமம், அம்போகிரி, அம்பிகேயம், கேஸரி என்னும் 7 - எல்லை மலைகளும், ஸுகுமாரீ முதலான 7 - மஹா புண்யநதிகளும் மங்கர், மாகதர், மாநஸர், மந்தகர், என்கிற 4 - ஜாதி மநுஷ்யர்களும் இருக்கின்றனர். அங்கு தர்மக்ஞதையும், ஒருவர்க்கொருவர்

ஏற்படும் வைரம் முதலான கெட்ட குணங்களும் கிடையா; எல்லாரும் ஸுகியாகவே இருக்கின்றனர். ஸூர்யரூபியான பகவான் இவர்களால் பூஜிக்கப்படுகிறார். ஶாகத்வீபம், தனக்குச் சமமான அகலமுள்ள பால் ஸமுத்ரத்தினால் சூழப்பட்டிருக்கிறது. அந்த பால் ஸமுத்ரம், இரண்டு பங்கு அதிக அகலமுள்ள புஷ்கர த்வீபத்தினால் சூழப்பட்டுள்ளது.

இந்த புஷ்கரத்வீபமானது, மஹாபீதம், தாதகீஷண்டம் என்று இரண்டு பாகமாக இருக்கின்றது. இத்தீவின் நடுவில் மாநஸோத்தரம் என்னும், சுற்றிலும் வளையம்போன்ற ஒரே எல்லைமலை இருக்கிறதாகையால், இவ்விரண்டு பாகத்திற்கும் வெளி எல்லை. பால், சுத்தஜல ஸமுத்ரங்களும், உட்புறத்தில் மாநஸோத்ர பர்வதமும் எல்லையாகின்றன. இதில் வேறு மலை நதிகள் இல்லை; ஜாதி பேதமும் கிடையாது; காமம் கோபம் முதலான துர்க்குணங்களும் கிடையா; எல்லா மனிதர்களும் ஸமமானவர்கள்; வியாதி, பயம், ஆதி முதலியன இல்லை; எப்போதும் ஸுகமே யாவருக்கும் பூர்ணமாக இருக்கிறது. இதில் [ந்யக்ரோதம்] பெரியதான ஆலமரம் இருக்கிறபடியினால், இது புஷ்கரத்வீபமென்று பெயர் கொண்டது. அம்மரத்தடியில் சதுர்முகன் வஸிக்கிறார்; தேவாஸுரர்களால் பூஜிக்கப்படுகிறார். [இவ்விடத்தில் ஸ்ரீபாகவத மாத்ஸ்ய புராணத்தில் ‘விஸ்தாரமான ஸ்வர்ணமயமான தாமரைப் பூவில் ப்ரஹ்மா இருப்பதால் அத்தீவுக்குப் புஷ்கரம் என்று பெயர் வழங்கப்படுகிறது’ என்று இருக்கிறது.) இத்தீவில் வர்ணாஶ்ரமாசாரமும், தர்மாநுஷ்டாநமும், தண்டநீதி முதலான வ்யவஹாரங்களும் இல்லை. ஆறுவிதமான ரஸம்கூடின ஆஹாரமானது தானாகவே உண்டாகிறது. இன்னும் பலவிதமான ஸுகங்கள் நிரம்பி இருக்கிறபடியால் இது ‘பூலோகஸ்வர்க்கம்’ எனப்படுகிறது. இப்புஷ்கரத்வீபத்துக்கு அப்புறம் சுத்தஜலமயமான ஸமுத்ரம் இருக்கிறது. ஒவ்வொரு த்வீபத்தின் விஸ்தாரத்திற்கு இரண்டுபங்கு அகலமுள்ள இவ்வாறு 7 - த்வீபங்களையும் அந்தந்த த்வீபத்திற்கு ஸமமான அகலமுள்ள 7 - ஸமுத்ரங்களையும், அந்தந்த த்வீபத்தைச் சுற்றிலுமுடைய பூமியானது ஸப்தத்வீபா—பூமி எனப்படுகிறது.

இந்த சுத்தஜல ஸமுத்ரத்திற்கு அப்புறம் இரண்டு பங்கு அதிகமான தங்கமயமான பூமி இருக்கிறது. இதில் ஒரு ப்ராணியும் இல்லை. அதற்கு அப்புறம் லோகாலோகம் என்னும் மலைசுற்றிலும் இருக்கிறது. அது அயுத யோஜனை விஸ்தாரமுள்ளது; உயரமும் அவ்வளவே. அதற்கு அப்புறம் மஹாதமஸ் எங்கும் பரவி இருக்கிறது. அதன்பின் அண்டபித்தியானது தமஸ்ஸைச் சுற்றிலும் இருக்கிறது.

இவ்விதம் மஹாமேருவினுடைய அடியிலிருந்து இப்பூமியானது ஐம்பது கோடியோஜனை அகலமுள்ளதாகையால், ‘பஞ்சாஶத்கோடி விஸ்தார பூமி’ என்று சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன.

(இன்னும் வரும்)

புத்தங்கோட்டகம் - ஸ்ரீநிவாஸாசார்யர்.

ஸ்ரீ:

ஸ்ரீ ஹம்ஸ ஸந்தேசம்.*

[நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தமான இந்த ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயமானது நிலையூன்றி, அசைவின்றி, [illegible]மாகப் பரவும்படி பண்ணின மஹாசார்யர்களுக்குள்ளே ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் ஒருவரே அஸாதாரணமான உபகாரத்தைச் செய்தருளினர் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. மற்றைய ஆசார்யர்கள், ஓரோர் அம்சத்தில் மட்டும் ஜ்ஞாநோதயத்தை விளைவித்தார்கள். இம்மஹாநுபாவனே [illegible]க்களும், விவிகித்ஸுக்களும், முமுக்ஷுக்களும் விரும்புகிற விஷயங்களையெல்லாம் திரட்டி ஸுலபாவபோத்யங்களாகத் தம்முடைய ரஹஸ்யங்களில் ஸங்க்ரஹித்தருளினர். ‘விம்ஶத்யப்தே விஶ்ராந்த நாநாவித வித்ய:’ “[illegible]”, “[illegible] ஶக்தி: கவிகதகம்ருகேந்த்ர: ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர: । ஜயதி [illegible]” என்று சொல்லுகிறபடியே இம்மஹான், நிகில ஶாஸ்த்ர பாரங்கதராய் ஸகலவித்யாவிஶாரதராய், ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரராய்; வேதாந்த

---

* இது, சென்ற மார்கழி மாஸத்தில் மயிலாப்பூரில் நடைபெற்ற ஸ்ரீ வைஷ்ணவ ஸதஸ்ஸில், ஸ்ரீ. உப. எம். கெ. தாதாசார்யராற் செய்யப்பட்ட உபந்யாஸம்,

தேஶிகராய், கவிகுல திலகராய், நிரவத்ய வ்யாஹாரபட: ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரராய், சந்த்ரன்போலே ஶிஷ்ய ஜநங்களை ரஞ்ஜிப்பித்தும், ஸூர்யன் போலே பரவாதிகளைப் பரிதபிக்கச் செய்தும், ஸதாசார்ய மௌளீமணியாய் விளங்கிவந்தார். இவர் அருளிச்செய்த க்ரந்தங்களில் ஒன்றாகிய 'ஹம்ஸஸந்தேஶம்' என்கிற காவ்ய ரத்நத்தைப்பற்றிச் சொல்லும்படி ஸ்ரீமாந் வாஸுதேவாசார்யர் ஸ்வாமி அடியேனை நியமிக்க, அடியேனும் அந்த நியமநத்தை மீறமுடியாமல் இப்பெருங்கார்யத்தில் தலையிட்டுக்கொண்டேன். ஸ்ரீ ஹயக்ரீவ வல்லபனான ஸ்ரீதேஶிகனே அடியேனுக்கு புத்தியையும் ஶக்தியையும் தந்து ரக்ஷிக்கவேண்டும்.]

நமஸ்தஸ்மை ஸ்வஸ்வபாவாய விஜ்ஞாநைகாயநே |
த்ரய்யந்தகுரவே கவயே கேஸரிணே ||

ஸ்திரத்ஸத்ய ஶம்ஸரா ஶரண்யாங்கார ஸாரஸா: |
ஸ்வாதந்த்ரநிர்வ்யூஹவிஷ்ட்யா வேதஶாஸ்த்ரவேதந: ||

தயாவீ தத்ஸ்வாஸ்வாத ஸௌவர்ணவம்ஶஜ: |
யத்கிஞ்சிதிஹ ஜல்பாமி ஸஹ்ருதஸ்ஸ திதிக்ஷதாம் ||

ஸித்தாந்த ப்ரவசநாகாங்க்ஷியான இந்த ஸதஸ்ஸிலே காவ்யாலாபத்துக்கு என்ன ஸம்பந்தமென்று சிலர் ஶங்கிக்கலாம். 'யதிப்ரவரபாரதீரஸபரேண நீதம் வய: ப்ரபுல்லபலிதம் ஶிர:' என்று காலம் முழுவதையும் ஸித்தாந்த ப்ரவசநத்தில் கழித்த ஸ்ரீ தேஶிகனே காவ்ய ரசனையில் ப்ரவேஶித்தார் என்கிற ஒரு த்ருஷ்டாந்தமே இந்த ஸம்ஶயத்துக்கு ப்ரத்யுத்தரமாகும்.

'காவ்யம் யஶஸே அர்த்தக்ருதே வ்யவஹாரவிதே ஶிவேதரக்ஷதயே ஸத்ய: பரநிர்வ்ருதயே காந்தாஸம்மிததயோபதேஶயுஜே.' என்று கவிக்குக் கீர்த்தியும், தநாயதியும், அப்யஸிப்பவனுக்கு வ்யவஹார கௌஶல்யத்தையும் ஸதுபதேஶமும், இருவர்களுக்கும் அஶுபக்ஷயமும், ஆநந்தமும் உண்டாகுமென்று சொல்லியிருப்

பதால், ஸித்தாந்த ஸம்பாதநத்திற்கு ஆதாரமான பாஷா ஜ்ஞாநத்தைப் பெற காவ்யாப்யாஸம் அவஶ்ய கர்தவ்யம். ஆகவே இவ்விஷயத்தில் ஸித்தாந்த துரந்தரர்களும் கண் விழித்திருக்க வேண்டும். கீழ் சொன்ன ப்ரயோஜனங்களில் அஸாரங்களான அர்த்தார்ஜந வ்யவஹார கௌஶல்ய ஸம்பாதநங்களோடு நிற்காமல் ஆமுஷ்மிக ஜ்ஞாநோபயோகிகளான காவ்யங்களையே படிக்க வேண்டியது அவஶ்யம் என்று நிர்ணயித்த நம்முடைய ஆசார்யன், பகவத் கதைகளை ஒட்டியும், ஸ்ரீமத்ராமாநுஜ ஸித்தாந்தங்களை உபப்ரும்ஹித்தும் காவ்யங்களைச் செய்தருளினர். பாஷாஜ்ஞாந ஸம்பாதநார்த்தமாக நாம் எந்தெந்தப் புஸ்தகங்களை வாசிக்கிறோமோ, அவ்வவைகளுள் அடங்கிய அபிப்ராயங்கள் நமது மநஸ்ஸில் புகுந்து, அந்த ஸம்ஸ்காரத்துக்கேற்றபடி ஆஸ்திக்ய நாஸ்திக்யாதி குணங்களும் வ்ருத்தியடையுமாதலால், பரிபக்வமாகாத தஶையிலுள்ள சிறுவர்களுக்குத் தகுந்த க்ரந்தங்களையே முதலில் கற்றுக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் க்ஷுத்ர க்ரந்த பரிசய பலத்தாலே விபரீத ஜ்ஞாநமுண்டாகி, இவர்கள் க்ருஹீதக்ராஹிகளாய் ஸம்ப்ரதாய வித்யைக்கு விரோதிகள் ஆகிறார்கள். இவ்விதமான அநிஷ்ட பல பர்யவஸாநத்தை இப்போது நாம் ஸாதாரணமாக நமது சிறுவர்களிடத்தில் காண்கிறோம். இந்த துர்தஶையை நிவர்த்திக்க விரும்பியே ஸ்ரீதேஶிகனும் பாஷா ஜ்ஞாநத்திற்காக அந்யமத க்ரந்தங்களை முதல் முதலில் பிள்ளைகள் படிக்காமல் இருப்பது நலம் என்றெண்ணி பாஷா ஜ்ஞாநாபி வ்ருத்திக்கு உபகரணங்களான காவ்யங்களையும் தாமே செய்தருளினர்.

"ஶிஷ்யா: ஶிக்ஷிதவ்யா: ஶ்ருதிபதயே யேஷாம் வயம் ஸேவந: தத்தத்கோஷஸம்ரக்ஷணக்ஷமம்"

என்று தம்மை ஆஶ்ரயித்த ஶிஷ்ய வர்கங்களுடைய க்ஷேமத்தைக் கோறியே இவர் ஸகல க்ரந்தங்களையும் நிபந்தித்தருளினர். இப்படி எல்லா விதத்திலும் நமக்கு உபகாரத்தைச் செய்த இந்த

ஸ்தாவாயபூ ஶிவாணியினுடைய அநுக்ரஹ பரீவாஹத்தை நினைப்பவர்களுக்கு க்ருதஜ்ஞதையானது மேன்மேலும் பொங்கி வரும் என்பதில் என்ன ஆக்ஷேபம்?

இந்த ரஹஸ்யத்தை அறியாதவரும் அறிந்தும் அங்கீகரிக்க மனமில்லாதவருமான சில ஆபாதரஸிகர்கள், ஸ்வாமி தேஶிகன், க்ரந்தாந்தரத்தைப் பார்த்து அதை அநுகரித்துக் காவ்யங்களைச் செய்தவரே அல்லாமல், ஸ்வதந்த்ரராகக் கவிதா ரஸப்ரவாஹத்தால் பரவசராகி எழுதினவர் அன்று என்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இதை ஸ்தாபிக்க இவர்கள் சொல்லுகிற காரணங்களும் விசித்ரங்கள். ‘டிண்டிம கவியினுடைய ‘ராகவாப்யுதயம்’ என்கிற மஹா காவ்யத்தைப் பார்த்து யாதவாப்யுதயத்தையும், க்ருஷ்ணமிஶ்ரனுடைய ப்ரபோத சந்த்ரோதயத்தைப் பார்த்து ஸங்கல்ப ஸூர்யோதயத்தையும், காளிதாஸனுடைய மேகஸந்தேஶத்தைப் பார்த்து ஹம்ஸ ஸந்தேஶத்தையும் எழுதினார். ஆகவே இவர் அந்யகாவ்யோபஜீவீ; தானாகக் கல்பனைகளைச் செய்யமாட்டார்’ என்கிறார்கள். பாதுகாஸஹஸ்ரம் எதைப் பார்த்து எழுதினது? ஸுபாஷிதநீவிக்கு எது மூலம்? என்றால் பதில் வராது. ராகவாப்யுதயம் என்கிற காவ்யத்தைப் பார்த்தவர்கள் உண்டோ வென்று அடியேனுக்கு வெகு நாளாக ஸந்தேஹம் உண்டு. அது இன்னும் தீர்ந்தபாடில்லை. அப்படி ஒரு க்ரந்தம் இருந்து, அதைப் பார்த்த பிறகு யாதவாப்யுதயத்தை எழுதியிருந்தாலும் இதனால் என்ன குறைவு வந்தது? ராகவனுடைய சரித்ரத்தைப் போல “[illegible] [illegible]” என்று மிகவும் ஈடுபட்ட இஷ்டதைவதமான ஸ்ரீ க்ருஷ்ணனுடைய திவ்ய சரித்ரத்தையும் மஹா காவ்யரூபமாக வெளியிட வேண்டும் என்கிற அபிலாஷை உண்டாயிற்று என்கிறவரையிலே டிண்டிம காவ்யம் உதவினதே அல்லாமல், அவனுடைய ஶப்தஶைலியையாவது, வர்ணந ப்ரக்ரியையாவது எடுத்துக்கொண்டார் என்று

அர்த்தமில்லை. தம்மிடத்தில் தோல்வியடைந்து, ஶிஷ்யனாகி, “[illegible]” வென்று பரம ப்ராவண்யத்தை அநுஸந்தித்தவனுடைய க்ரந்தத்தை உபஜீவித்தார் என்பது ஸர்வதா அஸம்பாவிதம். அப்படியே அத்வைதமதாவஷ்டம்பகமான ப்ரபோதசந்த்ரோதயத்தை ப்ரதிபக்ஷம் கண்டிக்க ஸங்கல்ப ஸூர்யோதய நாடகம் அவதரித்தது. இம்மாதிரியே மேகஸந்தேஶத்தில் தோன்றுகிற சில குறைகளை நீக்கி, ஸந்தேஶகாவ்யரசனா ஶைலியைப் பரிஷ்கரித்து, தோஷலேஶ கந்தமும் இன்றி ஸ்வச்சமான ஹம்ஸஸந்தேஶத்தைக் கல்பித்தார். இதனால் கவிக்குக் கௌரவம் ஏற்படுமே தவிர, அவகுணத்துக்கு ஆஸ்பதம் உண்டாகாது.

பவாநீ தேவியினுடைய வரப்ரஸாதத்தினாலே நிகரில்லாத கவிதா சாதுர்யத்தைப் பெற்றுக் காளிதாஸன் என்கிற காரணப் பெயரினாலேயே வளர்ந்து வந்த மஹாகவி, தன்னுடைய ப்ரதிபா வைபவத்தாலே மேகஸந்தேஶம் என்கிற ஒரு அத்புதமான காவ்யத்தைச் செய்தான். இரண்டு ஆஶ்வாஸங்களும், 110-ஶ்லோகங்களுமே அடங்கி உருவத்தில் குறுகினதானாலும், த்வநி ப்ரதாநமாயும் விப்ரலம்ப ஶ்ருங்கார ரஸ ஸாம்ராஜ்யமாயும் இருக்கிற இந்தக் காவ்யமானது “மாகே மேகே கதம் வய:” என்றும் வ்யாக்யாதாக்கள் நடுங்கும்படியான பெருமை பொருந்தினது. இம் மஹா கவியினுடைய வாக்யங்களைப் பிரமாணமாக எடுத்துக் கொண்டாடின ஸ்ரீ நிகமாந்ததேஶிகன் தமக்கு இவனுடைய கவிதையில் தோன்றின பஹுமாநத்துக்கு அடையாளமாக இந்த ஸந்தேஶ காவ்யத்தினுடைய மாதிரியைப் பின்பற்றித் தம் காவ்யத்தைச் செய்து ப்ரணயோபஹாரமாக ஸமர்ப்பித்தார். காவ்ய ஸாமாந்யத்துக்கு வால்மீகி மஹர்ஷிபோல, ஸந்தேஶ காவ்யரசனைக்குக் காளிதாஸனே வழிகாட்டினவன். இவன் பின்வந்த கவிகளெல்லோரும் இவனுடைய சாயலைப் பற்றிக்கொண்டு விப்ரலம்ப ஶ்ருங்கார ரஸத்தையும், மந்தாக்ராந்தா வ்ருத்தத்தையுமே சேர்த்துத் தங்களுடைய ஸந்தேஶ காவ்யங்களைச் செய்தார்கள்.

அந்த மர்யாதையை ஸ்ரீ தேஶிகனும் அநுஸரித்தார். ஆகவே நாம ஸாம்யத்தையும், ஆகார ஸாத்ருப்யத்தையும் பார்த்து, இந்த காவ்யம் காளிதாஸ காவ்யோபஜீவி என்று சொல்லுவது அபரீக்ஷகர்களுடைய லக்ஷணம்.

பார்க்குமிடத்தில், இம்மாதிரியான அந்யச்சாயோபஜீவநம் ஸர்வ கவிஜந ஸாதாரணம். “𑌲𑍋𑌕𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌣𑌂 𑌚 𑌕𑌾𑌵𑍍𑌯𑌾𑌂𑌗𑌾𑌨𑌿” என்று வாமநன் ஸூத்ரித்தபடி காவ்ய பாண்டித்யமும் கவித்வத்துக்கு அங்கமாகையினாலே கவிஜநாந்தர ஹ்ருதயத்தை அறிந்த மஹாகவிகள், அந்ய கவிபாவங்களை அலங்கரித்தும் சீர்திருத்தியும் தம்முடைய காவ்யங்களில் சேர்ப்பது ஸஹஜம். அலங்காரங்களெல்லாம் உபமாமூலகங்கள் ஆகையாலும், உபமாநோபமேயபாவகல்பநத்துக்கு நியத லக்ஷணங்களும் நிர்ப்பந்தங்களும் இருக்கிறபடியாலும் வர்ணந ப்ரக்ரியைகளில் அதிக பேதங்களைக் கல்பிப்பது அஸாத்யமான கார்யம். அப்படிச் செய்யப் புகுந்தால் நன்றாகவும் இராது. கவிஸமயத்தை அநுஸரித்தே கவிகள் நடந்துகொள்ளவேண்டும். காளிதாஸனுடைய காவ்ய நாடகங்களை நன்றாகச் சோதித்தால் இவனும் வால்மீகியின் சாயையில் செல்லுகிறான் என்கிற ஸூக்ஷ்மம் வ்யக்தமாகும். மேகஸந்தேஶத்தில் இது கரதலாமலகம் போலே தெரிகிறது. [illegible] மஹர்ஷி சொல்லாத வர்ணனையைத் தேடுவதும், ஸஹ்ருதய ரஞ்ஜகமாகச் சொல்லுவதும் கஷ்டம். அத ஏவ ஸ்ரீ தேஶிகனும்,

> “[illegible] 𑌹𑍃𑌦𑌯 [illegible] ।
> [illegible] 𑌕𑌵𑌯𑌃 𑌕𑌾𑌮𑌂 [illegible] ॥”

என்று அருளிச்செய்தார். அபூர்வ ஸந்தர்ப்பங்களை யோஜிக்கலாம் என்றால், மஹாபாரதத்தில் இல்லாத நூதந ஸத்கதா வஸ்து கிடைப்பது அருமை. அபூர்வ வர்ணந வைகரியை யோசித்தால் ஸ்ரீமத் ராமாயணத்தில் இல்லாத சமத்காரம் வேறில்லை. பின்னால் பிறந்த தோஷத்துக்கு மஹாகவிகள் என்ன செய்யலாம்? இவ்விரண்டு கவிகளையும் உபஜீவநம் பண்ணியே தீரவேண்டியிருக்கிறது. ஆகவே, பரஸ்பர தாரதம்யமும், உத்தரோத்தரோத்கர்ஷமும் இருந்தால் அந்யச்சாயோபஜீவநத்தை தோஷமாக ஆலங்காரிகர்கள் அங்கீகரிப்பதில்லை; ப்ரத்யுத குணமாகக் கருதுகிறார்கள். அந்யர்கள் சொன்ன பாவத்தை அழகுபடுத்துவதே மஹாகவியின் மஹிமை.

வால்மீகியின் வாக்குகளில் அளவற்ற ஆதரத்தைக் கொண்ட காளிதாஸன், இராமாயணத்தில் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் ஸீதாபிராட்டியினிடம் ஆஞ்ஜநேயனைத் தூதனுப்பின கதையைக் கருத்தில் வைத்தவனாய், மஹேந்த்ர பர்வதத்தின் உச்சியிலிருந்து ஆகாயத்தில் கிளம்பின மாருதியை “𑌸 𑌪𑌪𑍌 𑌮𑍇𑌘 𑌇𑌵𑌾𑌕𑌾𑌶𑍇 𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌦𑍍𑌗𑌣𑌵𑌿𑌭𑍂𑌷𑌿𑌤𑌃” என்று மஹர்ஷி வர்ணித்த அழகை அநுபவித்து இவனும் மேகத்தையே நேரில் தூது விடலாம் என்று தனது காவ்யத்தை இயற்றினான். புதிய நாயகனையும், புதிய தேச ஸஞ்சாரத்தையும் அமைத்தபோதிலும், ராம கதையே இவன் மநஸ்ஸில் இருந்தது. அதையே அவலம்பித்து ஸந்தேஶ காவ்யத்தைச் செய்தான் என்பதற்குப் பற்பல த்ருஷ்டாந்தங்கள் உண்டு. அதாவது காவ்யாரம்பத்திலேயே “𑌯𑌕𑍍𑌷𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑍇 𑌜𑌨𑌕𑌤𑌨𑌯𑌾𑌸𑍍𑌨𑌾𑌨𑌪𑍁𑌣𑍍𑌯𑍋𑌦𑌕𑍇𑌷𑍁 𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑌚𑍍𑌛𑌾𑌯𑌾𑌤𑌰𑍁𑌷𑍁 𑌵𑌸𑌤𑌿𑌂 𑌰𑌾𑌮𑌗𑌿𑌰𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌮𑍇𑌷𑍁 ।” “𑌆𑌪𑍃𑌚𑍍𑌛𑌸𑍍𑌵 𑌪𑍍𑌰𑌿𑌯𑌸𑌖𑌮𑌮𑍁𑌂 𑌤𑍁𑌙𑍍𑌗𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑍍𑌯 𑌶𑍈𑌲𑌂 𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑍈𑌃 𑌪𑍁𑌂𑌸𑌾𑌂 𑌰𑌘𑍁𑌪𑌤𑌿𑌪𑌦𑍈𑌰𑌙𑍍𑌕𑌿𑌤𑌂 𑌮𑍇𑌖𑌲𑌾𑌸𑍁।” என்று ஜாநகீ ரகுநாயகர்களுடைய வாஸத்தினால் ராமகிரி ப்ரதேஶம் புநித மாச்சுதென்றும், “𑌦𑌶𑌮𑍁𑌖𑌭𑍁𑌜𑍋𑌚𑍍𑌛𑍍𑌵𑌾𑌸𑌿𑌤𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌸𑌨𑍍𑌧𑍇𑌃 𑌕𑍈𑌲𑌾𑌸𑌸𑍍𑌯” என்று ராவண சரித்ரத்தையும் ஜ்ஞாபகப்படுத்துகிறான். பிறகு யக்ஷ ஸ்திரீயைக் கண்டு செய்தியைச் சொல்ல ஆரம்பித்த மேகத்தை “𑌪𑌵𑌨𑌤𑌨𑌯𑌂 𑌮𑍈𑌥𑌿𑌲𑍀𑌵𑍋𑌨𑍍𑌮𑍁𑌖𑍀” என்று ஆஞ்ஜநேயனை ஜாநகிபோல் அவளும் ப்ரீதியுடன் பார்ப்பாள் என்கிறான். விரஹதாபத்தால் வருந்து

கிற நாயகியை அசோகவநத்தில் ஆதரிப்பார் இன்றி வஸித்த ஸீதையினுடைய நிஸ்திதியைக் குறித்து வால்மீகி வர்ணித்த விதங்களைப் பலவகைகளிலும் அநுஸரித்துப் பேசுகிறான். இஷ்டம் வந்தபடி ரூபத்தை மாற்றிக்கொள்ளும் திறமை மாருதிக்குப் போல மேகத்துக்கும் உண்டென்று "காமரூபம்" என்கிறான். லங்கையை ராம தூதன் ஸாயங்காலத்தில் அடைந்தது போல மேகமும் அளகைக்குப் போகும் என்றும், ஸீதையின் ஸமீபத்திற் செல்லும்போது ஆஞ்ஜநேயன் உருவத்தை ஒடுக்கிக்கொண்டது போல மேகமும் தனது உருவத்தைச் சிறிதாக்கிக்கொண்டு யக்ஷ கந்நிகையினிடம் அணுகவேண்டும் என்றும் உபதேசிக்கிறான். ஹநுமான் வருவதற்கு முன்னம் ஸீதைக்கு நல்ல சகுநங்கள் தோன்றினதுபோலே யக்ஷ வதூவுக்கும் "வாமஶ்சாஸ்யா:...யாஸ்யத்யூரு: ஸரஸகதலீஸ்தம்பகௌரஶ்சலத்வம்" என்று ஶுப சகுநம் தோன்றும் என்கிறான். கடைசியாக, அதிரஹஸ்யமான காகாஸுர வ்ருத்தாந்தத்தை ஜாநகீ ராகவனுக்குச் சொல்லியனுப்பினதுபோல, "[illegible]" இத்யாதியான ஶ்லோகத்தாலே அபிஜ்ஞாந தாநத்தையும் வர்ணித்து யக்ஷஸந்தேசத்தை முடிக்கிறான்.

இப்படி லோகோத்தரமான ராமாயண கதையை அநுபவித்தும் அநுஸரித்தும், தன்னுடைய காவ்யத்துக்கு அல்பநாயகனை அமைத்தது கவி ஸார்வபௌமனான காளிதாஸனுக்கு அடுத்ததன்றென்று எல்லோரும் சோகிக்கவேண்டிய விஷயமேயன்றோ! இந்தக் கதாநாயகனோ குபேரனுக்குக் குற்றேவல் செய்த ஒரு ஸாமாந்ய யக்ஷன். காமோபபோகங்களில் அதிக ஆஸக்தியை வைத்த காரணத்தினாலே தனது வேலையில் குற்றமிழைத்து, யஜமானனால் சபிக்கப்பட்டு, ஒரு வருஷ காலம் ஊரை விட்டு ஓடி ராமகிரியில் வஸித்தான். திவ்ய தம்பதிகளான ஸ்ரீ ஸீதா ராகவர்களுடைய சரித்ரத்தை எப்பொழுதும் ஜ்ஞாபகப்படுத்துகிற இடத்தில் இருந்தும், ஜாநகீ ஸ்நாநம் பண்ணின பாக்யத்தைப்பெற்றுப் பாவநங்களான தீர்த்தங்களில் நீராடியும் இவனுக்குக் காமநோய் நீங்கவில்லை. தன் ப்ரியநாயகியைப் பிரிந்த வேதனையே மேலிட்டு, உடலும் புலனும் ஓய்ந்து, பித்தன்போலக் காலத்தை ஓட்டிக்கொண்டிருந்தான். இந்தத் தருணத்தில் ஒரு ஆஷாட மாஸத்தில் ஆகாசத்தில் மப்பு ஓடுவதைக்காண இவனுக்குக் காமவெறியானது தலைக்கேறிவிடவே, ஊரிலிருக்கிற நாயகியின் நிலைமையை நினைத்து, அவளுக்குத் தைர்யம் சொல்லவெண்ணி, அந்த மேகத்தையே தூதனாகக் கோரி, அதனிடத்தில் தன்னூராகிய அளகைக்கு வழியையும், அங்கே தன் வீட்டின் அடையாளத்தையும், அதில் படுத்திருக்கும் தன் பத்நியின் தைந்யத்தையும் வர்ணித்து, அவளுக்குச் சொல்லவேண்டிய வார்த்தைகளையும் சொல்லுகிறான். இப்படி வருந்துகிறபோதும் இவனுக்குத் தன் பேரில் குற்றம் தோன்றவில்லை. "நான் தநபதி க்ரோத விஶ்லேஷிதன்; அதாவது: தநாந்தனான யக்ஷராஜன் ந்யாயத்தைப் பாராமல் வெறும் கோபத்தினால் என்னைத் தண்டித்தான்.

'நேத்ரா நீதா: ஸததகதிநா யத்விமாநாக்ரபூமீ:
ஆலேக்யாநாம் நவஜலகணைர்தோஷமுத்பாத்ய ஸத்ய: ।
ஶங்காஸ்ப்ருஷ்டா இவ ஜலமுசஸ்த்வாத்ருஶா ஜாலமார்கைர்
தூமோத்காராநுக்ருதிநிபுணா ஜர்ஜரா நிஷ்பதந்தி ॥'

என்று [illegible]யினாலே 'அளகா பட்டணத்தில் க்ஷயத்திலும் போகாநுபவம் பண்ணுவார்களுண்டு; நானோ அம்மாதிரி கெட்டவனில்லை; ஆனாலும் ஏழையாயும் ஜனக்கட்டுமில்லாததனால் தண்டனைக்கு ஆளானேன். "[illegible]" என்றும் கதறுகிறான். கடிநமான சிக்ஷையையடைந்தும், இவனுக்கு இனிமேலாவது ஒழுங்காக நடக்கவேண்டும் என்கிற விவேகம் வரவில்லை. ஶாபம் முடிந்ததும், ஊருக்குப் போய் 'பஶ்சாதாவாம் விரஹகுணிதம் தம் தமாத்மாபிலாஷம் நிர்வேக்ஷ்யாவ: பரிணதஶரச்சந்த்ரிகாஸு க்ஷபாஸு' என்று ஒரு வர்ஷம் வீணாய்ப் போன தோஷத்துக்காக வட்டியும் முதலுமாகப் போகங்களை மனம் போனபடி அநுபவிப்

போம் என்று ஸந்தோஷிக்கிறான். இப்படி ஶ்ருங்காரரஸாவேஶ பரவஶனாய் மயக்கங்கொண்டு இந்த நாயகன் தூதனாக வரித்த காலாம்புதத்தையும் ஊர் திரிகிற விலாஸியைப்போல் எண்ணித் தன்னுடைய ரஸாவேகத்தையே அதற்கும் போக்யமாக வர்ணிக்கிறான். ‘𑌸𑌦𑍍𑌯𑌃 𑌫𑌲𑌮𑌵𑌿𑌕𑌲𑌂 𑌕𑌾𑌮𑍁𑌕𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌲𑌬𑍍𑌧𑌾 𑌪𑌾𑌸𑍍𑌯𑌸𑌿 𑌸𑍍𑌵𑌾𑌦𑍁 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌭𑍍𑌰𑍂𑌭𑌙𑍍𑌗𑌂 𑌮𑍁𑌖𑌮𑌿𑌵 𑌪𑌯𑍋 𑌵𑍇𑌤𑍍𑌰𑌵𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌲𑍋𑌰𑍍𑌮𑌿’ என்று காமுகனுடைய பலாபிஸந்தித்தோரணியையும், ‘𑌯𑌃 𑌪𑌣𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌰𑌤𑌿𑌪𑌰𑌿𑌮𑌲𑍋𑌦𑍍𑌗𑌾𑌰𑌿𑌭𑌿𑌰𑍍 𑌨𑌾𑌗𑌰𑌾𑌣𑌾𑌮𑍍 𑌉𑌦𑍍𑌦𑌾𑌮𑌾𑌨𑌿 𑌪𑍍𑌰𑌥𑌯𑌤𑌿 𑌶𑌿𑌲𑌾𑌵𑍇𑌶𑍍𑌮𑌭𑌿𑌰𑍍𑌯𑍌𑌵𑌨𑌾𑌨𑌿!’ என்று வாரஸ்த்ரீ ஸம்போகங்களில் அபிருசியையும்,

> ‘𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌃 𑌪𑌥𑌿 𑌭𑌵 𑌰𑌸𑌾𑌭𑍍𑌯𑌂𑌤𑌰𑌃 𑌸𑌨𑍍𑌨𑌿𑌪𑌤𑍍𑌯
> 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌮𑌾𑌦𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌣𑌯𑌵𑌚𑌨𑌂 𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑍋 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌿𑌯𑍇𑌷𑍁’

என்று அபிஸாரிகா ரஸாஸ்வாதலாபத்தையும்,

> ‘𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 𑌰𑌮𑌣𑌵𑌸𑌤𑌿𑌂 𑌯𑍋𑌷𑌿𑌤𑌾𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌨𑌕𑍍𑌤𑌂
> 𑌰𑍁𑌦𑍍𑌧𑌾𑌲𑍋𑌕𑍇 𑌨𑌰𑌪𑌤𑌿𑌪𑌥𑍇 𑌸𑍂𑌚𑌿𑌭𑍇𑌦𑍍𑌯𑍈𑌸𑍍𑌤𑌮𑍋𑌭𑌿𑌃!
> 𑌸𑍌𑌦𑌾𑌮𑌿𑌨𑍍𑌯𑌾 𑌕𑌨𑌕𑌨𑌿𑌕𑌷𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑌯𑌾 𑌦𑌰𑍍𑌶𑌯𑍋𑌰𑍍𑌵𑍀𑌂
> 𑌤𑍋𑌯𑍋𑌤𑍍𑌸𑌰𑍍𑌗𑌸𑍍𑌤𑌨𑌿𑌤𑌮𑍁𑌖𑌰𑍋 𑌮𑌾 𑌸𑍍𑌮 𑌭𑍂𑌰𑍍𑌵𑌿𑌕𑍍𑌲𑌵𑌾𑌸𑍍𑌤𑌾𑌃’

என்று ஸம்போகார்த்தம் செல்லுகிற அபிஸாரிகைகளுக்கும் அநுகூலம் செய்ய வேண்டியது அவஶ்யமென்றும்,

> ‘𑌜𑍍𑌞𑌾𑌤𑌾𑌸𑍍𑌵𑌾𑌦𑍋 𑌵𑌿𑌵𑍃𑌤𑌜𑌘𑌨𑌾𑌂 𑌕𑍋 𑌵𑌿𑌹𑌾𑌤𑍁𑌂 𑌸𑌮𑌰𑍍𑌥𑌃’

என்று காமுகத்வ பராகாஷ்டையையும் உத்ஸாஹத்துடன் உத்கோஷிக்கிறான். புண்ய க்ஷேத்ரங்களில் பகவத் ஸந்நிதியில் நெருங்கும் போதும் இந்த ராஸிக்யமே மேல் நிற்கிறது. அதாவது:—த்ரிபுவநகுருவான சண்டேஶ்வரன் கோயிலில் ஸந்த்யா கால நடந பூஜைக்கு அநுகுணமாக நீயும் மந்த்ர கர்ஜிதத்தாலே படஹ வாத்ய ஸேவை பண்ணவேண்டும். இந்தக் கைங்கர்யத்துக்கு ஸத்ருஶம் போல,

> ‘𑌵𑍇𑌶𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌤𑍍𑌤𑍋 𑌨𑌖𑌪𑌦𑌸𑍁𑌖𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌵𑌰𑍍𑌷𑌾𑌗𑍍𑌰𑌬𑌿𑌨𑍍𑌦𑍂𑌨𑍍
> 𑌆𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌮𑌧𑍁𑌕𑌰𑌶𑍍𑌰𑍇𑌣𑌿𑌦𑍀𑌰𑍍𑌘𑌾𑌨𑍍 𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑌾𑌨𑍍’

என்று ரூபாஜீவர்களாயும், காமாபஶுலோலுபர்களுமான வாரஸ்த்ரீகளுடைய விநோத லம்படனாகவே திரியவேண்டுமென்று த்வநிப்பதுபோலப் பேசுகிறான். இது போதாதென்றெண்ணியோ,

> “𑌵𑌕𑍍𑌰𑌃 𑌪𑌂𑌥𑌾 𑌯𑌦𑌪𑌿 𑌭𑌵𑌤𑌃 𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌯𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌶𑌾𑌂
> 𑌸𑍌𑌧𑍋𑌤𑍍𑌸𑌂𑌗𑌪𑍍𑌰𑌣𑌯𑌵𑌿𑌮𑍁𑌖𑍋 𑌮𑌾 𑌸𑍍𑌮 𑌭𑍂𑌰𑍁𑌜𑍍𑌜𑌯𑌿𑌨𑍍𑌯𑌾𑌃।
> 𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌦𑍍𑌦𑌾𑌮𑌸𑍍𑌫𑍁𑌰𑌿𑌤𑌚𑌕𑌿𑌤𑍈𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌪𑍌𑌰𑌾𑌂𑌗𑌨𑌾𑌨𑌾𑌂
> 𑌲𑍋𑌲𑌾𑌪𑌾𑌂𑌗𑍈𑌰𑍍𑌯𑌦𑌿 𑌨 𑌰𑌮𑌸𑍇 𑌲𑍋𑌚𑌨𑍈𑌰𑍍𑌵𑌂𑌚𑌿𑌤𑍋𑌽𑌸𑌿”

என்று கண் படைத்ததற்கு ஸுந்தரீ நயந விப்ரமாவலோகநமே ப்ரயோஜநமென்றும், அதை வக்ர மார்க்கத்திலும் ஸம்பாதிக்கப் ப்ரயத்நம் பண்ணவேண்டுமென்னும் ஶிக்ஷிப்பது பரலோக விமுகர்களான ஶ்ருங்கார ஶேகரர்களுக்கே தகும். இப்படி அஸப்ய வசநத்துக்குக் காரணமானபடியாலே கேவல ஶ்ருங்கார லோலுபத்வம் அநாதரணீயமென்று ஸ்வாமி தேஶிகனும், இந்தக் காவ்யத்தை உத்தேஶித்தே ‘𑌕𑍁𑌸𑌹𑍃𑌵𑌶𑌿𑌵𑌾𑌮𑌿𑌕𑌾 𑌯𑌿𑌕𑌰𑍋𑌤𑌿 𑌶𑍃𑌙𑍍𑌗𑌾𑌰𑌿𑌣𑌃’ என்று அருளிச்செய்தார் என்று நினைக்கிறேன். த்ருதீய புருஷார்த்த ப்ரதாநமான இந்தக் காவ்யத்தினால் என்ன உபகாரம் படிப்பவர்களுக்கு என்றால், ஸதுபதேஶமோ ஶிவேதரக்ஷதியோ உண்டென்று சொல்ல வழியில்லை. சிற்சில இடங்களில் அர்த்தாந்தரந்யாஸபூர்வமாக சிற்சில உபதேசவாக்கியங்கள் இருந்த போதிலும் காவ்யம் முழுவதையும் வாசிப்பவருக்கு அவை முக்யங்களாகத் தோன்றா. மஹதா ப்ரயாஸேந வித்யுல்லதா வென்கிற வ்யாக்யாநகாரர், “𑌮𑌹𑌾𑌕𑌵𑌿𑌨𑌾𑌪𑌿 𑌯𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 [illegible] 𑌤𑌤𑌃 [illegible] 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑌿𑌯𑍋𑌗𑌵𑍇𑌦𑌨𑌾 [illegible] 𑌸𑌂𑌵𑍃𑌤𑍍𑌤𑌾। 𑌅𑌤𑍋 𑌵𑌿𑌷𑌯𑍇𑌷𑍁 𑌸𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌨 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾” என்று இந்த யக்ஷனுடைய வ்ருத்தாந்தத்தி

னால் விஷயங்களில் அதிகமான ஊற்றம் இருந்தால் அநர்த்தப்ரம்பரையே விளையு மென்கிற ஸதுபதேசம் இந்தக் காவ்யத்தினால் உண்டாகிறதென்று ஸமர்த்திக்கிறார். கீழ்க்குறித்தபடி அநர்த்தங்களை அடைந்த பிறகும் இந்த நாயகன் விஷய ப்ரவணனாகவே இருந்தான் என்று வர்ணித்திருப்பதனாலும், உந்மாதாவஸ்தையோடே காவ்யம் முடிகிறபடியினாலும், உபதேச ப்ராதாந்யத்தை உத்தேசித்துக் கவி இந்தக் காவ்யத்தை எழுதினான் என்று உபபாதிக்கக் காரணங்களில்லை. விஷயைக நிரதமான யக்ஷக் கூட்டத்திலே பிறந்து, விரஹதாபத்தால் கரணசக்தியை இழந்து, மேக தர்சநத்தால் உந்மாதாவஸ்தையை அடைந்த நாயகனை நிஷ்கர்ஷித்த பிறகு கவியும் நாயகனோடு ஐக்ய பாவத்தைப் பரிக்ரஹித்து, அவனுடைய நிலையில் தானும் நின்று பேசுகிறானபடியினாலே, உந்மத்த காமுகனுடைய அபிநிவேசாபிஸந்திகளைத் தன்னுடைய ப்ரதிபா பலத்தாலும் லோகவ்யவஹார நைபுண்யத்தாலும் ஊஹித்து வர்ணித்த மஹிமை யொன்றே இந்தக் காவ்யத்தை எழுதினதால் அவனுக்கு உண்டான பலம். யசஸ்ஸையும், அவனுடைய மநோபாவமும் ச்ருங்காரோந்முக மாகையாலே யத்ருச்சா ஸஞ்சார நிவ்ருத்தியையும் கல்பிக்கக்கூடும். இஷ்டதைவமான ஸுப்ரஹ்மண்யனைக் குறித்து ஆத்மோஜ்ஜீவநபரமான குமார ஸம்பவத்தையும், நடுநாயகம்போலே ராமகதையை மத்தியிலிட்டு ஶோபாட்யமான ரகுவம்சத்தையும், தீரோதாத்த நாயகர்களை அவலம்பித்து நாடகத்ரயத்தையும், அதிலும் யதாவஸ்திதமான கதாபாகத்தில் தோன்றுகிற அபகர்ஷாவஹாம்சங்களை சாகுந்தளத்தில் போலே சீர்திருத்தியும், கம்பீரமான ஆசயங்களை வெளியிட்ட காளிதாஸன் இந்த ஸந்தேச காவ்யத்தில் ஸதுபதேசத்தை உத்தேசித்தான் என்று ஸாதிப்பது அஸாத்ய மென்றே தோன்றுகிறது.

இந்த ந்யூநதையை நீக்கும்பொருட்டே ஸ்ரீதேசிகன் ஹம்ஸ ஸந்தேசத்தைச் செய்தருளினார்.

ராமாயணத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டும் காளிதாஸன் க்ஷுத்ரநாயகனைத் தேடி எடுத்தானே என்று சோசித்த ஆசார்யன், ஸாக்ஷாத் ஸ்ரீராமசந்த்ரனையே தம்முடைய காவ்யத்துக்கு நாயகனாக வைத்தார்.

‘கஶ்சித் காந்தாவிரஹகுருணா ஸ்வாதிகாராத் ப்ரமத்த:
ஶாபேநாஸ்தங்கமிதமஹிமா வர்ஷபோக்யேண பர்த்து: ।’

என்று காளிதாஸன் ஆரம்பித்தது, இவரும்,

‘வம்ஶே ஜாதஸ் ஸவிதுரநகே மாநயந் தீநரக்ஷாம்
தேவ: ஸ்ரீமாந் ஜநகதநயாந்வேஷணே ஜாகரூக: ।’

என்று தமது கதாநாயகனுடைய வைலக்ஷண்யத்தையும் அவனது மநோபாவத்தையும் ஸூசிப்பித்தார். பத்நீ விரஹிதனான யக்ஷன் எட்டுமாத காலம் தனியாகக் காட்டில் வஸித்தபோது பத்நிக்கு ஆச்வாஸம் சொல்லவேண்டும் என்கிற எண்ணத்தைக் கொள்ளவில்லை. மேகத்தைப் பார்த்தபிறகே இந்த எண்ணம் இவனுக்குத் தோன்றிற்று. ஸ்ரீராகவனோ ஸதாகாலமும் ஜநகதநயாந்வேஷணத்தில் ஜாகரூகனாக விருந்தார்.

‘இயம் ஸா யத்க்ருதே ராமஶ்சதுர்பி: பரிதப்யதே ।
காருண்யேநாந்ருஶம்ஸ்யேந ஶோகேந மதநேந ச ॥
ஸ்த்ரீ ப்ரணஷ்டேதி காருண்யாதாஶ்ரிதேத்யாந்ருஶம்ஸ்யத: ।
பத்நீ நஷ்டேதி ஶோகேந ப்ரியேதி மதநேந ச ॥’

என்று ஆதிகவி வ்யவஹரித்தபடி சதுர்வித பாவங்களாலே தபித்துக்கொண்டிருந்தார். இதனுடன்,

‘ஶைஷா வாலி நிர்ஜிதாஹவே ஶத்ருஜிக்வா ஸமாரணே ।
வர்ஷாத்ரௌ தந்நிலயம் கவேத தஸ்யாவதாரிதம் ।
மைத்ரீஸக்ஷேத்ரஸ்ய யக்ஷிண்யா ஸம்வ்ருதாஜிதா ।
கைவர்தஸ்ய ஸத்ருஷ்ணா யா யாமவதீர்ணா ॥’

என்று சொன்னபடி ஏமாற்றிப்போன சத்ருவின் பேரில் கோபமும் உண்டு.

> ‘தாதாதேஶாச்ச ஸஹஜஸஹித ந்யஸ்ய ராஜ்யாபிஷேகம்
> யாதோ தேஶாந் யதநுமதயா ராஜதாநீம் விஹாய ।
> ஸா தேவஶ்ரீ ரதிவிதபஸாம் பாஷ்பதோயை ரதீயை
> ஸ்த்ரைவர்கஸ்தா ஶமயதி ஶுசஸ் த்வத்ப்ரியே ஜீவிதம் மே ॥
> ஸேநாவக்ஷ்ய கிமிவ ஜநகம் கிம் நு யோகீஶ்வரோ மே
> தித்யம் மே ஸம்ப்ரதா ஸுவேஷம் ॥’

என்றின்ன முதலான பூர்வ கதா ஸ்மரணத்தினாலே இவருக்குத் துக்கம் மேன்மேலும் பொங்கிக்கொண்டு வந்தது. பிறகு லங்கையிலிருந்து திரும்பிவந்த ஆஞ்ஜநேயன் ஸீதாதேவி அசோக வநத்தில் மஹாஶோகஸாகரத்தில் ஆழ்ந்திருக்கிறாள் என்றும்,

> ‘இதம் ப்ரூயாஶ்ச மே நாதம் ஶூரம் ராமம் புந: புந: ।
> ஜீவிதம் தாரயிஷ்யாமி மாஸம் தஶரதாத்மஜ ।
> ஊர்த்வம் மாஸாந்ந ஜீவேயம் ஸத்யேநாஹம் ப்ரவீமி தே ॥
> மத்தே வீ ஹரிஶ்ரேஷ்ட வாநராதிப நாயக ।
> ப்ராணாநாமபி ஸந்தேஹோ ஶோகாத்ராணாத்து ஸம்ஶய: ।
> யாவத்த்வஹம் வீர ஜிஜீவிஷேயம் யாவத் ப்ரவ்ருத்திம் ஶ்ருணுயாம் ப்ரியஸ்ய ।”

என்று சொன்னபடி ஒருமாதத்துக்குமேல் அவள் உடலில் உயிர் நில்லாதென்றும், ஶத்ருஜயார்த்தியாய் ராமன் புறப்பட்டுவிட்டார் என்கிற செய்தி தெரிந்தால் ஒருக்கால் உயிரை வைத்துக் கொண்டிருப்பாள் என்றும் தெரிவிக்கவே, ததேகநிஹித சித்தராய், யுத்தஸந்நத்தராக ஸுக்ரீவ ஸேனையைத் தயார்செய்தார். பிறகு ப்ரிய ஸாஹஸ நக்ஷத்ர ஹிதார்த்ரீயோ நாஹராதீவாய், வெகு தூரத்தில் ஶத்ரு மத்தியில் அகப்பட்டுக்கொண்டிருக்கிற வைதேஹியின் ஸமீபத்தில் ‘அவள் குறித்த ஒரு மாதத்துக்குள் போகமுடியுமோ! வநம், வநாந்தரம், மலை, நதி, ஸமுத்ரம் முதலான ப்ரதேசங்களைக் கடந்து ப்ரபலனான சத்ருவை ஜயிப்ப

தற்குத் தாமதமானால் அவளுயிருக்குச் சேதம் வருமே! பிறகு இவ்வளவு ப்ரயத்நமும் வீணாய்விடுமே’ என்று திகிலடைந்து தக்ஷணமே அவளுக்குத் தைர்யம் சொல்லியனுப்ப வேண்டும் என்கிற எண்ணம் ஜகதேகவீரனாய், விம்ருஶ்யகாரியாய், ஜாநகீ ப்ரியகாந்தனாய் வர்த்தித்த ஸ்ரீராமசந்த்ரனுக்கு உதித்தது ஸஹஜமான தர்ம மல்லவோ? இப்படி ஒரு ஸந்தேசத்தை அனுப்பினதாகச்சொல்லாமல், தம்முடைய கவிதை ஸாபல்யத்தைப் பெறுவதற்கு அவகாசத்தைத்தந்த வால்மீகி மஹர்ஷியினிடத்தில் மஹோபகார ஸ்ம்ருதியுடன் ஸீதாராம வ்யதிரேகமான இந்த ஹம்ஸ ஸந்தேச ரத்நத்தை நமது ஆசார்யன் நிபந்தித்தார். இந்த அம்சத்தில் ஆதிகவியையும் ஸ்ரீ தேசிகன் அதிசயித்தார் என்று சொல்லவேண்டும்.

காமார்த்தனை க்ஷத்ரநாயகனை வரித்த காளிதாஸன் அந்த நாயகனுக்குத் தக்க தூதனைத் தூதுவிட்டான். புகைபோல் பிடிக்கடங்காமல் பார்த்துக்கொண்டிருக்கும் போதே பல விதமாய்ச் சிதறி உருமாறிப்போகும் தன்மையை யுடையதும், அசேதநமுமான தூமஜ்யோதிஸ்ஸலிலமருதாம் ஸந்நிபாதமான மேகத்தைப் பொறுக்கினான். அசேதநமானாலும் அளகைக்குப்போகும் என்கிற நிச்சய லேஶமும் இல்லை. ஆகவே, ஸந்தேசத்தைப் பத்நிக்குத் தெரிவிக்க வேண்டும் என்கிற மநோரதம் யக்ஷனுக்காவது கவிக்காவது வாஸ்தவத்தில் கிடையாது. மேகத்தைப் பார்த்து மயல்மீறின யக்ஷன் பைத்தியக்காரன்போலத் தன் வயிற்றெரிச்சல் தீரக்கதறியழுதான். அவ்வளவே கவியின் கருத்து என்று அபிப்ராயப்படவும் ப்ராப்தம். ஸ்ரீராகவனோ இவ்வித வெறிபிடித்தவரல்லர். கார்ய ஸாதக ஸமர்த்தரான இவர் தாம் செய்யும் முயற்சியானது ஜாநகிக்குத் தெரியவேண்டும் என்று ஆரம்பித்தார் என்று ஒரு அத்புதமான ஸந்தர்ப்பத்தைக் கவி கல்பித்தார். யக்ஷனுக்குப்போலே இவருக்கு மந்த்ர வாதாப்ரயுக்தமான உன்மாதார்த்தியை விவக்ஷிக்கவில்லை; உக்த: ஸம்க்ஷோபமே விவக்ஷிதம். ‘ஶங்கே தீவ்ரம் பவதி ஸதய ஶாஸநம் தீநசேதா:’, ‘விஶ்லேஷேண க்ஷபிதமநஸாம்’ இத்யாதி கண்ணோக்திகளாலே இவ்வர்த்தம் வ்யக்தமாகிறது.

'𑌮𑌾𑌰𑍍𑌗𑍋𑌦𑍍𑌘𑌾𑌤𑌾𑌚𑍍𑌚 𑌪𑍍𑌰𑌣𑌯𑌪𑌦𑌵𑍀𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌵𑌾𑌤𑌾𑌤𑍍𑌮𑌜𑍇𑌨'

என்று சொல்லுகிறாரே யென்றால்,

'𑌅𑌭𑌿𑌭𑌾𑌷𑌸𑍍𑌵 𑌸𑍌𑌮𑌿𑌤𑍍𑌰𑍇 𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌸𑌚𑌿𑌵𑌂 𑌕𑌪𑌿𑌮𑍍 ।
𑌵𑌾𑌕𑍍𑌯𑌜𑍍𑌞𑌂 𑌮𑌧𑍁𑌰𑍈𑌰𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑍈𑌃 𑌸𑍍𑌨𑍇𑌹𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑌰𑌿𑌨𑍍𑌦𑌮𑌮𑍍 ॥
𑌏𑌵𑌂 𑌗𑍁𑌣𑌗𑌣𑍈𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌯𑌸𑍍𑌯 𑌸𑍍𑌯𑍁𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌸𑌾𑌧𑌕𑌾𑌃 ।
𑌤𑌸𑍍𑌯 𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌾 𑌦𑍂𑌤𑌵𑌾𑌕𑍍𑌯𑌪𑍍𑌰𑌚𑍋𑌦𑌿𑌤𑌾𑌃 ॥'

என்று தாமே நேரில் பரீக்ஷித்து [illegible]வாய் ப்ரஶம்ஸித்த ஹநூமான் ஸீதையைத் தேடும் பொருட்டுத் தென் திசையை நோக்கிப் புறப்படுகையில்,

'𑌤𑌂 𑌸𑌮𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾 𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑍋𑌤𑍍𑌤𑌰𑌂 𑌕𑌪𑌿𑌮𑍍 ।
𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥 𑌇𑌵 𑌸𑌂𑌹𑍃𑌷𑍍𑌟𑌃 𑌪𑍍𑌰𑌹𑍃𑌷𑍍𑌟𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌨𑌸𑌃 ॥'

என்று அபிநந்தந மாத்ரத்தையும், கார்யத்தை முடித்துக்கொண்டு திரும்பிவந்த பொழுதும்,

'𑌬𑌹𑍁𑌮𑌾𑌨𑍇𑌨 𑌮𑌹𑌤𑌾 𑌹𑌨𑍂𑌮𑌨𑍍𑌤𑌮𑌵𑍇𑌕𑍍𑌷𑌤 ।
𑌏𑌷 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌭𑍂𑌤𑌸𑍍𑌤𑍁 𑌪𑌰𑌿𑌷𑍍𑌵𑌙𑍍𑌗𑍋 𑌹𑌨𑍂𑌮𑌤𑌃 ॥
𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌪𑍍𑌰𑌹𑍃𑌷𑍍𑌟𑌾𑌙𑍍𑌗𑍋 𑌰𑌾𑌮𑌸𑍍𑌤𑌂 𑌪𑌰𑌿𑌷𑌸𑍍𑌵𑌜𑍇'

என்று மித்ர ஜந ஸாதாரணமான ப்ரீத்யதிஶயாவிஷ்கரணத்தோடும் ஆலிங்கநாவலோகநங்களோடும் நின்றார். இப்பொழுதோ முன்பின் அறியாத ஒரு பக்ஷி ஸாமாந்யத்திற்கு, அது தூத்யத்தை அங்கீகரிப்பதற்கு முன்னேயே பரமோபசாரங்களைச் செய்து ஆஞ்ஜநேயனைக் காட்டிலும் அதிகமான கௌரவத்தைச் செய்தார்.

'𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌬𑌹𑍁𑌮𑌤𑌿𑌮𑌸𑍌 [illegible]
𑌮𑌾𑌰𑍍𑌗𑍋𑌦𑍍𑌘𑌾𑌤𑌾𑌚𑍍𑌚 𑌪𑍍𑌰𑌣𑌯𑌪𑌦𑌵𑍀𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌵𑌾𑌤𑌾𑌤𑍍𑌮𑌜𑍇𑌨'

என்கிற இவ்வம்சம் தான் 'ஶோகோந்மாத ப்ரயுக்தம்' என்று விவக்ஷிக்கப்படுகிறது என்று ஸ்ரீ க்ருஷ்ண ப்ருஹ்ம தந்த்ர பரகால ஸம்யமீந்த்ரர் ஸம்ப்ரதிபந்நமாக 'ரஸாஸ்வாதிநீ' என்கிற தம்முடைய வ்யாக்யாநத்தில் உபந்யஸிக்கிறார். '[illegible]' என்று கடைசியில் சொல்லுகிறபடியால் இங்கே '𑌵𑌾𑌤𑌾𑌤𑍍𑌮𑌜𑍇𑌨' என்கிறனால் பேசத்தெரியாமை யொன்றே தோஷமென்று சொல்லுவது அநுசிதம். ஆபாதமாகத் தோன்றுகிற இந்த பூர்வாபர விரோதத்தைச் சிலர், நளன் அனுப்பின ஹம்ஸம் வேறு, ப்ருஹ்மாவுக்கு வாஹநமான ஹம்ஸம் வேறு, இங்கே ராகவனிடத்திற்கு வந்த ஹம்ஸம் வேறு, மூன்றையும் ஒன்றாக மதித்து இந்த ப்ராக்ருத ஹம்ஸத்தையும் தேவஹம்ஸமாகக் கௌரவித்தது தான் உந்மாத க்ருதம் என்று ஸமாதாநம் சொல்லுகிறார்கள். ஜாதி ஸாத்ருஶ்யத்தால் ஐக்யவர்ணநம் அதிசயோக்தி அலங்காரத்தில் சேருமாகையால், புத்தியினுடைய கௌஶலத்தைக் காட்டுமே தவிர உந்மாத த்யோதகமாகும் என்று அடியேனுக்குத் தோன்றவில்லை. மேலும், '[illegible] 𑌕𑌥𑌮𑌪𑌿 𑌤𑌦𑌾 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌸𑍍𑌯𑌾𑌗𑍍𑌰𑌜𑌨𑍍𑌮𑌾' வென்று உதித்த ஶோகாவேகத்தை அடக்கிக்கொண்டார் என்று கவி வர்ணித்திருப்பதனால் உந்மாத பராகாஷ்டை உண்டாகவில்லை யென்றே கொள்ளவேண்டும். ஆகவே, வைதேஹிக்குத் தமது வ்ருத்தாந்தம் போய்ச் சேரவேண்டும் என்று ஸ்ரீராகவன் நல்ல தூதனை வரித்தார்.

'𑌵𑍇𑌦𑍋𑌦𑍍𑌧𑌰𑍍𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌜𑌨𑌵𑌿𑌹𑍃𑌤𑍌 𑌵𑌾𑌹𑌨𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍃𑌷𑍍𑌟𑍇𑌃
[illegible] ।
𑌶𑍍𑌲𑌾𑌘𑍍𑌯𑍇𑌨 [illegible] 𑌸𑌕𑌾𑌶𑌮𑍍
[illegible] 𑌸 𑌯𑌾𑌯𑌾𑌤𑍍 ॥'

என்று அஸாரமான நீரத்தைத் தள்ளி ஸாரதமமான க்ஷீரத்தை க்ரஹிக்கும் ஸ்வபாவமுடைய தேவஹம்ஸங்களுடைய ஜாதியிலே பிறந்து, ஜகத்ஸ்ருஷ்டி துரந்தரனான சதுர்முகனுடைய ஆஶ்ரயத்தைப் பெற்று, வாக்தேவீ ஸஹவாஸத்தினால் ஆகாரஶுத்தியையும் வாங்மாதுர்யத்தையும் அடைந்திருக்கும் இந்த ஸத்தூதனாலே கார்யஸித்தி நிச்சயமாக உண்டாகும் என்று நினைப்பது ஸுலபமன்றோ? மேலும், அநுரூப தாம்பத்யத்தையும் உத்தம ஸாத்விகாநுராகத்தையும் வர்ணிக்கப் புகுந்த கவிதார்க்கிகஸிம்ஹன், அதற்கு அநுகுணமாக உத்தம ஸாத்விக தூதனையும் வர்

ணித்தார். 'வஶ்யா ஜீவேஷு ஶ்ருதிஷு விதித: ஸூரிவ்ருந்தஸாயுஜ்யம்' என்கிறபடியே ஜகந்நாயகர்களான ஶேஷி தம்பதிகளுடைய லீலாவிபூதியை அநவரதமும் அநுபவிக்கிற நித்ய ஸூரிகளையே அவர்களுடைய பரஸ்பர ஸம்வாதத்துக்குக் கடகர்களாக்கலாம். ஸ்ருஷ்டிகோடியில் விஶிஷ்டத்த ஸ்வரூபத்தோடும், ஸாராஸார விவேகத்தோடும், அதிமாநுஷ பதவியில் ஸஞ்சரிக்கிற ஹம்ஸ பக்ஷிகளையே இவர்களுக்கு உபமாநமாகச் சொல்லலாம். ஆகையாலேயிறே ஆழ்வாரும் "அன்னம் செல்வீரும் வண்டானம் செல்வீரும் தொழுதிரந்தேன்" என்று முதலில் ஹம்ஸ பக்ஷிகளைக் கூவி யழைத்தார். "ஆகைலாஸாத் பிஸகிஸலயச்சேதபாதேயவந்த: ஸம்பத்ஸ்யந்தே நபஸி பவதோ ராஜஹம்ஸா: ஸஹாயா:" என்று தொட்டுப் பேசியும் ஹம்ஸத்தைத் தூதுவிடாமல் மேகத்தைப் பொறுக்கினது காளிதாஸ கதாநாயகனுடைய எளிமைக்கு ஒத்தது. ஹம்ஸத்தைத் தூதுவிடுதல் காளிதாஸனுக்கும் அபிமதம் என்று ஊஹித்த ஆசார்யன் அவனுடைய அநுமதியையும் பெற்றார் போலும்.

மேகமோ புஷ்கலாவர்த்தகம் என்கிற மேகவிஶேஷத்தின் கூட்டத்தில் சேர்ந்து, சிற்றரசனை தேவராஜாவுக்கு ஊழியம் செய்து, கர்ஜநத்தாலே அபலைகளைப் பயப்படுத்தும் தன்மை கொண்டு [' [illegible] ']; கண்ணுக்கு ஆநந்தத்தைத் தருகிற கமல மலர்களை மழைச்சாரலினால் அழித்தும், [' [illegible] '] ஜகதாஹ்லாதகரனான சந்த்ரனுடைய காந்தியை அடக்கியும் [' [illegible] '] க்வசித் க்வசித் பராஹிம்ஸை செய்யும் இயல்புள்ளது. 'ஜாதம் வம்ஶே புவநவிதிதே புஷ்கராவர்த்தகாநாம் ஜாநாமி த்வாம்' என்கிற ஶ்லோகத்திலே வம்சத்தினுடைய பெருமையைச் சொல்ல வரும்போது வம்ஶ ஶப்தத்தை முதலில் சொல்வது அழகாயிருக்கக் காளிதாஸன் திருப்பிச் சொன்னனே என்று வ்யஸநப்பட்ட ஆசார்யன் 'வம்ஶஜாத:' என்று தம்முடைய முதல் பத்யத்தில் சொல்லிக்காட்டினர். 'ஜாநாமி த்வாம்' என்று தன்னுடைய சொந்த ஜ்ஞாநத்தில் அதிகமான கௌரவத்தை வைப்பது பாமர க்ருத்யம், விவேகிகளோ பெரியோருடைய அநுபவங்களைத் தம் அபிப்ராயங்களைவிட அதிகமாகக் கொண்டாடுவார்கள் என்று ஸூசிப்பது போல 'ஆஹு: விஜ்ஞா:' என்று ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்கிறார்.

'ஸந்தப்தாநாம் த்வமஸி ஶரணம் தத்பயோத ப்ரியாயா: ஸந்தேஶம் மே ஹர' என்று மேகத்தினுடைய ஸ்வச்சந்த குணத்தை மட்டுமே தௌத்யாங்கீகாரத்துக்கு நியாமகமாக வர்ணித்திருக்க,

'ஸ்வாதந்த்ர்யம் ததபி [illegible]
விஶ்வஸ்ரஷ்டா [illegible] ந சஶ்வத் ।'

என்று அபிஜ்ஞஶிஷ்டாசாரமே ப்ரமாணமாகக்கடவது என்று வேதாந்தாசார்யரான மஹாகவி உபதேஶிக்கிறார். அளகாபட்டணம் வரையில் மேகம் போகவேண்டியதற்குத் தன்னுடைய க்ஷேமத்தைத் தவிர வேறொரு பலத்தையும் யக்ஷன் காட்டினனில்லை. ஸ்ரீராமசந்த்ரனே தெற்குத் திசையில் ஹம்ஸத்துக்கு அபிமதங்களான முத்துக்கள் சாப்பிடக் கிடைக்கும் என்று '[illegible] தக்ஷிணாஶாம்' '[illegible]' என்று தூதனுக்குக் குதூஹலத்தைக் கிளப்பிவிடுகிறார். '[illegible] தாம்ரபர்ணீ தடம் [illegible]' என்று ஆஜந்ம முக்தரான ஸ்ரீஶடகோபன் அவதரித்த ப்ரதேஶம் அது வென்று த்ரமிட வேதபாரங்கதனான மஹாசார்யன் அநுஸந்திக்கிறார் என்றும் தோன்றுகிறது.

இப்படி ஆத்ம லாபத்தையும், மஹானுடைய துர்த்தஶையையும் எண்ணி ப்ரயாணப்படுகிற ஹம்ஸத்துக்கு வழியில்

ராஜோபசாரங்களும் அயத்நமாகக் கிடைக்கும் என்று அங்குரிதமான உத்ஸாஹ கந்தளத்தைச் செழிக்கச்செய்கிறார் கவி தம்முடைய மேதா வைபவத்தினாலே. எடுத்துக்கொள்ளுகிற ப்ரமமானது சுபமாக முடியும் என்று ஜ்ஞாபிக்கும் பொருட்டுப் பதிவ்ரதா சிரோமணியான ஜநகபுத்திரிக்கு ஜீவனை அளித்த பெரும் புண்ணியம் காத்திருக்கிறதென்று சொல்லி யக்ஷ பத்நிக்கும் ராமபத்நிக்கும் உள்ள வாசியைக் காட்டுகிறார். “ஆசாபந்த: குஸுமஸத்ருசம் ப்ராயசோ ஹ்யங்கநாநாம் ஸத்ய: பாதி ப்ரணயி ஹ்ருதயம் விப்ரயோகே ருணத்தி” என்று சாபாவஸானத்தில் நாயகனோடு சேர்ந்து ஸுகம் அநுபவிக்கலாம் என்கிற ஆசையினாலே யக்ஷபத்நீ ப்ராணனை வைத்துக் கொண்டிருப்பாள் என்று காளிதாஸன் வர்ணிக்க, ஸ்வப்ரயோஜநத்தைக் கருதிப் பதியினிடத்தில் ப்ரீதியைப் பண்ணுவது பதிவ்ரதா தர்மத்துக்கு அடுக்காதென்றும், பர்த்தாவினுடைய மநோபாவத்தை அநுவர்த்திப்பதே பதிவ்ரதையின் லக்ஷணமென்றும் சுட்டிக்காட்டி,

‘ஸேவாயாஞ்சீ [illegible] நிஜாம் யா க்ஷமம் [illegible]’ என்றும்,

‘[illegible] ப்ரியஸகேஷ்வபி [illegible]’ என்றும்,

ஸ்ரீ தேசிகன் ராகவ வசநத்தால் ஹிதோபதேசம் பண்ணுகிறார்.

இப்படி திநகர குலத்யோதகமாய் ப்ரகாசித்த ஸ்த்ரீ ரத்நத்தின் ஸமீபத்தில் பரிசுத்தாத்மாக்களே போகவல்லவர்களாகையாலே, நீயும் நல்ல க்ஷேத்ரங்கள் வழியாகச் சென்று பரிசுத்தனாக வேண்டுமென்று ஹம்ஸத்துக்கு ஸ்ரீவேங்கடாசல, ஸத்யவ்ரத, ஸ்ரீரங்க வ்ருஷபாசலாதி புண்ய ஸ்தலங்களை வர்ணிக்கிறார்.

“மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள் சந்தி செய்ய நின்றான்” என்கிற ஆழ்வார் பாசுரத்தில் ஈடுபட்ட ஆசார்யன்,

‘ தத்ரா[illegible] ஸ்வாமிபுஷ்கரிணீ [illegible]
[illegible] ஹேமவேதீம்
ஸாயம்ப்ராத: [illegible]
[illegible] ॥’

என்று விண்ணவரும் மண்ணவரும் வாசியற ஒருங்குகூடிக் குழாங்களாக ஸ்ரீவேங்கடாசலபதிக்குக் கைங்கர்யம் பண்ணும்போது நீயும் கலந்து பூஜை செய்யென்றும்,

‘யஸ்மிந் நாம [illegible]
[illegible]’

என்று தேவர்களும் வீதீ தூளியை சிரஸா வஹிக்கும்படியான காஞ்சீ நகரத்தில் ஸஞ்சரித்து வேகவதீ நதியில் தீர்த்தமாடி உள்ளும் புறமும் சுத்தியைப் பெற்று, ‘ஸேவஸ்வ ஶ்ரீமாந் ஸ்வயமிஹ [illegible] வாலவ்யஜநவிதயா [illegible] வீஜயேஸ்த்வம் [illegible]’ என்று ஸ்ரீ தேவாதிராஜனுக்குத் திருவாலவட்ட கைங்கர்யம் பண்ணென்றும், இனி எழுந்தருளப் போகிற ஸ்ரீரங்கநாதனைச் சிந்தித்து அந்த க்ஷேத்ரத்துக்கு அப்பொழுதே மஹிமையை வர்ணித்து, அந்த மார்க்கமாய்ப் போவதில் பயனுண்டென்றும் உபதேசிக்கிறார். இவ்விதமாகப் புண்யஸ்தலங்களைத் தாண்டி தாம்ரபர்ணீ தீர்த்தபாநத்தினால் தேஹாரோக்ய பலங்களை வ்ருத்தி பண்ணிக்கொண்டு, ஸமுத்ரத்தின் மேலே பறந்து லங்காநகரத்தைச் சேரும்படி ஹ்ருதயங்கமமாக மார்க்கத்தை வர்ணித்துக் கவி முதல் ஆச்வாஸத்தை 60-ச்லோகங்களினால் காளிதாஸன் போலவே முடிக்கிறார்.

அதிலும், ‘தஸ்யோத்ஸங்கே ப்ரணயிந இவ ஸ்ரஸ்தகங்காதுகூலாம் ந த்வம் த்ருஷ்ட்வா ந புநரலகாம் ஜ்ஞாஸ்யஸே காமசாரிந்।’ என்று கைலாஸமாகிற ப்ரியகாந்தனுடைய மடியில் கங்கையென்னும் அங்கவஸ்த்ரம் நழுவினது தெரியாமல் படுத்திருக்கிற நாயகியைப்போல் உதாஸீநமாயிருந்தாலும், காமசாரியாகிய மேகம் அளகையில் நுழையலாம் என்று காளிதாஸன் சொல்ல, ஸதாசார்யனான ஸ்ரீதேசிகன், அழையாத வீட்டிற்கு விலாஸிகள் தவிர வேறு எந்த புருஷர்களும் போகமாட்டார்கள் என்று ‘தஸ்ய

த்ருஶ்யா கேந ஸ்வதஸ்ஸாராஸலயாவ்ருதா லங்கா விபாதா பூர்வம் த்ருஷ்டா ராஜஹம்ஸீவ ஸீதா । ப்ராஸாதாநாம் உபரிதநோ வதாகாவஸேஷேஷு ரக்ஷோரக்ஷ்யாஜிதமிஷா ஸ்வஸ்யாஸ்தி ஶ்ராவ்யநாதா ॥ ” என்று எதிர் பார்க்கிற ஸ்ரீராகவனே நேரில் வந்தால் அன்னநடையுடைய ஜாநகீ எவ்வளவு பரபரப்போடு ஸந்திப்பாளோ; அம்மாதிரியே அந்தப் பட்டணமும் ஹம்ஸத்தைக் கைகாட்டி அழைக்குமென்றும், ‘ராஜஹம்ஸீவ’ என்கிற உபமாநத்தினாலே, தர்மபத்நீ காத்திருக்கும் சொந்த வீட்டுக்குப் போவதுபோல ராஜஹம்ஸமும் நிச்சங்கமாகப் போகலாம் என்றும் வெகுரமணீயமாகச் சொல்லுகிறார்.

‘ஸம்ஸ்ரீக்ஷ்ய வஸதயோ ராக்ஷஸாநாம் க்ரூராஸ்’ என்று ‘முன்னே வேடர்களே என்னைச் சிறையில் இடுவார்கள் என்று சொன்னீரே, க்ரூரர்களான ராக்ஷஸர்கள் நிறைந்த இந்தப் பட்டணத்தில் எப்படி நான் தைர்யமாய் உள்ளே நுழைவேன்’ என்று திகிலடைய வேண்டாம்; இப்பொழுது ஸாயங்காலமாகையினாலே ராக்ஷஸர்கள் இன்னும் நன்றாகத் தூக்கம் தெளிந்து நடமாடமாட்டார்கள், என்று ஹம்ஸத்துக்கு ஸூசனை காட்டுவது போல லங்காப்ரவேச காலத்தில் தேவதா ஸ்த்ரீகளை வர்ணிக்க ஆரம்பிக்கிறார். ‘தஸ்மிந் ஸீதாமதிமதுராமதே தர்ஶகோ ராக்ஷஸேந்த்ரஸ் தஸ்யாஞ்ஜீவ்யா திஶிநிவஸதே நாதஸுக்ஷேத்ரவ்யஷ்டி: ॥’ என்று ப்ரதமாச்வாஸத்தில் ப்ரஸ்தாவித்த உத்தமஸ்த்ரீ ஸாத்ருச்யத்தை இப்போது விரிவாக ‘ஸ்ரோவேஶம் ஸந்ததஸந்நா:’ இத்யாதியான முதல் பத்யத்தினால் ரமணீயமாக உபபாதித்து, அப்படிப்பட்ட ஸுந்தரீ ரத்நங்கள் உன்னை ரஞ்ஜிப்பிப்பார்கள் என்று தூதனை உத்ஸாஹப்படுத்துகிறார். பிறகு தேவஸ்த்ரீகளையும் ராவணன் அபஹரித்து வந்து துன்பப்படுத்துகிற செய்தியைச் சொல்லி, இந்த ச்லோகத்தில் அவர்களுக்கு ஸீதையே தஞ்ச

மாகிறாள். ‘உத்வஸ்யைநோ ஜநகதநயா தேஜஸைவ ஸ்வரக்ஷாம்’ என்று ஜாநகியினுடைய பாதிவ்ரத்ய ப்ரதாபத்தை வர்ணித்து, ஆஞ்ஜநேயன் அந்தப் பட்டணத்தை அழித்ததும் அவளுடைய மஹிமையேயென்று ‘ஶாகா ஸாதாரத்ந வநிணதி ஜுஷ்டா ஜாநகீ ஶோகவஹ்நே: ஸந்தீப்தம் தவநதநய ஸ்வேஹ்நா வாவகேந’ என்கிற பத்யத்தினால் சமத்காரமாக வர்ணித்துப் பிறகு அந்த சத்ருபூமியில் வருந்துகிற மைதிலியினுடைய தைந்யத்தையும், மநோபாவத்தையும் விசதமாகச் சொல்லி யக்ஷபத்நிக்கும் ஸ்ரீராகவ பத்நிக்கும் உள்ள தாரதம்யத்தைச் சுருக்கமாகக் காட்டுகிறார் ஸதாசார்யனான மஹாகவி.

‘ஏகாந்தேஸ்மிந் யதநவஸவம் யத்ர ஸாக்ஷாத்விலாஸா
ஶ்ராவ்யம் ஶ்ராவம் நவஹதி ஹயாந்யஷ்டபுஜோ
ஸஹ்ருத்ஸாம வ்யஹிகநயநா: காமிநேஷு ஸுசரேஷு:
ஸுஸ்நாதம் ஸ்வாந்ததாவிஹாரேஷு ஸ்வவிலாஸா: ॥’

என்று மந்மத விரோதியான பசுபதியினுடைய ஸந்நிதியிலும் காமபரவசர்களாக மற்ற யக்ஷதம்பதிகள் மதிராபாநம் பண்ணி ஸுரதஸுகத்தை அநுபவித்துக்கொண்டு குதூஹலமாய் விளையாடுகிற வேளையிலே தான்மட்டும் தனியாகத் தபிக்கவேண்டியிருக்கிறதே என்கிற கவலையொன்றே யக்ஷ கந்நிகையின் ஆவியைக் கொள்ளை கொண்டது. ஆகவே வ்ருக்ஷஸ்யந்தியாய் அலைகிற காமுகைக்கும் இவளுக்கும் அதிக வ்யத்யாஸம் தெரியவில்லை. அப்போதப்போது உதிக்கிற விரஹவேதனையைக் குறைத்துக்கொள்ள தேவதார்ச்சநம், சித்ரலேகநம், வீணாவாதநம், சாரிகாஸம்வாதம், நாயகப்ரத்யாகமந திவஸகணநம் முதலான விநோதங்களும், வ்யாபாராந்தர வ்யாஸங்கமும், நித்ராநுபவம் முதலான அநுகூலங்கள் உண்டு. ‘ஸ்ரூம்ஸாராவ்யம் நிர்விஶேஷா ஸ்ரேயஸீ ஸேவிதவ’ என்று அதிமாநுஷமான ஸுஷமா வைபவத்தோடு விளங்கின ஜகஜ்ஜநநியோ அசோகவநத்தில் எவ்விதமான ஆச்வாஸமும் இல்

லர்மல், ராக்ஷஸிகளால் பயமுறுத்தப்பட்டுச் சற்று மோஹித்தும், சற்றுப் பக்ஷிகளைப் பார்த்துத் தனது நிலைமையை ராகவனுக்கு அறிவிக்கும்படி வேண்டியும், சற்று வடக்குத் திக்கை நோக்கிக் கண்களில் நீர்ததும்ப த்யானித்தும், சற்று வாய்விட்டலறியும், சற்று துர்ஜாத பந்துவான ஶிம்ஶபா வ்ருக்ஷத்தை அணைத்துக் கொண்டு அழுதும், இராமனையே எண்ணி எண்ணி அகங்கரைந்தவளாய், யோகிவரிஷ்டர்போலே நிர்விகல்ப ஸமாதியிலிருந்து காலத்தைக் கழித்தாள்.

'[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥'

இப்படி நாயகநாயிகா ஸ்வபாவ தாரதம்யத்தாலே தூதன் மூலமாகச் சொல்லியனுப்புகிற ஸந்தேசத்தினுடைய ப்ரகாரமும் மாறுகிறது. '[illegible]' என்று விதியை வைவதும், '[illegible]' வென்று நிரங்குஶியான தாமஸன் போலே ஈஶ்வரனுடைய அநுக்கிரஹத்தால் கஷ்டம் நீங்கி ஸுகமும் தானாகவே விளையுமென்று தேற்றிக்கொள்வதும், '[illegible]' வென்று தன்னுடைய அஶக்தியையும், எளிமையையும் நன்றாக அறிந்து கொண்ட யக்ஷனுக்கே தகும். [illegible] ஸ்ரீராமபத்ரனோ, '[illegible]' என்று நியதியின் வைபவமானது தன்னுடைய வைபவத்தைக் காட்டிலும் இந்த ஸமயம் அதிகமாய்விட்டபடியினாலே இந்தக் கஷ்டம் ஸம்பவித்ததென்று நினைத்து,

'[illegible]
[illegible] ।

"[illegible]
[illegible] ॥"

என்று ஸ்வஸேநாத்யக்ஷ பல பராக்ரமத்தையும்,

"[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥"

என்று ஸ்வபல பாஹுள்யத்தையும் நிரூபித்து, ஶ்ரேயோவிரோதியான விதியினிடத்தில் க்லேஶலேஶத்தையும் பாராட்டாமல் '[illegible]' என்று தாம் படுகிற வேதனையை மாத்திரமே தெரிவிக்கிறார்.

இப்படி அழகாக 50 - ஶ்லோகங்களினால் இரண்டாவது ஆஶ்வாஸத்தைக் காளிதாஸன் போலவே முடிக்கிறார்.

இது நிற்க: வர்ணநா ஶைலியிலும், ரசநாஸௌஷ்டவத்திலும், உபதேச கௌரவத்திலும், உத்கர்ஷத்தை ஸ்ரீ தேசிகன் ப்ரதர்ஶித்திருக்கிறார்.

"[illegible]
[illegible] ॥"

என்று காளிதாஸன் [illegible]த்தைத் தோஷம் போலச் சொல்வதைக் கண்ட ஆசார்யன்,

"[illegible]"

என்று ப்ருபங்க விப்ரமாபாவத்தாலே யாதொரு குறைவும் இல்லை; [illegible] - குணாதிக்யமே என்று ஸத்வநிஷ்டர் ஆகையாலே லோகத்துக்கு ஹிதத்தை உபதேசித்தார். இவ்விடத்தில் ப்ரீதிஸ்நிக்தத்வத்துக்கு த்வதாயத்த க்ருஷிபலத்வம் காரணமாகச் சொல்லப்பட்டபடியாலே, இவ்விரண்டு பதங்களும் ஒன்றின்பின் ஒன்றாக வரவேண்டியிருக்க, மத்தியில் '[illegible]' என்கிற விசேஷணாந்தரத்தை நுழைத்தது ஶைலியின் அழகுக்குக் குறைவைக் காட்டுகிறது.

“ காந்தோதந்த: ஸுஹ்ருதுபநத: ஸங்கமாத் கிஞ்சிதூந: ” என்று காளிதாஸன் வ்யவஹரிக்க, “ காந்தோதந்தஶ்ருதிரபி ஸதாம் ஸம: காமிநாம் உத்ஸவார்ஹ: ” என்று ஒருபடி அதிகமாக வர்ணிக்கிறார். “ [illegible] க்ருஷ்ணஸாரங்க[illegible] ” என்று புல்லிங்கமான இந்து ஶப்தத்தை ஸ்த்ரீலிங்க வாசியான பதத்தோடு உபமாநமாகச் சொன்ன குறையையும் ஒழித்து ‘ ஶேஷஜ்ஞாமிவ ஶஶிகலாம் ’ என்கிறார். “ தாம் தேவீம் தீநவதநாம் அதீநாம் பர்த்ருதேஜஸா ” என்கிற வால்மீகி வாக்யத்தையும் அநதிஸ்வாரஸ்யமாக நினைத்து ‘ த்ராஸஹீநாம் [illegible] ’ என்று ஸ்வமஹிமையினாலேயே ஜாநகிக்கு உத்கர்ஷத்தை வர்ணிக்கிறார். “ பர்துர்மித்ரம் ப்ரியமவிதவே வித்தி மாமம்புவாஹம் ” என்று கர்ணகடோரமாக அவிதவா பதத்தைப் ப்ரயோகித்த காளிதாஸனைச் சீர்திருத்தி, மிகவும் அவதாநத்துடன் கேட்டாலொழிய ‘ விதவே ! ’ என்றழைத்ததாகவே தோன்றக்கூடிய வைபரீத்யத்தை விலக்கி, “ வத்ஸே வைதேஹி ப்ரணயஸசிவம் வித்தி மாம் ராமபர்த்து: ” என்று ஸுவ்யக்தமாக ஸ்வாமி ஸம்பாஷிக்கிறார்.

“ வித்யுத்வந்தம் லலிதவநிதா: ஸேந்த்ரசாபம் ஸசித்ரா:
ஸங்கீதாய ப்ரஹதமுரஜா: ஸ்நிக்தகம்பீரகோஷம் ।
அந்தஸ்தோயம் மணிமயபுவஸ்துங்கமப்ரம்லிஹாக்ரா: [ஷை: ”
ப்ராஸாதாஸ்த்வாம் துலயிதுமலம் யத்ர தைஸ்தைர்விஶே

என்று மேகப்ரஸாத விஶேஷணங்களை யதாக்ரமமாக யோஜிக்க ஆரம்பித்து, அந்த ஸங்கல்பத்தை நிறைவேற்றாமல் ப்ரக்ரமபங்க தோஷத்துக்கு ஆளான காளிதாஸனுடைய மநோரதத்தை

“ [illegible] மணிமயபுவ: [illegible]
[illegible] பௌரநாரீ [illegible] ।
[illegible]
யத்ராநீதா: [illegible] ”

என்று உதாஹரித்துப் பூர்த்தி செய்தார். “ நக்ஷுத்ரோऽபி ப்ரதமஸுக்ருதாபேக்ஷயா ஸம்ஶ்ரயாய ப்ராப்தே மித்ரே பவதி

விமுக: கிம் புநர்யஸ்ததோச்சை: ।” என்று வீட்டுக்கு வருகிற மித்ரனிடத்தில் பராங்முகமாக இருப்பது உசிதமல்லவென்று ஸாமாந்ய ஜநாபிஸந்தியைக் காளிதாஸன் ஜ்ஞாபிக்க,

“ தூராத் ப்ராப்தம் ப்ரியஸகமிவ ஸ்வாகதேநைவ [illegible]
[illegible] மஹார்ஹ: ।”

என்று ‘ அதிதிதேவோ பவ ’ என்கிற உபநிஷத் விதிவாக்யத்தை ஶிரஸா வஹித்து வர்த்திப்பது விஹிததர்ம மாகையினாலே, தூரதேசத்திலிருந்து அப்யாகதனான மித்ரனை ஆதரவோடு எதிர்கொண்டு அழைப்பது ஸஹஜமே என்று ஶிக்ஷிக்கிறார். “ ப்ராய: ஸர்வோ பவதி கருணாவ்ருத்திரார்த்ராந்தராத்மா ” என்று காளிதாஸனுடைய அர்த்தாந்தர ந்யாஸத்தில் அபிமதார்த்தம் வ்யக்தமாகவில்லை. ஆர்த்ரமான [[illegible] இளகின] நெஞ்சையுடையவர்கள் கருணையைச் செய்வார்கள் என்பதால் விஶேஷம் ஒன்றும் ஏற்படவில்லை. இதை, ஸ்வாமி தேசிகன் “ க்ருபார்த்ராணாம் ப்ரஶமநவத: [illegible] ’ என்கிற பத்யத்தால் பரிஷ்கரித்தார். இன்னும் இம்மாதிரி ஸூக்ஷ்மமாகப் பராமர்ஶித்தால் ஸ்வாமியினுடைய கவிதையின் அழகையும் இனிப்பையும் ரஸிக ராஜர்கள் நன்றாக அறிவார்கள்.

இதுவும் தவிர, வேதாந்தார்த்தத்தை உபதேஶிக்கும் பொருட்டே இந்த ஹம்ஸ ஸந்தேஶம் அவதரித்ததென்றும் நிபுணமாகப் பரீக்ஷித்தால் தெரியவருகிறது. அதாவது, முதல் பத்யத்திலே “ வம்ஶே ஜாத: ஸவிதுரநகே ” என்பதால் “ ஆஹார[illegible] । [illegible] ॥” என்று சொல்லியபடி, நல்ல வம்சத்திலே பிறந்து ஸத்வநிஷ்டராக நிற்கிற சேதநன், [illegible] ஸுதுர்லபமான மநுஷ்ய தேஹத்தை அடைந்து இந்த ஜன்மம் முடிவு பெறுவதற்கு முன்னமே நல்வழியைத்

தேடவேண்டும் என்கிற அபிஸந்தியைக் கொள்கிறான். இந்த அபிஸந்தி மூலமாக ஶாஸ்த்ர விசாரத்தில் நுழைகிறபோது அவனுக்குத் தான் [illegible] என்கிற தாதுவிலிருந்து ஈஶ்வர லீலைக்குள்ளகப்பட்ட [illegible]னென்கிற அறிவு வந்து, உத்தமகுண ஸ்ரீமானாய் ஜனகதனயையாகிற புருஷகாரத்தை ஸம்பாதிக்க ஸதாகாலமும் முயன்று ஸதாசார்ய கடாக்ஷம் பிறந்தவாறே, நிஶ்சிதார்த்தனாகி, அர்த்தபஞ்சகங்களையும் தத்வத்ரத்தையும் அதிகரித்து, உபா[illegible]ஷ்டானத்தைச் செய்து, பரம புருஷார்த்தமான மோக்ஷத்தில் உத்கடமான அபிலாஷையைக் கொண்டு, ஆவிஹாதம் - தேஹாவஸானமாகிற நல்விடிவு வருகிற வரையிலே காளராத்ரி போலே பாக்கியுள்ள ஆயுஷ்காலத்தை ஸஹித்துக்கொண்டு வரவேண்டுமென்கிற தத்வம் விஶதமாகிறது. அப்படியே,

“[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ ”

என்று மோக்ஷத்தை யடைய பக்தி யென்றும் ப்ரபத்தி யென்றும் இரண்டு மார்க்கங்கள் உண்டு. அதில் ப்ரபத்தியானது அழகாயும் நெருங்கினதுமான வழியானாலும் ஸம்ஸார கடித ‘[illegible]’ என்றும், பக்தி மார்க்கத்தில் நுழைபவருக்கு அஷ்டஸித்தி முதலான சில்வான ஸுகத்தில் ஈடுபடும்படியான ஆபத்திருக்கிறதென்றும், அந்த ஆபத்தை ஸத்பக்தர்கள் மோக்ஷத்தில் உத்கடாதரத்தினாலே விலக்கிக்கொள்ள வேண்டும் என்றும் உபதேஶிக்கப்படுகிறது. இப்படியே பலவிடங்களிலும் காணலாம்.

இப்படிப் படிப்பவர்களுக்குத் தைவபக்தியையும் ஸதாசார ப்ருசியையும் விளைவித்து அவர்களை நல்வழியில் நடத்திவைக்குமாகையினாலும், உத்தமநாயகனை அவலம்பித்து, உத்தம பாவங்களை வெளியிடுகிற படியினாலும், ஸதுபதேஶ ஶிவேதரக்ஷதி பரிவ்

ருத்தி முதலான உத்தம பலங்களைத் தருகிறபடியினாலும், இந்த ஸத்காவ்யமானது, கேவல பாமர ரஞ்ஜகமான மேகஸந்தேஶத்தைக் காட்டிலும் விசேஷித்ததென்று எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள் என்றே நம்புகிறேன். வெறுங்கவிதா சாதுர்யத்தை மட்டும் பார்க்கிறவர்களுக்கும் இந்தக் காவ்யம் ஆநந்தத்தைத் தந்து உதவும் என்று நிரூபித்தேன்.

இதனால், காளிதாஸனுக்கு மஹிமை இல்லையென்றாவது, அவனைவிட ஆசார்யன் எல்லா[illegible]தத்திலும் சிறந்த கவி என்றாவது சொல்லவந்ததாக ஸ்வாமி[illegible] திருவுள்ளம் பற்றக்கூடாது. கவி ஸார்வபௌமனான காளிதாஸன் மேக தூதத்தில் உத்தம மநோரதத்தைத் துறந்து பாமர ப்ரஸங்கத்தில் ருசியைக் கொண்டான். ஸ்வாமி தேசிகனோ, எவ்விதமான உக்திகளிலும் பகவத் குணங்களையே சொல்லி, ஆமுஷ்மிகபல ஜா[illegible]கராகவே நின்றார். அதுவல்லாமலும், காளிதாஸன் ஶப்தவை[illegible]யை அவ்வளவாகக் கவனித்தானில்லை; காத்யாயநீ வரப்ரஸாத[illegible] ப்ரதிபாவித்த ப்ரதிபா ப்ரபாவத்தாலே தோன்றின பாவவிசேஷங்களை யதோசிதமாக எழுதின பாக்யஶாலி. இவனுக்குப் பின் அவதரித்த கவிகள் எல்லோரும் கவிஸமயத்தையும் காவ்யலக்ஷணங்களையும் ஒட்டினவர்களாய், கேவல ஶ்ருங்காராதி ரஸவர்ணந வைசித்ர்யத்திலே இழிந்து, உதாத்தாஶயங்களை வ்யவஹரிக்கத் தவறியும், ஶப்த சித்ரங்களிலே அதிகமான ஆஸக்தியை வைத்து அர்த்த கௌரவத்தை த்யஜித்தும், க்ஷுத்ர காவ்ய ரசநையிலேயே த்ருப்தி அடைந்து விட்டார்கள். ஸ்ரீ ஹர்ஷாதிகளுடைய மஹா காவ்யங்களிலும், ஒவ்வொரு ஶ்லோகத்தையும் வாசிக்கும்போது அதனுடைய அழகு ஒருக்கால் தோன்றுமே யல்லது; காவ்யத்தினுடைய மொத்த அழகையும் பார்க்கும்போது அவ்வளவு ரஸம் ஏற்படுகிறதில்லை. ஶப்தசித்ரமும் ஶ்லேஷபங்கியுமே அதிகரித்து, பாவகாம்பீர்யத்துக்கு ஹாநியும் விளைகிறது. ஸ்வாமி தேசிகனுடைய காவ்யங்களிலோ அப்படி இல்லை. உதாத்தமான பாவஸமாதியோடு மநோஹரமான ஶப்தஶைலியும் கலந்து வருகிறது. இப்படி மாணிக்கச் செப்பில் மரகத மணியை வைப்பது போல, அநுரூபமான வாகர்த்தங்களுடைய ஸம்மேளநத்தை அந்தரங்கத்தில் அநுபவிக்கிற ஸஹ்ருதயர்கள் அநிர்வசநீயமான ரஸத்தை ஆஸ்வாதநம் பண்ணுவார்கள். [illegible]ரபத்யங்களைச் செய்

யும்போதும், 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤 𑌶𑌬𑍍𑌦𑌾𑌨𑌿 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤 𑌵𑌾𑌕𑍍 ஸம்ப்ரதாயங்களைச் சேர்க்கும்போதும், அர்த்த கௌரவத்துக்கு எவ்வித பங்கமும் வருவதில்லை. இந்த ஸங்கல்பமே ஸ்வாமிக்கும் இருந்ததென்று

> " 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑍁 𑌵𑌿𑌦𑍍𑌵𑌜𑍆𑌤𑍍𑌰 𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌵𑍇𑌦𑌂
> 𑌵𑌿𑌦𑍍𑌰𑌾𑌯𑌮𑌾𑌣𑌾𑌨𑌿 𑌸𑌮𑌵𑌾𑌨𑌿 𑌵𑌃 𑌨𑌵𑌸𑍍𑌯𑌾𑌵𑌲𑍀 ।
> 𑌕𑍃𑌤𑍍𑌯𑌂 𑌵𑌿𑌧𑌾𑌨𑌿 𑌜𑌜𑍍𑌞𑍀𑌯 𑌜𑌨𑌤𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤
> 𑌪𑌾𑌪𑌾𑌯𑍍𑌯𑌾𑌤𑌂 𑌹𑌰𑌿𑌶𑌰𑌣𑍀𑌯𑌪𑌾𑌦𑌾 ॥ "

என்கிற யாதவாப்யுதய ச்லோகத்திலும் விசதமாகிறது. ஆகவே ஸாரஸ்வதீ ப்ரதம விச்ராமசாகியான ஸ்ரீ வால்மீகியையும், கவிப்ராவதார மென்று சொல்லக்கூடிய பவாநீச்ரஸனை காளிதாஸனையும், அநுவர்த்திக்கவோ அதிசயிக்கவோ ஸ்ரீ ஹயக்ரீவ் ப்ரஸாதத்தைப்பெற்று, கவிதார்க்கிக ஸிம்ஹனென்னும் பெருமையை வஹித்த ஸ்ரீமந் நிகமாந்த தேசிகனே பின் வந்த கவிகளுக்குள் அர்ஹராகிறார். மற்றவர்களுடைய கையில் அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கிற ஸரஸ்வதீதேவி இவருடைய திருநாக்காகிற திவ்ய ரங்கத்தில் ஆவிர்ப்பவித்துத் தனது தண்டைச் சிலம்பின் மதுர நாதத்தோடும், வீணையை வெல்லும் கண்டஸ்வரத்தோடும், தானே கானம் பண்ணி ஆநந்தக்கூத்தாடுகிறாள்.

இப்படி நான் சொல்லுவது தேசிக பக்தி மூலகமே தவிர, வாஸ்தவமன்றென்று இன்னும் யாராவது ஸந்தேஹப்படுவார்களாகில், அவர்களுக்கு நான் சொல்லக்கூடியது ஒன்றே உண்டு. ப்ரசண்டபண்டிதனும், ஆலங்காரிக ஸார்வபௌமனுமான ஸ்ரீமதப்பைய தீக்ஷிதரும்,

> " 𑌜𑍁𑌷𑍍𑌟𑌂 𑌵𑌿𑌦𑍍𑌵𑌦𑍍𑌭𑌿𑌃 𑌸𑌵𑌿𑌤𑍃 𑌸𑌾𑌵𑌾𑌃 𑌸𑌞𑍍𑌜𑍀𑌵𑌯𑍇𑌦𑍇𑌵 𑌹𑌿 ।
> 𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌸𑌿𑌂𑌹𑌸𑍍𑌯 𑌕𑌾𑌵𑍍𑌯𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌶𑍇𑌷𑌵𑌿𑌤𑍍 ॥ "

என்று ஸ்வாமியினுடைய காவ்யத்தை ச்லாகித்திருக்கிறார். மதாந்தரஸ்தரான அவருக்குத் தேசிகனிடத்தில் பக்ஷபாதம் என்று சொல்ல வழியில்லை. இவருடைய வார்த்தையிலும் நம்பிக்கை வராவிட்டால், ஸ்ரீ தேசிகனுடைய காவ்யங்களையும் மற்றவர்களுடைய காவ்யங்களையும் நன்குகப் படித்துப் பிறகு அபிப்ராயத்தை தரவேண்டும் என்று ப்ரார்த்திப்பேன். இப்படிச் செய்வார்களாகில்

நான் சொல்வது மெய்யென்றே ஸந்தோஷிப்பார்கள். " 𑌯𑌾𑌚𑍍𑌞𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌜𑍍𑌞 𑌸𑌾𑌹𑌸𑌂 𑌜𑍍𑌞𑌾𑌹𑌵𑌃 𑌕𑌵𑍇𑌰𑍍𑌗𑌿 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌟𑍀𑌕 𑌨𑌿𑌵𑌿𑌜𑍍𑌞 𑌵𑌿𑌰𑌾𑌣 𑌹𑌾𑌸𑍍𑌯𑌕𑌾𑌰𑌂 𑌉𑌪𑌾𑌯𑌾𑌃 ॥ " என்று மேகத்துக்கு யக்ஷன் சொன்ன வார்த்தையே இவர்களுக்கும் ஸமாதாநமாகும்.

இந்தக் காவ்யத்தை ஸ்வாமி எந்த ஸ்தலத்தில், எந்த ஸந்தர்ப்பத்தில் செய்திருப்பார் என்று யோசித்தால், ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தை வர்ணிக்கும்போது, " 𑌸𑍇𑌤𑌾 𑌯𑌾𑌯𑌤𑍍𑌰 𑌵𑌸𑍁𑌨𑍍𑌧𑌰𑌾𑌜𑌂 𑌸𑍇𑌷𑌸𑍋𑌮𑌶𑌾𑌯𑌿𑌨𑌂 𑌦𑍇𑌵𑌪𑌤𑌿𑌂 𑌜𑌯𑌿𑌤𑌨𑌯𑌾 𑌜𑍀𑌵𑌿𑌤𑌂 𑌸𑍇𑌵𑌸𑍇𑌷𑌂 ॥ " என்று ஆச்ராதிசய ப்ரவாஹத்தோடு, வெகு தூரத்திலிருந்து அங்கு பள்ளிகொண்டிருக்கும் அரங்கனை ஸேவிப்பது போல த்வநிக்கிறது. " 𑌸𑍍𑌵𑌾𑌰𑌾𑌜𑌾 𑌸𑌾 𑌜𑌿𑌗𑌮𑌿𑌷𑍁𑌰𑌯𑌾 𑌸𑌹𑍍𑌯𑌦𑍇𑌶𑍇𑌨 𑌵𑌸𑍇𑌤 𑌸𑌾𑌯𑌂 𑌸𑍇𑌵𑌿𑌤𑍁𑌂 𑌤𑌾 𑌶𑍍𑌰𑍀𑌤𑌾𑌨𑌾 ॥ " என்கிறதினுல் கடாதூர் அம்மாள் ஸ்ரீரங்கத்தை விட்டுக் காஞ்சீபுரம் எழுந்தருளினது முதல், மதாந்தரஸ்தர்களுக்குத் தென்தேசத்தில் ப்ரபாவம் அதிகமாகி அவர்களால் க்ஷோபம் உண்டானதும், பிறகு ஸ்வாமி அவர்களை ஜயித்துத் தர்சநத்தை நிலைநிறுத்தின சரித்ரமும் விவக்ஷிதமோ என்கிற சங்கை ஜநிக்கிறது. " 𑌶𑍂𑌦𑍍𑌰𑌯𑍇𑌣 𑌨𑌵𑍇𑌨 𑌕𑌵𑌯𑌃 𑌸𑌙𑍍𑌘𑌿𑌯𑌾 𑌦𑍁𑌜𑌾𑌤𑌾𑌨𑌾𑌂 " என்கிற ஹிதோபதேசத்தாலே சில விரோதிகளால் பரிபவம் ப்ராப்தமானவாறே, ஸ்வாமி ஸ்ரீரங்கத்தை விட்டு விலகின சரித்ராம்சமும் த்வநிக்கிறாப்போல் தோன்றுகிறது. ஆக இந்த ஔசித்யங்களைக்கொண்டு ஸ்ரீரங்கத்தைவிட்டு அப்பால் வெகு தூரத்தில் ஸ்வாமியினுடைய உச்ராய தசையில் இந்த க்ரந்தத்தைச் செய்திருக்க வேண்டும் என்று படுகிறது. ஸ்ரீகாஞ்சியில் உத்ஸவாதிகளை அநுபவித்துப் பேசுகிறபடியாலே, அவ்விடத்திலேயே செய்திருக்கலாம் என்றும் அடியேனுக்குத் தோன்றுகிறது.

𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌵𑍃𑌤𑌾𑌃 𑌕𑍍𑌷𑍁𑌦𑍍𑌰𑌜𑌨𑌾𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃 𑌶𑍍𑌰𑍁𑌵𑌾𑌯𑍇𑌣 𑌵 ॥

எம். கே. தாதாசார்யர்.

JL
R65m.2H, N10vP
N77

227844
சென்னை-600 008